
T. 2670

ஸ்ரீ ம த்

கம்ப ராமாயண வசனம்



இ ஃ து

மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலமைத்

திருச்சிற்றம்பல தேசிகர்

அவர்களால் இயற்றியது

B. இரத்தின நாயகர் சன்ஸ்,

செ ன் னை.

இதன் விலை ——— [நபாய் 12.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS

1956

சீதாஸமேத ராமச்சந்த்ர பரப்ரஹ்மணே நமஃ

ஸ்ரீமத் கம்பராமாயண வசனம்

[முதற் பகுதி]

ஆப்டோன் படங்களுடன் கூடியது



1. பால காண்டம்
2. அயோத்தியா காண்டம்
3. ஆரணிய காண்டம்
4. கிஷ்கிந்தா காண்டம்
5. சுந்தர காண்டம்




சென்னை:

திருமகள் விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

Acc. No. 137



பொருளடக்கம்

படலம்	பக்கம்
அரங்கேற்றச் சருக்கம்	1
இராமாயண வைபவ சங்கிரகம்	31
1. பால காண்டம்	
நூன்முகம்	43
நாட்டுச் சிறப்பு	44
நகரச் சிறப்பு	44
அரசாட்சிச் சிறப்பு	45
திருவவதாரப் படலம்	46
கையடைப் படலம்	57
தாடகை வதைப் படலம்	59
வேள்விப் படலம்	65
அகலிகைப் படலம்	70
மிதிலைக்காட்சிப் படலம்	77
குலமுறைகிளத்து படலம்	85
கார்முகப் படலம்	89
எழுச்சிப் படலம்	92
வரைக்காட்சிப் படலம்	96
பூக்கொய் படலம்	98
நீர்விளையாட்டுப் படலம்	99
உண்டாட்டுப் படலம்	101
எதிர்கோட் படலம்	103
உலாவியற் படலம்	104
கோலங்காண் படலம்	107
கடிமணப் படலம்	110
பரசுராமப் படலம்	116
2. அயோத்தியா காண்டம்	
மந்திரப் படலம்	119
மந்தரை சூழ்ச்சிப் படலம்	126
கைகேசி சூழ்வினைப் படலம்	131
நகர் நீங்கு படலம்	139
தைல மாட்டுப் படலம்	155
கங்கைப் படலம்	162
வனம்புகு படலம்	167
சித்திரகூடப் படலம்	169
பள்ளியடைப் படலம்	172
ஆற்றுப் படலம்	180
குகப் படலம்	183
கிளைகண்டு நீங்கு படலம்	188
3. ஆரணிய காண்டம்	
அகத்தியப் படலம்	208
ஜடாயுகாண் படலம்	210
கரன் வதைப் படலம்	239
சூர்ப்பனகி சூட்சிப் படலம்	241
மாரீசன் வதைப் படலம்	256
ஜடாயு உயிர்நீத்தப் படலம்	264
அயோமுகிப் படலம்	286
கவந்தன் படலம்	293
சவரிப் படலம்	299
4. கிஷ்கிந்தா காண்டம்	
பம்பாநதிப் படலம்	301
அனுமப் படலம்	305
நட்புகோட் படலம்	308
மராமரப் படலம்	315
துந்துபிப் படலம்	317
கலன்காண் படலம்	318
வாலி வதைப் படலம்	321
அரசியற் படலம்	340
கார்காலப் படலம்	343
கிஷ்கிந்தைப் படலம்	349
வானரத்தானைகாண் படலம்	362
நாடவிட்ட படலம்	365
பிலநீங்கு படலம்	372
ஆறுசெல் படலம்	378
சம்பாதிப் படலம்	381
மகேந்திரப் படலம்	388
5. சுந்தர காண்டம்	
கடல்தாவு படலம்	393
ஊர்தேடு படலம்	403
காட்சிப் படலம்	423
நிந்தனைப் படலம்	430
உருக்காட்டுப் படலம்	438
சூடாமணிப் படலம்	456
பொழிலிறுத்த படலம்	464
கிங்கரர் வதைப் படலம்	469
ஜம்புமாலி வதைப் படலம்	475
பஞ்சசேனாபதிகள் வதைப் படலம்	481
அக்ஷயகுமாரன் வதைப் படலம்	488
பாசப் படலம்	495
பிணிவீட்டுப் படலம்	503
ஊர்சுடு படலம்	518
திருவடி தொழுத படலம்	524

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீமத் கம்பராமாயண

அரங்கேற்றச் சருக்கம்



நீர்வளம் நிலவளம் குடிவளமிகுந்த திருவெண்ணெய் நல்லூ ரென்னுந் திவ்ய கிராமத்துக்குக் கிராமாதிபதியாயும் இக் கெட்டுங் கீர்த்திபெற்றவராயும் விளங்கிய சடையப்ப வள்ள லென்பர் கவிஞர்க்கரசனுகிய கம்பநாடரைக் கண்டு ஐயா! முன்னோராற் செய்த வடமொழியிலுள்ள இதிகாச சிரேஷ்ட மாகிய ஸ்ரீமத் ராமாயணத்தைத் தமிழிற் பெருங்காப்பிய மாகச் செய்தால் தமிழ் வழங்கு மிந்நாட்டில் கசடறக்கற்ற கவிஞர்கள் யாவ ரும் மேலான இலக்கியமாகக் கொள்வதுமன்றி, ஸ்ரீ ராமபிரானது சரித்தி ரத்தை எளிதிற் கற்றுணர்ந்து மற்றையோருக்குத் தெரிவித்து அவர்களைக் கிருதார்த்தனுகும்படிச் செய்து தாங்களு முய்வார்களென்று சொல்லினர்.

அதுகேட்டுக் கம்பநாடரும் அப்படியே செய்து தருகிறேமென்று சொல்லி நெடுநாளாய்ச் செய்யாமல் காலஹரணம் பண்ணினர். அப்படிக் காலதாம தஞ் செய்து வருவதைக் கண்ட வள்ளலானவர் நாம் குலோத்துங்க சோழ னைக் தொண்டு சொல்லுவித்தாவது நமது இஷ்டத்தை முடித்துக் கொள்ளலா மென்று சோழனிடத்திற்குச் சென்றறிவித்தனர்.

அரசன் ஆமிது தக்கதேயெனக் கருதி, கம்பநாடரைப் பாடும்படி கேட்டுக்கொள்வோமேயானுல் அவர் என்னை மதித்துப் பாடினுல் பாடலாம் மதியாவிடில் அளவிடுதற்கரிய கல்விச் செல்வமுடைய அவரைப் பொருட் செல்வமுடைய நாம் யாது செய்யலாம். சொன்னேக்கம் பொருணேக்க முத லிய வமைத்து பாடுதல் அவர்க்கே எளிது; மற்றவர்க் கரிது. அன்றியும் "கம்பர் வீட்டுக் கட்டுத்தறியுங் கவி செய்யுமென்றும்" மதிநுட்பத்தா லறிய வேண்டிய ஒன்றை இதென்ன கம்பர் சூத்திரமோவென்றும் பழமொழிக ளாகக் கற்றேரும் மற்றேரும் வழங்கி வருகிறார்கள். அவர் நமது மனே பீஷ்டப்படி புதுக்கித் தருவாரேயானுல் வடமொழியி லுண்டானதுபோல் அற முதலாகிய நான்கு புருடார்த்தங்களைத் தருவதும், மற்ற எட்டுவகை சுவை முதலானவற்றையு முடையதுமாகிய பெருங்காப்பியத் தமிழிலில்லை யென்னுங் குற்றமு நீங்கும். இவ்விலக்கணங்களைப் பொருந்திப் பாடவேண்டு மெனில் ஸ்ரீ ராமபிரானுடைய சரித்திரமேயன்றி வேறின்று. பாடவல்லவ ரிவரே

யன்றி வேறொருவரு மிலர். ஆதலா லிவரை எவ்விதத்திலாவது பாடும்படி கேட்டுக்கொள்ளவேண்டும், அப்படிப் பாடித் தருவாரேயானால் நாமுந் தமிழ் நாட்டிலுள்ளவர்களுஞ் செய்த பாக்கியமேயாம். ஆகையால் கம்பநாடரை மாத்திரம் நாம் பாடும்படி கேட்டுக்கொண்டாற் காலதாமதஞ் செய்வார். வேறொரு புலவரையு மிவருடன் பாடச்சொல்வோ மென்றால் இவரைப் போலத் தெய்வப்புலமை வகித்த கவிக ளொருவரையுங் கண்டிலோம். ஆயினும் மற்ற புலவர்களிற் சிறந்த ஒட்டக் கூத்தரையாவ திவரோடு கூடிப் பாடும்படி கேட்டுக்கொண்டால் ஒருவரை யொருவர் முந்தவேண்டி விரைவிற் பாடி முடிப்பாரென்று தமக்குள் யோசித்து, அவ் விருவரையு மழைப்பித்து மரியாதைசெய்து பாடித்தரும்படி கேட்டுக் கொண்டனன். ஒட்டக்கூத்தர் பால காண்டமுதல் சுந்திரகாண்டம் வரையிற் பாடி ஆறுவது யுத்தகாண்டத்தில் கடல்காண் படலம் வரையும் பாடினர். அதையறிந்த சடையப்பவள்ளல் கம்பநாடர் ஒரு தெய்வ வணக்கமும் பாடாதிருப்பதைக் கேள்வியுற்று, சோழனிடத்திற் போய் இருவரையு மழைத்து இராமாயணம் என்னவாச்சு தென்று கேளாதிருப்பது அழகல்லவேயென்று சொல்ல, ஆமிதுவரையிற் கேளா திருந்தனமென்று அக்கவிக ளிருவரையும் உடனே வரவழைத்து ஸ்ரீ ராமாயணம் எம்மட்டும் பாடியாயிற்றென்று கேட்க, ஒட்டக்கூத்தர் தான் பாடினபடி நடந்தவரையில் வாஸ்தவமாய்க் கடல்காண் படலம் வரையு மென்று சொன்னர். "கம்பநாடர் மெய்சொன்னவன் வாயில் பொய்சொன்னவன் ஆப்படித்தார்போ லிருக்கவேண்டுமென்றும்" தனக்குப் பாரதி யருளிருக்கிறவரையி லிவருக் கிணக்கக் கூடாதென்று யெண்ணி கடல்காண் படலத்துக் கப்புறத்துள்ள சேதுபந்தனப் படலம் வரையும் பாடினே மென்றனர்.

ஆலைதைச் சற்றே பிரசங்கியும் கேட்போமென் றரசன் சொல்லச், சரஸ்வதியானவள் பூர்வம் ஸ்ரீ வான்மீக பகவானிடத்தினின்று ஸ்ரீ ராமாயணத்தைப் பாடி முடித்தாப்போ லிப்போது கம்பருடைய நாவி லெழுந் தருளியபடியால், உடனே இவர் அப்படலத்தை மாத்திரம் பாடியருளி உபந்நியாசஞ் செய்யத் தொடங்க, மகாராஜாவினுடைய ஆணையால் வானரவீரரும் படைத்தலைவர்களும் மலைகளை வேரோடு பறித்துவந்து கடலிலிடுவதைப் பற்றி வசனிக்குமிடத்து குமுதனென்னும் படைத்தலைவன் நளன்கையிற் கொடாமல் விட்டெறிந்த சிறந்த குன்றுனது கூத்தாடிகள்போலத் திமிதம் என்று ஒலியெழச் சுழலாநின்றது. அதுகாரணத்தா லலைகளையுடைய சமுத்திரத்தினது துளிகள் தம்முடைய ஊரிற் பிரவேசிக்கக் கண்ட தேவர்கள் அமுத மின்னமு முண்டாமென்னு மவாவாற் றுள்ளிக் கூத்தாடினர்க ளென்னும் பொருளமைந்த,

க வி

குமுத னிட்ட குலவரை கூத்தரின்
திமித மிட்டுத் திரியுந் திரைக்கடற்
றுமித மூர்புக வானவர் துள்ளினர்
அமுத மின்னு மெழுமெனு மாசையால்.

என்னுமொரு விருத்தத்தைக் கூறிச் சொற்சுவை முதலிய பல சுவையுந் தோன்றும்படி விரித்துப் பிரசங்கித்தார். அதைப் பார்த்த குலோத்துங்க சோழனும் சடையப்ப வள்ளலும் ஒட்டக்கூத்தப் புலவரும் மற்றவரு மிந்தக் கம்ப நாடருடைய கவிப்புலமை செயற்கையால் வந்ததல்ல ; தெய்வத்தாலாகிய தென்றுண்மை யறிந்து ஆச்சரியப்பட்டார்கள். ஒட்டக்கூத்தராயினும் நாம் ஓராட்சேபமேதேனுஞ் செய்யவேண்டுமெனக் கருதிக், கம்ப நாடரைப் பார்த்துத் துளியைத் துமியென்ற தென்னையென, அதைக் கேட்டு நானுமறியேன் அவளும்பொய் சொல்லாளென்று கூறி இச்சொல் சபையிலுள்ள யாவருக்குந் திருப்தியாகாதென் தமக்குள் யோசித்து 'துமி' என்னும் முதனிலைத் தொழில் பெயர் மலை யெறிந்ததனால் சிதறுற்ற நீர் துளிகளுக்கு ஆகுபெயராய் வந்த தென்று கூறினர். இது எந்த இலக்கியங்களிலாவது உண்டாவென்று கேட்கக், கம்பர் சாதாரணமா யுள்ள உலக வழக்கத்திலுண்டா யிருக்கிறது. காண்பிக்கவேண்டுமோ வென்று சொல்ல, ஒட்டக்கூத்தர் ஆம் அதை எனக்கு மெய்ப்பிக்க வேண்டுமென, நல்லதென்று சிலவு பெற்றுக்கொண்டு கம்ப நாடர் வீட்டிற்கு வந்து தம்மை யறியாமல் சபையிற் றன்வாக்கிற் பிறந்த 'துமி' யென்னுஞ் சொல் அத் திருவிருத்தங்க ளொன்றிற் சேர்க்கப்பட்டதைக் குறித்து மிகுந்த சிந்தாக்கிராந்தனாய் இது சரஸ்வதி கடாக்ஷமன்றி மற்றொன்றல்லவென்று தனக்குள் யோசித்துச் சரஸ்வதியைச் சிந்தித்தனர். பாரதியும் பிரசன்னமாய் நின்று முற்காலத்தில் வைதிக முனியாகிய வான்மீகருடைய திருவாக்கிலிருந்து வடமொழிச் சுலோகரூபமாய் ஸ்ரீமத் ராமாயணத்தை வெளியிட்டாற்போ லிப்போது உன்னுடைய திருவாக்கினின்றுந் தென்மொழிச் செய்யுளாய் வெளியிடச் சித்தமா யிருக்கின்றே னுதலாலிதைக் குறித்து நீ மனஸ்தாபப் படவேண்டுவதில்லை. ஒட்டக்கூத்தன் முதலியவர்சகலரையும் நாளைப் பொழுது விடியச் சாமநேரத்தில் ஆயர் வீதியிலழைத்துவாவென்றரற்றி மறைந்தனள்.

அப்படியே கவிப்புலவராகிய கம்பநாடர் ஒட்டக்கூத்தர் முதலாகிய அவர்களையும் மற்றவர்களையு மவ்வீதிவழியே அழைத்துப் போகையில், ஒருவீட்டில் அபௌருஷேயமாகிய வேதமே தயிர்த்தாழியும், வேதாந்தமே தயிரும், வைதிக சாஸ்திரங்களே மத்துத்தாம்பும், இதிகாச புராணங்களே சிறுபிள்ளைகளும், தானொரு ஆயப்பெண்ணுமாக திருவுருக்கொண்டு அந்நேரத்திலே தயிர்க்கடைந்து கொண்டிருந்த சரஸ்வதியானவள் அவர்கள் சமீபமாய் வரா நிற்கையில், அவர்களுக்குக் கேட்கும்படி தன்னைச் சூழ்ந்து நிற்கின்ற இதிகாசபுராணச் சிறுவர்களை நோக்கிப், 'பிள்ளைகளே ! உங்கள்மேல் மோர்த்துமி தெறிக்கப்போகிறது எட்டவிருங்கோ' ளென்று சொல்ல, தெய்வக் கவிஞர் ஒட்டக்கூத்தனைக் கேட்டீரோவென்ன, அவர் சிரித்தானென் றெப்புக் கொண்டு, இவ்வீடு குடியில்லா வீடென் றெல்லோருக்குந் தெரியுமே இப்போ திவ் வீட்டில் யார் வந்திருக்கிறார்களென் றறிவோ மென்று மடியிற் சொருவியிருக்கின்ற ஜமுதாட்டை யுருவிக்கொண்டு ஓடிப் பார்க்கையில், அங்கேயொரு கோபிகாஸ்திரீயும் சில கோபாலர்களும் தயிர்த் தாழி முதலானவைகளும் கண்ணுக்குத் தோன்றி மறைந்துபோனபடியால், இதெல்லாம் நான்முகன்

கிழத்தி நடனமென்றுன்னி ஆச்சரியப்பட்டுத் திரும்பினர். அப்புறம் ஒட்டக் கூத்தர் சோழவரசனிடத்தில் பாடி முடிப்பதாகச் சொன்னவண்ணம் ஆறு மாதத்திற்குள் கடல்காண் படலத்தினின்று மற்றவையைப் பாடி முடித்தார்.

அக் காலத்திலுள்ள கவிராயர்கள், கம்பநாடருடைய கவியைப் பலமுறையிலுங் கேட்டிருப்பவர்களாகையால் இவ்வொட்டக்கூத்தருடைய கவிகளிற் சொற்சுவை முதலியன இல்லையென்று சொல்லுஞ் சொல்லை ஒட்டக்கூத்தர் கேள்விப்பட்டு அந்தத் தெய்வீகக் கம்பருடைய கவிக்குமுன்னே நமது கவி பயன்படமாட்டா தென்றுன்னி, ஒருநாள் தம்முடைய இராமாயணத்தைச் சஞ்சிகை சஞ்சிகையாக உருவிக் கிழித்துக்கொண்டிருக்கையில், ஒட்டக்கூத்தர் வசிக்கும் தெருவழியே ஏதோ ஒரு காரியார்த்தமாகச் சென்ற புலவர் கிழிபட்டிருக்கும் ஏட்டுக் குவியல்களைக்கண்டு ஒட்டக்கூத்தரை நோக்கிக், கிழித்தெரிகின்றதென்ன யான்பாடின இராமாயணமென்ன, ஏன் கிழித் தெறிகிறீ ரென்ன, அவர் வரகவியே கவி மற்றக்கவி என்னகவியென்று சொல்லி மற்றதையுங் கிழிக்க எத்தனிக்கையில், இவர் அப் புலவருடைய கையிலிருக்கும் ஏட்டுகளைப் பிடுங்கிப்பார்த்து உத்தர காண்டமென்று தெரிந்து கிழிக்க வொட்டாமல் தடுத்து, ஸ்ரீ ராகவ சரித்திரமன்றி இராக்கதர்களுடைய சரித்திரத்தை உத்தரகாண்டம் சொல்லுகின்றமையால் தாம் பாடவேண்டிய அவஸ்ய மில்லையென்றும், இவர் பாடினதையே வைத்துக் கொள்ளலாமென்றும் நாம் பாடினதற்கும் இவர் பாடினதற்கும் வேறே யாதொரு தாரதம்மியமில்லை யென்று உலகத்தார் அனைவருக்குந் தெரிந்திருக்கலாமென்றும் யோசித்து, ஒட்டக்கூத்தரை நோக்கி நீரருமைப்பட்டுப் பாடினதை ஏன் வீணுகக் கிழித்தெரியவேண்டும்; நான் ஆறு காண்டம் பாடுவேன் அதன்பின்னே இந்த உத்தர காண்டத்தைச் சேர்த்துக்கொள்ளுகிறே னென்றார். அதற்கு ஒட்டக்கூத்தரும் உடன்பட்டார். அக் காண்டத்தில் சிற்சில விடங்களிற் சிற்சில கவிகளை தாமும்பாடிச் சேர்த்தனர். பூமியின் கணுள்ள புத்திமான்கள் தங்கள் மனோபீஷ்டம் நிறைவேறுவதற்குப் பாரதத்தை விராடபர்வதத்தினின்றும், ஸ்ரீமத் ராமாயணத்தைச் சுந்தரகாண்டத்தினின்றும் பாடத் தொடங்கி அன்றுமுதல் சூரியாஸ்தமன காலத்தில் சத்தியாவந்தனக் கடன்கழித்து வடமொழிப் புலவர்களாகிய வைதீகப் பிராமணர்களை வைத்துக்கொண்டு இராமுழுதும் வான்மீகம், வாசிட்டம், இராமாயண முதலிய வற்றைச் சாத்வீக புராணங்களையும் ஆராய்ந்தறிந்து, சிறிது நேரம் நித்திரை செய்து உதையத்துக்கெழுந்து, நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, தம்மிடத்திலுள்ள கற்றுச்சொல்லுகளில் சிற்சிலர் ஏடு மெழுத்தாணியு மெடுத்து எழுதும்படிக்கு ஆளொன்றுக்கு 50-60-70-80-ஆக அஸ்தமன பரியந்தம் நாளொன்றுக்கு எழுநூறு செய்யுள் விழுக்காடு பாடுவர். இத்தினங்களிற் சரஸ்வதியானவள் இவர் வாக்கிலிருப்பது மன்றிப் புறத்திலும் ஒரு திவ்விய திருமங்கையி னுருக்கொண்டு இவர் சமீபத்திலெழுந் தருளி இவர் கண்ணுக்கு மாத்திரம் தோன்றிக்கொண் டிருப்பாள். பொழுது போனவுடனே, கம்பநாடரை நோக்கி, 'பொழுது முடிந்தது கம்பா' என்பள். இவர் வெண்டாமரையாளை நோக்கி, 'எழுதிமுடிந்தது அம்மா' என்பர். இப்

படியாகப் பதினேந்து நாளைக்குள் ஆறு காண்டமும் பாடி முடித்தனர். நாளொன்றுக்கு எழுநூறு கவி வீதம் பாடினரென்பதைக் குறித்து அபியுக்த ரொருவர் பாடிய பாடல்,

கவி

கழுந்த ராயன் கழல்பணி யாதவர் கதிர்மணி முடிமீதே
அழுந்த வாளிக டொடுசிலை ராகவ வபிநவ கவிநாதன்
வீழுந்த ஞாயிற தெழுவதன் முன்மறை வேதிய ருடனுராய்ந்
தெழுந்த ஞாயிறு வீழுவதன் முன்கவி பாடின தெழுநூறே.

ஸ்ரீமத் ராமாயணம் பாடிமுடிந்த செய்தியைச் சோழராஜனுக்கும் சடையப்பவள்ளல் முதலானவர்க்குந் தெரிவித்துச் சிறையிருந்தவ ளேற்றஞ் சொல்வ தாகிய இவ்விதிகாச சிரேஷ்டம் வைதிகநூல்களி லொன்றுதலால், எல்லாத் தேசங்களினுஞ் சிறந்த திருவரங்கம் பெரியகோயி லரங்கேற்றஞ் செய்ய வேண்டுமென் றவர்களனுமதி பெற்று, ஸ்ரீ கோசத்தை யெடுப்பித்துக் கொண்டு கோயிலுக்குப்போய் அத் திவ்விய திருப்பதியிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குத் தாம் வந்திருக்கும் செய்தியைத் தெரிவிக்க, அவர்கள் பெருங் காவியத்தில், நரஸ்துதி பண்ணப்பட்டிருப்பதாலும், தென்மொழியா யிருப்பதாலும், இஃதெப்படிப் பட்டதோவென்று எங்களுக்குச் சந்தேகமிருக்கின்றது. நீரோ மகாகவி உம்மைப்புகழ இம்மையிலெங்களால் முடியாதேனும் தற்காலத்திற் றமிழ் வித்வான்களா யிருப்பவர்கள் தில்லைமூவாயிரவர்களும் இன்னும் சிலபேர்களுமேயாம். தாங்களவர்களிடத்திற்குச் சென்று அவர்களுடைய அங்கீகாரம் பெற்றுவந்தால் உமது காவ்வியத்துக்கும் உமக்கும் அதிக புகழா யிருக்குமென்றார்கள். அவர்க ளறைந்தவண்ணம் கம்பநாடரானவர் திருச்சித்திரகூடத்துக்குச் சென்று தில்லைமூவாயிரவர்களிற் சிற்சிலரைக் கண்டு, தாம் வந்த செய்தியைத் தெரிவிக்க, நாங்கள் மூவாயிரம் ஒன்று சேர்ந்தாலல்லாமல் ஏகதேசத்தில் நாங்களுமக்கு உத்தரவுசொல்ல முடியாதென்றார்கள். தாம் யாராரைப்போய் கண்டாரோ அவர்களெல்லோரு மிப்படியாய்ச் சொல்லி விடவே சற்றே உள்ளங்கலங்கி,

தலசேகரப்பெருமாள் திருமொழிப் பாசுரம்

வந்தெதிர்ந்த தாடகைதன் னுரத்தைக்கீறி
வருகுருதி யொழிதரவன் கனையொன்றேவி
மந்திரங்கொண் மறைமுனிவன் வேள்விகாத்து
வல்லரக்க ருயிருண்ட மைந்தன்காண்மின்
செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண்சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடத்தன்னுள்
அந்தவர்க ளொருமூவா யிரவரேத்த
வணிமணியா சனத்திருந்த வம்மான்றானே.

இது முதலிய பாசுரங்களாற் சித்திரகூடத் தெம்பெருமானைத் தியானித்துக்கொண்டு சயனித்தனர். அத்திவ்ய தேசத்துப் பெருமானவர் இவ

ருடைய சொப்பனத்தி லெழுந்தருளி, நாளை யுதயத்திலே அத்தில்லை மூவாயிரவர்களிற் றலைமையானவருடைய பிள்ளை அரவு கடித்திறந்துபோகும். அப்பிள்ளையைத் தகனஞ் செய்யத் தில்லை மூவாயிரவரும் அவ்விடம் வந்து சேறுவார்கள். அது சமயத்தில் நீர் பாடின ராமாயணத்தில் நாகபாச படலத்தையெடுத்து இன்ன பாடலை வாசித்து உன்னுடைய கவியின் தெய்வத் தன்மையைப் பின்னுளோருணர்ந்து கொள்ளும்படி மூன்றுசெய்யுளுஞ் செய்யென்றருளிச்செய்து போயினர்.

பின்பு பொழுது விடிந்தபிறகு தீனதயாளனாகிய கோவிந்தராஜப் பெருமாள் சென்றவண்ணம் கம்பநாடர் எழுந்து சந்நிதிக்குப்போய்க் கோவிந்தராஜப் பெருமானைச் சேவித்துத் தீர்த்தம் சடகோபம் முதலியதும் சித்திக்கப் பெற்றுத் திரும்பிச் சென்று தில்லை மூவாயிரவர்க்குத் தலைவர் வீட்டில் மூவாயிரவரு மொன்றுகூடி யிருப்பதைக்கண்டு, இராமாயண மரங்கேற்ற வேண்டுமென்று சொல்லினர். அப்போது ஓய் புலவரே! உமக்கு இதுதானு சமயம்! நாங்கள் பிள்ளையைப் பாம்புக்குப் பறிகொடுத்து வியாகூலப்பட்டிருக்கும்போதென்றார்கள். அப்படிச் சொல்லிய அனைவரையும் பார்த்து, இந்தச் சமயம் போலல் மற்றெந்தச் சமயத்தி லொன்றுய்ச் சேருவீர்கள்? நான் நெடுநாளாய்க் காத்திருந்து இன்றுதானே நீங்கள் மூவாயிரவரும் ஒன்றுய்ச் சேரும்படி நேரிட்டது. இனி யெந்தகாலத்தி லிப்போர்ப்பட்ட சமயம் நேரிடப் போகிறதென்று சொல்லி ஐயர்களே! அக்குழந்தை எவ்விதமா யிறந்ததென்று கேட்கப், பாம்பா லிறந்ததும் பலபேரால் மணிமந்திர ஔஷதாதிகளைப் பிரயோகித்தும் அனுகூலப்படவில்லை யென்றார்கள். அந்தப் பிள்ளையை யெனக்குச் சற்றே காட்டலாமாவென்ன, அதைக்கேட்ட மூவாயிரவர்களும் அந்தப் பிள்ளைக்கு நல்ல காலம் வந்தாற்போ லிருக்குதென்று சொல்லி அக்குழந்தையை அதி சீக்கிரத்தி லெடுத்துவந்து காட்டினர்.

இவர் மகா கவியாதலால் கடிவாயைக்கண்டு - யமன் - யமதூதன் - காலன் முதலிய நான்கு பற்களும் பதிந்தபடியால் அசாத்தியமென்றே சொல்லுவார்களென்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஊர்க்குடுமி வந்து, ஐயா! இக்குழந்தை முழுகிவரும்போது தீண்டியபடியால் விஷம் அதி சீக்கிரமாய்த் தலைக்கேறிப் பற்கள் கருகிக் கண் பஞ்சடைந்து போயிற்று; இனியென்ன செய்தாலும் பலியாது; பிரயாசமென்றான். இது மெய்தான்; ஜகதீசனுடைய கடாக்ஷத்தினால் இப்பிள்ளை உயிர் பெற்றெழுந்தால் எம்முடைய இஷ்டத்தை நிறைவேற்றுவீர்களாவென்று கேட்க, அவர்களியாவரும் செத்தவர்கள் உயிர்பெற்றெழுவது உலகத்தில் ஆச்சரியமாயிருக்க, நீர் உயிர்ப்பிச்சை கொடுத் தெழுப்பினால் உமது காரியத்தை நாங்கள் சிரசாவகித்துச் சீக்கிரத்தில் நிறைவேற்றி யனுப்பிவைக்கிறோ மென்றார்கள். அதுகேட்டுக் கம்பநாடர், சித்திரகூடத்தில் வசிக்கும் ஸ்ரீ பகவானை மனதிற் றியானித்துக் கொண்டு ஸ்ரீ ராமாயணத்தை அவிழ்த்து, நாகபர்சப் படலத்தை யெடுத்து இராமானுஜர் முதலானவர்கள் இந்திரசித்து எய்த நாகபாசத்தால் கட்டுண்டு மூர்ச்சித்துக் கிடக்கையில் ஸ்ரீமந் நாராயணன் ஆதியிற்செய்த சங்கற்பத்தின்படி பெரிய திருவடி யெழுந்தருளியதனால் அந்த நாகபாசக்கட்டு நிவாரணமான

சந்தர்ப்பத்தில், கருடபகவான் பல ஆயிர யுகங்கள் முடியினும் ஓரிறகு முதிராத தம்முடைய சிறகுகளை வீசுவதனுலுண்டாகிய படர்ந்த காற்றுனது செல்லுதற்குரியதாகாத நிலத்திலே அந்தகாரத்திற் செல்லவே, இளையபெருமாள் முதலானவர்களைக் கட்டிக்கிடந்த நாகபாசமானது சிறுதுண்டுகளாக அற்றுப் போயினது. சகல இந்திரியங்களையு மடக்கி மூவர்களையும் பற்றற விட்டு இதுவே ஆத்ம உஜ்ஜீவனமென்று நல்லறிவாலே தீர்மானித்து ஸ்ரீ பகவத் கைங்கர்யத்தையே செய்யும் கலங்காத நிலையையுடைய பரமேகாந்தியின் விஷயத்தில் அவ்வைதிகர்கள் மாச்சரியத்தாற் சார்த்திய பழிகள் அப் புருஷனையடையாத தன்மைபோல் அந் நாகபாசத்தாற் கட்டுண்ட அவர்களுடைய திருமேனியின் வடுக்களுந் தோன்றுமல் மறைந்து போயின என்னும் பொருளுட் கொண்ட,

க வி

பல்லா யிரத்தின் முடியாதபக்க மவைவீச வந்தபடர் கால்
செல்லா நிலத்தி னிருளுஞ்செல்வ வுடனின் றவாளி சிதறுற்
றெல்லா மவித்து முணர்வோ டுமெண்ணி யறனே வீளைக்கு முரவோன்
வல்லா ணைருத்த னிடையே படுத்த வடுவா னமேனி வடுவும்.

என்னுந் திருவிருத்தத்தையும் பாதகனுகிய இந்திரஜித்து எய்த நாகபாசமானது வாசனைதங்கிய தாமரைத் தாளினது நூல் எளிதி னீங்குவதுபோல, எளிதினீங்கிய தென்று சொல்லுவது யாதுகாரணம்? கைம்மாறு வேண்டாமல் கொடுக்குந் தன்மைபோல் மேகமோவென்று கண்டோர் ஐயங்கொள்கின்ற சலியாத நிலைமையை யுடையோனுகிய சரராமவள்ளல் (சடையப்ப வள்ளலுடைய இளையதம்பி) வாசஞ்செய்யுந் திருவெண்ணெய் நல்லூரில் வந்து சேர்ந்த அறிவு விளக்கமாகிய அந்தணர்களும் வித்வ ஜனங்களும் மற்றும் சாது ஜனங்களுமாகிய இவர்களை எமபாசத்தைப்போலச் சேர்ந்து வருத்துகின்ற தரித்திரத்தைப்போல இருந்தவிடமே தெரியாமற் மறைந்துபோயிற்று என்னும் பொருளைத் தருகின்ற,

க வி

வாசங் கலந்த மரைநாள நூலின் வகையென் பதென்னை மழையென்
ருசங் கைகொண்ட கொடைமீ ளியண்ணல் சரரா மன்வெண்ணெ யணுகும்
தேசங் கலந்த மறைவா ணர்செஞ்சொ லறிவாள ரென்றி முதலோர்
பாசங் கலந்த பசிபோ லகன்ற பதகன் றுரந்த வுரகம்.

என்னுந் திருவிருத்தத்தையும் மற்றும் சில விருத்தங்களையும் வாசித்து,

க வி

ஆழி யான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—ஊழியான்
பூணைபுர மெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணை யகல நட.

எனவும்,

மங்கை யொருபாகன் மார்பிலணி யாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களோடுஞ்
சீரியதன் மேலூருந் தெய்வத் திருநாணே
எறிய பாம்பே யிறங் கு.

எனவும்,

பாரை சுமந்த படவரவே பங்கயக்கண்
வீரன் கிடந்துறங்கு மெல்லணையே—ஈரமதிச்
செஞ்சடையான் பூணுந் திருவாபரணமே
நஞ்சுடையாய் ஓர ட.

எனவும்,

புதிதாக மூன்று வெண்பாவையும் பாடி எல்லாப் பாம்பினங்களுக்கு மரச ஞகிய திருவனந்தாழ்வானைப் பிரார்த்தித்த உடனே ஒரு சர்ப்பம் அதிவிரை வாய் வந்து யாவரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அக் குழந்தையைக் கிட்டி முன்பு கடித்தவாயில் மறுபடியுங் கடித்துத் தலைக்கேறின விஷத்தை மீட்டுக்கொண்டு திரும்பிச் சிலதூரம் போயிறந்தது. பின்பு இறந்து கிடந்த குழந்தை உயிர்பெற்று நித்திரைசெய் தெழுந்தாற்போல எழுந்தது. இவ்வற்பு தத்தைக் கண்ட தில்லை மூவாயிரவர்களும் மற்றவர்களும் கம்பநாடருடைய தெய் வப் புலமையைக் குறித்து வியந்து திருவனந்தாழ்வான்மீது கண்வளர்கின்ற கோவிந்தராஜப் பெருமாளுடைய கருணையைச் சம்பூர்ணமாய் பெற்றவரென் றும் சிலர் விஷகண்டகனுகிய உருத்திரபகவானே மானிட வுருவுகொண்டு வந்தவனென்றும் பலவாறு துதித்தார்கள். எக்காலத்தினும் எவர்களையு மதி யாத தில்லைவாழந்தணர் மூவாயிரவரும் கம்பநாடரைத் தெய்வப்புலமை யுள் ளவரென்றும் உள்ளபடியறிந்தும் முன்தெரியாமல் இவர் விஷயத்தில் அப சாரப்பட்டோமென்று தங்கள் தங்களா லியன்றமட்டும் உபசரித்து பூசித்தனர்.

பின்பு மரித்த பிள்ளைக்காக மசானத்தி லடுக்கிய காட்டத்தின்மேல் அப் பாம்பை கொண்டுபோய்த் தகனசிஞ்சயனம் முடித்து வந்து கவிஞரிடத்தி லிருந்த ஸ்ரீ ராமாயணப் புத்தகத்தை தாங்களே வாங்கி அவிழ்த்துத் தனித் தனியே அனைவரும் பார்வையிட்டுச் சொற்பொருள் கற்பனை கருத்துச் சுவை யோசை முதலானவைகளும் நன்காராய்ந்து தமிழிலருளிச்செய்த விப்பெருங் காவியத்தைப் போல வொரு நூலு முண்டோவென்று வியந்து தங்களுக்குள் பிரம்மானந்தமடைந்து நம்மிடத்தில் இந்தமட்டும் நாம் நன்றுயிருக்கிறதென்று அங்கீகரிப்பதே இந்தப் பெருநூலுக்கும் நமக்கும் பெருமையாகாது. முன்னலே பதங்கோட்டு முனிவர் தொல்காப்பியத்தில் சில ஆட்சேபஞ் செய்ததுபோல, நாமும் சில ஆட்சேபஞ்செய்து பின்பு அங்கீகாரமாவதே நலமென்று இக்கவி ஞரை நோக்கிச் சில கேள்விகள் கேட்கத் தலைப்பட்டார்கள்.

க வி

நாடிய பொருள் கைகூடு ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே.

என்னும் பாடலில் நாடியபொருள் கைகூடும் என்ற வாக்கியத்திலேயே பின் கூறுவனவெல்லா மடங்கியிருக்க ஞானமும் புகழுமுண்டாமென்று மிகை படக்கூறிய தென்னையென, கம்பநாடர் பொருளென்ப தொருபொருள், இரு பொருள், மும்பொருள், நாப்பொருள், ஐம்பொருள் முதலியவாகப் பலவகைப் படும். அவற்றுள், ஒருபொருள்: மோட்சம்; இருபொருள்: கல்வி, செல்வமும்; மும்பொருள்: சித்து, அசித்து, ஈஸ்வரன்; நாற்பொருள்: அறம், பொருள், இன்பம், வீடு; ஐம்பொருள்: ஆவரூபம், பரஸ்வரூபம், புருஷார்த்த ஸ்வரூபம், உபய ஸ்வரூபம், விரோதி ஸ்வரூபம். உலகத்தார் யாவரும் பிரதானமாக நாடும் பொருள் கல்வி செல்வம் இரண்டுமே யாதலால், அங்கு அவ்விரு பொரு ளையுமே கருதி நாடிய பொருள் கைகூடுமென்றும் அவற்றுள் கல்வியால் ஞானமும் செல்வத்தால் கைங்கர்யமும் உண்டாதற்பற்றிச் சாதன சாத்திய முறையாக அவற்றின்பின் ஞானமும் புகழுமுண்டாமென்றும் (கைங்கர்யத் தைப் புகழெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தனர்) இவ்விரண்டு மொன்றுசேர உண்டானவிடத்துத் தன் புருஷாகாரத்தால் நிரதிசயானந்த முத்தியைத் தரும் பெரிய பிராட்டியார் கடாட்சிப்பார். அதுபற்றி அவற்றின் பின் "வீடியல் வழியதாக்கும் வேரியங் கமலநோக்கும்" என்றும் இப்பய னனைத்து முள்ளன்போடு ஸ்ரீ ராகவ சரித்திரத்தைக் காலக்ஷேபஞ் செய் வோர்க்காதலால், தவத்தில் மிகுந்த அரக்கர்களும் அவருடைய சேனையும் நீறுகி நாசமடையும்படி வென்று வெற்றி மாலையைத்தரித்த ஸ்ரீ கோதண்ட ராமபிரா னுடைய திருத்தோள்களது பராக்கிரமத்தை படனஞ் செய்வோர்க்கே யென் பது தோன்ற "நீடிய வரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை சூடிய சிலையிராமன் றோள்வலி கூறு வோர்க்கே" என்றுஞ் சொல்லினமென்றார். பின்னுமவர் கள் சூடிய சிலையிராமன் றோள்களை கூறுவோர்க்கே எனின் உமது கருத் தின்படி ஸ்ரீ ராமாயண மென்பதடுக்கும்; அப்படிக் கூறுது தோள்வலி யென்ற தென்னையென, தெய்வக் கவிஞர்: தாடகையைச் சங்கரித்து சுவாகு வைக் கொன்று கௌசிகமுனி வேள்வியைக்காத்து மிதிலையில் சிவனது வில்லை யொடித்துச் சீதாபிராட்டியைத் திருமணமுடித்து அயோத்திக்கு மீண்டு வரு கையில் பரசுராமனை வென்று வனத்தில் விராதன் தோளைச் சரித்துக் கர தூஷணரியரை யதமாக்கி மாயமானைக் கொன்று கவந்தனை மாய்த்து மரா மரத்தைத் துளைத்து வாலியை வதைத்துச் சுக்ரீவனுக்கு கரசளித்து வரு ணனைவாட்டி மகா ராக்ஷதனை மடித்து கும்பகருணனைச் சேதித்து மூலபலத்தை முடித்து இராவணாதி ராட்சதர்களை யெல்லாம் கருவறுத்து விபீஷணாழ்வானுக்கு முடிசூட்டி ஸ்ரீ ராம மந்திர வாஞ்சையினுடைய புஜபலமேயாதலால் ஆதி தொடங்கி அந்தமட்டும் அவன் தோளாண்மையைச் சொல்வதே ஸ்ரீ ராமா யணமென ஆராய்வோர்க்கு நன்கு விளங்குதற்பொருட்டுத் தோள்வலியென் றும் என்றார். மேலு மவர்கள் கேட்ட வினவுக்கெல்லாம் தக்கபடி கம்பர் விடைகூறக் கேட்டு இவருடைய தெய்வப்புலமைக்கு நம்முடைய கவி யெம் மாத்திரமென்று தங்களைத் தாங்களே யிகழ்ந்துகொண்டு அவரை வாயாரப். புகழ்ந்து சந்தோஷப்பட்டு நாடியபொருள் கைகூடும் என்னுந் திருவிருத்தத் தில் நீறுபட்டழிய வென்றதற்கு நீரெந்தப்பொருளைச் சொல்லினும் சொல்லிக் கொள்க; அந்த ராட்சத சேனைகள் நீர் தரித்திருக்கும் திருமண் பட்டன்றே

நாங்கள் தரித்த நீறுபட்டுத் தானே யழிந்தது வென்று சாதுரியமாகச் சொல்லி இவ்விதிகாச சிரேஷ்டத்தைப் பாட நீரே தகுந்தவர் என்று மெச்சித் தங்களில் முதன்மையானவரொருவர் செய்த துதிகவியோடு கையொப்பங் கொடுத்தனர்.

க வி

மெய்ச்சிட்டர் பொதுநோக்கிற் சீர்தூக்கிக் கம்பனெனு மேதக் கோன்றன்
உச்சிட்ட முலகிலுள கசடறக்கற் றுயர் புலவ ருஞற்றி யாப்பில்,
வைச்சிட்ட சொற்பொருணேக் கணிமுதல வென்பர்தனி மிதிலேக் காக்தை
வீச்சிட்ட மணவாளன் புகழெனின்மற் றிதன்றகைமை விளம்பற் பாற்றே.

என்னும் இச்செய்யுளையுங் கையொப்பத்தையுங் கொண்டு போய் பெரு மாள் சந்நிதியிலுள்ள வைதிக மார்க்கத்தாருக்குக் காட்டி நடந்த செய்திக ளனைத்தும் சொல்ல, அவ்வந்தண ராச்சரியப்பட்டு திருத்தலத்திலுள்ள சம ணர்கள் அனேகர் தமிழிற் பெயர்பெற்ற வித்துவான்களும் சமய துவேஷி களுமா யிருக்கின்றூர்கள். அவர்களிடத்திலும்போய்க் கையொப்பம் வாங்கி வந்தால் நலமாயிருக்கு மென்றூர்கள்.

கவிராயர் நல்லதென்று புறப்பட்டு அவ்விடத்துக்குப் போனபோது, முன் தில்லையில் நடந்த செய்தியனைத்தும் கேள்விப்பட் டிருப்பவர்களாகையால் என் றும் காணுத பொருளைக் கண்டவர்கள்போல சந்துருஷ்டியடைந்து எதிர்கொண் டழைத்துப் போய்த் தக்கபடி யுபசரித்து எங்களிடம் வந்ததென்னே யெனக் கம்பநாடர் யாம் பாடிய ராமாயணத்துக்கு உங்களுடைய ஒப்புக் கையொப்பம் வாங்கவேண்டி வந்தோ மென்றனர். எங்களுடைய கையொப்பம் எம்மாத் திரம் தமிழிற்சிறந்த வித்துவான்களாயிருக்கிற தில்லைமூவாயிரவருடைய கையொப்பம் பெற்றுக்கொண்டதே போதுமானதா யிருக்கின்றது. அப்படி யிருந்தும் எங்களை யொருபொருட்டா யெண்ணிவந்து எங்களையும் பெருமைப் படுத்தினீர் என்று சொல்லி, ஸ்ரீ ராமாயணத்தை வாங்கி சிற்சில விடங்களிற் பார்வையிட்டுச் சொற்சுவை முதலியவற்றை நோக்கி அதியாச்சரியமானவர்க ளாய் ஒருவரை யொருவர் நோக்கித் தமிழிலுள்ள சிந்தாமணி, சிலப்பதி காரம், வளையாபதி, மணிமேகலை, குண்டலிகேசியென்னும் பஞ்ச காவிய முத லிய நூல்களும் மற்றுஞ் சில சங்கச்செய்யுள் முதலிய நூல்களும் இந்நூற் போலப் பெருங்காப்பியத்தி னிலக்கணமுற்றும் பெற்றுவது சொன்னேக்கம் பொருணேக்க முதலிய நோக்கமுடையனவாயாவது உண்டோ! இவரைத் தெய்வகவிஞ ரென்பதற்கு யாதொரு ஐயப்பாடு மில்லையெனக் கூறி இவ ருடைய புலமை யாவருக்கும் பிரசித்தப்படுத்த வேண்டுமெனத் தாங்களும் சிற்சில விடங்களில் ஆட்சேபஞ் செய்யவேண்டுமென்று பற்பல கேள்விகள் கேட்டனர். அவற்றுட் சில வருமாறு :—

க வி

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலேபெ றுத்தலு நீக்கலு நீங்கலர்
அலகி லாவிளே யாட்டுடை யாரவர்
தலேவ ரன்னவர் கேசர ணுங்களே.

என்ற பாடலில் எப்பொருட்கும் இறைவன்செயலே விளையாட்டென்ற தென்னே ? ஒப்பாரு மிக்காரும் இல்லாத கடவுள் விளையாடுவாரானால் அவனைச் சிறுவனென்றன்றே நினைக்கவேண்டி வரும் என்றும் மூன்று செய்யுளால் கடவுள் வணக்கஞ் செய்யவேண்டுவதென்னே ? ஒரு செய்யுளால் செய்தலே யமையாதோ வென்றும் கேட்டார்கள். அம்மூன்று கேள்விக்கும் கம்பநாடர் சகலண்ட சராசரங்களையும் ஆக்கலும் காத்தலும் அழித்தலும் ஆகிய விவை சர்வ சக்தியுடைய அதற்கு இச்சா மாத்திரத்தில் எளிதினிகழ்வனவென்பதும், விளையாட்டுச் செய்கையே இப்படிப்பட்டதாயின் அவர் வேண்டுமெனக் கண்ணுன்றிச் செய்யும் செய்கை எப்படிப்பட்டதா யிராது; இதனினும் பெருஞ்செய்கையா யிருக்குமென்பதும் தோன்ற அவற்றை விளையாட்டென்றும், வஸ்து நிச்சயம் பண்ணுமிடத்தில் நாமரூப கிரியைகளே ஆவசியமாகச் சொல்ல வேண்டு மாதலால் அவற்றுள் ஸ்ரீ சர்வேஸ்வரனுடைய கிரியை 'உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்' என்ற பாடலாலும், ரூபம் 'சிற்குணத்தர் தெரிவருநன்னிலை' என்ற பாடலாலும், நாமம் 'ஆதியந்தமரி யென யாவையும்' என்ற பாடலாலுஞ் சொல்லப்பட்டன வென்றும், நாமகிரியைகளைச் சொன்னவளவில் உருவந் தானே யமைதலால் அதனையொழித்து அவனது அநந்த கலியாண குணக் கடலிலாடுதல் ஆன்றோரொழுக்க மாதலால் குணங் கூறப்பட்டனவென்றுங் கூறினர். அதுகேட்டுச் சைனர்கள் சரஸ்வதி யமிசமாகிய உமது வல்லமையை நாங்கள் கூற எம்மாத்திரமென்று கூறி, ஐயா தெய்வக்கவிஞரே! இப் பெருங் காப்பியத்துள் எங்களுக் கேதாவது ஆதார மூண்டோவென வினவ, உண்டென்று உயுத்த காண்டத்தில் இந்திரசித்துவதைப் படலத்தில் வில்வீரரிற் சிறந்த இந்திரசித்து இறந்தமாத்திரத்தில் இனிமே லிராவணனுக்கு அரசாட்சி செல்லமாட்டாதென்று களிப்படைந்த தேவர்களெல்லாரும் உடுத்த வாடையையும் மேலுத்தரியத்தையும் ஒக்கவுரிந்து சுருட்டி மேலே செல்லும்படி வீசி ஆனந்தத்தால் ஆரவாரித்தபோது கொல்லா விரதிகளாகிய சமணர்களுடைய உபாசனை தேவர்களாகிய அருகர் கூட்டம்போல இருந்தனர்களென்னும் கருத்தை யுட்கொண்ட,

கவி

வில்லாள் ராஞர்க் கெல்லா மேலவன் விளித லோடும்
செல்லாது விலங்கை வேந்தற் காசெனக் களித்த தேவர்
எல்லாருக் ஞசு நீக்கி யேறிடவ ரார்த்த போது
கொல்லாத விரதத் தோர்தங் கடவுளர் கூட்ட மொத்தார்.

என்ற பாடலைச் சொன்னர். அதை யவர்கள் கேட்டு வியந்து அவர்களுக்குள் தலைவராயினை ரொருவர்,

கவி

பர்ரேந்து பர்டரவப் பெரும்பாயன் மிசைத்துயிலும் பரமன் சீர்த்திச்
சீரேந்து பெருங்காப்பி யந்தமிழிற் புனைந்துலகஞ் சிறக்க வீந்தான்
நீரேந்து கடலாடை நீணிலத்திற் றனக்கொப்பு நிகழ்த்த வொண்ணாப்
பேரேந்து நற்றெய்வப் புலமைபெறு கம்பனெனும் பெரியனம்மா.

எனக்கூறிய துதிகவியொன்றுங் கையொப்பமுங் கொடுத்தனர். அச் செய்யுளையுங் கையொப்பத்தையுங் கொண்டுபோய்க் கோயிலிலுள்ள வைஷ்ண வர்களுக்குக் காட்ட இம்மட்டிலே போதுமென்னுது மாவண்டூரிற் சிரேஷ்ட பண்டிதனுகிய் ஓர் கருமானிருக்கின்றுன் அவனுடைய கையொப்பமும் வாங்கிக் கொண்டு வாருமென்றூர்கள். அப்படியே புறப்பட்டுக் கருமானூர்க்குச்சென்று தனது வரவைத் தெரிவிக்க, அவன் எதிர்கொண்டுவந்து மரியாதையோ டுபசரித்து என்னையு மொருபொருளா யெண்ணி வரவேண்டுமோ தங்களுடைய நூலிலுள்ள செய்யுட்சாரத்தை யுண்மையாக வுணர வல்லவர்க ளிங்குண்டோ வென்றுசொல்லி அப் பெருங்காப்பியத்தை வாங்கி அவிழ்த்து வாசித்துப் பார்த்து எழுத்துச் சொற்பொருள் யாப்பணியென்னும் இலக்கணங்களுக்கு இலக்கியமாயுள்ள திதுவேயன்றி வேரொன்று மில்லையெனப் பலவாறு புகழ்ந்து இந்நூலி லெங்களுக் கேதேனும் ஆஸ்பதமுண்டோ வென்று வணக்கமாய்க் கேட்க, உண்டென்றுகூற ஸ்ரீ ராமபிரான்மேல் இராவணன் மாயாஸ்தி ரத்தைப் பிரயோகித்தபோது அவர் மாதலியை நோக்கி யிதென்னவென்று வினவ, மாதலி சர்வசுவாமியை நோக்கிக் கருகொண்டு நிறைந்த மேகத்தைப் போலுந் திருமேனியையுடையாரே திக்கஜங்களினுடைய தந்தங்களை யொடித்த மார்பையுடைய ராவணன் தான் நூலிழை நுழைகின்ற சிற்றாசியைச் செய்து இருப்புத் தொழிலிற் றேர்ந்த கருமானிடத்திற் சென்று விருப்பத்தோடு விலைக்கு வாங்கிக்கொள்ளென்று விற்கின்ற அறிவிலியைப்போல மாயப் பெருமானுகிய உம்மேல் மீளாது மாயாஸ்திரத்தைப் பிரயோகித்தானென்று கூறிய பொருளமைந்த,

கவி

இருப்புக் கம்பியற் கிழைநுழை யூசியொன் றியற்றி
வீருப்பிற் கோடிரால் விலைக்கெனும் பதகரின் விட்டான்
கருப்புக் கார்மழை வண்ணவக் கடுந்திசைக் களிற்றின்
மருப்புக் கல்லிய மார்பவன்மீளரு மாயை.

என்ற பாடலைச் சொல்லினர். அதற்கவன் சந்தோஷப்பட்டு,

கவி

கருக்கொண்ட முகில்வண்ணத் தனிமுதல்வன்
காசில்கொற்றக் கதையொண் பாவால்
ஒருக்கொண்ட மூதிர்கருணை யொடுதந்தான்
கடப்பாடு கோனில் வாணின்
மருக்கொண்ட பொழிலழிந்து ரெம்மூடைய
தவப்பேரு வந்து தோன்றித்
திருக்கொண்ட தனித்தெய்வப் புலமைபெறும்
கம்பனெனுஞ் சீரியோனே.

என்ற துதிகவியுங் கையொப்பமுங் கொடுத்தான்.

அதைக் கொண்டுவந்து காண்பித்தபொழுது, ஸ்ரீரங்கத்தார் தெய்வக் கவிஞரை நோக்கி எஞ்சலில்லாத தஞ்சாவூர் அஞ்சனட்சி யென்ற வஞ்சியாகிய தாசி பிரபல் வித்துவாமிசையா யிருக்கிறாள். அவள் கொடிய கர்வமுடையவ ளாகையால் அவளேதாவது பிதற்றுவாள். அவள் கையொப்பமும் வந்தால் சர்வோத்தமமா யிருக்குமென, ஆராயினும் என்ன, 'கடை நிலத்தோராயினுங் கற்றுணர்ந்தோரைத் தலைநிலத்து வைக்கப்படும்' என்பதனால் குற்றமில்லை யென்று அவளிடம் சென்ற பொழுது அவளுள்ளம் நடுங்கித் தேவரீர் என்னைப் பொருள்செய்து இவ்வளவுதூரம் வந்தது யார்செய்த பாக்கியமோ ஆயினும் என்ன காரியமென்று வினயத்தோடு கேட்க, அதற்குத் தாம்வந்த கருமத்தை வெளியிட்டார். இதற்கே தாங்கள் எழுந்தருளியது; அடியாளை வரும்படி நியமித்தால் தலையால் நடந்து வாரேனே இதென்ன அபசாரமென்று வருத்த முற்றுச் சூரியனுக்கு முன்னே மின்மினியும் கடலுக்குமுன் கால்வாயுமோ வென்று கூறி, ஸ்ரீ ராமாயணத்தை வாங்கிக் கவிகளை வாசித்து அதியாச்சரி யத்தோடு களித்து, இந்தக் காப்பியத்தில் அடியேங்கட்கு ஏதாயினும் பற் றுண்டோவென்று கேட்டனள். கவிஞருண்டென்றும் அவற்றுளொன்று சொல்லுகிறேமென்றும் சொல்லிப் பாலகாண்ட மிதிலைக் காட்சியில் ராஜ வீதியிலுள்ள விசித்திரங்களைப் பார்த்துக்கொண்டே விஸ்வாமித்திரமுனிவர் பின்னே போகிற இராமலட்சுமணர்கள் அங்கங்கு பல மங்கைகள் ஆணிமுத் திழைத்த பந்துகளையெறிந்து விளையாடுகையில் சரீர சம்பந்தத்தால் உண்டா கும் போகசுகத்தை தழுவிய புருஷர்களோடு சமமாக அநுபவித்து அதற்காக விலையுங் கொள்ளுகின்ற பாம்பின் படத்தைப்போன்ற அல்குலையுடைய வேசிகளது மனம்போலவும், அடித்த பொருளினுடைய நிறத்தைக் காண்பிக் கிற பளிங்குபோலவும், மைதீட்டி செவ்வரிபடர்ந்த நெடிய கண்ணினது பார்வை படுதலும், கறுத்துவந்து சிவந்த கையில்வந்து சேர்ந்தபோது சிவந்து தோன் றும் பந்துக்கள் பலவற்றையுங் கண்டார்களென்ற பொருளமைந்த,

கூ வி

மெய்யுரு போக மொக்க வுடனுண்டு வீலையுங் கொள்ளும்
பையர வல்கு லார்த முள்ளமும் பளிங்கும் போல
மையரி நெடுங்க ணோக்கம் படுதலுங் கருகி வந்து
கையுறிற் சிவந்து காட்டுங் கந்துகம் பலவுங் கண்டார்.

என்ற பாடலைச் சொன்னார். அதுகேட்டு உள்ள மகிழ்ந்து,

கூ வி

அம்பரா வண்ணிசடை யரன் முன்முதல்
உம்பரான் முனிவரால் யோக ராலயர்
இம்பராற் பிணிக்கரு மிராம வேழஞ்சேர்
கம்பராம் புலவரைக் கருத்தி ருத்துவாம்.

என்ற துதிகவியுடன் கையொப்பமிட்டனள். அவ்விரண்டையுங் கொண்டு வந்து கோயிலிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு காட்டினர். ஸ்ரீ ரங்கத்தார்

பின்னும் வாய்கூசாமல் சிற்சிலரைக் குறித்துக் கையொப்பம் வாங்கிவரச் சொல்ல அப்படியே வாங்கி வந்தும் அவர்க ளிவையெல்லாம் சரிதான் அம் பிகாபதி யென்னும் ஜேஷ்டபண்டிதருடைய கையொப்ப மொன்றுமாத்திரம் மிச்சமாயிருக்கின்றது அதையும் வாங்கிக்கொள்வீராகில் எங்களுக்கு மிச்சமா யிருக்குமென்று சொன்னர். தன் புத்திரனுகிய அம்பிகாபதி கையொப்பம் தனக்குச் சிறந்ததாவென்னுமல் பெரியோர்கள் சொல்லியபடி நடத்தல் தக்க தென் றெண்ணி, தம்முடைய கற்றுச் சொல்களி லிருவரை வரவழைத்துவரச் சொல்லினர். அவர்களப்படியே போயழைக்க, அவர் புறப்பட்டு வந்து என்ன செய்தியெனக் கேட்க, கவிஞர் அப்பா அம்பிகாபதி உன்னுடைய கையொப்ப மும் வேண்டுமென்று ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வாமிகள் சொல்லுகிறார்களென்றனர். ஐயா! எனக்கென்ன ஆஸ்பதம் இந்தப் பெருங்காவியத்தி லுண்டென்ன, புலவரானவர் தமக்கு அம்பிகாபதி புத்திரனுகையால் அதற்குத் தக்கபடி உனக்கு வேண்டியவற்றையும் வைத்திருக்கிறேன் அவையாவன: சளசள களகள கொள கொள கிளு கிளு என்பனவாம். அவைகளுள் க-வது பால காண்டத் திருவவதாரப் படலத்தில்,

கவி

வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடுகெனக் கருதி வான்மிசை
சளசள வெனமழை தாரை கான்றண
குளஞெடு நதிகடங் குறைக டீரவே.

என்ற பாடலிலும், 2-வது மேற்கூறிய காண்டத்து உண்டாட்டுப் பட லத்தில்,

கவி

வளையமர் முன்கையோர் மயில னடனக்
கிளையவள் பெயரினைக் கொழுன னீதலும்
முளையெயி றிலங்கிட முறுவல் வந்தது
களகள வுதிர்ந்தது கயற்க ணுலியே.

என்ற பாடலிலும், 3-வது உயுத்தகாண்டத்திலே வருணனை வேண்டு கோட் படலத்தில்,

கவி

அண்டமூ லத்துக் கப்பா லாழியுங் கொதித்த தேழு
தெண்டிரைக் கடலின் செய்கை செப்புவ தெவனே சென்னிப்
பண்டைநா ளிருந்த கங்கை நங்கையுங் கொதித்தாள் பார்ப்பான்
குண்டிகை யிருந்த நீருங் கொளகொள் கொதித்த தன்றே.

என்ற பாடலிலும், 4-வது மேற்கூறிய காண்டத்து மாயாசனகப் படலத்தில்,

க வி

அண்டத்தளவு மனையப் பகர்ந் தழைத்தான்
பண்டைத்தன் ஞமத்தின் காரணத்தைப் பாவித்தான்
தொண்டைக் கனிவாய் துடிப்ப மயிர்பொடிப்பக்
கெண்டைத் தடங்கண்ணு ளுள்ளே கிளுகிளுத்தான்.

என்ற பாடலிலும் கண்டுகொள்க என்றனர். உடனே அம்பிகாபதி யாகிய பண்டித சிரேஷ்டர் எழுந்து தெண்டன் சமர்ப்பித்து நின்று,

க வி

கம்ப நாட னுமைசெவி சாற்றுபூங்
கொம்ப னுடன் கொழுநனி ராமப்பேர்
பம்ப நாடழைக் குங்கதை யாய்ச் செய்த
கம்ப நாடன் கழறலை யிற்கொள் வாம்.

என நூதன கவியொன்று செய்துகொடுக்க அதைக் கவிஞர் திருவரங் கத்திலுள்ள வைஷ்ணவர்களுக் கறிவிக்கச் சென்றபோது, பரமாசாரியாகிய ஸ்ரீமந் நாதமுனிவர்கள் எழுந்தருளியதைக் கண்டு அவரது திருப்பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து தமது கருத்தை விண்ணப்பஞ் செய்துகொள்ள ஸ்ரீமந் நாதமுனிகள் ஸ்ரீமத் கம்பராமாயணத்தை வாங்கி அவிழ்த்துக் கடாட் சித்தருளி அது சொற்சுவை பொருட்சுவை செறிந்ததாயும், பகவத்விஷயமான தாயும், அதி யற்புதமாயு மிருப்பதை நோக்கி இக்கவியினை யுடைய புலமை கேவலம் மானுஷிகமானது அன்றென்று வியந்து, இப்பெருங் காப்பியத்தை அவசியம் பிரசித்தம் பண்ணுவிப்பது நம்முடைய கடமையெனத் திருவுளங் கொண்டு, தெய்வக் கவிஞராகிய கம்பநாடரை மண்டப கயிங்கரிய மொன்று செய்யும்படி நியமித்துத் தம்முடைய நியமனத்தின்படி அவர் கட்டி முடித்த வுடனே சுபதினம் பார்த்து அரங்கேற்ற யத்தனமா யிருக்கையில், ஸ்ரீ சர்வே சுரனுகிய நம்பெருமாள் அர்ச்சகன் முகத்தாலே ஆவிர்ப்பவித்துக் கம்ப நாடர் நீ நம் சடகோபனை பாடினையோ பாடினல்தான் நாம் உமது ஸ்ரீ ராமாயணத் தைத் திருவுளம்பற்றுவோம் இல்லாவிடின் அது நமக்கு அங்கீகாரமாகாது என்றருளிச் செய்தனர்.

ஸ்ரீ ரங்கநாதர் அருளுப் பாட்டின்படி கம்பநாடர், ஆழ்வார் விஷயத்தில் நூறுகட்டளைக் கலித்துறையால், ஆழ்வார் நூற்றந்தாதி என்று வழங்குகின்ற 'சடகோபரந்தாதி' யென ஓரந்தாதி பாடியருளினர். அதைக்குறித்துப் பின்பு அபியுக்தரொருவர் பாடிய பாடல்.

க வி

நஞ்சட கோபனைப் பாடினை யோவென நம்பெருமாள்
விஞ்சிய வாதாரத் தார்கேட்பக் கம்பர் விரைந்துரைத்த
செஞ்சொ லந்தாதி கலித்துறை நூறுந் தெரியும்வண்ணம்
நெஞ்சடி யேற்கருள் வேதந் தமிழ்செய்த நின்மலனே.

என்பது அவ்வந்தாதியில்,

வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ச் தோர்விரிஞ்சன் முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின்முன் செல்க குணங்கடந்த
போதக் கடலெங்க டென்குரு கூர்ப்புனி தன்கவியோர்
பாதத்தின் முன்செல்லு மேதொல்லை மூலப் பரஞ்சுடரே.

என்பது முதற்பாடல்,

இதன் பொருள்

புராதனமாயும், எல்லாப் பொருள்களுக்கு மூலகாரணமாயும், மேன்மையாயும், சோதிசுரூபமாயும் விளங்கா நின்ற ஸ்ரீமந் நாராயணன், வேதங்களையும் வேதாந்தங்களையும் கடந்து அவற்றின்முன் செல்லினும், செல்லட்டும். உண்மை நிலையுணர்ந்த யோகியர்கள், பிரமன் முதலிய தேவர்கள் இவர்களுடைய குற்றமில்லாத ஞானத்தின் முடிவைக் கடந்து செல்லினும் செல்லட்டும், ஏயகுணமில்லாத மெய்ஞ்ஞானக் கடலாய்த் தென்திசைக்கண் திருக்குருகூரில் அவதரித்த பரிசுத்தனுகிய எங்கள் சடகோபன் வெளியிட்டருளிய திராவிட வேதத்தில் ஒரு கவியினது ஒரு பாதத்தைக் கடந்து செல்வானே செல்லமாட்டான், எ - று.

ஸ்ரீ சர்வேசுரன் ஸ்ரீ சடகோபனுடைய சுரத்தினது ஓரடியைக் கடக்கமாட்டான் என்பது என்னவெனில்: பாண்டிய நாட்டில் திருக்குருகூரென்னுந் திவ்விய தேசத்தில் அர்ச்சாவதாரமாயெழுந்தருளி யிருக்கின்ற ஆழ்வாருக்குக் கோயிலிலும் வீதிப் புறப்பாட்டிலும் வெகுகாலமாக வேதந் தமிழ் செய்த மாறன் சடகோபன் என்பது முதலாகப் பற்பல விருதுகூறித் திருச்சின்ன மூதிவருவதையும் பிரமோச்சவங் கண்டருளப்பண்ணுவதையும் பற்றி ஒருகாலத்தில் தென்மதுரைச் சங்கத்தார் தங்கள் மடமையால் அசூசைக் கொண்டு ஆழ்வார் பக்தரேயல்லாமல் பகவானல்லரே இவரை வேதந் தமிழ் செய்த மாறன் சடகோபனென்ன விருதுகூறித் திருச்சின்ன மூதுவதும் உச்சவம் நடத்துவதும் என்னகாரணம் இவர் செய்தருளிய திருவாய்மொழி தமிழ்ச் செய்யுளே அன்றி வேதமென்பது தகுதியன்றென்று வாய்மதம்பேசி அப்சாரப்பட்டார்கள். அப்போது, ஆழ்வார் திருநகரிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் இந்தச் சங்கத்தார் தமிழொன்றுமே பழகினவர்களாதலால் இவர்களுக்கு வடநூல் மேற்கோள்களைக் கூறி வாதிப்பதானல் பயனென்றுமில்லை இவர்கள் ஏதேனும் ப்ரத்தியட்சமாக ஒன்று நடந்தாலல்லாமல் ஒப்பார்களென்று மனம் பதைத்துக் குறுகைப்பிரான் சந்நிதியிற்போய்ச் சேவித்து ஆழ்வாரே தேவரையும், முந்தை யாயிரமாகிய தமிழ் வேதத்தையும், அவமதித்த சங்கத்தாருக்குக் கர்வபங்க மாகும்படி தேவரீர் ஏதாவது பிராயச்சித்தம் செய்வித்தாலொழிய அடியேங்கள் எழுந்திருக்கக்கடவோ மல்லோமெனத் தீர்க்க வைராக்கிய சித்தர்களாய் மூன்றுநாள் வரையும் ஸ்நானம், அனுஷ்டானம், ஜபம், ஹோமம், உபயவேத பாராயணம் பகவதாராதனம் முதலானவைகளும் இல்லாமல் கிடைந்த கிடையி லிருந்தார்கள்.

அப்படி அவர்க ளிருப்பதற்காகத் திருவுள மிரங்கி ஆழ்வார் ஒரு விர்த்த பிராமணனாகிவந்து, யார்காணும் மூன்றுநாளாக இந்தக் கோயிலின் வாசலில் கிடக்கிறவர் இப்படி செய்வதற்குக் காரணமென்ன வென்று கேட்க அவர்கள் தென்மதுரைச் சங்கத்தார் தங்கள் மடமைத்தனத்தால் இகழ்ந்தபடியைத் தெரி வித்து அம்மூடமதிகளுக்கு ஏதேனும் ஒரு பிராயச்சித்தம் நடக்கவேண்டு மென் பது அடியேங்களுடைய அபிமதமென்ன, அந்த விர்த்த பிராமணர் புன்னகை கொண்டு இந்த கலிகாலத்திலும் அப்படி நடக்குமா இதென்ன பைத்தியம் என்று சொல்ல ஸ்ரீ வைஷ்ணவர்கள் அப்படி நடவாவிட்டால் இங்ஙனே அன்ன பானாதிக ளில்லாம லிருந்து பிராணனை விட்டுவிடுகிறோமென்று சொல்லினர் கள். அதுகேட்டருளிய விர்த்தபிராமணர், அவர்களுடைய மனோ நிச்சயத்துக் காகத் திருவுளமுகப்பாகி ஸ்ரீ சடகோபர் வெளியிட்டருளிய தமிழ்வேதத்தில் இன்ன படலத்தில் இத்தனையாவது பாசுரத்தை ஒரு சிறுநறுக்கில் எழுதிக் கொண்டுபோய்ச் சங்கப்பலகையின்மேல் வையுங்கோளென்று அருளிச்செய்து அந்தர்த்தான மாயினர்.

அவர்கள் அப்படியே தொண்ணூற்றைந்தாந் திருவாய்மொழியில் முதற் பாசுரத்தை சிறுநறுக்கில் எழுதிக்கொண்டு போய் வைத்தமாத்திரத்தில் சங்கப் பலகையான்து பொற்றூமரைக் குளத்தில் மூழ்கிவிட்டது; அதன்மேலிருந்த புல வர்களெல்லாம் தத்தித் தடுமாறி எழுந்து மெள்ள நீந்திக் கரை சேர்ந்து பார்க் கும்போது, அமிழ்ந்த பலகை குபீரென்று கிளம்பித் தன்னிடத்தில் வைத்த சிறுமுறியை மாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது; அவர்கள் சிறு நறுக்கையை யெடுத்து,

"கண்ணன் கழலிணைகள் நண்ணு மனமுடையீர்
எண்ணுந் திருநாமம் திண்ண நாரணமே."

இத் திருவாய்மொழியை வாசித்தறிந்து இச்சிறுமுறிக்கே இடங்கொடுத்த சங்கப்பலகை இதனோடு நமக்கும் ஒக்க இடங்கொடுக்குமா கொடாதாதலால் நம்மை அகற்றிவிட்டதென்று, ஆழ்வாருடைய அருளிச்செயல் உண்மை யாகவே வேதமென்றும் அறிந்து முன்னே தாங்கூறியது மடமையென்று துக் கித்து, மற்றும் திருவள்ளுவர், ஔவை, இடைக்காடர் ஒருவரை யொருவர் சந் தித்தபோது வள்ளுவரை நோக்கி நீர்செய்த நூல் எப்படிப்பட்டதென்று மற்ற இருவருங் கேட்டதற்கு,

"குறுமுனிவன் முத்தமிழு மென்குறளு நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்."

என்று சொன்னதையும், அதுகேட்டு, ஔவை உம்முடைய குறளும் அகஸ்தியமுனிவரால் வெளியிடப்பட்ட முத்தமிழும் நங்கைப் பிராட்டியினுடைய புத்திரரா யவதரித்த பொழுதே இருவகைப்பற்றும் மற்றுந் துறந்த சிறுமுனி யாகிய ஸ்ரீ சடகோபர் விரித்துரைத்த தமிழ்வேதத்திற்குப் புத்திரஸ்தான மென்றது சரியே; திராவிட வேதத்துக்கு அவ்வளவு சொல்வதே போதா தென்று,

"ஐம்பொருளு நாற்பொருளு மூப்பொருளிற் பெய்தமைத்த
செம்பொருளே யெம்மறைக்குஞ் சேட்பொருளைத்—தண்குருகூர்ச்
சேய்மொழிய தென்பர் சிலரியா னிவ்வுலகின்
தாய்மொழிய தென்பேன் றகைந்து."

இதன் பொருள்

ஐம்பொருளும் - அர்த்த பஞ்சகத்தையும், நாற்பொருளும் - சதுர்வித புருஷார்த்தங்களையும், மூப்பொருளும் - சித்து அசித்து ஈச்சுர நிலைகளையும், பெய்தமைந்த-நிரப்பி அமைந்த, செம்பொருளே-உண்மைப் பொருளே, எம்மறைக்கும்-எவ்வகைப்பட்ட வேதங்களும், சேட்பொருளை-சம்மதமாகிய மேலான பொருளை, சில - அதன்றன்மை யுணராத சிலர், தண்குருகூர் - குளிர்ந் திருக்குருகூரில் அவதரித்த, சேய்மொழியது பிறந்தபொழுதே - பிறந்த குழந்தையினது சொல் என்பர் என்று சொல்லுவார்கள். தகைந்து-அவர்களைத் தடுத்து, யான்-நானே, இவ்வுலகின் இந்த அண்டங்களுக்கு தாய் - தாயுமாய் நின்ற ஸ்ரீமத் நாராயணன் பிரமனுக்கு உபதேசித்த, மொழிய தென்பேன் - மொழியாகிய வேதமேயென்று சொல்வேன், எ - று.

அதுகேட்ட இடைக்காடர் திராவிட வேதத்தினிடத்துத் தமக்குண்டாகிய ஆதாராதிசயத்தால்,

கவி

சேய்மொழியோ தாய்மொழியோ செப்பி லிரண்டுமொன் றவ்
வாய்மொழியை யாரு மறையென்ப வாய்மொழிபோல்
ஆய்மொழிகள் சால வுளவெனினு மம்மொழியின்
சாய்மொழிய தென்பேன்யான் றகைந்து.

என்று சொன்னதையும் நினையாமற் போனமே யென்றனர்.

இதன் பொருள்

செப்பின் - சொல்லுமிடத்து, சேய்மொழியோ - திராவிடவேதமும், தாய் மொழியோ - வடமொழிவேதமும், இரண்டும் ஆகிய - இவ்விரண்டும், ஒன்று, வேற்றுமை யில்லாமல் - ஒரு பொருளையே சொல்லுதலால் ஒன்றேயாம் (அது காரணத்தால்) அவ்வாய்மொழியை-அத்திருவாய்மொழியை, யாவரும் - மேலோர் யாவரும், மறையென்ப-வேதமேயென்று சொல்லுவார்கள், வாய்மொழிபோல்-திருவாய்மொழிபோல், ஆய்மொழிகள் - தெரிந்தெடுத்த மொழிகளால் சமைத்த நூல்கள், சாலவுளவெனினும் - மிகுதியும் உண்டெனினும், தகைந்து - அதைத் தடுத்து, அம்மொழியின் - அத்திருவாய் மொழியினது, சாய்மொழியது - சாயையாகச் செய்யப்பட்ட நூல்களாகும், என்பேன் - என்று சொல்லுவேன், எ - று.

அப்படி நினையாவிடினும் பூர்வம் ஒருகாலத்தில் தாமிரபரணி நதியின் வடகரையிலிருந்த யோகியொருவரை நத்திக்கொண்டிருந்த நாயானது தென்

கரையிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குப் பிரதினமும் மத்தியான வேளையிற் போய் வீதியில் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய உச்சிஷ்டத்தைத் தின்று வயிற்றை நிரப்பிக்கொண்டு வருவதுகண்டு ஒருநாள் போய்த் திரும்பிவர நேரப்பட்டதனல் நாயின்னும் வரவில்லையேயெனக் கருணையாலே ஆற்றோரத்தில் வந்து பார்க்கும்போது, அந்நாய் நட்டாற்றில் வருகையில் மேல்வெள்ளம் வந்தபடியால் நீந்திக் காலோய்ந்து அந்நீரிலமிழ்ந்து மேலே கிளம்பிற்று. அப்போது அதன் கபாலம் வெடித்து அந்தரத்தின் வழியாய் நாயின் ஆத்மாவானது ஜோதிமயமாய் விமானத்தின்மேல் சென்றது; தாம் செய்துவந்த யோகபலத்தால் யோகியானவர் பிரத்தியட்சமாகக் கண்டு பின்பிறப்புள்ளதாயும் எம்மையொத்தவர்களும் பெறுதற்கரிய பேறுபெற்றதே! இதென்ன காரணத்தையுடையதாயிருந்தது; ஒன்றுமில்லையே! ஆழ்வார் திருநகரியிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய உச்சிஷ்டத்தைப் புசித்ததனலல்லவா இப்பேறு கிடைத்ததென்று ஆராமையோடு கண்ணீர்விட்டு மனமுருகி அவர்,

> "வாய்க்குங் குருகைத் திருவீதி யெச்சிலை வாரியுண்ட
> நாய்க்கும் பரம பதமளித் தாயந்த நாயொடிங்கப்
> பேய்க்கு மிடமளித் தாற்பழு தோபெரு மாள்மகுடம்
> சாய்க்கும் படிக்குக் கவிசொல்லு ஞானத் தமிழ்க்கடலே"

என்று கூறியது முதலாக மற்றும் பலர் தோத்தரித்த பாடல்களையாவது நினைத்து அபசாரப்படாம லிருந்தோமா இல்லையேயென்று அநுதாபப்பட்டு அவ்வபசாரத்தை ஆழ்வார் க்ஷமிக்கும்பொருட்டு,

கலி

> சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
> நாமம் பராங்குசமோ நாரணனே—தாமம்
> துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும்
> உளவோ பெருமா னுனக்கு.

இது முதலிய பாடல்களைத் தனித்தனி ஒவ்வொருவரும் பாடித் துதித்தார்கள்.

சங்கப்புலவர்கள் யாவரும் பாட நினைத்தபோது ஒரு சொல்லாவது ஓரெழுத்தாவது அசை சீர் தளை முதலியவைகளில் ஏதாவது சிறிதும் பேதப்படாமல் இந்த ஒரு செய்யுளே எல்லாருடைய வாக்கினின்றும் பிறந்ததென்று சொல்லுவாருமுண்டு. பின்பு அவர்கள் ஆழ்வாருக்கு அன்று முதலிவ் விருது கூறல் முதலிய வைபவங்களும் முன்னிலும் அதிகமாய் நடக்கும்படி செய்தார்களென்பதாம்.

இப்படியே இக்கம்பநாடர் பூர்வதசையில் தென்மதுரையில் மூன்றாந் தமிழ்ப் புலவர்களோடு சங்கப்பலகை ஏறி யிருந்தகாலத்தில் ஸ்ரீ மதுரகவிகளுடைய திருவமிசத்தில் திருவவதரித்த ஸ்ரீ மதுரகவிகளென்னுந் திருநாமமுடையவரும் ஸ்ரீ மதுரகவிகளுடைய வமிசோற்பவருமாய் விளங்கிக்கொண்

டிருந்த ஸ்ரீ வைஷ்ணவரொருவர், ஸ்ரீ மதுரகவிகளுடைய எற்பாட்டின்படி அர்ச்சாரூபமா யெழுந்தருளி யிருக்கின்ற ஆழ்வாருக்கு நித்தியபட்சமாக சம்வற்ச்சரோச்சவங்களெல்லாங் குறைவற நடத்திக்கொண்டு மகோச்சவங் கண்டருளப்பண்ணி, வேதந் தமிழ்செய்த பெருமாள் வந்தார், திருவாய்மொழிப் பெருமாள் வந்தார், திருநகரிப் பெருமாள் வந்தார், திருக்குருகூர் நம்பி வந்தார், காரிமாறன் வந்தார், நாவீரன் வந்தார், சடகோபர் வந்தார், பராங்குசர் வந்தார் எனப் பலசின்னம் பணிமாற, அதுகேட்டுக் கம்பநாடரிடத்திருந்து சில தமிழ்ப்புலவர்கள் வந்து எங்கள் கம்பநாடரோடு தருக்கித்துச் சங்கப் பலகை ஏறினலொழிய, வேதந் தமிழ்செய்த பெருமாளென்று விருதுகூற வொட்டோமென்று தடுக்க ஸ்ரீ மதுரகவிகளும், அது ஞாயமாம். எங்கள் ஆசாரியர் எங்கும் எழுந்தருளார். அவருடைய திவ்ய சூக்திக்குச் சங்கப் பலகை இடங் கொடுத்ததாம் அவருக்கு இடங்கொடுத்ததாமே யென்று சொல்லி ஒரு சிறு முறியிலே "கண்ணன் கழலிணை" யென்னும் பாசுரத்தை எழுதி, இச்சிறுமுறியைச் சங்கப்பலகையின்மேல் வையுங்கோ வென்று அவர்கள் கையிலே கொடுத்தனர்; அவர்களும்போய்க் கம்பநாடருக்குச் சொல்லி அச்சிறுமுறியைச் சங்கப்பலகையின் மேலே வைக்க, கம்பநாடரோடு சேர ஏறியிருந்த மூந்நூறு தமிழ்ப் புலவர்களையும் இவரையும் அச் சங்கப்பலகை கவிழ்த்துப்போட்டு ஆழ்வார் திவ்ய சூக்திச் சிறுமுறி யொன்றையுமே தரித்துக்கொண்டிருந்தது. இதைக்கண்டு கம்பநாடர் பயந்து,

கவி

ஈயா வெதோ கருடற் கெதிரே யிரவிக் கெதிர்மின் மினியாடுவதோ
காயா வெதோ வுறுவெம் புலிமுன் கரியாடுவதோ கரகே சரிமுன்
பேயா வெதோ வழகூர் வசிமுன் பெருமான் வகுளா பரணன் னருள்கூர்ந்
தோவா தரையா யிரமா மறையி னெருசொற் பொருமோ வுலகிற் கவியே.

எனவும்,

நீயே யரிவை நினதகத் தேநிற்கு நேமியங்கை
ஆயே யறிவுமற் றூரறி வாரடி யோங்களுக்குத்
தாயே பொருநைத் திருக்குரு கூர்த்தமிழ் காரிபெற்ற
சேயே நினது திருவாய் மொழியின் செழும்பொருளே.

எனவும்,

ஆழ்வார் விஷயமாகக் கவிசொல்லி அபராத க்ஷமாபணம் பண்ணிக் கொண்டார். அங்கிருந்த மற்ற தமிழ்ப் புலவர்களும் தனித்தனியே கவி சொல்லி அபசாரம் சமிப்பித்துக்கொண்டார்கள். இது ஆரூயிரப்படிக் குருபரம்பரா பிரபாவத்திற் கண்டெழுதியது.

இது நிற்க, கம்பநாடர், சடகோப ரந்தாதிபாடி முடிந்தவுடனே ஸ்ரீ ரங்க நாதன் சந்நிதியில் பெரிய ஆயிரக்கால் மண்டபத்தில் சதுர்சாஸ்திர பண்டிதர்களாகிய வடமொழிப் புலவர்களிலும், முத்தமிழிலும் புலமை நிரம்பிய தமிழ் புலவர்களிலும், உபய கவிகளிலும் வைதிக சம்பிரதாயத்தையுடையஸ்மார்த்தர் -

மாத்துவர்-வைஷ்ணவர் என்னும் பிராச்சீனமாகிய திரிமதஸ்தர்களிலும், மற்றுஞ் சில நவீனநட்சத்திர மதஸ்தர்களிலும், அரசர்கள் பிரபுக்கள் முதலானவர்களிலும் வெகுபேர் திரண்டு நிறைந்திருக்க, பிரபத்தி நிஷ்டாபரராகிய ஸ்ரீமந் நாதமுனிகளது திருவோலக்கத்தில் தெய்வப்புலமைக் கம்பநாடர் தெய்வ வணக்கஞ்செய்து அவையடக்கமுங் கூறிக், கிரமமாக ஸ்ரீமத் ராமாயணத்தை அரங்கேற்றினர்.

அரங்கேற்றும் பொழுது, ஸ்ரீ வைஷ்ணவர்களில் சிற்சிலர் பற்பல ஆட்சேபங்களைக்கூறக் கம்பநாடர் பலவற்றிற்குந் தாம் சமாதானஞ் சொல்லியது மன்றித் தம்முடைய புத்திரனாகிய அம்பிகாபதியினுடைய புலமைத்திறம் அங்குள்ள கற்றுயர்ந்தோருக்கும் புலப்படும்படி சில ஆட்சேபங்களுக்கு அவரைக் கொண்டும் சமாதானஞ் சொல்லிவித்தனர். அரங்கேற்றல் அப்படி நடந்து வருகையில், சிலர் ஆரணியத்தில் சூர்ப்பனகை மூக்கறுபட்டு இராவணனை நினைத்துக்கொண்டு புலம்பியதைச் சொல்லிய பாடலிலிருந்த சங்கையைக் கேட்க அதற்குத்தக்க சமாதானஞ்சொல்லியும், இரணியன் வதைப்படலம் வாசிக்கையில் ராமாயணத்தில் எங்கும் இரணிய வதைப்படலஞ் சொல்ல வில்லையே என்றுகேட்ட பலருக்கு மிக்க சமாதானஞ் சொல்லியுங் கேளாமலிருப்பவருக்குப் பல திருஷ்டாந்தங்காட்டிய பின்னர் ஒப்புக்கொண்டார்கள். பிறகு மற்றும் வாசித்து முடிந்த பிறகு ஸ்ரீமந்நாதமுனிகள் இவ்வளவு சிறப்புடையதாக இப்பெருங்காப்பியம் இயற்றப்பட்டும் பாலில் விஷங் கலந்தாற்போல் இடையிடையே நரஸ்துதி செய்யப்பட்டதனால் ஸ்ரீ வைஷ்ணவர்கள் தில்லை மூவாயிரவர் முதலானோர்களுடைய கையொப்பம் வாங்கி வரும்படி இவரைப் பலவிடங்களிலு மோடியுழலச்செய்தார்களென்று திருவுளத்திலுணர்ந்து கம்பநாடரை நோக்கி இந்த இதிகாசத்தில் நரஸ்துதி செய்தது யாது காரணமென்று வினவினர்; கம்பநாடர் அவர்க்குத் தீர்க்கதெண்டஞ் சமர்ப்பித்து சிறு வயதுமுதல் அடியேனைத் திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்பவள்ளலானவர் ஆதரித்தது மன்றி எனது குமாரன் அம்பிகாபதி விவாகத்துக்கு வேண்டிய உதவி செய்திருக்கின்றார்; ஆதலினலதை நினைத்து இப்படிச் செய்ததென்றார். அதுகேட்ட ஸ்ரீமந் நாதமுனிகள் கம்பநாடரை நோக்கி நீர்செய்த இந்த ராமாயணத்தில் நூற்றுக்கொன்றாக வைத்தமைத்து விடுமென்ன, அப்படியே மகாபாக்கியமென்று செய்தருளினர். ஸ்ரீமந் நாதமுனிகள் கம்பநாடருக்குக் 'கவிச் சக்ரவர்த்தி' யென்றும், தெய்வக் கவிஞரென்றும், ஆழ்வானென்றுந் திருநாமமிட்டு அவர் பாடின இராமாயணத்துக்கு அங்கு வந்திருந்த வித்வாம்சர்களால் சாற்றுக்கவி முதலானதுங் கொடுக்கச்செய்து அந்த திவ்யதேசத்தில் நடக்கும் அழகிய மணவாளன் உச்சவங்களில் இக்கம்பருக்குப் பெருமாள் சேவை செய்விப்பதுமன்றி ஸ்ரீ சடகோப முதலானவைகளும் சாதித்துக் கொண்டுவரும்படி திட்டஞ்செய்து வைத்தார். பிறகு பிரணவப்பொருளாகிய ஸ்ரீ ரங்கநாதனையும் அரங்கநாயகியையுஞ் சேவித்து ஸ்ரீமத் ராமாயணத்தைச் சுவாமிகளின் பொன்னடியில் சமர்ப்பித்து அவருக்குத் திருமாலை தீர்த்தம் பிரசாதிப்பித்து விசேஷ மரியாதையும் நடப்பித்தார்கள்.

இப்படியெல்லா மரியாதையும் பெற்றபின்பு கம்பநாடர் அங்கிருந்தவர் களையெல்லாம் சேவித்து அவர்களிடத்தில் விடைபெற்று திருவெண்ணெய் நல்லூருக்குவந்து சடையப்ப வள்ளலைக் கண்டு அரங்கேற்றிய செய்திகளை யெல்லாம் அவருக்கு ஆதியோடந்தமாகச் சொல்லி அவரா லுபசரிக்கப்பெற்று, உறையூருக்குப் போய்க் குலோத்துங்கன் சோழனைக் கண்டு நடந்த செய்திக ளனைத்தும் அவருக்குஞ் சொல்லினர். அவர் இது விஷயத்தில் வெகு பிரயா சைப்பட்டீரென்று சொல்லிச் சந்தோஷப்பட்டு இவ்விடத்தி லுள்ளவர்களும் நாமும் உம்முடைய வாக்காலே ஒருதரம் இராமாயண முழுதுஞ் சொல்லக் கேட்கவேண்டு மென்னக், கவிராயரும் நல்லதென்று ஒப்புக்கொண்டனர். உடனே, சோழராசன் பாண்டியன் முதலிய வரசர்களுக்குப் பத்திரிகை மூலமாய் தெரிவித்து வரவழைத்து ஒரு பெரிய மகாசபை கூட்டுவித்தனன். அரசர்களும் கற்ற வல்லோர்களும் நிறைந்திருக்குஞ் சபையில் மகா வித்வ சிரோமணியாகிய கம்பநாட ரெழுந்தருளியிருந்து கற்றுச்சொல்லி கையேடு பிரித்து வாசிக்கத் தாம் பிரசிங்கிக்கத் தலைப்பட்டனர். அப்போது, குடக தேசாதிபதி சபாசென்று மெச்சிக் கவிராயருக்கு ஒரு கடம் யானை வெகு மதியாகக் கொடுத்தான். அப்பால்,

தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேறினு மவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையுந் தங்கிற மாக்கின இரதம்.

என்னும் பாடலை வாசிக்கும்போது, கற்றறிந்த மேலோர் கல்லாத மூடமதிகளைச் சேரார். சேர்ந்தால் அவர்களுடைய பேதமையை மாற்றித் தங்களைப்போல அறிவுடையவர்களாகச் செய்துகொள்வார்க ளென்ற இது உம்மிடத்திலேதான் கண்டேனென்று சோழன் சொல்லினன். கருணைகர பாண்டியன் அஃதென்னவென்று கேட்கச், சடையப்பவள்ளல் சாற்றத் தொடங்கினர்.

ஒரு காலத்தில், தன் மனைவி சோழராஜன்மேல் கவிராயர்கள் கவி பாடிப் பரிசுபெற்று ஜீவிக்கின்றார்களே நீயும் ஒரு கவிபாடி அப்படிப் பரிசு பெறலாகாதா வென்று சொல்லக் கேட்டு விறகு தலைய னொருவன், அவ் வில்லாளை நோக்கி எனக்குப் பாடத் தெரியாது. இதோ கற்றுக்கொண்டு வருகிறேனென்று போய் வீதியிற் சிறுபிள்ளைகள் விளையாடிக் கொண்டிருக் கும்போது சொன்ன "மண்ணுளி மாப்பிளையே" என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு அப்புறம் செல்லுகையில், ஒரு காகம் காவென்று கத்தக் கேட்டுக் காவிறையே யென்றும், சோலையில் குயில் கூவக் கேட்டுக் கூவிறையே யென்றும், ஒரு கோயிலிற் பெருச்சாளி ஓடக் கண்டு அதைக் கல்லெடுத் தடிக்கப் போய்த் தன் வாயில் வந்த உங்களப்பன் கோவிற் பெருச்சாளி யென்றும் பாடம் பண்ணிக்கொண்டு திரும்பும்பொழுது எதிர்ப்பட்ட நேசனைக் கண்டு பாடுவ தெப்படியென, அவன் கன்ன பின்ன மன்ன தென்ன என்று பாடுகிறதென அதையும் முன்னவற்றோடு சேர்த்து இம்மட்டிற் போதுமென்று

பெண்சாதியிடத்தில் சொல்லி ஆச்சரியப்பட, அவள் இதிற் பெயரிருக்க வேண்டுமென்று சோழதுங்கப் பெருமானே என்பதைக் கடைசியிற் சேர்த்துக்கொள்ளென்று சொல்லினள். உடனே புறப்பட்டு இராசசபைக்கு வந்து கம்பரைக் கண்டு கும்பிட, நீராரென்று வினவ, நான் அரசன்மேற் பாட வந்தே னென்றனன். நல்லது அப்படியா வென்று அரசன் முதலானவர் களுக்குச் சொல்லி தக்க மரியாதை செய்து உட்காரும்படி செய்து நீர் பாடின பாடலைச் சொல்லுமென்றான். அவனச்சமில்லாமல்,

மண்ணுளி மாப்பிளையே காவிரையே கூவிரையே
உங்க ளப்பன் கோவிற் பெருச்சாளி
கன்னு பின்னு மன்னு தென்னு
சோழ ரங்கப் பெரு மானே.

என்று உதட்டியாய்ச் சொன்னன். அதுகேட்டு அச்சபையிலுள்ளார் யாவரும் நகைத்தார்கள். அப்படி நகைத்த ஒட்டக்கூத்தர் முதலிய வித்துவான்களை நோக்கி இடையிடையே சில சீர்குறைந்தியல்வதினாலே இது இணைக் குறளாசிரியப்பா வாகும். இதன் பொருள், (தீயோரைக் கண்டித்து நல்லோரைக் காக்குந் தொழிலால்) மண் - பூமியை, உண்ணி - உண்டந்தத் திருமாலை ஒத்தவனே, (செல்வத்தாலும் கட்டழகாலும்) மா - இலக்குமிக்கு, பிள்ளையே - புத்திரனாகிய மன்மதனே (போகமென்பன யாவும் அநுபவித்தலால்) கா - கற்பகத்திற்கு, இறையே - அரசனாகிய இந்திரனே, (உன்மட்டிலே யல்லாமல் உன் தாதை மூதாதை முதலியோரைத் தொட்டுவரும் அரசுரிமை யுடையவனதலால்) உங்கள் அப்பன் - உங்கள் தந்தை, கோ - இராசன், வில் - விற்போரில், (அஞ்சாது பாய்ந்து கொள்வதினால்) பெரிசு - பெரிதாகிய, (ஆளி - சிங்கமே, தகரத்துக்குச் சகரம்போல்) வரையாது கொடுத்தலால் கன்னு - கன்னனே, தருமத்தை மாறாது செய்தலால் பின்னு - கன்னனுக்குப் பின் தோன்றிய தருமனே, (அழிவின்றி வாழ்தலால்) மன்னு - நிலைபெற்றவனே தமிழை நிலைபெற்றவனே தமிழை வளர்த்தலால் தென்னு - பாண்டியனே, சோழங்கம் - சோழதேசமாகிய அகத்தையுடைய, சோழங்கம் - கடைக்குறை பெருமானே - பெருமை யுடையானே என்பதாம். மற்றும் பதசாரமும் வீரமுதலிய எண்சுவைகளும் தோன்ற விரித்துக் கூறினர்.

இக் குலோத்துங்கச் சோழராசன் முதலானவர் அதைக் கேட்டு மிகுதியும் ஆச்சரியப்பட்டு, பாடினவன் மூடனும், பாட்டு அரைக்காசு பெறுததுமாயிருந்தும், அவனை வித்துவானென்றும், அதைப் பாடலென்றும் ஸ்தாபித்ததைக் குறித்து இந்தத் தெய்வக் கவிஞரை மிகவுங் கொண்டாடினார்கள். பின்பு, சோழராசன் இவரைப்பற்றி அவனுக்கு ஆடை பணி முதலிய வெகுமதிகள் செய்தனன். கம்பநாடர் அவ் விற்குதலையனைத் தம்முடைய கற்றுச் சொல்லிகளாகிய புதல்வர்களில் ஒருவரைக்கொண்டு தமிழிலக்கண விலக்கியங்களைக் கற்பித்துப் பாடப் பழகுவித்து ஒருநாள் சபைக்கு வரவழைத்து வேந்தனைக்கொண்டு சமிசைக் கொடுப்பித்துக் கவிபாடச்சொல்லி அதை அவனே உபந்நியாசஞ் செய்யும்படிச் செய்தனர். அதைப்பற்றித் தான் இதைத் தம்

மிடத்திலே கண்டேனென்று றென்றனர். அது கேட்டு சந்தோஷித்து இப் படிப்பட்ட தெய்வப்புலமையுள்ள கம்பநாடரை கால் நடையாய்ப் போக்குவரவு செய்யப் பார்த்துக் கொண்டிருப்பது நமக்கழகல்லவென்று அவருக்கு யானைத் தந்தத்தால்தொட்டுச் சமைத்துக் கணைக்குப் பொற்றகடு சித்திரித்து வேய்ந்து அடியிலே நீலத்தாக்கால் கடைந்து பொருந்தி மரகதத்தால் சுமிழ் நிரைத்து மேலுக்கு விசித்திரமாகிய சரிகை முகமற்பன்னுங்கு விரித்து நெருங்க முத்து குச்சுகள் தூக்கி கணையி னிருபுறமும் தங்கத்தால் சிங்க வுருவமைத்து கன் னுக்கு நீலமும் பல்லுக்கு வச்சிரமும் வாய்க்குப் பதுமராகமும் அமைத்துச் சமைத்த விலையுயர்ந்த தண்டிகை யொன்று வெகுமதி செய்தான். பின்பு,

க வி

"தீயவரோ டொன்றிய திறத்தரு நலத்தோர்
ஆயவரை யங்கிலை யறிந்தனர் துரந்தாங்
கேயவரு நுன்பொடி படிந்துட னெழுந்தே
பாய்பரி வீரைந்துதறி நின்றன பரந்தே."

இப்பாடலில் குதிரையினியல்பு முதலியவற்றை விரித்துக் கூறியபோது சிந்துதேசாதிபதி மனமகிழ்ந்து நெற்றி முதலிய இடங்களில் நற்சுழிகளுள்ள நூறு உத்தமசாதிக் குதிரைகள் வெகுமதி செய்தனன். அக்காவியத்தில் ஒவ் வொரு நயங்கண்டு, குடக தேசத்திற்கும் பாண்டிய தேசத்திற்கும் அதிபதிகள் தனித்தனி யானை குதிரை தண்டிகைகள் வெகுமதி செய்ததைப் பார்த்திருந்த மாறுவாடித் தேசத்தரசன் அதற்குமுன் கம்பநாடர் எழுச்சிப் படலத்தில்,

க வி

"தள்ளரும் பரந் தாங்கிய வொட்டகம்
தெள்ளு தீங்கரும் பியாவையுந் தின்கில
உள்ள மென்னத்தம் வாயு மூலர்த்தன
கள்ளுண் மாந்தரிற் கைப்பன தேடியே."

என்ற பாடலை உபந்நியாசித்ததைக் கேட்டிருந்தும் அப்பொழுது நாம் ஒன்றுஞ் செய்யாமற் போனேமேயென்று வெகு லச்சையடைந்து பிறகு தன் தேசத்திலுண்டாகும் ஒட்டகங்களில் இருபது வெகுமதி கொடுத்தான்.

கோலங்காண் படலத்தில் :—

க வி

"அமிழிமைத் தூணைகள் கண்ணுக் கணியென வமைக்கு மாபோல்
உமிழ்சுடர்க் கலங்க ணங்கை யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன வழகினுக் கழகு செய்தார்
இமிழ்திரை பரவை ஞால மேழமை யுடைத்து மாதோ."

என்ற பாடலைப் பலவாறு விரித்துக் கூறும்போது, காஸ்மீர தேசத்தரசன் சிற்சில கேள்விகேட்க, அதற்குத் தக்கவாறு விடைகொடுக்கக்கேட்டு ஆனந்த பரவசனுய்ப் பதினுயிரம் இருபதினுயிரம் பொன்னும் விலையேறப் பெற்ற இருபது சால்வைகளைக் கொடுத்து அவற்றுள் ஒன்றை எடுத்துக் கம்ப நாடருக்குப் போர்த்து விட்டான்.

பின்னும் அப்படலத்தில்,

கவி

"கோனணி சங்கம் வர்து குடியிருந் தனைய கண்டத்
தீனமில் கலன்க டம்மி லியைவன வணிதல் செய்தார்
மானணி நோக்கி ஞர்த மங்கலக் கழுத்திற் கெல்லாம்
தானணி யாயபோது தன்க்கணி யாது மாதோ."

என்ற பாடலை உபந்நியாசஞ் செய்யும்போது, கூர்ச்சரதேசத்துக் கனவர்த்தக சிரேஷ்டனெருவன் எழுந்து நின்று ஐயா தெய்வக்கவிஞரே! சுமங்கல ஸ்திரீகளுடைய கழுத்துக்கு ஸ்ரீ சீதாபிராட்டியாரைத் திருவாபரணமென்ற தென்னவெனக் கம்பநாடர் பிரமன் முதலிய தேவதிரியக்கு மனுஷிய சீவர்களில் ஆணெல்லாம் ஸ்ரீ சர்வேசுரனுடைய அமிசமுடையனவெனவும், பெண்ணெல்லாம் ஸ்ரீ பெரிய பிராட்டியாருடைய அமிசமுடையன வென்றும் சாத்துவிக வைதிக நூல்கள் சொல்லுகின்றன. ஆயினும் சுமங்கலப் பெண்களுடைய கழுத்தில் நாயகன்மார் தரிக்கின்ற பொற்சின்னம் ஸ்ரீ பெரியபிராட்டியா ரென்னும் பாவனையாதலால், அந்த மாங்கல்யத்துக்குத் திருவென ஒரு பெயருண்டு; அந்தப் பெரியபிராட்டியாரே இச்சீதாபிராட்டியாகையால் அப்படிச் சொல்லினும் என்றனர். அதுகேட்டு அவன் சந்தோஷித்துக் கம்பநாடருக்குப் பச்சை கெம்பு வச்சிரம் நீலம் முதலான நவரத்தின ஆரங்களையும் மற்றும் விரலாழி முதலிய அணிகளையும் வெகுமதி செய்தான்.

ஆரணிய காண்டத்தில் சரபங்க படலத்தில் சரபங்கர் ஆச்சிரமத்துக்குச் சென்று அவரிடத்தில் தான் குறித்துப்போன செய்தியைப்பற்றி பயன்படாமையால் திரும்பிவரும் இந்திரன் தனக்கெதிரே ஸ்ரீராகவபிரான் எழுந்தருளியதைக் கண்டமாத்திரத்தில் ஆநந்த பரவசனுய்த் துதிசெய்த கவிகளில் ஒன்றுகிய,

கவி

நாழி நவைதீ ருலகெலா மாக
நளினத்து நீதந்த நான்முகனுர் தாமே
ஊழி பலவு நின்றளந்தா லொன்று
முலவாப் பெருங்குணத்த வுத்தமனே மேலுள்
தாழி தரையாகத் தண்டயிர்நீ ராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
ஆழி கடைந்தமுத மெங்களுக்கே யீந்தா
யவுணர்கடா முனக்கடிமை யல்லாமை யுண்டோ.

என்னும் பாடலை வியந்து சொல்லுமிடத்துச் சடையப்ப வள்ளல் ஸ்ரீ பரமாத்துமனுடைய கலியாணகுணங்களைத் தானிய ராசியாகவும், பல்லாயிரங் கோடி அண்டங்களையும் மரக்காலாகவும், பிரமனை அளவுகாரனுகவும், உரு வகப்படுத்தினது மிகவும் அழகாயிருக்கிற தென்று பரமசந்துருஷ்டி யடைந்து கம்பநாடருக்கு அன்றுமுதல் பிரதிவருஷமும் ஊசிபோன்ற நல்ல சம்பாநெல் பப்பத்துக்கரிசைக்குத் தப்பாமற் கொடுத்து வந்தனர்.

மேலும் அவர்கள் விஞ்ஞவிய விஞக்களுக்கு விடை கொடுத்துக்கொண்டு உபந்நியாசஞ்செய்து வருகையில் உயுத்தகாண்டத்தில் கடல்காண் படலத்தில்,

க வி

நென்னற் கண்ட திருமேனி யின்று பிறிதாய் நிலைதளர்வான்
தன்னைக் கண்டு மிரங்கா தானே கதறுந் தடங்கடல்வாய்ப்
பின்னற் நிரைமேற் றவழ்கின்ற பிள்ளைத் தென்றல் கள்ளுயிர்க்கும்
புன்னைக் குறும்பூ நறுஞ்சுண்ணம் பூசா தொருகாற் போகாதே.

என்ற பாடலைக் குறித்து, ஸ்ரீ ராமர் வானரசைனியங்களுடனே இராவணன் படை யெடுத்துப்போய்த் தென்சமுத்திரத்தின் வடகரையில் இறங்கியிருக்கும் போது, பிராட்டியின் பிரிவாற்றுமையால் தமக்கு இரா முழுவதும் நித்திரை வராமல் சயனத்தை விட்டெழுந்து கடற்கரையோரத்தில் உலாவிக்கொண் டிருக்கையில், பிராட்டியைப் பிரிந்ததுமுதல் ஒவ்வொரு நாளும் நேற்றுத் தோன்றிய திருமேனி இன்று வேறுபட்டுத் தோன்றும்படி நிலை தளர்கின்ற ஸ்ரீ ரகுநாயகரைக் கண்டும் இரங்காமல் தனித்துக் கதறுகின்ற பெருமை யாகிய கடலினிடத்தில் ஒன்றையொன்று தொடர்ந்து வருகின்ற அலைகளின் மேல் தவழ்கின்ற இளந்தென்றலானது தேனைச் சொரிகின்ற புன்னையினது சிறிய பூக்களிலுள்ள மணமமைந்த பராகங்களை ஒரு முறையாவது பூசாமல் போகாது; பூசியேவிடும் என்று உபந்நியாசித்தார்.

கவிச்சக்கிரவர்த்தியை நோக்கி ஒட்டக்கூத்தர் ஒலிக்கிறது கடலுக்கு இயற்கையாதலால் கதறுகின்றதென்றது உண்மையே, ஸ்ரீ ரவிகுல நாயகனுக் கும் கடலுக்கும் என்ன சம்பந்த முண்டு? அப்படியிருக்க, ஸ்ரீ ராமபிரானைக் கண்டும் இரங்காமலென்றதும் தனியே கதறுமென்றதும் என்னவென, தெய் வப்புலமைக் கம்பநாடர் ஸ்ரீ சானகிபிராட்டியார் முன்னே அமுதமெழக் கடைந்த நாளில் திருவவதரித்த காரணத்தால் அதற்கு அப்பிராட்டியார் மகளும் பிராட்டியாருக்கு அது தாயும் ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு மாமியும் ஆதலால் அந்த முறைபற்றி மருமகனுகிய ஸ்ரீ ராமபிரான் மாமியார் வீட்டுக்கு அழைக்கப்படாமல் வருவது தருமமன்றுயினும் அதை நினையாமல் வலிய வந்த தைக் குறித்து இந்த மாமியார் எவ்வளவு சந்தோஷத்தோடு உபசாரஞ் செய்ய வேண்டுமோ அதுவும் செய்யாமலும் தன் மருமகன் மனைவியை இழந்த ஏக்கத் தால் உடல் மெலிந்து சோகங்கூர்ந்து வந்ததைப் பற்றியாவது எங்கு வந்தா யென்று இனிய சொல்கூறி உன்னைப் பிரியாத ஆசைநாயகியை எப்படி

இழந்தாயென்று வினவித் துக்கத்தோடு ஓடிவந்து மேல்விழுந்து அலறி அழ வேண்டும். அப்படியுஞ் செய்யாமலும், தன்னருமைத் திருமகளைக் கொடுந் தொழிலரக்கன் கொண்டுபோனதினால் பெற்ற வயிறு பற்றியெரிய அக்கடலா னது நீராயுருகிக் கரைந்து பிரதிக்கினை யில்லாமல், அருந்துணையாக ஒரு வரையுந் தேடாது தனியே கதறிக்கொண்டிருப்பது பற்றி, நிலதளர்வான் றன்னைக்கண்டு மிரங்காதே தனியே கதறும் தடங்கடலென்ரு மென்றும் பின் னும் அச்சமுத்திர நங்கை அவ்வாறு அழுகையில், அந் நங்கையினது அலைக ளாகிய கைகளின்மேல் தவழ்ந்து விளையாடும் இளந்தென்றலாகிய பிள்ளை யானது இதென்ன நம்முடைய தாய் மருமகளை உபசரிக்காமல் அழுதுகொண் டிருக்கின்ரூள்; இவர் நம்முடைய முன்பிறந்தாளைத் திருமணம் புணர்ந்த காலத் தில் நாம் அருகிலிருந்து விளையாட்டுச் செய்யும் பாக்கியம் பெருமற்போனேமே இப்போதாவது நடத்தி நம்முடைய அத்தானைச் சந்தோஷப்படுத்துவோமென் றெண்ணி இளம்பிள்ளை பயமறியாது என்பதற்கேற்கச் சமயாசமயந் தெரியாமல் புன்னைப்பூவிலுள்ள பாரகமாகிய ஈகதப் பொடியை வீசிக் கந்தப்பொடி வசந்த மாடத் தலைப்பட்டதுபற்றித் திரைமேற் றவழ்கின்ற பிள்ளைத் தென்றல் கள் ளூயிர்க்கும் புன்னைக்குறும்பூ நறுஞ்சுண்ணம் பூசாதொருகாற் போகாதென்ரு மென்றுங் கூறினர்.

இதனைக் கேட்ட சபையிலுள்ளோர் யாவரும் கம்பநாடருடைய புலமை யைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். பிராட்டிகள் களங்காண் படலத்தில்,

ஸ்ரீ சீதாநாயகியாரைப் புஷ்பக விமானத்தின் மேலேற்றி உயுத்தகளத் துக் கொண்டுவந்து அவருக்கு பிரமாஸ்திரத்தால் செய்கையற்று கிடக்கிற இளையபெருமாள் முதலானவர்களையும், அவர்களைக்கண்டு துக்கித்து மெய் மறந்து கிடக்கின்ற பெரிய பெருமாளையும் பாரென்று அரக்கிமார்கள் காண் பித்தபொழுது,

கலி

மங்கை யழலும் வானுட்டு மயில்க ளழுதார் மழவிடையோன்
பங்கி லுறையுங் குயிலழுதாள் பதும மலர்மேன் மாதழுதாள்
கங்கை யழுதா ணுமகளு மழுதாள் கமலத் தடங்கண்ணன்
தங்கை யழுதா ளிரங்காத வரக்கி மாருந் தளர்ந்தழுதார்.

பொன்ரூய் குழையா டனையீன்ற பூமமடந்தை புரிந்தழுதாள்
குன்ரு மறையுந் தருமமுமே குழைந்து குழைந்து தளர்ந்தழுத
பின்ரு வுடற்றும் பெரும்பாவ மழுதபின் னென்பிறர் சேய்கை
நின்ரூர் நின்ற படியழுதார் நினைப்புநீங்க நீத்திட்டாள்.

பிராட்டி அழுகையைநோக்கித் தேவஸ்திரீகள் முதலியோர் அழுதனரென்னுங் கருத்துக்கொண்ட இப்பாடல்களை உபந்நியாசஞ்செய்து பிராட்டியாரை உபத்திரவஞ் செய்து வந்த அரக்கிமார்களும், பாவமும் அழுத அழுகைதான் உள்ளபடி அதிசயமா மென்ரூர்.

பாண்டியராசன் ஸ்ரீ சர்வோத்தமியாகிய சானகி பிராட்டியாருடனே ஜகத் காரணனுகிய ஸ்ரீ சர்வசுவாமியும் இத்தனையீடு பாடுகள் படவந்ததெல்லாம் மேற்படி தேவஸ்திரீகளுக்கும் அவர்களுடைய நாயகன்மார்களுக்கும் ராவணுதியரால் நேரிட்ட உபத்திரவத்தை நிவர்த்திக்கும் பொருட்டேயாதலால் அவர்கள் அதை நினைப்பார்களானுல் அவர்களைத் துக்கிக்க வேண்டாமென்று தடுத்தாலும் கேட்கமாட்டார்கள். இந்த அரக்கிமார்களுக்கோ அப்படிப்பட்ட ஆபத்து சம்பவிக்கவுமில்லை; அப்படி சம்பவித்து ஸ்ரீ ராமபிரானுவது சீதா பிராட்டியாவது சகாயஞ் செய்யவுமில்லை; இப்படி ஒரேதுவும் இல்லாதிருந்தும் அரக்கிமார்கள் துக்கித்தது ஸ்ரீ வைதேகியாருடைய துக்கம் சகிக்க முடியாமலேயாதலால் இது உசிதமென்றது மெய்தானென்றுன். அதுகேட்டுச் சபையிலுள்ளவர்கள் யாவரும் எம்பெருமாட்டியாகிய பிராட்டியை வருத்தப்படுத்திக் கொண்டிருந்த அரக்கியர்களே அவருடைய துக்கத்தைக் கண்டு சகியாமல் உள்ளுருகி அழுதார்களானுல் அவருடைய அருமைத் திருமேனி எப்படி பதைத்திருக்கவேண்டும்? அவரெவ்வளவு கண்கலக்கப்பட்டிருக்கவேண்டும்? எவ்வாறு புலம்பியிருக்க வேண்டுமென்று எண்ணி அப்பிராட்டி விஷயத்தில் விசேஷ பக்தியுடையவர்களாதலால் தங்கள் மனங்குழைய முகம்வாட மெய்சோரக் கண்ணீர்பெருக அலறி அழுதார்கள். அதுகண்டருளிய கம்பநாடர், விரைவாகக் கற்றுச்சொல்லியை மருத்துப் படலமெடுத்து வாசிக்கச் சொல்லி, அனுமான் சஞ்சீவிகொண்டு வந்தாரென்றும் அந்த வாடைபட்டு இறந்தவர்களெல்லாம் உயிர்பெற் றெழுந்தார்களென்றும் உபந்நியாசஞ் செய்தனர். அழுதவர்கள் யாவரும் துக்கமாறிக் களிப்படைந்தனர்கள்.

சோழராஜன், இவ்வதிசயம் ஸ்ரீ குலசேகராழ்வார் ஸ்ரீமத் ராமாயண காலக்ஷேபஞ் செய்தவாரூயிற்று என்று சொல்லி நகைத்தான். கஜபதியென்னும் அரசன் அது எவ்வாறென்று வினவ, கம்பநாடர், ஸ்ரீ குலசேகராழ்வாரென்பவர், ஸ்ரீமத் ராமாயண காலக்ஷேபஞ்செய்து வருகையில், ஆரணிய காண்டத்தில் சூர்ப்பநகி மூக்கறுப்புண்டு கரதூஷணுதியரிடத்திற் போய் முறையிட்டுக் கொள்ள, அதிக வுக்கிரமாய் எண்ணிறந்த துஷ்ட சேனைகளைக் கூட்டிக் கொண்டு எதிர்த்தனர்கள். அது சமயத்தில் தமக்கொருவரும் துணையில்லாமல் சுவாமியும் அவர்களை எதிர்த்தனரென்று சொல்லக்கேட்டு ஆழ்வார் ஸ்ரீ ராம பிரான் விஷயத்தில் அதிபக்திபரவசராகையால், நெடுநாளைக்குமுன் நடந்த சரித்திரம் அன்று நடக்கிறதாக எண்ணிச் சுவாமி தனித்திருக்க இளையபெருமாள் எங்கே சென்றனரென்று கேட்க, பெளராணிகர் ஐயா! பிராட்டியாரெழுந்தருளியிருக்கும் பர்ணசாலையண்டை காவலாயிருக்கும்படி ஸ்ரீ ரகுநந்தனர் நியமித்தனர் அந் நியமனத்தின்படி அவர் அங்கு நின்றனரென்று சொல்லக் கேட்டவுடனே மந்திரிகளுடைய தந்திராலோசனையால், இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆழ்வாருக் கெதிரேவந்து, சுவாமி பாதசாரியாயும் தனித்தவராயும் இருக்கிறரென்று அநுதபித்து உக்கிராகாரமாய்த் தமது சேனையைப் படையெடுக்கும்படி கட்டளையிட்டுத் தாமும் போர்க்கோலம் பூண்டு அச்சேனைகளுக்குப் பின்னே செல்லுகையில் ஸ்ரீ சர்வசுவாமியானவர் கரதூஷணுதியர்களையும் அவர்களுடைய சேனைகளையும் ஜெயித்துத் தேவர்கள் புஷ்பமாரி பெய்யப்

பர்ணசாலைக்கு மீண்டு வந்தாரென்ற சுலோகங்களை எடுத்துக் கூறினர்கள். ஆழ்வார் அதுகேட்டுக் கோபாவேசமாறி தெற்கு நோக்கிப்போன சேனைகளைத் திரும்பி வரும்படி நியமித்தாரென்று கூற, கணபதி ஸ்ரீ குலசேகராழ்வாருக்கு ஸ்ரீ சர்வேசுரன் பக்கல் பரமபத்தி தலையெடுத் திருக்கவேண்டும். அது அவருக்கும் " அன்பு பெறுகை யரும்பே றெனக்கென்றான்" என்ற ஸ்ரீ பிரகலாதாழ்வானுக்குமன்றி மற்ற யாருக்குண்டென்று மனமெகிழ்ந்து புளகாங்கமுற்றான்.

இவ்வாறு சிறையிருந்தவ ளேற்றஞ் சொல்வதாகிய ஸ்ரீ ராமாயணத்தைத் தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வார் உபந்நியாசஞ் செய்து முடித்தபின்னர், சேரன், கம்பநாடருக்கு விலையேறப்பெற்ற ஆடையணிகளையும் நிலங்களையும் வெகுமதி செய்து,

க வி

தராதலத்தினுள்ள தமிழ்க்குற்றமெல்லாம்
அராவுமாமாயிற்றன்றே—இராவணன்மேல்
அம்புநாட்டாழ்வா னடிபணியுமாதித்தன்
கம்பநாட்டாழ்வான் கவி.

எனத் துதிகவியுமொன்று பாடித் தந்தனன். கருணைகர பாண்டியன், தானும் அவ்வாறு நல்ல வெகுமதிகள் செய்து,

க வி

தரலாற்றுங் கவிச்சக் கரவர்த்தி செய்யு டாழுழ முடைமை நோக்கி
வரலாற்று முறையினியற் றமிழுணர்ந்த—முதியோருமற்று ளோரும்
முரலாற்றுங் கடற்பாரிற் கம்பருரு திரமுதுசொன் மொழிப வன்னேற்
கொரலாற்று மால்சங்க மொக்குமெனின் யாம்வேறுரைப்பியம்ப லாமால்.

என்று துதிகவியுங் கொடுத்தான். ஒளவை முதலிய வித்வ ஜனங்களும் துதிகவிகள் பாடிக் கொடுத்தனர்கள்.

குலோத்துங்கச் சோழனென்னும் அரசன், ஸ்ரீ ராமபிரானது கல்லியாணகுண பட்டாபிஷேக மகோச்சவத்தை ஒரு படத்தி லெழுதிவித்துத் தன் சபாமண்டபத்திற் கருகே பட்டாபிஷேக மண்டபமென ஓர் மண்டபங் கட்டுவித்து அதைச் சுவர்க்கலோகம்போலச் சிங்காரஞ்செய்து இடையிற் பதுமராக பீடத்தின்மேல் அப்படத்தை எழுந்தருளச்செய்து ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கொண்டாராதித்து ஸ்ரீமத் கம்பராமாயணத்தை படத்தின் சமீபத்தில் வைத்து சுகந்த திவ்விய பரிமள புட்பங்கள் சாத்திப் பின்பு தங்கமயமாகிய தண்டிகையின்மேல் வைத்துச் சோடசோபசாரத்தோடு முன்கொண்டு செல்ல, பின்னே கவிச்சக்கரக் கடுக்கனும் நவரத்தின கண்டியும் வச்சிரப் பதக்கமும் முத்து மாலையும் தங்கக்காப்புங் கொலுசுமிட்டுச் சந்தன புட்ப அடைக்காயு மளித்து ஏழு லட்சணமுள்ள பட்டத்து யானையின்மேற் பொன்னம்பாரி வைத்து அதன் மீது கவிராயரை ஏற்றுவித்து, பலவித வாத்தியங்களும் பரவையெனச் சப்திக்கத் தனது மந்திரி முதலாகிய பிரதானிகளும் சாமரம்போடப் பிரபல்யமாய்ச்

கிராம முதலிய விடங்களுக்கும் பிரதக்ஷணஞ் செய்வித்துப் புலவருக்குச் சத்திரம் சாமரம் திருச்சின்ன முதலாகிய அளவிறந்த விருதுகளுமளித்துப் பலவித துதிகவிகளுஞ் செய்து யாசித்துவரப் பிராமணர்களுக்குக் கோதான பூதானங்களும் கவீஸ்வரர்களுக்குச் சுவர்னதான முதலிய பல தானங்களும் யாசகர் முதலாகிய வறியோர்களுக்கு அன்னதான முதலாகிய ஆடைகளும் அளித்துவந்த அரசர்களுக்கெல்லாம் அவரவர்களுக்குத் தக்க மரியாதைகளும் நடத்தி விடை கொடுத்தனுப்பினர். அவர்களில் சிலர் ஸ்ரீமத் கம்பராமாயணத்தைப் பார்த்து ஒவ்வொரு பிரதி புஸ்தகமெழுதிக் கொண்டு தங்கள் தங்களிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

பின்பு, கவிஞராகிய புலவர்பெருமான் ஜீவவந்தரா யிருந்த காலத்தில் எவ்விடத்துக்காவது தாம் போக வரவேண்டி யிருந்தால் முன்போலப் பாதசாரியாய் நடவாமல் ஸ்ரீமத் ராமாயணத்தைப் பிரசங்கித்தகாலியில் சந்தோஷப்பட்டு அதிவினயத்தோடு கருணாகர பாண்டியனென்னும் அரசராற் கொடுக்கப் பெற்ற அந்தமாகிய தந்தச் சிவிகையின் மேலேறி குலோத்துங்கச் சோழ ராஜாவினுற் றனக்குக் கிடைத்த சுவேதச் சத்திரம் கவிக்கவும், சாமரம் வீசவும், திருச்சின்ன மூதவும் பலவாகிய கொடி கொடிச்சீலை முதலாகிய விருதுகள் பிடிக்கவும், குடகதேசத் தலைவனுல் அளிக்கப்பெற்ற யானைகளும், மாறுவாடி தேசத்தரசனுற் கொடுத்த ஒட்டகங்களும், சிந்துதேசத் தலைவனுல் தந்தசுழி சுத்தமுள்ள குதிரைகளும், இன்னுஞ் சிலராலு மளித்த கண்டவாள எருதுகளும், இடைவிடாமல் தம்மைச் சூழ்ந்திருக்கும் முந்நூறு கவிப்புலவர்களும் தங்கள் தங்களுக்கு வேண்டிய கச்சிதமான அஸ்வங்களின்மேல் உச்சிதமா யேறிக்கொண்டு அச்சமில்லாமல் நச்சணிவிழியார் நடனஞ்செய்யும் மெச்சியே புலவர் மேன்மைகள் கூறவும், தாம்தாமென்று அரசர் தண்டு வருவதுபோலப் பிரயாணப்பட்டு வருவதுமுண்டு. அப்படி போகிற மார்க்கங்களில் இவைகளுக்கு வேண்டிய புல், கொள், வைக்கோல் முதலாகிய ஆகாரங்களுக்கு அங்குள்ள சோலைகள், தோப்புகள், கொல்லைகள் கழனிகளிற் கைவந்த மட்டும் பெற்றுக்கொள்வதற்குத் தடையில்லை. அப்படிச் செய்கிற நஷ்டத்துக்கு வருஷவாரியில் தேசதேசத் தரசர்களுக்கு வரும் மேல்வாரத்தில் கம்பநாடக் கவிஞர் சென்ற மார்க்கங்கண்டு கழித்தது இவ்வளவென்று கழித்துக் குடிகளுக்குக் கொடுத்து வந்தது நெடுநாளாய் வழங்கி வந்திருக்கின்றது.

அரங்கேற்றச் சருக்கம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமத் ராமாயண

வைபவ சங்கிரகம்



ஸ்ரீயப்பதியாய்க் கியானசத்தி முதலிய கல்யாணகுண விபூஷிதனுய்த் திவ்யமங்கள விக்கிரக விசிஷ்டனுய்ச் சகல ஜகத் சிருஷ்டி திதிசம்மார கர்த்தனுய்ச் சதுர்வித புருஷார் களுக்கு சமாசிரணீயனும், தர்மார்த்த காமமோக்ஷ சதுர்வித பலப்பிரதனுய் எழுந்தருளிய ஸ்ரீ பரமபதத்தில் திருமாமணி மண்டபத்தில் சிறப்பாகிய ரத்தின சிங்காதனத்தின் நடுவேயுள்ள திவ்விய தாமரையில் பலகோடி சூரியர்கள் ஒருங்கே யுதித்ததுபோலும் கிரணங்களை வீசுகின்ற பணமணி முடிகளையுடைய ஆதிசேஷன்மீது ஸ்ரீ தேவி பூதேவிக ளுடனே நிரதிசயானந்த யுக்தனுக வீற்றிருந்து, அவர்களை ஆனந்திப்பித்துக் கொண்டிருக்கையில் மூலப்பிரகிருதியில் லயித்திருந்த பத்தாத்மாக்களும், இப் பதத்தை யடைந்து நித்தியமுக்தர்மளைப்போல தம்மை யனுபவித்து அவ்வனு பவத்தர் லுண்டாகும் பிரீதியாலே செய்யும் நித்திய நிரவத்திய நிரதிசயானந்த ரூப கைங்கர்ய மஹா சம்பத்தைப் பெற்று நீடுழிவாழ்க்கைக்கு தங்களுக்குக் கிடைத்திருந்தும் இழந்து இறகொடிந்த பறவைகளைப்போ லிருப்பதைக் கடாட் சித்துத் திருவுளமிரங்கி மஹாதாதி அண்ட காரணங்களையும், அண்டங்களையும் சிருஷ்டித்து தமது நாபிக்கமலத்தில் பத்தாத்துமு சஷ்டிபூதனை பிரமனைச் சிருஷ்டித்துச் சாது சம்ரட்சணத்துட நிக்கிரக தர்ம ஸ்தாபனார்த்தமாகத் திருவவதரிக்கைக்கு நாற்றங்காலாயுள்ள திருப்பாற்கடலில் எழுந்தருளி அப் பிரமனுக்கு அந்தரியாமியாயிருந்து தமது திருவடித் தாமரைகளை யடைவதற் குத் தக்க காரண களேபரணங்களைக் கொடுத்தருளினர்.

அச் சேதனர்களே ஆறுநீந்தக் கொடுத்த தெப்பத்தைக் கொண்டு கரை ஏறலா யிருக்க அது செய்யாதே நீர் வாக்கி லொழுகக் கடலிலே புகுவாரைப் போல அக்கரண களேபரங்களைச் சப்தாதி விஷயானுபவத்துக்கு உறுப் பாக்கிக் கருமப்பிரவாகத்தால் பிறவியென்னும் பெருங்கடலிலே புக்கு அநர்த் தப்படுகிற படியைக் கடாட்சித்து நல்ல வழிகண்டு நடக்கைக்குக் கருவியாகப் புராதனமான கலைகளும் வேதமும் நீதிநூலுங் கற்பகமுஞ் சொற்பொருடானு மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினு லருள் செய்தென்றும் சொல்லுகிறபடியே நன்மை தீமைகளைப் பகுத்துணர்க்கைக்காகத் தம்முடைய ஆக்கியாரூபமான வேதசாஸ்திரங்களை நிரேதுஹ கிருபையால் பிரதானஞ் செய்தருளினர். ஷட்குணங்களையுடைய முதற்கடவுள் அப்படி செய்தும் அந்த நூல்களை உள்ளபடி கற்றறிந்து அனுஷ்டித்து உஜ்ஜீவியாகாமல் அக்கியான அந்நிதிதாகியான விபரீத தியானங்களை அடைந்து அநாதிகர்ம வாசனுதோஷ

தூஷிதாந்தக் கரணங்களாய்ச் சேதனர்கள் திநெறியிற் செல்லுகையைக் கண்டு விகிதமூலமான ஆக்ஞையை உபேட்சிக்கும் தேசங்களில் தாங்களே சென்று குறும்பறுக்கும் அரசர்களைப்போல் ஆதிசுயஞ் சோதியுருவை யங்குவைத்திங்கு பிறந்து தம்மூடைய அநுஷ்டான முகத்தாலே அவர்களைத் திருத்தவும் திருந்தாதவர்களைச் சிட்சிக்கவும் வேண்டுமெனத் திருவுளம்பற்றி யிருக்கையில், இராவணுபத்திரவத்தைச் சகியாமல் சதுர்முக பஞ்ச சகஸ்தராக்ஷாதி சமஸ்த தேவர்களும் மேருசிகரத்தின்மேல் கூடித் தம்மூடைய சரணகமலங்களைத் தியானித்துக் கைகளைக் குவித்துக்கொண்டிருக்க,

> கருமுகி முமரைக் காடு பூத்துநீ
> டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்
> திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
> வருவபோற் கழலுன்மேல் வந்து தோன்றினான்.

என்கிறபடியே நீலமேகமானது, பல செந்தாமரை மலர்களைப் பூத்துச் சந்திராதித்தர்களை இருபக்கங்களிலுந் தாங்கி நடுவே மலர்ந்த தாமரைப்பூவிலெழுந்தருளிய பெரிய பிராட்டியாராகிய மின்னல் விளங்கும்படி ஒரு செம்பொன் மலையின்மேல் வருவதுபோலப் பெரிய திருவடியின்மேல் எழுந்தருளி அவர்களுக்குச் சேவைசாதித்து அவர்களுடைய பிரார்த்தனையை அங்கீகரித்து அதை வியாஜமாகக்கொண்டு தம்மை ஆராதித்து வந்த சக்கரவர்த்தியினுடைய மநோரதத்தைப் பூர்த்திசெய்யும் பொருட்டு, பரிவாரங்களுடனே திருவவதரித்தருளினர். அப்படித் திருவவதரித்த ஸ்ரீராமரூபியாகிய தாம் இராவணனை நிரசித்தும் பிதுர்வசன பரிபாலனாதி சாமானிய தருமங்களை அனுட்டித்தும், ஸ்ரீ சேஷாம்சரான இளையபெருமாளால் இந்திரசித்தை நிரசித்தும், பகவத் சேஷத்வரூபமான விசேஷத் தருமத்தை அனுஷ்டிப்பித்தும், ஸ்ரீ சுதர்சனாம்சரான பரதாழ்வானுலே ஆசுரத்துவக்கையுடைய கந்தருவர்களை நிரஞ்சனஞ் செய்வித்துப் பகவத் பாரதந்திரியரூபமான சிரேஷ்ட தருமத்தை அநுட்டிப் பித்தும், ஸ்ரீ பாஞ்ச சந்நியாம்சரான சத்துருக்கனழ்வானுலே லவணசுரனைச் சங்கரிப்பித்தும், பாகவத சேடத்துவ ரூபமான பரமதரும விசேடத்தை அனுட்டிப்பித்தும் திருவயோத்தியாபுரியில் அரசு வீற்றிருந்தனர்.

அஷ்ட குணங்களையுடைய எம்பெருமானுடைய நாபிக்கமலத்தில் பிறந்தவனும் அவராலே அருள்பெற்ற விஸ்தார விசித்திரக் ரியான சக்திகளையுடையவனும், சர்வலோக ஹிதபரனுமாகிய பிதாமகன் இவ்வாறு ஸ்ரீ பகவான் பரிவாரங்களுடனே திருவவதரித்து அநுட்டித்துக்காட்டிய தரும விசேடங்களும் திருவிளையாட்டுகளும் உத்தரகாலத்தில் உண்டானவர்களுக்கும் உஜ்ஜீவனமாக வேண்டுமென நினைத்து ஸ்ரீ ராம சரித்திரத்தைச் சதகோடி விஸ்தாரரூபமான பிரபந்தமாகச் செய்து அப்பிரபந்தத்தை ஸ்ரீ நாரதபகவான் முதலிய முனி சிரேஷ்டர்களுக்கு அதிகரிப்பித்தும் அதுவும் அமையாமல் சந்ததமும் ஸ்ரீ ராம மந்திராநு சந்தான சந்துஷ்டித இருதயரான வான்மீகிபகவானைக் கொண்டு தாரகமந்திர வாச்சியனாகிய ஸ்ரீ ராம சரித்திரத்தைப் பூலோகத்தில் பிரவர்த்திப்பிக்க நினைத்து அம் முனிபுங்கவர்பக்கம் ஸ்ரீ நாரதபகவானை அனுப்பினர்.

சதுர்முகனுடைய கட்டளையால் எழுந்தருளின ஸ்ரீ நாரத பகவான் நம்முடைய முயற்சி சிறிது மில்லாமலே எழுந்தருளினரென, ஸ்ரீ வான்மீகி முனிவர் அவரை எதிர்கொண்டு சென்று விதிப்படி பூசித்துத் திவ்விய ஆசனத்தின்மேல் இருக்கச்செய்து அவரை நோக்கித் திவ்யகுண சரித்திரங்களையுடைய வேதாந்த வேத்தியமான பரதத்துவ வஸ்து இந்தப் பூலோகத்தில் இப்பொழுது எங்கே திருவவதரித்து எவ்வித குணசேஷ்டிதங்களால் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது அதைக்கேட்க விருப்பமுடைய வடியேனுக்கு எல்லாமறிய வல்லவராகிய தேவரீர் அருளிச் செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தனர். அவ்வாறு கேட்க, ஸ்ரீ வான்மீகி பகவானுக்கு ஸ்ரீ நாரதபகவான் மற்றவர்கள் பெறுதற்கரிய வநந்த கலியாணகுணங்களையுடைய வேதவேதாந்த பிரதிபாத்தியமான பரப்பிரம்மம் தற்காலத்தில் வகண்டைஸ்வரியமுள்ள இவ்வுலகத்தில் இட்சுவாகு வமிசத்தி லவதரித்து, ஸ்ரீ ராமனென்னும் திருநாமத்தால் விளங்கிக்கொண்டிருக்கிறதென்னும் சிறந்த பொருளை உட்கொண்டிருக்கிற சுஞ்சேப ராமாயணத்தை உபதேசித்துச் சென்றருளினர். அந்தப் பரமோபதேசம் பெற்ற ஸ்ரீ வான்மீகி பகவான் அதை மனனஞ்செய்துகொண்டே மாத்தியானிக ஸ்நானத்தின் பொருட்டுக் கங்கையினருகில் நல்லோருடைய உள்ளமெனத் தெளிந்த நீரையுடைய தமசாநதிதீரத்துக்குப் பரத்துவாசர் முதலிய சீடர் கூட்டங்களோடு எழுந்தருளிய அந்நதிக் கரையில் பல வளங்கள் நிறைந்த வனத்தைச் சுற்றிப் பார்க்கையில், ஒன்றையொன்று பிரியாமல் ஆணும் பெண்ணுமாகக் கூடிக் களித்துக்கொண்டிருந்த வன்றிப் பறவைகளில் ஆண்பறவையின்மீது தீத் தொழிலே இயல்பாகிய வேடனொருவன் அம்பை எய்தனன். அப்போதந்த ஆண்கிரௌஞ்சமானது அம்பால் தைக்கப்பட்டு உதிரமொழுகிக் கீழே விழுந்ததைக் கண்டு பெண்ணன்றிலானது பிரியவாற்றாமல் மெல்லிய குரலோடு துக்கிப்பதைக் கருணையோடு கடாட்சித்து அந்த வேடனை வையும்படி எத்தனித்தனர். அக்காலையில், சதுர்முகனால் நியமிக்கப்பட்ட சரஸ்வதியானவள் இதை ஏதுவாகக் கொண்டு எல்லா விலக்கணங்களு மமைந்த மாநிஷாதம் என்னுஞ் செய்யுளருவமாய் ஸ்ரீ வான்மீகி பகவானுடைய வாக்கில் ஆவிர்ப்பவித்தனள். அப்போது வேடனை வைதவைவானது செய்யுளா யமைந்ததைக் குறித்துத் தாமும் சீடர்களும் மிகுதியும் வியப்புடையவர்களாய்த் தீர்த்தமாடி வழக்கப்படி கேசவாதித் திருநாமங்களையுச்சரித்துத் திருமண் காப்புத் தரித்து வநுட்டானம் முடித்துக்கொண்டு தமது ஆச்சிரமத்துக் கெழுந்தருளி முன்னம் கொண்ட ஆச்சரியத்தை நீங்காதவரா யிருந்தனர். இப்பால் மாணாக்கர்களோடு அதிசயித்துக்கொண்டிருந்த வான்மீகி பகவான் பக்கல் மகா தேஜஸையுடைய சதுர்முகனவர் தம்முடைய கருத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டி எழுந்தருள, அதுகண்டு அவர் பொருக்கென எழுந்து எதிர்கொண்டுசென்று அருக்கியப் பாத்தியாசமனங்களால் உபசரித்து ஒரு திவ்வியாசனத்தி லெழுந்தருளச் செய்து தண்டன் சமர்ப்பித்துக் கரங்களைக் குவித்து நின்றனர். அவ்வாறு நின்றவரை நோக்கிப் பிரமனவர்,

தம்மருகில் ஆசனத்தில் உட்காரும்படி நியமித்தார். அந்நேமனத்தின் பிரகாரம் உசிதாசனத்தின்மேல் எழுந்தருளி யிருந்தபோதும் அத் தபோநிதி

யானவர் முன்னே வேடன் செய்த கொடுமை காரணமாக அவனை வைத நிந்தையானது சுலோக ரூபமாய்த் தம் வாக்கில் பிறந்ததை அடிக்கடி நினைத் துத் தமக்குள்ளே ஆச்சரியப்படுவதைப் பிரமனவர் அறிந்து அவரை நோக்கி முனி சிரேஷ்டரே!

என்னுடைய அநுக்ஞையினாலே சரஸ்வதியானவள் உம்முடைய வாக்கில் பாவினுருவமாய்ப் பிரவர்த்தித்தாள் ஆதலால் அதைக்குறித்து நீர் வியக்க வேண்டுவ தொன்றுமில்லை. இனி நீர் ஸ்ரீமத் பரமவைதிக முனிபுங்கவராகிய ஸ்ரீ நாரத பகவானிடத்தில் கேட்ட எல்லாக் கலியாண குணங்களும் நிறைந்த ஸ்ரீ ராமபிரானுடைய திவ்விய சரித்திர முழுதையும் சுருக்கமும் விரிவுமல்லாமல் ஒரு பிரபந்தமாகச் செய்யக்கடவீரென்று கட்டளையிட்டு,

ஸ்ரீ சீதாலட்சுமண பரதசத்துருக்ன ஸ்ரீ ராமச்சந்திரசுவாமி முதலியோ ரும் புரஜன நிஷிஜன ராட்ஸசாதிகளும் செய்த வியாபாரங்கள் முற்றும் கருத்துக்குப் புலப்படக் கடவனவென்றும், உம்மால் செய்யப்பட்ட பிரபந்தம் பொய்யில் பாடலாகக் கடவதென்றும், நீர் செய்யும் ஸ்ரீமத் ராமாயணம் பூமியில் மலைகளும் நதிகளும் எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம் விளங்கக் கடவதென்றும் வரத்தைத் தயைசெய்து அந்தர்த்தானமாயினர்.

வேதவேத்தியனுகிய ஸ்ரீ சர்வேசன் சம்சாரி சேதன சம்ரக்ஷணார்த்த மாகச் சுருதி சொல்லுகிறபடி சக்கரவர்த்தி திருமகனாகத் திருவவதரித்தாற் போல அந்தணர்களென்போர் யாவரும் சிறப்பாகக்கொண்ட வேதமும், அந்தத் திருவவதாரத்தின் குண சேட்டிதங்களைக் கூறுகையாலே, ஸ்ரீ சர்வே சுரன் பக்கலிலும் அடியார் பக்கலிலும் ஆசிரயிக்கும் விருப்பத்தை யுண்டாக் கிச் சேதனர்கள் உய்விக்கைக்காகச் சதுர்முகனால் வரப்பிரசாதத்தைப் பெற்ற விபுலவிஞ்ஞான சத்திமானுகிய ஸ்ரீ வான்மீகி பகவானிடத்து நின்றும் ஸ்ரீமத் ராமாயண ரூபமாகத் திருவவதரித்தது.

ஸ்காந்தத்தில் சொல்லுகிறபடி வேதமாதாவான காயத்ரியின் இருபத்து நான்கெழுத்துகளாலும் ஸ்தாபிக்கப்பட் டிருப்பதாயும் மந்திர ரத்தினார்த்த விவரமாயும் முமூட்சுகள் அறியவேண்டியவற்றுள் இன்றியமையாத தத்துவ வஹித புருஷார்த்தங்களைக் கூறுவதாயும், சர்வருக்கும் பொதுவாகிய தயாசத் திய சவுசங்களையும் நான்குவித வருணச்சிரமங்களுக்குரிய ஆசார வியவகாராதி களையும் வேதத்தோடு மாறுபடுதலில்லாத நற்கருமங்களை அநுட்டித்தவர்கள் அடைந்த நற்பேற்றையும், அவை திக்க கிரியைகளை இயற்றினவர்களடைந்த துன்பப் பயனையும், மற்றும் எல்லாப் பொருள்களையும் விளக்குவதாயும், சமஸ்த பலார்த்திகளும் எண்ணியவற்றை எண்ணியபடி தருவதாயும், வேதாந்தத்தி னுண்மைப்பொருளைப் பிரகாசிப்பிக்கிறதாயும் இருக்கிற இவ்விதிகாச சிரேஷ் டத்தில் ஒரெழுத்தை உச்சரிப்பினும் அவனுடைய அருவினைகளறும். பரிசுத் தத்தைத் தருவதும் பாவத்தை நசிக்கப்பண்ணுவதும் புண்ணியத்தை விருத்தி செய்வதும் வேகத்தோடொத்ததும் ஆகிய ஸ்ரீமத் ராமாயணத்தை எவன் படிக் கிறானே அவன் ஸ்ரீ பகவானை அடைவதற்குத் தடையாயுள்ள எல்லாப் பாவத்தி னின்றும் விடுபடுவான்.

ஆயுளைப் பெருக்குவதாகிய ஸ்ரீ ராமசரித்திரத்தைப் படிக்கிற நரனை வன் தேகத்தைவிட்டுப் புத்திரபௌத்திர கணங்களோடு பரமபதத்தில் சன்மா னிக்கப்படுவான். அன்றியும் உபநயனமான பிராமணன் படித்தால் வேத வேதாங்க பராகனுவான். சிறிது பூமியையுடைய க்ஷத்திரியன் படித்தால் அகண்ட பூமண்டலாதிபதியாவான். வைசியன் படித்தால் வாணிகப் பொருள் களில் இலாபத்தை மிகுதியும் அடைவான். சூத்திரன் படித்தால் தன்னுடைய குலத்தில் மான்மியத்தை அடைவான்.

புராதனமாகிய இந்த இதிகாசத்தை எவன் பூசிக்கிறனே வாசிக்கிறனே அவன் சகல பாவத்தினின்று நீங்கித் தீர்க்காயுளைப் பெறுவான். பின்னும் ஸ்ரீமத் ராமாயணத்தில் ஒருவன் ஒரு பதத்தைப் படித்தானுயினும் அவன் பாவங்க ளெல்லாவற்றினின்றும் ஒழிந்து புத்திரனில்லாதவனுயின் புத்திரனை யும் தனமில்லாதவனுயின் தனத்தையும் பெறுவான்.

ஸ்ரீ ராமாயணத்தில் ஒரத்தியாயத்தைச் சிரவணம் பண்ணின மனிதன் ஆயிரம் அஸ்வமேதபலனையும் பதினுயிரம் வாஜபேய யாகபலனையும் பெறுவான்.

அல்லாமலும் இதை எவன் செவிகளால் கேட்கிறனே அவன் பிரயாகை முதலிய புண்ணிய தீர்த்தங்களிலும் கங்கை முதலிய புண்ணிய நதிகளிலும் ஸ்நானத்தையும் நைமிசாரண்ணிய முதலிய திவ்விய ஆரண்யங்களிலும் குரு க்ஷேத்திர முதலிய திவ்விய க்ஷேத்திரங்களிலும் வாசத்தையும் செய்த புருஷன் எந்த லோகத்தைப் பெறுவானே அந்தப் பதத்தை அடைவான்.

இதில் ஒரு பாகத்தையாவது ஒரு பதத்தையாவது எவன் பக்தியோடு கேட்கிறனே அவன் பிரமனுலகத்தை அடைந்து எப்போதும் அப் பிரமனுல் பூசிக்கப்படுவான். மேலும் இவ்விதிகாசத்தை அதிசிரத்தையோடு கேட்கி றனே அவன் பாவங்கள் யாவற்றினு மிருந்து நன்றாக விடுபட்டு ஸ்ரீ வைகுண் டத்தைப் பெறுவான்.

பின்னும் இச்சரித்திரத்தை முழுதும் படிக்கிறனே அவன் தேகாவசா னத்தில் ஸ்ரீ பரமானந்தத்தை அடைவான்; இதற்குச் சந்தேகமில்லை; இன்னம் இந்த திவ்விய கலியாணகுண சேஷ்டிதங்களைச் சங்கீர்த்தனம் பண்ணுவதி னுலே பிரமஹத்தியாதி மகா பாதகங்களோடும் உபபாதகங்கள் யாவும் நசித்துவிடும்.

ஆகையால் இந்த ஸ்ரீ ராமாயணத்தினுடைய மகாத்மியத்தை விரித்துக் கூற நூறு வருஷம் செல்லினும் என்னுல் முடியாது, ஆதலால் சுருக்கமாகச் சொல்லுகிறேன். எவன் பிரசாத சுவிகாரஞ் செய்தபின்பு ஸ்ரீமத் ராமா யணத்தில் ஒரு வாக்கியத்தையாவது ஒரு பாகத்தையாவது ஒரு பதத்தையாவது அனுசந்திக்கிறனே அவன் பரப்பிரம்மத்தின் சாமீபத்தை யடைவான்.

மேலும் வான்மீகி பகவானுடைய முகாரவிந்தத்தி னின்றும் பிரவகித்த ஸ்ரீமத் ராமாயணமென்னும் தேனைப் பிரதினமும் எவன் காதுகளாகிய கரங்

களால் ஆதரத்தோடு மொண்டு நன்ருகப் பானம் பண்ணுகிருனே அவன் மிகுதியும் உபத்திரவத்தை விளைக்கின்ற ஜன்ம வியாதியையும் மரணவிபத்தை யும் ஒழித்து ஸ்ரீ சர்வேசுவரனுடைய நித்தியமாகிய பரமபதத்தை அடைவான், இவ்வாக்கியங்களைச் சங்கரபகவான் உமாதேவியினுடைய காதிலே சொல்லி யருளினர். இப்பொருளை அம்பிகாபதி யென்பவர்,

கம்ப நாட னுமைசெவி சாற்றுபூங்
கொம்ப நாடன் கொழுநனி ராமப்பேர்
பம்ப நாடழைக் குங்கதை பாச்செய்த
கம்ப நாடன் கழறலை யிற்கொள்வாம்.

எனவும், இயலிசை நாடகமென்னு முத்தமிழையு முணர்ந்த நல்ல கவி யாகிய அருணசலக்கவிராயர் இராம நாடகத்தின் பாயிரத்தில் ஆதிசிவன் உமைகாதிலே சொன்ன மகத்துவமுள்ள ராமகதை யெனவும் கூறினர்.

ஆகையால் தன்னைப்பற்றி வருவதாகிய ஆதியாத்மிகமும், பிறரைப் பற்றி வருவதாகிய ஆதிபௌதிகமும் தெய்வத்தைப்பற்றி வருவதாகிய ஆதி தைவிகமும் என்னும் தாபத்திரயங்களின் வடிவினதாகிய சமுசாரத்திலிருக்குந் துக்காக்கிரந்தரான ஆத்துமாக்களுக்கு ஸ்ரீமத் ராமாயணமென்கிற அமுதமே திவ்விய ஔஷதமென்று நினைக்கத்தக்கது. மேலும் ஸ்ரீ உருத்திரபகவான் முனிவரைநோக்கி உமக்குச் சத்தியமாகச்சொல்லுகிறேன் கேட்பீராக ஸ்ரீமத் ராமாயணத்தைச் சிரவணம் பண்ணுவதை விட்டு எவன் அவைதிக சரித்திரங் களைக்கேட்டுத் தன் வாழ்நாளை வீழ்நாளாக்குகிருனே அந்தப் புருஷோத்தமன் நரகத்தை யடைவானென்று அறியத்தக்கது.

புராதனமாகிய ஓ முனிவரே! எல்லாவுலகத்தாருக்கும் நன்மையைத் தருவதை உமக்குச் சொல்லுகிறேன் கேட்பீராக! எவன் மூடபுத்தியுடைய வனாய் ஸ்ரீ ராமாயண விஷயத்தில் சந்தேகங் கொள்கிருனே அவன் சத்திய மாய் நரகத்தை யடைவான். ஆகையால் ஞானபுருஷர்களாலே ஸ்ரீ ராமா யணத்தை யர்த்தவாதமென்று சங்கிக்கக்கூடாது.

பின்னும் ஸ்ரீமத் ராமாயணத்தைச் சாத்திரங்களில் சொல்லியபடி சாங்க மாக எவன் கேட்கிருனே அவனே செல்வன் எல்லாராலும் சேவிக்கத்தகுந்த வன் என்னாலும் சேவிக்கத் தகுந்தவனென்று அருளிச்செய்தனர்.

சிறையிருந்தவளுடைய ஏற்றஞ்சொல்லும் இதிகாச சிரேஷ்டமாகிய ஸ்ரீமத் ராமாயணத்தினது வைபவத்தைக்கூறும் வைதிக புராணேதிகளிலுள்ள மற்றும் பிரமாணங்களை எடுத்து எழுதப்புகின் விரியுமாதலாலும், உண்மையுணரவல்ல நல்லறிவாளர்க்கு இவையே அமையுமாதலாலும், இம்மட்டில் நிறுத்தினதும் மதுரைச் சங்கத்துப் புலவர்களில், சிறந்த பாரதம் பாடிய பெருந்தேவனர்.

க வி

எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு—முற்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதை மநுப் பண்டைமறை
கோர்வனமற் றில்லை நிகர்.


(இ - ள்.) அறம்பொருளின்பமாகிய எல்லாப்பொருளையும், எச்சமயிகளும் மாறுபாடில்லாமல் அறிந்துகொள்ள அவருக்குச் சொல்லும்படி திருவள்ளுவர் சொல்லியருளிய மூன்று பாலுக்கும், பஞ்சம வேதமாகிய பாரதமும், ஸ்ரீமத் ராமாயணமும், மநுஸ்மிருதியும், அபௌருஷேயமாகிய வேதமும் ஒப்பாவன, வேறொன்றுமில்லை ஒப்பாவது, எ - று.

ஸ்ரீமத் ராமாயண வைபவசங்கிரகம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.



ஸ்ரீமத்

கம்ப ராமாயண வசனம்

பால காண்டம்

காப்பு

தருகை நீண்ட தயரதன் ருன்றரும்
இருகை வேழத் திராகவன் றன்கதை
திருகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குறைகழல் காப்பதே.

வேறு

அஞ்சிலே யொன்று பெற்ரு னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்ரு ருக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனெம்மைய ளித்துக் காப்பான்.

புத்தகம் படிக மாலை குண்டிகை பொருள் சேர் ஞான
வித்தகந் தரித்த செங்கை வீமலையை யமலை தன்னை
மொய்த்த கொந் தளக பார முஞிழ் முலைத் தவள மேனி
மைத்தகு கருங்கட் செவ்வா யணங்கினை வணங்கல் செய்வாம்.

பயன்

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலே நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே.

வேறு

நன்மையுஞ் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றுத் தீருமே
இம்மையே ராமாவென் றிரண்டெ ழுத்தினுல்.

வடகலே தென்கலே வடுகு கன்னடம்
இடமுள பாடையா தொன்றி னுயினும்
திடமுள ரகுகுலத் திராமன் றன்கதை
அடைவுடன் கேட்பவ ரமர ராவரே.

வேறு

வென்றிசே ரிலங்கை யரசை வேன்றமால் வீர மோத
கின்றரா மாயணத் தில் நிகழ்ந்திடு கதைக டம்மில்
ஒன்றினைப் படித்தோர் தாமு முரைத்திடக் கேட்டோர் தாமு
நன்றிது வென்றோர் தாமும் நரகம தெய்தி டாரே.


வேறு

இராகவன் கதையி லொருகவி தன்னில் ஏக பதத்தினை யுரைப் போர்
பாவரு மலரோ னுலகினி லவனும் பன்முறை வழுத்தவீற் றிருந்து
புராதன மறையு மண்டர்பொற் பதமும் பொன்றுநா ளதனினும் பொன்ரு
அராவணை யமல னுலகெனும் பரம பதத்தினை யணுகுவ ரன்றே.

வேறு

இறவ ரம்பி னிராமவென் றேரும்பர்
நிறுவ ரென்பது நிச்சய மாதலான்
மறுவின் மாக்கதை கேட்பவர் வைகுந்தம்
பெறுவ ரென்பது பேசவும் வேண்டுமோ.

அன்ன தான மகிலநற் றுணங்கள்
கன்னி தானங் கபிலையின் தானமே
சொன்ன தானப் பலமெனச் சொல்லுவர்
மன்னி ராம கதைமற வார்க்களோ.



ஸ்ரீ வைகுந்தநாதனை திருப்பாற்கடலில் வரங்கேட்குதல்.

படம் நெ. 1.

வேறு

ஆதியரி யோகமகா ராயணர் திருக்கதை யறிந் தனு தினம்பரவு வோர்
நீதியனு போகநெறி நின்று நெடு நாளதி னிறைந்துசெக தண்ட முழுதுக்
காதிபர் களாயரசு செய்துள நினைத்தது கிடைத்தருள் பொறுத்து முடிவில்
சோதிவடி வாயழிவில் முத்திபெறு வாரென வுரைத்த சுருதித் தொகைகளே.

வேறு

இனையநற் காதை முற்று மெழுதினோர் வியந்தோர் கற்றோர்
அனையது தன்னைச் சொல்வோர்க் கரும்பொருள் கொடுத்துக் கேட்போர்
கனைகடற் புடவி மீதே காவலர்க் கரசாய் வாழ்ந்து
வினையம தறுத்து மேலாம் விண்ணவன் பதத்திற் சேர்வார்.

சிறப்புப்பாயிரம்

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணங்களே.

சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
எற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றனுள்
முற்கு ணத்தவ ரேமுத லோரவர்
நற்கு ணக்கட லாடுத னன்றரோ.

ஆதி யந்தமிலியென யாவையும்
ஓதி னுரல கில்லன வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாத மல்லது பற்றிலர் பற்றிலார்.

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றெரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றிய றையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன்க தையரோ.

நோய்தி னெய்ய சொன் னூற்கலுற் றேனெனை
வைத வைவின்ம ராமர மேழ்தொளே
எய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே.

வைய மென்னை யிகழவு மாரெனக்
கெய்த வும் மிதியம்புவ தியாதெனில்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சிதெ ரிவிக்கவே.

தேவ பாடையி னிக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னுருரை யின்படி நான்றமிழ்ப்
பாவி னுலித னார்த்திய பண்பரோ.

துறையெ டுத்த லிருத்தத்தொ கைக்கவிக்
குறையெ டுத்த செவிகளுக் கோதில்யாழ்
நறைய டுத்த வசுணநன் மாச்செவி
பறைய டுத்தது போலுமென் பாவரோ.

முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்க விகட்கொன் றுணர்த்துவேன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ.

அறையு மாடரங் கும்மடப் பின்னைகள்
தரையிற் கீறிடிற் றருச்சருங் காய்வரோ
இறையு ஞானமி லாதவென் புன்கவி
முறையி னூலுணர்ந் தாருமு னிவரோ.

நடையி னின்றுயர் நாயகன் ரூற்றத்தின்
இடைகி கழ்ந்தவி ராமாவ தாரப்பேர்த்
தொடைநீ ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே.

பாயிர முற்றிற்று.

நூன்முகம்

திருவயோத்தியாபுரியில் தசரதச் சக்கிரவர்த்தி இராச்சியபாரம் செய் கிறகாலத்தில், மேகமானது, விபூதிதரனுகிய சிவனைப்போல வெளுத்த நிறமா யாகாயத்தின்கண் பரவிச் சமுத்திரத்திலிறங்கிப் பானஞ்செய்து ஸ்ரீ மகா லட்சுமீபதியாகிய மகா விஷ்ணுவைப்போலக் கறுத்த நிறமாய்த் திரும்பியது. அம்மேகங்களானவை, சிவனுடைய மாமனுகிய இமயபர்வதராஜன், சூரியனல் வெப்பத்தை யடைந்தனனென்று நினைத்துக் குளிர்ந்த சலத்தினுல் அபிஷே கஞ் செய்துவைக்க வெழும்பினதுபோல வெழுந்து விசாலம்பொருந்திய அப் பர்வதத்தின்பேரில் மழைகளைப் பொழிந்தது. எப்படிக் கிருந்ததென்றுல்: தியாகிகள் தங்களிடத்திலிருக்கிற திரவியங்களெல்லாம் நாளைக்கு வேணு மென்று வைத்துக்கொள்ளாமல் எப்படி வுதாரத்துவமாய்க் கொடுப்பார் களோ, அப்படிபோலத் தாரைகளை வருஷித்தன. அந்த மழையின் பிரவாக மானது மானுபிமானமறிந்து தருமத்தை நோக்கி மனுநீதி வழுவாது செங்கோல் செலுத்திய அரசனுடைய கீர்த்தியைப்போலவும், கியானத்தையுடைய பெரி யோர்கள் கரத்தினுல் வழங்குந் தானம்போலவும் தழைத்து, அப்பர்வதத்தி னுச்சிதவிர மற்றுமுள்ள வஸ்துக்களையெல்லாம் வாரி யிழுத்துக்கொண்டு வரு வதைப் பார்த்தால் விலைமாதரை யொத்திருந்தது. அவ்வெள்ளமானது ரத்தின மும் முத்தும் பொன்னும் மயிலிறகும் யானைக்கொம்பும் அகிற்கட்டையும் சந் தனமும் இன்னுமனேகவித வஸ்துக்களையு மேந்திக்கொண்டு வருவதினுல் வர்த்தகரைப் போலவும், புஷ்பமும் - மகரந்தமும் - தேனும் - யானைமின்மதமும் பொற்சின்னங்களும் பொருந்தி வருவதை யோசிக்கில் ஆகாயத்தின்கண் பொருந்திய வில்லைப்போலவும், மலைகளையும் - மரங்களையும் பறித்துக்கொண்டு இலைமுதற் பொருளனேகங்களை யேந்திவருவதைப் பார்த்தால் கடற்கு அணை கட்டுதற்குப் புறப்பட்ட உறுதிபொருந்திய வானரக்கூட்டம் போலவும், ஈக்கள் வண்டுகள் மொய்க்க எல்லைக்கடந்து வலிமிகுந்து தெளிவில்லாமல் கலங்கலாய் தேக்கலிட்டுக்கொண்டு வருவதால் கட்குடியர்களைப் போலவும், யானையையும் பலவித மனிதர்களையும் கொடிகளையும் இழுத்து ஆர்ப்பரித்து ஊன்றிக்கொண்டு வருவதால் சமுத்திரத்தின்மேல் சண்டை செய்யப்போகிறது போலவு மிருந்தது. இவ்வித வெள்ளமானது சூரியகுலத்தில் பிறந்த அளவில்லாத வேந்தர்களுடைய நல்ல வொழுக்கத்தின்படி பெயர்கொண்டு சகல சீவராசிகளுக்கும் தாய் ஸ்தா னத்தை யொத்திராநின்ற சரயுநதியில் அதிகோஷத்துடன் வந்து பிரவேசித்து, குறிஞ்சிநிலப் பெண்களிடித்த குங்குமம் - வாசனைப் பண்டம் - ஏலம் - சந்தனம் - கஸ்தூரி முதலிய பொடிகளின் பரிமளத்தோடு வேடர்கள் வாழும் பாலை நிலத் தில் பரவ, யங்நிலத்து ஸ்திரீகள் வோடத்தக்கதாக அவ் வேடர்களுடைய வில் லம்பு முதலியதை இழுத்துக்கொண்டு வருகிற தன்மையினுல் குருநில மன்னர் போலவும், பின்பு முல்லை நிலத்தில் பரவி, அவ்விடத்திலிராநின்ற பால் - வெண்ணெய் - நெய் உறி - முதலிய ஆயர் மாதருடைய வஸ்திரங்களையும் வாரிக் கொண்டு வருதலால் காளிங்க நடனஞ் செய்த கண்ணனைப்போலவும், மத மழையை யுடைய யானைபோலவும், மருதநிலத்தில் வந்து சேர்ந்தது.

இப்படி, குறிஞ்சி - முல்லை - மருதம் - நெய்தல் இந்நான்கு நிலங்களிலும் உற்பத்தியாகிய எண்ணிறந்த பொருள்களெல்லாம் இடம்விட்டு இடத்திலிருப்பதால் கதிக்குச் செல்லவொட்டாத வினைபோலவும், ஒருகால் வாயிலிருந்து பிரிந்த கூட்டம்போலவும், மலையினிடத்திற் பிறந்து கடலினிடத்தில் சேர்ந்த வெள்ளமானது வரம்பற்ற வேதங்களால் சொல்லுதற்கரிதாகிய பொருள் பூர்வத்தி லொன்றாகவிருந்து, பல சமயங்களாற் சொல்லுங் கடவுளரைப்போல எங்கும் வியாபித்து, மகரந்தங்களைச் சிந்தும் சோலைகள் - சண்பகக்காடுகள் - தடாகங்கள் - வயல்கள் முதலிய தேகங்கள் தோறும் பொருந்திய வுயிர்போலவும் பரவியிருந்தது.


நாட்டுச் சிறப்பு

இச் சரயூநதி சூழ்ந்த கோசல நாட்டிலுள்ள பள்ளர்கள் பலவாறாக அந்த நதியின் ஜலத்தைக் கட்டிக்கொண்டு கழனிகள்தோறும் உழுது விரையை விரைத்து நாற்றுநட்டு பலன்படுவதற்கு முன்னமே மஞ்சள், இஞ்சி முதலிய இரசகந்தாயப் பயிர்களைச் செய்துகொண்டு தங்கள் தங்கள் வீட்டில் சேர்த்துக் கொண்டதல்லாமல் நதியில் மேற்பலனையும் போர்க்கட்டி வண்டியின்பேரி லேற்றிக்கொண்டு களஞ்சியங்களில் சேகரப்படுத்தி வைத்துக்கொண்டு, தேவாலயம் - பிராமணர் - அதிதிகள் - வித்வான்கள் - யாசகர் முதலிய பலருக்கும் உபயோகமான கைங்கரியங்களைச் செய்துகொண்டும், விருந்து முதலிய உபசாரங்களும் செய்துகொண்டும், தங்கள் தங்கள் பந்துஜனங்களோடு வாழ்ந்திருப்பார்கள். ஆதலால் அந்நாட்டிலுள்ள குடிகள் வறுமை - பகைவர் - பொய்யுரை இவைகளுக் கிடமில்லாத பல வேள்விகளை யுடையவர்களா யிருந்தார்கள். அந் நாட்டின் ஸ்திரீகளுடைய கற்பினாலும், தர்மமும் காலமழையும் குறைவில்லாமல் நடந்துவந்தது.

நகரச் சிறப்பு

இவ்வளவு சிறப்போடுங்கூடிய கோசல நாட்டையுடைய அயோத்தியாபுரியானது, ஸ்ரீ பூமிதேவிக்குத் திருமுகமண்டலம் போலவும், திலதம் போலவும், கண்போலவும், திருமங்கலம் போலவும், மார்பிலசையானின்ற முத்தாரம் போலவும், உயிரிருக்கிற இருதயஸ்தானம் போலவும், ஸ்ரீ மகாலட்சுமி வாசமாயிருக்கும் பொற்றாமரைக்கமலம் போலவும், ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய கவுஷ்துவாபரணம் வைத்திருக்கும் பொற்பொட்டி போலவும், உலகத்துக் கெல்லாமேலாகிய ஒரு உலகம்போலவும், ஊழிகாலப்பிரளயத்தில் சகல ஜீவகோடிகளும் வந்து சேர்ந்திருக்கிறதற்கு ஒரு வீடுபோலவும் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அன்றியும் மிகுந்த உயர்ச்சியும் விஸ்தீரணமும் பொருந்திய கோட்டையும், பாதாளமட்டு மாழ்ந்திருக்கிற அகழும், அனேக மாடமாளிகை கூட கோபுரங்களுடனே கோடிசூரியப் பிரகாசம்போல் விளங்கிக்கொண்டு பலபல வித்தங்களான வஸ்துக்களும் நிறைந்திருக்கிற கடைவீதிகளும், சகல வேதசாஸ்

படம் நெ. 2.



புத்திரகாமேஷ்டி யாகத்தில் தசரதருக்கு பூதம் பாயசம் கொணர்ந்தது.

திர பண்டிதரான பிராமணவீதிகளும், வீராதிவீரரான ராஜவீதிகளும், குபேர னுக்குச் சமதையான வைசியவீதிகளும், அனேகஞ் சாம்பிராச்சியங்கள் உண்டான சூத்திர வீதிகளும், வித்தியாரம்ப ஸ்தாபனங்களும், ஆனைகளிருக்கிற கூடங்களும், குதிரைத்திரள்கள் கட்டியிருக்கிற பந்திகளும், நாடகசாலைகளும் இது முதலான சம்பிரம சிங்காரங்கள் நிறைந்து நாலு வேதங்கள்போல நாலு வாயிலுண்டாய் பிரகாசித்திருக்குந் தேவேந்திரனுடைய அமராபதியும் குபேர னுடைய அளகாபுரியும் இந்த அயோத்திமா நகரத்துக்குச் சமானமாக மாட் டாம லிளைத்துப் போயிற்றென்றால் அந்தப் பட்டணத்துக்கு நிகரான பட்ட ணம் வேறே யெங்கே யிருக்கின்றது? உப்பரிகைகள்தோறு மனேக வர்ண முள்ள கொடிகளும், பூரணகும்பங்களும், மகரதோரணங்களும் நிறைந்திருக் கும். வீடுகள்தோறும் மங்கல கீதங்களும் பேரிகை முதலான மேளவாத்தியங் களும், சின்னம் - பூரி - காளம் முதலான ஆர்ப்பரிப்பு மிகுந்திருக்கும். பராபர வஸ்துவான ஸ்ரீ ராமன்றனே மகா லட்சுமியுடனே அனேககாலங் கூடியிருந்து ராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருந்த ஸ்தலம் இதுவானால், அதற்குச் சிங்கார மும் பெருமையும் மகிமையும் பிரமதேவனாலேயுஞ் சொல்லக்கூடாத பிரதாபங் கொண்டிருக்கிற இப் பட்டணத்தினுடைய சிங்காரத்தைப் புத்தியீனனான அடியேன் எவ்வளவு சொல்லப்போகிறேன். சுவர்க்கம் - மத்தியம் - பாதாளம் என்னும் மூன்று லோகத்திலேயும் சமானமில்லாத சுதந்தரத்தை யுடைய நகரமாக விருந்தது.

அரசாட்சிச் சிறப்பு

இந்த நகரத்துக்கு அரசனானவன் ராஜாதிராஜன். அவன் தன் செங் கோலினுடைய பிரஸ்தாப மேழுலோகமுஞ் செல்லும்படியான கீர்த்தியை யுடையவன். இக்காவியத்திற்குக் கர்த்தாவாகிய ராமனைப் பிள்ளையாகப் பெற்ற தருமமூர்த்தி சொரூபன். அறிவு, கிருபை, தருமம், பொறுமை, பலம், சவுரியம், உதாரத்துவம் இவைமுதலிய உத்தமகுணங்க ளியாவற்றையும் அடைந்தவன். யாகாதி கிரியையெல்லாம் செய்து முடித்தவன். உலகத்திலுண்டாகிய உயிர் களுக்கெல்லா மன்பில் தாயைப்போலவும், நன்மையில் தவத்தைப்போலவும், நற்கதிக்குச் செலுத்துவதில் பிள்ளைபோலவும், வியாதிகட்கு மருந்துபோலவும், நுட்பமாகிய கேள்விகளைக் கேட்குங்கா லவரவர்கள் அறிவுபோலவு மிருந் தான். தரிததிரர்களென்கிற சமுத்திரத்தைத் திரவியங்கொடுத்தே விலக்கி னன். கியான சமுத்திரத்தை யறிந்தே விட்டான். பகை யென்கிற சமுத்தி ரத்தை வாளினால் கோபித்தே யொழித்தான். சம்பத்தென்கிற சமுத்தி ரத்தை யனுபவித்தே மூழ்கினன். வெள்ளமும் - பட்சியும் - மிருகமும் - வேசிய ருடைய மனமும் ஒரு வழியாய்ச் செல்லும்படி சக்கரஞ் செலுத்தினவன். உயிர்களுக்கெல்லாம் தானொரு சரீரம்போல விருந்து ரட்சித்துக்கொண்டு நிகரில் சிரோமணியா யிருக்கிறவன். பரராஜர்கள் திறைகொண்டு காணவரு கிறபோது அவரவர்கள் சாஷ்டாங்கமாகத் தெண்டனிடும்போது அவர்கள் கிரீட சிகரங்கள்பட, அதினாலே துலங்கி யிருக்கிற வீரகண்டாமணி தரித்திருக்

கிற பாதாரவிந்தனை அம் மகானுபாவனுடைய நாமதேய மென்னவெனில் தசரத மகாராஜன். இவனிவ்வளவு பிரதாபத்துடனே உலகத்தை வேலி போலாகக்காத்து ராச்சியபாரஞ்செய்து வந்தான்.

திருவவதாரப் படலம்

இந்த தசரத மகாராஜன் ஒருநாள் தன்னுடைய குலகுருவான வசிஷ்டமகா முனியைச் சாஷ்டாங்கமாகச் சேவித்து, சுவாமி! அடியேன் ஒரு விண்ணப்பஞ் செய்கிறேன். அது கேட்டருளவேணுமென்று பய பக்தியுடனே சொல்லுகிறான்: சுவாமி! யென்னுடைய குலத்துக்குத் தாயும், தந்தையும், தனமும், தெய்வமும், சகலமும் நீரே! எங்களுடைய பெரியோர் கள் சூரியனுடைய பிரகாசத்துக்குச் சமானமான கீர்த்தியோடு இராஜ்ஜிய பாரம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். அடியேனும் உம்முடைய கிருபையி னலே இதுவரைக்கும் அப்படியே அறுபதினாயிர வருஷம் ராச்சியபாரம் செய்துக்கொண்டு வந்தேன். ரிஷிகளும் பிராமணரும் வருத்தமில்லாமல் சுகமாய் வாழ்ந்து வந்தார்கள். எனக்குப் பின்பு இவர்கள் வருத்தப்படு வார்களே யென்கிற கிலேசம் என் மனதிலே மிகவும் உண்டா யிருக்கின்றதென்று தசரத மகாராஜன் சொல்ல, பிரமபுத்திரனாகிய வசிஷ்டபகவான் தமதிருதயத்தில் முன்னடந்த ஒரு தேவ ரகசியத்தை நினைத்தார். அது என்னவெனில்: பூர்வத்திலே தேவேந்திரன் முதலான தேவர்கள் ராட்சத ராலே வெகு உபத்திரவப்பட்டு, அந்த உபத்திரவந் தாளமாட்டாமல் காளகண்ட னை சிவனுடனே சொல்லிக்கொண்டார்கள். அதைச் சிவன் கேட்டு அந்த ராட்சதரை நாம் சங்காரிக்கிற தில்லையென்று சொல்லி, தம்மிடத்திற்கு வந்த தேவர்களை யழைத்துக்கொண்டு பிரமதேவரிடத்திற்குப் போய்த் தெண்டஞ் செய்து, ராட்சதரால் தேவர்களுக்கு நேரிட்டிருக்கும் வருத்தத்தை சொல்லினார். அவரும் இவருக்கு உபசாரஞ்செய்து தானுங்கூடப் புறப்பட்டு, மகமேருபர்வ தத்தி னுச்சியிலிருக்கிற நவரத்தினாலங்கிருத சுவர்ணமண்டபத்திற் போய்ச் சேர்ந்தார்கள். அம்மாத்திரத்தில் தேவேந்திரன் தன்னை முன்னொரு காலத்தில் இந்திரசித்து பாசக் கயிற்றினாற் கட்டி இலங்காபுரிக்குக் கொண்டுபோனபோது பிரமதேவன் தன்னை மீட்டுக்கொண்டு வந்த சங்கதியைப் பார்வதி சமேதனாகிய சிவனுடைய திருவுளத்தில் படும்படிக்குச் சொன்னான். அதற்கு இருபது கரங் களையும் பத்துத் தலைகளையுமுடைய இராவணன் பலத்தை ஒடுக்குகிறதற்கு எங்களாலாகமாட்டாது ஆனால், திருப்பாற்கடலில் நீலமேக சாமள ரூபத்தோடு திருக்கண் வளர்ந்தருளும் கிருபா சமுத்திரமான ஸ்ரீமந் நாராயணன் அந்த ராக்ஷதனைச் சங்காரித்து நம்மிட இடர்களைத் தீர்க்கவேணுமே யல்லாமல், வேறே யுபாயமில்லை யென்று பிரமதேவனுஞ் சிவனும் சொல்ல, அப்படியே திருப்பாற்கடலிலே யோக நித்திரை செய்கிற மரகத சொரூபனை தேவாதி தேவனை மனதில் நினைத்து, அனேகவிதமாக ஸ்தோத்திரஞ் செய்தான். அப் போது பரகதியை இச்சித்தவர்கட்கு அருளும் ஸ்ரீமந் நாராயணஸ்வாமி யறிந்து எழுந்திருந்து பொற் பர்வதம்போல பிரகாசித்திருக்கும் கருட வாகனரூடனாய்

நீலமேக சாம்ளரூபமான திருமேனியனுய் மார்பிலே மின்னற்கொடிபோல மகா லட்சுமியும் அநேக செந்தாமரைக்காடு பூத்தாற்போல கரசரணுதிகளும் பிரகாசிக்கச் சூரியசந்திராளுக்குச் சமானமான சங்குசக்கரங் கையிலேந்திக்கொண்டு கரகமலங் குவித்துக்கொண் டிருக்கிற சிவபிரமேந்திராதிகளுக்குப் பிரசன்ன மானுர். அப்போது அவர்கள் தேவர்களோடு மெழுந்திருந்து, எதிரேபோய் நமஸ்கரித்து, அனேகவிதமாகத் தோத்திரஞ் செய்து சந்தோஷ மடைகிற சாகரத்தில் மூழ்கினவர்களாய்த் தொழுகிறபோதெல்லாம் ஆனந்தக் கண்ணீர்ப்பை யடைந்து நிருத்தஞ்செய்து, அந்த பகவானுடைய மகிமைகளைப் பல விதமாகச் சொல்லித் துதிசெய்யும்பொழுது, ஆனந்தமென்கிற தேனைப் புசித்து, திருப்திகமாட்டாமல் இராட்சத நிறைந்தார்களென்கிற சந்தோஷப் பெருக்கினல் திருத்துழாய் பொருந்திய திருவடிகளைக் கிரமப்படிக்குத் தங்கள் தங்கள் சிரசில் தரித்துக் கொண்டார்கள். அப்பொழுது மகம்மேரு பர்வதத்துச்சியினின்று கருத்த மேகமிழிந்து வருவதுபோல் அப்பரமமூர்த்தி தன்னை யடிமையாகவுடைய ஸ்ரீ கருடபகவான் தோளைவிட்டிறங்கி, சுவர்ணலங்கிருத மண்டபத்தின் மத்தியில் நவரத்னகசித சோதிமயமான சிங்காதனத்தி லெழுந்தருளினர். பின்பு, பிரமனெடு முனிகளும் சிவனெடு தேவேந்திரன் முதலிய தேவரும் சேர்ந்து, அதிசயத்தோடு இருபுறத்திலு மிருந்து பகவானைப் பார்த்து, மகா கொடிய பாவிகளாகிய இராக்ஷதர் செய்கிற உபத்திரவ துன்பத்தை பலவாறினுஞ் சொல்லி பின்னுஞ் சொல்லுகிறார்கள்: ஸ்ரீமகா லட்சுமிபதி! பத்து சிரசையுடைய இராவணன், அவன் தம்பி கும்பகர்னன் முதலான இராட்சதரால் பூமியிலு மாகாயத்திலும் நடாத்திவராநின்ற யாகாதிகள் முதலிய தவங்களழிக்கப்பட்டன. இனி பிழைக்குந் திறமு மில்லை; ஒ ஸ்வாமி! நாங்கள் கொடுத்த பல வரங்களினல் அவ்விராட்சதர் சுவர்க்க மத்திய பாதாளமென்கிற திரிலோகங்களையும் விஜசப்படுத்திப் போட்டார்கள். இத்ததியில் தங்களுடைய கிருபாநுக்கிரக மில்லாவிடிலோர் கணப்போழ்தி லிவ்வுலகத்தைப் பட்சித்துப்போடுவார்கள். எங்களாலக்கொடிய பாவிகளாகிய வரக்கரை தும்சப்படுத்துகிறதற்குக் கூடுமானதாக விருக்கவில்லையென்று சிந்தாகுலராக விருந்தார்கள். அப்போது மிகுந்த பரிமளங் கமழும் துளபமாலை தரனை ஸ்ரீமந் நாராயணமூர்த்தி சிவபிரமாதிகள் முதலிய தேவர்களை நோக்கி, நீங்கள் பயப்படவேண்டாம், அந்த கபடவஞ்சகராகிய ராட்சதரைச் சங்கரித்து உங்களுடைய துன்பங்களைக் களைந்து ரட்சிக்கிறேமென்று திருவாய்மலர்ந்தருளிப் பின்னும் ஓர் வசனம் அநுக்கிரகஞ் செய்கிறார். ஓ! தேவர்கள் முதலிய நீங்களும் பூமியின் கண்டபேரய், வனங்களிலும்-மலைகளிலும்-தடாகங்களிடத்திலும் வானரங்களாகச் சேனையோடு பிறந்து சஞ்சரித்துக் கொண்டிருங்கள். கொசுகையொத்த நடைய வரத்தையும் அவ்வரத்தினல் செருக்கடைந்த இராட்சதருடைய வலுவையும், படுசூரணஞ்செய்ய நானும், சங்கு-சக்கரம்-சேஷன் இவர்கள் தம்பியர்களாகவும், ரதகஜதுரகபதாதியையுடைய அயோத்தியாபுரியை யாளும் தசரத சக்கிரவர்த்தியின் புத்திரராக திருவவதாரஞ் செய்கிறேமென்று திருவாய்மலர்ந்தருளி ஆக்கியாபித்த கட்டளையை சிவபிரமாதிகள் முதலிய தேவர்கள் கேட்டு, அதிக சந்தோஷ சாகரத்தில் ஸ்நானஞ் செய்தவர்களாநானந்தநிர்த்தனஞ் செய்தனர்கள். மங்கள கீதங்கள் பாடினர்கள். இன்னையு

தினம் நம்மை ரட்சித்தனரென்கிற அதிக சந்துஷ்டியால் சுராதிபனுகிய தேவேந்திரன் எனது மனக்கிலேசம் தீர்ந்ததென்ருன். இருடிகள் முதலிய தேவர்கள் எங்களுடைய சிரமம் இன்றே யொழிந்த தென்ருர்கள். அப்பால் அந்த ஸ்வாமி ஸ்ரீ கருடபகவான் ரூளி லெழுந்தருளி போனபின்பு, பிரம தேவன் தேவர்களைப் பார்த்து பூலோகத்தில் நான் முன்னமே சாம்புவந்த னுகப் பிறந்திருக்கின்றனன். ஆதலால் நீங்களும் போய் அவ்வாறுக வுதித் திருங்களென்று சொன்ன மாத்திரத்தில் தேவேந்திரன் நான் சத்துருக்க ளுக்கு வோரிடிபோல் வாலியாகவும் அவன்மகன் அங்கதனுகவும் பிறக்கி னென்ருன். சூரியனந்த வாலியினுடைய தம்பி சுக்கிரீவனுகப் பிறக்கி னென்ருன். அக்கினி எனது அங்கிசம் நீலனென்ருன். வாயு நான் சு மந்தனுக ஜனிக்கிறேனென்ருன். மற்ற தேவர்களெல்லாம் நாங்கள் வ ரங்களாய்ப் பிறந்திடத் தீர்மானித்தோ மென்ருர்கள். திரிபுராந்தகனை ப சிவன் நான் வாயுவின் மைந்த னநுமானென்ருர். இவ்வாறுக விவர்கள் அவதரிப்பார்களாகில் மற்றைத் திக்கிலுள்ளோர்க்கு நாசமுண்டோ? இராத கிருபாநிதியான ஸ்ரீமந் நாராயணன் நியமனப்படிக்குப் பிரமதேவனும் கால கண்டனுகிய சிவனும் தேவர்களும் அந்தப்பிரகாரமாய் பூமியில் இருண்ட வனத் தில் வானரராக அவதரித்தார்கள். இக்காரியங்களுக்கு கர்த்தாவா யிருந்தவ ளவரவரிடம் போய்ச் சேர்ந்தனரென்கிற தேவரகசியத்தை சீர்தூக்கி யறிந்த வசிஷ்டபகவான் தசரத சக்கிரவர்த்தியை தமது கிருபாநோக்கத்தால் நோக்கி ஒரு வசனஞ் சொல்லுகிறூர். ஓ! இராஜாதிராஜனே! நீர் வருத்தப்படவேண் டாம். இவ் வீரேழுபதினுன்கு லோகங்களிலும் செங்கோல் செலுத்தி அ செய்யும் புதல்வரைப் பெறுவீர். ஆதலால் ஐயா! புத்திரகாமேஷ்டியாகஞ் செய்வீராகி லுமது மனைவியாதி தீருமென்று சொன்னர்.

அதைக்கேட்ட ராஜாதிராஜனுகிய தசரதமகாராஜன் அதிக ஆனந் தத்தை யடைந்து வசிஷ்ட பகவானுடைய உபயசரணாரவிந்தங்களைச் சேவித் துக்கொண்டு, சுவாமி! உம்மை யடைந்த எனக்குத் துன்பம் வருமா? வரமாட் டாது. ஆதலா லந்த யாகத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டியகாரியங்களை அடி யேனுக்கு அநுக்கிரகஞ்செய்தா லப்படியே நடந்துகொள்ளுகிறேனென்றனன். அதற்கு வசிஷ்டபகவான் குற்றமற்ற தேவர்களோடு மற்றோர்களையும் பெற்ற காசிப மகாரிஷியினுடைய புத்திரர் விபாண்டகருடைய பிள்ளையானவர். கங்கா தரனுகிய ஈசனும் புகழ்தற்கொத்த கலைக்கோட்டு மகாரிஷியென்பவர் பின்னும் வேத சாஸ்திர பாண்டித்யத்தில் தனது பிதாவுக்கு நிகரானவர். மனுநீதிதெறி வாய்மை இவைகளில் பிரமதேவனுக்குச் சமமானவர். மேலும் இவ்வுலக வாழ்க் கையின் தன்மையறியாத உத்தம சிரேஷ்டர். கலைமான் முகமாய் ஓர் பு புடனே பிரகாசித்திருக்கின்ற சிரசையுடைய மகாதபோவர். ஆதிசேஷ தாங்கு மிவ்வுலகத்திலுள்ள மாந்தர்களை மிருகமென்று தீர்மானித்தவர், மகா தவத்தையுடையவர். பிரமதேவனும் சிவனும் புகழ்தற்கொத்த சாந்தசீலகுண முடையவர். ஆதலால் அவரா லிவ்வேள்வி முற்றுப்பெறுமாகில் புதல்வ ருண்டாமென்றனர். இதைக்கேட்ட ராஜாதிராஜனை தசரதசக்கிரவர்த்தி முனிசிரேஷ்டராகிய வசிஷ்ட பகவானுடைய திருவடிகளிற் சேவித்து ஸ்வாமி!

அந்த குற்றமற்ற தவசிரேஷ்டர் எங்கே யிருக்கின்றனர்? அவரிங்கு வருவ தற்கு வேண்டிய யான் செய்யுங் காரியம் யாது? தேவரீர் அருளவேண்டு மென்று கேட்க, சொல்லுகிறார்: கொடிய துன்ப முதலிய யாவற்றும் தலைக் காட்டா தொளிக்கும்படி இந்த லோகத்தை யாளும்படியான சத்தாகிய குணத் தையும் கிருபைபொருந்தியவனையும், யாது சம்பந்தத்திலும் விலக்குதற்குக் கூடா தவனையும், மனுகுலத்தி லுதித்தவனுமாயு மிருந்த உத்தான பாதனென்னும் இராஜனுடையகுமாரன் ரோமபாதனென்பவன், இவனிவ்வுலகத்தில் ராச்சிய பாரஞ் செய்துவருங்காலத்தில் அந்நாட்டில் அனேககாலம் மின்னலோடு கூடிய மேகம் மழை சொரியாமையால் சகல ஜீவராசிகளும் வருத்தமுறுந் துன்பத்தை யறிந்து ரோமபாதனென்கிற ராஜனவன் வேதசாஸ்திர பாண்டித்துவத்தை யுடைய அனேக முனிவருக்கும், பிராமணோத்தமருக்கும் அபரிமிதமான சகல வித தானங்கள் கொடுத்தும் மழை பெய்யாமையைக் கண்டான். அதனால் மன தில் மிக கிலேசத்தைக்கொண்டு, திரிகாலங்களையும் உணர்ந்திரானின்ற மகாத்து மாக்களான பெரியோர்களை ஸ்தெளத்திய முதலான அர்க்கியங்கள் செய்து சேவித்து, மழைபெய்கிறதற்கு யாது காரணமென்று வருந்தி கேட்டான். அவ்வாறு கேட்கையில் இப்போது நாம் உமக்குச் சொன்ன சிருங்கியான கலைக்கோட்டு மகாரிஷி வருவாராகில் வேண்டிய மழை பெய்யுமென்று அப் பெரியோர்கள் சொன்னார்கள். அதைக்கேட்டு ரோமபாதமகாராசன் சகலரையு மிருகமென்றெண்ணியிருக்கிற அந்த மகாநுபாவரை எவ்விதமா யிவ்விடங் கொண்டுவருகிறதென்று கவலையோடு எண்ணங்கொண்டிருக்கிற சமயத்தில், அச்சபையிலிருந்த நாடகப்பெண்க ளிருவரெழுந்து சேவித்து, சுவாமி! அந்த மகாரிஷியை நாங்க ளிங்கு கொண்டுவருகிறோமென்று சொல்லினர். அந்த விசே ஷத்தைக்கேட்டு உரோமபாதமகாராஜன் சந்தோஷித்து, அந்தப்பெண்களுக்கு திவ்விய வஸ்திராபரணங்கள் முதலியவைகளை வெகுமானஞ் செய்து ஓ மூன் றும் பிறையைப் பழிக்கும் நெற்றியையும், பாரித்த மூங்கில் போன்ற தோள் யும் உண்டோ யில்லையோவென்று இலங்கும் இடையையும் பாரித்த தனமும் இருண்ட அளகபாரமும் மருட்சியையுடைய நேத்திரமும் இலவம்பூப்போன்ற சிவந்த வாயையுமுடைய பெண்களே! அந்த மகாரிஷியை அழைத்து வாருங்க ளென்று உபசாரத்துடனே அனுப்பினன். அவர்களும் அந்த மகாராஜா வைச் சேவித்து ரதத்தின்மீதி லேறிக்கொண்டு போனார்கள். இப்படி அனேக யோசனைதூரஞ் சென்று, இன்னுமோர் யோசனைதூரத்தில் இருக்கும் கலைக் கோட்டு மகாரிஷியினுடைய ஆசிரமம் தெரிந்து, தங்கள் ரதத்தைவிட்டிறங்கி, அவ்விடத்திலோர் திவ்வியமான பர்னகசாலை செய்துக்கொண்டு, மகாரிஷிகள் போல் திருவேடம் பூண்டு, அவர் தந்தையாகிய விபாண்டகரில்லாத தருணம் பார்த்து, அந்த மகாரிஷியின் சமீபத்திற்போய் கண்டார்கள். இவர்களை அந்த மகாரிஷி பார்த்து, பெரியோர்களென்றெண்ணி உபசாரஞ் செய்து, அர்க்கியத் தோடு ஆசனங் கொடுத்து இருக்கச்சொல்லி, நல்ல வார்த்தைகள் சிலநாழி வசனித்துக் கொண்டிருந்தார். பின்பு அப்பெண்கள் திடுக்கென்றெழுந் திருந்து, அந்த மகாமுனியைத் தொழுது தங்களுடைய பர்னகசாலையில் வந்து சேர்ந்தார்கள். இந்த ஸ்திரீக ளிதே ரீதியாக சிலநாள் கழிந்தபின்பு, பலா - வாழை-மாங்கனிகள் முதலிய மற்றக் கனிகளும் தேங்காய் திருகலும் அவருக்குக்

கொடுத்து புசிக்கச் சொன்னார்கள். இந்தப்பிரகாரம் சிலநாள் கழிந்தபின்பு அந்த மகாரிஷிக்குத் தங்களிடத்தில் அன்பும் விசுவாசமும் அதிகமானதை யறிந்து, இந்தத் தவவேடங்கொண்ட ஸ்திரீகள் குற்றமற்ற அந்த மகாரிஷியை நோக்கி, ஸ்வாமி! தாங்கள் தயைசெய்து அடியேங்களுடைய குச்சுக்கு எழுந் தருளவேண்டுமென்று பலவாறாக ஸ்தெளத்தியஞ் செய்து சேவித்தார்கள். உடனே முனிவர் ஸ்திரீகள் பிறகே வந்தார். இந்த ஸ்திரீகளும் மிகுந்த சந் தோஷ சாம்பிராச்சிய சாகரத்தில் மூழ்கினவர்களாய் தாங்களெண்ணிய வெண்ணமின்று ஈடேறிற்றென்று உளங்கரைந்து அதிதப்பட்டவராய் அந்த கலிக்கோட்டு மகாமுனியைத் தங்களோடுகூட அழைத்துக்கொண்டு வருகை யில் அவரெவ்வளவு தூரமென்று வினவ, இதோ விருக்கின்றதென்று தாங்கள் முன்னும் அவர் பின்னுமாக தங்கள் மனம்போலவே மருவார்த்தைகளால் நெடுந்தூரங் கால்நடையாகவே அவரை தங்கள் சுதேசத்துக்கு அழைத்து வரும்போது அந்நகரம் வந்து சேருதற்கு முன்னமே ஆகாயத்தின்கண் மேக மானது சிவனுடைய கண்டத்தைபோலக் கறுகறுத்து மின்னலோடு குமுறலும் ஆர்ப்பரித்து கொர்ஜ்ஜித்துக்கொண்டு, சளசளவென்று மழைக்கால்களை விட்டுப் பெய்தன. அதனால் நதிகள்-குளங்கள்-ஏரிகள்-மடுக்கள்-முதலியவைகள் முன் னம் அடைந்திருந்த தரித்திரம்விட்டு நீங்கி குறை தீர்ந்து, செந்நெல், கரும்பு முதலிய பயிர்களுக்கும் பாய்ந்து செழுமையோடு வளர்ந்து ஓங்கியிருப்பதையும், ஆகாயத்தின்கண் இடைவிடாமல் மேகமானதெழும்பி மழைபெய்து வருவதையு மறிந்த உரோமபாத மகாராஜன் ஆச்சரியத்தை யுடையவனுய் காமம் வெகுளி மயக்கமென்கிற மூன்றையுங் கைவிட்ட அம்முனிசிரேஷ்டர் கோவைக்கனிக்குச் சமமான வாயையும், தாமரை மலர்போன்ற திருமுகத்தையும், முத்துப்போல் பளபளப்பையுடைய தந்தங்களும், அகில் சந்தன முதலிய வாசனைத் திரவியங் களின் புகையோடமைந்த அளகபாரத்தையுடைய ஸ்திரீகளின் யுத்தி தந்திர வுபாயத்தால் இவ்விடம் வந்துவிட்டாரோ? யாது காரணம்? இவ்வித மழை பெய்து நமது தேசமுழுமையும் செழித்து, சந்தோஷத்தி லிருக்கிறதென்று ஆலோசித்தவனுய் மிகுந்த ஆனந்த சந்தோஷத்தோடு தன் சபையில் வீற் றிருந்த வேதபாராயண முனீஸ்வரர் பிராமணோத்தமர் மந்திரிகள் சாமந்தர் பிரதானியர் ரதகஜ துரகபதாதிகளாகிய நால்வகைச் சேனையும் தன்னைச் சூழத்தக்கதாய் பட்டணத்தைவிட்டு இரண்டு யோசனைதூரம் வரைக்கும் எதிர் கொண்டுபோய், அந்த ஸ்திரீகள் மத்தியில் வராநின்ற மகாரிஷியைக் கண்க ளாரத் தெரிசித்து, புஜபல பராக்கிரமசாலியாகிய உரோமபாத மகாராஜன் அவருடைய உபய சரணாரவிந்தங்களில் தீர்க்கதெண்டஞ் சமர்ப்பித்து, கண்களி லானந்தநீர் பெருகத்தக்கதாய் நின்றான். அந்த அரசனுக்கு அந்த ஸ்திரீகள் அதிபயபக்தி வினய வந்தனத்துடனே வணங்கி நின்றார்கள். அப்படித் தொழுது நிற்கின்ற ஸ்திரீகளை அரசன் நோக்கி, நீங்கள் போய் இந்த மகானு பாவராகிய முனிச்சிரேஷ்டரை இவ்விடம் கொண்டுவந்தது யான் படும் துன்பத் தினுலல்லவா? என்று அவர்களை உபசார வார்த்தைகளால் திருப்திசெய்து நிற்கின்றதையும், ரிஷிகள் முதலான சேனைகளையும் கலிக்கோட்டு மகாரிஷி பார்த்து, நம்மைக் கபட வஞ்சனையால் இவ்விடத்திற் கழைத்து வந்தனர்க ளென்றெண்ணிய மாத்திரத்தில் சுவர்க்க வாசிகளாகிய தேவேந்திரன் முதலிய

தேவர்கள் மிகுந்த பயங்கரமடைந்து, யாது காரணம்? இனி லோகாலோகங்கள் என்ன கதியாமோ? நாமென்ன செய்வோம்? நமக்கார் கதி? இதென்ன விபரீதம்? என்று பலவாறுக அச்சங்கொண்டு நடுநடுங்கி யிருக்கும்போது உரோமபாத மகாராஜன் சீக்கிரத்தில் அந்த மகாரிஷியை வணங்கி ஸ்தெளத் தியஞ்செய்து ஸ்வாமி! அடியேனை ரட்சிக்கவேண்டுமென்று தான் அடைந் திருந்த துன்பம் யாவற்றும் சொல்லி முறையிட்டுக்கொண்டு ஐயனே! கிருபா னுக்கிரகஞ் செய்தருள வேண்டுமென்று பலவாறுக வேண்டிக்கொண்டதின் பேரில், அந்த மகாமுனியாகிய கலைக்கோட்டு மகா இருடி தாம்கொண்ட கோபத்தை ஒருவாறுகக் கரையை மோதாத அலையையுடைய கடல்போல் க்ஷமித்துக்கொண்டு இவ்வரசன் யாவரையும் ரட்சிக்கும் பொருட்டு இப்படிக்கு யத்தனித்தனனென்றறிந்து, பயந்திருந்த அரசனுக்கு ஆசீர்வாதஞ் செய்து, சந்தோஷமானார். அப்போது அரசனவன் அந்தக் கலைக்கோட்டு மகா ரிஷியை ரத்னமய வலங்கிருத இரதத்தின்மீதி லேற்றிக்கொண்டு, தனது பட்டணத்தை யலங்கரித்து, அனேக முனீஸ்வரரும் பிராம்மணோத்தமரும் சூழ்ந்து நெருங்கத்தக்கதாய் நகரத்திற் பிரவேசித்துத் தனது அரண்மனைக்கு ளழைத்துப்போய், நவரத்தின கசிதமயமான அலங்காரத்தோ டமைந்த பொற் சிங்காதனத்தில் எழுந்தருளச் செய்து, அர்க்கிய முதலிய கடமைகள் யாவற் றுஞ்செய்து, அடியேன் முறையிட்டுக்கொள்ள வேண்டிய தொன்றுமில்லை யென்று கூறி, மகா அழகும் சாந்தமும் பொருந்திய பொற் பதுமையைப் போன்ற தனது புத்திரியாகிய சாந்தையை இவருக்கு வேத விதியின்படிக்குப் பாணிக்கிரகணஞ் செய்து கொடுத்தான். அந்நாட்டில் வறுமை நோய் தீரத் தக்கதாய் மேகமானது மழை பெய்துகொண்டு காலந் தப்பாமல் நடந்து வருவ தால், அந்நாட்டிலுள்ள க்ஷாமம் முதலிய துன்பங்களியாவற்றும் நீங்கி சகல சீவராசிகளும் சௌக்கியத்தோடு வாழ்வடைந்தன. அந்த மகா பட்டணத் தில் கற்பின் மிக்காளாகிய சாந்தையினுல் ஏவல் முதலிய தியாவற்று மியற்றத் தக்கதாய் அந்த மகாமுனியாகிய கலைக்கோட்டு மகா ரிஷி எழுந்தருளி யிருக் கின்றரென்று வசிஷ்டபகவான் சொன்னர்.

இதைக் கேட்டமாத்திரத்தில் ராஜாதி ராஜனுகிய தசரதச் சக்கிரவர்த்தி வசிஷ்ட பகவானுடைய திருவடித் தாமரைகளைச் சேவித்து, ஸ்வாமி! இப் பொழுது அந்த மகாத்துமாவாகிய கலைக்கோட்டு மகா ரிஷியை இவ்விடத் திற்கு அழைத்துக்கொண்டு வருகிறேனென்று தனது பிரதான மந்திரியாகிய சுமந்திரன் முதலிய அமைச்சரோடு அழகு பொருந்திய தேரின்மீதி லேறினை மாத்திரத்தில், தேவர்கள் முதலிய யாவரும் இப்பொழுதே எங்களுடைய துன் பந்தீர்ந்த" தென்று மலர்மாரியை இடைவிடாமல் சொரிய, பலபல வாத்தியங் கள் முழங்க, கடல் கோஷ்டத்தைப்போலு வேதகீதங்கள் பாட, வேதோத்தமர் கள் வாழ்த்த, மதுரம்போல வசனத்தையுடைய ஸ்திரீகள் பல்லாண்டுகள் கூற, கடலைப்போல ஸ்தோமங்கள் சூழச் சூரியனைப்போல நெடுந்தூரங் கடந்து உரோமபாத இராஜாவினுடைய திருநகரத்தைப் பார்த்தார். அம்மாத்திரத் தில் வேவுகாரர்கள் ராஜாதிராஜனுகிய தசரதச் சக்கிரவர்த்தியின் வரவையு மவருடைய கீர்த்தியையும் உரோமபாத மகாராஜனுக்குச் சொல்ல, அந்த ராஜ

னவன் மிகுந்த சந்தோஷத்தோடு வீரகண்டாமணியை யுடைய ராஜாதி ராஜனை எதிர்கொண்டு காணும் பொருட்டு ஓர் யோசனைதூரம் கடந்து வருகின்றான். இப்படி வருகின்றவனைக் கண்ட ராஜாதிராஜனாகிய தசரத சக்கிரவர்த்தி, தமது தேரிலிருந் திழிந்து, அவனைச் சேவித்துக் கொண்ட மாத்திரத்தில் அவ்வரசன் மிகுந்த வன்புடனே இவரை வாரியெடுத்து மார்புற ஆலிங்கனஞ் செய்துகொண்டு சொல்லுகிறான்: தாங்கள் இவ்வளவுதூரம் விஜயம் செய்தது யான் செய்த தவமோ? அல்ல திவ்வுலகஞ் செய்த தவமோ? அல்லது யாதோ? வெனச் சந்தோஷ வார்த்தையோடு அழகு பொருந்திய ரதத்தின்மீ தேற்றிக்கொண்டு தனது திருநகருக்கு அழைத்துக்கொண்டு போனான். இவ்வாறு சத்துருக்களுடைய தேகத்தை இரணமாகச் செய்த வேலாயுதத்தையுடைய உரோமபாத மகாராஜனென்பவன் ராஜாதிராஜனைத் தனது சிங்காரம் பொருந்திய திருமாளிகையில் இரத்தினமண்டபத்திலிருத்தி, அழகு பொருந்திய ஸ்திரீகள் பல்லாண்டு பாடச் செய்யவேண்டிய கடமைக ளியாவற்றுஞ் செய்து, விருந்துசெய்து வைத்து, தாம்பூலம், புஷ்பம், சந்தனம், ஜவ்வாது, அத்தர், புனுகு முதலிய வாசனைத் திரவியங்க ளியாவற்றும் கொடுத்து, தேவேந்திரனுக்கு நாட்டையளித்த ராஜாதி ராஜனைப் பார்த்து, தாங்கள் இவ்விடம் வந்த காரியத்தை அடியேனுக்குச் சொல்லவேண்டுமென்று கேட்டான். அப்போது நடந்த காரியங்க ளியாவற்றையும் ராஜாதிராஜனாகிய தசரதச்சக்கிரவர்த்தி உரோமபாத மகாராஜனுக்குச் சொல்ல, அவரப்படிக்கே அந்த மகா முனியை அவ்விடத்திற்கு யான் கொண்டு வந்து விடுகிறேனென்று சொல்ல, இராஜாதி ராஜனாகிய தசரத மகாராஜன் செலவு பெற்றுக்கொண்டு தமது திருநாடாகிய அயோத்தியில் வந்து சேர்ந்தார். பின்பு உரோமபாத மகாராஜன் அந்தக் கலைக்கோட்டு மகா இருடியினுடைய திருமாளிகைக்குள் பிரவேசித்து, அவருடைய இரண்டு சரணாரவிந்தங்களையும் தன்னுடைய திருமுடியி லணிந்துகொள்ள, அவர் நீரிவ்விடத்திற்கு வரவேண்டிய தென்னவென்று கேட்டதற்கு, "அடியேனுக் கொருவரம் தேவரீர் கொடுக்கவேணும்," ஸ்வாமி! யென, அவர் அதென்ன வென்று கேட்க, அரசன் சொல்லத் தொடங்கியதாவது: ஒரு புருவுக்காகத் தனது சதையைக் கிழித்துத் தராசில் வைத்துக் கொடுத்த பெருங் கீர்த்தியையுடைய சிபிச்சக்கிரவர்த்தி வம்சத்தில் பிறந்தவர் தருமசிந்தை யுடையவர்; தேவர்களுக்கு வருத்தத்தைத் தரும் ராட்சதருடைய பலத்தைப் புசித்த வேலாயுதத்தை யுடையவர்; தசரத னென்கிற திருநாமதேயத்தை யுடையவர். இவ்வளவு கீர்த்தியோடு செங்கோல் செலுத்தி அரசுசெய்யும் இராஜாதி ராஜனுடைய நகராகிய அயோத்தி வரையில் தாங்கள் விஜயஞ்செய்து இவ்விடம் எழுந்தருள வேணுமென்று சொன்னபோது, 'அப்படிக்கே அவ்வரங் கொடுத்தோம்; இரதங் கொண்டு வாரும்' என்று சொன்னமாத்திரத்தில், அந்த மகா இருடியைத் தொழுது, ராஜாதிராஜனுடைய அலுவல் தீர்ந்து சிறப்படைந்தனனென்று இரதத்தைக் கொண்டுவந்து அதனிலிருந்த கலைக்கியானியாகிய முனியையும், அவர் பத்தினியையும், எழுந்தருளும்படி கேட்டனன். அப்படியே அனேக முனிகளும் பிராமணோத்தமரும் சூழத்தக்கதாய் வேத சரூபியாகிய கலைக்கோட்டு மகா இருடியும் பத்தினியும் ரதாரூடராகி மார்க்கத்தைத் தொடர, தரும தேவதையும் தேவர்

களும் பொல்லாங்காகிய வினையைத் தொலைக்க சத்ய தேவதை வந்து பிறக்க அருள் செய்வாரென் றெண்ணி, ஆகாயத்தின்கண் துந்துமி முழங்க, பரிசுத்த மாகிய புஷ்பமாரியைப் பொழிந்து மிகவும் களித்தனர். அவ்வழியிலிருந்த தூதுவர் அயோத்திக்குப்போய் இராஜாதி ராஜனாகிய தசரதச் சக்கிரவர்த்தி யின்முன் அந்தக் கலைக்கோட்டு மகாரிஷி எழுந்தருளி வருவதைச் சொன்ன போது அந்த இராஜாதிராஜன் ஆசையென்கிற அளவற்ற கடலில் மூழ்கின வனுய்ச் சீக்கிரத்தி லெழுந்திருந்து இரதமேறினர். அம்மாத்திரத்தில் தீவினை யானது வேரோடற்றதென்று மலர்மழை பொழிந்தது. பல வாத்தியத்தோடு முரசு சப்தித்தது. என் மனக்கிலேசம் நீங்கிற்றென்று இராஜாதி ராஜனாகிய தசரதச் சக்கிரவர்த்தி மூன்று யோசனை தூரத்தில் தவரூபமாயும், மரவுரியை யுடையவராய், மான்ரூபம் போன்ற மூர்த்தியாயும், கமண்டலம் குடை யோக தண்டோடு பிரகாசித்துவரும் அந்த மகா முனியைக் கண்களாரத் தரிசித்து, இரதத்தை விட்டிழிந்து, இரண்டு சரணரவிந்தங்களில் சேவிக்க அவர்க்கு அம் முனி ஆசீர்வாதம் செய்தார். பக்கத்திலிருந்த முனிவரும் ஆசி கூறினர். மேகத்தைப்போலக் கொடுக்கும் கரத்தினால் உரோமபாத மகாராசன் தொழுது நிருந்த மகாரிஷியையும் அவர் பத்தினியையும் கொணர்ந்தனனென்று சொல்ல, அந்த ராசாதிராசனாகிய தசரதச் சக்கிரவர்த்தி அந்தக் கலைக்கோட்டு மகாரிஷியோடு கமலம்போல முகத்தினையுடைய ஸ்திரீகள் பல்லாண்டிசைக்கத் தக்கதாய்த் தனது அயோத்திமா நகரத்தில் ஓர் க்ஷணத்தில் வந்துசேர, பொல்லாங்காகிய தொழிலில் பொருந்தித் திருடர்போலுழலும் அசட்டர்களாகிய பஞ்சேந்திரியங்களை வென்ற வசிஷ்டபகவானும் தேவரூபியாகிய கலைக்கோட்டு மகாரிஷியும் அந்த மகாராசாவினுடைய சபை பிரகாசிக்க எழுந்தருளி யிருந்தார்கள்.

திருவவதாரம்

அப்போது, தசரதச் சக்கிரவர்த்தியானவர், வசிஷ்டபகவானை நோக்கி, ஸ்வாமி! தங்களுடைய கிருபா அநுக்கிரகத்தால் மகாரிஷி வந்து சேர்ந்தார். தங்களுடைய திருவடியை அர்ச்சித்த எனக்கு யாது குறைவு? அடியேன் தவ முடையவனனே னென்பதற்கு யாதொரு சந்தேகமு மில்லையே யென்று சொல்லிக் கைகூப்பிக்கொண்டிருக்கும் இராசாதிராசனை, கலைக்கோட்டு மகா முனி நோக்கி, இந்த வசிஷ்டர் உம்மிடத்திலேயே சர்வ காலமும் குடியாயிருக் கச்சே உமக்கு என்ன குறைவிருக்கிறது? இராசாக்களிலே உமக்குச் சமான மான பேர் யாரிருக்கிறார்கள்? என்று மிகுந்த அன்புடனே சொன்னர். அதற்குத் தசரத மகாராசா சகலமும் தங்களுடைய ஆசீர்வாத மகிமையென்று பின்னையு மொரு வார்த்தை சொல்லுகிறார்: சுவாமி! அனேக காலம் யாதொரு துன்பமில்லாமல், இராச்சியபாரஞ்செய்து கொண்டு வந்தேன். இதுவரைக்கும் புத்திரசந்தான மில்லாதபடியால், எனக்குப் பிற்பாடு, இந்த ராச்சியபாரஞ் செய்கிறதற்கு தகுதியான புத்திராள் உண்டாகக் கிருபைசெய்ய வேண்டு மென்று ராசா சொல்ல, அதற்கு முனிவர், ஓ அரசனே! நீர் வருத்தப்பட வேண்டாம். இவ்வுலக மொன்றல்ல, பதினான்கு லோகங்களையும் ஆளத்தக்க

பிள்ளைகள் உமக்கு உண்டாகும். இத்தினமே நீர் யாகத்துக்கு யத்தனம் செய்யு மென்று சொன்னர். அந்த க்ஷணமே, அரசன், யாகத்துக்கு வேண்டிய வஸ்துக்கள் யாவற்றுஞ் சேகரித்துக்கொண்டு, யாகசாலையுங் கட்டி, யாகத்துக்கு ஆரம்பித்தனர். உடனே, அனேக ரிஷிகளும் பிராமணோத்தமரும் சூழ்ந்திருக்க சிருங்கமகா ரிஷியும் வசிஷ்டமகாமுனியும் இருவரு மிருந்துகொண்டு வேதநெறி யின்படிக்குக் காருகபத்தியம் - தக்ஷிணக்கினி - ஆகவனீயம் என்கிற மூன்று அக்கினியும் வளர்த்தி, ஆகுதிகள் கொடுத்து, பன்னிரண்டு மாதம் இந்தப்படி யாகஞ்செய்து வந்தார்கள். தேவதுந்துமி முழங்கிற்று. ஆகாயத்திலே தேவர்க ளெல்லோருங்கூடி நிறைந்து, புஷ்பமாரி பொழிந்தார்கள். அந்தச் சமயத்திலே, புத்திரர் உண்டாகிற மந்திரத்தைச் சொல்லி, மகா இருடி ஆகுதி கொடுத்தார். அப்பொழுது அந்த ஓமகுண்டத்திலிருந்து சிவந்த மயிரும் அக்கினிக் கண்ணு மாகக் கையிலே யொரு பொற்றூம்பாளத்தில் அமிர்தத்துக்குச் சமானமான திவ்வியான்னம் வைத்துக்கொண்டு ஓர் பூதம் புறப்பட்டு, அந்த அன்னத்தைப் பூமியின்கண் வைத்து, மறுபடியும் அந்த வோமகுண்டத்திற் புகுந்து மறைந்தது. அப்போது மகா இருடியானவர் அந்தச் சாதத்தை எடுத்து, தசரத மகாராசன் கையில் கொடுத்து, உம்முடைய பட்டபுஸ்திரீகளுக்குக் கிரமமாகக் கொடு மென்று ஆக்யாபித்தார். அப்போது, இராசா, அதிக சந்தோஷத்துடனே அதை வாங்கிக்கொண்டு, சங்கத்தொனி சப்திக்க, முதல் ஸ்திரீயாகிய கௌசலை தேவியின் கரத்தில் ஒரு பாகமும், கைகேசிக்கு ஒரு பாகமும், இளையவளாகிய சுமித்திரைக்கு ஒரு பாகமுங் கொடுத்தார். பின்னுமத் தட்டிலிருந்த மற்ற மிகுதியை எல்லாஞ் சேர்த்து, அந்தச் சுமித்திரைக்கே கொடுத்தார். அவர் களும் அதிக சந்தோஷத்தோடு வாங்கிப் புசித்தார்கள். அப்பால், பூரணகுதி கொடுத்தபின், யாவரும் ஸ்துதிக்கத்தக்கதாய், இராஜாவானவர் எழுந்திருந்து, சரயுநதியில் அபிவிரத தீர்த்தமாடி, பிராமணோத்தமருக்குச் சோடச மகா தானங்கொடுத்து, சபைக்கு வந்து, இராஜராஜாக்களுக்கு வஸ்திரம், ஆபரணம், இரதகஜ துரகங்கள், முதலிய வெகுமதி செய்து அனுப்பினர். பின்பு, அனேக வரசர்கள் சூழத்தக்கதாய்ச் சபையில் எழுந்தருளியிருக்கும் பிரமதேவனுக்குச் சமமாகிய வசிஷ்ட முனிவருடைய திருவடிகளிற் சேவித்து, அப்பிரகாரமே கலிக்கோட்டு மகாயிருடியையுஞ் சேவித்துக் கொண்டு அனேகமாய் ஸ்தெளத் தியஞ் செய்து, சுவாமி! "அடியேன் பிழைத்தேன். இனியான் பெறுவதியாது?" "ஐயனே! உமது கிருபாநுக்கிரகத்தால் யானடைந்த துன்பத்தை ஒழித்தே" னென்று சொன்ன மாத்திரத்தில், அந்த மகாயிருடி சந்தோஷித்து மிகுந்த ஆனந்தத்தினால் அன்புடனே ஆசீர்வாதஞ் செய்து தாமு மவரது பத்தினியுந் தேரேறிக்கொண்டு, வந்த மாதவர்களோடு ஆசீர்மத்தில் போய்ச் சேர்ந்தார். தசரதமகாராஜாவும் சிங்காசனத்திலிருந்து ராச்சியபாரஞ் செய்துகொண்டு வந்தார். இப்படிக்கிருக்கிற காலத்தில், கௌசலை கைகேசி சுமித்திரை என் கிற மூன்று பேருக்கும் கருவுண்டாகி, கர்ப்பச் சின்னங்களோடு பொருந்தி யிருந்தார்கள். பத்துமாதமும் ஆனவுடனே, சித்திரைமாதம் நவமி புனர்பூச நக்ஷத்திரம் கர்க்கடகராசி இப்பேர்ப்பட்ட சுபலக்கினத்தில், தேவர் சித்தர் இயக்கர் விஞ்சையர் முதலாகிய காந்தருவரும் பெண்களோடு பலவாறாக அதிக சந்தோஷத்துடனே ஆனந்த நிர்த்தனமாட, பூர்வத்தில் அகிலாண்டகோடி

பிரமாண்டங்களை யெல்லாம் தமது நாபிக் கமலத்திலுல் பெற்றருளிய நீலமேக சாமள ரூபனுகிய கர்த்தவியத்தைக் கௌசலை நாயகி பெற்றருள். பூச நக்ஷத்திரம் மீனராசியில் தேவர்கள் சந்தோஷிக்கக் கைகேசி ஒரு புத்திரனைப் பெற்றருள். ஆயிலிய நக்ஷத்திரம் கர்க்கடக ராசியில் தேவேந்திரன் முதலான தேவர்கள் சந்தோஷிக்க சுமித்திரை ஒரு புத்திரனைப் பெற்றருள். பின்னையும், சுமித்திரை மகநக்ஷத்திரத்தில் சிங்கராசியில் சகல சீவராசிகளும் சந்தோஷிக்கத் தக்கதாக ஒரு புத்திரனைப் பெற்றருள். இப்படி நாலு புத்திரரும் பிறக்கவே தேவலோகத்திலுள்ள அரம்பையர்களாடினர்கள். கின்னரர்கள் பற்பல வாத்தியங்களை வாசித்தார்கள். தேவர்களெல்லாம் இராட்சதரிறந்தார்களென்று சந்தோஷப் பெருக்கினுல் ஓடியோடி யாடினர்கள். இவ்விடத்தில் நாதிகள் மகாராஜா சமுகத்திற்குப் போய் புத்திரர்கள் பிறந்த சந்தோஷ வார்த்தைகளைச் சொல்லி, தங்கள் சரீரம் தங்களுக்குத் தோன்றுமல் ஆனந்தக் கூத்தாடினர்கள். அனேகம் பிராமணர்கூடி ஜாதகங்கள் பார்த்து, கிரகங்களிருக்கிற கிரமங்களறிந்து, மஹா லோகோத்தமமான சாதகங்களென்று சொன்னர்கள். சக்கிரவர்த்தியும் அதிக சந்தோஷத்துடனே அனேக மேள வாத்தியங்கள் முழங்க மிகுந்த சம்பிரம அலங்காரத்துடனே வசிஷ்ட மகாமுனியோடு சரயு நதிக்குப்போய் ஸ்நானஞ் செய்து, விதை முதலிய பொருள்களோடு அனேக தானதருமங்கள் செய்து, புத்திரர்களுடைய திருமுகங்களைத் தரிசித்துச் சபைக்கு வந்து, பொக்கிஷக் களஞ்சியத்தின் கதவைத் திறந்துவிட்டு, யாசகர்கள் முதலிய சகலமானபேரும் அவரவர்கட்கு வேண்டிய மட்டும் சந்தோஷ திருப்தியடைய வாரிக்கொண்டு போங்களென்று சொல்லி யானையின்பேரில் பேரிகை வைத்து அடிக்கச் சொல்லி ஆக்கியாபித்தார். அந்தப்படி பேரிகை முழக்கினர்கள். அந்த முழக்கங் கேட்ட பட்டணத்திலுள்ள ஜனங்கள் யாவரும் தங்கள் தங்கள் வீட்டிலே புத்திரோற்சவ சந்தோஷத்தைப் பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாகி, புத்திரர்கள் பிறந்த சேதி சொன்னபேருக்கெல்லாம் சுவர்னம் - ஆபரணம் - வஸ்திர முதலானதுகள் கொடுத்து, சந்தனம் - புஷ்பம் - புனுகு - சவ்வாது - கதம்பம் - கஸ்தூரி - சம்பங்கித் தயிலங்கள் முதலான பரிமளத் திரவியங்களை ஒருத்தருக் கொருத்தர் மேலே வீசி எறிந்துகொண்டு, தங்கள் சரீர ஸமார்க்கம் தங்களுக்குத் தோற்றாத பரவச ஆனந்தமானர்கள். இதை யோசிக்கில் அவரவர்கள் மனது சாட்சாத்காரப் பிரமமென்று அறிந்தது போலவுமிருந்தது. தேவாலயங்களுக்குத் திருவிழா திருப்பணிகள் செய்வித்துச் சேர்ட்ச உபசாரங்களும் நடப்பித்தார். மகாராஜாவின் தரிசனத்துக்கு வந்திருந்த தேசதேச ராஜாக்களுக்கு யானை - குதிரை - வஸ்திரம் - பூஷணம் முதலான வெகுமதிகள் கொடுத்து, அவரவர்கள் தேசத்துக்கு அனுப்பி வைத்தார். வேத சாஸ்திர சம்பன்னரா யிருக்கிற பிராமணோத்தமருக்கு அனேக அக்கிராங்களோடு, சுவர்னதானம்-கோதானம்-பூதானங்கள் செய்தார். இவ்வாறுகப் பன்னிரண்டு நாள் அதிக சந்துஷ்டியாய் அனேக சம்பிரமானந்தத்துடனே வேறொரு சிந்தையுமில்லாமல் ஆனந்தபரவசராய் சகல ஜனங்களும் மகிழ்ந்திருந்தார்கள். அந்தப் பனிரண்டாநாள், வசிஷ்டமகாமுனி, பிள்ளைகளுக்கு நாமகரணஞ் செய்கிறதற்கு ஆரம்பித்து வேதசாஸ்திர விதிப்படிக்குச் செய்யவேண்டிய கிரமங்களெல்லாஞ் செய்து, (பூர்வத்தில் முதலியானது கஜேந்திரனென்கிற

யானையின் காலைக் கவ்விப் பிடிக்க அகப்பட்டுக்கொண்டு அதனல் மெலிந்து அனேககாலம், பிரயாசைப்பட்டு, கடைசியில் யானையானது வேறு திக்கில்லை யென்றறிந்து, இந்த விபத்தைத் தீர்க்கவேணும், சேஷசயனே! அனுதரட்சகா! ஆபத்பாந்தவா! அடியார்க்கெளியா! அன்பர்க்கன்பா! ஆதிமூலமே! என்று கூப்பிட, அந்த க்ஷணமே வந்து முதலையைச் சங்காரஞ்செய்து அந்த யானையி னுடைய ஆபத்தைத் தீர்த்து ரட்சித்த மெய்ப்பொருளாகிய) கௌசல்யா தேவி யின் புத்திரனுக்கு, 'இராம' னென்று பெயரிட்டார். பின்பு சகலவேத சாஸ்திரங்களையும் கரதலாகமலமாகத் தெரிந்திருக்கிற அந்த வஸ்துவினுடைய சக்கிராயுதம் வந்து அவதரித்திருக்கிற கைகேசியின் பிள்ளைக்குப் 'பரத' னென்று பெயரிட்டார். வஞ்சகராகிய ராட்சதர்களைச் சங்கரித்துத் தேவர் களை ரட்சித்துப் பூமிபாரத்தைத் தீர்க்கிற நிமித்தமாக அவ்வஸ்துவினுடைய ஆதிசேஷன் வந்து அவதரித்திருக்கிற சுமித்திரையின் முதற் புத்திரனுக்கு, 'இலட்சுமண' னென்று பெயரிட்டார். உலோக விரோதிகளான சகல பிராணிகளையுஞ் சங்கரித்துத் தருமத்தை நிலைநாட்டும்பொருட்டு வெண்டாமரை போலத் திருமேனியையுடைய அவ் வஸ்துவின் பாஞ்ச சன்னியம் வந்து பிறந் திருக்கிற சுமித்திரையினுடைய இரண்டாவது பிள்ளைக்குச் 'சத்துருக்க' னென்று பெயரிட்டார். இந் நான்கு புத்திரர்களில் செந்தாமரைக் கமலம் போலவும் நீலோற்பல புஷ்பம் போலவும் திருமேனியையுடைய பிரதிமெய் போல அழகு பொருந்திய ஒப்பற்ற ஸ்ரீராமனைத் தசரதமகாராஜா தன்னு டைய பிராணனும் அறிவும் இவனே யல்லது வேறில்லை யென்று தன்னுடைய மனதிலே யெண்ணிக்கொண்டு அதிக சந்தோஷத்துடனே யிருந்தார். பின்பு புத்திரர் நான்குபேரும் தவழ்ந்து விளையாடிக்கொண்டு வருவதையும் மழலை வார்த்தை, தளர்நடை முதலிய யாவற்றையும் கண்களிக்கப் பார்த்து சந்தோஷ மாய் அன்னப்பிராசனம் - சவுளம் - உபநயனம் முதலானதுஞ் செய்துவைக்க, நால்வரும் நான்கு வேதம்போல வளர்ந்து வந்தார்கள். வசிஷ்டமகா முனியி னிடத்தில் வித்தை யாரம்பமாய்ச் சகல கலைக்கியானமும் அறிந்தார்கள். வில் வித்தை முதலான ஆயுத வித்தைகளும், யானை, குதிரை, ரதமுதலான பரீட் சாதி வித்தைகளுங் கற்று, பூமியினுடைய துயரங்களெல்லாம் தீர வளர்ந்தார் கள். இருடிகளுந் தேவர்களும் அந்தப் பட்டணத்தி லுண்டாகிய மகாஜனங் களும் நம்முடைய வினைகளெல்லாந் தீர்ந்து மோட்ச சாம்பிராச்சியத்தைக் கொடுக்கிற வஸ்து, இவரென்று ஒரு க்ஷணப்போதும் பிரியாமல் சார்வதா தரி சனம்செய்து கொண்டிருப்பார்கள். ஸ்ரீராமனும், லட்சுமணனும் கூடிக் கொண்டு பிரியாமல், சிங்காரத் தோட்டங்களிலே போய் விளையாடி வருவார் கள். பரதனும் சத்துருக்கனும் கூடிக்கொண்டு பிரியாமல் அந்த ராம லட்சு மணரைப்போலவே விளையாடிக்கொண்டிருப்பார்கள். அந்தப் பட்டணத்தி லிருக்கிற ஜனங்களெல்லாம் கௌசலையும் தசரதச் சக்கிரவர்த்தியும் போலவே ஸ்ரீ ராமனிடத்தில் மிகுந்த அன்பா யிருந்தார்கள். இவர்களும் சிங்காரச் சோலை களுக்குப்போய் வரும்போது காண்கின்ற அவ்வூர் ஜனங்களைப் பார்த்து: "நீங் களும் உங்களுடைய புத்திரரும் சுகமே இருக்கிறீர்களா?" வென்று கேட்பர். அவர்களும் "ஐயா! உம்மை மகாராஜாவாகப் பெற்றிருக்கின்ற எங்களுக்கு என்னகுறை விருக்கின்றது? சகலமானபேரும் உம்முடைய கிருபையினலே

சுகமாயிருக்கிறோம்" என்று சொல்லுவார்கள். இப்படிப் பட்டணத்து ஜனங்க ளெல்லாம் சந்தோஷிக்க தம்பிமார் மூவரும் நிழல்போல் சூழ்ந்திருக்க, மும் மூர்த்திகளுக்கு முதல்வனான ஸ்ரீராமனிருந்தார். இராஜாதிராஜனாகிய தசரத மகாராஜா தனது செங்கோல் செலுத்தி ஆசாரவாயிலில் இடைவிடால் பேரிகை சப்திக்க ஒப்பற்ற குடையை யுடையவராய் ஆண்டுகொண்டு சந்தோஷமென்கிற சாகரத்தில் மூழ்கியிருந்தார்.

கையடைப் படலம்

இப்பெரிய சந்தோஷத்தி லிருக்கிற நாள்களில் ஒருநாள் நவரத்தின கசிதமான சிங்காதனத்தையுடைய சபையில் அனேக அலங்காரத்தோடு மகா ராஜா கொலுவீற் றிருந்தார். அப்போது ஆகாயத்தில் திரியானின்ற தேவ லோகத்துச் சாரணர் இதைத் தெய்வலோகமென் றெண்ணி, சமீபத்தில் நெருங்கிப் பார்த்து, இராஜாவுக்கு ஆயிரங்கண் ணில்லாததினால் தேவேந்திர னல்லவென்று ஐயந்தீர்ந்து போய்விட்டார்கள். இவ்வளவு இந்திரபோக பாக் கியத்துடனே யிருக்கின்ற தசரத மகாராஜாவின் சபைக்குச் சகல சீவராசி களாயும், உலகங்களாயும் பிரமதேவன் முதலிய தேவர்களாயும் இதோ சிருஷ் டிக்கிறேனென்று தொடங்கிய கௌசிகராகிய விஸ்வாமித்திரர், அச்சபைக்கு எழுந்தளினார். அப்போது இராஜாதிராஜனாகிய தசரதமகாராசன் தன் மார்பி லணிந்திரானின்ற ரத்னபரணங்கள் சூரியனுடைய பிரகாசம்போல் ஜொலிக் கப் பிரமதேவன் வரக்கண்ட தேவேந்திரனைப்போல் எழுந்திருந்து, அவருடைய உபய சரணாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, இரத்தின சிங்காசனத்தில் ஏறச்செய்து, அர்க்கிய முதலிய கடமைகளனைத்து மிகுந்த உப சாரத்தோடு செய்து, இதனைச் சொல்லுகிறார்: சுவாமி! இன்றையதினம் என்னுடைய வினை தீர்ந்ததென்று சொல்லி, ஐயனே! தேவரீர் பிரத் யட்சமானது இப் பூமிசெய்த புண்ணியமோ? அல்லது அடியேன் செய்த தவமோ? அல்லது இந் நகரில் யான் சேவிக்கத்தக்கதாய் என் முன் னோர்கள் பூர்வத்தில் செய்த தவமோ? என்று பலவாறுகச் சந்தோஷத் துடனே சொல்ல, அதற்கு விஸ்வாமித்திர மகாரிஷி சொல்லுகிறார்; இரா ஜாதி ராஜனாகிய தசரதச் சக்கிரவர்த்தியே! என்னைப்போ லொத்த ரிஷிக ளுக்கும், தேவர்களுக்கும் ஒரு துன்பம் நேரிடுமானால், கைலாயமும் திருப்பாற் கடலும் சத்தியலோகமும் அமராபதியும் இந்த அயோத்திமா நகரமும் அல்லா மல் சொல்லிக்கொள்ளுகிறதற்கு வேறோர் இடமுண்டோ? பூர்வத்தில், தேவேந்திரன் அசுரருக்குத் தோற்றுத் தன்னுடைய ராஜரீக மிழந்து உம் மிடத்தில் சொல்லிக்கொள்ள, அப்போது நீர் அந்த அசுரரையும் அவர்களுக் குத் தலைவனாகிய சம்பரனையும் சங்காரித்து, அத் தேவேந்திரனுக்குப் பட்டாபி ஷேகஞ் செய்துவைத்த அரசரல்லவா இப்போது தேவேந்திரன் ஆண்டு கொண்டு வருகின்றது? அப்பேர்க்கொத்த சாமர்த்தியத்தையுடைய உமக்குச் சமானமான இராஜாக்கள் இந்தப் பதினான்கு லோகத்திலேயும் உண்டோ? என்று மிகுந்த சந்தோஷத்துடன் சொல்ல, அது கேட்டு இராஜாதி ராஜன் மிகவும் களிப்படைந்து, இதுவரையில் யான் இராச்சியபாரஞ் செய்துகொண்டு

வந்தபலன் இன்றைக்குச் சித்தியாயிற்று. இனி நான் நடந்துகொள்ள வேண்டிய காரணம் தேவரீர் ஆக்ஞாபித்தால் அந்தப்படி நடந்து கொள்ளுகிறேனென்று சொன்னார். அதற்கு மகரிஷியானவர் சொல்லுகிறார்: கேளும் மகாராஜாவே! தருக்கள் சூழ்ந்த ஆரண்ணியத்தில் யான் செய்யும் தவமுதலிய யாகத்துக்கும் மற்றோர்கள் தவத்துக்கும் இடையூறு செய்யும் காமக்குரோதாதிகள் இடையில் வந்து விகாதஞ்செய்வதுபோல இராட்சதர் விகல்பஞ்செய்துக் கொண்டு வருகிறார்கள். அப்படிக்கு நேரிடாமல் என் யாகத்தைக் காத்து நிறைவேற்றுகிறதற்கு உம்முடைய நான்கு பிள்ளைகளில் முதல்வனுகிய நீலமேக சொரூபனை எனக்குக் கொடுக்கவேண்டும் என்று உயிரைக் கேட்கின்ற பொல்லாத யமனைப்போல் கேட்டார். அக் கேள்வியானது மார்பிலுருவும் வேல்பட்ட இரணக்குழியில் அக்கினி நுழைந்தா லெப்படியோ அப்படிப்போல சக்கிரவர்த்தியின் இரு செவியில் நுழைந்த மாத்திரத்தில், சஞ்சலமானது பிடித்திழுக்கவும், பிராணனுனது ஊசலாடவும், கண்ணில்லாதவன் சிலநாள் கண்ணுண்டாயிருந்தும் பின்பு அதை யிழந்து எப்படித் துன்பப்படுவானே அப்படித் துன்பப்பட்டு, அத் துன்பத்தை ஒருவாறுகத் தேற்றிக்கொண்டு, சுவாமி! அவன் அறியாதவன். இன்னம் ஆயுதப் பரீட்சைகளில் நன்றாய்ப் பழகாதவன். காரியம் எதுவானாலும் யான் வருகிறேன். அந்த ராட்சதற்குத் துணையாய் சிவ பிரமாதி தேவேந்திரன் வந்தாலும் அவர்களையெல்லாம் தும்சப்படுத்தி, உம்முடைய யாகத்துக்கு யாதொரு விக்கினமும் வராமல் காக்கிறேன். சுவாமி! எழுந்தருளுமென்று தசரதச் சக்கிரவர்த்தி சொல்ல, அதுகேட்ட மாத்திரத்தில், விஸ்வாமித்திர மகரிஷி அதிக கோபத்தோ டெழுந்தார். அது கண்டு தேவர்கள் பயந்து, இன்றைக்கு ஊழிகாலமென்று சந்தேகித்து நடுங்கினர்கள். சூரியனும் ஒளித்துக்கொண்டான். சராசரங்களுக்கெல்லாம் அதிக பயமுண்டாயிற்று. விஸ்வாமித்திரருடைய கோபாக்கினியினுலே புருவங்கள் நெற்றியிலேறின; நகைப்பும் வந்தது; கண்கள் சிவந்தன; திசைகளெல்லாம் இருளடைந்தன. இவ்வளவு கோபங்கொண்ட விஸ்வாமித்திரருடைய எண்ணந் தெரிந்த வசிஷ்டமகாமுனி, அவரைப் பொறுத்துக்கொள்ளுமென்று தணிவுகள் சொல்லி, இராஜாவைப் பார்த்து, ஓ மகாராஜனே! உமது புத்திரனுக்கு உறுத்தலாகிய உறுதிவருங் காலத்தை மறுக்கின்றீரோ? மழையினுல் பெருகும் வெள்ளங்கள் யாவற்றும் ஒழுங்காகச் சமுத்திரத்தினிடமாகச் சேர்வதுபோல், உமது பிள்ளை அளவில்லாத வித்தையை யடைகிறதற்குச் சம்பவித்த காலத்தை மறுக்காதீரென்று சொன்ன குருவினுடைய வாக்கியத்தை மகாராஜா சிரமேல் தாங்கினவராய், இலட்சுமிபதியாகிய ஸ்ரீராமனை அழைத்து வாருங்களென்று ஆக்ஞாபித்தார். தட்சணமே அறிவில் மிகுந்த ஸ்ரீராமனும் அருகில் வந்து சேர்ந்தார். வந்த ஸ்ரீராமனையும், தம்பி லட்சுமணனையும் விஸ்வாமித்திரருக்குக் காட்டி, சுவாமி! இவர்கட்குத் தாயுந்தந்தையும் நீரே; தந்தேன்; உமக்கு யுக்தமானபடி செய்துகொள்ளுமென்று சொன்னார். அப்போது விஸ்வாமித்திரர் கோபந்தணிந்து, அதிக சந்தோஷத்தோடநேக ஆசீர்வாதஞ்செய்து ஸ்ரீராம லட்சுமணனை அழைத்துக்கொண்டு இனி யாகத்தை முடித்து நிறைவேற்றுவோமென்று சபையை விட்டுப் புறப்பட்டார். உலகத்தைத் தாங்கின ஸ்ரீராமன் அரையில் வாள் விசித்துக் கட்டிக்கொண்டு, அம்புராத்துணியும் தரித்துக்

கொண்டு, தோளில் ஒரு வில்லையும் தாங்கிக்கொண்டார். தம்பியும் அதேபோல யாக ஆயுதபாணியாகிப் பின்வர, விஸ்வாமித்திர மகாரிஷியின்பின் நடந்து அயோத்தியாபுரியை விட்டு நீங்கி மிகுந்த சிறப்போடோங்கிய சரயுநதி யென்கிற ஆற்றிலிறங்கி நடக்கும்போது, அநேக சிங்கார வலங்காரத்தோடு நெருங்கியிருக்கும் சாலைகள் - நந்தவனங்கள் - கழனிகள் முதலானதுகளையும் பார்த்துக் கொண்டே அவ்வாற்றின்கரை யேறினார்கள். சூரியனும் அஸ்தகிரி யென்கிற கரையேறினன். அப்பால், வேதகோஷ்டமும் யாகாதிகள் செய்யும் புகைகளும் சூழ்ந்திருக்கிற ஒரு திவ்வியமான சோலையைக்கண்டு, யாவர்க்கு மேலான ஸ்ரீராமன், விஸ்வாமித்திரரைப் பார்த்து, சுவாமி! இந்தச் சோலை யாது? இதனுடைய விர்த்தாந்தமென்ன; அடியேனுக்கனுக்கிரகஞ் செய்யவேண்டும் என்று கேட்க, விஸ்வாமித்திரர் சொல்லத் தொடங்கினர்.

தாடகை வதைப் படலம்

கேளும் ஸ்ரீராமா! பூர்வத்திலே சந்திரசேகரனை பரமசிவன் இவ்விடத்தில் யோகஞ் செய்துகொண்டிருந்தார். அப்போது தேவேந்திரனுல் மன்மதன் இவ்விடத்தினின்று அந்தப் பரமசிவன் பேரில் தன்னுடைய கருப்பு வில்லில் பஞ்சபாணங்களைத் தொடுத்துப் பிரயோகஞ் செய்தான். அப்பாணங்கள் அவர் பேரில் பட்டமாத்திரத்தில் கோபாதீதராய் தம்முடைய நெற்றிக்கண்ணினுல் எரிக்க, பூளைப்புஷ்பம் போலாயினன். ஆதலால் அப்போது மன்மதனுக்கு அன்றுமுதல் 'அனங்கனென்று' ஒரு நாமதேயமும் கிடைத்தது. அவனுடைய அங்கம் இவ்விடத்தில் அழிந்தபடியால் இதற்கு அங்கதேசமென்றொரு பேருமாயிற்று. அக்காரணத்தினுலேயே இதற்குக் காமனுச்சிரமமென்றும் பெயர். ஓ வேதசுரூபியே! ஆன்மாக்களுக்கு மனதின்கண் பொருந்திய ஆசை முதலியவற்றினுல் விளையும் பிறவியின் வேரைப் பசையறப் போக்கி மோட்ச சாம்பிராச்சியத்தை யடைய பரிசுத்தமான பேரறிவினைச் செலுத்துதற்குரிய கடவுளாகிய பரமசிவனை இங்கிருந்து யோகஞ் செய்தாரென்றுல், இதனுடைய பரிசுத்தத்தை அளவிட்டுச் சொல்லக்கூடுமானதா? என்று சொன்னமாத்திரத்தில் ஸ்ரீராமனும் அதிசயித்துச் சந்தோஷித்து அவ்விடத்திலெதிர்வராநின்ற தபசிகளோடு அன்றைக் கங்கிருந்து, மற்றுநாள் சூரியோதயத்திலெழுந்திருந்து கடுமையான ஒருபாலை நிலத்திற்கு வந்தார்கள். அந்நிலம் எப்பேர்க்கொத்ததெனில்: சூரியன் அந்நிலத்திலுண்டாகிய ஈரப்பசையைக் கிரகிக்கும் பொருட்டு விருதுகொண்டிருக்கிறப்போல் சார்வதாவேணிலே யல்லாமல் வேறொரு பருவமில்லாமையால், சூரியன் அந்நிலப்பசையை நினைப்பானுகில் உள்ளம் வேகும் கண்ணினுற் பார்ப்பானுகில் கண்களும் வெந்துபோகும். அந்நிலத்தின் கொடிதாகிய வெப்பத்தைச் சொல்லவேண்டுமானுல் சொல்லுகின்றநாவும் இருளும், அண்டகடாகத்தின் முகடும், வெயிலும், மேகமும், மின்னலும், இடியும் வெந்துபோகுமானுல் வேகாதது யாது? பாவிகளுடைய வஞ்சனையினுலே ஓர் தருமபுருஷன் அகப்பட்டுக்கொண்டு அவமானப்பட்டால் அவனுடைய மனது எப்படிக்கு ஆறுமல் வெந்துகொண்டிருக்குமோ அப்படிக் காறுத வெப்பத்தை யுடைத்தா யிருக்கும். அதில் பேய்போலத் தலையை விரித்துக்

கொண் டிருக்கும் பெருங்கள்ளியின் வேர் பிளந்து சிந்திக் கிடக்கவும், அகில் களும், தழையில்லாத மூங்கிலும் வெடித்து உதிரும்படியான முத்துக்களும் விஷத்தையுடைய பாம்பின்வாய் கிழிந்து கக்கா நின்ற ரத்னமும் பொருந்தி யிருக்கும் அந்த நிலத்தில் நீடித்திருக்கக் கூடாமையால் மற்றொரு நிலத்தின் வஸ்துவானது வரமாட்டாது. அதில் வாசஞ்செய்யும் காளியும் ஓடிக்கொண்டே யிருக்கவேண்டியது. தப்பிநின்றால் வெந்துபோவாள். அந்நிலத்திற்குச் சரி யாய் ஆகாயத்தில் சூரியன் தேரும் மேகமும் ஓடமாட்டாது. அந்நிலத்தின் கொடிதாகிய தீட்சணிய் வெப்பத்தைச் சகிக்காமல் நாகராசன் கண்கள் வெடித்துக் கக்காநின்ற விஷச் சுவாலையானது, மேக மண்டலத்தைக் கிழித்துக்கொண்டு பிரகாசிக்கும் மின்னலையொத்த பல ரத்தினங்கள் அப் பூமி வெடிப்பில் பிரகாசிக்கிறது எத்தன்மை யெனில் : பூமிதேவியினுடைய உடல் வெடித்து அப்புண்ணி லுண்டாகும் இரத்தம் போன்றிருக்கும். மிகுந்த பசியோடு புழுங்கிப் புரண்டுகொண்டு வாயை ஆவென்று திறந்துகொண் டிருக்கும் மலைப்பாம்பினுடைய வாயில் இந் நிலத்தின் வெப்பத்தைத் தாள மாட்டாமல் யானையானது நிழல் தேடிக்கொண்டு தானே வந்து புகுந்துகொள் ளும். இப்படிக்கு அக்கினியே அரசாக விருக்கின்ற காட்டினில் காக்கை களும் யானைகளும் கருகி, வடவாமுகாக்கினியால் தீய்ந்த மேகம்போல் வீழ்ந்து கிடந்தன. இவ்விதக் காட்டில் சஞ்சரிக்கும் பிசாசின் தேர்க்கூட்டமானது, தானிருக்கும் இடத்திலிருந்து எழும்பும் வெப்பமானது மீறி மேலோங்குமாகில் ஆகாயம் வெந்துபோகுமென்று தேவர்களுக்காகப் பசியா தாபத்துடனே சூழ்ந்துகொண்டிருக்கிற நீர்போல விருக்கும். இவ்வளவு கொடிதாகிய நிலத் தைக் காக்கும் கோடை யென்கிற அரசன் கொலுவிருக்கச் செய்த அக் காட்டினிடத்தி லுதித்த கானல் தேர் பொன் கால்களையுடைய பளிங்கு பீடம் போல இருக்கும். மேலும், நல்வினை தீவினை என்கிற இரண்டையும் விட்டு மூவகைப் பகையாகிய பைசாச உலகு உடல் என்கிற காவலைக் கடந்து முத் திக்கு ஏதுவாகிய கிரியையைச் செய்கிறவளுடைய மனம்போலவும், அந்நிலம் பசையற்றிருந்தது அவ்வளவு கொடிதாகிய நிலத்திலுள்ள பருக்கைக் கற்கள் அவ் வெப்பத்தினால் பொரிந்து விழ, அதனால் அந்நிலம் வெடித்துப் பெரி தாகிய வழிபோலத் தோன்றுகிறபடியால், அவ்வழியில் சூரியன் பிரவேசித்து, நாகலோகத்திலும் சஞ்சரிக்கும்படியாயிற்று. இப்பாலை நிலம் இவ்வளவு தீட் சணியத்தோடு விளங்குவதா யிருந்தபோதிலும், ஸ்ரீ ராமலட்சுமணர் அதிக வலி வுடையவர்களா யிருந்தாலும்; புஷ்பத்தைப் பார்க்கிலும் மிருதுவாகிய பாதத்தை யுடையவர்களாகையால், கொஞ்சம் வருத்த முறுவார்களென்று விஸ்வாமித்திரர் மனதில் நினைத்து, அவர்கள் முகத்தைப் பார்த்தனர். அப் பார்வை இன்னதென்றறிந்த சக்கிரவர்த்தியின் புதல்வர்கள், விஸ்வாமித்திர ருடைய திருவடியி னிடத்தில் கிட்ட விஸ்வாமித்திரர் பூர்வத்தில் பிரம்மாவினு லுண்டாக்கி யிருந்த மந்திரமாகிய பலை அபலை என்கிற இரண்டு திருமந்திரங் களையும் அவர்களுக்கு உபதேசித்தார். அவர்களும் அம் மந்திரத்தை உச்சரித் துக்கொண்டு செல்லவே, ஊழித்தீயே யாயினும் அவர்களை என்ன செய்யும்? இப்பாலையின் தீயானது குளிர்ச்சி பொருந்திய சலம்போல விருக்கச்செய்தது. அப்போது, சக்கிரவர்த்தியின் திருமகன் விஸ்வாமித்திரரைச் சேவித்து,



தாடகை வதம்.

சுவாமி! இந்தப் பூமி சிவனுடைய நெற்றிக்கண்ணினால் வெந்ததோ? அல்லது யாது காரணத்தால் இவ்வளவு வெப்பத்தை யடையும்படிக்காயிற்று? குற்றமற்ற சக்கிரவர்த்தியினுடைய திருநாட்டில் இப்படிக்கிருக்கும்படியான காரணம், தேவரீர் அனுக்கிரகஞ் செய்யவேண்டும் என்று கேட்ட ஸ்ரீ ராமமூர்த்தியைப் பார்த்து, விஸ்வாமித்திரர் சொல்லுகிறார்: கேளும் ஸ்ரீராமா! ஒரு ராட்சசி இவ்விடத்தில் வாசஞ்செய்து கொண்டிருக்கிறாள். அவள் எப்பேர்க்கொத்தவளெனில், சகல ஜீவராசிகளையும் கொன்று புசிக்கத்தக்க தன்மையையுடையவள். யமனை ஒத்தவள். மதம் பொருந்திய ஆயிரம் யானையினுடைய பலத்தை யுடையவள். பின்னும், எப்பேர்க்கொத்தவளெனில், இப்பூமியைப் பேர்க்க வேணுமென்றாலும். சமுத்திரத்தை வார வேணுமென்றாலும், செய்யத்தக்க வலிமையுடையவள். மேலும், உலகத்தில் உண்டாகிய பாபங்களெல்லாம் ஒருங்காகக்கூடி ஒரு பெண் சரூபங் கொண்டதுபோல இருக்கிறாள். அவளுடைய தேகமோ வெனில் இரண்டு பர்வதமும் - விஷமும் - இடியும் - ஊழித்தீயும் - இரண்டு பிறையும் பொருந்தி ஒரு சமுத்திர முண்டாயிருக்குமாகில், அவளுக்குச் சமானமாக இருக்கும். பாம்பை வளையலாகவுடைய சூலம் பொருந்திய கரத்தையுடையவள்; சுடுகாட்டில் சஞ்சரிக்குந் தன்மையை யுடையவள்; ஓ புருஷாள் இச்சிக்குந் தோளையுடைய ஸ்ரீராமா! அவளைப் பார்த்தவர்கள் தாடகையென்று சொல்லுவார்கள். பிரமதேவனால் சிருஷ்டிக்கும்படியான சகல ஜீவகோடிகளையும் வாரி வாயிற் போட்டுக்கொண்டு, தன்னுடைய இனிப்பாகிய உயிரை வளர்க்கும் கொடூரத்தையுடைய நமனை யொத்தவள். அவள் யாரென்று கேட்பீராகில், சொல்லுகிறேன்; கேளும்: ஸ்ரீ ராமா! வென்று விஸ்வாமித்திரர் சொல்லத் தொடங்கினார்:

கந்தருவ குலத்தில், சற்சரனென்று ஒரு அரசனிருந்தான்; அவனுக்குச் சுகேது வென்று ஒரு குமாரன். அவன் புத்திரனில்லாமல் பிரம்மாவை நோக்கி அநேக காலம் தவஞ் செய்தான். பிரமதேவன் பிரசன்னமாய் உனக்கு என்னவேணுமென்று கேட்க, சுவாமி? எனக்கு ஒரு புத்திரனை அனுக்கிரகஞ் செய்யவேணுமென்று சொல்ல, ஆனால் உனக்குப் புத்திரர் கிடைப்பதரிது. ஆயிர மதயானை பலத்தோடும் அழகோடும் ஒரு குமாரத்தியுண்டாகுமென்று சொல்லித் தமது பிரமலோகத்துக்குப் போய்விட்டார். அப்படியே சுகேதுக்கு ஒரு பெண் பிறந்தது. அப் பெண் மிகுந்த சௌந்தரியம் பொருந்திய ரூபலாவண்ய அலங்காரத்தோடு வளர்ந்துவர, அது கண்டு இப் பெண்ணுக்குத் தகுதியான புருஷன் யாரென்று தன்னுடைய பந்துவர்க்கத்தில் சோதித்து, சுந்தனென்பவனுக்குப் பாணிக்கிரகணம் செய்து கொடுத்தான். அவர்களிருவரும் மதனும் ரதியும்போல் கூடிச் சந்தோஷ சாகரத்தில் மூழ்கி யிருந்தார்கள். இப்படிப் பல காலங் கழிந்து, அவள் வயிற்றிலே புவனங்களெல்லாம் நடுநடுங்கும்படியாய் மாரீசனென்றும், சுவாகுவென்றும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் மாயங்களிலும் வஞ்சனைகளிலும் மிதமில்லாத பலங்களிலும் தாயைப் பார்க்கிலும் அதிக பலசாலிகளாகி உலகத்திலே சஞ்சரித்துக்கொண் டிருந்தார்கள். அப்பொழுது சுந்தனுனவன் தன்னுடைய பிள்ளைகள் பலத்தைக் கண்டு கர்வித்துத் தானும் அதர்ம மார்க்

கத்திலே திரிந்துகொண்டிருந்து, ஒருநாள் அகஸ்திய மகாமுனி ஆச்சிரமத் துக்கு வந்து, அவ்விடத்திலுண்டாகிய விருட்சங்களையெல்லாம் பிடுங்கி யெறிந்து, மான் - கடம்பை முதலிய மிருகங்களையெல்லாம் கொன்று புசித்து உபத்திரவப் படுத்தினன். அப்போது அகஸ்திய மகாமுனி அதிக கோபத்துடனே பார்க்க அவன் சாம்பராய்ப் போனன். அவன் மடிந்த சேதி பிள்ளைகளும் தாயும் கேட்டு, அதிக கோபத்துடனே புறப்பட்டு, அந்த மகாரிஷியைக் கொல்லுகிறே மென்று இடியும் - சிங்கமும் - சண்டமாருதமும் பயப்பட, தேவர்களும் சந்திர சூரியாளும் மேகங்களும் நடுங்க, அண்டங்கள் அதிரக் கர்ஜித்துக்கொண்டு வந்தார்கள். அகஸ்திய மகாமுனி இவர்களைப் பார்த்து, நீங்கள் ராட்சத கிர்த் தியம் செய்கிறபடியினாலே ராட்சதாளாகக் கடவதென்று சபித்தார். அந்த க்ஷணமே காந்தர்வரூபம் போய் கோர தந்தங்களும், செம்மயிர்களும் பருத்த சரூபங்களையுமுடைய ராக்ஷதராளர்கள். அகஸ்திய மகாமுனியைப் பதிலுக்குச் செய்கிறதற்கு இவர்களாலாகாதபடியினாலே, அப்போது சுமாலி என்பவ னிடத்திற்குப் போய் அவனைக் கண்டு, உனக்கு நாங்கள் பிள்ளைகளென்று உறவு கொண்டாடி, அவனுடனே அனேக காலம் பாதாளத்திலே இருந்து, இப்போது ராவணனுக்கு மாதுலர் இவர்களென்று சொல்லத்தக்கதாக இலங் கையிலே திரிலோக கண்டகராய்ச் சலிகைகொண்டு, தாயும் பிள்ளைகளும் உலகங்களெல்லாம் சஞ்சரித்துக்கொண்டு உபத்திரவஞ் செய்துகொண்டு வருகி றார்கள். அந்தத் தாடகையானவள் தன் பிள்ளைகளைவிட்டு அகஸ்தியருடைய கோபத்தைக் கருதி, இவ் வனத்தில் பிரவேசித்திருக்கின்றனள். சொல்லு தற்கரிதாகிய குணங்களை உலோபகுணம் அழிப்பதுபோல, கொடிய அவ் வரக்கி மருத நிலத்தை யழித்து மாற்றினள். இலங்கைக் கதிபனாகிய ராவணனுடைய ஊழியத்தி லமர்ந்து, மிருகத்தைப் போல வலிபெற்று, எனது யாகத்துக்கு விக்கினஞ் செய்துகொண்டு வருகிறாள். ஓ ஸ்ரீ ராமா! அவளிங்குண்டாகிய சமஸ்த ஜீவராசிகளையும் கொன்று தின்கிறதில்லா மல், தனக்கு ஆகாரம் என்று என்னை நினைத்திருக்கிறாள். இனி பல வார்த்தை சொல்ல வேண்டியதென்ன? சகல பிராணிகளையும் இன்னம் சில நாளையில் வாரி வயிற்றில் போட்டுக் கொள்வாளென்று விஸ்வாமித்திர மகா ரிஷி சொல்ல, ஸ்ரீ ராமன் கேட்டு, திருமுடியை அசைத்து இத்தனை பாவியாய் அக்கிரமம் செய்கிறவள் எங்கே யிருக்கிறாளென்று சொன்னார். அப்படி சொல்லிக் கொண்டிருக்கிற சமயத்தில் ஒரு கறுத்த பர்வதமானது நெருப்புச் சுவாலையுடனே யிருக்கிற வாயை மடித்துக்கொண்டு புருவங்கள் துடிக்க, நிறைந்த சமுத்திரத்தில் இரண்டு வடவாமுகாக்கினி பிரவேசித்தாற் போல இரண்டு கண்களிலேயும் நெருப்புப் பறக்க, கடூரமாய் விழித்துப் பார்த்துக் கொண்டு வருகிற வேகத்தில் பர்வதங்கள் விருட்சங்களெல்லாம் கூடப் பின் தொடர்ந்துவர, கால்கள் பெயர்த்து வைக்கிற இடங்களெல்லாம் சமுத்திரம் போல ஜலம் ஊற்றுகவர, இவளுடைய கோரபீகரத்தைப் பார்த்துக் கூற்று வனும் பயந்து பாதலத்திலே ஓடிப் பதுங்க, இப்படிக்கு யானைகளைத் துதிக் கையோடு துதிக்கை சேர்த்து மார்பிலே தாவடமாலைகளாகத் தரித்திருக்கிற மகா பலத்தையுடையவளாய், வந்த தாடகையானவள் தேவர்கள் முதலாகப் பதினாலு லோகத்தாரும் நடுங்க இடியும் பயப்பட கர்ஜித்து, இவர்களைப்

பார்த்து நகைத்து தன் கையிலிருக்கிற சூலத்தைப் பார்த்து, உதட்டைக் கடித்து, குகைபோல இருக்கிற வாயைத் திறந்து இடிக்கிற மேகம்போல ஒரு வார்த்தை சொல்லுகிறாள். ஒருவராலேயும் ஜெயிக்கக்கூடாத பலத்தை யுடைய என்னுடைய காவலி லிருக்கிறது இந்த ஆரணியம். இதிலே யிருக் கப்பட்ட ஜீவஜெந்துக்களை யெல்லாம் கறுவறுத்துப் போட்டேன். உங்கள் சரீரத்தி லிருக்கிற மாங்கிச ருசியை நான் அறியவேண்டுமென்று வந்தீர் களோ? உங்கள் விதிதானே தள்ளிக்கொண்டு வந்ததோவென்று மிகுந்த கோபத்துடனே சீக்கிரம் வந்த காரியத்தைச் சொல்லுங்களென்று சொல் லிச், சூலத்தை இவர்கள்பேரில் திருப்பினாள். ஸ்ரீராமன் அவளையும் அவள் வார்த்தையையுங்கேட்டு, சூலத்தைத் தங்கள்பேரில் செலுத்துவதற்குத் திரும் பியதையும் பார்த்து, விஸ்வாமித்திர மகாமுனி அவளைக் கொல்லவேணு மென்று மனதில் பற்றியிருக்கிற எண்ணத்தை அறிந்திருந்தும் வில்லிலே அம்பை ஏற்றிடாமல், ஸ்திரீ ஜாதி என்கிறதையே தமது திருவுளத்தி லெண் ணிச் சும்மாயிருந்தார். அவர் ஸ்திரீ ஜாதியென்று அவள் பேரில் அஸ்திர பிரயோகஞ் செய்யாம லிருப்பதை விஸ்வாமித்திர மகாரிஷி அறிந்து, ஸ்ரீராமா! இவளை ஸ்திரீ ஜாதியென்று நினைக்கவேண்டாம் எல்லாத் தீமை களையுஞ் செய்தவள். எங்களைப் புளிகோது என்கிறதற்குப் புசிக்கவில்லை. இதுதான் குறை. இந்தக் கொடிய பாவியை யாதென்றெண்ணுவது? இவளை ஸ்திரீஜாதியென்று எண்ணலாமா? ஓ இரத்னபரணத்தையுடையவனே! இவ ளுடைய பேரைச் சொன்னால் கௌரிய வந்தரான ஆண் பிள்ளைகளெல்லாம் நடுநடுங்கிப் போவார்களாகில், அப்போது ஆண்பிள்ளைத்தனம் யாரிடத்திருக் கின்றது? மேலும், இவளுடன் எதிர்த்து நிற்க மாட்டாமல் தேவேந்திரன் ஓடிப் போய்விட்டான். தேவர்கள், அசுரர்கள் முதலியவரும் இவளுக்கு முன்னிற்க மாட்டாமல் இளைத்துப்போய் விட்டார்கள். இவளுடைய ஆண்மையை என்ன வென்று சொல்லுவது? சக்கிரவர்த்திகளா யிருக்கிற ராஜாக்கள் முதலிய பலரைக்கொன்று தருமத்தைக் கெடுத்தவள், இதன்றியும் இன்னுஞ் சிலது சொல்லுகிறேன் கேளும். ஸ்ரீராமா? பூர்வத்தில் மகாவிஷ்ணு பிருகு மகா ரிஷியின் பத்தினியினிடத்தில் ஒரு குற்றங் கண்டு அவளைச் சங்கரித்து விட்டார். மகா பாவியான ராட்சதியாகிய குமதி என்பவள் இவ் வுலகின்கணுள்ள ஜீவ ராசிகளைத் தனக்கு ஆகாரமாக வெண்ணியிருந்தாள். அவளை வச்சிரதரனாகிய தேவேந்திரன் சங்கரித்தான். அதனால் இவர்கட்கு யாவராலும் புகழும்படி யான கீர்த்தி வந்ததேயல்லாமல் அபகீர்த்தி வந்ததுண்டோ? இல்லையே; சொல்லும்; ஓ மகரந்தங்கள் பொருந்திய மாலையையுடைய ஸ்ரீராமா! இவ் வுலகத்தை ஆக்கினை சக்கிரத்தினை லாண்டுவந்த சக்கரவர்த்திகளின் வழியில் அவதரித்த பெரியோய்! பெரிய வாளோடுகூட ஜீவராசிகளைக் கொன்று தரு மங்கெடச் செய்யும் இவள் விஷயத்தில் யாதொரு பச்சாத்தாபம் நினைக்கக் கூடுமா? கூடாது. உலகத்தில் மாந்தர்கட்கு நியமித்த காலத்தைக் கழித்து, பாவபுண்ணியங்களை யறிந்து, மோக்ஷ சாம்பிராச்சியத்திற்குச் செல்லுகிற துண்டு. இவளைப்போல் மானிட ஸ்பரிசம் பட்டமாத்திரத்தில் புசிக்க இச்சிக் கும் ஓர் யமனுமுண்டோ! ஓ! யமன் உழலும்படியான வேலாயுதத்தையுடைய ஸ்ரீ ராமா! இவ்வளவு துர்க்கிரியங்களைச் செய்துகொண்டிருக்கும் இவளை

ஸ்திரீ ஜாதியென்று நினைக்குந் தன்மை எளியபட்சமாக விருக்கின்றது. தரும சாஸ்திரப் படிக்குச் சொல்லுகின்றேனல்லது, அவள் கோபவுக்கிரகத்தோடிருப் பதைப் பார்த்துச் சொல்லுகின்றதல்ல. ஆதலால் இவளைக் கொல்வதனால் பாவ மில்லை. தருமமேயல்லது வேறொன்று மிராதென்று விஸ்வாமித்திர மகாரிஷி சொன்னார். ஸ்ரீ ராமன் அதுகேட்டு, சுவாமி! தாங்கள் சொல்லுவது தருமமல் லாது போனாலும், அல்லது தருமமாகவே யிருந்தாலும், இது செய்யென்று நிய மித்தால் அதையே வேதவாக்கியமாகக்கொண்டு செய்கிறதல்லவா தருமமென்று அங்கீகரித்தார். இச்சம்பாஷித்தலை அந்த அரக்கியாகிய தாடகை கேட்டுத் தன் கையிலிருந்த சூலத்தை உக்கிரபார்வையோடு அக்கினிபறக்க ஸ்ரீ ராமன் திருமேனியைப் பார்த்து எறிந்தாள். புதிய யமனைப்போல் கோபித்து எறிந்த சூலமானது அந்த மகாரிஷியின் வாக்கியத்தை வேதவிதியாகக்கொண்டு நிற்கின்ற ஸ்ரீ ராமன்மேல் சந்திரன்பேரில் வருகிற ராகு போல வந்தது. ஸ்ரீ ராமன் அதைக்கொண்டு தமது வாளைத்தொட்டதும் அழகு பொருந்திய வில்லை வளைத்ததும் பார்த்தவர்களில்லை, ஆனால் அச் சூலமானது இரண்டு துண்டாக முறிந்து விழுந்ததை மாத்திரம் கண்டார்கள். அக்கியானம்போன்ற நிறத்தையுடைய இந்த அரக்கியானவள் அது கண்டு சொற்பொழுதில் கடலை யடைப்பதுபோல மலைகளையே மழைபோல எறிந்தாள். அதுகளை ஸ்ரீ ராமன் தனது வில் மழையால் விலக்கிவிட்டு, சொல்லைப் பார்க்கிலும் மிகுந்த வேகத் தையுடைய ஒரு அம்பை ஸ்ரீ ராமமூர்த்தியானவர் அந்தக் கரிய நிறத்தோடுங் கூடிய தாடகையின்பேரில் பிரயோகஞ் செய்தார். அம்மாத்திரத்தில் அம்பா னது அவளுடைய பர்வதாகாரமான மார்பைத் துளைத்துக்கொண்டு உருவிப் போனது எத்தன்மையெனில், கல்லாத மூடர்களாகிய பாமரர்களுக்குப் பெரி யோர்களால் உபதேசிக்கும் மந்திரார்த்தம் எப்படிக்கு மனதில் தங்காது நீங்குமோ அப்படிப்போல் போயிற்று. ஸ்ரீ ராமபாணமாகிய பிரளயகாலச் சண்டமாருதம் அடிக்கவே ஊழிகாலத்தில் பெய்யானின்ற மேகமானது மின் னல் இடிமுழக்கத்தோடு ஆகாயத்திலிருந்து வீழ்ந்ததுபோல இந்தத் தாடகை யானவள் பூமியின்பேரில் விழுந்தாள். பூமியெல்லாம் ரத்தப்பிரவாகமாக நிறைந்தது. அந்தத் தாடகை விழுந்தது ராட்சதகுலத்துக்கு அபஜெயகாலம் உண்டாகப்போகுதென்று தெரிந்து முன்னுதாக அவர்களுடைய வெற்றிவீரக் கொடி மளமளவென்று முறிந்து விழுந்ததுபோல விருந்தது. இப்படிக்கு அவள் மார்பில்பட்ட அம்பினுடைய வாய்வழியே ஒழுகி வருகிற ரத்த வெள்ள மானது அக்காடெல்லாம் பரவிய தெத்தன்மையெனில், அந்திமாலையாகிய சிவந்தவானம் அடியோடு அற்றுவிழுந்ததுபோல இருந்தது. விஸ்வாமித்திர ருடைய வார்த்தையை மறுக்காமல் போர்செய்த காகுத்தனாகிய ஸ்ரீ ராமன் இந்த ஸ்திரீயினுடைய யுத்தத்தில், ராட்சதாளுடைய சீவனை உண்கிறதற்குப் பயப்பட்டிருந்த கூற்றுவனும் கிஞ்சித்து ருசி யறிந்தான். பின்பு தேவர்கள் தாங்களும் எங்களுடைய வாசஸ்தலத்தை யடைந்தோம். உமக்கும் ஒரு துன்ப மில்லை இனி யிந்தச் சக்ரவர்த்தித் திருமகனுக்குத் தெய்வீகமாகிய அஸ்திரங் களைக் கொடுமென்று அந்த விஸ்வாமித்திர மகாரிஷிக்குச் சொல்லி ஸ்ரீ ராமன் பேரில் புஷ்பவருஷம் வருஷித்துப் போனார்கள்.

தாடகை வதைப் படலம் - முற்றிற்று.

வேள்விப் படலம்

கோமதி கௌசிகை என்கிற ஆறுகளின் வரலாறு

பின்பு விஸ்வாமித்திரர் இவ்வுலகத்தில் வறுமை என்கிற நோய் கொண்டவர்களுக்கும் அமிர்தம்போல இருந்த வெண்ணெய்நல்லூர்ச் சடையப்பமுதலியாருடைய சொல்லியொத்த அஸ்திரங்களை ஸ்ரீ ராமனுக்குக் கொடுத்தார். அந்த அஸ்திரங்களெல்லாம் பூர்வத்தில் செய்த நல்வினைக்குத் தக்க பிரயோசனங்கள் மறு ஜனனத்தில் தேடிவருவதுபோல மிகுந்த சந்தோஷத்துடனே சக்கரவர்த்தித் திருமகனிடத்தில் வந்து, ஐயனே! அடைந்தோம் இனிப்பிரிய மாட்டோம். இளையபெருமாளைப்போல ஏவினதொழிலைச் செய்துகொண்டிருப்போ மென்று சொல்ல, சக்கரவர்த்தித் திருமகன் நல்ல தென்று சம்மதித்தார். இவைகள் நிறைவேறிய பின்பு மும்மூர்த்திகளுக்குச் சமானமான இந்த மூன்று பேரும் இருகாதவழி நடந்தார்கள். அவ்விடத்தில் ஓர் நீரின்கோஷம் தோன்ற சக்கரவர்த்தித் திருமகன் விஸ்வாமித்திர மகாரிஷியை நோக்கி, ஸ்வாமி! இந்தச் சந்தடியாதென்று வினவ, விஸ்வாமித்திரர் சொல்லுகிறார்: கேளும் ஸ்ரீ ராமா! மானசமடுவில் பிறந்து சரயுநதியென்று பேர்பெற்று தேவர்களால் ஸ்மரிக்கத்தக்க மேலான தீர்த்தமாகி கோமதி என்கிற தீர்த்தத்தில் வந்து விழுகிற நதியுடைய கோஷமென்று சொல்லி அப்பால் நடக்கும்போது பாவத்தைப்போக்கும் ஓர் திவ்விய நதியைப் பார்த்து இதன் வரலாறு என்னவென்று சக்கரவர்த்தித் திருமகன் வினவ, விஸ்வாமித்திர மகாமுனி சொல்லுகிறார்: தாமரைப்புஷ்பத்தில் பொருந்திய பிரமதேவனுக்குக் குசனென்று ஒரு பிள்ளையுண்டு. அவர் தனது செங்கோன்மைக்குப் பழுதுறாமல் பாதுகாத்து வந்தார். அவருக்குக் குசன் - குசநாபன் - அவதூர்த்தன் - வசு என்கிற நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். இவர்களில் குசநாபன் என்பவனுக்கு மகா சுந்தரத்தையுடைய லட்சணத்தோடு நூறு பெண்கள் பிறந்தார்கள். இவர்கள் மகா செல்வத்தோடு வளர்ந்து எவ்வனத்தை அடைந்தவர்களாய் ஒரு நாள் தங்கள் பிதாவினுடைய சிங்கார வனத்திற்கு விளையாடும் பொருட்டுப் போனார்கள். அவ்விடத்தில் வாயுபகவான் வந்து இவர்களைப் பார்த்து இச்சைகொண்டு, அந்தப் பெண்களை நோக்கி, ஓ விலாசம் பொருந்திய கண்களையுடைய பெண்களே! மன்மதனால் யான் வருத்தமுறுகிறபடியால் என்னை விவாகஞ் செய்துகொள்ளுங்களென்று கேட்க அவர்கள் தங்கள் பிதாவிடத்திற் சொல்லி விவாகஞ்செய்து கொள்ளுமென்று சொல்ல, அது கேட்ட மாத்திரத்தில் தனது ஸ்பரிசத்தால் அவர்கள் முதுகை ஒடித்துக் கூனுக்கிவிட்டு அப்பால் போயினான். அப்படிப் போன பிற்பாடு அவர்கள் தவழ்ந்துகொண்டே போய் தங்கள் பிதாவோடு சொன்னார்கள். அதுகேட்டு அவனுங் கிலேசித்து, பெண்களுக்குத் தைரியஞ் சொல்லித் தேற்றி, சூளி மகாரிஷிபுத்திரனை பிரமதத்தருக்கு அந்த நூறு பெண்களையுங் கலியாணஞ் செய்துகொடுத்தார். அந்த மகாரிஷி கைகளால் தீண்டவே அந்தக் கூன்களெல்லாம் பரிஷ்காரமாக நீங்கி எப்போதும்போல் நல்ல

சூரபமானுர்கள். அந்தக் குசநாபனுக்கும் புத்திர ரில்லாதபடியால் ஓர் யாகஞ் செய்தான். அந்த யாகத்தில் காதி வந்து பிறந்தார். அந்த காதிக்கு இராச்சிய பட்டாபிஷேகஞ்செய்து, குசநாபன் தெய்வலோக மடைந்தான். பிற்பாடு அந்தக் காதி மகாராஜனுக்கு நானும், கவுசிகை என்கிற ஒரு பெண்ணும் பிறந்தோம். அந்தப் பெண்ணைப் பிருகு மகாரிஷியினுடைய புத்திரரான இருசிக னென்பவருக்கு கலியாணஞ் செய்து கொடுத்தார். அவரும் அவளும் அனேக காலங்கள் தர்மார்த்த கர்மங்களை அநுபவித்து, பிரமலோகத்துக்குப் போக வேணுமென்று இருசிக மகாரிஷி ஆகாயமார்க்கமாக நடந்தார். அப்போது கவுசிகை அவரைப் பிரிந்திருக்க மாட்டாமல், தன்னுடைய பதிவிரதா தர்ம மகிமையினல் இவளும் ஆகாயமார்க்கமாய்த் தொடர்ந்தாள். இப்படிக்குப் பாதிவழி போய்க்கொண்டிருக்கையில், இருஷிக மகரிஷி அவளைத் திரும்பிப் பார்த்து என் உத்தரவு இல்லாமல் வந்தது என்னவென்று சொல்லி, நீ போய் பூலோகத்தில் நதியாய்ப் பிரவேசித்திருந்து சகலருக்கும் பாபவிமோசனம் செய்துகொண்டிருக்கக் கடவாயென்று சொல்லி ஆக்கியாபித்து, அவர் பிரம லோகம் போய்ச் சேர்ந்தார். என் தமக்கையான கௌசிகை இப்படி கோமதி நதியாகப் பிரகாசித்தாளென்று விஸ்வாமித்திரர் சொல்லக்கேட்டு மிகவும் அதிசயச் சித்தராகி அப்பால் நடந்தார்கள்.

மாவலி கதை

இப்படி சக்கரவர்த்தித் திருமகனும் இளையபெருமாளும் சிலதூரங் கடந்த பின்னர், அவ்விடத்தில் அனேக அலங்காரத்தோடு கூடிய ஒரு சிங் காரச்சோலையைக் கண்டு இதனுடைய விருத்தாந்தம் என்னவென்று கேட்க, விஸ்வாமித்திர மகாரிஷி சொல்லுகிறார். ஓ ராமா! இந்தச் சோலை மகா துல்லியமானது. தங்களுடைய நாயகர் தவிர வேறே தெய்வமும், அவர்கட்கு ஏவல் உபசாரஞ் செய்கிறதைவிட வேறே தவமும் இல்லையென்றிருக்கிற பதி விரதைகளுடைய இருதயத்தைப் போல மகத்துவமும் பெற்றது. அது யாது காரணத்தினலெனில், எங்களுடைய நான்கு வேதத்திற்கும் தேவர்களுடைய அறிவுக்கும் சிவபிரமாதிகளுடைய கியானத்திற்கும் எட்டுதற்கரிய ஸ்ரீ மகா விஷ்ணு பூர்வத்தில் இவ்விடத்திலிருந்து செய்யவேண்டிய தவங்களைச் செய் தது. அன்றியில் பூமியிலும் ஆகாயத்திலும் ஆசை முதலிய பற்றற்று ஸ்மரிக்கிறது அவருடைய நாமதேயம். அவர் செய்கிற மாயையாகிய பெரும் பிணக்கை ஒழுங்காகச் சேர்க்கிறவர்கள் யார்? அந்தப் பரிசுத்தமாகிய கடவு ளென் றறியக்கடவாய். அவர் நினைப்பதை அறிகிறதற்குக் கூடாது. அப் பேர்க்கொத்த கடவுள் இவ்விடத்தில் நூறு ஊழிக்காலம் தவமுதலியதைச் செய்து யாவருக்கும் அறிவித்தனர். இப்படிக் கிருக்கின்ற காலத்தில் மாவலி யென்கிற அசுரன் பூமியையும் தேவலோகத்தையும் தன் வசப்படுத்திக் கொண்டு, சகல சாம்பிராச்சியவந்தனு யிருந்துகொண்டு, பிராமணருக்குச் சகல தானமுங் கொடுக்கிறதாகச் சங்கல்பித்துக்கொண்டு, அனேக தானதர் மஞ் செய்துகொண்டு வந்தான். அப்போது தேவர்கள் அசுரனவன் இப்ப

டிக்கு அபரிமிதமான தர்மத்தைச் செய்து வருவதால் தங்களுக்குத் துன்பம் வந்து சம்பவிக்குமென்று எதுவோ ஒன்றைத் தேவர்கள் எண்ணிப் பயந்து, இவ்விடத்தில் வாசஞ் செய்து கொண்டிருந்த ஸ்ரீ மகா விஷ்ணுவின் சந்நிதிக்கு வந்து வணங்கி, ஸ்வாமி! இவ்வசுரனு லுண்டாகிய பயத்தைத் தீர்க்கவேணு மென்று சொல்லிக்கொண்டார்கள். அப்படியே அவரும் செய்கிறேனென்று அவர்களை அனுப்பிவிட்டு திரிகாலநுட்பங்களையும் அறிந்திருக்கிற காசிப மகா ரிஷிக்கும் அவர் பத்தினியாகிய அதிதிக்கும் ஒரு பிள்ளையாகப் பிறந்து, கறுத்த நிறத்தோடுங்கூடிய திருமேனியுமாய் ஆலவிதைபோல குறுகின சரூ பமுமாய், அந்த மாவலியினிடத்துக்கு வந்தார். அந்த வாமன சரூபன் வரவே மாவலி எதிர்கொண்டு தீர்க்க தண்டஞ்செய்து, பிராமணேத்தமரில் உமக்குச் சமானமானபேர் உலகத்திலில்லை. உம்மைத் தரிசித்து என்னைப்போல் கிரு தார்த்தனைவர்கள் வேறொருவரு மில்லையென்று அதிக சந்தோஷத்துடனே சொன்னன். அதுகேட்டு வந்திருக்கிற ஸ்ரீமந் நாராயணமூர்த்தி சொல்லுகிறார். ஓ ராஜனே! யார் எதைக் கேட்கிறார்களோ அவர்கட்கு அந்தப்படியே கொடுத்து நீண்ட கரத்தை யுடையவனே! உன்னிடத்திற்கு வருகிறவர்கள் பெரியவர்களே யல்லாமல் வேறல்லவென்று சொன்னர். அதுகேட்ட மாவலி மிகவுஞ் சந்தோஷசித்தனாகி, உமக்கு என்னவேணும் சொல்லும் அந்தப்படி. கொடுக்கிறேனென்று சொல்ல, எனக்கு மூன்றடி மண்கொடுத்தால் மனது திருப்தியாகுமென்று வாமனரூபன் சொல்ல, அப்படியே கொடுத்தேன் வாங் கிக்கொள்ளுமென்று கெண்டிகையி லிருக்கிற ஜலத்தை தாரைவார்க்க ஆயத் தப்பட்டான். அப்போது அவனுடைய குருவாகிய சுக்கிரபகவான் தன்னுடைய சீஷனை மாவலியைப்பார்த்து, இந்த சரூபம் கபட நாடகமாக வந்திருக்கின்றது. இது மேகநிறத்தோடுகூடிய வாமனரூபமென்று எண்ணுதே. இந்த அண்டகடா கங்களையெல்லாம் பூர்வத்தில் ஒரு கவாளமாகப் புசித்த மகாவிஷ்ணு. இதனை நீ அறிந்து கொள்ளக்கடவாய். ஆகையால் இவருக்கு அந்தப் பூதானங் கொடுக்க வேண்டாமென்று சொல்ல, அதற்கு மாவலிச் சக்கரவர்த்தி சொல்லுகிறான்: அப்படியானால் மெத்தவும் உத்தமமாயிற்று. ஸ்ரீயப்பதியாகிய அந்த மகா விஷ்ணுவினுடைய கை கீழும், என் கை மேலுமாகக் கொடுக்கிறது உத்தம மல்லவா? அல்லது கொடுக்கிறவனுக்குப் பகையாளி யென்றுண்டா? இராது. அதிலும் சத்பாத்திரமானவர் தாமே வலிய வந்து கேட்கக் கொடுக்கிறதற்குச் சந்தேகமென்ன? தன் பிராணனைலுங் கொடுக்கிறது நல்லது, வாங்குகிறது பொல்லாது. ஒருவன் பிராணனைடிருந்து மற்றொருவன் கையில் வாங்கிக் கொள்ளுகிறவன் செத்தவனுக்குச் சமானம். கொடுக்கிறவன் செத்துப் போனு லும், சீவனேடிருக்கிறவனுக் குண்டான கீர்த்தியும் புகழும் போலவே யிருக் கின்றது. பெரியோர்கள் சொல்லியிருக்கிற சாஸ்திரங்களில் உலோபத்தை விடுங்களென்று சொல்லியிருக்கிறது. அப்படியிருக்க நீர் கொடுக்க வேண்டா மென்று சொல்லுகிற வயணம் யாது? ஒருத்தன் கொடுக்கிறபொழுது அதைக் கொடுக்க வேண்டாமென்று தடுத்து, அந்தக் கொடுக்கிற தாதாவை இகபரங்களுக்கு ஆகவொட்டாமல் செய்கிறவன் சகாயனைக் மாட்டான். அதுவுமல்லாமல் கொடுக்கிறதை விலக்குகிறவன் எவனை அவனும் அவனுடைய பந்துஜன முதலிய சந்ததியாரும் உடுக்கிறதற்கு

வஸ்திரம் உண்கிறதற்கு அன்னமும் கிடையாமல் தரித்திரத்தி லழுந்தி விநாசத்தை யடைவார்களென்று தருமசாஸ்திர மிருக்கின்றதே. இப்படிக் கெல்லாம் செப்பியிருக்க, நீர் இவ்விதமாகச் சொல்லித் தடுக்கலாமா வென்று அந்தச் சுக்கிர பகவானைப் பலவாறாக வெறுத்துக் கண்டித்து, இந்த வாமன சரூபனைப் பார்த்து, நீர் உம்முடைய காலினாலே மூன்றடியும் அளந்து கொள்ளுமென்று கையிலிருந்த கெண்டியைச் சாய்த்தார். அப் பொழுது சுக்கிரன் அந்தக் கெண்டிகையினுடைய துவாரத்தில் காமரூபியாய் நுழைந்துகொண்டு, ஜலத்தை விழுவொட்டாமல் தடை செய்தான். அதை யறிந்து, வாமனரூபமாய் வந்திருக்கிறவர் ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்து அந்தக் கெண்டிகைத் துவாரத்தில் குத்தினார். அப்பொழுது சுக்கிரனுக்கு ஒருகண் பழுதாகி ஒதுங்கிப்போய் விட்டான். அப்போது ஜலம் கரத்தில்வந்து விழுந் தது. இப்படி விழுந்தவுடனே பகவானுடைய திருமேனி நல்லவர்கட்குச் செய்த உதவியைப்போல அண்டகடாக மட்டும் உயர்ந்தது. பூமியில் நின்ற ஒருபாதம் பூமியெல்லாம் நிறைந்தும் போதாமல் அதிகமா யிருந்தது. ஒரு பாதம் தேவ லோகமெல்லாம் நிறைந்தது, அதுவும் அப்படியே போதாமலிருந்தது. மற்றோ ரடிக்கு மாவலிச் சக்கிரவர்த்தியின் தேகமென்று அறியக்கடவாய்! ஓ ஸ்ரீராமா! ஆலின்விதைபோல் குறுகின சரூபமாய் வந்த பகவான் இவ்விதமாக அளந்து இந்த லோகங்களை வாங்கிக்கொண்டு தேவேந்திரன் வசம் செய்து, திருப்பாற் கடலில் ஸ்ரீ மகாலட்சுமி திருவடிகளை வருடிக்கொண்டிருக்க யோக நித்திரை செய்துக்கொண்டிருந்தார். ஆகையினாலே இந்தச் சோலைக்குச் சமானமானது வேறே கிடையாது. இந்த மகா ஸ்தலத்தைத் தரிசனஞ் செய்தவர்களுக்கு மறு ஜெனனமில்லை. வேத சாஸ்திரப்படிக்கு யாகஞ்செய்ய வேணுமென்கிற எனக்கும் இது தவிர வேறே ஸ்தலமில்லை. நான் இவ்விடத்திலிருந்து யாகம் ஆரம்பித்துச் செய்கிறேன். இவ்விடத்தில் ராட்சதாள் வருவார்கள். அவர்களை வரவொட்டாமல் பார்த்துக் காத்துக்கொண் டிருங்களென்று சொல்லித் திட்டப்படுத்தி தாம் அந்தச் சோலை நடுவே போயிருந்துகொண்டு யாகஞ் செய்யத் தொடங்கினார்.

விஸ்வாமித்திரர் வேள்வி

பூமியைக் காக்கும் சக்கிரவர்த்தியின் பிள்ளைகள் விஸ்வாமித்திர மகா ரிஷியின் வேள்விக்கு யாதொரு துன்பம் நேரிடப் போகுதென்கிறதாகக் கண்ணினைக் காக்கும் இமைபோல ஆறுதினங் காத்திருந்தார்கள். ஒருவரும் வராதபடியால் ஸ்ரீராமன் விஸ்வாமித்திர மகாமுனியின் சமீபத்தில்போய், சுவாமி! மூர்க்காளாகிய ராட்சதர் வருவார்களென்று செப்பி யிருந்தீர்களே! அவர்கள் என்றைக்கு வருவார்களென்று கேட்க, அவர் தபோதன நிஷ்டையி லிருந்தபடியால் யாதொரு உத்தரவும் கிடையாதது கண்டு திரும்பி வருங் காலையில் ஆகாயத்தைப் பார்த்தார். பார்த்த மாத்திரத்தில் ராட்சதாள் மாயை சரூபமாய் பருவதத்தையுடைய மேகம்போல ஆகாயமெல்லாம் நிறைந்து, இடி யைப்போலக் கர்ஜ்ஜித்துக்கொண்டு, அநேக பாணங்களும், வேல்களும்

பர்வதங்களும், விருட்சங்களும், அக்கினி மழையும் இன்னம் பலவிதமான ஆயுதங்களும் பிரயோகஞ் செய்து கொண்டு, சமுத்திரமானது ஆகாயத்தில் பரவியது போலவும், ஊழிக்காலத்து மழைபோலவும் திரண்டு வந்தார்கள். அதை ஸ்ரீராமர் பார்த்து, தம்பி லட்சுமண! இதோ அனேகம்பேர் கோர தந்தங்கள் சிவந்த மயிர்கள் அக்கினி நேத்திரங்களோடு நிறைந்து வந்திருக் கிறார்கள். இவர்களைத்தான் விஸ்வாமித்திர மகாமுனி சொன்னதென்று காட்டினபோது, லட்சுமணரும் அவர்களைப் பார்த்து, கடைக்கண்களில் அக்கினிபொறி பறக்க தம்முடைய வில்லைப் பார்த்து, ஓ தேவதேவா! இதோ வந்த ராட்சதர்களெல்லாம் துண்டம் துண்டமாக விழுந்து மடியப் போகிற வேடிக்கையைத் தாங்கள் பார்த்துக்கொண் டிருங்க ளென்று சேவித்துச் சொல்லி வில்லை வளைத்தார். அப்போது ஸ்ரீராமன் புகைபோன்ற இந்த ராட்சதாளுடைய நிணங்களும் ரத்தங்களும் விஸ்வாமித் திருடைய வேள்வியின் ஓமாக்கினியில் விழுமென்று எண்ணிப் பார்த்து பாணங்களினாலே ஒரு கூடமாகக் கட்டினர். அவ்விடத்திலிருந்த ரிஷிகணங்க ளெல்லாம் வந்த ராட்சதக் கூட்டங்களைக் கண்டு பயந்து நடுநடுங்கி பூர்வத்திலே ஆலகாலவிஷம் பிறந்தபோது தேவர்களெல்லாம் பயந்து சந்திர சேகரனை ருத்திர மூர்த்தியினிடத்தில் வந்ததுபோல ஸ்ரீராமனிடத்தில் அபயமென்று ஓடிவந்தார்கள். அவர்களுக்கெல்லாம் அபயஸ்தங் கொடுத்து கோதண்டத் தைக் கையில் வாங்கிக்கொண்டு வளைத்துக் காதளவு மிழுத்து, அஸ்திரங்களைப் பிரயோகஞ் செய்தார். இராட்சதாளுடைய சிரசுகளெல்லாம் பர்வதம்போல அற்று விழுந்தன. பூமியெல்லாம் ரத்த சமுத்திரமாயிற்று. அப்பால் ஒரு பாணத்தை எடுத்துத் தாடகையின் பிள்ளையாகிய இருவர்பேரிலும் விட்டார். அது ஒருவனை யமபுரத்தில் சேர்த்தது. மற்றொருவனுகிய மாரீசனைத் துரத் திக்கொண்டேபோய் சமுத்திரத்தில் சேர்த்தது. மற்றுமுண்டாகிய ராட்சதாள் ஸ்ரீராம பாணம் ஒரு க்ஷணப்பொழுதில் ஆகாயத்தை மறைத்துக்கொண்டு பிணக்காடாகச் செய்ததைப் பார்த்து, இனி யிவர்கள் பிணமலைமேலேறி வந்து நம்மையும் பிடித்துக்கொள்வார்களென்று நினைத்து ஓடத் தலைப்பட் டார்கள். இப்படிக்கு ஓடிய ராட்சதாளை ஸ்ரீ ராமபாணம் துரத்திப் பிடித்துத் தலைகளை யறுத்து வீழ்த்திற்று. அறுந்து விழுந்த கபந்தங்கள் எழுந்திருந்து நடனஞ்செய்தன. அனேகம் பூதபைசாசுகள் மாங்கிச ரத்தங்களைப் பானஞ் செய்து சந்தோஷித்தன. ஸ்ரீ ராமனுடைய சௌகரியத்தைக் கொண்டாடிப் பாடி ஆடினர். கழுகுகள் - கூளிகள் - பருந்துகள் - காகங்கள் முதலான பறவை கள், ராட்சதமாங்கிசம் ஆகாயத்திலே பந்தரிட்டாப்போல நெருங்கி நிறைந் திருந்தன. அப்போது தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். அந்தப் புஷ்ப மாரி பட்சிப்பந்தரைக் கிழித்துக்கொண்டு வந்தது. விஸ்வாமித்திர மகாரிஷி யும் யாகத்தை முடித்து எழுந்திருந்து, இரணக்களத்தையும் சரக்கூடத்தை யும் பார்த்து மிகவும் சந்தோஷித்து, ஸ்ரீ ராமா! இப்போது நீர் செய்த காரி யம் எனக்கு அதிசயமே. ஏனெனில் புவனங்களை உண்டாக்கி அதுகளை வயிற்றிலே அடக்கிக்காக்கிற நீர் ஒரு வேள்வியைக் காத்தீரென்று சொல்லு வது அதிசயமல்லவென்று சொல்லி அன்றையத்தினம் அவ்விடத்தில் இருந்த ரிஷிகளோடு மிருந்தார்கள். மற்றநாள் காலமே ஸ்ரீராமன் விஸ்வாமித்திர

ரைச் சேவித்துக்கொண்டு, சுவாமி! இன்றைக்கு நான் செய்யவேண்டிய காரிய மென்னவென்று கேட்டனர். அதற்கு விஸ்வாமித்திரர் ஸ்ரீ ராமா! எந்த காரியம் சொன்னலும் அது உமக்கு அருமையாயிராது இன்னும் சிறிய பெரிய காரியங்களுண்டு. அவைகளைப் பின்பு முடித்துக் கொள்வோம். இங்கே மிதி லாபுரிப் பட்டணத்தில் ஜனகமகாராஜா யாகம் செய்கிறார். அதைப் பார்த்து வருவோம் வாருமென்று ஸ்ரீ ராம லட்சுமணரை அழைத்துக்கொண்டு விஸ்வா மித்திர மகாரிஷி மிதிலையை நோக்கி நடந்தார்.

வேள்விப் படலம் - முற்றிற்று.

அகலிகைப் படலம்

தூருவாச முனிவர் கதை

இப்படி நடந்துவருகிற வழியில் அனேகச் சிறப்பும் அலங்காரமும் பொருந்திய சோண நதியினிடத்தில் வந்து சேர்ந்தார்கள். சூரியனும் ஸ்ரீ ராம லட்சுமணர் மற்றநாள் குளிர்ச்சியடைந்திருக்கும்படிக்குத் தன்னுடைய வேகத் தைத் தணித்துக்கொள்ளும்பொருட்டு கடலில் மூழ்குகிறவன்போல் அஸ்தமித் தான். பின்பு இவர்கள் வாசனைபொருந்திய ஓர் சோலையினிடத்தில் பிரவே சித்தார்கள். அப்போது ஸ்ரீ ராமமூர்த்தியானவர் அந்தச் சோலையைப் பார்த்து, ஸ்வாமி! இந்தச் சோலையின் விர்த்தாந்தம் என்னவென்று கேட்க, விஸ்வாமித்திரர் சொல்லுகிறார்.

ஓ ராமா! பூர்வத்தில் காசிபமகாரிஷியின் பெண்சாதி திதி யென்கிற வள் புத்திர நிமித்தம் இவ்விடத்திலிருந்து தவஞ் செய்தாள். அந்த விர்த் தாந்தத்தை உமக்கு விசிதமாகச் சொல்லுகிறேன் கேளும்: அண்ட கோள கைக்கு அப்புறத்திலிருக்கும் ஸ்ரீமந் நாராயணன் மார்பிலே வாசமாயிருக்கிற ஸ்ரீ மகாலட்சுமியை ஒரு விஞ்சையஸ்திரீயானவள் மிகுந்த அன்புடனே நமஸ் காரஞ் செய்து பாடினாள். அதுகேட்டு ஸ்ரீ மகாலட்சுமி சந்தோஷித்து ஒரு புஷ்ப மாலையைக் கொடுத்தாள் அந்த மாலையை அதிக சந்தோஷத்துடனே வாங்கித் தனது வீணையின் சிரசில் கட்டிக்கொண்டு பிரமலோகத்துக்கு வந் தாள். அவ்விடத்திலே தூருவாச மகாமுனி இந்த விஞ்சையஸ்திரீயைக் கண்டு, என் தாயாராகிய ஸ்ரீ மகாலட்சுமியின் சந்நிதியில் வீணை வாசித்துப் பாடும்படிக்குப் பாக்கியஞ் செய்தவளென்று பக்தியுடனே அவளைச் சாஷ் டாங்கமாக நமஸ்காரஞ் செய்து, அநேகவிதமாய் ஸ்துதி செய்தார். அப் போது அவள் சந்தோஷித்து அந்தமாலையை அவர் கையில் கொடுத்தாள். அந்த மகாமுனி அந்த மாலையை வாங்கிக்கொண்டு, இந்த லோகங்களை உண் டாக்கி உண்டு உமிழ்ந்து ரட்சிக்கிற ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய மார்பி லிருந்து சகல பிராணிகளையும் பெற்ற ஸ்ரீ மகாலட்சுமியின் சிரசில் தரித் திருந்த மாலை எனக்குக் கிடைக்கிறதற்கு என்ன தவம் செய்தேனென்று சந் தோஷித்து ஆனந்த நிர்த்தனமாடி, அந்த மாலையைச் சிரசிலே தரித்துக் கொண்டு தேவலோகத்துக்கு வந்தார். அப்போது தேவேந்திரன் ஐராவத

மென்கிற யானையின் பேரில் ஏறிக்கொண்டு, ஆயிரங் கண்களுந் தாமரைப் புஷ்பங்கள் போலே பிரகாசிக்க, சூரியனைப்போல கிரீடம் ஜொலிக்க, நீல மேக சொரூபத்துடனே அரம்பை - மேனகை - திலோர்த்தமை - ஊர்வசி முதலான ஸ்திரீகள் நடனஞ் செய்துவர, இருபக்கங்களிலேயும் வெண்சாமரைகள் வீச, பூரணச் சந்திரனைப்போல வெள்ளைக்குடை பிரகாசிக்க, பேரிகை முதலான வாத்தியங்கள் முழங்க, மங்களகீதங்கள் பாட, அதிக சம்பிரமத்துடனே திருவோலக்கம் வருகிறதைக்கண்டு தூருவாச மகாமுனி சந்தோஷித்து, அந்த மாலையைத் தேவேந்திரனுக்குக் கொடுத்தார். அந்த மாலையை அவன் அங்குசத்தினாலே வாங்கி யானையினுடைய கழுத்திலே போட்டான். அந்த யானையானது அந்த மாலையைத் துதிக்கையினால் இழுத்து அறுத்துக் கால்களால் தேய்த்தது. அதைக்கண்டு தூருவாச மகாமுனிக்குக் கண்களில் கோபாக்கினி எழும்பிற்று. அதுகண்டு தேவர்கள் பயந்து, அண்டகூடமும் சாம்பராய்ப் போமென்று ஓடிப்போனார்கள். சந்திர சூரியர்கள் நடக்கப் பயந்து திரும்பி விட்டார்கள். உலோகா லோகங்களெல்லாம் சுழன்று இருள் மூடிக்கொண்டது. தூருவாசருக்குச் சுவாசம் விடுகிறபோதெல்லாம் புகைகளெழும்பின, இப்படிக் கோபங் கொண்ட தூருவாசர் இந்திரனைப் பார்த்துச் சொல்லுகிறார்: ஓ இந்திரா! பஞ்சபூதத்திற்கும் பூமிதேவிக்கும் வேதத்திற்கும் நாயகனை ஸ்ரீமந் நாராயணனுடைய திருமார்பில் வாசமாயிருக்கின்ற ஸ்ரீ மகாலட்சுமியின் சிரசிலே தரித்திருந்த புஷ்பமாலையானது, நான் செய்த யாதோ ஒரு தவமகிமையினால் எனக்குக் கிடைத்தது. அந்த மாலையை உன்னுடைய வைபவத்தைக் கண்டு உனக்குக் கொடுத்தேன. அதை நீ இகட்சி செய்தது உனது பாக்கியத்தினுடைய கர்வத்தினாலே யல்லவா? ஆதலால் உன்னுடைய பாக்கியமெல்லாம் சமுத்திரத்திலே போய் விழுந்து விடக்கடவது. நீயும் வருத்தத்தை யடையக் கடவாயென்று சபித்தார். தட்சணமே கர்ப்பக விருட்சம் - தவநிதி - காமதேனு - அமிர்தம் - அரம்பைகள் - ஐராவதம் - உச்சைசிரவ மென்கிற குதிரை இவை முதலான பிரதான பாக்கியங்கள் சகலமும், தாதாவாகிய வெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப மூதலியாருடைய சத்ராதிகள் எப்படிப் பயந்து ஓடிப்போவார்களோ அப்படிக்குச் சமுத்திரத்தில் முழுகிவிட்டன. இந்தத் தூருவாசமகாமுனியின் கோபத்தினால் தேவலோகத்திலும் இவ்வுலகத்திலும் வறுமை நோயினால் வருத்த முண்டாகவே, தேவர்களும் சிவனும் பிரமதேவனும் கூடிக்கொண்டு ஸ்ரீயப்பதியாகிய மகாவிஷ்ணுவினிடத்திற்குப் போய் இந்த மகாமுனியால் விளைந்த காரியங்களைச் சொல்லி, உமது திருவடியன்றி வேறு திக்கில்லையென்று சேவிக்க, அவரும் பயப்படாதேயுங்களென்று தேறுதலைச் செய்து சொன்னதாவது: ஓ தேவர்களே! மந்தரகிரியை மத்தாகவும், வாசுகியைக் கடைகிற கயிறாகவும், சந்திரனைத் தூணாகவும் வைத்துக்கொண்டு, தேவர்களும் அசுரர்களுங்கூடி ஒஷதிகொடுத்துப் பால் சமுத்திரத்தைக் கடையுங்கள். நாமும் அவ்விடத்திற்கு வருகிறோமென்று சொல்லி யனுப்பினார். அப்போது தேவர்கள் சந்தோஷித்து மந்தரகிரியைப் பிடுங்கி, வாசுகியைத் தாம்பாக வைத்துக்கொண்டு, சந்திரனைத் தூணாக நட்டு, தேவர்களும் அசுரர்களுங்கூடி ஒஷதி கொடுத்துப் பால் சமுத்திரத்தைக் கடைந்தார்கள். அப்போது பூமி நெளிந்தது. அந்த வேளையில் ஸ்ரீ மகா

விஷ்ணு கூர்மாவதாரமான ஆமை ரூபமெடுத்து, அந்த மந்தரகிரி பர்வதத்தை தம்முடைய முதுகில் சுழலும்படி தாங்கினர். இப்படிக் கடைகிறபோது முன்னே முழுகிப்போய்விட்ட பொருள்களெல்லாம் திரும்பி யுண்டாயிற்று. அமிர்தத்தின் நிமித்தம் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் விரோதமுண்டாய் கோபங்களுண்டாயிற்று. அப்போது பகவான் ஜகன்மோகினி ரூபமெடுத்து அசுரர்களை மயக்கினர். அவர்களும் மயங்கி இறந்தார்கள். தேவர்கள் அமிர்தம் சாப்பிட்டார்கள். ஆலகால விஷத்தையும் இளம்பிறைச் சந்திரனையும் ரிஷபவாகனனான சிவனுக்குக் கொடுத்து, மற்றதை அவரவர்கள் யோக்கியதைக்குத் தகுதியாகக் கொடுத்து, கர்ப்பகவிருட்ச முதலான வஸ்துக்களையெல்லாம் தேவேந்திரனுக்குக் கொடுத்து, அந்தச் சமுத்திரத்திலே பிறந்த இலட்சுமியையும் கௌஸ்துவாபரணத்தையும் தாம் தரித்துக்கொண்டார். அப்போது அந்த அசுரர்களுடைய தாயாகிய திதி யென்பவள் தன் பிள்ளைகள் தேவர்களுடைய வஞ்சனையினாலே அமிர்தங் கிடையாமல் உயுத்தியஞ் செய்து மடிந்துபோனார்களென்று துக்கித்து, தன்னுடைய நாயகனான காசிப மகரிஷியைச் சேவித்து, தேவர்களை ஜெயிக்கிறதற்கு அதிக பலசாலியராக ஒரு புத்திரனை அநுக்கிரகம் செய்யவேண்டுமென்று கேட்க, அப்படியே கொடுத்தோம். ஆனால் நீ அந்தக் கர்ப்பத்துடனே பூலோகத்தில் ஆயிரம் வருஷகாலம் தபசுசெய்யென்று ஆக்கியாபித்தார். அப்படியே திதி என்பவள் இந்தச் சோலையினிடத்தில் தவம் செய்துகொண்டிருந்தாள். அதைத் தேவேந்திரனறிந்து, சிறிய தாயாரான திதியினிடத்திற்கு வந்து, அம்மா! உனக்குக் கைங்கரியம் செய்துகொண்டிருக்கிறேனென்று சொல்லியிருந்தான். இப்படியிருக்க, ஒரு நாள் நித்திரைசமயம் பார்த்து, அணுரூபமாய் அவள் வயிற்றில் புகுந்து, அங்கே வளருகிற பிள்ளையைத் தன் கை வச்சிராயுதத்தினாலே ஏழு துண்டமாக்கி, அந்தப் பிள்ளைகளுக்கு மருத்துக்களென்று பேருமிட்டுத் தேவேந்திரன் போய்விட்டான். இப்படி நடந்த ஸ்தலம் இது. இதற்கருகிலுள்ள அதுவோ வென்றால் சந்திரசேகரனான சிவனுக்குப் பிறந்து வாயுவுங் கங்கையும் பொறுக்கமாட்டாத பலமுடைய சுப்பிரமணியர் வளர்ந்த சரவண ஸ்தலமென்று விஸ்வாமித்திரர் சொன்னர். அதுகேட்டு, ஸ்ரீ ராமன் மிகவும் சந்தோஷமாயினர். அப்போது சூரியன் உதயமானன். உடனே மும்மூர்த்திகளுக்குச் சமானமான இந்த மூவரும் எழுந்திருந்து நடந்தார்கள். அப்படி நடக்கும்போது காவிரிக்குச் சமானமான கங்காநதியைக் கண்டார்கள்.

கங்கையின் வரலாறு

அப்போது ஸ்ரீராமன் இந்த நதியினுடைய வரலாறும் மகிமையும் தெரியச் சொல்லவேணுமென்று கேட்க, விஸ்வாமித்திர மகாமுனி சொல்லுகிறார்: ஓ என்னை யாளாகக்கொண்ட குழந்தாய்! உம்முடைய வம்சத்தில் பிறந்தவனாகிய சகரனென்கிற ராஜன் இந்த அயோத்தியிலிருந்துகொண்டு இராச்சிய பரிபாலனம் செய்துகொண்டிருந்தான். அவனுக்கு விதர்ப்பை யென்றும்

சுமதியென்றும் இரண்டு ஸ்திரீகளுண்டு. அதில் விதர்ப்பை என்பவளுக்குப் போசணனென்று ஒரு குமாரன் பிறந்தான். அவனுக்கு அஞ்சுமானென்று ஒரு குமாரன் பிறந்தான். பட்சி ராசனுக்கு இளையவளாகிய சுமதி என்கிற வளுக்கு அறுபதினாயிரம் பிள்ளைகள் பிறந்தார்கள். அந்தச் சகர மகாராஜனும் பிள்ளைகளுடைய சாமர்த்தியங்களைக் கண்டு சந்தோஷித்து அஸ்வமேத யாகம் செய்யவேண்டுமென்று ஆரம்பித்து, மகா லட்சணமுள்ள குதிரையைச் சிங்காரித்து, சாஸ்திரப்படிக்கும் பூ சஞ்சாரத்துக்கு விட்டு, அதன்பின்னே அஞ்சுமானென்கிற பேரப் பிள்ளையோடு அனேகம் சேனைகளைக் கூட்டி அனுப்பினான். அந்தச் செய்தி தேவேந்திரன் கேட்டு, காமரூபியாய் வந்து அந்தக் குதிரையைப் பிடித்து, பாதாள லோகத்தில் தபோகத்தியானஞ் செய்து கொண்டிருந்த கபில மகாமுனிக்குப் பிறகே கட்டி ஒளித்துவைத்துப் போனான். அஞ்சுமான் குதிரையைக் காணுமல் பூமியெங்குந் தேடித் திகைத்து, திரும்பி வந்து பாட்டனாகிய சகர ராஜனுடனே சொன்னான். அதுகேட்டு சகர ராஜன் தன் பிள்ளைகளுடனே சொன்னான்.

அந்தப் பிள்ளைகள் அறுபதினாயிரம் பேரும் வெகு கோபாக்கினியோடு பூமியெல்லாம் போய்த் தேடிக் காணுமல், பூமியைப் பள்ளமாக நூறு யோசனை அகலமும் ஆழமுமாகத் தோண்டிப் பேதித்து அந்த மண்ணையெல்லாந் தின்று கொண்டே போய் பாதாள லோகத்தில் தவம் செய்கிற கபிலமுனிபிறகே குதிரையைக் கண்டு, வெகு கோபத்துடனே அக்கினிபோல் அவரைச் சீறி, வைது அடித்து உபத்திரவம் செய்தார்கள். அந்தக் கபிலர் மிகுந்த கோபத்துடனே பார்க்கவே சிவனுடைய நகையினாலே திரிபுராதிகள் எப்படியானார்களோ அப்படி அறுபதினாயிரம் பேரும் சாம்பராய்ப் போனார்கள். அந்தச் செய்தி தூதர் சொல்லச் சகர ராஜன் கேட்டு, பேரனாகிய அஞ்சுமானை யழைத்து, குழந்தாய்! அவர்கள்தான் இறந்துபோனார்களே; யாகத்தையும் இழந்துவிடுகிறதா வென்று சொல்லினன். அந்தக்ஷணமே அஞ்சுமான் பாதாளலோகத்துக்கு வந்து, தன்னுடைய தந்தைகளிறந்து சாம்பராய்ப் போனதைக் கண்டு திடுக்கிட்டு, அப்பால் கபிலமகாமுனி பாதார விந்தத்திலே சேவித்து நின்றான். அவரும் இவனிடத்திலே கிருபையுள்ளவராகி, அவர்கள் மடிந்த செய்திகளையுஞ் சொல்லிக் குதிரையையும் கொடுத்துக் கொண்டுபோ வென்று சொன்னார். அப்படியே அவன் குதிரையைக் கொண்டு வந்து பாட்டனார் முன்னே விட்டுச் சேவித்துக் கொண்டான். அந்தச் சகர ராஜனும் யாகத்தை முடித்து, அஞ்சுமானுக்கு ராச்சிய பட்டாபிஷேகம் செய்துவைத்து தேவலோகஞ் சேர்ந்தான். சகரரால் தோண்டப்பட்டபடியால் சாகரமென்று இந்த மகரவாருதிக்கு ஒரு பேராயிற்று. அந்த அஞ்சுமான் ராச்சியபாரம் செய்துகொண்டிருந்தான். அவனுடைய வம்சத்திலே பகீரதனென்கிறவன் பிறந்தான். அவன் மனுநெறியின்படி ராச்சியபாரம் செய்துக் கொண்டிருக்கிற காலத்தில் ஒருநாள் குலகுருவாகிய வசிஷ்டரைச் சேவித்துப் பூர்வ கதைகளைக் கேட்டுக்கொண்டு வருகிறபோது சகராள் சமாச்சாரங் கேட்டு, ஸ்வாமி! என் தாதைகளான சகராள் கபிலமகாமுனி கோபாக்கினியினாலே மடிந்து போனார்களே அவர்களுக்கு நல்லகதி கிடைக்கவேண்டியதற்கு அடியேன்

என்ன உபாயம் செய்யலாம்? அதுபற்றி தேவரீர் ஆக்ஞாபிக்கிறபடிக்கு நடந்து கொள்ளுகிறேன். ஒரு உபாயஞ் சொல்லவேண்டுமென்று கேட்க, வசிஷ்டர் அப் பகீரதனை நோக்கி, பிரமாவைக் கருதி அநேகக் காலம் தவம் செய்தால் அவர்களுக்கு நல்லகதி யுண்டாகுமென்று சொல்லினர். அப்போதே ராச்சியமெல்லாம் சுமந்திரன்வசம் செய்து, இமோர்க்கிரி பர்வதச் சாரலிலே போய் பிரமாவை நோக்கிப் பதினாயிரம் வருஷம் தவம் செய்தான். அப்போது பிரமா பிரசன்னமாகி, உன்னுடைய தவத்துக்குச் சந்தோஷமானேம். உன்னுடைய தாதைகள் கபில மகாரிஷியினுடைய கோபாக்கினியினாலே சாம்பராய்ப் போனவர்களானபடியால், அந்தச் சரீரங்களினுடைய எலும்புகளின் பேரிலும் சாம்பல்களின்பேரிலும் ஆகாயகங்கை வந்து விழுமானால் நற்கதி பெறுவார்கள். அந்த ஆகாயகங்கை பூமிக்கு வருகிறபோது மகா வேகமாயிருக்கும். அந்த வேகத்தைச் சகிக்கிறதற்குத் திரிநேத்திரனை சிவனாலே யாகுமல்லாமல் மற்றொருத்தராலும் ஆகமாட்டாது. ஆகையால் பார்வதிசமேதனை சிவனை நோக்கித் தவசு செய்யுமென்று சொல்லிப்போனர். அப்படியே சிவனை நோக்கிப் பதினாயிர வருஷம் தவசு செய்தான். அப்போது அக்கினி சுரூபனை சிவன் வந்து பிரசன்னமாகி, உன் மனது தெரிந்தது உன் மனதின்படி நடப்பிக்கிறேமென்று சொல்லிப் போனர். பின்பு ஆகாய கங்கையை நோக்கி ஐயாயிர வருஷம் தவஞ்செய்தான். அப்போது கங்கை ஒரு ஸ்திரீரூபமாக வந்து, ஓ ராஜாவே! நீர் தவஞ் செய்கிறீரே, அந்தக்கங்கை பூலோகத்திற்கு வந்தால் அவளுடைய வேகத்தைப் பொறுக்கத் தக்கவர்கள் யாரிருக்கிறார்கள்? உன்னுடன் சிவன் விளையாட்டுக்குச் சொல்லிப் போனர், அதை யின்னம் நன்றாய் அறிந்துபாரென்று சொல்லிப் போனள். அப்பால் ஜடாதரனை சிவனை நோக்கி இரண்டாயிரத் தைந்நூறு வருஷம் தவம் செய்தான். அப்போது அந்த ருத்திர மூர்த்தி நேரில் வந்து திரும்பியும் ஏன் தவம் செய்கிறாயென்று கேட்டார். சுவாமி! கங்கை இப்படிக்கு சொன்னளென்று சொன்னேன். நீ பயப்படவேண்டாம். அந்த கங்கை எத்தனை வேகமாய் வந்தாலும் ஒரு துளிகூட புறம்பில் போகாமல் காக்கிறேனென்று சொல்லிப் போனர். அப்படியே கங்கையை நோக்கி இரண்டாயிரத்தைந்நூறு வருஷம் தவம் செய்தான். இப்படி ஏககாலத்தில் முப்பதினாயிர வருஷம் ஜலம், சருகு, வாயு, சூரியகிரணம் இவைகளை ஆகாரம் செய்து கொண்டு தவம் செய்தான். பின்பு பிரமலோகமும் இந்திராதியருடைய லோகமும் பயந்து நடுநடுங்க இரைச்சலிட்டுக்கொண்டு பிரவாகமாக ஆகாய கங்கை வந்தது. அப்போது பார்வதி சமேதனை சிவன் தனது ஒரு ஜடையில் புல்லின் நுனியில் தங்கும் பனித்துளி போல அடக்கினர். இப்படிக்கு ஓர் ஜடையில் அடங்கின கங்கையைப் பகீரதன் கண்டு திகைத்து, சிவன் முன்னே நின்றான். அப்படி நின்றவனைப் பார்த்து நீ பயப்படவேண்டாம். கங்கை நம்மிட ஜடையில் இருக்கிறாள். இதோ விடுகிறேனென்று கொஞ்சம் விட்டார். அந்தக் கங்கை பூமியிலே பிரவாகமாக வரும்போது முன்னே பகீரதன் நடந்தான். அப்படி நடக்கிறபோது ஜானவமகாரிஷி யாகம் செய்து கொண்டிருக்கிற யாகசாலையின் பேரில் வருகிறதைக் கண்டு அந்த ரிஷி கோபமானவராய் வருகிற கங்கையை உள்ளங்கையினால் அடக்கிச் சாப்பிட்டார். அது கண்டு பகீரதன் அவரைச் சேவித்து,

பூர்வம் நடந்த சங்கதிகளெல்லாஞ் சொன்னான். அதுகேட்டு ஜாநவமகாரிஷி கிருபைசெய்து, அந்தக் கங்கையைக் காதுவழியாக விட்டார். அப்போது கங்கை வேகத்துடனே போய் சகராள் மடிந்த எலும்பின் தூள்களின்பேரில் சேர்ந்தாள். அதனால் அனேக்காலமாய் நரகத்தில் மூழ்கி யிருந்த சகராளும் நற்கதி யடைந்தார்கள். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். பின்பு பேரிகை முதலான வாத்தியங்கள் முழங்கப் பகீரதனும் அயோத்திமா நகரம் வந்து சேர்ந்தான். ஸ்ரீ ராமா! அண்டகோளத்துக்கு அப்பாலும் அளந்த ஸ்ரீமந் நாராயணனுடைய பாதார விந்தத்தில் பிறந்து பிரமதேவன் செய்த பூசை தீர்த்தமாய் சிவன் சிரசில் கொள்ளப் பகீரதன் தவத்தினால் பூலோகத் திற்கு வந்தது. பகீரதன் கொண்டுவந்தபடியால் பாகீரதி என்றும், ஜாநவ மகாரிஷி சாப்பிட்டுக் காதினாலே விட்டபடியால் ஜாநவி என்றும் பெயருண் டாயிற்று. இப்படிக்கொத்த மகத்துவம் பெற்ற கங்கா நதியாகும் இதுவென்று விஸ்வாமித்திர மகாமுனி சொல்ல, அதுகேட்டு ராமமூர்த்தி அதிக சந்தோஷ சித்தராகி, அந் நதியைவிட்டு அப்பால் நடந்தார்கள். அவ்விடத்தில் விசாலை தேசத்து ராஜன் வந்து கண்டு அநேக உபசாரம் செய்தான். அவனுடனே இனிய வார்த்தைகள் பேசி அவ்விடம் விட்டு அப்பால் நடந்தார்கள்.

அகலிகையின் வரலாறு

அங்கே அநேக சிங்காரம் பொருந்திய கழனிகளில் இரானின்ற தாமரைப் புஷ்பத்தில் நித்திரைசெய்து எழுந்திருந்த நாரைகள் கழனிகளில் களை பறிக்கிற பள்ளஸ்திரீகளுடைய நீண்ட கண்ணிழல்களை ஜலத்துக்குள் கண்டு, கயல்மீனென்று எண்ணி மூக்கினால் குத்திப் பார்த்து வெட்கிப்போயின. ஏரி மதகுகளுடைய முழக்கங்கள் மத்தளமாகவும், அசோக புஷ்பங்கள் விளக்குகளாகவும், வண்டுகளின் நாதத்தைச் சுதியாகக்கொண்டு பாடவும், மயில்கள் நடனஞ் செய்தது. தாமரைத் தடாகங்களிலே ஸ்திரீக ளிறங்கித் தங்கள் கைவளைகள் சத்திக்க, மூழ்குகிறது எப்படி யிருக்கிறதென்றால், திருப்பாற் கடலில் இலட்சுமி இப்போது தான் பிறந்தெழுந் திருக்கிறப் போலவும் இன்னம் பலபல அதிசயச் சிங்காரங்களும் விநோதங்களும் உண்டாகிய மிதிலாபுரிப் பட்டணத்தின் சமீபத்தில் வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில் ஒரு ரிஷிபத்தினி கருங்கல்லாய் வழியிலே கிடந்தாள். அந்தக் கல்லின்பேரில் ஸ்ரீ ராமனுடைய பாதார விந்தத்தினு லெழும்பின தூள்கள் பட்டன. இப்படி பட்ட மாத்திரத்தில் அந்த ஸ்ரீ ராமனுடைய பாதார விந்தத்தை மெய்யாக நம்பி யிருக்கிறவர்களுடைய அக்கியானம்போய் எப்படி கியான புருஷர்களாவார்களோ அப்படிபோல அந்தக் கல்லுருவமாறி பூர்வபடிக்கு ரிஷி பத்தினியாகி நின்றாள். அதுகண்டு விஸ்வாமித்திர மகாரிஷி ஸ்ரீ ராமனைப் பார்த்து, ஓ ஆகாயத்திலே யிருந்த கங்கையைப் பூலோகத்திற்குக் கொண்டு வந்த மகாநுபாவனுடைய வம்சத்தில் பிறந்த புருஷோத்தமா! மகா சந்தோஷத்துடனே மின்னல் போல ஒதுங்கி நிற்கின்ற இந்தப் பெண் தேவேந்திரனுக்கு ஆயிரங்கண் உண்டாக்கின கௌதம மகாரிஷியினுடைய பத்தினி. இவள் பெயர் அகலிகை யென்று சொன்னார். அதுகேட்டு ஸ்ரீராமன்

வியப்புற்று, சுவாமி! இந்த அம்மாளுக்குச் சாபம் வந்த வரலாறு சொல்ல வேண்டும் என்று கேட்க, விஸ்வாமித்திரர் சொல்லுகிறார். ஓ ராமா! ஒரு நாள் தேவேந்திரன் இந்த அகலிகையைக் கண்டு காம விகாரங்கொண்டு, மன்மதபாண உபத்திரவத்தினால் அடியுண்டு, அக் கௌதமரில்லாத வேளை பார்த்து, அவரைப்போல உருவங் கொண்டுவந்து சேர்ந்திருந்தான். அப்போது கௌதம மகரிஷி வந்து பார்த்து அதிக கோபமானார். அப்போது தேவேந்திரன் பூனை ரூபமெடுத்து அப்பாலோடிப் போகிறபோது, அந்த மகாரிஷி ஸ்ரீ ராமா! உம்முடைய பாணத்துக்குச் சமானமான அவருடைய வாக்கினாலே ஆயிரம் ஸ்திரீகளுக்குரிய குறி உன் சரீரத்தில் உண்டாகக் கடவதென்று சபித்தார். அத்தட்சணமே ஒரு நிமைப்போதில் அவனுடைய சரீரமெல்லாம் அக் குறிகள் நிறைந்தன. அந்தக் குறிகளோடு வெகு நாணத்துடனே தேவேந்திரன் போனபிற்பாடு, அந்தக் கௌதமர் அகலிகையைப் பார்த்து வேசிக்குச் சமானமான நீயும் கல்லாகக் கடவதென்று சபித்தார். அப்போது அவள் அவரைச் சேவித்து ஸ்வாமி! அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்து ரட்சிக்கவேணுமென்று கேட்டாள். அதற்கு மகாரிஷி கிருபைசெய்து, தசரத ராமன் பாதார விந்தத்தின் தூள் உன்பேரில் படுமாகில், இந்தச் சாபம் விமோசனமாகுமென்று சொன்னார். பின்பு அசுரை ரூபத்தோடிருக்கிற தேவேந்திரனைக் கண்ட பிரமன் முதலிய தேவர்கள் கௌதமரிடத்துக்கு வந்து வேண்டிக்கொள்ள, அவரும் கோபந்தீர்ந்து அவைகள் அவனுக்கு ஆயிரங் கண்களாக யிருக்கும்படி அனுக்கிரகம் செய்தார். பின்பு அவரவர்கள் இடத்திற்போய்ச் சேர்ந்தார்கள். இவளும் கல்லாய்ச் சமைந்தாள். இது பூர்வம் நடந்தது. ஸ்ரீ ராமா! இனி இந்த உலகத்திற்கு யாதொரு விபத்துமிராது. அங்கு அந்தத் தாடகையின்பேரிலே உமது கரத்தினுடைய மகிமையையும், இங்கு அகலிகையின் பேரிலே உமது காலினுடைய மகிமையையுங் கண்டேன். இப்படி குற்றமில்லாத உதவி செய்த திருவடியையுடைய ஸ்ரீ ராமன் விஸ்வாமித்திரர் சொன்னதெல்லாங் கேட்டு, ஓ அம்மா! அந்த முனீஸ்வரருடைய அனுக்கிரக மிருக்கும்போது யாதொரு துன்பமும் அணுகமாட்டாது போமென்று திருவடியைச் சேவித்துக்கொள்ள அவளும் போயினள். இவர்களும் அந்தக் கௌதமருடைய ஆசிர்மத்துக்குப் போகவே, அவர் எதிர்வந்து கண்டு அழைத்துக் கொண்டுபோய் செய்யவேண்டிய கடன் முறை யாவற்றும் செய்தார். அவரை விஸ்வாமித்திர மகாமுனி நோக்கி, இந்த நீலமேக சுரூபனுடைய திருவடிகளின் தூள் படுவதற்கு முன்னமே பழைய சுரூபங்கொண்டு நின்றாள். ஆதலால் நீர் அழைத்துக் கொள்ளுமென்று சொன்ன மாத்திரத்தில் பிரமனுக்குச் சமதையாகிய அந்தக் கௌதமரும் அங்கீகரித்துக் கொண்டார். ஸ்ரீ ராமனும் அவரைச் சேவித்துக்கொள்ள, அவரும் இவாளுக்கு ஆசிகள்கூற, அகலிகையை அவர்கள் கையில் ஒப்புவித்து விஸ்வாமித்திர மகா முனியின் பின் மிதிலையை நோக்கி நடந்தார்கள்.

மிதிலைக்காட்சிப் படலம்

அந்த மிதிலை நகரமானது ஸ்ரீ ராமன் வருகிறதைப் பார்த்து, சுவாமி தாமரைக் கமலத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ மகாலட்சுமி நான் செய்த தவத்தினால் என்னிடத்தில் பிறந்து வளர்ந்திருக்கிறாள். நீர் கலியாணம் செய்துகொள்ளு கிறதற்குச் சீக்கிரமாய் வாரும் வாருமென்று தனது கொடிச்சீலைகளாகிய கைகளைக் காட்டி யழைக்கிறதுபோல அசைந்துகொண்டும், மிகுந்த அழகை யுடைய சீதையை விவாகம் செய்யும்பொருட்டுத் தருமதேவதைகளே தூதுபோய் வருகிறார்களென்று அரம்பா ஸ்திரீகள் ஆகாயத்திலாடும் ஆட்டத்தைப் போலவும், சூரியன் மறைய ஆகாயம் பால் சமுத்திரம்போலத் தோன்றும்படி நீண்டு பரவிய கொடிச்சீலைகள் மேகத்தில் படுந்தோறும் நனையவும், ஸ்திரீகளி னுடைய அளகபாரத்திற்கு ஊட்டும் அகிற் புகைகளால் உலரவும், இரானின்ற நகரத்தில் சீதை வாசமா யிருக்கிறபடியால் ஸ்ரீ மகா லட்சுமி வாசஞ் செய்கிற பொற்றாமரைக் கமலம் போலவும் தோன்றுகின்ற அந்த மிதிலாபுரி பட்டணத் துக்குள் பிரவேசித்தார்கள். அப் பட்டணத்திலுள்ள ஸ்திரீ புருஷாள் சம்பிரம மாக இருக்கிறபோது ஒருவர்க்கொருவர் ஊடல் நேரிட்டு, அதனால் அந்த ஸ்திரீகள் அணிந்திருந்த ஆபரணங்கள் வீதிகளில் வீழ்ந்து பிரகாசித்துக் கொண்டிருந்தன. இராஜ வீதிகளில் பந்தி பந்தியாய்ப் போகிற யானையி னுடைய மதசலங்கள் ஒரு ஆறாகவும், குதிரைகளினுடைய வாயிலிருந்து ஒழுகா நின்ற நுரைகளால் அந்த ஆறு அழிந்து சேறாகவும், தேர்க்கூட்டங்கள் மேலும் மேலும் ஓடுகிறதினால் அந்தச் சேறு தூள்களாகவும் இப்படி வேறு வேறு விதமாக இருந்தன. அந்நகரத்து மாந்தர்கள் இராப்போசனம் புசித்த பின்பு கலவிப்போரில் மெலிந்த ஸ்திரீகளைப்போல, அவர்களுடைய ஊடல் முதிர்ந்து அளகபாரத்தில் சூடியெறிந்த புஷ்பத்தில் வண்டோடு தேனும் பொருந்தியிருந்தன. அந்தப் பட்டணத்தி லுள்ளவர்கள் யானையோடு யானையை சண்டைக்கு விட்டு வேடிக்கை பார்க்கிறதும் ஸ்திரீகள் தடாகங்களில் இறங்கி விளையாடுகிறதும், பந்துகளானது வேசிகள் மனதைப் போல கைகளில் வரும்போது சிவந்தும் கண்ணால் பார்க்கிறபோது கறுத்தும், இப்படி வேறு வேறு விதமாய்க் காணும்படி விளையாடுகிறதுமாய் இருந்தன. இவ்வித அலங் கார வேடிக்கையோடிருக்கிற மிதிலாபுரி பட்டணத்தின் மத்தியில் சனக மகா ராசனுடைய அரண்மனைக்குச் சமீபத்தி லுண்டாகிய நானாவித வேடிக்கை களைப் பார்த்துக்கொண்டு போனார்கள். அப்படி விசுவாமித்திரர் முன்னும் ஸ்ரீ ராமன் இடையிலும் லட்சுமணர் பின்னுமாகப் பார்த்துக்கொண்டே நடக் கிறபோது, அவ்விடத்தில் கன்னிகாமாடத்தில் அனேக மின்னல் கூட்டத்தில் நடுவே ஒருவித மின்னல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாப்போல, அநேகம் ஸ்திரீகள் மத்தியில் சீதாலட்சுமி பிரகாசித்துக் கொண்டிருந்தாள். அந்த லட்சுமியினுடைய சௌந்தரிய அலங்காரத்தை அடியேன் எவ்வளவு புகழப் போகிறேன்? பிரமன் முதலாகியபேரும் ஒரு ஸ்திரீக்கு உவமானம் சொல்ல வேண்டுமென்றால் ஸ்ரீ மகா லட்சுமிக்குச் சமானமாகச் சொல்வதே யல்லாமல் வேறில்லை. அந்த மகாலட்சுமி தானே வந்து அவதரித்திருக்க, அவளுக்கு உவ

மானம் யாரைத் தேடிச்சொல்ல மாட்டுவேன்? பார்வதிக்குச் சமானமான ஸ்திரீகள் நமஸ்காரஞ் செய்கிறதற்கு யோக்கியதையுடைய அந்தச் சீதையினழகென்கிற சாகரம் வரம்பற்றதாக இருந்தது. பூலோகத்தார் அவ்வழகைப் பார்க்கிறதற்கு இமையாத கண்கள் நமக்குக் கிடையாமற் போயிற்று என்பார்கள். தேவர்கள் இரண்டு கண்கள் நமக்குப் போதாதென்பார்கள். பால் சமுத்திரத்துக்கு ஆதாரமான அமிர்தம்போல பிரம்ம சிருஷ்டிக்கு ஆதாரமான ஸ்திரீ இந்தச் சீதையேயல்லாமல் வேறில்லை. இப்பூமியில் சீதைபிறந்து அவள் திருமேனியைக் கண்ட பின்பு தேவலோகத்து மேனகை முதலான ஸ்திரீகள் சூரியப் பிரகாசத்துக்குமுன் சந்திரப்பிரகாசம் எவ்வளவோ அவ்வளவு ஆனார்கள். இவ்வளவு சுந்தரத்தோடுங்கூடிய சீதாலட்சுமியை அனேகம் ஸ்திரீகள் சூழ்ந்து நமஸ்காரஞ் செய்துவர, விசால நேத்திரத்தோடு விளங்கிய திருமுகமண்டலத்தைக் கண்டு மரங்களும் கல்லும் புல்லும் மற்றதுகளும் உருகும். அந்தச் சீதையை சூழ்ந்திருக்கிற ஸ்திரீகளும் தாங்களே அவ்வழகைப் பார்த்து மயங்கித் தியங்குவார்கள். இப்படி அழகென்கிற கீர்த்தியையே சர்வாபரண பூஷிதையாகப் பெற்று நின்றாள். ஸ்ரீ ராமன் அவளைப் பார்த்தார். சீதையும் ஸ்ரீ ராமனைப் பார்த்தாள். சீதையினுடைய பார்வையென்கிற வேலானது ஸ்ரீ ராமனுடைய தோளிலுருவிற்று. ஸ்ரீ ராமனுடைய பார்வை சீதாலட்சுமியினுடைய தனத்திலுருவிப் பாய்ந்தது. பார்வை என்கிற அவாவினாலே இருவரும் ஒருவர்க்கொருவர் இருதயகமலங்களில் தழுவிக்கொண்டார்கள். இவ்வித பார்வையில் நின்ற இருவர் கண்களும் ஒன்றோடொன்று கவ்விக்கொண்டு பிரிகிறதற்குக் கூடாமல், நெடுநேரம் ஒரே நிலையைப் பெற்றிருந்தன. இரண்டு சரீரமும் ஒரே ஜீவனைப் பெற்று நின்றது. ஏனெனில், திருப்பாற்கடலில் கூடியிருந்தவர்கள் பிரிந்து இப்போது கூடினால், அதை யின்னதென்று சொல்லக்கூடுமோ? கூடாது. ஆதலால் சீதை மயங்கிச் சித்திரப்பிரதிமைபோல் ஸ்தம்பித்து நின்றாள். ஸ்ரீ ராமனும் மயங்கிச் சீதையினுடைய மனது நிறையும் தன்னைத் தொடர்ந்துவர, விஸ்வாமித்திர மகாமுனியின் பின் நடந்தார். இப்படி நடக்கிறபோது சீதையின் மனமென்கிற மதயானை நிறை யென்கிற அங்குசத்தில் அடங்காமல் மீறி அவர் பின்னே சென்றது. கண்வழியாக வந்த ஆசையாகிய பாலுக்குப் புரைகுத்தினதுபோல சரீரமெல்லாம் விரகாக்கினி யுண்டாகி, பூசியிருந்த சந்தனம் - கதம்பம் - கஸ்தூரிகள் கரிந்து உதிர்ந்தன. அதுகண்டு தாதிகள் முதலிய மற்றவர்கள் மிகவும் கிலேசப்பட்டு, இது என்னவென்று பயந்து திருஷ்டி பரிகாரங்களும் தெய்வப் பிரார்த்தனைகளும் செய்தார்கள். ஆலவட்டம் - விசிறி - வெண்சாமரை முதலியவைகளினாலே விசிறினார்கள். அது அக்கினிக்கு விசிறினதுபோல மிகவும் வெப்பங் கொடுக்கவும் சீதையானவள் பொற்பிரதிமைபோல் உருகினாள். இருள் அவர் சிகையென்றும், மரகத ரத்நம் அவர் தோளென்றும், கமலம் அவர் கண்ணென்றும், இந்திர தனுசுடனே பூமியிலிறங்கிய மேகம் அவருடைய நிறமென்றும் சொல்லுவள். அன்றியும் என் மனதுக்குள்ளே புகுந்து என்னுடைய நிறையையும் பெண் தன்மையையும் உயிரையும் உருக்கி உண்டு போனவர் காமனே வென்றால் கையில் கருப்புவில் இல்லையென்றும், கண்வழியால் என் மனதுக்குள் புகுந்து நலத்தைப் பறித்தவர் கள்ளனாக வேணுமென்

றும், சந்திரனைப்போ லிருக்கிற முகமும், ஆஜானுபாகுவும், அழகு பொருந்திய தோள்களும், அவர் புன்சிரிப்பானது என்னுயிரை உண்கிற தென்றும், தேவனெவென்றால் கண்கள் இமைக்கிறபடியினாலே தேவனல்ல, கையில் வில்லும் மார்பில் பூணூலும் இருக்கிறபடியால் இராஜகுமாரனுக வேணுமென்றும், என்னுடைய மனதை இப்படிக் கரைத்துக் கன்னிகை யென்கிற மதிலைக் கடந்துபோன அந்தப் புருஷனை இன்னமொருதரம் கண்ணினால் பார்த்து ஜீவனை விடலாமென்றும், உருவெளித் தோற்றத்தினால் இவர்தானென்றும், இப்படிப் பலவாறுகச் சொல்லிச் சொல்லி நினைந்து நினைந்து உருகிக்கொண்டிருக்கிற சமயத்தில், இந்தச் சீதையினுடைய விரகாக்கினி தன்னையும் சுடுமென்பதை நினைத்துத் தாளமாட்டாமல் நீண்ட கதிர்களாகிய கைகளை ஒடுக்கிக்கொண்டு சூரியனனவனெடி முன்னதாக மேற்சமுத்திரத்தில் மூழ்கினான். பின்பு தென்றல் காற்றும் இருளும் தோன்றியபடியால் அக்கினியை சொரியா னின்ற அந்திமாலையானது கறுத்த நிறமும் சிவந்த மயிரும் கையிற் பாசக்கயிறுங் கூடிய யமனைப் போலத் தோன்றிற்று. தென்றலானது தடாகங்க ளென்கிற அக்கினியில் மூழ்கி, வாசனைபொருந்திய புஷ்பத்தில் விஷம் ஊட்டிக்கொண்டு, காமபாணம்பட்ட புண்வழியாய் நுழைந்தால், அறிவும் அழகுங் குலைந்து சோர்ந்தவள் உயிருண்ணப் பிரகாசிக்கும் அந்திவானத்தைப் பார்த்து, இதுதானே கூற்றுவனுடைய வடிவென்று சொல்லுவள். கடலோ? மேகமோ? ரத்னமோ? காயாம்பூவோ? குவளையோ? நீலோற்பலமோ? என்னுடைய உயிரையுண்பது யாது? என்கிற தாகத் தளர்ச்சியடைந்தவளுக்கு முன் ஸ்ரீ ராமனைப்போல மாலைப் பொழுதைப் பார்த்து, என்னை ஏன் பகைக்கிறாய்? எய்கிறவனுடைய கரங்களாகிய வில்லை இருக்கிற உயிரா ஒன்றல்லது வேறில்லை. ஆதலால் இப்பழியை நீ அடைதற்கு உன்னைநி எனக்குப் பகையுண்டா? என்று பின்னையும் சொல்லுகிறாள்.

ஆலகாலவிஷம் உலகெல்லாம் பரவியதோ? அல்லது அந்த மகாபுருஷனுடைய நீலத்திருமேனியை யாரும் நினைக்க நினைக்க அதுவே யிப்படிக்கு நிரம்பியதோ? அல்லது கூற்றுவனுடைய நிறத்தை மையுடனே கலந்து குழைத்து ஆகாயத்திலும் பூமியிலும் மெழுகியிருக்கின்றதோ? இவ்வித மகாகொடிய இருளுண்டாயிற்றென்று தெரிசனமானவர் மறைந்து போய்விட்டாரோ? இவ்விருளை விலக்குகிறவர் ஒருவரையும் காணேன்; ஓ இருளே! என்னைப் பெண்ணென்றெண்ணி மனது இரங்காயோ? இருட்டிலே ஒளித்துக்கொண்டு அம்பை எய்யும் மன்மதனர் உனக்கு இந்த யுக்தி சொன்னாரோ? அல்லது என்னுடைய பொல்லாத காலத்தினாலே அன்றில் பட்சியாய் நீயுங் கூவிக் கொல்லப் புறப்பட்டாயோ? என்று பலவாறுக மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறபோது, தோழிகள் ரத்தினமயமாகிய திருவிளக்கினால் இருட்டைப் பகலாகச் செய்தார்கள். பூர்வத்தில் க்ஷீராப்தியைக் கடைந்த போது அந்தப் பொற்கலசத்தில் உதித்ததுபோலச் சந்திரோதயமாயிற்று. தாமரைப் புஷ்பங்கள் குவியவும், அல்லிப் புஷ்பங்கள் மலரவும், இருள் நீங்கவும், தனது கிரணங்களோடு புறப்பட்ட சந்திரோதயம் எப்படிக் கிருந்ததெனில்? தாதாவாகிய வெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப முதலியாருடைய கீர்த்தி

யைப்போல உலகமெல்லாம் வியாபித்தது. ஸ்ரீமந் நாராயணனுடைய உந்திக் கமலத்தில் பிறந்த இந்த அண்டம் பழைமையாய்ப் போயிற்றென்று புதுக்கு கிறவனைப்போல சந்திரன் தன்னுடைய கிரணங்களால் எங்கும் பிரகாசிக்க விருந்தனன். அப்படி புறப்பட்ட சந்திரனைப்பார்த்து உலகங்களை விழுங்கிக் கொண்டு வந்த கருநெருப்புக்கு நடுவே புறப்பட்ட வெண்ணெருப்பே! நீயுஞ் சுடவந்தாயோ? ஆ! சந்திரா! நீ பொல்லாதவனல்லவே! அமிர்தத்துடனே ஒரு பெண்ணைடு கூடப்பிறந்த நீ இப்படிச் சுடலாமா? அந்தச் சந்திர கிரணங் கள் தனங்கள்பேரில் படுவதால் சீதை நெருப்பிலே விழுந்த அன்னப் பட்சி யைப்போல புஞ்சனை மெத்தையின்பேரில் பதைத்துப் புழுங்குவள். புஷ்ப மெத்தைகள் சரீரவெப்பத்தால் கருகிக் கருகிப்போக, அவைகளைத் தாதிகள் அன்போடு அடிக்கடி மாற்றிக்கொண்டே யிருப்பார்கள். இப்படி சீதாலட்சுமி ஸ்ரீ ராமனுடைய திருவழகை நினைத்து நினைத்து விரகதாபப்பட்டுக்கொண் டிருந்தாள்.

இப்படி யிருக்கிற சீதாலட்சுமியின் திருவழகைக் கண்டு மிகுந்த ஆசை யுடனே நடந்த ஸ்ரீராமன் விஸ்வாமித்திர மகாமுனியின் பிறகே தம்பியுடனே கூட நடந்துபோய்ச் சனகராசனைக் காண, அவர் மிகுந்த சந்தோஷத்துடனே உபசாரஞ்செய்து போக பூமிக்குச் சமானமான ஒரு விடுதி மாளிகையைத் திட்டஞ்செய்ய, அதிலிருந்தார்கள். அப்போது, ஸ்ரீ ராமனுடைய பாதார விந்த மகிமையினாலே சாபவிமோசனமான அகலிகையினுடைய புத்திரனாகிய சதானந்தர் அவ்விடத்திற்கு வந்தார். ஸ்ரீ ராமர் அந்த மகானுபாவரை நமஸ் காரம் செய்துகொண்டார். அந்த ரிஷி மிகுந்த அன்புடனே ஆசீர்வாதம் செய்து, விஸ்வாமித்திர மகாமுனியின் முகத்தைப் பார்த்து, ஐயா! நீர் இவ் விடத்திற்கு வருகிறதற்கு இந்தப் பூமி என்ன தவம் செய்து யிருந்ததென்று கேட்க, கேளும் சதானந்தரே! இந்த இராஜகுமாரன் தாடகையையும், என் னுடைய வேள்வியையும் உமது தாயினுடைய சாபத்தையும் முடித்து, என் மனக்கிலேசத்தையும் ஒழித்தவரென்று விஸ்வாமித்திரர் சொல்லினர். அது கேட்ட சதானந்தர் அதிக சந்தோஷத்தோடு கேட்டு, ஐயா! உம்முடைய கிருபை அவரிடத்தில் பரிபூரணமா யிருக்கச்சே, அவருக்கு எந்தக் காரியம் அருமையா யிருக்கப்போகிறதென்று சொல்லி ஸ்ரீ ராமனுடைய திருமுகத் தைப் பார்த்து, சதானந்தர் சொல்லுகிறார்: ஓ இராஜ குமாரரே! கேளும்: இந்த மகானுபாவரான விஸ்வாமித்திரர் பூர்வத்தில் அனேககாலம் இராச்சிய பாரத்தைச் செய்துக்கொண்டிருந்தார். அப்படியிருக்கிற காலத்தில் ஒருநாள் வேட்டைக்குப் புறப்பட்டு கொடிய ஆரணியத்திற்குப் போனர். அவ்விடத்தில் வசிஷ்ட மகாமுனி இவரைக் கண்டு இராஜா வந்தாரேயென்று சந்தோஷ வார்த்தைசொல்லி, பின்பு உமக்கு விருந்து செய்விக்கின்றேன் போசனம் செய்து போமென்றுசொல்லி காமதேனுவை அழைத்து, இந்த ராஜாவுக்கும்கூட வந்திருக்கின்ற சேனைகளுக்கும் அதிக சந்தோஷ திருப்தியாகும்படி அறு சுவை பதார்த்தங்களும் திவ்வியான்னமும் பொழியும்படி ஆக்கியாபித்து, சகலமான பேருக்கும் போசனஞ் செய்துவைத்து, புஷ்பம் சந்தனம் தாம்பூலவர்க்கம் முத லியவைகளும் கொடுத்தார். அதுகண்டு விஸ்வாமித்திரர் ஆச்சரியப்பட்டு, ஐயா

முனிவரே! நீர் ஆசனம் விட்டு எழுந்திருக்கவேயில்லை. எனக்கும் என் சேனு சமுத்திரத்துக்கும் இஷ்டான்ன முதலிய விருந்துசெய்து திருப்தி செய்தீர், ஆனால் இப்பேர்க்கொத்த தபசு உம்மிடத்தில் இருக்கிறதினால் யாதொரு பிரயோசனமும் படமாட்டாது. இது இராசர்களிடத்திலிருக்குமாகில் அதிக பிரயோசனமா யிருக்கும். மேலும் ரிஷிகளுடைய பொருள்களெல்லாம் இராசர்களுக்கு உரியதென்று சாஸ்திர மிருக்கிறபடியினாலே, உமக்கு இந்தக் காமதேனு தகாதென்று சொல்லி, இந்தப்பசுவை எனக்குக் கொடுமென்று கேட்க, அதற்கு வசிஷ்டர் சில கடிதை பேசாமல் மௌனமாயிருந்து, பின்பு அவரைப் பார்த்து, இந்தப்பசு நம்மிட ஆதீனமல்ல. நான் கொடுக்கமாட்டேன். அல்லது அது வருமானால் அழைத்துக்கொண்டு போம் என்று சொல்லினர். அதுகேட்டு அப்படியே செய்கிறேனென்று எழுந்திருந்து, சேனு சமுத்திரத்துடனே அந்தப் பசுவை வளைத்துப் பிடித்துக் கயிறுகளைப் போட்டுக் கட்டினர். அப்போது காமதேனு அந்தக் கயிறுகளையெல்லாம் சின்னபின்னமாக அறுத்துவிட்டு வசிஷ்டர் முன்பாக வந்து, சுவாமி! இராசாவுக்கு என்னை நீர் கொடுத்தீரோ வென்று கேட்டது. அதற்கு வசிஷ்டர் நான் கொடுக்கவில்லை. இராஜன் தானே பிடித்துப் போகிறானென்று சொல்ல, பசு மிகுந்த கோபத்தோடு இந்த ராசாவினுடைய சேனைகளை எல்லாம் மடித்துப் போடுகிறேனென்று மயிர்களை சிலிர்த்தது. அந்த மயிர்களிலிருந்து பப்பரரும் - வேடரும் - சீனருமாக உற்பவித்து, இராஜாவின் சேனைகளெல்லா மடிய அடித்தார்கள். அப்போது இராஜாவின் குமாரர்கள் கோபித்துக்கொண்டு, இது பசுவின் தன்மையல்ல, இந்த ரிஷியின் வஞ்சனையென் றெண்ணிக் கொண்டு, அவருடைய சிரசை வெட்டிப் போடுகிறோமென்று ஆயுதபாணிகளாய் வசிஷ்டர் சமீபத்தில் அக்கினிபோல வந்தார்கள். அப்போது அவர் கோபத்துடனே அவர்களைப் பார்க்க, அந்தக் குமாரர்கள் நூறுபேரும் மடிந்து போனார்கள். அதுகண்ட இவர் மகா கோபத்துடனே ரதமேறிக் கொண்டு வில்லை வளைத்துச் சரமாரியாய் வசிஷ்டர் பேரில் பொழிந்தார். அவர் அதைக் கண்டு தமது யோகதண்டை எதிர்க்கும்படி ஆக்கியாபித்தார். அதை இராஜனறிந்து சிவனை நோக்கி ஸ்துதி செய்தார். அவர் ஒரு அஸ்திரங் கொடுத்தார். அந்த அஸ்திரத்தை வாங்கி வசிஷ்டர்பேரில் விட்டார். அது அக்கினிச் கவாலையாய் சமீபத்திலே வந்தது. அதைக் கரத்தினால் பிடித்துச் சாப்பிட்டுவிட்டார். அதிலிருந்த அக்கினிச் சுவாலைகளெல்லாம் மயிர்க்கால்களில் புறப்பட்டுப் பொறிகளாய் விட்டது. அதுகண்டு இவர் ஆச்சரியமாகி, சகல சாமர்த்தியங்களும் ரிஷிகளுக்கேயல்லாமல் வேறொருத்தருக்கு மில்லையென்று அறிந்து துணிவுகொண்டு, தாமும் தபசு செய்வோமென்று நினைத்துப் புறப்பட்டு, கிழக்குத் திசையில் போய் வசிஷ்டர் செய்த மகிமையை மனதிலே நினைத்துத் தபசு செய்துகொண்டிருந்தார். இந்தச் செய்தி தேவேந்திரன் கேட்டு திலோர்த்தமை என்கிற பெண்ணை இவருடைய தபசை பின்னம் செய்ய அனுப்பினன். அந்த தேவரம்பையின் சுரூபத்தைக் காணவே, மனங் கலங்கி விரக மிகுந்து அவளைச் சேர்ந்து, அனுபவித்து, உடனே தெளிந்து, இது இந்திரனுடைய தந்திர வுபாயமென்று அறிந்து, அந்தத் திலோர்த்தமையைப் பூலோகத்து ஸ்திரீயாகக் கடவதென்று சபித்து, அவ்விடம் விட்டு

தெற்குத்திசைபோய்ச் சேர்ந்து பின்னையும் அதிகமான தபசு செய்தார். அப்போது, அயோத்தியாபுரியிலே திரிச்சங்கு மகாராஜா தன்னுடைய குரு வான வசிஷ்டரை வணங்கி, சரீரத்துடனே சுவர்க்கலோகம் போக அநுக்கிர கம் செய்யவேண்டுமென்று கேட்டான். அதற்கவர் சரீரத்துடனே போகக் கூடாதென்று சொன்னர். அப்படி உம்மால் ஆகாவிட்டால் என் மனதுக்குச் சம்மதியானவர்களைத் தேடி அதற்குத் தக்க யாகஞ் செய்துகொள்ளுகிறே னென்று இராஜா சொல்ல, குருவை நிந்தித்து வேறே ஒரு குருவைச் சம் பாதித்துக் கொள்ளுகிறேனென்று சொன்னபடியால் நீ நீச்சனாகக் கடவ தென்று சபித்தார். அந்த க்ஷணமே சூரியப்பிரகாசம் போலிருந்த திரிச் சங்கு மகாராஜாவின் சரீரம் கெட்டு முகவழகும் இழந்து, ரத்னகசிதமான ஆபரணங்களெல்லாம் இரும்பாகி, சரீரங் கறுத்து, சகலரும் பார்த்து இகழ்ச்சி செய்யத்தக்க ரூபம் அமைந்தது. அந்த ரூபத்தோடு ஆரணியஞ் சேர்ந்து சஞ்சாரஞ் செய்துகொண்டிருக்கும்போது, அவ்விடத்தில் தவஞ் செய்துகொண் டிருந்த இந்த கௌசிகரைக் கண்டு, தன்னுடைய செய்தி யெல்லாம் விகசித மாகச் சொல்லினன். அதுகேட்டு இவ்வளவு காரியந்தானு வென்று நகைத்து, யாகஞ் செய்து அப்படியே சரீரத்துடன் உம்மைச் சுவர்க்கத்துக்கு அனுப்பு கிறேனென்று நிறுத்திக்கொண்டு, அங்குச் சமீபத்தில் இருந்த ரிஷிகளை யெல் லாம் அழைப்பித்துக்கொண்டு வசிஷ்டர் பிள்ளைகளையும் வரச்சொல்லி யனுப்பி னர். அவர்களை ஒரு ராஜன் ஒரு புலையனுக்குச் சுவர்க்கம் கொடுக்கப் போகி றனும். அதற்கு நம்மை வரச்சொல்லுகிறது நன்றாயிருக்கிறதென்று பரியா சஞ் செய்தார்கள். அதுகேட்டு கோபித்து, அவர்களைக் கிராதகாளாகக் கடவ தென்று சபித்தார். அந்தப்படியே அவர்கள் வேடுவராய்க் காடுகளிலே திரிந்துகொண் டிருந்தார்கள். பின்பு இவர் யாகத்தை ஆரம்பித்து நிறை வேற்றிய பின்பு சாபவிமோசனம் செய்யும் பொருட்டு அவர்களை வரச் சொல்லி யனுப்பினர். அப்போது முன் சொன்னபடியே சொல்லி வராமல் நின்றுவிட்டார்கள். அப்பால் இவர் திரிச்சங்கு மகாராசனை அழைத்து விமானத்தில் ஏற்றித் தேவலோகத்திற்கு அனுப்பினர். தேவர்கள் கோபித்து, நீச்சன் இங்குவரக் கூடாதென்று தள்ளிவிட்டார்கள். பின்பு அந்தத் திரிச்சங்கு மகாராஜன், சுவாமி! சரணம் சரணம் என்று திரும்பி பூலோகத்திற்கு வந்து சேர்ந்தான். அதுகேட்டு இந்தக் கௌசிகர், நம்மிட ஆக்கினையை இகழ்ந்த தேவர்களையும் தேவலோகத்தையும் வேறே சிருஷ்டிக் கிறேன். சந்திர சூரியனைத் தெற்கு வடக்காக வரச்செய்கிறேன் என்று கோபித்து அந்தப்படியே செய்ய ஆரம்பித்தார். தேவேந்திரன் முதலான தேவர்களும் பிரமாவும் சிவனும், இவர் எதிரே வந்து, ஐயா கௌசிகரே! கோபத்தைப் பொறுத்தருளும்; திரிச்சங்குக்கு நட்சத்திர பதவி கொடுக்கி றோம். நீரும் ராஜரிஷியாக விருமென்று சமாதான அநுக்கிரகம் செய்து அவரவர்கள் யதாஸ்தானம் போய்ச் சேர்ந்தார்கள். கௌசிக ரிஷியும் மேற்கி லிருந்து தபசு செய்துகொண்டிருந்தார். அவ்விடத்தில் அம்பரீஷ மகாராசன் புருஷமேத யாகம் செய்யவேண்டுமென்று ஓர் யோசனை செய்துகொண்டு, ஒரு பிள்ளையை விலைக்கு வாங்க அநேக திரவியம் கட்டிக்கொண்டு ஆரணியத்தில் வந்தான். வந்தவிடத்தில் இருசிக ரிஷியைக் கண்டு வந்த செய்தியைச் சொல்ல,

அவர் கேட்டு எனக்கு மூன்று பிள்ளைக ளிருக்கின்றன. அதிலே மூத்த பிள்ளைதான் எனக்கு வேணுமென்று சொன்னர். பெற்றவள் தனக்கு இளைய பிள்ளை வேணுமென்று சொன்னள். அப்போது இடைப்பிள்ளை ராசாவைப் பார்த்து, நீர் என்னைப் பெற்று எடுத்து வளர்த்தவருக்குத் தரித்திரந் தீர திரவியத்தைக் கொடும், நான் உம்முடனேகூட வருகிறேனென்று சொல்லித் தாய் தகப்பனிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு சந்தோஷ சித்தனாய், ராஜனேடுகூட ரதமேறிக்கொண்டு போனன். உச்சிகால மானபோது அம்பரீஷ மகாராசன் தனது காலக்கடமைகளை முடிக்கிறதற்கு இரதம் விட்டிறங்கி ஒரு தடாகத்துக்குப் போனன். தேரிலிருந்த இந்தப் பிள்ளை அங்கிருந்த கௌசிக மகாரிஷியைக் கண்டு சமீபத்தில் வந்து சேவித்துக்கொண்டு, நடந்த செய்தியைச் சொல்லிக்கொண்டான். அதைக் கேட்டு மைத்துனனும் தமக்கையும் செய்த காரியத்திற்கு மிகவும் வருத்தமுள்ளவராகி, நீ பயப்பட வேண்டாம். உன் பிராணனை ரட்சிக்கிறேனென்று சொல்லி முன் வசிஷ்டர் கோபத்திலே அகப்பட்டு மடியாமல் தப்பியிருந்த தன் நான்கு பிள்ளைகளையு மழைத்து நீங்கள் ராசன் பிறகே போங்களென்று சொன்னர். அவர்கள் அவ்வார்த்தையைக் கேளாமல் மறுத்தார்கள். அதன்பேரில் அவர்களைக் கோபித்து, நீங்களும் கிராதகராய்ப் போகக்கடவீ ரென்று சபித்தார். அப்பால் மருமகனை யழைத்து இரண்டு மந்திரம் உபதேசஞ் செய்து, நீ இந்த ராசன்பிறகே தானேபோய் யாகசாலையின் யூபஸ்தம்பத் தடியிலிருந்து இந்த மந்திரத்தை உச்சரித்துக்கொண் டிருப்பாயாகில், உன் பிராணனுக்குச் சேதம் வராதென்று சொன்னர். அப்படியே செய்கிறேனென்று சொல்லி நமஸ்காரம் செய்து அந்த ராசன்பிறகே போய், யாகச் சாலையில் யூபஸ்தம்பத்தின் அருகிலிருந்து அந்த மந்திரத்தைச் செபித்தான். அப்போது பிரமா-விஷ்ணு-உருத்திரன்-மும்மூர்த்திகளோடு இந்திரன் முதலிய தேவர்களும் பிரசன்னமாகி, அம்பரீஷ மகாராசனுடைய அபீஷ்ட வரங்களெல்லாம் கொடுத்து, இந்தப் பிள்ளைக்கும் உயிர்ச்சேதம் வராமல் காத்தார்கள். அப்பால், கௌசிக மகாரிஷி வடக்குத் திக்கில் சென்று, ஓரெழுத்து மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு பிராணயாமம் என்கிற யோகத்தினால் பிராணவாயுவை இரேசிக பூரக கும்பகம் செய்துகொண்டு காருகபத்தியம் தக்ஷணாக்கினி ஆகவனீயம் என்கிற மூன்று அக்கினியையும் மூடுக்கி அனேக வருஷ காலம் தபசு செய்தார். அப்போது மூலாக்கினியினால் கபாலம் வெடித்து, அந்த ரத்தத்தினாலுண்டாகிய சுவாலையும் புகையும் எங்கும் பரவி, சூரிய சந்திராள் அஷ்டதிக்குப் பாலகர் முதலிய சராசரங்களினுடைய கண்களை விழிக்க வொட்டாமல் மூடிக் கொள்ளவே சூரியனுடைய ரதம் போகவொட்டாமல் திருப்பிக்கொண்டது. தேவர்களெல்லாம் திக்குமுக்கிட்டு நடுநடுங்கினர்கள். பின்பு அம்சத்தின்பேரில் பிரமாவும், கருடன்பேரில் விஷ்ணுவும், ரிஷபத்தின்பேரில் சிவனும், மற்றத் தேவதைகளும் தேவேந்திரனுங்கூட கௌசிக மகாரிஷியின் முன்பாக வந்து, உமக்குச் சமானமான ரிஷிகளில்லை யென்று சொன்னர்கள். இவரும் எழுந்திருந்து அவர்களைச் சேவித்துக் கொண்டு நம்முடைய வினை போய்விட்டதென்று சந்தோஷித்து ரிஷி துல்லியரானர்.

இப்படிக்கொத்த மகானுபாவர் உம்மிடத்தில் பரிபூரணமா யிருக்கிற போது, உமக்கு எந்தக் காரியம் அருமையென்று சதானந்தர் சொல்லினர். இவைகளை ஸ்ரீராமன் கேட்டுச் சந்தோஷமாகி அவரைச் சேவித்துக்கொள்ள, அவரும் அன்புடனே இவர்க்கு ஆசீர்வாதம் செய்து, அவரவ ரிருக்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள். விஸ்வாமித்திர மகாமுனியும் லட்சுமணரும் தங்களுக்கு யோக்கியமான விடங்களில் சயனித்துக் கொண்டார்கள். ஸ்ரீ ராமன் தனியே இருந்தபடியால் கன்னிகாமாடத்தில் கண்ட கன்னிகையை நினைத்து நினைத்து ஆகாயத்தில் பிரகாசிக்கின்ற மின்னல் ஒரு பெண் ரூபமெடுத்து வந்ததோ? என் மனதை மயக்கிக் கண்ணெதிரேயும், இருதயத்திலேயும், நீங்காம லிருக் கின்றதே! இருதய கமலத்தில் பொருந்தியபடியால் தாமரைக் கமலத்தில் வாசமா யிருக்கின்ற லட்சுமியே யாகவேணும். எந்த வஸ்துவைப் பார்த்தா லும் அவள் சுரூபமாய்த் தோன்றுகின்றதே அவள் கிடையாவிட்டாலும் இள நிலாப் பிரகாசம்போலக் குஞ்சிரிப்போடு மருவி யிருக்கிற சிவந்த வாயையும், பூரணச்சந்திரனுக்குச் சமானமான அவளுடைய திருமுகத்தையும், இன்ன மொருதரம் காணக் கிடைக்குமா! மேகலாபரணத்தோடு கூடியதோர் தோளும், வாளைப்போல இரண்டு கண்களும், பாரித்த இரண்டு தனமும், நல்லகைப்பும், யாவராலும் எண்ணும்படி யிருக்கிற யமனுக்கு இத்தனையும் வேண்டுமா? மன் மதனுடைய கருப்பு வில்லிலிருந்து புறப்படுகிற புஷ்ப பாணங்கள் என்னையே இப்படித் துளைத்து வதைக்குமானால், இனி தைரியமென்கிறது யாரிடத்திலிருக் கும்? பாற்கடல்போல் புறப்பட்ட சந்திரன் என் உயிரைத் தொளைக்கின் றானே? உலகத்தில் வெள்ளை விஷமு முண்டோ? அந்தப்பெண்ணி னிடத்தில் வாளைப்போ லிருக்கிற இரண்டு கண்களும், வச்சிரக் கிண்ணங்கள்போ லிருக் கிற இரண்டு தனங்களும், உயிரை யுருக்குகிற சிறுகைகையுமே போதாதோ? கூற்றுவனுக்கு இத்தனைக் கோலமும் வேணுமா? ஆ! ஆ! என் மனது நல் வழியிற் போகுமே யல்லது, துர்வழியில் செல்லமாட்டாதே ஆனால் அப்பெண் கன்னிகையாக இருக்கவேண்டும். இதற்குச் சந்தேகமிராது என்று இப்படிப் பலவாறுகச் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் இரவென்கிற அரச னுடைய குடைவிழுந்தாற்போலச் சந்திரன் மேற்குச் சமுத்திரத்திற்போய் விழுந்தான். சூரியன் ஸ்ரீ ராமன் வருத்தப்படுகிறானென்று இருள்களைக் கடிந்து, தாமரைக் கமலங்கள் மலர, தேவர்களும் ரிஷிகளும் நமஸ்காரஞ் செய்ய, கின்னரர்களிசைபாட, உலகங்களெல்லாம் ஸ்துதிக்க, சமுத்திரகோஷம் மத்தளம்போல அதிர, ஆகாயமென்கிற சபையிலே சிவன் சடைகளை விரித் துக்கொண்டு நடனஞ் செய்கிறப்போல தானும் தன் கிரணங்களை விரித்துக் கொண்டு பிரகாசித்தான். கரத்தில் தரித்திருந்த சக்கரத்தை நீக்கிக் கோதண் டத்தைத் தரித்து வந்திருக்கிற மேகசுரூபனான ஸ்ரீ ராமனைச் சூரியன் தன் னுடைய இளங்கிரணமாகிய கரங்களினாலே திருவடிகளைப் பிடித்து நித்தி ரையை எழுப்ப, ஓர் ஊழிக்காலம் கழிந்தாற்போல அவ்விரவென்கிற சமுத் திரத்திற்குக் கரைகண்டு, நித்திரை செய்து எழுந்திருந்த மதயானையைப்போல் எழுந்திருந்து, காலக்கடமைகளை முடித்துக்கொண்டு, விஸ்வாமித்திரருடனே தம்பியோடு தானும் ஜனகமகாராசாவினுடைய யாகசாலையிற்போய்ச் சேர்ந் தார்கள். ஜனகமகாராசனும் தன் யாகத்தை முடித்து, பேரிகை முதலான

மேளவாத்தியங்க ளார்ப்பரிக்கச் சந்திரமண்டலமட்டும் அளாவியிருக்கிற தம் முடைய சபாமண்டபத்தில் வந்துசேர்ந்தார். இராமலட்சுமணரோடு விஸ்வா மித்திரமகாரிஷியும் சமீபத்தில் எழுந்தருளி யிருந்தார். ஜனகமகாராசன் இந்த ராமலட்சுமணருடைய சுந்தரங்களை நேத்திரானந்தமாகப் பார்த்து, விஸ்வாமித்திரரைச் சேவித்து, சுவாமி! இந்தப்பிள்ளைகள் யார்? அதனை எனக்குத் தெரியச்சொல்ல வேணுமென்று கேட்டனர். உமக்கு விருந்தாக வந்தவர்கள், அன்றியில், நீர்செய்கிற யாகமும் பார்க்கவந்தார்கள். உம்மிடத் திருக்கிற வில்லையும் பார்க்கத்தக்கவர்கள்தான். அனேகங் கீர்த்திபொருந்திய தசரத மகாராசாவினுடைய புத்திரர்களென்று சொல்லிப் பின்னையும் விஸ் வாமித்திரர் அவர்கள் பிரதாபத்தைச் சொல்லத்தொடங்கினர்.

மிதிலைக்காட்சிப் படலம் - முற்றிற்று.

குலமுறைகிளத்து படலம்

கேளும் ஜனகமகாராசனே! சூரிய வம்சத்தில் மநுவென்கிற மகாநு பாவனை யறியாதவர்கள் ஒருவருமில்லை. உலகத்திலிருக்கிற ஜீவராசிகளெல் லாம் பசியினாலே வருந்தாமல் பூமிதேவி முகிலசுரந்து, சகல தானியங்களும் விளையும்படியாய்ச் சாதித்த மகாபுருஷனு மிவர் குலத்திலே பிறந்தவன். அனேககாலம் பிரமாவை நோக்கித் தபசுசெய்து அவரது ஆராதனைக் கடவு ளாகிய அரங்கநாதனை நாம் யாவரும் தரிசிக்கப் பூலோகத்திற்குக் கொண்டு வந்த மகாராசனுமிவர் குலத்திற் பிறந்தவன். அசுரர்களின் உபத்திரவம் பொறுக்க மாட்டாமல் தேவேந்திரன் வந்து முறையிட்டு ரிஷபவாகனமாய் நிற்க, அதன்பேரி லேறிக்கொண்டுபோய் அசுரர்களைச் சங்காரம் செய்து செயித்து இந்திரனுக்குப் பட்டங்கட்டி வைத்தவனும் இவர் குலத்திற் பிறந்த வன் மந்தரகிரியைச் சமுத்திரத்திலே போட்டுக் கடைந்து இந்திராதி தேவதை களுக்கு நரை திரை மூப்பு மரணங்கள் வராதபடிக்கு அமிர்தங் கொடுத்தவனும், புலியும் பசுவும் ஒரு துறையில் ஜலங் குடிக்கும்படியாய் இராஜ்ஜியபாரம் செய் தவனும், தேவர்களும் அசுரர்களும் போர் செய்கிற நாளையில் தேவலோகத்தில் தரும சிந்தையாயிருந்து இராஜரீகம் செய்தவனும் ஒரு பட்சியினுடைய பிராண னுக்குத் தன் பிராணனைக் கொடுத்தவனும், நூறு யாகம் செய்தவனும், இவர் குலத்திற் பிறந்தவர்கள்தான். சமுத்திரத்தைத் தோண்டினவர்கள் இவர்க ளாலல் வேறே பெருமையை சொல்லவேண்டியதென்ன? இவர்கள் பெரு மையை அனந்தனாலும் சொல்லக்கூடாமையாயிருக்கிற, நானெவ்வளவு சொல் லப்போகிறேன்? கொன்றைமாலை தரனை சிவனையுங்கண்டு ஆகாயகங்கை யைப் பூமிக்குக் கொண்டுவந்தவனு மிவர்குலத்திற்பிறந்தவன். அன்றியும் சந்திரனை வென்று உருத்திரனை ஜெயித்து, துந்துமியென்கிற அசுரனை அக்கினியாஸ்திரத்தினால் கொன்று, கீர்த்திவகித்த இந்திரனை ஜெயித்து, அஷ்ட திக்குகளையும் தன் வசம் செய்து கொண்டு ராச்சியபாரம் பண்ணிக் கொண்டிருக்கிற இரகுவென்கிற ராசனைத்தான் நீர் அறிவீரே; அந்த

வம்சத்தில் அஜமகாராஜனென்கிறவன் இராசகூட்டமென்கிற சமுத்திரத்தை வில்லென்கிற மந்தரகிரியினல் கடைந்து, லட்சுமிக்குச் சமானமான இந்துமதி யென்கிற கன்னிகையை மகா விஷ்ணுவைப்போல் மார்புக்கு ஆபரணமாக வைத்துக்கொண்டான். அவனுடைய புத்திரனுகிய தசரதச் சக்கிரவர்த்தியை இவ்வுலகத்தில் அறியாதவர் யாரிருக்கிறார்கள்? அவருடைய குமாரர்களான இவர்களுடைய பிரதாபங்களைக் குறித்துச் சொல்லுகிறதற்கு பிரமாவுக்கும் அருமையாயிருக்கும். நான் அறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன் கேளும் ஐயா சனகராசனே! மேற்கூறிய அந்தத் தசரத மகாராசன் சூரியன் பனிகளைத் தகிக்கிறப்போல் பகையாளிகளை ஜெயித்து, ஏகசக்ரேஸ்வரனுகத் தரும சிந்தையோடு மனுச்சட்டப்படிக்கு ராச்சிய பரிபாலனஞ் செய்துக் கொண்டு வந்தார். அவர் தனக்குப் புத்திரர்களில்லாமையைக் குறித்துக் கிலேசித்து, கலைக்கோட்டு மகாரிஷியை யழைப்பித்துச் சேவித்துக்கொண்டு, சுவாமி! எனக்குப் பிற்பாடு இந்த ராச்சிய மாளுகிறதற்குப் புத்திரருண்டாகும்படி அநுக்கிரகம் செய்யவேணுமென்று கேட்டனர். அதுகேட்ட கலைக்கோட்டு மகாமுனி சந்தோஷசித்தராய் அவரை நோக்கி, பதினன்கு லோகமும் ஆளத்தக்க பிள்ளைகள் உமக்குப் பிறக்கப்போகிறார்கள். நீர் கிலேசிக்கவேண்டாம். ஆதலால் நீர் யாகத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகள் வருகிறதற்கு உத்தரவு செய்யுமென்று சொல்லினர். அப்படியே வரவழைத்தார். பின்பு அந்த ரிஷிசிரேஷ்டர் அவ்விடத்திலிருந்து புத்திரகாமேஷ்டி யாகத்தை முடித்தார். அப்போது அந்த ஓமகுண்டத்திலிருந்து ஒரு ராசபூதம் பொற்றூபாளத்தில் அமிர்தத்துக்குச் சமானமான திவ்யான்னம் கொண்டு வந்தது. அதை யறிந்த மகாரிஷி ஆக்கியாபித்தபடிக்குத் தசரத மகாராசன் தன்னுடைய ஸ்திரீகள் மூவருக்கும் நாலுபங்காக்கிக் கொடுத்தார். தருமம் செய்த தர்மத்தினலும், பாவம்செய்த பாவத்தினலும், கற்கடக லக்கினத்தில் இந்தப் புருஷோத்தமனைக் கௌசலை யென்கிற புண்ணியவதி பெற்றாள். இவரைப்போலே தானே குணமும் சுந்தரமுமுண்டான பரதனென்கிறவனைக் கைகேசியென்கிற பாக்கியவதி பெற்றாள். மகம்மேரு பர்வதமும் கைலாய பர்வதமும் போல் சுந்தரத்தையுடைய இந்த லட்சுமணனையும் சத்துருக்கனென்கிறவனையும் இளையவளாகிய சுமித்திரையென்கிற பாக்கியவதி பெற்றாள். இவ்வாறு பெறப்பட்ட நால்வரும் சகல சாஸ்திர பண்டிதராகி, தனுர்வேதங்களெல்லாமறிந்து, சந்திரோதயத்தைக்கண்ட சமுத்திரம்போல நான்கு வேதத்துக்குச் சமானமாய் வளர்ந்தார்கள். தசரத மகாராசாவின் பிள்ளைகளென்கிற பெயர்மாத்திரமேயல்லது, உபநயனம் வித்தியாரம்ப முதலானதுகளுஞ் செய்து வளர்த்தவர் வசிஷ்ட மகாமுனி யென்று நீர் அறியக்கடவீர். இவர்களால் என்னுடைய யாகத்துக்கு விகாதம் செய்துவருகிற ராட்சதர்களைக் கொல்ல வேணுமென்று, இவர்களை அழைத்துக்கொண்டு ஆரணியத்துக்கு வந்தேன். வருகிறதற்கு முன்னமே தாடகை தலைப்பட்டாள். ஐயா ஜனகராசனே! இந்த ராமனுடைய புஜபல பராக்கிரமத்தை நன்றாய் நீர் எண்ணிப்பாரும். அந்தத் தாடகைபேரில் ஒரே பாணம் வாங்கிவிட்டார். அது அக்கினி நேத்திரங்களுடனே வந்த தாடகையினுடைய மார்பிலும் ஆகாயத்திலும் பூமியிலும் உருவிப்போயிற்று. பின்பு அனேக ராட்சதாளுடனே அந்தத் தாடகையின்

பிள்ளைகளிருவரும் வந்தார்கள். அந்த ராட்சதாளுடைய தலைகளெல்லாம் அற்று மலைமலையாய்க் குவிந்தன. அவர்களில் ஒருவன் மடிய மற்றொருவன் இருக்கிறவிடம் தெரியாது நானும் யாகத்தை முடித்தேன். என்னிடத்தில் தேவர்கள் வைத்திருந்த ஆயுதங்களெல்லாம் கொடுத்தேன். கொடுத்த எனக்குக்கூட ஆச்சரியமாகும்படியாய் அந்த ஆயுதங்கள் இவருக்கு ஏவல்செய்து வருகின்றன. உம்முடைய குருவான கௌதம மகாரிஷி பத்தினி அகலிகைக்குச் சாபவிமோசனம் செய்து முன் ரூபத்தைக் கொடுத்தது இவருடைய திருவடித்தூளென்றால், வேறே மகிமை சொல்லவேணுமோ! இவரிடத்தில் எனக்கு என்னுடைய பிராணனைப் பார்க்கிலும் அதிகமான அந்தக்கரண அபேட்சையுண்டென்று விஸ்வாமித்திர மகாரிஷி சொன்னார். இவ்வார்த்தைகளையெல்லாம் சனக மகாராஜன் கேட்டு ஆச்சரியசித்தனாகி, அதிக சந்தோஷத்தோடு, சுவாமி! நானென்ன சொல்லப் போகிறேன்? ஒரு வில்லினாலல்லவா என் மனது தோற்று இருக்கும்படி செய்கின்றது. அந்த வில்லை இவர் வளைப்பாராகில் கிலேச சாகரத்தில் மூழ்கி யிருக்கிற என்னைக் கரையேற்றினதாகவிருக்கும். சீதையும் தவம் செய்தவளே என்று விஸ்வாமித்திரருடனே சொல்லி, எதிரே நிற்கிற தன் மனிதரைப் பார்த்து, சீக்கிரத்தில் அந்த வில்லைக் கொண்டு வாருங்களென்று ஆக்கியாபித்தார். அந்தட்சணமே நாலுபேர்கள் வில்லிருக்கிற சாலைக்குப்போய் அங்கிருக்கும் காரியஸ்தரோடு சொன்னார்கள். தட்சணமே அதிக பலசாலிகளாய், பர்வதங்கள் போன்ற தோள்களையுடையவர்களாய் அறுபதினாயிரம் பேர்களெழுந்து அவ்வில்லைத் தூக்கித் தறிகளிட்டு, தண்டுகளினாலே தாங்கிக்கொண்டு, பூமிதேவி முதுகாற்றத்தக்கதாய் மகம்மேருவும் நாணும்படியாயிருக்கிற அவ்வில்லை எடுத்துக்கொண்டு வந்தார்கள். அப்படி வரும்பொழுது அந்நகரத்திலிருக்கிற ஜனங்கள் யாவரும் சமுத்திரம் போல வந்து நிறைந்து இரைந்துகொண்டு பார்த்தார்கள். அப்படி பார்க்கிற ஜனங்கள் வில்லை ஏன் எடுக்கிறார்கள்? கையில் சங்கு சக்கரம் தரித்திருக்கிற விஷ்ணுவானால் இதை எடுத்து வளைக்கலாமேயல்லாது, மற்றொருவரா லாகமாட்டாதே; ஆதலால் சீதைக்கும் கலியாணமாகப் போகிறதா? என்று சொன்னார்கள். சிலர் இது வில்லல்ல. மகம்மேருபர்வதமே யென்று சொன்னார்கள். சிலர் பூர்வத்தில் யார் இந்த வில்லை நாரியேறிட்டு அம்பெய்தவரென்றார்கள். சிலர் பிரம்மதேவன் தன்னுடைய பிரதாபம் தெரிகிறதற்குத் தன்னுடைய கையினால் செய்த தென்றார்கள். சிலர் இந்த வில்லிலே நாரியேறிட்டு அம்பு எய்தலால் அதற்கு லக்ஷியம் என்னவிருக்கிற தென்றார்கள். சிலர் இந்த வில்லா அந்தச் சீதையின் விவாகத்துக்கு விகாதமாக வரவேணுமென்றார்கள். சிலர் இந்த வில்லை விஷ்ணுவானுலுந்தானெடுக்க மாட்டுவாராவென்றார்கள். சிலர் இது விதிச் செயலென்றார்கள். சிலர் மகம்மேருவைத் திரட்டி வில்லாகச் செய்தார்களோவென்றார்கள். சிலர் சர்ப்பங்களுக்கெல்லாம் இராஜனை ஆதிசேஷனே வென்றார்கள். சிலர் பூர்வத்தில் சமுத்திரத்தைக் கடைந்த மத்தென்றார்கள். சிலர் ஆகாயத்திற் காண்கின்ற இந்திர தனுசாகிய பச்சைவில் பூமியில் விழுந்ததோ வென்றார்கள். பின்னுஞ் சிலர் ஆ! இதென்ன? இதையுங் கொண்டுவரச் சொன்னரே யென்றார்கள். சிலர் இப்போது இருக்கிற ராஜாக்களில் இவ்வில்லை

வளைக்கத் தெரிந்தவர்கள் இருக்கிறார்களா வென்றார்கள். ஊழ்வினையை யாராலே கடக்கலாகு மென்றார்கள். இந்த வில்லையும் சீதை கண்ணாலே பார்ப்பாளோ வென்றார்கள். இப்படிக்குப் பலபல விதமாக நகரத்து ஜனங்கள் சொல்லிக்கொள்ள், அந்த வில்லை ராஜனுக்கு எதிராகக் கொண்டுவந்து பூமியில் வைத்தார்கள். அப்போது பூமிக்கு மூதுகு சுளுக்கி மிகவும் தாழ்ந்தது. அந்தச் சபையிலிருந்த இராஜாக்களெல்லாம் பார்த்து, இதை வளைக்கிறவர்கள் யார் இருக்கிறார்களென்று கையைப் பிசைந்தார்கள். ஜனகராஜன் ஸ்ரீ ராமனையும் தன் மனதிலே வேதனையைக் கொடுத்திருக்கிற அந்த வில்லையும் பார்த்து, தன்னுடைய குமாரத்தியையும் மனதிலே நினைத்துச் சும்மா யிருந்தார். அவருடைய மனதை கௌதமரிஷி புத்திரரான சதானந்தர் அறிந்து, விஸ்வாமித்திர மகாரிஷியினுடைய முகத்தைப் பார்த்துச் சொல்லுகிறார். ஐயா முனிவரே! பூர்வத்தில் மகமேருவை வில்லாகப் பிடித்த பரமசிவன் பாகத்திலிருக்கிற உமையை அவள் தகப்பனான தக்கன் இகழ்ச்சி பண்ணி யாகஞ் செய்தான். அதற்குச் சிவன் கோபாவேசனாகி, இந்த வில்லைக் கையில் பிடித்துக் கொண்டுபோய் அந்த யாகசாலையில் புகுந்து மிகவும் கோபத்துடனே சில தேவர்களுடைய கைகளைச் சிதைத்தும், சிலருடைய பற்களைப் பேர்த்தும், பலவாறாக சின்னபின்னம் செய்தார். அப்போது தேவர்களெல்லாம் ஓடிப்போனார்கள் தக்கன் ஆரம்பித்த யாகம் விச்சின்னமாய் நின்று போயிற்று. அப்போது சிவன் கோபமாறி, கையில் கொண்டுவந்த வில்லை இந்த ஜனகமகாராஜனுடைய வம்சத்தில் ஓர் அரசனிடத்தில் வைத்தார். ஆனதால் அந்த வில்லினுடைய பலமும் பெருமையும் நாம் சொல்லவேணுமா? அந்தச் சிவனுக்குச் சமானமான நீரே யறிந்துகொள்ளக் கடவீரென்று சொல்லி, இந்த வில்லுக்குச் சம்பந்தமான சீதை பிறந்த விர்த்தாந்தத்தையுஞ் சொல்லுகிறேன் கேளுமென்று பின்னையுஞ் சொல்லுகிறார். முன்னாலே யாகம் செய்கிற நிமித்தம் பூமியைப் பொற் கலப்பைக்கு வச்சிரக்கொழு பூட்டி உழுதோம். அந்தக் கொழுமுகத்தில் சூரியன் உதித்தாற்போல ஸ்ரீ மகாலட்சுமியும் நாணத் தகுந்த அதிக சுந்தரத்தோடு பெண்சிகாமணியாகிய சீதை பிறந்தாள். அவளுடைய உத்தம குணங்களை என்னாலே சொல்லி முடியாது. அழகென்றதே தபஞ்செய்து அவளைப் பெற்றது. அந்தச் சீதை பிறந்தபிறகு அதிக சுந்தரமான தேவகன்னிகைகள் முதலான யாவரும் ஆகாயகங்கை பூமிக்கு வந்த பிற்பாடு மற்ற ஆறுகளெல்லாம் எப்படி யாயவோ அப்படி மகிமையை இழந்து போனார்கள். விதிவழிகள் வேறு வேறிருக்க, பூர்வத்தில் அமிர்தத்தில் பிறந்த லட்சுமியைத் தேவர்களெல்லாம் அபேட்சித்ததுபோல, அநேக ராஜாக்கள் வந்து எனக்குனக்கென்று சேனை சமுத்திரம்போல வந்திறங்கினார்கள்.

குலமுறைகளித்து படலம் முற்றிற்று.

கார்முகப் படலம்

அவர்கள் வெகு கூட்டங்க ளானபடியால் நாங்களொரு யோசனை செய்து, சிவசாபத்தையுடைய இந்த வில்லை யாதாமொருத்தர் வளைத்து நாரி ஏறிடுகிறாரோ அவருக்கு இந்தப் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொடுக்கிறோ மென்று சொன்னோம். அந்த ராஜாக்கள் இந்த வில்லையு மெடுக்கமாட்டா மல், மன்மதனுடைய கரும்பு வில்லுக்கும் தாளமாட்டாமல் விவேகயீனராய் கோபத்துடனே சண்டைக்கு வந்தார்கள். அவர்களுடைய சேனை சமுத்திரத் திற்கு முன்னே எங்கள் சேனை சமுத்திரம் நின்று எதிர்த்தது. சிவனுடைய வில்லை இவர்கள் வைத்திருக்கிறபடியினாலே தேவாதிகூலமும் உண்டாயிருக் கின்றதென்று அவர்கள் எண்ணிப் பயந்து, இரவில் கூகையைக் கண்டோடும் காகங்களைப்போல ஒருவர் பின்னல் ஒருவர் ஓடிப்போனார்கள். அன்றுமுதல் இன்றைய வரைக்கும் இந்த வில்லைக் குறித்து ஒருவரும் வந்ததில்லை. ஓடிப் போன இராஜாக்களுந் திரும்பி வரவில்லை. இனிக் கலியாணமு மில்லை யென்றே யிருந்தோம். இன்றைக்கு இந்தப் பிள்ளை இந்த வில்லை எடுத்து நாரி ஏற்றினால், சீதையினுடைய இளமையும் அழகும் பழுதாகாதென்று சதானந்தர் சொன்னார். அதை விஸ்வாமித்திர மகாமுனி கேட்டு, அவருடைய மனோபாவமும் அறிந்து, தம்முடைய சடைமுடியை அசைத்து, சிங்கம்போலே எதிரே யிருக்கிற ஸ்ரீ ராமனுடைய திருமுகத்தைப் பார்த்தார். ஸ்ரீ ராமனும் விஸ்வாமித்திரர் நினைத்ததைத் தமது கோசர விவேகத்தால் அறிந்து அந்த வில்லைப் பார்த்தார். பார்த்து ஓமாக்கினியில் நெய்யாகுதி விட்டால், அந்த அக்கினிச் சுவாலை எப்படி எழும்புமோ அப்படிப்போல அதிசீக்கிரமாக எழுந்திருந்தார். அதைத் தேவர்க ளெல்லாரும் பார்த்து, வில் ஒடிந்தது ஒடிந் தது என்றார்கள். மகாரிஷிகளெல்லாம் ஆசீர்வாதஞ் செய்தார்கள். இப்ப டிக்கு எழுந்திருந்த ஸ்ரீ ராமன் வில்லை வளைக்க, ஸ்ரீ ராமனுடைய சுந்தரத் தைப் பார்க்கும் ஸ்திரீ கூட்டங்களின் பேரில் மன்மதன் புஷ்பபாணம் எய்யும் அவசரத்தில் ஆயிரங் கரும்பு வில்லொடிந்தன. அந்த ஸ்திரீகள் இந்த வில்லு மகா பலமானது. இதை இந்த ராஜகுமாரன் வளைக்காமற்போனால் சீதைக்கு வாழ்வில்லை என்பாரும் கரங்களைக் கூப்பிக்கொண்டு கண்களிலே ஜலம் பெருக இந்த இராஜகுமாரன் இதை வளைக்காவிட்டால் சீதையும் நாமும் அக்கினியில் மூழ்க்கடவோ மென்பாரும், இந்த ராஜகுமாரனை சீதை கலியா ணஞ் செய்து கொள்ளுதற்குச் சம்மதித்தால் சீக்கிரமாய் பெண்ணைக் கலியா ணஞ் செய்து கொடுத்துவிட வேணுமே யல்லாமல், இந்த வில்லைக்கொண்டு வந்து இந்தச் சிறுபிள்ளை முன்பாகப் போட்டது புத்தியீன மென்பாரும், இந் தக் கியானியாகிய முனீஸ்வரனுக்குக் கொஞ்சமாகிலும் விவேகமில்லை யென் பாரும், நம்மிட ராஜாவைப்போல பொல்லாதவர்கள் வேறேயில்லை யென்பாரும் இந்தப்பிள்ளை வில்லை வளைக்காமற் போனால் சீதை பாக்கியவதி யல்லவென் பாரும், இப்படியாக அந்த ஸ்திரீகூட்டங்கள் சொல்லிக்கொள்ள, பெரியோர் கள் சகலரு மகிழ தேவர்கள் சந்தோஷிக்க, சிங்கமும் மதயானையும் ரிஷபமும் பர்வதமும் வெட்கிப் போம்படியாக நடந்து, ஸ்ரீ ராமன் மகமேருவுக்குச் சமான

மான அந்த வில்லைச் சீதை தன்னுடைய மார்பிலே தரிக்க எடுக்கும் பூ மாலையைப்போல் கரத்தினு லெடுத்தார். எடுத்து அந்த வில்லின் நுனியில் தமத பாதத்தினுடைய பெருவிரலை ஊன்றிக்கொண்டதும், ஒரு கையால் நாண் ஏறிட்டதும், ஒரு கையால் வில்லை வளைத்ததும், அங்கிருந்த ஒருவரும் பார்த்ததேயில்லை. கையில் வில்லை யெடுத்ததும் ஒடிந்த சத்தமு மாத்திரமே கேட்டார்கள். அதைக்கேட்ட தேவர்களெல்லாம் பிரம்மாண்டம் பிளந்ததென்று ஏங்கிப் பயந்து, யாரிடத்திற் போவோமென்று நடுங்கினர்களென்றால் பூலோகத்தார் பட்டபாடு சொல்ல வேண்டியதென்ன! இந்தப்பூமியைத் தாங்கிக் கொண்டு வேர்போலே கிடக்கிற அனந்தன் இடிவிழுந்ததென்று ஏங்கிப் பயந்து நடுநடுங்கினன். தேவர்கள் உடனே தெளிந்து புஷ்மாரி பொழிந்தார்கள். மேகங்கள் பொன் மழை பொழிந்தன. சமுத்திரம் முத்துகளைத் தூவி ஆர்ப்பரித்தது. மகாமுனிக ளெல்லாம் ஆசீர்வாதம் செய்தார்கள். ஜனக மகாராஜனும் நாம் செய்த புண்ணியம் இன்றல்லவோ லபித்ததென்று சந்தோஷித்தான். பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லாம் சந்தோஷ பரவசராகிப் புட்பமாலை - சந்தனம் - கந்தம் - முத்து - பொன் - இரத்தினம் இவை முதலிய யாவற்றும் ஒருவர் பேரில் ஒருவர் வீசிக்கொண்டு, யாழ் வீணைகள் வாசித்துக் கொண்டு பேரிகை முதலான மேளவாத்தியங்கள் முழங்க சந்திரனைக்கண்ட சமுத்திரம் போலப் பொங்கி மகிழ்ந்தார்கள். நாட்டியப் பெண்கள் மேகத்தைக் கண்ட மயில்கள்போல பரதநாட்டியம் செய்தார்கள். ஊடலினுலே புருஷனோடு பிணங்கிக் கோபித்திருந்த ஸ்திரீகளெல்லாம் இந்தச் சந்தோஷத்தினுல் அக்கோபம் தீர்ந்து புருஷனைத் தழுவிக் கொண்டார்கள். ஸ்ரீ ராமபிரான் வில்லிறுத்த சந்தோஷத்தைப் பார்க்கவந்த தெய்வரம்பையர்கள் இந்தப் பட்டணத்து ஸ்திரீகளைத் தழுவிக் கொண்டார்கள். ரூபம் - நடத்தை - பாடல் இவை முதலிய செய்கைகளினுலே மானிடரென்று வித்தியாசங் காணமாட்டாமல், கண்கள் இமைக்கிறதைக் கண்டு நாணி மயங்கி நின்றார்கள். சிலர் தசரதன் மதலை என்பாரும், தாமரைக்கண்ண னென்பாரும், மேகரூபனென்பாரும், காயாம்புவண்ண னென்பாரும், மனிதனல்ல வென்பாரும், விஷ்ணுதா னென்பாரும், இவரை பார்க்கின்றவர்க்கு சீதைக்கு ஆயிரங் கண் வேணுமென்பாரும், சீதையைப் பார்க்கிறதற்கு இவருக்கும் ஆயிரங் கண் வேணுமென்பாரும், தம்பியைப் பாருங்களென்பாரும் இந்த நகரம் அனேக புண்ணியஞ் செய்ததென்பாரும், இவரை யிவ்விடத்துக் கழைத்துவந்த முனிவனை நமஸ்காரஞ் செய்யுங்க ளென்பாரும், இப்படிக்கிருக்க ஸ்ரீ ராமனைக் கண்ணினுல் கண்டு விரகதாபம் பட்டுக்கொண்டிருந்த சீதையைத் தாதிகள் தாமரைத் தடாகத்தின் ஓரத்தில் சந்திரகாந்தக் கல்லினுலே சதுரித்துக் கட்டி யிருக்கிற சீதள மண்டபத்திலே புட்பமெத்தையின்பேரில் வளர்த்தி, அநேக சயித்தியோபசாரங்கள் செய்துகொண்டிருந்தார்கள். சீதை அந்தத் தாமரைத் தடாகத்தைப் பார்த்து, ஆ! தடாகமே! நான் கண்ட ராஜகுமாரனுடைய சரீரம் போலத் தாமரையிலைகளையும், அவர் திருநேத்திரங்களைப்போல புஷ்பங்களையும் வைத்துக்கொண்டிருக்கிற நீ அவரை எனக்குக் காட்டி என் பிராணனை ரட்சிக்கப்போகாதா? கையில் வில்லும் அம்புறத்தூணியும் மார்பில் பூணூலு முடைய மேகசுரூபனை இன்ன மொருதரங் காணுவேனே? பச்சை வில்லோடும்

வந்த மேகத்தின் கண்கள் என் உயிரைப் புசிக்கின்றதே, மன்மத பாணங் களா லடிப்பட்டு நொந்து சஞ்சலப்படுகின்ற ஸ்திரீகளைப் பயப்படாதேயென்று நேரில் வராமலிருப்பது ஆண்பிள்ளைத்தனமா? என்று இப்படி பலவித மாக இராமுழுதும் பிரலாபித்து, விடிந்தபின்பும் அப்படியே நினைத்து வாதனைப் பட்டுக்கொண்டிருக்கிற சீதைக்கு ஸ்ரீ ராமன் வில்லொடித்த செய்தியைச் சொல்லும் பொருட்டு ஓடிவந்த நீலமாலையென்கிற தாதியாள வள் எதிரே நின்று, சரீரஸ்மாரகம் தெரியாமல் சந்தோஷ மயக்கத்தினால் நமஸ்காரங்கூடச் செய்யாமல் நடனஞ் செய்தாள். அவளைச் சீதை பார்த்து, ஆ தாதி! நீ யேது அதிக சந்தோஷத்துடனே வந்தாற்போலிருக்கின்றது. இவ்வளவு மகிழ்ச்சிவர நடந்தசெய்தி யென்ன சொல்லென்று சீதை கேட்க, அவள் நமஸ்கரித்துச் சொல்லுகிறாள்: அம்மா! அநேக ராச்சியங்களைப் பரி பாலனம் செய்துவருகிற தசரத மகாராசாவின் புத்திரர். மன்மதனைப் பார்க் கிலும் அதிக சுந்தரமும், நீலம்போலத் திருமேனியும், கமலம்போல நேத்திரமு முடையவர். பார்த்தால் அந்த ஸ்ரீ மகாவிஷ்ணுவென்றே சொல்லவேணும். அவருக்கு ஸ்ரீ ராமனென்று பேர். அவர் தம்பியோடு ஒரு ரிஷி பிறகே நேற்று இந்தப் பட்டணம் வந்து சேர்ந்தார். அவர் அந்த வில்லையும் பார்க் கிறதற்காக வந்ததாய் அந்த ரிஷி சொல்ல, நம்முடைய ராஜா அவ்வில்லை அழைப்பித்தார். அந்த ராமன் அந்த மகாவில்லை ஒரு நூலிழையை எடுப் பதுபோல யெடுத்து நாரியேற்றினார். அவருடைய பலத்துக்கு அது போதாமல், சபையிலிருந்த ராசாக்களும் தேவர்களும் நடுநடுங்க அவ்வில் முறிந்து விழுந் தது. தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்களென்று சொன்னாள். அந்த வார்த்தையைச் சீதை கேட்டு, ஒரு ரிஷி பிறகே வந்தவரென்றும், மேகசுரூப ரென்றும், கமலநேத்திரரென்றும், இவ்விதமாக அடையாளஞ் சொல்லுகிற படியால், நாம் கண்ட புருஷோத்தமராகவே யிருக்கவேணுமென்று மிகவுஞ் சந்தோஷமானாள். ஆனால், ஒருவேளை அவரல்லாமல் வேறொருத்தர் வில் லொடித்திருந்தால், பிராணனை ஒழிக்கிறதே தகுதியென்று நிச்சயம் செய்து கொண்டிருந்தாள். வில் முறிந்த சத்தத்தைப் பார்க்கிலும் அதிக சந்தோ ஷத்தை உடைத்தா யிருக்கிற விஸ்வாமித்திர மகா முனியை ஜனக மகாராஜா பார்த்து, சுவாமி! உமது திருமகனுக்குத் திருக்கலியாணம் இன்றைக்கே முடித்துக்கொள்ளுகிறதற்கு தேவரீர் திருவுளமோ? தசரதச் சக்கிரவர்த்தியை யும் வரவழைத்து முடித்துக்கொள்ள திருவுளமோ வென்று கேட்க, அவரும் வந்தால் சர்வோத்தமமென்று சொல்லி, தசரத மகாராஜாவுக்குத் தட்சணமே ஓலை யெழுதி தூதனை யனுப்பினார்கள். அவன் வாயுவேகமாயோடி அயோத் தியாபுரி சேர்ந்து, ராஜ கூட்டங்கள் நெருக்கத்தினால் கிரீடத்தோடு கிரீடம் இழைகிற ஆசாரவாசலின் சந்நிதானத்தில் நின்று, தசரத மகாராஜாவைக் கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, மங்கல வார்த்தை சொல்லி ஓலையை முன்னே வைத்தான். அந்த ஓலையை வாசிக்கச் சொல்லி இராஜா ஆக்கியா பிக்க. ஓலை வாசிக்கிற கருணீகன் வாங்கிப் பிரித்து வாசித்த வயணம் யாதெனில்: கௌசிக மகாமுனி ஓலை. தசரத மகாராஜாவுக்குத் தெரிவிப்பது. உம்மைவிட்டு நாங்கள் புறப்பட்டபின்பு ஆரணியத்திலே தாடகையானவள் பர்வதாகாரமாக நேரில் வந்தாள். அவள் ராகவனுடைய பாணத்தினாலே

மடிந்தாள். அப்பால் நான் யாகம் செய்தேன். அதை யழிக்கிற நிமித்தம் அந்தத் தாடகையின் பிள்ளைகளிருவரும் அநேக ராட்சதாளுடனே வந்தார் கள். ஸ்ரீ ராமனுடைய பாணத்தினால் ஒருவன் மடிந்தான். மற்றொருவனேடிப் போய்ச் சமுத்திரத்திலே மூழ்கினன். வந்த ராட்சதாளெல்லாரும் லட்சுமணன் பாணங்களினால் மடிந்தார்கள். என்னுடைய யாகமும் குறைவில்லாமல் நிறை வேறிற்று. அப்பால் கௌதமர் பத்தினியான அகலிகையின் சாபத்தை ஸ்ரீ ராமன் நீக்கினன். மிதிலைக்குப் போனேம். அவ்விடத்தில் சிவனுடைய வில் லிருக்கிறது நீரறிவீரே? அந்த வில்லை ஸ்ரீ ராமன் யெடுத்து நாரியேற்றவும், அது பொறுக்காமல் முறிந்து வீழ்ந்தது. அதின்பேரில் ஜனகமகாராஜன் சந்தோஷித்து, தன் குமாரத்தியாகிய சீதையை ஸ்ரீ ராமனுக்குக் கொடுக்கிற தாகச் சம்மதித்திருக்கிறார். ஆதலால் இந்த ஓலைகண்ட தட்சணம் நீர் குடும்ப சமேதராய் இவ்விடம் வந்து சேரவேண்டியது என்று ஓலையை வாசித்தான். அதுகேட்கவே தசரத மகாராஜாவின் சரீரம் பூரித்து, வாகுவலயங்கள் பூட்டு கள் விட்டன. மிதிலையிலே ஸ்ரீ ராமன் வில்லை யொடித்த சத்தமா இங்குக் கேட்டதென்று சரீராதியந்தம் புளகிதராய்ச் சந்தோஷித்து, வசிஷ்ட மகா முனி ராஜாக்கள் சுமந்திரன் முதலிய மந்திரிகள் ஸ்ரீ ராமனுடைய தாய்மாருக் கும் இந்தச் சந்தோஷ வார்த்தைகளைச் சொல்லி, ஓலை கொண்டுவந்த மிதிலா புரித் தூதருக்கு ஆயிரங்கோடி திரவியமும் வஸ்திராபரணங்களும் கொடுத்தார்.

கார்முகப் படலம் முற்றிற்று.

எழுச்சிப் படலம்

தசரத மகாராஜன் கலியாண பேரி யறைவித்தல்

தசரதமகாராஜன் மிகுந்த சந்தோஷத்தோடு சேனைகளாகிய ரதகஜ துரகபதாதிகளுடன் பட்டணத்திலுள்ள யாவரும் சக்கிரவர்த்தியின் திருமக னுடைய திருக்கலியாண மகோற்சவத்திற்குப் பிரயாணமாகும்படி யானையின் பேரில் பேரிகை வைத்துப் பறைசாற்றும்படி ஆக்யாபித்தார். அப்படியே சர்வ சனங்களும் கேட்க, வள்ளுவன் பூர்வத்தில் விஷ்ணு வாமனவதாரமாகிப் பூதானம் வாங்கினவுடனே திரிவிக்கிரமாவதாரமாய்த் திருவடியினால் பூமியும் ஆகாயமும் அளந்தபோது சாம்பவந்தரான மகா விருத்தர் எப்படி பூமிப்பிரதட்சணஞ் செய்தாரோ அப்படி கனக மயமான அயோத்தியாபுரி பட்டணத்தைச் சுற்றி பேரிகை அடித்தான். மகானுபாவரான ஸ்ரீ ராம னுக்குத் திருக்கலியாண மென்கிற சத்தம் பட்டணத்து ஜனங்கள் கேட்டு, அதிக சந்தோஷமா யெங்கும் பரவி, இனி பூமியில் இடமில்லையென்று சொல் லத்தக்கதாய் யுகாந்தகாலச் சண்டமாருதம் போல அடிக்க சமுத்திரத்தி லுள்ள ஜலமெல்லாம் பூமியிலே பரந்து பொங்கி வருகிறதுபோல, புரவித் திரள்களும் யானைத்திரள்களும் இரதத்திரள்களும் பதாதித்திரள்களும் வெகு விசித்திரமான கொடிகளோடு கூடிய குடைகளும் நெருங்கப் புறப்பட்டன. இவர்களுடைய திருமார்பி லணிந்த சந்தனம் - கதம்பம் - கஸ்தூரி முதலிய திரவியங்கள் வியர்வையினால் கரைந்து, இந்தச் சேனைகள் நடக்கிற வழியில்

அணைகளாக விழுந்திருந்தன. உயர்த்தியில் தொங்குகிற வெள்ளைக்கொடிக ளானது ஆகாயம் தோலுரித்துத் தொங்குகிறதுபோலவும், மேகங்களானவை யானைச்சேனையைச் சமுத்திர மென்றெண்ணி ஜலபானம் செய்கிறதற்கு இறங்கினதுபோலவு மிருந்தன. வில் - கத்தி - ஈட்டி முதலிய ஆயுதங்களோடு நடக்கிறவர்களும், யானை - குதிரை - இரதங்களின்பேரில் ஸ்திரீகள் சமேத ராய்ப் போகிறவர்களும், முத்துப்பல்லக்குகளின் பேரில் சில ஸ்திரீகள் ஏறிக் கொண்டு சமீபத்தில் இருதயானந்தமாகப் புருஷாள் வாகனரூடராய்ப் போகிற வர்களும், இப்படி பலபல அலங்காரத்தோடு நடக்கிறபோது வழியில் தாம ரைத் தடாகங்களில் வாசஞ்செய்கிற அன்னங்கள் இவர்களைக் கண்டு, இவர்கள் நடைக்கு நாம் தோற்றோமென்று ஓடுகிற பாவனைபோல கத்திக்கொண்டு ஆகாய மார்க்கமா யெழும்பிப்போயின. யானைகளுடைய கர்ண கபோல பீஜ மதங்கள் ஒழுகி, ஆறுகளாக ஓடி, ஏரி மடைகளையெல்லா முடைத்து, ஏகப்பிர வாகமாயிற்று. பாதசாரியாய்போகிற ஒரு நாயகி அந்த யானை மதச்சேற் றுறைப் பார்த்துப் பயந்து நடக்கமாட்டாமல் தியங்க, அவள் நாயகன் கைலாகு கொடுக்க நடந்தாள். ஒரு நாயகி நாயகனைப் பார்த்துச் சிந்தை மகிழ்வோடு தடாகத்திலிருக்கிற புஷ்பங்களைக் கொய்து தரச்சொல்லி நமஸ்காரஞ் செய் தாள். ஒரு நாயகி தான் ஏறிவரும் குதிரை நடையினல் நழுவி விழுகிறபோது, அவள் ஸ்தனங்கள் தன் மார்பில் அழுந்தும்படியாய் அவள் நாயகன் தழுவிப் பிடித்து, கண்களிலே ஆனந்தஜலம் பெருகப் பூமியில் விழாமல் தாங்கிக் கொண்டிருந்தான். மதயானைகள் அஷ்ட கெஜங்களையும் துதிக்கையினலே தழுவிக்கொண்டு நடந்ததுகள். கிருபாநிதியான தசரதச்சக்கிரவர்த்தி சிங்கா சனம் விட்டு இன்னம் எழுந்திருக்கவில்லை. ஆனல், சேனு சமுத்திரத்தினுடைய நுனியானது மிதிலாபுரி பட்டணத்தில் மதிலை எட்டிற்று. வண்டிகளில் சில ஸ்திரீகள் ஏறிக்கொண்டு போகிறது தாமரைத் தடாகம் நடக்கிறது போலவும், குதிரைகளின்பேரி லேறிப்போகிற ஸ்திரீகள் சமுத்திர அலைகளின்பேரில் ஏறிப்போகிற அன்னப்பட்சிகள் போலவும், பெண் யானைகளின்பேரில் ஏறிக் கொண்டுபோகிற ஸ்திரீகள் மேகங்களில் மின்னல்கள் பிரகாசிக்கின்றது போலவு மிருந்தன. பேரிகை மத்தளம் டமாரம் முதலானவைகள் ஆர்ப்பரிக் கிறது சப்தமேகங்களும் கூடி முழங்குகிறது போலவும், திருச்சின்னம் எக் காளம் தவளச்சங்கு முதலியவைகள் சப்த சமுத்திரம் கோஷிக்கிறதுபோலவும் சத்தித்தன. ரிஷபவாகனரூடரான சிவனுடைய நேத்திரத்தினல் எரிந்து போகாத மன்மதனுடைய சொரூபம் போன்ற இராஜகுமாார்களும் மந்திரிகளும் வாகனரூடராகிப் பொற்குடைகள் பிரகாசிக்க நடந்தார்கள். மிதிலாபுரி பட்ட ணத்தில் ஸ்ரீ ராமன் வில்லிறுத்த சமச்சாரம் பேசிக்கொண்டு போகிற புருஷ கூட்டங்களைக் கண்டு அந்தச் சுப வார்த்தைகளை விசிதமாய் கேட்கத் தொடர் ந்து நடக்கும் ஸ்திரீகள், தங்களுடைய திருவாபரணாதிகள் கழல. தலைமயிர்கள் அவிழ்ந்து சரிய, வஸ்திரம் சோர, அவைகளைப் பாராமல் அன்புடனே துரிதமாய் நடந்தார்கள். கும்பல் கும்பலாய்ப் போகிற ஸ்திரீகளினுடைய பாதச்சிலம்பு - தண்டை - சதங்கை சத்திக்கிற சத்தங்களும், ஐராவதத்துக்குச் சமானமான யானைகள் வீறிடுகிறதும், இரதம் வண்டிகளினுடைய சத்தங்கள் கடகடவென்று சத்திக்கிறதும், இவ்விதமாகிய பலவித சத்தங்களினல் ஒருவர்

பேசுகிறது ஒருவருக்குக் கேளாததனால் ஊமைகள் போலப் பேசாமல் நடந் தார்கள். ஒருவன் தன் நாயகியினுடைய தனத்தின்பேரில் வைத்த கண்ணே யும், மனதையும் திருப்பாமல் பார்த்துக்கொண்டே போய் தனக்கு எதிரே நிற்கின்ற மதயானையின் வாயில் முட்டிக்கொண்டான். சத்திராதிகளுக்கு ஒரு சிங்கம்போல யிருக்கிற ஒரு புருஷன், தன்கையில் பிரகாசித்துக்கொண்டிருக் கிற வேலாயுதத்தைப் பார்த்து, தன் நாயகியினுடைய பார்வை யவ்வளவு கூர்மை இதற்கில்லை என்றான். ஒவ்வொரு மதயானைகள் அங்குசங்களுக்கு அடங்காமல் வீறிட்டுலவவும், அவற்றின் பாகர்கள் உண்டை வில்லினாலும் ஈட் டியினாலும் கவண்கல்லினாலும் எறிந்து அதட்டிக்கொண்டு போவார்கள். சில யானைகள் பர்வதங்கள் போல மத ஆங்காரத்தினு லோடிவருகிறபோது, குதி ரையை விட்டிறங்கி வழியிலே நிற்கிற ஸ்திரீகள் வஸ்திரத்தை ஒரு கையால் தாங்கிக்கொண்டு யானை வந்ததென்று பயந்து ஓடினார்கள். ஸ்திரிகளினுடைய கண்களென்கிற வேல்கள் புருஷாளுடைய மனங்களில் தைத்துக்கொண்டு அதனால் உயிர் ஊசலாடிக்கொண்டு போகிறதினாலே, அந்தச் சேனை சமுத் திரமானது யுத்தகளம்போல் இருந்தது. குடைகள் - கொடிகள் - மகர தோர ணங்கள் - ஆலவட்டங்கள் முதலானதுகள் ஆகாயமார்க்கமெல்லாம் நெருங்கி நிறைந்திருக்கிறபடியினாலே இருண்ட ராத்திரிபோலவும், இராஜாக்களுடைய கிரீடம் வாகு வலயம் முதலான ஆபரணதிகளும், ஆயுதப் பிரகாசங்களும் சூரியனைப்போல தகதகவென்று பிரகாசிக்கிறபடியினாலே பகல் போலவும், இப்படிக்கு க்ஷணத்திற்கு க்ஷணம் இரவும் பகலும் மாறி மாறி யிருந்தன. இந்தவிதமாக யானை - குதிரை - தேர் பதாதிகளினுடைய காலி லெழும்பு கிற தூள்கள் மேகத் துவாரங்களைப்போ யடைந்தன. இவ்வளவு சம் பிரமத்தோடு சேனை சமுத்திரம் நடக்க, தசரத மகாராஜாவின் அரண் மனையிலிருந்து ஸ்திரீ கூட்டங்கள் நவரத்தினு லங்கிருத வாகனங்களின் மீது புறப்பட்டார்கள். தாமரைக் கமலங்களிலிருக்கிற அன்னங்கள் போல நவரத்தினகசிதமான அநேக சிவிகைகளில் வராகின்ற இராஜஸ்திரீகளும் தோழிமார்களும் புடைசூழ்ந்து வர, யாழ் வீணை தண்ணுமை பொருந்திய பாடல்கள் முழங்க, மிகுந்த பிரதாபத்தையுடைய கைகேசி கோடி சூரியப் பிரகாசமான சிவிகையின்பேரில் புறப்பட்டாள். அநேக சேனைசமுத்திரம் சூழ, தெய்வ ரம்பைகளுக்குச் சமானமான தோழிமார்க ளருகிலே இரண் டாயிரங் குதிரையின்பேரில் சூழ்ந்துவர, அநேக ஸ்திரீகள் கீதங்கள் பாடிவர, ஆலவட்டம் குடை முதலானதும் ஆகாயத்தில் நெருங்கிவர சுவர்னத்தினால் அலங்கரித்த பல்லக்கில் சுமித்திரைநாயகி புறப்பட்டாள். மூவாயிரத்தைந் நூறு ஸ்திரீகள் தெய்வ கன்னிகைகள்போல சூழ்ந்துவர, தேவர்கள் ரிஷிகள் முதலான பேர் ஸ்துதிக்க, சுவர்ன ரதத்தின்பேரில் ஸ்ரீராமனைத் தனயனாகப் பெற்ற கௌசலைநாயகி புறப்பட்டாள். பவழத்தினாலும் - மரகதத்தினாலும் - முத்தினாலும் - அபரஞ்சிப் பொன்னாலும் புதுக்கின இரதங்களின்பேரில் மகா ராஜாவினுடைய அந்தப்புரத்து ஸ்திரீகள் அறுபதினாயிரம் பேர் போயினர் கள். இந்த ஸ்திரீ கூட்டத்தைச் சூழ்ந்து அநேக சுத்தவீராள் கையில் பிரம்பை பிடித்துக்கொண்டு எந்நேரமும் நேத்திரங்களில் அக்கினிப் பொறிகள் இடை விடாமல் ஜொலிக்க நிலையங்கியோடு குதிரைகள்பேரிலும் பாதசாரியாயும்

நெருங்கி அதிக எச்சரிக்கையோடு காத்துக்கொண்டு போனார்கள். அநேக ஆணி முத்துக்களினாலும் சுவர்னத்தினாலும் செய்த கூடுகளில் நானாவிதப் பட்சிகளும், வெண்சாமரை - பொற்பாவை - பந்து - அம்மான்காய் முதலியவை களும் அனேகர் எடுத்துக்கொண்டு, இனிப் பூமியில் ஸ்திரீகளில்லை என்னும்படி நெருங்கி நடந்தார்கள். வசிஷ்ட மகாமுனியும் மிகுந்த சந்தோஷத்தோடு யாகாதி கிரியைகள் செய்யத்தக்க பிராமணோத்தமரும் - ரிஷிகளும் - அனேகம் பேர் சூழ, தாவல்லியமான முத்துச் சிவிகையின்பேரி லேறிக்கொண்டு பிரமா வைப் போல எழுந்தருளினார். யானை - குதிரை - தேர் - பதாதிகள் முதலிய சேனை சமுத்திரஞ் சூழ, அனேகம் தோழிமாருடனே விஜயலட்சுமி பொருந்தி யிருக்கும் திருமார்பையுடைய பரத சத்துருக்க ரிருவரும் கையில் வில்லுடனே ரத்தின கசிதமான இரதத்தில் ஆரோகணித்து, முன் விஸ்வாமித்திரர் பிறகே நடந்த இராமலட்சுமணாளப்போல வசிஷ்டர் பிறகே நடந்தார்கள். தசரதச் சங்கரவர்த்தியும் நித்திய நியமங்கள் முடித்துக்கொண்டு, ஸ்ரீ ரங்கநாதரைச் சேவித்து, அனேகம் பசுவும் - ரத்தினமும் - பொன்னும் - பூமிகளும் - மிகுதி யாகப் பிராமணருக்குத் தானஞ்செய்து நல்ல சுபமுகூர்த்தத்தில் ரதம் ஏறி னார். எண்ணாயிரம் பிராமணர் ரத்ன கசிதமான பூரண கலசங்களேந்திக் கொண்டு வேதகோஷ்டமுடன் எதிரே வந்தார்கள். அனேக ராஜகூட்டங் களும் வந்து நெருங்கின. இராஜா என்னைக் கண்டாரென்கிற பேரும், காண வில்லை என்கிறபேரும், காதிலிருந்த குண்டலம் விழுந்ததென்கிறபேரும், நெருக்க மிகுதியானபடியினாலே சமீபத்தில் போகிறது அருமையென்கிற பேரும், இப்படியாகத் தேசதேசத்து இராசாக்கள் சொல்லிக்கொண்டு நெருங்கி வந்தார்கள். இராஜா புறப்பட்டாரோ இல்லையோ வென்று மயங் கிப் பின்பு தவளச் சங்கின் தொனி கேட்டபடியால் புறப்பட்டாரென்று சொல் லிக்கொண்டு அனேகம் ஸ்திரீகள் சுவர்ண ரதத்திலேயும், குதிரையின்பேரிலே யும், கூட்டம் கூட்டமாய்ச் சூழ்ந்து வந்தாகள். இப்படிச் சகலமானபேரும் புடைசூழ்ந்து வரும்படியாகத் தசரத மகாராஜாவானவர் வேரொரு சூரியன் புறப்பட்டதுபோல ரத்னகசிதமான கிரீடம் - வாகுவலயம் - பதக்கம் முதலான ஆபரணங்கள் பிரகாசிக்கத் தமது சுவர்ணமயமான ரதத்தினை விரைவாக நடத்தினார். இப்படிப் புறப்பட்ட சேனை சமுத்திரத்தினுடைய பாததூள்கள் ஆகாயமெல்லாம் பரவி மூடிக்கொண்டு, ஒருவர்முகம் ஒருவருக்குத் தெரியாமல் எங்கும் நிறைந்தது. சமுத்திரத்தில் சில தூளிகள் விழுந்து அநேக விடங்களில் திட்டுதிட்டாக்கித் துற்றுப் போட்டன. பொன்னுலகமான தேவலோகத்திலும் இத்தூள் படிந்தபடியால், மண்ணுலகமாயிற்று. சங்கம் - பேரிகை - கொம்பு - தாளம் - எக்காளம் - மத்தளம் முதலான பல பல வாத்தியங்கள் முழங்குகிற சத்தங்கள் மேக கர்ஜனையை நீ எவ்வளவென்று துரத்திவிட, கொடிகள் - குடைகள் - ஆலவட்டங்கள் - மயில்பிஞ்சங்கள் - மகரதோரணங்கள் முதலானது கள் வெய்யிலை யோட்டிவிட, ராஜாவினுடைய தனிக்குடையைக் கண்டு பூரணச் சந்திரன் வெட்கி யோடிப்போக தேவர்களும் பார்த்துப் பிர்மிக்கச் சகலரும் நடந்தார்கள். எக்காலத்தில் இவ்வளவு சுமையைப் பூமிதேவி பொறுக்கமாட் டாமல் சற்று முதுகை நெளித்தாள். இவ்விதமாக இரண்டு யோசனைதூரம் போனார்கள்.

எழுச்சிப் படலம் - முற்றிற்று.

வரைக்காட்சிப் படலம்

அவ்விடத்தில் சந்திரசயிலம் என்கிற ஒரு பெரிய பர்வதமிருந்தது. அதைக்கண்டு அதின் சாரலில் இறங்கினார்கள். உடனே யாவரும் சந்தனம் - தேவதாரி - அகில் - தேக்கு - ஆச்சா முதலிய பல விருட்சங்களில் மேகங்களைப் பிடித்துக் கட்டுகிறதுபோல யானைகளைக் கட்டினார்கள். ஒவ்வொரு மதயானை அந்த விருட்சங்களை வேரோடு அறுத்துப் பிடிங்கிக்கொண்டு பர்வதம்போல நடந்தது. ஒவ்வொரு யானையானது தன்பாக னென்னமாய் மறித்தாலும் மறிபடாமல், மந்திரி ஆலோசனையைக் கேளாத ராஜனைப்போல் கர்வித்து முகம் விட்ட வாக்கே நடந்தது. சகல கல்விகளுங் கற்றுத்தேறின பெரியோர்களிடத்தில் ஒரு மூடன் சேர்வானுகில், அவனை அவர்கள் எவ்வளவு பரிசுத்தனுகச் செய்வார்களோ, அதுபோலவே பொற்றேரினுடைய சக்கரம் கருங்கல் பாறையின்பேரி லோட, அப்பாறை பொன்னிறமாயிற்று. குதிரைப் பந்திகளை பூமி தேவிக்கு வர்னமாலைபோல் வரிசை வரிசையாய்க் கட்டினார்கள். சில குதிரைகள் பூமியில் புரண்டு எழுந்திருந்து, நல்லவர்கள் பொல்லாதவனுடைய சினேகத்தை விடுகிறதுபோல உடம்பை உதறிக்கொண்டு போய்விட்டன. யானைகள் ஆற்றில் குளித்துக் கரையிற் புரண்டு எழுந்திருந்து போவதைப் பார்த்தால், அரி அரனைப்போலவு மிருந்தது. அநேக கூடாரங்கள் - புஷ்பப் பந்தல்கள் - கடைவீதிகள் - அங்கங்கே நிறைந்திருந்தன. பல்லக்கிலேறிவந்த ஸ்திரீகள் தாமரைக் கமலத்தை விட்டுத் திருமாளிகையில் பிரவேசிக்கும் லட்சுமியைப் போல கூடாரங்களில் பிரவேசித்தார்கள். மேகத்திலிருக்கிற மின்னல்கள் பூமியி லிறங்குகிறதுபோல, அனேகம் ஸ்திரீகள் யானையைவிட் டிறங்கினார்கள். சமுத்திரத்தின் அலைகள்போல அங்கங்கே திரைகள் போட்டார்கள். ஆங்காங்கு சமுத்திரம்போல் நிறைந்திருக்கிற கடைவீதிகளில் யாவற்றும் நிறைத்து வைத்தார்கள். பர்வதங்களிலிருந்து சிங்கங்க ளிறங்குகிறதுபோல புருஷாள் வாகனங்களைவிட்டு இறங்கினார்கள். ஸ்திரீகளுடைய சரீரங்களிற் படிந்திருக்கிற தூள்களைப் புருஷாள் நல்ல தாவள்ளியமான வஸ்திரங்களினுலே துடைக்க, பின்பு சித்திரங்களைப் புதுக்கினதுபோல அந்த ஸ்திரீகள் பிரகாசித்தார்கள். சமுத்திரத்தினிடையிலே சந்திரோதயமானது போல ஸ்திரீகளுடைய திரு முகங்கள் அந்தந்தக் கூடாரங்களில் பிரகாசித்தன. அம்மானுராடுகிற ஸ்திரீகளுடைய கண்கள் கூடாரமென்கிற சமுத்திர வலையிலே கயல் மீன்கள் குதிக்கிறதுபோல விருந்தன. மடைப்பள்ளிகளுடைய புகைகள் மேகங்கள் வரைக்கும் தாவியிருந்தன. இப்படியாக அனேக சம்பிரமத்துடனே இறங்கின இராச குமாரர்களும் அவரவர்கள் ஸ்திரீகளும் கூடிக்கொண்டு, அந்தச் சந்திரசைல மென்கிற பர்வதத்தின் பேரிலேறி, அங்கே யிருக்கின்ற சிங்கார வலங்காரங்களைப் பார்த்தார்கள். அந்த வரையின்மீது யானைகள் தேவலோகத்துக் கற்பக விருட்சத்தை துதிக்கையினு லெட்டி வளைத்துப் பிடித்துத் தழைகளை யொடித்துப் பெண் யானைக்குக் கொடுக்கிறதும், வண்டுகள் நட்சத்திரங்களைப் புன்னைப் புஷ்பமென் றெண்ணி மொய்த்துக் கொள்ளுகிறதும் குறவர்கள் ஆகாய கங்கையைப் பாய்ச்சல் செய்து தினை முதலான பல தானியங்களைப்

பயிரிடுகிறதும், சந்திரனென்கிற கண்ணுடியில் அரம்பைகள் அழகு பார்க்கிறது போல குறத்திகள் அந்தப்புரத்தில் அழகுபார்க்கிறதும், யானைக்குட்டியும் பன்றிக்குட்டியும் குறத்திகளுடைய குழந்தைகளும் இளம்பிறையான சந்திரனும் ஒன்ருய்த் தவழ்ந்து விளையாடுகிறதும், பொன்னுசல் போட்டுத் தேவரம்பைகளாடுகிறதும், தேவகன்னிகைகள் புருஷர்மீது கோபமாய்க் கழற்றி யெறிந்து போட்ட ஆபரணத்தைப் பெண் குரங்குகள் எடுத்துப் பூட்டிக்கொள்ள அதைப் பார்த்து மந்திகள் சந்தோஷப்படுகிறதும், அப்பர்வதத்தி லுண்டாகிய பலவித சம்பிரமங்களைப் பார்த்துக்கொண்டு ஸ்திரீகளும் - புருஷர்களும் திரிகிறபோது அவர்களுடைய மார்பிலுந் தலையிலுமிருக்கிற புஷ்பமாலைகளில் பொருந்திய வண்டுகள் கூடிப் புணர்ச்சி செய்யக்கண்டு சந்தோஷித்தும், தண்ணீர்த் தடாகங்களைப் பளிங்குப் பாறையென் றெண்ணி ஸ்திரீகள் அதிலே நடக்க அதிலவர்கள் விழுந்து கட்டியிருக்கின்ற வஸ்திரங்கள் நனைய, அதைக் கண்ட புருஷாள் கைக்கொட்டி நகைத்து விளையாடவும், பளிங்குப்பாறையைப் புருஷாள் தண்ணீர்த் தடாகமென் றெண்ணித் தொங்கக் கட்டியிருக்கிற வஸ்திரங்களைத் தூக்கி யொதுக்கிக்கொண்டு இறங்க, அதைக்கண்ட ஸ்திரீகள் நகைத்து விளையாடுகிறதும் அம்மலை சத்திக்கிறதைக் கேட்டுத் திரும்பத் திரும்ப அதினுடனே கூவிக்கொண்டும், குயில்களோடு கூடக் கூவியும். இப்படி பலபல விதங்களாக விளையாடிக்கொண்டிருக்கிற ஸ்திரீ புருஷாள், அந்தப் பர்வதத்திலே விஞ்சைய ஸ்திரீகளும், அவர்கள் புருஷாளும், படுத்திருந்த புஷ்ப மெத்தைகளையும், இந்திர கோபம்போலச் செவந்திருக்கிற தம்பலங்களையும், பொன்னரிமாலைகளையும், அவர்கள் அந்த மலத்தேன் சாப்பிடுகிற பொன் வட்டில்கள் தாசிகள் இனி யிவனிடத்தில் ஒன்றுமில்லை யென்று எண்ணிக் கைவிட்டுவிட்ட புருஷாளைப்போலப் பசையற்று அங்கங்கே கிடக்கிறதையும், வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருக்கிற போது காந்தள் புஷ்பத்தைப் பார்த்துப் பாம்பென்று பயப்படுகிற ஸ்திரீகளும், வச்சிறைப்பாறையில் புஷ்பத்தினுடைய நிழல் தெரிகிறதைப்பார்த்து இதைப் பறித்துக்கொடுமென்று தங்கள் நாயகனைத் தொழுகிற ஸ்திரீகளும், சுனை நீர் - கதம்பம் - கஸ்தூரி - மஞ்சள் - குங்குமம் - சந்தனம் முதலியவைகளினுலே சிவந்து குழம்பும்படியாய் ஸ்நானம் செய்கிற ஸ்திரீகளுமாய், இப்படி அனேக நாழிகை விளையாடிக்கொண் டிருக்குங் காலையில் சூரியன் அஸ்தகிரி யுற்றனன். அப்போது அந்தச் சூரியனென்கிற சிங்கம் அந்தப் பர்வத மென்கிற யானையின்பேரில் பாய, அந்த யானையினுடைய சரீரத்திலிருந்து பெருகின ரத்தம் போல் வானமுழுதும் சிவந்தது. அப்போது தசரத மகாராஜாவினுடைய சேனு சமுத்திரத்தில் அநேக செந்தாமரைப் புஷ்பம் புஷ்பித்தது போல, அநேக நட்சத்திரங்களுடனே ஆகாயத்தில் சந்திரனும் பிரகாசித்தான். இப்படி ஆகாயத்தில் ஒரு சந்திரன் பிரகாசிக்கவும், இந்தச் சேனு சமுத்திரத்தில் அநேகம் ஸ்திரீகளினுடைய முகமாகிய சந்திரன் பிரகாசித்தனன். பேரிகை - மத்தளம் - தாளம் - வீணை முதலானவைகளோடு வீதிக்கு வீதி ஆடல் பாடல்களு மிகுந்து, தெய்வலோகத்தைப் பார்க்கிலும் அதிகமாகவே யிருந்தன. ஓர் புறத்தில் மதயானைகளை அதட்டிக் கட்டுகிறவர்களுடைய சத்தங்களும், ஓர் புறத்தில் மதுபானம் செய்து குளறுகிறவர்களுடைய சத்தங்களும், ஓர் புறத்தில் நடனஞ்செய்கிற பெண்களுடைய மேகலாபரணச் சத்தங்களும்

இவை முதலிய அநேக சத்தங்கள் எங்கும் நிறைந்திருந்தன. ஓர் புறத்தில் பல நூல்களைக் குறித்து வசனிக்கிறவர்களுடைய தொனியும், ஓர்பால் ஸ்திரீகளுடனே கூடி சம்பிரமமாகப் பேசிக்கொண்டிருக்கிறவர்களுடைய தொனியும், ஓர்பால் யாழ்வீணைகளை வாசிப்பதினாலுண்டான தொனியுமுண்டாகும்படி இராமுழுதும் அநேக சம்பிரமானந்தத்துடனே கழித்தார்கள். பின்பு சூரியன் நட்சத்திரங்களைப் பற்களாகவும், ராத்திரியைத் தேகமாகவுமுடைய இரணியாசுரனை உதயகிரியென்கிற பொன்தூணி லுதித்துக் கிரணம் என்கிற கைகளை நீட்டிக்கொண்டு கோபிக்கும் உக்கிர நரசிங்க மூர்த்தியைப்போலப் புறப்பட்டார். அப்போது தசரத மகாராஜன் தனது நித்திய நியமங்களை முடித்துத் தேரின்பேரிலேறிக் கொண்டு சேனசமுத்திரம் சூழ்ந்துவரச் சோணமா நதியைப் போய்ச் சேர்ந்தார். காலமும் மத்தியானமாயிற்று.

வரைக்காட்சிப் படலம் முற்றிற்று.

பூக்கொய் படலம்

அவ்விடத்தில் ஸ்திரீகளும் புருஷாளும் கூடிக்கொண்டு சோலைகளில் புஷ்பங்கள் பறித்து விளையாடும்படி பிரவேசித்தார்கள். அந்தச் சோலையிலிருந்த மயில்களெல்லாம் இந்த ஸ்திரீகள் தங்கள் புருவமென்கிற வில்லை வளைத்துக் கண்ணென்கிற அம்புகளினால் எய்வார்களென்று பயந்துபோய் விட்டன. அன்னங்கள் இவர்கள் நடையைக்கண்டு வெட்கிப் போய்விட்டன. குயில்கள் இவர்களுடைய சாரீரத்தைக் கேட்டு சங்கூசப்பட்டு, கல்விமானுக்கு முன் மூடன் வாயடங்கி யிருக்கிறதுபோலப் பேசாமல் அடங்கி யிருந்தன. ஸ்திரீகள், மரங்களில் புஷ்பித்திருக்கிற கிளைகளை வளைக்க, அதுகள் வளைந்து இவர்கள் பாதத்தில் புஷ்பங்களைச் சொரிந்து வணங்குவ. இப்படி மரங்களே அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு வணங்கி உபசாரம் செய்யுமானால் ஸ்திரீகளுக்கு வணங்காத புருஷாளு முண்டோ? ஐம்புலனெடுங் கூடிய புருஷாள் ஸ்திரீகள் கையிலகப்பட்டுக் கொண்டு, அவர்களுக்கு உபசாரஞ்செய்து, அவர்கள் மனதின்படி நடந்து கொள்ளுகிறவர்களா யிருந்தால், ஓரறிவோடு கூடிய மரம் வளைந்து கொடுக்குமென்பதற்குச் சந்தேகமுண்டா? அவர்களுடைய முகங்களையும் கண்களையும் தாமரைப் புஷ்பங்களும் நீலோற்பல புஷ்பங்களுமாக எண்ணிய வண்டுகளானது புதிய புஷ்பங்கள் மலர்ந்த தென்று களித்துப் பறந்துவந்து சூழ்ந்து சுழல, அவைகள் ஓட்டினாலும், அப்பால் போகாமல் புதுமை பார்க்கிறதுபோல மிகவும் நெருங்கி மொய்த்துக்கொண்டே யிருந்தன. சில புஷ்ப மரங்கள் புருஷாளுடனே பிணங்கிக் கோபமாயிருக்கிற ஸ்திரீகளைப்போல வளைக்க வளைக்க வளையாமலிருந்தன. சில மரங்கள் சந்தோஷமாயிருக்கிற ஸ்திரீகள்போல வளைந்து புஷ்பங்களைக் கொடுத்தன. சில ஸ்திரீகள் மரத்திலிருந்த புஷ்பமெல்லாம் பறித்துக்கொள்ள அந்த மரமானது முன்போலே அழகாயிராமல் வெறு மரமா யிருந்ததைக்கண்டு, உன் புருஷன் உன்னைக் கண்டால் இகழ்ந்துவிடுவானே யென்று சொல்லித் தங்களுடைய ஆபரணங்களை அதற்குப் பூட்டி அழகு பார்த்தார்கள். ஒரு ஸ்திரீ பளிங்குப்

பாறையில் தன்னிழல் புஷ்பத்துடன் காண, அதைப் பார்த்து இந்தப் பெண் தனது நாயகனுக்கு அந்தரங்கமானவளென்று கோபித்துக் கொள்ளுவள். ஒரு ஸ்திரீ தன் புருஷனுடனே பிணங்கிக் கோபமாய் பேசாமலிருக்கிறவள், புஷ்பந் தன் கைக்கு எட்டாதவள்போல் அவனுக்குக் கேட்கும்படியாய் ஒரு குயிலைப் பார்த்து, எனக்கந்த புஷ்பத்தைப் பறித்துக்கொடு என்று கும்பிட்டுச் சொன்னாள். ஒரு புருஷன் செவ்விளநீரைப் பார்த்து, இது ஸ்திரீகள் தனத்துக்குச் சமானமா யிருக்கின்றதென்று சொன்னான். அதற்கு அவனுடைய நாயகி கோபித்துக்கொண்டு எந்த ஸ்திரீ தனத்துக்குச் சரியாக விருக்கின்றதோ அதை யெனக்குச் சொல்லும் சொல்லுமென்று மகா கொடூரமாகச் சொன்னாள். ஒரு புருஷனுடைய நாயகி அவனுக்குப் பின்புறமாக வந்து கண்ணை மூடினாள். அவன் யாரெனது கண்ணை மூடினதென்று கேட்கவே, நெருப்புப்போலச் சீறிக் கோபித்துக்கொண்டாள். ஒரு புருஷன் மறதியாய்ப் பின்னொருத்தி பேரைச் சொல்லித் தனது நாயகியை யழைத்து புஷ்பம் கொடுத்தான். அதையவள் கோபத்துடன் வாங்கி முகர்ந்தாள். உடனே அந்தப் புஷ்பம் கருகிப்போயிற்று. ஒருவன் புஷ்பம் பறித்துத் தனது இரண்டு ஸ்திரீகளுக்கும் சரியாய்ப் பங்கிட்டுக் கொடுக்க, ஒருத்தி புஷ்பத்தை இறைத்துப்போட்டுக் கண்கள் சிவந்தாள். ஒருத்தி தன்னைப்போல் நடையும் சாயலுமாய் இருக்கிற அன்னப் பட்சியைக் கண்டு எனக்குத் தோழியென்று உறவுகொண்டாடி, அது வஸ்திரமில்லாம லிருப்பதைக் கண்டு கண்டவர்கள் இகழ்ச்சி செய்வார்களே யென்று தன் வஸ்திரங் கொடுக்க எத்தனமானாள். இந்தப்படியாக அந்தச் சிங்காரச் சோலையிலே அநேக நாழிகை விளையாடிக் கொண்டிருந்து, அப்பால் தாமரைத் தடாகத்திலிறங்கி விளையாட உத்தேசித்து, ஒரு பெரிய தடாகத்திலே தேவர்களும் தேவ ரம்பைகளும் பூர்வத்தில் துருவாச மகாரிஷி கோபத்தினாலே சமுத்திரத்தி லெந்தப்படி யிறங்கினார்களோ அந்தப்படி ஸ்திரீ புருஷாளனைவரும் இறங்கினார்கள்.

பூக்கோய்ப் படலம் முற்றிற்று.

நீர்விளையாட்டுப் படலம்

இப்படி ஸ்திரீகளும் புருஷாளும் அநேகம்பேர் அத் தடாகத்திலிறங்கி ஒருவர் பேரிலொருவர் தண்ணீரைவாரி யிறைத்துக்கொண்டு விளையாடுகிற போது, அதிலே ஒரு தாமரைக்கொடி காலில் மிதிப்படவே ஒருத்தி மிகவும் பயந்து தன் புருஷனைத் தழுவிக்கொண்டாள். ஒரு ஸ்திரீ வாளைமீன் துள்ளுகிறதைக் கண்டு பயந்து புருஷன் தோளைப் பிடித்துக்கொண்டு இலட்சுமியைப் போலப் பிரகாசித்தாள். ஒரு ஸ்திரீ தன்னுடைய தனத்தில் பூசியிருந்த கலவைச் சந்தனங் கரைந்து நகக்குறிகளில் பதிந்திருக்கிற சந்தனமாத்திரங் கரைந்துபோகாமல் பொற்கலசத்தில் நூல் சுற்றியிருக்கிறது போலப் பிரகாசிக்கக் கண்டு, புருஷன்பேரில் மிகுதியும் கோபமானாள். ஒருத்திக்குக் காமாக்கினியால் அந்த நீர் வெந்நீர்போல் சுடுகையாயிருந்தது. ஒருத்தி முகத்தில் புருஷன் தண்ணீரை இறைத்தான். அது பொறுமல் அவள் கண்களில் ஜலம்

பெருகுவதால் தேகம் ஆதியந்தம் நிறைந்தது. ஒரு ஸ்திரீ தன் வாய் நீரைக் கொப்பளித்துத் தன் புருஷன்பேரில் உமிழ்ந்துகொண் டிருக்கிறதும், ஒரு ஸ்திரீ கயல்மீன்களைக் கண்டு தடாகத்துக்கெல்லாங் கண்களுண்டா யிருக்குமோ வென்று புருஷனைக் கேட்கிறதும், ஒரு ஸ்திரீ தண்ணீரிற் றெரிகிற தன் னிழலைக் கண்டு, நான் நகைத்தால் இவளுங்கூட நகைக்கிறாள். இவள் நமக் குத் தோழி யென்றெண்ணி சந்தோஷிக்கிறதும், ஒரு ஸ்திரீ மேகலாபரணம் விழுந்து காலில் சுற்றிக்கொள்ள, பாம்பு சுற்றிக்கொண்டதென்று பயந்து, கண்களைக் கையினால் மூடிக்கொண்டு, வாய்குழறிக் கூவுகிறதும், இப்படியாக அநேகம்பேர் விளையாடுகிறபோது ஸ்திரீகளுடைய ஸ்தனங்களும் புருஷா ளுடைய புஜங்களும் அநேகமாய் நெருங்கி நிறைந்தபடியினாலே தடாகத்தி லிருந்த ஜலம் மிகுந்து கரைமேலே வழிந்து பெருகிற்று. சில ஸ்திரீகளுடைய சிவந்த அதரங்களெல்லாம் வெளுக்க, கண்கள் சிவக்க, வஸ்திரங்கள் விழுந்து போகத் தண்ணீரில் விளையாடினபடியால், அந்தத் தடாகமும் புருஷனுக்குச் சமானமாக விருந்தது. நல்லவர்களுடனே சேர்ந்த மூடனும் ஞானவானாகிறது போல, ஸ்திரீகளினுடைய கதம்பம் - கஸ்தூரி - மஞ்சள் - குங்குமம் - சந்தனம் - அத்தர் - புனுகு - சவ்வாது - பன்னீர் முதலிய கலவையின் பரிமளங்களினால் அத்தடாகத்தி லிருக்கின்ற கயல்மீன்களும் பரிமளித்தன. இப்படிக்கு விளை யாடிய இவர்களெல்லாம் குச்சுப்பிடித்த இரத்தினங்கள்போலப் பிரகாசித் தார்கள். பின்பு இவர்கள் கரையேறி வந்து வெவ்வேறு வஸ்திரங்கள் தரித் துக்கொண்டு, ஆபரணங்களைப் பூண்டுக்கொண்டார்கள். இவர்கள் அதிலே விளையாடிக் கொண்டிருந்து வெளியே வந்துவிட்டது அதிலிருந்த தாமரைப் புஷ்பங்களெல்லாம் குடிபோய் விட்டதுபோலத் தடாகத்தின் அழகு இழந்து போயிற்று. இவ்வித நீர்விளையாடலைப் பார்த்துச் சூரியன் தானும் நீர் விளை யாடவேண்டுமென்று மேற்குச் சமுத்திரத்திற்குப் போய்க் குதித்தான். அப் போது சந்திரன் அதிக சாமர்த்தியத்தோடும் எதிராளிகளுடனே எதிர்த்துத் தோற்றுப்போன ஒருவன் திரும்பவும் நாணமில்லாமல் வந்ததுபோல ஸ்திரீ களுடைய முகத்துக்குச் சமானமாகாமல் போய்விட்டவன் அன்றைக்கு வந்து பிரகாசித்தான். அந்தச் சந்திரனுடைய பிரகாசம் பூமியெல்லாம் நிறைந்து, புருஷனோடு கூடியிருக்கிற ஸ்திரீகளுக்குக் கள்ளுபோலவும் பிரிந்திருக்கிற வர்களுக்கு விஷம்போலவும், பிணங்கி ஊடலோ டிருக்கிறவர்களுக்கு ஒரு தூதுபோலவுமாகப் பிரகாசித்தது. அந்த நிலவினுடைய கிரணகாந்தியின் வெண்மையினால், உலகத்திலிருக்கிற ஆறுகளெல்லாம் கங்கையைப்போலவும், சமுத்திரம் திருப்பாற்கடல் போலவும், பர்வதங்களெல்லாம் கைலாயம் போல வும் வெளுத்து இருந்தன. அப்போது ஸ்திரீகள் முத்துப் பந்தலிலேயும் கூடாரங்களிலேயும் புஷ்பப் பந்தல்களிலேயும் தங்கள் நாயகர்களோடு பிர வேசித்தார்கள்.

நீர்விளையாட்டுப் படலம் முற்றிற்று.

உண்டாட்டுப் படலம்

அங்கிருந்து போனபின்பு புஷ்பவாசனை நீங்காத அளகபாரத்தை யுடைய அந்த ஸ்திரீகள் படுக்கையில் இன்பத்தை யடையும்பொருட்டுப் பொற் கிண்ணத்தில் தேன்களை விட்டுப் புசித்தார்கள். தேனெடு மலர்ந்திருக்கிற புஷ்பங்களில் தேனை வார்க்கிறது போலச் செவ்வல்லிப் புஷ்பத்துக்குச் சமானமான அவர்கள் வாயில் தேன்களை விட்டுக் கொண்டார்கள். பால்போல வெளுத்திருக்கிற கள்ளும், அதைக் கொண்டிருக்கிற பளிங்கு வட்டிலும். ஸ்திரீகளுடைய கைக்காந்தியினாலே சிவந்து காட்டிற்று, இவ்வித பாணத்தினால் வாள்போன்ற அவர்கள் கண்கள் சிவந்தன. அவர்கள் காமம் என்கிற அக்கினிக்குக் கள்ளென்கிற நெய் போய் விழவே, மிகவும் அக்காமத்தீ மூண்டது. பொன் வள்ளத்திலிருக்கிற கள்ளை ஒருத்தி பார்க்க, அதிலே தன்னுடைய முகத்தின் நிழல் தோற்ற, அதைச் சந்திரனென்றெண்ணி, ஓ சந்திரனே! இராகுவென்கிற பாம்புக்குப் பயப்பட்டு வந்து ஒளித்துக்கொண்டாயோ? நல்லது. நான் புருஷனுடனே பிணங்கியிருக்கிற நாளையிலே நீ எனக்கு வெப்பத்தைத் தராமல் குளிர்ந்திருக்கிறதாலல் உன்னை அப்பாம்பு தீண்டாதபடி காத்து, இந்தக் கள்ளையும் உனக்குக் கொடுக்கிறேனென்றாள். ஒருத்தி மாணிக்கக் கிண்ணத்திலிருக்கிற கள்ளில் தன்னிழல் தெரிய, அதைத் தோழியென்றெண்ணி, இந்தக் கள்ளுக்கு ஆசைகொண்டு பார்க்கிறாயோ? ஆனால் நீயே சாப்பிடென்றாள், ஒருத்தி இந்த ஜாடியில் கள் நிறைந்திருக்க, நீ இந்த உச்சிஷ்டமானதைப் புசிக்க நினைவு கொண்டுவந்தாயோவென்று மிகவும் நகைத்தாள். ஒருத்தி சந்திரனுடைய கிரணத்தைப் பளிங்கு வள்ளத்தில் கண்டு அதைக் கள்ளென்று வாயினிடத்தில் வைத்துக் குடிக்க, ஒன்றுமில்லாமையைப் பார்த்து நாணினாள்: ஒருத்தி வெறும் வெள்ளத்தில் கள்ளிருக்கிறதென்று எண்ணி யோடினாள். ஒருத்தி தன்னுடைய கண்ணிழல் கள் நிறைந்த ஜாடியில் தெரிய அதை வண்டுகளென்று எண்ணி யோடினாள். ஒருத்தி மிகுந்த மயக்கத்தினால் அரையில் உடுத்தியிருந்த வஸ்திரமுதலியதை அவிழ்த்துப்போட்டு, புஷ்பமாலையை அரையிற் கட்டிக்கொண்டு அவ் வஸ்திரத்தைத் தலையில் தரித்துக்கொண்டாள். ஒருத்தி பளிங்கு வள்ளத்திலிருக்கிறகள் கவிழ்ந்துபோனது தெரியாமல் அதை எடுத்து வாயிலே வார்த்துப் பார்க்க, அதிலொன்று மில்லாதினால் பின்பக்கத்திலே யிருக்குமென்றெண்ணி வள்ளத்தைத் திருப்பி வாயிலே வைத்தாள். ஒருத்தி தன்னுடைய இருதயத்திலிருக்கிற நாயகன் கள் குடிக்கிறதில்லையேயென்று தானும் குடியாமல் கிளியுடனே பேசிக்கொண்டிருந்தாள். இப்படியாக ஸ்திரீ கூட்டங்கள் கள்ளினுடைய மயக்கத்தினால் கண்கள் சிவந்து, புருவங்களை நெறித்துக்கொண்டு, பல்லுகளினால் உதட்டைக் கடித்துக் கைகளை யசைத்துக்கொண்டு ஆடுகிறபடியினால் அபிநயம் பிடிக்கிறவர்கள்போல் பிரகாசித்தார்கள். ஆதண்டங்களைபோல சிவந்திருக்கிற அவர்கள் வாய் ஈறுகளில் நீரூற்றுவர, முலைக்கச்சின் முடிவுகள் இற்றுப்போக, கட்டியிருக்கிற வஸ்திரங்கள் விழுந்துபோக, தலை மயிர்சரிய, இவ்வித கோலாகலமாக அந்தக் கள் செய்தபடியால் அக் கள்ளும்

நாயகனைப்போலவே யிருந்தது. சரீரங்களில் வியர்வை காணுகிறது குடித்த கள் வெளியில் புறப்படுகிறதுபோ லிருந்தது. ஒருத்தி தன்னுடைய நாயகனை யழைத்துவரச்சொல்லி தாதியை யனுப்பினாள். அவள் உடனே அழைத்து வராதபடியால், பின்னும் சில தாதிகளை மேலும் மேலும் அனுப்பினாள். அவர்கள் திரும்பிவருகிறமட்டுக்கும் மனந்தாளாமல் தானும் புறப்பட்டு நடந் தாள். ஒருத்தியின் வள்ளத்திலிருக்கிற கள்ளில் ஈக்கள் மொய்த்துக்கொண் டிருக்கிறபடியால் செங்கழுநீர் கொடியினால் அதை உறிந்துக் குடித்தாள். ஒருத்தி தோழியைப்பார்த்து, என் வருத்தமெல்லாம் என்னுடைய நாயகனுக் குச் சொல்லி அழைத்து வருகிறையா? அல்லவென்று என் மனதைப்போல அவனிடத்தில் தானே மயங்கிக் கிடக்கிறையா? சொல்லென்றாள். அதுகேட்டு அவள் நகைத்து, உடனே கண்களில் முத்துமுத்தாய் ஜலத்தை விட்டாள். ஒருத்தி ஒரு நாயகனிடத்தில் தூதனுப்பி யிருந்தாள். அவன் வருகிறானென்று செய்தி தெரிந்து கதவைச் சாத்திக்கொண்டு தன் மனதில் எதுவோ ஒன்றை நினைத்துத் தன் கண்கள் சிவக்க யிருந்துவிட்டாள். ஒருத்தி புருஷன் வரவே கோபித்துக்கொண்டு செம்பஞ்சூட்டிய தன் காலினால் உதைத்தாள். அதுபடவே அவன் சரீரமெங்கும் காமவிரை விரைத்து மூளைகள் புறப்பட் டதுபோல் மயிர்க்கூச்சிட்டுப் புளகாங்கிதனானன். ஒருத்தி தன் நாயகன் சீக்கிரமாய் வராதபடியால் அவன் பேரைச் சொல்லிக்கொண்டிருக்கிற கிளியைச் சீறிக் கோபித்துப் பார்த்தாள். ஒருத்தி புருஷன் வரவே புஷ்ப மாலையை யெடுத்து அவன் தோள்களை யிருகக் கட்டினாள். அவன் மகா பலசாலியா யிருந்தும் அந்தக் கட்டை யறுக்கமாட்டாமல் அக் கட்டிலேயே அகப்பட்டுக்கொண் டிருந்தான். ஒருத்தி தன் புருஷன் வருகிற வழியைப் பார்த்துப் பார்த்துத் திரும்பிக் கூடாரத்திலே வந்து, மேகத்திலே மின்னல் பிரகாசிக்கிறப்போல் அடிக்கடி வெளியே பிரகாசித்தாள். ஒருத்தி தன் நாயகன் வரவே எழுந்திருந்து சேவித்தாள். அவன் இதேது?. ஒருநாளு மில்லாத விநயம் இன்றைக்கு நூதனமாக வருவானேன்? என்று ஆச்சரியப் பட்டு மிகவும் பயந்தான். ஒருத்தி தன்புருஷன் வரவே மார்பிலுதைத்தாள். அவன் தன் மார்பிலிருக்கிற முத்தார முதலிய பதக்கங்கள் அவள் காலில் உறுத்துமென்று கையினாலே மூடிக்கொண்டான். அதுகண்டு அவள் உன் இருதயத்திலிருக்கிற ஸ்திரீயின்பேரில் உதைபடுமென்றல்லவா மூடிக்கொண்டீ ரென்று முன்னிலும் அதிக கோபமானாள். ஒருத்தி புருஷனோடு கோபித்துக் கொண்டு உறக்கமாய்ப் படுத்திருந்தாள். அவன் அதுகண்டு பயந்து, இவளை இப்போது தொட்டால் மிகுதியுங் கோபங் கொள்வாளென்று பேசாமல் ஓர் புறத்தில் படுத்திருந்தான். அப்போது அவள் கலவியை அபேட்சித்து, திடுக் கிட்டுப் பயந்தவள்போல் புருஷனைக் கட்டிக்கொண்டாள். இவ்வண்ணமாக அன்றையதினம் யாவரும் அதிக மயக்கத்தால் விரகமீறி யிருந்தபடியால், மன் மதனுங் கள் குடித்தவன் போன்றிருந்தனன். அன்று ராத்திரி ஸ்திரீகளும் புருஷாளும் அநேக சம்பிரமத்துடனே இஷ்டமான போக விம்பத்தை யனு பவித்துக்கொண் டிருந்தார்கள்.

உண்டாட்டுப் படலம் - முற்றிற்று.

எதிர்கோட் படலம்

அப்போது சந்திரன் தருமசிந்தையில்லாதவனுடைய பாக்கியம்போலே பிரகாச முதலியதில்லாமல் ஒளி மழுங்கிப்போனன். உடனே சூரியன் ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய கௌஸ்துவாபரணம்போல உதயகிரியிலே பிரகாசித்தான். தசரதமகாராஜன் எழுந்திருந்து தனது சேனசமுத்திரத்துடனே புறப்பட்டு கங்கா நதியை வந்து சேர்ந்தார். அந்தக்கங்கை பாதாள லோகமட்டும் ஆழ மாகித் தண்ணீர் நிறைந்து பிரவாகமாக விருந்தும், இந்தச் சேனசமுத்திர மிறங்கி ஜலம் சாப்பிடவே சமுத்திரசங்க முகத் துவாரமும் நீரில்லாமல் வறண்டு போய்விட்டது. அதினலந்தச் சமுத்திரத்திலிருந்து இந்தக் கங்காநதி தீர்த்தத் தைச் சாப்பிட்டுக்கொண்டிருந்த ஜீவஜந்துக்களும் ஏக்குற்று ஆசையுடனே மயங்கின. பிறகு அந்தக் கங்கையைக் கடந்து மிதிலாபுரிப் பட்டணத்தின் சமீபத்திற் போய்ச் சேர்ந்தார்கள். இப்படிக்கு இவர்கள் வருகிற சமாச்சா ரம் ஜனக மகாராஜன் கேள்விப்பட்டு, அதிக இஷ்டத்துடனே மிகுந்த சந் தோஷமாக யானை குதிரை தேர் காலாள் முதலிய சேன சமுத்திரத்துடனே அனேக சங்கீத மேளவாத்தியத்தோடு சம்பிரமமாய் இரதாரூடனுய்ப் புறப் பட்டுச் சூரியனை சந்திக்கிற சந்திரன்போல் வந்தார். அப்போது அந்தச் சேனையுடனே இந்தச் சேனையும் கலந்தது எப்படி யிருந்ததென்றால், ஸ்ரீ மகா லட்சுமியைப்பெற்ற க்ஷீராப்தியானது மற்ற உப்பு - நன்னீர் - தயிர் - நெய் - தேன் - கருப்பஞ்சாறு என்று சொல்லப்பட்ட அறுவகைச் சமுத்திரமுங் கூடி வருகிற பிரவாகத்தில் கலந்து யிருக்கிறதுபோலக் கூடிற்று. முரசு பேரிகை முதலான மேளவாத்தியங்கள் முழக்கமும், யானைகள் வீரிடுகிற ஓசையும், குதி ரைகள் கனைக்கிற சத்தமும், இரத வண்டிகளினுடைய முழக்கங்களும், மனி தர்களுடைய சந்தோஷச் சத்தமும் அனேக சமுத்திரங்கூடிச் சப்திக்கிறது போல சப்தித்தன. குடைகளும் - கொடிகளும் - ஆலவட்டங்களும் - மயில் பிஞ் சங்களும் - மகர தோரணங்களும் ஆகாயமெல்லாம் நிறைந்தன.

அவ்விடத்தில் பாக்கியலட்சுமி நிர்த்தனமாடினள். ஜனக மகாராஜன் தேர்விட்டிறங்கித் தசரதமகாராஜாவின் சமீபத்திற்குவர, அதுகண்ட அவரும் அதிக இஷ்டத்துடனே கைலாகு தந்து தம்முடைய இரதத்தி லேற்றிக் கொண்டு, மிகுந்த ஆனந்த சந்தோஷத்துடனே மார்புறத் தழுவிக்கொண்டு, உம்முடைய பந்துவர்க்கத்தார் யாவரும் சுகமோவென்று விஞவிச் சிலநாழிகை வசனித்துக்கொண் டிருந்த பிற்பாடு ஜனகமகாராஜாவை முன்னே நடக் கச்சொல்லி ஆக்கியாபித்தார். அவரும் அப்படியே நடந்தார். ஸ்ரீ ராம ரும் லட்சுமணருடனேகூட அனேகம் சேன சமுத்திரத்தோடு புறப்பட்டு, விலகியிருந்த தசரத மகாராஜாவினுடைய பிராணன்வந்து கூடினது போலச் சமீபத்திற்கு வந்தார். அந்தச்சேன சமுத்திரங்களெல்லா மதிக சந்தோஷத்துடனே ஸ்ரீ ராமனைப் பார்த்துச் சேவிக்கத் தாம் தமது தகப்பனரைச் சேவித்துக்கொண்டார். அவர் அதிக பிரியத்துடனே தமது மார்பில் ஸ்ரீ ராமனுடையத் திருமேனி மறையும்படியாய்த் தழுவிக்கொண்டு

அதிக சந்தோஷமாயினர். அப்போது பரதன் ஸ்ரீ ராமனைக்கண்டு, கண்களி லானந்தபாஷ்பம் பெருகச் சேவித்துக்கொண்டார். ஸ்ரீ ராமன் தன்னைத் தகப்பனர் எவ்வளவு அன்போடு தழுவிக்கொண்டாரோ அவ்வளவு அன் போடு இவரைத் தழுவிக்கொண்டு அதிக சந்தோஷமானர். இலட்சுமணர் தசரதமகாராஜாவையும் பரதனையுஞ் சேவித்துக்கொண்டார். சத்துருக்னன் ஸ்ரீ ராமரையும் லட்சுமணரையும் சேவித்துக்கொண்டார். அவரவர்கள் மிகுந்த சந்தோஷமடைந் திருந்தார்கள். தசரத மகாராஜாவின் நான்கு பிள்ளைகளும் இருக்கு - யைத்திரியம் - சாமம் - அதர்வண மென்கிற நான்கு வேதங்கள் போல் எதிரே யெழுந்தருளியிருக்க வீற்றிருந்த தசரத மகாராஜா ஸ்ரீ ராம னைப் பார்த்து, அப்பா குழந்தாய்! நீ முன்னே நடவென்று ஆக்கியாபித்தார். அவரும் அப்படியே இரதமேறிக்கொண்டு, தம்பிமார் மூவரும் குதிரைகளின் பேரி லேறிக்கொண்டுத் தம்மைச் சூழ்ந்துவர, அனேக கீதவாத்தியங்கள் முழங்க, சேனாசமுத்திரத்துடனே புறப்பட்டு முன்னே நடந்தார். மிதுலாபுரி பட்டணத்து வீதியில் நடக்கிறபோது அப்பட்டணத்திலுள்ள இராஜ கன்னிகை கள் முதலானவர்கள் யாவரும் தேவாதிதேவனுகிய ஸ்ரீ ராமனே எழுந்தருளிய படியால் அவர் திருமேனியைத் தரிசிக்கும்பொருட்டு வீதியினிடத்தில் வந் துற்றார்கள்.

எதிர்கோட் படலம் - முற்றிற்று.

உலாவியற் படலம்

அந்த ஸ்திரீகளெல்லாம் மான்கூட்டங்கள் வருகிறதுபோலவும், மயில் கூட்டங்கள் நிற்கிறதுபோலவும், மின்னற்கூட்டங்கள் பிரகாசிக்கிறதுபோல வும் வந்து நெருங்கி, அவர்கள் அளகபாரத்தில் அழகுபெற முடித்திருக்கும் புஷ்பவாசனை நிமித்தம் விருந்தாக வந்திருக்கிற வண்டுகள் எழும்பிப் பறக்க ரூபலாவண்ணியத்தோடு மொய்த்துக்கொண்டார்கள். தங்கள் அளகபாரம் அவிழ்ந்து விழுகிறதைப் பாராமலும், மேகலாபரணங்க ளறுந்து சிந்துகிற தைப் பாராமலும், வஸ்திரம் சரிந்துபோகிறதை யெண்ணுமலும், தன பாரத்தி னலே மெலிந்த யிடையானது தடுமாறுகிற வருத்தமும் பாராமல் நெருங்கி வந்து விலங்குகளெனத் தேனை வண்டுகள் மொய்த்துக்கொண்டு, ஆசையென் கிற வஸ்துவைக் கண்ணினலே காணக் கிடைத்தது நமது பாக்கிய மென்றும், பெண் சரீர மெடுத்ததற்குப் பலன் இன்றல்லவா கிடைத்ததென்று சொல்லி அனேககாலம் மழையில்லாமல் தண்ணீர் கிடையாத காலத்திலே மிகுந்த தாகத் தோடு அவாக்கொண்டிருக்கிற மான் கூட்டங்கள் ஜலத்தோடு நிரம்பி யிருக் கிற ஒரு தடாகத்தைக் கண்டு மேன்மேலும் போய் வீழ்கிறதுபோல நிறைந்து நெருங்கினர்கள். கால் சிலம்பு முதலானதுகள் சத்திக்க, இளைத்திருக்கிற இடைகள் நோகத் துரிதமாய் நடந்து, அவரிடத்திற் போய் இருக்கிற மனதை யோடிப்பிடிப்போமென்று போகிறவர்கள் போல் ஓடித் தொடர்ந்தார்கள். சில ஸ்திரீகள் அகலிகையின் சாபத்தை விமோசனம்செய்த பாதார விந் தத்தையும் சீதை நிமித்தமாக வில்வளைத்து ஒடித்த சௌந்தரியமான தோள்

களையும் பார்க்க வேணுமென்கிற அபேட்சையினாலே, பள்ளத்திற் பாய்கிற நீர் போல சீக்கிரத்தில் வந்து மொய்த்துக்கொண்டார்கள். அப்போது, ஸ்ரீ ராமர் வீதியில் நடக்கிறவர்கள் போலக் காட்டி அந்த ஸ்திரீகளுடைய கண்கள் வழியாய்ப் புகுந்து மனதுக்குள் பிரவேசித்தபடியால் தம்முடைய கண்ணனென்கிற திருநாமத்தைச் சகலருக்கும் இன்னதென்று தோன்றும்படி செய்தார். இப்படியாக வந்து அநேகம் ஸ்திரீகளில், ஒருத்தி இத்தனை பேர்களுடைய கண்களிலேயு மகப்படாமற் போகிற இந்தப் புருஷனைத் தன் கண்ணுக்குள் அடங்கும்படியாய்ச் செய்துகொண்ட சீதையல்லவோ பெரியவளென்று பெருமூச் செறிந்தாள். ஒருத்தி வஸ்திரம் - வளையல் - அழகு - இளமை - மனம் - சிந்தை - தேஜசு - வச்சிரகசிதமான ஆபரணம் - நாணம் - நிறை - இத்தனையும் ஒழிந்து போயும், தன் பிராணனைமாத்திரந் தாங்கிக்கொண்டிருந்தாள். அநேகம் ஸ்திரீகளினுடைய கறுத்த கண்களினால் பார்த்தபடியால் அக் கண்ணெளிகளெல்லாம் ஸ்ரீ ராமனுடைய திருமேனியிற் பாய்ந்து கறுத்ததோ? அல்லது ஸ்ரீ ராமனுடைய கறுத்த திருமேனியே அந்த ஸ்திரீ கூட்டங்களின் பார்வையில் பாய்ந்து கறுத்ததோ? அதுதான் தோன்ற வில்லை என்ருள். மாந்தளிருக்குச் சமானமான சரீரத்தையும் மூன்ரும்பிறைச் சந்திரனைப்போல நெற்றியையுமுடைய ஒரு ஸ்திரீ மன்மதன் எதிரே நின்று புஷ்பபாணங்கள் பொழிகிறதைக் கண்ணினால் கண்டு, நம்முடைய இராஜாவினுடைய ஆக்கினையையும் பாராமல் அவருக்கு மருமகனாகிய இந்த வீரனுடைய சாமர்த்தியத்தையும் பாராமல் இவனாரோ ஒருவன் ஸ்திரீகள் பேரிலே இப்படி ஏன் அம்புகளைப் பொழிகிருனே என்ருள். வில்லுகள்போலே புருவங்களை உடைத்தாயிருக்கிற ஒருத்தி ஸ்ரீ ராமனைப் பார்க்கிற அபேட்சையினாலே தன்னைத்தான் மறந்தாள். மையைப்போல் கூந்தலும் சிவந்த வாயையுமுடைய ஒருத்தி ஸ்ரீ ராமனைப் பார்த்து மனதுருகி, இந்த வஞ்சகன் நமது மனதுக்குள்ளே புகுந்துகொண்டான். இவன் திரும்பிப் போகாதபடியால் கண்களென்கிற வாயிலை மூடிக்கொண்டேன். அடி தோழி! என்னைக் கொண்டுபோய்ப் படுக்கை யறையில் சேர்த்துவிடென்று சொன்னாள். ஒருத்தி மன்மதனுடைய பாணம் சரீரமெல்லாம் துளைக்கிறதையும் பாராமல், கட்டிக்கொண்டிருக்கிற வஸ்திரம் கலைந்துப் போவதையும் கருதாமல், ஸ்ரீ ராமனுடைய திருமேனியைப் பார்க்கிற மற்ற ஸ்திரீகளை யெல்லாம் கோபத்துடனே கண்ணில் நெருப்புப்பொறி பறக்கப் பார்த்தாள். களித்து - மதர்த்து - நீண்டு - கள்ளத்தை ஒடுக்கிக் கொண்டு - சிவந்து - வெளுத்து - கறுத்து வேல்போன்ற கண்ணையுடைய ஒருத்தி, ஸ்ரீ ராமன் வருகிற பவனி பார்க்கிறதற்கு அதிக சந்தோஷத்துடனே மனங் குளிர்ச்சியாய் வந்தாள். அவருடைய சுந்தரத்தைப் பார்த்தாள் உடனே மன்மதபாணப் பிரயோகத்தினால் காமாக்கினி யெழும்பி, மனவெறுப்புடனே திரும்பி வீட்டுக்குப் போய்விட்டாள். ஒருத்தி ஸ்ரீ ராமனுடைய திருமேனியைப் பார்க்கிறதற்கு முன்னே ஸ்திரீ கூட்டங்கள்வந்து நெருங்கிப் போனபடியினால், அவர்களுடைய இடைகளின் சந்துகளில் தன் கண்களை வைத்துப் பார்த்தாள். அவர்களுடைய ஆபரணங்களும் மேகலைகளும் புஷ்பங்களும் வெயர்வையினால் கரைந்து விழுந்து கிடக்கிற சந்தன கதம்ப கஸ்தூரிகளும் கைவளைகளும் அந்த வீதியெல்லாம் நிறைந்து கிடந்தன. ஸ்ரீ ராம

னுடைய தோள்களைக் கண்டபேர் அந்தத் தோளைத்தானே பார்த்துக்கொண் டிருந்தார்கள். கைகளைக் கண்டபேர்கள் அந்தக் கைகளையே பார்த்துக்கொண் டிருந்தார்கள், செந்தாமரைப் புஷ்பம்போலு மிருக்கிற அவருடைய உபய சரணாரவிந்தங்களைக் கண்டபேர் அவைகளையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். இவர்களில் ஒருத்தியாகிலும் ஸ்ரீ ராமனுடைய திருமேனியை முழுதுங் கண்டு தரிசித்தவர்களல்ல. ஏனெனில், உலகத்தி லுண்டாகிய அறுசமயங்களுக்கும் ஒரே கடவுளாக யிருந்தும் அந்தந்த சமயங்களுக்கும் பலவாறாகத் தோன்று கிறதுபோல, ஸ்ரீ ராமபிரான் தாம் ஒருவராகவே யிருந்தும் பார்ப்பவர்களுக் குப் பலவாறாகவே தோன்றினர். ஒருத்தி மேகலாபரணங்களும் பாதச்சிலம்பு களும் சப்திக்க வெகு துரிதமாக வந்தாள். ஆனல் திரும்பிப் போகையில் தாதிகள் கைலாகு கொடுக்கப் போனுள். தாமரையின் மொக்கைப் போலத் தனங்களையுடைய ஒருத்தி ஸ்ரீ ராமனைப் பார்த்து, ஐயா! உன் மனது இரும்பு. ஆயினும் ஒரு ஸ்திரீ நிமித்தம் பர்வதம்போ லிருந்த வில்லை யொடித்த புண் ணிய புருஷனுகிய நீர் இந்த மன்மதனுடைய கரும்பு வில்லையொடித்து என்னை ரட்சிக்காயோ? என்றுள். ஒருத்தி தேரின்பேரில் போகிறவன் அதைவிட்டு, என் எதிரே நிற்கின்றுன். இதென்ன மந்திரசத்தியோ? அல்லது நான் கனவு காண்கிறேனே? ஆ! இதென்ன வென்று உருவெளித் தோற்றத்தைக் கண்டு சொன்னுள். ஒருத்தி தன் மனதைத் தானே அவரிடத்தில் தூதனுப் பியதாக யெண்ணி நினைந்து யோசனைசெய்து, சீதை செய்த புண்ணியமென் றுள். தங்கப் பிரதிமைபோல் சௌந்தரியமான ஒருத்தி தன் பாங்கியைக் கும்பிட்டு, இந்த மகா புருஷனை மன்மதனைக்கொண்டு படத்திலே எழுதலாமா வென்றுள். ஒருத்தி மனிதனுக்கு இத்தனை லட்சணங்களு முண்டா யிருக்குமா? இராது. ஸ்ரீ மகாவிஷ்ணுவே இவர்; இது உங்களுக்குப் பின்பு தெரியுமென் றுள். ஒருத்தி இந்தப் புருஷன் இந்தப் பட்டணத்துக்கு வந்தது ஜனகராஜன் இதுவரைக்குஞ் செய்த தவப்பலத்தாலே என்றுள். ஒருத்தி இந்தப் புருஷன் தனியே ஒரு நாளைக்கு என் கனவிலேயாகிலும் வருவானு வென்றுள். ஒருத்தி இத்தனை ஸ்திரீகள் ஆசையுடனே பார்த்து மயங்க, இவன் கொஞ்சமாகிலும் மனதிலெண்ணிப் பாராமல் போகிறுனே; கிருபை என்கிறதைக் கண்டுமறி யானே? ஐயோ! மகா கடூரன், ஆசை என்கிறதும் அறியானென்றுள்.

இவ்வாறுக ஸ்ரீ ராமனைப் பார்க்கிறவர்கள் மிதமில்லை, ஆனல் அவ னுடைய திருவழகுக்கும் மிதமில்லை. மன்மதன் தன்னுடைய அம்புறத்தூணியி லிருந்த அம்புகளை யெல்லாம் செலவு செய்துவிட்டு, அப்பால் என்ன செய்யப் போகிறுன். அறையிற் கட்டியிருக்கிற வாளின்பேரிலேயும் கையை வைத் தான். அன்றையத்தினம் மன்மதன் எய்த பாணம் பூமியெல்லாம் நிறைந்து தெய்வலோகத்துக்குப் போய் தேவரம்பைகளுடைய மார்பிலேயும் தைத்தது. ஒருத்தி ஸ்ரீ ராமனுடைய தேர் போகிறதும் திரும்பி வருகிறதும் மறுபடி போகிறதுமா யிருக்கிறதைப் பார்த்து, கால் சிவக்க ஊசலாடுகிறவள்போலவே உழன்று திரிந்தாள். ஒருத்தி ஸ்ரீராமனைப் பார்த்து வருகிறவர்களைக் கண்டு, என் மனது அங்கு போயிற்று; அதை நீர் கண்டீரா வென்று நாணமில்லாமல் வினவினள். ஒருத்தி, இவனுடைய வம்சத்தாரில் ஒருவர் ஒரு ஜீவனுக்காகத்


தன் ஜீவனைக் கொடுத்து இரட்சித்தார். இவன் நம்முடைய ஜீவனை நமக்குக் கொடுக்கிறதாகவு மிருக்கவில்லையே! இந்தக் கடூரபுத்தி இவனுக்கு எங்கே யிருந்து உண்டாயிற் றென்றாள். ஒருத்தி இவன் அந்தப் பெரிய வில்லை யொடித்தது சீதையின்பேரி லாசையினலல்ல, ஆனல் தான் அடைந்திருக்கிற கல்வி சாமர்த்தியம் எல்லாருக்கும் தெரியவேணுமென்று ஒடித்தானென்றாள். ஒருத்தி அதிக கோபத்துடனே மயங்கி, இந்தச் சாமார்த்தியன் முன்னே மன்மதன் பயமில்லாமல் பாணங்களைத் தொடுத்து நம்மைக் கொல்லுகிறனே. இந்த மன்மதனைப் பார்க்கிலும் ஆர் பலவந்தரென்று சொன்னுள். இவ்விதமாக, ஸ்திரீகள் ஆசையினல் சோர்ந்து மயங்கியிருக்க, ஸ்ரீ ராமன் வசிஷ்டரும் விஸ்வாமித்திரரும் எழுந்தருளி யிருக்கின்ற திருமண்டபம் போய்ச் சேர்ந்து அவர்களிருவரையும் சேவித்துக்கொண்டு, அவர்கள் அருளிச்செய்ய, தம்பி மார்கள் நிழல்போலச் சூழ்ந்திருக்கவும், ஒரு இரத்தின சிங்காதனத்திலே திருக்கோலத்தோ டெழுந்தருளி யிருந்தார். அப்போது தசரத மகாராஜன் அநேக இராஜகூட்டத்தோடு நட்சத்திரங்களுடனே வருகிற பூரணச் சந்திரனைப்போல வந்து சேர்ந்து, வசிஷ்டர் விஸ்வாமித்திரர் இருவரையுஞ் சேவித்துக்கொள்ள, தேவர்கள் புஷ்பமாரி பெய்யச் சபா மண்டபத்தில் தேவேந்திரனுடைய திருவோலக்கம்போல் ஒரு சிங்காதனத்தில் எழுந்தருளியிருந்தார்.

உலாவியற் படலம் முற்றிற்று.

கோலங்காண் படலம்

அந்தச் சபையிலே, கங்கர் - குலிங்கர் - சிங்களர் - சேரலர் - பாண்டியர் - அங்கர் - வங்கர் - வந்தியர் - வங்களர் - மாளுவர் - கொங்கணர் - சேதியர் முதலான இராஜ கூட்டங்கள் பின்னையும், சோழர் - மராடர் - மரகதர் - மச்சர் - மிலேச்சர் - இலாடர் - விராடர் - சீனர் - கொங்கணர் - சிந்துனர் - சோனகர் - துருக்கர் முதலான இராஜாக்களும் சூழ்ந்திருக்க, ஸ்திரீகூட்டங்கள் வெண் சாமரை வீச, அநேகம் ஸ்திரீகள் பல்லாண்டு பாட, அநேகம் ஸ்திரீகள் யாழ் வீணை முதலியவைகள் வாசிக்க, பூரணச் சந்திரனைப்போல் முத்துக்குடை பிரகாசிக்க, அநேக சம்பிரமத்துடனே இராஜாதிராஜனை தசரத மகாராஜன் வீற்றிருந்தார். அப்போது வசிஷ்ட மகாமுனி ஜனகமகாராஜனைப் பார்த்து, உமது குமாரத்தியாகிய சீதையை அழைப்பியுமென்று சொன்னர். அதைக் கேட்டு நமஸ்காரஞ் செய்து அதிக சந்தோஷத்துடனே எதிரே நிற்கிற ஸ்திரீகளைப் பார்த்து, ஸ்திரீ ரத்தினமான சீதையை அழைத்து வாருங்களென்று ஆக்கியாபித்தார். அவர்கள் மிகுந்த சந்தோஷத்துடனே வேகமாக வோடிச் சீதாலட்சுமியின் தாதிகளுடனே சொன்னர்கள். அவர்கள் சந்தோஷ சித்தராய் அமிர்தத்துக்கு ருசியுண்டாக்குகிறவர்கள்போல் ஆபரணங்கள் திருமேனியை மறைக்குமென்கிறது தெரியாமல் சிங்காரம் செய்தார்கள். அந்தச் சீதாலட்சுமி ஸ்ரீ ராமபிரானை வருகிறபோது கண்டு அவருடைய திருமேனி நிறத்தைத் தன் மனதிலே பதியவைத்திருக்கிறபடியினல் அது சரீரமெல்லாம் பொங்கிப் பொங்கி மேல் நோக்கிச் சிரசிலே யிருந்து அந்த நிறம் வடிந்து

அநேகம் கொடிகளாயோடி உலகமெல்லாம் பரவியதுபோ லிருக்கிற கூந்த லில் மேகத்தில் பிரகாசிக்கின்ற சந்திரனைப்போல் முல்லை ஜாதி மல்லிகை முதலான சுகந்த பரிமள புஷ்பங்களை முடித்தார்கள். இளஞ்சந்திரனுக்குச் சமானமான நெற்றியிலே ரத்தினச்சுட்டி பிரகாசிக்க அளகபந்தி பூட்டினர் கள். சீதையினுடைய இருதயகமலத்தில் சிவனுடைய வில்லையொடித்த வீரன் அன்றையதினம் நாம் கண்ட புருஷனே அல்லவோவென்றெண்ணி அவள் மனது அசைகிறதுபோல அசைந்து கொண்டிருக்கிற இரத்தினக் குழைக ளைக் காதில் பூட்டினர்கள். பாஞ்சசன்னிய சங்கத்துக்குச் சமானமான திருக் கழுத்தில் ஹாரம் - பதக்கம் - சரப்பளி முதலான ஆபரணங்களைத் தரித்தார் கள். ஸ்திரீ சாதிகளுக்கெல்லாம் கழுத்துக்கு மங்கலியமாக விருக்கிற இந்த லட்சுமிக்கு அழகு பிறக்கும்படியான ஆபரணங்கள் என்ன பூட்டப்போகி ரூர்கள்? கல்வி யறியாதவன் தெரிந்தவர்களைச் சேர்ந்தால் தானும் தெரிந் தவனாகிறதுபோல திருமேனியினுடைய காந்தியினாலே வெண்முத்துஞ் சிவந்து காட்டிற்று. கரத்துக்கு ஸ்ரீ ராமனுடைய கைகளாகிய தாமரைக்கமலங்களை இராத்திரியிலும் குவியாமல் எந்தவேளையும் மலர்ந்துகொண்டே யிருக்கச்செய் கிற சூரியனைப்போலப் பிரகாசிக்கும் இரத்தினமயமான கடகமிட்டார்கள். பராபர வஸ்துவைப்போல் உண்டோ இல்லையோ வென்கிற யிடைக்குப் பார மாகிய தனங்களிலே, கதம்பம் - கஸ்தூரி - கந்தம் முதலிய பரிமள திரவியாதி களைப் பூசினர்கள். பாதங்களிலே பொற்சிலம்பு முதலான ஆபரணங்கள் பூட்டினர்கள். இதன்றியும் விஷமும் அமிர்தமும் கூட்டிச் செய்தது போன் றிருக்கிற விசாலமான நேத்திரங்களுக்கு மையிட்டார்கள். சுவர்க்க மத்திய பாதாள மென்கிற திரிலோகங்களிலும் சஞ்சரிக்கிற ஸ்திரீகளுக்கெல்லாம் திலதமான சீதைக்கும் ஓர் திலதமிட்டார்கள். பிரகாசம் பொருந்திய பீதாம் பரம் தரித்து, இரத்தினகஜிதமான மேகலாபரணமு மிட்டார்கள். பஞ்சவர் னக் கிளிபோல் பாஷிக்கிற சீதையினுடைய திருவழகைப் பார்த்து, சிங்கா ரித்த ஸ்திரீகளே மெய்சோர்ந்து மயங்கித் திகைத்துப் போனர்கள். புருஷ ஜாதிக்கும் ஸ்திரீ ஜாதிக்கும் மனமென்கிறது ஒரு ஜாதியாக யிருக்கிறபடியி னலும், உலகங்களி லிருக்கிற அழகுகளெல்லாம் ஒரு இடத்தில் வந்து கூடி யிருக்கக் கண்டபடியினலும் அந்த ஸ்திரீகள் அப்படி மயங்கிச் சோர்ந்தார்கள். பின்பு கர்ப்பூரதீப முதலிய திருஷ்டி பரிகாரம் செய்து, தெய்வப்பிரார்த்தனை களும் செய்து, பிராமணருக்கும் தானங்கள் கொடுத்து இராஜசபைக்கு அழைத்துக்கொண்டு வருகிறபோது, அந்தச் சீதையினுடைய ஆபரணங் களிலே கசிதமாயிருக்கிற நவரத்தினத்தினுடைய காந்திகள் பூமியிலே பற்றிப் பாய்ந்து பிரகாசிக்கிறது எப்படி யிருந்ததென்றால், இந்தப் பூமிதேவியான வள், தன் குமாரத்தியினுடைய பாதங்கள் நடக்கிறபோது வருந்துமென்று புஷ்பங்களும் தளிர்களும் விதம் விதமாய்ப் பரப்பினதுபோல விருந்தது. அப் போது, அன்னப்பட்சிகள் உம்முடைய நடைக்குத் தோற்றுப் போனேம். இனி உம்முடைய பாதாரவிந்தமே கதியென்று வணங்கிச் சேவித்துக்கொண்டு வருகிறதுபோல இருபக்கத்திலும் ஸ்திரீகள் வெண்சாமரைவீச ஒரு மயில்போல் நடந்தாள். இப்படி நடக்கும் சீதையினுடைய அழகைப் பார்க்கிற நிமித்தம் ஆகாயத்தில் பிரகாசிக்கிற அருந்ததி அநேக நட்சத்திரங்களுடனே கூட வந்



ஸ்ரீ சீதாபிராட்டியார் திருக்கல்யாணம்.

திருக்கிறதுபோல் போட்டு இருக்கிற முத்துப்பந்தலின் நிழலில் வந்து ஆபரணங்களினுடைய பிரகாசமும், புஷ்பங்களினுடைய வாசனையும், சந்தனத்தினுடைய சீதளமும், மின்னல்போல் பிரகாசிக்கிற திருமேனியினுடைய ஒளியும் பிரகாசிக்க, அன்னமும் அரம்பையும் அமிர்தமும் நாண இராஜர்க ளிருக்கிற சபாமண்டபம் வந்து சேர்ந்தாள். அச் சபையிலிருந்த இராஜாக்களும் ஸ்திரீகளும் சீதையைக் கண்டு ஆச்சரியசித்தராய், கண்க ளிமையாமலும் சுவாசம் விடாமலும் சித்திரப்பதுமை போலத் திகைத்துப் பார்த் தார்கள். ஸ்ரீ ராமனும் திகைத்து, நாம் வருகிறபோது கன்னிகாமாடத்தில் கண்டோமே! அந்த ஸ்திரீயோ அல்லவோ வென்று ஐயத்தி லிருந்தவர் சீதை யைக் காணவே அந்த ஸ்திரீரத்னந்தானென்று ஐயந் தீர்ந்து, இனி நமக்குப் பிராணனிருக்குமென் றெண்ணி, பூர்வத்திலே அமிர்தத்தைக் கண்ட தேவேந் திரனைப்போல் சந்தோஷத்தை யடைந்திருந்தார். அக் கன்னிகை நம்மிட மனதிலிருந்தும் வெளியிலும் தோற்றுவாளோ வென்று தாமே நினைத்துக் கொண்டிருந்தார். வசிஷ்ட மகாமுனி நாம் செய்த தவத்தினாலே ஸ்ரீமந் நாரா யணன் ஸ்ரீ ராமனாக அவதரித்து அரசராக யிருக்கிறபடியினாலே இந்தச் சீதை யும் அச் செந்தாமரைக் கமலத்தில் வாசமாயிருக்கிற ஸ்ரீ மகாலட்சுமி தா னென்று ஐயமறச் சந்தோஷமானார். சக்கரவர்த்தியாகிய தசரதமகாராஜன் கண்டு, நாம் இதுவரைக்கும் ஏக சக்கிரேஸ்வரனாக உலகத்தை யாண்டுக்கொண் டிருந்தபோதிலும், இன்றைக்கல்லவா லட்சுமி விலாசத்தைப் பெற்றுப் பாக்கிய வந்தனானேம் என்றெண்ணி மிகவும் சந்தோஷமானார். விஸ்வாமித்திர மகா ரிஷியும் பார்த்து, இந்த ரூபலாவண்ணியமான கன்னிகை தனக்கு அகப்படு கிறது ஸ்ரீ ராமனறிந்திருந்தால், அந்த வில்லைமாத்திரமா ஒடிப்பான்? சத்த குல பர்வதங்களையும் ஒடித்துப்போடுவான் என்றெண்ணி அதிக சந்தோஷ மானார். இப்படியாக சகலமான பேரும் பார்த்து அதிக சந்தோஷமானார்கள். அப்போது, அந்த மகாரிஷிகளும் ஸ்ரீ ராமனும் ராஜாவும் தவிர மற்ற ஜனங்க ளெல்லாம் சீதையை நமஸ்காரம்பண்ணினார்கள். சீதை மகாரிஷிகளைச் சேவித் துக்கொண்டு, இராஜாதி ராஜனை தசரதமகாராஜாவையும் சேவித்து, சந் தோஷ சாகரத்தில் மூழ்கியிருக்கின்ற தன் தகப்பனருடைய சிங்காதனத்தில் வீற்றிருந்தாள். சீதை கன்னிகாமாடத்திலிருந்து, தான் பார்த்த இராசகுமா ரன்ரூனே, அல்லவோ வென்கிற சந்தேகத்தை நிவர்த்தி செய்துக்கொள்ள வேணுமென்று தன் கைவளையலைத் திருத்துகிற பாவனையாகக் கடைக்கண்ணி னால் பார்த்து, அவர்தானென்று அறிந்து, அக்கியானம்போய் ஞானமுண் டானவர்களைப்போல் நித்தியானந்தமானாள். இப்படி யிருக்கிற சமயத்தில் வசிஷ்டமகாமுனி விசுவாமித்திர மகாமுனியைப் பார்த்து கல்யாண முகூர்த்தம் என்றைக்குப் பார்த்திருக்கிறீரென்று கேட்க, நாளையத்தினமென்று விசுவா மித்திர மகாமுனி சொல்ல, அதுகேட்டு தசரதமகாராசா மிகவும் சந்தோஷமாய் இராசாக்களெல்லாம் வணங்க எழுந்திருந்து, சங்கத்தோனி முதலான மங்கள வாத்தியங்கள் முழங்கத் தம்முடைய விடுதியில் வந்து சேர்ந்தார். ஜனக மகா ராஜாவும் சீதையை யழைத்துக்கொண்டு அரண்மனையிற்போய்ச் சேர்ந்தார். ரிஷிகளும் பிராம்மணரும் மந்திரி முதலானவர்களும் அவரவர்கள் ஸ்தானம்

போய்ச் சேர்ந்தார்கள். ஸ்ரீ ராமனும் சீதை பிரிந்து நடக்கவே தானும் எழுந் திருந்து தம்முடைய திருமாளிகையிற் போய்ச்சேர்ந்தார். சூரியனும் மேருவின் சாரலில்போய் மறைந்தான்.

கோலங்காண் படலம் - முற்றிற்று.

கடிமணப் படலம்

இவ்வாறு, தசரதமகாராஜன் முதலிய சர்வத்திராளும் ஜனக மகா ராஜன் உபசாரத்தோடு செய்வித்த விருந்தினுடைய சம்பிரமத்தினல் சரீரத் துடனே சுவர்க்கத்திபோக மநுபவிக்கிறவர்கள்போல் பரவசானந்தத்தில் மூழ்கி யிருந்தார்கள். அப்போது, சீதை ஸ்ரீ ராமனைச் சபையிற் கண்டபோது உண் டான விரகதாபத்தை அன்றிரவிலாற்ருளாகி, அதிக தாகங்கொண்டு தண் ணீர்த் தடாகத்தைக் கண்டும் அதில் இறங்குகிறதற்கு வழிகாணமல் அலைந்து ஐயமுறுகிறதுபோல் மிகவும் கிலேசித்து சில வசனந் தானே சொல்லிக் கொள்வதானுள். ஒ இரவே! சூரியன் வருவானுகில் என்னை யடிமையாகவுடைய நாயகனும் என்னிடத்திற்கு வருவார். நீர் மிகவும் பொல்லாத கொடியன். போய்விடு. ஒ மனதே! கறுத்த சூரியனைப்போல் திருமேனியையுடைய அந் நாயகன் பாதத்தின் பிறகே போய்விட்டையோ? அவர் வரும்போது கூட வருகிறதற்கிருக்கிருயோ? ஒருதரமாகிலும் வந்து விசாரிக்கலாகாதா? ஒ பனைமேலிருக்கும் அன்றில் பட்சியே! சத்த சமுத்திரம்போல் இராத்திரி யென் கிறது விடியவில்லையே! பிரிந்திருக்கிற வருத்தம் உனக்குத் தெரியுமே! ஏதுக்கு நீயுங் கூவிப் பழி சம்பாதித்துக் கொள்ளுகிருய். ஒ சந்திரனே! நீ நெருப்புப் போல் சுடுகின்றையே! இப்படிச் செய்கிறதினு லல்லவா உன் சரீரம் நாளுக்கு நாள் தேய்ந்து போகின்றது. ஆ தென்றற்புலியே! நீயும் இரை தேடிக் கொண்டு வெளிப்பட்டாயோ? உருவெளியைக் கண்டும் இப்படிக்கு எதிரே நிற் கிறது நல்லதோ? கன்னிகைகளிருக்கிற விடத்தில் இராஜாக்கள் வரலாமா? இந்த ராத்திரி ஓர் ஊழிக்காலம்போ லிருக்கின்றதே; சூரலோசையும் நிற்கிற தில்லை; பகலானதும் வருகிறதில்லை; இராத்திரியும் போகிறதில்லை. கண் களோ நித்திரையுங் கொள்கிறதில்லையே ஐயோ! இப்படியாக நமக்கு வந்து சம்பவிக்கவேணுமா? ஒ சமுத்திரமே! என்னைப்போலவே நீயும் உறங்க வில்லை! எழுந்தெழுந்து படுக்கிருய். மன்மதபாணத்திற்குப் பயந்திருக்கிறதற்கு என்னைப்போல் நீயும் ஒரு கன்னிகைதானே? என்று இப்படிப் பலவாருகச் சொல்லிச் சொல்லிச் சோர்ந்து மயங்கி யிருந்தாள்.

ஸ்ரீ ராமனும் அப்படியே விரகதாபத்தினல் அந்தக் கன்னிகையை மூன் கண்டது மல்லாமல் இன்றையத்தினம் கண்டும் ஆசைக்கடலுக்குக் கரை காணுமற் போனுமே! நான் பார்த்தது மின்னலைப் போல் தானே? கண் டறிந்தவர்களு முண்டோ? ஒ விதியே! ஒ சந்திரனே! நீ என் மனதில் குடியாயிருக்கிற ஸ்திரீயினுடைய நெற்றியைப்போல் இருந்துகொண்டு, காம வினைப்புக்கு எருபோலிருக்கிற நீ என்னுடனே உறவாகவில்லையே ஒ இருளே!

அந்த ஸ்திரீயினுடைய கண்ணைப்போலக் கறுத்து விசாலமாய் வளர்ந் திருக் கின்றனையே ஓ மனமே! அக் கன்னிகையின் பின்னே நீ போயிருக்கிறாய். நீ உன் வார்த்தைகளைக் கேளாதவர்கள் அண்டையிலும் இருக்கலாமோ? விரைவாய்க் கொண்டுவந்து விடலாகாதோ? என்னை மறந்துபோய் விட் டாயோ? ஆலகால விஷம் பாம்பினிடத்திலென்பது பூர்வகாலமாக யிருக்க வேணும். இப்போது என் மனதிலும் கண்ணிலும் இடைவிடாமல் நிற்கிற அந்த ஸ்திரீயினுடைய கண்களில்தான் அந்த விஷமிருக்கின்றது. அநேக மாளி கையும் சோலையும் நந்தவனங்கள் முதலானதுகளு மிருக்க, அதுகளில் விளை யாடாமல் கல்போலிருக்கிற என் மனதிலேயா அக் கன்னிகை விளையாட வேணுமென்று பலவாறுகச் சொல்லிச் சொல்லித் துயரத்தில் அழுந்தி யிருக் கிற சமயத்தில், நாளையதினம் சீதைக்குத் திருக்கலியாண முகூர்த்தம் ஆக லால் பட்டணத்தை அலங்காரஞ் செய்யுங்களென்று யானையின்பேரில் பேரிகை வைத்து அடித்தார்கள்.

அந்தப் பேரிகை சத்தம் கேட்கவே, பட்டணத்திலுள்ள வாலிபர் விருத் தர் முதலிய யாவரும் அதிக சந்தோஷத்துடனே இராத்திரி யென்கிற சமுத்தி ரத்திற்குக் கரை கண்டார்கள். அப்போது சூரிய பகவான் நீலமேக சொரூப னை புருஷோத்தமனும் ஸ்ரீ மகாலட்சுமியும் நாளையதினம் சேருவார்களென் கிற செய்தி கேட்டு, அந்த மணவாளர் கோலத்தைத் தரிசனஞ் செய்கிற நிமித் தியமொரு தேரின்பேரி லேறிக்கொண்டு அதிசீக்கிரமாக வந்தார். சூரியனுதய மாகவே, பட்டணத்து ஜனங்கள் தங்கள் தங்கள் மாளிகைகளைச் சிங்காரித்து மகர தோரணங்கள் நாட்டுவாரும், இரத்தினகசிதமான தூண்களுக்குத் தாவள் ளியமான சீலைகளைச் சுற்றுவாரும், உப்பரிகைகளின் பேரிலே சொர்ணக்கல சங்கள் அதிக பிரகாசமாக வைப்பாரும், பலபல வர்ண விதங்களான துவசங் கள் கட்டுவாரும், பிராம்மண போசனத்துக்கு அறுசுவை பதார்த்தத்துடனே சமையல் செய்துவைப்பாரும், அன்னங்கள் போல் ஸ்திரீகள் நடந்து வருகிற தும், ரிஷபங்கள் போலப்: புருஷர்கள் நடந்து வருகிறதும், முத்து - சுவர்னம் - இரத்தினம் இவைகளால் செய்த ஆபரணங்களை அணிந்துக் கொள்ளுகிறவர் களும், வாழை - கமுகு - கரும்பு முதலானவைகளைப் பந்தல்களுக்கு அலங்காரம் செய்கிறவர்களும், சந்தனம் அகில் முதலிய பரிமள திரவியங்களை வீதிகளிலே இறைக்கிறவர்களும், சுகந்த புஷ்பங்களைச் சொரிகிறவர்களும், பளிங்குலே கிண்ணங்கள் பந்தி பந்தியாகச் செய்து அகண்ட தீபங்களமர்த்திப் பாலிகை கள் வைக்கிறவர்களும், வீதிகளிலேயும் முற்றங்களிலேயும் முத்துப்பந்தல் போடுகிறவர்களும், தேவேந்திரனுடைய சபைகூட இதற்குச் சமமாக மாட்டா தென்று சொல்லும்படியாய் மேல் கட்டு முதலானதுகள் கட்டிப் பந்தல்கள் சிங்காரிப்பாரும், இரதத்தின்பேரிலேறி வருகிறபேரும், புஷ்பங்கள் கொண்டு வருவாரும், தாம்பூலங் கொண்டுவருவாரும், குண்டலம் பிரகாசிக்கக் குரவை பிணைந்தாடுவாரும், மதயானைகளைச் சிங்காரிப்பாரும், வச்சிரப் பிரகாசமான மேடைகளிலே தீபங்கள் கொண்டுவந்து வைக்கிறவர்களும், கொடிகள் நடுகிற வர்களும், ஸ்திரீகள் சிங்காரித்துக் கொள்ளுகிறபோது தப்பி விழுந்துபோன ஆபரணங்களும், தங்க வளையல்களும், ஸ்திரீ புருஷாள் பிணக்கிலே விட்

டெறிந்துப் போட்ட ஆபரணங்களும், கந்தம் கதம்பப்பொடி புஷ்பதூளிகள் இதுகளைக் குப்பையாக வாரியெடுத்து அப்பாலே போடுகிறவர்களும், இராஜாக்கள் வருகிறதும், பிராமணக் கூட்டங்கள் நிறைகிறதும், யாழ் வீணைகள் கேட்கிறவர்களும், முகூர்த்தவேளை யாச்சுதாவென்று நாழிகை பார்க்கிறவர்களும், தாதிகள் கூட்டங் கூட்டமாய் வருகிறதும், வித்தியாப்பிரசங்கம் பண்ணுகிறவர்களும், இராஜ கூட்டங்கள் மிகவும் நிறைந்து நெருங்கிக் கிரீடங்களுரைபட்டு இரத்தினத்துடனே பொன் பொடிகள் விழுந்து மலைமலையாய் குவிந்திருக்கிறதும், ஆசார வாசல்களிலே பிராமணர் வருகிறதும், அநேக இராசகுமாரர்கள் விஞ்சையர் குமாரர்கள்போலச் சுந்தரத்துடனே ஆயுதபாணிகளாய்த் திரிகிறவர்களும், நாடகசாலைப் பெண்கள் அங்கங்கே நடனம் செய்கிறதும், தேவகன்னிகைகள் தங்கள் உலகமென்றும் மிதிலாபுரி யென்றும் வேற்றுமை தெரியாமல் மயங்குகிறதும், இந்தப் பட்டணத்து ஸ்திரீகள் உப்பரிகைகளின் பேரில் ஏறித் தெய்வலோகமுஞ் சமீபமானபடியினாலே அதைத் தங்கள் பட்டணமென்று மயங்கிப் பார்க்கிறவர்களும், சந்தன - கதம்ப - கஸ்தூரி - பூசுகிறவர்களும், ஆபரணங்கள் பூட்டிக்கொள்ளுகிறவர்களும், தலைமயிர் முடிக்கிறவர்களும், கண்ணாடி பார்த்துக் கிரீட முதலான ஆபரணங்களைத் திருத்தித் தரித்துக் கொள்ளுகிறவர்களும், புஷ்பமாலை தரிக்கிறவர்களும், சித்திர வஸ்திரங்கள் தரித்துக்கொள்ளுகிறவர்களும், வாளைப்போலவும் விஷம் போலவும் கண்களையுடைத்தான ஸ்திரீகளும் அமிர்தம்போல வார்த்தையையுடைத்தானவர்களும், பர்வதம்போல ரூபாகாரங்களையுடைத்தானவர்களும், முத்துப்போல தந்தங்களையுடைத்தானவர்களும், செவ்விளநீர்போல தனங்களையுடைத்தானவர்களும், நூலிழைபோலே இடையும் அன்னம்போல நடையுமுடைய ஸ்திரீகள் எங்கும் நிறைந்து நெருங்கினர்கள்.

அன்றையத்தினம் அந்த மிதுலாபுரியானது, தேவேந்திரனுக்குப் பட்டாபிஷேகமாகிற போது அமராபதி பட்டணமிருந்ததுபோல அநேக சிங்கார அலங்கார சம்பிரமத்துடனிருந்தது. கலியாண மண்டபம் நவரத்தினகசித கோடி சூரியப் பிரகாசமாகப் பிரகாசித்துக்கொண்டு, விஸ்தீரண மிவ்வளவென்று ஒருவராலுங் காணக்கூடாத் விதமாக அமைந்திருந்தது. அந்த மண்டபத்துக்கு இராஜாதிராஜனை தசரத மகாராசன் புறப்பட்டு மங்கள பேரிகைகள் மேக கெர்ஜ்ஜனைபோல முழங்க, தவளச்சங்கம் முதலானதுகள் சப்திக்க, தேவப்பிராமணர் வேத பாராயணஞ்செய்ய, மேலே முத்துக்குடை பிரகாசிக்க, அநேக ராஜாக்களும், ரிஷீஸ்வரர்களும் வந்தார்கள். தேவர்களும் வந்தார்கள். ஜனக மகாராஜாவும் பந்துசனங்கள் மந்திரிகள் இராஜாக்கள் முதலான பேர்களோடு வந்து சேர்ந்தார்கள். அனேக ஸ்திரீ கூட்டங்களும் வந்து நிறைந்தது. இவ்விதஅலங்காரங்கள் அடங்கியிருக்கிறபடியினாலே அந்த மண்டபம் மகமேரு பர்வதம்போலவும், பிர்மாண்டம் போலவும், ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய வயிறுபோலவும் பிரகாசித்திருந்தது. அப்போது, ஸ்ரீ ராம பிரான் சப்த சாகரத்தினுடைய தீர்த்தமும் கங்கை முதலான சப்த நதியினுடைய தீர்த்தமாடி தங்கள் குலத்தார் சேவித்து வழிபட்டு வருகிற ஸ்ரீ ரங்கநாதரைச் சேவித்து வணங்கி பிராமணருக்கு அனேக கன்னிகா தானங்கள்

பண்ணி, சிற்பசாஸ்திரமறிந்த சித்திரக்காரனுலும் எழுதுதற் கருமையான சுந்தரத்தோடு அமைந்திருக்கிற திருமேனியில் புஷ்பமாலை தரித்து, சீதையினுடைய மனோபாவத்தைச் சந்திர சூரியர் திருச்செவியில் சொல்லுகிற பாவனை போல இரண்டு செவிக்கும் குண்டலந் தரித்து, கீற்றுச் சந்திரனைப்போல் வீரபட்டமும் கட்டி, கண்டத்தில் சீதையினுடைய நகைப்பானது இருதயத்திலிருந்து திருமேனியில் புளகிக்கிறதுபோல முத்துமாலையைத் தரித்து வாசுகி போல இரத்தினகசிதமான தோள்வலயம் பூட்டி திரிலோகங்களுக்கும் முதல்வன் இவன்தானென்று குறியிட்டு வைத்ததுபோல ஏகரத்தின கசிதமான பாகு மத்தியாபரணம் தரித்து, கற்பக விருட்சம்போலிருக்கிற கைகளில் இரத்னக் கடையங்களிட்டு, திருமார்பில் நவரத்தின கசிதமான பதக்கத்தோடு கூடிய ஹாரம் முதலானவைகளும் தரித்து, பரம ஞானிகளின் மனம்போல தாவள்ளியமான உத்தரீயம் பிரகாசிக்க, மும்மூர்த்திகளும் தாதனென்று யாவருக்குந் தோன்ற முப்புரிநூல் விளங்க, வேறொரு அண்டமும் பிரமாவும் இருக்கிறதுபோல உதரபந்தனமும் பூட்டி, கருங்கடலைத் திருப்பாற்கடல் தழுவினதுபோல வெண்பட்டு வஸ்திரமுந் தரித்து, மகம்மேருவைப் பிரதட்சணம் வருகிற சூரியனைப்போல அரையில் வாளுங்கட்டி அந்த வாளென்கிற சூரியனுடைய பிரகாசம்போலக் கச்சியினுடைய தொங்கல் தொங்க, பூரணச் சந்திரனைப்போல திருமுகத்தினுடைய அழகும் பாலசந்திரன் பிரகாசம்போலச் சிறுநகையின் ஒளிவீச, பாதார விந்தத்திலிருக்கும் சிலம்பு இனிமே லெப்படி உலகங்களை அளந்து பார்ப்போமென்று திருவடிகளை வளைத்துக்கொண்டது போலப் பிரகாசிக்க, பிரமா முதலான சராசரங்களினுடைய அக்கியானங்களைப் போக்கடித்து மோட்ச சாம்பிராஜ்ஜியத்தைத் தாமும் சாத்திக்கொண்டு, தேவர்களுக்குள் தம்முடைய சரூபமெப்படி அதிசயமோ, அப்படி அதிசயமாகச் சிங்காரித்துக்கொண்டு அழகிய மணவாளத் திருகோலமானார். மும்மூர்த்திகளுக்கும் முதல்வனான ஆதிமூலத்தையும் தாசபூதனுமாய் சகல ஜீவகோடிகளுக்குள்ளும் விளங்காநின்ற சரூபனையும், தனக்குத்தானே சமானமான அந்தப் பரம புருஷோத்தமனையும் அடியேனெவ்வளவு வர்ணித்துச் சொல்லப் போகிறேன்?

ஸ்ரீ ராமபிரான் அநேகம் பசுக்களும் சுவர்ணங்களும் பூமிகளும் இரத்தினங்களும் பிராமணோத்தமருக்குத் தானம்செய்து அவர்களாசிகூற, ஒரு இரதத்தின்பேரி லேறினர். அது பொன் - வெள்ளி - ரத்தினம் - வச்சிரம் முதலியவைகளால் அநேக சிங்காரத்துடனே செய்திருந்தது. அதில் ஸ்ரீ ராம பிரானெழுந்தருள, பரதாழ்வான் ஆனந்தத்துடனே அருணனைப்போல் கரத்தில் கோல்பிடித்துக்கொண்டு இரத சாரதியாய் நடாத்தி, இலட்சுமணரும் சத்துருக்கரும் இருபக்கத்திலும் வெண்சாமரை வீச, கல்யாண மண்டபம் நோக்கிப் புறப்பட்டார். அப்போது அவருடைய சுந்தரத்தைப் பார்க்கவந்த சகலமான பேரும் நிமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். தேவர்களும் இனி ராக்ஷசக் கூட்டம் நசித்துப்போமென்று தங்களுடைய தேகம் தங்களுக்குத் தோன்றுமல் பரமானந்தத்திலிருந்தார்கள். அந்தத் தேவர்

கள் அரம்பா ஸ்திரீகளுடனேகூட நடனமும் பண்ணினார்கள். உலகநாத னான ஸ்ரீ ராமபிரானே வீதிகளிலே பார்க்கவந்த ஸ்திரீகளினுடைய சகலா பரணங்களும் தனக்குத்தானே பூமியிலே நழுவி விழுந்து போக நிற்கிற வர்களே யோசிக்கில், கையிலுண்டாகிய பொருள் முதலிய யாவற்றும் கொடுத் துப் பின்பு தாங்கள் அணிந்திருக்கும் திருவாபரண முதலியதையும் கொடுக் கும் தியாகிகளேப்போல இருந்தது. ஸ்ரீ ராமபிரான் அநேக இராஜகூட்டம் சூழ்ந்துவர இராஜாதி ராஜனை தசரத மகாராஜன் வீற்றிருக்கிற கலியாண மண்டபத்தில் மகம்மேருவைச் சேரும் சூரியனேப்போலச் சேர்ந்து பரத லட்சு மண ளிருவரும் இருபாரிசங்களில் கைலாகு கொடுக்கத் தேவர்திதேவனான ஸ்ரீ ராமன் ரதம்விட்டிறங்கி, மஹாரிஷி யிஸ்வராளையும், தயாநிதியோடு கூடிய தமது பிதாவையும் சேவித்துக்கொண்டு, சமீபத்தில் இரத்தினசனத்தி லெழுந் தருளியிருந்தார். மகா லட்சுமியானவள் பூர்வத்தில் திருப்பாற்கடலில் பிறந்து பின்பு பூமியில் அவதரித்து மறுபடியும் மலையில் பிறக்கிற பாவனேபோல் சீதாபிராட்டியானவள் அந்தத் திருக்கலியாண மண்டபத்தில் அனேகம் பாங் கிகளோடு வந்து சேர்ந்தாள். சுவர்க்கம் மத்திய பாதாளமென்கிற மூன்று லோகத்திலுமுள்ள வஸ்துக்களினுடைய அழகு இந்த பிராட்டியினுடைய அங்கிசையாக யிருக்குமாகில் இத் திருக்கலியாணத்தினுடைய அழகு இன்ன படி யிருக்குமென்று அடியேன் சொல்லத்தரமோ? சசிதரனுகிய சிவன் பார் வதியோடும், இந்திரன் சசியோடும், பிரமதேவன் சரஸ்வதியோடும் வந்து, இந்த மகா லட்சுமியினுடைய திருவழகைக் கண்டு அந்தரத்திலேயே யிருந்து விட்டார்கள். சமுத்திரம்போல் பிராமணேத்தமரும் இருஷிகளும் சூழ்ந்துவர வசிஷ்ட மகாமுனி இந்தத் திருக்கலியாண மஹோற்சவத்திற்கு வேண்டிய தருப்பை சமிதை முதலியதோடு வந்து சேர்ந்து, தண்டுலம் பரப்பி, தருப்பை சாத்தி, வேதசாஸ்திர விதிப்படிக்கு ஓமகுண்டத்தை மண்டலாகாரமாகச் செய்து ஓமாக்கினியை மூட்டி, ஆவிநெய்யை ஆகுதியாகவிட்டு, மிகுந்த அன் புடனே ஓமம் வளர்த்தினர். அப்போது ஸ்ரீ ராமனும் சீதாபிராட்டியாரும் ஏகாசனத்தி லெழுந்தருளி, இருபக்கத்திலும் ஸ்திரீகள் வெண்சாமரை வீச, முனி சிரேஷ்டர்கள் ஆசிகூற, யோகமும் போகமும் ஒன்றுகக் கூடினது போல ஒத்து வீற்றிருந்தார்கள். ஜனகமகாராஜன், ஸ்ரீ ராமனெதிரே வந்து, சந்தோஷத்துடனே ஸ்ரீ மகா விஷ்ணுவும் இலட்சுமியும்போல என்னுடைய குமாரத்தியாகிய சீதையோடுகூடி வாழ்ந்திருமென்று ஆசீர்வதித்துத் தாரை வார்த்தார். அத் தருணத்தில் தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். பிராம ணர்களும் மகாரிஷிகளும் ஆசீர்வதித்தார்கள். ஸ்திரீ கூட்டங்கள் பல்லாண் டிசைத்தார்கள். தேசதேசத்து இராஜாக்கள் நமஸ்காரஞ் செய்து தோத்தி ரஞ் செய்தார்கள். பேரிகை முதலிய பல வாத்தியங்கள் சமுத்திர கோஷம்போல் முழங்கிற்று. தேவர்கள் பொழிந்த புஷ்பமாரியும், நவரத்ன மாரியும், பொன்மாரியும், பூலோகத்தார் சொரிந்ததும், அந்த விசாலமான பூமியெங்கும் நிறைந்து நக்ஷத்திரங்கள் பிரகாசித்துக்கொண் டிருக்கிற ஆகா யம் போல விருந்தது. மகாரிஷியாகிய வசிஷ்டர் சொல்லியபடிக்கு ஸ்ரீ ராமன் ஓமாக்கினிக்குச் சகல ஆகுதியும் கொடுத்து, கோடானுகோடி பிராமணருக் குச் சோடசதானங்களும் செய்து, மாந்தளிர்போன்ற சீதையினுடைய திருக்

கரத்தைத் தாமரைக்கமலம் போலிருக்கிற தமது திருக்கரத்தினால் பிடித்துக் கொண்டு, உயிருமூடலும்போல தான் முன்னும் சீதாலட்சுமி பின்னுமாக ஓமாக்கினியைப் பிரதக்ஷணம் வந்து, அக்கினி தேவனை வணங்கிப் பொரி சிந்தி, அம்மியு மிதித்து, எதிரில் நின்ற அருந்ததியையும் பார்த்து, செய்யவேண் டிய யாவற்றும் செய்து, மகாமுனியீஸ்வரர்களையும் தசரதமகா ராஜாவையும் சேவித்து, மகா சந்தோஷத்தோடு திருமாமகளாகிய சீதாபிராட்டியின் திருக் கரத்தைப் பற்றிக்கொண்டு, பேரிகை சங்கம் முதலிய வாத்தியங்கள் ஆர்ப் பரிக்க, நான்கு வேதங்களும் சாஸ்திரங்களும் சப்திக்க, தேவர்கள் பல்லாண் டிசைக்க, திருக்கோலத்தோடு திருமாளிகையிற் போய்ச் சேர்ந்து, தாயைப் பார்க்கிலும் மிகுந்த அன்போடு காப்பாற்றிவரும் கைகேசியினுடைய உபய சரணரவிந்தங்களையும், தன் அன்னையாகிய கௌசலையையும் சுமத்திரை யையும் சேவித்துக்கொண்டார். சீதாபிராட்டியாரும் அவ்வாறே அவர்களைச் சேவித்துக்கொண்டாள். அவர்கள் அதிக சந்தோஷ பிரியத்துடனே மருமக ளைத் தழுவிக்கொண்டு, மிதமில்லாத வாத்சல்லியத்துடனே நம்முடைய ஸ்ரீ ராமனுக்கு இயற்கையான ஸ்திரீ இவளைப்போ லுலகத்தில் கிடையா தென்று சொல்லிக் கண்களித்து மனங்குளிர்ந்து பார்த்து, அனேகம் ஆசிகள் கூறி, அனேக திருவாபரணங்கள் - திரவியங்கள் - ஸ்திரீகூட்டங்கள் - பட்டு வஸ்திரங்கள் - இராஜ்ஜியங்கள் - ரத்தினங்கள் - அபரிமிதமாக அளித்தார்கள். திருபாநிதியான தசரதராமனும் ஸ்ரீ மகாலட்சுமியான சீதையும் திருப்பாற்கட லுக்குச் சமானமான பள்ளியறையிற்சேர்ந்து, அதிக சம்பிரமமாய்க் கூடியிருந் தார்கள். பங்குனி உத்தரத்திலே வசிஷ்டமகாமுனி மங்கலாக்கினி செய்துவைத் தனர். ஜனகமகாராஜன் தசரதமகாராஜாவின் சமீபத்துக்கு வந்து என் குமாரத்திகள் மூன்று கன்னிகைகளிருக்கின்றார்கள். அவர்களை உம்முடைய குமாரர்களாகிய மற்ற மூவருக்கும் திருக்கலியாணம் செய்யவேணுமென்று மிகுந்த அன்புடனே சொல்லினர். அவரும் அதைக் கேட்டு அதிக சந்தோ ஷத்தோடு வசிஷ்டர் விஸ்வாமித்திரர் முதலானவர்களுடனே சொல்லி, அந்தப் பெண்களையும் பார்த்து, மிகுந்த சந்தோஷத்துடனே பரதனுக்கு மாண்டவி யென்கிற கன்னிகையையும், இலட்சுமணனுக்கு ஊர்மிளை யென்கிற கன்னிகை யையும், சத்துருக்கனுக்கு சுரதகீர்த்தி யென்கிற கன்னிகையையும் கலியாணம் செய்தார். ஜனகமகாராசனும் அவருடைய தம்பி குசத்துவஜனும். அதிக சந் தோஷமாய் இருதயானந்தமானார்கள். அநேககோடி பிராமணர்களுக்குத் தான முதலியதும் கொடுத்து, அதிக சந்தோஷத்துடன் இருந்தார்கள். ஸ்ரீ ராம னும் சீதையும் பேரின்பத்துடனே வீற்றிருந்தார்கள். தசரதமகாராஜன் முதலிய சகலமானபேரும் மிகுந்த இஷ்டத்தோடு சிலநாள் மிதிலாபுரியி லிருந்தார்கள். அப்போது விசுவாமித்திர மகாமுனி இமாசலத்திற்குப் போகிற தாய் ஸ்ரீ ராமன் முதலிய யாவருக்கும் ஆசீர்வாதம் செய்து போய்விட்டார். பின்பு சில நாள் சென்று ஒருநாள் தசரத மகாராஜன் அயோத்தியாபுரிக் குப் போகும்படி பிரயாணமாகி, பிள்ளைகளும் மருமக்களும் பந்து ஜனங்களும் சேனாசமுத்திரமும் மிதிலைச் சனங்களும் தொடர்ந்துவரத் தேரின்பேரி லேறிக் கொண்டு நடக்கும்போது, வழியிலே காகம் இடமும் மயில் வலமுமாய் இப்படி

சிறிது தடையான சகுனத்தை தசரத மகாராஜன் கண்டு, இவ்விடத்தில் என்னமோ இடையூறுவர இருக்கின்றதென்று எண்ணித் தேரை நிறுத்தினர்.

கடிமணப் படலம் முற்றிற்று.

பரசுராமப் படலம்

இப்படியிருக்க, சகுனபரீக்ஷை யறிந்த ஒருவனை அழைத்து, இச்சகுனம் நன்மையோ தீமையோவென்று கேட்க, அவனிந்த க்ஷணத்திலேதானே ஒரு இடையூறு வரும். ஆனால் அது உடனே நன்மையாகுமென்று சொன்னன். இதைக் கேட்டுக்கொண்டிருக்கிற சமயத்தில் ஒரு மகா புருஷன் ஆகாயத்திலுள்ள இருளைக் கிழித்துப் பிரகாசிக்கிற மின்னல்போல் சடையும், கையில் மழுவாயுதமும்; கண்ணில் பொறியும் பறக்க, மஹாமேரு பர்வதம்போலே எதிரே வந்தான். அவன் வருகிறபோது பயப்பிராந்தியினலே பூலோகமெல்லாம் கடலிலே கப்பல் சுழலுகிறப்போல் சுழல, அஷ்டகஜங்களும் மனம் தளர அஷ்டதிக்குப் பாலகர்களும் நடுநடுங்கியோட, புஜங்கள் திக்குகளெல்லாம் நிறைய, சடாமண்டலம் ஆகாயத்தை முட்ட, அங்கிருக்கிற அர்த்தசந்திரன் பிரளயகால உருத்திர மூர்த்தியைப்போல அச்சடையின் பேரிற்றோன்ற, இவ்வித பயங்கரமான வுருவத்தோடு ஒரு பர்வதம்போல வில்லுந் தரித்துக் கொண்டு, இந்தப் பிரமாண்டத்தைக் கீழ்மேலாய்ச் செய்யத்தக்க கோபத்துடனே புகையோடுங்கூடிய ஓர் மழுவாயுதத்தை யேந்தி, சூரியனும் பயந்தொதுங்க, சமுத்திரத்திலிருக்கிற வடவாக்கினி பூமியிலெரிந்துகொண்டு நடந்து வருகிறதுபோல வந்தார். அவர் யாரெனில், பூர்வத்தில் ஓர் அரசன் குற்றஞ்செய்ய அதற்கு மற்ற அரசர்களை இருபத்தொரு தலைமுறை கருவறுத்து அவர்களிரத்தத்தில் ஸ்நானம் செய்தவர். மகா பலவந்தனன கார்த்தவீரியார்ச்சுனனுடைய ஆயிரந் தோள்களையும் மழுவாயுதத்தினல் அறுத்து ஜெயங்கொண்ட மகா பிரதாபத்தை யுடையவர். அவர் நாமதேயம் பரசுராமன். அவர் வரவே தசரதமகாராஜன் கண்டு பயந்து, இந்தக் கடூரன் இப்போது வரவேண்டிய காரியமென்ன வென்று நினைக்கிற சமயத்தில் அவர் சேனை சமுத்திரத்தின் மத்தியில் வந்து, புருவங்களை நெறித்துக்கொண்டு, கண்களில் அக்கினிப் பொறிகள் பறக்க, யுகாந்தகால இடியைப்போல சத்தித்துக் கொண்டு, இரதத்திலிருக்கிற ஸ்ரீராமன் சமீபத்தில் போனர். அவரும் இவனைப் பார்த்து இவராரோவென்று நினைக்கிற வேளையில் தசரதமகாராஜன் அதிசீக்கிரமாகப் பரசுராமர் எதிரேவந்து சாஷ்டாங்கமாகச் சேவிக்க, அதைப் பாராமல் பிரளயகாலாக்கினிபோல் ஸ்ரீ ராமனைப் பார்த்துக் கோபங்கொண்டு ஒரு வார்த்தை சொல்லுகிறர்: ஓ தசரததனயா! நீ பூர்வத்தில் ஊனமான வில்லை யொடித்தாய்; அதனுடைய நிர்வாகம் நானறிவேன், உன்னுடைய நிர்வாகத்தையும் நானறியவேணுமென் றிருக்கிறேன். மேலும் நெடுங்காலமாயென்னை டெதிர்ப்பா ரில்லாமல் புஜங்கள் தினவு கொண்டிருக்கின்றன. அந்தத் தினவை தீர்த்துக்கொள்ள இவ்விடத்திற்கு வந்தேனென்று சொல்ல,

அவ்வார்த்தையைத் தசரதமகாராஜன் கேட்டு மிகவும் பயந்து, சுவாமி! நீர் பூலோகத்திலிருந்த இராஜாக்களையெல்லாம் ஜெயித்து பூலோகத்தைப் பிராமணருக்குத் தானம் பண்ணினீர். உம்முடனே எதிர்க்கிறதற்கு அந்தச் சிவனாலேயும் பிர்மாவினாலேயும் ஆகாதே; மனிதன் எவ்வளவு? அதிலும் இவன் மிகவும் சிறுபிள்ளை. ஆதலால் இவனும் என்னுடைய பிராணனும் உமக்கு அடைக்கலம். உமக்குச் சமானமான பேருடனே கோபம் செய்ய வேண்டுமேயல்லது, ஏழைகள்பேரில் கோபம் செய்வதில் யாதுபயன்? பூர்வத்தில் இராஜாக்களிடத்தில் கோபித்து, அக்கோபமாறி அநுக்கிரகஞ் செய்த தேவரீரே திரும்பக் கோபஞ்செய்வது தருமமல்ல, தருமத்துடனே வந்த ஜெயமே ஜெயம், அதர்மத்திலே வருகிற ஜெயமுஞ் ஜெயமல்ல பலமும் பல மல்லவே என் மகனே இன்னம் ஆயுத பரீட்சையே யறியான் அவனுடைய பிராணனை நீர் கொடுக்கவேணும். ஆதலால் அவனுக்கொரு அபாயம் நேரிடுமானால், நான் என் குலத்துடனே மடிந்துபோவேனே யல்லாமல் வேறில்லை. உம்முடைய அடியனாகிய நான் குலத்துடனே மடிந்துபோகாதபடி கிருபை செய்து அவன் பிராணனைக் கொடுக்கிறேனென்கிற வரம் எனக்குக் கொடுக்க வேணுமென்று கையேந்தி வருந்தி, திரும்பவும் சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தார். இப்படி சரணாகதியாகிய தசரதமகாராஜனை அவர் நோக்காமல் இகழ்ச்சி செய்து, அதிக கோபத்துடனே ஸ்ரீ ராமனைப் பார்த்தார். அப்போது தசரத மகாராஜன் நம்மால் யாதொரு செயலும் இல்லையென்று மின்னலைக் கண்ட நாகம்போல் நடுநடுங்கிச் சோர்ந்துபோனார். அப்போது பரசுராமன் ஸ்ரீ ராமனை நோக்கி, நீ ஒடித்த வில் ஊனமானது அதனுடைய விர்த்தாந்தம் சொல்லுகிறேன் கேள்: பூர்வத்தில் மகமேரு பர்வதத்தின்பேரில் ஒரு மகாரிஷியின் தபோபலத்தினால் ஒரு மூங்கில் முளைத்தது. அதை இரண்டு வில்லாகச்செய்து, அதிலொன்றைப் பார்வதி சமேதனான சிவன் எடுத்துக் கொண்டார். மற்றொன்றை ஸ்ரீ யப்பதியாகிய மகாவிஷ்ணு எடுத்துக்கொண்டார். தேவர்கள் இவைகளில் எது பலமான வில்லென்று பிரமதேவரைக் கேட்க அவர் தேவர்கள் வில்லை நோக்கி பலா பலமறியக் கேட்கிறார்களென்று அறிந்து இருவருக்கும் சண்டை யுண்டாக்கி வைத்தார். அவர்கள் அவ் வில்லுகளை எடுத்துக்கொண்டு உலகங்களும் திக்குகளும் அக்கினிச்சுவாலை எழும்பும்படி யுத்தஞ் செய்தார்கள். சிவன் கையிலிருந்த வில்லு நெரித்தும் போர் செய்ய யுத்தஞ் செய்யவே பிர்மாவும் தேவர்களும் பயந்து விலக்க, தேவேந்திரன் கையை நீட்ட, அவன் கையில் சிவன் தனது வில்லைக் கொடுத்துவிட்டார். மகாவிஷ்ணுவும் தம் மிடதுகையிலிருந்த வில்லை மகாதபசியாகிய இருசிகமகாரிஷி கையிற் கொடுத்தார். அவர் என் பிதாவாகிய ஜமதக்கினி மகாரிஷிக்குக் கொடுத்தார். அவர் எனக்குக் கொடுத்தார். அதுதான் இது. இதை நீ நாரியேற்றி வளைப்பாயேயாகில் இராஜாக்களில் உனக்குச் சமமானவர்களில்லை. உன்னுடன் போருஞ் செய்யேன் மேலும் இன்னமொன்று சொல்லுகிறேன் கேளும். அந்த வனவில்லை ஒடித்தோமென்கிற கர்வம் வேண்டாம் என் தகப்பனாரை ஓரரசன் கொல்ல, அது நிமித்தம் இந்த மழுவாயுதத்தினால் இராச்சியத்திலுண்டாகிய இராஜாக்களையெல்லாம் வேரறக் களைந்து கொன்று, அவர்கள் உதிரத்திலே மூழ்கி, என் தகப்பனாருக்குரிய திலோதக வாசோதகமாக

அதையேவிட்டுத் தணிந்தேன். பிறகு ஒரு பர்வதச்சாரலில்போய் தபம் செய்துகொண் டிருந்தேன். அவ்விடத்தில் நீ அந்த வில்லையொடித்த சத்தம் நான் கேட்டு கோபத்துடனே புறப்பட்டு வந்தேன். நீ சாமர்த்தியனல்ல உன்னுடன் போருஞ் செய்கிறேன். உன்னலாமாகில் இந்த வில்லை நாரியேற்று மென்று பரசுராமர் சொல்லினர். அதுகேட்டு ஸ்ரீ ராமபிரான் குஞ்சிரிப்பாக நகைத்து, ஸ்ரீமந் நாராயணனுடைய வில்லைக் கொடுமென, அதைப் பரசுராமன் கொடுக்க, ஸ்ரீ ராமபிரான் வாங்கி ஓர் க்ஷணத்தில் வளைத்து நாரியேற்றி அஸ்திரத்தைப் பூட்டி இழுத்து வாங்கி நிறுத்திக்கொண்டு ஒரு வார்த்தை சொல்லுகிறார். கேளும் ஓ பரசுராமா! நீர் பூலோகத்து இராஜாக்களையெல்லாம் கொன்றவராயிருந்தாலும், வேத வித்தா யிருக்கிற பிராமணனுடைய பிள்ளையாக விருக்கிறீர். அன்றியும் விரதம் பூண்டிருக்கிறீர். ஆதலால் உம்மைக் கொல்லலாகாது. நான் விடுகிறபாணமோ வீண்போகிறதல்ல. ஆனபடியினலே சீக்கிரமாக இதற்கு ஒரு லக்ஷயம் சொல்லுமென்றனர். அதற்குப் பரசுராமன் பயந்து, ஆச்சரியசித்தனகி, ஸ்ரீ ராமா! கோபஞ் செய்யாதீர். நீர் சகலத்திற்கும் ஆதியான வஸ்துவென்று நானறியாமற் போனேன். உம்முடைய பலத்துக்குச் சிவனுடைய வில் நிருவகிக்காமலே ஒடிந்தது. நீரே அந்த ஸ்ரீமந் நாராயணன், ஆனதால் இப்போது நான் கொடுத்த வில்லும் உமது பலத்துக்குப் போதாது. நீர் செலுத்தும் பாணமும் பழுது போகாது. ஆகையால் நீர் என்னுடைய தபோபலத்தின்பேரில் அதைச் செலுத்துமென்றனர். அப்படியே இராமன் செலுத்த, அது பரசுராமனுடைய தபோபலன்கள் யாவற்றையும் கிரகித்துக்கொண்டு வந்துவிட்டது. அப்போது பரசுராமன் ஸ்ரீ ராமா? நீர் நினைத்த பொருளெல்லாங் கைகூடக்கடவதென்று அன்புடனே ஆசீர்வாதம் செய்து விடைபெற்றுக்கொண்டு தொழுது போனர். ஸ்ரீ ராமன் தம்மிட நிமித்தியம் மூர்ச்சையாய்த் துயரசாகரத்தில் மூழ்கிக்கிடக்கிற தகப்பனரிடத்துக்கு வந்து, அன்புடனே தழுவிக்கொண்டு அந்த துயரத்தைத் தீர்த்தார். அவரும் மூர்ச்சை தெளிந்து, கிலேசந்தீர்ந்து, மனங்குளிர்ந்து, அதிக சந்தோஷத்துடனே பரசுராமன் கையிலிருந்த வில்லை வாங்கி அவனுக்கு அபஜெயம் பண்ணிவைத்த ஸ்ரீ ராமபிரானை மார்போடு தழுவிக்கொண்டு, உச்சியை முகர்ந்து, தம்முடைய கண்ணீராலே ஸ்நானஞ் செய்துவைத்தார். இந்தக் காரியம் யாராலேயாகும்? இம்மை மறுமை இரண்டிற்கும் இந்த ராமனே கதியென்று தசரத மகாராஜன் தம்முள்ளே எண்ணிச் சந்தோஷித்தார். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். ஸ்ரீ ராமன் வருணதேவனை யழைப்பித்து, அந்தப் பரசுராமன் கையில் வாங்கிய வில்லை அவரிடத்திற்கொடுத்து, நீரிதை வையுமென்று ஆக்யாபித்தார். அப்பால் சேனு சமுத்திரத்துடனே அநேக சம்பிரமமாய் அயோத்தியாபுரிக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

பாலகாண்டம் - முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத்

கம்ப ராமாயண வசனம்

அயோத்தியா காண்டம்

காப்பு விருத்தம்

வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்பக் கோற்றுறந்து
கானுங் கடலுங் கடந்திமையோ ரிடுக்கண் காத்த கழல்வேல்தை.

மந்திரப் படலம்

சக்கிரவர்த்தி திருமகனுக்கு முடிசூட்ட
ஆலோசனை செய்தல்

தசரத மகாராஜன் மிகுந்த சந்தோஷ ஆனந்தத்தோடிருக்கிற நாளையிலே ஒருநாள் பரதனை யழைத்து, அப்பா பரதனே! கேகய தேசாதிபதியாகிய உன் மூதாதை உன்னைப் பார்க்க வேணுமென்கிற அபேக்ஷை கொண்டு சொல்லி அனுப்பி யிருக்கிறார். ஆதலால் நீ கேகயதேசத்துக்குப் போய்வா வென்று ஆக்ஞாபித்தார். ஐயா! அப்படியே போய் வருகிறேனென்று அவரைச் சேவித்துக்கொண்டு, ஸ்ரீ ராமரிடத்திற்குப் போய் அவரையும் சேவித்துச் செய்திகளைச் சொல்லி உத்தரவு பெற்றுக்கொண்டு, (சீவனை விட்டு போகிற சரீரம்போல்) பிரயாணமாய் சத்துருக்கனுடனே வாகனரூடராய்ப் புறப்பட்டு ஏழுநாள் வழியில் தங்கி, கேகயதேசத்தில் சேர்ந்து, மூதாதை முதலிய யாவரையும் கண்டு அதிக சந்தோஷத்துடனிருந்தார். இங்கு சில காலத்திற்குப் பின்பு ஒரு நாள் தசரதச் சக்கரவர்த்தியானவர், ஆலோசனைச் - சித்திர மண்டபத்திற்குப் போய், அவ்விடத்திலிருந்த பந்து வர்க்கத்தார் முத லிய ராசகூட்டங்களுக்குச் செலவு கொடுத்து அனுப்பி, தாம் உலகத்தை இர

கூஷிக்கும் வஸ்துவைப்போல் ஒருவராக யிருந்துகொண்டு, தம்முடைய குருவை யும் மந்திரிகளையும் அழைப்பிக்கும்படி ஆக்கியாபித்தார். அப்படியே மும் மூர்த்திகளோடு நால்வரென்று சொல்லத்தக்க வசிஷ்ட மகாமுனி அச்சபைக்கு எழுந்தருளினர். உடனே குலத்தின் பழமையும் சாஸ்திர சம்பிரதாயக் கேள்வியின் சாரமும் தெரிந்து வருத்தம் வந்த வேளையிலும் தருமம் தவிராத மனதையுடையவர்களாகவும், மானத்தில் கவரிமானைப்போலவும், காலதேச வர்த்தமானங்களைத் தெய்வானுகூலக் குறிப்பினால் அறிந்து நடக்கவேண்டிய காரியங்களை நிறைவேற்றி இராசனுக்குக் கீர்த்தியை வருவிக்கத்தக்கவர்களா கவும், தங்கள் பிராணனுக்கு ஆசை வையாமல் இராசனுக்கு இடித்துச்சொல் லும் நீதியில் கைபோயவர்களாகவும், பூதபௌஷிய வர்த்தமானங்களை யுணர்ந்த வர்களாகவு மிருந்த மந்திரிகள் அறுபதினாயிரம்பேர் சமுத்திரம்போல வந்து சூழ்ந்து, வசிஷ்ட மகாமுனியைச் சேவித்துக்கொண்டு தங்கள் இராசாவையும் நமஸ்காரம் செய்துகொண்டார்கள். அந்த மந்திரிகளையும் தம்முடைய குரு வான வசிஷ்ட மகாமுனியையும் தசரத மகாராசன் பார்த்து ஒரு வசனஞ் சொல்லுகிறார்: சூரிய குலத்திற் பிறந்த எங்கள் பெரியோர்கள் தருமந் தப் பாமல் இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்துகொண்டு வந்தார்கள். யாணுமப்படியே உங்கள் பலத்தினாலே அறுபதினாயிரம் வருஷம் இராஜ்ஜியபாரம் செய்து கொண்டு வந்தேன். இதுவரைக்கும் இராஜ்ஜியத்திலுள்ள சகல ஜீவனுக்கும் அவற்றினுறுதியாகிய தருமமே கைகொடுக்கச் செய்துவந்தேன். இப்போது என் சீவனுக்குறுதி பிறக்கவேண்டிய யோசனை செய்திருக்கின்றேன். அதென்ன வென்பீர்களோ? எனக்கு மூப்பென்கிறது சமீபித்தபடியால் ஆதிசேஷனாலும் அஷ்ட கெஜங்களாலும் பாரித்துக்கொண்டிருக்கிற இந் தப் பூமிபாரத்தை நான் சுமக்கமாட்டேன். எங்கள் பெரியோர்கள் தங் கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பட்டங்கட்டிவைத்து, தாங்கள் ஆரணியங் களில் தபசு செய்து மோட்ச சாம்பிராச்சியத்தை யடைந்தார்கள். ஆத லால் சுவர்க்க மத்திய பாதாளம் என்கிற திரிலோகங்களிலும் சகிக்கக் கூடாத பகைகளை யெல்லாம் செயித்த யான் இப்போது சரீரத்திற் கலந்து கள்ளர்போல் உழன்று கொண்டிருக்கிற காமம் - குரோதம் - லோபம் - மோகம் - மதம் - மாற்சரியம் என்கிற அறுவகை விகாரமாகிய பகை ஞர்களை ஜெயிக்க மாட்டாமல் அவர்களுக்கு அஞ்சி வாழ்வேனே? கை கேசி தேர்விட அசுராளுடைய இரதம் பத்தையுஞ் செயித்த யான் சுவை - ஒளி - ஊறு - ஓசை - நாற்றம் என்கிற ஐம்புலன்களாகிய ஐந்து தேர்களையும் ஜெயிக்கிறது அருமையா? மானிட தேகமெடுத்தால் சத்ராதிகளுடனே யுத் தஞ்செய்து படவேண்டும். அல்லவென்றால் ஞானத்தில் பழகித் தெளிந்து சரீ ரம் விடவேண்டும். இவ்விரண்டு மில்லாவிடில் பாக்கியம் நிலையல்லவென்று துறந்து நியானத்தைச் சம்பாதித்து மோக்ஷத்தை யடையவேண்டுமல்லவா? சகல சீவராசிகளுக்கும் இறப்பு உண்டென்கிறது நிச்சயமாயிருக்க, அந்த இறப்பென்கிறதற்கு மூலகாரணமாகிய பிறப்பென்கிற துக்கசாகரத்துக்குத் துறவென்கிற தெப்பம் சம்பாதித்துக் கொள்ளாமற் போனால் அச்சாகரத்தைக் கடக்கலாகுமா? பிறவியென்கிற சிறையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிற ஆன்மாவுக்குத் துறவென்கிற சிறகுண்டானாலல்லவா அச்சிறையை விட்டு நீங்க

லாகும். அப்படிபோல இராசரீக மென்கிறதை விட்டு மோக்ஷ சாம்பிராச்சிய மடையத் துறவறத்தில் என் மனம் பிரவேசித்திருப்பதால் நீங்கள் யாவரும் எப்படிக்கு இதுகாறும் இகலோக சாதனத்திற்கு அனுகூலமாக யிருந்து நடப் பித்தீர்களோ அப்படியே பரலோக சாதனத்திற்கும் தயை செய்யவேண்டும். ஒருவன் என்ன எண்ணுகிறானே அதைக் கொடுப்பதற்குத் தபசிருக்க, கிலே சத்தையே உண்டுபண்ணுகிற சமூசாரத்தில் மூழ்கி யிருக்கிறது அமிர்தத்தை விட்டு விஷத்தைப் புசிக்கிறதுபோ லல்லவா? ஒருதரம் எல்லாப் பாக்கியங் களையும் அனுபவித்தும் பின்பு அதையே இச்சிக்கிறது எச்சலைத் தின்கிறது போலல்லவா? அதில் என்ன இன்பந்தானிருக்கிறது! நானும் புத்திரனில்லா மல் அநேககாலம் மனம் நொந்திருந்தேன். அந்த நோயை ஸ்ரீ ராமன் பிறந்து தீர்த்தான். அவன்பேரிலே நான் இந்தப் பாரத்தை வைத்துத் தப பிப்போகிற வுறுதியை நினைத்தேன். ஆனல் ஸ்ரீ ராமனுடைய தகப்பன் ஒரு ரணகளத்தி லிறவாமற்போனலும் கிழவனகியும் துறந்துவிடாமற்போனனென் கிற அபவாதம் கொஞ்சமா? ஸ்ரீ ராமனுக்குச் சீதையை ஸ்திரீயாகப்பார்த்த அந்தக் கலியாணம்போல் பூமியையும் ஸ்திரீயாகப் பார்க்க அபேக்ஷித்திருக் கின்றேன். ஆதலால் ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்து நான் துறவி யாய் ஆரணியம் போக எண்ணினேன். உங்கள் அபிப்பிராயத்தைத் தெரி யச் சொல்லுங்களென்று தசரதமகாராஜன் வினவினர். இப்படி ஸ்ரீ ராம னுக்குப் பட்டாபிஷேகஞ் செய்கிறதென்று சொல்லவே சந்தோஷமானது மனதிலோங்கிப் பொங்கி, உடனே இராஜா பிரிந்துபோவா ரென்ற கிலேசத் தினல் விம்மி இரண்டு கன்றுக்குத் தாபந்தரியப்படும் ஓர் பசுவைப்போல இருந்தார்கள். ஆகிலும் இராஜாவுக்கு இது தவிர வேறே யுறுதியில்லை யென்கிறதினலேயும், பூலோகத்திலுள்ள ஜீவராசிகளுக்கு ஸ்ரீ ராமனைப் பார்க் கிலும் நாயகன் வேறில்லை யென்கிறதினலேயும், விதியினுடைய பலத்தினலே யும், மந்திரிகள் சம்மதித்து இருந்தார்கள். அப்போது வசிஷ்டமகாமுனி மந் திரிகளுடைய மனதையும், இராஜா தன் குமாரனிடத்தில் வைத்திருக்கிற அன் பைப்பற்றிச் சொன்ன வார்த்தையினுடைய சாரத்தையும், சகல ஜீவனுக்கு மூண்டாகிற வுறுதியையும் நன்றாய்த் தெரிந்து யூகித்துப் பார்த்து, ஒரு வார்த்தை சொல்லுகிறார்: ஓ ராஜாவே! உம்முடைய பெரியோர்கள் சக்கர வர்த்திகளாக விருந்து அனேகம் பெருமைகளை யடைந்து கீர்த்திகளைச் சம்பா தித்தார்களே யல்லாமல், உம்மைப்போல ஸ்ரீ ராமனை யார் பிள்ளையாகப் பெற்றார்கள்? உமது மகிமைக்குத் தக்க காரியமே நினைத்தீர். மேலும் அனே கம் யாகாதிகளையும் செய்தீர். இனித் தபசு செய்கிறதற்கும் தகும். பூமிதேவி உம்மைப் பிரிந்து கண்ணில்லாதவளாய்ப் போகாமல், நீர் பெற்ற ஸ்ரீ ராம னல் இரட்சிக்கப்படுவள் நாம் பல வார்த்தை சொல்ல வேண்டியது என்ன? அந்த தருமமூர்த்தி தாமே வந்தவதரித்தார். அண்டங்களை யுண்டாக்கிக் காத்து இரட்சித்து துடைத்து உண்டு உமிழ்ந்து அளந்து கொள்ளும் அந்த வஸ்து தானே உமக்குப் பிள்ளையாக அவதாரம் செய்தது. அது உன்னுயி ருக்கு எப்படியோ அப்படியே சகல வுயிர்களுக்கும் இகபர சௌக்கியங்களைக் கொடுக்கும். விசேஷித்துச் சொல்லவேண்டிய தில்லை. அவன் பெயரைச் சொன்னல் வருகிற யிடையூறுகளெல்லாம் போய் இன்பம் வருகிறபடியினலே,

ரிஷியீஸ்வராள் முதலிய பேரும் நாங்கள் செய்த புண்ணியத்தினுடைய பலன் அவன்தானென் றிருக்கிறார்கள். பூமிதேவி சரஸ்வதி லட்சுமி பார்வதி இவர் களைப் பார்க்கிலும் அதிக நன்மையும் கீர்த்தியு முடைய ஜானகி அவனுக்குத் தேவியானாள். ஆதலால் நன்மையைக் கற்றறிந்தவர்கள் புசிக்கச்சேயும் ஜல பானம் செய்யச்சேயும் இவளையே நினைக்கிறார்கள். மக்கள் முதலிய யாவற் றையும் ரட்சிக்கிற ஸ்ரீ ராமனே உமக்கு உறுதித் தவமல்லாமல் வேறே யில்லை யென்று சொன்னார். இப்படி வசிஷ்ட மகாமுனி சொல்லக் கேட்ட தசரத மகாராஜன் அந்தப் புத்திரனைப் பெற்ற நாளிலும், சிவன் கையில்லை யொடித்த நாளிலும், பரசுராமன் கையில்லை வாங்கி யவனைத் தோற்கச் செய்த காலத்திலுமுண்டான சந்தோஷத்தைப் பார்க்கிலும் அதிக சந்தோ ஷத்தை யடைந்து, சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டு, சுவாமி! எனக்கு உறுதியானதையே சொன்னீர்கள். தங்கள் கிருபையினாலேதானே நான் இது வரைக்கும் இராச்சியபாரஞ் செய்தது. அந்தக் கிருபையை அவனிடத்திலும் வைத்து நடப்பித்தால் அவன் ராஜரீகஞ் செய்கிறதற்குத் தடையென்ன? எங் கள் பெரியோர்களும் உங்கள் கிருபையினாலே இராஜ்ஜியபாரஞ்செய்து யாகாதி களை முடித்து அவர்கள் வினைகளைப் போக்கி நற்கதி யடைந்தார்கள். அதேரீதி யாக எனக்குக் கிடைத்ததென்று மிகவு மகிழ்ந்துசொன்னார். பின்பு மந்திரிக ளுடைய மனோபாவங்களை இராசாவுக்குத் தெரியும்படியாய் அம்மந்திரிகளுக்குத் தலைவனான சுமந்திரன் இராஜாவை நமஸ்கரித்து, சுவாமி! ஸ்ரீ ராமனுக்குப் பட் டாபிஷேகம் செய்கிறோமென்பதைக் கேட்டுச் சந்தோஷிக்கிற மனதைத் தங்க ளைப் பிரிந்திருக்கவேணுமென்கிற கிலேசம் சுடுகின்றது. ஆயினும் தருமத்துக்கு மிஞ்சின இன்பமும், அதை மறந்ததற்கு மிஞ்சின துன்பமும் வேறில்லையென்கிற சாஸ்திரம் பொய்யல்ல. அப்படியே தாங்கள் செய்யவேண்டியது. ஆனால் இங்கே யிருக்கிற இராஜாக்களுக்கும் மற்ற ஜனங்களுக்கு மிருக்கிற யெண்ணம் என்ன வெனில்: ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்த பின்பு தாங்கள் நினைத்ததை முடிக்கிறது உத்தமமாக யிருக்கின்றதென்று சுமந்திரன் சொல் லக்கேட்டு நல்ல வார்த்தை சொன்னீர். அப்படியே முன்னே ஸ்ரீ ராமனுக் குப் பட்டாபிஷேகம் செய்து, பின்பு செய்யவேண்டியதைச் செய்துகொள் வோம். நீர் சீக்கிரத்தில் ஸ்ரீ ராமனை அழைத்துக்கொண்டு வாருமென்று ஆக்யாபித்தார். உடனே சுமந்திரன் இராஜாவைச் சேவித்துக்கொண்டு, தனக்கே பட்டாபிஷேக மானதுபோல் சந்தோஷித்து, இரதத்தின்பேரி லேறிக்கொண்டு ஸ்ரீ ராமனிருக்கிற திருமாளிகைக்குப் போனார். அப்போது ஸ்ரீ ராமன் பெண்ணமிர்தமாகிய சீதையும் தன்னைப் பிரியாத தம்பியும் சமீபத்திலிருக்கப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற திருவழகைச் சுமந்திரன் கண்டு, கண்ணும் மனமும் ஆனந்தமாகக் களித்துத் தொழுது, சுவாமி! மகாராசா ஒரு காரியம் பேசுகிறதற்குத் தங்களை அழைத்துவரச் சொன்ன ரென்று சொன்னார். அந்தக்ஷணமே கமல நேத்திரனை ஸ்ரீ ராமன் சீக்கிர மாக எழுந்திருந்து, நீலமேகம் நடக்கிறதுபோல நடந்து சுமந்திரனுடைய தேரின்பேரில் ஏறினார். உடனே பேரிகை முதலான வாத்தியங்கள் சத்தித் தன. இவரைக் கண்ட ஸ்திரீகளின் கைவளையல்கள் கழன்று விழுகிற சத்தஞ் சத்திக்க தேவர்கள் எங்கள் குறை முடிந்ததென்று சந்தோஷித்தார்கள்.

திருமுடியிற் சூடிய பூமாலையினுடைய தேனை யுண்ணச் சேர்ந்திருக்கிற வண்டுகளெழும்பி ரீங்காரத் தொனியோடும் பறந்தன. இப்படி ஸ்ரீ ராமன் ரதாரூடனாகிச் செல்லுகையில் இருபுறத்தும் யாழ் வீணைகளினுடைய பாடல் நிறைந்தது. ஸ்திரீகள்பேரில் மன்மதன் பாணம் தொடுக்கிறதற்கு ஆரம்பித்தான். அவனுடைய குணத்தொனி ஓயாமல் ஒலித்தது. எங்கும் ஸ்திரீகள் நிறைந்து மிகுந்த பரிவுடனே பார்த்தார்கள். மாளிகை வாயல் வீதி உப்பரிகை சாளரங்கள்தோறும் அலர்ந்த தாமரைப் புஷ்பங்கள் போல ஸ்திரீகளினுடைய திருமுகங்கள் பிரகாசித்தன. தேவாதிதேவனான ஸ்ரீ ராமனுடைய திருமார்பிலிருக்கும் மலர்மாலையில் மொய்த்துக்கொண்டிருக்கிற வண்டுகளோடு ஸ்திரீகளுடைய கண்ணென்கிற கெண்டைகளும் கலந்து மொய்த்துக்கொண்டன. அளகபாரத்தின் புஷ்பங்களும் மேகலாபரணங்களும் தேவர்கள் பொழிகிற புஷ்பமாரியும் ஸ்ரீ ராமன் நடக்கும் வீதியெல்லாம் வீழ்ந்து மேடாயின. ஸ்திரீகளுடைய கண்ணென்கிற வாளும், முகமென்கிற சந்திரனும், தனமென்கிற இளநீரும், எங்கும் நெருங்கி நிறைந்தன. புருஷாளெல்லாந் தாயைக் கண்ட கன்றுகள் போல மனது குளிர்ந்து பார்க்க ஸ்ரீ ராமன் தம்பியுடனேகூட சுமந்திரன் தேரின்பேரி லெழுந்தருளி மிகுந்த சந்தோஷத்துடனே தம்முடைய வரவைப் பார்த்துக்கொண்டிருக்கும் தசரத மகாராசாவின் சமுகத்தில்போய் கிரமப்படிக்கு வசிஷ்டபகவானைச் சேவித்து, பின்பு தன் தந்தையாகிய தசரத மகாராசாவையும் சேவித்தார். அவர் மிகுந்த அன்போடு ஆனந்தபாஷ்பம் சொரிய ஜானகி வல்லபனான ஸ்ரீ ராமனுடைய மார்பை இனிமேல் பூமிபாரந் தாங்குகிறதற்கு விசாலமாக யிருக்கின்றதா வென்று தோன்ற தம்முடைய மார்பினால் அளந்ததுபோலத் தழுவிக்கொண்டு, அவரைப் பார்த்து, இதனைச் சொல்லுகிறார். ஓ மழுவாயுதம் பிடித்த பரசுராமனுடைய கீர்த்தியைத் தலையெடுக்க வொட்டாமல் பங்கம்செய்த ஸ்ரீ ராமா! உன்னைப் பெற்றெடுத்த நான் உன்னை வேண்டிக்கொள்ளுகிற காரியமென்னவெனில், இந்நாளையி லெனக்கு மூப்பென்கிற விஷம் சரீரத்தில் வியாபித்து வருகிறபடியால், இனிமேலிந்த இராச்சியபாரம் சுமக்கமாட்டேன். ஆதலால் இந்தச் சிறையைவிட்டு நற்கதியடையும்படி நீ தயை செய்யவேணும். உலகத்திலே புத்திராள் வேணுமென்கிறது பெற்றவர்கள் வருத்தத்தைத் தீர்க்கவும், அவர்களை நற்கதி அடைவிக்கிறதற்கு மல்லவா? தரும சுரூபனான உன்னைப் பெற்ற நான் வருந்துகிறது யுக்தமல்லவே! என் மனதின்படி செய்கிறதானால், நான் சொல்லுகிற வார்த்தையை மனதிற்கொண்டு கேள்: நம்முடைய பெரியவர்கள் தங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்து, மூப்பில் வருந்தாமல் தவங்கள்செய்து நல்வழியினின்று நற்பதவியடைந்தார்கள். பூர்வ புண்ணியத்தினாலும், இப்போது செய்த யாக மகிமையினாலும், வெகு அருமையா யுன்னைப் பெற்றேன். இந்த மூப்புகாலத்திலே ராஜ்ஜியத்தைத் துறந்து தபசுசெய்கிற பலனுமுண்டானால், உன்னைப் பெற்றதைப் பார்க்கிலும் வேறே லபிதமென்ன விருக்கின்றது? ஆகையால் ஆதிசேஷனானவன் தனது ஆயிரம் பணமுடிகளினாலும் மாறிமாறிச் சுமந்துகொண்டிருக்கிற இந்தப் பூமிபாரத்தை உன்னிடத்திலே விடவேணுமென்கிற ஆசை என் மனதில் மிகவும் உண்டாயிருக்கின்றது, இதை எனக்கு நீ அருளல்வேண்டும். ஓ ஸ்ரீ ராமா! பூர்வத்

தில் நமது குலத்தில் ஒரு பிள்ளே தன்னுடைய பெரியவர்கள் நற்கதிபெற வேண்டுமென்று எண்ணி, நமது குலதெய்வமான ஸ்ரீமந் நாராயணனுடைய பாதாரவிந்தத்தி லிருக்கிற கங்கையை இப்பூமிக்குக் கொண்டுவந்து அவர்களே நற்கதி யடையச்செய்தான். உலகத்தில் இருக்கிற ராசாக்கள் தேவர்கள் தேவேந்திரன் ரிஷிகள் இவர்களேப் பார்க்கிலும் பெரியவன் யாரென்றால், தன் பேச்சு மறுக்காமல் நடந்துகொள்ளுகிற புத்திரரைப் பெற்றவனென்று தரும சாஸ்திரஞ் சொல்லுகின்ற தல்லவா? ஆகையினாலே உபாயமாய் இராஜ்ஜிய பாரத்தை நம்மிடபேரில் வைக்கிறரென் றெண்ணமல் அபிஷேகஞ் செய்து கொண்டு, இனி நீயே ராஜ்ஜியபாரம் செய்கிறதாய் நினேக்க வேண்டும். இது உன்னிடத்தில் பெற வேண்டிக்கொள்கிறேனென்று சொல்ல, ஸ்ரீ ராமன் சம்மதிக்கவுமில்லே. சம்மதியாமற் றடுக்கவுமில்லே. ஏனெனில், பிதா சொல்லு கிறபடி கேட்கிறதல்லவா நமது கடமை. அதல்லவா நமக்கு நீதியும் தருமமு மென நினேத்துப் பேசாமலிருந்தார். பிள்ளேயினுடைய மனதை யறிந்த தசரத மகாராஜன் பின்னுமவரைப் பார்த்து, ஐயனே! நீ எனக்கு எப்படியும் இந்த வரம் கொடுக்க வேணுமென்று மார்புடனே தழுவிக்கொண்டு சந்தோஷித்து, மந்திரி பிரதானிகள் சூழத் தம்முடைய மாளிகையிற் போய்ச் சேர்ந்தார். ஸ்ரீ ராமனும் சுமந்திரன்தேரி லேறிக்கொண்டு தம்முடைய திருமாளிகையிற் போய்ச் சேர்ந்தார். அப்போது சகல இராஜாக்களேயும் தசரதர் அழைப் பித்து, ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்கிறதற்கு வேண்டியவைகளே யழைப்பியுங்கள் என்று ஆக்கியாபித்தார். அப்போது வசிஷ்டர் சந்தோஷத் துடனே இரதமேறிக்கொண்டு அனேகம் பிராமணர்கள் சூழ, இராசனிடத்துக்கு வந்தார். அப்போது தசரத மகாராஜன் தமது சமீபத்திலிருந்த இராச கூட் டங்களேப் பார்த்து, ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேணுமென் றெண்ணி அப்படிக்கே உத்தரவு செய்தேனென்று சொல்லினர். அதை யவர்கள் கேட்டு மிகுந்த சந்தோஷசித்தராகி, சரீரத்துடனே சுவர்க்கலோகம் போனவர்களேப்போல் ஆனந்தமடைந்து, நல்லகாரியம் செய்தீர்களென்று சொல்லி, இராஜாவைச் சேவித்துக்கொண்டு, சுவாமி! நம்முடைய இராசகூட் டத்தை இருபத்தொரு தலேமுறையாய் கருவறுத்துவந்த பரசுராமனுடைய மதத்தை ஒடுக்கிய ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்கிறது மகாவுத்தமமே, அதுவே தருமமென்று சொன்னர்கள். சகல ராஜாக்களும் இவ்வளவு சந்தோ ஷத்தோடு சொல்லுவதைக் கேட்டு சக்கிரவர்த்தியானவர் தம்முடைய சந்தோ ஷத்தை மனதில் அடக்கிக்கொண்டு, அவர்களேப் பார்த்து வேறொருவிதமாகச் சொல்லத்தொடங்கினர். ஓ நண்பர்களே! நான் பிள்ளேயினுடைய ஆசை மயக்கத்தினாலே மயங்கி இராச்சியத்தைக் கொடுக்கப்போகிறேனென்று சொன் னால், நீங்க ளென்னுட னித்தனேநாள் பழகி யிருந்தும் என்னிடத்தி லன்புவையா மல் அவனுக்குத்தானே இராஜ்ஜியத்தை கொடுக்கச் சொன்னீர்களே! நீங்கள் சந்தோஷத்தினுற் சொன்னீர்களா? அல்லது என் மனேபாவமறிந்து சொன் னீர்களா? அந்தவயணம் தெரியச் சொல்லுங்களென்று கேட்டார். அதற்கு அவர்கள் சொன்னதாவது: ஓ சக்கரவர்த்தியே! தானம், தருமம், தவம் ஞானம், கல்வி, ஒழுக்கம், பொறுமை முதலிய உத்தம குணங்கள் யாவற்றும் ஸ்ரீ ராமனிடத்தி லிருக்கின்றது. சகல ஜீவனுக்கும் அவரிடத்திலிருக்கிற

அன்பு ஒருவராலேயுஞ் சொல்லக்கூடாது. அவருக்கு இந்த ராச்சிய பட்டாபிஷேகம் வருவது, ஊருக்குச் சமீபத்திலிருக்கிற குளம் நீர் நிறைகிறது போலவும், உள்ளூரில் சாரமுள்ள கனியிருப்பது போலவும், மேகமானது மழை பொழிகிறதுபோலவும், கழனிகளுள்ளவிடத்திலே ஆற்றுநீர் வருகிறதுபோலவும் உதவியானபடியினாலே, அக்காரியத்திற்குத் தடை சொல்லுகிறவர்கள் யாரிருக்கிறார்கள்? ஓ மகாராஜனே! ஸ்ரீ ராமனை சகல ஜீவகோடிகளையும் தம்முடைய ஜீவனைப்போலவே எண்ணியிருக்கிறார். சகல ஜீவகோடிகளும் ஸ்ரீ ராமனையே தங்கள் ஜீவனாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தக் கேள்வியினால் உண்டாகிய சந்தோஷமானது மறைத்துச் சொன்ன மனதைக்கூட தள்ளிக்கொண்டு வெளியிலே பொங்கி மகிழ்ந்து, கண்களில் ஆனந்த பாஷ்பம் வர இராஜா ஒருவார்த்தை சொல்லுகிறார்: ஓ ராஜாக்களே! நீங்கள் தருமம் - நீதி - ஒழுக்கம் இவைகளில் மிகுந்தவர்கள். ஸ்ரீ ராகவன் இதுகாறும் என்னுடைய பிள்ளை. இன்றுமுதல் அவன் உங்கள் பிள்ளை. ஆதலால் அவன் உங்களுக் கடைக்கலமென்று சொல்லி, அச்சபையைவிட் டெழுந்திருந்து, வித்துவான்களைக் கூட அழைத்துக்கொண்டு சத்காலக்ஷேபம் செய்யும்படி ஒரு மண்டபத்தில் வீற்றிருந்தார். அப்போது இந்தச் சமாச்சாரமறிந்த தாதிகள் நாலுபேர் கௌசலையினுடைய திருமாளிகைக்குத் தங்கள் இரவிக்கைகள்பூட் டவிழவும், தலைமயிரலையவும் வஸ்திரங்கள் நெகிழவுமோடி, அக்கௌசலைக் கெதிரில் நின்று ஆனந்த நிர்த்தனத்தோடு பாடி, எதிரில் நின்றவர்களையெல்லாம் சேவித்து, சந்தோஷ ஆவேசத்தினாலே வாய்குளறினார்கள். அப்படி வந்த ஸ்திரீகளை கௌசலைநாயகி பார்த்து, ஓ தாதிகளே! நீங்கள் மிகுந்த சந்தோஷத்தோடு வந்தீர்களே உங்களுக் கிவ்வளவு சந்தோஷம் வருகிறதற்குக் காரணமென்னவென்று கேட்டனள். அதற்கவள் அம்மா! உமது திருமகனுக்கு இந்த ராச்சியபட்டாபிஷேகம் மகாராஜா செய்யப் போகிறாரென்று சொன்னார்கள். அதுகேட்கவே மகனுக்குப் பாக்கியம் வருகிறதென்று மிகவும் சந்தோஷ சமுத்திரம்போல யிருந்தாள். ஆனால் உடனே இராஜா துறவறத்தை இச்சிப்பாரென்கிற கிலேசம் அந்தக்கடலின் வடவாமுகாக்கினிபோலிருந்தது. ஆகிலும் சந்தோஷ செய்தியைச்சொன்ன ஸ்திரீகளுக்கு ஆடையாபரணங்களும் திரவியங்களுங் கொடுத்து, மிகுதியும் அன்பையுடைய சுமித்திரைக்கு இந்தச் சந்தோஷ வார்த்தையைச் சொல்லி, அவளோடு கூட ஸ்ரீ ரங்கநாதன் கோயிலுக்குப் போய், உபயநாச்சிமாரோடு பள்ளி கொண்டிருக்கிற ஸ்ரீ ரங்கநாதனைச் சேவித்து, சுவாமி! நீரென் பிள்ளைகளுக்குக் கொடுத்த பாக்கியங்கள் யாவற்றும் உமதுதான் என்று சொல்லி ஆராதனை முதலிய யாவற்றும் செய்து, அநேக கோதானம் பூதானம் கன்னிகாதானம் சுவர்ணதானங்களைப் பிராமணருக்குக் கொடுத்து சந்தன புஷ்பாதிகளால் உபசாரம் நடத்தி மீட்டும், ஸ்ரீ ரங்கநாதனைச் சேவித்துக்கொண்டு கோயிலைப் பிரதட்சணம் செய்து, தனது திருமாளிகைக்கு வந்து சேர்ந்து, அதற்குச் செய்யவேண்டிய விரதங்களை அனுசரித்துக் கொண்டிருந்தாள்.

மந்திரப் படலம் முற்றிற்று.

மந்தரை சூழ்ச்சிப் படலம்

இப்படிக்கிருக்க, தசரத மகாராஜனுடைய சமுகத்திற்கு வசிஷ்டமகா முனிவர் வந்து, ஓ ராஜாவே! ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்கிறதற்கு நாளைக்கு நல்ல முகூர்த்தமாக விருக்கின்றதென்று சொல்லினர். அதுகேட்ட மகாராஜா மிகுதியுஞ் சந்தோஷமாகி, சுவாமி! ஸ்ரீ ராமனிடத்துக்குத் தாங்களே எழுந்தருளி, தருமநீதி முதலியவைகளைச் சொல்லவேணுமென்று பிரார்த்தித்தனர். அப்படியே வசிஷ்டரும் ஸ்ரீ ராமனிடத்துக்கு வந்தார். அவரைக் கண்ட ஸ்ரீ ராமனெழுந்திருந்து சேவித்துக்கொண்டார். அப்போது வசிஷ்டர் அவரைப் பார்த்து, ஸ்ரீ ராமா! நாளையதினம் உனக்குப் பட்டாபிஷேகம் செய்யப்போகிறார். ஆதலால் நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். அதைக்கேட்டு மனதில் உறுதியாய் வையென்று சொல்லுகிறார்:

ஸ்ரீ மகாவிஷ்ணு - சிவன் - பிரமா இவர்களிலேயும், பிரிதிவி - அப்பு - தேயு - வாயு - ஆகாயமென்று சொல்லப்பட்ட ஐந்து பூதங்களிலேயும், பெரியவர்கள் அந்தணர்களென்று மனதிலே வைத்துப் பூஜிதை செய்யவேண்டும். அவர்கள் கோபம் பண்ணினாலும் கிருபை பண்ணினாலும் பலிக்குமாகையால், அவர்களுடைய பெருமையை ஒருவராலுஞ் சொல்லி முடியாது. ஆதலால் அவர்களைச் சேவித்துக்கொண்டு ஸ்துதி பண்ணி, நல்ல வசனஞ் சொல்லி, அவர்களேவினது செய்துகொண்டிரும். ஆகிறதும் அழிகிறதும் அவர்களால் ஆனபடியால், மும்மூர்த்திகளிலும் அவர்களுயர்ந்தவர்கள். பிர்மா - விஷ்ணு - உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளுக்கும் தருமமும் நன்மையும் அருளும் வேண்டியிருக்கிறபோது, மற்றபேருக்கு அதுகள் அவசியம் வேண்டுமென்கிறதைச் சொல்லவேண்டுமா? சூது முதலான துர்நடத்தைகள்தான் உன்னிடத்தில் இல்லையே? ஆனாலும் பெரியோர்கள் குற்றமென்று சொல்லுகிற காரியங்களில் ஒன்றானாலும் உன்னிடத்தில் வரவொட்டாமல், ஒருத்தரோடும் பகை கொள்ளாமல் இருக்கவேணும், யாவரோடும் பகைகொண்டால் பகை ஒடுங்காது வளந்தே வரும். அதனால் இராஜாவுக்குக் காரியம் வேரோடே கெட்டுப்போம். மும்மூர்த்திகளுக்குச் சமமான இராஜாக்களானாலும் மந்திரி சொல்லுகின்ற வழியே நடந்து கொள்ளுகின்றதே பலம். சகல ஜீவனிடத்திலேயும் அன்பு வைத்திருந்தால் அதற்கு மிஞ்சின பலன் வேறில்லை. சகல ஜீவனையும் தன் ஜீவனுகவும், தான் ஒரு சரீரமாகவும் எண்ணி, தருமத்தோடு நடாத்துகிற ராஜன் வேறே ஒரு யாகம் செய்யவேண்டியதில்லை. இராஜனுக்கு நல்ல வார்த்தையும் சந்தோஷமும் யோசனையும் நீதியும் தருமமும் உண்டாயிருக்குமாகில், அவனுக்கு ஒருபோதும் அழிவு வரமாட்டாது. பொல்லாதவைகளைத் தள்ளி, பொன்னிறுக்கிற தராசுபோல் சமமான மனதோடு இராஜ்ஜியபாரம் செய்துகொண்டு அன்போடிருந்தால் அவனுக்குச் சத்ராதிகளைச் ஜெயிக்க வேறு ஆயுதம் வேண்டியதில்லை, பூமியில் தூமகேதுபோல் பிறந்திருக்கிற வேசிகளுடைய காமம் விட்டிருந்தால், கேடென்கிற பேருமில்லை; நரகமுமில்லை. இப்படியாக வசிஷ்டர் ஸ்ரீ ராமனுக்கு அநேக நீதிகளைச் சொல்லி, இருவரும்

ஸ்ரீ ரங்கநாதன் கோயிலுக்குப்போய் திருவாராதனம் செய்துவைத்துச் சேவித்துக்கொண்டு, இராஜாவினிடத்திற்கு வந்து நடந்த சமாசாரமெல்லாம் வசிஷ்ட மகாமுனி சொன்னர்.

இராஜா சந்தோஷித்து மந்திரிகளுக்குப் பட்டணத்தைச் சிங்காரிக்கச் சொல்லி ஆக்கியாபித்தார். அப்போது வள்ளுவன் யானையின்பேரில் பேரிகை வைத்து, ஸ்ரீ ராமனுக்கு நாளையதினம் பட்டாபிஷேகம் ஆதலால் பட்டணத்தை அலங்கரியுங்க ளென்றறைய தேவர்களும் கேட்டுச் சந்தோஷிக்க பேரிகை யடித்தான். அந்தச் சமாச்சாரம் பட்டணத்திலிருக்கின்ற ஜனங்கள் கர்ணமிர்தமாகக் கேட்டு, அதிக சந்தோஷத்தோடு களித்து, ஆடிப்பாடி சரீரம் புளகாங்கிதமாய்த் தசரத மகாராஜனை ஸ்தோத்திரம் செய்து, இந்தச் செய்தி சொல்லுகிறவர்களுக் கெல்லாம் ஆடை ஆபரணங் கொடுத்து, இருதயானந்தமாக ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய மார்பிலே யிருக்கிற கௌஸ்துவாபரணத்தின் இரத்தினத்தைக் குச்சு பிடித்தாப்போல் பட்டணத்தை மகா அலங்காரமாகச் சிங்காரித்தார்கள். அப்போது உப்பரிகைகளின் பேரில் பறக்கிற பஞ்சவர்னக் கொடிகள் ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகமாகிறதைப் பார்க்க பட்சி ஜாதிகள் எல்லாம் ஆகாயத்தில் பறக்கிறது போல விருந்தது. ஸ்திரீகளுடைய துடைகள்போலிருக்கிற வாழை மரங்களையும் கழுத்துகள் போலிருக்கிற கமுக மரங்களையும் நட்டு அவர்கள் பல்லுகள்போ லிருக்கிற முத்துமாலைகளாலே பந்தல்கள்போட்டு, அவர்கள் தனங்கள்போ லிருக்கிற பொற்கும்ப கலசங்களையும் வைத்தார்கள். சூரியன் வேறொரு ரூப மெடுத்துப் பிரகாசிக்கிறதுபோலத் தோன்ற மகரதோரணங்கள் கட்டினர்கள். பவழத்தூண்களுக்கெல்லாம் மெல்லிய வஸ்திரங்களினால் கௌசனை செய்தது சிவனுடைய சரீரம்போல் பிரகாசித்தது, முத்தினாலே நிலாவும், ரத்தினத்தினாலே வெய்யலும், நீலக்கல்லினாலே இருட்டு முண்டாகிய ஒருநாள் போல் பட்டணம் பிரகாசித்தது. தேவர்களெல்லாம் தேவர்கள் விமானம் போலவும், வீரபட்டங் கட்டியிருக்கிற யானைகள் சூரியனுட னெதிர்க்கிற உதயகிரி போலவும், நாலு வீதிகளில் திரிந்தன. புஷ்பங்களும் பன்னீரும் கந்தப்பொடியும் மனித நெருக்கத்தினால் யிற்று விழுந்த முத்தும் பொன்னாபரணங்களும் வீதி யெல்லாம் நிறைந்தன. ஆண் யானைகள் பின்னே பெண் யானைகள் ஸ்திரீகள் நடக்கிறது போல் நடந்தன. இந்தப் பட்டணத்தினுடைய அழகைப் பார்த்த தேவலோகத்திலிருக்கிற தேவர்கள் இதிலே வாசம்செய்ய நமக்குக் கிடைக்காமற் போயிற்றென்று ஏக்கமுறும்படி, தேவலோகத்தைப் பார்க்கிலும் அதிகமாய்ச் சிங்காரித்திருந்தது.

இப்படி யிருக்கிற வேளையில் இராவணனுடைய பாவமே ஒரு ரூப மெடுத்ததுபோல மஹா கொடுமையையுடைய கூனியென்கிற ஸ்திரீ பூர்வத்தில் ஸ்ரீ ராமன் உண்டைவில் லெறிந்த பகையை நினைத்துக்கொண்டு, மனம் துடிக்க, கண்களில் அக்கினிப்பொறி பறக்க, உதட்டியான வார்த்தையோடு அதிசீக்கிரமாகக் கைகேசியினிடத்திற்குப் போனாள், அப்போது கைகேசி பால் சமுத்திரத்தின்பேரில் பவழக்கொடி படர்ந்திருக்கிறதுபோல் மெத்தை

யின் பேரில் நித்திரை செய்துகொண்டிருந்தாள். அது கண்ட கூனி அவளு டைய பாதார விந்தத்தைத் தன்கரங்களினுலே பிடித்தாள்: பிடிக்கவே கைகேசி நித்திரை தெளிந்து அவளைப்பார்க்க, அப்பொழுது கூனி கொடுமை யான வார்த்தைகளைச் சொல்லுகிறுள். அம்மா! கிரகணந் தீண்ட யிருக்கச் சேயும் சந்திரன் பிரகாசிக்கிறதுபோல நீ யிருக்கலாமா? ஆபத்து வந்த போதுங்கூட நித்திரை செய்யலாமா? என்று சொல்லினள். இதைக்கேட்ட கைகேசி அவளைப் பார்த்து அம்மா! எனது பிள்ளைகள் தருமபுருஷாளா யிருக் கச்சே எனக்கு ஆபத்தேன் வருகின்றது? இராச்சியத்தி லொரு பிள்ளை யைப் பெற்றவர்கள் கிலேசந் தீர்ந்தோ மென்கிறார்கள். ஸ்ரீ ராமனைப் பெற்ற எனக்கும் ஆபத்துவருமா? நீ என்ன பேச்சுச் சொல்லுகிறுயென்று சொல்லி னள். இதனைக் கூனி கேட்டு, ஐயோ! உன்னுடைய உரிமைபோகவே பாக் கியங் கீழே விழுந்து போய்விட்டது கௌசலை புத்தி சாதுரியத்தினுலே வாழ் வுண்டாய்ப் பாக்கியவதியானுளென்று கூனி சொன்னுள். அதற்குக் கைகேசி யவளைத் தழுவி, இராஜாதி ராஜனை புருஷனும், பரதன் பிள்ளையு மிருக்க, என்னைப் பார்க்கிலும் அவளுக்கதிகமான வாழ் வென்னவென்று கைகேசி சொல்லினள். அதற்குக் கூனி நகைத்து, உன்னுடைய ராஜாவானவர் தன் னைப்போன்ற புருஷாளெல்லாம் நகைக்கவும், தன்னுண்மைக்கு அபகீர்த்தி வரவும், தாடகையென்கிற ஸ்திரீயை அம்பினுலே கொன்ற ஸ்ரீ ராமனுக்கு நாளை பட்டாபிஷேகம் செய்யப் போகின்றுரே! இதுதான் கௌசலைக்கு அதிக வாழ்வென்று கூனி சொன்னுள்.

இந்த வார்த்தையைக் கேட்கவே, கைகேசி கௌசலைக்கு எவ்வளவு சந் தோஷமாயிற்றோ அவ்வளவு சந்தோஷ மென்கிற சாகரம் மேன்மேலும் இரைந்து பொங்கி வழிந்தது. உடனே சூரியப் பிரகாசம்போல் தன் கழுத் தில் விளங்காநின்ற ஓர் இரத்தினுரத்தை வாங்கி அவள் கழுத்திலே போட் டாள். போடவே கூனி தனது கண்களில் நெருப்புப் பொறிபறக்க, அதட்டி விழித்துப் பார்த்து வைது, பெருமூச்செறிந்து அழுது தன் கழுத்தில் போட்ட ஆரத்தைக் கழற்றித் தரையிலெறிந்து, கோபத்துடன் ஒரு வார்த்தை சொல்லு கிறுள். ஆ கைகேசி! நீ பேதை; உன் வயிற்றில் பிறந்த பரதன் ஒரு பயித்தியக்காரன். நீங்களிருவரும் கிலேசப்பட, உன் சக்களத்திக்கு நான் ஏவல் செய்துகொண்டிருக்கமாட்டேன். சீதையும் இராமனும் சிங்காதனத்தி லிருக்கவும், பரதன் தரையி லிருக்கவும் கால மிருக்கச்சே, நீ சந்தோஷமாய் இரத்தின ஹாரம் கொடுத்த வயணமென்ன? ஐயோ! கௌசலை தனக்குறுதி யான காரியத்தை மறவாமல் இருதயத்தில் வைத்திருந்து, சமயம் பார்த்து தன் பிள்ளைக்குப் பட்டங்கட்டுகிறதற்குத் திட்டம் செய்து கொண்டாள். உன் வயிற்றில் பிறந்த பரதன் முழுமையும் பாக்கிய மீனனன். அவன் இருந்தா லென்ன அவன் இறந்தாலென்ன அவனுக்கு என்ன தைரிய மிருக்கப்போகின் றது! அவனை நீ பெற்றதினுல் என்ன பிரயோஜனம்? அவன் பூமியிற் பிறந்தும் பிறவாதவனனன். இந்த ராஜ்ஜிய மெல்லாம் இராமன் தம்பியுடனே கூட ஆள, பரதனும் தம்பியும் பட்டணத்தை விட்டுத் தபசு செய்யப் போகவேணுமே யல்லாமல் வேறில்லை. அநேக கோடி இராஜாக்களுக்கு முன்னே பரதனிப்படி

எளியவனுக விருக்கிறதிலும் இறந்துபோகிறதே உத்தமம். பரதனைப் பாட்டனுர் வீட்டுக்குப் போகச்சொல்லி இராஜா அனுப்பினது இப்போதல்லவா எனக்குத் தெரிய வந்ததென்று சொல்லி, அப்பா பரதா! உனக்குத் தாயும் பொல்லாதவள். தகப்பனும் பொல்லாதவன். நீ யென்ன செய்வாய் என்று சொல்லித் திரும்பிக் கைகேசியைப் பார்த்து, நீ ராஜன் வீட்டில் பிறந்தும் இராஜன் வீட்டில் வளர்ந்தும், இராஜன் வீட்டில் புகுந்தும், உனக்கு இவ்வளவு தெரியாதா! இராஜரீகம் உன்னுடையதாகச் செய்து கொள்ளத் தேவையில்லையா? துக்க சாகரத்தில் விழுயிருக்கின்றனையோ? சொன்னலும் கேட்கவில்லை, உனக்கும் தெரியவில்லை. பரதனுக் குண்டாயிருக்கிற கல்வியும் பலமும் வீரமும் இளமையும் நல்ல குணங்களும் புல்லினூற்றிய அமிர்தம் போலாய்விட்டனவே என்று அழுது துடித்துக்கொண்டு எதிரில் நிற்கிற கூனியாகிய மந்தரையைக் கைகேசி பார்த்து, ஓமாக்கினியில் நெய் விட்டாற்போல் கோபமெழும்பிக் கண்கள் சிவக்கச் சொல்லுகிறுள். ஓ மந்தரா! சூரிய குலத்திற் பிறந்த இராஜாக்கள் தங்கள் இராச்சியத்திலே சற்றும் தருமம் தப்பாமல் நடத்திக்கொண்டு வருகிறதாயிருக்க, கவரிமானுக்குச் சமானமான மானத்தையுடைத்தான மனுக் குலத்துக்குக் குற்றமான பேச்சை எப்படி வாயினலே சொல்லத் துணிந்தாய்? நீ எனக்கும் நல்லவளல்ல. என் மகன் பரதனுக்கும் நல்லவளல்ல. நீ சொல்லுகிற வார்த்தையோ பாபத்துக் கேதுவாக விருக்கிறது. மேலும் உனக்குப் புத்தியில்லாமல் மனதுக்குத் தோன்றியபடி பிதற்றுகிறுய். பிறந்திருக்கிற சரீரத்திற்குக் கீர்த்திதானே சம்பாதிக்கவேணும். மனுசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிற நீதியைத் தள்ளக்கூடுமா? ஏன்னெதிரில் நில்லாதே: போய்விடு. நீ இவ்வார்த்தை சொன்னதற்கு உன் நாக்கை யறுக்க வேணும். நீ எங்கள் தாய்வீட்டுத் தாதியானபடியால், மனம் பொறுத்துக் கொண்டேன். ஓ புத்தி யில்லாதவளே! இனிமேல் இப்படிக்குப் பேசாதே என்று கைகேசி சொல்லினுள்.

அதற்கு மந்தரை பயந்து அப்பால் போகாமல் நின்று, இதெல்லாம் என்னத்திற்காகச் சொல்லுகிறேன் என்றுள். உறுதியான காரியம் செய்ய வேணுமென் றல்லவோ? நீ மனதில் நன்று யூன்றிக் கேள். என்று சேவித்துப் பின்னையுஞ் சொல்லுகிறுள். உன் மனதில் மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டம் வரமாட்டாதென்றல்லவா நினைக்கிறுய் இப்போது ராஜ்ஜியபாரம் செய்து வருகிற இராஜா பெரியவரல்லவா? அவர் சின்னவனன இராமனுக்குப் பட்டங் கட்டச் சம்மதித் திருந்தால் பரதனுக்குப் பட்டங் கட்டுகிறதற்குத் தடையாது? தரும சிந்தையா யிருக்கிற ரிஷியீஸ்வராளுக்கு மிகவும் பாக்கியம் வந்தால், புத்தி வேறே திரும்பிப்போம். இப்போது இராமனையும் கௌசலையையும் நல்லவர்களென் றல்லவோ எண்ணியிருக்கிறுய் அவர்கள்தான் நாளைக்கு மிகுந்த துயரம் நமக்கு வரத்தக்கதாய் செய்யப் போகிறவர்கள். அப்போதைக்குங் கௌசலை கொடுக்க, வாங்கிக்கொண்டுதானே நீயும் உன் மகனுஞ் சாப்பிடவேண்டும். அப்போது உன்னிடத்தில் யாராவது தரித்திராள் வந்து ஏதாகிலும் கொடுவென்று கேட்டால், அப்போது அவர்களைக் கேட்டு வாங்கிக் கொடுப்பாயோ? இல்லையென்று சொல்லுவையோ? உனக்குப் புத்தி இப்படி

திகைத்துப்போனது என்னத்தினுலேயோ? இன்னஞ் சில நாளையில் உனக்குத் தரித்திரமும் ஏழ்மையும் வர, அதினுலே நீ பிரயாசைப் பட்டுக்கொண்டிருக்கிற வேளையில் உன் தாய் தகப்பனர் வந்து உன் சக்களத்தி பாக்கியத்தையல்லவோ பார்த்துவிட்டுப் போகவேணும். இதுவுமல்லாமல் உன் புருஷனுக்குப் பயந்து சீதையின் தகப்பன் உன் தகப்பன் இராஜ்ஜியத்தைக் கட்டிக் கொள்ளாம லிருக்கின்றன். அந்தப் பயமும் இன்றோடு தீர்ந்தது. அவன் மருமகனுக்கு இராஜ்ஜியமானுல் உன் தகப்பனர் வீடு சுத்தமாய் மூழுகிப்போய் விடும். அப்போது உனக்குத்தான் மிகுந்த வருத்தமாய் இருக்கும். நீ கெடுகிறதுமல்லாமல் உன் தகப்பன் வீட்டையும் கெடுக்கிறாய். ஸ்ரீ ராமனுக்குப் பட்டமானுல், அவனுக்கும் அவன் தம்பியாகிய லட்சுமணனுக்குமே யல்லாமல் பின்னே யாருக்குச் சவுக்கியமுண்டாகப் போகிறதென்று இப்படியாக மகாபாவியான கூனி சொல்ல, நல்ல மனதையுடைய கைகேசிக்கு தேவர்கள் பண்ணிய புண்ணியத்தினுலும் இராட்சதாள் செய்த பாவத்தினுலும் மனது திரும்பிற்று.

அப்போது, அந்த வார்த்தையைக் கேட்ட கைகேசி கூனியைச் சந்தோஷத்துடனே பார்த்து, அம்மா! பரதன் எனக்குப் பிள்ளையானபடியினலே உனக்கும் பிள்ளையாம். ஆதலால் இப்போது நடக்கப்போகிற பட்டாபிஷேகம் அவனுக்காகும்படிக்கு ஓர் உபாயஞ் சொல்லென்று கைகேசி சொல்லினள். அதுகேட்ட கூனி இப்போது என்மொழி சம்மதி சம்மதியென்று நான் சொல்லுகிறபடி நீ கேட்பாயானுல் உன் பிள்ளைக்கு இப்போதுதானே பட்டங்கட்டி வைக்கிறேனென்று சொல்லிப் பின்னையும் அவள் ஒரு வார்த்தை சொல்லுகிறாள்: அம்மா! உன் புருஷன் முன்னலே சம்பராசுரன்பேரில் யுத்தத்துக்குப் போனபோது நீ சாரதியாயிருந்து தேர்விட, அவனே ஜெயம் பண்ணின போது உனக்கு இரண்டு வரம் கொடுக்கிறேனென்று சொல்லி யிருந்தாரே அந்த வரங்களில் ஒன்று பரதனுக்குப் பட்டங் கட்டவும், மற்றொன்று இராமனே ஆரணியத்துக்கனுப்பவும் இராஜாவைக் கேட்டால் பூலோகமெல்லாம் உன்மகன் வசமாகும். இதுதான் அதற்கு உபாயமென்று சொன்னுள். அப்படிச் சொன்ன கூனியை மார்புடனே தழுவிக்கொண்டு இரத்தின ஆரங்களும் திரவியங்களும் கொடுத்து, என் மகனுக்கு ராஜ்ஜியமெல்லாங் கொடுத்து இராசாவாகச் செய்தாய். அவனுக்கு நீதான் தாய். இந்த இரண்டு வரமும் எனக்கு இராசா கொடாவிட்டால் அவர் முன்பாகவே என் பிராணனைவிட்டுக் கொள்ளுகிறேன். அதற்குத் திருகில்லை. நீபோவென்று சொன்னுள். கூனி அதிக சந்தோஷத்துடனே தன்னிடத்துக்குப் போனுள். அவள் போன பிற்பாடு கைகேசி புஷ்பமெத்தையை விட்டிறங்கி, கூந்தலி லிருக்கிற புஷ்பமாலைகளெல்லாம் மேகத்திலடங்கிய சந்திரனே யிழுத்து வெளியில் போட்டது போல வண்டுகளெல்லாம் எழும்பிப்பறக்க இழுத்து எறிந்து, தன் கீர்த்தியினுடைய கொடிகளே யறுக்கிறதுபோலத் தன் மேகலாபரணத்தைக் கிண்கிணிகளோடு அறுத்துப் போட்டு, சந்திரனிருக்கிற களங்கத்தைத் துடைத்தாற்போல திலதப்பொட்டை யழித்து, கைவளை இரத்தினபரணங்களை யெல்லாங் கழற்றி யெறிந்து, தலைமயிர் பூமியின்மேல் புரள விரித்துக்கொண்டு,

கண் மை கரைய அழுதுகொண்டு, பூவுதிர்ந்த கொம்பு போலவும், தோகை யுதிர்ந்த மயில்போலவும், தரையிலே விழுந்து புரண்டு, இனி லட்சுமியாகிய சீதை ஆரணியத்துக்குப் போவாளென்று அயோத்தியாபுரியில் அவள் தமக் கையாகிய மூதேவி வந்து பிரவேசித்ததுபோல் விழுந்து கிடந்தாள்.

மந்தரைசூழ்ச்சிப் படலம் - முற்றிற்று.

கைகேசி சூழ்வினைப் படலம்

இவ்வாறு கைகேசி யிருக்க, சூரியன் அஸ்தமித்தவுடனே தசரத மகா ராஜன் இராஜாக்க ளெல்லாருங் கும்பிட்டு வெளியிலே நிற்க, அவள் வீட் டிற்கு வந்தார். அந்தப்புரத்தில் போய் கைகேசியைக் கண்டு, இவளுக்கு இப்படி வரவேண்டிய காரியமென்னவென்று பார்த்து, மதயானையானது துதிக்கையினாலே மானைத்தூக்கி எடுக்கிறாப்போல் தூக்கி யெடுக்க, கைகேசி இராஜாவினுடைய கையைப் பிடித்துத் தள்ளிப்போட்டு மின்னல் துவளு கிறாப்போல் புரண்டு ஒன்றும் பேசாமல் துக்கத்துடனே கோபாவேசமாக யிருந்தாள். இப்படி யிருக்கிற தன் பிராண நாயகியைக் கண்டு அஞ்சி, உனக்கு இப்படி துக்கம் வரும்படி செய்தவர்கள் யார்? அதை நீ சொன்னால் அவர்கள் படுகிறபாடும் நான் செய்கிற காரியமும் பிறகு தெரியுமென்று மிகுந்த அன்புடனே சொல்ல, அந்த வார்த்தையைக் கேட்டு கைகேசி கண்ணி லிருந்து ஜலத்தை முத்து முத்தாய் ஸ்தனங்களின்பேரில் விழத் துக்கித்து, ஐயா! உமக்கு என்னிடத்தில் இவ்வளவு தயை யிருக்கிறதா? நான் சொல்லு தற் கென்ன விருக்கிறதென்று சொன்னாள். அவ் வார்த்தையைக் கேட்டு சக்கரவர்த்தி நகைத்து, ஓ பெண்ணே! உன் பேச்சுக்கும் தடையுண்டோ? நீ என்ன சொல்லுகின்றையோ அதை உன் மகனாகிய ஸ்ரீ ராமன் ஆணைப் படிக்குச் செய்கிறேன் சொல்லென்று இராஜா கேட்க, அதைக்கேட்டு இனி மறுக்கமாட்டாரென்று கைகேசி தைரியமாகி, ஐயா? அவ்வளவு தயை என் னிடத்தில் உண்டானால் தேவர்கள் சாட்சியாகப் பூர்வத்தில் எனக்கு நீர் இரண்டு வரங்கொடுத்திருந்தீரன்றோ? அதை இப்போது கொடுமென்று சொல் லினாள். அக்கால் சக்கரவர்த்தி அவளைத் தழுவி, ஓ மாதரசீ! இதற்கித்தனை சந்தேகமென்ன? இன்றைக்கே வாங்கிக்கொள். என்று கபடமில்லாத மன தையுடைய இராஜன் சொல்லினார். அதற்குக் கைகேசி சொல்லுகிறாள்; ஐயா மகாராஜனே! நீ ரெனக்கு அவ் விரண்டு வரங்களைக் கொடுப்பது நிச்சய மானால் அவற்றுளொன்று என் பிள்ளை பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய் யவும், மற்றொன்று சீதைநாயகனை ஸ்ரீ ராமன் காட்டுக்குப்போகவும் கொடு மென்று துணிந்துச் சொல்லி எதிரே நின்றாள்.

அப்போது அந்த வார்த்தையைக்கேட்ட இராஜன் விஷம் தீண்டி அவ் விஷத்தினால் சரீரம் வெந்து கீழே விழுந்த ஒரு மதயானையைப்போல பூமியில் விழுந்து புரண்டு, மிகவும் துக்கித்து, இப்படி யார் சொல்லுவார்களென்று மனவேதனையோடு கருமாளுலையில் எழும்பும் அக்கினிபோல் பெருமூச்சுவிட்டு,

நாவுலர்ந்து, கண்களில் இரத்தம்பொங்க, ஐம்புலாதிகளும் சோர்வுற, சரீரத்தை விட்டுப்போகிற ஜீவனைப்போல மனம்புழுங்க எழுந்திருந்து திரும்பி பூமியிலே விழுந்து சுவாசமில்லாத சித்திரம்போலத்திகைத்து, இந்தப் பாவியைப் பிடித்து அடித்துக் கொல்லுவோமாவென்று நினைத்து, மறுபடி ஸ்திரீஹத்தி ஆகாதே யென்று பழிக்குநாணி, விஷம் தலைக்கேறினவன்போல அடிக்கடி பெருமூச்சு விட்டு அவளைக் கண்ணால் அடிக்கடி பார்த்து, வேலாயுதத்தி லகப்பட்ட யானை போல் உழைத்துக்கொண்டு துக்கித்தார். இப்படி அவர் துக்கிக்கிறதற்குத் தேவர்கள் கூடக் கிலேசித்து, ஊழிகாலம் வந்ததுபோல நடுங்கினர்கள். கைகேசி அப்படியே பார்த்துக்கொண்டிருந்தாள். இப்படிப் பிராண நாயக னுகிய மகாராஜன் கிலேசித்துப் பிராணனை விடுகிற சரீரம்போலப் பதைக்கிற தையும் கைகேசி பார்த்துக் கொஞ்சமாகிலும் இரக்கம் நாணம் இல்லாமலிருந் தாள். இதனை லல்லவா பெரியோர்கள் ஸ்திரீ ரூபத்தை வஞ்சனை வேட மென்று விளக்கினர்கள். இப்படிக்கு எதிரில் நிற்கிற கைகேசியைத் தசரத மகாராஜன் பார்த்து, நீ ஏதாகிலும் புத்தி மயங்கிச் சொன்னையோ? பின்னை எந்தப் பாவிகளாவது சொல்லக்கேட்டுச் சொன்னையோ? இந்த இரண்டி லொன்று என்னுணையின்படிக்கு நீ நிஜத்தைச் சொல்லென்று ராஜாகேட்க, நான் புத்தி மயங்கிக் தேட்டது மல்ல. எனக்கு ஒருத்தர் சொன் னதுமல்ல. முன் நீர் கொடுத்த வரந்தான். இப்போது கொடுத்தால் வாங் கிக் கொள்ளுகிறேன். இல்லையென்றால் உமக்கு அபகீர்த்திவர உமக்கெதிரில் என் பிராணனை விட்டுக்கொள்ளுகிறேனென்று சொன்னள். இவ்வார்த்தை காதில் விழுந்தும் விழாமலும் இருக்கையில் தானே வெந்த புண்ணில் வேலிட் டதுபோல மனம் நொந்து சுழன்று திகைத்து, ஸ்ரீ ராமனையே தன் பிராண னுகத் தீர்மானித்திருந்தவராதலால் கீழே விழுந்து, அடிபாவி! பாவி!! என் பிராணன் போகின்றதே ஐயையோ! தருமம் பொல்லாது! பொல்லாது!! சொன்னபேச்சு தப்பினாலும் தப்பும் என்று நாவெழாமல் சரீரம் தள்ளாடின வராகி இனிப் பூமியிலே ஸ்திரீக ளென்கிற பூண்டில்லாமல் வாளினாலே வெட்டி அக்கும்பலிலே நாமும் பிராணனை விட்டுக் கொள்வோமாவென்று நினைத்து, கையோடு கையைப் பிசைந்து, உதட்டைக் கடித்து, மெய் பொல்லாதாய் விட்டதே என்ன செய்வோம் என்று மனம் புழுங்கி விம்மி, நெருப்பில் நெய் விட்டதுபோல மனதெரிந்து சோர்ந்து ஒரு யோசனை செய்தார். இவள் இப்படி தானே தம்முடைய பிராணனை வாங்கினாலும், பேச்சை மறுத்தாலும், இராஜா சொன்ன பேச்சு தப்பினனென்று அபவாதம் வந்தாலும் வரட்டும். இவள் பிராணனை விட்டுக்கொண்டாலும் சரி. இவளை நல்ல வார்த்தையினால் இரந்து கேட்டுக்கொள்வோம். இவள்பேரில் என்ன குற்றமிருந்தாலு மிருக்கட்டும். நாம் எந்த விதத்திலாகிலும் காரியத்தைக் கைக்கொள்வோமென்று தைரியம் செய்துகொண்டு ஒரு வார்த்தை சொல்லுகிறார்:

பெண்ணே! உன் மகன் பட்டாபிஷேகம் செய்துகொள்ளுகிறதற்குச் சம்மதிக்கான் சம்மதித்தாலும் ராச்சியங் கொள்ளாது. உலகத்தார் இகழ்ச்சி செய்வார்கள் கீர்த்தியுண்டாகாது. இப்படி அபவாதம் சம்பவிக்கிறதினால் உனக்குத்தான் என்ன பலன் கிடைக்கும்? இராஜாக்கள் இவ்வார்த்தையைக்



கைகேயி தசரதரை இரண்டு வரங் கேட்டதல்.

படம் தெ.

கேட்டால் பிராணனை விட்டு விடுவார்கள். மற்ற பிரஜைகள் சமாசாரம் சொல்லவேண்டிய தென்ன? நீ பிறகு ஆரைக்கொண்டு இராச்சியமாளப் போகிறாய்? இப்போது பட்டாபிஷேகத்துக்கு உத்தேசித்த ஸ்ரீ ராமனே உன் மகனுக்கு இராச்சியத்தை யெல்லாம் கொடுப்பான். என்னுடைய பிராணனைக் கேட்டாலும் இந்த க்ஷணம் கொடுக்கிறேன். ஒழிகுந்த தாதாவா யிருக்கிற கேகயதேசத்து இராஜாவின் பெண்ணே! இந்த இராச்சியத்தை மாத்திரம் கேளாமல் மறந்து விடு. நான் வாயினாலே சொல்லி அந்தப் பேச் சைத் திருப்பி மறுக்கிறதில்லை, என் பிராணன் போய்விடத்தக்க கிலேசமான வார்த்தைகளை யினிமேல் சொல்லாதே. பொல்லாத பேயானாலும் கேட்டவர் களுக்கு வேண்டியதைக் கொடுக்கும். இவ்வளவு நான் கேட்டது நீ கொடுப் பாயாகில் அதனால் தப்பு வராதென்று மிகவும் வருந்திச் சொன்னார்.

இப்படியாகச் சொன்ன இராஜாவைப் பார்த்து கைகேசி கொஞ்சமாகி லும் மனது தடுமாறாமல், நீரெனக்கு வேண்டும்போது இரண்டு வரம் கொடுப்ப தாய் வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறீர். அவற்றை இப்போது தரச்சொல்லிக் கேட்டால் கொடாமல் என் பேரிலுமக்குக் கோபமுண்டானால், இனிப் பூமியில் உம்மைப்போல் சத்தியவந்தர்கள் யாரிருக்கிறார்களென்று சொன்னாள். இவ் வார்த்தை கேட்கவே இராஜனுடைய பிராணன் புழுங்கி அயர்ந்து, பொய் என்கிறதே அறியாத அந்தச் சக்கரவர்த்தி அப்பேச்சையும் பொறுத்துக் கொண்டு இவ்வுலகத்தில் விஷாக்கினிதான் பெண்ரூப மெடுக்கிறதென்று நினைத்து, பின்னு மவளைப்பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறார். அடிமான் விழியே! உன் மகனும் இராச்சிய மாள்வான் நீயுமாள்வாய் இராச்சியமும் உன்வசமாகும். சுகமாயாள். நான் சொன்ன பேச்சு தப்புகிறதில்லை. இராச் சியம் கொடுத்தேன். என் மகனும் என் கண்ணும் என்னுயிரும் மற்ற உயிர் களுக்குக் கிருபா நிதியாயிருக்கிற ஸ்ரீ ராமனை மாத்திரம் இந்த ராஜ்ஜியத்தை விட்டு அப்பால் போகாமலிருக்கும்படி நீ தயை செய்யென்று சொல்லி, பின் னையும் ஒரு வார்த்தை சொல்லுகிறார். அடி பெண்ணே! உண்மையாய் சொல்லுகிறேன். சமுசார சாகரத்தைத் துறந்து நான் நற்கதியடையவேண்டு மென்று நினைத்திருக்கின்றேன். எனக்கு மூப்புமாயிற்று. இந்த வேளையில் அவன் என்னெதிரே ஆரணியத்துக்குப்போனால் நான் பிழைக்கேன். ஆத லால் என் பிராணன் உன் அடைக்கலம் நீயே என்னைக் காப்பாற்றி இரட்சித் துக் கொள்ளென்று இனிய வார்த்தைகளைச் சொன்னார். அதையுங் கேளா மல், அவருடைய கோபத்துக்கும் அஞ்சாமல் மரம்போல மனதையுடையவளாய் அவரைப்பார்த்து, ஐயா! நீர் சொன்ன வார்த்தையைத் தள்ளிப்போட்டால் அது மாத்திரம் நல்ல தருமமா? நீரே சொல்லுமென்று சொன்னாள். இராஜா எப்படியும் ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்குப் போவான். அவன் போனால் நம் முடைய பிராணன் போய்விடுமென்று இடி விழுந்த பர்வதம்போல் குன்றிப் பூமியில் விழுந்து, துக்கமென்கிற சமுத்திரத்திலழுந்தி அதற்கு ஒரு கரை காணுமல், வாய்ப்பேச்சினால் நம்மிட பிராணனை வாங்கினாளேயென்று நினைத்து நினைத்துப் புரண்டு, அடி பாவி! உலகத்தில் ஸ்திரீகளை தங்கள் புருஷனை செத்துஞ் சாகாததற்கு முன்னே தங்கள் பிராணனை விட்டுக்கொள்ளுகிறார்

கள். இப்படி உன்னைப் போல் புருஷனைக் கொல்லுகிற பாவி ஒருத் தரையும் கண்டதில்லை. குற்றம் வருமென்றும், பார்க்கவில்லை. தருமத்தை யும் நினைக்கவில்லை. கடுரமான கோபத்தினால் அருளைக்கொன்று வாய்மொழி யின் அன்பினால் என் பிராணனை வாங்கினாய். இப்பேர்ப்பட்ட நீ எந்த ஜீவனை இரட்சிக்கப் போகிறாய்? ஸ்திரீகளுக்கு நாணம் அச்ச மென்கிறது ஆபரணமென்று சொல்லுவார்கள். நீ ஸ்திரீயானாலல்லவா உன்னிடத்தில் அதுகளிருக்கப் போகின்றது. இந்தக் காரியத்துக்குப் புருஷாள்கூட வெட் கப்படுவார்களே! பூமியிலிருக்கிற இராஜாக்களில் பலத்திலேயும் விவேகத்தி லேயும் எனக்கொருத்தரும் சமானமில்லையென்று மகா பெரியோர்களெல்லாம் என்னைப் பிரக்கியாதியாகச் சொல்லுவார்கள். யானும் தேவருலக மட்டுக்கும் போய் அநேக யுத்தங்கள் செய்து அசுராளை ஜெயித்தேன். இப்படிக்கொத்த நான் ஒரு மனையாட்டியினாலே மாண்டுபோனேனென்கிற அபவாதம் எனக் குண்டாக வேணுமா? எனப் பலவாறுகச் சொல்லி இரங்கி, மிகுந்த துக்கத் துடனே தசரத மகாராஜன் கிலேசப்பட்டு பூமியிலே புரளுகிறபோது, கைகேசி பார்த்து ஐயா ராஜனே! எதுவாகிலும் வரவேண்டிய விதியிருந்தால் தப்பாதே! நீர் அந்த வரங்களைக் கொடுத்தால் என் பிராணனை வைத்துக்கொண்டிருக் கிறேன். இல்லையென்றால் உம்மெதிரிலே என் பிராணனை விட்டுகொள்ளு கிறேன். பூர்வத்தில் உங்கள் பெரியோர்களில் ஒருவர் வாய்பேச்சு நிமித்தம் தன் சரீரத்தை அரிந்து கொடுக்க வில்லையா? நீர் முன்பு வாக்குத்தந்து இப் போது அதற்காக சலிக்கிறது உத்தமமாவென்று சொன்னாள்.

இவளுடைய மனதை நன்றாயறிந்து, இவள்தான் நம்மைக் கொல்லுகிற நமனென்றெண்ணி, அடி பாதகி! அந்த இரண்டு வரமும் உனக்குக் கொடுத் தேன். நானும் தேவலோகம்போய்ச் சேருகிறேன். நீ உன் மகனுடனே இராஜ்ஜியம் ஆண்டுக்கொண்டிருமென்று சொல்லி, அதுவே ஒரு வாளாயுதம் போலத் தசரத மகாராஜன் மனதை யறுக்க, துக்கமென்கிற சமுத் திரத்திலே மூழ்கி மூர்ச்சாக்கிரந்தராய் நித்திரை போனார். அப்போது இரவு என்கிற ஸ்திரீயானவள் இந்தக் கைகேசியின் புருஷனுகிய தசரத மகாராஜன் மிகவும் வருந்தி வருந்திச் சொல்லி மூர்ச்சையடைந் தும் கொஞ்சமாகிலும் இரக்கமில்லாம லிருக்கிறதைக் கண்டு, அவளைப்போல நாமும் ஸ்திரீயாகையால் ஸ்திரீகளெல்லாம் கொடியர்களென்றல்லோ யாவரும் சொல்லுவார்களென்று வெட்கிப் புருஷர் முன்னே நிற்கமாட்டாமல் போய் விட்டாள். பொழுது விடியுங்காலமாயிற்று. இராஜனுடைய துயரத்தைப் பார்த்துக் கோழிகளும் சிறகென்கிற கைகளினாலே வயிற்றிலே அடித்துக் கொண்டு அழுகிறதுபோல் கூப்பிட்டன. உடனே மற்றப் பக்ஷிகளெல்லாம் கைகேசியை வைவதுபோல் சப்தித்துக்கொண்டு புறப்பட்டன. காட்டிலிருக் கும் யானைகள் ஸ்ரீ ராமனுக்கு ராஜ்ஜிய மில்லாதபடியால் நாம் இப்பூமியை விட்டுப் போய்விடுவோமென்று எண்ணி எழுந்தது போலப் புறப்பட்டன. நக்ஷத்திரங்களெல்லாம் ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேக மில்லாதபடியால் போட்டிருந்த முத்துப்பந்தலைப் பிரித்ததுபோல மறைந்தன. அக்கால் பட்ட ணத்திலுள்ள ஸ்திரீகளெல்லாம் இன்றையதினம் ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபி

ஷேகம் ஆகப்போகிறதென்று முழக்கின பேரிகைச் சத்தங்களைக் கேட்டு, மேகத்தைக் கண்ட மயில்கள்போல் சந்தோஷித் தெழுந்திருந்தார்கள். ஸ்ரீ ராமனுடைய பட்டாபிஷேகம் பார்க்கிறதற்கு ஒரு ராத்திரி நடுவே வந்து கெடுத்ததென்று அந்த இராத்திரியை ஊழிகாலம்போலத் தள்ளினவர்களான புருஷர்களெல்லாம், தாங்களும் லோகாதி லோகங்களும் சுகப்படுகிற நாள் இன்றைக்கென்று சந்தோஷத்துடன் எழுந்திருந்தார்கள். மாளிகைகள் தோறும் வைத்திருந்த தீபங்களெல்லாம் கைகேசியினுலே தசரத மகாராசா வுக்கு ஐம்புலாதிகளும் எப்படி ஒடுங்கியதோ அப்படிப்போல் பிரகாசங்கள் மழுங்கி வெளுத்துப்போயின. அல்லிப் புஷ்பங்களெல்லாம் கைகேசியினுடைய நடத்தைகளைக் கேட்ட ஸ்திரீகள் எப்படி வாயை மூடிக்கொள்ளுவார்களோ அப்படிக் குவிந்தன. அப்போது சூரியபகவான் தன்னுடைய வம்சத்திலே பிறந்த பேரனுகிய தசரத மகாராசனுடைய பிராணன் ஒழியும்படி செய்த கைகேசியை வைதுகொண்டு புறப்படுகின்றது போல, இருளைக் கடிந்து மிகவும் சிவந்த ரூபமாக உதயகிரி பர்வதத்தில் உதயமானர். மூவராயும் - மூவரில் முதல்வராயும் - ஆதிமூலமாயும் - லோகமாயும் - தேவாதி தேவனுகிய சாம்பசிவ மூர்த்தியினுடைய வில்லை ஒடித்தவராயு மிருக்கிற ஸ்ரீ ராமனுக்கு இப்பூமியைக் காக்கும்படி பட்டாபிஷேகம் செய்யப்போகிற வேடிக்கையைப் பார்ப்போ மென்று அவாக்கொண்டிருக்கிற அந்நகரத்து ஸ்திரீகளுடைய முகம்போல் தாமரைகள் முன்னுதாக மலர்ந்தன. எங்கும் பேரிகை - மத்தளம் - தாளம் முதலான வாத்தியங்கள் முழங்கிற்று. யாழ் வீணைகள் வாசித்தார்கள். யானை, குதிரை, இரதங்களுடைய சத்தங்கள், மேக கெர்ச்சனைபோல் சப்தித்தன. ஸ்ரீ ராமனுக்கு இன்றைக்குப் பட்டாபிஷேகமென்று பட்டணத்திலுள்ள ஜனங் கள் யாவரும் அதிகச் சந்தோஷத்துடனே அலங்காரம் செய்துகொண்டார்கள். இராஜகுமாரர்க ளெல்லாம் ஸ்ரீ ராமன் தம்பிமார்போலச் சந்தோஷித்துக் கொண்டிருந்தார்கள். பதிவிரதா சிரோமணிகளாகிய ஸ்திரீகள் கௌசலையைப் போல் சந்தோஷித்திருந்தார்கள். பிராமணைத்தமர்க ளெல்லாம் வசிஷ்டரைப் போல் சந்தோஷித்திருந்தார்கள். சாதுஜனங்களா யிருக்கின்ற புருஷாளெல் லாம் தசரத மகாராஜாவைப்போல் சந்தோஷித்திருந்தார்கள். மற்ற இராஜ கூட்டங்களெல்லாம் அமிர்தம் சாப்பிடுதற்குக் கூடிய தேவகோஷ்டிகள்போல் ஸ்ரீ ராமனுடைய பட்டாபிஷேக தரிசனஞ் செய்ய மிகுந்த அன்போடு கூடினர் கள். வீதிகள்தோறும் ஸ்திரீ புருஷாள் நெருங்கி நடவுங்கள் நடவுங்களென்று சொல்லிக்கொண்டு போனவர்கள். திரும்பி வருகிறதற்கு மிகவும் பிரயாசமாய் நெருங்கி நிறைத்தார்கள். இராஜகூட்டம் அதிகமென்பாரும், பிராமணர் அதிகமென்பாரும், ஸ்திரீ கூட்ட மிகுதியென்பாரும், புருஷாளே அதிகமென் பாரும் இப்படியாகச் சொல்லிக்கொண்டார்களே யல்லாமல், ஒருவராகிலும் முழுமையும் தெரியக் கண்டவர்களில்லை. அன்றையத்தினம் ஸ்ரீ ராமனுடைய பட்டாபிஷேகத்துக்கு இலங்கையிலுள்ள இராட்சதரும் அஷ்டகெஜங்களுந் தவிர, மற்ற உலகத்திலுள்ள யாவரும் வந்து நிறைந்தார்கள். இராஜாக்க ளெல்லாம் அநேகங்கோடி சந்திரோதயம்போல் முத்துக்குடைகள் பிரகாசிக்க, அன்னப்பட்சிகள் பறக்கிறதுபோல் வெண்சாமரை இருபக்கத்திலும் வீச, ஒவ்வொருவர் ஒவ்வொரு இந்திரனுக்குச் சமானமாகச் சகலரும் பட்டாபிஷேக

மண்டபம் வந்து சேர்ந்தார்கள். மகா ரிஷிகள் தங்கள் கிருகாசிரமத்தில் தங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பட்டங்கட்டினால் எவ்வளவு சந்துஷ்டியா யிருப்பார்களோ அவ்வளவு சந்தோஷத்துடனே வந்து கூடினார்கள். தேவர்கள் ஆகாயமெங்கும் நிறைந்தார்கள். பூலோகத்தார் யாவரும் எல்லாத் திக்குகளிலும் நிறைந்தார்கள். மங்கள பேரிகை முழக்கினார்கள். இராசாக்களுடைய கிரீடம் - வாகுவலயம் - பதக்கம் - சரப்பளி முதலிய திவ்விய ஆபரணத்தின் காந்திகள் தேவலோகம் வரைக்கும் பிரவேசித்து, இமையா நாட்டம் பொருந்திய தேவர்களுடைய நேத்திரங்கள் கூசி இமைக்கும்படியாய்ப் பிரகாசித்தன. இப்பால் வசிஷ்டமகாமுனி அநேகம் பிராமணர்சூழப் பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய வஸ்துக்களும் கங்கைமுதல் கன்னியாவரையிலுள்ள தீர்த்தங்களும் பூரித்து வைத்து, சிங்காதனமுதலானதுகளுஞ் செய்வித்தார். ஜோசியாள் வசிஷ்டருடனே முகூர்த்தகாலம் சமீபித்திருக்கின்றதென்று சொல்ல, அப்போது வசிஷ்டர் சுமந்திரனுகிய மந்திரியைப் பார்த்து, நீர் போய் சீக்கிரத்தில் இராஜாவை அழைத்துக்கொண்டு வாருமென்று சொன்னார். அப்படியே சுமந்திரன் மிகுந்த அன்புடனே நடந்து சபாமண்டபம் போனான். இராஜாதிராஜனே அவ்விடத்திற் காணுதபடியால் அவ்விடத்திலிருக்கிறவர்களைக் கேட்டுக் கொண்டு கைகேசி வீட்டுக்குப் போய் தாதிகளுடனே சொல்லி அனுப்பி வித்தான்.

அந்தச் செய்தி தாதிகள் சொல்லக் கைகேசி கேட்டு இராமனை இவ்விடத்துக்கு அழைத்துவரச் சொல்லென்று சொன்னாள். அதைச் சுமந்திரன் கேட்டு, அதிக சந்தோஷத்துடனே வீதிகளெல்லாந் தாண்டி, அதிசீக்கிரமாய் ஸ்ரீ ராமனிடத்துக்குப் போய் கண்டு தொழுது வாய் புதைத்துக்கொண்டு சொல்லுகிறான் : சுவாமி! இராஜாக்களும் - மகாரிஷிகளும் - மற்ற ஜனங்களும் அதிக சந்தோஷத்துடனே வந்து நிறைந்திருக்கிறார்கள். தேவரீருடைய சிறிய தாயார் தம்முடைய அரண்மனைக்குத் தங்களை அழைத்துவரச் சொல்லி ஆக்கியாபித்தார்கள் ; கிரீடந் தரித்துக்கொள்ளுகிறதற்குச் சீக்கிரமாய் வாருமென்று சொல்ல, ஸ்ரீ ராமனும் அந்த வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ ரங்கநாதரைத் தொழுதுக்கொண்டு, அநேக ராஜகூட்டங்கள் சூழ்ந்துவர, தேவ கீதங்கள் பாட, தேவர் சந்தோஷிக்க, அநேக ஸ்திரீகூட்டங்கள் வந்து மொய்த்து யிறைந்துக்கொண்டு பார்க்க, இரதத்தின் பேரிலேறி நடந்தார் ; பட்டாபிஷேகம் செய்துகொள்ளுகிறதற்கு ஸ்ரீ ராமர் போகிறாரென்று அநேக ஸ்திரீ புருஷர்கள் ஒருத்தருக் கொருத்தர் முந்தி ஓடிக்கொண்டு, ஆசையுடனே ஆங்காங்கு நிறைந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது ஸ்ரீ ராமன் கைகேசியின் கொடிய வார்த்தையினால் பட்டாபிஷேகம் நின்று ஆரணியம் போகிறதற்கு முன்னமே ஸ்திரீகளுடைய தோளென்கிற மூங்கிலும், கண்ணென்கிற வேலும், முலையென்கிற மலைகளும், நெருங்கியிருக்கிற இந்தக் காட்டில் நடந்தார். அப்போது சந்தனமும் - புஷ்பமும் - கதம்பப் பொடிகளும் வீதிகளில் தூவவேணுமென்று வந்த ஸ்திரீகள் இராமனைக்கண்டு மயங்கி சோர்ந்து, மேகலாபரணத்தையும் வளையல்களையும் நாணத்தையும் தூவிப்போட்டு நிற்கிறவர்களும் ; நம்மிடத்தில் இவருக்கு அன்பில்லையே இவருக்கு இராச்சிய பட்

டாபிஷேகமு மாகுமா? என்கிறவர்களும், சிவந்த கண்ணும் கறுத்த மேனியும், பருத்த தேருமாய் எங்குங் காண்கின்றதே என்று பலவாருக ஸ்திரீகளெல்லாம் இரைந்து நிறைந்து மொய்த்துக் கொண்டார்கள். பின்னு மங்கிருக்கிற இராசாக்களும் பட்டணத்து சனங்களும் சகலருந் தேரின்பேரில் போகிற ஸ்ரீ ராமனைப் பார்த்து, சிலர் இனிமேல் உலகம் பிழைத்ததென்பாரும், அனேகம் ஊழிகாலம் நீர் சுகமாயிருக்க வேணுமென்பாரும், நாங்கள் செய்த தபோபலமெல்லாம் உமக்குச் சித்திக்கக்கடவ தென்பாரும், நீர் நல்லவரானபடியினலே உமக்கு நல்ல காரியம் பலித்ததென்பாரும், இவருடைய திரிநேத்திரங்களுக்குச் சந்தாமரை புஷ்பத்தையும், திருமேனிக்கு மேகத்தையும் உவமானஞ் சொல்லத்தக்கதாக அவைகளென்ன புண்ணியம் செய்ததோவென்பாரும், இந்த ராமனைப்பெற்று நமக்கு நேத்திரானந்தமாகக் காட்டிய தசரதமகாராஜாவுக்குப் பதிலுபகாரம் என்ன செய்யப்போகிறே மென்பாரும் பூர்வத்தில் முதலையின் வாயிலகப்பட்ட யானை ஆதிமூலமே யென்றழைக்க ஓடிவந்து அம்முதலையைச் சக்கரத்தினல் சங்கரித்து அந்த யானையை இரட்சித்த ஸ்ரீமந் நாராயணனுக்கு சமானம் இவருடைய கிருபை யென்பாரும், ஸ்ரீ ராமனைப் பாதாதி கேசவரையிலும் பார்த்து காரணமல்லாமல் இருக்கிறபோதும், கண்ணீர் வழிய நிற்கிறவர்களும், இவருடைய அறிவும் குணமும் சீலமும் தேவர்களுக்குத்தா னுண்டாவென்பாரும், பராபர வஸ்துவே யிவனென்பாரும், பூர்வத்தில் இவர் வம்சத்தில் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்தவனும் தேவர்கள் நிமித்தம் அசுரர்களைச் செயித்தவர்கள் முதலான பேரும் இவன் கீர்த்திக்குப் பின்னிட்டவர்களென்பாரும், அனேக ஆபரணங்கள் - திரவியங்கள் - யானை - குதிரைகள் முதலானதுகளைக் கொண்டுவந்து, சுவாமி! இதை வாங்கிப் பிராமணருக்கும் தரித்திராளுக்கும் கொடுமென்று சொல்லுவாரும், தான்பெற்ற இளங்கன்று வரப் பசுவானது கண்டு மனதுருகுகிறதுபோல உருகி நைந்து பரிவுடனே நிற்பாரும், இவனைப் போலே உலகத்திலே பிள்ளைகள் உண்டாவென்பாரும், நம்மிட வீதியை விட்டுத் துரிதமாய்போய் விடுகிறரென்று அனேக ஆபரணத்தினலேயும் திரவியத்தினலேயும் வீதியைத் தூர்த்து மேடாகிப் போடுவோமென்று நினைத்துச் சொரிவாரும், இந்தப்பிள்ளை தாய் கையிலே வளரவில்லை, கைகேசியே வளர்த்தாள். இப்போது பட்டமுங் கைகேசியே கட்டிவைக்கப் போகிறாள். அவளுடைய மனதையும் சந்தோஷத்தையும் ஒருவராலே சொல்லி முடியா தென்பாரும், இனிப் பாவமும் துக்கமும் வேர்பறிந்துபோமென்பாரும், பூமி பொதுவென்று சொல்லுகிறதை இன்றுமுதல் சொல்லக் கூடாது. இனி யிவரதுதா னென்பாரும், தேவர்களுடைய பகைவர்களையெல்லாம் இவர் ஜெயிப்பாரென்பாரும், இவர் சொன்னபடி கேட்டு இராஜ்ஜிய பாரம் செய்கிற இராஜாக்களுடைய பாக்கியமே பாக்கியம் என்பாரும், இப்படிச் சகலரும் சொல்லிக்கொண்டு சந்தோஷிக்க, ஸ்ரீ ராமன் வீதிகளெல்லாந் தாண்டி சபாமண்டபத்திற்குப் போனர்.

அவ்விடத்தில் தகப்பனுரைக் காணுதபடியால் சிறிய தாயார் அரண்மனைக்குப்போனர். அங்கே யிருக்கிற இராஜாக்கள் ஸ்ரீ ராமனைப் பார்த்து, இவர் முன்னம் பிதாவைச் சேவித்துக்கொண்டு பின்பு பட்டாபிஷேகம்

செய்துகொள்ளுகிறதாய் வந்தார். அதுவுமுத்தமந்தா னென்று சொல்லிக் கொண்டார்கள். ஸ்ரீ ராமன் தகப்பனரிருக்கிற அரண்மனைக்கு வருகிறதைக் கைகேசி கண்டு, இவனுக்கு இராஜா தமது வாயினலே சொல்ல மாட்டார். நாம்தானே சொல்வோமென்று துணிந்து எழுந்திருந்து தனியே நேரில் ஒரு யமன்போல வந்தாள். அவளைக் கண்டவுடனே ஸ்ரீ ராமன் அந்திகாலத்தில் கண்ட பசுங் கன்றைப்போல மனங்களித்துச் சாஷ்டாங்கமாகச் சேவித்து நின்ரூர். அப்படி நின்ற ஸ்ரீ ராமனை இரும்பைப் போல வலிய மனதை யுடைய கைகேசி பார்த்து, அப்பா! உன் தகப்பனர் உமக்கு ஒரு வார்த்தை சொன்னரென்று சொன்னள். அதற்கவர் அம்மா! தகப்பனர் உமக்குச் சொல்ல, அதை நீர் எனக்குச் சொல்ல, நான் அதைக் கேட்க, எவ்வளவு புண்ணியம் செய்தேன். இவ்வளவு பாக்கியம் கிடைத்ததனல் எனக்குச் சமதை யானவர்கள் யார் இருக்கிரூர்கள்? இதைவிட நான் செய்கிற தவத்தில் அதிசய முண்டோ? தகப்பனும் தாயும் நீரே. கிருபைசெய்து சொல்லுமென்று ஸ்ரீ ராமன் வணங்கிக் கேட்க, கைகேசி சொல்லுகிரூள். அப்பா ஸ்ரீ ராமா! சமுத்திரம் சூழ்ந்த பூலோகமெல்லாம் பரதன் இராஜரீகம் செய்யவும், நீ ஜடாதரனய் தவவேடம் பூண்டு ஆரணியத்துக்குப் போய்ப் புண்ணிய தீர்த்தங்களாடிப் பதினன்கு வருஷம் சென்ற பின்பு வரச்சொல்லி இராஜா சொன்ன தென்ரூள். அப்போது ஸ்ரீ ராமனுடைய திருமுகமண்டலம் அப்பொழுது அலர்ந்த செந்தாமரைக் கமலம்போல் பிரகாசித்தது. முன் தகப்பனர் சொன்ன வார்த்தையைத் தள்ளலாகாதென்று இராஜரிய மென்கிற கிலேசத்திற்குச் சம்மதித்திருந்தவ ரானபடியினலே, வண்டியிற் கட்டிய ரிஷபத்தைப் பூட்டி தறித்து விட்டுவிட்டா லெப்படியோ அப்படிபோல் கைகேசி வார்த்தைக்குச் சந்தோஷித்தார். அம்மா! இராஜன் சொல்லாம லிருந்தாலும் உம்முடைய வார்த்தையை நான் மறுப்பேனே? தம்பிக்கு வந்த பாக்கியம் அடியேனுக்கு வந்ததல்லவா? அப்படியே தம்முடைய வார்த்தையைச் சிரமேல் வகித்துக்கொண்டேன். இதோ ஆரணியத்துக்கு நடக்கிறேன். இதுவே உத்தரவாகப் பெற்றேனென்று சாஷ்டாங்கமாகச் சேவித்து, அங் கிருந்தபடியே தகப்பனரிருக்கிற திக்கை நோக்கித் தொழுது நமஸ்கரித்து பூமிதேவியும் இலட்சுமியும் அங்கலாய்க்க கௌசலியினுடைய திருமாளிகைக்கு வந்தார்.

கைகேசி சூழ்வினை படலம் முற்றிற்று.

நகர் நீங்கு படலம்

அக்கால் பட்டாபிஷேகம் செய்துகொண்டு மகன் வருவானென்று எதிர்பார்த்திருந்த கௌசலைக்கு முன்பாக வெண்சாமரை குடை முதலானதுகளில்லாமல் தம்முடைய ஆதிசங்கற்பம்? முன்னே நடக்க, தருமம் பின்னே அழுதுகொண்டுவர தனியே வந்தார். வந்த மகனைக் கண்டு, கிரீடந்தரித்துக் கொள்ளாமல் திருமஞ்சனமுமாடாமல் வந்ததென்னமோ வென்று ஐயமுற்ற கௌசலையம்மனைச் சாஷ்டாங்கமாகச் சேவித்தார். சேவித்த மகனை அன்புடனே வாழ்த்தி, அப்பா! உனது பட்டாபிஷேகத்துக்கு ஏதாகிலும் விகாதமுண்டாயிற்றோ எனக்கேட்க, ஸ்ரீ ராமன் கரங்களைக் கூப்பிக் கொண்டு, அம்மா! உம்முடைய குமாரனும் என் தம்பியுமான பரதனுக்குப் பட்டாபிஷேகமாகுதென்று சொன்னார். அந்த வார்த்தையைக் கௌசலை கேட்டு அப்பா! மூத்தவனிருக்கத் தம்பிக்காவது முறைமையல்ல வென்கிறது ஒன்றல்லாமல், உன்னிலும் பரதன் நல்லவன். அப்படியே ராஜ்ஜியத்தை கொடுத்து அனேககாலம் கூடியிருந்து வாழக்கடவீர்களென்று சொல்லினள். அப்போது ஸ்ரீ ராமன் தாயாருடைய குணாதிசயத்தைக் கண்டு சந்தோஷித்து, அம்மா! இராஜா எனக்கு ஒரு காரியம் சொல்லியிருக்கிறார் அதென்ன வென்றால் பதினாலுவருஷம் ஆரணியத்தில் ரிஷிகளோடு வாசம் செய்து வரச் சொல்லியிருக்கிறரென்றனர். அவ்வார்த்தை யென்கிற தீ கௌசலையின் காதில் விழுந்தும் விழாததற்கு முன்னமே மனந் திகைத்து விம்மி அழுது, பூமியில் விழுந்து அப்பா! உன்னைப் பட்டம் கட்டிக் கொள்ளச்சொல்லி இராஜா சொன்னது வஞ்சகமோ? அல்லது விஷமோ? யாதோ என் பிராணன் இனிமேலிராதே, என்னுயிர் நடுங்குகிறதே என்று சொல்லிக் கைகளை நெரித்து, தன் பிள்ளையிருந்த ஆலந்தளிருக்குச் சமானமான வயிற்றைத் தங்கக்கடகமிட்ட கரங்களினால் பிசைந்து பெருமூச்சுவிட்டு, மனம் புழுங்கி விம்மி, இராசாவினுடைய கிருபை நன்றாயிருந்ததென்று நகைத்து மகனை நன்றாய்ப்பார்த்து, அப்பா நீ ஆரணியத்துக்கு என்றைக்குப் போகிறதென்று சொல்லித் திரும்பியும் பூமியில் விழுந்து, ஜீவனை விடுகிற சரீரம்போலப் பதை பதைத்து, கிருபாநிதியான இராசாவுக்கு நீ என்னபிழை செய்தாயென்று சொல்லி ஏங்கி, மிகுந்த தரித்திரனுக்கு அதிக திரவிய மகப்பட்டு உடனே அதை யிழந்தாலெப்படியோ அப்படிபோல் கிலேசித்து, தருமமென்கிறது என்னிடத்திலில்லையோ ஆ தெய்வங்களே! என்னிடத்தி லிப்படியா செய்தீர்களென்று பலவாறாகச் சொல்லித் துக்கித்து, கன்றைப்பிரிந்த பசுபோல மனங் கலங்கினள். இவ்வாறு கிலேசப்படுவதை ஸ்ரீ ராமன் கண்டு, அம்மா! என் தம்பி இராச்சியமாள யான் தகப்பனாரைப் பொய்யில்லாதவராக்கி ஆரணியவாசஞ் செய்யும்படியாய் எனக்குறுதி யுண்டாயிற்று. சரீரம் எடுத்ததற்கு இதைப்பார்க்கிலும் பாக்கியம் வேறென்ன இருக்கின்றது? ஆகாயம் - பூமி - சமுத்திரம் மற்ற ஐம்பூதங்கள் அழிந்துபோனாலும், இராஜாவினுடைய வார்த்தையை நான் மறுக்கப்போகுமா? ஆதலால் அம்மா! நீ கிலேசிக்கவேண்டாமென்று தேறுதலைச் சொன்னார். அதற்குக் கௌசலை ஸ்ரீ ராமனைப்பார்த்து,

அப்பா! இராஜாவினுடைய ஆக்ஞையின்படி நீ போகவேண்டாமென்று நான் சொல்லவில்லை. உயிரை விடமாட்டாமல் தாங்கிக்கொண்டிருக்கிற என்னையுங் கூட அழைத்துக்கொண்டு போவென்று சொல்லினள். அதனை ஸ்ரீ ராமர் கேட்டு, அம்மா! இராஜா என்னைப் பிரிந்தவுடன் துக்கசாகரத்தி லழுந்தியிருப் பர். அப்படி யிருப்பவரோடு கூட நீரிருந்து அவருக்குத் தைரியஞ் சொல்லிக் கொண்டு யிருக்கவேணுமே யல்லாமல், என்னுடன் ஆரணியத்துக்கு வர நினைக் கிறது உத்தமமா? நீர் தருமம் பார்க்கவில்லையா? என் தம்பி இந்த இராஜ்ஜி யத்துக்கு இராஜாவான பிற்பாடு இராஜாதிராஜனவர் இல்லறத்தை விட்டுத் துறவறத்தை யடுத்துத் தவஞ் செய்யப் போகின்றார். அந்நாளையில் நீரும் கூட யிருந்து விரதங்களை யனுசரிக்க வேண்டுமாதலால், நீர் கிலேசித்து மனந் திகைக்க வேண்டிய காரியமென்ன? தேவர்களும் தபம் செய்தல்லவோ பெரி யவரானர்கள். ஆகிலும் இந்தப் பதினலு வருஷமும் எனக்குப் பதினலு பக லல்லவா? அம்மா! முன்னலே கௌசிகமகாரிஷியின் பிறகே மகாராஜா ஆக்ஞையின்படிக்கு யான் போனதினலல்லவா அனேக மந்திரங்களும் சிரே யஸ்கரங்களும் உண்டாயிற்று! அதை நீர் மறந்துபோனீரா? ரிஷியீஸ்வரா ளுக்கு மனதுவர நடந்துகொண்டு, அவர்கள் அனுக்கிரகமும் பெற்றுக் கொண்டு, என்னிடத்தில் தேவர்களுக்கும் அபேக்ஷ யுண்டாகும்படியாய் வருகிறேன். அதுவும் இருந்து பாரும். முன்னலே சகராள் பிதா வார்த்தை யைக் கேட்டு இந்தச் சமுத்திரத்தைத் தோண்டி தங்கள் சரீரங்களைத் தியாகம் செய்தார்கள். அக்கீர்த்தி இன்னமு மிருக்கின்றதே. கையில் மழு வாயுதம் பிடித்த பரசுராமனும் தகப்பன் பேச்சைக்கேட்டுத் தாயாரைச் சங் கரிக்கவில்லையோ? என்றிப்படியாகத் தாயாருக்குத் தைரியம் பிறக்கும்படி யான அனேகம் தேறுதலையை ஸ்ரீ ராமன் சொல்லவும், இவனைப்படியும் ஆர ணியத்திற்குப் போகிறதற்கே சித்தமா யிருக்கிறான். ஆதலால் இராச்சியம் பரதனளவும் இவன் காட்டுக்குப்போகாமற் பட்டணத்திலிருக்கவும் ராஜாவுக்கு நாமே போய்ச் சொல்லுவோ மென்று எண்ணிக்கொண்டு தட்சணமே இராஜா யிருக்கிற இடத்துக்குப்போயினள். அப்படி போகின்ற தாயாரை நமஸ்கரித்து, சுமத்திரைக்கு இச்சேதி தெரிவித்தால் தாயாரைத் தேற்றித் தைரியஞ் சொல்லுவாளென் றெண்ணி அவள் அரண்மனைக்கு ஸ்ரீ ராமன் போயினர். இப்பால், கௌசலை, கைகேசியின் அரண்மனைக்குப் போய் அவ் விடத்தில் இராஜன் மூர்ச்சையாய் பிரக்ஞைதப்பி யிருக்கிறதைப் பார்த்து, ஜீவன் போய்விட்ட சரீரம்போல் பூமியில் விழுந்து, சுவாமி! என்னைப் பிரிந்து போகிறீரா? பெரியவர்களுக்கு இது உத்தமமா? நீதியா? அடியேனை நினைக்க வில்லையா? ஆ! என்னுடைய அறிவே! நீர் இப்படி ஆகிறது அறிந்துதானே பிள்ளைக்குப் பட்டங்கட்ட வேண்டுமென்று யோசனை செய்தீர்? ஓ இராஜாதி ராஜனே! தரித்திராளுக்குத் தனமே! ஓ பூலோகத்தாருக்குத் தவமே! ஓ பாக்கியத்துக்குப் பாக்கியமே! ஓ கல்விக்கடலே! ஓ வேதசாரமே! ஓ கருணை லயமே! இப்படி யழுகிற என்னை ஏனென்றுதான் கேட்க லாகாதா? இது உமக்கழகா? நீர் ஜீவனில்லாத சரீரம்போ லாக் வேண்டிய காரணமெனக்குத் தெரியச் சொல்லலாகாதோ? ஐயையோ! எனக்குத் தெரியவில்லையே! அப்பா மகனே! தகப்பனுருடைய கதியைப் பார்க்கிறதற்காகிலும் வாராயா? என்று

அழுதனள். இப்படி கௌசலாதேவி வந்து அழுகிற சத்தங்கேட்டவர்கள் வெளியிலே சொல்ல அதைச் சபையிலே கூடியிருந்த இராஜ கூட்டங்கள் கேட்டு வசிஷ்ட மகாமுனியைச் சேவித்து, சுவாமி! என்னமோ அதிசயம் உண்டாயிருக்கின்றதுபோல் காண்கிறது. தாங்கள் விஜயஞ்செய்து அறியுங்க ளென்று சொன்னார்கள். அந்த க்ஷணமே அவர் கைகேசியின் வீட்டுக்கு வந்து இராஜாவைப் பார்த்து, இராஜா இறந்தவரல்ல. இறவாமலிருக்கிற வரு மல்ல. இப்போது மூர்ச்சையா யிருக்கிரரென்று தெரிந்துகொண்டு கைகேசி யின் முகம் துக்கமில்லாமலிருக்கிறதையுங் கண்டு, இவள் இராஜாவினிடத்தி லிருந்த அன்னியோன்யத்தை யோசித்துப் பார்த்தால் இப்போது இவள் ஜீவனை விட்டுக் கொள்ளவேண்டுமே இவள் கடினசித்தமா யிருக்கவேண்டிய காரணம் யாதென்று ஆலோசித்து, ஒருவர் மனது ஒருவருக்கு எப்படித் தெரியு மென் றெண்ணி அங்கலாய்த்துக்கொண் டிருக்கிற கௌசலையைத் தேற்றி, தம்மைச் சேவித்த கைகேசியையும் நோக்கி, இராஜாவுக்கு இப்படி வந்த தென்னவென்று கேட்டனர். அதற்கிவள் தன்னுலே வந்த செய்திகளெல்லாம் வசிஷ்டருக்குத் தெரியச் சொன்னள்.

அதுகேட்டுத் தாமரைக்கமலம்போ லிருக்கிற தம்முடைய கைகளினுலே இராஜாவை வாரி யெடுத்து, ஐயா மகாராஜனே! நீர் சகலமும் தெரிந்தவராச் சுதே. நீர் இப்படி கிலேசிக்கலாமா? அவள் உன் பிள்ளைக்கு இராஜ்ஜியங் கொடுப்பாள். துயரப்படாதேயும் என்று சொல்லிச் சரீரத்தைத் தடவிக் கொடுத்து, சந்தனம் பன்னீர் முதலியவைகளை வீசும்படிக்கு ஆக்கியாபித்து தம்முடைய மார்பிலே அவரை யணைத்துக்கொண்டு இன்சொல்லாகச் சொல்லி னர். அப்போது கைகேசியின் வார்த்தையென்கிற விஷமேறி மயங்கிக்கிடந்த தசரதர் ஸ்ரீ ராமனை நினைத்துக்கொண்டே யிருந்தபடியினுலே, அந்த விஷம் திரும்பி ஜீவனைக்கண்டார். அதுகண்டு வசிஷ்ட மகாமுனி, ஓ இராஜாவே! துயரப்படாதேயும். துயரத்தை விட்டுவிடும், உன் பிள்ளை இராமனை இராஜ் ஜியபாரம் செய்யும்படி கைகேசி வரம் கொடுப்பாள். அவன் மகுடஞ் சூடாமற் போனுல் நாம் யாரிருக்கப் போகிரோமென்று சொல்லினர். அதுகேட்டு இராஜா, ஸ்வாமி! அடியேனுக்குச் சரீராரோக்கியம் தெருங்கிற்று. இந்த வேளை யில் ஸ்ரீ ராமனுக்குப் பட்டங் கட்டுகிறேனென்று அவனை ஆரணியத்துக் கனுப்பும்படியாயிற்று. என் வார்த்தையும் பிசகாமல், உலக அபவாதமும் வாராமல் தேவரீர் என் பிராணனையுங் காத்துக்கொள்ளுமென்று சொல்லினர். இவ்வாறுக அரசன் சொல்லியதைக் கேட்ட வசிஷ்ட மகாமுனி அன்புடனே கைகேசியைப் பார்த்து, ஓ மகா லட்சுமிக்குச் சமானமானவளே! உன் பிள் ளைக்கு ராஜரீகமும், உலகத்துயிர்களுக்குப் பிராணனும், உன் புருஷனுக்கு ஜீவனும் கொடுத்து கீர்த்தி சம்பாதித்துக் கொள்ளென்று சொன்னர். அந்த வார்த்தையைக் கேட்ட கைகேசி விம்மி அழுது கீழே விழுந்து, இராஜா பேச் சுத் தப்பினுல் நான் பூமியில் ஜீவனுட னிருக்கிறதில்லை. அவர் பேச்சுத் தப்பி னலும் நான் பேச்சுத் தப்புவேனே? ஒரு காலத்திலும் தப்பேன். அவர் தப்பு வாராயின் எனது பிராணனை விட்டுக்கொள்ளுகிறே னென்று சொன்னள். அப்போது வசிஷ்ட மகாமுனி சொல்லுகிரர்: அம்மா கைகேயி! உன் புருஷன்

சாவானென்றும், இந்த வார்த்தை உலகத்தாருக்குச் சம்மதிப்படாதென்றும், அபகீர்த்தி வருமென்றும் எண்ணிப் பார்த்து இந்தக் காரியத்தை நீ விடவில்லை. சொன்னலுங் கேட்கிறதுமில்லை. நானினிமேல் உனக்கென்ன சொல்லப் போகிறேன்? புருஷன் போய்விடுகிறானென்கிற இரக்கமும் கிலேசமும் இல்லாமல் இப்படிச் சொல்லுகிறையே. நீ என்ன நெருப்பா? விஷமா? பேயா? பாவி! இராஜாவுக்கு நீயென்ன பகையாளியா? இப்படி நிஷ்கண்டகமாய் இராஜா சொல்வதற்கு முன்னே நீயே ஸ்ரீ ராமனை ஆரணியத்துக்குப் போகச் சொன்னாய். அவன் அந்தட்சணமே புறப்பட்டான். உனக்கு மிஞ்சின பொல்லாதவர்கள் இராஜ்ஜியத்திலே ஒருவரையுங் காணேனென்றார். இந்த வார்த்தைக ளனைத்தையும் தசரத மகாராஜன் கேட்டு, கண்ணை விழித்துக் கைகேசியைப் பார்த்து, அடிபாவி! என்மகனை காட்டுக்குப் போகச் சொல்லி விட்டாயா? அவனும் போனனே? என் கண்ணனை ஸ்ரீ ராமனை ஆரணியத்துக்குப் போகும்படியாய்ச் செய்தால் உன் பிள்ளைக்குப் பட்டங் கட்டுகிறபோது அவனுக்குக் கையிலே கங்கணங் கட்டவேணுமே அதற்கு உன் தாலிக்கயிற்றைத்தான் கட்டவேண்டியதாய் வரும். அனேகநாள் உன் வாயினுடைய விஷத்தைப் புசித்து வந்தேன். ஆகையால், அது என் பிராணனை வேரோடே விழுங்கிவிட்டது. பூர்வத்தில் நான் உன்னை அக்கினிசாட்சியாய் பெண்சாதியாகத் தேடிக்கொண்டது ஒரு கூற்றுவனைத் தேடிக் கொண்டது போலாயிற்றென்று சொல்லிப் பிரலாபித்தார். இதைக் கேட்டும் கொஞ்சமாகிலும் இரங்காமலிருந்த கைகேசியை இராஜா வெறுத்து வசிஷ்ட மகாமுனியை நோக்கி, சுவாமி! இந்தப்பாவி எனக்கு ஸ்திரீயுமல்ல, இராஜ்ஜியம் ஆளவருகிற பரதன் எனக்குப் பிள்ளையுமல்ல அவன் என்னுடைய உரிமையான அபர கருமங்களுக்கும் பாத்திரனல்ல வென்று சொல்லித் தம்மிட சமீபத்தில் அழுதுக் கொண்டிருக்கிற கௌசலையைப் பார்த்து, என்னைக் கண்டு கொள்ளாமற் போனவன் உன்னையும் காணவில்லையோ? என்று கண்களில் தாரை தாரையாய் ஜலத்தைப் பெருக விட்டுத் துக்கித்தார். அப்போது கௌசலை பிள்ளையைப் பிரிகிற துயரத்தையும் புருஷனுடைய வருத்தத்தையும் கண்டு ஆலோசித்து, இந்த வஞ்சனை கைகேசி செய்ததென்று தீர்மானித்துக்கொண்டு, மகாராஜா கொடுத்த வரத்தை தப்பமாட்டாமல் வருந்தி மூர்ச்சித்திருக்கிறானென்று அறிந்து, இராஜாவுக்குத் தேறுதலைச் சொல்ல நினைத்தவளாகி, ஸ்ரீ ராமன் திரும்பினனென்று சொல்லாமற் போனல் இராஜன் தேறுகிறதில்லை. அல்லது அப்படிக்கே சொன்னல் அபத்தமாகிறதென்று எண்ணி மனஞ்சோர்ந்து, சுவாமி! மகனுடைய வாஞ்சையினலே சத்தியத்தைவிட்டு இப்படி கிலேசிக்கிறது தேவரீருடைய பிரதாபத்துக்கும் கீர்த்திக்கும் தகுமா? உலகம் சம்மதிக்குமா? மகன் திரும்புவான். நீர் வருந்த வேண்டாமென்று கௌசலை சொல்ல, அவ் வசனத்தைக் கேட்ட தசரதமகாராஜன் மிகுந்த ஆவலுடனே கண்களை விழித்துப் பார்த்தார். அப்போது இவருடைய வருத்தத்தையும் பிள்ளையின் பேரில் வைத்திருக்கிற வாஞ்சையையும் நன்றாய்க் கௌசலை தெரிந்துகொண்டு, ஐயோ! அவனுடைய எண்ணத்தைப் பார்த்தால் ஆரணியத்துக்குப் போகாமல் இருக்கிறதில்லை இவருடைய நிறுவாகத்தைப் பார்த்தால் இறந்துபோகாமலிருக்கிறதில்லை. ஆ! இதென்ன?

தெய்வமே! இப்படியாக வந்து மூண்டதாவென் றெண்ணிக் கொண்டாள். அப்போது சக்கரவர்த்தி தம்முடைய நிமித்தியம் கௌசலை தைரியமாய்ச் சொல்லுகிறளென்று அக்கருத்தின் குறியை யறிந்து, எப்படியும் ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்குப் போய்விடுவானென் றெண்ணி, ஓ மகனே! ஸ்ரீ ராமா! என்னுடைய சரீரம் நீரூயுருகிப் பூமியில் விழுந்து கிடக்கின்றேன். இந்தக் கண்ணீரையாகிலும் வாரி எனக்கு உண்ணும் உதகமாய் விட்டு உன் கடனைக் கழித்து நீ காட்டுக்குப் போகாயா அப்பா மகனே! இராஜாக்களை மூவேழு இருபத்தொரு தலைமுறை கருவறுத்த மழுவாளியாகிய பரசுராமனை ஜெயித்த உனக்கு முடி சூட்டுகிறேனென்று சொன்ன பாவியாகிய நான். உடனே உனக்குச் சடைமுடி தரிப்பித்த பாவியென்று இந்த விருத்தாப்பிய காலத்தில் என்னை வெறுத்துவிட்டுப் போய்விடுகிறையோ? அப்பா மகனே! இனி நான் ஜீவனை வைத்துக்கொண்டிறேன்! ஓ திரிபுராதிகளைத் தகனம் செய்த சாம்பசிவ மூர்த்தியினுடைய வில்லை யொடித்த ஸ்ரீ ராமா! ஓ கீர்த்தியையுடையவனே! மெய்க்கு மெய்யானவனே! என் கண்முன்னே நீ வனத்துக்குப் போக நான் தாளமாட்டேன். உனக்கு முன்னே இதோ நான் தேவலோகம் போகிறேன். நான் மிகவும் இளநெஞ்சன். உன்னுடைய ஆசையினாலே ஆவி கழன்றுபோகிற சரீரத்தை யுடைத்தா யிருக்கின்றேன். நான் உன்னைப் போல தயிரியஸ்தனல்ல. அப்பா ஸ்ரீ ராமா! ஜனகன் குமாரத்தியைப் பாணிக்கிரகணம் செய்துகொண்டு அவள் கரத்தைப் பிடித்துக்கொண்டு போகக்கண்ட என் கண்ணினாலே நீ ஆரணியம் போகப் பார்க்க மாட்டுவேனா? உன்னைப் பிரிகிறதற்கு உலகஞ் சம்மதித்தாலும், தேவர்கள் சம்மதித்தாலும், உன்னைப்பெற்ற அருமை நான் அறிவேன். ஆதலால் நான் சம்மதிக்கேன்! இராஜ்ஜியமும் இராஜரீகமும் திரவிய முதலானதுகளைக் கள்ளியாகிய கைகேசிக்குக் கொடுத்து கீர்த்தி சம்பாதித்த பிரதாபம் என்னுடைய பிராணனை வாங்குகின்றதே! ஓ என்னுடைய கீர்த்தியும் என் னுயிருமான ஸ்ரீ ராமா! சுவர்க்கம் மத்தியம் பாதாளமென்கிற மூன்று லோகத்திலேயும் உன்னையே தோத்திரம் செய்கிறார்களே! பரசுராமனை ஜெயித்தவனை யார் தான் தோத்திரஞ் செய்யாதவர்கள்? நீ காட்டுக்குப் போனையென்று கேட்டுஞ் சாகாம லிருப்பேனாகில் என்னைப்போல வன்கண்ணர் யாரிருக்கிறார்கள்? உன்னைக் காட்டுக்குப் போகச்செய்த இந்தக் கைகேசியைக் கொல்லாமல் நானும் இந்தப் பூமியிலிருந்தால் என்னுடைய கீர்த்திதானென்ன? மகா லட்சுமியும் பூமியும் உன்னைப் பிரிந்து பிழைக்கமாட்டார்களே! நான் சாகாமல் உன்னை விட்டுப் பிரிந்திருந்தேனால் இந்தக் கைகேசியைப்போல நானும் பாவியாய்ப் போவேனே! ஆபரணங்களும் கிரீடமும் இரத்தின சிங்காதனமும் முத்துக் குடையும் கொடுத்துக் கண்களால் பார்க்க விருந்த நான், நீ மரவுரியும் மான் தோலுமாகப் போவதைக் காணமல் போய்விடுகிறது நல்லதல்லவா! அடா என் கண்ணே! கண்மணியே! என்று பலவாறுகச் சொல்லி மனம் நொந்து, கண்களில் நீர் பெருகக் கிலேசித்திருக்கின்றார். இப்படிக் கிலேசித்திருக்கிற ராஜாவை வசிஷ்ட மகாமுனி பார்த்து, ஐயா! நீர் விசனப்பட வேண்டாம். நான் ஸ்ரீ ராமனிடத்திற்குப் போய் அவனுக்குத் தெரியச் சொல்லி ஆரணியத்துக்குப் போகவொட்டாமல் நிறுத்துகிறே னென்று எழுந்து நடந்

தார். அதைக் கண்ட இராஜன் தன்னுயிரைச் சற்றுநிறுத்தி, இவர் போய்ச் சொன்னல் எப்படியும் கேட்பானென்று தன்னை மறந்து நித்திரை செய்தார்

கௌசலை அதுகண்டு, இராஜன் இறந்துபோனரேவென்று துக்கித்து, சுவாமி இராஜாதிராஜனே! இது தருமமா? இப்படி சோர்ந்து பிராணனை விடுகிறது யுத்தமமா? வசிஷ்டர் போனபடியால் ஸ்ரீ ராமன் வந்தாலும் வருவானென்று சொல்லி அழுதுக்கொண்டு தன் கரத்தினலே இராஜாவினுடைய முகத்தையும் மார்பையும் திருவடிகளையும் வருடினள். அப்போது இராஜன் கொஞ்ச மயக்கம் தெளிந்து கண்களை விழித்து, கௌசலையைப் பார்த்து, மகன் வருவானு? என்று சொல்லி, இந்தப் பாவியாகிய கைகேசி கூனியின் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு தன்னுடைய பேச்சினலே என் பிராணனை வாங்குகிறதற்குத் துணிந்தாள். அன்றியில், தானும் தன் மகனும் இராஜ்ஜிய பாரம் பண்ணுகிறதற்காக எந்தன் மகனைக் காட்டுக்குப் போவென்றும் சொன்னுள் என்று சிந்தாக்கிராந்தராய் அக் கௌசலையைப் பார்த்துப் பின்னையும் ஒரு வசனம் சொல்லுகிறார். அடி பெண்ணே ஸ்ரீ ராமன் ஆரண்ணியத்துக்குப் போகாமலிரான். என் பிராணனும் போகாமலிராது. ஏனெனில் பூர்வத்தில் ஒரு மகாரிஷியின் சாபம் நேரிட்டிருக்கின்றது. அதின் வரலாற்றைச் சொல்லுகிறேன் கேளென்று தசரத மகாராஜா சொல்லுகிறார்.

பூர்வத்தில் நான் ஆரணியத்தில் யானை வேட்டைக்குப் போய் யானைகளைத் தேடிக்கொண் டிருக்கையில், அம்பும் வில்லுமாக ஒரு நதியின் தீரத்தில் மறைவாக யிருந்தேன். அவ்விடத்தில் ஒரு ரிஷியும் அவர் பத்தினியும் நேத்திரமற்றவர்களாய் மிகவும் விருத்தராய்த் தபஞ்செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய குமாரனொருவன், அவர்கட்கு ஜலம் நிமித்தியமாய் அந்த நதியில் வந்து கமண்டலத்தினுல் ஜலம் மொள்ளுகிற சத்தம் யானை ஜலம் சாப்பிடுகிறதுபோல் எனக்குத் தோன்ற, உடனே ஓர் அஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்தேன். அது அந்த ரிஷி புத்திரன் பேரில் பட்டது. உடனே அவர் பூமியில் விழுந்து பதைபதைக்கிறது மனித சத்தம்போலக் கேட்கவே, நான் மிகவும் பயந்து நடுநடுங்கி அந்தப் பிராமணப் பிள்ளையினிடத்தில் போய் அவரைப் பார்த்து, என் கரத்திலிருந்த அம்பையும் வில்லையும் பூமியிலெறிந்து விட்டு, நானும் விழுந்து அங்கலாயிற்றெழுந்திருந்து, நீர் ஆரையா வென்று கேட்டேன். அந்த ரிஷி குமாரன் சொல்லுகிறான். கேளும் மகாராஜனே! நான் சதுர்முகனுல் சிருஷ்டிக்கப்பட்ட நால்வகை வருணத்திலும் முதன்மையாகிய பிரம்மகுலம். அந்தப் பிரமதேவன் வழியில் அவதரித்த காசிபருடைய மைந்தன் விருத்தசேனன். அவருடைய பிள்ளை ஜலபோசன்; அவருடைய பிள்ளையாகிய யான் சுரோசனன். என் தாயும் தகப்பனும் கண்ணில்லாதவர்கள். விருத்தர்கள். அவர்கட்கு ஜலம் கொண்டுபோகிற நிமித்தம் இவ்விடம் வந்தேன். வந்தவிடத்தில் இப்படியாயிற்று. நீர் தெரியாமல் யானையென்று எய்தீர். என்னுடைய விதியும் இப்படிக்கு இருந்ததென்று சொல்லி என் தாய் தந்தைகள் நான் வரும்போதே மிகவும் தாகமா யிருந்தார்கள். அவர்கட்கு இந்த ஜலத்தை நீர் கொண்டுபோய்க் கொடுத்து, என்னுடைய ஆபத்தும், மரண

மும் நமஸ்காரமும் நீர் சொல்லுமென்று சொன்னர். உடனே தேவர்கள் அவரெதிரில் வந்து அழைக்க, அவரும் தெய்வலோகம் போய்ச் சேர்ந்தார். தமது பிள்ளை தாகத்துக்குச் சலங்கொண்டு வருவானென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறவர்க ளிடத்திற்கு நான் அந்தக் கமண்டல தீர்த்தத்தைக் கொண்டுபோய்க் கொடுத்தேன். அவர் அப்பா மகனே! நீ வர இன்னேர மேன்? உன்னைக் காணுமல் மிகவும் மனம் நொந்தேன். உன்னைத் தழுவிக் கொள்ளவேணும். சமீபத்தில் வாவென் றழைத்தார். அப்போது நான் மிக வும் பயந்து, ஐயா! நான் ஒரு அரசன். அயோத்தியிலிருக்கிறது. யானையின் வேட்டை நிமித்தம் ஆரணியத்துக்கு வந்தேன். உம்முடைய புத்திரன் நதியி லிறங்கித் தண்ணீர் மொண்டார் அந்தச் சத்தத்தை யானை நீருண்ணும் சத்த மென்றெண்ணி, மறைந்திருந்த யான் கண்ணுல் பாராமல் அம்பைவிட்டேன். அதுபட்டு அவர் அலறுகிறபோது, இது யானைக்குரலல்லவே; என்ன பாவம் வந்து சம்பவித்தது என்று ஓடிவந்து பார்த்து அங்கலாய்த்து நீர் ஆரென்று கேட்டேன் அவர் கிருபையுடனே தங்களுடைய சமாசாரஞ் சொல்லி, உங்க ளுக்கு நமஸ்காரஞ் செய்தார். அப்போது அவரைத் தேவர்கள் வந்தழைத்துப் போனர்கள். சரீரம் பூமியில் விழுந்தது. நான் கண்ணுற் பாராமல் கமண்டல ஜல சத்தத்தைக் கேட்டு யானையென்று அம்பு யெய்தேன்.. ஆதலால் அடி யேன்பேரில் கோபஞ் செய்யாமல் பொறுத்து இரட்சியுங்களென்று சேவித்துக் கொண்டேன். அவ் வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் பூமியில் விழுந்து அழுது புரண்டு, இன்றைக்குத்தான் கண்ணிழந்தோமென்று துக்கசாகரத்தில் மூழ்கி, ஐயோ! நீ தெய்வலோகம் போனது நாங்களறியோம். நாங்களும் உன் பின்னேடே இதோ வந்தோம் வந்தோமென்று வெகுவாய்ப் பிரலாபித்தார்கள், அப்போது நான் அவர்களைச் சேவித்துக்கொண்டு, இன்றுமுதல் உங்களுக்கு நான் பிள்ளை; நீங்களிட்ட ஏவலைச் செய்துகொண்டிருக்கிறேன். ஒன்றுக்கும் நீங்கள் கிலேசிக்கவேண்டாம், துயரத்தை விட்டுவிடுங்களென்று மிகவும் சொன் னேன். அதற்கு அந்த ரிஷி, ஓ இராஜாவே! என் பிள்ளை போயும் என் பிரா ணனை ஆசரித்துச் சாப்பிட்டுக்கொண் டிருந்தால், உலகத்தார் என்ன சொல் லுவார்கள்? நாங்களும் தெய்வலோகம் போய்ச் சேருகிறோம். நீர் ஒன்றைக் கண்ணுல் பார்த்தறிந்து அம்பு எய்யாதபடியால் நீரும் எங்களைப்போலவே பிள் ளையைப் பிரிந்து அந்தச் சோகத்தினுலே தெய்வலோகம் போய்ச் சேருவீ ரென்று சொல்லி அவர்களிருவரு மிறந்துபோனர்கள். ஆதலால், அந்த மகா ரிஷியின் வாக்கியமும், ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்குப் போவதும், என் பிரா ணன் தெய்வலோகம் அடைவதும் தப்பாதென்று சொல்லி முடித்தனர். அப் போது வசிஷ்டமகாமுனி அங்கிருந்து புறப்பட்டு, இராஜசபைக்கு வந்தார். அவ்விடத்திலிருந்த இராஜாக்கள் மந்திரிகள் முதலான பேரும் வசிஷ்டரைக் கண்டு, இராஜா என்ன காரணத்தினுல் வெளியில் வரவில்லை. அழுகுரல் கேட் கின்றது. ஏதாவது அதிசயங்க ளுண்டோ? தேவரீர் தெரியச்சொல்லவேண்டு மென்று கேட்டார்கள். அதற்கு வசிஷ்டர் அவர்களை நோக்கி, பூர்வத்தில் இராஜா கைகேசிக்கு இரண்டுவரம் கொடுத்திருந்தாரே, அவைகளில் ஒன்று பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவும், மற்றொன்று ஸ்ரீ ராமன் ஆரணியத் துக்குப் போகவும் கைகேசி கேட்டுக்கொண்டு உத்தரவு செய்தாள். இரா

ஜாவினுடைய வார்த்தையினுலேயே கைகேசி புத்திரனுகிய பரதன் இராச்சிய பாரம் செய்யப் போகிறதாகவும், ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்குப் போவதாகவும் இருக்கிறது என்று சொல்லினர். அது கேட்ட அந்த ராஜாக்களும், மந்திரி களும், மற்றுமுள்ள வேத வேதியர்களும், ஸ்திரீகளும் தசரத மகாராஜாவைப் போலவே பூமியில் விழுந்தழுதார்கள். எங்கும் அழுகுரலோசை மிகுந்தது. புண்ணில் கோலிட்டதுபோல மனம் பதைத்துத் திகைத்து, கண்ணீர் ஓராறு போலோட அழுதார்கள். ஸ்திரீஜாதிகள் நாங்கள் பூண்டிருக்கிற ஆபரணங் களைத் திருமங்கலியத்தோடு கழற்றியெறிந்துப்போட்டு, தலைமயிர்கள் அவிழ்ந்து விழ, கண்கள் சிவக்க பதைபதைத்து, பெருங்காற்றடிக்கத் துவண்டு அலங் கோலமாய் விழும் பசுங்கொடிகள் போல விழுந்தார்கள். புருஷாள் சக்கர வர்த்தி கிருபையில்லாதவ ரென்றும், இனி நாமும் தருமங்களைக் கைவிடுவோ மென்றும் சொல்லிக்கொண்டு ஏங்கி, சண்டமாருதக் காற்றடிக்கச் சாய்ந்து விழும் மரங்கள்போல விழுந்தழுதார்கள். பட்சிகள் மிருகங்கள் முதலியவை களும் அழுதன. பருவமடையாத பிள்ளைகளும் ராமன் வனத்திற்குப் போகிற செய்தி கேட்டு அழுதார்களென்றுல் மற்றவர்கள் பட்டபாடு யானென்ன சொல் லப்போகிறேன். ஆனல் ஸ்ரீ ராமனை ஆரணியவாசம் செய்யும்படி கேட்ட கைகேசியும் அந்தக் கூனியும் அழவில்லை. சிலர் இந்தப் பூமி பண்ணின பாவ மென்பாரும், பாக்கியலட்சுமி பண்ணிய பாவம் பெரிதென்பாரும், நம்முடைய மனதைப் புண்ணுகப் பண்ணினது விதியென்பாரும், உலகத்தார் கண்கள் செய்த பாவமென்பாரும், தேரோடும் வீதியில் கண்ணீரோடும்படி துயரம் வந் திருக்கச்சே நம்முடைய பிராணன் போகாமலிருக்கின்றதே நம்மைவிடக் கல் மனதை யுடையவர்கள் யாரென்பாரும், பரதன் ராச்சியபாரஞ் செய்யானென் பாரும், ஸ்ரீ ராமன் ஆரண்யத்துக்குப் போகாமல் இனித் திரும்பானென்பாரும், நமக்கு விதி பொல்லாதென்பாரும், இந்தப் பட்டாபிஷேகம் ஒரு விஷமாயிருந்த தென்பாரும், கைகேசி மயக்கத்திலே அகப்பட்டுக்கொண்டு இராஜா புத்தியீன னனென்பாரும், சீதை நாயகனை ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்குப் போனல் நாம் அக்கினிப் பிரவேசமாவோமென்பாரும், கரங்களால் கண்ணீரினலே பூமியை மெழுகித் தடவுவாரும், கௌசலை பிராணனை வைத்துக்கொண்டிரா ளென்று பெருமூச்சு விடுவாரும், அப்பா லட்சுமண! நீ மனது தாளமாட்டுவையா வென்பாரும், இப்படி நெருப்பிலே நெய் சொரிந்ததுபோல மனதுழன்று பட்ட ணத்து ஜனங்களெல்லாம் அழுதார்கள்.

தன் பிள்ளைக்கு இராச்சியம் வேணுமென்றெண்ணி யிப்படி லோகங்க ளுக்கெல்லாம் விபரீதமான விபத்தைத் தந்த கைகேசியினுடைய செய்தியைக் கேட்ட வேசிகள் கூட கைகேசி மனதில் கொஞ்சமாகிலும் பசை அன்பில்லா தவளென்று சொல்லிக்கொண்டு மிகவும் அழுதார்கள். நம்முடைய இராசா இல்லம் துறந்து தபசு பண்ணுகிறதற்காகவோ அல்லவென்று பூமியிலிருக்கிற ஜனங்களையெல்லாம் கொன்றுபோடவோ இப்படி கைகேசிக்கு வரங்கொடுத்த தென்றும், இராச்சியம் வாங்கிக்கொண்ட கைகேசிக்கு இராச்சியத்தை விட்டு எல்லாரும் ஸ்ரீ ராமன் பிறகே காட்டுக்குப்போய் அந்தக் காட்டையெல்லாம் கொஞ்ச நாளையில் நாடாக்குவோமென்று யெண்ணமோ? ஈதென்ன இரா

ஜாவினுடைய யோசனை மூத்த பிள்ளைக்குப் பட்டங்கட்டுகிறதென்று சொல்லி உடனே அவன் தம்பிக்குப் பட்டங் கொடுக்கிறேமென்று சொன்னால் தருமம் தப்பாதா வென்பாரும், ஸ்ரீ ராமனுக்குக் கொடுத்த பூமியைப் பின்னெ ருத்தர் அனுபவிக்கக்கூடுமா? வஞ்சனைசெய்த கைகேசிப் பிள்ளையை ஸ்ரீ ராமன் பின்னே போகிற பூமிதேவி திரும்பிப்பாரா ளென்பாரும், ஒரு வேளை சீதாபிராட்டி ஸ்ரீ ராமனைப் பிரிந்தாலும் ஸ்ரீ மகாலட்சுமி பிரியா ளென்பாரும், ஸ்ரீ ராமனுடைய நீலத் திருமேனியையும் கமல நேத்திரங்களை யும் நாம் எப்படி காணுமலிருக்கப் போகிறோம் ஐயோ விதியே! என்று சகல ஜனங்களும், அழுது பிரலாபித்தார்கள். அப்படி பிரலாபிக்கிற சமாசாரம் இளைய பெருமாள் கேட்டு, யாதெனத் திடுக்கிட்டு விசாரிக்குமளவில் தம்மு டைய தமையனை ஆரணியத்திற்குப் போகிறதற்குக் கைகேசியான கிறிய தாயார் வரம் வாங்கின செய்தி கேட்கவே, பிரளயகாலாக்கினிபோலக் கோபம் பிரவேசித்துக் கண்களிலே நெருப்புப் பறக்க. புருவங்கள் நெற்றிமட்டுக்கு மேற, மத்தியானச் சூரியனைப்போ லதிக வுக்கிரமாய்ச் சரீரம் வியர்க்க, கோபாவேசத்தினாலே கடுரமான சுவாசம் பிறக்க, ஆதிமூர்த்திபோ லெழுந் திருந்து, ஒரு ராஜசிங்கத்துக்கு வைத்திருந்த ஆகாரத்தை ஒரு நாய்க்குட்டிக் கிரையாக்குகிறதற்கு யத்தனம் பண்ணினாளல்லவா? பளா! நன்றியிற்று நன்றியிற்று என்று கைகளைக் கொட்டி நகைத்து, அரையிலே வாள் விசித் துக் கட்டிக்கொண்டு, கையில் வில்லேந்திக்கொண்டு, அம்புறுத்தூணி தோளிலே தரித்து, கவசம் மார்பிலே பூண்டு காலில் வீரகண்டாமணி யணிந்து, அந்த மணி சமுத்திர கோஷம்போல் சத்திக்கவும் வில்லினுடைய குணத்தொனி பிரளயகால மேக கர்ச்சனைக்கு மூன்று பங்கதிகமாய்ச் சத்தித்து முழங்கவும் ஆக்கிரமித்துச் சொல்லுகிறார்: ஓ ஜனங்களே! இந்தப் பூமியினுடைய பாரந் தீர எதிர்த்து வந்தவர்களை யெல்லாம் அடித்து மலைமலையாகக் குவிக்கிறதற்கும் என்னையனை ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கிறதற்குமாக நிற் கின்றேன். எல்லாரும் பாருங்கள். தேவலோகத்தார் பூலோகத்தார் விஞ்சை யர் முதலியோர் ஒன்றுகக்கூடி அந்த மும்மூர்த்திகளுடனே கூடவந்து காத்தா லும், பெண்டுகளென்கிற பூண்டு இராச்சியத்தி லில்லாதபடிக்குச் செய்துப் போட்டு' ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணுவேனென்று பால சூரிய னைப்போலப் பிரகாசித்துக்கொண்டு, பூர்வத்தில் க்ஷீராப்தியில் மந்தரகிரி பர்வதம் சுழன்று திரிந்ததுபோல அயோத்தியாபுரி பட்டணத்தின் நடுவே இலட்சுமணர் ஆக்குரோக்ஷத்துடனே திரிந்தார். அந்த வேளையில் முன்பு ஸ்ரீ ராமன் சுமித்திரையின் திருமாளிகைக்குப் போய் நடந்த சமாச்சாரம் சொல்ல, அந்தம்மாள் கேட்டு மிகவும் அங்கலாய்க்க, அவளுக்கு என்ன தேறு தலைச் சொன்னாலும் தெளியாமலிருக்கின்ற அந்தச் சமயத்தில் இலட்சுமண னுடைய வில்லின் குணத்தொனியைக் கேட்ட ஸ்ரீ ராமர் அந்தக்ஷணமே எழுந்திருந்து அதிசீக்கிரமாக நடக்க, ஆபரணாதிகளெல்லாம் பிரகாசிக்க வார்த்தை யென்கிற மழைத்துளிகளைப் பொழிந்துக்கொண்டு இலட்சுமண ருடைய கோபமென்கிற அக்கினியை யாற்றுகிறதற்கு நீலமேகம் வந்ததுபோல அவர்க்குச் சமீபத்தில் வந்து, ஆ தம்பி! நீ தேவதைகளைப் போலொத்த பல வந்தாள் பேரிலல்லவோ கோபம் பண்ணவேண்டும். அதற்கிங்கே காரணம்

காணுமே. என்ன நிமித்தம் உயுத்தியசன்னுகமாய் நீ வில்லெடுக்க வேண்டிய காரணமேதென்று கேட்டனர். அப்போது இலட்சுமணர் கோபாக்கினியை யடக்கி, சுவாமி! சத்தியத்தைவிட்டு முறைமை தப்பிச் செய்த அந்தப் பாவி யானவளுக்கு முன்னே உமக்குப் பட்டாபிஷேகம் செய்ய நினைத்து, இது நிமித்தம் தேவர்கள் வந்து எதிர்த்தாலும் என்னுடைய அஸ்திரங்களினுலே அதம் செய்து போடுகிறதாகத் துணிந்திருக்கிறேன். என் கையில் வில்லிருக் கின்றபோது அந்தத் தேவர்கள் வந்து விலக்கமாட்டார்கள் ஒருவேளை வந்து விலக்கினாலும் என் கைப்பாணத்தினுல் அவர்களையும் சங்காரித்து, இந்தப் பட்டாபிஷேகமும் நான் உமக்குச் செய்து வைக்கிறேனென்று இலட்சுமணர் சொல்லினர். ஸ்ரீ ராமர் அதைக் கேட்டு, இலட்சுமண! நீதியும் சன்மார்க்கமும் உன்னிடத்தில் நிலையாயிருக்க, தர்மம் கெடக் கோபம் விளையாத நிலத்தில் உனக்கு எப்படி விளைந்ததென்று கேட்டனர். அதற்கு இலட்சுமணர் நகைத்து, சுவாமி! உம்முடைய தகப்பனர் உம்முடைய இராச்சியத்தை உமக்குக் கொடுத் திருக்க, அதை நடுவில் பகையாளியினுலிழந்து, நீர் ஆரணியத்துக்குப் போகிறீ ரென்று கேள்விப்பட்டால் அடியேனுக்கு கோபம் வருகிறது அதிசயமா? உம்மிடத்தில் அன்பில்லாதவள் உம்மை ஆரணியத்துக்கனுப்ப என்னுடைய சரீரத்தை வைத்திருப்பேனே? அப்படி யிருப்பதற்கு முன்னே உமக்கு இராச்சியங் கொடுத்துப் பிறகு இல்லையென்று சொன்ன வண்கண்ணரான ராஜாவா நான்? என்று இலட்சுமணர் சொல்லவும், அதற்கு ஸ்ரீ ராமன் தம்பீ! நீ இந்த ராச்சியத்தை யாளென்று ராஜா சொல்ல, அதற்குச் சம்மதித்த என்பேரில் என்ன குற்றமிருக்கின்றது? நதியிற் ஜலம் வராமற் போகிறது நதியினுடைய குற்றமா? நம்மிட தகப்பனரிடத்திலும் குற்றமில்லை. நமது தாயினிடத்திலுங் குற்றமில்லை. நம்மிட விதியின் குற்றமே யல்லாமல் வேறல்ல. அதற்குக் கோபித்துக்கொண் டாகவேண்டிய தென்ன? என்று சொல்லினர். அப்போது இலட்சுமணர் சுவாமி! கருமானுலையி லெழும்புகிற அக்கினிபோல என் மனதில் எழும்புகிற கோபம் எப்படியாறும்? இப்படி செய்தவளுடைய புத்திக்குப் புத்தியாயும், தேவர்கள் விதிக்கும் விதிக்கு விதியாகவு மிருக்கின்ற என் கைவில்லினுடைய தொழிலைப் பார்த்துக் கொண்டிருமென்று இலட்சு மணர் சொல்லினர். அதற்கு ஸ்ரீ ராமன் அப்பா! நீ வாயில் வந்ததைச் சொல்லலாமா? வேத சாஸ்திரங்க ளெல்லாம் நீ ஒருவருக்குக் கொடுத்தா லுண்டு, அப்படிக்கொத்த நீ தாய் தந்தைகளின்பேரில் கோபித்துக்கொள்ள லாமா வென்று சொல்லவும், அவரை இலட்சுமணர் வணங்கி சுவாமி! எனது தந்தையும் நீரே. என்னை வயிற்றில் வைத்திருந்து பெற்ற தாயும் நீரே. சகலமும் நீரே யல்லாமல் வேறில்லை. நான் செய்கிற காரியத்தைப் பாருமென்று கையை யசைத்து ஆக்குரோஷத்துடனே பிரளயகால ருத்திரனைப்போல் நின்றார். இப்படி நிற்கிற இலட்சுமணரைப் பார்த்து, தம்பீ. வரம் கொடுத்தவர் தகப்பனர். வரம் வாங்கிக்கொண்டவள் தாயார். இராச்சியமாளுகிறவன் தம்பி. நமக்குக் கிடைத்தது தவம். இதைப் பார்க்கி லும் நமக்கு மேலான நலமென்ன யிருக்கிறது? நீ ஏன் கோபம் செய்கிறீ யென்று ஸ்ரீ ராமன் சொல்லினர். அதைக்கேட்ட லட்சுமணர் அவரைப் பார்த்து, ஓ எனதையனே! சத்திராதிகள் சொல்லுகிற பேச்சையும் சுமந்து,

பர்வதம் போலிருக்கிற தோள்களிலே அம்புரைத் தூணியும் வில்லும் வீணையச் சுமக்கப் பிறந்த நான். கோபித்து ஆக வேண்டியதென்ன வென்று சொல்லினர். அப்பா! என்னைப் பெற்று வளர்த்தவர்கள் சொன்ன பேச்சைத் தட்டி இராஜரீகம் செய்கிறது எனக்கு யுத்தமமல்ல. என் பேச்சைத் தட்டினால் உனக்கு என்ன புகழ் உண்டாகும்? மிகவும் அன்பனை தம்பியோடு போர் செய்து அவனைக்கொன்றும், பெரியவர்களெல்லாம் புகழத்தக்க தகப்பனை ஜெயம்செய்தும், பெற்ற தாயைக் கொன்றுமல்லவா இந்தக் கோபம் தணிய வேண்டி யிருக்கின்றதென்று ஸ்ரீ ராமன் சொல்ல, அந்தட்சணமே கோபம் போய் எதிர்த்து உத்தரஞ் சொல்லுகிறதும் நின்று, அந்த ஸ்ரீ ராமனுடைய ஆக்ஞையினாலே, சமுத்திரம் அத்துதப்பாமல் எப்படி இருக்கின்றதோ அப்படி இலட்சுமணர் கோபந்தணிந்து நின்றார். அப்போது ஸ்ரீ ராமர் சந்தோஷத்துடனே தம்பியைத் தழுவிக்கொண்டு ஸ்ரீ மகா விஷ்ணுவும் அவர் பாதத்திலிருக்கிற சிவனும்போல இருவருஞ் சுமித்திரையி னரண்மனையே வந்தார்கள். வருகிற இரண்டு பிள்ளைகளையும் சுமித்திரை கண்டு ஆரணியத்துக்குப் போய் விடுவார்களே என்கிற துக்கத்தினாலே மிகவும் நொந்து, பூமியில் விழுந்து புரண்டு, துக்கசாகரத்திலே, விழுந்து கரைகாணுமல் அழுகிறவளை ஸ்ரீ ராமன் தொழுது எடுத்து, அம்மா! இப்படியும் அங்கலாய்ப்பார்களா? இராஜாவைப் பொய்யனக்கலாகாதே. ஆரணியத்திலே போனாலும், சமுத்திரத்திலே போனாலும், தேவலோகத்திலே போனாலும், அதுகளெல்லாம் உங்கள் ஆசீர்வாதத்தினாலே எனக்கு அயோத்தியைப்போலிருக்க, என்னை யார் உபத்திரவப் படுத்துகிறவர்கள்? அப்படிக்கிருக்க, என்ன நிமித்தம் நீங்கள் அங்கலாய்க்கவேணுமென்று மிகவும் தேறுதலையாய் ஸ்ரீ ராமன் சொல்லத் தேறமாட்டாமல் ஸ்ரீ ராமனைப் பார்க்கிறபோதெல்லாம் மனதுங் கண்ணும் நீராய்க்கரைய சுமித்திரை அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள். அத்தருணத்தில் கைகேசியம்மன் தாதிகள் கையில் மரவுரி கொடுத்தனுப்ப, அவர்கள் அதைக்கொண்டு வந்து தங்கள் சிறிய தாயார் இதைக்கொடுத்துவரச் சொன்னர்களென்று அங்கலாய்த்தார்கள். இலட்சுமணர் அந்தத் தாதிகளைப் பார்த்து இராஜ்ஜிய மிழந்து கொடுத்ததெல்லாம் வாங்கித் தரித்துக்கொள்ளுகிறதற்கு அதோ யிருக்கிறார். கையிலொரு வில்லும் வைத்துக்கொண்டு அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறதற்குப் பிறந்த நானும் இதோ யிருக்கின்றேன். ஆனால் கொண்டு வந்ததைக் காட்டுங்களென்று சொன்னர்.

ஸ்ரீ ராமன் சுமித்திரையைப் பார்த்து, அம்மா! எங்கள் தாயார் செலவு கொடுத்து அனுப்பினார்கள். இதுவே எனக்கு விடையென்று சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டனர். சுமித்திரை லட்சுமணரைப் பார்த்து அப்பா! ஸ்ரீ ராமன் போகிற ஆரணியம் உனக்கு அயோத்தி. உன்னுடைய தகப்பன் இராமன், இந்தச் சீதை உன் தாய் இப்படியாக மனதில் வைத்துக்கொண்டு கூடவே நட. இனி இங்கே யிருந்தாலும் குற்றம் வருமென்று சொல்லிப் பின்னும் ஒரு வார்த்தை சொல்லுகிறாள். மகனே! இவன் பிறகே போகிறபோது, தம்பியென்கிறதைப் பாவிக்காமல் அடிமையைப் போல ஏவல் செய்துகொண்டிருந்து, அவன் வருகிறபோது கூட வரக்கடவாய், போனவிடத்தில் எதுவாகி

லும் ஆபத்து வருகிறதா யிருந்தால் முன்னே உன் பிராணனைக் கொடுத்து விடென்று சொல்லி, தனங்களிலே பால் சுரக்க அன்புடனே அங்கலாய்க்கிற சுமித்திரையை இருவரும் சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்துக்கொண்டு நடந்து கைகேசி அனுப்பிய மரவுரியை ஸ்ரீ ராமன் தரித்துக்கொண்டார். அது கண்டு இலட்சுமணரும் மரவுரி தரித்துக்கொண்டார். இதைப் பார்த்து ஸ்ரீ ராமன் ஒரு வசனம் சொல்லுகிறார். தம்பி! உனக்கோர் உறுதி வசனம் சொல்லுகிறேன் கேள். நம்முடைய தாய்களும் இராஜாவும் முன்னையைப் போலல்ல. மிகவும் துயரத்தில் மூழ்கி யிருக்கிறார்கள். என்னைப் பிரிகிற வருத்தம் உன்னால் தீரவேணும். என் நிமித்தியம் நீ தயைசெய்து இருக்கவேணு மென்று சொல்லினார். அதுகேட்டு இலட்சுமணர் தோள்களெல்லாம் நடுங்க விம்மி அழுது, சுவாமி! அடியேன் என்ன தப்பிதம் செய்தேன் ஜலமிருக்கிற மட்டும் ஜீவகோடிகளும் அதற்குப் பிறக்கிற குஞ்சுகளும் இருக்கும். அதுபோல நீர் இவ்விடம்விட்டு அப்பால் போனால் இவ்விடத்தில் யாரிருக்கிறார்களென்று சீதையும் அடியேனும் இருக்கப் போகிறோம். ஒருத்தி பேச்சைக்கேட்டு இந்தப் பூமிகூட நடுங்கும்படியாய் காட்டுக்குப் போவென்று சொல்லிப் பிராணனை வைத்திருக்கிற இராஜாவினுடைய மகனென்று எண்ணியல்லவா என்னை இந்தப் பேச்சுச் சொன்னீர்: நீர் ஆரணியத்திற்குப் போகிறீரென்று கேட்டு எனக்குவந்த ஆக்குரோஷத்தையும் கோபத்தையும் விட்டுவிடும்படிக்குச் சொன்ன வார்த்தையைப் பார்க்கிலும், இந்த வார்த்தை மிகவும் கொடியதா யிருக்கின்றது. சகல பாக்கியத்தையும் விட்டுப்போகிற நீர் என்னையும் விட்டுப் போகிறதற் காயிற்றல்லவா? என்று கண்களிலே தாரை தாரையாய் சலம் பெருக எதிரே நின்றார். அதற்கு ஸ்ரீ ராமன் வேறே யாதொரு உத்தரவும் சொல்லாமலிருந்தார். இந்தச் சமயத்தில் இராஜசபையிலிருந்து புறப்பட்ட வசிஷ்ட மகாமுனி வந்து சேர்ந்தார். அவரை இவர்களிருவரும் நமஸ்காரம் செய்துகொண்டார்கள். ஸ்ரீ ராமனுடைய திருமுகமண்டலத்தையும் மரவுரியையும் பார்த்து, துயரத்தினாலே தம்முடைய தேகஸ்மரணை தெரியாமல், தத்துவ நெறிகளை யறிந்த மகா ஞானியான வசிஷ்ட மகாமுனி மயங்கித் திகைத்து நின்றார். உலகத்திலே சகல பாக்கியங்களைக் கொடுக்கிற ஸ்ரீ ராமன்றானே இப்படி ஊழ்வினையினால் மரவுரி தரித்தால், பிரம்மாவினாலும் அந்த ஊழ்வினையைத் தள்ளக்கூடாதே. இந்தப் புருஷனுக்கு அந்தப் பாவியான கைகேசி என்ன பொல்லாங்கு செய்தாலும் அது வருமா? என்ன வினையினாலேயோ அல்லது தேவர்களுடைய இரகசியமான யோசனையோ இப்படி வந்ததென்று நினைத்து, இது பின்பு தெரியுமென்று எண்ணினவராய் ஸ்ரீ ராமனைப் பார்த்து, ஸ்ரீ ராமா! நீர் ஆரணியத்துக்குப் போனால் இராசாவினுடைய பிராணன் இருக்கமாட்டாது. ஆதலால் நீர் ஆரணியத்துக்குப் போக வேண்டாமென்று சொன்னார். அதற்கு ஸ்ரீ ராமன் சுவாமி! அவர்கள் பேச்சைச் சிரசாக வகித்துக்கொண்டு அந்தப்படி நடந்துகொள்ளுகிறது என்னுடைய கடன். தருமநீதியு மதுவே என்றுசொல்ல, அதற்கு வசிஷ்டர் பூர்வத்தில் இராஜா அசுராளை ஜயம் பண்ணினபோது இப்படியாக இரண்டுவரம் கொடுக்கிறோமென்று சொன்னாரென்று கேட்க, அதற்கு ஸ்ரீ ராமர் சுவாமி! என் தாயார் அந்த வரம் இப்படியாகக் கேட்டுக்கொள்ள, தகப்பனார் அந்தப்

படியே கொடுக்க, அடியேன் மாதுர்பிதுர் வாக்கிய பரிபாலனம் செய்யவேணு மென்று சிரசாக வகித்துக்கொண்டு நான் வெளியே புறப்பட்டிருக்க, சகல சாஸ்திரங்களுமறிந்த தாங்கள் இதைத் தடுத்து தருமந் தப்பச் சொல்லலாமா வென்று ஸ்ரீ ராமன் சொல்ல, வசிஷ்டர் அதைக் கேட்டு, வேறொரு உத்தர வுஞ் சொல்லுகிறதற்கு இல்லாமல், கண்களில் ஜலம் தாரை தாரையாய் வழிய நின்றார். அப்படி நின்ற வசிஷ்டரை ஸ்ரீ ராமர் சேவித்துக்கொண்டு, இரா சாவினுடைய ஆசாரவாசல் மட்டும் நடந்துபோனர். இப்படி அரையிலே மரவுரி யும், பின்னலே தம்பியுமாகப் புறப்படுகிறதைக்கண்டு அந்தப் பட்டணத்தி லுள்ள வேதவேதியர்களும், ரிஷிகளும், இராசாக்களும், பிரஜைகளும், துக் கத்தினலே மனம் நொந்து புழுங்கினர்கள். இந்தக்காரியம் தங்களுக்கு உறுதி யென்று அறிந்திருக்கிற தேவர்களும் இவரைப்பார்த்துத் தாளமாட்டாமல் மனதுநொந்து மிகவும் பிரலாபித்தார்களானல், அவர்கள் பட்டபாட்டை என்னவென்று சொல்லலாம். ஸ்ரீ ராமனைக் கண்ட ஸ்திரீகளெல்லாம் தாம ரைக்கமலம் போலிருக்கிற கைகளினலே வயிற்றி லறைந்துகொண்டார்கள். சிலர் தங்கள் தங்கள் சரீரஸ்மரணை தெரியாமல் மூர்ச்சையாய் பூமியில் விழுந்து, சுவாச மில்லாமல் தசரத மகாராஜாவுக்கு முன்னே தேவலோகம் போய்ச் சேருகிறவர்கள்போல இருந்தார்கள். சிலர் துக்கத்தினலேயே அழுந்தி னர்கள். சிலர் நெருப்பில் விழுந்த பூங்கொடிகள்போலக் கருகிவாடித் துயரப் பட்டார்கள். சிலர் பூமியில் விழுந்தார்கள். சிலர் விம்மி விம்மி அழுதுகொண்டு எழுந்திருந்தார்கள். சிலர் கண்ணீரினு லழுந்தினர்கள். சிலர் கண்ணிலே கண்ணீரும் வராமல் அதிக துக்கத்தினலேயே மயங்கி இரும்பைப்போல மன முடையவர்கள் போலவும் மிகுந்த பொருளை யிழந்தவர்களுக்குச் சமானமாகவுந் திகைத்து நின்றார்கள். சிலர் சரீரமெல்லாம் ஒடுங்கி ஜீவன் இந்தட்சணமே போய்விடும் போய்விடும் எண்ணும்படியாய்க் கண்களிலே தண்ணீர் வடியக் கிடந்தார்கள். சிலர் மூடிசாய்ந்து விழுந்தார்கள். சில சூரிக்கத்தியினலே கண் ணைக் குத்திக்கொண்டார்கள். சில ஸ்திரீகளுடைய ஆபரணதி மேகலாபரணமு மற்றும் விழுந்து கிடக்கிற பிரகாசமும், பல்லுகளுடைய பிரகாசமும், எங்கு மூண்டானபடியால், சந்திரனுக்குத் தோற்புக்கண்டது. தசரதராஜாவினுடைய மகா பதிவிரதைகளான அறுபதினுயிரம் ஸ்திரீகளும் ஸ்ரீ ராமனைக் கண்டு, கண்களிலே சலம்பெருக சமுத்திர இரைச்சலைப்போல இரைந்து அழுது கொண்டு தொடர்ந்து வந்தார்கள். அவர்கள் வளர்த்த மயில்களும் குயில்களும் அன்னங்களும் கிறகு போய்ப் பூமியில் நடக்கிறதுபோல இருந்தன. இந்த ராம னல்லாமல் வேறே புத்திரரைப் பெறுதவர்களானபடியால், அந்த ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்குப் போகிற கிலேசத்தினலே பகலில் அலர்ந்த செவ்வல்லிப் புஷ்பக்கூட்டங்கள் போலத் தங்கள் தங்கள் வாய்களைத் திறந்து அதிக துக்கத் துடனே அழுதார்கள். அவர்கள் கண்ணீரானது அவர்கள் மெய்யிற் பூசியிருக் கிற சந்தன கதம்ப கஸ்தூரிகளையும் கரைத்துக்கொண்டு வஸ்திரங்களையும் நனைத்துக்கொண்டு, பூமியெல்லாம் பெருகிற்று. அந்த ராஜாவினுடைய ஸ்திரீ களை ஒருநாளும் காணுத சூரியனுங் கண்டான். ஐயோ! தேவர்களா யிருந் தாலும் ஆபத்து வந்த வேளையில் என்னதான் வராது? இப்படியாக அழுது கொண்டு வருகிற தாய்மாரும் பந்துசனங்களும் சினேகிதர்கள் முதலானபேரும்

மிகுந்த துக்கத்துடனே வாசலில் வந்து மொய்த்தார்கள். இவாகளுடைய இரைச்சல் சமுத்திர இரைச்சலிலும், அதிக சத்தமானதால் ஒருத்தர் சொல்லுகிறது தங்கட்குக் கேளாமலும் தாங்கள் சொல்லுகிறது அவர்களுக்குக் கேளாமலிருக்க. அச்சமயத்தில் ஸ்ரீ ராமன் தன்னுடைய அரண்மனையை நோக்கி நடந்தார்.

அப்போது ஸ்ரீ ராமனை அங்கிருக்கிற ஜனங்களெல்லாம் கண்டு, முன்னலே பட்டாபிஷேகம் செய்துகொள்ளுகிற நிமித்தம் அநேகம் சம்பிரமத்துடனே திருவாபரணங்கள் பிரகாசிக்கத் தேரின்பேரிலே பவனி வந்தவர், உடனே மரவுரி தரித்துக்கொண்டு வீதியில் வரக்கண்ட நம்முடைய மனது பிளந்து போகாமல் கற்பாறைபோ லிருக்கின்றதே ஆ! ஆ!! நம்முடைய அன்பு நன்றியிருக்கிறதென்றும் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு வருவாரென்று வழிபார்த்திருந்த நம்முடைய கண், ஆரணியத்துக்குப் போகிறதாய்ப் புறப்பட்ட கோலத்தைப் பார்க்கிறதற்காகவா யிருந்தது. இராச்சியத்திலே கண்ணுடனே பிறக்கிறது பொல்லாதென்றும், ஏழைகளா யிருக்கிற இராஜ்ாக்களை இரட்சியாமல் விட்டுவிட்டு ஆரணியத்துக்குப் போகிறபடியினலே, இவரும் கைகேசிக்குச் சமானந்தா னென்பாரும், ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்குப் போகிறேனென்று எழுந்து நடக்கச்சே நாமும் சீவனுடனிருந்துகொண்டு அழுகிறோமல்லவா? என்பாரும், இந்த ஊரில் ஸ்ரீ ராமனைப்போல மரவுரியுடுத்திக்கொண்டு தொடர்ந்து போகிறதற்கு இலட்சுமணன் ஒருவன்தானு அவனுக்கு உற்ற உறவென்பாரும், கற்பாறைபோலிருக்கிற நம்மிட மனதை மழுவாயுதத்தினலே பிளந்து போடுவோமென்று சொல்லிக்கொண்டு கண்ணீரோடின சேற்றிலே சருக்கி விழுவாரும். ஆபரணங்களைக் கழற்றி எறிந்து போடுகிறதும், இந்த இராஜவம்சத்திலே ஒரு பட்சிக்காகப் பிராணனைக் கொடுத்தார்கள். இந்த இராஜகுமாரன் ஆரணியத்துக்குப் போலாலும் போகட்டும் வார்த்தை தப்பலாகாதென்று இருக்கிறாரே! இந்த ராஜன் மனது இரும்பென்பாரும், இப் பிள்ளையைக் காட்டில் துரத்திவிட்டுத் தானும் தன்னுசை மகனும் இராஜ்ஜியமாள இருக்கின்ரு ரென்பாரும், கலியின்பேரில் கையை வைத்துக்கொண்டு புட்பித்திருக்கிற கொடிகள்போல் ஏதுங்கி அழுகிறவர்களும், உப்பரிகைகளின்பேரி லிருக்கிற ஸ்திரீகளும் பர்வதங்களிலிருக்கிற மயில்கள்போல அழுதார்கள். சிலர் மாளிகைகளிலிருந்து ஜன்னல்களைத் திறந்துபார்த்து, கூண்டிலிருக்கிற கிளிகளைப்போல அழுதார்கள். உப்பரிகைகளிலிருந்து அவர்களழுங் கண்ணீரானது வீழ்கிறது ஸ்ரீ ராமனைப் பார்த்து அந்த உப்பரிகைகள் கூட அழுகிறதைப்போ லிருந்தன. இப்படிப் பரதவித்தழும் ஜனங்களுள் மக்களைத் தாய்கள் மறந்தார்கள். பிள்ளைகள் தாய் போனவிடம் அறியவில்லை. உப்பரிகைகளி லிருக்கிற மாதர்கள் வீதியில் வந்துவிட்டபடியால் அவ் வுப்பரிகைகள் இலட்சுமியை விட்ட தாமரைக் கமலங்கள்போல் இருந்தன. சில மாதர்கள் அம்புபட்ட மான்கள்போல உயிர் பதைத்தார்கள். மாளிகைகளெல்லாம் கொடிகளில்லாமலும் ஆசார வாசல்களெல்லாம் பேரிகை மேளவாத்தியங்களில்லாமலும், அழுகிற கண்ணீராலே வீதிகளில் புழுதியில்லாமலும் அடங்கிப்போயிற்று. சமையல்கள் அடிசில்கள் உப்பரிகைகள் அகிற்

புகை முதலியவை யில்லாமற் போயிற்று. கிளிகள் பாலடிசில் இழந்தன குழந்தைகள் தொட்டில்களிலே சோர்ந்திருந்தன. மற்ற ஜீவன்களுடைய முகங்கள் ஒளியில்லாமல் ஜீவன்போன சரீரம்போல அமங்கலமாயிருந்தன. மேகங்கள் மழையும், யானைகள் கவளமும், வண்டுகள் களிப்பும், கொடைகள் நிழலும் அற்றிருந்தன. மாதர்கள் அளகம் புட்பங்களையும், புருஷர்கள் பாதங்கள் வீரகண்டாமணியையும் துறந்திருந்தன. காமபாணங்களுக்குச் சுருக்கும் போய்விட்டது. அன்னப்பக்ஷிகளில் ஆண்பெண் ஜோடுகூடி யிராமல் பிரிந்தன. அசுவங்கள் சதங்கை மாலைகள் நீங்கின. அப்போது தெருக்களில் தேர் ஓடுதலும் யாழ் வீணை சத்தமும் தேவர்கள் திருவிழாமுழக்கங்கள் முதலியவையும் நின்று, அரோதனங்கள் மிகுந்தன. சோலைகள் தடாகங்கள்தோறும் பக்ஷிகள் சத்தமும் வண்டுகளுடைய சத்தமும் அடங்கின. கழனிகள் ஜலமற்று இருந்தன. ஓமாக்கினிகள் நெய்யில்லாமலிருந்தன. வேதோத்தமர்கள் வேதங்களை மறந்தார்கள். ஞானிகள் மெய்யறிவை விட்டார்கள். நாற்கால் ஜீவன்கள் புசிப்பு சலமுதலியவற்றை விட்டுவிட்டன. பட்சிகளும் குஞ்சுக் கிரை தேடாமல் விட்டுவிட்டன. கன்றுகளும் பசுவை ஊட்டவில்லை. பசுவு முட்டக் கொடுக்கவில்லை. மாதர்களுடைய ஸ்தனங்களும் புருஷாளைச் சேராமல் சோர்வடைந்தன. நல்வினை தீவினையென்கிற இரண்டையும் சமானமாய் நினைக்கிற பரமயோகிகளும் ஆழ்ந்த துயர்க்கடலில் அழுந்தினர்கள். அந்த அயோத்தியா புரி பட்டணம் இவ்வித அல்லோலகல்லோலத்தில் அழகற்றதன்றி, எல்லாச் சத்தங்களும் அடங்கித் தசரத மகாராஜாவைப்போல மூர்ச்சையினால் ஜீவனை விடுகிறதுபோலிருந்தது.

இவ்வாறு பட்டணத்து ஜனங்களெல்லாம் அழுது துயரப்பட்டுக்கொண்டு கூடவர, சகல ஜீவனுக்கும் ஜீவாத்மாவாயிருக்கிற அந்தப் பிரமமாகிய ஸ்ரீ ராமன் மிகுந்த சுந்தரத்தையுடைய சீதாபிராட்டியின் திருமாளிகைக்குப் போனர். தாய்மார்களும் பிராமணர்களும் ரிஷிகளும் இராஜாக்கள் முதலான பேரும் அழுதுகொண்டு பூமியில் விழுந்து புழுதிபடிந்த சரீரங்களோடு கூட வர, மரவுரி தரித்துக்கொண்டு வந்த தன் பிராணநாயகனைச் சீதாபிராட்டியார் பார்த்து, மனம் திடுக்கிட்டு எழுந்திருந்தாள். அப்படி எழுந்திருந்த சீதாபிராட்டியாரை மாமிமார்கள் கட்டிக்கொண்டு பிரலாபித்து, கண்ணீரால் சரீரமெல்லாம் ஸ்நானம் செய்து வைத்தார்கள். நடந்த வர்த்தமானம் ஒன்றும் அறியாத சீதாபிராட்டி தன் கண்களில் ஜலம் வடிய ஸ்ரீ ராமனைப் பார்த்து, இராஜாவுக்கு ஏதாகிலும் அதிசய முண்டோவென்று சரீரமெல்லாம் பதை பதைத்து நடுக்கத்துடனே கேட்க, ஸ்ரீ ராமன் சொல்லுகின்றார்:

ஓ ஜானகி! இப் பூமியை என் தம்பியாளும்படி எங்கள் தாய் தந்தையினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு ஆரணியத்திற்குப் பிரயாணமானேன். போய் வருகிறேன். நீ அங்கலாய்க்காம லிருவென்று சொன்னர். அப்போது பிராட்டியார் தன் நாயகன் இராஜ்ஜிய மிழந்து ஆரணியத்துக்குப் போகிறேனென்று சொன்னதற்கு மிகவும் வருந்தி அழவில்லை, ஆனால் நான் போய் வருகிறேன்; நீ அங்கலாய்க்காம லிருவென்று சொன்ன வார்த்தை காதில் அக்கினிபாணம் போலச் சுட அதற்கழுதாள். திருப்பாற்கடலில் சேர்ந்திருந்

தவர் அயோத்தியில் வந்து பிறந்திருக்க, இங்கும் தான் பிரிந்திருக்க மாட்டாமல் தானும் பிறந்து கூடியிருக்கிற ஸ்ரீ மகா லட்சுமி எப்படிப் பிரிந்திருக்கப் போகிறாள்! அப்படிக்கொத்த ஆதிலட்சுமியான பிராட்டியார் ஸ்ரீ ராமனைப் பார்த்து, சுவாமி! தாய் தகப்பன் சொன்னபடி நடக்கவேண்டியது சரி; உத்தமமே. என்னை இங்கு இருக்கச் சொன்ன வயணமென்ன வென்று நினைத்து நினைத்து அழுதுகொண்டு கேட்க, ஸ்ரீ ராமன் சொல்லுகின்றார். அடி பெண்ணே! உன்னுடைய திருவடியானது மிகவும் மிருதுவானது, ஆரணியத்தில் அரக்குகளை உருக்கிவிட்டதுபோல் சிறு கல்லுகளும் மணல்களு மிருக்குமே அதைப் பொறுக்குமா வென்று நான் சொன்னேனென்று சொல்லினர். அதனைக்கேட்ட பிராட்டி திகைத்துச் சுவாமி! உம்மைப் பிரிந்திருக்கிற காலாக்கினியைப் பார்க்கிலும் அந்த ஆரணியாக்கினி பெரிதாயிருக்குமோ? ஒரு காலத்துமிராது என்று சீதை சொல்லவும் அச் சீதையினுடைய மனோபாவத்தை அறிந்துவிட்டுப் போகலாமென்று நினைத்தவர் இவள் இப்படி அங்கலாய்க்கிறதைக் கண்டு என்ன செய்யலாமென்று எண்ணிக்கொண்டிருக்கும்போது, சீதை ஓர் அறைக்குள்ளே போய் மரவுரி தரித்துக்கொண்டு அதி சீக்கிரமாய் ஸ்ரீ ராமன் பிறகே வந்து கையைப் பிடித்துக்கொண்டாள். இப்படி பிடித்துக்கொண்ட சீதையைப் பார்த்து சகலரும் கிலேசித்தார்கள். தாய்மார்கள் தாதிகள் தோழிகள் ஸ்ரீ ராமன் பிறகே வந்த சகலமானபேரும் சீதையினுடைய செயலைக் கண்டு, அக்கினியிலே விழுந்தவர்கள் போலப் பதைத்தழுதார்கள். ஸ்ரீ ராமன் சீதையைப் பார்த்து, பெண்ணே! நீ யோசிக்கிறதில்லை. கூட வருகிறதாய்ப் பிரயாணமானாய்; நீ ஆரணியத்தில் மிகுந்த துன்பத்தைக் கொடுப்பாயென்று சொல்ல, சீதை கோபித்துக்கொண்டு குயிலைப்போற் சீறி, என்னைப் பிரிந்திருக்கிறது உமக்கு இன்பமாவென்று சொல்லினள். ஸ்ரீ ராமன் பின்னை ஒன்றுஞ் சொல்லாமலிருக்க, அங்கிருக்கிற பெண்களும் புருஷர்களும் துயரத்துடனே வீழ்ந்தழ வீதியிலே வந்தார். இப்படி மரவுரி தரித்துக்கொண்டு பெண்ஜாதி பிறகேவர, கையில் வில்லோடு தம்பி முன்னே நடக்க, மேக சரூபனான ஸ்ரீ ராமன் நடக்கிறதைக் கண்டு அப் பட்டணத்து ஜனங்கள் பட்ட துயரங்கள் ஒருவராலுஞ் சொல்லி முடியாது. சகல ஜனங்களும் அழுகிறதை விட்டுத் துணிந்து இவர்களுக்கு முன்னே நாமும் ஆரணியத்துக்குப் போவோமென் றிவர்களைச் சுற்றிக்கொண்டு கூட நடந்தார்கள். அப்போது, ஸ்ரீ ராமன் தகப்பனுருடைய ஆசாரவாசலுக்குச் சமீபமாய் வந்து, கூடவந்த தாய்மார்களைப் பார்த்து, அம்மா! நீங்கள் இராஜாவினிடத்திற்குப் போய் அவருக்குத் தேறுதலைச் சொல்லி ஆற்றுங்களென்று சொன்னர். அந்த வார்த்தையைக் கேட்ட தாய்மாரெல்லாம் அழுது விழுந்து மயங்கி, மகனையும் மருமகளையும் வாழ்த்தி, இளைய பிள்ளையைத் தோத்திரஞ்செய்து கொண்டாடி, ஓ தெய்வங்களே! இவர்களைக் காத்துக்கொள்ளுங்க ளென்று சொல்லி, நாவுகள் தழும்பேறும்படி அழுது நடுங்கினர்கள். ஸ்ரீ ராமர் அவர்களை விட்டு அப்பால் நடக்கிறபோது எதிரே வசிஷ்டரைக் கண்டு நமஸ்காரஞ் செய்துகொண்டு, அப்பால் ஒரு ரதம் கொண்டுவரச் சொல்லித் தாமும் தம்பியும் ஸ்ரீ மகா லட்சுமியான சீதையும் ஏறிக்கொண்டு பட்டணத்தைத் தாண்டி நடந்தார்கள்.

நகர் நீங்கு படலம் முற்றிற்று.

தைலமாட்டுப் படலம்

அப்பால், பட்டணத்திலுள்ள சித்திரப்பாவைகள் தவிர மற்ற ஜனங்களும், தசரத மகாராஜாவினுடைய ஸ்திரீகள் தவிர மற்ற ஸ்திரீகளும் புருஷர்களும் நடந்தார்கள். அப்போது, அவ்வவர்களுடைய கண்ணீர் வெள்ளமாயோடுகிறபடியினாலே, அந்த வெள்ளத்திலே ஸ்ரீ ராமனுடைய தேர் போகிறது சமுத்திரத்தில் தெய்வீகமாயிருக்கிற திமிங்கில மென்னும் மீன் போகிறது போலப் பிரகாசித்தது. அப்போது, சூரியன் ஸ்ரீ ராமனுக்கு வந்த விபத்தின் துன்பத்தைப் பார்த்து மனம் தாளமாட்டாமல், அவருக்கு முன்னே தானும் ஆரணியத்திற்குப் போகிறவர்போல மேற்குச் சமுத்திரம்போய்ச் சேர்ந்தார். தாமரைகளெல்லாம் இப்பட்டணத்து மாதர்களுடைய முகங்கள் அன்றையதினம் எப்படியிருந்ததோ அப்படிப்போல் அழகு இழந்து போயிற்று. கைகேசியினுடைய மனது மந்தரையான கூனியினுடைய வார்த்தை என்னும் விஷத்தினால் எப்படியிருண்டதோ அப்படிபோல எங்கும் இருள்வந்து மூடிக்கொண்டது. பூர்வத்தில், கௌதம மகா ரிஷியினுடைய சாபத்தினாலே தேவேந்திரனுக்குச் சரீரமெல்லாம் கண்கள் உண்டானது போல, ஆகாயமெங்கும் நட்சத்திரங்கள் பூர்த்தன. அப்போது, ஸ்ரீ ராமன் பட்டணத்துக்கு அப்பால் இரண்டு யோசனை தூரம்போய் இரதத்தைவிட்டிறங்கி, ஒரு சோலையில் ரிஷிகளுடனே கூடியிருந்தார். பிறகே போன சகல ஜனங்களும் ஏழுயோசனை விஸ்தீரணம் ஓர் எள்ளுவிழ இடமில்லாமல் அந்தச் சோலையைச் சுற்றி ஸ்ரீ ராமனை விடாமலிறங்கினார்கள். அவருட் சிலர் நதிகள் வாய்க்கால்கள் எங்கும் நிறைந்து, ஆகாரமுதலிய நித்திரையில்லாமல் அழுது விம்மினார்கள். அநேகம் பெண்கள் தங்கள் வஸ்திரத்தையே படுக்கையாகப் போட்டு படுத்துக் கொண்டார்கள். சிலர் தாதிகளுடைய மடியிலுறங்கினார்கள். யானைகள் கொட்டாரங்களில் உறங்குவதுபோலப் புருஷர்களெல்லாம் உறங்கினார்கள். ஸ்திரீகளொருபக்கமும் புருஷர்களொரு பக்கமுமாகத் துயரத்துடனே படுத்தார்கள். சிலர் மரத்தடியிலும் மணல் மேடுகளிலும் மயில்போலவும் அன்னங்கள் போலவு முறங்கினார்கள். சிலர் தண்ணீர்த்துறையிலே பவழக்கொடிகள் போலப் படுத்திருந்தார்கள். சிலர் குங்குமமலையிலே பனிக்குமிழி எழும்பியிருக்கிறது போலத் தனங்களிலே தூளிகள் படிய நித்திரை போனார்கள். சிலர் கரங்களையே தலையணையாக வைத்துக்கொண்டு உறங்கினார்கள். சிலர் புருவங்கள் துவளக் கல்லுகளின்பேரில் படுத்துக்கொண்டவர்களும், உடுத்த வஸ்திரத்தின் மேல் முன்றானையின்மேல் தூங்கினவர்களும், தழைகளின் மேலே தூங்கினவர்களும் இப்படியாகச் சகல ஜனங்களும் சரீர வருத்தங்களினாலும் திகைத்துப் பதைத்து அசைவற் றுறங்கினார்கள்.

ஸ்ரீ ராமன் சுமந்திரனை அழைத்து, இரகசியமாய் ஒரு வசனஞ் சொல்லுகிறார். இந்த ஜனங்கள் என்னிடத்தில் வைத்திருக்கும் மிகுந்த அன்பினாலேயல்லவா அதிக துயரத்துடனே வந்து சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் போகச் சொல்லி எவ்விதமாய்ச் சொன்னாலும் போகார்கள். ஆதை

யால் நீர் அயோத்தியாபுரிக்குப் போனால் அதைப் பார்த்துத் தேர் திரும்பிற் றென்றும், நானும் பட்டணத்துக்கு வந்து விட்டேனென்றும் எண்ணிச் சகல ரும் பட்டணம் போய்ச் சேருவார்கள். நீர் அவ்வளவு உபகாரம் என்னைப்பற் றிச் செய்யவேண்டு மென்று ஸ்ரீ ராமர் கேட்க, சுமந்திரன் அதிக துயரத் துடனே பிரலாபித்து, அவரை நோக்கிச் சொல்லுகிறான். சுவாமி! உம் மிடத்தில் மிகுந்த அன்புடையவன்போல உம்மைக் கொண்டுவந்து ஆரணியத் தில் விட்டுவிட்டுப் பட்டணத்திற் போய் அத்துக்கங்களைப் பார்க்கிறதற்கு நான் தான ஏற்படவேணும்? இரும்புபோல நெஞ்சையுடைய நான் மகாராஜாவின் சமுகத்துப்போய் ஸ்ரீ ராமனைக் காட்டிலே விட்டு வந்தேனென்று சொல்லவா? அல்லது அழைத்துக்கொண்டு வந்தேனென்று சொல்லவா? அநேக நாளாய்ப் பழகி யிராநின்ற நான் என் வாக்கினாலே எங்கள் இராஜாவைப் பார்த்து, நீர் அனேகம் தபசுசெய்து பெற்ற பிள்ளையையும், புஷ்பத்திலு மிருதுவான பாதத்தையுடைய ஸ்திரீயுடனே தம்பியையும் ஆரணியத்தில் விட்டு என் பிராணனுக்குத் தீங்கு இல்லாமல் வந்து சேர்ந்தேனென்று சொல்லுவேனே? அனேக ஜனங்கள் போயிருக்கிறபடியால் எப்படியு மழைத்து வருவார்க ளென்று வழிபார்த்து உருகிக்கொண்டிருக்கின்ற இராஜாவுக்கு உம்முடைய செய்தியைச் சொல்லுவேனே? அல்லவென்று எமதூதனுகப் போவேனே? ஐயோ! இப்போது இச்செய்தி இராஜாவுக்கு நான் போய்ச் சொல்லுவே னையின், உடனே அவர் பிராணன் போய்விடுமே. இப்படிப் போய்ச் சொல்லு கிற என்னிலும் கைகேசி நல்லவளாய்க் காண்கின்றதே என்று பலவாறுக இடியோசை கேட்ட பாம்புபோல நடுங்கிப் பயந்து அழுது துயரத்துடனே சேவித்துப் பூமியில் விழுந்து புரண்டான். அப்படி விழுந்து பிரலாபியா நின்ற சுமந்திரனை ஸ்ரீ ராமர் கரங்களால் வாரியெடுத்து மார்பிலே தழுவிக் கொண்டு, கண்ணீர்களைத் துடைத்து, மெய் - வாய் - கண் - மூக்கு - செவியென் னும் பொறி ஐந்துக்கும் மனம் - புத்தி - அகங்காரம் - சித்தம் என்னும் கர ணம் நான்குக்கும், அப்புறப்பட்ட ஞானத்துக்குத் தோன்றும் காட்சியை யுடைய ஸ்ரீ ராமன் சொல்லுகிறார்.

ஐயா மந்திரி! பூமியில் சரீரமென்பதைக்கொண்டு பிறந்தால் வரவேண் டியதெல்லாம் வருமென்று தெளிந்திராநின்ற விவேகத்தையுடைய நீர் இப் படி தருமத்தை மறந்து கிலேசப்படலாமோ? முன்னே கீர்த்தியைக் கொடுத் துப் பின்னே உறுதியைக் கொடாநின்ற தருமமென்னும் பேரின்பம் வரு வதா யிருக்கச்சே, நடுவே கொஞ்சம் துன்பம் வந்தால் அதற்குப் பயப்பட்டு, அப்பெரிய காரியத்தை விட்டுவிடுவார்களா? யுத்த சன்னத்தமாய் புறப்பட்ட வீரன் இரணக்களத்துக்குப் பயப்பட்டு நிற்கலாமா? இச் சூரியகுலம் தருமம் தப்பாமல் நடந்துவந்தது. இதில் நான் பிறந்து தருமந் தப்பிப் போயிற்றென் னும் பேர் வரலாமா? இராஜாவினிடத்தில் என்னை வனத்திற் கொண்டு போய் விட்டுவந்தேனென்று சொல்லுவது அவர் வாக்குப் பிசகாமல் நடந்த தானபடியால் அவருக்கு அது தவமேயன்றி வேறல்ல. அவர் வார்த்தை யைச் சிரசாக வகித்துக்கொண்டு ஆரணியத்துக்குப் போவது எனக்கும் அதுவே தவம். ஆகையால் நீர் என்ன நிமித்தியமாய் அங்கலாய்க்கிறீர்? நீர்

ஸ்ரீ பாலகிருஷ்ண லீலைகளில்.

போய்ச் சேர்ந்தவுடனே வசிஷ்ட மகா முனிக்கு என்னுடைய வந்தனை சொல்லி, அவரையும் அழைத்துக்கொண்டு இராஜாவினிடத்திற்குப்போய் என்னுடைய சமாச்சாரம் அவரைச் சொல்லச் சொல்லும். அதுவுமல்லாமல் வசிஷ்ட மகாமுனியுடனே என் தம்பி பரதன் வந்தவுடனே அவனுக்குச் சகல தருமசாஸ்திரங்களுஞ் சொல்லச்சொல்லி, தேவாலயம் பிரம்மாலயங்களுக்கு யாதொரு குறைவுமில்லாமல் பூசை நிவேதனங்கள் நடக்கும்படி செய்யச்சொல்லும். ஒரு வேளை அந்தப் பரதன் என்னைப் பிரிந்திருக்கிறேனென்று அங்கலாய்க்கப்போகிறான். அவனுக்குத் தைரியஞ்சொல்லி வைத்திருக்கச் சொல்லும். தன் தாயாரால் இப்படி நடந்ததென்று அவள்பேரில் கோபம் பண்ணப்போகிறான்! என்னிடத்தில் எத்தனை அன்பாயிருக்கிறானே அந்தப்படி தாயாரிடத்திலும் பயபக்தியாயிருக்கச்சொல்லி, இவ்வளவு வரம் நான் கேட்டுக்கொண்டே னென்று சொல்லச்சொல்லும். நீரும் பரதன் வந்தவுடனே இவ்வாறுகவே அவனுக்குச் சொல்லும். நீர் வசிஷ்டருடனேகூட இராசாவினிடத்திற்குப் போய் அவருடைய கிலேசந் தீரத் தேறுதலைச் சொல்லி, பின்பு பதினன்குவருஷ மானவுடனே வந்து சேவித்துக் கொள்ளுகிறேனென்று சொல்லி, வசிஷ்டரைக்கொண்டு மனம் தேறப் பண்ணிக்கொண்டிரும். என் தாய்மார் மூன்று பேருக்கும் என்னுடைய தெண்டன் சொல்லி, இராசாவைக் கிலேசப்பட வொட்டாமல் தேற்றிக்கொண்டிருங்களென்று சொல்லும் என்று இப்படியாக ஸ்ரீ ராமர் சொல்ல, சுமந்திரனவன் அவ்வார்த்தைக்கு மறுவார்த்தை சொல்லலாகா தென்பதனலே ஊழ்வினை இதுதானென்றெண்ணிச் சேவித்துக்கொண்டு, சீதையைப் பார்த்து நமஸ்காரம் பண்ணினன். அப்போது சீதையானவள் மந்திரியைப் பார்த்து, மகாராஜாவுக்கும் அத்தைமாருக்கும் என்னுடைய தெண்டன் முன்னே சொல்லும். என் தங்கைமாருடனே நான் வளர்த்த கிளியையும் பூவையையும் பார்த்துப் போஷியுங்களென்று சொல்லுமென்று சொல்லினள். அதுகேட்ட சுமந்திரன் விம்மிவிம்மி அழுது, இவ்வளவு பேதைமைத்தன மூண்டாயிருக்கிற இம் மகாலட்சுமியா ஆரணியத்துக்குப் போகிறதென்று தேம்பித்தேம்பி, ஸ்ரீ ராமன் தேற்றினலும் தேறாமல் அழுது சோர்ந்து, பின்பு ஒருவாறுகத் தேறினவன்போல, சுவாமி! விடை கொடுத்தருளுமென்று தொழுது கொண்டு, இலட்சுமணரைப் பார்த்துத் தாங்கள் எதாகிலும் ஆக்யாபிக்கிறீர்களாவென்று கேட்டான். அதற்கு இலட்சுமணர் சொல்லுகின்றார். ஐயா! என்னுடைய இராஜாவுக்குக் கொடுத்த இராச்சியத்தை ஒரு ஸ்திரீக்குத் திரும்பக் கொடுத்த சத்திய வந்தனை இராஜாவென் றெண்ணி இன்னஞ் சில வார்த்தை சொல்லுகிறதற்குக் கூட இருக்கின்றதா? மகன் காட்டிற்போய் காய்கனி சாப்பிட, தாம் நல்ல திவ்வியான்னங்கள் சாப்பிட்டுக்கொண்டு சீவனுடனே இன்னம் தேவலோகம் போகாமலிருக்கும்படி சரீரத்தை நன்றாய்க் காப்பாற்றச் சொல்லும். பரத மகாராஜனுக்கு ஒரு வார்த்தை! அதாவது, அந்த இராஜாதிராஜன் இந்த இராசாவுடனே கூடப்பிறந்தவரானல், இவருடைய இராச்சியத்தைப் பிடுங்கிக் கொண்டு ஆள்வாரா? ஆகையால் தன்னுடனே தான் பிறந்தவனல்ல, எனக்குத் தம்பியுமில்லை, என்னுடனே பிறந்த நான் சுகமே யிருக்கிறேனென்று சொல்லுமென்று இலட்சுமணர் சொல்லவும் ஸ்ரீ ராமன் அதைக்கேட்டு, அப்பா

இலட்சுமண ! நீ இவ்விதமான பலனில்லாத வார்த்தைகளை ஏன் சொல்லுகின்றாய் என்றார். பின்பு சுமந்திரன் இலட்சுமணரையும் வணங்கிக்கொண்டு, இரதத்தை அலங்கரித்துக்கொண்டு, தன்னுடைய வித்தியா சாமர்த்தியத்தினாலே ஒருவருக்குந் தெரியாமல் பட்டணத்தை நோக்கித் தேரைவிட்டான். ஸ்ரீ ராமனும் சீதையினுடைய பதிவிரதா தருமமும் தம்பியும் தம்முடைய கிருபையும் வாக்கும் உணர்வும் தகைமையும் கோதண்டமும் இதுகளையே தமக்குச் சேனைகளாகக் கொண்டு, அன்று இராத்திரியில் அப்பால் நடந்தார். ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்கு வந்தால் இராட்சதாளைச் சங்காரம் பண்ணுவார் என்று அவர்கள் செய்கிற பாவம்போல இருக்கின்ற இருளானது, நடந்து போகிற வரைத் தடுக்கிறதுபோல மூடிக்கொண்டது. அவ்விருட்டைக் கெடுக்கிற நிமித்தம் ஆகாயம் கைவிளக்குப் பிடிக்கிறதுபோலச் சந்திரனுதயமானான். தருமமானது தன்னை மனதிலே நன்று யூன்றி வைத்துக்கொண்டு பாபங்களையெல்லாம் எரித்துப்போகிற ஸ்ரீ ராம லட்சுமணரைச் சந்தோஷத்துடனே பார்க்க வந்த அத் தருமத்தினுடைய முகம்போலச் சந்திரன் பிரகாசித்தான். அந்நிலவினுடைய பிரகாசம் இவர்களுடைய பாதாரவிந்தங்கள் ஆரணியத்தில் நடக்கிறபோது உறுத்துமென்று எண்ணி, பூமியெல்லாம் பஞ்சுகளைப் பரப்பி வைத்ததுபோல வெள்ளை நிறமாய்ப் பிரகாசித்தது. ஸ்ரீ ராமனுடைய வருத்தத்தைப் பார்த்த செங்கழுநீர்ப் புஷ்பமும், அல்லிப் புஷ்பமும் மலராமல் முகங்குவிந்து சோர்ந்து போயிற்றென்றால், மற்றப் புஷ்பங்கள் மலர்ந்ததென்று சொல்லக்கூடுமா ? மகா மிருதுவான பாதத்தை யுடைத்தான சீதையும் ஸ்ரீ ராமன் பிறகே அவ்விருட்டில் பாதங்கள் கொப்பளித்ததும் தெரியாமல் தொடர்ந்து நடந்தார்கள். மனதில் அன்பென்பது ஒன்றுண்டானால் எவ்வருத்தமும் தெரியாதல்லவா ! இப்படியாக மூவரும் சூரியன் உதயமாவதற்கு முன்னே தெற்குத்திசையில் இரண்டு யோசனைதூரம் நடந்தார்கள். முன்னர் அழுதகண்ணுடனே இரதமேறிக் கொண்டுபோன சுமந்திரன் இரண்டு நாழிகையில் அயோத்தியாபுரிக்குப் போய்ச் சேர்ந்து வசிஷ்டரைக் கண்டு சேவித்துக்கொண்டு, நடந்த சமாச்சார மெல்லாம் சொன்னான். சகலமுந் தெரிந்த வசிஷ்டர். கேட்டு, ஐயோ ! இராஜாவினுடைய ஆயுளு முடிந்ததென்றார். ஸ்ரீ ராமனுக்கு நானும் வேண்டிய தெல்லாம் சொன்னேன் அவர் தருமத்துக்கே உறுதி பார்த்தார். விதியை யார் வெல்லுவார்கள் ? என்று கிலேசித்துச் சுமந்திரனையுங்கூட அழைத்துக்கொண்டு இராஜாவினிடத்திற்குப் போனார். ஸ்ரீ ராமன் இரதத்தின்பேரில் வந்ததாக அங்கிருந்த ஜனங்களெல்லாம் எண்ணி இராஜாவைச் சுற்றிக்கொள்ள, ஸ்ரீ ராமனைக் காணமல் சுமந்திரனுடைய முகக்குறிப்பைப் பார்த்து, வரவில்லையென்று நிச்சயம் பண்ணிக்கொண்டு கண்களிலே தண்ணீர் பெருக அழுதுகொண்டேயிருந்தார்கள். அப்போது, சகலரும் தேர் வந்தது வந்ததென்று சொல்லிக் கொண்ட வார்த்தையைத் தசரதமகாராஜன் கேட்டு, ஸ்ரீ ராமன் வந்தானென்பதாய் மயக்கம் தீர்ந்து கண்ணை விழித்துப் பார்த்து, வசிஷ்டரை நோக்கி, சுவாமி ! ஸ்ரீ ராமன் வந்தானென்றார். வசிஷ்டர் வரவில்லையென்று சொல்ல மாட்டாமல் மனம் தேங்கிக் சும்மாய் நின்றார். அவர் முகக்குறிப்பைப் பார்த்து வரவில்லை யென்பதாய்த் திரும்பச் சோர்ந்தார். அதுகண்டு வசிஷ்டர் இத்

துக்கத்தை நான் கண்ணிலல் பார்க்கமாட்டேனென்று அவ்விடம்விட்டப்புறம் போனர். பின்பு ஒருதரம் இராஜா கண்ணீத்திறந்து பார்த்துச் சுமந்திரனைக் கண்டு மகன் தூரப்போய்விட்டானே? கிட்ட விருக்கிறானே? என்று கேட்டார். அதற்கவன் சுவாமி! இலட்சுமணரும் சீதையும் கூடத்தொடர, ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்குப் போனர் என்று சொன்னன். அதுகேட்ட மாத்திரத்தில் இராஜாவுக்குப் பிராணன் போய்விட்டது. தேவேந்திரன் முதலான தேவர்களும் சந்திரனுக்குச் சமானமான விமானத்தைத் தாங்கிக்கொண்டுவந்து, நம்முடைய தந்தைக்குத் தந்தை வந்தாரென்று மனச் சந்தோஷத்துடனே, அவ்விமானத்தி லெழுந்தருளப் பண்ணிக்கொண்டு, பிரம்மலோகத்துக்கும் உயர்ந்த மீளாத லோகமான பரமபதமென்னும் திருநாட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். இவ்விடத்தில் இராஜாவுக்குச் சுவாசமில்லையென்றும், சரீரம் பதைத்துக்கொண் டிருந்ததும் காணேமென்றும், கௌசலை யறிந்து, சரீரமெல்லாம் தொட்டுப் பார்த்துப் பெருமூச்சுவிட்டுப் பிராணன் போய்விட்டதென்று தெரிந்து துக்கித்துக்கொண்டு பூமியில் விழுந்து, கோடைக் காலத்து வெய்யலி லகப்பட்ட எலும்பில்லாத ஜீவசெந்துவைப்போலத் துக்காக்கினியில் வெந்தாள். பிரமன் முதலான பிரபஞ்சங்கள் முதலிய யாவற்றையும் பெற்ற ஸ்ரீமந் நாராயணனைப் பெற்றெடுத்த கௌசலை துணைபிரிந்த அன்றிற் பட்சியைப் போலவும், மாணிக்கமிழந்த நாகம்போலவும், தேவமிர்தத்தை இழந்த தேவர் போலவும், துயரத்துடன் விம்மி அருகே நின்ற கைகேசியைப் பார்த்து, ஆ கைகேசி! உன் புத்தியினலே இராச்சியம் வேணுமென்று பீடித்து வரம் வாங்கிக்கொண்டல்லவா இப்படி முடித்தாயென்று சொல்லி இராஜாவினுடைய மார்பிலே மின்னல்போல் விழுந்து புரண்டு ஐயோ! இராஜாவானவர் ஆயுதங்களாலேயே மாளாமல் பிள்ளைகளாலே மாண்டாரே! கொஞ்சமாயினும் இரக்கமில்லாதவ னிப்படி விட்டுப் போட்டு ஆரணியத்துக்குப் போனனே என்று சொல்லிக்கொண்டு தண்ணீர் வற்றிப்போன குளத்து மச்சத்தைப் போலச் சரீரம் துடித்துத் தடுமாறிப் பதைத்து மெலிந்தாள். ஓ கடவுளே! உலகத்தில் பிள்ளைகள் வேணுமென்பது தன்னை இரட்சிக்கவேண்டு மென்றல்லவோ கோருவது. இச்சமயத்துக்கு வந்து பயப்படாதே யென்று சொல்லவில்லையே. மகனே 'பிதாவைக் கொன்றன் கொன்றன்' என்று சொல்லி ஆவிகுலைந்தாள். பூர்வத்தில், தேவதைகள் நிமித்தம் சம்பராசுரனை ஜெயஞ் செய்தீரே அதினல்லவா தேவர்கள் நிலைத்தார்கள். அவர்களுக்கு இப்போது விருந்தாகப் போனீரோ? என்று ஒரு கஜேந்திரனைப் பிரிந்த பிடியானையைப்போல அலறி அழுதாள். யாகாதி முதலியதுகள் அநேகம் பண்ணினீரே அப் புண்ணிய பலன்கள் அனுபவிக்கின்றீரோ? சத்திய வாக்கியத்தினுடைய புண்ணிய பலன்களை அனுபவிக்கின்றீரோ? மனுவிக்கியான சாத்திரப்படிக்கு இராச்சியபாரம் பண்ணிக்கொண்டு வந்தீரே அப்புண்ணிய பலன்களை அனுபவிக்கின்றீரோ? என்று சொல்லிச் சொல்லித் தேவர்கள் முதலான சகல ஜனங்களும் கேள்விச் செல்வம் அனுபவிக்கும்படியாய் ஸ்ரீ ராமனைப் பெற்ற கௌசலா தேவி இவ்வாறுக அங்கலாய்த்தாள். சக்கிரவர்த்தியினுடைய பெருந்தேவி இப்படிச் சொல்லி அங்கலாய்க்க, அவளுக்குத் தோழியான சுமித்திரையும் அப்படியே உருகிக் கரைந்து துடித்துப் பதைத்து அங்கலாய்த்தாள். மற்ற அறுபதி

ஞயிரம் ஸ்திரீகளும் சமுத்திரம்போல் இரைந்துகொண்டு, மயில் கூட்டங்கள் போல் வந்து இராஜாவைச் சுற்றிக்கொண்டார்கள். மேலும், இவர்கள் விஷம் சாப்பிட்டவர்கள்போல பயந்து நடுங்கி நின்று ராஜாவைத் தேவலோகத்திலும் போய்த் தொடருவோ மென்று வன்கண்களால் அழாமல் இருந்தார்கள். காலற்றுப் பிரவாகம் வரப் பர்வதத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்ற புஷ்பக் கொடிகள்போல இராஜாவைச் சுற்றிக்கொண் டிருந்தார்கள். சொல்லினூலே உயிரிழந்தும் பிள்ளைகள் பிரியப் பிராணன் போய்விட்ட சத்தியவந்தனை இராஜாவினுடைய சரீரத்தைப் பிடித்துக்கொண்டு விடாமல், மயக்கமென்னும் சுருமீன்களிருக்கிற பிறவி யென்னும் சமுத்திரத்தைத் தாண்டுவதற்கு ஒரு தரம் போய்த் திரும்பி வந்திருக்கும் ஓடத்தைக் காத்துக்கொண்டிருந்து தாமும் போகிறவர்களா யிருக்கிறவர்கள்போல இருந்தார்கள்.

அப்போது, சுமந்திரன் வசிஷ்ட மகாமுனி யிடத்துக்குப் போய் இராஜாவின் செய்தியைச் சொல்ல, அவர் அக்கணமே வந்து விதிசெய்த காரியத்தைப் பார்த்து விம்மி மனது தளர்ந்து, வரங்கொடுத்து மகனைக் காட்டுக்கு அனுப்பினவன் கடமை தீர்த்துக் கொண்டாயா! அப்பாவென்று எண்ணி யிரங்கிச் சமுத்திரத்திலே கப்பலுடைய, அதிலிருந்த எஜமானும் மாண்டுபோக, அதெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும் மீகாமனைப்போல் மனது கிலேசித்தார். பிறகு இராஜாவுக்கு நடத்தவேண்டிய காரியங்களுக்குப் பிள்ளைக ளொருத்தரும் சமீபத்திலில்லையே! கைகேசியின் பிள்ளை வந்தால் நடத்த வேண்டியது நடக்குமென்று ஸ்திரீ கூட்டங்களுக்கு நடுவே கிடந்த இராஜாவினுடைய சரீரத்தை வாசனை தங்கிய தயிலத்திற் சேர்த்தார். அப்போது, வசிஷ்டரானவர் இராஜாவினுடைய அறுபதினாயிரம் ஸ்திரீகளையும் பார்த்து, அவர்கள் நினைத்திருக்கும் மனோபாவமும் தெரிந்து, இராஜாவுக்கு உரிமை செய்கிற நாளையில் நீங்கள் அக்கினிப் பிரவேசம் பண்ணுங்களென்று சொல்லி அனுப்பிவிட்டு, கௌசலை சுமித்திரை இருவரையுந்தேற்றி, அவர்களைத் திருமாளிகைக்குப் போகச்சொல்லி அனுப்பிவிட்டு, பரதனுக்கு இராஜன் ஓலையாக ஒரு ஓலை எழுதிக்கொடுத்து, சீக்கிரமாய் அழைத்துக்கொண்டு வாருங்களென்று தூதர்களைக் கேகயதேசத்துக்கு அனுப்பினார். இவ்விடத்தில் இராஜரீக காரியம் பரதன் வரும் வரைக்கும் மந்திரியான சுமந்திரன் பார்த்துக்கொண்டு வருவதாய்த் திட்டம்பண்ணி, வசிஷ்டமகாமுனி தம்முடைய திருமாளிகைக்குப் போய்ச் சேர்ந்தார்.

இவர்கள் சமாசாரம் இப்படியிருக்க, சூரியன் சமுத்திர சத்தமான பேரிகை முழங்க, தேவர்களெல்லாம் தோத்திரம்பண்ண, பூலோகத்தாரெல்லாம் நமஸ்காரஞ்செய்ய, கிரணங்களென்னும் ஆயுதங்கள் பிரகாசிக்க, இரத்தினகசிதமான தேரின்மேலேறிக்கொண்டு என்னுடைய வழிவந்த தசரத ராஜன் பரமபதமடைந்தான். அவன் பிள்ளைகளோ துலைவில் போய்விட்டார்கள். அவர்கள் வருமட்டுக்கும் நானே இவ்வுலகத்தைக் காத்துக்கொண்டிருக்கிறேனென்று அதிவேகமாய் புறப்பட்டதுபோலப் புறப்பட்டார். அச்சோலையில் துயரத்தோடு படுத்திருந்த பிரஜைகள் ஸ்ரீ ராமர் இருக்கின்ற

ரென்பதாய் நித்திரைவிட் டெழுந்திருந்து பார்க்க, கருணைநிதியான ஸ்ரீ ராமனைக் காணுமல் திடுக்கிட்டுப் பெருமூச்செறிந்து, அதிக துக்கத்தையடைந்து, உறங்காத கண்கள் உறங்கி நம்முடைய பிராணனை மாளப்பண்ணிக்கொண்டோமென்று விழுந்து புரண்டு, எட்டுத் திசைகளுமோடித் தேடி, விழுந்தெழுந்திருந்து, ஐயோ! நம்மைத் துக்க சமுத்திரத்தில் விட்டுப் போய்விட்டாரே என்பவர்களும், ஸ்ரீ ராமருடைய காரியத்தைப் பார்க்கில் பொல்லாதவராய்க் காண்கின்றது. தண்டகாரணியம் பூமியிலேதானே யிருக்கின்றது. ஆகட்டும் விடுகிறோமா என்றும், இவ்விதமாகச் சொல்லிச்சொல்லி ஓடித்திரிந்து தடுமாறும் போது இரதத்தினுடைய சக்கரத்தின் அடி பட்டணத்துக்குச் செவ்வையாய்ப் போயிருக்கின்றதைக் கண்டு, யாவருக்கும் ஜீவன்வந்து, ஒருத்தரும் பயப்படாதேயுங்களென்றும், ஸ்ரீ ராமன் அயோத்திக்கே போய்ச் சேர்ந்தாரென்றுஞ் சொல்லிக்கொண்டு, மேககர்ச்சனையும் சமுத்திரகோஷமுங்கூடிச் சத்தித்தது போலச் சந்தோஷத்துடனே ஆர்ப்பரித்தார்கள். பாம்பினுலே கடிபட்டவர்கள் அதின் விஷத்தினுல் மயங்கிப் பிராணன்போய் அதிலே தானே ஓர் அமிர்தமுண்டாய் அவ் விஷம் தீர்ந்து பிராணன் வந்தவர்கள்போலச் சகலரும் சந்தோஷத்துடனே பட்டணம் நோக்கி ஓடிப் பார்த்து, அத்தேர்ச்சுவடு திரும்பாமல் பட்டணத்துக்குத் தானே போனதைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடனே சமுத்திரம் பொங்கிப் பூமியெல்லாம் வெள்ளம்பெருகி ஓடிப் புரண்டு சமுத்திரத்தில் அடங்கினதுபோலச் சகலரும் அயோத்தியாபுரியே போய்ச் சேர்ந்தார்கள். அப்படிப் போய்ச் சேர்ந்தவர்கள் இராஜன் பரமபதமடைந்த சமாசாரங் கேட்டு மனம் குன்றி, பிராணன் போய்விடுகிற சரீரங்கள் போலப் பதைத்து விழுந்து அழுததை நம்மால் சொல்லி முடியுமா? உடனே ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்குப் போன சமாச்சாரம் கேட்டார்கள். அப்படி கேட்டவர்க்குப் பிராணன் உடனே போய்விடும். ஆனல் அவரவர்களுக்கு ஆயுள் ஏற்பட்டிருக்கிறபடியால் சகலரும் குற்றுயிராய் விழுந்து புரண்டு சோர்ந்தார்கள். அப்போது அந்த ஜனங்களை வசிஷ்ட மகாரிஷி பார்த்து இந்த அபவாதத்துக்குப் பயந்துதானே நானும் பிராணனை வைத்துக்கொண்டிருக்கிறேன். நடக்க வேண்டியது நடந்தது. நீங்கள் துயரப்படவேண்டாமென்று தேறுதலைச் சொல்லி அவர்களுடைய மனதின் பதைபதைப்பை நீக்கினர். வசிஷ்ட மகாமுனியின் வசனங்களினுலே வடவானலுக்குப் பயந்து சமுத்திரம் அத்துமீறுமல் எப்படி யிருக்கின்றதோ அப்படிபோலச் சகல ஜனங்களும் பதைப்படங்கியிருந்தார்கள்.

இப்பால் பிதா வாக்கியத்தினலும் தேவதைகள் தவத்தினலும் இருளில் நடந்த கோதண்டபாணியாகிய ஸ்ரீ ராமனுடைய செய்கையைச் சொல்லுகிறோம்,

தைலமாட்டுப் படலம் - முற்றிற்று.

கங்கைப் படலம்

மை - இரத்தினம் - நீலம் - இவைகளைப் போலத் திருமேனியையுடைய ஸ்ரீ ராமர் தம்முடைய சரீரத்தினுடைய காந்தியினாலே சூரியனுடைய பிரகாச மழுங்க, மிகவும் சிறுத்த இடையையுடைய சீதாப்பிராட்டியும் தம்பியும் கூடவர, வழிகளில் பெண்ணன்னங்களும் ஆண் அன்னங்களும் கூடிக்கூடி விளையாடு கிறதைக் கண்டார். அவ்விடத்திலிருக்கிற தாமரைக் கமலங்களெல்லாம் ஸ்ரீ ராமனுடைய பாதத்துக்குச் சமானமாக மாட்டாமல் பிரகாச மழுங்கியிருப் பதைச் சீதை கண்டாள். இப்படி யிருவரும் மேகமானது மின்னலுடனே வருகிறதுபோலவும், மதயானை பிடியுடனே வருவதுபோலவும் நடந்தார்கள். கழனி வெளிகளில் ஸ்திரீகளுடைய கண்கள்போ லிருக்கிற நீலோற்பல புட்பங் களைக் களையாகப்பறித்து எறிந்து கிடக்கிறதைக் கண்டார்கள். அநேக சிங்கா ரங்களோடு கூடிய பூஞ்சோலைகளும் கரும்பு ஆலைகள் முதலானவைகளையும் சீதை கண்டு, ஸ்ரீ ராமனுடனே விளையாடிக்கொண்டு நடந்தாள். சந்தனமர முதலான விருட்சங்களும், மணற் குன்றுகளும், நதிகளும், எருமைகள் செந் நெற்கதிர்களை மேய்ந்து கடைவாயில் ஒழுகும்பால் தண்ணீரிற்போய் விழ, அதிலிருந்த கயல்மீன்கள் துள்ளி எழும்புகிறதையும், அதிலிருக்கும் அன்னப் பட்சிகள் போல ஸ்திரீகளிறங்கி விளையாடுகிற நாடுகளையும் தாண்டிக் கங்கா நதிபோய்ச் சேர்ந்தார்கள். அக் கங்காதீரத்தில் வாசமாய்த் தபசுசெய்து கொண்டிருக்கிற ரிஷீஸ்வரர்களெல்லாம் இவர்கள் வருதலைக்கண்டு, மிகவும் காட்சியுடனே நாம் போய்ச் சேருகிற பரமபதந்தானே நமக்கெதிரில் வந்த தென்று சந்தோஷித்து, ஸ்ரீ ராமனையும் சீதா பிராட்டியையும் கண்டு ஆனந்த பரவசராய், கண்களித்து எதிர்கொண்டு வேதகோஷத்துடனே ஆனந்த நிர்த் தனமாடித் தங்கள் பிள்ளைகள் தூரதேசம் போயிருந்து அநேக நாள் காணமல் நினைத்து விசாரப்பட்டுக் கொண்டிருக்குஞ் சமயத்தில் அவர்கள் வந்தால் எத்தனை சந்தோஷமோ அத்தனை அன்பும் சந்தோஷமாய்த் தங்கள் பர்ண சாலைக் கழைத்துக் கொண்டுபோய், தங்கள் கண்களினுடைய ஆனந்த பாஷ் பத்தினாலே நீராட்டி, இன்சொல்லென்னும் புஷ்பஞ் சூட்டி, அன்பென்னும் அமிர்தத்தை யூட்டி, வழிநடந்து வந்த வருத்தந்தீர பலவித உபசாரஞ்செய்து, ஸ்ரீ ராமா! காயும் கனியும் கிழங்குகளும் நல்லதாய்ப் பார்த்துக் கொண்டுவந் திருக்கிறோம். கங்கையிலே ஸ்நானஞ் செய்து நியம நிஷ்டை முடித்துக் கொண்டு அமுது செய்யுமென்று சொன்னார்கள். அப்போது ஸ்ரீ ராமன் ஸ்திரீ ரத்தினமான சீதையின் கரத்தைப் பிடித்துக்கொண்டு, தேவர்களும் கண்டு சந்தோஷிக்கப் பூர்வத்தில் தம்முடைய பாதாரவிந்தத்தில் பிரமதேவன் ஆராதித்த கங்கையிலே ஸ்நானம்பண்ணினார். அதற்குக் கங்கை அதிக சந்தோ ஷமாய்ச் சகல லோகத்திலிருக்கிறவர்களுடைய பாவங்களையெல்லாம் போக்கடித் துக்கொண் டிருந்தேன். இன்றையத்தினம் என் பாவத்தையும் போக்கடித்துக் கொண்டேன். எனக்கும் நல்லகதி கிடைத்ததென்று சந்தோஷித்தாள். ஸ்ரீ ராமனுடைய சடாமகுடத்திலே கங்கை பிரகாசிக்கின்ற படியினாலேயும், ஒரு ஸ்திரி எதிரேயிருந்து பார்க்க நீராடுகிறபடியினாலேயும், சந்திரசேகரனை

பரமசிவனைப்போல பிரகாசித்தார். பின்னையும் பால் சமுத்திரத்தில் தாம் மகர்லட்சுமியுடனே யோகநித்திரை நீங்கி எழுந்திருந்த பாவனை போலவும் பிரகாசித்தார். அங்கே யிருக்கின்ற புட்பக்கொடிக ளெல்லாம் சீதையைப் பார்த்து நாணி வணங்க, அன்னங்கள் நடைக்குத் தோற்றுப் பயந்து ஒதுங்கிப் போகத் தாமரை மலர்கள் பாதத்திற்கு நாணுற்றுத் தண்ணீரி லொளிக்க, கயல்மீன்கள் கண்களுக்கு நாணி விலகிப்போக ஸ்நானம் பண்ணினாள். அக் கங்கைக்குத் தேவனான சிவனுடைய சடையிலே யிருக்கிற எருக்கமலர் கொன்றை முதலானதுகளுடைய வாசனை அடைந்திருந்ததுபோய், சீதையி னுடைய கூந்தலின் பரிமளமான சவ்வாது முதலானவைகளுடைய வாசனை புதிதாயுண்டாய்ப் பரிமளித்தது. சீதை தனியே வருந்திருக்கின்றாளென்று நுரையென்னும் நரைக் கூந்தலையுடைய கங்கையான செவிலித்தாய் அலை யென்னும் கரங்களினாலே ஸ்நானம் பண்ணிவைத்தாள். சீதையினுடைய அளகம் அந்த கங்காசலப் பிரவாகத்தில் நீண்டு கறுத்துப் பிரகாசிக்கிறது. எவ்வாறு யிருக்கிறதெனில் யமுனை நதியினுடைய கறுத்த ஜலம் வந்து சங்கம மாய்க் கலந்து பிரவாகமாகிறதுபோல பிரகாசித்தது. அந்த கங்காசலத்திலே சீதை ஸ்நானம்பண்ணி எழுந்திருந்து, பூர்வத்தில் திருப்பாற்கடலில் அவதாரம் பண்ணி எழுந்திருந்ததுபோலப் பிரகாசித்திருந்தாள். அக்கங்காநதி பூர்வத் தில் இந்த ஸ்ரீ ராமச்சந்திரனுடைய திருவடியைத் தீண்டிக்கொண்டு பிரவாக மாய்ப் பூமிக்கு வந்து சகல லோகத்தாருக்கும் சகல பாவங்களைத் தீர்த்துக் கொண்டு விளங்கியிருந்தது. இப்போது அவருடைய பாதாதிகேசவரைக்கும் தோய்ந்தபடியால், இனி இவ்வுலகத்தார் யாவரும் நரககதி அடையார்களென்று சொல்லவும் வேண்டுமா? இப்படியாகக் கங்கையிலே ஸ்நானம்பண்ணி, பூர்வத் திலே தாம் பிரயாசைப்பட்டுத் திருப்பாற்கடலைக் கடைந்து அதில்வந்த அமுர் தத்தை தேவர்களே நீங்கள் சாப்பிடுங்களென்று கொடுத்தவர், அன்றைய தினம் இருடிகளிடத்தில் காய்கனி கிழங்குகளை விருந்தாய் உண்டார்.

இப்படியாக ஸ்ரீ ராமன் அவ்விடத்தி லிருக்கும்போது, அக் கங்காநதி யில் ஓடம் விடுபவனும் ஆயிரம் ஓடத்துக்கு நாயகனும் பர்வதம் போலத் தோள்களும், கையில் வில்லும் கொம்பு துருத்தி பம்பை முதலான்று சத்திக்க, யானைகள் போலக் கிராதகர் அநேகம்பேர் அநேகம் வேட்டைநாய்களோடு சூழ்ந்துவர, மகா பலமான தொடைகளும், அக்கங்கையினுடைய ஆழமட்டுக் கும் நீண்ட உயர்ச்சியும், செந்தோல் வஸ்திரமும். புலிவாற்கச்சையும், காலிலே செருப்பும் கோடையிடிபோலக் கூற்றுவனும் பயப்படத்தக்க குரலும், பல கறையாற்கட்டிய வீரகண்டாமணியையுடைய காலும், இருளைப்போலக் கறுத் திருக்கிற தலைமயிரும், யாளிபோல நெறித்திருக்கிற புருவங்களும், பனங்காடு போல முன்கை மயிர்களும், எண்ணெயையுண்ட இருளைப்போல மிகவும் கறுத் திருக்கிற மேனியும், அரையிலே வாளும், பாம்பைப்போல பார்வையும், பயித்தி யக்காரனைப்போல வார்த்தையும், வச்சிராயுதம்போல இடுப்பும், மச்ச நாற்ற முடைய சரீரமும், நகைப்பில்லாத முகமும், கோபமில்லாமலிருக்கிற கண்களில். நெருப்புப் பொறி பறக்கிற பார்வையும் இவ்வித சொரூபத்துடனே இருக் கிறவனான குகனென்பவன் அக் கங்கைக்கரையோரத்தில் சிருங்கேரி என்

னும் நகரத்தில் வாசஞ்செய்பவன். அவன் ஸ்ரீ ராமனைக் காணவேண்டு மென்னும் அவாவினுலே தேனும் மீனும் காணிக்கை கொண்டுவந்து, கூட வந்த கிராதகரையெல்லாம் அப்பால் நிறுத்தி, கையிலிருந்த வில்லையும் அரை யிற் கட்டிய வாளையும் வாங்கிவைத்து, நிஷ்கபடமான மனதோடு ஸ்ரீ ராம னிருக்கிற இடத்துக்கு வந்து, வாசற்படியில் நின்ருன். அவன் அழையாத தற்கு முன்னே இலட்சுமணர் நீ யாரென்று கேட்க, அவன் நமஸ்காரம் செய்து, சுவாமி! உம்மைச் சேவிக்க வந்தேன். நான் இக்கங்கையில் ஓடம் விடுபவன். தங்கள் அடியனென்று சொன்னன். அப்போது இலட்சுமணர் அவனை அவ்விடத்தில் நிறுத்தித் தான் ஸ்ரீ ராமனிடத்துக்குப் போய்த் தொழுது, சுவாமி! தேவரீரைக் காணும் நிமித்தம் இக்கங்கையில் ஓடம் விடு கிறவர்களுக்கு எஜமானுகிய ஒருவன் அநேக கூட்டத்துடனே வந்திருக்கிரு னென்று சொல்ல, ஸ்ரீ ராமனும் இங்கே அழைத்துவா வென்று ஆக்கியாபித் தார். இலட்சுமணர் அழைத்துக் கொண்டு வந்தார். அக்குகன் ஸ்ரீ ராமனைக் கண்களால் தரிசித்து மனது களித்து, தலைமயிர்களெல்லாம் பூமியிலே படிய சாஷ்டாங்கமாகச் சேவித்து எழுந்திருந்து, பயபக்தியுடனே கையினுல் வாய் புதைத்துக்கொண்டு நின்ருன். அப்படி நின்ற குகனை ஸ்ரீ ராமன் பார்த்து இவ்விடத்தி லிருவென்று சொல்ல, இராமல் அவன் நின்றபடியே சுவாமி! தங்களுக்குக் காணிக்கை தேனும் மீனும் கொண்டுவந்திருக்கிறேன், தங்கள் திருவுளமென்னவோ தெரியவில்லையென்று சொல்ல, அதுகேட்டு ஸ்ரீ ராமன் அங்கிருக்கும் மகாரிஷிகளைப் பார்த்து, நகைப்புடன் ஒரு வார்த்தை சொல்லு கிருர்: ஓ ரிஷிகளே! யாராகிலும் அன்புடன் கொண்டு வந்தது எதுவாயிருந் தாலும் அதை அமிர்தத்திலும் அதிகமாய்க் கொள்ள வேண்டியது. எப்போது பரிவுடன் கொண்டு வந்தானே அப்போது அந்த வஸ்து பவித்திரமாயிற்று. அதை நாம் அங்கீகரிக்க வேண்டியதுதானே சாப்பிட்டதற்குஞ் சமான மென்று சொன்னர்.

அப்பால் குகனைப் பார்த்து, இன்றைக்கு நாங்கள் இவ்விடத்தி லிருக்கி றோம் நாளைக் காலமே அப்பால் போகவேண்டும் ஆகையால் நீ இன்றைக்கு உன் கூட்டத்துடனே உன் கிராமத்துக்குப்போய், நாளை உதயத்துக்கு ஓடம் கொண்டுவா வென்று சொன்னர். அப்போது சுவாமி! உம்மை இப்படியாய்ச் சேவித்த என் கண்களைப் பிடுங்கி எறிந்துபோடவேண்டும். அப்படிப் பிடுங்கிப் போடமாட்டாமலிருக்கிற கள்ளனை நான் என் கிராமத்துக்குத் தேவரீரை விட்டுப் போகமாட்டேன். தங்களுடைய பாதத் தண்டையி லிருந்து அடிமைத் தொழில் செய்வேனென்று சொல்ல, அவ்வார்த்தையை ஸ்ரீ ராமன் கேட்டு, சீதையினுடைய முகத்தையும் தம்பியினுடைய முகத்தையும் பார்த்து, இவன் நம்மிடத்தில் மிகுந்த அன்புடையவனென்று சொல்லிக் குகனை நோக்கி, நீ எனக்கு அன்பான தம்பிதான். அப்படியே நம்மிடத்தில் இருவென்று ஆக் கியாபித்தார். குகன் சாஷ்டாங்கமாகத் தண்டம் சமர்ப்பித்து, மிகுந்த சந்தோ ஷத்துடனே தன் சேனைகளை அழைத்து, அந்தப் பர்ணசாலையைச் சுற்றியிருக் கச் சொல்லித் திட்டப்படுத்தித் தான் கையில் வில்லெடுத்துக்கொண்டு அரை யிலே வாள் விசித்துக் கட்டிக்கொண்டு அதிக ஜாக்கிரதையாய் இடியுடனே

கூடி யிருக்கும் மேகம்போலக் காத்திருந்தான். அப்போது தாங்கள் பட்டணம் விட்டு வந்த செய்தியெல்லாம் விபரமாய்த் தெரியும்படி இலட்சுமணர் சொல்ல, குகன் கேட்டு, மிகுந்த பரிவுடனே கிலேசித்து, கண்களிலே மலையருவிபோலத் தண்ணீர் வர, இந்த நாதனே நாயகனுய்ப் பெறுவதற்குப் பூமிதேவி பாக்கியம் செய்யாமற் போனுளல்லவா வென்று மிகவும் வருந்தித் துக்கித்துக்கொண்டிருந் தான். அப்போது இராச்சியங்களிலுள்ள பகைகளே வென்று, ஏகச் சக்கிராதி பதியாய் இராச்சியபாரம் செய்து, சகலருடைய இருதயத்திலு மிருக்கிற தசரத மகா ராசாவைப்போல் சூரியனும் மறைந்துபோனுர். ஸ்ரீ ராமன் சந்தியாவந் தன முதலான நியமங்களே முடித்துக்கொண்டு, அமிர்தத்துக்குச் சமானமான சீதையுடனே தருப்பைப் புல்லினு லமைந்திருக்கிற படுக்கையில் வந்திருந்தார். இலட்சுமணர் கையில் வில்லைப் பிடித்துக்கொண்டு பொழுது விடிகிறபரியந்தம் கண்ணிமைக்காமல் காத்துக்கொண்டு நின்ருர். அப்போது நித்திராதேவி எப் போதும் போலவர, நான் திரும்பி அயோத்தியாபுரிக்கு வந்த பிறகு வா? அதற்குமுன் வராதே யென்று இராமானுஜரான இலட்சுமணர் ஆக்கியாபித் தார். நித்திராதேவி சேவித்துக்கொண்டு, சுவாமி! அப்படியே அயோத்திக்கு வந்து சேர்ந்த பிறகு தேவரீரிடத்திற்கு வருகிறேனென்று போய்விட்டாள். இலட்சுமணர் ஸ்ரீ ராமனும் சீதாபிராட்டியும் எளியவர்கள் போலத் தருப்பா சனத்தில் படுத்திருக்கிறதைக் கண்டு, மிகுந்த வியசனத்துடனே கண்களில் அருவி வடிய சித்திரம்போல் வில்லை ஊன்றிக்கொண்டே நின்ருர். குகன் யரனைக்கூட்டங்கள் போல அநேகம் வேடர்கள் சூழக் கையிலே வில்லை வாங் கிக்கொண்டு மனது வெம்பிப் புழுங்கி, கண்களில் தண்ணீர்வரத் தம்பி நிற் கிறதையும் ஸ்ரீ ராமன் படுத்திருக்கிற எளிமையையும் பார்த்து, அருவியோடி யிருந்த பர்வதம்போல நின்றபடி யிருந்தான். அப்போது சூரியன் தேவலோக முதலான உலகங்களி லிருக்கிறவர்கள் யாவரும் இப்படித்தான் இறந்துபோகிற தென்று காண்பிக்கிறது போல முந்நாள் மறைந்து, பின்பு இப்படித் தான் பிறக்கிறதென்று காண்பிக்கிறதுபோல உதயமானுர். தாமரைக் கம்பலங்க ளெல்லாம் சூரியனைக் கண்டு மலர்ந்தன. ஸ்ரீ ராமனைக் கண்டு சீதையினுடைய முகக்கமலம் மலர்ந்தது. ஸ்ரீ ராமன் காலைக்கடன் முதலியவைகளே முடித்துக் கொண்டு ரிஷீஸ்வரர்கள் தொடர்ந்து நிற்கக் குகனைப் பார்த்து, ஓடங்கொண்டு வாவென்று ஆக்கியாபித்தார்.

அவ்வார்த்தையைக் கேட்கவே, குகன் தனது கண்களில் ஜலம் தாரை தாரையாய் வழிய மிகவும் பதைத்து, சீதையுடனே கூட ஸ்ரீ ராமனைச் சாஷ் டாங்கமாகச் சேவித்துக்கொண்டு சுவாமி! அடிமைகளாகிய நாங்கள் பொய் யென்கிற தறியோம். நாங்கள் வாசம் செய்கிறது ஆரணியமே யல்லது பட்டண மல்ல. நாங்கள் மிகுந்த பாவிகள். தாங்களிட்ட ஏவல் செய்யத் தக்கவர்கள். தாங்கள் கிருபைசெய்து எங்கள் நகரத்தில்தானே இருக்கவேணும். இவ்விடத் திலே தேன்தினை தேவர்களுக்கும் யோக்கியமான மாங்கிஷம் இவைகள் மிகுதியா யிருக்கின்றன. துணைக்கு நாங்களிருக்கின்றேம். விளையாடுகிறதற்கு ஆரணியம் இருக்கின்றது, ஸ்நானத்துக்குத்தான் கங்கை யிருக்கின்றது. என் சரீர மிருக்கிறமட்டுக்கும் தாங்களிவ் விடத்திலேயே வாசம் செய்யவேணும்.

வஸ்திரங்கள் போலத் தோல்கள், கட்டில் மஞ்சம் போலப் படுத்துக்கொள்ளு கிறதற்குப் பரண்கள், வாசம் செய்கிறதற்குக் குடிசைகள் முதலியவைகள் இருக்கின்றன். தேவலோகத்து வஸ்துக்கள் வேணுமென்றாலும் அதிசீக்கிரத் தில் கொண்டுவரத் தக்கதாக நாங்க ளிருக்கின்றோம். பதினாயிரம் வேடர் கள் தேவர்களுக்குச் சமானமான பலசாலிகள் தங்களுடைய ஏவலுக்கு ஆஜ ராக யிருக்கிறார்கள். தாங்கள் ஒருநாளைக்கு எங்கள் குடிசையி லிருந்தால் அதைப் பார்க்கிலும் மிகுந்த பாக்கியம் எங்களுக் கொன்றுமில்லை யென்று மிகுந்த அன்புடனே குகன் சொன்னன். அவ்வாறு சொல்லுகிறவார்த்தை களை ஸ்ரீ ராமன் கேட்டு, மிகுந்த கிருபையுடனே குஞ்சிரிப்பாக நகைத்து, ஓ குகனே! இந்தக் கங்காநதி முதலான நதிகளிலே ஸ்நானம் செய்து, மகா ரிஷி களைச் சேவித்துக்கொண்டு, இன்னம் சில நாளையில் திரும்புவோம். அப்போது உன்னிடத்திற்கு வருகிறோமென்று சொல்லினர். அந்த வார்த்தையைக் கேட்டு அவர் மனோபாவம் அறிந்துகொண்டு அந்த க்ஷணமே ஓடத்தை அழைப் பித்தான். ஸ்ரீ ராமர் அந்த மகாரிஷிகளை யெல்லாம் பார்த்து, விடைபெற்றுக் கொள்ளுங்களென்று சொல்லிக்கொண்டே தாமும் சீதாபிராட்டியும் இலட்சு மணருமாக ஓடத்தின்பேரி லேறிக்கொண்டு ஓடத்தை விடச்சொல்லி ஆக்கியா பித்தனர். அப்படியே குகன் ஓடம் விட்டான். அந்த ஓடமானது அன்னம் நடக்கிறதுபோலச் சென்றது. அந்த ரிஷிபீஸ்வராளெல்லாம் ஸ்ரீ ராமனைப் பிரிந்திருக்கமாட்டாமல் அக்கினியில் விழுந்த மெழுகுபோல மனதுருகி நின்றார் கள். ஸ்ரீ ராமரும் சீதையும் ஓடத்திலிருந்து தண்ணீ ரிரைத்து விளையாடிக் கொண்டு வர அந்த ஓடமானது தண்ணீரிலே சென்றுபோல அதிசீக்கிரமா யோடிற்று. மணற்குன்றுக ளென்கிற தனங்களையுடைய அந்தக் கங்காநதி யென்னும் ஸ்திரீ இரத்தினங்களைக் கொழிக்கும் அலையென்கிற தன் கரங் களினால் அந்த ஓடத்தை யேந்தித் தாங்கிக்கொண்டு அக்கரையிற் சேர்த்தாள். இப்படி கரையேறின மாத்திரத்தில் ஸ்ரீ ராமர் தன் சிநேகிதனாகிய குகனைப் பார்த்து சித்திரகூட பர்வதத்துக்குப் போகிறவழி எவ்வாறெனக் கேட்டனர். அப்போது குகன் மிகுந்த பரிதாபத்துடனே சாஷ்டாங்கமாகச் சேவித்து, ஓ புருஷோத்தமா! அடியேன் ஒரு விண்ணப்பம் பண்ணிக்கொள்ளுகிறே னென்று சொல்லுகிறான். சுவாமி! அடியேன் இவ்விடத்துப் பாதைகளெல் லாம் நன்றாயறிவேன். காய் கனி கிழங்குகள் தேன் தினை முதலியதுகள் தேடிக் கொண்டு வரத்தக்கவன். இறங்கின விடங்களில் திவ்வியமான வீடுகள் கட்டு வேன். ஒரு நொடிப்பொழுதாகிலும் தங்களைப் பிரியாமல் பாதாரவிந்தச் சாய லிலே காத்திருப்பேன். பொல்லாத ஜீவஜெந்துக்களை யெல்லாம் திசாதிசை களில் துரத்தி, வாசம் செய்கிறதற்கு நல்ல ஜாகைகள் செய்துவைப்பேன். எந்தக் காலங்களில் எந்த வஸ்து வேண்டுமோ அதைக்கொண்டு வருவேன். ஒன் றுக்கும் பயப்படுகிறவனல்ல. இரவும் பகலும் தங்களுடைய திருவடிகளைப் பிரி யாமலிருப்பேன். தாங்கள் ஆக்யாபித்தால் என் சேனையும்கூடக் கொண்டு வரு கிறேன். சத்ராதிகள் யாராகிலும் வந்தால் மாண்டுபோவார்களேயல்லாமல் என் முன்னே மீண்டு போகமாட்டார்கள். ஆகையால் அடியேனும் கூடவருகிறே னென்று சொன்னன். அந்த வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ ராமர் சொல்லு கிறார்: ஓ குகனே! நீ என் பிராணன். உன்னுடைய தம்பி இலட்சுமணன்

இந்தப் பெண் உனக்கு மதனி. நாங்கள் இதுவரைக்கும் நால்வராக இருந்தோம். இன்றுமுதல் உன்னோடு ஐந்துபேராவோம். இராஜ்ஜியமெல்லாம் உன்னுடையது. நீ சொல்லுகிறபடிக்கு நடக்கிறவன் நான். நான்தான் நீ, உன் பேச்சுத் தட்டுகிறதில்லை. நான் வடக்கே திரும்பி வருகிறபோது உன்னிடத்திற்கு வருகிறேன். அயோத்தியாபுரி காரியத்துக்கு உன் தம்பி இருக்கின்றான். இவ்விடத்து காரியத்திற்கு வேறொருத்தரும் இல்லை. உன்னுடைய பந்துஜனங்களெல்லாம் என் பந்து ஜனங்களல்லவா? இவர்களுன்னைப் பிரிந்துக் கிலேசப்படலாமா? இவர்க ளென்னுடைய பந்துஜனங்களானபடியால், நீ இவ்விடத்திலே தானேயிருந்து காத்து இரட்சித்துக்கொண்டிரு என்று சொல்ல, குகன் அவரது வார்த்தையைத் தள்ளமாட்டாமல் துயரத்தோடுதானே விடைபெற்றுக்கொண்டு திரும்பினான். அப்போது ஸ்ரீ ராமரும் பிராட்டியும் தம்பியும் ஆரணியத்தைத் தொடர்ந்து நடந்தார்கள்.

கங்கைப் படலம் முற்றிற்று.

வனம்புகு படலம்

புத்தியீனர்கள் சேரும் வேசிகள் மனம்போலப் பசையற்று வரண்டிருக்கிற பூமியானது, ஸ்ரீ ராமன் வரவே மழைபெய்து குளிர்ந்திருக்கின்ற பூமிபோலிருக்க, சூரியகிரணம் சந்திரனைப் போல் குளிர்ச்சியைக் கொடுக்க, பட்டுப்போன மரங்களும் தளிர்கொண்டு நிழலுண்டாக, மேகங்களும் மழைத்தாரைகளைத் துளிக்க, புஷ்பவாசனையோடு சிறு காற்றுகள் வீச, மயில்கள் நடனஞ் செய்கிற ஆரணியத்தில் நடந்தார்கள். ஸ்ரீ ராமன் சீதையைப் பார்த்து ஓ வாசனைபொருந்திய அளகபாரத்தையும் மயில்போல சாயலுமுடைய பெண்ணே! இந்திரகோபங்கள் கும்பல் கும்பலாய்க் கூடியிருக்கிறதும், கொன்றைப்புஷ்பங்களுதிர்ந்து குவிந்திருக்கிறதும், பொன் போலவும் நாகரத்தினங்கள்போலவுமிருக்கிறதைப் பாரும். மயில்களெல்லாம் தோகைகளை விரித்துக்கொண்டு நடனம் பண்ணுகின்றன; அவைகளுடைய அனேகங் கண்களாலே உன்னுடைய அழகைப் பார்க்கிறதற்கு வந்ததுபோல் இருக்கின்றது பாரும். வேல்போலக் கண்களையுடைய சீதா! உன்னுடைய சாயலையும் கண்களையும் பார்த்துத் தன்னினமென் றெண்ணி மயில்களும் மான்களும் சமீபத்திலே வருகின்றதைப் பாரும். ஒரு ஆண் மயில் வாசனையையுடைய புஷ்பமரத்தடியிலே படுத்திருந்து அந்த வாசனையுடன் வர, அதைப் பெண்மயில் கண்டு புதுவாசனை வருவானேனென்று பிணங்கிக் கோபித்துக்கொண்டு திரிகிறதைப் பாரும். ஓ அருந்ததிக்குச் சமானமானவளே! அமிர்தத்திலும் இனிமையான பெண்ணே! காந்தள் புஷ்பத்தின்பேரில் கிளியேறிக் கோதிக்கொண் டிருக்கிறது உன் கையிலே கிளி வைத்துக்கொண் டிருக்கிறுப்போ லிருக்கிறதைப் பாரும். ஓ சித்திரக்காரர் கையினல் எழுதுகிறதற்கு அருமையான சுந்தரத்தையுடைய சீதா! ஒரு மயில் காந்தள் புஷ்பத்தின் மொக்கைக் கண்டு பாம்பென்று கவ்வ, அதைக் கண்டிருந்த பெண் மயில் பரிகாசமாக நகைக்கின்றதைப் பாரும். ஓ சிங்கக்குட்டியும் யானைக்குட்டியும் இந்த யாதவர் வீட்டுக் குழந்தைகளுங் கூடி

விளையாடுகிறதைப் பாரும். ஓ அகில்வாசனை பொருந்திய அளகபாரமுடைய பெண்ணே! புஷ்பித்திருக்கிற கொம்புகள் நதிகளிலே அலையினலே தோய்ந்துத்தோய்ந்து முழுகுகிற ஸ்திரீகள்போல இருக்கின்றதைப் பாரும். ஓ வில் லைப்போலப் புருவங்களையுடைய பெண்ணே! கோங்கு புஷ்பத்தின் பேரில் வண்டுகள் நித்திரை பண்ணுகிறது பொற்றட்டிலே நீலரத்தினம் பதிந்திருக் கிறதுபோல் இருக்கிறதைப் பாருமென்று இப்படியாக அந்த ஆரணியங்களிலே யிருக்கிற சிங்காரங்களைச் சீதைக்குக் காட்டி விளையாடிக்கொண்டு நடந்தார். அப்போது சாயுங்காலமாயிற்று. அவ்விடத்தில் பாரத்துவாசமுனி இவர் வரு கிற சமாச்சாரம் கேட்டு, எதிர்கொண்டு அழைத்துப்போகிற நிமித்தம் வந்தார். அவர் எப்படிப்பட்டவ ரென்றால் குடையும் குண்டிகையும் தண்டும் சடையும் மான்தோலும் மரவுரியும் சரீரமெல்லாம் ரோமமும், நல்ல நடத்தையும், ஒழுக்க மும், வேதபாராயணம் செய்கிற நாவையுமுடையவர். அக்கினிதேவனுடைய புத்திரர். சகல ஜீவனையும் தன்னுயிரைப்போல எண்ணி அருளும் கிருபையை யுடையவர். அவர் வரவே ஸ்ரீ ராமன் அவரைக் கண்டு, புஷ்பங்களினலே அர்ச்சனைசெய்து சேவித்துக்கொண்டார். அந்த மகா முனீஸ்வரனும் அதிக அன்புடனே இவரைத் தழுவிக்கொண்டு, அப்பா! நீ இந்த ரூபத்தோடுவரக் காணப்பெற்றேனென்று மனம் நொந்து, கண்ணீர்பெருகப் பார்த்து, நீ இராஜ் ஜியத்திலிருந்துகொண்டு இராஜரீகம் பண்ணிக்கொண்டிராமல் இப்படி தம்பி யுடனே வரவேண்டிய காரணமென்னவென்று கேட்டனர். அதற்கு ஸ்ரீ ராமர் நடந்த செய்தியெல்லாம் சொல்ல அதுகேட்டு, விதிகாரணத்துக்கு யார் என்ன செய்யலாமென்று சிலேசித்து, பூமிதேவி பாக்கியம் பண்ணினவ ளல்லவென்று சொல்லி, என் சினேகிதரான தசரத மகாராஜன் உன்னை இப்படி ஆரண்ணி யத்துக்கனுப்பிவிட்டு எப்படி ஜீவனுடனிருக்கிறரென்று சொன்னர். அதற்கு ஸ்ரீ ராமர் சுவாமி! அவரவர்செய்த புண்யபாவத்துக்குத் தக்கதாய் சுகதுக்க முண்டாகுமேயல்லாமல் வேறில்லையே. தாங்கள் அதற்குக் கிலேசிக்கவேண்டிய தென்னவென்று சொல்லினர். அதற்கு அவர் மிகுந்த சந்தோஷத்துடனே மார்பில் அணைத்துக்கொண்டு ஸ்ரீ ராமனைத் தம்முடைய பர்னகசாலைக்கு அழைத்துக்கொண்டு போனர். அவ்விடத்தில் காய் கனி முதலியது கொடுத்து, தன் பிள்ளைகள் வந்திருக்கிற சந்தோஷம்போல மகிழ்சியாகயிருந்தார். பரத் துவாசர் ஸ்ரீ ராமனைப் பார்த்து, ஐயா! நீ இவ்விடத்திலேதானே எங்களுடனே கூட இருந்து காய்கனி கிழங்குகளைச் சாப்பிட்டுக்கொண்டு தபம் செய்துகொண் டிருக்கலாம். இவ்விடத்திலே கங்கையுடனேகூட யமுனையும் சரஸ்வதியும் சங் கமமாகிற இடமானபடியினலே, ஸ்ரீமந் நாராயணன் வாசமாயிருக்கிறர். எங் களைப்போலொத்தவர்களுக்குக் கிடைக்கிறது அருமையாயிருக்கிற இடம் இது. ஆகையால் இவ்விடத்திலேதானே வாசஞ் செய்துகொண்டு இருமென்று பரத் துவர்சர் மிகுந்த அன்புடனே சொல்ல, ஸ்ரீ ராமன் தாங்கள் சொல்லுகிறது உத்தமமே. ஆனல் அயோத்தியாபுரி இவ்விடத்திற்கு சமீபமானபடியால், சனங்கள் வந்து, மிகவும் வருந்துவார்களென்று சொல்லினர்.

அதற்குப் பரத்துவாசர் அதுவும் உள்ளதுதான். இவ்விடத்திற்கு பத்து யோசனை தூரம் தெற்கே போனல் சித்திரக்கூட பர்வதம் இருக்கின்றது.

அதில் வாசம் செய்ய யோக்கியம். ஆகையால் அவ்விடத்திலே போய்ச் சேருங்களென்று விடைகொடுத்தனர். பிறகு ஸ்ரீ ராமன் சேவித்துக்கொண்டு அப்பால் நடந்து காளிந்தி நதியைக் கண்டார். அப்போது மத்தியானவேளை ஆயிற்று. அந்த நதியிலே ஸ்நானம்செய்து, காய் கனி கிழங்குகள் சாப்பிட்டு, சலபானம் பண்ணி, இந்த நதியைத் தாண்டுகிற தெப்படியென்று ஸ்ரீ ராமன் யோசனைசெய்தார். அப்போது இலட்சுமணர் மூங்கில்களை வெட்டி மாணைக் கொடியினலே தெப்பங்கட்டினர். அதின்மேல் ஸ்ரீ ராமனும் சீதையும் எழுந்தருளியிருக்கத் தம்முடைய இரண்டு கரங்களினல் அந்தக் காளிந்தியை நீந்தினர். இவருடைய தோளாகிய மந்தரகிரி அச்சலத்தில் திரியவே, அது மேல் சமுத்திரத்திலே எதிர்த்துப் பாய்ந்தது.

இப்படியாக அக்கரையே போய்ச் சேர்ந்து நடக்கிறபோது, கனிவர்க்க முதலிய யாவற்றும் வெந்து தீய்ந்து படுசூர்னமாயிருக்கிறதாயும், நினைக்கும் நெஞ்சையும் சுடும்படியான தாயுமிருக்கிற ஒரு பாலைநிலத்தைக் கண்டார். இதில் ஜானகி நடக்கிறது பிரயாசையென்று ராகவன் நினைக்க, சூரியன் சந்திரனைப்போலக் குளிர்ச்சியைக் கொடுத்தார். பட்டுப்போன மரங்களும் தளிர்விட்டன. காட்டாக்கினி சீதளத்தையுடைய தாமரைக்காடுகள்போல குளிர்ந்திருந்தது. மேலும் வறுத்து விரைத்த விதைகள்போல யிருக்கிற மணியாம் பருக்கைகள் புஷ்பங்கள்போலக் குழைந்து குளிர்ந்திருந்தன. அறுத்து உலர்ந்துபோன கொடிகளெல்லாம் வேரூன்றி தளர்ந்தது. பாம்பினுடைய விஷங்களும் அமிர்தம்போல் ஆயிற்று. மேகங்கள் முழங்கி மழைத்துளிகளை விட்டன. மகா கடூரமான வேடரும் மகாரிஷிகள்போல் சகல ஜீவனிடத்திலும் கிருபையானர்கள். சகல ஜீவராசிகளும் பசி முதலானது மில்லாமல் சந்தோஷத்திலேயே யிருந்தன. புலியினுடைய முலைகளை மான் குட்டிகள் உண்டன. புருஷனைப் பிரிந்த ஸ்திரீயினுடைய மனம்போலப் புழுங்கி வெந்து கொதித்துக்கொண்டிருந்த அந்த ஆரணியமானது புருஷன் வந்தால் எப்படி குளிர்ந்திருக்குமோ அப்படி போல் குளிர்ச்சியை அடைந்திருந்தது. இவ்வித பாலை நிலத்தோடுங்கூடிய ஆரணியத்தைத் தாண்டி நடந்து மகா உயரமான சித்திரகூட பர்வதத்தைக் கண்டார்.

வனம்புகு படலம் - முற்றிற்று.

சித்திரகூடப் படலம்

தேவர்களுக்கும் நமக்கும் ஒத்து ஒருவழியாக நின்ற சகஸ்திர நாமத்தையுடைய ஸ்ரீ ராமன் அந்தச் சித்திரகூட பர்வதத்தினுடைய அழகெல்லாம் ஜானகிக்குத் தெரிவிக்கிறார். ஓ வாளைப்போலவும் வேலைப்போலவும் கண்களையுடைத்தாகிய சீதா! இந்தப் பர்வதத்தின்மே லிருக்கிற யானையும், அதற்குச் சமீபத்தில் திரிகிற மேகமும், வேற்றுமை தெரியாம லிருக்கிறதைப் பாரும். வரையாடுகள் குதிக்கிறபோது அதின்பேரில் மரகதக்கல்லினுடைய காந்தி பிரகாசிக்க, அதுகள் பச்சைக் குதிரைகள்போலத் தோன்றுகிறதைப் பாரும். மலைப் பாம்பின் தோல்கள் அயோத்தியாபுரி பட்டணத்துக் கொடிகள்போல் அங்

கங்கே தொங்குகிறதையும், கவரிமான் மயிர் அருவித்தண்ணீர்க ளோடு கிறதுபோலக் கிடக்கிறதையும் மூங்கிலில் கிடந்த முத்துக்கள் சிங்கங்கள் கொன்றுபோட்ட யானையினுடைய இரத்தத்திலே தோய்ந்துகிடக்கிறது. ஸ்தி ரீகளுடைய மார்பின் குங்குமக்குழம்பிலே தோய்ந்திருக்கிற முத்துமாலைபோ லிருக்கிறதையும், அருவி நீர் வருகிறது சிவனுடைய சடாபாரத்தில் கங்கா சலம் வருகிறதுபோல இருக்கிறதையும் பாரும். பெண்யானைகளை வருந் தாமல் மதயானைகள் துதிக்கையினால் தூக்கிக்கொண் டிருக்கிறதையும், சந்தனச்சோலை நெருக்கத்திலே சந்திரன் நுழைந்துபோகிறதையும், மதயானை கள் தழையொடித்து ஈக்களை ஓட்டிவிட்டுத் தேனிறாலைப் பிடுங்கிக் கர்ப்பமா யிருக்கிற பெண்யானைக்குக் கொடுக்கிறதையும், மலைத்தேன்கள் விழுந்து குறவர் கிழங்கு தோண்டியான பள்ளங்களிலெல்லாம் நிறைந்து கிடக்கிறதையும், பெண்குரங்குகள் அருவித்தண்ணீரை வாரியிறைக்க மந்திக்குரங்குகள் மேகத் துத் தண்ணீரைப் பதிலுக்கு உதிர்க்கிறதையும், மாணிக்கப் பாறைகள் சூரிய னைப்போலப் பிரகாசிக்கிறதையும், தினைப்புனங்களிலே வேடுவஸ்திரீகள் கவண்கல் வைத்தெரிகிற மாணிக்கங்கள் நட்சத்திரங்கள் போலவிழுகிறதையும், காஞறுகளிலே இரத்தினங்கள் நட்சத்திரங்கள்போல் பிரகாசிக்கின்றதும், ரிஷியீஸ்வராளுடைய ஓமப்புகைகள் பர்வதத்தினுடைய சிகரங்கள்போல் எழும் பிப் பிரகாசிக்கிறதையும், விஞ்சையஸ்திரீகளுடைய செம்பஞ்சு தோய்ந்திருக் கிற காலடிகள் மாணிக்கப்பாறையில் பிரகாசமறைந்து மரகதப்பாறையில் பிரகாசிக்கிறதையும். தேவலோகத்துக் கன்னிகைகள் கழற்றிப்போட்ட பாரி சாதமாலைகள் அருவிபோலக் கிடக்கிறதையும், தினைப்புனம் காவல் காக்கிற வர்கள் வைத்திருக்கிற சிறுபறைகளை மந்திகள் எடுத்து அடித்து முழக்குகிற தையும், குறத்திகள் சந்திரபிறையைக் கையினாலெட்டி இழுத்து நடுவேயிருக்கிற களங்கத்தைத் துடைக்கிறதையும், குருக்கத்திப்புதரில் அரம்பைகள் படுத் திருந்த புஷ்பமெத்தைகளையும், குறத்திகள் பாடுகிற பாடலைக் கேட்டு அசுணங் கள் ஓடிவருகிறதையும் சுனைகளிலிருக்கிற நண்டுகள் தேவரம்பைகள் வந்து ஸ்நானம் பண்ணுகிறபடியினாலே அதுவும் பாரிசாத புஷ்பவாசனையாய் பரி மளிக்கிறதையும், சூரியன் அந்தப் பர்வதத்துக்குக் கிரீடம் போலப் பிரகாசிக் கிறதையும், மாணிக்கப் பாறையிலே மூங்கில் முத்துகள் செம்மானத்திலிருக்கிற நட்சத்திரங்கள் போலக் கிடக்கிறதையும், புஷ்பித்த முருக்கமரங்கள் வீடுகள் பற்றிக் கொண்டதுபோலப் பிரகாசிக்கிறதையும், காட்டானைகள் அருவித் தண்ணீர்களைத் தும்பிக்கையினாலே கொண்டுவந்து ரிஷிகளுடைய கமண்டலத் திலே சொரிகிறதையும், மகா விருத்தாப்பியமாய் நரைதிரையினாலே கண்கள் கூட நெருங்கித் தெரியாம லிருக்கிற ரிஷியீஸ்வராளுக்கு மந்திகள் தங்கள் வாலை அவர்கள் கையிலே கொடுத்து வழிகாட்டிக்கொண்டு போகிறதையும், கிளிகள் தினைக்கதிர்களையும், மூங்கிலரிசிகளையும், ரிஷிகளுடைய பர்ணகசாலைகளில் கொண்டுபோய்ப் போடுகிறதையும், மலைப்பாம்புகள் கற்றறிந்தவர்கள்போல அடங்கி மகாரிஷிகளுக்கு நடக்கிறதற்குப் படிக்கற்களாகக் கிடக்கிறதையும், தபஞ்செய்கிறவர்களை அழைத்துப் போகிறதற்குத் தெய்வ விமானங்கள் வரு கிறதையும் போகிறதையும் பாருமென்று இவ்வித வேடிக்கை அலங்காரங்க ளடங்கிய அந்தச் சித்திரகூடத்தின் பெருமைகளெல்லாம் சீதா பிராட்டியார்

ருக்குச் சந்தோஷத்துடனே ஸ்ரீ ராமன் காண்பித்து, அவ்விடத்தி லிருக்கிற ரிஷிகளெதிரே வரச் சேவித்துக்கொண்டு, அவர்கள் விருந்து செய்யச் சந்தோஷத்துடனே அந்தக் காய் கனி கிழங்கு சாப்பிட்டுக்கொண்டு சம்பிரமமாக இருந்தார்.

சூரியன் ஸ்ரீ மகாவிஷ்ணு காலநேமி பேரில் பிரயோகம் பண்ணின சக்கரம்போல அஸ்தமானகிரியில் பிரவேசித்தார். அந்தச் சக்கரம் போய்ப் படவே காலநேமியினுடைய சரீரத்திலிருந்து இரத்தப்பிரவாகம் வந்ததுபோல எங்கும் செம்மானம் பரவிற்று. அவனுடைய கோரப்பல் உதிர்ந்து பிரகாசித்ததுபோலப் பாலசந்திரோதயமாயிற்று. தாமரை புஷ்பங்களெல்லாம் குவிந்தது, அல்லிப்புஷ்பங்களெல்லாம் மலர்ந்தன. மந்திகளும் கடுவன்களும் மரங்களைநோக்கி நடந்தன. மதயானைகளும் பிடிகளும் தடாகங்களை நோக்கி நடந்தன. பட்சிகளும் தன்தன் கூடு நாடிப்பறந்தன. ஸ்ரீ ராமர் அப்போது சந்தியாவந்தனை நியம முடித்துக்கொண்டு சீதையுடனேகூட இலட்சுமணர் கட்டி வைத்த பர்ணகசாலையிலே பிரவேசித்தார். அந்தப் பர்ணசாலை மூங்கில் களைத் தறித்து நிறுத்தி முகடுசேர்ந்து, தேக்கிலையினுலே மேலேமூடி நாணற் புற்களாலே கூரைசேர்த்து, மூங்கில் பத்தைகளினுலே சுவர்செய்து, அதன் பேரிலே மண்பூசி, தண்ணீர்கொண்டு திருத்தி அதிலே வேறே ஸ்ரீ ராமருக்கும் சீதைக்கும் பள்ளியறை யுண்டாக்கி குங்குமச்சேற்றினுலே மெழுகி, இரத்தினமும் பொற்சுன்னமும் மேலே அப்பி, மயிலிறகினுலே விமானங்கட்டி மூங்கிலாலே தூங்குமஞ்சச் சங்கிலிகள் செய்து, புஷ்பமெத்தைக ளுண்டா யிருக்கிற அந்தப் பர்ணகசாலையைப் பார்த்து ஸ்ரீ ராமன் சந்தோஷித்து, சீதையுடனேகூட இரகப்பிரவேசமாய் மாய்கை நீங்கி யிருக்கிறதையும், திருப்பாற்கடலும் வைகுந்தமும்போல அமைத்திருக்கிற அந்தப் பர்ணகசாலையில் அதிக சந்தோஷத்தோடு இருந்து, ஆரணியத்திலே சீதைபாதமும் நடந்தது. தம்பி கையும் பர்ணக்சாலை செய்தது. ஒன்றுமில்லாதவர்களுக்கு என்னதான் இசையாததென்று நினைத்து தம்பி! இது எப்போது கற்றுக்கொண்டாய்? என்று சொல்லிக் கண்களிலே ஜலம் பெருக்கி, அப்பா! நான் பிதா வாக்கியம் தள்ளாமல் பரிபாலனம் செய்தேனென்று கீர்த்தி பூண்டுகொண்டேன். பிரயாசத்தை உனக்குக் கொடுத்தேனென்று சொல்ல, இலட்சுமணர் நொந்த மனதுடனே தமையனர் திருமுகத்தைப் பார்த்தார். அப்படிக்கு நோக்கிய தம்பியைப் பார்த்து பின்னையும் சொல்லுகிறார்: அப்பா! பிரயாசத்துக்கு இப்போதான் முனைகாண்கின்றது. ஆகிலும் பாக்கியத்துக்கு ஒருகரையுண்டு. இதற்கு ஒரு நாளும் கெடுதி வருகிறதில்லை. இதினுலுண்டாகிற இன்பமும் கீர்த்தியும் ஆத்தும லாபமல்லவா என்று தம்பியைத் தேற்றி, தேவர்கள் நமஸ்காரஞ் செய்ய அந்தச் சித்திரகூட பர்வதத்திலே எழுந்தருளியிருந்தார்.

சித்திரகூடப் படலம் முற்றிற்று.

பள்ளியடைப் படலம்

அயோத்தியாபுரி பட்டணத்திலிருந்து வசிஷ்ட மகாமுனி ஆக்கியாபித்த படிக்குத் தூதுவர்கள் இராத்திரி பகலாய் நடந்து, கேகயதேசம் போய்ச் சேர்ந்து, பரதனிருக்கிற அரண்மனைவாயலிற் நின்று, வாசற்காப்பாருடனே தாங்கள் வந்தசெய்தி சொல்லி அனுப்பினர். அவர்கள் பரதனிடத்தில் போய், சுவாமி! உங்கள் தகப்பனரிடத்திலிருந்து தூதர் வந்திருக்கிறார்களென்று சொல்லினர். அவ்வார்த்தையைப் பரதன் கேட்டு, மிகுந்த ஆசையுடனே சந்தோஷமாய் அவர்களை இங்கு வரச்சொல்லென்று ஆக்கியாபித்தனர். தட்சணமே தூதர்கள் வந்து சேவித்து நின்றார்கள். அவர்களைப் பரதன் பார்த்து, ஐயா! சுகமாயிருக்கிறீரா? என்று கேட்டார். அதற்கவர்கள் சுகமாய் இருக்கிறோமென்று சொன்னர்கள். அதுகேட்டு சந்தோஷமாய் தம்பியுடனேகூட என் நாயகனுகிய ஸ்ரீ ராமன் சுகமாயிருக்கிறாரா வென்று கேட்க, சுகமாயிருக்கிறாரென்று தூதர்கள் சொல்லவே, திக்குநோக்கித் தீர்க்கதெண்டஞ் சமர்ப்பித்து, மற்றவர்களை யெல்லாம் வகைவகையாய் விசாரித்துச் சந்தோஷித்தார். தூதர்கள் கொண்டுவந்த திருமுகத்தை எதிரே வைத்தார்கள். அந்தத் திருமுகத்துக்கு நமஸ்காரஞ் செய்து எடுத்து சிரசிலே வைத்துக்கொண்டு, கட்டுகளைப் பிரித்து முடக்குகளை நிமிர்த்துப் பார்த்துக்கொண்டு, வந்த தூதர்களுக்கு அநேக திரவியம் கொடுத்துச் சந்தோஷ நகைப்புண்டாய், சரீரபுளகாங்கிதமாய் மிகுந்த ஆசையுடனே அவ்விடத்திலே காலதாமதம் செய்யாமல் தமயனைப் பார்க்கவேண்டுமென்கிற அபேட்சையுடனே பிரயாணபேரிகை அடிக்கச் சொல்லி ஆக்கியாபித்து, கேகய தேசாதிபதியான பாட்டனுரைச் சேவித்து விடைபெற்றுக்கொண்டு, தம்பியுடனேகூட தேரேறினர். அநேகம் யானை - குதிரை - தேர் - பதாதிகள் ஆயுதபாணிகளோடு நெருங்கிவர, சமுத்திர இரைச்சல்போல் சத்திக்க, கொடிகள் - குடைகள் - ஆலவட்டங்கள் ஆகாயத்திலே நெருங்கிவர, பிடியானைகள்பேரிலே அநேகம் ஸ்திரீகள் ஏறிவர, அநேக சம்பிரமத்துடனே ஏழு நாள் வழியிலே தங்கிக் கோசலதேசம் வந்து சேர்ந்தார். அந்தத் தேசத்திலும் கிராமங்களிலும் கழனிகளில் ஏர்கட்டி உழுவாரில்லை. பயிருக்கும் ஜலம் காட்டுவாரில்லை. பழுத்த நெற்கள் நீர் வற்றிப் போயிற்று. எங்கும் இலட்சுமிகரம் வாங்கி அந்தகாரப்பட்டு அறுப்பறுக்கிற சமயத்தில் அறுப்பறுக்கிறவர்களில்லாமல் கதிர்களுடனே முளைத்துப்போனதும், புஷ்பங்கள் பரிப்பாரில்லாமல் உதிர்ந்து கிடக்கிறதும், பள்ளஸ்திரீகள் ஆடல் பாடல்கள் இல்லாமல் ஓய்ந்து கிடக்கிறதும், ஜலம் நிரம்பிய ஏரியின் கீழிருக்கிற பயிர்களுக்குத் தண்ணீர் விடுவாரில்லாததினாலே லோபிகள் வீட்டுவாசலில் காத்திருக்கிற தரித்திரர்போல் உலர்ந்து கிடக்கிறதும், கிளிகள் பேசாமலிருக்கிறதும், ஒருத்தரிடத்திற் கொருத்தர் போக்குவரத்தில்லாமலிருக்கிறதும், பேரிகை மத்தள முழக்கங்களில்லாமல் தெருக்கள் பாழாய்க் கிடக்கிறதும், உப்பரிகைகள் சுவர்ணகலசமில்லாமலும், யாழ் வீணை பாடல் இல்லாமலிருக்கிறதும், உப்பரிகைகளில் அகிற்புகைகளில்லாமலிருக்கிறதும், ஸ்திரீ ஜாதிகள் அளகபாரங்களில்லாமலிருக்கிறதும், ஸ்திரீ ஜாதிகள்

அளகபாரங்களிலே புஷ்பமில்லாம லிருக்கிறதும், இப்படியாக அந்தத் தேசம் பிராணன் போய்விட்ட சரீரம்போல அமங்கலமாக யிருந்தது. அதைப் பரதன் கண்டு கிலேசித்து, நடந்த சமாசாரமொன்றும் தெரியாமல் திகைத்து, நாமென்னமோ பொல்லாத வார்த்தை கேட்க இருக்கிறோமென்று பெருமூச்சு விட்டு, தம்முடைய தேரின் வேகத்துக்கு முன் மனதோட அதிக வேகமாய் நடக்கிறபோது அயோத்தியாபுரி தெரிந்தது. அந்தப் பட்டணத்தினுடைய உப்பரிகைகளிலே கொடிகளுமில்லாமல், முரசின் சத்தங்களும் கேளாமல், வித்துவ ஜனங்கள் பிராமணர் யானை குதிரை தேர் முதலான வெகுமானங்கள் வாங்கிக்கொண்டு கோபுரவாயலுக்கு வெளியே புறப்படுகிறவர்களைக் காணமல், யாழ் வீணைகள் எங்கும் சப்தியாம லிருக்கிறதும், ரதங்கள் யானை குதிரை சிவிகை முதலான வாகனங்களேறி வருவாருமில்லாமல் வெள்ளமற்ற ஆறு போல வீதிகள் பாழடைந்திருக்கிற தங்கள் பட்டணத்தையும் பார்த்து, சத்துருக்கனை நோக்கி, தம்பீ! இராஜாக்களிருக்கிற பட்டணமும் இப்படியிருக்குமா? ஸ்ரீ மகாவிஷ்ணுவும் மகாலட்சுமியும் பிரிந்திருக்கிற திருப்பாற்கடல் போலக் காண்கின்றதென்று சொல்லினர். அப்போது சத்துருக்க ரெழுந்து சேவித்துக்கொண்டு, சுவாமி! என்னமோ ஒருவிதத்தில் மகாலட்சுமி பட்டணத்தை விட்டு போயிருக்கிறதாகத் தோன்றுகின்றதென்று சொன்னர். அந்தச் சமயத்தில் இரதமானது கோட்டைவாயிலில் வந்து சேர்ந்தது. சக்கிரவர்த்தி குமாரனை பரதன் அதிசீக்கிரமாய் இரதம்விட்டிறங்கி, தகப்பனிருக்கிற அரண்மனைக்குப் போய் அவரைக் காணமல் மனதில் ஐயமாய்த் திகைத்து, கிலேசத்துடனே கௌசலை அரண்மனையை நோக்கி நடந்தார். அப்போது கைகேசி தாதியை யனுப்ப, அவள் வந்து, சுவாமி! அம்மா அழைக்கிறார்க ளென்று சொன்னள். அப்படியே வந்து தாயாரைச் சேவிக்க அவள் மனச் சந்தோஷத்துடனே மகனைத் தழுவிக்கொண்டு, அப்பா! என் தாய், தகப்பன், தமக்கை, தங்கை சகலருஞ் சுகமாயிருக்கிறார் களாவென்று கேட்டாள். யாவருஞ் சுகமே யிருக்கிறார்களென்று சொல்லி, தகப்பனரைச் சேவித்துக்கொள்ள வேணுமென்று மிகவும் அபேட்சையாக வந்தேன். ஆகையால் அவர் எங்கே யிருக்கிறார் சொல்லவேணுமென்று தொழுதான். அதுகேட்டு கைகேசி கிலேசமில்லாத மனதுடனே தானவர்களை ஜெயித்த உங்கள் பிதா தேவர்கள் நமஸ்காரஞ்செய்ய தேவலோகம் போய்ச் சேர்ந்தார். நீ அங்கலாய்க்க வேண்டாமென்று சொன்னள். அந்த வார்த்தையைக் கேட்கவே இடியினல் முறிந்து விழுந்த மராமரம்போல் பூமியில் விழுந்து, சுவாசமில்லாமல் மூர்ச்சைபோய் வாய்குளறி கண்களிலே தண்ணீர் பொழியத் தாயைப்பார்த்து, ஆ! நெருப்புச்சுவாலையைக் காதில் வைத்தது போல இந்த வார்த்தை சொன்னீர். நீர் அல்லாமலும் பின்னொருவர் இப்படி சொல்லுகிறதற்கு மனதிலும் நினைக்கமாட்டார்களென்று சொல்லி ஏங்கியிரங்கி, மறுபடியும் பூமியில் விழுந்து பெருமூச்சுவிட்டு மனமருண்டழுது, ஸ்திரீகள்போல் சொல்லிச் சொல்லிப் புலம்பத் தொடங்கினர்.

ஐயா! தருமத்தை வேரறுத்து அருளைக் கொன்று பாக்கிய லட்சுமியினுடைய அழகை அழித்து இறந்துபோய் விட்டீரோ? இப்படி இறந்துபோ

னுல் நீதிதப்பிப் போகாதா பகையாளிகளே ஜெயித்து ரிஷியீஸ்வராள் பிராம ணுள் முதலான பேர்களே ஆதரணை செய்துகொண்டு உங்கள் பெரியவர்களேப் போல இராஜ்ஜியபாரஞ் செய்துகொண்டு வந்த நீர், தபசு பண்ணத்தான் போய்விட்டீரோ? உங்கள் பெரியவர்களுடைய கீர்த்தியைப் பார்க்கிலும் அதி சயமான கீர்த்தி யுண்டாகத் திரிநேத்திரதரனுன சிவனுடைய வில்லே ஒடித்த உமது குமாரனே விட்டு எப்படி பிரிந்துபோனீர்? இவ்விடத்திலே இராஜாக் களும் வித்துவான்களும் மிகவும் சினேகிதமா யிருந்த உமக்கு அவ்விடத்திலே யும் சினேகிதர்களுண்டோ? அல்லது தேவலோகம் ஆளவேணும் என்று ஆசைகொண்டு போனீரோ? இராஜாதிராஜனே! முன்போலவே தேவர்கள் வந்து தங்கள் குறைகளேச் சொல்லி அழைத்துக்கொண்டு போனர்களோ? சம்பராசுரனேப்போல அசுரர்கள் இன்னம் தேவலோகத்தில் இருக்கிறார் களோ? அவர்கள் பேரிலே யுத்தத்திற்குப் போனீரோ? யாகாதிகள் பண் ணுமலிருக்கிறவரல்லவே. அவ்விடத்திலேதானே சும்மாயிருக்கலாமா? அஸ்வ மேதயாக முதலானதுகள் செய்கிறதற்காகிலும் வரலாகாதா? ஸ்ரீ மகாவிஷ்ணு சக்கரத்தைக் கொடுத்துவிட்டு வெறுங் கையுடனிருக்கிறரென்று நினேத்து அவர் சக்கரத்தை அவருக்குக் கொடுத்து விடுவோமென்று போனீரோ? ஐயா தபம் செய்து பெற்ற பிள்ளேக்குப் பட்டாபிஷேகஞ் செய்து கண்குளிரப் பார்க் கிறதற்கு உமக்குக் கிடையாமற் போச்சுதல்லவா? என்று இப்படியாகச் சொல்லிச் சொல்லி, மிகவும் மனமுருகி, கண்ணிலே ஊற்று ஊற்றாய் ஜலம்வர அழுதார். அப்படி அழுகிற பரதனேக் கைகேசி தேற்றக் கொஞ்சம் தேறின வரா யெழுந்திருந்து, எனக்குத் தாயும் தகப்பனும் நாயகனும் தமயனும் ஸ்ரீ ராமனே. ஆகையால், அவ்விடத்திலே போய் அவருடைய பாதாரவிந்தத் திலே விழுந்து சேவித்துக்கொண்டாலல்லது என் துயரம் தீராதென்று நடக்க, கைகேசி அப்பா! அவன் பெண்ஜாதியுடனேயும் தம்பியுடனேயும் ஆரணியத் துக்குப் போனனென்று சொல்லினள். அவ்வார்த்தை செவியில் விழவே, நெருப்பை விழுங்கினவன்போல வெந்து, இன்னம் யாது கேட்க யிருக் கிறேமோ; இதைப் பார்க்கிலும் என்ன துன்பந்தான் இருக்கப்போகு தென்று சோர்ந்து ஏங்கி விம்மிக்கொண்டு, அவர் ஆரணியத்துக்குப் போனது பொல்லாத காரியங்கள் செய்துபோனரா? அல்லது தெய்வீகமாக நடந்ததா? விதியினுல் வந்ததா? ஸ்ரீ ராமன் பொல்லாத காரியம் செய்கிறவரல்லவே. ஆனு லும் தகப்பனர் விழுந்துபோன பிறகு ஆரணியத்துக்குப் போனரோ? பிராண னுட னிருக்கச்சேதானே போனரோ? சொல்லுமம்மா வென்று பரதன் கேட்க, அப்படிக்கு யாதொன்றினலும் போகவில்லே, இராஜா சுகமாயிருக் கச்சே தானே ஆரணியத்துக்குப் போனனென்று கைகேசி சொன்னுள். அதற்குப் பரதன் குற்றமில்லாமலும் கோபத்தினுல் ஒருவரொன்று சொல்லா மலும் தெய்வத்தினுலொன்று கேரிடாமலும், பெற்ற தகப்ப னிருக்கச்சே ஆரணியத்துக்குப் போகவேண்டிய காரியமென்ன? அது எனக்குத் தெரியச் சொல்ல வேணுமென்று கேட்க கைகேசி சொல்லுகிறுள்,

அப்பா! பூர்வத்திலே எனக்கு இரண்டு வரம் கொடுக்கிறேமென்று ராஜா சொல்லியிருந்தார். அதிலொன்று உனக்குப் பட்டாபிஷேகம் செய்ய

வும், மற்றொன்று அவர் மகன் ஆரணியத்துக்குப் போகவும் பெற்றுக்கொண் டேன். அது சகிக்காமல் ராஜன் தன் பிராணனே விட்டுக்கொண்டாரென்று சொல்லினள். அப்போது கும்பிட்டபடி தலைமேலே வைத்திருந்த கரங்களாலே காதுகளை மூடிக்கொண்டு, புருவங்கள் துடிக்கவும், மயிர்த்துவாரங்கள் தோறும் நெருப்புப்பொரியும் புகையும் பிறக்க, அதரங்களை மடித்துக் கடித்துக் கொண்டு இரண்டு கரங்களினலும் இடிவிழுந்ததுபோல் பூமியை அடித்து, சமுத்திரத்தில் கப்பல் சுழலுகிறது போல இவருடைய கோபத்துக்குப் பயந்து மகமேருவும் பூமியுஞ் சுழல, தேவர்கள் அசுரர்கள் முதலான பேர் மாண்டுபோனவர், போல் அயர்ந்து சோர்ந்து போக, அஷ்ட கஜத்தினு டைய மகத்துவாரங்கள் நின்று போக, சூரியனும் நடக்கிற கதி திரும்ப, இயமனும் பயந்து கண்களை மூடிக்கொள்ள, இப்படியாக மிகுந்த கோபாவேசத் துடனே அக்கினி ஹோத்திரம்போல் கொதித்து, தாய் பொல்லாதவளென் றெண்ணினுல் தமயனர் கோபம் செய்வாரென்று பயந்து நின்று ஒரு வார்த்தை சொல்லுகிறார். உன்னுடைய வாய்மொழியினலே இராஜாவும் மாண்டு தமய னும் ஆரணியத்துக்குப் போயிருக்க, அதைக்கேட்டு உன் வாயைக் கிழிக்காமல் எப்போ சும்மா யிருந்தேனே அப்போ சுயராஜ்ஜியத்தை ஆசையுட னுண்ட தற்குச் சமானம். நீயும் இன்னம் சுகமாயிருக்கிறாய். நானும் எதிரே நிற்கி றேன். ஒரு கணத்தி லுன்னைக் கொன்று போடுவேன். ஏன் கொல்லவில்லை யெனில் என் தமயன் என்பேரில் கோபம் பண்ணுவாரென்று பயந்திருக்கிறே னல்லாமல், தாயாச்சுதே யென்றல்ல. ஆ கொடும் பாவி! வஞ்சகியான தாய் வார்த்தையைக் கேட்டு மகா கீர்த்தியுடனே வருகிற குலத்தினுடைய சன்மார்க் கத்தைப் பரதன் கெடுத்துப்போட்டானென்கிற பழியைச் சம்பாதித்துக் கொண்ட எனக்குக் கிரமமென்கிறதும் வேண்டுமா? சத்தியத்துக்கு மாண்டு போகிறதற்கு ஒரு இராஜாயிருக்க, அவர்பேச்சைத் தள்ளலாகாதென்று ஒரு சவுரியவந்தர் ஆரணியத்துக்குப் போனவருமிருக்க, இராஜ்ஜியமாளுகிறதற்குப் பரதனும் இருக்கிறானென்ற விசேஷம் இராஜ்ஜியத்திலுண்டானுல். அதைப் பார்க்கிலும் அதருமவழி வேறென்ன இருக்கின்றது. உன்னை மகத்தான பாக்கியத்துடனே வீட்டிலே வைத்திருந்த இராஜாவை வேரறுத்து இந்த வரம் வாங்கின நீ இன்னமென்ன செய்வையோ தெரியாதே கொஞ்சமாகிலும் உன் மனதிலே கிலேசத்தைக் காணுமே. உன் புருஷன் பிராணனைத்தின்று போட்டாயே பாவி! நீ பேயுமல்ல. நீ இன்னும் ஜீவனுடன் இருக்கின்றையே. சாகலாகாதா. ஒருநாளும் விலகாத பழியைக் கொடுத்தாயே மூலிகொடுத்து வளர்த்த தாயே! நீ இன்ன மெனக்கென்ன கொடுப்பாயோ தெரியாதே. புரு ஷனை வாயினலே ஜீவனுடனே தின்றுவிட்டு, தீராத பழியைச் சம்பாதித்துக் கொண்டு, பாக்கியத்துடன் வாழ்கிறதற் காசைப்பட்டாயே. இந்தப் பிரபஞ் சத்து ஜனங்களெல்லாம் தாயையிழந்த கன்றுபோல் தடுமாறி அழுகிறதைப் பார்த்தும், இன்னம் நீ பிராணனுட னிருக்கிறையே. நாம் கொடுத்த வரத் துக்குத் தப்பு வரலாகாதென்று தகப்பனர் இறந்துபோக, அவருடைய குமாரன் அவர் பேச்சைத் தள்ளலாகாதென்று ஆரணியத்துக்குப் போக, தாயார் உபா யத்தால் சம்பாதித்த இராச்சியத்தை அவனேடே பிறந்தவன் ஆளுகிறனென்ற கீர்த்தி எனக்குக் கிடைக்கத்தக்கதா? தகப்பனர் இறந்துபோவாரென்கிற

தையு மெண்ணுமல் இப்படி இராச்சியத்தைப் பறித்துக்கொள்ளுகிற உபாயத் துக்குப் பரதன் கூட யோசனைதானென்றும், அவன் ஆளுவானென்றும் எண்ணியல்லவா இந்த இராஜரீகத்துக்குக் கர்த்தனைவர் திரும்பாமல் போய் விட்டார். மகத்தான சாஸ்திரங்களை ஓதிக் கற்றும், சாத்துவீக குணம் பிர சன்னமாக யிருந்தும், மகா உத்தமனுகவு மிருந்த என் தமயன் மனதில் இப்படி தம்பி அக்கிரமமான யோசனை ஏன் பண்ணினனென்று நினைத்தால் அது எனக்கு போதாதா? என் தாயார் எனக்குச் சம்பாதித்துக்கொடுத்த காரி யத்தை என்ன சொல்லப் போகிறேன்? இன்னம் பிராணனுடன் இருக்கி றேன். என்னுடன் கூடப்பிறந்த தமயனை இலையும் காயும் புசிக்கும்படி ஆர ணியத்துக் கனுப்பி, நல்ல திவ்வியான்னங்களை அமுதத்துக்குச் சமானமாய்ச் சாப்பிட்டுக்கொண் டிருக்கிற நிமித்தியம் நானிங்கு நின்றிருந்தால் என்னைப் பெரியோர்கள் என்ன நினைப்பார்கள்? ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்கு போனு ரென்று கேட்கவே தகப்பனார் பிராணனை விட்டார்.

விஷம்போலிருக்கிற இந்த மகா பாவியைக் கொல்லாமல், நானும் சாகா மல் மிகுந்த பழியைச் சம்பாதித்துக்கொண்டு, அன்புள்ளவன்போல அழு கிறேன். இராச்சியத்து ஜனங்களுக்கு இக்காரியம் சம்மதியாய் இராது. நானே பிராணனை வைத்துக்கொண்டு இந்தப் பழி பூண்டுகொள்ளமாட்டேன். இதுமாத்திரமா? பட்டணத்திலே இலட்சுமி இராள். இப்படி யிருக்க நீ யாரோடு யோசனைசெய்து இந்தவிதமாக வரம் வாங்கி வேரோடே குடிகெட்டுப் போகும்படிக்கு உபாயம் பண்ணினாய்? என் தகப்பனைக் கொன்றவன் யார்? நான்தான். அதுமாத்திரமா? இராச்சியத்துக்கு அதிபதியானவரைக் காட் டிலே துரத்திவிட்டு இராச்சியம் ஆளுகிறதற்கும் சம்மதித்திருந்தேன். உன் னிடத்தில் தப்பென்ன? பழிதானென்ன இருக்கின்றது? இப்பழியை என் றைக்காகிலும் தீர்த்துக்கொள்ளுதற் கிடம் உண்டா? ஆ! ஆ! இக்காரியம். பொன்னுட்டவரிலும் இன்னுட்டவரிலும் யாராவது சம்மதிப்பார்களா? வீண் பழி பூண்டுகொண்டேன். உண்ணுமல் விஷங் கொல்லாதென்கிறதை நினைத்தல் லவோ இன்னம் சீவனுடனிருக்கின்றேன். பாவியான உன் கும்பி வயிற்றிலிரு ந்து வந்து தீராத பாதகத்தைச் சம்பாதித்துக்கொண்டேன். தரும சாட்சியாய் மூன்று லோகமும் அறிய நானே தபஞ் செய்யப்போகிறேன். பெரியோர் கள் சொல்லத்தக்க வார்த்தைகளெல்லாம் சொன்னேன். அவைகளையெல் லாம் நீ மறந்து இந்தப்படி செய்தாய். இப்போது நீ பிராணனை விட்டுக்கொள் வையேயாகில் உலகத்துக்கு நல்லவளாயிருப்பாய். அதுதான் நீ உலகத்திலே பிறந்ததற்கு இலபிதம். இது தவிர, உனக்கு வேறுகதியில்லையென்று பலவா ருகச்சொல்லி, இந்தப் பாபியின் முகத்திலே விழித்துக்கொண்டு எதிரே இருக்க மாட்டேனென்று திரும்பினர். இந்தத் துயரம்தீர கௌசலையினிடத்திற்குப் போய்ச் சேவித்துக்கொள்ள வேணுமென்று எழுந்திருந்து, கௌசலையின் சமீபத்தில் போய் பூமிவெடிக்கும்படி விழுந்து, அவளுடைய பாதாரவிந்தத்தைத் தன் கரத்தினால் பிடித்துப் புலம்பி அழுதுகொண்டு, அம்மா! எங்கள் தகப் பனார் எங்கே இருக்கிறார்? என் தமயன் எங்கே? நான் ஓடிவந்தது இந்தத் துயரங்களைப் பார்க்கிறதற்காகவா? என் சஞ்சலத்தைத் தீரும் என்று தேவர்

களும் அழுது சோர துயரத்துடன் அழுதுகொண்டு, ஐயாவினுடைய பாதத்தைக் காணேன். அவர் இராச்சியத்தை விட்டுப் போகிறவரா போகாமல் பிடித்துவைத்துக் கொண்டிருந்தீர்களா? என்ன குற்றம் செய்தீர்களென்று உடம்பில் புழுதியடைய பூமியில் புரண்டு சிந்தாக்கிராந்தனுய், இந்தப் பாபி வயிற்றில் பிறந்த நான் என்ன செய்யப்போகிறேன்? என் துயரம் தீர என் பிராணனை விட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய குலஸ்தர்கள் சூரியனைப் போல் கீர்த்தி வகித்து வருகிற பாரம்பரியமான குலத்தில் ஒரு பரதன் தோன்றிப் பழி உண்டாயிற்றல்லவா? என்றும், இராச்சியபாரஞ் செய்கிற இராஜன் தெய்வலோகம் போக, அவருடைய திருமகன் காட்டுக்குப்போக, கண்ணிழந்து உழலுகிற ஜீவனைப்போல இந்த இராச்சியத்திலே நானு துக்கத்துடன் இருக்க வேண்டுமென்று புலம்பி யழுகிற பரதனுடைய துக்கத்தையும் அன்பையும் கௌசலை கண்டு, இவனிடத்திலே கொஞ்சமாகிலும் அந்த நினைப்பைக் காணே மென்று அறிந்து ஒரு வார்த்தை சொல்லுகிறுள்: அப்பா! குழந்தாய்! கேகய ராஜாவின் குமாரத்தி செய்த காரியத்தை நீ அறியாயா? உன் மனதைப் பார்த்தால் யாதொன்றும் அறியாதவன்போல் இருக்கிறதென்று சொல்ல, அந்த வார்த்தையைப் பரதன் கேட்டு அதிகமான துக்கத்துடனே நோயிற் சிக்கிய சிங்கம்போல் குமுறி விம்மி, தருமதேவதையும் நடுங்கச் சத்தியமாகச் சில வசனம் சொல்லுகிறுன்: அம்மா! இந்த சமாசாரம் நான் எவ்வளவேனும் அறியேன். அல்லது அறிந்து நடந்து இருப்பேனுகில் தருமம் தப்பி நடந்தவன்; கிருபையில்லாத மனதை யுடையவன்; ஒரு ஸ்திரீயை அபகரித்தவன்; சகலரையுஞ் சீறி வைகிறவன்; சகலருக்கும் இதஞ்செய்து வாழ்கிறவன்; துறந்த பெரியோர்களுக்குத் துக்கமுண்டாக்குகிறவன், ஸ்திரீஹத்தி செய்தவன், இராஜத் துரோகம் செய்தவன், எதிரிக்கு முதுகு காட்டி ஓடினவன், ஸ்மிருதி முதலிய சாத்வீகபுராணங்களால் நிச்சயித்திருக்கிற துளப மாலிதரனை ஸ்ரீமந் நாராயணனைப் பரத்துவம் அல்லவென்று சொன்னவன், பிர்ம்மரிஷிகளுக்கு அபசாரம் செய்தவன், வேதங்களைத் தூஷித்தவன், தாய் பசித்திருக்க தன் பாழ் வயிற்றை நிரப்பிக்கொண்டவன், எஜமான் இரணக்களத்திலே விழுந்துபோகத் தன் பிராணனைத் தப்பித்துக்கொண்டு வந்தவன்; அடைக்கலமென்று வந்தவர்கட்கு ஓர் உபத்திரவம் வர அதற்கு அவர்களைக் காட்டிக் கொடுத்துத் தூர நிற்கிறவன், கள் குடியன், பொய் சாட்சி சொன்னவன், அடைக்கலப்பொருளை அபகரித்தவன், இளைத்த வேளையிலே உபத்திரவம் செய்தவன், அக்கிராரங்களை அழித்தவன், பிள்ளைகளைக் கொன்றவன், ஓரவழக்குச் சொன்னவன், தேவர்களை இகழ்ச்சி பண்ணினவன், கன்றுக்குப் பால் விடாமல் கறந்தவன், ஒருத்தருடமையைப் பறித்து அபகரித்தவன், செய்த நன்றி மறந்தவன், இப்படிப்பட்டவர்கள் சேருகிற நரகத்திலே விழக்கடவன். வழியிலே வந்த ஸ்திரீகளைக் கள்ளர் வந்து பறிக்கத் தன் பிராணனைத் தப்பவைத்துக்கொண்டு ஓடினவன், பசியுடன் பதைத்துக்கொண்டு இருக்கிறவர்களைப் பார்த்து தான் சாப்பிட்டவன், சத்திராதிகளுடனே உயுத்தியஞ் செய்கிறதற்குப் பயந்து அவர்களை நன்மையாக்கிக் கொண்டு வஞ்சனைகள் செய்து கொன்று அவர்கள் திரவியத்தை அபகரித்துக்கொண்ட இராஜன், இவர்கள் விழுகிற நரகத்திலே விழக்கடவேன். நல்ல வங்கிசத்திலே பிறந்து

இராஜ்ஜியபாரம் பண்ணிக்கொண்டு அக்ரமமான காரியங்களைச் செய்து தரு மத்தை மறந்து பூமி சம்பாதிக்கிற இராஜன், கன்னிகையைக் கட்டழித்தவன், குருபத்தினியை இச்சித்து பார்த்தவன், கள்ளன் ஒரு தேசத்தில் வந்து சேர அதற்கு அஞ்சி ஒடிப்போன குடிகளுடைய பொருளைக் கைக்கொண்ட இரா ஜன், குற்றமில்லாத குலங்களுக்கு குற்றமுண்டாக்குகிறவன், ஏழைகளுடைய ஆகாரத்தைச் சிந்திப்போட்டவன், புதுமையான வஸ்துக்களைக் கிட்ட இருக் கிறவர்களுடைய நாவில் நீர் ஊறும்படி சாப்பிட்டவன், சாப்பிடுகிறதற்கு யோக்யமில்லாத வஸ்துக்களை நாய்போலத் தின்கிறவன், ஆண்ஜாதி பெண் ஜாதி யென்கிற நாணமில்லாதவன், அதினாலே நரகமுண்டென்று சொன்னால் அது கேளாதவன், பிறருடைய பழிகளைச் சொல்லிக்கொண்டே திரிகிறவன், வில் வாள் முதலான ஆயுத வித்தைகளைப் புல்லிலே போட்டுச் சரீரத்தைச் சில நாள் காப்பாற்றுவோமென்று தன்னைச் சேர்ந்த சத்ராதிகள் வீட்டில் கவளம் வாங்கிச் சாப்பிட்டவன், தன்னை வந்து ஒருபொருள் கேட்பவர்களுக்கு உண்டு இல்லை யென்று சொல்லாமல் பலநாள் அலைச்சல் கொண்டவன், இவர்கள் விழும் நரகத்திலே விழக்கடவேன். சரீரத்துக்கு ஆசைப்பட்டு வெறுங்கை யுடன் நிற்கிறவனை இழுத்துக்கொண்டுபோய் பெண்களுக்கு முன்னுகக் காட்டி அவனைக் கொல்லுகிறவன், தன் இராஜ்ஜியத்தைச் சத்ராதி பிடுங்கிக்கொள்ள ஜீவனை வைத்துக்கொண்டு விலங்குக் காலோடே அவன் முகத்தில் விழித்துக் கொண்டிருக்கிறவன், வட்டிக்கு வட்டிகட்டி வாங்குகிறவன், இத்யாதி பாவி கள் எந்த நரகத்தில் விழுவார்களோ அதிலே விழக்கடவே னென்று சொன்ன பரதனைப் பார்த்து, ஆரணியத்துக்குப் போன மகன் வந்தது போல் உருக்கத்துடனே கட்டிக்கொண்டு அழுது, இராஜாவினுடைய செய்தி யும் தாயார் செய்த காரியமும் தெரியச்சொல்லி, தன் ஸ்தனங்களிலே பால் சுரக்க விம்மி விம்மி அழுது, அப்பா! என் குலத்திலே முன் பிறந்தவர் களிலே உனக்குச் சமானமானவர்கள் யாரிருக்கிறார்கள் என்று சொல்லி வாழ்த்தி, நினைந்து நினைந்து மனமுருகி, மகனே! உங்கள் தகப்பனார் இறந்து போய் ஏழுநாளாயிற்று. பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமை யாதோ அதை நீ செய்யென்று சொன்னாள். அதைக்கேட்டு அழுதுகொண்டு பரதனிருக்க, வசிஷ்ட மகாமுனி அவ்விடத்துக்கு வந்தார். அவரைக்கண்டு சேவித்து, சுவாமி! தாங்கள் கட்டளையிட வேணுமென்று அழுதார். அப்போது வசிஷ்டர் பரதனை மார்பில் அணைத்துக்கொண்டு தாமும் அங்கலாய்த்து, நடக்கவேண் டிய காரியம் நடந்தது. இனி அங்கலாய்த்து ஆகவேண்டிய தென்னவென்று மனந்தேறச் சொன்னார்.

அப்போது தாயார் சொன்ன வார்த்தைபடி வசிஷ்ட மகாமுனியுடனே கூடப்போய் தகப்பனாருடைய தரும சரூபமான சரீரத்தைக்கண்டார். கண்ட வுடனே பூமியில் விழுந்து அலறி கட்டிக்கொண்டு அழுது, தயிலத்துடனே ஊறின சரீரத்தைத் தன் கண்ணீராலே கழுவினார். அப்போது அநேகம் வேதவேதியர்கள் இராஜாக்கள் மந்திரிகள் பிரதானிகள் முதலிய யாவரும் வந்து கண்டு, பரதன் தன் கரங்களினாலே தழுவிக்கொண்டிருக்கிற இராஜாவி னுடைய சரீரத்தைப் பிடித்து வாங்கி, நடக்கவேண்டிய காரியங்களெல்லாம்

செய்து, அநேகம் மேளவாத்தியங்கள் முழங்கப் பொன்விமானத்தி லேற்றி, சுமந்திரன் முதலான சகலரும் புடைசூழ, பட்டணத்து ஜனங்க ளெல்லாம் தலையிலே கையை வைத்துக்கொண்டு அழுது இரைந்து கொண்டு சூழ்ந்துவர, சங்கு - சின்னம் - பேரிகை முதலானது ஸ்திரீகள் போல அழுதுகொண்டு வர, தேர் - குதிரை - யானை முதலியவைகள் முன்னே கும்பல் கும்பலாய் நடக்க, அறுபதினாயிரம் ஸ்திரீகளும்கூட வர சரயுநதியே போய்ச்சேர்ந்தார்கள். அவ் விடத்திலே நடக்கவேண்டிய காரியங்களைச் சாத்திரப்படி பிராமணர் செய்து முடித்து, பரதனைப்பார்த்துத் தகப்பனருக்குச் செய்யவேண்டிய காரியம் செய்யு மென்று சொன்னார்கள். அதுகேட்டுப் பரதன் எழுந்திருக்க, வசிஷ்டர் அப்பா பரதா! உன் தாயார் செய்த பொல்லாங்கினாலே உன்னைப் பிள்ளையல்லவென் றும், நீ பிறந்து தங்கள் குலதருமம் தப்பிப்போயிற் றென்றும், முன்னமே இராஜன் உன்னைத் துறந்ததாகச் சொன்னரென்று சொல்லினர். அவ்வார்த் தையை பரதாழ்வார் கேட்டுப் பெருமூச்சு விட்டு, நன்றாயிருந்தது; நன்றா யிருந்ததென்று நகைத்துப் பரதன் இடிவிழுந்த பாம்பு பதைப்பதுபோற் பதைத்து, ஒருவராலும் தடுப்பதற்குக் கூடாமையான துயரத்திலே சரீரம் துடிக்க விம்மி யழுது ஐயோ? சூரியகுலத்து இராஜாக்களில் என்னைப்போல யாரிருக்கிறார்கள்? பெற்ற தகப்பனுக்குப் பிரேத பூசை செய்வதற்குக்கூட யோக்கிய மில்லாமற்போன நான் இராஜரீகஞ் செய்வதற்கு மாத்திரம் முதற் பட்சமானேன், மனுமாந்தாதி முதலாக இவ்வம்சத்திற் பிறந்தவர்களெல்லாம் தருமநீதியாய் நடந்துகொண்டு தேவர்களானார்கள். அந்த வம்சத்தில் நான் பிள்ளையாய் பிறந்து, இலபிதமில்லாமல் தென்னங்குலையிலே பதரான ஊமைத்தேங்காய் போலானேன். என்னைப்பெற்று வளர்த்த தாயார் எனக்கு அழகு செய்து வைத்தது என்னமா யிருந்ததென்று சொல்லி, அழுது துக்க சாகரத்தில் மூழ்கியிருந்தார். அப்போது வசிஷ்டர் அவர் தம்பியான சத்து ருக்கனுடைய கரங்களினாலே செய்யவேண்டிய கிரியைகளெல்லாம் செய்வித் தார். அறுபதினாயிரம் ஸ்திரீகளும் ஆபரணங்களோடும் வஸ்திரங்களும் பிர காசிக்கப் புட்பித்திருக்கிற முருக்கங்காட்டிலே மயில்கள் நுழைகிறதுபோல அக்கினியிலே மூழ்கினார்கள். அவர்கள் மகாபதிவிரதைக ளடையும் பதவியிற் சேர்ந்தார்கள். வசிஷ்டமகாமுனி முதலிய யாவரும் அவ்விடத்திற் செய்ய வேண்டிய காரியங்களெல்லாம் செய்து முடித்து அரண்மனைக்கு வந்து சேர்ந் தார்கள். இப்படியாய்ப் பத்து நாளும் பத்து ஊழிகாலமாகத் துக்கத்தோடே யிருந்து, பத்தாவதுநாள் செய்யவேண்டிய காரியங்களும் செய்து முடித்தார்கள். பின்னர் சுமந்திரன் முதலான மந்திரிகளும் ராஜகூட்டங்களும் பரதனிடத்தில் வந்து சூழ்ந்து இருந்தார்கள்.

பள்ளியடைப் படலம் முற்றிற்று.

ஆற்றுப் படலம்

சுமந்திரனென்னும் மந்திரி பரதனுடைய மனதை அறிந்து, வசிஷ்ட மகாமுனி முகத்தைப் பார்த்தார். அக்குறிப்பை வசிஷ்டர் தெரிந்து, பரதனைப் பார்த்து, உன்னிடத்திலே பிராமணரும் பெரியவர்களும் இராஜாக்களும் மந்திரி பிரதானிகளும் வந்தது என்னத்திற்காக வென்றால், இராச்சியத்திற்கு இராஜன் இல்லாமல் அவர்களிருக்கின்றது நல்லதல்லவென் றெண்ணியாக்கும். ஆதலால், நீதியையும் தருமத்தையும் நிலை நிறுத்த நீர் பட்டாபிஷேகம் செய்துகொண்டு வாரும். அது இகபர மிரண்டையும் கொடுக்கும். நீர் நன்றாய்த் தெரிந்தவர். இராஜனில்லாம லிருப்பது சூரியனில்லாத பகல்போலவும், சந்திரனில்லாத இரவுபோலவும், ஜீவனில்லாத சரீரம்போலவும் இருக்கின்றது. தேவலோகத்திலும் அசுரலோகத்திலும் மற்ற எவ்விடங்களிலும் இராஜாக்களில்லாமல் யாதொரு காரியமும் நடவாது. பிரமன் முதல் இதுவரைக்கும் இராஜனிருந்து அரசு செய்ததேயல்லாமல் சும்மாயிருந்த காளில்லை. உன் பிதாவும் இறந்துபோனார். தமயனும் இராச்சியத்தைத் துறந்துவிட்டார். தாயாரினுடைய வரத்தினாலே இராச்சியம் உமக்குண்டாயிருக்கின்றது. நீர் இராச்சிய பாரம் செய்ய எங்களை மனதிலே நினைத்து, அதுவே யோசனையாய்ச் சொல்ல வந்ததென்று வசிஷ்ட மகாமுனி சொல்லினர். அதைக்கேட்டு பரதன் விஷத்தைச் சாப்பிடச் சொன்னால் எப்படி நடுங்குவார்களோ அதிலும் அதிகமாய்ப் பயந்து, அயர்ந்து, கண்களிலே அருவிவர, நடுங்கி, நாக்குளறி, ஸ்திரீகள்போல அழுது, உயிர்போகிற சரீரம்போலச் சோர்ந்து, அறிவானது கைகொடுக்க ஒருவாறாய்த் தெளிந்து, தன் மனதிலே யிருக்கிறதை அந்த இராஜசபைக்குத் தெரியும்படி சொல்லுகிறார்.

அந்தரம் சுவர்க்கம் பாதாளம் என்னும் மூன்று லோகத்திற்கும் நாயகராயும், எனக்கு முன் பிறந்தவராயும் ஸ்ரீ ராமனிருக்க, என்னை முடிசூட்டிக் கொள்ளும்படி பெரியோர்களாயிருக்கிற தாங்கள்தானே இப்படிச் சொன்னால் என்னை ஈன்றவள்பேரில் குற்றத்தைக் காணுமே. என்னுடைய தாயார் பேச்சைத்தானே ஸ்தாபித்து, சகலமும் அறிந்த நீங்கள் இது நல்ல காரியமென்று சொல்லுவதற்கு இன்னம் இடையில் இரண்டு யுகம் இருக்கின்றதே. அவைகள் போய்க் கடைசியில் வருகிற கலிகாலமா இது? ஓ சபையிலிருக்கின்றவர்களே! சகலரும் கேளுங்கள் பிரம்மா முதலானவர்களிலும் உலகத்தில் பிறந்தவர்களிலும் முன் பிறந்தவன் இருக்க இளையவன் இராஜ்ஜியபாரம் செய்கிறதில்லை. என் தமையன் போயிருக்கிற இடத்துக்கு நான் போய் அவரை அழைத்துக்கொண்டு வந்து, அவருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்கிறேன். அதையும் நீங்கள்தான் பார்க்கப் போகிறீர்கள். ஒருவேளை என் தமையனார் வரமாட்டேனென்றால் நானும் கூடவிருந்து தபசு செய்வேன். அதற்கும் அவர் சம்மதியாவிட்டால், என் பிராணனைப் போக்கிக்கொள்வேன். இது யாவர் மனதிலும் கெட்டியாயிருக்கட்டு மென்று சொல்ல, அதைக் கேட்டு அந்தச் சபையிலிருந்தவர்களெல்லாம் சந்தோஷித்து, சுவாமி! இராஜாவு

மிறக்கத் தமையன் கொடுத்துப்போன இராஜ்ஜியமுமிருக்க அதைப் பட்டாபி ஷேகஞ் செய்துகொள்ளாமல், இப்படி மறுத்துச் சொன்னால் தங்களைவிட இராஜாக்கள் யாரிருக்கிறார்கள்? நீர் இராஜ்ஜிய பரிபாலனஞ்செய்து கீர்த்தி சம்பாதிக்க வேண்டாமா? பதினான்கு லோகத்திலும் உம்முடைய கீர்த்திபிரகாச மாயிற்றென்று சகலரும் சொல்லி வாழ்த்துவார்கள். அப்போது பரதாழ்வான் தம்பியை அழைத்து, அப்பா! இந்தப் பட்டணத்து இராஜாவை அழைத்து வருவதற்குப் பட்டணத்தில் இருக்கிற யாவரும் புறப்பட பேரிகை யடிக்கச் சொல்லித் திட்டஞ் செய்யென்றார். அந்த உத்திரவின்படியே சுமந்திரனோடு சொல்ல, பட்டணத்திலே பரதமகாராஜன் தம்முடைய தமையனுரை அழைத் துக்கொண்டுவந்து பட்டங்கட்டுவதற்குப் பிரயாணமாகிறார். சகலரும் புறப்படுங்க ளென்று சொல்லி வள்ளுவன் பேரிகை முழக்கினான். ஜீவன் போய்விட்ட சரீரம்போலிருந்த அந் நகரோர் இதைக் கேள்விப்படவே, அமிர்தம் காதில் விழுந்து பிழைத்ததுபோலச் சகலரும் சந்தோஷத்துடன் எழுந்திருந்தார்கள். ரிஷியீஸ்வரர் முதலான சகல ஜீவகோடியும் ஸ்ரீ ராமன் பட்டாபிஷேகம் செய்துகொள்ளுவாரென்கிற சந்தோஷத்தினாலே களித்து, சந்திரனைக் கண்ட சமுத்திரம்போலப் பொங்கி வழிந்து, சப்த சமுத்திரம் ஊழிக்காலத்திற் பொங்கி வருவதுபோலப் புறப்பட்டார்கள். அது கைகேசியின் அவாவென்கிற ஆசையை ஒழித்ததுபோலச் சகலருடைய துயரங்களையும் ஒழித்துவிட்டது. யானை குதிரை இரதம் பதாதிகள் முதலியவைகள் பூமியெங்கும் நிறைந்தன. கொடிகள் ஆகாயவீதியெல்லாம் நிறைந்தன. இப்படிப்பட்ட சகல ஜனங்க ளுடைய கால் தூளிகள் பிரம்மாண்ட மட்டுக்கும் போய்ப் பிரம்மதேவனுடைய நேத்திரங்களையு மறைத்தன. சகலரும் ஸ்ரீ ராமனைப் பார்க்கலா மென்கிற ஆசையினாலே சப்தமேகங்களுங்கூடி மழை பெய்கிற சத்தம்போல இரைந்து கொண்டு புறப்பட்டார்கள். அந்தச் சேனசமுத்திரத்திலே சீதையுடனே கூடி நடந்த ஸ்ரீ ராமனைப்போல பிடியானைகளுடனே மதயானைகள் சோடுசோடாய் நடந்தன. அநேகம் ஸ்திரீகள் பெண் யானையின்பேரி லேறிக்கொண்டு போகிறது, அவர்கள் நடைக்குத் தோற்று அவர்களைச் சுமக்கிறதுபோல இருந் தது. அநேகம் கொடிகள் மேகமண்டலத்தை அளாவி மழைகளை உதிர்ந்து கொண்டு, ஸ்ரீ ராமரைக் காணுமலிருக்கின்ற ஸ்திரீகள்போலத் துவண்டு தொங்கி யிருந்தன. அநேகம் இராஜகுமாரர்கள் சரீரகாந்தியுடனே யானையின்பேரி லேறிக்கொண்டு, குடைகள் அளாவ நடந்தது, சூரியனவன் அநேக மூர்த்தி யாய் உயர்ந்த சொரூபம் கொண்டு மேலே சந்திரன் பிரகாசிக்க வாகனத்தி லேறிக்கொண்டு போவதுபோல இருந்தது. அநேகம் இராஜகுமாரர்கள் தேரின்பேரி லேறியும், அநேகம் இராஜகுமாரர்கள் குதிரையின்பேரிலேயும் புறப்பட்டு நடந்தார்கள். தாரை சங்கம் எக்காளம் கொம்பு பம்பை துடி பேரிகை மத்தளம் முதலியவைகள் சத்திக்காமல், விற்பத்திக்கியான மில் லாதவர்களுடைய கூட்டத்தில் சிக்கிக்கொண்ட விற்பத்திக்கியான முடைய வர்களைப்போல மௌனமாய் வந்தன. ஸ்திரீகள் எல்லாரும் ஆபரணங் களைக் கழற்றிப் போட்டு, புட்பம் உதிர்ந்த கொம்புகள்போல் தேவதை களும் பார்த்து மயங்கும்படி நடந்தார்கள். அநேகம் குடைகள் ஆகாயமெல் லாம் நிறைந்து வந்தன. வந்தாலும் இராஜாவினுடைய குடை வராததினாலே

சந்திரன் யில்லாத இராத்திரிபோல யிருந்தது. அன்றையத்தினம் புறப்பட்ட சேனசமுத்திரத்தைத் தாங்கிக்கொண்டிருந்த பூமிதேவியை மெல்லியளென்று சொல்லுவது தெரியாத்தனமென்றே சொல்லவேண்டும். மாதர்கள் சந்தனம் கந்தபொடி குங்கும முதலியவைகள் ஸ்தனங்களில் பூசிக்கொள்ளாமல், முத்து மாலை முதலான ஆபரணங்களும் தரித்துக்கொள்ளாமல் போவது இளநீர்க் காய்கள்போலத் தோன்றிற்று. புருஷர்களுடைய தோள்களும் சந்தனம் - புனுகு - பன்னீர் - சவ்வாதுபோலப் புட்பவாசனைக ளில்லாமற் போகின்றபடி யினாலே, தூறுகள் செடிகள் நீக்கிய பர்வதங்கள்போலிருந்தன. மாதர்க ளுடைய கண்கள் மை இல்லாமலிருக்கிறது இரத்தக்கறைகளை ஒழித்த வேல் போல யிருந்தன. மேகலாபரணங்களினுடைய சத்தமும் சிலம்புகளினுடைய சத்தமுமில்லாமற் போவது, மணிகள் கட்டாததேரும் வண்டுகள் சப்திக்காத கமலமும்போல இருந்தது. கைகேசி வரம் வாங்கிக்கொண்டது மாதர்களுடைய இடைக்குமாத்திரம் உபகாரமாயிருந்தது. அதேனெனில், அச் சஞ்சலத்தி னால் ஆபரணங்களைக் கழற்றி எறிந்தபடியினாலேதான். அச் சேன சமுத்தி ரங்களெல்லாம் ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்குப் போய்விட்டார்; இலட்சுமியும் தபசு செய்யப் போய்விட்டாள்; மன்மதனும் துக்கசாகரத்தில் முழுகினன் என்பதுபோல யாதொரு சம்பிரமமும் இல்லாமல் நடந்தார்கள்.

அன்றையத்தினம் புறப்பட்ட சேன சமுத்திரத்தை லோகங்களை விழுங்கு கின்ற வெள்ளமென்றும் சொல்லுவது அற்பம். பின்னே யாதெனில், பிரம் மாவினுடைய கண்ணுக்கும் மனதிற்கும் அடங்காத சேனையாய் இருந்தது. அச் சேன சமுத்திரத்தின் கால்தூள் சப்த சமுத்திர ஜலங்களைக் குடித்துப் போகின்றபடியினாலேயும் பர்வதங்களைப் பூமியிலே அழுந்திப்போக மிதித்து நடக்கின்றபடியினாலேயும் திராவிடத்தை யுண்டாக்கிய கும்பமுனிக்குச் சமான மாக யிருந்தது. யாவரும் அயோத்தியாபுரி பட்டணத்தைவிட்டுப் புறப்பட்ட படியால், அது அகத்தியர் சமுத்திரத்தைச் சாப்பிட்டபோ தெப்படி யிருந் ததோ அப்படியிருந்தது. வழியிலே நதிகள், வயல்கள், மரங்கள் மலைகள் முதலானதின்பேரிலும் இந்த ஜனங்கள் நெருங்கி மேன்மேலும் நடந்துபோ கின்றபடியினாலே அயோத்தியாபுரியின் வீதிகளுக்குச் சமான்மா யிருந்தது. புஷ்ப மாலைகள் சந்தன முதலியதினுடைய பரிமளமொன்றுமில்லாமல் நடந் தார்கள். யானைகள் மதங்கள் இல்லாமல் நடந்தன. மத்தள முதலானவை கள் சத்திக்காமல் எடுத்துக்கொண்டு போவது சித்திரங்கள் எழுதினதுபோ லிருந்தது ஸ்ரீ ராமன் காட்டுக்குப் போனது புருஷாளுடைய மார்பிலே மாதர்க ளுடைய கண்ணுகிய வேல்கள் படாமல் கவசம்போலாயிற்று. இப்படியாகச் சேனசமுத்திரம் நடக்கப் பரதன் மரவுரியும் சடைமுடியும் தரித்துக்கொண்டு தம்பியுடனேகூட மிகுந்த துன்பத்துடனே தேர்மேலேறி நடந்தார். அப் போது தாய்மாரும் ரிஷிகளும் தகப்பனுக்குச் சமானமான வாத்சல்லியமுடைய மந்திரிகளும், மற்ற மந்திரிகளும், பந்து ஜனங்களும், பிராமணோத்தமரும் தொடர்ந்துவரக் கோட்டைவாயிலிலே வந்தார். அப்போது மந்தரையென்கிற கூனியும் வழி நடக்கிறவர்களுடனேகூட நடந்தாள். அவளைச் சத்துருக்கன் கண்டு மிகுந்த கோபத்தோடேஓடி, அவளைப் பிடித்துக்கொண்டு தூக்கி

அறைந்து போடவேணுமென்று ஆயத்தப்பட்டார். அதுகண்டு பரதர் விளக்கிச் சொல்லுகிறார். அப்பா தம்பி! இந்தப்பாவி பேச்சைக் கேட்டுத்தான் இப்படிக்கொத்த காரியங்கள் சம்பவித்தது. இப்பாவியை நான் சின்ன பின்னமாய் வெட்டிக் கோபந் தீரேனே? தமையனர் கோபித்துக்கொண்டு நம்மைத் துறந்து விடுவாரேயென்று பயந்து கொல்லாமலிருந்தேனே யல்லாமல் வேறல்ல. இவள் வார்த்தையைக் கேட்டு கெட்ட என் தாயைத்தான் தாயென்று ஏதாயினும் பார்த்திருப்பேனே? இக் கூனியின்பேரில் கோபித்துக் கொண்டாலும் அவர்மனதுக்குச் சம்மதப்படாதென்று விலக்கி நடந்தார். சேனைசமுத்திரத்தோடே ஸ்ரீ ராமன் முன்னலே இறங்கின சோலையில் அன்றையத்தினம் இறங்கினார்கள். ஸ்ரீ ராமன் இறங்கியிருந்த இடங்களெல்லாம் பரதாழ்வான் பார்த்து, கண்களில் தண்ணீர் அருவிபோல்வர, காய்கனி கிழங்குகள் கூடச் சாப்பிடாமல் ஸ்ரீ ராமன் படுத்திருந்த புல்மெத்தையின் கீழே புழுதியில் தானும் படுத்திருந்து அவ்விடத்தில் இருந்து புறப்பட்டு, ஸ்ரீ ராமன் கால் நடையாக நடந்து போனரென்று தெரிந்து, அவர் நடந்த வழியே இரதகஜ துரகபதாதிகளுடனே தானும் கால்நடையாய் நடந்து போனார்.

ஆற்றுப் படலம் - முற்றிற்று.

குகப் படலம்

பரதாழ்வான் நாடுகளையெல்லாம் கடந்து, கங்காநதிதீரத்தில் வந்து சேர்ந்தார். அக் கங்கையிலே எண்ணிறந்த யானைக ளிறங்கினதில் அவைக ளுடைய மதங்கள் மிதமில்லாமல் ஒழுகியபடியால், அச்சலம் ஸ்நானத்திற்கும் பானத்திற்கும் யோக்கியப்படாமல் இருந்தது. அநேகம் குதிரைகள் தண்ணீர் குடித்தும், நீந்தியும், நின்றும், மணலிலே புரண்டுகொண்டும் இருந்ததுகள். சமுத்திராகாரமான அக் கங்கை இச்சேனை சமுத்திராகாரமாய் இருந்தது. அன்றையத்தினம் பரதர் பிறகே வந்த சேனைசமுத்திரம் அறுபதினாயிம் அக்குரோணி. இது இக் கங்காநதிதீரத்தில் வரவே, அங்கே யிருக்கும் குகன் ஸ்ரீ ராமன் பேரிலே யாரோ படையெடுத்து வந்தார்க ளென்றெண்ணி, அச் சேனை சமுத்திரத்தைப் பார்த்துக் கோபத்தோடே நகைத்து, கண்களில் நெருப்புப் பொறி பறக்க, புகைச் சுவாலையோடு புருவங்கள் வளைந்து நிமிர, கூற்றுவனைப்போலே கொக்கரித்துக்கொண்டு, தன்னுடைய சேனைசமுத்திரத்தைக் கூட்டிக்கொண்டு, கையிலே வில்லேந்தி, அரையிலே சுரிகை கட்டிக்கொண்டு பற்களை நறநறென்று கடித்துக்கொண்டு அதிக உதட்டியோடு தொடி முழக்கங்கள் முழங்க, கொம்புகள் ஊத, தோள்கள் பூரித்திருந்த சேனைசமுத்திரமெல்லாம் ஒரு எலி நானெரு பாம்பு என்று சொல்லிக்கொண்டு தன்னுடைய சேனைகளெல்லாம் புலிகள்போல் சூழ்ந்துநிற்க, அக் கங்காநதியின் தென்தீரத்தில் இருந்து அட்டகாசஞ்செய்து, ஊழிகாலத்து இடிபோலச் சத்தத்தோடே சப்தமேகங்களும் கூடியிருப்பதுபோல யுத்தசன்னகமாய்த் தம்மவர்களைப் பார்த்து, ஓ சேனைகளே! இதோ வருகிற இச்சேனைகளை யெல்லாஞ் சங்கரித்து என்னுடைய தமையனை ஸ்ரீ ராமனுக்கு இராச்சியபாரஞ்

செய்துவைக்க இருக்கின்றேன். நீங்களும் யுத்தசன்னகங்களாக இருங்கள். ஒருத்தரும் ஓடங்கள் விடத் தேவையில்லை. கரையோரமாய் வருபவர்களைப் பிடித்தடியுங்கள். நீலமேகரூபனை என்னுடைய பிராண நாயகன் ஆளுவதற்கு இல்லாமல், வஞ்சனையினாலே இராஜரீகஞ் சம்பாதித்த இராசாவும் வந்தானல்லவா ? என்பாணம் இராசாக்கள்பேரில் தைக்காதா? இவர்களைப் பிராணனுடனே விட்டேனானால் என்னை நாயென்று சொல்லார்களா ? எவ்விதத்தில் ஆறு தாண்டிப் போகப்போகின்றார்கள் ? யானையும் சேனையும் கண்டு நான் பயப்படுகிறவனா ? தோழனென்று அவர் சொன்னது ஒரு சொல்லல்லவா ? ஏழை வேடன் பிராணனையாவது விட்டுக் கொள்ளலாகாதாவென்று உலகத்தாரென்னை ஏசார்களா ? தமையனென்று பாராமல் இப்படி யுத்தத்திற்குப் புறப்பட்டவன் நடுவே, அவருடைய தம்பி நானிருக்கின்றேனென்று கேட்டிரானா ? ஏன் இகழ்ச்சியா ? இவன் வந்ததென்ன ? இவன் சாமர்த்தியமெல்லாம் இவ்வெல்லையைக் கடந்துபோயல்லவா பாவமும் பழியும் பகையுஞ் சினேகிதமும் குற்றமும் இராசாக்கள் எண்ணிப் பார்க்கிறதில்லை யல்லவா ? ஆகிறதொன்று போகிறதொன்று என்னுடைய தோழன்பேரிலே இவன் யுத்தத்துக்குப் போவது என் சேனையும் நானும் மாண்டபிறகல்லவா என் தமையன் ஆரணியம்போய்த் தவஞ்செய்ய இவன் இராச்சியபார மாளுகிறதா ? என் சீவனெனக்கு மருந்தா ? கீர்த்தி சம்பாதித்துப் பிராணனை விடுகிறேன். அவர் பிறகே நான் போகாமல் இருந்தது நல்லதாயிற்று. என்னுடைய கடன் இன்றைக்குக் கழிக்கிறேன். இந்த யானையும் குதிரையும் இராசாக்களும் இக்கங்கையைத் தாண்டி யல்லவோ போகவேண்டும். என்னுடைய சைனியத்திற்கும் எனக்கும் வருகின்ற சேனசமுத்திரம் போதுமா? இன்னம் அவர்களுடனே தேவர்கள் கூடிவந்தாலும் அஸ்திரங்களைப் பிரயோகஞ் செய்து, சேனைகளையெல்லாம் துண்டம் துண்டமாய் அறுத்துக் கொய்து என் சினேகிதருக்கு மரவுரி கொடுத்தவள் மகனை என்னுடைய பாணத்திலே கொன்று போட்டு, அப் பிரேதங்களாலே கங்கையைத் துத்துப்போடேனா? ஒரு வேடன் இராச்சியம் வாங்கிக் கொடுத்தானென்று கீர்த்தி சம்பாதித்து, இப்பரதனுக்கு அந்த நாடு கொடுக்கிறேன். ஆரணியத்துக்குப்போன என்னுடைய தமையன் ஏதாயினும் கோபஞ் செய்வாரென்று பார்த்ததாலே பார்த்தேன். அது பாராமல் அடித்தேனானால், இச்சேனை பஞ்சுபஞ்சாயல்லவா பறந்துபோகும் என்று பலபலவிதமாய்ச் சொல்லி, இரும்புபோல் சரீரங்களையுடைய அனேக பேருடனே கூட வில்லைப் பிடித்துக்கொண்டு ஸ்ரீ ராமனுக்குச் சினேகிதனான குகன் நின்றான்.

அதுகண்டு சுமந்திரன் பரதருடனே சொல்லுகின்றார் : சுவாமி அதோ நிற்கிறவன் இக் கங்காநதியின் இருகரைக்கும் அதிகாரியானவன். அனேக ஓடங்களுக்கு நாயகன். உங்கள் குலத்திற்கு நாயகமாய் அவதரித்திருக்கிற ஸ்ரீ ராமனுக்குப் பிராண சினேகிதன். சிங்கத்திற்குச் சமானமான பலத்தையுடையவன் அனேகம் விற்காரர் சமுத்திரம்போலச் சூழ விருக்கின்றவன். குகனென்கிற பெயரை யுடையவன். கல்லைப்போல் சரீர பலத்தை யுடையவன். இராத்திரியைப்போல அழகையுடையவன் தங்களைக் காணவேண்டு

மென்கிற அபேட்சையினலே எதிரேவந்து அக் கரையிலே நிற்கின்ரு னென்று சொன்னர். உடனே பரதர் என் தமையனுக்குச் சினேகிதனுல் நான் முன்போய்க் காண்கின்றேன் என்று எழுந்து, தம்பியுடனே கூட மிகுந்த ஆசையுடனே நடந்து கரையின் ஓரத்தில் போய் நின்ரூர். அப் படி நின்ற பரதாழ்வாரைக் குகன் தன் கண்களால் தரிசித்து, அவருடைய இளைத்த திருமேனியையும் சடையையும் மரவுரியையும் கண்ணில் கலங்கும் நீரை யும் கண்டு திடுக்கிட்டு, கையிலிருக்கிற வில் நழுவி விழ விம்மி, அழுது நின்றுவிட் டான். என் தம்பியான பரதனைப் பார்த்தால் அந்த ஸ்ரீ ராமரைப்போல யிருக்கின்றது. கூடவந்த தம்பியோ அத் தம்பியைப்போலவே யிருக்கின் றது. தவவேஷம் தரித்திருக்கின்ரூன். இவன் துன்பத்திற்கு ஒரு முடிவு மில்லை. திக்குநோக்கித் தொழுதுகொண்டே யிருக்கின்ரூன். எம்பெருமானை ஸ்ரீ ராமனுடைய கூடப்பிறந்தவர்கள் தப்பிதமாய் நடப்பார்களாவென்று சொல்லித் தம்மவர்களை யழைத்து என் தமையன் கொண்ட வேஷமே தான் கொண்டுவந் திருக்கின்ரூன், மிகுந்த அன்புடையவன் போலக் காண்கின்றது. அக் குறிப்பெல்லாம் நான் நன்ரூய்க் கண்டறிந்து வருகிறேன். நீங்க ளிருக் கின்ற விடத்திலேயே ஜாக்கிரதையாய் வழி கட்டிக்கொண்டிருங்களென்று திட்டம் செய்து, தானெருவனுய் ஓடத்தின்பேறி லேறிக்கொண்டுவந்து அவ ரைத் தொழுதான். பரதனும் அந்தக் குகனை வணங்கினர். வணங்கின பரத ரைக் குகன் சாஷ்டாங்கமாகச் சேவித்தான். அப்படிச் சேவித்த குகனைப் பரதர் சந்தோஷத்தோடே மார்பிலே தழுவிக்கொண்டார் அப்படி தழுவிக் கொண்ட பரதரைத் தானும் தழுவிக்கொண்டு நீரேது இப்போது புறப்பட்ட தென்று கேட்டான். அதற்குப் பரதாழ்வான் சொல்லுகிரூர்: இராஜ்ஜிய மெல் லாம் ஒரு குடையில் ஆளுகிற தகப்பனரவர்கள் சுவர்க்கலோகம் போய்ச் சேர்ந் தார். அவ் விராஜ்ஜியத்தை ஆளும் யோக்கியதையுடைய இராஜன் இவ் விடத்திற்கு வந்துவிட்டார். அவரை யழைத்துக்கொண்டு போகிற நிமித்தம் வந்தேனென்று சொன்னர். அவ்வார்த்தையைக் கேட்ட வேடருக்கெல்லாம் இராஜாவான குகன் பூமியில் விழுந்து விம்மியழுது தெளிந்து, சந்தோஷத்தோ டெழுந்திருந்து, பரதருடைய உபய திருவடிகளையும் சேவித்துக்கொண்டு ஒரு வார்த்தை சொல்லுகிரூன்: ஐயா பரதரே! தாயார் வார்த்தையைக் கேட்டு தகப்பனர் கொடுத்த இராஜ்ஜியத்தைப் பொல்லாதென்று தள்ளி உமது மன துக்கு இயல்பாக நடந்து கொள்ளுகின்றபடியினலே, ஆயிரம் இராமரானலும் உமக்குச் சமானமாகுமா? உம்முடைய கீர்த்தியை ஏழை வேடனை அடியேன் என்ன புகழப்போகிறேன்? சூரியன் தன் கிரணத்தினலே மற்றப் பிரகா சத்தையெல்லாம் மழுங்கச்செய்து தன்னுடைய பிரகாசமே பிரகாசிக்கச் செய்கின்றதுபோல, உங்கள் குலத்தாருடைய கீர்த்தியையெல்லாம் உம்முடைய கீர்த்தியாக்கிக் கொண்டீரென்று இனிய வார்த்தைகள் சொல்லி, அவருக்கு மிகுந்த அன்பு பிறக்கும்படியாய் நடந்துகொண்டான். அப்படி நடந்துகொண்ட குகனைப் பார்த்து, தெற்குத் திசையைநோக்கிக் கும்பிட்டு, தமையனர் இங்கு வந்தபோது எவ்விடத்தில் எழுந்தருளி யிருந்தாரென்று கேட்டனர். அவர் இருந்தவிடம் நானே காட்டுகிறேன் என்று அழைத்துக்கொண்டு போய் கல் லின்பேரில் ஒரு புல் மெத்தையில் ஸ்ரீ ராமன் படுத்திருந்த இடத்தைக் காட்டி

னன். அதைப்பார்த்து பரதாழ்வான் பதைத்துப் பூமியிலே விழுந்து, துக்க சாகரத்தில் முழுகி, கண்ணீராலே பூமியெல்லாம் நனைய அழுது. சுவாமி! என்னால் உமக்கு இத்தனை பிரயாசம் நேரிட்டு, கிழங்கும் காயும் சாப்பிட்டு, புல்லின்பேரில் படுத்திருந்தீரென்று கேட்டும் இன்னம் என் பிராணனைவிட்டுக் கொள்ளாம லிருக்கிறேன். அப்படிக்கொத்த பாவியான நான் பட்டாபிஷேகம் பண்ணிக் கொள்ளுகின்ற பாக்கியமும் அங்கீகரிக்கத் தக்கவன்தானோ? என்று சொல்லி அழுது, பின்னையும் குகனைப் பார்த்து, ஐயா! கூடவந்த தம்பி எங்கேயிருந்து பொழுதுபோக்கினன் என்று கேட்கக் குகன் சொல்லுகிறான். ஸ்ரீ ராமனும் சீதையும் இந்தப் புல் மெத்தையில் நித்திரை பண்ணிக் கொண்டிருந்தார்கள். தம்பி வில்லை ஊன்றிக்கொண்டு நின்றபடியே பெரு மூச்சு விட்டுக்கொண்டு, கண்களிலே தண்ணீர்சோரப் பொழுது விடிகிற மட்டும் கண்ணிமையாமல் நின்றமையால் நின்றபடி இவ்விடத்தில் இருந்தானென்று காட்டினன். அதுகண்டு பரதாழ்வான் மனதுருகி அழுது, அவருடைய தம்பி மாருக்குள் நான் தீராத துன்பத்தைக் கொடுக்கிறதற் கேதுவானேன். அதைத் தீர்க்கிறதற்கு அவனிருந்தான். எனக்குக் கிடைத்த இன்பமும் அடிமையு மென்ன சொல்லப்போகிறேனென்று சொல்லித் துக்கித்து, அன்றிராத்திரி அப்புழுதியில் கிடந்து, விடிந்தவுடனே குகனைப் பார்த்து, இந்தக் கங்கையைத் தாண்டி. அக்கரைபோய்ச் சேரும்படி செய்தால் இந்தத் துக்க சமுத்திரத்தைக் கடந்ததுபோலாகுமென்று சொல்லினர். அப்படியே . செய்கிறேனென்று குகன் தம்மிடத்துள்ளவர்களை அழைத்து ஓடங்களைக் கொண்டுவரச் சொல்லி ஆக்கியாபித்தான். அப்படியே அவர்களும் கயிலாச பர்வதமும் மகம்மேரு பர்வதமும் குபேரனுடைய புஷ்பகவிமானமும் பலபல ரூபங்கள் எடுத்துக்கொண்டு வந்ததுபோல, ஸ்திரீகளுடைய நடையைப்போல் கங்கையும் இடம் போதாதென்று சொல்லும்படி அநேக ஓடங்கள் வந்தன. குகன் பரதரைப்பார்த்து, ஐயா! ஓடங்கள் வந்தன. தாங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ! அப்படி நடந்து கொள்ளுகிறேனென்று சொல்லினன். அப்போது பரதன் சுமந்திரனைப்பார்த்து ஐயா! இந்தச் சேனைசமுத்திரங்களை யெல்லாம் ஓடங்களி லேற்றி அக்கரை சேருமென்று ஆக்யாபித்தார். அப்படியே வரிசைக் கிரமமாக ஓடங்களிலேற்றி யானைகளும் குதிரைகளும் ரதங்களும் காலாள்களும் கணக்கில்லாத சேனைகள் ஓடமேறி நடந்தன. அநேகம் யானைகள் துதிக்கையை உயர எடுத்துக்கொண்டு. கப்பல்கள் நீந்துகிறதுபோல் போயின. அநேகம் யானைகள் தண்ணீரிலிறங்கி நீந்திக்கொண்டு போகிறபோது அந்தத் தண்ணீரும் ஸ்ரீராமனைப் பார்க்கவேணுமென்கிற அவாவோடு ஓடுகிறது போல் கரைபுரண்டு தெற்கே வெகுதூரம் வெள்ளம் ஓடிற்று. இரதங்களினுடைய கொடிஞ்சித்தட்டு அச்சுவண்டில் கொடி முதலானதுகளைக் கழற்றி ஓடங்களில் ஏற்றிக்கொண்டு நடந்தார்கள். எட்டுகோடி வெள்ளைக் குதிரைகள் சேற்றில் கண்டைகள்போலத் துள்ளிப் பயத்துடனே நீந்தின. பின்னையும் வாயுவேகமாய் நீந்திக்கொண்டு அநேகம் குதிரைகள் அக்கரை சேர்ந்தன. ஸ்திரீ கூட்டங்கள் ஓடங்களில் ஏறுகிறபோது நெருக்கங்களினாலேயும் ஓடங்களினுடைய பாய்ச்சலினாலேயும் பயந்து, ஒருத்தரை யொருத்தர் ஸ்தனங்களோடு ஸ்தனங்களழுந்தக் கட்டிக்கொண்டார்கள். யானைகளுடைய மஸ்தகங்கள் ஜலத்தின்

பேரில் தெரிகிறது கங்கையினுடைய ஸ்தனங்கள்போல யிருந்தன. ஸ்திரீக ளேறிப்போகிற ஓடம் ஒன்றோடொன்று தட்டுபட அவர்கள் பயந்து மிரட்சி யாய்ப் பார்க்கிறபடியினலே, அவர்கள் கண்கள் அங்குமிங்கும் கயல்மீன்கள் குதித்துப் பாய்கிறதுபோ லிருந்தன. ஓடம் துழாவுகிற துடுப்புகளினல் தண் ணீர் தெறித்து ஸ்திரீகளுடைய வஸ்திரங்கள் நனைந்தன. அதுகண்டு புருஷா ளுக்குக் கொஞ்சங் கிலேசஞ் சாந்தியாயிருந்தது. இக்கரையிலிருந்து பாரத் துடனே போய் அக்கரையிலிருந்து வருகிறபோது வெறும் ஓடமாகையால், மேகமானது சமுத்திர ஜலத்தைக் கொண்டுபோய்ப் பெய்து திரும்புகாலையி லிருக்கும் வெண்மேகம்போ லிருந்தது. குடைகளும், ஆலவட்டமும், மயில் பிஞ்சங்களும், கொடி முதலானதும் ஓடத்திலேற்றிக்கொண்டு போகிறபடியி னலே, பாய்கள் கட்டினற்போல, அதிக சுறுக்காய் நடந்தது. ஸ்திரீகளேறிக் கொண்டு போகிற ஓடங்கள் தேவரம்பைக ளேறிப்போகிற விமானங்கள் போலப் பிரகாசித்தன. துழாவுகிற துடுப்புகள் பத்மினி ஸ்திரீகளுடைய பாதங் களின் பரிசம்பட்டு அதற்கு ஜீவனுண்டாய் இரண்டு காலினல் நடக்கிறது போல் பிரகாசித்தன. வசிஷ்டர் முதலான ரிஷிகள் ஓடத்திலேறுதவர்க ளாத லால் அவர்கள் தவமகிமையினலே கேசரிமார்க்கமாகப் போய் அக்கரை சேர்ந் தார்கள். இராஜ்ஜியத்திலுள்ள இராஜாக்களுடைய கீர்த்திகளைப் பார்க்கிலும் மேம்பாடுடைய கீர்த்தியை வகித்த பரதன் குகனுடனே கூடி ஓடமேறி நடந்தார். அப்போது கௌசலை நாயகியைக் குகன் பார்த்து, இந்தம்மாள் ஆரென்று வினவ, இராஜாக்களெல்லாம் நிறைந்திருக்கிற ஆசாரவாயிலை யுடைய மகாராஜாவினுடைய முதல் தேவியார். இந்த மூன்று லோகத்தையும் பெற்ற அந்த ஸ்ரீ ராமனென்னும் புருஷோத்தமனைப் பெற்று, சகல பாக்கிய முண்டாயிருந்தும் நான் பிறந்ததினலே அதைத் துறந்த என் தாயாரென்று சொன்னர். அது கேட்டு குகன் அந்தம்மாளைச் சாஷ்டாங்கமாகச் சேவித்துக் கொண்டான். அவனைக் கௌசலை பார்த்து இவனரப்பா வென்று பரதனைக் கேட்டாள். அம்மா! ஸ்ரீ ராமருக்கு கிளையவர். எனக்கும் இலட்சுமணனுக்கும் சத்துருக்கனுக்கும் முத்தவர். குகன் என்கிற பெயரை யுடைத்தானவர் என்று பரதன் சொல்ல, கன்றைப் பிரிந்த பசுவைப்போல் அக்குகனைப் பார்த்து, துயரத்துடனிருக்கிற கௌசலை, அப்பா மகனே! நாட்டைவிட்டு அவர்கள் காட்டுக்கு வந்தது நலமேயாயிற்றல்லவா? இந்தத் தம்பியுடனே கூடக் கலந்து நீங்கள் ஐந்துபேரும் ஒருவனைப் போலவே யிருந்து அநேககாலம் இராஜ்ஜியங் களை ஆளுங்களென்று வாழ்த்திச் சொன்னள். அவளுக்கடுத்தாப் போலிருக் கிற சுமித்திரையைப் பார்த்து, இந்தம்மா ளாரென்று கேட்க, அதற்குப் பரதன் பிராணன்போலவும் பேச்சு தப்பலாகாதென் றறிந்துபோன மகாராஜ்ஞவி னுடைய பெண்சாதி. ஸ்ரீ ராமனோடு கூடப் பிறந்தவர்களு முண்டென்று சொல்லும்படியாய் அவரைப் பிரியாமல் கூடப்போன இலட்சுமணனைப் பெற்ற பாக்கியவதி யென்று சொன்னர். அதுகேட்டு குகன் அந்தம்மாளையும் சேவித் துக்கொண்டான். அப்பால் புருஷன் மசானம்போக, மகன் துயரமென்கிற சமுத்திரத்திலே மூழ்க, ஸ்ரீ ராமன் ஆரணியத்துக்குப் போக, இந்த உலக மெல்லாம் தான் ஆள நினைத்துத் தன் கொடுமையைப் பூமியெல்லாம் நிறையச் செய்த கைகேசியைப் பார்த்து, இந்தம்மாளாரென்று கேட்கப் பரதர் சொல்லு

கிறார்: இவள் மிகுந்த அபகீர்த்தியைச் சம்பாதித்துப் பழியை வளர்த்து உலகத்து ஜீவகோடிகளெல்லாம் உயிரிழந்து போகும் சரீரம்போல் பதைக்கச் செய்த பாவி. இவள் வயிற்றிலே அநேக காலம் கிடந்த எனக்கும் உயிர் தேயும்படி துயரத்தைக் கொடுத்தவள். பூலோகத்தில் இவளுக்குச் சமான மானவர்கள் வேறே கிடையாது. முகத்திலே கொஞ்சமாகிலும் விசனமென் கிறது இல்லாமலிருக்கிறளே. அதிஞலேயாகிலும் உமக்குத் தெரியவில்லையா? என்று சொன்னர். இப்படியாகச் சொல்லக் கேட்ட அந்தக் கைகேசியையும் தாயைப்போல எண்ணி குகன் நமஸ்காரஞ் செய்தான். ஓடங்கள் பெண் அன்னம் நடக்கிறதுபோல நடந்து அக்கரை சேர்ந்தன. இப்படியாக அறுபதி ஞயிரம் அக்குரோணி சேனையும் பட்டணத்து ஜனங்களும் பால விருத்தர்களும் ஸ்திரீ கூட்டங்களும் அக்கரைபோய்ச் சேர்ந்தார்கள். தாய்மார்கள் ஓடம்விட் டிறங்கிச் சிவிகைகளில் ஏறிக்கொண்டுவர, அழுத கண்ணீருடனே பரதர் நடந்துபோனர். அவ்விடத்தில் குகன் தனித்திருக்க மனந் தாளாமல் பரத ருடனே கூட நடந்துபோனன். அநேககாலம் நடந்து பரத்துவாச மகாமுனி ஆசீர்மத்துக்குச் சமீபத்தில் போனர். அந்த மகாமுனி அநேக ரிஷியீஸ்வரா ளுடனே எதிரே வந்தார்.

குகப் படலம் முற்றிற்று.

கிளைகண்டு நீங்கு படலம்

அப்படி வந்த பரத்துவாசரைப் பரதன் பிதாவாக எண்ணிச் சேவித் தார். சிவனுக்குச் சமானமான அந்த மகாரிஷியும் மிகுந்த சந்தோஷத் தோடு ஆசிகள் கூறி, அப்பா உனக்கு வந்த ராச்சியத்தை அங்கீகரித்து ராச் சிய பரிபாலனஞ் செய்யாமல், சடைமுடியும் மரவுரியுமாய் வரவேண்டிய காரண மென்னவென்று கேட்டனர். அதற்குப் பரதர் மிகுந்த கோபத்துடனே அவரை நமஸ்கரித்து, பெரியோர்களால் எனக்கு யுக்தமான காரியஞ் செய்ய வில்லையென்று இப்படி வந்தால் தேவரீர் இப்படி கேட்கிறது உத்தமமா? சுவாமி! அந்த வேதநாயகனை ஸ்ரீ ராமனுக்கு நான் இளையவனல்லவா? அப்படியிருக்க நான் முடிசூட்டிக் கொள்ளலாமா? கூடாது? ஆதலால் இந்தச் சமாசாரம் அவருக்குச் சொல்லி அழைத்துவரப் போகிறேன். அதற்கு அவர் சம்மதித்து வராவிட்டால், நானும்கூட ஆரணியத்திலே வாசஞ் செய்கிறே னென்று சொல்லினர். அந்தவார்த்தையைப் பரத்துவாசர் முதலான ரிஷிக ளெல்லாம் சந்தனங் கொண்டுவந்து அப்பினதுபோலக் கேட்டுச் சரீரம் புள காங்கிதமானர்கள். பின்பு பரத்துவாசர் பரதனைத் தம்முடைய பர்ணசாலைக்கு அழைத்துப்போய், சேனு சமுத்திரத்துக்கெல்லாம் விருந்து செய்து வைக்கிறே னென்று சொல்லி ஓமகுண்டத்திலே மந்திர யுக்தமாய் ஆகுதி பண்ணினர். அப்போது தேவலோகத்து சாம்பிராச்சியமெல்லாம் அவ்விடத்தில் வந்தன. இந்தச் சேனசமுத்திரத்து ஸ்திரீ புருஷாள் சகலரும் பிறந்து வேறே ஒரு லோகஞ் சேர்ந்தவர்கள்போலத் தங்களுடைய சஞ்சலங்கள் முதலியவைகளை மறந்து சந்தோஷமானர்கள். புருஷாளுக்கெல்லாம் தங்கள் தங்கள் ஸ்திரீகள்

போல தேவர்ம்பைகள் மிகுந்த அன்புடனே திருமாளிகைக் கழைத்துக் கொண்டுபோய், ஆகாய கங்கை தீர்த்தத்திலுலே ஸ்நானம் செய்வித்து சவ் வாது முதலிய பரிமள வஸ்துக்களைப்பூசி, கற்பக விருட்சம் நவநிதிகள் கொடு த்து வஸ்திராபரணங்களை யுடுத்தி, பொன் பாத்திரங்களில் தேவேந்திரன் சாப் பிடுகிற அமிர்தம்போலப் பரிமாறினர்கள். அதிக சந்தோஷத்துடனே அவ ரவர்கள் சாப்பிட்டபின்பு பஞ்சணை மெத்தையின்பேரில் மனை இஷ்டமாய் நித்திரை செய்தார்கள். இராஜாக்கள் முதலான சகல ஜனங்களும் வரிசை தப்பாமல் தேவர்களைப் பூஜிதம் பண்ணுகிறதுபோல தேவரம்பைகள் பூஜித் தார்கள். அப்போது பாரிஜாத புஷ்ப வாசனையுடனே மந்தமாருதம் வந்து வீசிற்று யானைகளெல்லாம் கற்பக விருட்சத்திலுடைய தளிர்களைச் சாப்பிட்டு, ஆகாய கங்கையாகிய தீர்த்தத்தைப் பானம் செய்தன. ஸ்திரீகள் யாவரும் தங்களுக்குத் தெய்வகன்னிகைகள் தாதிமாரைப்போல ஏவலும் உபசாரமுஞ் செய்யத் திருப்தியடைந்தார்கள். இப்படியாகச் சகலரும் இந்திராதிபோகம் அனுபவித்து இருந்தார்கள். பரதன் காயும் கிழங்கும் சாப்பிட்டுப் புழுதியிலே படுத்துக்கொண்டு அன்றிராப் பொழுதைப் போக்கினர். பொழுது விடியவே சகலமானபேரும் கனவுகண்டதுபோல எழுந்திருந்தார்கள். தருமசிந்தையில் லாதவன் பாக்கியம்போல எல்லா பாக்கியங்களும் போய்விட்டன. அதற்கவர் கள் மனம் வருந்தாமல், முன் ஜனனமெடுத்தவர்கள் போன்று தானவராய் வழி நடந்தார்கள். இந்தச் சேனைசமுத்திரத்திலுடைய கர்ல் தூளிகளில் சூரிய பிரகாசத்தையு மறைக்க, இது சமுத்திரமல்ல. சேனைதானென்று தேவர் களுக்குத் தெரிய, சோலைகளும் பர்வதங்களும் பொடிகளாக மெரித்துக் கொண்டு பாலைநிலம் போய்ச் சேர்ந்தார்கள். அவ்விடத்திலே யானையின் மதங்களிலுலே காடுகளெல்லாம் சேறுகளாகி நடக்கிறவர்களுக்கு நடை கொடாமலிருக்க, குடைகள் கொடிகள் முதலானதுகள் ஆகாசமெல்லாம் பந் தல்போல் கவிந்திருக்க, அந்தப் பாலைநிலத்தைச் சமுகமாகக் கடந்துபோனர் கள். இராஜ்ஜியமெல்லாம் நீ ஆளென்று கொடுத்த தாயைக் கோபித்துக் கொண்டு வருகிற பரதரைக்கண்டு, அங்கே யிருக்கிற கல்லுகளும் கரைந்து உருகிற்று. பட்டுப்போன மரங்களெல்லாம் தளிர்விட்டன. அந்தப் பாலை நிலத்தை மருதநிலம்போல் குளிர்ச்சியாகவே நடந்து, அப்பால் சித்ரகூட பர்வ தம்போய்ச் சேர்ந்தார்கள். உயிரைப்பார்க்கிலும் ஒழுக்கம் நல்லதென்று இறந்துபோன மகாராஜாவினுடைய சேனை இப்படியாக வந்தபோது, கால் தூளிகள் - குதிரையினுடைய சத்தங்கள் - யானையினுடைய முழக்கங்கள் - முத லானதுகளிலுலே ஏதோ சேனைகள் வருகின்றதென்று இலட்சுமணர் அறிந்து, அதிசீக்கிரமாய் ஒரு குன்றின்மேலேறி சமுத்திரம்போல வருகிற தங்கள் சேனைகளைப் பார்த்தார். இந்தப் பரதன் சேனை சமுத்திரத்தைக் கூட்டிக் கொண்டு மனதிலே ஸ்ரீ ராமன்பேரிலே யுத்தத்துக்கு வருகிறனென்று நிச் சயமாக எண்ணி, மிகுந்த கோபத்துடனே குன்றிலிருந்து பூமியிலே குதித்து, வழியிலிருக்கிற குன்றுகள் பாறைகள் நீறுநீறாய்ப்போக நடந்து, ஸ்ரீ ராமன் சமீபத்துக்கு அதிசீக்கிரமாய் வந்து, சுவாமி! கொஞ்சமாகிலும் மனதிலே நினை யாமல் உம்முடைய பேரிலே யுத்தத்துக்குச் சேனைசமுத்திரத்துடனே பரதன் வந்தானென்று சொல்லி, அதிசீக்கிரமாய் அரையிலே வாள் கட்டிக்கொண்டு,

வீரகண்டாமணி அம்பரத்தூணி தரித்துக்கொண்டு, கவசம் பூட்டிக்கொண்டு, கையிலே வில்லை எடுத்துக்கொண்டு, ஸ்ரீ ராமனுடைய பாதத்தை தொட்டு வணங்கிச் சேவித்துக்கொண்டு சொல்லுகிறார்:

சுவாமி! இகபரமிழந்த அந்தப் பரதனுடைய புஜபலமும், இராஜன் படைத்த சேனையினுடைய பெருமையும் உம்முடைய தம்பியான என்னுடைய ஒருமையும், இன்றைக்குத் தாங்கள் பார்த்து சந்தோஷப்படுங்கள். வருகிற யானைக்கூட்டங்களை எல்லாம் உருட்டிக்கொண்டு, தேர்களை எல்லாம் இழுத்துக் கொண்டு, திரைகளை யெல்லாஞ் சிதைத்துக்கொண்டு, இரத்த ஆறுகள் பெருகிச் சமுத்திரத்தில் போய் கலக்கிறதைப் பார்த்துக் கொண்டிரும். ஆயுதங்களேந்தி வரும் அவர்கள் கைகளிலும், கவசம்பூண்ட அவர்கள் மார்புகளிலும், என்னுடைய பாணங்கள் உருவி, அவர்கள் உயிரைக் குடித்து இரத்தத்திலே தோய்ந்து, அஷ்ட கஜங்களும் திடுக்கிட்டுப் பயந்தோட என்னுடைய பாணங்கள் திரிகிறதைப் பார்த்துக்கொண்டிரும். குதிரைகள் கட்டியிருக்கிற இரதங்களெல்லாம் பேய்கள்போலத் தலைசுத்தி ஆடவும், பூமிதேவியானவள் முதுகாற்றவும், இரத்த ஆறுகளில் மிதக்கும் கவந்தங்களும் கூளிகளும் பேய்களும் சந்தோஷித்துப் பந்தாடி, உமக்கு இராஜ்ஜியமாயிற்றென்று துள்ளித்துள்ளிப் பார்க்கப்போகிறதையும் பாரும். ஒரு பிள்ளையினுடைய இராஜ்ஜியத்தை மற்றொரு பிள்ளையாகிய பரதனுக்கு இராஜா கொடுத்தாரே. அதை ஆளாமல் இன்றைக்கே என்னுடைய பாணத்தினாலே நரக பூமியை அவர்களாளப் பாரும். உமக்கு ஆரணிய வாசத்தைக் கொடுத்து, அதற்கு அங்கலாய்க்கிற உமது தாயாருடைய துயரத்தைப் பார்த்து சந்தோஷித்துக் கொண்டிருக்கிற கைகேசி, இனிப் பூமியில் விழுந்து புரண்டு அழப்போகிறதைப் பாரும். இந்தச் சேனசமுத்திரத்தை எனது ஒரு பாணத்தினாலே மூப்புராதிகளைக் கருவறுத்தது போல் தும்சப்படுத்திச் சிவனைப்போல் நானிற்கப்போகிறதை நீர் பாரும். என்றிப்படிச் சொல்லுகிற லட்சுமணரை ஸ்ரீ ராமன் பார்த்து, இலட்சுமண! இந்தப் பதினான்கு லோகத்தை நீ கலக்கிப் போடுகிறேனென்று நினைத்தால் அதை ஒருத்தராலே விலக்கக்கூடுமா? அது அருமைதான். அதைக் குறித்து சொல்லவும் வேண்டுமோ? நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேள். அப்பா! நம்முடைய குலத்தில் பிறந்தவர்களிலே யார் தருமம் தப்பி நடந்தார்கள்? பரதனுடைய அந்தரங்க பத்தியை ஒருவராலே சொல்லக்கூடுமா? அவன் அப்படிக்கொத்தவனல்ல. அது உனக்குத் தெரிந்திருந்தும் நீ என்னிடத்தில் வைத்திருக்கிற ஆசையினாலே அதை உணரவில்லை. பரதன் வருகிறானென்றால் இராஜா அனுப்பவேணும். அல்லது அன்பினால் வரவேணும். அல்லது ராஜ்ஜியத்தை நம்மிடவசம் கொடுக்கிறதாய் வரவேணும். இப்படி நாம் யோசனை செய்ய வேணுமே யல்லாமல், சேனைகளைக் கூட்டிக்கொண்டு அதிலும் என்னுடன் யுத்தம் செய்வதற்கு வருகிறானென்று இவ்வாறு சொல்லலாமா? தருமத்துக்கு ஒரு அறிவாகவும், நன்மைக்கு ஓர் வயிர ஆணிபோலவும் நடந்துகொள்ளுகிற பரதனை, நீ இப்படிச் சொல்லலாகாது. அவன் வருகிறது என்னைப் பார்க்கிறதற்கல்லாமல் வேறல்ல; அதுவும் நீ பார்க்கப்போகிறாயென்று தம்பிக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது பரதனும் சேன

சமுத்திரத்தை யெல்லாம் பின் வரும்படி உத்திரவுசெய்து, பிரியாத தம்பி யோடு தான் முன்னுக நடந்துவந்தார். இரண்டு கரமும் சிரசின்பேரில் வைத் துக்கொண்டு, சேவித்தபடியே மிகவும் துக்கித்துக்கொண்டு துயரமென்பதே ஓர் ரூபமெடுத்து வந்தது போல நெருங்கி வந்தார். இப்படி வந்த பரதனை ஸ்ரீ ராமன் பார்த்து, லட்சுமண! பரதன் யுத்தத்துக்கு வருகிற வேஷத்தை நன்றாய்ப் பாரென்று காட்டினர். அப்போது லட்சுமணர் அவரைப் பார்த்து; வைதுகொண்டிருந்த வார்த்தையையும் கோபத்தையும் விட்டு, தன் புத்தியும் சோர்ந்து, கையிலிருந்த வில்லும் கண்களிலிருந்த நீரும் பூமியிலே விழ மிகுந்த துயரத்துடனே நின்றார். அப்போது ஸ்ரீ ராமனைப் பிரிந்த மகாலட்சுமியான வள் மிகவும் வேதனை யடைந்து அனுப்பின தூதன்போல் பரதன் தொழுது கொண்டே நடந்து வரச்சே சுவாமி! தருமத்தையும் நினையாமல் கிருபையையும் விட்டு, நீதியையும் துறந்து இப்படி வந்துவிடலாமா? என்று சொல்லிக் கொண்டே சரீரஸ்மரணை தெரியாமல் இறந்துபோன பிதாவைக் கண்டது போல அன்போடு ஓடிவந்து பாதாரவிந்தத்திலே விழுந்தார். அப்படி விழுந்த பரதனுடைய வேஷத்தையும் துயரத்தையும் கண்டு உருகி, பிராணனிருக் கின்றதோ போய்விட்டதோ? என்று திருவுளத்திலே எண்ணி, இரண்டு கரங் களாலும் வாரியெடுத்து, தலை என்பது தருமத்தைத் தழுவிக்கொண்டது போலத் தம்பியைத் தனது அகண்ட மார்புடனே தழுவிக்கொண்டு, தமது கமல நேத்திரங்களில் பெருகுகிற ஜலத்தினாலே அப் பரதனுடைய சடை முடியை நிறைத்து பலதரம் பரதனுடைய வேஷத்தைப் பார்த்துப் பார்த்து உருகி, அப்பா! மிகவும் கிலேசத்திலே முழுகியிருக்கிறாய். ஐயா சுகமாயிருக் கிறாரா? என்று கேட்க, அதற்குப் பரதன், சுவாமி நீர் பிரிந்தீரென்கிற மனோ வியாதியினாலும் என்னைப் பெற்றவளுடைய வரமென்கிற கூற்றுவனாலும், சத்தி யத்தைப் பூமியிலே நிலைநாட்டவேணுமென்றும், தேவலோகம் போய்ச் சேர்ந்தா ரென்று சொல்லினர். அவ்வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் தேவாதிதேவ னை ஸ்ரீ ராமன் புண்ணில் வேலிட்டதுபோல மனம் நொந்து, கண்ணும் மன மும் கரங்குபோல் சுழலப், பூமியின்பேரில் விழுந்து, சுவாசமில்லாமல், இடி விழுந்த நாகம்போல் பிரக்ஞை தப்பிச் சிலநேரம் ஸ்தம்பித்திருந்து, பலபல விதமாய்ச் சொல்லித் துயரத்தினாலே பிரலாபிக்கிறார்.

ஓ சூரியகுலத்துக்கு அகண்ட தீபமே! பூலோகத்தாருக்குத் தகப்பனே! தருமத்துக்குத் தாயே தலைக்கு ஓர் இருப்பிடமே! ஐயோ! சத்ராதிகளுக்குச் சிங்கமே! இறந்து போனீரோ? இனி பூலோகத்துக்கும் சத்தியத்துக்கும் ஆதர வாக யாரிருக்கிறார்கள்? அநேக தவமகிமையுடைய மகாரிஷிகளாலே அருமை யான யாகஞ்செய்து என்னைப் பெற்றது உம்முடைய உயிர் இப்படி போகிற தற்காகவா? இராஜ்ஜியத்தி லிருக்கிற சகல ஜீவராசிகளையும் இரட்சிக்கிற பாரம் நான் சுமக்கமாட்டேன். அந்தப் பாரத்தை இறக்கிவிட்டுத் தவஞ் செய்ய நினைத்தது இதற்காகத்தானே? ஆ! உம்முடைய உயிருக்குங் கூற்றுவ னுகவா நான் ராஜ்ஜியமாளுகிறதற்குச் சம்மதித்தது? இந்த ராஜரீகத்துக்குச் சம்மதித்துப் பூமியிலிருக்கிற சகல ஜனங்களுக்கும் துயரத்தைக் கொடுத்த அடியேன் மாண்டுபோக வேணுமல்லவா? அப்படி மாளாமல் இந்தச் சரீரத்

துடனே பதினலு வருஷமும்போய் திரும்பி வருகிறபோது நான் யார் முகத்தைப் பார்ப்பேன்? அடியேன் காட்டுக்குப் போனேன் என்று கேட்டவுடனே நீர் மாண்டுபோனீர் என்று கேட்டும் என் பிராணன் போகாமல் வாழ்வையிச்சித்து இன்னமிருக்கிறேனல்லவா? ஓ சம்பராசுரன் முதலான பகையாளிகளை ஜெயித்து, சந்திரனைப் பார்க்கிலும் மிகுந்த குளிர்ச்சியையுடைய ஒரு குடையின்கீழ் ஏகச்சக்கிரேஸ்வரனுய் இராஜ்ஜிய பரிபாலனம் பண்ணின மகாராஜாவே! வண்மையும் மானமும் தேவர்களாலேயும் சவுக்கியமில்லாத பலமும், நீதியும், மெய்யும் இவைகளையெல்லாம் கூடத்தானே கொண்டு போய்விட்டீரோ? ஐயோ! என்று பலவாருகப் பிரலாபித்தனர். அப்படி பிரலாபிக்கின்ற ஸ்ரீ ராமனைத் தம்பிமாரும், அப்போது வந்து சேர்ந்த ராஜாக்களும் எடுத்துத் தாங்கினர்கள். வசிஷ்ட மகாமுனி தேற்றினர். பரத்துவாசர் முதலான ரிஷிகளும், தேசதேசத்து ராஜாக்களும், மந்திரிகளும், படைத்தலைவரும் பின்னையும் வரத்தக்க பேரெல்லாம் வந்தார்கள். அவர்களைக்கண்டு பின்னும் பிரலாபிக்கிற ஸ்ரீ ராமனை வசிஷ்டமகாமுனி பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறார். ஸ்ரீ ராமர் சகலத்தையும் துறந்துவிடுகிறதும், தருமம் செய்கிறதும் இது இரண்டுந் தவிர வேறேயொன்று நில்லாது. ஜீவனுக்குப் பிறக்கிறதும், இறக்கிறதும் சுபாவம். இதை நீர் மறந்துபோனீரோ? ஐயனே! வேதமுடிவைக் கரைகண்டிருக்கிறவராச்சுதே. அநேககோடி பிறவியெடுத்த உயிர்களைத் தருமாதருமங்களறிந்து விசாரித்து இரட்சித்தவனென்று கூற்றுவன் விட்டுவிடுவானே? கருப்பத்திலிருந்து உற்பத்தியாகிறதற்கு முன்னமே தானே உயிரிழந்துபோகிறவர்களையும் பார்த்திருக்கிறீரே அநேக போக பாக்கியத்துடனே அறுபதினுயிர வருஷகாலம் இராச்சியபாரஞ்செய்து வாழ்ந்து உண்டு சுகாதியத்தில் இருந்தவர் இறந்தால் அவருக்காக அங்கலாய்க்கலாமா? ஸ்ரீ ராமா! கேளும்: பிரம்மா விஷ்ணு உருத்திரர் என்கிற திரிமூர்த்திகளாலும் காலமென்கிற வலையைத் தாண்டிப் போகக்கூடுமா? கண்ணுக்குக் காண்பிக்கிறதாய் இருக்கிற ரூபங்களுக்கெல்லாம் தலைமையான பஞ்சபூதியங்களுக்கும் அழிவுண்டாயிருக்கிறதென்று சொல்லுகிறபோது, மற்ற உயிர்களுக்குச் சொல்லவேண்டுமா? ஸ்ரீ ராமா! புண்ணியமென்கிற நெய்யிலே காலமென்கிற திரியைப் போட்டு, விதியென்ற சோதியைப் பிரகாசிப்பித்திருக்கின்ற தீபமானது தனக்கு அளந்துள்ள நெய்யும் திரியும் மாண்டுபோனல் அது நின்றுபோகிறதற்குக் கேட்கவேணுமா? உயிரானது இவ்வுலகத்தில் சரீரமெடுத்தால் கிலேசங்களிலே கிடந்து உழன்று, அவ்வுலகத்தில் சென்றால் அங்கு நரகத்திலே அழுந்தி, செய்த வினைகளை அனுபவித்துப் பல யோனிகளின் வழியே அவதரித்து இருக்கின்றதைக் கணக்கிட்டுச் சொல்லக்கூடுமா? ஸ்ரீ ராமா! உன்னுடைய பிதாவாகிய அந்த மகாராஜன் பிரம்மாண்டத்துக்கு மப்பாலிருக்கிற விஷ்ணுலோகம் போய்ச் சேர்ந்து விளங்கியிருக்கிறார். அதைப்பார்க்கிலும் நீர் அவருக்கு வேறு உதவி செய்யவேணுமா? நீர் இப்படி நீர்க்குமிழிபோல் கண்டு மறைகிற சரீரத்துக்காக அங்கலாய்க்கிறது யுக்தமல்ல. ஸ்ரீ ராமா! இப்போது நீர் செய்யவேண்டிய கடனை உம்முடைய திருக்கரங்களினுலே செய்து முடியுமென்று சொல்லி கண்களைத் துடைத்துத் தேறுதலைச் செய்தார். அப்போது இராஜகூட்டங்கள் ஸ்ரீ ராமமூர்த்தியைத் தழுவிக்கொண்டுவர வசிஷ்ட

ரும் கூடவரத் தடாகத்துக்குப் போய்ச் சேர்ந்து ஸ்ரீ ராமன் ஸ்நானஞ்செய் தெழுந்திருந்து, வசிஷ்ட மகாமுனி சடங்கு காட்ட சாத்திரப்படி முடித்து, சகல ஜீவன்களிலும் கலந்திருந்து ஆகாரம் கொடுக்கிற சர்வாந்தரியாமியான ஸ்ரீ ராமன் தமது தகப்பனருக்கு மூன்று கை ஜலம் விட்டார். பின்னையும் செய்ய வேண்டிய காரியங்களெல்லாம் ஸ்ரீ ராமன் செய்து, தம்பிமார் படைத்தலைவர் இராஜாக்கள் முதலான பேர்கள்சூழ ஜானகி யிருக்கின்ற சாலைக்குப் போனர். அவ்விடத்திற் சீதை தனியே பரதேசியைப்போ லிருக்கிறதைப் பரதன் கண்டு, கரங்களினலே கண்களில் மோதிக்கொண்டு, பாதாரவிந்தத்தில் விழுந்து அழுதார். அவர் அழுகிறதைக்கண்டு ஒன்றும் அறியாத சீதையும் விம்மி விம்மி வருந்த, ஸ்ரீ ராமன் பரதனைத் தாங்கி யெடுத்துச் சீதையைப் பார்த்து ஓ சீதா! நம்முடைய ராஜா நாம் பிரிந்து வந்ததினல் இறந்து போனரென்று சொன் னர். அந்த வார்த்தையைச் சீதாபிராட்டி கேட்டு, மனந் திடுக்கிட்டு, கண்களிலே நீர்ப்பிரவாகம் வரப் பூமியின்பேரில் கையை வைத்துக்கொண்டு, யாழ் வீணைகள் போல் இருக்கின்ற மிருதுவான வசனங்களினலே பன்னிபன்னிப் பிரலாபித் தாள். ஸ்ரீ ராமன் பிறகே இந்த ஆரணியத்தை அயோத்தியாபுரி பட்டணம் போலவே எண்ணி நடந்து வந்த சீதாபிராட்டி இராஜா இறந்துபோனரென் கிற ஒரு பேச்சினலேயே துக்கசாகரத்திலே காலை வைத்தாள். அப்போது அநேகம் ரிஷிபத்தினிகள் சீதையைத் தழுவித் தாங்கிக்கொண்டுபோய் ஸ்நா னம் செய்து வைத்து, தேறுதலை சொல்லித் தேற்றி, ஸ்ரீ ராமன் சமீபத்தில் கொண்டுவந்து சேர்த்தார்கள். பின்பு தாய்மார்களை அநேக மந்திரிகளோடு சுமந்திரனும் ஸ்ரீ ராமன் எதிரே வந்து தொழுதுகொண்டு நின்றான். பிரம தேவனைப்பெற்ற ஸ்ரீ ராமன் அத் தாய்மார்களைக் கண்டு, ஐயா எங்கே சொல் லுங்களென்று அவர்கள் பாதாம்புயத்தில் விழுந்து பிரலாபித்தார். அவர்கள் மிகுந்த துயரத்தோடே அலறி ஏங்கி அவரைத் தழுவிக்கொண்டு அழுதார் கள். அந்தத் துயரத்தை ஒருவராலேயுஞ் சொல்லிக் கரைகாண முடியாது. பின்னலே வந்த சேனசமுத்திரமும் மாதர்களும் நெருப்பிலே விழுந்த மெழுகு போல் உருகி, தேம்பித் தேம்பி அழுதார்கள். தாய்மார்களும் மாதர்களும் சீதையைக் கட்டிக்கொண்டு துக்க சமுத்திரத்திலே விழுந்து அழுந்தினர்கள். சேனைவீரரும் பட்டணத்து ஜனங்களும் மற்றுமுண்டான பேர்களும் தங்கள் இராஜாவான ஸ்ரீ ராமனைக் கண்டு கிலேசித்தார்கள். அத்தருணத்தில் சூரியன் சேஷசாயியான இந்த ஸ்ரீ ராமன் தன் குலத்தில் பிறந்த நாயகனைபடியி னலே, இறந்துபோன மகாராஜாவுக்குத் தானும் நீர்க்கடன் செய்கிறவன் போல மேற்சமுத்திரத்தில் மூழ்கினன். அன்றுபோய் மற்றநாள் இராஜகூட் டமும், மகாரிஷிகளும், பந்து ஜனங்களும், தம்பிமாரும் சூழ ஸ்ரீ ராமன் வீற் றிருந்தார். அப்போது ஸ்ரீ ராமன் பரதனைப் பார்த்து தம்பி! தகப்பனர் இறந்துபோயிருக்க, அவருடைய ஆக்கினையினலே இராஜ்ஜியமும் உன்னதா யிருக்க, முடிசூட்டிக் கொள்ளாமல் விரதமாய் மரவுரியும் ஜடையும் தரித்துக் கொண்டது யாது நிமித்தமென்று மிகுந்த அன்புடனே வினவினர். அவ் வார்த்தையைப் பரதன் கேட்டு, மனம் பதைத்து எழுந்திருந்து கரம் கூப்பித் தொழுது நின்று, ஸ்ரீ ராமனை நன்றாய்த் தெரிசித்து, சுவாமி! தருமவழி நடப்பதற்குத் தங்களை யல்லாமல் வேறு யாரிருக்கிறார்கள்? அப்படிக்கிருக்க

அதைத் திருப்பித் தாங்கள் மாறுபடச் சொல்லலாமா? இல்லறத்திற்கு யோக்கியமில்லாதவளும், வரத்தினாலே உம்மையும் உமக்கு யோக்கியமில்லாத காரியத்தையுஞ் செய்வித்து மகாராஜாவையும் கொன்று லோகமுள்ளவரைக்கும் மறைக்கக் கூடாத இழிவான பழியை பூண்டவளுடைய மகனை அடியேன் தவத்திற்கும் யோக்கியமாவேனே? அதுவுமாகவு மாட்டேன். இந்த லோகத்தையெல்லாம் நோகப்பண்ணின பாபி வயிற்றிலே பிறந்த நான், இறந்து பேர்க மாட்டாமல் நானிருக்கிறேன். தவமும் செய்யாமற்போனால் இந்தப் பாவம் எப்படிதான் ஒழியும்? பதிவிரதா தருமமில்லாத ஸ்திரீயும், பொறுமையில்லாத தபசும், அருளில்லாத தருமமும், பூர்வ வரமுஞ் சிரேஷ்டமாகுமா? உம்முடன் கூடப்பிறந்த அடியேன் நீர் பிரிந்து தருமம் தப்பித் துறந்துவிட்டுத் தபசுக்குத் தொடங்கினீரென்றால், அதை நான் மறந்து நீதி தப்பி நடக்கின்றவனைப் போலத் தருமத்தைக் கொன்று தின்று அந்த ராசரீகம் ஆள்வேனா? உம்மிடத்திலிருந்த அன்பினாலே இராஜா இறந்துபோக, நீர் மகா கடூரமான ஆரணிய பூமியில் வந்துசேர, இதுதான் சமயமென்று இராஜ்ஜியம் ஆளுகிறதற்கு நானென்ன பகையாளியா? நமது தகப்பனார் செய்த தீமையும் தாயின் பாவமும் நீங்கும்படி, தேவரீர் பட்டணத்திற்கு எழுந்தருளி வந்து இராஜ்ஜிய பாரஞ் செய்யவேண்டியதென்று தன் மனோபாவம் நன்றாய்த் தோன்றச் சொன்னார். அந்த வார்த்தையை ஸ்ரீ ராமன் கேட்டு, இவ்வளவுதானா இவன் மனதென்று திருவுளத்தில் எண்ணி, தம்பி! நானொன்று சொல்லுகிறேன் அதை உய்த்துக்கேள். நீதியும் - வாய்மையும் - வேதமும் - மேன்மையும் - தருமமும் இவை முதலியவைகளும் மகாரிஷிகளான பிராமணாளாலே உண்டாகும் கேள்வியும் - ஞானமும் - சீலமும்-காலமேன்மையும் தேவரும் சகலமும் பெரியவரென்றே மனதிலேவை. அந்தப் பெரியவர்கள் யாரென்று நன்றாய் யோசனை செய்து பார்த்தால், தகப்பனுந் தாயுமே யல்லாமல் வேறல்ல. அப்படிக்கொத்த தாய் வரம் வாங்கிக்கொள்ளத் தகப்பனார் ஆக்கியாபித்தபடிக்கு நம்மிட குலதருமம் தப்பாமல் ஆரணியத்திற்கு வந்தேன். இவ்வாறு வந்த நான், நீ வருந்திச் சொல்கிறாயென்று திரும்பி அந்தத் தருமங்களைவிட்டு வந்துவிடுகின்றது உத்தமமா? பிள்ளைகளானவர்கள் தாய் தகப்பனைப் பூசித்து அவர்கள் மனதிற்கு இசைந்தபடி நடந்துக் கொள்ளுகிறதா? அல்லவென்று அவர்களுக்கு அனேக காலமட்டும் பழியுண்டாகும்படிச் செய்து தானும் பழி சம்பாதித்துக் கொள்ளுகிறதா? நம்முடைய தகப்பனார் இகத்திலே பொய் சொன்னாரென்று பழியுண்டாய் அவ்விடத்தில் எந்தப் பிராப்தியாகுமோ? நான் இராஜ்ஜியத்திலே வியாபித்து இஷ்டானுபோகம் அனுபவித்துக்கொண்டிருக்கின்றது நமது தகப்பனார் கொடுத்த வரத்தினாலே இராஜ்ஜியமும் உன்னதான்படியினாலே, நீ போய் இராச்சியபாரம் செய்யவேண்டியது. அம்முறையின்படியே நீ பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு இராச்சியபாரஞ் செய்யவேண்டியதென்று ஸ்ரீ ராமன் சொல்ல, அதற்குப் பரதர் சொல்லுகிறார்: சுவாமி! நீர் முன்னே பிறந்தவர். இந்த மூன்றுலோகத்திற்கும் நாயகருமானவர். இவ்வுலகம் உம்மதுதான். அந்த இராச்சியத்தை என்னதென்று சொல்லுகிறீர். அப்படியே என்னதானாலும் நான் இன்றைக்கு உமக்குக் கொடுத்தேன். நீர் வந்து மகுடம் சூட்டிக்கொள்ளும். இராச்சியமெல்லாம் வருந்திக் கிலேச சமுத்திரத்திலே விழுந்து கிடக்க

நீர் உம்முடைய மனதிற்குச் சரிபோனபடி செய்வது உத்தமமா? இப்பால் இராச்சியம் வருந்திக் கலங்கிப் போகாமல் காத்து ரட்சியுமென்று பரதன் சாஷ்டாங்கமாய்ச் சேவித்து, உபய சரணரவிந்தங்களையும் தன் கரங்களால் பிடித்து வேண்டிக்கொண்டான். அதற்கு ஸ்ரீ ராமன் அப்பா! என்னிடத்திலே உனக்குண்டான பக்தி விசுவாச அன்பினாலே இராச்சியத்தை என்வசம் பண்ணினால் அது உத்தமமா? நியாயமா? அபவாதத்திற்குப் பயப்பட்டுப் பிராணனை விட்டுக்கொண்ட தகப்பனார் சொன்ன பதினன்கு வருடமும் இன்றே டாய்விட்டதா? இல்லையே! அப்படிக்கிருக்க, அவர் சொன்னபடி பதினன்கு வருடமும் ஆரணியத்திலே யிருந்து வாசஞ்செய்து நான் வருகிறேன். அதுவரைக்கும் நீ நான் சொன்னபடிக்கு இராச்சியபாரம் செய்துகொண்டிரு. இராஜா சுகமாயிருந்த போதுதானே என்னை யழைத்து நீ பட்டாபிஷேகம் பண்ணிக்கொள்ளென்று சொன்னார். அவர் பேச்சுக்குப் பயப்பட்டு அதற்குச் சம்மதித்தேன். அதை நினைத்துப் பார்த்து, நீயுமப்படியே என் வார்த்தையை மறுக்காமல் நான் சொன்னபடியே கேள். துயரப்படாதே யென்று இப்படிக் கெல்லாம் ஸ்ரீ ராமர் சொல்லினார். அப்போது வசிஷ்டமகாமுனி பரதனைப் பார்த்து, நீர் சும்மாவிருமென்று கையமர்த்திப் புருஷோத்தமனான ஸ்ரீ ராமனைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறார்: பிரளயகாலத்திலே சமுத்திரம் பொங்கிப் பிரபஞ்சமெல்லாம் மூழ்கிப் போகும்போது, ஸ்ரீமந் நாராயணன் ஆதிவராக ரூபமெடுத்து இந்தப் பூமியைத் தம்முடைய கொம்பினால் இளம் பிறையிலே களங்க மிருக்கிறதுபோலப் பிரகாசிக்கத் தாங்கினார். அப்போது ஐந்து பூதமும் மறைந்து சகல ஜீவராசிகளும் போய்விட்டன. பின்பு மறுபடி சிருஷ்டிக்கவேணுமென்று உந்திக் கமலத்திலே பிரமாவை உண்டாக்கினார். அந்தப் பிரமா பிரபஞ்ச முதல் சராசரங்களையெல்லாம் சிருஷ்டிக்கு முன்னே உன் குலத்து ராசாக்களில் மனு மாந்தாதி முதலானபேரைச் சிருஷ்டித்தார். அவர்கள் முதல்கொண்டு வந்த இராஜாக்கள் இதுவரைக்கும் முறை தப்பி நடந்தவர்களில்லை. ஆதலால், ஸ்ரீ ராமா! உனக்கு நான் ஒன்று சொல்லுகிறேன் கேளும். வேதத்திலே பெரியவர்களென்று சொல்லியிருக்கிறதில், இம்மை மறுமை இரண்டையும் கொடுக்கிறது வித்தை. அந்த வித்தை சொல்லிக் கற்பித்தவனே பெரியவனென்றுஞ் சொல்லுவார்கள். நான் உமக்குச் சகலவித்தையும் உண்மையாகச் சொல்லியிருக்கிறேன். ஆதலால் என் பேச்சை நீர் தள்ளலாகாது. இராஜ்ஜியம் உமதுதான். நீர் வந்து இராஜ்ஜிய பாரம் பண்ணுமென்று சொன்னார். அப்படிச் சொன்ன வசிஷ்ட மகாமுனியை ஸ்ரீ ராமன் செந்தாமரைக் கமலம்போலிருக்கிற கரங்களினாலே தொழுது, சுவாமி! அடியேன் ஒரு விண்ணப்பம் பண்ணிக் கொள்ளுகிறேன். அதை க்ஷமித்துக் கேட்டருள வேண்டுமென்று சொல்லுகிறார்: சர்வக்கியரான பெரியோர்களாகட்டும், பெரியன்-புலியன் முதலான சிறியோராகட்டும், இன்னது செய்கிறேனென்று வாக்கினாலே சொன்னபிறகு அந்த வாக்கை மறுத்து நடக்கிறது உத்தம மல்லவே? தாயார் சந்தோஷத்தோடே ஆக்கியாபித்துத் தகப்பனார் அப்படியே செய்யென்று ஏவினதற்கு சம்மதித்து, அந்த வார்த்தையைச் சிரசால் வகித்துக் கொள்ளாத புலியைப் பார்க்கிலும் கிரமந்தெரியாத நாய்போல் திரிகிறது நல்லதல்லவா? முன்னே தாய் தகப்பனுடைய வார்த்

தையை நான் சிரசாக வகித்துக்கொண்டு, அப்படியே செய்கிறேனென்று வெளிப்பட்டு வந்துவிட்டேன். இப்போது தேவரீர் இப்படிச் சொன்னால் இந்த இரண்டில் நானெந்தக் காரியத்தைச் செய்யலாம்? தேவரீர் தானே யோசனை செய்து அடியேனுக்கு கட்டளையிடுங்களென்று சொல்லினர். அந்த வார்த்தையைக் கேட்டு வசிஷ்டர் இனி நாம் என்ன சொல்லப்போகின்றோம்? இனி வேறே சொல்லுகிறதற்கு இடமில்லை யென்று சும்மா யிருந்தார். அப்போது பரதன் இராஜ்ஜியம் ஆளுகிறவர்கள் யாராகிலும் ஆளட்டும், அடியேன் ஆரணியத்திற்குக் கூடவருகிறது நிச்சயமென்று சொன்னர். அதைத் தேவர்கள் யோசனைசெய்து, இப்படியாகப் பரதன் ஒரே பிடிவாதங்கொண்டு ஸ்ரீ ராமனைத் திரும்ப அயோத்திக்குக் கொண்டுபோனால் நம்முடைய காரியங்கள் கைகூடி வராதென் றெண்ணி, அசரீரி வாக்கியமாய் ஸ்ரீ ராமன் தகப்பன் பேச்சைத் தள்ளாமல் 14-வருஷம் ஆரணியத்தில் இருந்து வாசஞ் செய்ய வேண்டும் பரதமகாராஜனே இராஜ்ஜியமாள வேண்டும் என்று இப்படி தேவர்கள் சொல்லவே, ஸ்ரீ ராமன் பரதனைப் பார்த்து, அவர் கைகளைச் சேரப் பிடித்துக்கொண்டு, அப்பா! தேவர்கள் சொன்ன அசரீரி வாக்கியம் தள்ளலாகாது. அதுவுமல்லாமல் நான் சொன்னபடியே பதினன்கு வருடமும் நீயே இராஜ்ஜியபாரம் பண்ணும்படி உன்னை நான் இரந்து கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு நீ தடை சொல்லாதே என்று ஸ்ரீராமர் சொல்லவும், அதற்குப் பரதர் துக்கித்து அழுது ஒரு வார்த்தை சொல்லுகிறார்: சுவாமி! இந்தப் பதினன்கு வருடமும் கழிந்தவுடனே நீர் அயோத்தியாபுரிக்கு வந்து இராச்சியபாரம் பண்ணுமற் போனால், உம்முடைய ஆணைப்படிக்கு நான் அக்கினியிலே விழுந்து பிராணனை விடக்கடவே னென்று துணிந்து சொன்னர். அப்படிச் சொன்ன பரதனை மார்பிலே அணைத்துக்கொண்டு, அன்புடனே பார்த்து மனதுருகி, அப்படித்தானே ஆகட்டுமென்று சொன்னர். அப்போது பரதன் விம்மியழுது, வேறே ஒன்றுஞ் செய்வதற்கு இல்லாதபடியினாலே எப்படி பிரிந்திருப்போ மென்றெண்ணி ஏங்கி சுவாமி! உம்முடைய திருப்பாதுகத்தைக் கொடுமென்று கேட்டார். அப்படியே இரண்டு பாதுகமும் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு பரதன் அழுத கண்ணுடனே இதுதானெனக்குக் கிரீடம் என்று சிரசிலே வைத்துக்கொண்டு, சாஷ்டாங்கமாகச் சேவித்து தான் வந்தவழியே திரும்பி நடந்துபோனர். மகரிஷிகளும், தாய்மார்கள் முதலிய யாவரும் வசிஷ்டர் முதலிய பாரத்துவாசரும் பட்டணத்தில் வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீ ராமர் விடைகொடுக்கக் குகனும் நடந்தான். பரதன் பாதுகத்தைச் சிரசிலே வைத்துக்கொண்டு கங்கையைத் தாண்டி, அயோத்தியாபுரி போகாமல் இராத்திரி நித்திரைவிட்டு நந்திக்கிராமத்திலே போயிருந்துகொண்டு, ஐம்புலாதிகளையு மொடுக்கி, இந்தப் பாதுகந்தான் இந்த இராச்சியத்திற்கு அதிகாரியென்று எண்ணிக்கொண்டு, இராத்திரி பகல் ஓயாமல் கண்களிலே தண்ணீர் பெருகத் தெற்குத் திசையைப் பார்த்துக் கொண்டே யிருந்தார். சித்திர கூடத்திலே யிருந்த ஸ்ரீ ராமரும் இவ்விடத்திலிருந்தால் ஜனங்கள் இன்னம் வந்து நலிவு செய்வார்களென் றெண்ணித் தம்பியும் தானும் சீதையுமாகத் தெற்குத் திசையை நோக்கி நடந்தார்கள்.

அயோத்தியா காண்டம் - முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத்

கம்ப ராமாயண வசனம்

ஆரணிய காண்டம்

காப்பு விருத்தம்

பேதி யாதநிமிர் பேத வுருவம் பிறழ்கி லா
ஓதி யோதி யுணருந் தொரு முணர்ச்சியு தவும்
வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா
ஆதி தேவ ரவரெம் மறிவினுக் கறிவ ரோ.

மூத்தி ருத்தியவ் வீருந்த னேயமொய்ங் ஙகையொடும்
சித்தி ரக்குனி சிலைக்கு மரர்சென் றணுகினர்
அத்தி ரிப்பெய ரருந்த வனிருந்த வமைதி
பத்தி ரப்பழு மரப்பொ ழிறுவன் றபழுவம்.

விராதன் வதை

பூலோகமெங்குந் துதிக்கும் சித்திரகூட பர்வதத்தினின்றும் நித்திய நிகர்த்த புன்முறுவலும் வாசனை வீசாநின்ற தாமரை நிகர்த்த பாதங்களையு முடைய சீதாலட்சுமியுடன் கோதண்ட பாணியாகிய ஸ்ரீ ராம லட்சுமணர்களும் மகா தவத்தவரெல் லாம் வாசமா யிராநின்ற தண்டகாரணியத்தை யடைந்து, காமாதிகளை வென்று யாதொரு பற்றில்லாமல் பரமமுக்தி சாதகராகிய அத்திரி மகாரிஷியானவர் வாசஞ்செய்யுமிடத்திற் சென்று, அவரைத் தீர்க்கதெண்டஞ் செய்து நின்றார்கள். அவரும் மகா மகிழ்ச்சியுடன் இவர்களுக்குப் பல ஆசி கள் கூறி. மகோத்தமர்களாகிய நீங்கள் எமக்குச் சேர்வைதர இவ்விடம் வந்த தென்ன? இதென்ன வைபவமா? அமரர்களும் மற்ற புவனத்திலிருக்கும் பிரஜைகளுக்கும் நேர்ந்ததுபோ லல்லவா? இவ்விதமாக நீங்களெல்லா மிவ் விடம் விஜயஞ் செய்ய முன்னோர்கள் செய்த தவப்பேறே வென்று உறவின். முறையார் வரின் எத்தன்மையுள்ள மகிழ்ச்சியுண்டாமோ அவ்வகைக்கேற்ற கூட்களிப்புற்று இருந்தார்கள். அன்று முழுமையும் அந்த மகாரிஷியின்

வனத்திலிருந்து அவர் மனைவியாகிய அநுசூயை யென்பவள் ஜானகியம்ம னுக்குச் சர்வ மேகலாபரணங்களும் கந்த கதம்ப மலர்களும் அன்புடன் கொடுக்க, ஸ்ரீ ராமர் கட்டளைப்படி அவைகளை யெல்லாம் பெற்றுக்கொண்டு அணிந்து, பின்னர் மறுநாள் சூரியோதயத்துக்கு முன் அவ் வனத்தைநோக்கி நடந்தார்கள். இவ்விதமாக அந்தத் தண்டகாரணியத்திற் செல்லுமளவில் எட்டெட்டுத் திக்கஜங்களையும், அதுகளிரட்டித்த மிருகராசனையும், ஈரெட்டு யாளிகளையும் தனது ஒரு கரத்தினிடத்தில் ஒன்றாக ஏந்திக்கொண்டு, ஒரு அஸ்தத்தில் சூலம் மின்னல் நெருப்புப் பொரிபோலும் செவ்விய மயிர்களும் காளகூட விஷமே ஒருருவமாகத் தடித்து வந்ததுபோலும் ஒரு ராக்ஷதனன வன் மகா உக்கிரத்துடன் நடந்து வந்தான். வரும் விசையில் வாயுவால் கிரிக ளெல்லாம் தூளியாய்ப் பறக்கவும், கண்களில் அக்கினிப்பொறிகள் சிதறவும், மேலுலகங்களும் அஷ்டகுலாசலங்களும் குலுங்கவும், ஆயிரங்கிரணனுந் திடுக் கிட்டுப் பயந்து நடக்கவும், உலகமதிர நடுவனும் பிதிர்கலங்கி நெஞ்சம் பேதுற வும், தனது செவியினிடத்தில் இரண்டு சிங்கங்கள் மருவி முழங்கவும் மேருகிரி யின் கொடுமுடிகளும் அசைந்தாடவும், எதிர்ப்பட்டவர்களின் குருதி வெள்ளந் தோய்ந்து செவ்வானம்போல் ஒளிதரும் செச்சையும், சத்துரர்களையும், மதகரி களையும், அஸ்வங்களையும், இரதங்களையும், அரிமா முதலிய வேங்கைகளையும், அகப்படும் இதரமான ஜந்துக்களையும், கையில் வாரி பர்வத சர்ப்பங்களாலே அவைகளைத் தோரணமாய்ப் பூட்டி அதனை மாலையாகத் தன் விசாலமாகிய மார்பில் தரித்துக்கொண்டு கிரியொத்த மும்மதங்களைப் பிணைத்துத் தன் குகை யொத்த வாயில் அடைக்காய்ப்போலக் கொடுத்ததை மென்று நுகர்ந்து கொண்டே அடங்காத பசியுடனேயும், நாகலோகத்தார் சிரோரத்தினங்களை யும், தேவர்களுடைய விமானங்களையும் இடையிலே வைத்து, பாம்புகளாலே கோர்த்த சன்னல் பின்னலான வீரதாவடங்கள் மார்பிலே பிரகாசிக்கத் தேவேந்திரனுடைய யானையின் நெற்றியில் கட்டியிருக்கும் வீரப்பட்டத்தைப் பிடுங்கி, தன் நெற்றியிலே கட்டிக்கொண்டு, அதினுடைய தந்தங்களிலே பூட்டி யிருந்த இரத்தின கிம்புரிகளை வாகுவலயங்களாகப் பிரகாசிக்கத் தரித்துக் கொண்டு, கொடுமையானது புழுங்கியெழும்ப அதிக இருட்டாகிய விஷாக்கினியை மேலே பூசிக்கொண்டு, கலிகாலத்தைப்போல் கன்னங் கரேலென்று உலாவித் திரிபவன் கொடிய புலித்தோல்களாலே தட்டி சல்லடமும் யானைத் தோல் களாலே உத்தரீயமும் உடுத்தி அஷ்ட கெஜங்களுடைய மணிகளைப் பிடுங்கிப் பாம்பினாலே கோர்த்து அரையிலே கணகண வென்கிற சத்தத்துடனே கச்சு கட்டிக்கொண்டு, சஞ்சல முதலான் சங்கங்களைக் கோர்த்து கையிலே கங்கணமாகக் கோர்த்துக்கொண்டு, மகம்மேரு பர்வதம் கைலாய பர்வதம் இவைகளுக்குச் சமானமான அநேக பர்வதங்களைப் பந்துகளாகக் காலினாலே ஆடிக்கொண்டு பூமியிலே சஞ்சரித்துக்கொண் டிருக்கிறவனு யிருந்தாலும், தேவ லோகத்திலே இருக்கிற தேவர்களுடைய கண்களிலும் மனதிலும் என்னேர மும் பயப்பிராந்தியைக் கொடுத்துக்கொண்டிருக்கிற சாமர்த்தியன். பஞ்சபூதங் களும் ஓர் ரூபமெடுத்ததுபோல் பலமும், பிரளயகாலத்து இடிபோல் குரல் சத்தமும் உண்டானவனுய் அவ்விடத்திலே இருக்கிற பர்வதங்களும் விருட்சங் களும், வேரோடே பிளந்து பொடிப் பொடியாய்ச் சிதறும்படி நடந்து வரும்

விராதனென்கிற பெயரை யுடைத்தான கடுரராட்சதன். இவன் மின்னல் போல் பற்களும் அதினுடைய சந்துகளிலே அனேக நிணங்களும் பொருந்தி மலைக்குகைபோ லிருக்கிற தன் வாயைத் திறந்து, நில்லுங்கள் நில்லுங்க ளென்று சொல்லிக்கோண்டு, ஸ்ரீ மகாலட்சுமிக்குச் சமானமான சீதையை ஓர் நிமிஷத்தில் ஒரு கையாலே தூக்கி எடுத்துக்கொண்டு ஆகாசமார்க்கமே போனன். இதனை ஸ்ரீராம லட்சுமணர்கள் கண்டு கோபமுற்று, தோள்களிலிருக் கிற விற்களை இடதுகையிலே வாங்கிக்கொண்டு, ஆரடா! நீ எங்கே போகிறாய்? திரும்பு திரும்பென்று பூமியில் நடந்து அதட்டிச்சொல்லித் தொடர்ந்தார்கள். அதுகண்டு விராதன் நீங்கள் வெகு சாமார்த்தியமாய்த் துடர்ந்து வருகிறீர்கள். நான் பிரம்மாவினுடைய வர முண்டானவன். ஒருத்தராலேயும் சாகிறவனல் லன். எந்த ஆயுதங்களாலுலும் என்னை ஒன்றும் செய்யமாட்டாது. உலகத்தி லுள்ள யாவரும் கூடி வந்தாலும் நான் நிமிஷமாத்திரத்திலே சங்காரித்துப் போடுவேன். என்னலாகாதது ஒன்றுமில்லை. இந்த ஸ்திரீயை நீங்கள் கொண்டு வந்தபடியினாலே இந்த உபகாரத்தை எண்ணி, உங்களை எடுத்துத் தின்றுபோடாமல் பிராணனோடு விட்டுவிட்டேன். சும்மா தப்பிப் போய் விடுங்களென்று சொன்னன். அந்த வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ ராமர் குஞ் சிரிப்பாக நகைத்து, இவனெவ்வளவு! இவனுடைய பலமும் ரூபமும் முடிந்து போகும்படியாய் அஸ்திரப் பிரயோகம் செய்யவேணுமென்று வில்லைக் குணத் தொனி பண்ணினர். அந்தக் குணத்தொனியால் சமுத்திரங்கள் பர்வதங்கள் பூலோகம் நாகலோகம் முதலிய இவைகளின்பேரில் இடிவிழுந்ததுபோல் பயந்து அல்லோலகல்லோலப் பட்டன. அப்போது பூனைவாயி லகப்பட்ட கிளி போல் கதறி அழுகிற சீதாலட்சுமியை விராதன் பூமியிலேவிட்டு, மனது பயந் தவனைப்போலே திடுக்கிட்டு, சில நாழிகை திகைத்து நின்று, ஸ்ரீராமனெதிரே வந்து, கோபாக்கினி மண்டி யெரியக் கையிலிருந்த சூலாயுதத்தைத் திருப்பி னன். அந்தச் சூலாயுதம் எப்பேர்க்கொத்ததெனில், அநேகம் ஜீவன்களைக் கொன்று ரத்தம் தோய்ந்து வடவாமுகாக்கினியின் சுவாலையைக் கக்கிக் கொண்டு சூரியன் ரதத்தில் கட்டியிருக்கிற குதிரை வாய்மட்டும் போய்த் திரும்பி வந்தது. அந்தச் சூலாயுதத்தை ஸ்ரீ ராமர் பேரில் பிரயோகம் செய் தான். அப்போது ஸ்ரீ ராமர் மகமேரு பர்வதம்போலிருக்கிற தம்முடைய கோதண்டத்திலே ஒரு அஸ்திரத்தைத் தொடுத்து வாங்கிவிட்டார். அது அந் தச் சூலாயுதத்தை இரண்டு துண்டமாகக் கண்டித்தது. அந்தத் துண்டங்கள் ராட்சத குலமெல்லாம் இன்றைக்கே அற்றுப்போகிற விபரீத காலத்துக்குப் பகலிலே எரிந்துவிழுகிற நட்சத்திரம்போலப் பிரகாசத்துடனே பூமியிலே விழுந்தது. அப்போது விராதன் தேவர்களை ஜெயித்த அந்தச் சூலாயுதம் அற்றுப்போயிற்றென்று கொஞ்சமாகிலும் யுத்தம் ஒடுங்காமல், அதிக கோபத் துடனே மனம் புழுங்கி, அங்கே யிருக்கப்படானின்ற பர்வதங்களை யெல்லாம் வேரோடே பிடுங்கி, கிறுகிறென்று சுழற்றி வீசிவிட்டான். அதற்கு ஸ்ரீ ராமர் வயிரக்கட்டினால் அமைந்த பாணங்களைப் பிரயோகம் செய்ய, அந்தப் பாணங் கள் அந்தப் பர்வதங்களைத் தள்ளிக்கொண்டேபோய் அவனுடைய சரீரமெல் லாம் புண்களாகும்படி அவன்பேரிலேயே விழுந்தது. அப்பால் விராதன் ஒரு மாமரத்தை வேரோடே பிடுங்கிக்கொண்டு அதினாலடித்துப் போடுவேனென்று

ஒங்கி வருகிறான். அப்போது ஸ்ரீ ராமர் நாலு பாணம்விட்டு அந்த மரத்தை அறுத்து, பனிரெண்டு பாணத்தை அவன் மார்பிலேயும் தோளிலேயும் அழுந்தும்படிப் பிரயோகம் பண்ணினர். அந்தப் பாணங்கள் அவன் சரீரத்தில் சன்னல் பின்னலாகத் தைத்துக்கொள்ளவே, அவைகளை முள்ளம்பன்றி முள்களை உதறுகிறாப்போல உதறிவிட்டு நின்றான். பின்னேயும் ஸ்ரீ ராமர் அக்கினியாஸ்திரம் பிரயோகம் பண்ணினர். அந்தப் பாணங்கள் அவன் சரீரத்தில் தைத்து அருவிபாய்கிற பர்வதம்போல இரத்தப் பிரவாகம் சொரிய மூர்ச்சை யாயினன். அப்போது ஸ்ரீ ராமர் இவன் மிகுந்த வரம் பெற்றவன். பின்னெரு ஆயுதங்களினால் சாகிறவனல்லவென்று தானும் தம்பியும் வாள்களை உருவிக்கொண்டு, அவனுடைய இரண்டு தோள்களையும் வெட்டித் துணித்து விடுவோமென்று அதி சீக்கிரமாக அவன் சமீபத்திற்போய், அவனுடைய உயர்ந்த இரண்டு தோள்களின்பேரில் இவர்கள் இருவரும் ஏறிக்கொண்டார்கள். அவன் மூர்ச்சை தெளிந்து தோளின்பேரிலிருக்கிற இருவரையும் பார்த்து, கைகளினாலே சேர்த்துப் பிடித்துக்கொண்டு, முன்போலவே அண்ட கடாகமட்டுக்கும் எழும்பிக் குதித்து, உடலிலிருந்து ரத்தவெள்ளம் பெருகப் பூமியெல்லாம் சாரியாகத் திரிந்தான். அப்போது ஸ்ரீ ராமலட்சுமணர்கள் மகா மேருவைப் பிரதட்சணம் வருகிற சந்திர சூரியரைப்போல் பிரகாசித்தார்கள். அந்த இராட்சதன் ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் பிரம்மாவுடனே கூட ஒரு காலங்களிலே தாங்கிக்கொண்டு வருகிற கருடனுக்குச் சமானமானான். சீதாதேவி தன் பிராண நாயகனான ஸ்ரீ ராமன் இராட்சதனுடைய கையில் அகப்பட்டுக்கொண்டு போகிறதைக்கண்டு கிலேசித்து வாயுலர்ந்து, முறிந்து விழுந்த பாரிஜாத புஷ்பக் கொம்புபோலவும், பிடியுண்ட சேவலைப்பிரிந்த பெண்ணன்னம்போலவும், பூமியிலே விழுந்து, மிகுந்த துயரத்துடனே சீக்கிரமாகப் பூமியிலே தொடர்ந்து கடந்து சொல்லுகிறாள்: ஓ ராட்சதா! சகல ஜீவனிடத்திலும் தாய்போல அன்பு வைத்திருக்கிற அவர்களை விட்டு, என்னை எடுத்து விழுங்கிப்போடு விழுங்கிப் போடென்று சொல்லிக்கொண்டு, விழுந்து, எழுந்திருந்து, அழுது வாய்குளறி, சித்திரப் பிரதிமைப்போல தேகஸ்மரணை தெரியாமல் ஸ்தம்பித்து நின்றாள். இப்படி நின்ற சீதையை லட்சுமணர் கண்டு, தமையனைப்பார்த்து, சுவாமி! தேவியார் மிகவும் துயரப்பட நீர் விளையாடுகிறது நல்லதாவென்று சொல்லினர். அதற்கு ஸ்ரீ ராமர் லட்சுமண! இந்த ராட்சதன் இந்த எல்லை கடந்து அப்பாலே போகிறதற்கு இருக்கிறானென்று தெரியச்சொல்லி தம்முடைய பாதார விந்தத்தினாலே அவனை உந்தித்தள்ளினர். உடனே அவன் பூமியிலே விழுந்தான். விழுகிறதற்கு முன்னமே இரண்டு தோள்களையும் இருவரும் வாளினாலே வெட்டித் துணித்துப் பூமியிலே குதித்தார்கள். இவர்கள் பிறகே அந்தத் தோள்கள் தொடர்ந்து வருவது எத்தன்மைபோலிருந்ததெனில், சந்திரசூரியாளிருவரையும் இராகு கேது என்கிற இரண்டும் தொடர்ந்து வருகிறதுபோல் இருந்தன. அறுபட்ட தோள்களிலிருந்து பெருகிய இரத்தப்பிரவாகம் பூமியெல்லாம் பெருகிற்று. அப்போது ஆகாயமார்க்கம் போகிற எண்ணத்தை விட்டுப் பூமியிலே விழுந்த விராதனைக்கண்டு, இலட்சுமண! இவனைப் பூமியிலே புதைக்கவேணுமென்று சொல்லினர். அப்படியே லட்சுமணர் பூமியிலே அநேகம் விஸ்தீரணம் ஆழமாகக் குழிவெட்டினர். அன்புடனே நினைத்த பக்தருக்கும் பரமபதம்

உதவுகிற ஸ்ரீ ராமர், தமது திருவடியினுலே அவனுடைய சரீரத்தை உதைத்து அந்தப் பள்ளத்திலே தள்ளினர். அந்தத் திருவடி பட்டமாத்திரத்தில் பூர்வத்திலே அவனுக்கு வந்திருந்த சாபம்விட்டு, அந்தக் கடையான சரீரமும் போய்ப் பிரம்மாவைப்போலே பிரகாசித்து, அண்டத்தை யுண்டாக்கித் தானு மதிலே வந்து பிறந்திருக்கிற ஸ்ரீ ராமரைப் பூர்வக்கியான வாசனையினுலே ஸ்தோத்திரம் பண்ணுகிருன்.

ஓ வேதங்களாலே சொல்லப்பட்ட பிரமமே! உலகமெல்லாம் உமது திருவடி விரிந்து நிறைந்ததென்ருல், உம்முடைய சொரூபம் இவ்வளவென்று சொல்லக்கூடுமா? அப்படிக்கொத்த நீர் பஞ்சபூதங்களிலும் நிறைந்திருக்கிறதாலுல், அது உம்மைப் பொறுக்கமாட்டுமா? கொடிதாகிய மூதலையானது யானையைப் பிடித்துக்கொள்ள, அது தனது துதிக்கையை உயரவெடுத்துக் கொண்டு மெய்கலங்கி, மிகுந்த துயரத்தினுல் திசைகளெல்லாம் கேட்க, ஓ ஒப்பில்லாத ஆதிமூலமே! பரமே! பரம்பொருளே! எனை இரட்சியுமென்று ஓல மிடுங்கால் நீரல்லவா அன்றைக்கு அதின் எதிரே வந்துநின்று ரட்சித்தது. புறத்திலும் அகத்திலும் முகத்தினுடைய அருள் நோக்கம் காணத் தாமரைக் கண்ணையுடைய ஓ எம்பெருமானே! நீர்தானு? தருமத்தை யிரட்சிக்கிறதற்கு இப்படிக் கறங்குபோலே திரிந்து வருந்துகிறது? உமக்குக் கடனு? பிறவி வேண்டாமென்று துறந்து உம்மை நினைந்தால் அவர்களுக்குப் பிறவியில்லாமற் செய்து பரமபதத்தைக் கொடுக்கிற நீர், பிறந்து இருக்கிற விளையாட்டை இன்பமாக இச்சித்தீ ரல்லவா? பிறவியென்கிற சமுத்திரத்தைக் கடக்க அந்தந்தச் சமயவாதிகள் அந்தந்தச் சமய நூலின்படிக்கு அனுஷ்டித்து நன்றென்று சொல்லத்தக்கதான ஒப்பற்ற தத்துவத்தினுடைய மூர்த்தி நீராக இருந்தால், முதல் தேவராய் இதுவரையி லிருந்தவர்கள் என்னத்தைக் கொண்டு அவர்கள் பிறவியை நீக்குவார்கள். பிரமன் முதலிய யாவர்க்கும், தேவர்க்கும், மன்னுயிர்க்கும், முதற் பிதாவாக நீரிருந்தால் கிரமமா ஈன்றெடுத்த தாயார் யார்? ஓ தரும சொரூபியே! ஆதியாகிய பரப்பிரமமே! உலகங்கள் உமது, சமயங்களும் உமதே வேறல்ல. பொல்லாதவர்கள் போல ஒளித்துக்கொண்டிருக்கிற நீர் வெளியில் வந்து நின்ருல் அதனுல் உமக்கென்ன பொல்லாங்கு உண்டோ? உமக்கு மாய்கையென்ற ஓர் விளையாட்டும் வேண்டுமா? உலகத்திலே தாயை அறியாத கன்றுகளில்லை. கன்றுகளைத் தாயும் அவ்வாறே அறியும். அப்படியிருக்க, சகல உயிர்களையும் பெற்ற நீர் அவைகளை அறிகின்றீர். அதுகள் உம்முடைய நிலையை யறியாத மாயம் யாது? ஓ வராமல் வந்த வஸ்துவே! பிரமன் முதலிய மற்ற தேவர்களுக்கும் நீர் அல்லாமல் வேறே தெய்வமில்லாமலிருக்கிறது தத்துவ நெறியிலே நிற்கிறவர்கள் நினையார்களா? சமயங்களிலே சொல்லுகிற தேவர்களெல்லாம் வினையுள்ளவர்கள் போலத் தபசு செய்கிருர்கள். நீர் ஒரு வினையும் யில்லாமல் திருப்பாற் கடலிலே யோகநித்திரை செய்கிறீர். இந்தப் பூமியை நீர் அனந்தனுகிச் சுமக்கிறீர். ஆதிவராக ரூபமாய் ஒரு கொம்பினுல் ஏந்துகிறீர். ஒரு வாயினுல் விழுங்குகிறீர்.. ஓரடியினுல் இப்பூமியை மறைக்கிறீர். இப்படிக்கெல்லாம் பூமிதேவிக்கு உபகாரஞ்செய்தால், மார்பிலிருக்கிற ஸ்ரீ மகாலட்சுமி கோபஞ் செய்யாளா

நீஞண்டாக்கிய ஜீவகோடிகள் உண்மையை யறிந்து பிழைத்தலாகாதா? அதினு லுமக்குக் குறைவுண்டா? நீரென்னமாய் மறைந்திருந்த போதிலும் முன் னுலே நீர் சிவனுக்குப் பிச்சையிட்டுக் கையிலிருந்த பிரம்ம கபாலம் விட்டு நீங் கினதைத் தெய்வலோகத்தாரிலும் பூலோகத்தாரிலும் அநேகர் சந்தேகந் தெளிந்து உம்மை அறிந்திருக்கிறார்கள். முன்னுலே அம்ஸரூபமாய் வேதங் களைப் பிர்ம்மாவுக்கு உபதேசம் செய்தீரே. அவ்வேதங்களை உமக்கு முன்னே சொல்லிக் கொடுத்தவர்கள் யார்? அவர்கள் எல்லாரும் செத்துப் போனர் களா? ஒரு ரூபமாயிருந்து, சகல ரூபங்களிலேயும் நிறைந்து, பிரிந்தும் பிரியா மல் இருக்கின்றீர். இது என்ன மாயம்? பூர்வ காலத்திற் செய்த பாபத்தி னுலே இந்த இராட்சத தேக மெடுத்திருந்தேன். தபோ பலத்தினுல் உம்மு டைய திருவடி என் சரீரத்தில் பட்டது. இப்போது நான் என் பிறவிசாகரத் தைக் கடந்தேன். இனிப் பிறக்கிறதில்லை. நல்வினை தீவினை இரண்டும் துப் பறவிட்டு ஒழிந்ததென்று சொல்லி நிற்கிற விராதனை ஸ்ரீ ராமர் கண்டு, நீயார்? உன் விர்த்தாந்தம் என்ன சொல்லென்று கேட்டனர். அதற்கு அவன் சொல்லுகிறான்: கள்ளமாகிய மாயவேட மென்கிற வாழ்வு எல்லாம் நீக்கி, ஞானத்தைக் கொடுக்கிற திருவடியையுடைய சுவாமி! தெய்வலோகத்தில் வீணை வாசிக்கிற தும்புருவன் நான். ஒரு நாள் அரம்பை யாடுகிறபோது அவளுக்குப் பிணக்குவந்து என்னுடனே வாக்குவாதம் செய்தாள். அந்த ரம்பை நிமித்திய மாய்க் காம வியாதியில் அழுந்திய என்னிடத்தில் தேவேந்திரன் முதலிய தேவர் கள் கொஞ்சமாகிலும் இரக்கமில்லாமல், இப்படி ராட்சதனுகும்படி சபித்தார் கள். அப்படியே தேவலோகத்தைப் பத்திரப்படுத்துகிற கிலிஞ்சன் மகனுய்ப் பிறந்தேன். இந்தச் சாபம் உம்முடைய பாதாரவிந்தத்தினுலே தீருமென்கிற தாய் அனுக்கிரகமும் செய்தார்கள். அன்றுமுதல் இன்றைய வரைக்கும் நல் லது பொல்லாது தெரியாமல் திரிந்தேன். இப்போது வேதத்தினுடைய முடிவி லிருக்கின்ற உம்முடைய பாதாரவிந்தம் தீண்டவே, என்னுடைய சாபவிமோ சனமாய் பூர்வக்கியானமும் தெரிந்தேன்; கடைத்தேறினேன். அக்கியானத்தி னுலே தேவரீரைப் பலவாறுக வைதேன். ஆதலால் அவைகளைப் பொறுத்து ரட்சியுமென்று சொல்லிக்கொண்டே போய்விட்டான். அப்பால் ஸ்ரீ ராமர் சீதாபிராட்டியுடனேகூட லட்சுமணரை அழைத்துக்கொண்டு, பெரியோர்கள் வேதாத்தியயனத்துடன் வாசஞ் செய்துகொண்டு வீற்றிருக்கும் ஒரு சோலையிற் போய்ச் சேர்ந்தார். சூரியனும் அஸ்தமனமானுர்.

சரபங்கர் வரலாறு

ஸ்ரீ ராம லட்சுமணர்கள் மற்றுநாள் அந்தச் சோலையைவிட்டுச் சரபங்கரிஷி தபசு செய்கிற மிகுந்த பரிமளமான வனத்துக்குச் சீதையுடனே கூட நடந்தார்கள். அந்தச் சரபங்கருடைய ஆசீர்மத்துக்குச் சமீபத்தில் வருகிறபோது அவ்விடத்தில் தேவேந்திரன் வந்திருந்தான். அவன் எப்படிக் கொத்தவனென்றால், ஆயிரம் செந்தாமரைக் கமல மலர்ந்ததுபோல் கண்கள் பிரகாசிக்க, இரண்டு பக்கத்திலும் மிகுந்த சுந்தரமான ஸ்திரீகள் மின்னல்போல பிரகாசிக்கிற வெண்சாமரையை அசுராளுடைய கீர்த்தியை வேரோடே பிடுங்கி வீசுகிறதுபோல் வீச வீற்றிருப்பவன். அநேகம் தேவரம்பைகளின் கண்களென்கிற வண்டுகள் படிந்திருக்கிற பாரிஜாத புஷ்பமாலையைத் தரித்திருக்கிற மார்பும், நாரதமகாமுனி வாசிக்கிற யாழ்வீணையின் இசைத்தேன்கள் மூழைந்து படிந்திருக்கிற காதும் பிரகாசித் திருக்கிறவன், தேவர்களுக்கெல்லாம் ராஜன் பெருமை பொருந்திய நூறு அஸ்வமேதயாகம் மனதின்படி செய்து முடித்திருக்கிற மகானுபாவன். அந்த மும்மூர்த்திகள் தவிர மற்றத் தேவர்களெல்லாம் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறபோது, அவர்கள் கிரீடங்கள்பட்டுத் துலங்கிப் பிரகாசித்திருக்கிற வீரகண்டாமணி தரித்திருக்கிற பாதாரவிந்தத்தை யுடைத்தானவன். செந்தாமரைக் கமலத்தில் வாசமா யிருக்கிற ஸ்ரீ மகா லட்சுமிக்குச் சமானமான சீதேவியுடனே கூட மும்மதமும் பொழியும் ஐராவத மென்கிற வெள்ளை யானையின்பேரில் ஏறி வருகிறபோது, பார்வதிசமேதனனவர் கைலாயபர்வதத்தின்பேரில் வருகிறது போலே பிரகாசிக்கிறவன். பூரணச்சந்திரன் உயர்ந்த பதவி பெற்றதுபோல் பிரகாசித்திருக்கிற சுவேதச்சந்திரமான தனிக்குடையை யுடையவன். பரிவேடத்துடனே பிரகாசிக்கிற சூரியனைப்போலே கிரீடம் தரித்திருக்கிறவன். மகாவிஷ்ணுவின் மார்பில் மகாலட்சுமி யிருக்கிறதுபோல் பிரகாசிக்கிற பரிமளமான பாரிஜாத மாலையைத் தரித்திருக்கிறவன். இரத்தினச்சுடர் பிரகாசிக்கிற கஞ்சுகியும் விஜய லட்சுமியினுடைய நகைபோல் பிரகாசிக்கிற வாகுவலயமும் தரித்திருக்கிறவன். நவரத்தினங்கள் அநேகம் கூடிப் பலபல வர்ணமாய்ப் பிரகாசிக்கிற படியினாலே, தம்முடைய பச்சை வில்லுடனே கூடப் பிரகாசிக்கிற நீலமேகம்போல் சரீர காந்தியை யுடையவன். தேவரம்பைகளின் கண்கள் போல் கூர்மையான வாளை இடையிலே கட்டிக்கொண்டு இருக்கிறவன். பூர்வத்தில் இராவணனை செயிக்கவேணு மென்று ஆசையினாலே அவன் பேரில் வச்சிராயுதத்தைவிட, அது அவனுடைய தேகத்தில் நெல்வாலவ்வளவும் அறுக்கவில்லை. ஆனாலதின் கருக்கான வாய் மடிந்து இருக்குமோவெனில் அப்படி மடியாத வச்சிராயுதம் பிடித்திருக்கிறவன். இப்படி அநேகப் பிரதாபங்களை யுடைத்தான தேவேந்திரன் அந்தச் சரபங்க மகாரிஷி ஆசீர்மத்திற்கு வந்தபடியால் அவர் எதிர்கொண்டு செய்ய வேண்டிய உபசாரஞ்செய்து, ஓ தேவ இராஜனே! நீரிவ்விடம் வந்த காரியம் என்னவென்று கேட்டனர். அதற்குத் தேவேந்திரன் சொல்லுகிறான்:

நீர் செய்த தபசைப் பிர்மதேவ ரறிந்து அந்தத் தபோபலத்தைத் தம்மால் சொல்லுகிறதற்கு அரிதென்று சொல்லி உம்மைத் தம்மிடத்திற்கு அழைத்துவரச் சொன்னர். இந்த உலகங்களையும் சகல உயிர்களையும் பெற்ற பிரம்மதேவர் வாசமாயிருக்கிற பதவி உமக்குக் கொடுத்திருக்கிறர். நீர் வந்தால் உமக்கெதிரே வருவார். சகல லோகத்துக்கும் பிரம்மலோக முயர்ந்ததன்றே? ஆனபடியால் உம்முடைய ஸ்திரீயுடனேகூட நடவுமென்று சென்ன தேவேந்திரனைப் பார்த்துச் சரபங்கமகாரிஷி சொல்லுகிறர்: ஓ அநேக கீர்த்தியையுடைய தேவேந்திர மகாராஜனே! அநேக கர்ப்பகாலம் தவம் பண்ணினேன். நீரும் அறிந்திருப்பீர். நான் ஏதாகிலும் ஒரு பிரயோசனத்தை எண்ணித் தவம் செய்தவனல்ல. நீர் இப்படி அழைக்கிறது உத்தமமல்ல. ஓர் பதவியைப் பெற்றும் இன்னம் பெறுகிறதான பதவியா பெறுகிறது? என்னத்திற்குப் பல வார்த்தை; நீர் இவ்விடத்திற்கு வந்தபடியினல், என்னுடைய தவம் முடிந்தது. சிறுகாமல் பெருகாமல் நிலைபெயராமல் குறுகாமல் நெடுகாமல் குணம் வேறுபடாமல் பஞ்சபூதங்கள் இறந்துபோனலும் திரும்பாமல், தானே தானுயிருக்கிற மோட்சநெறி எதுவோ அதைச் சேருவேனே யல்லாமல் வேறொரு பதவியைச் சேரேனென்று சொல்லினர். இப்படியாகச் சொல்லிக்கொண்டிருக்கிற சமயத்திலே அந்த ஆசீர்மத்துக்குச் சமீபத்தில் வந்த ஸ்ரீ ராமர் இங்கே என்னமோ சத்தமாக யிருக்கின்றதென்று யோசனை செய்து, சீதையையும் இலட்சுமணரையும் அவ்விடத்தில் நிறுத்தி, புருஷ சிங்கம்போல ஸ்ரீ ராமர் மாத்திரம் தனியே அந்த ரிஷியின் ஆசீர்மத்தில் பிரவேசித்தார். அப்போது தேவேந்திரன் தன்னுடைய அரவிந்த மலர்போன்ற ஆயிரம் கண்களாலும், சதுர்வேதத்தின் கனியாகிய ஸ்ரீ ராமரைப் பூமியிலே களிக்கக் கண்டான். அப்படி கண்டமாத்திரத்தில் சார்வதா தான் சேவித்துக் கொண்டிருக்கிற பகவான் இப்படி அவதாரம்செய்து பிரயாசைப் படுகிறரே என்று மனம் நொந்து, தங்களுடைய சத்ராதிகளை ஜெயித்தும், வேதசாகரங்களைக் கற்பித்தும், தரும வழிகளிலே விட்டும், பாக்கியத்தைக் கொடுத்தும், மோட்சத்தை அளித்தும், தங்களுக்கு உபத்திரவமில்லாமல் கவசமாய், உயிராய், கண்ணுய், தவமாய், ஞானமாய் இருந்து காத்து இரட்சிக்கிற அந்தப் பகவானைச் சிந்தை கரைந்து அறியாதவன் போலே அறிந்ததெல்லாம் சொல்லித் தோத்திரம் செய்கிறன்.

ஓ சகல பொருள்களிலேயும் இருந்தும் இராமலிருக்கிற பரஞ்சுடரே! ஓ பாசம் விட்டவர்களுடைய பந்துஜனமே? ஓ கிருபைக்கெல்லாம் இருப்பிடமே! ஓ வேதமார்க்கத்தை ஆய்ந்து அறிந்த அறிவுக்கு அறிவே! பூர்வத்திலே அடியேங்கள் இராட்சதாளாலே அலைச்சல்பட்டுத் தோத்திரஞ் செய்ய, அப்போது தேவர் கொடுத்த வரத்துக்காகவா இப்படிப் பூமியிலே பாதாரவிந்தங்கள் உருத்த நடந்து வந்தீர்? பகை - உறவு - ஒளி - இருள் - மேல் - கீழ் - இம்மை - மறுமை - ஆதி - அந்தம் - முன் - பின் - இவைகளொன்று மில்லாமலிருக்கிற வஸ்துவான நீர் இப்படி கையிலே வில்லேந்திக்கொண்டு பாதங்கள் நோகப் பூமியிலே திரிந்து எங்களைக் காக்காவிட்டால் உமக்குப் பழி வருமோ? சமுத்திரத்திலே வந்து படுத்திருந்ததற்கு பதிலுபகாரஞ் செய்கிறீரோ? நீர்

உந்திக் கமலத்திலே பெற்ற சதுர்முகப் பிர்ம்மா அநேக ஊழிகாலஞ் சொன்னாலும் சொல்லக்கூடாத கலியாண குணத்தையுடைய ஓ புருஷோத்தமா! முன்னாலே பூமி தாழியாக, தண்ணீர் தயிராக, பர்வதம் மத்தாக, சமுத்திரத்தைக் கரங்கள்நோகக் கடைந்து எங்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்தீரே! அந்த அசுரர் உமக்கு அடுமையல்லவா? அவர்களுக்குக் கொடாமல் எங்களுக்கு மாத்திரம் கொடுத்ததென்ன? ஒன்றாய் பலவாய் உணர்வாய் உயிராய் மற்றுமாய் ஊழிகாலங்கள் முடிகிற காலத்திலே அதினிலையாகி, எல்லா வுலகமும் தானாகி நின்ற ஓ ஞானக்கொழுந்தே! ஓ எங்கள் குற்றங்களைத் தீர்க்கிற நாயகமே! நல்வினை செய்கிறவர்களைக் காத்துத் தீவினை செய்கிறவர்களைத் தெண்டனை பண்ணுகிறீரே. அந்தத் தீவினையும் நீர் உண்டாக்கினதல்லவோ? பூர்வத்திலே சகலரும் வரம்பு யில்லாத மாயத்தில் மயங்கிக்கிடந்து, பின்பு தெளிந்து, இறைவனை ஆதிவஸ்து நீர்தானென்று அறிந்து சப்த ரிஷிகளும் சத்தியமாய் நிச்சயஞ்செய்தபோது அவர்கள் மனதிலிருந்த ஐயங்களெல்லாம் தீர்த்து மெய்யறிவு கொடுத்துத் தெரியப்பண்ணினவரும் நீரல்லவா? என்று இப்படி தேவேந்திரன் ஸ்ரீ ராமரைப் பலபல விதமாகத் தோத்திரம் செய்து, பின்பு சரபங்கரைப் பார்த்து, நீர் பிரம்மலோகத்துக்கு வருகிறதில்லை என்கிறீரே நான் போய் வருகிறேனென்று விடைபெற்று ஆகாயமார்க்கமே போனான். அப்போது ஸ்ரீ ராமரைக் கண்டு சரபங்கர் எதிர்கொண்டு வந்தார். அவரை ஸ்ரீ ராமர் சேவித்துக்கொள்ள, அவரும் மிகுந்த அன்புடனே தழுவிக்கொண்டு, தம்பியும் சீதையும் கூடவரத் தம்முடைய ஆசீர்மத்திற்கு ஸ்ரீ ராமரை அழைத்துக்கொண்டு போனார். அந்த ஆசீர்மத்தைத் திருப்பாற் கடல்போலெண்ணி மகிழ்ந்திருந்தார். அன்று இராத்திரி அவ்விடத்தில் வாசம்பண்ணிக் கொண்டிருக்கிறபோது, பொழுது விடிகிற நேரத்திலே ஸ்ரீ ராமருக்கெதிரே சரபங்கர் வந்து, சுவாமி! நான் அக்கினிப்பிரவேசம் செய்யவேணுமென்று மனதில் ஒரு தெளிவை வைத்திருக்கிறேன். நீர் விடை கொடுக்கவேண்டுமென்று கேட்டு மிகுந்த அக்கினியை உண்டாக்கினார். அப்போது ஸ்ரீ ராமர் சரபங்கரைப் பார்த்து, ஐயா சரபங்கரே! நீர் என்ன செய்கிறீர்? வயணமென்ன சொல்லுமென்று கேட்க, அதற்குச் சரபங்கர் ஓ லட்சுமீபதி! இருவினைகளுமற்று மோக்ஷம் சேர நினைக்கிறேன். கிருபைசெய்து அருளுமென்று சொல்லினர். அதற்கு ஸ்ரீ ராமர் ஓ சரபங்க ரிஷியே! நான் வந்தவேளையில் இது செய்யவேண்டியதென்ன? என்று ஸ்ரீ ராமர் கேட்க, மன்மதனை ஜெயித்த சரபங்க மகாரிஷி ஸ்ரீ ராமரைப் பார்த்து, சரீரம் விடுகிற சந்தோஷத்திலே உத்தரவு சொல்லுகிறார். சகஸ்ர முகமான தபசை நீர் இவ்விடத்திற்கு எழுந்தருள்வீரென் றெண்ணிச் செய்துகொண்டிருந்தேன். நீர் வந்தீர். உம்முடைய தரிசனமாகவே என்னுடைய வினை போய்விட்டது. இந்திரன் வந்து பிரம்மதேவர் தமது லோகத்தை உமக்குக் கொடுத்திருக்கிறார். வாருமென்று சொல்லி அழைத்தார். நான் அதற்குச் சம்மதியாமல், ஒருநாளும் கெடாத பதவியைச் சேரவேணுமென்கிற முயற்சியிலே இருந்தேன். அந்தப் பதவியை நீர் எனக்குக் கொடுமென்று சொல்லிக்கொண்டே தம்முடைய பத்தினியுடனே கூட அக்கினியிலே மூழ்கி, வேதமும் அறிகிறதற்கு அரிதாயிருக்கிற திருமாமணி மண்டபமென்கிற பரமபதம் சேர்ந்தார். அண்டமும் அகிலமு

மும் ஒரு கவளமாக உண்ட அந்தப் புருஷோத்தமனுடைய அனந்த திருநாம சங்கீர்த்தனைகளில் ஒன்றாகிய ராம கீர்த்தனை செய்கிறவர்கள் பெறுகிற பதவி, மரணாந்தத்தில் பிராட்டியாருடனேகூடப் பிரத்தியக்ஷ தரிசனம் செய்த இந்த மகாரிஷிக்குக் கிடைக்கிறது அருமையா? ஆதலால், எளிதிலே அவர் அந்தத் திருமாமணி மண்டபம் சேர்ந்தார்.

தண்டகாரணியம்

இப்படிச் சரபங்க மகரிஷியும் அவர் பத்தினியும் அக்கினிப் பிரவேச மானதை ஸ்ரீ ராமலட்சுமணர் கண்டு மனதிறங்கி, அவ்விடம் விட்டுச் சீதை யுடனே நடந்து, மலைகளும் - மரங்களும் - நதிகளும் - அருவிச்சாரல்களும் - நெருங்கிய சோலைகளும் - வனங்களும் - தடாகங்களும் கடந்து தண்டகாரணி யம் சேர்ந்தார்கள். அவ்விடத்திலே பாலகில்லியர் - முண்டர் - மோனர் முத லிய ரிஷியீஸ்வராள் அநேகர் ஸ்ரீ ராமரைக் கண்டு கண்களும் மனதும் களித்து, கோபாக்கினியில் மிகுந்த ராட்சதாள் உபத்திரவத்துக்குத் தங்களால் வேறொரு காரியம் செய்கிறதற்கு இல்லாமல் வெதும்பிக்கொண் டிருந்தவர்க ளாதலால், அவரைக் கண்ட மாத்திரத்தில் அக்கினியினாலே வெந்து கருகின மரத்துக்கு அமிர்தம் சொரியத் தளிர்விட்டதுபோல் சந்தோஷித்தார்கள். சார்வதா ராட் சதாள் உபத்திரவம் பட்டுக்கொண்டு அவர்களுடைய பேர்களையே வாயினால் சொல்லிக்கொண்டு பயந்து கிலேசித்திருந்த துயரம் நீங்கி, பிரிந்துபோயிருந்த தாயை வரக்கண்ட கன்றுகள்போலே களித்தார்கள். கருங்கடலிலே அழுந் திப்போகிறவர்களுக்கு ஒரு கப்பல் வந்ததுபோலத் துயரம் தீர்ந்தார்கள். தாங் கள் செய்த தவம் பலித்தது. மெய்யறிவு கை கொடுக்க அனேக காலமாய் பீடித்திருந்த பிறவித் துயரமான சிறையை விட்டு மோக்ஷானந்தம் அடைந் தவர்கள்போல ஆனந்தம் அடைந்தார்கள். வேண்டினதை வேண்டியவர் களுக்குக் கொடுக்கிற தபசை உடையவர்களா யிருந்தும் அந்த ராட்சதாளாலே கோபம் போகாமல் பொறுமையும் வாராமலிருந்தவர்கள் மிகுந்த ஆனந்தத் துடனே எழுந்திருந்து, நீலமேக கோமள சொரூபனை ஸ்ரீ ராமரை அதிக அன்புடனே வந்து சுற்றிக்கொண்டு, அவர் சேவிக்கிற போதெல்லாம் ஆசீர் வாதம் செய்து, மனோவுல்லாசமாயிருக்கிற ஒரு சோலையிலே அழைத்துப்போய் அதிலிருக்கச் சொல்லி, தங்கள் ஜாகைகளிலே தாங்கள் போய்ச் சேர்ந்து, மற்றநாள் பின்னையுமிருக்கிற ரிஷிகளெல்லாரையும் அழைத்துக்கொண்டு ஏக கூட்டமாய்த் தங்கள் கிலேசத்தைச் சொல்லிக்கொள்ள வேணுமென்று ஸ்ரீ ராமர் எழுந்தருளியிருக்கிற சாலைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்படி வந்த ரிஷி கூட்டங்களை ஸ்ரீ ராமர் சேவித்துக் கொண்டு தோத்திரம் பண்ணி, சகலரு மிருந்தருளுங்களென்று தாமுமிருந்தருளினர். அப்போது ரிஷிகள் ஸ்ரீ ராமனைப் பார்த்து, ஓ சக்கரவர்த்தித் திருமகனே! நாங் கள் வந்த காரியத்தைக் கேளும். தரும சிந்தையும் இரக்கமு மில்லாத நெஞ்சரான ராட்சதாள் சிலபேர் இவ்விடத்தி லிருந்துகொண்டு எங்களை நெருக்கி உபத்திரவப் படுத்துகிறபடியினாலே, தபம் செய்கிற மார்க்கத்தை

விட்டுவிட்டோம். அநேகம் புலிக்கூட்டங்கள் சஞ்சரிக்கின்ற இவ்வாரணியத்திலே மான்கள்போலே இராத்திரி பகல் நொந்து இரங்கிப் பயந்து நடுங்கி, அதினால் தரும சிந்தைகளில்லாமல் போய்விட்டோம். எங்களுக்கு மோட்சந்தான் கிடைக்குமா? தபசு நடக்கவில்லை. வேத சாஸ்திரங்களை ஓதுகிறதில்லை. வாசிக்கத்தக்கவர்களுக்கு சொல்லிக் கொடுக்கிறதில்லை. ஓமாக்கினி வளர்க்கிறதில்லை. ஆகையால் பிராமணனுமல்லாமற் போனோம். இந்திரனால் அந்த ராட்சதர் ஏவுகிற ஏவல்களை மனதிலேயும் தலையிலேயும் சுமந்து செய்துகொண்டு, தன் பிராணனைத் தப்பித்துக்கொண்டு திரிகிறான். இப்படியானால் இனி யார் எங்கள் வருத்தத்தை நீக்குகிறவர்கள்? நாங்கள் பூர்வத்திலே செய்திருந்த தபோ பலத்தினாலே நீர் வந்தீர். ஒரு ஏகச் சக்கிரத்தினாலே உயிர்களை யெல்லாம் ரட்சித்த இராஜாதிராஜனுடைய புத்திரனே! துயர் மென்கிற இருட்டிலிருந்து அலைகிற எங்களுக்குச் சூரியனைத் தோன்றினீர். நாங்கள் அனைவரும் உமக்கடைக்கலமென்று மிகவும் வருந்தித் துன்பத்துடன் சொன்னார்கள். அவ்வார்த்தையை ஸ்ரீ ராமர் கேட்டு, நீங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். இந்த அண்டத்துக்குள்ளும் புறம்பிலும் அந்த ராட்சதாளிருந்தால், என்னுடைய பாணங்களினாலே மடிந்து விழுவார்கள். இராசா இறந்து போகவும், தாயார் கிலேசப்படவும், என் தம்பி வருந்தவும், பட்டணத்து ஜனங்கள் துயரமாகவும், நான் ஆரணியத்துக்கு வந்தது என் புண்ணிய பலத்தினாலே அல்லவா? தருமம் தப்பாமல் நடக்கிற அந்தணரான உங்களுடைய மகிமையும் பெருமையும் தெரியாமல் உபத்திரவம் செய்கிற அந்தப் புத்தியீனரான ராட்சதாளைச் சங்காரியாமல் விடுகிறதில்லை. அந்த ராட்சதாளாலே என் சரீரம் போனாலும் உத்தமமே. நான் பிறந்து பெருகிற பாக்கியம் இதைப் பார்க்கிலும் வேறல்ல. நீங்களு மிருந்து பார்த்துக் கொண்டிருக்க, கபந்தங்கள் நடனம் செய்யும்படியாய் நான் அந்த இராட்சதாளுடனே உயுத்தம் செய்யப் போகிறதைப் பாருங்கள். வில்லும் அம்புறுத்தூணியும் சுமந்த என் தோள்களின் பாரமும் தீரும். பசுவுக்காகவும் பிராமணருக்காகவும் ஏழைகளுக்காகவும் சகாயமாய்ப் பிராணனை விடுகிறவர்கள் தேவர்க்கும் தேவராவார்கள். சூரசங்கார சுப்பிரமணியரும், திரிபுராந்தகரான உருத்திரமூர்த்தியும், சக்கிரபாணியாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவும், அந்த இராட்சதருக்காக வந்து காத்தாலும், தருமவழி நடவாத அந்த இராட்சதர்களை வேரறுத்து உங்களை யிரட்சிக்கிறேனென்று ஸ்ரீ ராமர் சொல்லவும், அந்த இராமவாக்கை கேட்டு ரிஷிகள் சந்தோஷித்து, மிகுந்த ஆசையுடனே சஞ்சலம் தீர்ந்தவர்களாய் வேதங்களை ஓதி ஆனந்த நிர்த்தனமாடிச் சொல்லுகிறார்கள். ஸ்ரீ ராமா! நீர் வேணுமென்றால் இந்த மூன்று லோகத்தைப்போல முப்பது கோடி லோகம் வந்தெதிர்த்தாலும் உமக்கு எதிரல்ல வென்று சொல்லுகிறதற்கு எங்கள் ஞானமே சாட்சி. தாயாராசையுடனே திட்டம்செய்து அனுப்பின வருஷமெல்லாம் இவ்விடத்தில்தானே இருந்துகொண்டு, எங்கள் மனக்குறையைத் தீர்த்துக்கொண்டிருமென்று அதிக வாத்சலியத்துடனே சொல்லவும், அம்முனிவர்களை ராஜாதிராஜனை தசரத மகாராஜாவினுடைய குமாரன் சேவித்திருந்து அவர்களிஷ்டப்படி அவ்விடத்தில் தானே வாசமாயிருந்தார். அவர்களும் பத்து வருஷம் வருத்தமில்லாமல் சுகமாயிருந்தார்கள். அந்த மகாரிஷிகள் ஒருநாள் ஸ்ரீ ராமரைப் பார்த்து அகஸ்திய

மகாமுனி மகா பெரியவர். அவருடைய ஆசீர்மத்துக்கு நீர் போய் அவரைத் தரிசனம்செய்து வரவேணுமென்று சொன்னார்கள். அப்படியே அதிபால சந்திரனைப்போல நெற்றியை யுடைத்தாயிருக்கிற சீதாபிராட்டியுடனே ஸ்ரீ ராம லட்சுமணர் நடந்தார்கள்.

அகத்தியப் படலம்

அநேக விருட்சங்களும் மூங்கில்களும் வெடிப்புகளும் நெருங்கிய அந்தக் காட்டின் பாதையை மெள்ளமெள்ள நடந்து கடந்து வழியில் ஜோதிப்பிரகாசமான சுதீட்சண மகாமுனி வாசமாயிருக்கிற சோலையிலே போய்ச் சேர்ந்து, சூரியப்பிரகாசம்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கிற அந்த மகா முனியைச் சேவித்துக்கொண்டார்கள். அவர் இவர்கட்கு ஆசிகூறி அவ்விடத்திலிருக்கச் சொல்லி உபசாரம் சொல்ல, அப்படியே அந்தச் சோலையிலிருந்தார்கள். இப்படி யிருக்கிறபோது அந்த மகாரிஷி அவர்களுக்குச் செய்யவேண்டிய உபசாரங்கள் யாவற்றும் செய்து, நீங்கள் இவ்விடத்துக்கு வரும்படியாய் நான் என்ன தவஞ்செய்தே னென்று சொன்னர். அதற்கு ஸ்ரீ ராமர் அவரைப் பார்த்து, சுவாமி! பிரமாவினிடத்திலே உற்பத்தியான பெரியோர்களிலே, தபோமகிமையினாலே உமக்குச் சமானமானவர்கள் யாரிருக்கிறார்கள்? உம்முடைய கிருபை யுண்டான என்னைப் பார்க்கிலும் கிரகாசீர்மத்தார் யாரிருக்கிறார்கள்? என்று மிகுந்த அன்புடனே ஸ்ரீ ராமர் சொல்லவும், அதற்குச் சுதீட்சண மகாமுனி, அவரைப் பார்த்து, ஸ்ரீராமா! என் தபசெல்லாம் நீர் விருந்தாக வாங்கிக் கொள்ளுமென்று அன்புடனே சொல்லினர். இப்படிச் சொல்லிய முனிவரை ஸ்ரீ ராமர் நமஸ்கரித்துச் சுவாமி! எனக்குச் சகல தவமகிமையும் கொடுத்தே யிருக்கிறீர். ஐயனே! அகஸ்திய மகாமுனியைச் சேவித்துக்கொள்ள வேணுமென்று மனதிலே கொஞ்சம் குறைவாயிருக்கின்றதென்று சொல்ல, நல்ல காரியமே நினைத்தீர். நானும் அது சொல்ல வேணுமென்றுதா னிருந்தேன். நீர் அவ்விடத்திலே போய்ச்சேர்ந்தால் உமக்குச் சகல நலமும் உண்டாகும். அதுவுமல்லாமல் நீர் தண்டகாரணியத்தில் வந்திருக்கிற சமாச்சாரம் கேட்டு, நீர் வருவீரென்று அவர் யோசித்து சந்தோஷத்துடனே இன்றைய வரைக்கும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார். சீக்கிரமாய் அவரிடத்தில் போய்ச் சேர்ந்தால் மிகவும் நல்லது. தேவர்களுக்கும் நல்லதென்று வழியுஞ் சொல்லி, அநேக ஆசீர்வாதமுஞ் செய்தார். அவரை ஸ்ரீ ராமர் சேவித்துக்கொண்டு நடந்து அருவிச்சாரலையுடைய அந்தச் சோலைக்குச் சீக்கிரத்தில் போய்ச் சேர்ந்தார். இப்படியாக ஸ்ரீ ராமர் தம்மிடத்துக்கு வருகிறது அறிந்து அகஸ்தியமகாமுனி மிகவும் சந்தோஷமென்கிற சமுத்திரம் பொங்கி லோகமெல்லாம் பரவ எதிர்கொண்டு வந்தார். அவர் எப்பேர்க்கொத்தவரென்றால், திராவிடம் என்கிற பாஷையைப் பூமியிலே யுண்டாக்கி அந்தத் தமிழினாலே பூமியெல்லா மளந்தவர். அசுராள் சமுத்திரத்திலே மூழ்க, அவர்கள் அதிலிருக்கிறமட்டுக்கும் சாகிறதில்லையென்று தேவர்

கள் வந்து தம்மிடத்திலே முறையிட, அந்தச் சமுத்திரஜலத்தை ஒரு கையால் வாரிச் சாப்பிட்டவர். திரும்பவும் உமிழச் சொன்னால் உமிழ்ந்தவர். வாதாபி யென்கிறவன் சகலரையும் வஞ்சனைச் சூதினாலே கொன்று தின்றுக்கொண் டிருந்தான். அவன் சரீரத்தை உண்டு ஜீரணம் பண்ணிக்கொண்டு உலகத்தி னுடைய துயரங்களைத் தீர்த்தவர். மேருபர்வதத்தை பார்க்கிலும் உயர்ந்து மிருந்த சூரிய கதிகூட நின்று போகும்படியாய் வளர்ந்த விந்தியகிரி பர்வ தத்தைப் பாதாளகதியா யழுத்தினவர். வடபாரிசத்திலே நாகாபரணனை சிவனிருக்கிறதுபோல் தென்பாரிசத்திலே சக்கிரவாளகிரியிலே தாமிருந்து பூமியைச் சமானமாக இருக்கச் செய்தவர். நான்கு வேதத்திலேயும், தர்க்க சாஸ்திரத்திலேயும், அறிவிலேயும் மிகுந்த சூரிய பகவான் கொடுத்த தமிழை உண்டாக்கினவர், தேவலோகத்திலேயும், பூலோகத்திலேயும், மற்ற லோகங் களிலேயும், மனதிலேயும் வேதத்திலேயும் அந்த வஸ்து இருப்பானென்று மனதிலெண்ணி இருக்கிற நாம், இப்போ கண்ணினாலே பார்க்கக் கிடைக் குதே யென்று சந்தோஷிக்க மனதுண்டானவர். நாலு வேதங்களோடு வேதாந்தம் - வைசேடிகம் - பாட்டம் - பிரபாகரம் - பூர்வமீமாஞ்சை - உத்தர மீமாஞ்சை என்கிற ஆறுசாஸ்திரங்களும் ஞானமுண்டாகிற கல்வியும் கொண்டு அநேகநாள் ஆய்ந்தாய்ந்து பார்த்து, ஸ்ரீமந் நாராயணன்தான் வஸ்துவென்று தெரிந்து நம்பிச் சந்தோஷித்திருக்கிற சிந்தையையுடையவர். தேவதைக ளெல்லாரும் பிழைத்தார்கள். ரிஷிகளெல்லாம் மனத்துயரங்கள் நீங்கினார்கள். இராட்சதாளை வேரோடறுக்கிறதற்கு, மறுத்துவனான ஸ்ரீ ராமன் வந்தா ரென்கிற அதிக சந்தோஷத்துடனே வந்து கண்டு, நேத்திரங்களிலே ஆனந்த பாஷ்பம் பொழிய நின்றார். எட்டுத்திசையும், சத்தலோகங்களும், சகல பிராணி களும், பிழைக்கும்படியாய் கமண்டலத்திலே காவேரியைக் கொண்டு வந்த அகஸ்திய மகாரிஷியை ஸ்ரீ ராமர் சேவித்துக் கொண்டார். அன்புடனே அவ ரும் இவரைத் தழுவிக்கொண்டு ஆனந்தபாஷ்பம் பொழிய, நீர் வந்தது மகா நல்லதென்று பலபல உபசாரங்கள் சொல்லி, அநேக பிராமணோத்தமர்கள் வேதபாராயணம் செய்து கமண்டலத்திலே இருக்கிற தீர்த்தத்தினாலே புரோட் சித்து அநேக பரிமள புஷ்பங்க ளிறைக்க அதிக சந்தோஷத்துடனே தம்மு டைய சாலைக்கு அழைத்துக்கொண்டு போனார். அவ்விடத்தில் ஸ்ரீ ராமருக்கு விருந்து முதலானது செய்வித்து, அகஸ்தியர் ஸ்ரீ ராமா! என்னுடைய கிரகத் துக்கு நீர் வந்து என்னுடைய தபசை முடித்தீர். கிருபாநிதியே! என்று சொல்ல, அதற்கு ஸ்ரீ ராமர் நமஸ்காரம் செய்து, தேவர்களும் ரிஷீஸ்வரா ளும் பெரியோர்களானவர்களும் மற்றவர்களும் உம்முடைய கிருபையினால் லவா அப்படி மகிமையானார்கள். உம்முடைய கிருபை எனக் கின்றைக்குக் கிடைத்தது. இனி எனக்கு என்ன குறை? சகல லோகத்தையும் ஜெயங் கொண்டவனானென்று சொல்ல, அதுகேட்டு சந்திரசேகரனான சிவனுக் குச் சமானமான அகஸ்திய மகாமுனி சொல்லுகிறார்.

ஓ ராமா! நீர் தண்டகாரணியத்திலே வந்திருக்கிறீரென்று சமாசாரம் கேட்டேன். எப்படியும் இவ்விடத்துக்கு வருவீரென்று சந்தோஷித்திருந் தேன். அப்படியே குணநிதியான நீர் வந்து தரிசனம் கொடுத்தீர். இனி நீர்

இவ்விடத்திலே தானே வாசமாயிருந்தீரானால் நீர் செய்யவேண்டிய தவமும் செய்யலாம். இராட்சதாள் வந்தால் அவர்களை யெல்லாம் ஜெயித்து எங்கள் மனக்கிலேசங்களையும் தீர்ப்பீர். அதினாலே வேதமும், நீதியும், தருமமும் வாழ்ந்து விர்த்தியாகும். தேவர்கள் உய்வார்கள். அசுராக்கள் தாழ்வார்கள். ஓ சக்கிரவர்த்தித் திருமகனை ஸ்ரீ ராமா! இந்த வார்த்தையைச் சத்திய மாகச் சொல்லுகிறேன்; இந்தப் பதினான்கு லோகமும் வாழும் நீர் இவ்விடத் திலே தானே வாசமா யிருமென்று சொன்னார். அதைக்கேட்ட ஸ்ரீ ராமர், சுவாமி! தீமைசெய்கிற இராட்சதாளை எல்லாம் கொன்று ஜெயம் கைக் கொள்ளுகிறதாய்த் தீர்மானித்து இருக்கிறேன். நான் இவ்விடத்தி லிருக்கிற தைப்பார்க்கிலும் அந்தப் பாவிகள் வருகிற வழியிலே இன்னம் சற்றே தெற்கே போயிருக்கிறது நலமாக எனக்குத் தோன்றுகின்றதென்று ஸ்ரீராமர் சொல்ல, நல்ல காரியம் சொன்னீர். அப்படியே போயிருக்கிறது மகா உத்தமமென்று சந்தோஷத்துடனே சொல்லி, இந்த வில்லும் அம்பரத்தூணியும் பூர்வத்திலே ஆதிமுதல்வனை வஸ்து என்னிடத்திலே வைத்திருந்தார். இந்த மூன்றுலோக மும் நானும் இதைப் பூசை பண்ணிக்கொண்டு வந்தோம். ஆதலால் இதை நீர் வாங்கிக்கொள்ளுமென்று கொடுத்து, அக்கினி சூரபனை திரிபுராந்தகன் பூர்வத்திலே மகம்மேரு பர்வதத்தை வில்லாக வளைத்து அதில் பூட்டி எய்த பாணமுங் கூடக் கொடுத்துச் சொல்லுகிறார்: கோதாவரி தீரத்திலே அநேக மரங்களும், மலைகளும், மணல் குன்றுகளும், புஷ்பச் சோலைகளும் சூழ்ந்து மிகுந்த அழகாயிருக்கிற ஒரு பர்வதச்சாரலிலே, பஞ்சவடியென்று ஓர் ஜாகை யிருக்கின்றது. அவ்விடத்திலே வாழைப்பழம், செந்நெல், தேன், காவேரிக் குச் சமானமான நதி முதலானதுகளும் இருக்கின்றன. சீதையுடனே கூட விளையாடுகிறதற்கு அநேக அன்னப்பட்சிகள் முதலானதுகளு மிருக்கின்றன. அவ்விடத்திலே போய் வாசம் பண்ணிக்கொண் டிருங்களென்று அகஸ்திய மகாமுனி சொல்லினார். அப்படியே மேகவர்ணனை ஸ்ரீ ராமர் சேவித்து விடைபெற்றுக்கொண்டு, கரும்பின் பாகைப்போல் வசனத்தை யுடைய சீதை யும் தம்பியும் கூடவர, அகஸ்திய மகாமுனி மனது பிறகே தொடர்ந்துவர, சீக்கிரத்தில் அப்பால் நடந்தார்கள்.

ஜடாயுகாண் படலம்

இப்படி ஸ்ரீ ராமலட்சுமணர் நதிகளும் பர்வதங்களும் விருட்சங்களும் சேர்ந்து நெருங்கி இருக்கிற ஆரணியத்தில் சிலதூரம் நடந்துபோகிறபோது, கழுகுகளுக்கெல்லாம் இராஜாவாகிய ஜடாயுவைக் கண்டார்கள். அந்த ஜடாயு எப்படிக்கிருக்கின்றதெனில், ஒரு கரியமலையி லிருக்கிற சந்திரனைப்போலவும், பூர்வத்தில் சமுத்திரத்தில் நட்ட மந்தரகிரியைப் போலவும், சூரியனைப் போல் பிரகாசமும், ஆகாயமெல்லா மறைகிற சிறகுகளையுடைய சரீரமும், சிவந்த கால்களும், நீலகிரியின்மேல் பவழக்கொடி படர்ந்தது போலவும், சகல சாஸ் திரங்களைக் கற்ற கேள்வியும், வாய்மையும், புத்தி கூர்மையும், அறிவும், யோசனை யும் நிறைந்தவர் போலவும், சிறு கண்களினுடைய அழகும், அசுராளையெல்லாம்

சங்கரித்து அவர்களுடைய உயிரைக் கூற்றுவனுக்கு விருந்திட்டு, மீந்ததைத் தான் சாப்பிட்டு எந்த வேளையும் மூக்கைத் தீட்டிக்கொண்டு இந்திரன் வாகனமான அயிராவதத்தினுடைய மூக்கும், நவக்கிரகங்களான ஆதித்தன்-சோமன்-அங்காரகன் - புதன் - பிரகஸ்பதி - சுக்கிரன் - சனி - இராகு - கேது என்று சொல்லப்பட்ட ஒன்பதுங் கூடிச் சக்கிராகாரமாக இருக்கிறதுபோல் மார்பிலே நவரத்தின ஆரமும், சூரியப் பிரகாசம்போலே கிரீடமும், அதிக கீர்த்தியையுடைய அருணனுடைய புத்திரராகி, அநேக கற்பகாலங்கள் கண்டிருக்கிறவர் போலவும், ஒரு பர்வதத்தின்பேரில் மற்றொரு பர்வதம் ஏறியிருப்பதுபோல் பாரம் பொறுக்கமாட்டாமல் பூமியும் தாழும்படி யிருக்கிறவர். அவரை இவர்கள் கண்டு ஐயமுற்று, இவனென்ன இராட்சதனே? என்று நினைத்து உக்ர திருஷ்டியாய்ப் பார்த்தார்கள். அவரும் இவர்களைப் பார்த்து ஐயமுற்று, ரிஷிகளோ? கையில் வில் வைத்திருக்கின்றார்கள். ஆகையால், அல்ல. சடைமுடி தரித்திருக்கின்றார்கள். தேவர்களோ? தேவேந்திரன் முதலான பேரைச் சார்வதா பார்த்திருக்கின்றோம். மகாவிஷ்ணுவும் பிரமாவும் மழுவாயுதம் தரித்திருக்கிற சிவனும் நமக்கு ஒளித்திருக்கின்றவர்களல்ல. எப்போதும் நாம் கண்டுகொண்டே யிருக்கின்றோம். அவர்களல்ல; மன்மதனே? அவனையும் அந்தக் காலத்திலே ரூபத்தோடே பார்த்திருக்கின்றோம். கமல நேத்திரரான இந்த வீராளுடைய கால் தூளிக்கும் அவன் சமமாகமாட்டான். இந்த மூன்று லோகத்தையும் தங்கள் அரசாட்சியாக்கிக் கொள்ளுகிற சுபலட்சணமுடைய திருமேனியையுடைத்தா யிருக்கின்றார்கள். ஸ்ரீ மகாலட்சுமிக்குச் சமானமான இந்த ஸ்திரீயுடனே வந்த இந்த வீரர் யாரோ தெரியவில்லை. நீலகிரி மேருகிரி போலவும் இருக்கின்றார்கள். இவர்கள் சாயலைப் பார்த்தால் நம்முடைய பிராணநேசரான தசரத மகாராஜாவைப் போலக் காண்கின்றது என்று நினைத்து அன்புடனே நீங்கள் யார்? தெரியச் சொல்லுங்களென்று கேட்டார். அப்போது இவர்கள் நாங்கள் சக்கரவர்த்தியான தசரத மகாராசாவின் புத்திரரென்றார்கள். அவ்வார்த்தை செவியில்படவே, சந்தோஷமானது பொங்கி, தானிருந்த மலையைவிட்டுக் கீழேயிறங்கி, அவர்களைத் தழுவிக்கொள்ளவேண்டும் என்கிற அபேட்சையுடனே சமீபத்திலே வந்து, இராஜா சுகமா யிருக்கின்றாரா வென்று கேட்டார். அதற்கு ஸ்ரீ ராமர் தம்முடைய சத்தியத்தை நிலை நிறுத்திச் சுவர்க்கம் போய்ச் சேர்ந்தாரென்று சொல்லினர். அதுகேட்ட ஜடாயு தன் ஜீவன் போனதுபோல் பதைத்துத் துடித்து ஏங்கிப் புத்திகலங்கி, நித்திரை செய்தவன்போலச் சோர்ந்து பூமியிலே விழுந்துவிட்டார். அப்படி விழுந்தவரை ஸ்ரீ ராமர் இலட்சுமணர் இருவரும் தழுவி வாரி யெடுத்துத் தங்கள் கண்களில் வருகின்ற நீராலே அவர் முகத்தைக் கழுவினர்கள். அப்போது போன பிராணன் வந்து, மிகவும் கரைந்து, அழிந்த நெஞ்சுடனே பிரலாபிக்கத் தொடங்கினர். ஐயோ அப்பா! கொடுக்கின்ற கொடைக்கும் தனிக்கொடைக்கும் பொறுமைக்கும் தோற்றிருந்த கற்பகமும், சந்திரனும், பூமியும் களித்துவாழப் பொய்க்குப் பகையாய் மெய்க்கு ஆபரணமாய் கீர்த்திக்கு இருப்பிடமாயிருந்த நீர் தரித்திராளும் தருமமும் நானும் என்னமாய்ப் போவோமென்று விட்டுப்போய்விட்டீர். ஏக சக்கிரவர்த்தியாய் இராஜ்ஜிய பாரம் செய்வதைவிட்டு, என்னுடைய சினேகிதத்தைச் சோதித்துப் பார்ப்பு

தற்குத்தான் போய்வீட்டீரோ? நான் விலங்கு ஜாதியிலே சேர்மானமானபடியால், உம்முடைய மரணம் கேட்டும் இன்னம் என் பிராணனை விலக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறேன். தயிரைச் சின்னபின்னம் செய்யும் மத்தைப் போல் சம்பராசுரனுடன் யுத்தஞ் செய்து ஜெயங்கொண்ட ஆயுதம் பிடித்த ஓ சௌரியவந்தரே! இந்தப் பூமியில் இருப்பவர்கள் அறிய, நான் சரீரம் நீர் சீவனென்று சொல்லியிருந்தீரே! அந்தச் சத்திய வசனமாகிய உயிர் பூமியிலே கிடக்கப் புத்தியில்லாத கூற்றுவன் உடலைக் கொண்டுபோனனோ? என்று மிகவும் பிரலாபித்து, இந்த க்ஷணமே நெருப்பில் விழுந்து பிராணனைக் கொன்று கீர்த்தி யுண்டாக்குவேனே யல்லாமல் ஸ்திரீகள்போலே பூமியில் விழுந்து அழுவேனே? என்றெழுந்திருந்து, ஸ்ரீ ராம லட்சுமணரைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறார். ஓ பிள்ளைகளே! கேளுங்கள். பூர்வத்திலே தட்சப் பிரஜாபதிக்கு ஐம்பது பெண்கள் பிறந்தார்கள். அதிலே பதின்மூன்று பெண்களைக் காசிபமகாரிஷி கலியாணம் பண்ணிக்கொண்டார். அவளொருத்தி சந்ததியிற் பிறந்தவன் நான். அதிலே அதிதி யென்பவள், முப்பத்து முக்கோடி தேவர்களையும் வாமனவதாரமான விஷ்ணுவையும் பெற்றாள். திதி என்பவள், அறுபத்தாறுகோடி அசுராளைப் பெற்றாள். தனு என்பவள், தானவர் முதலானவர்களைப் பெற்றாள். மதி என்பவள், மனுஷரையும் அவர்கட்கு இயல்பான வருஷ முதலியவைகளையும் பெற்றாள். சுரபி யென்பவள், பசுக்களையும் சராசரங்களையும் பெற்றாள். குரோதவசை யென்பவள், கழுதை - கடம்பை - ஒட்டகம் இவை முதலியவைகளைப் பெற்றாள். வினதை என்பவள், காற்று - இடி-மின்னல்-அருணன்-கருடன்-கூகை-பருந்து-பட்சி இவை முதலியவைகளைப் பெற்றாள். தாம்பிரை என்பவள், ஊர்க்குருவி - கௌதாரி - காடை முதலியவைகளையும் பெற்றாள். கழை என்பவள், கொடிகளையும் - செடிகளையும் பெற்றாள். கத்துருவை என்பவள், பலபல சிரசுகளையுடைய சர்ப்பங்களைப் பெற்றாள். சுதை என்பவள், ஒருதலைப் பாம்பு முதலானவைகளைப் பெற்றாள். அரிஷ்டை என்பவள், ஒணன் - உடும்பு - அணில் முதலியவைகளைப் பெற்றாள். இழை என்பவள், ஜலசர முதலியவைகளைப் பெற்றாள். இப்படியாக அதிதி - தனு - மதி - சுரபி - குரோதவசை - வினதை - தாம்பிரை - கழை - கத்துருவை - கதை - அரிஷ்டை - இழை என்று சொல்லப்பட்ட இந்தப் பதின்மூன்று ஸ்திரீகளாலே ஆதியில் உலகமுண்டாயிற்று. இவர்களிலே வினதை புத்திரனை அருணன் அரம்பையைச் சேர்ந்தான். அவனுக்குச் சம்பாதியும் நானும் பிறந்தோம். என் பிதாவான அருணன் சஞ்சரிக்கின்ற இடமெல்லாம் நானும் கூடத் திரிவேன். அப்போதே தசரத சக்கிரவர்த்திக்கு இன்னுயிர்த் தோழனாயிருந்தவன். அவருக்கும் எனக்கும் கொஞ்சமாயினும் பேதமிராது. வருணச்சிரமம் விதிக்கும்போதுதானே பிறந்தவன் நான். கழுகுக் கூட்டங்களுக்கெல்லாம் இராஜாவான சடாயுவென்று பேருடையவன் நானே யென்று சொன்னன். அவ்வார்த்தையைக் கேட்டு, ஸ்ரீ ராமலட்சுமணர் அஞ்சலியஸ்தராய் மிகுந்த ஆர்த்தியுடனேயும் துயரத்துடனேயும் கண்ணிலே தண்ணீர் சொரியக் கீர்த்தியைப் பூமியிலே நாட்டித் தேவலோகம் போன பிதா திரும்பி வந்ததுபோல ஜடாயுவினிடத்தில் இவர்கள் அதிகப் பிரியமானார்கள். இவர்களிருவரையும் ஜடாயு தன் சிறகினாலே தழுவிக்கொண்டு,



சூர்ப்பனகையை லக்ஷ்மணர் மூக்குச் செவி அறுத்தது.

ஓ மக்களே! எனக்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்யுங்கள், இரண்டு சரீரத்திற்கும் ஒரு ஜீவனுயிருந்தோம். அவர் பிரிந்துபோயும் நான் சரீரம் வைத்துக்கொண் டிருக்கலாமா? அக்கினியில் விழுந்திறந்து அந்தத் துயரம் தீருகிறேன் என்று ஜடாயு சொல்ல, ஐயா! உம்முடைய தமையனுர் எங்களை ரட்சிக்கிற சமயத்தில் தேவலோகப் பிராப்தியானுர். இவ்விடத்திலே நீரும் எங்களைக் காட்டிக் கொடுத்துப் போய்விடலாமா? எங்களை இரட்சிக்கிறவர்கள் பின்னை யாரிருக்கிறார்கள்? பிரியாமலிருந்த தாயும் தகப்பனும் வீடும் பட்டண மும் விட்டு இந்த ஆரணியத்திற்கு வந்த துயரமெல்லாம் உம்மைக் கண்டு பேசின பின்பு நீங்கினேம்! நீரும் எங்களை விட்டு நீங்கலாமா? ஓ தரும சொரூபரே! என்று சொல்லி மிகவும் துயரத்துடனே நின்றுர். இப்படி நின்ற ஸ்ரீ ராமலட்சுமணுளைப் பார்த்து, நல்லது பிள்ளைகளே! அப்படியானுல் நீங்கள் அயோத்திக்குப் போய்ச் சேர்ந்த பிறகு நானும் தெய்வலோகம் போய்ச் சேருகிறேன் என்று சொல்லிப் பின்னும் ஒரு வார்த்தை சொல்லுகிறுர்: இராஜா தெய்வலோகப் பிராப்தியானுல் நீங்களிருந்து இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்ய வேண்டுமேயல்லாமல், அதைவிட்டு இப்படி ஆரணியத்திற்கு வரவேண்டிய தென்ன? அது எனக்கு மிகவும் சந்தேகமாயிருக்கிறது சொல்லுங்கள்; அன்றியும், தேவர்கள் தானவர்கள் நாகலோகத்தார் பின்னும் யாராவது உங்களுக்கு இப்படி துயரத்தைக் கொடுத்திருப்பார்களாயின் அவர்களைச் சொல்லுங்கள். இந்த க்ஷணமே அவர்களை யெல்லாம் சங்கரித்து இராஜ்ஜியத்தை உங்கள் வசம் செய்கிறேனென்று சடாயு சொல்லினர். ஸ்ரீ ராமர் தம்பியைப் பார்த்தார். அது அறிந்து இலட்சுமணர் சிறிய தாயாராலே வந்த காரியங்கள் எல்லாம் நன்றுய்த் தெரியும்படி அவருக்குச் சொன்னுர். அவ்வார்த்தையைக் கேட்டு ஜடாயு மிகுந்த சந்தோஷமாகி, தகப்பனைச் சத்தியவந்தனுக்கு சிறிய தாயார் சொன்ன வார்த்தையைச் சிரசாக வகித்துக்கொண்டு இராஜ்ஜியத்தைத் தம்பிக்குக் கொடுத்து வந்த மகனே! இந்தக் காரியம் நீ தவிர பின்னை யார் செய்யப்போகிறுர்களென்று கமல நேத்திரரான ஸ்ரீ ராமரை அன்புடனே தழுவிக்கொண்டு, உச்சியை முகந்து, கண்களில் தண்ணீர்வர, மகனே! நீ நல்ல சத்தியவந்தன். இராஜாவையும் என்னையும் கீர்த்தி வந்தராய் செய்துவைத்தாய். அப்பா! இந்தப்பெண் யார் சொல்லென்று கேட்டனர். அப்போது, இலட்சுமணர் தாடகை சங்கார முதலாக வில் லிறுத்தது நடுவாக ஆரணியத்துக்கு வந்தது முடிவாக நடந்த செய்திகளெல்லாம் தெரியச்சொன்னுர். அது கேட்டு அதிக சந்தோஷமாகித் திரும்பி நீங்கள் இராஜ்ஜியத்திற்குப் போகிற மட்டுக்கும் இவ்விடத்தில் தானே யிருங்கள். நான் உங்களைக் காக்கிறேன் என்று சொல்லினர். ஐயா! அகத்திய மகாமுனி கோதாவரி தீரத்துள்ள பஞ்சவடியில் வாசம் செய்யச் சொல்லி ஆக்கியாபித்திருக்கிறுர். அவ்விடத்திலே போய் வாசமாயிருக்க வேணுமென்று ஸ்ரீ ராமர் சொல்ல, அதுகேட்டு மிகவும் நல்லதாயிற்று. அந்தப் பஞ்சவடி தீரத்திலேதானே யிருங்கள். அதுவும் உங்களுக்குக் காண்பிக்கிறேன் வாருங்களென்று எழுந்திருந்து இவர்களுக்கு நிழலுண்டாகும்படியாய் அவ் வாகாயத்தில் வட்டமிட்டுப் பறந்து அழைத்துக்கொண்டுபோய் அந்தப் பஞ்சவடி தீரத்தைக்காட்டி, ஓ மக்களே! இராக்ஷதர்கள் இவ்விடத்திலே வேறே சொரூப மெடுத்துக்கொண்டு வருவார்

கள். அதுகளெல்லாம் நன்றாயறிந்து ஜாக்கிரதையா யிருங்கள் என்று சொல்லி ஜடாயு தன் எதாஸ்தானமே போய்ச் சேர்ந்து, தன் குஞ்சுகளைப் பார்க்கின்ற பட்சிகளைப்போலே பார்த்துக் கொண்டிருந்தார்.

பஞ்சவடிதீரத்தைக் காணல்

பூமிக்கு ஆபரணம்போல அழகாய்ச் சகலருக்கும் கியானப் பொருளைக் கொடுத்து மகிமை பொருந்தி தெளிந்து குளிர்ந்து மதுரமாய் ஒழுக்கத்தைத் தழுவியிருக்கிற மகா கவியான கம்பர் சொல்லிய பாடல்போல அதிக சிங்காரமாய் வருகிற கோதாவரி நதியை ஸ்ரீ ராமலட்சுமணர் பிராட்டியாருடனேகூட எழுந்தருளிப் போய்க் கண்டார்கள். அந்த நதியின் தாமரைக் கமலங்கள் முகம்போலவும், நீலோற்பலங்கள் கண்கள் போலவும், பிரகாசிக்கக் குளிர்ந்த அலைகளான கைகளாலே அநேக புட்பங்களை வாரித்தூவி இவர்களைக் கண்டு சேவிக்கிறதுபோலப் பிரகாசித்தது. பின்னையும், அந்த கோதாவரி மிகுந்த ஆசையுடனே வருவது போல இரைந்திரைந்து ஏங்கி யேங்கி நீலோற்பல புஷ்பமான கண்களிலே தேனென்கிற ஜலங்கள் பரந்துசோர, ஸ்ரீ ராமலட்சுமணர் பிராட்டியாருடனே கூட ஆரணியத்தில் வாசம் செய்கிற வருத்தத்தைப் பார்த்துப் பிரலாபிப்பது போலவும் பிரகாசித்தது. அந்தக் கோதாவரி தீரத்தினுடைய சிங்காரங்களையும் சக்கரவாளப்பட்சிகள் சோடுசோடாய்ப் பிரகாசிப்பதையும் பார்த்து ஸ்ரீ ராமர் சீதையினுடைய ஸ்தனங்களை பார்த்தார். சீதை இரத்தினங்களைக் கொழித்துப் பிரகாசித்திருக்கும் மணற்குன்றங்களைப் பார்த்து, ஸ்ரீ ராமருடைய திருத்தோள்களைப் பார்த்தாள். ஸ்ரீ ராமர் அன்னங்கள் ஒதுங்கிப் போவதைப் பார்த்து சீதையினுடைய நடையைப் பார்த்துக் குஞ்சிரிப்பாய் நகைத்தார். சீதை அந்த நதியிலே தண்ணீர் சாப்பிட்டுத் திரும்பி நடக்கும்போது மதயானையைப் பார்த்து ஸ்ரீ ராமருடைய நடையைப் பார்த்துக் குஞ்சிரிப்பாக நகைத்தாள். அந்த நதி ஓரத்திலே அநேக புட்பக் கொடிகள் துவளுவதை ஸ்ரீ ராமர் பார்த்துச் சீதையினுடைய இடையைப் பார்த்தார். சீதை அநேக நீலோற்பலபுட்பங்கள் நெருங்கிப் புட்பித்திருப்பதற்கு இடையிலே செந்தாமரைக்கமலங்கள் மலர்ந்திருப்பதைக் கண்டு ஸ்ரீராமருடைய நேத்திரங்களைப் பார்த்தாள். இப்படியாய் அந்த நதியினுடைய சிங்காரத்தைப் பார்த்துக்கொண்டே அதற்குச் சமீபத்திலிருக்கும் பஞ்சவடி யென்னும் குளிர்ந்த சோலையிற் சேர்ந்து, தம்பியாலே செய்யப்பட்ட பர்ணகசாலையிலே சீதையுடனே கூட ஸ்ரீ ராமர் எழுந்தருளி யிருந்தார்.

சூர்ப்பனகியின் சூட்சி

ஸ்ரீ ராமலட்சுமணர்கள் மிகுந்த சந்தோஷத்துடனே இப்பஞ்சவடி தீரத்தில் இருக்கிற காலையிலே, ஒருநாள் இராட்சதர்களுக் கெல்லாம் அரசனான ராவணனை வேரோடு முடித்துப் போடுவதற்கு உயிரோடே கூட வியாதியுற்பத்தியாய்க் காலம் பார்த்துக்கொண்டிருந்து சொல்லுவதுபோல், ஒரு தாய் வயிற்றிலே அவனுடன் பிறந்த தங்கையானவள் ஒருத்தி. அவள் பெயர் சூர்ப்பனகி. அவள் எப்பேர்க்கொத்தவளெனில், செம்பராகம்போல் செம்பட்ட மயிர்க் கூந்தலையுடையவள். தேவர்களுக்கும் இருடிகளுக்கும் பூலோகத்தாருக்கும் வியசனத்தைக் கொடுப்பவள். இடைவிடாமல் அந்த ஆரணியத்திலே வாசம் செய்துகொண்டு ஒரு கணப்பொழுதில் எந்தெந்த லோகத்திற்குப் போகவேண்டுமோ அவ்விடங்களுக் கெல்லாம் போய் வந்துகொண்டு இருப்பவள். பூர்வத்திலே தேவர்கள் இராட்சதர்கள் எங்கள் உபத்திரவந்தீர்த்து எங்களை ரட்சிக்க வேண்டுமென்று தோத்திரஞ் செய்ய, அப்போது, திருப்பாற்கடலில் யோக நித்திரையை விட்டுப் பூமியில் வந்து அவதாரம் செய்திருக்கும் புருஷோத்தமனைத் தன் குலத்துக்கு எல்லா முடிவு காட்டுகிற அந்த ராட்சசியானவள் கண்களினால் கண்டாள். கண்டு மிகவும் அதிசயமாகி, இவர் யார்? மன்மதனெவென்றால் அவனுக்கு ரூபமில்லையே; தேவேந்திரனெவென்றால் ஆயிரம் கண்களைக் காணோமே, சிவனெவென்றால் மூன்று கண்களில்லையே, விஷ்ணுவோ வென்றால் சதுர்ப்புஜத்தைக் காணோமே, ஆ! இதென்ன ஆச்சரியம்? சிவன் கண்ணினாலெரிந்து அரூபமான மன்மதன் அன்றுமுதல் இன்றையவரைக்கும் தபம் செய்து, தபோபலத்தினாலே முன்னிருந்த தன் சொரூபத்திலேயும் அதிக சுந்தரமானானே? நீலகிரி பர்வதங்கள்போலே புஜங்களும், திக்கெஜத்தினுடைய தும்பிக்கைபோலே கைகளும், கண்ணீர்கடங்காத அழகும், நிறைந்து பரந்து அகண்டிருக்கும் மார்பும், பூரணச்சந்திரனைப் பழிக்கும் திருமுக மண்டலத்தையுமுடைய இந்த மகாபுருஷன் அதிக சுந்தரமுண்டாயிருக்கச்சே இன்னமென்னத்திற்குத் தவஞ் செய்பவராயிருக்கிறார்? இவருடைய பாதாரவிந்தம் பூமியென்னும் ஸ்திரீயின்பேரில் பட்டபடியால், அவளுக்கு அதிக சந்தோஷமுண்டாய் சரீரம் புளகிதமானதுதான் இந்தப் புல்லுகள் முளைத்திருக்கின்றது; இவருடைய சுந்தரப் பிரகாசத்தைச் சூரியன் பார்க்கவில்லை. ஆகையினாலே தன்னுடைய கொஞ்ச சோதியைப் பிரகாசித்துக்கொண்டு மனதிலே வெட்கமில்லாமல் ஆகாயத்தில் நடக்கின்றார். இவருடைய அதரத்திற்குச் சமானம் பவழமென்று உலகத்தார் சொல்லும்படியாய் அந்தப் பவழம்செய்த பாக்கியம் யார் செய்திருக்கிறார்கள். இவர் தரித்திருக்கும் மரவுரி செய்த தபசு அந்தப் பீதாம்பரமும் செய்யவில்லை. கேசங்களை ஜடையாய்ப் போடாமல் சும்மாவிட்டிருந்தால், அதைக் கண்ட ஸ்திரீகளுடைய வஸ்திரமும் உயிரும் அந்தக்கணமே போய்விடும். ஆபரணங்கள் இவருடைய திருமேனியழகுக்கு அதிகம் கொடுக்குமா? ஜோதியான இரத்தினத்திற்குப் பின்னையொரு இரத்தினத்தினால் அழகு உண்டாகுமா? கொஞ்சமாயினும் குறைவில்லாமல் சகல இலட்சணத்துடனேயும் இந்த மகாபுருஷனைச் சிருஷ்

டித்த பிரமதேவன் நாணமடைந்திருப்பா னல்லவா! இவருடைய பாததூளிக் குச் சமானமல்லாத தேவேந்திரன் உலகமெல்லாம் ஆளும்படியாய் இருக்கிற படியினாலே, பழி சம்பாதித்துக்கொண்டான். இப்படியாய்த் தன் மனதிலே நினைத்து நினைத்து மிகுந்த ஆசையுடனே திரவியத்தைச் சம்பாதித்து ஒரு வருக்கும் ஈயாமல் அத்திரவியத்தைக் காத்துக்கொண் டிருப்பவனுடைய கீர்த்தி தேய்வதுபோல இவளுடைய கற்பு தேய்ந்தவளாகி, ஆகாயத்தில் ஒரு சித்திர மெழுதினதுபோலே திகைத்து நின்று நெஞ்சி புழுங்கி, ஸ்ரீ ராமருடைய திருத் தோள்களின்பேரில் பதித்த தன் பார்வையை அப்பாலே வாங்கமாட்டாதவ ளாய்ப் பார்த்தபடியே நின்றுகொண்டு, இவருடைய மார்பிலே சேர்ந்தால் பிராணனிருக்கும். இல்லாவிடில் தேவாமிர்தத்தைச் சாப்பிட்டாலும் பிராண னில்லாது போய்விடுமென்று அவரெதிரே போய் நிற்கத் தனக்குள் யோசனை செய்து, இந்த சொரூபத்துடனே போய் நின்றால். கோர தந்தங்களையும், சகல உயிர்களையும் தின்றிருக்கிற வயிறுமுடையவ ளிவளென்று மறுத்துத் தள்ளிவிடுவார். ஆகையால் நல்ல சுந்தரமான ரூபமெடுக்க வேண்டுமென்று தன் மனதிலே ஸ்ரீமகா லட்சுமியை நினைத்துப் பிரார்த்தித்து, பூர்வத்திலே தனக்குக் கைவல்யமா யிருக்கும் மந்திரத்தை ஜெபித்து, அதிக சுந்தரமாய் பூரணச் சந்திரனைப்போல முகமும் மாந்தளிருக்குச் சமானமான சிவந்த பாதங்களுடைய ஒரு ஸ்திரீபோலே வஞ்சகமான வடிவங்கொண்டு, மயில்போல வும், அன்னம்போலவும், வஞ்சிக்கொடிபோலவும் வந்தாள். இப்படி அனேக ஆபரணமும் புட்பங்களும் மிகவும் அழகுகொடுக்கத் தரித்துக்கொண்டு, ஆகா யத்திலிருந்து ஓர் மின்னல் பூமியிலிறங்கி நடப்பதுபோலவும், வல்லிசாதக் கொடி ஸ்திரீ ரூபமெடுத்துத் தேனைப்போல வசனங்களும், மானைப்போல கண் களும் பொருந்தி வந்ததுபோலே வரும்போது, காற்சிலம்பும் மேகலாபரண மும் சத்திப்பதும், புட்பமாலையின்பேரில் வண்டுகள் மொய்த்துக்கொண்டு ரீங் காரம் செய்யும் ஓசையும், இவை முதலிய சத்தத்தைக் கேட்டு, ஸ்ரீ ராமர் யாரோ ஒரு ஸ்திரீ இங்கே வருகிறாப்போல் காண்கிறதென்று எண்ணித் திரும் பிப் பார்த்தார். பாகவதாளுடைய பேதைத்தனத்தை நீக்கி மெய்ஞ்ஞானக் கண்ணைக் கொடுக்கும் கண்ணனை ஸ்ரீ ராமர் அவளை நன்றாய்ப் பார்த்து மூன்று லோகத்திலும் இப்படிக்கொத்த சுந்தரமான ஸ்திரீ இல்லை யென்ப தாய் ஆச்சரியப்பட்டு, அழகுக்கு ஒரு வரம்பு உண்டா? இவள் அழகுக்குச் சமானம் யார் இருக்கிறார்கள்? என்று நினைத்தார். அப்போது அந்த ரூப மாய் வந்த இராட்சசியானவள், ஸ்ரீ ராமருக்குத் தன்பேரில் ஆசையுண்டாகும் படிக்கு அவர் சமீபத்தில் வந்து, அவரது முகத்தைப் பார்த்து, கைகளைக் குவித்து நமஸ்காரம் செய்து, கண்ணென்கிற வேலை வீசி, மான்போல யொதுங் கிக் கொஞ்சம் நாணமுடையவள்போல அப்புறம் நின்றாள். அப்படி நின்றவளை நோக்கி, நீ யார்? இவ்விடத்திற்கு வரும்படி நிகழ்ந்ததும் புண்ணியமல்லவா? உன்னுடைய ஊர் எது? பேரென்ன? உனக்கார் உறவு? சொல்லென்று வேதத்திற்கு முதன்மையானவர் கேட்க அவள் சொல்லுகின்றாள்: கமலவாச னை பிரம்மதேவனுக்குப் பேரனுடைய குமாரத்தி திரிபுராந்தகனை சிவனுக் குத் தோழனை குபேரனுக்காக அஷ்ட கைலாசங்களையெல்லாம் ஜெயித்துக் கைலாச பர்வதத்தை யெடுத்தவனை திரிலோக கண்டகனை இராவணேசுவர

னுக்குத் தங்கை. என்பேர் காமவல்லியென்று சொல்லினள். இந்த வார்த்தையைக் கேட்டவுடனே ஸ்ரீ ராமர் மனதிலே ஐயமாகி இந்த ரூபம் இவளுக்கு யதாரூபமல்ல. அதுவும் தெரிகின்றது. இவள் குணத்தை முழுதுமறிவோமென்று ஒரு வார்த்தை சொல்லுகிறார். ஓ பெண்ணே! அந்த இராவணன் தங்கை என்று நீ சொன்னது மெய்யானால், இந்த ரூபம் உனக்கு வந்த காரணமென்ன? சீக்கிரத்தில் சொல்லென்று சொன்னர். அவர் சொல்லி விடுவதற்கு முன்னமே, நான் அந்த மாயமான இராட்சதர்களோடே கூடியிருக்கின்ற வாழ்வை கொஞ்சமாயினும் இச்சிப்பதில்லை. விவேகமுடையவளாய்ச் சில சாத்திரத்தைப் பார்த்துத் தருமவழியாய் நடந்து கொள்ளுகிறவள். மேலும் தேவர்கள் வரப்பிரசாதத்தாலே இந்த ரூபம் நான் பெற்றேனென்று சொன்னள். அதற்கு ஸ்ரீ ராமர் தேவேந்திரன்கூட எளியவன்போலயிருந்து ஏவல் செய்ய திரிலோக கண்டகனான இராவணனுடைய சகோதரி நீயானால் பாக்கிய இலட்சணத்துடனே புறப்படாமலும் ஒரு துணைகூட இல்லாமலும் தனியே வரவேண்டிய காரணம் என்னவென்று கேட்டனர். அதற்கு ஒருநாளும் மெய்யென்பதே அறியாத அந்த இராட்சசி, சுவாமி! நான் நல்லவர்களிடத்தில் சேர்ந்திருப்பதேயல்லாமல், பாவிகளிடத்திலே சேருவதேயில்லை. தேவர்களிடத்திலேயும் இருடிகளிடத்திலேயும் வாசமாயிருப்பேன். இவ்விடத்தில் ஒரு காரியமாய் உம்மைக் காணவேணுமென்று வந்தேனென்று சொன்னள். அவ்வார்த்தையைக் கேட்டு ஸ்திரீகளுடைய மனதை எப்படி அறிவது? ஆயினும் இவள் நல்லவளல்ல. அதுவும் கொஞ்சம் போதில் தெரியப்போகிறதென்று இருதயத்திலெண்ணிக்கொண்டு, பெண்ணே! நீ எங்களிடத்தில் என்ன காரியத்தை இச்சித்து வந்தாய்? அதைச் சொல்லு. ஆகுமானால் சொல்லுகிறேனென்று சொன்னர். அதற்கு அவள் ஐயா! குலஸ்திரீக்குத் தம்முடைய மனதிலிருப்பதான அபீஷ்டத்தைச் சொல்லுவதும் பிரயாசமாமே. காமத்தினாலே வெந்துபோகும் பிராணனுக்கு ஆசை வைத்திருப்பவள் நானனபடியினாலே, என்ன சொல்லப்போகிறேன்? அந்த காமத்தை அனுபவிப்பதற்கு உம்மையன்றி வேறொருவரில்லை; அந்தக் காமன் செய்யும் கலாபனையை நீர் காத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கண்களாலும் சில இங்கிதக் குறிப்பு களைச் செய்து நின்றாள். இப்படி நிற்கிற அந்தச் சுந்தரியை ஸ்ரீ ராமர் பார்த்து, இவள் நல்லவளல்ல, இவளுக்கு வெட்கமு மில்லையென்று எண்ணிப் பேசாமல் இருந்தார். அப்போது அவள் நம்மிடத்தில் இவர் ஆசையுண்டாய்ப் பேசாமல் இவரிருக்கிறாரோ? வெறுப்பாய் பேசாமல் இருக்கிறாரோ என்று மனதில் ஐயப்பட்டு, ஆசை மிகுதியினாலே மனம் ஊசலாடப் பின்னையும் சொல்லுகிறாள். ஓ அதிக சுந்தரமானவரே! நீர் இவ்விடத்தில் வந்திருப்பதறியாமல் நான் ரிஷியினிடத்தில் ஏவல் செய்துக்கொண்டு என் அழகையும் இளமையும் வீணாய்க் கழித்துப் போட்டேனென்று சொன்னள். அதை ஸ்ரீ ராமர் கேட்டு, இவள் இராட்சசி; நீதி நிலையில்லாதவள். என்னமோ ஒரு காரியத்தை எண்ணி வந்திருக்கிறாளென்று தம்முடைய சித்தத்திலெண்ணி, இவள் மனதை முழுதிலும் அறிவோமென்று வேடிக்கையாக ஒரு வார்த்தை சொல்லுகிறார். ஓ சுந்தரமான பெண்ணே! நீ பிராமண ஸ்திரீ. நானோ இராஜன். இப்படிக்கிருக்க, நீ இவ்விதமாகச் சொல்லுகிறது உத்தமமா என்

ரூர். அதற்கவள் சுவாமி! எங்கள் தகப்பனூர் வேதவித்தான பிராமணன். எங்கள் தாயார் அருந்ததிக்குச் சமானமானவள். அவள் இராட்சதராஜன் வயிற்றில் பிறந்தவள். இதை எண்ணி என்னையும் ராட்சசியென்று நீர் பராமுகமாய் எனக்குத் தயைசெய்யாமற் போனால், என் பிராணன் போய்விடுமென்று சொன்னாள். இப்படி மிகுந்த ஆசையுடன் சொல்லுகிற வார்த்தையைக் கேட்ட ஸ்ரீ ராமர் இளஞ் சந்திரனைப்போல் தந்தங்கள் பிரகாசிக்க, நகைத்து, நீ இராட்சதகணம். நான் மனுஷகணம். ஆகையால் பொருத்தந்தான் நன்றாய் இருக்கின்றதா? இல்லையே! என்று சொன்னர். அதற்கு அவள், ஓ ஸ்ரீ மகா விஷ்ணுவுக்குச் சமானமானவரே! நான் ராவணன் தங்கையென்று சொல்லிக்கொண்டேனே அது என்னுடைய தப்பிதம். அந்தப் பாபமான பிறவி தோஷத்தை தேவர்கள் அனுக்கிரகத்தினாலே தீர்த்துக் கொண்டேன்; நீர் என்னைச் சேர்ந்து ரட்சிக்கவேணுமென்று சொல்லினள். அதற்கு ஸ்ரீ ராமர், ஓ பெண்ணே! உனக்கு ஒரு தமையன் திரிலோகத்துக்கும் அதிபதி. மற்றொரு தமையனே குபேரன். இப்பேர்க் கொத்தவர்களுடனே பிறந்திருக்கிற உன்னை அவர்கள் கொடுக்க வாங்கிக்கொள்ள வேணுமே யல்லாமல், இப்படி தனியே பேசுகிறதற்கு நான் அஞ்சுகிறேனென்று சொன்னர். அதற்கவள் சுவாமி! காந்தருவம் என்கிற கலியாணம் ஸ்திரீயும் புருஷனும் முன்னே சேர்ந்து அனுபவிக்கிறதென்று வேதமே சொல்லியிருக்கிறபடியினாலே, நீரும் நானும் இஷ்டமாய்க் கூடிக்கலந்து இருப்போமாகில் அது என் சகோதரர்களுக்கும் சந்தோஷமாகவே இருக்கும். அதுவுமல்லாமல் இன்னம் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேளும்: முன்னமே என் தமையன் ரிஷிகளுடனே பகையாயிருக்கிறவன். நீரானால் தனியே வந்து இருக்கின்றீர். ஆதலால் அவர்களுடன் உறவு செய்கிறதற்கு உமக்கிதுதவிர வேறே தருணமில்லை. தெய்வ லோகாதிபத்தியம் உமக்கு வரப் பட்டாபிஷேகம் செய்துவைக்கிறேன். அந்தத் தேவர்களும் வந்து உமக் கேவல் செய்துகொண்டிருப்பார்கள். அதுவும் பாருமென்று சொன்னள். அதுகேட்ட ஸ்ரீ ராமர் ஓ பெண்ணே! உன் தமையனை ராட்சதனுடைய கிருபையும் உண்டாயிற்று. உன் அனுபோகமுங் கிடைத்தது. உன்னுடனேகூட அனேக காலமிருந்து வாழவும் உண்டாயிற்று. அது மாத்திரமா? பட்டணம் விட்டுவந்த தவமும் சித்தியாயிற்றென்று சொல்லித் தந்தங்கள் பிரகாசிக்க நகைத்தார். இப்படியிருக்கிற சமயத்தில் சுவர்க்கம் மத்தியம் பாதாளம் என்கிற மூன்றிலேயும் பிரம்மா முதலிய சகலருடைய கண்ணிலேயும் நிறைந்திருக்கிற ஸ்ரீ மகாலட்சுமியான சீதை, ஸ்திரீகளுக்கெல்லாம் ஒரு நாயகம். தேவர்கள் பெற்ற வரத்தினாலே பூமியில் ஓர் இரத்தினம் போலே பிறந்த ஜானகி. இராட்சதரென்கிற ஆரணியங்களைத் தகிக்கிற நெருப்புப்போல அவதாரம் செய்திருக்கிற பிராட்டி தானிருக்கும் பர்ணகசாலையைவிட்டு ஸ்ரீ ராமரிடத்திற்குப் புறப்பட்டு வருகிறாள். அதிசுந்தர ரூபலாவணிய தேஜசோடு நிறைந்து வருகிற லோகமாதாவை அந்த ராட்சசி கண்டு திடுக்கிட்டு, இடுக்கணுற்று திக்பிரமை கொண்டு திகைத்து, பதைத்துக் குமைந்து, அவளைப் பார்த்த கண்களைப் பெயர்க்கமாட்டாமல் ஏங்கி மயங்கித் தேங்கி வீங்கி தூங்கி மூச்செறிந்து விழித்தவள்போல ஓங்கி, ஈங்கு இப்பேர்க்கொத்த ரூபமும் உண்டோ? என்று

எண்ணி, தியக்கமுற்று மயங்கி அழுந்திச் சொல்லுகிறாள். பெண்ணுப்பிறந்த எனக்கும் இச்சுரூபம் இவ்வளவு விகாரத்தைக் கொடுக்குமானால் மற்றவர் களுக்கு எப்படி இருக்கவேண்டும் என்று மனதைத் துறந்து கரைந்து விரைந்து ஸ்ரீ ராமரையும் வருகிற சீதையையும் பார்த்து, இது பிரமதேவன் மூன்று லோகத்துக்கும் அதிக சுந்தரமாய் ஆணிலொன்றும் பெண்ணிலொன்றும் இருக்கட்டும் என்று செய்து தன் சாமர்த்தியத்தைக் காட்டினதே யல்லாமல் வேறல்ல. இதுதவிர வேறே யோசனை இல்லை என்றெண்ணிப் பின்பு ஓர் யோசனை செய்கிறாள். இந்த மகாபுருஷனுக்கு இப்படிக்கொத்த ஸ்திரீ கிடைத் திருக்குமானால் இவரிந்த ஸ்திரீயை ஆரணியத்துக்குக் கொண்டுவரார். இந்த ஸ்திரீ வேறே ஒருவருமல்ல. தாமரைக்கமலத்தை விட்டு வந்த மகாலட்சுமி போலவே காணுகிறது. அவளேயானால் இந்தப் பூமியிலே நடந்து, இங்குவரக் காரணம் யாது? எனக்குத் தெரியவில்லையே! என்று மனம் புகைந்து தீர்க்க மாய் ஓர் ஆலோசனை பண்ணினாள். அது யாதெனில்: காசாம்பூ வண்ணனான இந்த மகாபுருஷன் இந்த ஸ்திரீயைச் சேர்ந்தவனல்லன். இவளும் இவரிடத் தில் நம்மைப்போல ஆசைகொண்டு இவரைச் சேரவேண்டுமென்று அபேட் சித்து வருகிறாள். இவள் வந்து இவருடனே கண்டு பேசுகிறதற்கு முன்னமே அவளிடத்தில் இவருக்கு இகழ்ச்சி வரும்படி செய்வோமென்று நினைத்து, ஸ்ரீ ராமரைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறாள். சுவாமி! இதோ வரு கிறாளே இவள் மாயம் செய்கிறதற்குக் கெட்டிக்காரி. வஞ்சனையிலே மிகவும் சமர்த்தி. ராட்சசி, இவளுடைய மனதை அறியக்கூடாது. இவள் வார்த்தையை மெய்யென்று தேறலாகாது. இவள் ரூபமும் மெய்யான ரூபமல்ல. அநேக ருடைய மாங்கிஷங்களைத் தின்று வாழ்கிறவள். என்னமோ யோசனையாய் வரு கிறாள். இவளைப் பார்க்கிறபோது எனக்குப் பயமா யிருக்கின்றது. இவள் சமீபத்திற்கு வராமுன்னமே விலக்கிவிடுமென்று சொன்னாள். இப்படி சூர்ப்ப னகியானவள் தன்னுடைய நடத்தையை அவளிடத்தில் வைத்துச் சொன்ன சதி வார்த்தையை ஸ்ரீ ராமர் கேட்டு ஆச்சரியமாகி, வருகிறவளும் ராட்சசி தானே பார்ப்போமென்று முத்துக்கள் போலிருக்கிற தந்தங்கள் பிரகாசிக்க நகைத்தார். அந்தச் சமயத்தில் அமிர்தத்தில் வந்த ஜானகி ஸ்ரீ ராமர் சமீபத்தில் வந்தாள். அப்போது சூர்ப்பனகி கண்டு, நீ யார்? இங்கே வரு கிறவள்! நீ ராட்சதியாச்சுதே! கொஞ்சமாகிலும் பயம் இல்லாமல் வருகிறையா வென்று நெருப்புச் சுவாலைபோலக் கோபித்து அதட்டினாள். அவ் வார்த்தை யைக் கேட்டு அவளையும் கண்களாலே பார்த்து சீதை மிகவும் பயந்து, வஞ்சிக் கொடிபோ லிருக்கிற இடை மிகவும் அலையத் துரிதமாய் நடந்து, மிருதுவான பாதங்கள் நோகப் பதைத்து, நீலமேகத்தைப் பவழக்கொடி சூழ்ந்துகொண் டதுபோல ஸ்ரீ ராமருடைய தோளைத் தழுவிக்கொண்டாள். ஸ்ரீ ராமர் இராட்ச தாளுடன் இப்படி விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்தாலும் தீமையே மிகவும் விளையுமென்றறிந்து, அந்த ராட்சதியைப் பார்த்து, நீ இப்படிக்கொத்த காரியங்கள் செய்துகொண்டு இங்கே இராதே. என் தம்பி அறிந்தால் கோபம் செய்வான். நீ சீக்கிரமாய்ப் போய்விடு என்று சொன்னார். அதற்கு மாயா ரூபங்கொண்டு வந்திருக்கிற இந்த ராட்சசி சொல்லுகிறாள்: பூலோகத்தி லிருக்கிற ரிஷீஸ்வராளும் மன்மதனும் தேவர்களும் என்னை இச்சித்து இன்னம்

தபசு செய்கிறார்கள். அப்படிக்கிருக்க நீர் யாரோ ஒரு கன்னியைக் கண்டு என்னே இகழ வந்தது. ஆ! ஆ! நன்றாய் இருக்கின்றது. பளா! என்றனள். அதற்கு ஸ்ரீ ராமர் இவளுக்கு என்னமாய்ச் சொன்னாலும் தன் குணத்தை விடாமல் காட்டிக்கொண்டு ஏதேதோ பிதற்றிக்கொண் டிருக்கிறாளென்று திருவுளத்தில் எண்ணி, மின்னலோடு பூமியில் நடந்துபோகிற மேகம்போல மைதிலியுடனே தம்முடைய பர்ணசாலைக்குப்போய்ச் சேர்ந்தார். அப்போது சூர்ப்பனகி தன் பிராணன் போனதுபோல மூர்ச்சித்துச் சோர்ந்து, நான் என்ன சொன்னாலும் கேளாமல் அந்த ஸ்திரீயினிடத்தில் அன்பு வைத்து அழைத்துக்கொண்டு போனானென்று நினைத்து, அவ்விடத்திலே நிற்காமல் அவரைச் சேருகிறதற்கு என்ன வயணமென்று யோசனைசெய்து இன்றைக்கு இவரைச் சேராமற்போனால் பிராணன் போய்விடு மென்றெண்ணி, ஒரு குளிர்ந்த குகையையுடைய பாறையிற்போய்ச் சேர்ந்தாள். சூரியனும் மேற்குச் சமுத்திரம்போய்ச் சேர்ந்தான். ஸ்ரீ ராமரைச் சேர்ந்து அனுபவிக்கவேணு மென்கிற அவாவையுடைய சூர்ப்பனகி அந்த மாலைப்பொழுதும் செவ்வான மும் வரவே, மிகவும் உருகி மனதழிந்து அசைந்து சோர்ந்து காமாக்கினி மேலு மேலும் மூண்டு, நாகப்பாம்புக்குத் தன் பல்லிலுள்ள விஷம் அதன் சரீரமெல்லாம் ஏறினதுபோல மயங்கினாள். முன்னாலே ஸ்ரீ ராமர் தாடகை என்கிற பாவிபேரில் எப்படி பாணப்பிரயோகஞ் செய்தாரோ! அப்படி மன் மதன் இந்தப் பாவியாகிய ராட்சசியின் மார்பிலே தன் புஷ்ப பாணங்களைப் பிரயோகிக்க, அதனால் உட்கி உயிர் சோர்ந்தாள். சந்திரகிரணமும் சமுத்திர இரைச்சலும் மந்தமாருத முதலியவைகளாலும் மிகவு நொந்து புழுங்கி, சரீரம் வெதும்பக் காய்கிற சந்திரனைக் கறியாக வைத்துக்கொண்டு புஷ்பபாணம் பிர யோகிக்கிற மன்மதனை இதோ தின்றுபோடுகிறேனென்று நினைத்து எழுந் திருக்க, அத்தருணத்தில் மலையமாருதம் என்கிற வேலாயுதம் மார்பிலே ஊன்றவே, ஓய்ந்து சாய்ந்து பாய்ந்து மாய்ந்து போனவள்போலானாள். காதுக்குக் கடூர மாக இறைகிற சமுத்திரத்தை மலைகள் பிடுங்கித் துத்துப்போடுவோமென்று நினைத்தாள். அப்போது சந்திரகிரணமென்கிற தலையைத் தாண்டமாட்டா மல் துக்கித்தாள். புஷ்பங்களும் பூங்காவனங்களும் கரிந்து போகும்படிச்செய்து போடுகிறேனென்று கோபித்து எழுந்தாள். சேவலோடே கூடியிருக்கிற சிவந்த தலையையுடைய அன்றில் பட்சியானது கூவவே, பயந்து நடுங்கி ஒடுங் கினாள். இராகு கேதுவைப் பிடித்துவந்து சந்திரனை விழுங்கிப்போடச் சொல் லுவோமென்று நினைத்தாள். அப்போது அவள் தனங்களிலே மாருதம் வந்து மோதவே, உயிர் வெந்து மனங்கலங்கிப் புழுங்கினாள். இந்த வெப்பத்தைச் சகிக்கமாட்டாமல் குளிர்ந்த பனிஜலத்தைக் கைகளினாலே வாரி அத் தனமுகட் டின்பேரில் அப்பிக்கொண்டாள். அது வெண்ணெயைப்போல் உருகிக் கொதித்தது. அப்பால் குளிர்ந்த சுனை ஜலங்களிலே விழுந்தாள். அதுவும் கொதிப்புள்ளதாகவே யிருந்தது. கடூர மனதையுடைய மன்மதன் எய்கிற பாணத்துக்கு எங்கே பதுங்கி ஒளிக்கலாமென்று திகைத்து, மேகத்தைப் பார்த் தும், நீலகிரியைப் பார்த்தும், சரீரம் அனல்போலிருக்கிறதையும் நோக்கிக் கும்பிட்டு, சந்திரகாந்தக் கல்லும் வெந்துபோக அதின்பேரில் விழுந்து புரண் டாள். சந்திரனும் மாருதமும் மன்மதனும் தன்னைக் கண்டறியாதபடிக்கு

குகைகளிலே மலைப்பாம்போடு இவளும் ஒரு பாம்பாகப் புகுந்திருந்தாள். அத் தருணத்தில் அவள் கொண்டிருந்த காமம் மிகுந்து தனங்கள் புழுங்கி இன்னது செய்வோமென்று தோன்றுமல் பிரக்ஞைதப்பி, இளந்தளிர்களைப் பறித்துப் படுக்கையாகக் கீழே போட்டுக்கொண்டு அதிலே விழுந்து கிடந்து புரண்டாள். ஸ்ரீ ராமருடைய திருமேனியை உருவெளியாகக் கண்டு சோர்ந்து வெட்கிப் பார்ப்பாள். மறையவே ஐயோ! காம வியாதியால் அதிகமாகத் துயரப்படு வாள். ஆகாயத்தில் மேகம் போகிறதைக்கண்டு, அவருடைய திருமேனி சாய லென்று மார்பிலே தழுவிக்கொள்ளுவள். அதுவும் கருகிப்போகக் கண்டு பிரலாபிப்பாள். இப்படி அவளுடைய மோகத்துக்கு ஒரு முடிவில்லாமல், பிரளய காலாக்கினியிலே விழுந்தவள்போல வெந்து பதைத்து நொந்தாள். ஆனல் ஸ்ரீ ராமரை என்ன உபாயமாவது செய்து சேரலாமென்கிற ஆசையி னலே அவள் பிராணன் போகாமல் இருந்தது. ஓ நீலகிரி பர்வதம்போலிருக் கிற புருஷோத்தமா! என் ஆசையை தீருமென்றும் கிருபை செய்யுமென் றும் விஷத்தைச் சாப்பிட்டதுபோல் சரீரம் நடுங்கி நீலோற்பலம் போலவும் கெண்டைபோலவும் கண்களை உடைத்தான ஒரு ஸ்திரீ வந்தாளே அவள் உமது தேவிதானே? ஸ்ரீ மகாலட்சுமியைப் பார்க்கிலும் அதிக சுந்தரமாயிருக் கிறளே அவளிருக்கப் பாவியான நம்மைப் பார்க்கப்போகிறீரா வென்றும், பிராணன் போனவள்போலே பதைத்து ஆசை மிகுந்து இந்தக் காமாக்கினி தீர்ந்து நானும் சுகப்படுவேனு வென்றும் பலவாறுகச் சொல்லிப் பிரலாபித் துக்கொண் டிருக்கிறபோது, மூன்று லோகத்திலுமுள்ள இராட்சதப் பூண் டைக் களைகிறதற்கு ஸ்ரீ ராமர் அவதரித்ததுபோல இருள்களையெல்லாம் சங் கரித்துக்கொண்டு சூரியன் உதயமாயினன். பொழுதுவிடியவே பிராணன் நிலைத்தவளான அந்தச் சூர்ப்பனகையானவள் யோசனைசெய்து, அந்த ஸ்திரீ அவரிடத்தி லிருக்கிறமட்டும் அவர் நம்மைக் கண்ணாலும் பாரார். ஆகையால் சீக்கிரமாயோடி அவளை யெடுத்துச் சாப்பிட்டுப் போட்டு அந்தச் சுந்தரமான புருஷனுடனேகூடி வாழ்கிறதே நமக்குப் புத்தியென் றெண்ணிக்கொண்டு, அதிசீக்கிரமாய் சீதையிருக்கிற பர்னசாலையை நோக்கி ஓடிவந்தாள்.

அப்போது, ஸ்ரீ ராமர் பிராதக்காலையிலெழுந்து ஒரு தடாகத்திலே ஸ்நானம் செய்துகொண்டிருந்தார். அதைக்கண்டு இதுதான் சமயமென்று பர்னசாலைக்கருகே வந்தாள். இப்படி வந்துகொண்டிருக்கிறவள் அப்பர்ன சாலைக்கு அடுத்த வாசனை பொருந்திய ஓர் இருண்ட சோலையிலிருந்து சீதை யைக் காத்துப் பார்த்துக்கொண்டிருக்கிற இளைய பெருமாளைப் பார்க்காமல் நாமெண்ணி வந்ததற்குச் சரியாய் அந்த ஸ்திரீ தனியே அகப்பட்டாள். இனி தடங்கல் செய்யலாகாதென்று சீதையினுடைய சமீபத்திலே நெருங்கினள். அதை லட்சுமணர் கண்டு, யாரடி அங்கு போகிறது, அடி நில்லடி யென்று சொல்லி அதட்டிக்கொண்டு சீக்கிரத்தில் நடந்துவந்து, அக்கினிக் கொழுந்து போலிருக்கிற அவள் தலைமயிரை ஒரு கையால் பிடித்துக்கொண்டு அரையி லிருந்த வாளையுருவி இவள் என்ன பாவியானாலும் பெண் ஜீவனனபடியால் கொல்லலாகாதென்று நினைத்தார். அப்போதவள், இவரைத் தூக்கிக் கொண்டு கேசரிமார்க்கத்திலெழும்ப நினைத்தாள். அது இவரறிந்து, தன்

வாளினுலே அவளுடைய மூக்கும் காதும் முலைக்காம்புகளையும் அறிந்து கோபம் தீர்ந்து தன் கையிற் பிடித்திருந்த தலைமயிரை விட்டார். பின்பு அவள் வாயைத்திறந்து அழுதவோசை அஷ்டதிக்குகளிலு மடைந்து தேவர்க ளுடைய செவிகளும் செவிடுபட்டது. மூக்கறுபட்ட மோழையிலிருந்து வருகிற இரத்தப்பிரவாகம் பூமியெல்லாம் பெருகிற்று. இலட்சுமணர் மூக்கும் முலையும் அறுத்தது இனி ராவணனுடைய தலைகள் அறுக்கிறதற்கு நாள்கொண்டு வைத்ததுபோல இருந்தது. சரேலென்று ஓடிவருகிற அந்த இரத்த பிரவா கத்தையுடைய இராட்சசி, இனி கரன் முதலிய இராட்சதாளில் அனேகர் மாண்டுபோவார்களென்கிற விபரீதத்திற்கு இரத்தமழை பெய்கிற மேகம் போல யிருந்தாள். இப்படி அறுபட்ட சூர்ப்பனகி துள்ளித் துடித்து உயர்ந்து பூமியிலே விழுந்து புரண்டு உதைத்துக்கொண்டு அசைந்து கைகளை விரித்துத் துக்கித்து மூர்ச்சையாகி எழுந்திருந்து நான் பெண்ணாகப் பிறந்து பட்டபாடு நன்றாயிருந்ததென்று சொல்லி மிகவும் துக்கித்து அழுதாள். ஒருநாளும் துயர மும் பயமுமறியாத குடியிலே பிறந்த அந்த சூர்ப்பனகி ஏகத்துவாரமா யிருக் கிற தனது மூக்கினுலே கருமான் உலையில் எழும்பிப் புறப்படுகிற தீயும் புகைச் சலும் போலே பெருமூச்சுவிட்டு கைகளாலே பூமியை அறைந்து, முலைகளைப் பிடித்துப் பார்த்துக்கொண்டு வியசனமுற்று மயக்கத்தினுலே சுத்திச் சுத்தி ஓடித்திரிந்து, ரத்தப்பிரவாகத்துடனே சோர்ந்து பூமியிலே விழுந்து, மலையி லிருந்து அருவி வருகிறதுபோல மூக்கிலிருந்து ரத்தம் மேன்மேலும் ஓடிவர, அந்த வனத்தில் இவள் திரிந்துக்கொண்டு யமனும் பயந்து நடுங்கும்படியாய் தன்னுடைய உறவின்முறையார் பெயரையெல்லாம் நினைத்து நினைத்து ஒப் பாரியிட்டு அழத் தலைப்பட்டாள்.

ஐயோ! ஐயாவே! இந்தப் பூலோகத்திலே நீயுமிருக்க, ரிஷிகள் கையில் வில்லெடுத்துக்கொண்டு திரிந்தால் உனக்குச் சின்னத்தனமல்லவா? தேவர்க ளெல்லாம் உன்னைத் தலையெடுத்துப் பார்க்கிறதற்கும் பயந்து கிடப்பார்களே? ஓ மழுவாயுதம் தரித்திருக்கிற சிவனுடைய மலையை யெடுத்த பெரியமலையே! அண்ணுவே! அண்ணுவே! புலியானது அப்பாலிருந்தாலும் அதின் குட்டியை ஒருத்தரும் உபத்திரவம் செய்யார்களென்று உலகத்தார் சொல்லுகிற வார்த் தையும் பொய்யாய் போயிற்றே! ஓ ஊழிகாலத்திலும் அசைவில்லாத மும் மூர்த்திகளுக்கும் தேவர்களுக்கும் தானவர்களுக்கு முண்டாகிய பலத்தைப் பார்க்கிலும் அதிக பலத்தையுடைய ராவணேஸ்வரா! நான் பட்டபாடு பார்க் கிறதற்கு வாராயோ? ஓ தேவேந்திரனை ஜெயித்து அவனைத் துரத்தி அவ னுடைய முதுகைப்பார்த்த சௌரிய வந்தனே! நான் பட்டவழியைப் பார்க்க வாராயா? காற்றையும் ஜலத்தையும் நெருப்பையும் கூற்றுவனையும் ஆகாயத் தையும் நவக்கிரகங்களையும் இவைகளையெல்லாம் அடக்கி, அவரவர்கள் கையிலே வேலை வாங்குகிற நீ இந்த இரண்டு மனிதருக்குத் தோற்று உன் பலத்தை விட்டுவிட்டையோ? சிவன் கையிலிருந்த வாளை வாங்கினவனே! சூரபத் திலே மன்மதனுக்குச் சமானமானவர்களானாலும், இந்த மனிதர்கள் உன் யுத் தத்திற்குத் தூளிக்குச் சமானமாக மாட்டுவார்களா? ஓ கண்களெல்லாம் நெருப்புப்பொறிபறக்க அஷ்ட கஜத்தினுடைய தந்தங்களை ஒடித்த புஜபல

பராக்கிரமமானவனே! ஒ தேவர்களையும் நடுங்கச்செய்யும் இராவணேஸ்வரா! உனக்கும் தம்பிமாருக்கும் ஆகாரத்துக்கு யோக்கியமான மனுஷாளிடத்திலே அந்தப் பலங்களெல்லாம் ஒடுங்கிப் போச்சுதோ? காட்டிலே ஒளித்துக்கொண்டு திரிகிற மானிடரென்ன பலமானவர்களா? ஒ அரன் - அரி - அயன் - மூவரையும் ஜெயிக்கத்தக்க பலத்தையுடைய கரனே! என் காட்சியைப் பார்க்க வாராயோ? இந்திரனும் பிரம்மாவும் தேவர்களும் ஏவல் கேட்க, சுந்தரமான தேவரம்பைகள் பல்லாண்டு இசைக்க, சகல லோகத்தாரும் தொழுது வணங்கித் தோத்திரம் செய்ய, பூரணச்சந்திரன்போலே குடை பிரகாசிக்க, நீ கொலுவீற்றிருக்கிற சபையிலே நான் வந்து காணுமல் எப்படி முகத்தைக் காட்டுவேன்? ஒரு மனிதன் என் மார்பு தெரிய உதைத்துக் கீழே விழுத் தள்ளி, மூக்கை யறுத்து, உத்சாகமாய் இன்னம் ஜீவனுடனே யிருந்து தன் தோளைப் பார்த்துக்கொண்டு மகிழ்சியாயிருக்க, நான் இப்படி கிடந்து புலம்புகிறதா? இது கரனிருக்கிற ஆரணியமல்லவா? நான் இப்படி படலாமா? இது உன் கீர்த்திக்கு இழுக்கல்லவா? ஒ உலகமெல்லாம் எழுதியிருக்கிற கீர்த்தியையுடைய அண்ணா! ஒ இராவணேஸ்வரா! அநேக ஆயுதங்களைத் தரித்திருக்கிற கரதூஷணன் முதலான ராட்சரெல்லாரும் கும்பகர்ணனைப் போலவே தூங்குகிறார்களோ? நீயும் தூங்குகிறையோ? ஐயோ! பாவிகளே! நான் அழைக்கிறது கேட்கவில்லையா? ஆரணியத்திலே இரண்டு மனிதர்கள் என் னைக் காதையும் மூக்கையும் அறுக்க, மானமிழந்து, நான் இப்படித் துயரப் படமாட்டுவேனா? ஒ அசுராளையெல்லாம் ஜெயித்து, தேவேந்திரனுடைய காலிலே தளையூட்டி, தேவர்களையெல்லாம் ஏவல் கொண்ட மருமகனே! ஒ ஒரு வில்லினாலே திசாதிசையி லிருக்கிறவர்களை ஜெயித்து இந்திரனைச் சிறையிலே போட்ட மருமகனே! இந்த மனிதர்களுடைய பலத்தைப் பார்க்க வாராயோவென்று சொல்லிச் சொல்லி அழைத்துப் பூமியிலே கிடந்து புரளுகிறாள். அப்போது, பச்சை மாமலைபோலே திருமேனியை யுடைய ஸ்ரீ ராமர் சந்தியாவந்தன முதலானதுகளை முடித்துக்கொண்டு வந்தார். இப்படி வந்தவருடைய திருமுகத்தைப் பார்த்து, வயிற்றிலே அறைந்துக் கொண்டு, கண் ஜலத்தினாலேயும் மூக்கு ரத்தத்தினாலேயும் பூமியெல்லாம் சேறாக்கி, ஐயோ! உன் திருமேனிக்கு அன்புவைத்த பிழையினாலே நான் பட்டபாடு பாருமென்று திருவடிகளிலே விழுந்தாள். இந்த ராட்சசி ஏதோ பொல்லாத காரியம் செய்தாளென்றும், இவளை இப்படியாகத் தம்பிதான் செய்திருப்பா னென்றும் தமது திருவுளத்திலே தெரிந்துகொண்டு, அவளைப் பார்த்து நீ யாரென்று கேட்டார். அவ் வார்த்தையைக் கேட்டு நீரறியீரா? இந்த மூன்று லோகமுமாளுகிற இராவணேஸ்வரனுக்குத் தங்கை யல்லவா? என்று சொல்ல, நீ யிருக்கிற யிடத்தில் இருக்கவேணுமே யல்லாமல், நாங்களிருந்து தபம் செய்கிற யிடத்துக்கு நீ வரவேண்டிய காரணமென்ன வென்று ஸ்ரீராமர் கேட்டனர். அதற்கவள், ஒ காமவியாதிக்கு ஒரு மருந்துபோல சுந்தரத்தை யுடைய புருஷரத்தினமே! நேற்று நான் வந்திருக்க வில்லையா யென்றாள். நேற்று மிகுந்த ரூபமாய்த் தாமரைக் கமலவாசியாகிய இலட்சுமிக்குச் சமானமான ரூபத்தோடு வந்தவளா நீ என்று ஸ்ரீ ராமர் கேட்க, ஆம் ஐயா! யாருக்கானாலும் முலைகளையும் காதுகளையும் மூக்கையும் அறுத்துப்போட்டால்,

அழகு அழிந்து கெட்டுப் போகாதாவென்று சொன்னாள். அது கேட்டு ஸ்ரீ ராமர் குஞ்சிரிப்பாக நகைத்து, தம்பி முகத்தைப் பார்த்து, அப்பா! இவளை இவ்வாறு செய்கிறதற்கு இவளென்ன அபராதம் செய்தாளென்று வினவ, இலட்சுமணர் தமையனுரை வணங்கிச் சொல்லுகிறார். சுவாமி! இவள் தின்கிறதற்கோ? அல்லது புறத்திலே எந்தப் பாபிகளைப் பதிவுவைத்து வந்தெடுத்துக்கொண்டு போகவந்தாளோ? இவள் நினைத்து வந்தது அடியேன் அறியேன். ஆனால் கண்களில் நெருப்புப் பறக்க வெகு கோபத்துடனே ஓடிவந்து, பிராட்டியாரை எடுக்க வந்தாளென்று சொல்லச்சே அதைக் கேட்ட சூர்ப்பனகி, அது சரி ஐயா! முன்னே நான் கோரிய நாயகன் உன் சமீபத்திலிருக்க, எனக்குப் பின்னே வந்து தன் வசம் செய்துகொண்ட சக்களத்தியைக் கண்டால் எனக்குக் கோபம் வராதா? நான் எடுத்துப் போகாதே விட்டுவிடவேனே என்றாள். அது கேட்கவும் ஸ்ரீ ராமர் கோபங்கொண்டு அடி ராட்சசி! உன் குலத்தையெல்லாம் ஒரு முகூர்த்தத்திலே சங்காரம் செய்கிறதாய் வந்திருக்கிறோம். நீ இப்படிக்கொத்த பிதற்றல்கள் பிதற்றிக்கொண்டு மாண்டு போகாதே. அடி! இந்த ஆரணியத்தை விட்டு ஓடிப்போ வென்று சொன்னர். அதுகேட்டு சூர்ப்பனகி, ஐயா! பிரம்மா முதலான சகல தேவர்களும் இராவணனுடைய குடிகளாய்த் தீர்ந்திருக்கின்றது. அப்படிக்கிருக்க, நீங்கள் இப்படி செய்து இப்படி சொல்லுகிறது நல்லதா? உங்களுக்கு உறுதியான வார்த்தை ஒன்று சொல்லுகிறேன். அதை நன்றாய்க் கேளுங்களென்று சொல்லுகிறாள். பத்து முகங்களையுடைய ராவணேஸ்வரன் உன் தங்கை மூக்கறுப்புண்டாளென்று சொல்லுகிறவர்களை முன்னே நாக்கை யறுத்துப் போடுவான். நீங்களோ என் மூக்கை அறுத்து உங்கள் குலத்தை வேரோடே அறுத்துப் போட்டவர்களானீர்கள். இனி உங்கள் பிராணன் நிற்கமாட்டாது. அழகையெல்லாம் வீணாய்ப் புல்லிலே கொட்டிப் போட்டீர்கள். தேவலோகம் பூலோகம் நாகலோகம் இவைகளை ஆளுகிற இராஜாக்கள் முதலான அதிபதிகளும் தங்கள் தங்கள் சிரசைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறதே துர்லபம். உங்களை யார் இரட்சிக்கப்போகிறார்கள்? நான் காத்தால் காப்பேன். என்னை நீங்கள் விரகத்தினுலே பிராணன் போகாமல் காக்கிறதானால், அந்த ராவணன் முதலாக இருக்கிற இராட்சதக் கூட்டங்களுக்கு முன் உங்களை நான் காத்துக் கொள்ளுவேன். நல்ல குடியிலே பிறந்து பதிவிரதையாயிருக்கிறவள் தன் பிரதிஷ்டையைத் தான்தானே சொல்லிக்கொள்ள லாகாது. உங்களிடத்திலிருக்கிற எனது மிகுந்த அன்பினுலே சொல்லுகிறேன். தேவர்களைப் பார்க்கிலு மிகுந்த பலம்பொருந்திய ராவணனுடைய தங்கையென்றால் உங்களுக்குப் போதுமே. உயுத்தங்களிலே கூடப் பின் பலனுக இருப்பேன். வாகனமாய் சுமந்துகொண்டு ஆகாய மட்டுக்கும் போவேன். ருசியான பதார்த்தங்களையும் கொண்டு வந்து கொடுப்பேன். எதை நினைத்தாலும் அதை அந்த க்ஷணமே கொடுக்கத் தக்கினவள். இதெல்லாம் உம்மிடத்திலே யிருக்கின்ற புட்பம் போலே சரீரத்தையுடைய அந்த ஸ்திரீயாலே ஆகுமா? குலத்திலேயும் நலத்திலேயும் நினைத்துக்கொண்டு வரத்தக்க பலத்திலேயும் புத்தியிலேயும் அழகிலேயும் எனக்குச் சமானமானவர்கள் எந்த உலகத்திலே யிருக்கிறார்கள்? நீங்கள் யாரையாவது அறிந்ததுண்டானால் சொல்லுங்கள் பார்ப்போம். மூக்கை யறுத்

துப் போட்டேமே. இனி ரூபமில்லையென் றெண்ணிக் கேட்கத் தேவையில்லை. ஒரு கணப்போதிலே அழகு உண்டாகும்படிக்குச் செய்துகொள்ளுவேன். கூடு கிறேமென்கிற பாக்கியமாத்திர முண்டானால் மூக்குத்தானென்ன செய்யவேண்டும்? அதனாலே ஸ்திரீ தன்மைக்குப் பழிப்புண்டா? மூக்கு ஸ்திரீகளுக்கு அதிகந்தானே. மனது மாத்திரம் ஒத்தால் என் பிராணன் உங்களுடையதல்லவா? ஒருத்தர் பார்த்து ஆசைப்படத் தக்கின அழகிருக்கிறது அதுவே விஷமல்லவா? கொண்டவன் பார்த்துச் சந்தோஷிக்கிற ரூபமிருந்தால் அது போதாதா? சிவன் - பிரம்மா - விஷ்ணு - இந்திரன் இவர்கள் ஒன்றாகி அவதரித்திருக்கின்றதுபோல ரூபத்தை யுடையவரே! சகல புவனங்களையும் நான் ஜெயம் பண்ணுவேன். ஒரு மன்மதனுக்கு மாத்திரந் தோற்றுக் கிடக்கின்றேன். ஆதலால் நீங்கள் அவனை மாத்திரம் ஜெயித்து என்னை உயிருடனே வையுங்கள். என்னிடத்திலே தப்பில்லாமல் இருக்கையிலே தானே என் மூக்கையறுத்த உபாயம் நான் அறிந்துகொண்டேன். அதாவது இவளை யாராயினும் பார்த்து ஆசைப்படாமல் இருந்தால் நம்மிடத்திலே தான் இறந்துவிடுவா ளென்றல்லவா செய்தீர்கள். நீங்கள் என்ன தப்பிதமாய்ச் செய்தீர்கள்? அது அறிந்துதான் முன்னைக்கிரட்டிப்பாய் ஆசைகொண்டேன். நானென்ன புத்தியில்லாதவளா? இவ்வளவு தெரியாதா? இப்படி நீங்கள் எண்ணிச் செய்ததை இராட்சதர்கள் அறிந்தால், உலகங்களை முன்னே யழித்துப் போடுவார்கள். நீங்கள் நல்ல குலத்திலே பிறந்தவர்கள். ஆதலால் உங்களாலே யுலகம் அழிந்ததென்று பழி வராமல் நன்று யோசனைசெய்து பார்த்து, என்னுடனே கூட சுகமாயிருந் தருளுங்களென்று நமஸ்காரம் பண்ணினாள். அப்போது, ஸ்ரீ ராமர் சொல்லுகிறார்: அடி இராட்சதி! முன்னாலே இராஜ்ஜியத்தை யெல்லாம் உபத்திரவம் செய்துகொண்டிருந்த உன் பாட்டியான தாடகையினுடைய பிராணனை வாங்கின அஸ்திரம் நம்மிடத்தில் இருக்கின்றது. அதுவுமல்லாமல், இராட்சத குலத்தையெல்லாம் வேரறுத்துப் போடுவதாய் விரதம்பூண்டு புறப்பட்டிருக்கின்றோம். மேலும் பூமியெல்லாம் ஏகச்சக்கிரமாய் ஆண்டுகொண்டிருந்த தசரதச் சக்கிரவர்த்தியின் குமாரர்கள் தாயின் வார்த்தை தப்பாமல் ஆரணியத்திற்கு வந்தவிடத்திலே பிராமணர்களும் ரிஷியீஸ்வரர்களும் தாங்கள் படுகின்ற துன்பத்தை வந்து சொல்லிக்கொள்ள அவர்களுக்கு இராட்சத கூட்டங்களை யெல்லாம் சங்கரித்த பிற்பாடு அயோத்திபோய்ச் சேருகின்றோமென்று வாக்குக் கொடுத்தோம். அந்தப்படி செய்வது நிச்சயம். மனதிலே நிலையாக நாட்டிக்கொள்வாயாக. தேவர்களை யெல்லாம் அடித்துத் துரத்திவிட்ட இராட்சதர்களை இந்த இரண்டு மனிதர்கள் என்னசெய்யப் போகிறார்களென்று உன் மனதில் எண்ணத்தேவையில்லை. உன் கையிலாகுமானால் இராட்சதர் இயக்கர் முதலாக நீ யாரைப் பலசாலி யென்றெண்ணி இருக்கின்றையோ அவர்களை யெல்லாம் அழைத்துக்கொண்டுவா, உன்னெதிரே தானே கொல்லுகிறேமென்று சொன்னார். அதற்கென்ன கொல்லலாம்; மாயங்களை யெல்லாம் குறித்தறியலாம்; ஜெயிக்கலாம்; அவர்கள் செய்கின்ற மாயங்களை யெல்லாம் கடக்கலாம்; அவர்களுக்கும் உபத்திரவங்களைக் கொடுக்கலாம்; என்னை இராட்சசி யென்று இகழ்ந்துவிடாமல் கிருபை செய்தீரானால் எது தான் செய்யப்போகாது? அந்த ஸ்திரீயைக் கைவிடப் போகாதென்று உம்மிட

மனதிலிருந்தாலும், நானும் கூட இருக்கலாகாதா? இராட்சதர்களோடே உயுத்தம் செய்கிறபோது அவர்கள் மாயங்களை யெல்லாம் தெரியச் செய்வேன். பாம்படி பாம்புக்குத் தெரியுமென்கிற பழமொழியாயினும் பார்க்கலாகாதா? உமக்குத்தான் ஒருத்தி யிருக்கின்றாளே. உம்முடைய தம்பியுடன் என்னைச் சேர்த்துப்போடுமே. உங்கள் பட்டணத்திற்குப் போகும்போது என்னரூபம் வேண்டுமோ அந்த ரூபம் எடுக்கின்றேன். அங்கே யிருக்கின்றவர்களுக்கும் இவளாலே அநேக காரியம் சாதித்தோ மென்றும் சொல்லிக் கொள்ளலாம். உம்முடைய தம்பி மூக்கில்லாதவளோடேயா நான் சேர்ந்திருப்பேனென்று சொன்னால், நான் இடையில்லாதவளுடனே தானே அநேக காலமாய்ச் சேர்ந்திருக்கின்றே னென்று சொல்லிச் சம்மதிப்படுத்து மென்று சூர்ப்பனகி சொல்ல, அக்கொடிய வார்த்தைகளைக் கேட்ட இலட்சுமணர் கோபமாகி, சுவாமி! இவளை இந்தக்கணம் கொல்லாவிட்டால் இன்னம் அபரிமிதமாய் பிதற்றிக்கொண்டே யிருப்பாள். இவளிடத்திலே கிருபை யென்னவென்று சொல்ல, அதற்கு ஸ்ரீ ராமர் இன்னம் போகாம லிருந்தாளாயின் அப்படியே படுகின்றாள் என்று சொல்ல, அந்த வார்த்தையை இராட்சசி கேட்டு, இவர்கள் ஒன்றிற்கும் இரங்குகின்றதில்லை. இனி நின்றால் பிராணன் போய்விடுமென்று எண்ணிக்கொண்டு, என்னுடைய மூக்கும் காதும் ஸ்தனமு மிழந்துபோயும் நான் தேற்றிக்கொண்டு, சூது மார்க்க வஞ்சனையினாலே உங்கள் மனதை யறிவதற்காக இதுகளெல்லாம் சொன்னேன். காற்றைப் பார்க்கிலும் நெருப்பைப் பார்க்கிலும் பொல்லாத கடோஜன கரனென்னும் உங்கள் கூற்றுவனை இதோ கொண்டுவருகிறேனென்று சொல்லி மனதிலே சஞ்சலங்கொண் டோடினாள்.

கரன் தூஷணன் திரிசிரன் வதை

இப்படியாயோடின சூர்ப்பனகி கரனிருக்கின்ற சபையிலே போய் அவன் கால்களின்பேரில் மதகுபோலத் திறந்துபோயிருக்கும் தன் மூக்கின் இரத்தங்கள் சொரிய செவ்வானத்தின்மேலே கருமேகம் விழுந்தாற்போல் விழுந்தாள். இராட்சதர்களுக்கு அபஜெயகாலமென்று எமனுடைய ஆக்கினையினாலே பேரிகையடிக்கும் சத்தம்போலே யழுது ஏங்கி, இடிவிழுந்த நாகம் போலே புழுங்கிப் புரண்டாள். அதுகண்டு கரன் கோபாக்கினியினாலே உண்டான புகைச்சல் வாயினால் எழும்பக் கண்களிலே நெருப்புப்பொறி பறக்கப் பார்த்து, அவள் மூக்கின் அறுவாயிலிருந்து சொரிகிற இரத்தத்தைக் குறிப்பினாலும் தன் கண்ணினாலும் அறிந்து, உன்னை இப்படியாய்க் கூசாமற் செய்து போனவர்கள் யாரென்று கேட்டான். இரு மானிடர்; தபசிகள்; கையிலே வில் தரித்திருக்கின்றார்கள். மன்மத சொரூபமானவர்கள்; தசரத மகாராஜாவினுடைய பிள்ளைகள். உயுத்தத்திற்கு வருகிற இராட்சதர்களைத் தேடிக்கொண் டிருக்கின்றார்கள். உன்னுடைய பலத்தைக் கொஞ்சமாயினும் எண்ணிப் பார்க்கவில்லை. தருமத்தை நிலைநிறுத்துகின்ற நிமித்தியமாய் இராட்சதப் பூண்டு பூமியிலே இராமல் வேரறக் கொல்லுகிறேமென்று விரதம்பூண்டு

இருக்கின்றார்கள். அவர்களுடனே கூட ஒரு ஸ்திரீ வந்திருக்கின்றாள். அவளுடைய அழகுக்குச் சமானமான ஸ்திரீகள் மூன்று லோகத்திலேயும் கிடையாது. அவளுடைய அழகை என்னெரு வாயினால் எப்படிச் சொல்லப் போகிறேன். அந்தப் பெண்ணை நான் பார்க்கவே மயங்கி ஆச்சரியம்கொண்டு, இந்த ஸ்திரீ எம்முடைய தமையனுக்காகுமென்று ஆசையுடனெடுக்க ஓடினேன். அதுகண்டு அவர்கள் கோபித்து, என் மூக்கு முதலியவைகளை யறுத்தார்க ளென்று சூர்ப்பனகை அழுதுகொண்டே சொல்ல, அப்போது கரனனவன் பிரளய காலாக்கினிபோலே கோபங்கொண்டு ஏதோ அவர்கள் அறுத்த மூக்கைக் காட்டுமென்று எழுந்திருந்தான். எழுந்திருக்கவே உலகங்களெல்லாம் கிடுகிடென்று நடுங்கி, அவனுடைய கோபாக்கினியினாலே யெரிபட்டது. அப் படியார் ஆகட்டும் அந்த மனுஷர்களை எப்படியுங் கொன்று போடுகிறோம் அவர்கள் மாண்டுபோன பிற்பாடு நமக்கு வந்த அபவாதம் போகப்போகின் றதா? என்று சொல்லித் தன்னுடைய மனது புழுங்கிக் கோபாவேசத்துடன் தேர்கொண்டு வாருங்களடா வென்று சொன்னான். அச்சபையிலிருந்த இராட் சதர்களிலே பதினொருபேர் இந்த லோகத்தையெல்லாம் ஒரு கையினாலேந்தத் தக்கின பலத்தை யுடையவர்கள். சூலம் - மழு - தோமரம் - சக்கரம் - காலபாசம் - கதை - முதலிய ஆயுதங்களைத் தரிக்கின்றவர்கள். தேவர்கள் முதலானபேரும் கண்டு நடுங்கும்படி ஆலகால விஷம்போலச் சரீரங்களை யுடையவர்கள். வடவா முகாக்கினிக்குச் சமானமான கோபத்தை யுடையவர்கள். இந்தப் பதினொரு பேர்களும் பதினொரு பர்வதம்போ லெழுந்திருந்து நின்று, சுவாமி! இந்தக் காரியத்தை எங்களுக்குக் கொடுங்கள். நாங்கள் இருக்கின்றபோது தாங்கள் இப்படிப் புறப்பட்டால் எங்கள் அடிமைத்தொழில் நன்றாய் இருந்தது! அல்ல வென்று தேவர்கள்தான் எதிர்த்து வந்தாலும் அவர்கள்பேரில் தாங்கள் உயுத்தத்திற்குப் போகலாமா? மனுஷர்கள்பேரில் யுத்தத்திற்காகத் தாங்கள் போகின்றதாவென்று சொல்லவே மெய்தான் யுக்தமானதே சொன்னீர்கள். அந்த வெட்கமில்லாத பயல்கள்பேரிலே உயுத்தத்திற்குப்போனால் தேவர்கள், சிரிப்பார்கள். நீங்கள் சீக்கிரத்திற் போய் அந்த இரண்டு மனுஷரையும் கொன்று, அவர்களுடன்கூட வந்திருக்கின்ற பெண்ணைப் பிடித்திழுத்துக் கொண்டு வாருங்களென்று சொன்னான். இப்படிச் சொல்லவே, அவர்கள் மகா சந்தோஷத்துடனே கரனைச் சேவித்துக்கொண்டு, எமதூதர்கள்போலே இராஜாதி இராஜனுடைய திருக்குமாரர்களான இராமலட்சுமணர்கள் இருக் கின்ற இடத்தில் வந்து சேர்ந்தார்கள். .கூடவந்த சூர்ப்பனகை அந்த ராட்சதர் களுக்குத் தன்னுடைய மனதிற்குள்ளே வாங்காமல் இருக்கின்ற ஸ்ரீ ராமன் இவன்தானென்று கையினாற் காட்டினாள். காட்டவே அந்த இராட்சதர்கள் அடிப்போமென்றும், பாசத்தினாற் கட்டுவோமென்றும் சொல்லிக்கொண்டு பர்வதங்கள் சுற்றிக்கொண்டதுபோலே பர்ணசாலையில் வந்து சுற்றிக்கொண் டார்கள். ஸ்ரீ ராமர் அந்த ராட்சதர்கள் வந்ததைக்கண்டு, தம்பியைப் பார்த்து, சீதையைக் காத்துக்கொண் டிருவென்று ஆக்யாபித்து, வில்லைக் கையிலேந் திக்கொண்டு, வாளும் அம்பறாத்தூணியும் தரித்துக்கொண்டு, பர்ணகசாலையை விட்டு வெளியிலே வந்து, இங்கே வாருங்களடாவென்று சொல்லி யுத்தசன்னத் மானார். மழுவும் வாளும் சூலமும் பிடித்துவந்த ராட்சதர்களுடைய கைகள்

இருபத்தெட்டையும் பாணங்களால் அறுத்துப் பூமியிலே தள்ளினர். மரங்கள் போல் கைகளற்று விழுந்துபோய் நின்றவர்கள்பேரிலே அஸ்திரப்பிரயோகம் பண்ணினர். அதனல் அவர்கள் தலைகள் அறுபட்டுப் பூமியிலே விழுந்தார் கள். கூடவந்த மதயானைகள் மடிந்துபோகவே தும்பிக்கையைத் தலைமேல் வைத்துக்கொண் டோடுகிற பெண்ணானைபோல கதறிக்கொண்டு சூர்ப்பனகையும் ஓட்டமெடுத்தாள்.

அவள் ஓடி இராட்சதர்கள் மடிந்த செய்தியைக் கரனுக்குச் சொல்லவே, கோபாவேச மிகுந்து, கண்களில் ரத்தம் பிரவேசிக்கச் சங்கரனினும் அதிக மான பலத்தையுடைய கரன் தன் சேனை சமுத்திரத்தையெல்லாம் கூட்டச் சொல்லிப் பேரிகை யடிப்பித்தான். அந்தப் பேரிகை சத்தம் கேட்கவே மேகங்கள் அநேகம் வந்து கூடுகின்றதுபோலே, தேவர்கள் நடுங்கப் பிரளய காலத்தில் சண்டமாருதத்தினலே கருங்கடல் பொங்கிப் பூமியெல்லாம் பரவினது போல, ரதாரூடரா யனேக ராட்சதர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் பிடித்துவந்த கொடிச்சீலைகள் ஆடுகின்றது எத்தன்மையதெனில், நம்முடைய பசி இன்றைக்குத் தீருமென்று சந்தோஷித்து அநேகம் பசாசுக ளெழுந் திருந்து ஆடுகின்றதுபோலே யிருந்தன. மதயானைகள் பேரிலே அநேக இராட் சதர்கள் கையிலே வாள்களை யுருவிக்கொண்டு நெருங்கி வருகின்றபடியினலே, வாள்களோடே வாள்கள் ஈடுபட்டு இழைத்து அதிலிருந்து நெருப்புகள் விழுந்து, ஆரணியங்களெல்லாம் பற்றி எரிந்தது. பேரிகை முரசம் முருடு முதலான வாத்தியங்களும் தேரினுடைய சத்தங்களும் மிகுந்து இடிகள்போலே சத்திக்க, சூரியன் மேலே இருள்களெல்லாங் கூடிப் புறப்பட்டதுபோலே புறப்பட்டார்கள். சேஷனலே சுமக்கப்பட்ட பூமி நிலையாய் நிற்கமாட்டாமல் திரிலோகாதிகளிலும் வளர்ந்திராநின்ற பர்வதங்களெல்லாம் ஓரிடத்தில் வந்து சேர்ந்ததுபோலப் பதாதிகளாய் வந்த இராட்சதர்கள் புலிக்கூட்டமோ சிங்கக் கூட்டமோ வென்று சொல்லும்படியாய் ஆயுதபாணியான வீரர்கள் அநேக மாயிரம் சேர்ந்தார்கள். யாளிகள் கட்டின ரதங்களும், சிங்கம் கட்டின ரதங் களும், புலிகள் கட்டின ரதங்களும், நாய்கள் கட்டின ரதங்களும், இப்படி யாய் அநேக ரதங்கள் வந்து சூழ்ந்தன. சிங்கம் புலி கழுதை குதிரை முத லானதுகளுஞ் சத்தித்தன. வாயுவேகமான குதிரைகள் அனேக சமுத்திரம் போல வந்து நிறைந்தது. மழு - வேல் - வாள் - எஃகு - தோமரம் - ஈட்டி - மூசுண்டி - தண்டு - சூலம் - இருப்புலக்கை - காலபாசம் - குந்தம் - குலிசம் - பிண்டி - பாலம் - அம்பு - வில் எரி சக்கரம் - கப்பணம் இவை முதலான ஆயு தங்கள் பூர்வத்திலே சூரியனும் அக்கினிபகவானும் பயப்படும்படியாய் இரத்தங் கள் தோய்ந்து தேவதைகளுக்கு வேதனையைக் கொடுத்துப் பிரகாசித்திருக்கிற இந்த ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு ஆயிரமாயிர மதயானை பலமுண்டான வர்கள். பூமியை விழுங்கத்தக்க வாய்களை யுடைத்தானவர்கள். அக்கினி ஜ்வாலித்துக் கொண்டே யிருக்கின்ற கண்களை யுடையவர்கள். இந்த இராட்சத சேனைக்கு, நாயகாதிபதி நான்குபேர் புறப்பட்டார். அவருடைய சேனை பதி னலாயிரங்கோடி மிகுந்த பலமும், இடியைப்போலே பேசுகிற பேச்சும், கையிலே ஆயுதமும், மேகமண்டல மட்டுக்கும் அளாவி யிருக்கின்ற தலைகளும்,

மனதிலே மிகுந்த தருக்கும், பாக்கியச் செருக்கும், கண்ணுக் கடங்காத அகண்டமான மார்பும், பூமியெல்லாம் அளக்கத்தகுந்த காலும், தேவர்கள் நடுங்கும்படியான சேவகமும் படைத்திருக்கின்றவர்கள். பிரம்மாவினுடைய வரம் பெற்றவர்கள். இந்திரன் முதலான தேவர்கள் இவருக்கு எதிர் நிற்க மாட்டாமல் பயப்பிராந்திகொண்டு ஆயுதம் யாவையும் போட்டுவிட்டு ஓடிப் போக, அந்த ஆயுதத்தை யெல்லாம் எடுத்துக் கட்டிக்கொண் டிருக்கிறவர். வடவா முகாக்கினிதானே ரூபமெடுத்ததுபோல கோபமுள்ளவர். சூலமும், பாசமும், செம்பட்டமயிரும், கடூரதிருஷ்டியும், கோரதந்தமும், கருத்த நிறமுமாயிருக்கின்றபடியினாலே காலனுந் தனக்குக் காலன் இவர்தானென்று பயந்து போகும்படியான ரூபத்தை யுடையவராய் இருந்தார். இந்தப் பதினான்கு பேரும் ஒருவனைப்போல வீரகண்டாமணியும், கவசமும், ஆபரணமும், உயுத்தத்தின்பேரில் ஆசையும் உடைத்தாயிருப்பவர். தந்தங்களொடிந்த ஐராவதத்தின்பேரில் இந்திரனேறி எதிர்த்துக்கொண்டு யுத்தத்திற்கு வந்து யுத்தஞ் செய்து சரீரம் நொந்து கிலிகொண்டு இவர்கள் முகத்தைப் பார்ப்பதற்குப் பயந்து முதுகு காட்டிக்கொண்டு ஓடிப்போனபடியினாலே, வேறே யுத்தஞ் செய்பவர் அன்றுமுதல் இன்றையவரைக்கும் அகப்படாததினாலே தோள்களெல்லாம் தினவு கொண்டிருக்கிறவர். யானைமுகம் - குதிரைமுகம் - பேய்முகம் - குரங்குமுகம் - சிங்கமுகம் - கரடிமுகம் - நாய்முகம் - புலிமுகம் - யாளிமுகம் இவை முதலான முகங்களை உடைத்தானவர். ஆலகால விஷம்போல கண்களும் எட்டு கைகளும் கண்ணில் அனல் சொரிகின்ற எட்டு முகமும் இப்படிப்பல முகத்தை யுடைத்தா யிருக்கிறவர். பூமியெல்லாம் வாரி வாயிலே போட்டுக் கொள்ளுகிற சொரூபமுள்ளவருஞ் சூழ்ந்துவர, இயக்கர்கையில் பறித்த ஆயுதமும், அசுராள் பயந்து ஆயுதத்தைப் போட்டுவிட்டு ஓடிப் போனதும், தேவர்கள் கையிலே பிடுங்கிக்கொண்ட ஆயுதமும், காந்தர்வரைத் துரத்திவிட்டு வாரின ஆயுதமும், செய்யக்கூடாத உபத்திரவத்தைச் செய்து கிரகித்த குடை - கொடி - மகரத்தோரணம் - யானை - காய் - மரம் - மயில் - பிச்சம் - மேல் கட்டுகள் முதலானவைகளாலே வெயில் மறைந்து நிழலுண்டாகப் பதினாலு லோகத்தையுஞ் ஜெயித்த இந்தப் பதினாலு படைத்தலைவர் மழு - வாள் - சூலம் - வில் முதலான ஆயுதமும், உதட்டுக்கு மேலே பிரகாசிக்கின்றபல்லும் மகம்மேரு பர்வதத்தை வேரோடே பறிக்கத்தக்கின பலமுமுண்டானவர் ரதாரூடராய்ச் சூழ்ந்துவந்தார். தூஷணன் திரிசிரனென்று சொல்லப்பட்ட இரண்டு தம்பிமாரும் மகன் முதலான அநேக பந்துஜனமும் மகம்மேருவைச் சூழ்ந்த சமுத்திரம்போல சுற்றிக்கொண்டு பிரகாசிக்க, நடுவே பெரிய தேரின்பேரி லேறிக்கொண்டு சகலமானபேரும் பயப்பிராந்தியாக மகாவீரனான கரன் புறப்பட்டான். இந்தச் சேனசமுத்திரம் நடக்கிறபோது, கால் தூளிகள் பூமியெல்லாம் நிறைந்து; ஆகாசத்திலே சூரியனுடைய தேரின்பேரிலேயும் குதிரையின் பேரிலேயும் படிந்து வெண்ணிறமாய் பிரகாசித்தன. அந்த ஆரணியமெல்லாம் மிதிப்பட்டுப் பொடிப்பொடியாய் விழ, பர்வதங்களெல்லாம் இடிந்து சின்னபின்னமாக தூளிகள் சமுத்திரமெல்லாம் நிறைய, இப்படியாக நடந்த சேனையின் பெருமையை நானென்ன சொல்லப்போகிறேன்? இராக்ஷதர்க ளதிக நெருக்கத்தினாலே பூமியின் பேரிலே நடக்க இடமில்லாமல்,

யானையினுடைய தலையின்மேலே கால்களை வைத்து அநேகம்பேர் தாண்டித் தாண்டி நடந்தார்கள். இப்படியாய்ச் சேனசமுத்திரஞ் சரீரத்திலே கூடவிருந்து உயிரை யமன்கையில் கொடுக்கின்ற வியாதியைப்போல் சூர்ப்பனகி முன்னே வர, ஸ்ரீ ராமனுடைய சமீபத்திற்கு வந்தது. இரணபேரிகை முழங்குகிற சத்தங் கேட்டு தேகங்கள் திடுக்கிட, அமிர்தமான வில்லினுடைய குணத்தொனிகளின் சத்தங்கேட்டு இடிகள் சுழல, இன்னம் பற்பல இரைச்சல்கள் பயமுறுத்த, இராட்சதசேனை யுத்தத்தை ஆபேட்சித்திருக்கின்ற ஸ்ரீ ராம லட்சுமணரிடத் திற்கு வந்து சேருவதற்கு முன்னமே, அந்த ஆரணியத்திலே யிருக்கின்ற மிருகங்களும் பட்சிகளும் இந்தச் சேனை வருவதைக் கண்டு பயந்து வாயுலர்ந்து, சரீரங்கள் நடுக்கமெடுத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, இராட்சதர் வருகிற சேதி சொல்ல வருகிற தூதரைப்போல அநேக மோடி வந்தன. அவற்றைக்கண்டு ஆகாயமட்டுக்கும் தூளிப்படல மெழும்புவதையுங் கண்டு, அவர்கள் காலிலே அகப்பட்டு மரங்களெல்லாஞ் சடசடவென் றோடுகின்ற சத்தமும் கேட்டு கொண்டிருக்க, ஆரணியங் கொள்ளாமல் விஸ்தாரமாய் வருகிறது கரனுடைய சேனைதான் நம்மிடபேரில் யுத்தத்துக்கு வருகிறதென் றறிந்து இலட்சுமணர் அம்புராத்தூணி முதுகில் கட்டிக்கொண்டு, கையிலே வில்லை யெடுத்துக்கொண்டு கவசம் தரித்து வாளை யிழுத்துக் கட்டிக்கொண்டு மிகுந்த கோபத்துடனே நின்று, சுவாமி! இன்றைக்கு இந்த ராட்சதாளை நான் செய்கிற சித்திரவதை யும் யுத்தமும் தாங்கள் பார்த்துக்கொண் டிருங்களென்று புறப்பட்டார். பின்னும் பெரிய பெருமாள் இளைய பெருமாளைப் பார்த்து, ஒரு வார்த்தை சொல்லுகிறார். தம்பி! முன்னே இருடிகளுடனே நான் சொல்லி யிருக்கின்றது இராட்சதாளை நானே கொல்லுகிறேனென்று சொல்லியிருந்தேனே, அந்த வார்த்தைக்குப் பழுது வராமல் உன்னை நான் வேண்டிக் கொள்ளுகிறேன். நீ இங்கேயிருந்து சீதையை காத்துக்கொண்டிரு. இச்சேனைகளை யெல்லாம் நானே கொன்று தீர்த்துப்போடுகிறேன். யுத்தத்திலே பூலோகத்தார் தேவலோகத்தார் நாகலோகத்தார் மற்ற யாவர் வந்து எதிர்த்தாலும் எனக்கு எதிர் நிற்கமாட்டார்க ளென்பது உனக்கு நான் சொல்லவேண்டுமா? தம்பி! யுத்தத்தை நீ எனக்குக் கொடுத்து என்னுடைய தோள் சோம்பையும் தின்வையும் தீரென்று ஸ்ரீ ராமர் சொல்ல, அவருடைய பலத்தையும் சௌரியத்தையும் நன்றாய் நினைத்து அறிந்துகொண்டு அவருடைய ஆக்கினைக்குமீறி உத்தரஞ் சொல்லாதவரான படியினாலே அப்படியே லட்சுமணர் கைகூப்பித் தொழுது, கண்ணீர் பூமியிலே முத்து முத்தாய் விழும்படி கிலேசித்து நிற்கின்ற சீதாபிராட்டியினிடத்திலே நின்றார். இப்படியாகச் சீதையின் மனது குழைந்து சோர, பர்ணகசாலையிலிருந்து புறப்பட்டு, இராட்சதாள்பேரில் இருக்கின்ற கோபத்தினாலே வில் தரித்திருக்கின்ற மேருவுக்குச் சமானமான ஸ்ரீ ராமர் குகையிலிருந்து புறப்பட்ட சிங்கம்போலே வெளியிலே வந்து, வருகின்ற இராட்சதாளுக்கு முன்னே தனியே நின்றார். அப்போது, மூங்கிலிலே பிறந்த நெருப்பு அந்த மூங்கிற்காட்டையெல்லாம் தகிப்பதுபோல, இராட்சதாள் காட்டையெல்லாம் தகிப்பதற்காக அக் குலத்திற் பிறந்த சூர்ப்பனகி தன்னுடைய தமையனை கரனுக்கு ஸ்ரீ ராமன் இவன்தானென்று காட்டினாள். சுவர்ணமயமான இரதத்தின்பேரில் சூரியனும் பயந்து கலங்கும்படியாய்ப் பிரகாசமும்

கோபங்கொண்டிருக்கின்ற கரன் ஸ்ரீ ராமரைக் கண்டு, இவன்தானு? இவனே இதோ ஜெயஞ்செய்தேன் என்று மனதில் வையுங்களெனத் தன் சமீபத்தில் வருகின்ற படைத்தலைவரைப் பார்த்துச் சொல்லிப் பின்னுமொரு வார்த்தை சொல்லுகின்றான். ஒரு மனிதன் வந்தால் அதற்கு இவ்வாரணியங் கொள்ளாத ராட்சதாள் எதிர்த்து யுத்தஞ் செய்தார்களென்றால், என்னுடைய கீர்த்தி என்னவாயிற்று? நீங்களெல்லாம் இவ்விடத்தில் நின்று பார்த்துக்கொண்டிருங்கள் நானொருவனே போய் அவனுடைய உயிரைக் குடித்துவிடுகிறேனென்று சொன்னான். அவ்வார்த்தை கேட்டு அகம்பனென்னும் அவனுடைய மந்திரி கல்வி கேள்விகளில் மிகுந்தவனை படியினலே கரனைப் பார்த்து, ஐயா! எப்போ இத்தனை சேனைக்கு எதிரே ஒரு வில்லுடனே தனியே வந்து நிற்கிறானே? அவனைச் சாமார்த்தியனென் றெண்ணவேண்டும். அதுவுமல்லாமல், அநேக துர்நிமித்தங் காணுகின்றது. மேகமானது இரத்த மழை பெய்கின்றது. சூரியனைப் பரிவேடஞ் சூழ்ந்திருப்பதைப் பாரும். உம்முடைய கொடியின்பேரில் காக்கைகள் ஒன்றற்கொன்று போர் செய்து மடிந்து பூமியில் விழுந்து புரளுகின்றன. அம்பு முதலான ஆயுதங்களின் வாய்களை ஈக்கள் மொய்க்கின்றன. வீரரான இராட்சதாளுடைய இடது தோளும் இடது கண்ணும் துடிக்கின்றன. குதிரைகளெல்லாந் தூங்கி விழுகின்றன. அநேகம் நாய் நரிகள் ஊளையிட் டழுகின்றன. பிடியானைகள் மதத்தைப் பொழிகின்றன. மதயானைகளுக்குத் தந்தங்க ளொடிந்துபோகின்றன. வெள்ளையிடி குமுறி விழுகின்றன. இராட்சதாள் தரித்திருக்கின்ற மாலைகள் நாற்றமாக நாறுகின்றன. இப்படி பலவாறுக யிருக்கிறபடியால் எதிரே நிற்கிறவன் மானிடனென்றும், ஒருவனென்றும், நினைக்கலாகாது. ஆகையால், யுத்தத்திற்குச் செய்யவேண்டிய அங்கங்களெல்லாஞ் செய்தாலும், ஜெயிக்கிறது மிகவும் அருமையாகக் காணுகின்றது. நீர் தனித்துப் போகிறது யுக்தமல்ல வென்று எனக்குத் தோன்றுகின்றது. நான் சொன்ன வார்த்தையும் பொறுத்துக் கொள்ளுமென்று வணங்கிச் சொன்னான். இப்படிக்குச்சொன்ன அகம்பன் வார்த்தையைக் கேட்டு கரனனவன் உலகமெல்லாங் குலுங்கப் பெருக்க நகைத்து, தேவர்களையெல்லாம் அரைத்த குழவியான என்தோள் மனிதருக்களிதாய் போயிற்றல்லவா என்று சொல்லிக்கொண்டிருக்கிற சமயத்தில் சேனைகள் மேகங்கள்போல கெர்ஜ்ஜித்துக்கொண்டு அநேக யானைக் கூட்டம் ஒரு சிங்கத்தை வளைத்துக்கொண்டதுபோல சக்கரவர்த்தித் திருமகனை அதிக கோபத்துடன் சூழ்ந்துகொண்டார்கள். அப்போது, ஸ்ரீ ராமருடைய வில்லும் வளைந்தது. அந்த யுத்தமானது இவ்விதமென்று ஒருவராலேயுஞ் சொல்லக்கூடாது. நான் அதை எம்மாத்திரமறிந்து சொல்லப்போகிறேன். ஆகிலும், அறிந்தமாத்திரஞ் சொல்லுகிறேன். ஸ்ரீ ராமருடைய கோதண்டத்திலிருந்து புறப்பட்ட அஸ்திரங்களிலே அநேகங் குதிரைகள் கால்கள் தறிபட்டு பூமியிலே விழுந்து புரண்டன. அநேகம் யானைகள் இடிவிழுந்த பர்வதம் இடிந்து விழுகிறதுபோல துண்டந் துண்டமாய் விழுந்தன. சூலங்களற்றுப் போயின. மழுவாயுதங்களற்றன. வாள்களுடைய பிடிகளற்று விழுந்தன. தெண்டாயுதங்களொடிந்து விழுந்தன. பிண்டிபாலங்கள் முறிந்துவிழுந்தன. அஸ்திரங்களற்று வில்லுகள் முறிந்தன. வேல்களற்றன. அநேகந் தோள்கள் வாகுவலயங்க

ளுடன் துணிந்து விழுந்தன. தோமரங்கள் யானைக்கால்கள் தேர் அச்சுகள் கொடிகள் குதிரைகள் இராட்சதருடைய தலைகள் முசலங்கள் இதுகளெல்லாந் துணிந்து விழுந்தன, ஸ்ரீ ராமபாணம் ஒன்று பத்தாய் பத்து நூறாய் நூறு ஆயிரமாய் ஆயிரம் இலக்ஷமாய் இலக்ஷம் கோடியாய் பிரவேசித்து, ரதகஜ துரக பதாதிகளென்கிற நால்வகைச் சேனைகளின் தலைகளை யறுத்தும், மார்பு களைப் பிளந்தும், கால்களைத் துணித்தும், மலைபோலே பிணக்கும்பல்களை அங் கங்கே குவித்தது. இராட்சத முண்டங்கள் ரத்தங்களோடு எழும்பிப் பெரு நடனஞ் செய்ய, ராமபாணம் அவர்கள் ஜீவனையுந் துரத்திக்கொண்டு போகிறது போல ஆகாயமெல்லாம் ஓடி நிறைந்தது. கைகள் வாளுடனே அற்றுவிழ, கழுத்து தளற, கவசத்துடனே மார்புக ளதிர்ந்துபோக, கால்கள் துணிந்து போக, இப்படியாக இராட்சதர் சின்னபின்னமாய் மடிந்துபோம்படி இராம பாணம் ஸ்திரீகளுடைய கண்களைப்போல கொடுமை செய்தது. உதிரங்கள் மழைகள்போல பூமியெல்லாம் விழுந்து நிறைய நடுவே பிணங்கள் கரைகள் போலே கிடக்க, அது ஒரு ஏரிபோல மிகுந்த விசையாய் சோரிவெள்ளங்கள் ஓடுகிறபடியினாலே ஆறுகள் போலவும், நிணம் மூளை ஈரல் குடலுடனே இரத் தங்கள் கலந்து எங்கும் பரந்து கிடக்கிறபடியினாலே சேறுகள்போலவும் எங்கும் ஆரணியமென்கிறது தெரியாமல் மூடிப் போயிற்று. அந்த இரத்த வெள்ளத் திலே சமுத்திர அலைகள்போல அலைகளுண்டாயிற்று. இராட்சதர் தலைகள் அநேகம் மிதந்தன. யானைகள் மிதந்தன. குதிரைகள் மிதந்தன. தெண்டா யுதம் வில் முதலானதுங் கொடிகளுடனே இரதங்களும் அநேகம் மிதந்தன. அந்த வேளையிலே, பின்னையும் இராட்சதர்கள் கண்களிலே நெருப்புப் பொறி பறக்க அட்டகாசஞ் செய்துகொண்டு அனேகம் அம்பு வில் முதலான ஆயுதங்க ளோடு ஒரு பர்வதத்தை அனேக மேகஞ் சூழ்ந்துகொண்டு மழைகள் பொழி கிறதுபோல சொரிந்தார்கள். அவர்கள் சொரிந்த பலவித ஆயுத மழைகளையும் ஸ்ரீ ராமர் தம்முடைய அஸ்திரத்தினாலே துண்டந் துண்டமாக்கிவிட்டு அவர்கள் தலைகளையெல்லாம் ஒரு முகூர்த்தத்திலே பூமியிலே விழும்படி செய்து குவித் தார். கபந்தங்கள் களித்தாடின. யானைப் பிணங்கள் ரத்தத்திலே ஊறிச் சிவந்தன. பேய்கள் பிணங்களை மிகவும் தின்று திகட்டி சந்தோஷித்துக் குதித் தாடின. முன்னாலே கருடன் கூட பார்த்துப் பயப்படுகிற ராட்சதாளுடைய கண்களைக் காக்கைகள் குத்திப் பிடுங்கின. ஆகையினாலல்லவா தருமத்தினு டைய அருமை யறிந்து தெரிந்திருக்கிற பெரியவர்களெல்லாம் தருமத்துக்கு உயர்ந்த பலமுமில்லை. அதனை மறக்கிறதற்கு உயர்ந்த கெடுதியும் இல்லை யென்று எந்த வேளையிலும் தரும சிந்தையாயிருக்கச் சொல்லி செப்பியிருக் கிறார்கள். அது அப்படியிருக்கட்டும். ராட்சதர்களெல்லாரும் ஒரு கூட்டமாய் பலபல ஆயிர மிருள்களைத் தகித்துப் பிரகாசிக்கிற சூரியனைப்போல எதிரே நிற்கிற கோதண்டராமனைக் கண்டு மிகுந்த கோபமாகி அக்கினி திருஷ்டியாகக் கடூரமாய்ப் பார்த்து ஒரு பர்வதத்தின்பேரில் சத்தமேகமும் ஊழிகாலத்தில் மழை பெய்கிறதுபோல அம்புகளைப் பொழிந்து, பற்பல ஆயுதங்களையும் விசிறி எறிந்தார்கள். அப்படி எறிந்தவர்களையும் எய்தவர்களையும் எய்ய நினைத்தவர் களையும் அறிந்தவர்போல் அவர்கட்குத் தெரியாமல் அஸ்திரங்களினாலே அறுத் தார். பின்னுங் கூட்டங் கூட்டமாய் வந்தவர்களையும், பிரிந்து வஞ்சனையாகப்

பதுங்கி வந்தவர்களையும், ஆயுதங்களை மழையாய்ப் பொழிகிறவர்களையும், கோதண்டபாணியாகிய ஸ்ரீ ராமர் மடித்தார். இந்த ராமபாணமானது அறுத்துத் தூக்கிக்கொண்டு போகிற ராட்சதத்தலைகள் ஆகாயத்திலேயும், கடலிலேயும், எட்டுத்திக்கிலேயும், ஆரணியங்களிலேயும், பர்வதங்களிலேயும், பின்னுமுள்ள அநேக யிடங்களிலேயும், முண்டங்களும் கோர தந்தங்களும் பிரகாசிக்கக் கிடந்தன. அநேக பாணங்கள் ராட்சதாளுடைய மார்புகளைப் பிளந்து, ரத்தங்களைப் பூமி ஆகாயம் மலை காடு முதலான இடங்களி லெல்லாம் நிறையச் செய்தன. பாரிஜாதமாலை தரித்திருக்கிற ராட்சதரும், நெருப்பு போலே ஜொலிக்கிற கண்களையுடைய ராட்சதரும், தேவர்களை ஜெயிக்கிற ஆயுதங்களைப் பிடித்திருக்கிற ராட்சதரும், ஸ்ரீ ராம பாணங்களினாலே பொடிப்பொடியாய் பாய்ந்து மாய்ந்து, மடிந்து போனார்கள். ராட்சதாள் பூண்டு இன்றோடே ஒழிந்து போகின்றதென்று தேவர்கள் சந்தோஷித்து ஆர்ப்பரித்தார்கள். இவ்விதம் இம்சையில் மடிந்த ராட்சதாளுடைய ஈரல்களெல்லாம் கமலம் போலவும், தேர்களெல்லாம் மணற்குன்றுகள் போலவும் இருந்தன. யானைகள் மிதக்கிறது முதலைகள் போலவும், குடல்கள் இலைக்கொடிகள் போலவும் இருந்தன. பிரகாசிக்கிற உதிரக்குளங்களிலே அநேகம் பேய்கள் முழுகிமுழுகி எழுந்திருந்தன. ஸ்ரீ ராமருடைய சரமாரிகள் மேன்மேலும் பாணம் தைக்கவே பயந்து சில ராட்சதாள், ஐயோ! அப்பாவென் றழைத்தார்கள். சிலர் கெர்வித்தார்கள். சிலர் அழிந்தார்கள். சிலர் தாறுமாறாய்க் கிழிந்தார்கள். சிலர் இருந்தயிடத்திலேயே உதைத்துக்கொண்டார்கள். சிலர் பெருமூச்சு விட்டார்கள். சிலர் உருண்டார்கள். சிலர் புரண்டார்கள். சிலர் ரத்த ஆற்றிலே முழுகி அழுந்தினார்கள். சிலர் மடிந்தார்கள். சிலர் பயப்பிராந்தி கொண்டார்கள். இப்படி பலவாறாக எதிர்த்த ராட்சதர்க ளெல்லாஞ் சின்னபின்னமாய் மாண்டுபோனது கண்டு அவர்களைப் பரிகாசஞ்செய்து நகைத்து, படைத்தலைவரான வீராதிவீரர் பதினான்கு பேரும் ஏககாலத்திலே தேர்களை விட்டுக்கொண்டு கைகளில் வில்லுகளுடனே பூர்வத்திலே தேவர்கள் நடுங்கும்படியாய் சமுத்திரங் கடைந்தபோது பிறந்து தூரத்தின ஆலகால விஷம்போல மகா கடூரத்துடனே நடந்துவந்து, மகம்மேருவை வில்லாய் பிடித்து வந்த சிவனை முப்புராதிகள் வளைத்துக்கொண்டதுபோல ஸ்ரீ ராமரை மனதிலே கொஞ்சமாகிலும் மதியாமல் காலாக்கினி சுரூபமாய் கண்களில் நெருப்புப்பறக்க மிகுந்த கோபத்துடனே மேகம்போல சரமாரி பொழிந்துக் கொண்டிருக்கிற கோதண்டராமரை வளைத்துக்கொண்டு உயுத்தஞ் செய்தார்கள். அதில் அநேகம்பேர் அம்புகளெய்தார்கள். அநேகர் பற்பல ஆயுதங்க ளெறிந்தார்கள். அநேகர் மழுவாயுதத்தைவிட் டெறிந்தார்கள். அநேகர் பர்வதங்களைப் பிடுங்கி வீசினார்கள். அநேகர் மேகங்களை யிழுத்து மழைகளைப் பொழிந்தார்கள். அநேகர் வைதார்கள். அநேகர் நகைத்தார்கள். இப்படிப் பர்வதங்கள்போல வளைத்துக்கொண்டு அந்தப் படைத்தலைவருடைய சேனைகள் உயுத்தஞ் செய்கிறபோது, ஸ்ரீ ராமபாணமானது குபீரென்று புறப்பட்டு, அநேகருடைய ரதங்களையும் அதுகளி லிருக்கிற வீரரையும் அநேகம் யானைகளையும் அதுகளின்மேல் ஏறிவந்த சூரரையும் அநேகம் குதிரைகளையும். அதுகளின்மே லேறிவந்த அதிசூரர்களையும் பதாதிகளாய் வந்து வளைத்த அதிக பலசாலிகளான ராட்சதர்களையும் கணப்போதில் சின்னபின்னமாகச்

சித்திரவதை செய்ய, அனைவரும் ஏககாலத்தில் மடிந்தார்கள். பூமியெல்லாம் ரத்தப்பிரவாகமும் பிணராசிகளுமாய் நிறைந்தன. இந்த யுத்தம் பார்க்க அந்தரத்திலே வந்துநின்ற தேவர்களும் ஸ்ரீ ராமபாணம் கண்டிக்கிற வேகத்தைப் பார்த்துச் சகிக்கமாட்டாமல் பயந்து கண்களை மூடிக்கொண்டார்கள். நமனுடைய தூதுவரும் உயிர்களைப் பிடித்துக்கொண்டு போகிறபோது நடந்து நடந்து கால்களோய்ந்தார்கள். பேய்மேலேறி வந்தவர்களும், யுத்தமுனையிலே பித்தேறினவர்கள்போலத் தங்கள் சரீரந் தங்களுக்குத் தெரியாமல் வந்தவர்களும், சிங்கத்தின்மேலேறி வந்தவர்களும், மேகத்தின் மேலேறி வந்தவர்களும், ஸ்ரீ ராமபாணத்தினுலே மடிந்துபோக, அவர்கள் தலையின்மேல் நாய் நரி முதலானதுகளேறி மூளைகளைப் பிடுங்கியதுகள். பின்னும் அநேக ராட்சதருக்குத் தலைகள் சிந்தி விழுந்ததுகள். அநேகருக்குக் கண்கள் சிந்தி விழுந்ததுகள். அநேகம் யானைகள் விழுந்ததுகள். அநேகம் குதிரைகள் விழுந்ததுகள். அநேகம் வில்லுகள் அற்று விழுந்ததுகள். அநேக அஸ்திரங்கள் முதலான ஆயுதங்கள் சிதறி விழுந்ததுகள். சரீரங்களெல்லாம் உயிர் சிந்திப்போக விழுந்ததுகள். அப்போது படைத்தலைவர்கள் தங்களுடையசேனை சமுத்திரங்களெல்லாம் ஸ்ரீ ராமபாணத்தினுலே ரத்த ஆற்றிலே முழுகிப்போனது கண்டு, நாலுபக்கமுஞ் சுற்றிப் பார்க்கத் தலையோடிருக்கிற சரீரமொன்றுகிலும் காணுதபடியினுலே மிகுந்த கோபமாய் பற்களை நெறநெறவென்று கடித்துக் கொண்டு தங்கள் பதினன்கு தேரையும் ஸ்ரீ ராமருக்குச் சமீபத்தில் விட்டார்கள். அப்போது, ஸ்ரீ ராமர் சில அஸ்திரங்கள் மாத்திரம் பிரயோகஞ்செய்து, அந்தப் பதினன்கு தேர்களின் வண்டிகளும் ஆணிகளும் சாரதிகளும் அற்று விழும்படி செய்தார். பிரளயகால சண்டமாருதத்திலே அடிபட்ட பர்வதங்கள் போலே ரதங்கள் முறிந்து தாறுமாறுக விழுந்ததுகள். தேர்கள் அழியவே, பூமியில் குதித்து விற்களை எடுத்துக்கொண்டு இருளுக்குச் சமானமான பாணங்களை மேகம்போலப் பொழிந்தார்கள். இப்படியாக வந்த சரங்களையெல்லாம் பொடிகளாகச் செய்து அவர்களுடைய பதினலு வில்லையும் பதினலு பாணப் பிரயோகஞ்செய்து அறுத்துவிட்டார். மிகவுங் கொதிப்புடனே யுத்தஞ்செய்ய வந்த படைத்தலைவர்களுடைய கைவில்லுகளும் போகவே, கோபந் தலைமண்டை கொண்டு பருவதங்களைப் பிடுங்கிக்கொண்டு ஆகாயமார்க்கத்தில் நின்று எறியத் தலைப்பட்டார்கள். அதுகளைச் சர்வக்ஞியரான ஸ்ரீ ராமர் பதினலு பாணங்களைப் பிரயோகஞ்செய்து அவர்கள் கையிலிருந்த மலைகளோடு அவர்கள் தலைகளையும் பூமியிலே அற்றுவிழச் செய்தார். இப்படியாகப் படைத்தலைவர்கள் படவே, அநேக ராட்சதக் கூட்டங்கள் அநேக ஆயுதபாணிகளாய் கொக்கரித்து ஆர்ப்பரித்துக்கொண்டு கண்களிலே கோபாக்கினி யெழும்ப ஸ்ரீ ராமரைச் சுற்றி எட்டுத் திசையிலும் ஆகாயத்திலும் நெருங்கி வளைந்துகொண்டு ரணபேரிகை முழக்கினர்கள். மதயானை வீரிட்டதுகள். குணத்தொனி யெழுந்தது. சங்கநாதங்க ளுண்டாயின. குதிரைகள் கனைத்ததுகள். இப்படியாக மேக கர்ஜிதம்போலே அதிக முழக்கம் உண்டாயிற்று. அப்போது, ஸ்ரீ ராமருடைய பாணங்கள் புறப்பட்ட வேடிக்கை பார்க்கவந்த தேவர்கள் தங்கள் மேலே ஸ்ரீ ராமபாணம் அறுத்த ராட்சதருடைய தலைகள் முதலானதுகள் விழுமென்று பயந்து ஓட்டமெடுத்தார்கள். உலகங்களெல்லாம் பயப்பிராந்தி

கொண்டன. அசையாமலிருக்கிற திக்கெஜங்களும் கண்களை இமைத்ததுகள். அத் தருணத்தில் அநேகஞ் சேனைகளுடனே திரிசிரன் என்கிறவன் வந்து எதிர்த்தான்.

அவன் எப்படிப்பட்டவ னெனில், திரிநேத்திரனை உருத்திரமூர்த்தி கையிலே யிருக்கிற சூலத்துக்குச் சமானமான மூன்று தலைகளை யுடைய வன். பர்வதம்போலே வில்லைக் கையில் எடுத்துக்கொண்டு ஊழிகால சமுத்திரம் போலச் சேனைகள் சூழவந்து ஸ்ரீ ராமரை வளைத்துக் கொண்டான். அப்போது, ஒப்பில்லாத இந்த வீரரான ஸ்ரீ ராமர் தனியே கைவில்லுடனே அநேக இருட்டுக்கு நடுவே அகண்டதீபம் பிரகா சிக்கிறதுபோலப் பிரகாசித்தார். அந்தத் திரிசிரன் கையிலே வாளையுருவிக் கொண்டு கோடையிடிபோலக் கர்ஜித்து மிகுந்த வேகத்துடனே வருகிற வன் சேனைக்கெதிரே ஸ்ரீ ராமரும் தம்முடைய சரங்களே சேனையாக எதிர் நோக்கி வந்தார். ஸ்ரீ ராமருடைய பாணங்களினாலே ராட்சதர்களில் தாள்க ளற்றவர்களும், தலைகளற்றவர்களும், வாள்களற்றவர்களும், மழுக்களற்றவர் களும், தோள்களற்றவர்களும், தொடைகளற்றவர்களு மானார்கள். சந்திரனைப் போல பிரகாசிக்கிற குடைகளற்றதுகள், கொடிகளற்றதுகள், குதிரைகளற் றதுகள், தேர்கள் முறிந்ததுகள், மதயானைக ளிடிவிழுந்த பர்வதம்போ லனே கம் பூமியிலே விழுந்து புரண்டதுகள். ராக்ஷதர்களிற் சிலர் தங்கள் தலைகள் அறுந்தது தெரியாமல் வில்லிலே பாணத்தைப் பூட்டி எய்துகொண்டே யிருந் தார்கள். சிலர் கால்களற்றுப் போகவே ஆகாயத்தி லெழும்பி அங்கிருந்த படியே பாணங்களைப் பிரயோகித்துக்கொண்டிருந்தார்கள். சில கபந்தங்கள் கையிலே வாளுங் கேடயமும் தரித்தபடியே பர்வதம்போல் உயரமும் பொற்கவ சமுமாய் அரம்பாஸ்திரீகள் கூடப் பார்த்து ஆச்சரியப்படப் பலபலவிதமாக நடனஞ்செய்தன. இரத்தப் பிரவாகமானது வெண்சாமரைகள் குடைகள் முத லானதுகள் நுரைகளாகவும், யானை முதலானதுகள் மச்சஜாதிகளாகவும் மிகுந்த அலையோடுங் கூடிய புதிதான ஒரு சமுத்திரம் உண்டானது போலப் பிரகாசித்தது. ஸ்ரீ ராமபாணம் படவே சில ராட்சதர் தேவர்களாய் தேவ லோகம்போய் தேவரம்பைகளுட னிஷ்டமாயிருந்துகொண்டு தங்கள் சரீரத்தின் கபந்தம் ஆடுகிற நடனத்தைப் பார்த்தார்கள். தேவர்கள் சில இராட்சதர்கள் தங்கள் தோள்களைப் போய் ஒருபக்கத்திலே யிழுக்கப் பார்த்துச் சிரித்தார்கள். சில இராட்சதர்கள் இராமபாணம் வந்து மார்பைக் கிழித்தவுடனே இரு வினை களையுங் கடந்து சுவர்க்கலோகஞ் சேர்ந்து பல ராட்சதர்களுட னெதிர்த்து நிற் கிற ஸ்ரீ ராமரை பரப்பிர்ம வஸ்துவென் றறிந்தார்கள். அந்தக் கண்டர்க ளுடைய சரீரங்களை நிர்மூலமாக ஸ்ரீ ராமபாணமானது எப்படி யழித்ததென் றால், வஞ்சகன், சொற்பகுணத்தை யுடையவன், நெஞ்சில் நிஜமில்லாதவன் முதலானவர்கள் வஞ்சப் பிரதானங்களுக் குட்பட்டு, ராஜசபையி லஞ்சாமற் சொல்லுகிற பொய்ச்சாட்சிச் சொல்லானது அவர்கள் வம்சத்தை விர்த்திக்காம லழிப்பதுபோல அழித்தது. பின்னும் வள்ளலாகிய ஸ்ரீ ராமரானவர் வஞ்சக ராகிய ராட்சதர்களை வதைத்துத் தம்முடைய அஸ்திர துல்லியத்தினாலே தேவர்க ளாக்கியது எப்படி யிருந்தெனில், பெரியோர்கள் மூடர்களைப் பலாத்காரமாய்

அழைத்து அவர்களுக்கு சத்போதனை செய்து, காமக் குரோதாதிகளை நீக்கி நீதிபரர்களாக்குவதுபோ லிருந்தது. இப்படிப் பலவாறாக அநேக ராட்சதர் மடிய, இரத்த ஆற்றில் அந்த ராட்சதப் பிணங்கள் மிதந்து பிரவாகத்துடனே சமுத்திரத்திலேபோய் விழுந்து. ஒரு மனிதன் வந்து ராட்சதர்களை இப்படிக் கொல்லுகிறா னென்று இராவணனுக்குச் சொல்லப் போகிறவர்கள்போல இலங்கைமட்டும் போய்ச் சேர்ந்தன. அப்போது திரிசிரன் தன்னைச் சூழ்ந்து வந்த படைகளெல்லாம் ஒருவன் பாணத்தினால் மடிந்தது கண்டு கோபம் பொங்கி எழும்பி தேரை முடுக்குகிறபோது, ரத்த மாமிசச்சேற்றிலே சக்கர மழுந்தி ஓடாதபடியினாலே ஆகாயத்திலெழும்பி ஓட்டக் கெர்ஜித்துக்கொண்டு, ராமனுக்குச் சமீபத்தில் வந்து தேரைப் பூமியில் நிறுத்தி, இடிகளுக்குச் சமானமான பாணங்களை மேகம் போலத் தர்ம ஸ்வரூபமான ஸ்ரீ ராமருடைய திருமேனி மறையப் பொழிந்தான். பொழிந்த சரங்களையெல்லாம் அஸ்திரங் களினாலே கண்டித்து பதினாறு பாணத்தினால் அவனுடைய மூன்று தலையில் ஒரு தலையை விட்டு இரண்டு தலைகளை யறுத்து உருட்டினார். அப்போது அவன் தேருமழிந்து, திரிசிரனென்கிற பேருமழிந்து, ஒரு சிரஞ்சியும், வீரம் கொஞ்ச மாகிலும் குறையாமல் வில்லை வளைத்து அஸ்திரங்களை மழைபோலப் பொழிந் தான். ஸ்ரீ ராமர் தம்முடைய அஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்து, அவனுடைய வில்லை யறுத்துக் கீழே தள்ளினார். வில்லும் போய் அவன் முகம் வாடாமல் சொல்லுகிற கடூர வார்த்தைகளும் விடாமல் ஆகாயமட்டுக்கு மெழும்பியிருக்கிற அநேக பர்வதங்களைப் பிடுங்கி எறிந்து காற்றடி போலத் திரிந்தான். இப்படி யாக மாயமாயிருந்து யுத்தஞ்செய்கிற இந்தப் பாவியை ஸ்ரீ ராமர் இரண்டு பாணத்தினாலே இரண்டு காலையும், இரண்டு பாணத்தினாலே இரண்டு தோள் களையும் அறுத்துத் துணித்தார், அப்போது, அவன் குகைபோலிருக்கிற வாயைத் திறந்துகொண்டு வாயினாலே கவ்வித் தின்றுவிடுவேனென்று நகர்ந்து வந்தான். அப்படி வருகிறவனைக்கண்டு இவனுடைய ஒரு தலையையு மறுத்துக் கீழே தள்ளினார். திரிசிரனென்கிற பர்வதம் பூமியிலே விழவே, இராட்சதர்கள் அதைரியங்கொண்டு ஓடத் தலைப்பட்டார்கள். பின்னாலே தூஷணனிருந்து நிறுத்தினாலும் நின்று உத்தரஞ் சொல்லாமல் கையிலே கத்தி கேடயத்துடனே இரத்த ஆறுகளில் விழுந்து குடல்களில் கால்கள் மாட்டிக்கொள்ள அதைப் பார்த்து தேவர்களுங் கைகொட்டிச் சிரிக்கப் பூமியிலோடுகிறபோது கால்கள் நடுக்கமெடுத்தவர்களும், நிணங்களில் விழுந்து அழுந்திக் கிடக்கிறவர்களும், இரத்தச் சேற்றிலே வாள்வேல் முதலான ஆயுதங்கள் புதையப் புதைந்து கிடக் கிறவர்களும் ஓடுகிறபோது கால்களறுந்து விழுகிறவர்களும், இரத்த ஆற்றை நீந்தி ஓடுகிறவர்களும், அதிலழுந்தி மேலே கிளம்புகிறவர்களும், கோபத்துடன் ஓடினவர்களும், யானை வயிற்றில் ஆயுதங்களுடன் புகுந்து கொண்டவர்களும், கபந்தமாடுகிறதைக் கண்டு நீ எனக்குச் சிநேகிதனுகையால் என்னைக் கண்ட தாகச் சொல்லாதே என்று கும்பிடுகிறவர்களும், அரையிற் கட்டின கச்சம் வாளும் தளர்ந்து வீழ்ந்து காலைச் சுற்றிக்கொண்டு இழுக்கப்பட்டு வருகிறதையும் பாராமல் பயமென்கிறதே ஒரு சரூபம் எடுத்ததுபோல மிகுந்த பயப்பிராந்தி யாய் ஓடுகிறவர்கள் ஸ்ரீ ராமபாணம்பட்டு விழுந்து கிடக்கிற இராட்சதர்களைக்

கண்டு அஞ்சி நடுங்கி அந்த வழியைவிட்டு மற்றொரு வழியாய் ஓட்டமெடுத் தார்கள்.

இப்படி ஓடுகிற ராட்சதர்களைக் குதிரைகள் கட்டியிருக்கிற ரதத்தின் மேலே யிருந்த தூஷணன் கண்டு பயப்படவேண்டாம். நானென்று சொல்லு கிறேன் கேளுங்களடாவென்று சகலருக்கும் கேட்கும்படியாகச் சொல்லுகி றான். மனதிலே பயப்பிராந்தி யுண்டான கொஞ்சமனுஷருக்கு ஸ்திரீகளும் அஞ்சார்களே. தைரியமல்லோ கவசமா யிருக்கவேணும். அச்சமென்கிறது உயிருக்குத் துணையாகுமா? தேவேந்திரனுடனேயும் ஒருநாளு மறியாமலிருக் கிற மும்மூர்த்திகளுடனேயு மெதிர்த்து யுத்தஞ்செய்தபோது இராட்சதர்களில் யாரோடினர்கள்? உங்களுக்குந் தோற்று ஓடுகிற தேவர்களிடத்தில் இதைக் கற்றுக்கொண்டீர்களோ? இப்படியா மனம் திகைத்துப் போனீர்கள்? இங்கே ஒரு மனிதனுக்கு இத்தனை வீரருந் தோற்று, உங்கள் கைவாளுடனே கீர்த்தி யும் விழுந்துபோக, ஊரிலே போய்ச்சேர ஓடுகிறீர்களோ? ஸ்திரீகளுடைய ஸ்தனங்கள் மார்பிலே அழுந்தும்படி அணைத்துக்கொண்டு அவள் சுகத்தை யனுபவிக்கப் போகிறீர்களோ? யுத்தத்துக்கு வருகிறபோது கோபத்திலே செம்புருக்கினதுபோல சிவந்திருந்த கண்களெல்லாம் பால்போல தெளியவந் தீர்களே. இந்த ஆரணியத்திலே ஓடி நுழைகிறபோதெல்லாம் முதுகிலே முள் ளுகள் கொம்புகள் கிழித்த அந்தக் குறிகளை அவர்களுக்குக் காட்டுவீர்களோ? இராட்சதர்களுக்கு இதைக்காட்டிலு மிஞ்சின ஏக்கம் வேறே யிருக்கின்றதோ? ஒரு மனுஷன் செய்த ஆண்மை அந்தத் தேவர்களாலேயு மாகாதே. அப்படி யிருக்க, உங்கள் குலத்து ராஜாவினுடைய தங்கை மூக்கு யிழந்த ஒரு பழி யுடனே போகாமல், இராட்சதர்கள் முதுகுகாட்டி ஓடினர்களென்று மற்று மொரு பழிவருகிறதே. அதையு மென்ணமி லிருக்கிறீர்களே. தேவர்களை யுத்தங்களில் ஜெயித்து அவர்கள் கையிலிருந்த ஆயுதங்களைப் பறித்துக்கொண் டிருக்கிற அதிவீரரான நீங்கள் இப்படி ஓடிப்போய் முத்து ரத்தினங்களைக் கொண்டு வர்த்தகஞ் செய்யப் போகிறீர்களோ? அல்லவென்று வில்லும் வாளும் கொழுவாகக் கலப்பையில் பூட்டி உழுது பிழைக்கப் போகிறீர்களோ? எப்படி ஜீவிக்கப்போகிறீர்கள் சொல்லுங்கள்? இது என்ன விவேகமென்று இப்படி அநேகவிதமாகச் சொல்லி, நீங்கள் ஒரு க்ஷணமாத்திரந் தூரநின்று பார்த் துக்கொண்டிருங்கள். நான் செய்யும் யுத்தத்தை யென்று தன் சேனையுடனே ஸ்ரீ ராமருக்கு நேராக தேவர்களும் மயங்கி நடுங்கும்படியாய் எதிர்த்தான். அப்போது, ஸ்ரீ ராமரும் அப்படியே உன் சேனையைக் காத்துக்கொள்ளென்று அஸ்திரப்பிரயோகஞ் செய்துக்கொண்டு எதிரே நடந்தார். அவன் பிறகே வந்த சேனைகள் ஆயுதங்களுடனே கைக ளறுப்புண்டதுகள். யானைகளெல் லாந் தந்தங்கள் தும்பிக்கைகள் அறுப்புண்டதுகள். ரதங்கள் கொடிகள் கொடிச்சீலைகள் அறுப்புண்டதுகள். குதிரைகளெல்லாம் நெல்லு கதிர் அறுப் புண்டதுபோலக் கழுத்துகள் அறுப்புண்டதுகள். ஒவ்வொரு பாணம் இராட் சதர்களுடைய உயிர் நிலையைப் பேதித்து அவர்கள் பாணங்களையும் அறுத்துக் கச்சைகளையும் கவசங்களையுஞ் சுழன்று விழுத்தள்ளி அருவிபோல் இரத்தங் கண்களில் சொரியக் கேடகத்தையும் அவர்கள் சரீரத்தையும் உருவிக்கொண்டு

போயிற்று. அநேக சரங்கள் ராட்சதர்கள் மார்பிலே தைத்து அழுந்துகிற தற்கு முன்னே, அர்த்த சந்திரபாணந் தலைகளைத் துணித்துவிட்டது. ஸ்ரீ ராமர் தூஷணன் விடுகிற சரங்களைத் துணித்து, மற்ற ராட்சதாளுடைய ஆயு தங்களையுமறுத்து, அந்த இராக்ஷச சமுத்திரத்தை வறண்டுபோகச் செய்து விட்டார். அந்தக்காலத்தில், தேவர்கள் சந்தோஷித்து அட்டகாசஞ் செய்துக் கொண்டெழுந்தார்கள். ரத்த ஆறுகள் மலைகள் விருட்சங்கள் முதலானது களை யிழுத்துக்கொண்டு ஓடியதுகள். ஸ்ரீ ராமபாணம் திசைதோறும் திசை தோறும் இராட்சதர்களைப் பூமியிலே புரட்டிற்று. அந்த ரணக்களத்திலே மலைக்கூட்டங்களைப்போல நிறைந்து நிணங்களைத் தின்று தெவிட்டிய பேய் களைக் குறித்துச் சொல்வதென்ன ? யுத்தத்தில் எதிர்ப்பட்டவர்கள் எல்லாம் அதிசீக்கிரத்தில் இறந்தபடியினாலே இத்தனை பேர்களுடைய உயிரை எப்படிப் பிடித்துக்கொண்டு போகப் போகிறேனென்று யமனுங் கண்ணீர் சோர அழுது மெய் சோர்ந்தான். அப்போது, தூஷணன் மிகுந்த கோபத்துடனே யானை குதிரைகளின் தலைகளும் தேர்ச்சிகரங்களும் கபந்த முதலானதுகளும் குவிந்து கிடக்கிற மலைகள்மேலே இரதத்தை ஓட்டி, அது சக்கரம்போலச் சுழல்கிற இரதமானாலும் அந்த ரத்தாறுகளிலேயும் நிணச்சேறுகளிலேயும் பிணமலைகளிலேயும் ஏறி யிறங்கப்பட்டபாடு ஒருவராலே சொல்லி முடியாது. அப்படி மகா பிரயாசையாக இருபத்தைந்து குதிரைகட்டி யிருக்கின்ற ரதத்தை மூடுக்கிக்கொண்டு, இருளை நீக்கிப் பொலிந்திருக்கின்ற சந்திரனைப்போலப் பிரகாசிக்கிற ஸ்ரீ ராமசுவாமிக்கு எதிரே கூற்றுவன் முன்னே வலிய நடந்து போகிற பிராணன்போலச் சமீபத்திலே போனான். அப்படி வந்த தேரையும் பெரிய வில்லுடன் மலைபோலே நிற்கிற தூஷணனையும் ஸ்ரீ ராமச்சந்திரன் பார்த்து, நீ நல்ல சாமார்த்தியன் ! நல்ல சாமர்த்தியன் ! என்று சொன்னார். அப்போது அந்தப் பாவி மூன்றுபாணம் ஸ்ரீ ராமபத்திரன்மேல் எய்தான். அந்தப் பாணம் சுதர்சனமென்கிற திருச்சக்ர அவதாரமான் பரதாழ் வானைப் பூமியாள அனுப்பிவிட்டு வந்த ஸ்ரீ ராமன் நெற்றியில் வீரபட்டத்தின் மேல் தேவர்கள் நடுங்கும்படியாகப் பட்டது. அப்போது இவன் எய்த காலமும் இவன் பலமும் நன்றாயிருந்ததென்று சிறுநகை நகைத்து, அஸ்திரப்பிரயோ கஞ் செய்து, அவனுடைய தேரையுமறுத்து, வில்லையும் அறுத்து, கவசத்தை யும் அறுத்தார். பின்னுந் தேவர்கள் ஆர்ப்பரிக்க, ரிஷியீஸ்வரர்கள் வாழ்த்த, இதோ பாணம் வருகின்றது. இதைக் காத்துக்கொள்ளடாவென்று சொல்லி ஒரு பாணத்தைப் பிரயோகஞ் செய்தார். அந்தப் பாணத்தினாலே கோரதந்த மூடைய தூஷணன் தலையறுப்புண்டு விழுந்தான்.

தூஷணன் வதைப் படலம் முற்றிற்று.

கரன் வதைப் படலம்

அப்போது, மகா வீரனை கரன் தம்பி தலையற்றுப்போனதும் தாசரதி யாகிய ஸ்ரீ ராமன் சகலரையும் மடித்ததும் அறிந்து கோபித்துக்கொண்டு, கூற்றுவனும் பயப்பட அநேக இராட்சத சமுத்திரத்துடனே யானைகளும் ரதங் களும் குதிரைகளும் காலு திக்கிலும் பரவிவரச் சந்திரனே மேகம் வளைத்துக் கொண்டதுபோல ஸ்ரீ ராமனென்கிற மதயானையை வளைத்தான். அந்த ராட்சதர் முதலாகிய சதுரங்கபலமும் பூமியைச் சுமந்துக்கொண்டிருக்கின்ற அனந்தனுடைய படங்களும் கிழியும்படி பலபலவித யுத்தஞ் செய்யத் தலைப் பட்டன. வீரராகவனும் அஸ்திரங்களைப் பிரயோகஞ் செய்தான். அப்போது அநேகம் யானைகள் துடித்ததுகள். அநேககோடி தேர்கள் துடித்துகள். அநேகங் குதிரைகள் துடித்ததுகள். அநேக முடித்தலைகள் துடித்ததுகள். அநேகம் வாகுவலயத்தை அணிந்த தோள்கள் துடித்ததுகள். அநேகம் மணிக்குடல்கள் துடித்ததுகள். அநேகஞ் சதை தோல்கள் துடித்ததுகள். அநேகங் கால்கள் துடித்ததுகள். ஜீவனுடனிருக்கிற இராட்சதருக்கும் இடது தோள்கள் துடித்ததுகள். வாளின் காடு வேலின் காடு வில்லின் காடு தோளின் காடுகளையும், அதுகளையுடைய ராட்சதக் காடுகளையும், சுவாமியானவர் அம்பின் காடுகளினுலே யழித்தார். தரும ஸ்வரூபரான ஸ்ரீ ராமருடைய பாணமானது நட்சத்திர மண்டலத்தை உருவியும் மகம்மேரு பர்வதத்தையும் ஆகாயத்தையும் பூவியையுமே உருவுகின்றதாயிருக்க, இந்த ராட்சதர்களுடைய மார்பை உருவினதை ஒரு அதிசயமாக நான் சொல்ல வேணுமோ? அன்றையத் தினம் வந்து வளைத்த இராட்சதர்களெல்லாம் போய் மடியும்படி அஸ்திரங்களை விடுத்து, ஒருவன் பலவானுயிருந்து எளியோர்களை வருத்தப்படுத்திக் கிரகித்த பொருள் அவனைக் குலத்துடனே எப்படி நிர்மூலஞ் செய்யுமோ அப்படியே நிர்மூலஞ் செய்தார். இப்படியாக அனைவரும் அழிந்துபோகவே, அந்த இரத்த சமுத்திரத்திலே மந்தரகிரிபோலத் தனித்தேரில் நின்ற வீராதி வீரனை கரனனவன் மிகுந்த கோபங்கொண்டு, கண்கள் நெருப்பைச் சிந்த எண் ணிறந்த பாணங்களைப் பொழிந்துகொண்டு, வடவாமுகாக்கினிபோல எரிந்து, புகைகிற மனதுடனே அநேகம் கழுகு கூளி பருந்து காகமுதலானதுக ளிடைந்துபோகக் கடலில் ஓடுகிற கப்பல்போலத் தேரை விட்டுக்கொண்டு எதிரே வந்தான். இப்படிப் பிரளய காலாக்கினிபோல வருகிற கரன் தம் முடைய சமீபத்துக்கு வருமுன்னமே காலகண்டனை சிவனுடைய வில்லைத் திருக்கையினுற் ஒடித்த ஸ்ரீ ராமரும் பாணப்பிரயோகஞ் செய்துகொண்டு எதிர்த்தார். அப்போது ராட்சத ஜாதியானை கரன் அக்கினி ஸ்வரூபமாய், வாயு வேகமானதுகளாய் செவ்வையாய் நீண்டு கூர்மையாயிருக்கிற ஆயிரம் பாணங்களை ஒரு க்ஷணநேரத்தில் எய்தான். ஸ்ரீ ராமரும் அப்படிக்கொத்த பாணம் ஆயிரம் எய்து அதுகளை அறுத்தார். மற்றுஞ் சகல லோகநாயகரான ஸ்ரீ ராமர் பிரளய காலாக்கினிக்குச் சமானமான ஒன்பது கணைகளைப் பிரயோ கஞ் செய்தார். அதுகளை அவன் அறுத்துப் பின்னும் மாயத்தினுலே மிகவும் யுத்தஞ்செய்து ஸ்ரீ ராமருடைய திருமேனியை அம்பினுலே நோவ மறைத்தான்.

அதைக்கண்ட தேவர்கள் மனது திடுக்கிட்டுப் பயந்து ஓடி ஒளித்தார்கள். ஸ்ரீ ராமர் பவளம்போ லிருக்கிற அதரத்தைத் தந்தங்களினுலே அழுத்திக் கோபித்தவராய் ஒரு பாணத்தினுல் இவன் தலையை அறுக்கவேணுமென்று கோதண்டத்தில் ஒரு அஸ்திரத்தைப் பூட்டித் தோள்பரியந்தம் வாங்கினர். அப்போது அந்த வில் யுகாந்தப் பேரிடியின் சப்தமும் அடங்கிப் போக அதிக சப்தத்துடனே படீரென்று ஒடிந்தது. அத் தருணத்தில் ஜெயங்கோரிக் கொண்டிருந்த தேவர்கள் பயந்து திடுக்கிட்டு வேறே வில் ஸ்ரீ ராமரிடத்தில் இல்லையே ஆகையால் நம்முடைய பலம் போய்விட்டதென்று நடுங்கினர்கள். அதுகண்ட சக்கிரவர்த்தித் திருமகனுனவன் நம்முடைய வில் ஒடிந்தது; நாம் தனியே யிருக்கிறோமென்று மனதிலே சிந்தை செய்யாமல் தம்முடைய திருக் கையைப் பின்புறத்தில் நீட்டினர். சமீபத்திலிருந்து மனதை அறிந்து கொடுக் கிறவன்போல் வருணனுனவன் அவன் முன்னுளிலே பரசுராமரிடத்திலே வாங்கித் தன் கையிற் கொடுத்துவைத்த வில்லைக் கொடுத்தான். அப்படி அந்த வருணன் கொடுத்த வில்லை மேகஸ்வரூபரான ஸ்ரீ ராமர் வாங்கி வலங்கொண்டு இடதுகையிலே பிடித்தார். அந்தச் சமயத்தில் தர்மந் தப்பிப் போகிறவர்களுக் கெல்லாம் இடது கண்ணும் இடது தோளும் துடித்ததுகள். ஸ்ரீ ராமர் அந்த வில்லை வாங்கி நாணேறிட்டு கூற்றுவனுஞ் சந்தோஷத்துடனே குதித்துக் கூத்தாட நூறு அஸ்திரம் பிரயோகித்துக் கரனுடைய தேரைப் பொடியாக்கி விட்டார். அந்த க்ஷணத்தில் கரன் தேரைவிட்டிறங்கி ஆகாயத்தில் எழும்பி ஆர்ப்பரித்து அநேக அஸ்திரங்களை திவ்ய சுந்தரத்தையுடைய ஸ்ரீ ராமர் தோள்களாகிய மரகதக் குன்றுகளின்மேல் மழைபோலப் பொழிந்தான். அது கண்டு தசரத ராமர் அஸ்திரப் பிரயோகஞ்செய்து, அம்புராத்தூணியிலிருந்து அம்பை வாங்குகிற வலது கையை அறுத்துப் பூமியிலே விழுத்தள்ளினர். வலது கை விழவே, இடது கையினுல் இருப்புலக்கை எடுத்து இடிபோல் வீசிவிட்டான். இலட்சுமணருக்கு தமையனுரான ஸ்ரீ ராமர் ஒரு பாணத்தினுலே அதை விலக்கினர். அப்போது, விஷத்தந்தங்கள் இற்றுப்போன சர்ப்பம் போலக் கோபித்து ஒரு மரத்தைப் பிடுங்கிக்கொண்டு சமீபத்திலே வந்தான். ஸ்ரீராமர் ஒரு அஸ்திரத்தைப் பிரயோகித்தார். அந்த அஸ்திரத்தினுலே ராட்சதர்கள் வரப்பிரசாதம் பெற்றுக் கொர்விதராய்ச் சகல உலகங்களையும் உபத்திரவப்படுத் தின பாவத்தினுலே அவனுடைய வலதுகை அறுந்து விழுந்ததுபோலச் சரீர மும் அற்றுவிழுந்தான். தேவர்கள் சந்தோஷித்து ஆர்ப்பரித்தெழுந்து ஆநந்த நிர்த்தனஞ்செய்து ஸ்துதிபண்ணிப் புஷ்பமாரி பொழிந்தார்கள். விஜயராக வரும் மூடுபனியை நீக்கிப் பிரகாசிக்கிற சூரியனை யொத்துப் பிரகாசித்தார். அப்போது அநேக ரிஷீஸ்வரர்கள் வந்து சந்தோஷத்துடன் ஆசீர்வாதஞ் செய்து சூழ்ந்துவர, யுத்தத்துக்குத் தன் பிராணன் போயிருக்க சரீரமாத்திரம் இருக்கிறதுபோலச் சீதாபிராட்டி யிருக்கிற பர்ணசாலைக்கு வந்து சேர்ந்தார். தம்பியும் பிராட்டியாரும் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து ஸ்ரீராமன் திரு வடிகளில் அந்த ராட்சதர்களுடைய ரத்தம் தெரித்திருந்ததை யெல்லாம் தங்கள் கண்ணீரினுல் கழுவினர்கள். ஒரு முகூர்த்தகாலத்தில் மடிந்துபோன ராட்ச தர்களுடைய ரத்தங்கள் திசைகளெல்லாம் ஓடத் தேவர்களெல்லாஞ் சமுத்திரம் போலக் கோஷ்டத்துடனே ஸ்தோத்திரஞ் செய்ய அதிவீரராகிய ஸ்ரீராமரான

வர் வீற்றிருந்தார். இவ்விடத்துச் சமாசாரம் இப்படி யிருந்தது. இராவணன் தங்கையான சூர்ப்பனகி கைகளினால் வயிற்றைப் பிசைந்துகொண்டு மார்பிலே அறைந்துகொண்டு அந்தகார ரூபனான கரனைக் கட்டிக்கொண்டு பெருங் கூச்ச லிட்டு, ரத்தச் சேற்றிலே புரண்டு, என் மனதிலே கொண்ட ஆசை என் மூக் குடனே போக நான் இறந்துபோகாமல், வாய்ப்பேச்சில் உங்கள் வாழ்வையும் ஆயுளையும் பாவியான நான் போக்கினேனே என்று பலபல விதமாகச் சொல்லி அழுது, இந்தச் சமாசாரம் இராவணனுக்குச் சொல்ல வேணுமென்று மரக்கலங்களை கவிழ்க்கிறதற்குப் போகிற சண்டமாருதக் காற்றைப்போல இராட்சதர்களை யெல்லாங் கொல்லுகிற காரியத்துக்குச் சூர்ப்பனகி அதி சீக்கிர மாய் நடந்து லங்கையை நோக்கிப் போனாள்.

காண்வதைப் படலம் முற்றிற்று.

சூர்ப்பனகி சூட்சிப் படலம்

அந்தச் சூர்ப்பனகியானவள் இப்படியாக ராட்சதர் அநேகர் மடிந்து போனதை மறந்தவளாயும், ஸ்ரீ ராமனுடைய திருவழகில் மயங்கிக் கிடந்த பேராசை மனதை வாதிக்கச் சகிக்க மாட்டாதவளாய் அடிக்கடி எதிரே ஸ்ரீ ராமனுடைய ஸ்வரூபந் தன் மனப்பிரமையினாலே உருவெளியாகத் தோன் றப் பார்த்து மயங்கிக்கொண்டு நடந்து சமுத்திரமே அகழியாகப் பெற்றிருக் கிற இலங்கையிலே சேர்ந்து, சீதையினுடைய அழகைச் சொல்லுவோமென் றெண்ணி யோசனை செய்துகொண்டு வருகிறபோது, அந்த ராவணேஸ்வரன் எப்படி யிருந்தானென்றால் உலகங்களில் வியாபித்திருக்கிற சராசரங்களை யெல் லாஞ் சிருஷ்டித்த தாமரைக் கமலவாசனை சதுர்முகப் பிர்ம்மாவுக்கும் செய் கிறதற் கருமையான விஸ்தீரண முண்டானதாய், மறவாமல் செய்து வந்த தர் மத்தைப்போல நினைத்ததுகளை யெல்லாந் தடையின்றிக் கொடுக்கிற தேவதச்ச னை மயன் மனஸ்கரித்துப் புலன்களெல்லாஞ் சேர வைத்துப் பார்த்து மகா சிங்காரமாய் நவரத்தின கசிதமாகச் செய்திருக்கிற சோர்ன மண்டபம் பிரகா சிக்க, அந்த மண்டபத்திலே சாமதரனை ருத்திரனும், பீதாம்பரதரனை விஷ் ணுவும், கமலசம்பவனை பிரம்மாவுமே தண்டனை செய்யத்தக்க பல மில்லாத வர்களா யிருக்க, மற்றவர்களில் இவனுக்கு உயர்ந்தவர்கள் யார் இருக்கிறார் கள்? ஆகையால் இளைத்த யிடையும், பருத்த ஸ்தனமும், பச்சை மூங்கில் போலத் தோள்களும், செவ்வரி பரந்த கண்களை முண்டான ஸ்திரீகளுடைய புலவிப் பிணக்குகளிலேயும் வணங்காத கிரீடங்கள் பத்தும் தகத்தகாயமாய் நிறைந்து பிரகாசிக்க, பூர்வத்திலே நவக்கிரகங்களைப் பிடித்து வந்து லங்கை யில் சிறையிட்டிருந்த போது எல்லாம் ஒன்றாய்க்கூடி யிருந்ததுபோல, அநேக நவரத்தின ஆரங்கள் மார்பிலே பிரகாசிக்க, அஷ்டதிக்கெஜங்களின் தந்தங் களை யொடித்த தோள்க ளிருப்பதும் ஆகாயமட்டும் அளாவிப் பூரித்து, ஒவ் வொரு உதயபர்வதம்போலப் பிரகாசித்திருக்க, அதுகளின்மேலே குண்டலங்

கள் உன்னதமான மகம்மேருவைப் பிரதட்சணம் வருகிற சூரிய மண்டலங்கள் பன்னிரண்டும் இருப்பதாய்ப் பொலிந்திருக்கிறது போல, இருபது காதினு டைய குண்டலங்களும் பிரகாசிக்க, அதிக பராக்கிரமசாலிகளாகிய ராட்ச தர்கள் முதலான அநேக ராஜாக்கள் சாஷ்டாங்கமாகச் சேவிக்கிறபோதெல் லாம் அவர்கள் கிரீடக் கொடிகள் படுகிறதினுலே தேய்ந்து தேய்ந்து பின்னு மதிக பிரகாசமாய் சப்தித்துக்கொண்டு பாதத்திலே வீரகண்டாமணி பிரகா சிக்க, சொர்க்க மத்திய பாதாளமாகிய மூன்று லோகத்திலேயும் அதிபதிகளா யிருக்கிறவர்கள் ஓயாமல் மேன்மேலுங் கொண்டுவந்து குவிக்கிற திரவிய மலை கள்போலத் தேவர்கள் அசுரர்கள் முதலானவர்கள் திக்குகளெல்லாம் நிறைய, நின்று தூவுகிற சுவர்ன புஷ்பங்கள் கும்பல் கும்பலாய் அங்கங்கே பிரகாசிக்க, அநேக விஞ்சைய குமாரர்கள் பிரதாப லங்கேஸ்வரன் இன்ன வேளையில் இன்னபக்கத்தில் பார்ப்பானென்கிறது தெரியாமையால் மனுபயத்துடனே கைகளைப் பிரகாசம் பொருந்திய கிரீடந் தரித்திருக்கிற சிரசிலே வைத்துக் கும்பிட்டபடியே அவர்களிருக்கிற ஸ்தானங்களில் வரிசை பிசகாமல் சூழ்ந் திருக்கிற ஸ்திரீ கூட்டங்களைக் குறித்து ஒரு வார்த்தை பேசினுலும் அது தங்க ளைக் குறித்துப் பேசுகிறதாக நினைத்துப் பயந்து கையும் மனதுங் குவிய வணங்கின தலையுடனே சிங்கங்கள் போலச் சித்தர்கள் ஒரு பக்கத்திலே சேர்ந்திருக்க, மந்திரிகளைப் பார்த்து அவன் ஒரு நன்மையான வார்த்தையாடி னலும் தாங்கள் நடுங்கி என்ன காரியமோவென் றெண்ணி நமஸ்காரம் பண் ணிக்கொண்டு பயப்பிராந்தியுடனே அநேகம் கின்னரர்கள் ஒரு பக்கத்திலே சூழ்ந்திருக்க, திக்கெஜங்களை ஜெயித்துக் கைலாச பர்வதத்தை யெடுத்துத் தேவர்களெல்லாம் அபஜெயப்படத் தேவேந்திரனை ஜெயித்த வெற்றிகளை வீணைகளி லேற்றித் தும்புரு ஒருபக்கத்திலே பாடிக்கொண்டிருக்க, அவன் வித் தியா சாமர்த்தியத்தினுலே வேதங்களைத் திருத்தி அங்கங்கே ஜடைகள் ஏற் படுத்திப் பிரலாபப்படுத்தினபடியே அந்த வேதத்தைப் பண்ணுடனே மகர யாழில் நாரத மகா முனி ஒருபக்கத்திலே பாட, மேகமென்கிற துருத்தியினுலே தேவலோகத்துப் பாரிஜாத புஷ்பத்தேனும் விஞ்சையலோகத்துக்குப் புன் னகைப் புஷ்பத்தினுடையதேனும் பரிமளத்துடனே குளிர்ந்த புதிய நீரிலே கலந் துக்கொண்டு அவ்விடத்தில் நிறைந்திருக்கிற ஸ்திரீகூட்டங்கள் தரித்திருக்கிற வஸ்திரங்களிலேவிழுந்து நனைந்துதோயப்போகிறதென்று பயப்பிராந்தியுடனே வருணதேவன் அந்தப் பரிமளஜலத்தை குறுந்துளிகளாகத் தெளித்துக்கொண் டிருக்க, வாசனைபொருந்திய புஷ்பத்தினுடைய தாதுக்களும் தேனும் அநேக ருடைய நெருக்கத்திலே கிரீடங்கள் ஒன்றோடொன்று தாக்குதலால் உரைப் பட்டுச் சிந்துகிற ரத்தினங்களும் முத்துக்களும் சொர்ணப் பொடிகளும் தரை யிலே விழுவதற்கு முன்னே தூரத்திற் கொண்டுபோய் எறிந்து விட்டு அந்தச் சபையை எந்நேரமும் துடைத்துச் சுத்தி செய்துகொண்டு வாயுதேவன் நிற்க, பிரகாசம் பொருந்திய பிரம்புகள் கையிலே வைத்துக்கொண்டு, சரீரத்திலே நஞ்சுகந் தரித்துக்கொண்டு அநேக ரோயாமல் பொன்னினுலும் வெள்ளியி னுலும் செய்திருக்கிற ஆசனங்களை அங்கங்கே வருகிற இந்திரன் முதலான அவரவர்களுக்குத் தக்கபடியே முறைவழாது கொடுத்துக்கொண்டிருக்க, சூல முதலான ஆயுதங்களை வாங்கி அப்பால் வைத்துவிட்டுக் கட்டியிருக்கிற வஸ்தி

ரத்தினுலே பயபக்தியுடனே வாயை மூடிக்கொண்டு பேரிகை அடிக்கிற போதெல்லாம் காலன் வந்து நாளும் நாழிகையுஞ் சொல்லிக்கொண்டிருக்க, வாசனை பொருந்திய நெய்கள் விட்டுக் கற்பூரம் நிறைத்துப் பஞ்சுமுதலான திரிகளினுலே செந்தாமரைத்தடாகம் புஷ்பித்திருக்கிறதுபோல அக்கினிதேவன் விளக்குகளேற்றி அணையாமல் பார்த்துக்கொண்டிருக்க, கற்பகவிருட்சம் - காமதேனு - நவநிதி - சிந்தாமணி இதுகளெதிரே நின்றுகொண்டு ராவணேஸ்வரன் எங்களுக்கு என்ன கொடுக்கச்சொல்லி ஆக்கியாபிப்பானேவென்று பார்த்துக்கொண்டே யிருந்து ஆக்கினையிட்ட பிரகாரம் கொடுத்துக்கொண்டிருக்க, குண்டல முதலான ஆபரணங்கள் மிகுந்த கிரணங்களை வீசுகிறதினுலே இனி ஏழுலகத்திலும் எட்டுத் திக்கிலும் இராத்திரி யென்கிறது உண்டாகுமாவென் றெண்ணும்படிப் பிரகாசிக்க, கங்கை முதலான தீர்த்த கன்னிகைகள் ஸ்தனபாரங்களினு லிளைத்த யிடை மிகவும் வருந்தித்துவள வலக்கைகளிலே அக்ஷதையும் புஷ்பமும் ஏந்திக்கொண்டு மங்கள கீர்த்தனங்கள் பாடி வாழ்த்திக்கொண்டிருக்க, ஊர்வசி முதலான அநேகம் ரம்பாஸ்திரீகள் மயில்கள் போலப் பரதசாஸ்திரவிதி பிசகாமல் நடனஞ்செய்ய, அதை பார்த்துக்கொண்டு தவமகிமையினுலே பதினலு லோகத்தின் ஆதிபத்தியமும் பெற்றிருக்கிற ராவணேஸ்வரனவன் அனேக சுந்தரமான ஸ்திரீ கூட்டங்களுக்கு நடுவே அதிக சிங்காரமாக யிருந்தான். இப்படி இருக்கிறபோது, தங்கையான சூர்ப்பனகி தலையிலே கையை வைத்துக்கொண்டு ரத்தமொழுகுகிற மூலகளுடனே மூக்கறுபட்டவளாய், காது மில்லாதவளாய், மேக கர்ஜ்ஜிதம் போல மிகுந்த துர்க்கந்தமுண்டான வாயைத் திறந்து அழுது முறையிட்டுக்கொண்டு, செவ்வர்ணம் போல சிவந்து விரிந்த கூந்தலுடனே வடக்கு வாசலில் வந்து பிரவேசித்தாள்.

அப்போது அந்த இலங்காபுரியிலிருக்கிற இராட்சத ஸ்திரீகள் இப்படியாக வந்த சூர்ப்பனகியைக் கண்டு பயந்து, துக்கித்து ஓடி எதிரேபோய், வயிற்றிலே அடித்துக் கொண்டழுது, மிகுந்த துயரத்துடனே அவளைக் கைகளால் தாங்கிக் கொண்டார்கள். திரிலோகாதிபதியான ராவணேஸ்வரனுடைய தங்கையானவள் மூக்கும் அறுபட்டுத் தனியேயும் வந்தால் அவர்கள் மனம் சகிக்க மாட்டுவார்களா? ஏக இரைச்சலாக அழத் தலைப்பட்டார்கள். இராட்சதரும் அவளைப் பார்த்துப் பயந்து கிலேசித்து ஒருத்தருக்கொருத்தர் சொல்லுகிற வார்த்தைகளும் கேளாமல் இரைந்து, உக்கிரமான இடிகள்போலச் சப்தமுண்டாகக் கையோடு கை யறைந்து, தங்கள் கண்களிலே அக்கினிச்சுவாலை எழும்ப வாயை மடித்துக்கொண்டு அநேகர் திகைத்து நின்றார்கள். இந்தப்பழி இந்திரன்மேல் வருமோ? ருத்திரன்மேல் வருமோ? தெரியவில்லையே யென்று அநேகர் கோபாக்கினி மண்டிக் கண்கள் சிவந்து கடூரமாய்ப் பார்த்தார்கள். சிலபேர் தேவேந்திரனென்ன போர் செய்யப்போகிறனு? அவன் ஏவல் செய்கிறவனு யிருக்கிறனே, பின்னே யார் இப்படி செய்திருக்கப் போகிறார்கள்? நம்முடைய ராஜாவானவனுக்குப் பயந்து தானே விஷ்ணு தண்ணீரில்போ யொளித்திருக்கிறன். சிவன் மலையின் மேலேறி ஒளித்துக்கொண் டிருக்கிறனென்றார்கள். சிலபேர், ராவணேஸ்வர

னுக்குச் சத்துருக்கள் இந்த அண்டத்துக்குள்ளே யாராகிலும் இருக்கிறார்களா? ஒருவருமில்லையே ஆகையால் இந்த அண்டத்துக்கு அப்புறத்தார் யாராகிலும் செய்திருக்கவேணு மென்றார்கள். சிலபேர் இதென்ன அதிசயமாயிருக்கிறது. ராவணன் தங்கையென்று சொல்லவே எப்படிப்பட்டவர்களும் அம்மா! தாயே யென்று காலில் விழுந்து வணங்குவார்களே யல்லாமல், ஒருவராகிலும் இப்படிச் செய்யக்கூடுமா? இவள் தானே தன் மூக்கை யறுத்துக்கொண்டவளாக வேணுமென்று சொன்னார்கள். சிலபேர் யார்தானிப்படி இவளைத் துணிந்து அறுத்துத் துரத்தத் தக்கவர்கள்? ஏதாகிலுந் தகாத நடத்தை நடந்து அதினாலே கரன்தானறுத்தானே என்னமோ வென்றார்கள். தேவர்கள் மனது தளர்ந்து பயப்பிராந்தி கொண்டிருக்கிறவர்களாதலால் இப்படி செய்கிறதற்கு அவர்களுக்குப் பயித்தியம் பிடித்ததா? மூன்று லோகத்தையும் ஜெயிக்கத் தக்கவர்கள்தான் இது செய்திருப்பார்கள் என்று சிலபேர் சொன்னார்கள். இனி ஒரு கற்ப காலத்திலே எவர்களாலுஞ் செய்தால் என்னமோ தெரியாது. இந்தக் கற்ப காலத்திலே செய்கிற வீரர் யாரிருக்கிறார்கள்? ஆகிலும் ஆரணியத்திலே தபசு செய்திருக்கிற மகரிஷிகள் யாராகிலுங் கோபஞ் செய்து இப்படியாகச் சபித்தார்களோ வென்று சிலபேர் சொன்னார்கள். அந்தப் பட்டணத்து ராட்சத ஸ்திரீகள் அனைவருங் கைகளை நெறித்துக்கொண்டு பாலிலே புறைகுத்தினதுபோலச் சரீரமெல்லாம் கிலேசமானது தோய்ந்து தலைகொள்ள ஒருவர் முன்னே ஒருவரோடிப் பார்த்தார்கள். மத்தளம் வீணை குழல் சங்கு தாரை இதுகள் சப்தித்துக் கொண்டிருந்த சப்தங்கள் நின்றுபோய் ஒருநாளுமில்லாத அழுகுரல் இலங்கைக்கு அன்றையதின முண்டாயிற்று. சில ஸ்திரீகளிருக்கிற வளமும் வண்டுகளும் மனதும் ஒரு யிடத்திலே கிடக்க, ஓடிவந்து கண்களில் வெள்ளங்களாய் நீர் பெருகிவர அவளைக் கட்டிக்கொண்டழுதார்கள். நாயகன்மேல் கோபமாய்ப் பிணங்கியிருந்த சில ஸ்திரீகள் இந்த வார்த்தை கேட்கவே, மிகுந்த கிலேசத்துடனே அழுதுகொண்டு வந்து, அந்தத் துக்கந்தீர ராஜாவினுடைய தங்கை காலில் விழுந்தார்கள், கமுகமரத்திலே ஊஞ்சல் போட்டு ஆடிப்பாடிக் கொண்டிருந்த ஸ்திரீகள், அந்த ஆடலையும் பாடலையும் வெறுத்து அழுதுக்கொண்டு தெருவிலே வந்தார்கள். சில ஸ்திரீகள் நாயகன் தோள்களை இஷ்டத்துடன் தழுவியிருந்த கைகள் நெகிழ, கண்கள் நீரைப் பொழிய மனம் புழுங்கி அழுதார்கள். சில ஸ்திரீகள் நம்முடைய இராஜா எதிர்ளியில்லாம லிருக்கிறவனல்லவா? இதை அறிந்தால் எப்படி கோபிப்பானே? என்று மழைபோலக் கண்களிலே ஜலம் பெருகப் பூமியிலே புரண்டார்கள். சில ஸ்திரீகள் நித்திரை செய்து கனவு கண்டுகொண்டிருந்தவர்கள் இந்த இரைச்சலிலே திடுக்கிட்டெழுந்திருந்து அதை மறந்து, தலைமயிரவிழ்ந்து சோர, உடுத்த ஆடைகள் நெகிழ, ஸ்தனங்கள் குலுங்க, தூக்கக் கண்ணுடனே அழுதுகொண்டு வந்தார்கள். சிலபேர், கையினாலே கையிலாச பர்வதத்தையெடுத்த மகாபாவனுடைய தங்கைக்கு இப்படியா வருகின்றதென்று தளர்ந்தழுதார்கள். சில ஸ்திரீகள், தங்கள் ஸ்தனங்களில் அறைந்துகொண்டும் தலைமயிரை விரித்துக்கொண்டும் ஓடிவந்து விழுந்தார்கள், சில ஸ்திரீகள், இவளுக்கு வந்த உபத்திரவம் நமக்கெல்லாம் வருமோ? எப்படியோ? ஆனாலும் நம்முடைய இராஜா இருக்கின்றபடியினாலே வாராமல் நின்றதாக வேண்டு

மென்று சொல்லிக்கொண்டு மனது நைந்து கலங்கி அழுதார்கள். இப்படி அந்த இலங்காபுரிக்கு மிகுந்த பயமும் துக்கமும் உண்டாகி நின்றவர் இருந்தவர் சகலரும் ஓடுவதற்கு வழிதேட, ஒரு பர்வதத்தின் அடியிலே வந்து படிகிற காளமேகம்போல. இராவணேஸ்வரனுடைய பாதத்திலே தங்கையான சூர்ப்பனகி அலறி அழுதுகொண்டே வந்து விழுந்து புரண்டாள். அப்போது சகல லோகமும் இருள் மூடிற்று; ஆதிசேஷனும் பயந்து தலைகளை நெளித்தான். சப்தகுல பர்வதமும் அசைந்ததுகள். சூரியன் திகைத்தான். அஷ்டகெஜங்களும் ஓட்ட மெடுத்ததுகள். தேவர்கள் ஒளித்துப் போனார்கள். இராவணேஸ்வரனுக்கு இருபது கண்களும் காலாக்கினிபோல எரிய, புருவங்கள் நெற்றி மட்டும் ஏறிப்போக அதரங்களைப் பல்லினல் அழுந்தக் கடித்து விழித்துப் பார்த்தான். அப்போது புவனங்களெல்லாம் சுழன்றதுகள். தேவர்கள் தாங்கள் செய்கிற காரியங்கள் தங்களுக்குத் தெரியாமல் அயர்ந்து போனார்கள். தெற்குத் திசையிலே யிருக்கின்ற நமன் முதலானவர்களெல்லாம் இன்றைக்கு நமக்கு முடிவுகாலம் வந்ததென்று நடுங்கினர்கள். பூலோகமுதல் சகல லோகத்திலும் இருக்கின்ற சகல ஜீவனும் ஒன்றும் பேசாமல் வாயடங்கி ஸ்தம்பித்தது கள். திரிலோக பயங்கரனான இராவணேஸ்வரன் தன்னுடைய பற்கள் வெளியிலே பிரகாசிக்க உதட்டை மடித்துக் கடித்து குகைபோலே யிருக்கின்ற வாய்களி லெல்லாம் கோபாக்கினியினுடைய புகையெழும்ப, சரீரங்களெல்லாம் மயிர் சிலிர்த்துச் சுருட்டிக்கொள்ள, மீசைகள் துடிக்க, உக்கிரமான பெரு மூச்சுடனே இருபது வச்சிர தந்தங்களும் மின்னல்போலப் பிரகாசிக்க, உரத்ததொனி யுண்டாக அதட்டி இது யார் செய்ததென்று கேட்டான்? அதற்கு சூர்ப்பனகி சொல்லுகிறாள்: அண்ணா! இரண்டுபேர் ஆரணியத்திலே வந்து இராஜ்ஜியபாரஞ் செய்கின்றவர்கள். ஸ்வரூபத்திலே மன்மதன் முதலான எந்த லோகத்தாருஞ் சமானமாகமாட்டாத சுந்தரமுண்டான மனிதர். வாளுருவிக் கொண்டு என்னை யிப்படிச் செய்தார்களென்று சொன்னாள். அதைக்கேட்ட மாத்திரத்திலே திக்குகள் பிரகாசிக்க நகைப்பு வந்தது. உடனே கண்களில் நெருப்புப்பொறி பறக்க அற்ப பலமுண்டான மனிதர் செய்யமாட்டார்களே பயத்தினாலே வாயில் வந்ததைச்சொல்லுகின்றையோ? பயத்தை விட்டு மெய்யாகச் சொல்லென்று இராவணேஸ்வரன் கேட்க, மெய் தான். அண்ணா! மன்மதனுக்குச் சமானமான மேனியும் மேருவின் பலத்தைக் கொடுக்கத்தக்க புஜபலமும் உண்டாயிருப்பவர்கள். இப்போது அவருடைய பலத்தை என்ன சொல்லுவது சப்த லோகத்தாருடைய மதங்களையும் ஒரு கணப்போதிலே வில்லினல் அழித்து விடுவார்கள். முனிசிரேஷ்ட ரானவர்களை அவர்கள் வந்தனஞ் செய்கிறது. பூரண சந்திரனைப்போலே முகமும், தாமரைபுட்பம்போலே நேத்திரமும், கரசரணங்களும் உண்டாயிருப்பவர். அவர்களுக்கு சமானமாய் ஆரைச்சொல்லப் போகின்றேன்? மரவுரியென்னும் வஸ்திரமும், வீரகண்டாமணி தரித்திருக்கும் பாதமும், பூணூல் பிரகாசிக்கும் மார்பும், வேதமும் தனுர்வேதமும் நிரூபமாய் அறிந்திருக்குஞ் சாமர்த்தியமும் பிரகாசமும் மிருதுவுமுண்டான சரீரமுடையவர்களா யிருக்கின்றார்கள். உன்னை ஒரு தாசு மாத்திரமாகிலும் மனதில் மதிப்பவரல்லர். சாத்திரத்தினுடைய பொருள்போல விர்த்திபெற்றிருக்கும் அம்புராத்தூணி தரித்திருப்பவர். ஒரு உயிருடனே

இரண்டு மனிதர் பிரகாசிப்பதுபோலே வீராதிவீரரிலே யொருவருஞ் சமானம் இல்லாதவர்களாய் இருவரிருக்கின்றனர். ஒவ்வொருத்தரே அந்த மும்மூர்த்திக்குச் சமானமானவர். அவர்கள் இடத்திலே ரிஷீஸ்வரர்கள் வந்து இராட்சதருக்குப் பயந்தோமென்று தங்கள் வருத்தங்களைச் சொல்லிக்கொள்ள, அப்போது இராட்சத குலத்தை வேரோடே அடங்கக் கொல்கின்றோ மென்று சொல்லி அவர்களுடன் உறவுகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் யாரென்றால் பூலோகமாளுகிற சக்கரவர்த்தியான தசரத மகாராஜாவினுடைய பிள்ளைகள். அவன் ஆக்கியாபிக்க ஆரணியத்திலே வந்திருக்கின்றார்கள். ஒருவன் பேர் இராமன். ஒருவன் பேர் இலட்சுமணன் என்று சொன்னாள். அப்படி தங்கை சொல்லக்கேட்ட இராவணேசுரன் என்னுடைய அருமந்தத் தங்கை மூக்கை யறுத்தவர்களும் மானிடர். அது அறிந்தும் உயிருடனே கூடி வாழும்படி கையிலே வாளும் வைத்துக்கொண்டு இராவணனை நானும் இன்னும் பிராணனுடனே யிருக்கின்றேன். என் புஜபல பராக்கிரமத்தினாலே திக்கு விஜயஞ் செய்து திரிலோகாதிபத்தியம் சம்பாதித்திருக்கின்றேன். அதற்குச் சாரம் இதுவல்லவா உண்டாயிற்று. லோகங்களிலே யிருக்கும் வீராதி வீரருடைய தலைகளையெல்லாம் அறுத்துக் கீழே தள்ளினபோதும், இந்த மானம் வருமா? என்னிடத்தில் இப்படிப்பட்ட பழியைச் செய்தவனும் இருக்கிறானும். அவனுக்கு இன்னம் சீவனும் இருக்கின்றதாம். என் கையிலே வாளும் இருக்கின்றது. சிவன் கொடுத்த ஆயுதம் இருக்கின்றது. தோள்களும் இருக்கின்றன. நானுமிருக்கின்றேனல்லவா? என்று நினைத்துப் பின்னையும் என்னுடைய மனதே! பழிவந்ததேயென்று நாணித் தியங்கி ஏன் அழுகின்றாய்? உனக்கு என்ன துயரம் இருக்கின்றது? உள்ளே வந்து புகுந்த இந்த பெரிய பழியைச் சுமக்கிறதற்குப் பத்துத் தலை யிருக்கின்றன. அநேகம் தோள்களும் இருக்கின்றனவென்று வாயினாலே சொல்லி நகைத்து, அதிக ஆக்குரோஷத்துடனே இருபது கண்களிலேயும் நெருப்புப் பெறிபறக்க விழித்து, அந்த இரண்டு மனிதரையும் வனத்திலிருந்த நம்முடைய கரன் முதலான இராட்சதர் வாளினாலே கொல்லமாட்டாமற் போனார்களா என்றான். அந்த வார்த்தை கேட்டுச் சூர்ப்பனகி பின்னையும் அழுது, கண்களிலே அருவிபோல நீரானது பெருக வயிற்றிலே யறைந்துகொண்டு, பூமியிலே விழுந்து ஏங்கி, தலையிலே கையை வைத்துக்கொண்டு, நம்முடைய பந்துக்களனைவரும் போய்விட்டார். ஐயோ! அதை என்னவென்று சொல்லுவது! நான்போய்ச் சொன்ன தட்சணமே சேனாசமுத்திரத்துடனே அந்த மனிதர் மேல் யுத்தத்திற்குப் போன கரன் முதலான வீரர்களெல்லாம் புண்டரீகாட்சனான அந்த இராமனென்பவனுடைய ஒரு வில்லினாலே மூன்று நாழிகையிலே தேவலோகம் போய்ச் சேர்ந்தார்களென்று சொன்னாள். அனேகஞ் சேனைகளுடனே தம்பிமார் ஒரு மனுஷன் செய்த யுத்தத்திலே மடிந்துபோனார்கள் என்ற வார்த்தை காதிலே விழுந்து விழாததற்கு முன்னே மேகமானது இடியும் மின்னலும் மழையும் நெருப்பும் கலந்து பொழிகின்றதுபோலே கண்கள் நெருப்புடனே நீரைக்கக்கத் தலைப்பட்டது கள். அப்போது எழும்பின கோபத்திலே அடங்கிய துயரமானது அக்கினியிலே சொரிந்த நெய் அவ்வக்கினியை மிகவும் ஜொலிக்கச் செய்வதுபோல பின்னையும் கோபத்தை அதிகரிக்கச்செய்ய மனது கொதித்து, நீ என்ன குற்றஞ் செய்தாய்?

உன்னை அவர்கள் காதையும் மூக்கையும் அறுக்கவேண்டிய நிமித்தமென்ன வென்று இராவணன்கேட்க, அதற்கு என்னிடத்திலே வந்தகுற்றம் என்னவென் றால், ஒருவராலும் எழுதுகிறதற்குக்கூடாத அதிரூப சௌந்தரியத்தை யுடைய வளாய் அந்த இராமனுடனே கூடத் தாமரைப் புட்பாசனத்தைவிட்டு இலட்சுமி வந்திருக்கின்றாள். அவள் மின்னலினிடத்திலே இடையையும், பச்சை மூங்கிலி னிடத்திலே தோள்களையும், சுவர்ணத்தினிடத்திலே திருமேனியையும் பெற்றுக் கொண்டிருக்கின்றாள். அந்த ஸ்திரீயினாலே வந்ததென்று சொன்னாள். அப் போது அவள் யார் என்று தமையன் கேட்க, ஐயா! தேர்போலே அல்குலும் வச்சிரக்கிண்ணம்போலே ஸ்தனங்களும் உண்டாயினவள். அவள் பாதம் தீண்டும்படிக்கும் பூமிக்குப் பாக்கியம் கிடைத்தது. அவள் பேர் சீதையென்று சொல்லி, அவளுடைய சுந்தரமெல்லாஞ் சொல்லத் தொடங்கினாள்: தேவ லோகத்துக் கற்பகவிருட்சத்தின் கனியினுடைய ருசியும், தமிழ்ப்பாடலினுடைய ருசியும், தேனினுடைய ருசியும், பழுத்ததுபோலே அதிக மதுரமான வசனத் தைக்கொண்டு பாஷிக்கின்ற அந்த ஸ்திரீ ரத்தினமான பெண்ணைத் தேவ கன்னிகையாக வைத்து, கமலாசனியான ஸ்ரீ மகாலட்சுமியை அவளுக்குத் தாதி யாக வைத்துப் பார்த்தாலும் அதற்கே அந்த இலட்சுமி யோக்கியப் படமாட் டாள் என்று சொல்லும்போது அவளழகை நான் சொல்ல ஏற்படுவது புத்தி யில்லாமையே. ஆனாலும் என் புத்திகொண்டமட்டும் என்னால் ஆனது சொல்லு கின்றேன். மேகத்திற்குச் சமானமான அளகமும், மழைக்காலுக்குச் சமான மாய் வடிந்திருக்கும் அந்தக் கூந்தலும், செம்பஞ்சூட்டிச் சிவந்து அந்தப் பஞ்சைப்போலே மிருதுவான பாதமும், பவளக்கரணைகளைப் போலே திரண்ட விரல்களும், அமிர்தத்திலே நடுவே அள்ளிக்கொண்டது போல மதுரமான சொற்களுமுடையவள். திருமுகம் கமலத்தினாளவா யிருந்தாலும், கண்கள் கடலிலேயும் பெரிய துளிகளிலேயும் பெரியதுகளென்று சொல்லத்தக்கதுகள். மன்மதன் சிவனுடைய நெற்றிக் கண்ணாலே வெந்துபோனானென்பது லோகா ரூடமே யல்லாமல் நிச்சயமல்ல. வாசனை பொருந்திய அளகபாரத்தையுடைய அந்தச் சீதையைக் கண்டு, அவளை நிரகிக்கும்படிக்குத் தனக்குச் சாமர்த்திய மில்லாதபடியினாலே அதிக ஆசை யென்னும் வியாதி பிடித்துக்கொண்டு மன தழிந்து சரீரமும் அழிந்துபோனான். தேவலோகத்திலேயும், பூலோகத்திலே யும், நரகலோகத்திலேயும் இருக்கப்பட்ட மாதர்களை நீயும் பார்த்திருக்கின்றாய். கருமானுலோக்களத்திலே காய்ந்த வேலையும், வாளையும் வெற்றிகொண்டிருக்கும் கண்களையுடையவளான அந்த மாது எந்த லோகத்தாளோ? அவளுடைய சுந்தரமான திருமேனியைப் படத்திலெழுத வேண்டுமென்றாலும் யாவராலும் கூடாது. தோளினுடைய அழகைச் சொல்லுவேனோ? பிரகாசம் பொருந்திய திருமுகத்திலே யுலாவுகின்ற கண்களென்னும் வாளையே சொல்லுவேனோ? அல்குலைத்தான் சொல்லுவேனோ? சொல்லத் தொடங்கினால் மனது பின்னும் திகைத்துப்போகின்றதே யல்லாமல், அவயவங்களினுடைய அழகுகளைத் தனித் தனியே சொல்லுவதற்கு என்னாலாகவில்லை. நான் உனக்குச் சொல்லவேண் டியது என்ன? நாளைக்கு நீயே பார்க்கப் போகின்றாய். வில்லுக்குச் சமானம் புருவமென்றாலும், வேலுக்குச் சமானம் கண்களென்றாலும், முத்திற்குச் சமா னம் பல்லென்றாலும், பவளத்திற்குச் சமானம் இதழென்றாலும் சொல்லுக்குச்

சரியாயிருக்குமே யல்லாமல் பொருளுக்குச் சரியாகமாட்டாது. நெல்லுக்குப் புல் சமானமென்று சொல்லுகின்ற தாரதம்மியத்திற்கு ஒன்றுஞ் சரிப்பட மாட்டாது. இந்திரனுக்கு இந்திராணி கிடைத்தாள். சண்முகனுக்குத் தந்தை யான சிவனுக்கு உமையவள் கிடைத்தாள். கமல நேத்திரனை விஷ்ணுவுக்கு லட்சுமி கிடைத்தாள். பிரம்மாவுக்குச் சரஸ்வதி கிடைத்தாள். அத்தன்மை போலே சீதை என்பவள் உனக்குக் கிடைத்தா லப்போது நன்மையெல்லாம் உன்னுடையதே யாகும். அவர்களுக்கு ஒன்றுமில்லை. பெண்சாதியைப் பாகத் திலே ஒருத்தன் வைத்துக்கொண்டான். மார்பிலே ஒருத்தன் வைத்துக்கொண் டான். நாவிலே ஒருத்தன் வைத்துக்கொண்டான். மின்னலை வெற்றிகொண்டு பிரகாசிக்கும் சிற்றிடையுடைய சீதை உனக்குக் கிடைத்தால், அவளை நீ எங்கே வைத்துக்கொண்டு வாழ்வாய்? பஞ்சவர்னக் கிளிபோலே பாஷிக்கும் சீதை எதிர்ப்பட்டால், அவளைக் கண்டும் நீ பிராணனுடன் இருப்பையா? உன் மிதமற்ற செல்வத்தை யெல்லாம் அவளுக்கே கொடுத்துவிடுவாய். உனக்குமாத் திரம் நான் நால்லவளானலும், உன் வீட்டிலிருக்கும் உன்னுடைய ஸ்திரீகளுக் கெல்லாம் கேடுகொண்டு வந்துவிட்டவ ளாகின்றேன். அந்தச் சீதை தேவ லோகத்தார் பூலோகத்தார்களில் ஒரு மாதினுடைய வயிற்றிலும் பிறந்தவளல்ல, சமுத்திரம் இலட்சுமியைப் பெற்றது. அந்தச் சமுத்திரத்தை வெல்லும் நிமித்தம் பூமி யிவளைப்பெற்றது. உலகங்களெல்லாம் மன்மதனுக்கு உத்சவஞ்செய்து பூசிக்க நீ சீதையைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு உன் பலத்தையும் கீர்த்தியையும் லோகத்தாரெல்லாம் கொண்டாடும்படி அந்த இராமனை நான் சேர்ந்திருக்க அவனை யெனக்குக் கொடுத்துவிடு என்று சொல்லி அப்பா லுஞ் சொல்லுகிறாள். ஐயா! சகலத்தையும் கொடுப்பது விதியாகையால், அதிக தபசு பெற்றவர்களுக்கும் வருகின்ற நாளில் வருவது வருமே யல்லாமல் நடுவே வருமா? பத்து முகமும் இருபது கண்ணும் அதிக சுந்தரமான ஸ்வரூப மும் மார்பும் தோள்களிருபதும் படைத்திருப்பதற்கு லப்தமான பாக்கியம் இனி மேல்தான் நீ அடையப்போவது. அப்படிப்பட்ட சீதையை உன்னிடத்தில் கொண்டுவந்து விடவேண்டுமென்று அவளையெடுக்கப் போனேன். அந்த சம யத்தில் இராமன் தம்பி நடுவே வந்து புகுந்து வாளினாலே மூக்கை யறுத்து விட்டான். அப்போது தானே என் வாழ்வு முடிந்துபோயிற்று. உடனே பிராணனை விட்டுக்கொள்ளுவேன். அந்தப் பெண் சமாசாரத்தை உனக்குச் சொல்லிப் பிறகு பிராணனை விட்டுக்கொள்ளுவதாய்த் துணிந்து வந்தே னென்று சொன்னாள். அவ் வார்த்தையைக் கேட்கவே, இராவணனுக்கு கோபமும் கடூரமும் மனக்கொதிப்பென்கிற இவை முதலானதுகளெல்லாம் பாவியினுடைய பாக்கியம்போலே பற்றுவிட்டு, ஒரு தீபம் மற்றொரு தீபத்திலே கலந்தாற்போலே காமமும் அதினாலேவந்த மனோவியாதியும்கூடி அவனுடைய ஜீவனுட னொன்றாய்க் கலந்துகொண்டன. அப்போது கரனையும் மறந்தான். தங்கையினுடைய மூக்கை யறுத்தவர்களுடைய பலத்தையும் மறந்தான். தன் குலத்துக்குவந்த பழியையு மறந்தான். ஈசுவரனையும் ஜெயங்கொண்ட காம னுடைய அன்பினாலே முன்னாள் தான் பெற்ற வரத்தையும் மறந்தான். காதிலே கேட்ட சீதையைமாத்திரம் மறவாமல் தியானித்தான். அந்தச் சீதை யென்னும் பேரும் மனமுமாகிய விரண்டும் ஒன்றாய் நின்றதனால், ஒன்றை


விட்டு ஒன்றை நினைப்பதற்கு வேறேயொரு மனமிருக்கிறதா? அல்லது மறப்பதற்கு வேறேவழிதா னிருக்கிறதா? கற்றறிந்த ஞானமில்லாமற்போனால் காமத்தைக் கடக்கக்கூடுமா? மயிலைப்போலே சாயலுண்டான சீதாலட்சுமியை இராவணன் வஞ்சனைசெய்து கொண்டுவருவதற்கு முன்னே தானே, தன் இதயமென்னுஞ் சிறையிலே வைத்தான். அதனாலே வீர வேலாயுதத்தையுடைய அதிக சாமர்த்தியமுள்ள இராட்சசாதிபதியினுடைய மனது, கோடை வெயிலிலேவைத்த வெண்ணெயைப்போலே மெள்ளமெள்ள வெம்பிக் கரைந்து உருகியது. விதியினுடைய பலத்தினாலேயும், மேல் நடக்கவேண்டிய காரியத்தினாலேயும், கேடுவந்து குறுகியிருக்கின்ற படியினாலேயும், இவனுடைய காம வியாதி புத்தியில்லாதவன் மறைவாகச் செய்த தீமைபோல மேன்மேலும் வளர்ந்தது. சுவர்ணமயமான அந்தச் சீதை மனதிலே புகுந்துகொள்ளும்படி கொண்ட மௌட்டியத்தினாலேயோ? அல்லவென்று அந்த இராட்சதன் தன் னேத்தான் மறைந்திருக்கின்றபடியினாலேயோ? தெரியாது. பயமில்லாமல் மன் மதனெதிரே நின்று, புட்பபாணங்களைப் பிரயோகித்து வருத்தத்தக்க சாமர்த்தியனனன். உலகத்திலே எவர்கள் பலத்தையு மழிப்பதற்குக் காமமேயல்லா மல் வேறே என்னவிருக்கின்றது? அப்போது இராவணேஸ்வரன் சிங்காதனத்தைவிட்டு எழுந்திருந்தான். எழுந்திருந்தவுடனே சகல லோகத்தாரும் ஆசீர்வாதஞ் சொன்னார்கள். தவளச்சங்க முழங்கின. புட்பமாரி எங்கும் பொழிந்தது. சபையிலே யிருந்தவர்களெல்லாம் எழுந்து போனார்கள். சீதையினுடைய ஆசையினாலே மனதழிந்து துக்காக்கிராந்தனாய் சுவர்னகிதமான தன்மாளிகை போய்ச் சேர்ந்து, அவ்விடத்திலே, நவரத்தினத்தினாலே செய்து புட்பத்தினாலே அலங்கரித்திருக்கின்ற சப்ரகோள மஞ்சத்திலே புட்பமெத்தையிலே தன்னுடைய பெண் கூட்டங்களிலே ஒருவரு மில்லாமல் தனியனாக இருந்தான். பாவியான சூர்ப்பனகி வசனப்படிக்குச் சீதையினுடைய சொரூபமானது மனதிலே பிரவேசிக்கக் காமாக்கினி மெள்ளமெள்ளச் சரீரமெல்லாம் பரந்து நிறைந்தது. இவனுக்குத் தள்ளக்கூடாத அந்த ஆசை நூறுநூறு கோடியாய் வளர்ந்தது. புட்பங்களைப் பரப்பி அதன்மேலே வாசனையான குளிர்ந்த பனிநீரைத் தெளித்திருக்கிற சயனமும் கரிந்துபோக, அஷ்டகெஜங்களை ஜெயம்பண்ணின தோள்கள் காமவியாதியாலே மெலிந்து மனது நைந்து ஆவிவேகின்றவனனன். குளிர்ந்த சந்தனம் தளிர்கள் புட்பங்கள் முதலான சீதள வுபசாரங்கள் செய்வதெல்லாம் அக்கினி ஸ்வரூபமான மருந்தினாலே வேதபிடிப்பதுபோலாகிச் சரீரமெல்லாம் மிகுந்த உஷ்ணமாய் வெந்து நெருப்பூதும் தருத்திபோலே பெருமூச்சுவிட்டு மயங்கினன். மனது ஸ்திரமில்லாமல் ஆசையென்னும் வியாதி தலைகொண்டு, அந்தமாதைக் கண்ணினாலே பார்க்க வேண்டுமென்னும் இச்சை மேன்மேலும் மூள மிகவும் நொந்து கிலேசித்தான். திக்கெஜங்களுடைய தந்தங்க ளொடியும்படி வென்ற அவனுடைய கொடியதான மார்பிலே மரத்தைக் குடைகின்ற வண்டுபோல மன்மத பாணங்கள் குடைந்து துளைக்க நொந்து மெலிந்தான். சரக்கொன்றைக் காய்க்கு நிகரான அளகபாரத்துடனே அலங்காரமான ஒரு புட்பக்கொம்பு தன் மனதிலே புகுந்துகொண்டு அங்கேதானே யிருக்கக்கண்டது உண்டென்று சொல்லிக் கொண்டு, துயரத்திலே அழுந்தி மிகவும் வருந்தி, மன்மத பாணம்போல்

மல்லிகைப் புட்பவாசனையுடனே தென்றல்வர அதைக் கோபித்துச் சீறி, அது சகிக்காமல் அங்கே யிருந் தெழுந்திருந்து மிகவும் சிந்தாக்கிராந்தனாய் இன்னபடி செய்வோமென்பதும் தோன்றாமல் இரங்கிக்கொண்டு, கோடி மாதர்கள் இருபக்கத்திலும் தீபங்கள் வரிசையாய் ஏந்திவர ஒரு சிங்கார வனத்திற் போய், அதன் நடுவே நவரத்தினத்தினால் செய்யப்பட்டு ஆகாயமட்டும் உயரமும் விஸ்தீரணமு முள்ளதான சித்திர மண்டபத் திலே பால்போல வைத்திருக்குஞ் சயனத்திலே சேர்ந்தான். அந்தச்சோலை யிலே யிருக்கின்ற புட்பாதி விருட்சங்களிலே பலா மாணிக்கம் போலவும், வாழை மரகதம் போலவும், தேமா வச்சிரம் போலவும், வேங்கை பொன்போல வும், கோங்கு பத்மராகம் போலவும், கமுகு நீலம் போலவும், சாலம், குருவிந்தம் போலவும், தெங்கு வெள்ளி போலவும், புன்னகம் பளிங்குபோலவும், பாதிரி பவளம் போலவும், விளங்கித் தோன்ற, அந்த மரத்தினுடைய புட்பங்களின் நிறங்களும் நட்சத்திரங்களின் காந்திகளும் வேற்றுமை தெரியாமல் பிரகாசித் ததுகள். அந்தச் சோலையிலே புட்பங்களிலேயும் கனிகளிலேயும் இருக்கும் தேனை ரசங்களை உண்ண வந்த அன்னங்களும், மாதர்களுடைய வார்த்தை யைப்போல பேசுகின்ற கிளிகளும், குயில்களும், வண்டுகளும், பின்னுங் கர்ண மிர்தமாக இனிய வோசையைத் தருகிற சகலமும், இலங்காதிபதியான ராவ ணேஸ்வரன் கோபஞ் செய்வானென்று பயந்து வாயை மூடிக்கொண்டு ஊமை கள்போல் இருந்ததுகள். அந்தச் சமயத்திலே குளிர்ந்த வாடைக் காற்று வந்து மன்மத பாணமுருவி யிருக்கிற புண்களில் நுழையவே, மனது கலங்கி விம்மி, இப்போது என்ன ருதுவென்று கேட்டான். அப்படி ராவணேஸ்வரன் கேட்கவே, அந்தக் குளிர்ந்த ஏமந்தருது பயந்து நடுங்கி ஓடிப்போய்விட்டது. அப்பால் வசந்தருது வந்தது. மரமுதலான சகல ஜீவனும் மலைகளுங் குளிரும் படியிருக்கிற அந்தப் பனிக்காலத்திலேதானே எரிந்து கொண்டிருக்கிற இரா வணனுக்கு வசந்தகாலஞ்செய்த உபத்திரவத்தைச் சொல்ல வேணுமோ? அந்த ஆசை யென்னும் விஷத்தை யுண்டவர்களுக்கு ஆற்றுவதற்கு மருந்து முண்டா? இன்ப துன்ப மிரண்டும் மனதுக்குள்ளேதானே யிருந்தல்லவா உண்டாகின்றதுகள்? எட்டுதிக்கையும் தன் மனத்தாசை வேதனைசெய்து சுடும்படி அந்த வசந்தகாலமும் உபத்திரவஞ் செய்யவே, இதுவேண்டாம். அந்த ஏமந்தருதுவைத்தானே சீக்கிரமாகக் கொண்டு வாருங்களென்று சொன் னான். அப்படியே அந்தக்காலம் வரவே, தோள்களெல்லாம் அக்கினி ஜ்வாலையாய்க் கொதித்ததுகள். குளிர்ந்த பனி சுடுமா? இது பனிக்கால மல்ல. வசந்தகாலந்தானே இன்னமிருக்கிறதென்று கோபஞ்செய்ய, சுவாமி! தங்களாக்கினை தப்பி நடப்போமாவென்று பயந்து அந்த ருது சொல்லிக் கொள்ள, இப்போது ஒரு ருதுவும் வேண்டாம். எல்லாவற்றையும் தூரத்தி விடுங்களென்று ஆக்கியாபித்தான். அப்படியே ருதுக்களெல்லாம் யோகியைப் போலப் பற்றற்று ஓடிப்போகவே, உலகமெல்லாஞ் சுவர்க்கம்போலக் குளிர்ச்சி யும் வெப்பமுமில்லாமல் ஒரு திட்டமாய்ப் பிரகாசித்தது. அப்படி யிருந்தும் அந்த இராக்ஷதாதிபதிக்குக் காமாக்கினியானது அறிவினை லடங்கவேணுமே யல்லாமல் பனிக்கால முதலாகிய காலங்களினால் அடங்குமா? குளிர்ந்தமேகம் தாமரை யிதழ்கள் வாசனையுண்டான ஸ்ரீ கந்தம் இளந்தளிர்கள் முத்துக்கள்

முதலானதுகளுடைய குளிர்ச்சியெல்லாம் அதிக காங்கையைக் கொடுக்கின்ற படியினாலே, சரீரம் பின்னையு மதிகமாய் வெந்து புழுங்கின. மனது நொந்து சந்திரனைப் பிடித்து வாருங்களடா வென்றான். அக்கணமே தூதர்களோடி, இதுவரைக்கும் இலங்கைக்கு நேராக உயரப் போகாமல் நடுங்கிப் பயந்து பதுங்கிக்கொண்டு ஒதுங்கிப்போகிற சந்திரனை அழைத்து, நீ பயப்படாதே வா. எஜமான் உத்தரவாயிருக்கின்றதென்று சொல்ல, அப்போது பயத்தை விட்டுச் சந்திரன் உதயஞ்செய்தான். அச்சந்திரனுடைய கிரணமானது ராவணனுக்கு எப்படியிருந்ததென்றால் ஒருவனை முன்பு அவனால் உபத்திரவப்பட்ட வொருவன் மனதிலே வைரம் வைத்துக்கொண்டிருந்து சமயம் பார்த்து வந்து மிகுந்த உபத்திரவம் பண்ணுகின்றதுபோலவும், உயிரை வாங்குவதற்கு அந்தியகாலத்தில் வருகின்ற யமனைப்போலவு மிருந்தது. அப்படி யெங்கெங்கும் கிரணங்கள் பிரகாசிக்க, லோகங்களெல்லாம் துதிசெய்ய, ஆகாயமார்க்கத்திலே வருகின்ற பூரணச்சந்தின் பின்னையும் எப்படியிருந்ததென்றால்? இராவணனுடைய பிராணன்மேலே காலம் பார்த்து ஏவிவிட்ட விஷ்ணு சக்கரம் போலவும் இருந்தது. குளிர்ச்சியைக் கொடுக்க வேண்டுமென்று பாற்கடலில் அமிர்தத்தை யெல்லாம் வாரி யுண்டு பரந்து பிரகாசிக்கின்ற சந்திரனுடைய கிரணம், அந்த இராவணனுக்கு நீர்போல அக்கினியிலே யுருகியிருக்கின்ற வெள்ளியை அள்ளி வீசினதுபோலாகச் சரீரமெல்லாம் வெந்தது. ஜானகியினுடைய திருவழகைக் காதினாலே கேட்டு மெய்கலங்கிச் சோர்ந்து கிடக்கிற அந்த ராட்சதனை, நிலவானது ஒருநாளும் ஒருவருக்குந் தோற்றாத வீரனான அவன் சத்திராதியினுடைய கீர்த்திபோல மிகவும் சுட்டது. அப்போது இராவணன் கோபித்துக்கொண்டு, நான் சந்திரனை அழைத்து வாருங்களென்றால். நெருப்பையும் விஷத்தையும் பூசிக்கொண்டு உக்கிரமமாயிருக்கிற சூரியனை யாரடா அழைத்து வந்தீர்களென்று சொன்னான். அதற்குத் தூதர்கள் பயந்து, சுவாமி! தாங்கள் ஆக்கியாபித்த சந்திரனை அழைத்து வந்தோமே யல்லாமல் தங்களாக்கினை தப்பிச் சூரியனையும் அழைத்து வருவோமா? சூரியனால் தோர்மேலல்லவோ வருவான். இதோ விமானத்தின்மேல் சந்திரன் வந்திருக்கின்றானே பாருமென்று சொன்னார், அப்படிச் சொல்லவே, ஸ்திரீகள்மேல் ஆசைகொண்டவர்கள் படுகின்ற வருத்தமான காமக்குணத்தை ஒருநாளு மறியாத ராவணன் பார்த்து மனது கொதித்து புத்தியினாலே சந்திரன்தானென்று நிதானம் பண்ணிக்கொண்டு சொல்லுகிறான். சந்திரா! நீ சரீரந்தேய்ந்து வெளுத்திருக்கிறாய். உள்ளங் கறுத்திருக்கிறாய். இருந்த இடத்திலிராமல் திரிந்து எரிந்து காய்ந்துக்கொண்டிருக்கிறாய். என்னைப்போல நீயும் அந்தச் சீதையைக்கண்டு வந்தவர்கள் சொல்லக் கேட்டாயோ? மன்மதபாணத்தைப் பறித்தெரிகிறவர்களில்லாமல் நீயிருக்கிறேனே. என்னுடைய பிராணனை ரட்சிக்கிறவர்களாரென்றும் என்னுடைய பிராணனுக்குக் கூற்றுவன்போல வந்திருக்கிற ஜானகியினுடைய முகத்துக்கு நீ தோற்றிருக்கிறாய். அதனாலே உள்ளங் கரிந்து இளைத்துக் காயத்தொடங்கினாய். சத்துருவினுடைய பாக்கியத்தைக் குறித்துப் பொறாமல் மனதழிந்தால் வெற்றி உண்டாமா என்றும் இவ்விதமாகச் சொல்லி, இந்தச் சந்திரனை ராத்திரியுடனே கூடத்துரத்திவிட்டு, முன்போலப் பகலையும் சூரியனையும் வரச் சொல்லுங்களென்று ஆக்யா

பிக்க, ஒரு நொடிப்பொழுதிலே சூரியனும் பகலும் வந்தன. பிராமணர்கள் யாகாக்கினியில் நெய்யைச் சொரிதலினுல் அந்த அக்கினி சொலிப்பதுபோலச் சூரியகிரணம் பாயவே, தாமரைகள் புஷ்பித்ததுகள். முன்னே அந்த ராத்திரியிலே மலர்ந்து வீறுபெற்றிருந்த செவ்வல்லிப் புஷ்பங்களெல்லாம், அற்பர்களுக்கு வீணாய் வந்த பாக்கியத்தினுலே அவர்கள் மனச்செருக்கை யடைந்து உடனே அந்தப் பாக்கியத்தை யிழந்து மனந்திகைத்து ஒளிமழுங்கிப்போகிறது போல அழகிழந்து முகங் கருகிப்போயின. அப்போது சந்திரன் ஒளிமழுங்கிச் சரீரம் நடுங்க ஆகாயமார்க்கமாய்ச் சாய்ந்து, ராத்திரியென்கிற பெண் சாதி பின்னே தொடர்ந்துவர, ராஜாவின் ஆக்கினையினுலே நிலையிழந்து போய்விடுகிற மந்திரிபோலே ஒதுங்கிப் போய்விட்டான். அகஸ்மீகமாய் நாழிகைமுடியச் செல்லாததற்கு முன்னே சூரியன் புறப்பட்டு எங்கும் பிரகாசிக்கவே, புருஷனுடன் கோபித்துப் பிணங்கியிருந்த ஸ்திரீகள் பிணக்கு தீர்ந்து கூடுகிறதற்கு ராத்திரிப்பொழுது எப்போதும்போலில்லாமையால் அதிக விசனமானுர்கள். சில ஸ்திரீகள் புருஷனுடைய தோளைத் தழுவிக்கொண்டு உறங்கினபடியே யிருந்தார்கள். புருஷனைப் பிரிந்த ஸ்திரீகள் ராத்திரி சீக்கிரமாய்ப் போய்விட்டபடியினுலே நடுக்கம் நீங்கிச் சந்தோஷமானுர்கள். அநேகர் சையோகத்திற்கு இராத்திரி யிராமற்போன படியினுலே, நீலோற்பல புஷ்பங்களிலே தேனெழுகிறதுபோலக் கண்களிலே ஜலம்பெருகத் துயரத்துடனே கிலேசித்தார்கள். வண்டுகளெல்லாம் பகற்காலமானது தெரியாமல் புஷ்பங்கள் நிறைந்திருக்கிற தடாகங்களிலே உறங்கினபடியே கிடந்ததுகள். அன்னப் பட்சிகளுங் கள் குடித்தவர்கள்போல மயங்கி உறங்கிக் கிடந்ததுகள். தீபங்களெல்லாம் புருஷனைப் பிரிந்த ஸ்திரீகள்போலப் பிரகாசமழுங்கியதுகள். விடியும் நேரத்திலே மலர்கிற புஷ்பங்களெல்லாம் மலராமல், நித்திரை செய்கிற ஸ்திரீகள் கண்கள்போல குவிந்தபடியே யிருந்ததுகள். நிஜமான பகலில்லாததினுலே சகலரும் கண்விழியாமல் பிச்சையிட வேணுமென்கிற நினைவுமில்லாமல் உறங்குகிறபடியினுலே, லோபிகள் வீட்டு வாசல்களைப் போல அவர்கள் மனைக்கதவுகளும் சாத்தினபடியே யிருந்ததுகள். ராத்திரியின்னம் வெகுநாழிகை யிருக்குமென்று பயந்திருந்த சக்ரவாளப் பட்சிகளெல்லாம் சூரியனைக் காணவே, சிறையிலே யிருந்தவர்கள் வெளிப்பட்டதுபோல மனங்களித்ததுகள். உதயகாலத்துச் சூரியனுக்கல்லாமல் நடுவேவந்த சூரியனுக்கு மலராத புஷ்பங்களிடத்திலே வண்டுகள் பாடிக்கொண்டு சுழலுகிறது லோபருடைய வாசலிலே சங்கீத வித்வான்களாகிய பாணர் பாடுகிறதுபோலிருந்தது. அநேகம் ஸ்திரீகள் மெய்ப்பொருளை யறியாதவர்கள் அஞ்ஞானத்தினுலே ஈஷணத்திரயமான [மண்ணுசை பெண்ணுசை பொன்னுசைகளிலே மயங்குகிறதுபோல, ஜன்னல்வழியே சூரியகிரணம் பிரவேசித்துச் சரீரத்தில் உறைத்தும் பகலென்று தெரியாமல் நித்திரையுடனே மயங்கிக் கிடந்தார்கள், இராவணேஸ்வரனுடைய ஆக்கினையினுலே சூரியன் வந்தது தெரியாமல், நாழிகை தெரிந்து மணியடிக்கிறவர்கள் திகைத்ததல்லாமல் கூவுகிற கோழிகளுந் திகைத்ததுகள். இப்படி உலகங்களெல்லாம் மயங்க இரவணனவன் சூரியனைப் பார்த்து, மனதைக்கூட நெருப்பைப்போலச் சுடுகிறபடியினுலே இது அந்தச் சந்திரன்தானென்று சீறினன். அப்போது தூதர் நடுங்கி, சுவாமி!

படம் நெ. 8.



மாரீசன் வதை.

சந்திரனல்ல சூரியன்தான். பச்சைக்குதிரை கட்டியிருக்கிற தேரின்மேலே பிரகாசிக்கிறான் பாரும். எப்போதும் சூரியன் சூடாயிருப்பன். சந்திரன் குளிர்ச்சியா யிருப்பன் என்று சொன்னார்கள். அப்போது பல் சிகரங்களை யுடைத்தான நீலகிரிபோலச் சரீரத்தையுடைய இராவணன் ஆலகால விஷம் போலக் கோபித்து, இந்தச் சூரியனைத் துரத்திச் சமுத்திரத்தை இரைய வேண்டாமென்று நிறுத்திவிட்டு இந்தக்ஷணமே பாலசந்திரனைச் சீக்கிரமா யழைத்துக்கொண்டு வாருங்களென்று ஆக்யாபித்தான். அந்த வார்த்தையைக் கேட்டு அந்தக்ஷணமே பூரணமாயிருந்த சந்திரன் இளம்பிறையாய் வந்து முளைத்தான். இப்படி ராவணனுக்குத் தவத்தினாலே வேண்டியதுகளெல்லாம் வேண்டியபடியே உண்டாக்குகிறபடியினாலே, எப்போதும் அறிவுள்ளவன் தவஞ் செய்ய வேண்டுமேயல்லாமல் மற்றவன் செய்யலாமா? இப்படி மேற்கே முளைத்த சந்திரனைக் கண்டு குணக்கேடனான ராவணன் இது வடவாமுகாக்கினி யாகவேணும். அல்லவென்றால் ஆதிசேஷனுடைய விஷப் பல்லாக வேணும். அல்லவென்றால் என்மேல் கோபித்துக்கொண்டு வருகிற மாலைப் பொழுது உருக்கொண்டு வந்தவளாக வேணுமென்று மனது கலங்கி, இதுவுமொரு விஷமாமென்று நினைத்துத்தானே கறுத்த விஷத்தை கண்டத்திலே யொளித்த சிவன் இதை ஜடாமகுடத்திலே தரித்துக் கொண்டார். இத்தனைச் சொற்ப ரூபமாகிய பிறையாயிருந்தாலும், செய்கிற கடூரத்திலே பூரணச் சந்திரனுக்கு குறைந்து செய்ய வில்லையே! பாம்பு பெரிதென்றுஞ் சிறிதென்றும் விஷம் மிகுந்துங் குறைந்து மிருக்குமா? அப்படி போலத்தான் இது வென்று சொல்லிக் கிலேசித்தான். பின்பு சுத்த இருளின் குணத்தையும் அறிவோமென்று நினைத்து, இந்தப்பிறைக்கு அந்தச் சூரியனே குளிர்ந்தவன். இந்தப்பிறை யென்னைத்தானே இப்படிச் சுடுமானால், சப்த லோகங்களிலேயும் இருக்கிறவர்கள் இதன்முன்னே ஜீவனுடனே எப்படிப் பிழைத்திருக்கப் போகிறார்களென்று கோபித்துக்கொண்டு துரத்திவிடவே, அந்தகாரமான இருட்குழம்பு எங்கும் மூடிக்கொண்டது. அநேக ஆயுதங்களினாலே வெட்டிப் போர்த்தாலும் விண்டு நீங்காததாய் கைகளினாலே திரட்டித் தூண்களாகவும், உருட்டு மாத்திரைகளாகவும் பண்ணும்படியாய், ஞானப்பிரகாச முண்டாகாமலும் குருடுபோலக் கண்ணோட்ட மில்லாமலு மிருக்கின்ற கிருபையற்ற நெஞ்சுபோலக் கறுத்திருண்டது. இப்படியாக வந்த அந்தகாரத்தை ராவணன் பார்த்து, இது இருளல்ல. உலகத்திலே சகல ஜீவனும் மடிந்துபோமென்று மனதிலே நினையாமல் அந்தச் சிவன் முன்னாளிலே தானுண்ட விஷத்தை கக்கினானென்று சொன்னான். இப்படி சொன்ன ராவணன் பின்னையும் சமுத்திரத் தண்டையில்வந்து, ஒருவன் ஆண்மையினால் விழுங்கின ஆலகாலமாகிய விஷத்தைப்போலக் கொஞ்சமானதல்ல. நான் நன்றாகத் தெரிந்துக்கொண்டேன். பூலோகம் தேவலோகம் முதலான சகலத்தையும் நாவினாலே நக்குகிற பிரளய காலாக்கினியானது விஷத்தை யுண்டு கறுத்தது இதுவென்று சொன்னான். பின்னையும் என் மயக்கத்துக்குள்ளே வந்த மயக்கமோ? அல்லது புத்திதான் வேறே யுண்டாயிற்றோ? தெரியவில்லை. இப்படிக் குழம்பியிருக்கிற இந்த இருளிலே இரண்டு குண்டலமும் கறுத்த கூந்தலுமுண்டான ஒரு சந்திரன் கண்ணுக்குக் காண்கிறதென்றும், ஒப்பில்லாத ஒரு பவ

ளக்கொடியானது இருண்ட மழையையும் இரண்டு செவ்விள நீரையும் ஒரு சந்தி ரனையும் தாங்கிக்கொண்டு, எரிந்தழுகிற என் முன்னே ஒரு தீபப்பிரகாசம் போலத் தோன்றுகின்றதே! என்ன செய்வேன்? அந்த அனுபவக் குறிப்பி னலே மெள்ள மெள்ளப் பெண்வடிவ மாயிற்றென்றும், சகல லோகத்து ஸ்திரீ களையுங் கண்டிருக்கிறேன். இந்தப் பெண்போல் எங்குங் கண்டதில்லை. இது வேறையல்ல. என் தங்கை சொன்ன ஸ்திரீ ரத்தினந்தானென்றும் சொல்லிக் கொண்டு அந்தக் காமவியாதி சகிக்கமாட்டாதவனாகி, அந்த உருவெளியைக் கண்டு திகைத்து, கண்ணினாலே கண்டு வந்தவளுக்கு இது நன்றாய்த் தெரியு மாதலால் அவளுக்குக் காண்பிப்போ மென்றெண்ணி, தங்கையை அழைத்து வாருங்களடா வென்றான். அந்தக்ஷணம் தூதர்போ யழைக்கவே, இராக்ஷத குலத்தையெல்லாம் வேரறுக்கக் காமாக்கினியுண்டாய் அதினாலே மூக்கு - முலை- காது மூன்றும் போக்கடித்துக்கொண்டவள் அதி சீக்கிரமாய் வந்தாள்.

அப்படி வந்து நின்ற தங்கையைப் பார்த்து, இதோபார் மையுடனே பிரகாசிக்கிற வாளைப்போலக் கண்ணும், மயிலைப்போலச் சாயலுமாக வந்து என்னெதிரே நிற்கிறாள். இவள்தானு நீ சொன்ன சீதையென்று கேட்டான். அதற்குச் செந்தாமரைப் புஷ்பம்போன்ற கண்ணுடனும், கனிபோலச் சிவந்த வாயுடனும், ஆஜானுபாகுவுடனும், விசால மார்புடனும், நீலபர்வதம்போல எதிரே நிற்கிற இவன்தான் ராமன்; ராமனென்று சொன்னாள். அதுகேட்டு ராவணன் நான் கண்டது ஸ்திரீரூபம். பூலோகத்திலே யில்லாத புருஷரூப மென்று சொல்லுகிறாய். அநேக மாயைகள் கற்றிருக்கிற நம்மைப் பூலோ கத்து மனிதர் மாயை செய்யலாயிற் றல்லவாவென்றான். அதற்குச் சூர்ப்பனகி மனது பின்னையொன்றிலேயும் வியாபியாமல் அவ்விடத்திலே தானே நீ ஆசை வைத்திருக்கிறபடியினாலே, நீ பார்க்கிற இடமெல்லாம் அவள் ரூபமாக உனக்குக் காண்கின்றது. இப்படி தான் மனதிலே ஆசை மிகுந்தவர்களுக்குக் காண் கின்றதென்று சொன்னாள். அதற்கு ராவணன் நான்தான். அப்படியானால் நீ ராமனை இப்படியாகக் காண்கிற வயணமென்னவென்று கேட்டான் என்று அவன் என்னை இப்படிச் செய்தானே? அன்றுமுதல் நானும் அவனை மறக்கிற தில்லையென்று சொன்னாள். நீ சொல்லுகிறது மெய்தான். அதினாலேதான் என் சரீரமும் பிராணனும் நைந்து வேகின்றன. இந்தத் துயரத்துக்கு முடி வைக்காணேனென்று ராவணன் சொல்லினன். அதற்கு சூர்ப்பனகி, அண்ணா! மூன்றுலோகத்துக்கும் அதிபதியாகிய நீர் இப்படி கிலேசப்படுவா னேன்? சீக்கிரத்திற்போய் அந்தப் பெண்ணை எடுத்து வந்து விடென்று சொன்னாள். இப்படிச் சொல்லிச் சூர்ப்பனகி தன்னிடத்துக்குப் போனாள். அப்போது ராவணன் ஒன்றும் உணராதவனாய் மதிமயங்கி பெருமூச்சு விட்டுச் சோர்ந்து, தேகஸ்மரணையில்லாமல், இன்னம் சிறிது ஆயுசு இருக்கிறபடியி னலே ஜீவன்மாத்திரம் போகாது ஒரு குறையாக மற்ற எல்லா வருத்தங்க ளுடனே பிராணவஸ்தையும் பட்டான். உடனே செத்தவ னெழுந்திருந் தது போல எழுந்திருந்து, மயங்கிப் புத்தி தெளிந்தவனாய்ச் சமீபத்திலே யிருக்கிறவர்களைப் பார்த்து, நீரொழுகிக் கொண்டே யிருக்கிற சந்திர காந்தக் கல்லினால் ஒரு மண்டபஞ் செய்யச் சொல்லுங்க ளென்று ஆக்

யாபித்தான். அந்த க்ஷணமே தெய்வத் தச்சனை மயன் வந்து பார்த்து, மனதினுல் சிருஷ்டித்த தல்லாமல் கையினுலுஞ் செய்து ஆயிரந் தூண்கள் நிறுத்தி, மஹா உன்னதமாகப் பிரம்மாவும் பார்த்து நாணும்படி ஒரு மண்டபஞ் செய்தான்.

அமிர்தநீர் துளித்துக்கொண் டிருக்கிறதாகவும், சந்திரனைப் பார்க்கிலும் அதிக பிரகாசமும் குளிர்ச்சியு முண்டாகவும், மேலுங் கீழும் சந்திரகாந்தத்தைப் பரப்பி புஷ்ப வாசனைகளுடனே இளந்தென்றல் புகுந்துவரும்படி சாளரங்களும் அமைத்து குளிர்ந்த பாரிஜாதவனங்களும் அதிக சிங்காரமாகச் செய்ய, அப்போது ராவணன் சர்வாபரண பூஷிதர்களாகிய தெய்வ கன்னிகைகள் ஆயிரம்பேர் ரத்தின தீபங்கள் ஏந்த மாணிக்கவிமான மூடனுய் அந்த மண்டபத்தைப் பார்க்கவந்தான். நவரத்தின காந்திகளும் கற்பகவிருட்ச நிழலும் பிரகாசிக்க அந்த மண்டபத்திலே ராவணன் வரவே, கூடவந்த ஸ்திரீகளுடைய முகங்களை அநேக சந்திரனென் றெண்ணி அந்தகாரமான இருள் ஓடிப்போய்விட்டது. மெய் - வாய் - கண் - மூக்கு - செவி என்கிற ஐம்பொறிகளில் ஒன்றினுலாவது ஸ்பரிசம் - சப்தம் - ரூபம் - ரசம் - கந்தமென்று சொல்லப்பட்ட ஐம்புலன்களில் ஒன்றையும் அறியாமல் மனம் திகைத்திருக்கிற ராவணன், மறுஜென்மத்திலே ஆசை தொடர்ந்து வரும்படி பின்னையொரு சரீரத்திலே பிரவேசிப்பதுபோல அந்த மண்டபத்திலே போய்ப் புகுந்து, அதில் பால் சமுத்திரமானது அமிர்தத்துடனே வந்திருக்கிறதுபோல் பிரகாசிக்கிற குளிர்ந்த புஷ்பமெத்தையிலே சேர்ந்திருந்தான். அப்போது ஸ்திரீகளுடைய அளகபார வாசனையிலே நீந்திக்கொண்டு, அந்தச் சோலையிலே மன்மதன் விருந்துசெய்ய அமிர்தம்போல் குளிர்ச்சியுண்டாகி, ஒருவருக்குப் பிராணன் போனலும் திரும்பக் கொடுக்கத்தக்க நேர்த்தியான தென்றல் வந்தது. அது சாளரத்து வழியாய் வரவே, ரத்தம்போல் கண்கள் சிவந்து நெருப்புப் பறக்கப் பார்த்து பொல்லாத பாம்பு சீறிக்கொண்டு வரக் கண்டவனைப்போல் சரீரங் கொதித்து விம்மிச் சமீபத்திலிருக்கிறவர்களை அழைத்துச் சொல்லுகிறான். ஒரு கிணற்றுத் தண்ணீர் உலகத்தை எல்லாம் முழுகடிக்கிறதுபோல, தேவர்களிலொருவனை வாயு எனக்குப் பொல்லாங்கு செய்யவு மாயிற்றல்லவா? என் னுத்தரவில்லாமல் இவனெப்படி வந்தான்? காவலிருந்தவர்களைப் பிடித்து வாருங்களென்று சொன்னன்.

அப்படியே யோடி அவர்களைப் பிடித்துவந்து எதிரே விடவே, அவர்களைப் பயப்பிராந்தி யுண்டாகும்படி பார்த்து, தென்றலுக்கு வழிவிட்டவர்கள் நீங்கள் தானவென்று கேட்டான். அதற்கவர்கள் சுவாமி! தேவரீர் சிங்கார வனங்களிலே வந்திருக்கிறபோது அவனுக்கு மாத்திரம் தடை யில்லையென்று முன்னுள் தேவரீர் ஆக்யாபித்திருந்தபடியினுலே, தடை செய்யாமல் விட்டுவிட்டோமென்று சொன்னர்கள். அதுகேட்டுத் தேவர்கள் தங்கள் இச்சையாய் வந்து அவர்கள் மனதின்படி செய்கிறதானுல் என்னுடைய ஆக்கினையும் பலமும் என்ன இருக்கின்றது? பல திசைகளிலுமிருக்கிற காற்றுக்களை எல்லாம் இந்த க்ஷணமேயோடிப் பிடித்து வந்து சிறை யிடுங்களென்று சொன்னன்.

அப்படிச் சொன்ன இராவணன் உடனே வாயுவை வீணுகக் கோபித்துக் கொள்வதில் காரியமில்லை. அந்தச் சீதையை நான் கண்ணினுலேயாகிலும் காணுமற்போனுல் கூற்றுவனும் இந்தக்ஷணமே என்னிடத்தில் வருவான். இதற்கேதாகிலும் யோசனை பண்ணவேணும். மந்திரிகளை அழையுங்களடா வென்ருன். அந்தக்ஷணமே ஏவல் செய்கிறவர்கள் ஓடி யழைக்கவே அநேக மந்திரிகள் ரதத்தின் மேலும், குதிரைகளின் மேலும், யானைகளின்மேலும், பல்லக்குகளின் மேலுமாய்த் தேவர்களும் என்னமோவென்று பயந்தோடும் படி வந்தார்கள். அப்படி மந்திரிகளுடனே கூட யோசனை செய்து, செய்கிற காரியந் தெரியாதவனுய் மனம் திகைத்து, அந்தக்ஷணம் ஆகாயமார்க்கமாய்ப் போகிற ஒரு விமானத்தின்மே லேறிக்கொண்டு, பஞ்சேந்திரியங்களையும் அடக் கித் தபசு செய்துகொண்டிருக்கிற மாரீசனிருக்கிற வனத்துக்குத் தனித்துப் போய்ச் சேர்ந்தான்.

சூர்ப்பனகை சூட்சுமப் படலம் முற்றிற்று.

மாரீசன் வதைப் படலம்

இப்படி வரானின்ற திரிலோக நாதனை ராவணனை அவ்விடத்திலிருந்த மாரீசன் கண்டு, திடுக்கிட் டெழுந்திருந்து, மனதிலே பயத்துடனேயும் கிலேசத் துடனேயும் எதிர்கொண்டு அழைத்துவந்து, கரியமலைக்கு ஒப்பாகிய சரீரத்தை யுடைய அவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்கள் செய்து, அவனுடைய பூர ணச்சந்திரனைப்போலப் பிரகாசமாகிய திருமுகத்தைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிருன் : வாசனை பொருந்திய குளிர்ந்த புஷ்பமுண்டான கற்பக விரு க்ஷத்தினிழலிலே தேவாதிபத்தியஞ் செய்கிற தேவேந்திரனுக்கும் எமதர்மராஜ னுக்கும் பயப்பிராந்தி யுண்டாகும்படி ராஜரீகஞ் செய்கிற நீ, இந்த வனத்திலே புல்லினுலே கட்டியிருக்கிற என்னுடைய குடிசைக்கு எளியவன்போல வந்த வயணமென்ன ? சொல்லென்று மயங்கின மனதுடனே மாரீசன் கேட்க, ராவ ணன் சொல்லுகிருன் : நான் திக்கெஜங்களுக்கும் அசக்கியமான யுத்தஞ் செய்து, பிற்பாடு தயவுகூர்ந்து அதுகளுக்குப் பிராணனிருக்கும்படிச்செய்தேன். அப்படிப்பட்ட நான் இப்போது சோர்ந்து போனேன். என்னுடைய பிரதாப மும் பெருமையும் கீர்த்தியும் போய்விட்டன. அதை என் வாயினுல் உமக்கு என்னவென்று சொல்லப் போகிறேன் ? அது தேவர்களுக்கும் நாம் தலை சாய்க்கும்படி நமக்கே வெட்கக்கேடாயிருக்கும். மனுஷருக்குத் தைரியமுண் டாகி அவர்கள் கைவாளினுலே உன் மருமகளுக்கு மூக்கும் போயிற்று என்கிற சொல் வந்தால், அது என் குலத்துக்கும் உன் குலத்துக்கும் இழிவாகுமல்லவா ? அதுமாத்திரமா ? இந்த வார்த்தையைக் கேட்டு யுத்தத்துக்கு அநேகம் சேனை சமுத்திரத்துடனேயும் மிகுந்த கோபத்துடனேயும் போன உன் மருமக்கள்மா ரான கரன் - தூஷணன் - திரிசிரன் மூவரும் அந்த மனுஷரை ஜெயிக்கமாட் டாமல் ஒருவன் பாணத்தினுலேயே அத்தனைபேரும் ஒரு முகூர்த்தத்திலே மடிந்து போனுர்கள்.

ஆகையினுலே என் மனது காலாக்கினி ஸ்வரூபமாய் வெந்துலர்ந்து போனேன். இந்த மானத் தாழ்வுக்குப் பிராணனைவிட்டுக்கொள்ளவேணும். அவர்கள் நமக்குச் சமானமானவர்க ளல்லாதபடியினுலே போர் செய்கிறதற்கு மனது சம்மதிக்கவில்லை. அந்த மனிதரிடத்தில் ஒரு ஸ்திரீ யிருக்கிறாள். அவளை யெடுத்துக்கொண்டு வருகிறதற்கு யோசனைசெய்து, உன்னைத் துணையாக அழைத்துக்கொண்டுபோய் இந்த அபவாதத்தை உன்னுலே தீர்த்துக்கொள்ள இவ்விடத்துக்கு வந்தேனென்று சொன்னுன். இந்த வார்த்தையெல்லாம் ராவணன் சொல்லாததற்கு முன்னே நாராசத்தைக் காய்ச்சிச் சொருகினுற் போலாகி சீ சீ என்று வாயினுலே சொல்லி, கையினுலே தன் காதை மூடிக் கொண்டு மயங்கி, அச்சத்தை விட்டுக் கோபத்துடனே சொல்லுகிறான் : ராஜாவே! நீ உன்னுடைய வாழ்வை முடித்துக்கொண்டாய். புத்தி கெட்டுப் போனுய். இந்த நினைவு உன்னுலே வந்ததல்ல. ஊழ்வினையினுலே வந்த தென்று நன்றாகத் தெரிந்துகொண்டேன். உன் செவிக்கு ஆகாததாய் இருந் தாலும் உனக் குறுதியாகிய சில வார்த்தைகள் சொல்லுகிறேன் கேள். பூர் வத்திலே நீ உன் கைகளையும் தலைகளையும் அறுத்தறுத்து அக்கினியிலே விட்டு அநேககாலம் பசியுடனே யிருந்து தபசுசெய்து இந்தச் சாம்பிராச்சியம் சம்பாதித்தாய். இதை யிழந்துபோனுல் பின்னும் பெறலாமா? விவேகத்தி னுலே தபசுசெய்து பாக்கிய மடைந்தாய். அவிவேகத்தினுலே நீதானே அழிக் கிறாய். வேதங்களை யெல்லாம் அறிந்து நீ தர்மத்தினுல் சம்பாதித்த பாக்கியத் தைப் பாவத்தினுலே யிழந்து போகலாமா? நம்மிடத்தில் அன்புகொண்டிருக் கிறவருடைய நாட்டைப் பறித்துக்கொண்டவரும், நீதிதப்பிக் குடிகளிடத்தில் இறைவாங்கிக் கொண்டவரும், ஒருவனுடைய ஸ்திரீயை அபகரித்தவரும் என்று சொல்லப்பட்ட இவர்களையெல்லாந் தர்மந்தானே சீறி அறுத்துவிடும். கண்ட கரா யிருந்தவரில் எவர் சுகப்பட்டார்? தேவாதிபதியான இந்திரன் அகலிகை யினுலே என்ன பாடுபட்டான்? அவனைப்போலே எத்தனைபேர் என்னென்ன கேடுகெட்டார்கள்? மகா லட்சுமிக்குச் சமானமாகிய எத்தனை ஸ்திரீகள் உன் பாக்கியத்துக்கு ஹானியாய் உன்வீட்டிலிருக்கிறார்கள்? அப்படியிருக்க, இந்த அகிர்த்தியத்தையுஞ் செய்தாயேயாகில் பாவமும் பழியுமல்லாமல் வேறென்றும் வாராதுவாராது. அந்த ராமனென்கிறவனை யாரென்று நீ நினைத்திருக்கின்றாய்? இந்த லோகங்களையெல்லாம் பெற்ற ஸ்ரீ மகா விஷ்ணுவே அவன். அவனுடைய கையிலிருக்கிற பாணங்கள் மஹாரிஷிகள் சாபத்துக்குச் சமானமா யிருக்கின் றனகள். அதுகளினுல் உன் தம்பிமாரையும் உங்கள் குலத்தையும் முடித்துவிடு வான். உன் தம்பி கரன் உன்னிலும் அதிக பலமும் சேனையு முள்ளவனு யிருந்தான். அவனையே ஒரு வில்லினுல் கொன்றனென்றால் மற்றவர்களைக் கொல்லுகிறதைக் குறித்து ஒருத்தர் சொல்லவேணுமா? மகாவீரனான விரா தன் முதலானவர்களெல்லாம் அவனம்பினுலே மடிந்துபோனர்கள். இனி நம் முடையவர்களிலே யார் பிழைத்திருக்கப் போகிறார்கள்? இதை என் மனதிலே நினைக்குந்தோறும் வருத்தப்பட்டுக்கொண்டே யிருக்கிறேன். அப்படியிருக்க, நீ இந்த வார்த்தையைச் சொல்லிப் பின்னும் அதிக துக்கமுண்டாக்கினுய். மிகுந்த பலசாலிகளெல்லாம் அந்த இராமன் கையினுலே மாண்டுபோனர்கள். நீயும் அப்படி மாண்டு போகின்ற காரியம் செய்யவேண்டாம். நான் நூறுதரம்

சொன்னதாக எண்ணி அது செய்யவேண்டாம். செய்தால் பிழைக்க விதியுண்டாக மாட்டாது. தர்மந்தப்பி அரசாண்டவர்களெல்லாம் அதோகதியாய்ப் போனார்கள். என் தம்பிக்கும் என் தாயாருக்கும் ஒரு அம்புவிட்ட கோதண்ட ராமனுக்கும் அவன் தம்பிக்கும் என்னுடைய ஆண்மையடங்கி என் மனது இன்னம் நடுங்குகின்றதே! சராசரங்களெல்லாம் நிலையற்று அழிந்துபோமென்கிற மெய்மையை யறிந்த நீ இப்படிப்பட்ட பொல்லாங்கு ஒன்றும் நினையாமல் என் வார்த்தையைக் கேட்டு என்றைக்குஞ் சாம்ராச்சியத்துடனே சுகமாயிருமென்று சொன்னன். அப்போது, இராவணன் கங்காதரனை சிவனை கைலாச பர்வதத்துடனே ஒரு கையினல் தூக்கியெடுத்த என்னுடைய தோளாண்மை ஒரு அற்ப மனிதனுக்கு இளைக்கிறதாகச் சொன்னயல்லவாவென்று கண்களில் நெருப்புப்பொறி பறக்க, புருவம் நெற்றிமேலேற விழித்துப் பார்த்து, நீ நடந்த காரியத்தையும் நினைத்துப் பார்க்கவில்லை. என்னுடைய புஜபலத்தையும் பயமில்லாமல் இகழ்ச்சி செய்தாய். இதற்கு உன்னை ஆக்கினை செய்யவேண்டும். ஆயினும் இந்த ஒரு பிழை பொறுத்தேன். என்று இராவணன் சொன்னன்.

இப்படி தன்னைக் கோபித்துக்கொண்ட கடூரனை மாரீசன் பார்த்துப் பின்னுங் கோபஞ் செய்வானென்று அஞ்சாமல், நீ இந்தக் கோபம் என் மேலே செய்ததல்ல. உன்மேலும் உன் குலத்தின்மேலும் கோபஞ் செய்தாய். நீ யொருமலை யெடுத்ததை யல்லவோ அதிசயமாகச் சொல்லுகிறாய்? அதை யொருபொருளாக நினைக்கவேண்டாம். சிவன் கையிலே யிருந்த வில் அந்த மகம்மேரு பர்வதமல்லவோ? அந்தப் பர்வதத்தை ஒடித்த சத்தம் அண்டங்களெல்லாம் கேட்டு நடுங்கிற்று. அது மாத்திரமா? அதிலும் அதிக பலமாயுயர்ந்திருக்கிற வில்லென்ற மலையை நீ இதை வளையென்று மகா பராக்கிரமசாலியான பரசுராமன் கொண்டுவந்து கொடுக்க, அந்த மலையையும் வாங்கித் துவளும்படி அவன் வளைக்கவில்லையா? நீ யாதொன்றும் அறியாய். சொல்வதுங் கேளாய். இராமன் யுத்தத்தைக் குறித்துத் தும்பைமாலை தரியாததற்கு முன்னே உன்னுயிர் கொள்ளையாய்ப் போகும். அந்த ராமனுடைய பெண்சாதி சீதையை ஸ்திரீ சொரூபமென்று எண்ணுதே. அவள் தான் இராட்சதர்கள் செய்த தீவினையென்று அறிந்து பிழை. உன் குலத்தோடே சுகமாயிருப்பாய். மனதில் அந்த ஆசையை வைத்திருந்தபோதிலும் இனி நினையாமல் விட்டுவிடு. என்னுடைய உயிர் அஞ்சி நடுங்குகின்றது. எப்படிப்பட்டவனுக்கும் கூடவிருக்கிறவன் விஷத்தைக் குடிக்கிறேனென்றால் அது நல்லதுதான் என்று சொல்லுவானா? அப்படிச் சொல்லுகிறதுதான் அவனுக்கு நலமா? ஈசன் முதலான சகல தேவர்களுடைய லோகங்களையும் ஒரு இமைப்பொழுதிலே ஜயிக்கத்தக்கவையாய், விசுவாமித்திரர் கொடுத்த திவ்விய ஆயுதங்கள் மிதமில்லாமல் அந்த ராமனிடத்தில் அவன் சொன்னபடி கேட்டுக் கொண்டிருக்கின்றன. ஆயிரங் கைகளையுடைய அதிசூரபராக்கிரமமுண்டான கார்த்தவீரியனை மழுவாயுதத்தினலே ஒரு நொடிப்பொழுதிலே பிராணனை வாங்கின பரசுராமனுடைய பலத்தை யெல்லாம் வில்லுடனே கிரகித்துக்கொண்ட அந்த இராமனுக்கெதிரே நாமா நிற்கமாட்டுவோம்? காமவிஷந் தலைக்கேறி, அந்த வேதனையினலே சரீரமும் புத்தியும் இளைத்து, இந்தக் கெட்ட வார்த்தை சொன்னாய்.

இது மிகுந்த பொல்லாங்கு வருகிற காரியம். உனக்கு நான் அம்மானும் வயதில் மூத்தவனுமானபடியினாலே இதைச் சொன்னேன். இந்தக் காரியத்தை விட்டுவிடு என்று மாரீசன் சொன்னான். இவ்வளவு வார்த்தைகளையும் எவ்வளவோ யோசனைசெய்து யுக்தமாய்ச் சொன்ன மாரீசனைப் பார்த்து, ராட்சதாதிபதி அதிக கோபத்துடனே ஒரு வார்த்தை சொல்லுகிறான்: ஓ மாமா! உங்கள் தாயைக் கொன்றவனுக்கு நீ பயந்து கிலிபிடித்துப் பேசுகிறாய். இப்படிப்பட்ட பயஸ்தனான நீ யாருக்குத்தான் உதவியாகப் போகிறாய்? திக்கெஜங்களைத் தந்தங்கள் முறிந்து ஓடியொளிக்கும்படி ஜெயம்செய்து, தேவர்களெல்லாம் தங்கள் தங்கள் நிலைகெட்டுப்போய் எளியவர்களாகச் செய்து, எமலோகத்திலேயும் புகை யெழும்பும்படி செய்து, ஏகசக்கரமாகத் திரிலோகங்களையும் ஆள்கிற என்னைத் தசரதன் பிள்ளைகள் ஜெயஞ்செய்வார்களென்று சொல்லுகிற உன் புத்தி நல்ல புத்தி. மூன்று லோகத்திற்கும் நாயகமான ஆதிபத்தியம் சம்பாதித்தேன். எனக்குச் சத்துருக்கள் அகப்பட்டால் அதற்கு மிஞ்சின தன்மை வேறே யிருக்கின்றதா? நீ நான் சொன்னபடி நடந்துகொள்ள வேண்டுமே யல்லாமல், எனக்கு மந்திராலோசனைகள் சொல்லத்தக்க யோக்கியம் உனக்குண்டோ? இனி நீ என் சொல்லை மறுத்து உத்தரஞ் சொன்னால் இந்த வாளினாலே வெட்டி எறிந்து என்னுடைய மனக்குறையை முடித்துக்கொள்வேனே யல்லாமல் விடத்தக்கதில்லை. நீ இன்னஞ் சிலநாள் இந்தப் பூமியிலே ஜீவனுடனே யிருப்பவனானால் எனக்கு வெறுப்புண்டாக்குகிற இவ்வார்த்தையை விட்டு என் மனதின்படி நடந்துகொள்ளென்று இராவணேஸ்வரன் சொல்லினான். அதைக்கேட்ட மாரீசன் அடங்கி, யாராயினும் உலகத்திலே செருக்கிய நெஞ்சுண்டானவர்கள் உடனே கெட்டுப் போவார்களென்கிறது தத்துவமல்லவோ? ஆகையால் மனச்செருக்கினாலே பிராணனைப் போக்கடித்துக் கொள்ளுகின்றவர்களை எவராலே நிறுத்தக்கூடும்? என்று மனதில் எண்ணிக்கொண்டு, உருக்கிய செம்பு நீர்போலக் கொதிப்பாய்ச் சொல்லுகிறான். ஐயா! உனக்கு உறுதியாக வேண்டுமென்று இத்தனையுஞ் சொன்னேனே யல்லாமல் என் பிராணன் போய்விடுமென்று பயத்தினாலே சொல்லவில்லை. ஒருவனுக்கு நாசகாலம் வந்து நேரிட்டால், அப்போது கல்லதும் பொல்லாததாய்த்தான் போம். நீ அற்பகுணத்தை யுடையவன், நான் செய்யவேண்டியதுதான் என்ன? அதைச் சொல்லென்றான். இப்படி மாரீசன் சொல்லவே இராவணன் எழுந்திருந்து, அவனை மார்புடனே யிறுகக் கட்டிக்கொண்டு கோபத்தை விட்டுச் சந்தோஷமாகி, ஓ பர்வதம் போலக் குவிந்த தோள்களையுடைய என் மாமா! மன்மதனுடைய அக்கினி ஸ்வரூபமாய் உஷ்ணிக்கின்ற அஸ்திரத்தினாலே சாவதைப் பார்க்கிலும் அந்த ராமனுடைய அம்பினாலே சாவது புகழல்லவா? குளிர்ந்த தென்றற் காற்றையும் எனக்குப் பகையாக்கிய அந்தச் சீதையை எனக்குக் கொடுவென்று சொன்னான். இப்படி இராவணன் சொல்ல மாரீசன் சொல்லுகிறான்: பூர்வத்தில் இரண்டு இராட்சதர்களுடனே கூடத் தண்டகாரணியத்திலே நான் பிரவேசித்தபோது அவனுடைய சரங்கள் வந்துபாய, கூடவந்த தம்பி முதலான தோழர்கள் உருண்டு போக அதைக்கண்டு பயந்து என் மானமழிய ஓடிவந்த நான் செய்யுங் காரியமென்னவிருக்கின்றது? நீ சொல்லென்று மாரீசன் கேட்க, ஐயா! உன்னு

டைய தாயின் பிராணன் வாங்கினவனைக் கொல்லுவதற்கு நானிருக்கிறேன். நீ வஞ்சனையாக மாயை செய்தால், அந்தச் சமயத்திலே சீதையை எடுத்துவரலாம் என்று இராட்சதாதிபதியான இராவணன் சொன்னன். அதற்கு அந்த இராமனுடைய தேவியை வஞ்சனை செய்து கொண்டு வருவது நமக்குக் கௌரவக் குறைவாகும். ஆகையால் சேனை சமுத்திரத்துடனே போய் அவனை ஜெயித்து அப்போது எடுத்துவந்தால் உனக்குப் பிரதிஷ்டையுண்டாகுமென்று சொன்னன். அவ்வார்த்தையைக் கேட்டு இராவணன் நகைத்து அதிசயித்து, மனிதரைக் கொல்லுவதற்குச் சேனையும் வேண்டுமா? அந்த மனிதரைக் கொன்றால் சீதை தனியா யிருப்பவளல்ல. அவர்களுடனேகூட இறந்துபோவாள் ஆகையினாலே உபாயமாய் மாயஞ்செய்து கொண்டுவர வேண்டுமென்று சொன்னன். அந்தச் சீதாதேவியைத் தீண்டாததற்கு முன்னமே இராமனுடைய பாணம் வந்து இவன் தலையை அறுத்து விடுமென்று இவனுக்குத் தெரியப்படும்படி புத்திசொன்ன எனக்கும் இந்தக்கேடு வந்ததல்லவா? விதியை வென்றவர்கள் யாரிருக்கிறார்கள்? இவன் சொன்னபடியே கேட்டுத் தீர்வோமென்று மனந் துணிந்து எண்ணிக்கொண்டு, நான் என்ன மாயஞ் செய்யவேண்டியது? சொன்னால் அப்படியே செய்கிறேனென்று மாரீசன் சொல்ல, பொன்மானுக ரூபமெடுத்துப் போய் அச்சீதைக்கு ஆசையை யுண்டாக்கென்று இராவணன் சொல்ல, அவ்வண்ணமே செய்கிறேனென்று சம்மதித்து மாரீசன் போனன். மின்னலைப்போலே பிரகாசிக்கும் வாளாயுதம் தரித்திருக்கும் இராவணனும் வேறொரு வழியாய்ப் போனன். முன்னாலிலே அவர்களுடைய வில்லினுடைய பலத்தை அறிந்திருக்கிறபடியினாலே தானாய் ஒரு மாயஞ் செய்யாமல் பொன்மானுக ரூபமெடுத்துப் போவேனென்று சொன்ன இராவணன் பலத்தினாலே போன மாரீசன் தன் சுற்றத்தானாகிய இராவணனுடைய கொடுமையை நினைத்துத் துக்கித்தும், இராம லட்சுமணர்களான வீரர்களுடைய பலத்தைக் குறித்து அஞ்சியும், நஞ்சுகலந்த குளங்களிலே யிருக்கும் மீனைப்போல நெஞ்சுத்தடுமாறி, அந்த ராமனிடத்திலே பூர்வத்தில் ஒருதரமும், நடுவே விசுவாமித்திரருடைய யாகத்திலே ஒருதரமும் யுத்தஞ்செய்து சாகாமல் இருந்தவன் மூன்றாந் தரத்திலே முடிந்துபோகிறவனை யெத்தனித்து இரகுகுலோத்தமன் எழுந்தருளியிருக்கும் வனத்திலே போய் தன் சரீரகாந்தியானது பூமியையும் ஆகாசத்தையும் மிகவும் பிரகாசிக்கச் செய்வதான பொன்மானுக ரூபமெடுத்துச் சீதாலட்சுமியைத் தேடிக்கொண்டு நடந்தான். அப்போது இந்த உசிதமான மாயமானைக்கண்டு ஆரணியத்திலிருக்கும் கலைமான் முதலானதுகளெல்லாம் அதிக ஆசையுடனே வஞ்சனையாய் மனதிலே நேசமில்லாமலிருக்கும் விலைமாதர்களான தாசிகளிடத்திலே ஆசை வைத்துச் சேருகிறவர்களைப் போல மாயமென்பதை யறியாமல் இனமென்றெண்ணிக் கூடத் தொடர்ந்து வந்ததுகள். இப்படி அதிக அழகுடனே வருகிற பெண்மானைப் புட்பங்கள் பறிக்கிற நிமித்தமாய் வெளியே வந்து வனசிங்காரங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் வைதேகியான சீதாபிராட்டி, மிகுந்த துயரப்படுவதற்கு ஏகியமா யிருக்கிறவர்கள் சொர்ப்பனத்திலே ஒருநாளு மறியாத விபரீதத்தைக் கண்டதுபோல முன்பு ஒருவரும் படாதபாடு இனிமேற் படப்போகிறவர்களாகையால் தன் கண்ணிலே கண்டாள். இப்படிக் காணவே, இது வஞ்சனைமானென் றறியாதவளாய் அத

னிடத்திலே மிகுந்த அபேட்சை கொண்டாள். இனிமேல் அதுமூலமாக இராவணன் சாகவும், அதனாலே பூமியெல்லாம் தர்மபரிபாலனமாகவும் இருப்பதனால், பாலசந்திரனைப்போல நெற்றியையுடைய ஜானகிக்கு அந்தப் பொன் மானின் மேல் ஆசை முற்றப்பெருகி, எனக்கு இதைப் பிடித்துக்கொடுக்க வேண்டுமென்று தன்னுயகரிடத்தில் சொல்லுவோமென் றெண்ணிக்கொண்டு, துரிதமாய் நடந்து தன் பிராணநாதனான விஜயராகவனுக்குச் சமீபத்திலே வந்து, சுவாமி! சுவர்ணமயமான சரீரமுடையதாய், ஆகாயமெல்லாம் பிரகாசிக்கக் காதுகளும் கால்களும் மாணிக்கமயமாய் ஒருமான் வந்திருக்கிறக்கிறது. தாங்கள் வந்து அதைப் பாருங்களென்று கைகளினாலே தொழுது அதிக பிரியத்துடனே சொன்னாள். அப்போது இப்படிப்பட்ட மான் பூமியிலேயுண்டா வென்று கொஞ்சமாயினுஞ் சித்தத்திலே யெண்ணாமல், ஜானகியினுடைய வார்த்தையைக் கொண்டு, பிர்மதேவனுக்குப் பிதாவான ஸ்ரீ ராமர் அந்த மானினிடத்திலே ஆசையானார். அதையறிந்து இலட்சுமணர், சுவாமி! காயம் சுவர்ணமயமாயும், மற்றக் கால் செவி வாய் முதலான அவயவங்களெல்லாம் இரத்தின மயமாயும், உயிருடனே பாய்கிற மான் எங்கேயாயினும் உண்டா? அல்லவென்று உண்டாகி வந்தால் இராட்சதருடைய மாயமென்று எண்ணவேண்டுமே யல்லாமல் மெய்யான மானென்று எண்ணலாமா? என் மனதுக்கு ஐயமாயிருக்கிறதென்று சொன்னார். அதற்கு ஸ்ரீராமர் தம்பி! பூலோகத்திலேயிருக்கிற ஜீவஜெந்துக்களையெல்லாம் யார் அறிந்திருக்கிறார்கள்? பல்லாயிரங்கோடி பரந்திருக்கிறபடியினாலே இல்லாததில்லை. நீ யென்னவென்று யோசனை செய்கிறாய்? சரீரமெல்லாம் பொற்பிரகாசமான அன்னங்கள் உற்பத்தியாயிருந்ததை அறியாயா? இப்படியும் இருக்குமென்று இலட்சுமணருடனே சொல்லினார் அப்போது சீதை சுவாமி! நீர் பேசிக்கொண்டிருக்கிறதற்குள்ளே அது எங்கேயாயினும் ஓடி மறைந்து போய்விடுமென்று மனதில் வருந்திச் சொன்னாள். சீதையின் மனதையறிந்து இரகுராமர் அது எங்கே காண்பியென்று நடந்தார். இலட்சுமணர் தம்முடைய மனதிற்குச் சமாதானமில்லாமையால் அவர் பின்னே தொடர்ந்தார். அச்சயமத்தில் தள்ளப்படாத வினை இதுதானென் றெண்ணும்படி ஆகஸ்மீகமாய்ப் பொன்மான் எதிரேவந்தது. அது வந்து நின்று இவர்களைப் பார்த்து மருளமருள விழித்தது. அப்படி பார்த்த மானைப் பார்த்து, ஸ்ரீ ராமர் தம்முடைய அதிகோசரமான அறிவினாலே ஒன்றும் யோசனைசெய்து பாராமல் இது மாயமானல்ல. ஸ்வபாவமான நல்ல மான்தானென்று சொன்னார். அவர் திருப்பாற்கடலிலே சேஷசயனத்தை விட்டு நீங்கி அவதாரஞ்செய்தது தேவர்கள் செய்த பாக்கியமல்லவா? அது பழுதாய்ப்போகுமா? ஆகையினாலே அந்த மானை நோக்கி மிகவும் சந்தோஷமாகி, தம்பி! இதற்குச் சமானம் எதைச் சொல்லலாம்? நீ பார். இது தனக்குத்தானே சமானமல்லாமல் இதற்கு வேறே உபமான முண்டாயிருப்பதாய்ச் சொல்லக்கூடாது. நெருங்கியிருக்கிற பச்சைப் புல்லின்மேல் ஆணிமுத்துக்கள் இறைந்திருப்பது போலே பிரகாசமான பசும்பொன் மேனியிலே வெள்ளைப்புள்ளி பரவியிருக்கிறது. இதனுடைய நேர்த்தியான வடிவத்தைக் கண்டு மனமுருகிப் பறக்கிற பக்ஷிகளும், ஊர்கிற ஜெந்துக்கள் முதலானவையும், விளக்கைக்கண்ட விட்டில்போல மயங்கி ஓடி வருகின்றதுகள். இதைக் கண்

டால் ஸ்திரீகளிலாவது புருஷர்களிலாவது யார்தான் இச்சைப்படாமல் இருப் பார்கள் ? என்று ஸ்ரீ ராமன் சொல்லினர். இது வஞ்சனையென்று சித்தமாய் மனதில் அறிந்துகொண்டு, இலட்சுமணர் சுவாமி ! எப்படியானலும் ஆகின்றது. நாம் வந்தோம். அதிசயமான பொன் மானைக் கண்டோம்.

இனி இவ்விடத்தில் நமக்கு என்ன காரியம் ? நம்முடைய ஸ்தானம் போய்ச் சேருவதே உத்தமமென்று சொன்னர். அப்படி சொல்லும்போது சீதை ஸ்ரீராமரைப்பார்த்து, சுவாமி ! இந்த மானை எனக்குப் பிடித்துக்கொடுத் தால் அடியேன் பட்டணத்தில் விட்டுவந்த கிளி முதலானவைகளை மறந்து சந் தோஷமாய் விளையாடிக்கொண்டிருப்பேன் என்று சொன்னள். இவ்வித மாகச் சொல்லவே, ஸ்ரீ ராமர் அதைப் பிடிப்பதற்குப் பிரயத்தனப் பட்டார். அப்போது தெளிவுண்டான தம்பி, இரட்சக கர்த்தாவான தன்னுடைய தமை யனைப் பார்த்து, சுவாமி ! இது இராட்சதர்களுடைய வஞ்சனையே யல்லது வேறல்ல. அதுவும் தங்களுக்குப் பின்பு தெரியுமென்று சொன்னர். அதற்கு ஜெகந்நாதனான ஸ்ரீ ராமர் தம்பி ! இந்தப் பொன்மான் நீ சொல்லுகிறபடி மாயமானலல் நம்முடைய பாணத்தாலே மடிந்துபோகின்றது. மடிந்தால் இராட்சதர்களைக் கொல்லுகிறோ மென்றுதான் நாம் ஒரு சங்கல்பம் செய்துக் கொண்டிருக்கிறோமே. அந்தக்கடன் கழித்தவர்களுமாகின்றோம். மெய்யான மானலல் பிடித்துக்கொள்ளுகிறோம். இப்படி இரண்டுவிதமும் நல்லதாயிருக் கப் பொல்லாததென்று ஏன் சொல்லுகிறயென்று தேவர்களுடைய துன்பங் களை யெல்லாம் நிவர்த்தி செய்கிற நிமித்தம் மாயாவதாரஞ் செய்திருக்கிற தேவராஜன் சொல்லவே, அதற்கு இராமாநுஜரான இலட்சுமணர் சொல்லு கின்றர். இந்த மானை முன்னே காட்டிப் பின்னே யாரிருக்கின்றர்களோ ? அதுவும் அறியோம். இப்படி மாயஞ் செய்துக்கொண்டு ராட்சதர்கள் வர வேண்டிய காரியம் என்னவென்றுந் தெரியவில்லை. அறியாத காரியத்திலே பிரவேசிக்கலாகாது. அதிலும் பெரியவர்களெல்லாம் சாத்திரத்திலே தள்ளி யிருக்கிற இந்த வேட்டைத் தொழிலைச் செய்வது கீர்த்தியுடையதல்ல. ஆத லால் இதை நிறுத்துவதே யுக்தம். கீர்த்தியும் அதுவே என்று சொல்லினர். இராட்சதர்கள் நம்மிடத்திலே பகையா யிருக்கிறர்களென்றும், அன்றியும் அனேகரென்றும், மாயத்தில் மிகுந்தவர்களென்றும் எண்ணிப் பூண்ட விர தத்தை விட்டுவிட்டால் அனைவருக்கும் நகைப்பாய் இராதா ? ஆதலால் இந்தக் காரியஞ் செய்வதே மகா உத்தமமென்று சதுர்முகப் பிர்மாவினுடைய தந்தை யான மாயக்கூத்தன் சொன்னன். அதற்குச் சுவாமி ! அனாயசமான காரிய மானலும் எண்ணிப் பார்த்துச் செய்வது யுக்தமல்லவா ? அடியேன் இந்த மானின் பிறகே தொடர்ந்துபோய் இந்த மானை நமக்கு எதிரேவிட்டுப் பின்னே யிருப்பவர்கள் அநேகரானலும் என் வில்லில் அஸ்திரங்கள் தொடுத்து எல்லா ரையும் சங்கரித்து இந்த மானையுங் கொன்றுவிட்டு வருகிறேன். அதல்லாமல் மெய்யான மானேயானல் பிடித்து வருகிறேனென்று இலட்சுமணர் சொல்லி னர். அப்போது அன்னத்திற்குச் சமானமான சீதாபிராட்டியானவள் அமிர் தம் பொழிவதுபோலே சிவந்த வாயினல் மழலைச்சொல்லாக கிளியைப் பார்க் கிலும் மதுரமுண்டாகக் குழறிப் பேசி அங்கலாய்த்து, சுவாமி ! தேவரீர்தானே

தொடர்ந்துபோய்ப் பிடித்துக் கொடுக்க வேண்டும். அப்படி செய்யவில்லையே யென்று நீலோற்பல புட்பத்திற்குச் சமானமான கண்களிலிருந்து முத்துகள் போலே நீரைச் சிந்தி சீறினவளாய்ப், பர்ணகசாலையை நோக்கி நடந்தாள். அப்படி கோபத்துடனே நடந்துபோகிற சீதையைக் கண்டு பரமபுருஷன் இலட்சுமணரைப் பார்த்து, அப்பா! இந்தமானை நானே பிடித்துக்கொண்டு சீக்கிரத்திலே வருகிறேன். நீ சீதையைக் காத்துக்கொண்டு இரு என்று அம்பும் வில்லும் கையில் வாங்கிக்கொண்டு நடக்கத் தொடங்கினர். இலட்சுமணரானவர் முன்னுள் விசுவாமித்திரர் யாகத்திலே தாடகி ஒருத்தி. அவள் பிள்ளைகள் இருவர் ஆகிய மூவரில் ஒருவனை மாரீசனென்பவன் மடிந்து போகாமல் ஓடிப்போனானே, அவன்தான் இவனென்று எனக்குத் தோற்றுகின்றது. நல்லது இன்னமும் பார்க்கப்போகிறீர்கள். போய் வாருங்களென்று இரண்டு கையுங் கூப்பி நமஸ்காரஞ்செய்து திரும்பிவந்து, சீதாதேவி யிருக்கிற பர்ணகசாலையைக் காத்துக்கொண்டு ஒருபுறத்திலே நின்றார். அப்போது பர்வதசிகரத்திற்கு ஒப்பான சுந்தரத் தோளினையுடைய பெருமாள் இளைய பெருமாள் சொன்ன யோசனையை மனதிலே யெண்ணுமல், பூர்ணச்சந்திர ரூபமான சீதையினுடைய கோபத்தைப் பெரிதாக எண்ணினவராய், திருப் பவளவாயிலே நகைப்புத்தோன்ற மானைத் தொடர்ந்தார். அந்த மானுனது மெள்ள மெள்ளப் பூமியை மிதித்து வெறித்துப் பார்த்து, பயந்ததுபோல உயரக்குதித்து காதுகளை நெறித்து நீட்டி குளம்புகளுண்டான கால்களைச் சேரவைத்தெழும்பி வாயுகதி மனோகதி முதலான கதிகளுக்கெல்லாம் வேறொருகதி காட்டுகின்றதுபோல துள்ளித் துள்ளி தாண்டித் தாண்டி பாய்ந்துப் பாய்ந்து ஓடிற்று. அத் தருணத்தில் மூன்று லோகத்தையும் நின்றபடியே அளந்த திருவடிகளையுடைய திருவிக்கிரம ஸ்வரூபனனவன் அந்த மானின் பிறகே தொடர்ந்துபோன வேகத்தை நாம் சொல்லுகிறது எப்படி? அவன் பிரவேசியாத அண்டமும் வேறே யிருக்கின்றதா? சகல அண்ட சராசரங்களிலேயும் நிறைந்திருக்கின்ற தன் சர்வாந்தரியாமித்துவத்தை அன்றையதினம் தெரியக் காட்டினனென்று சொல்லலாமே யல்லாமல், எங்குந் திரிந்த திரிச்சலைக் குறித்து எளிதாய்ச் சொல்லக்கூடாது. அந்த மாயமான் பர்வதத்தின்மேல் ஏறும். அங்கேயிருந்து மேகக்கூட்டத்தின்மேல் குதிக்கும். அதுவரைக்குங் கூடத் தொடர்ந்துபோனால் அப்பால் போய்விடும். சற்றே தாமசமாயிருந்தால் கையினாலே தீண்டிப் பிடிக்கலாமென்னும்படி நிற்பதுபோல யிருந்து ஓடிப்போம். இப்படியாக அதிக திரவியங் கொடுப்பதற்கு தக்கதாய்ச் சினேகிக்கிற வேசிகள் மனதுபோலே ஜாலஞ் செய்தது. அப்போது ஸ்ரீ ராமர் இதனுடைய வடிவமும் வேறுகிச் செய்கையும் வேறுய் இருக்கின்றது. ஆதலால் தம்பி இதன் கருத்தை முன்னமே யறிந்து நமக்குச் சொன்னன். நாம் ஆராயுமிடத்திலும் இராட்சதர் செய்த மாயந்தான் மானுய் வந்ததென்று வருத்தத்துடனே திருவுளத்திலே நினைத்தார். அந்த ராட்சதனுகிய மாரீசனறிந்து, இனி இவர் பிடிக்கிறேனென்கிற யோசனை செய்கிறதில்லை. எப்படியுங் கொல்லுவாரென்று நினைத்துக்கொண்டு அதிவேகமாக ஆகாயத்திலே எழும்பினன். அந்தக் கணத்திலே தம்முடைய சக்கரத்துக்குச் சமானமாகத் தடைசெய்யப்படாத பிரகாசமுண்டான ஒரு பாணத்தை வில்லிலே அனுசந்தானஞ்செய்து இவன் எந்த லோகம்

போனலும் இவனுடைய பிராணனே வாங்கென்று ஆக்யாபித்து விட்டுவிட்டார். நீண்ட அலகுண்டான இராமபாணம் அந்த மாரீசனுடைய வஞ்சம் நினைத்திருந்த நெஞ்சிலே பட்டு உருவியது. அந்தச் சமயத்தில் கோர தந்தங்களையுடைய வாயினுலே அஷ்டதிக்கினும் அப்பாலுங் கேழ்க்கும்படி லட்சுமணனென்று கூவி யழைத்து ஒரு பர்வதம்போலே விழுந்தான். பொல்லாத தன் சுய ரூபத்துடனே அந்த இராட்சதன் விழவே இரகுநாதர் பார்த்து, இது மெய்மானல்ல. பொய்மானென்று சொன்ன தம்பியைக் குறித்து என்னையன் கெட்டிக்காரன். என் பிராணனுக்கொத்தவன் நான் பிழைக்கும்படி வந்தவன். மிகவும் கெட்டிக்காரனென்று தன்னுடைய மனதிலே எண்ணிக் கொண்டாடினர். திசைகள்மட்டும் நீண்ட தூல காயத்துடனே அலறிக்கொண்டு விழுந்த சண்டாளனுடைய சரீரத்தைப் பார்த்து, விஸ்வாமித்திரர் வேள்வியிலே வந்த மாரீசன் இவன்தானென்றும் அறிந்தார். இந்தப் பாவியானவன் பாணம்படவே மாயையினுலே நம்முடைய குரல்போலே கூவி அழைத்தானே. அந்தச் சத்தங் கேட்டுச் சீதை கிலேசிப்பாளே என்பதாய்த் திருவுளம் வருந்தினர். உடனே இப்போது மாயையென்று நாம் கண்டறிந்த மாரீசனே முன்னமேதானே நம்முடைய தம்பி அறிந்து சொன்னன். ஆனபடியினுலே, சீதைக்கு மனந் தேறச் சொல்லித் தேற்றுவான் என்றெண்ணித் தம்முடைய மனதைத் தேற்றிக்கொண்டு, இந்த மாரீசன் சாவதற்கே துணிந்து வந்தான். இவ்விதம் வரவேண்டிய காரியமும், யோசனையும் வேறே யிருக்கும். அதற்கு லக்ஷயம் இந்தப் பாவி வஞ்சனையாக அழைத்துக்கொண்டு விழுந்ததும் ஒன்றுண்டாயிருக்கின்றதே. ஆதலால் நாம் இங்கே தாமசமாய் இருக்கிறது யுக்தமல்லவென்று சீக்கிரமாய்த் தேவநாயகரானவர் திரும்பினர். கருங்கடலையொத்த சாமளரூபரான ஸ்ரீ ராமருடைய சமாச்சாரம் இவ்விதமிருந்தது.

மாரீசன் வதைப் படலம் முற்றிற்று.

ஜடாயு உயிர்நீத்தப் படலம்

அங்கே பரிமளமுண்டாகிய புட்பத்தை முடித்த அளகபாரத்தையுடைய பாரிஜாத பூங்கொம்பையொத்த சீதாபிராட்டி அந்த மாரீசன் குரல் கேட்கவே, குயிலானது பூமியில் விழுந்ததுபோலே ஆலந்துளிர்போல் இருக்கிற வயிற்றைப் பிசைந்துக்கொண்டு விழுந்து, அழுது மயங்கி, இந்த மானைப் பிடித்துக்கொடுவென்றுசொல்லி புத்தியில்லாத நான் என் வாழ்வை முடித்துக் கொண்டேனென்று ஏங்கித் தூரத்தில் எதிரே நிற்கிற லட்சுமணரைப் பார்த்து, கலியாணகுணபிராமனை என் நாயகர் இராட்சதன் செய்த மாயையினுலே பூமியிலே விழுந்தாரென்று தெரிந்தும், அவருடைய தம்பியாகிய நீர் இவ்விடத்திலே யிருக்கலாமாவென்று சொன்னள். அதற்கு லட்சுமணர், அம்மா! இந்த லோகத்திலே ஸ்ரீ ராமருக்கு மிஞ்சின பராக்கிரமசாலிகளும் இருக்கிறார்களென்று சொல்லலாமா? தேவரீர் பெண்பிறப்பானபடியினுலே இப்படிச் சொன்னீரென்று சொல்லி, பின்னும் உண்மையானவார்த்தை சொல்லுகிறர். சப்தசமுத்திரம்

சப்தலோகமும் சப்தகுலபர்வத முதலான இடங்களில் உள்ளவர்களுடைய சொற்பமாகிய ஆண்மைக்கு ஸ்ரீ ராமருடைய ஆண்மை குறைவுபடுமா? மேலும் அவர் கோபித்துக்கொண்டால் பிரிதிவு - அப்பு - தேயு - வாயு - ஆகாசமாகிய பஞ்சபூதமும் நிலைதங்கிப்போகுமே. மேகஸ்வரூபமும் கமல நேத்திரமுடைய என் தமையனுரை யாரென்று ஏண்ணி இவ்விதமாகக் கிலேசத்தில் மூழ்கிறீர். இராட்சதர்களுக்கு இடைந்து தோற்று வருத்தமுற்று ஸ்ரீ ராமர் இப்படி அழைப்பாரா? அப்படியாகிற காலத்திலே இந்தப் பிரம்மாண்டங்கள் மேல் கீழாகப் புரண்டுடைந்து பிர்மா முதலான சகலருடைய உயிரும் வெந்து தீயுமே. நான் சொல்லவேண்டிய தென்ன? பூலோக சுவர்க்கலோகங்களை உபத்திரவஞ் செய்த திரிபுராதிகளை எரித்த சிவனுடைய கைவில் எம்பெருமானுகிய ஸ்ரீ ராமருடைய பலத்தைச் சகிக்கமாட்டாமல் தானே முறிந்தது. அது நீர் அறியீரா? இராட்சத கர்த்தாவான என் தமையனுர் நீர் நினைத்தபடியேயானுல் இந்த மூன்றுலோகமும் முடிந்துபோகும். தேவர் முதலான சாதுக்களெல்லாம் மாண்டு போவார்கள். தர்மமும் ஜீரணித்துப் போய்விடும். விசேஷித்து என்ன சொல்லுகிறது? மாயமாய் வந்த மானின்மேல் ராமபாணம் பட அது விழுந்து, பிராணன் போகிற சமயத்திலே அந்த மானுன ராட்சதன் இப்படி வஞ்சனையாக அழைத்தான். அதற்காக அங்கலாய்க்க வேண்டாம். நீர் சும்மா யிருமம்மாவென்று அனந்தனை இலட்சுமணப் பெருமாள் சொல்ல, பிராட்டிக்கு அந்தத் துக்காவேசத்தினுலே கோபமெழும்பித் தன்னைக் கொன்றதுபோல வருத்தப்பட்டுக் கொதிக்கின்ற மன்முடையவளாய்ப் பார்த்து, இப்படி நின்றுகொண்டிருக்கிற உம்முடைய யோசனை நல்லதல்லவென்று சற்றுகிலும் தாக்ஷண்ணியம் பாராமல் பின்னும் சொல்லுகிறுள்: ஐயா! ஒருவருடனே ஒருவர் ஒரு நாள் பழகினுலும் அவர்களுக்கு ஒரு ஆபத்து வந்தால் தங்கள் பிராணனையுங் கொடுக்கிறார்கள். தமையன் விழுந்த வார்த்தை கேட்டும், நீர் கொஞ்சமாகிலும் மனதிலே துக்கமின்றி நின்றபடியே யிருக்கிறீர். இனி வேறென்ன இருக்கின்றது? அக்கினியில் விழுந்து பிராணனை இழக்கிறேனென்று சொல்லி தாமரைப் புஷ்பவனத்திலே தாவிப்போகிற அன்னம்போல, புகைந்து எரிகிற காட்டுத்தீயை நோக்கி நடந்தாள். அப்போது லட்சுமணர் சாஷ்டாங்கமாகச் சேவித்து, அம்மா! பிராணனை விட்டுக் கொள்ள வேண்டிய காரியமென்ன? நீர் சொன்ன வார்த்தையைக் குறித்து அடியேன் பயப்படுகிறேன். இனி மறுத்துச் சொல்லுகிறதில்லை. நீர் கிலேசப்படாமல் இவ்விடத்தில் இரும். அடியேன் போகிறேன். விதியை வெல்லுகிறதற்கு நம்மாலாகுமா? ஏதோ விபத்து வருகின்றதா யிருக்கின்றது. இராஜாவினுடைய ஆக்கினையை மறுத்து என்னைப் போகச் சொல்லுகிறீர். நீர் இவ்விடத்திலே வேறு துணையில்லாமல் தனியாக இருக்கின்றீரென்று துயரத்தினுலே மனது வேக விடைகொண்டவராய் நெஞ்சந் திகைத்து, நான் இவ்விடத்திலிருந்தால் இவர் அக்கினியில் விழுந்து இறந்துபோவார். தமையனுரிடத்திற் போனேனேயாகில் இவருக்கு மகத்தான ஆபத்துவரும். பிராணனுக்கு ஆசை வைத்திருக்கிற எனக்கு என்ன செய லிருக்கின்றதென்று விம்மியழுது, பின்னும் இவ்விடத்தில் நானிருந்தால் என்ன விபத்து வந்தாலுஞ் சாதிக்கலாம். அதைக் குறித்து இருப்போமென்றலோ இவரிறந்து போகிறதா யிருக்கிறதே ஆகி

லும் இறவாமலிருக்கும்படி யல்லவோ செய்யவேணும். ஆகையால் விட்டுப் பிரிந்து போகிறதற்கே துணியவேண்டி வந்தது. சரீரமெடுத்து இப்படித் துயரப்படுகிற தீவினையையுடைய பேதையான நான் போகிறேனென்று மனதிலெண்ணித் துக்கித்து, ஏதாகிலும் கிலேசம் வந்தால் எங்கள் தந்தையாகிய ஜடாயுவுக்குத் தெரியும். அவர் காத்துக் கொள்ளுவாரென்று சீதைக்குத் தெரியச் சொல்லித், தேவர்கள் செய்த தபோபலத்தின் பயனால் லட்சுமணர் நடந்தார். இப்படி இளையபெருமாள் போகவே, சமயம் பார்த்துக் கொண்டிருந்த இராவணன்தான் நினைத்து வந்த வஞ்சனையை முடிக்கும்படி ஈஷணத்திரயங்களை அறுத்துத் திரிதண்டத்தைக் கையிலே தாங்கிய சந்நியாசிகள் போல ஆகார மில்லாமல் உலர்ந்து இளைத்திருக்கிற சரீரமும், வெகு தூரத்திலிருந்து நடந்து வந்ததுபோல இளைப்பும் வருத்தமும், தள்ளாடிய நடையும், கைகால் நடுக்கமு முண்டாக, கிழப்பருவமும், அசங்கியப்பட்டு வெறுக்கும்படி மிகவும் முதிர்ந்த ஒரு விருத்தனாகி, தாமரை மணிமாலை துளசிமணிமாலைகள் தரித்த தோளும், வீணையின் கானத்துடனே யிசைய வேதத்தை பாடிக் கொண்டிருக்கிற வாயும், ஆமையைப்போல அடங்கின புலன்களும், வளைந்து கூனியிருக்கிற முதுகும், முப்புரி நூல் பிரகாசிக்கிற மார்புமுண்டாகிய இப்படிப்பட்ட ஸ்வரூபத்துடனே துல்லியமாகிய மனதினையுடைய அருந்ததிக்குச் சமானமான ஜானகியிருந்த பர்னகசாலையின் வாசலில் வந்தான். இப்படி வந்து வாய்குழறி நடுங்கின வார்த்தையாக யாரிந்த வீட்டில் இறக்கிறவர்களென்று தேவர்களாலும் அறியப்படாத கபடரூபந்தரித்த ராவணன் கேட்டான். அப்போது சீதாபிராட்டி குற்றமில்லாத இருதயத்தையுடைய மகாதபசியென்று நினைத்து, பவளக்கொம்புபோல எதிரேவந்து, பாகுபோல மதுரமாகிய வார்த்தையினாலே வாருமென்று உபசாரஞ் சொன்னாள். அந்தச் சமயத்தில் ராவணன் சரீரமெல்லாம் வேர்க்க, ஆசையென்கிற சமுத்திரக்கரை புரண்டு பொங்க, அழகுக்கெல்லாமொரு அழகாய் கீர்த்திக்கு இருப்பிடமாய், கற்புக்கு அரசியாய்ப் பிரகாசிக்கிற சீதையைக் கண்டான். காணவே, ஏங்கினான். அவன் மனதை என்னவென்றறியலாம்? அவனுடைய புஜங்கள் பூரித்துத் தாங்காமல் உடனே இளைத்தனகள், ஜானகியென்கிற திவ்விய புஷ்பத்திலே நிறைந்திருக்கிற அழகென்ற தேனை, வண்டுக் கூட்டங்கள் வந்து உண்ணுகிறதுபோல அவன் இருபது கண்களும் உருவப் பார்த்து, முன்பு சூர்ப்பனகி சொல்லக் கேட்டுக் களித்த மனதைப்போலக் களித்ததனகள். சென்தாமரைப் புஷ்பாசனத்தை விட்டு இங்கே வந்திருக்கிற ஸ்ரீமகாலட்சுமியினுடைய ரத்தின காந்தியான திருமேனியைப் பார்க்கிறதற்கு இமைத்துக்கொண்டிருக்கிற என் இருபது கண்களும் போதுமா? இமையாத ஆயிரங்கண்களில்லையே! என்று கிலேசித்தான். இந்தப் பெண்ணரசியின் இன்பச் சமுத்திரத்துக்கு நான் தபசு செய்து சம்பாதித்த மூன்றரைக்கோடி ஆயுஷியமும் போதுமாவென்று நினைத்தான். தேவர்களும் அசுரர்களும் தங்கள் தங்கள் ஸ்திரீகளுடனேகூட ஏவல் செய்யும்படி இந்த மூன்று லோகமும் இந்தப்பெண் அரசாட்சி செய்ய, இனிமேல் நானிவளுக்கு ஏவல்செய்து பிழைப்பேனென்று மெண்ணினான். துயரம் வந்திருக்கிற வேளையிலேதானே திருமுகத்தினுடைய தேஜசானது இப்படி அதிக சுந்தரத்துடன் பிரகாசித்துக் கொண்டிருக்குமானால், ஆணி முத்துக்கள் போலத் தாவள்ளியமாகிய தந்தங்

கள் பிரகாசிக்க நகைத்துக்கொண் டிருக்கும்போது எப்படி யிருக்கவேணும்? இப்படிப்பட்ட கன்னிகையை எனக்குக் கொடுத்த என் செல்வத்தங்கைக்கு என்னுடைய மகா சாம்பிராஜ்ய இராஜரீகத்தைக் கொடுக்கிறேனென்று யெண்ணினான். இவ்விதமாக எண்ணி ஆசை மேன்மேலும் மூண்டெழுகின்ற சிந்தையையுடைய முறைகேடனுகிய இராவண சந்நியாசியைச் சீதாபிராட்டியார் தம்மை வஞ்சிக்க வந்தவனென்று அறியாமல், கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, இவ்விடத்தில் எழுந்தருளுமையா வென்று சொல்லிப் பிரம்பினற் பின்னிய ஓர் பிர்மாசனம் கொடுத்தாள். ஊன்றிக்கொண்டு வந்த திரிதண்டத்தைக் கீழேவைத்து மாயா சந்நியாசியானவன் அந்தச் சாலையிலேயே யிருந்தான். அப்போது மலைகள் மரங்களெல்லாம் நடுங்கியதுகள். பட்சிகள் மிருகங்களெல்லாம் பயந்து சப்திக்காமல் அடங்கியதுகள். பாம்புகளெல்லாம் பயப்பிராந்தியினலே பலங்குறைந்து ஒடுங்கியதுகள். சகல ஜீவராசியும் கடூரனுன ராவணனைக் கண்டு பயந்ததுகள். அப்படியங்கே யிருந்த பாவியானவன் சீதையைப் பார்த்து, இந்தப் பர்ணகசாலை யாருடையது? இங்கே யிருக்கிறவர் எந்த ரிஷி? நீ யார்? சொல்லுமென்று கேட்டான். அப்போது நமக்கு விருந்து வருகிறவர்கள் இவ்விடத்திலில்லை. இவரோ அபூர்வமாக வந்தாரென்று எண்ணி விசால நேத்திரமுடைய சீதை பேசத் தொடங்கினுள்: ஐயா! தசரத மகாராஜாவினுடைய சற்புத்திரர் தம்பியுடனே கூடத் தாயார் வார்த்தையைச் சிரசாக வகித்துக்கொண்டு இவ்விடத்தில் வந்து வாசஞ் செய்கிறார். அவர் பேர் நீருங் கேட்டிருப்பீரென்று சொன்னுள். அப்போது ராவண சந்நியாசி நான் கேட்டதுண்டு. கண்டதில்லை. கங்காநதி சூழ்ந்த அந்த ராச்சியத்திற்கு நானும் ஒருதரம் வந்திருக்கிறேன். நீர் யார் குமாரத்தி? இந்தக் காட்டிலே பொழுது போக்குகிறீரே? தெரியச் சொல்லுமென்று கேட்டான். அதற்குச் சீதை சொல்லுகிறுள்: காம முதலாகிய பாபமார்க்கமில்லாத மகா தபசிகளான உங்களைத் தவிர தெய்வம் வேறே யில்லையென்று நினைத்திருக்கிற ஜனகமகாராஜாவின் குமாரத்தி என்பேர் ஜானகி; காகுஸ்தனுடைய மனைவி நானென்று அந்த வார்த்தை சொல்லி, பின்னையும் மிகுந்த வார்த்திகத்தையுடைய நீர் எங்கேயிருந்து புறப்பட்டு அதிக வருத்தத்துடனே வழிநடந்து இந்த தண்டகாரணியத்துக்கு வந்தீரென்று கேட்டாள். அதற்குச் சந்நியாசி சொல்லுகின்றுன். தேவேந்திரனுக்குந் தேவேந்திரனனவன்; எவர்களாலும் எழுதுகிறத்கு அருமையான சுந்தரமுண்டானவன்; பிரம குலத்திலே பிறந்தவன். தெய்வலோக முதலான சகலலோகமும் ஆள்கின்றவன்; அரிய வேதங்களெல்லாம் பொருந்திய நாவினையுடையவன்; திரிநேத்திரனுன சிவனுடைய கைலாச பர்வதத்தை உச்சிவேரோடும் பறித்து உருட்டிய பலவந்தன்; அஷ்டதிக் கெஜங்களையும் யுத்தத்திலே தோற்கடித்து அதுகளினுடைய தந்தங்களைப் பொடிப் பொடியாகச் செய்த புஜபல பராக்கிரம முடையவன்; தேவர்களெல்லாரும் கடை வாசலிலிருந்து ஏவல் செய்யத்தக்க பிரதாபத்தையுடையவன்; தேவலோகத்துக் கற்பகம் நவநிதி முதலான சகல பாக்கியமும் புஷ்பகவிமானமு முண்டானவன்; அவன் வாசமாயிருக்கிறது சொர்ணமயமான லங்காபுரியென்னும் பட்டணம்; அது அந்தர சொர்க்க பாதாளமாகிய மூன்று லோகத்திலேயும் ஒன்றும் தனக்குச் சமானமில்லாமல் அதிக சிங்காரமுண்டாய் இருக்

கின்றது. மேலும் அந்தப் பிரதாப லங்கேஸ்வரன் பிர்மா கொடுத்த முடி வில்லாத தீர்க்காயுளையுடையவன்; பார்வதி சமேதன் தரித்திருந்த வாளைத் தன் கையிலே தரித்திருக்கின்றவன்; நவக்கிரகங்களையுங் கொண்டுவந்து சிறையிட்டவன்; குற்றமற்ற நல்லொழுக்கத்தை யுடையவன்; விஸ்தார மான சாஸ்திரக் கேள்வி யுண்டானவன்; அதிக சற்குணங்களை யுடைய வன்; மன்மதனும் பார்த்து ஆச்சரியமாய் மனந் திகைக்கும்படியான யவ்வன முண்டானவன்; எங்களைப்போ லொத்தவர்களெல்லாம் இறையவர்களென்று எண்ணி யிருக்கின்ற அந்த மும்மூர்த்திகளுடைய பெருமையைப் பார்க்கி லும் விசேஷமாகிய பெருமையை யுடையவன். சகல லோகங்களிலிருக்கிற அதிக சுந்தரமான ஸ்திரீகள் அநேகர் அவனுடைய கிருபையை இச்சித் திருக்கிறார்கள்.

அப்படியவர்கள் இச்சித்து நினைத்துருகியும் அவர்களிடத்தில் கிருபை செய்யாமல், தன் மனதுக்கு ரம்மியமான ஒரு ஸ்திரீயை நாடிக்கொண்டிருக் கிறான். அந்த இராவணேஸ்வரனுடைய லங்கையில் சிலநாள் போயிருந்தேன். முன்னாள் இவ்விடத்தில் நான் இருந்தவனைபடியினாலே இங்கே யிருக்கிற ரிஷிகளைப் பிரிந்திருக்கமாட்டாமல் திரும்பிவந்தேனென்று சொன்னான். அதற்குச் சீதா பிராட்டியார் சொல்லுகிறார். வேதத்தையும் வேதியருடைய கிருபையையும் விரும்பி அங்கீகரியாமல் சகல பிராணிகளையுங் கொன்று தின்று எந்நாளும் பாபமேசெய்கிற அந்தப் பாதகராகிய இராட்சதருடைய பட்டணத்திலேயா வாசஞ் செய்தீர்? அப்படி அங்கே வாசம் செய்கிறதற்கு ஏது வென்ன? முற்றத் துறந்து சரீரம் அநித்தியமென்று எண்ணுகிற நீர் ஆரணி யத்திலே ரிஷிபீஸ்வரர்களிடத்திலேயும் இராமல் நாட்டிலே நல்லவர்களிருக்கிற கிராமங்களிலேயும் போயிராமல் தர்மநெறியை நினையாத இராட்சதர்களுடைய பட்டணத்தில் இருந்து என்ன காரியஞ் செய்தீரென்று சீதை சொன்னாள். அதற்கு இராவணன் ஓ பெண்ணே! இராட்சதர்கள் தேவர்களுக்குப் பொல் லாதவர்களே யல்லாமல், எங்களைப்போ லொத்தவர்களுக்கு அவர்களே நல்ல வர்களென்று சொன்னான். அப்படிச் சொல்லவே, இவன் யாரோ பொல்லாத வனாயிருக்கிறானென்று மனதிலெண்ணினாள். அதை ராவண சந்நியாசி யறிந்து, இந்த மூன்று லோகமும் இராட்சதர் வாசமா யிருக்கிறபடியினாலே அவர்கள் வழியாயிருந்து காலத்தை ஓட்டவேணுமே யல்லாமல் வேறுவழி எங்கே யிருக் கின்றதென்று சொன்னான். மனதறியும்படிக்கு வஞ்சனையாகச் சொன்ன அந்த வார்த்தையைக் கேட்டு, ஐயா! என் பிராணநாயகர் எப்போது இந்த ஆரணியத்துக்கு வந்தாரோ? அப்போதே இராக்ஷதர்க ளெல்லாம் மடிந்து மூடிந்துபோனார்க ளென்று எண்ணிக்கொள்ளும். பின்பு உலகத்திற்கு யாதொரு துயரமில்லை யென்று சொன்னாள். அந்த வசனத்தைக் கேட்டு இராட்சதர்களை மனிதர் கொல்லுவார்களா? அப்படியானால் யானைக் கூட் டத்தை சிறுமுயல் கொல்லவேணுமே யென்றான். அதற்குச் சீதாபிராட்டி யானவள் அவனை நோக்கி, அதிபலவந்தனாகிய இராக்ஷத சிரேஷ்டனென்னப் பட்ட விராதனும், மிகுந்த கோபத்துடனே வந்த கரன் - தூஷணன் - திரிசிரன் முதலான அநேககோடி இராக்ஷதரும் மடிந்துபோன யுத்தசங்கதி நீரொன்

றுங் கேட்டதில்லேபோ லிருக்கின்றது. இன்னுமுள்ள ராக்ஷதர்களெல்லாம் பந்து ஜனங்களுடனேகூட மடிந்து போகிறதும், தேவர்கள் பரிபாலனமாகிற தும், நாளைக்கே அறியப்போகிறீர். தர்மத்தைப் பாபம் வெல்லுமா? அது உமக்குத் தெரியாதா? என்று சொன்னாள். தேனுடனேகூட அமிர்தத்தைக் கலந்ததுபோல, மதுரமாகச் சீதாபிராட்டி சொன்ன சொற்கள் செவியிலே நுழைந்த மாத்திரத்தில், கபட சந்நியாசியாகிய இராவணனுக்குச் சரீரம் புள கித்து, பின்பு மனிதர் பலவந்தரென்ற வார்த்தையினாலே மானம் மேலிட்டுக் கோபமுண்டாயிற்று. அந்தக் கோபத்தினாலே சீறி, அற்ப பலமுண்டான ஒரு மனிதன் தேவர்களுக்கும் சக்கியமில்லாத இராவணேஸ்வரனை ஜெயஞ் செய்வா னென்று சொன்னாய். நாளை அவனுடைய இருபது தோளென்கிற சண்ட மாருதக் காற்று வருகிறபோது இந்த மனிதர்கள் பூளைப்புஷ்பம்போல மடியப் போகிறார்கள். அதை நீயும் பார்க்கப்போகிறாய். அண்டத்தைப் பிளக்க வேண்டினாலும், வடவாக்கினியை அவிக்க வேண்டினாலும், அனாயசமாகச் செய் யத்தக்க பலமுண்டான அந்த இராவணேஸ்வரனை யார் என்று நினைத்திருக் கிறாய்? அவனுக்கு அரிதான காரியம் ஒன்றிருக்கின்றதா? என்று சொல்லி னான். அதற்கு ஐயா! தோள்கள் அநேகமா யிருப்பதினாலே சாமர்த்தியம் உண்டாயிருக்குமா? அந்த இராவணனைச் சிறையிலே வைத்த கார்த்தவீரி யார்ச்சுனனுடைய வலிமைபொருந்திய ஆயிரந் தோள்களையும் சிறுவயதிலே தானே இரண்டு தோளுண்டான பரசுராமர் அறுத்துவிடவில்லையா? என்று ஜானகி சொன்னாள். அப்படிச் சொன்ன தட்சணமே கண்கள் காலாக்கினி போல் எரிய, புஜங்கள் திக்குகளெல்லாம் நிறைய, தலைகள் ஆகாயமட்டும் அளாவ, கைகளோடு கைகளறைந்து, இடியைப்போலச் சப்த முண்டாகப் பற்களை நெறநெறவென்று கடித்து நகைத்துக் கோபம்பொங்கப் பார்த்தான். அப்போது அந்த மாயமேஷம் நீங்கிப்போகக் கோபத்தினாலே சீறிப் படம் விரித்த பாம்புபோல உக்கிரத்துடனே தன்னுடைய நிஜஸ்வரூபமானான். முன்னமே துயரத்துடன் பிரலாபித்துக் கொண்டிருந்த சீதாபிராட்டியாருக்கு எதிரே இவனிப்படிக் கோரபீகரமான ரூபத்துடன் நிற்கவே, இவர் நல்வினை தீவினைகளைத் துறந்த மகாதபசியல்ல. ஆரோவென்று சந்தேகப்பட்டு ஒன்றும் நினைக்கவும் - சொல்லவும் - செய்யவுங் கூடாமல், மனோ வாக்குக் காயமான திரிகரணங்களும் திகைத்து நடுங்கி, கூற்றுவன் வந்தபோது உயிர் எப்படிப் பதைக்குமோ அப்படிப் பதைத்தாள். அத் தருணத்திலே இராவணன் சீதை யைப் பார்த்து, ஓ பெண்ணே! தேவர்களெல்லாம் ஏவல்செய்ய ஜெயித்த என் வீரத்தைப் பார்; மண்ணிலிருக்கிற புழுவுக்குச் சமானமான மனிதரைப் பலவந்தரென்று சொன்னாயே? நீ பெண்பிள்ளை யானபடியினாலே யல்லவோ சொல்லிப் பிழைத்தாய். உன்னைப் பிசைந்து தின்றுவிடலாமென்று நினைத் தேன். அப்படிச் செய்தால் அப்போதே என்னுயிர் இறந்துபோய் விடும். அதனாலே தின்னாமல் விட்டேன். இனி யொன்றுக்கும் பயப்படவேண்டாம். எப்படிப் பட்டவர்களையும் வணங்காத என் தலையின்மே லிருக்கிற மகுடம்போல் மஹா பூஜிதமாக உன்னைத் தாங்கிக்கொண்டு, சர்வாபரண பூஷிதர்களான தேவரம்பைகள் உன்னுடைய பாதார விந்தத்துக்கு ஏவல் செய்யும்படி சப்த லோகங்களையும் ஆள்கின்ற என்னுடைய சாம்பிராஜ்ஜியத்தில் இருந்தரு

ளென்று சொன்னன். அந்த வார்த்தைகேட்டு மாந்துளிர்போலச் சிவந்து மிருதுவாயிருக்கின்ற கைகளினுலே செவிகளை மூடிக்கொண்டு, சர்வக்ஞிய ஸ்வரூபனுகிய காகுஸ்தனுடைய மனைவியாய் தற்புடையவளான என்னை உலகத்தின் ஒழுக்கமும் பாராமல், ஓமாக்கினியிலே புனிதர்களான ரிஷீஸ்வரர்கள் கொடுக்கின்ற ஆகுதியை நாய் இச்சித்ததுபோல் என்ன சொன்னுய்? ஓ இராட்சதா! புல்லின் நுனியிலே நிற்கிற பனித்துளிபோல சிறிது நேரத்திலே போய்விடுகிற என் பிராணனை இழந்து போகிறதற்குப் பயந்து, குடிப்பிறப்பை யழிக்கிறதுண்டா? மின்னலுடனே கூடி இடி வருகிறதுபோல இராமபாணம் வராததற்கு முன்னே பிராணபய மில்லாமல் சீக்கிரத்தில் ஓடி ஒளித்துப் போவென்று சொன்னுள். இப்படி ஜானகி சொல்லவே, இரக்கமில்லாத இராட்சதாதிபதியான இராவணன் சொல்லுகிறன்: உன் கணவனுடைய அம்புவந்து அஷ்டதிக்கெஜங்களின் தந்தங்களை யொடித்த என்னுடைய மார்பில் உருவுமா? அப்படியே வந்தாலும் மலையின்மேல் விட்ட புஷ்ப பாணம்போல் நசுங்கித் தெறித்துப் போய்விடும். அதிக சுந்தரமுண்டான ஸ்திரீரத்தினமே! எனக்கு ஆசையாகிய வியாதி மனதிலே அதிகரிக்க அதினுலே சரீரம் உலர்ந்தேன். எனக்குப் பிராணனைக் கொடுத்துத் தேவரம்பைகளுக்குங் கிடையாத அதிசயமான பாக்கியத்தை நீ கைக்கொள்ளென்று சொல்லிச் சாஷ்டாங்கமாகச் சேவித்தான். இப்படி தரையில் விழுந்து அவன் வணங்கவே சீதைக்கு வாளினுலே வெட்டுப்பட்டுப் பிராணன் கலங்கினதுபோலப் பயப் பிராந்தி யுண்டாகி, ஓ ராகவா! என்பிராண நாயகனே! என்றும், ஓ இளைய வரே! என்றுஞ் சொல்லி யழைத்துத் துயரத்துடனே ஏங்கினுள். பொறுமை தானே ஒரு ரூபமெடுத்ததுபோலத் திருவழகுண்டான சீதாபிராட்டியார் அவ்வண்ணமாகப் பயந்து பிரலாபிக்கவே, இராவணன் பார்த்து பூர்வத்திலே பிர்மாவினுடைய சாபம் தனக்கு உண்டாயிருக்கிறதை நினைத்துக்கொண்டு ஜானகியினுடைய திருமேனியைத் தீண்டுதற்கு அச்சப்பட்டவனுகி, தன்னுடைய புஜபல பராக்கிரமத்தினுலே பூமியைக் கீழே ஒரு யோசனை தூரமட்டும் கைகளாற் பேர்த்தெடுத்துத் தேரின்மேல் வைத்துக்கொண்டான். அதைச் சீதை கண்டு தன் பிராணனைக் காணுதவளாகி, பூமியிலே விழுந்த மின்னலைப்போலத் தவண்டு மயங்கினுள். அந்தச் சமயத்திலே தேரை ஆகாய மார்க்கத்தில் விடச் சொல்லிச் சாரதிக்கு ஆக்யாபித்தான். அதுகண்டு நெருப்பிலே விழுந்த புஷ்பக்கொடிபோல வெந்து, இரங்கி புரண்டு குலைந்து அயர்ந்து துடித்துவிழுந்து, மிகுந்த துயரத்தினுலே அழுது, தர்மமே! இந்த விபத்தை நீ காத்துக்கொள் ளென்று சொல்லிப் பின்னையும் பிராட்டி பிரலாபிக்கின்றுள்.

கவி

மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா வுயிரே நிலைதே றினர்போய்
உலையா வலியா ருழைநீ ருரையீர்.

செஞ்சே வகஞர் நிலைநீர் தெரிவீர்
மஞ்சே பொழிலே வனதே வதைகாள்
அஞ்சே லெனநல் குதிரே லடியேன்
உஞ்சா லதுதா னிழிபோ வுரையீர்.

நிருதா தியர்வே ரறஈண் முகில்போல்
சரதா ரைகள்வீ சினிர்சார் கிலிரோ
வரதா வீனையோய் மறுவே துமிலாப்
பரதா வீனையோய் பழிபூ ணுதிரோ.

கோதா வரியே குளிர்வாய் குழைவாய்
மாதா வனையாய் மனனே தெளிவாய்
ஓதா துணர்வா ருழையோ டினைபோய்
நீதான் வினையே னிலைசொல் லலையோ.

முந்துஞ் சினைகாண் முழைவா ளரிகாள்
இந்தந் நிலனே டுமெடுத் தகைகால்
ஐந்துந் தலைபத் துமலர் தலையச்
சிந்தும் படிகண் டுசிரித் திடுவீர்.

ஓ மலைகளே! மரங்களே! மயில்களே! குயில்களே! கலைமான்களே! பிணைமான்களே! ஆண் யானைகளே! பெண் யானைகளே! நிலையாமற் போகின்ற என்னுயிரே! நீங்களாகிலும் என்னையகரிருக்கும் இடத்தைத் தேடிப் போய்ச் சொல்லீர்களோ? மேகமே! சோலையே! வனமே! வனதேவதைகளே! என் பிராண நாயகருடைய பராக்கிரமத்தை நீங்களறிவீர்களே. ஆகையால் என்னைப் பயப்படாதேயென்று நீங்கள் ஒரு வார்த்தை சொல்லுவீர்களாகில் நான் பிழைப்பேன். நான் பிழைத்தால் உங்களுக்கு வருகிற குறை என்ன? அதுதான் சொன்மின்களே? ஓ என்பிராண நாதரான வரதரே! இளையவரே! பரதரே! சத்துருக்கரே! இராட்சதர்கள் நிர்மூலமாக, நீருண்ட மேகம்போலச் சரமாரி பொழிந்து கொண்டு நீங்கள் வரலாகாதா? இந்தப் பழியைப் பூண்டுக் கொள்ளுகிறீர்களோ? ஓ கோதாவரி நதியே! குளிர்ச்சியும் குழைவுமாயிருக்கின்ற தாயைப்போல என் மனதை அறிந்த நீயாயினும்போய்ச் சொல்லாமலே அறியத்தக்க இராமலட்சுமணர்களுடனே சொல்ல வில்லையா! ஓ சினைகளே! குகையிலேயிருக்குஞ் சிங்கங்களே! என்னைப் பூமியுடனேகூடப்பேர்த் தெடுத்த இருபது கைகளும், பத்துதலைகளும், துண்டம் துண்டமாய் அறுக்கப் பட்டுச் சிந்திவிழக்கண்டு நகையீர்களா? என்று இப்படிப் பலவிதமாகப் பன்னி இரங்கி அழுகின்ற ஜானகியைப்பார்த்து, மனிதரா போரிலே என்னை ஜெயித்து உன்னை மீட்டுக்கொள்ளு கின்றவர்களென்று கையுடனே கையறைந்து நகைத்தான். தன்னுயிரைப் போக்கடித்துக் கொள்ளும் ராவணன் அப்படிச் சொல்ல, அதற்குச் சீதை சொல்லுகிறாள். மாயையினாலே வஞ்சகமான ஒரு மானை யுண்டாக்கினாய். அதனால் உன் பிராணனை யுண்கின்ற என் நாயகனை கூற்று வனை அப்பாலே யனுப்பினாய். அந்தச் சமயத்திலே வந்து என்னை எடுத்துக் கொண்டு போகிறாய். யுத்தஞ்செய்து உன்னுயிரைக் காத்துக்கொள்ளத் தகும்

தவனுலே நீ தேரைவிடாமல் நிறுத்தென்றும், மேலும் நீ வீரனேயானுல் அதி சீக்கிரத்தில் உன் கூட்டங்களே யெல்லாம் கொன்று உன்னுடைய தங்கையி னுடைய மூக்கையும் முலேயையும் அறுத்து வாட்டின மனிதர் இந்த ஆரணி யத்திலே யிருக்கிறார்களென்று கேட்டும் இப்படி மாயஞ் செய்வையா? பயத் தினுலல்லவா செய்தாயென்று சொன்னுள். அந்த வார்த்தையைக் கேட்டு மனமில்லாத அற்ப மனிதருடனே யுத்தம் செய்வதற்கு நானெதிர்த்தால், திரி நேத்திரத்தையுடைய சிவனது கைலாசபர்வதத்தை எடுத்த என்னுடைய தோள்களின் கீர்த்திக்குப் பழி வண்டாகுமல்லவா? அதிலும் அந்த வஞ்சனை நல்லதென்று தான் நினைத்துச் செய்தது என்றான். அதற்குத் தாங்கள் குலப் பகையாய் இருப்பவர்களுடனே வாலைக்கொண்டு யுத்தஞ்செய்வது நாணம் போலவும், பதிவிரதையாய் இருக்கும் ஸ்திரீயை வஞ்சனை செய்து எடுத்துப் போவது மகா சாமர்த்தியம் போலவும் இருக்குமானுல், இரக்கமில்லாத இராட் சதருக்குப் பழிதான் எதுவென்று ஜானகி சொன்னுள். அந்தச் சமயத்திலே, அகஸ்மீயமாய் எங்கேயடா போகிறாய் நில்லு நில்லென்று அதட்டின வார்த் தையுடனே கண்களில் நெருப்புப் பொறி பறக்க, மின்னலைப்போலே பிர காசிக்கின்ற வைரமான மூக்கினையுடையதாய் ஒரு மகாமேரு பர்வதம் ஆகாசத் திலே பறப்பதுபோலே தூலசரீர முண்டான ஜடாயு பறந்து பிரளயகால சண்டமாருதம் போலச் சிரசின்காற்று மோதியடிக்க. விருட்சங்களெல்லாம் வேரறுந்துவிழ, வானத்தில் சஞ்சரிக்கின்ற மேகங்கள் அப்புறத்தில் சிதறிப் போக, கருடபகவான் வருகிறனென்று நாகங்களெல்லாம் பயந்து படமொடுங்கி ஒளிக்க, யானே யாளி முதலானதுகளும், மரங்களும் தூறுகளும் கற்களுஞ் சிறகினுடைய விசையினுலே யெழும்பி ஆகாச வெளியெல்லாம் நிறைய வான மென்றும் கானமென்றும் வேற்றுமை தெரியாமல் மாறிப்போக, புருஷோத் தமனுடைய தேவியை நிலத்துடனே பேர்த்துத் தேரின்மேல் வைத்துக் கொண்டு எவ்விடம் போவாயென்றும் ஆகாயத்துடனே பல திசைகளையும் நான் மறைத்து உன்னுடைய ரதத்தைப் போகவொட்டாமல் தடுக்கிறேன் பாரென்றும், தன் சிறகுகளே விரித்துக்கொண்டு கழுகின் கூட்டங்களுக் கெல் லாம் இராஜாவான அந்த ஜடாயுவானவர் கைலாசபர்வதம்போல சிவந்த தலையுங் கால்களும் செவ்வானம் போலே கழுத்துமுண்டாய்ப் பிரகாசிப்பது போலே பிரகாசித்துக்கொண்டு அதிசீக்கிரமாய் முடுகிவந்து மருமகளைக் கண்டு, அம்மா! பயப்படாதே யென்று சொல்லி, அந்தப்பாவி தீண்டவில்லை என்பதும் தெரிந்துகொண்டு, மூண்டெழும்பின கோபத்தை அதிகரிக்காமல் அடக்கிக்கொண்டு சில வார்த்தை சொன்னர். அடா இராவணு! நீ கெட்டாய். உன் பந்துஜனத்தோடே உன் வாழ்வையெல்லாம் சுட்டாய். என்ன காரியந் தொடங்கினுய்? நீ பட்டாய் என்றே எண்ணிக்கொள். இப்போதும் இந்தப் பத்தினியை விட்டால் உன்னை நான் கொல்லுவதில்லை. புத்தியில்லாதவனே? நீ பிழைசெய்தாய். இந்த லோகமாதாவை யாராக நினைத்தெடுத்தாய்? உனக்கு யார் ஆதரவிருக்கிறார்கள்? இங்கே உன் சுற்றத்தார்களே யெல்லாம் இராமச் சந்திரன் அம்பினுலே சங்கரித்து, அவர்களுடைய உயிரை விருந்துசெய்யக் கூற்றுவன் நேற்றுண்டான் சமாச்சாரம் அறியாயா? கொல்லுவதற்குவந்த மத யானையை உண்டை வில்லினுல் தெறிக்க விரும்பினுய். பிராணனைக் கொல்லு

மென்ப தறியாமல் விடத்தையுண்டு பிழைக்கப் பார்க்கின்றாய். எல்லா வுலகங் களும் இந்திரனும் அந்த மும்மூர்த்திகளும் இயமனும் சகலரும் புலியைக்கண்ட மான்போலே நடுங்கி விடுவதே யல்லாமல் கோதண்டபாணியான ஸ்ரீ ராமனை ஜெயிப்பவர்கள் யார் இருக்கிறார்கள்? இந்தப் பிறப்பில் உறவின்முறையா ருடனே இறந்து அழிந்து போகத்தக்க துஷ்கிர்த்தியம் இதைவிட வேறே யில்லை. மறுபிறப்பிலும் நரகத்திற்கு ஏதுவாகும்? இப்படியிருக்க, எந்தப் பிறப்பிற்கு இது நன்மையைத் தருவதென்று நீ நினைத்தாய்? திரிமூர்த்தி களுக்கும் முதன்மையான அந்த மூலகாரண வஸ்துவே இந்த மனிதரென்று அறி. இவர்களிடத்திலேயா இப்படிப்பட்ட பிழை செய்வார்கள்? நீ யோசனை யில்லாத பயித்தியக்காரன். ஆனபடியினாலே நீ இது செய்தாய். நீ நெற்றிக் கண்ணினையுடைய நந்திவாகனன் கிருபையினாலே பெற்ற வரங்களும், மற்று முள்ள கல்வியும், மந்திர தந்திரங்களும், உனக்குண்டான சகல பலங்களும் ஸ்ரீ ராமன் அஸ்திரப்பிரயோகஞ் செய்கிறமட்டுமே யிருக்கும். அந்த இராம பாணத்தைக் கண்டால் ஒன்றாயினும் நில்லாது பஞ்சாய்ப் பறந்துபோம். மானைப் பிடிக்கப்போன இராமபத்திரன் நேரே வந்துவிட்டால் உன்னாலே தடுக்க முடியாது. சீதையை விட்டுவிடு. நான் கொண்டுபோய் அவ்விடத்திலே சேர்க்கிறேன். நீ சீக்கிரமாய்ப் போவென்று சொல்ல, அந்தவார்த்தையை இரா வணன் கேட்டுக் கோபாக்கினி மூள, வாளுக்கு ஒப்பான தன்னுடைய கண்க ளிலே நெருப்புப்பொறி சிதற வாயைமடித்துக்கொண்டு, அடா? நீ சொன்னவர் களைக் காட்டடா? என்னுடைய பாணம் பட்டு உன்னுடைய மார்பு திறந்துபோய் விடுவதற்கு முன்னே ஓடிப்போய்விடு. காய்த்துத் தோய்த்த இரும்பு உண்ட நீர் மீண்டு வந்தாலும் என்னிடத்தில் வந்த இந்தப் பெண் இரத்தினம் மீளுவதில்லை. அதுவும் பாரென்று சொன்னான். அப்படி சொன்ன வார்த்தையைச் சீதை கேட்டு, முன்னிலும் இரண்டுபங்கு அதிக பயமுண்டானவளாய் நடுங்கி அழு வதை ஜடாயுவானவர் கண்டு, அம்மா! பயப்படாதே. இந்த இராட்சத னுடைய சரீரம் இந்தக் கணத்திலே சின்ன பின்னமாய்ப் போகும். சக்கர வர்த்தித் திருமகன் இன்னம் வரவில்லையே யென்று முத்துக்கள் சிந்துவது போலே கண்களிலிருந்து சிதறுகின்ற நீர்த்துளிகள் ஸ்தனத்தின்மேலே விழுந்து தத்திப்பாய வருந்தித் தளரவேண்டாம். இவனுடைய பத்துத் தலைகளை யும் பனங்காய்க் கொத்துபோல அறுத்து, இந்தப் பத்துத் திசைக்குப் பலி கொடுப்பதற்கு நானிருக்கிறேன். அதை நீ பாரென்று சொல்லி இடிகளும் பயந்து ஓடியொளிக்கும்படி அதிக சப்தமுண்டாகச் சிறகுகளை வீசி, அவன் தோள்மேலே பாய்ந்து, அவனுடைய பத்துக் கிரீடத்தையும் கீழேயுருட்டித் தள்ளி, அந்த ரதத்திலே கட்டியிருக்கும் வீரக்கொடியை மூக்கினாற்பற்றி ஒடித்தார். தேவர்கள் புட்பமாரி பொழிந்து வாழ்த்தினார்கள். அந்த வேளையில் இராவணன் செவ்வரக்கு உருகுகின்றதுபோலே கண்களெல்லாஞ் சிவக்க எந்தக்காலத்திலும் இவ்வளவு அபஜெயப்பட்டு அறியாதவனானபடியினால் சப்த லோகமும் நடுங்க நகைத்து புருவங்கள் நெரிந்து வளைய, கையிலே வில்லை யெடுத்து வளைத்து, ஜடாயு சரீரத்தின் மேலே சரமாரி பொழிந்தான். இளஞ் சந்திரன்போல வளைந்த தந்தங்களையுடைய இராவணன் பொழிந்த சரமாரி களைச் சிறகினாலடித்தும் நகங்களினால் ஒடித்தும், எமனுங் கண்டு பயப்படுகிற

மூக்கினலே கடித்தும், கண்டதுண்டங்க ளாக்கினர். பின்னையு மநேக சிரசுண் டான ஒரு சர்ப்பத்தின்மேலே பாய்கிற கருடனைப்போல வட்டமிட்டுப் பாய்ந்து, அவன் பத்துத் தலையிலும் மூக்கினலே கொத்தி, இராவணன் வில் வளைப்ப தற்கு முன்னே அவன் காதிலே பிரகாசித்துக்கொண்டிருந்த குண்டலங்களைப் பறித்துக்கொண்டு எழும்பினர். அப்படி எழும்பின ஜடாயுவினுடைய மார் பிலே பதினலு பாணம் உருவும்படி பிரயோகஞ்செய்து ஆர்ப்பரித்துப் பின் னும் அநேக அஸ்திரங்களைப் பொழிந்தான். அச்சமயத்திலே, ஜடாயு விழுந் தாரென்று அஞ்சி தேவர்கள் பெருமூச்சு விட்டார்கள். அந்தப் பாணங்கள் வந்து தைக்கச் சரீரத்திலே இரத்தம் தாரைதாரையாய் வடிய ஆகாசத்திலே பிரகாசிக்கிற பட்சிராஜனை ஜடாயுவானவர், முன்பு மடிந்த கரன் முதலான இராக்ஷதர்களுடைய இரத்தப்பிரவாகத்தை சமுத்திரமென் றெண்ணி யுண்ட வேகம் பின்பு அந்த ரத்தங்களைக் கக்கி வெள்ளை மேகமாய் நிற்பதுபோல பிரகாசித்தார். இப்படிப் பிரகாசித்த ஜடாயுவானவர் பெருமூச்சுவிட்டு, மறு படியும் அவனுடைய இருபது தோள்களிலும் போய்ப் பாய்ந்து மூக்கினலே கொத்தி, நகங்களினலே குடைந்து சிறகினலடித்து, முத்தாரத்தை யணிந்த அவன் மார்பில் தரித்திருக்கும் கவசத்தின் பூட்டுகளைச் சின்னபின்னமாக அறுத்தார். இப்படி அறுத்த ஜடாயுவின்மேல் நூறுபாணம் பிரயோகஞ் செய்து சரீரமெல்லாம் அழுத்தினன். அத்தருணத்தில், தேவர்கள் அச்சங் கொண்டு வெறுத்துத் திகைத்தார்கள். இவ்விதமாய்த் திகையாததற்கு முன்னே அதிசீக்கிரமாய்ப் பாய்ந்து, ராவணனுடைய வில்லை மூக்கினலே பறித்துக் கொண்டார். அதுகண்டு தேவர்கள் சந்தோஷித்தார்கள். சிவனுடனேகூடக் கைலாசகிரியை யெடுத்தவனுடைய வில்லைப் பறித்துக்கொண்டு பச்சை வில் லுடனே பிரகாசிக்கின்ற மேகம்போல ஜடாயு ஆகாயமண்டலத்திலே பிரகா சித்தார். அவருடைய புஜபலத்தைச் சொல்லத்தக்கவர் யாரிருக்கிறார்கள்? பின்பு சகஸ்திர நேத்திரனை இந்திரனைத் தேவலோகத்திலே ஓடும்படி வாளி னலே ஜெயித்தவனுடைய வில்லை வாயிலிருந்து வாங்கிச் சிவனுடைய வில்லைக் கையாலொடித்த ஸ்ரீ ராமனுடைய தந்தைக்குப் பிராண சிநேகரான ஜடாயு வானவர் காலால் ஒடித்தார். தன்னெதிரே தன்னுடைய வில் ஒடிப்புண்டது கண்டு இராவணன் மிகுந்த கோபாவேசனாகி, திரிபுரங்களைத் தகனஞ்செய்த சிவனுடைய அம்புக்குச் சமானமான ஒரு சூலாயுதத்தை எடுத்து அட்டகாசஞ் செய்து ஜடாயுவின்மேல் எறிந்தான். ஜடாயு அடா இராவண! இதை இவன் சஹிக்கமாட்டானென்று நீ எண்ணவேண்டியதில்லை. என்னுடைய பலத்தைப் பாரென்று அதிக விசையாய் வருகிற சூலத்தை மார்பிலேற்றுக்கொண்டார். அதுகண்டு அதற்குமுன் இப்படிப்பட்ட கொடுமை செய்தவர்களெவரென்று ஒன்றுந் தோற்றாமல் பிரமைகொண்டிருந்த தேவர்கள் தங்கள் தோள்களை கொட்டிக்கொண்டு ஆர்ப்பரித்தார்கள். அந்த சூலம் வேசியரிடத்தில் ஆசை வைத்த தரித்திரர்போலவும், மாதர்களில்லாத வீட்டுக்கு வந்த விருந்துபோல வும், தத்துவ ஞானிகளாகிய யோகீசுவரர்கள்மேல் பாய்ந்த மாதர்களுடைய கண்கள்போலவும் பிரயோசனப்படாமற் போய்விட்டது. இராவணன் வேறே ஆயுத மெடாததற்கு முன்னே அவனது ரதத்திலே பாய்ந்து, தேர்ப்பாகன் தலையைக்கிள்ளி இராவணனுடைய முகத்திலே எறிந்தார். அதுகண்டு அந்த

இராவணனவன் இவன் பலவந்தனென்று அறிந்து, அதிக கோபத்துடனே ஒரு சொர்னச் சாயையான பெரிய தண்டாயுத மெடுத்து, அக்கினிப் புகை பொங்கி யெழும்ப ஜடாயுவை ஓங்கி யடித்தான். அந்த அடிபடவே, பர்வதம்போலப் பூமியிலே விழுந்தார். ஜடாயு விழவே தேரை நேத்திரா கோசரமாகச் சீக்கிரமாய் ஆகாயத்தி லெழும்ப முடுக்கினன். அதுகண்டு சீதை புண்ணினிடத்தில் அக்கினி நுழைந்ததுபோல மனது நொந்து, சரீரம் பதைத்துத் துடித்துப் புரண்டழுதாள். அப்படி அழுததை ஜடாயு கண்டு, அம்மா! நீ பயப்பட்டு அங்கலாய்க்காதே என்று சொல்லிக்கொண் டெழுந்து, எங்கேயடா போகின்றயென்று இராவணனை யதட்டி அவனுடைய தேரின் மேல் போய் விழுந்தார். அதுகண்டு தேவர்களெல்லாருஞ் சந்தோஷித்து அட்டகாசஞ்செய்து கர்ஜித்தார்கள். இவ்விதமாய்ப் பாய்ந்து அவன் கையி லிருந்த தண்டாயுதத்தைப் பறித்து எறிந்துவிட்டு, அந்தத் தேரிலே கட்டி யிருந்த பதினாறு குதிரைகளையும் மூக்கென்கிற வாளினாலே கொத்திக் கொன் றார். அதுகண்டு யமனும் பயந்து கை விதிர்த்தான். இவ்வண்ணமாய்த் தேரையுமழித்து வில்லையுமொடித்து ஜடாயுவானவர், பின்பு தானஞ்செய்யாத லோபிகளுடைய பொக்கிஷம்போல் செலவழியாமல் இருக்கும் அம்புகள யுடைய தூணியையும் பறித்துச் சிதற வெறிந்தார். பின்னும் இராவணனுடைய மார்பையும் தோளையும் பல நகங்களாலும் மூக்கினாலும் கொத்திக் கிழித்துச் சிறகினாலே புடைத்தார். அப்போது இராவணன் மூர்ச்சித்து முடிசாய்ந்திருந் தான். அது கண்டு ஜடாயு அடா இராவண! இவ்வளவுதானா உன்னண்மை? நீ யடைந்த தபோபலம் போய்விட்டதென்றார். அந்தச் சமயத்தில் இராவணன் அதிக கோபமாகி, என்ன சாமர்த்தியம் ஒரு பட்சிக்கென்று மனதிலே நினைத்து, பிரயோகஞ் செய்வதற்கு வேறே ஆயுதம் காணாதவனாகி, இவனை இக்கணம் உயிரை யுண்டுவிடுகிறேனென்று எண்ணி, கையிலிருந்த வாளையுரு விச் சிறகை வெட்டினன். அது தெய்வீகமான வாளானபடியினாலே தப்பா மற்பட்டது. அந்த காலத்திலும் பலம் தோற்கவில்லை. ஒருவராலும் தடுக்கப் படாத அந்தத் தெய்வ வாளினாலே ஜடாயு ஆயுள் முடிந்திருந்தபடியினால் தன் னுடைய சிறகு முறிந்து, இந்திரனுடைய வச்சிராயுதம்பட்டுச் சிறகற்ற மலை போலப் பூமியிலே விழுந்தார். அக்காலத்தில் தேவர்கள் பயந்து ஓட்டமெடுத் தார்கள். இருடிகளும் சீதை துணை யிழந்தாளென்று வருத்தப்பட்டார்கள். ஜடாயுவின்மேல் சந்தோஷமாய் விஷ்ணுலோகத்து நித்திய சூரிகள் சொர்ன புட்பமாரி பொழிந்தார்கள். ஜடாயு விழுந்தது கண்டு சீதை அதிக துக்கமாகி, வலையிலகப்பட்ட மான்போலப் பதைத்துச் சோர்ந்து நொந்து, உள்ளமயங்கிப் பெருமூச்சுவிட்டு, ஒரு துணையுங் காணாதவளாய்க் கொழுகொம் பொடிந்து போன புட்பக் கொடிபோல விழுந்து பிரலாபிக்கின்றாள்.

கவி

வன்றுணை யுளனென வந்த மன்னனும்
பொன்றின னெனக்கினிப் புகலெ னென்கின்றாள்
இன்றுணை பிரிந்திருந் தின்னலெய்திய
அன்றிலம் பெடையென வாற்றி னுள்ளாரோ.

அல்லலுற் றேனைவந் தஞ்ச லென்றவிர்
நல்லவன் சேற்பதே நரகன் வெல்வதே
வெல்வதும் பாவமோ வேதம் பொய்க்குமோ
இல்லையோ வறமென விரங்கி யேங்கினாள்.

நாணிலே னுரைகொடு நடந்த கம்பிமீர்
நீணிலை யறநெறி நின்று சோர்க்கெலாம்
ஆணியை யுந்தையர்க் கமைந்த வன்பினைக்
காணிய வம்மெனக் கலங்கி வீம்பினாள்.

கற்பழி யாமையென் கடமை யாயினும்
பொற்பழி யாவலம் பொருந்தும் போர்வலான்
விற்பழி யுண்டது வினையி னேன்வந்த
இற்பழி யுண்டதென் றிரங்கி யேங்கினாள்.

எல்லையில் விசும்பிடை யிருந்த சேயினாய்
சொல்லிய லாய்நெறி தொடர்ந்த தோழமை
கல்லிய லருங்கடன் கழித்த கம்பியைப்
புல்லுதி யோவெனப் பொருமிப் பொங்கினாள்.

இவர்களுக்குத் துணையு முண்டென்று எண்ணும்படியாக வந்து எதிர்த்த ஜடாயு இராஜனை மாமனுரும் விழுந்துபோனுர். இனியென்ன கதியுண் டென்று எண்ணிச் சேவலாகிய துணைபிரிந்த பெட்டை அன்றில்போலக் கிலே சித்தாள். ஆபத்துண்டாகி துயரத்தினுலே அழும் என்னை வந்து பயப்படாதே என்று ஆதரித்த இந்த உத்தமன் தோற்பதும், நரகத்துக்கு ஏதுவான பாவி வெல்வதுமாயிற்றல்லவா ? பாபம் எங்கேயாயினும் வெல்லுமா ? வேதம் பொய்க் குமா ? தர்மமில்லையோ ? என்று சொன்னுள். ஓ நாணமில்லாத என் வார்த் தையைக் கேட்டு நடந்த இராச குமாரர்களே ! தர்மவழியில் நிற்பவர்களுக் கெல்லாம் ஒரு நிலை பேரியிருந்த உங்கள் தகப்பனுருக்கு உரிய பிராண சிநே கரைப் பார்ப்பதற்காயினும் வாருங்களென்று சொல்லிக் கலங்கி யழுதாள். பின்னும், ஜடாயுவைத் தேவலோகத்திலே போயிருக்கிற சக்கரவர்த்தியான வர் முன்னுளிலே சொல்லி யிருந்த தோழமைக்கடனை இவ்விடத்திலே கழித்து விட்டு, அவ்விடத்தில் அவருடன் கூட இருக்கப் போனீரோ ? என்றுஞ் சொல் லித் துக்கித்தாள். கற்பழியாமலிருப்பது என் கடனுனலும், அதிக பராக்கிர மத்தைப் பொருந்திய என் பிராண நாயகருடைய வில்லுக்குப் பழியுண்டா யிற்று. அதுவல்லாமல் தீவினையுடைய நான் பிறந்த குடிக்குப் பழியுண்டாயிற் றென்றும் சொல்லி ஏங்கினுள். இப்படி சீதை ஏங்கி யழுவதையும், சிறகிழந்து விழுந்த ஜடாயுவினுடைய நிர்வாகத்தையும் இராவணன் அறிந்து, நிற்கலாகா தென்று தேரிலே வைத்திருந்த மண்ணுடனேகூடச் சீதையை யெடுத்துத் தோளின்மேல் வைத்துக்கொண்டு ஆகாய மார்க்கமே போனுன். அப்படி அந் தப் பாவி போவதை யறிந்து கண்ணும் மனமுஞ் சுழல மகா பதிவிரதையான சீதை பிரக்ஞைதப்பி ஒன்றும் தெரியாமல், அம்மண்ணிலே தன்னை மறந்து சோர்ந்தாள். முன் விழுந்த ஜடாயுவானவர் கொஞ்சம் மூர்ச்சை தெளிந்து

ஆகாயத்தைப் பார்த்தார். அதி சீக்கிரமாய் இராட்சதன் போவதைக் கண்டு மனது புலர்ந்து, மிகுந்த துயரத்துடனே பிரலாபிக்கின்றார்.

கவி

வந்திலர் மைந்தர்கம் மருகிக் கெய்திய
வெந்துயர் துடைத்தன ரென்னு மெய்ப்புகழ்
தந்திலர் விதியினர் தரும வேலியைச்
சிந்தினர் மேலினிச் செயலென் னுலகங்கொலோ

வெற்றிய ருளரெனின் மின்னி னுண்ணிடைப்
பொற்றொடிக் கிங்கிலே புகுதற் பாலதோ
உற்றதை யின்னதென் றுணர கிற்றிலேன்
சிற்றவை வஞ்சனை முடியச் செய்ததோ.

வஞ்சனை பாம்பனை யாகப் பள்ளிசேர்
அஞ்சன வண்ணனே யிராம னுதலால்
வெஞ்சின வரக்கனுல் வெல்லற் பாலனே
வஞ்சனை யிழைத்தனன் கள்ள மாயையால்.

வேரற வரக்கரை வென்று வம்பழி
தீருமென் சிறுவனுந் தீண்ட வஞ்சுமால்
ஆரியன் தேவியை யரக்க னன்மலர்ப்
பேருல களித்தவன் பிழைப்பில் சாபத்தால்.

என் சற்புத்திரரான இராமலட்சுமணர்கள் இன்னம் வரவில்லையே! மருமகளுக்கு வந்த கிலேசத்தை நான் தீர்த்தேனென்னும் கீர்த்தியை யெனக்குக் கொடாமற்போன விதியானது தர்ம வேலியை முறித்து விட்டதே! இனி மேல் என்ன நடக்குமோ? வீரர்களான அவ் விராமலட்சுமணர்கள் சமீபத்திலிருந்தால் சீதைக்கு இவ்விதமான ஆபத்து வருமா? அவர்கள் போனவிடத்தில் நடந்த சமாசாரமும் இன்னதென்று தெரியவில்லையே! சிறிய தாயார் செய்த வஞ்சனைப்படிதான் முடியவந்ததோ? சேஷசாயியான ஸ்ரீமந் நாராயணனே ஸ்ரீ ராமனுகையால், இவ் விராட்சதனுலே அவன் ஜெயிக்கப்படுவானு? இராவணன் ஏதோ கபடமான மாயையினுலே வஞ்சனை செய்தான். எவ்விதமும் இராட்சதர்களை என்னுடைய மகன் வேரறக்கொன்று ஜெயித்து இப்பழியைத் தீர்த்துக்கொள்ளுவான். இந்தப்பாவி பிரமனுடைய சாபத்தினுலே ஸ்ரீ ராமனுடைய தேவியைத் தீண்டமாட்டானென்று இவ் வண்ணம் நினைத்து நினைத்துச் சொல்லிச் சொல்லி, மருமகள் சிறைபட்டாளென்று மனம் புழுங்கி, எனக்கும் சிறகு அற்றதாவென்று கிலேசித்தார். உடனே என்னுடைய சிறகு அற்றலும் சீதையினுடைய கற்பென்னும் காவல் அற்றதென்று எண்ணி அத்துக்கம் நீங்கினவராகி, தன்னுடைய சிறகிலிருந்து இரத்தம் ஆறுபோற் பெருகி வழிய, பின்னும் சீதையை மீட்டுக்கொள்ளாமற் போனேனே. யென்னு மானமும், மக்களிடத்திலே போயிருக்கும் ஆசையும், மனதிலே நிறைந்திருக்க நித்திரை போன்றுபோலப் பிரக்ஞை தப்பியிருந்தார். இரா

வணனுஞ் சீதையை எடுத்துக்கொண்டு சீக்கிரமாய் இலங்கை போய்ச் சேர்ந்து, திருமேனியை தீண்டுவதற்குப் பயந்து, விஷத்திற்குச் சமானமான பொல்லாத இராட்சத ஸ்திரீகளில் அனேகரைக் காவலாகப் பொருத்தி, அசோக வனத்திலே இராட்சத ஸ்திரீகளுக்கு நடுவே சீதாபிராட்டியைச் சிறை வைத்தான்.

இவ்விடத்துச் சமாசாரம் இவ்வித மிருக்க, பொன்மானின் பிறகே போன தன்னுடைய பிராண நாயகருடைய செய்கையை அறிந்து வாருமென்று ஜானகி அனுப்பிய இலட்சுமணர் சமாசாரம் இனிமேல் சொல்லுகிறேன். இளைய பெருமாளானவர் சீதாபிராட்டியார் தனியே யிருப்பதை நினைத்து அதிக துயரத்துடனே மனது பதைக்க, முன்னளிலே சித்திரகூட பர்வதத்திலிருந்து ஸ்ரீ ராமனைப் பிரிந்து போகமாட்டாமல் அயோத்தியாபுரிக்குத் துயரத்துடனே போன பரதனைப்போல் கிலேசத்துடனே நடந்து, அதி சீக்கிரமாய்ப் போய்த் திரும்புவோ மென்று கடலிலே கப்பல் ஓடுவதுபோல வேகமாய்ப் போனர். அவ்வாறுபோன இலட்சுமணர் அநேகம் செந்தாமரைப் புட்பம் புட்பித்துக்கொண்டு நீலமேகமானது வந்திழிந்ததற்குச் சமானமான திருவழகுடைய ஸ்ரீ ராமபிரானைக் கண்டார். கண்டு கண்ணும் மனமும் களித்தார். மாரீசனுடைய குரலைகேட்டுச் சீதை பெண் பிறப்பிற்கு உரித்தான பேதமையானது மயக்க, மிகவும் துயரமடைவாளென்று அதிக சஞ்சலங் கொண்டு திரும்பி வருகின்ற கண்ணனை ஸ்ரீ ராமன் தம்பியைக் கண்ணினாலே கண்டார். காணவே, வஞ்சனையாக அழைத்து விழுந்த இராட்சதனுடைய குரலைக்கேட்டுப் பொய்யென்று எண்ணமல் மிகுந்த துயரமாய்ச் சீதையானவள் கடூரமான வார்த்தைகளைச் சொல்லி அனுப்ப, என்னுடைய க்ஷேமத்தை விசாரிக்கும் நிமித்தமாய்த் தன் சொல்லைத் தள்ளி வந்து இவ்வேளை மனம்தளர்கின்ற என்னிடத்திற்கு என் சொல்லைத் தள்ளித் தனியே தன் மனமும் தளர்ந்து இளைய வீரன் வருவது என்ன தெரியாமை? இது நன்றாயிருந்ததென்று நினைத்து, விதி செய்கிறது ஆச்சரிய மென்றும் எண்ணிக்கொண்டு நின்ற லோகநாயகனை லட்சுமணர் சமீபத்தில் வந்து பொற்பிரகாசமாகிய பாதாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாகச் சேவித்தார். அப்படிச் சேவித்த இலட்சுமணரை சீக்கிரமாக மின்னல்போலப் பூணூல் பிரகாசிக்கின்ற திருமார்பில் அழுந்தத் தழுவிக்கொண்டு, அப்பா! என்னை நினைத்து என்ன நிமித்தம் வந்தாயென்று தமையனர் கேட்க, தம்பியானவர் சொல்லுகிறார்: உலகத்திலில்லாத கொடிய சப்தம் அகஸ்மீயமாய் வந்து காதில் விழவே, பிராட்டியார் மிகவும் துயரமானர். அது இராட்சதனுடைய குரல் அம்மா! நீர் கிலேசிக்க வேண்டாமென்று அடியேன் எத்தனையாகச் சொன்னாலும் மெய்யென்று கொள்ளாமல் மனமுருகி, இவ்விடத்தில் நில்லாதே! நீ யறிந்துவா போவென்று சொல்லி மிகுந்த கோபத்துடனேயும் பிரலாபித்து நீ போகாமல் இங்கே யிருந்தையே யாலை நான் நெருப்பிலே விழுந்து சாகிறேனென்று துரிதமாக அக்கினியை நோக்கி நடந்தபடியினாலே நான் பயந்து, போகாமலிருந்தால் இவர் இறவாமலிருக்கிறதில்லை. ஆகையால் அப்படி நெருப்பில் விழுகிறதை பார்த்துக்கொண்டிருக்கிறது தர்மமல்லவே யென்று அடியேன் வந்ததென்று சொன்னர். அதற்கு ஸ்ரீ ராமன் அந்த மாயமானின் குரலைக் கேட்ட சீதையானவள் இறவாமல் இருக்கிறதில்லை,

அதைக் குறித்து அவள் செய்கிற பிரயத்தினத்தையோ இவனாலே தடுக்க முடியாது. அவளோ இவன் சொன்ன சொல்லை மெய்யென்று மனதிலே வையாள். உலகத்திலே பதனமாகக் காக்காமலிருக்கிற பொருளுக்கு நஷ்டம் வருகிறது சகஜம். ஆகையால் புரைவராமல் பிரயத்தினஞ்செய்து அபகரித்துக்கொண்டு போகிறவர்கள் எப்படியும் இவளைப் பிரிக்கவேணுமென்றே செய்த வஞ்சனை இது என்று திருவுளத்தில் நினைத்தவராய்த் தம்பியைப் பார்த்து, அப்பா! நீ வந்துவிட்டது உன்னிடத்தில் குற்றமல்ல. அந்தச் சீதை கிலேசத்தினாலே சொன்ன சொல்லால் கூடிவருகிறது இல்லையென்று தெரிந்திருந்த நீயானாலும் அவள் மனமறுகி விதனத்துடனே சொன்ன நிஷ்டுரமாவது நீங்குமென்றல்லவா எண்ணித் தெளிந்துவந்தாய். அவள் மாத்திரமென்ன? நான் முன்பு நீ சொல்லித் தடுத்தும் அது கேளாமல் அந்த மானைப் பிடிக்கிறேனென்று தானே வந்தேன். அந்தப்படி வந்த என்னாலல்லவா காரியக் கேடானது. ஐயோ! என்று சொல்லி, அதையே நினைத்து நினைத்து மனங் கரைந்து, பின்னும் நெடுநேரம் விருதாவாக இவ்விடத்தில்நின்று யோசனை செய்கிறதிலே காரியமென்ன? அந்தக் குயிலுக்கு இணையாகிய சீதையைக் கண்டால் துயரந் தீருமேயல்லாமல் வேறில்லை என்று தம்பியும் தாமும் கடுகநடந்து தங்களுடைய பாணத்தின் வேகம்போல் அநேக யோசனை தூரத்தை அதிசீக்கிரத்திலே கடந்து, பொற்பிரதிமைபோலப் பிரகாசிக்கின்ற சீதை யிருந்த சாலையிலே வந்து சேர்ந்தார்கள். அப்படி ஓடிவந்த ஸ்ரீ ராமலட்சுமணர்கள் பர்ணகசாலையிலும் சாலையிலும் பார்த்துச் சீதையைக் காணமல், சரீரத்தைவிட்டுப் பிரிந்து போன ஜீவன் திரும்பிவந்து தன் சரீரத்தைக் காணமல் திகைத்து நின்றதுபோல நின்றார்கள். ஸ்ரீ ராமர் மிகுந்த கிலேசத்துடனே ரத்தினகசிதமாகிய சர்வாபரண பூஷிதையான தம்முடைய தேவியைக் காணமல், ஒருவன் தான் தேடிவைத்த மகாநிதியை மண்ணுடனேகூடத் திருடர் திருடிக்கொண்டுபோக, அதை வந்துபார்த்தவன் திகைத்ததுபோல் மனம் திகைத்து நின்றார். அப்படிச் சர்வாந்தரியாமியான அந்தப் பகவானுடைய திருவுளங் கலங்கித் திகைத்துச் சுழலவே பூமி சுழன்றது. அஷ்டகுல கிரிகளும் சுழன்றது. திவ்விய ஞான மூள்ளவர்களுடைய எண்ணமும் சுழன்றது. சப்தசமுத்திரமும் சுழன்றது. ஆகாயமும் சுழன்றது. வேதமும் சுழன்றது. பிர்மதேவனுடைய கண்ணுஞ் சுழன்றது. சந்திரனும் சூரியனும் சுழன்றார்கள். அத்தருணத்திலே, இந்தப் பரம புருஷன் தர்மத்தையே சீறுவானே? தேவர்களையே சீறுவானே? முனீஸ்வரர்களையே சீறுவானே? வஞ்சகர்களுடைய பலத்தையே சீறுவானே? வேதத்தையே சீறுவானே? இனியேதாய் முடியுமோவென்று உலகத்திலேயுள்ள சகல சராசரங்களும் பயந்து நடுங்கி மயங்கித் தியங்கி அந்த நீலமேகஸ்வரூபனான அந்த ஸ்ரீ ராமச்சந்திரனுடைய மனது கலங்குதலால், மூலகாரணனானவனுடனேகூடக் கணக்கில்லாத பலபல ரூப வஸ்துக்கள் அரூப வஸ்துக்களெல்லாம் முடிந்து போகின்ற பிரளயகாலம்போல, மேலது கீழதாய்க் கீழது மேலதாய்க் கலங்கியதுகள். அவ்விடத்தில் பூமியிலே தேர்வண்டி யோடின குறியையும் கண்டார்கள். சீதையை எடுத்துப்போக வந்தவன் அவளைத் தீண்டுகிறதற்குப் பயப்பட்டு பூமியுடனே பேர்த்தெடுத்துக்கொண்டு போனதும் அறிந்தார்கள். அந்தச் சமயத்தில் இவ்விடத்திலே நின்று பலமில்லாதவர்கள்போலப்

பலபல யோசனை செய்கிறதில் பிரயோஜனமென்ன? அந்தப் பாவிகள் தூரத்திலே போய்விடாததற்கு முன்னமேபோய்த் தொடருவோமென்று, இளைய பெருமாள் சொன்னார். ஆம் அதுவே யுத்தமமென்று ஸ்ரீ ராமரும் தம்பியுடன் அம்பறாத்தூணி முதலானதுகள் தாங்கிக்கொண்டு, மலைகள் மரங்கள் எல்லாம் மடிந்துபோகப் பெரிய பர்வதம் உருண்டு போனதுபோல, நிலத்தில் அழுந்திப் போன இராவணனுடைய தேர் வண்டிக்காற் சுவட்டின் வழியே துரிதமாய்ப் போனார்கள். அவன் பூமியில் தேர்விட்டுக்கொண்டுபோன தூரமெல்லாம் போய் அப்பால் ஆகாயமார்க்கமாய் எழும்பத் தேர்விட்டிருந்த படியினாலே, தேர்ச்சுவடு தெரியாமல் வெந்த புண்ணிலே வேல் நுழைந்ததுபோல மனது மிகவும் புழுங்கி இனி யோசனைசெய்து நாம் என்ன செய்கிறது தம்பியென்று ஸ்ரீ ராமர் கேட்க, சுவாமி! இரதம் தெற்கு நோக்கிப் போயிருக்கின்றது நன்றாகத் தெரிந்தது. ஆயினும் அந்தத்தேர் ஆகாயமார்க்கத்திலே போய் இருக்கின்றது. ஆகாயம் நம்முடைய பாணத்துக்கு நெடுந்தூரமானதல்ல. வீணாக விம்மி இவ்விடத்திலே நிற்கிறதில் பிரயோசனமென்ன? தென்திசை போவோமென்று இலட்சுமணர் சொல்லவே, மெய்தான். அதுவே காரியமென்று சுவாமியும் இளையவரும் தெற்குத் திசையை நோக்கி இரண்டுயோசனை தூரம் போனார்கள். அவ்விடத்திலே சண்டமாருதக் காற்றடிக்க, அதனால் முறிந்து விழுந்து கிடக்கிற பர்வதம்போல வீணையெழுதி யிருக்கின்ற துஜமொன்று பூமியிலே கிடந்ததைப் பார்த்தார்கள். பார்த்தவுடனே, சீதை நிமித்தம் தேவர்கள் யாரோவந்து அந்தப் பாவிகளுடனே யுத்தஞ் செய்கிறார்களென்று சந்தோஷமாக நினைத்து அந்தத் துஜத்தை உற்றுப்பார்க்க அது பட்சியினுடைய மூக்கினால் ஒடிபட்டதாகக் குறிப்பிருக்கிறதென்று அறிந்து கமலநேத்திரங்களில் ஜலந்துளிக்க ஸ்ரீ ராமர் சொன்னார். அதுகண்டு, இலட்சுமணர் சுவாமி! உங்கள் தகப்பனாராகிய ஜடாயுவே அதி சீக்கிரமாக வந்து யுத்தஞ் செய்தார். அவர் மூக்கினால்தான் இது ஒடிந்திருக்கின்றது, அப்பால் என்ன நடந்ததோ தெரியவில்லை. அவர் தனிமையானபடியினாலும் விருத்தரானபடியினாலும் நாம் சீக்கிரமாகப் போய்ச்சேரவேணும். நாம்வந்து கூடுகிறமட்டுந் தடுத்துக்கொண்டு இருப்பாரே யல்லாமல் கொஞ்சத்தில் விடுகிறவரல்லர். ஒருவேளை ஜெயித்து மீட்டிருந்தாலும் மீட்டிருக்கலாம், வேறே யோசனைசெய்து காலதாமசம் செய்கிறதில் பிரயோசனம் இல்லையென்று லட்சுமணர் சொல்ல, மகாநுபாவரான ஸ்ரீ ராமரும் தொடர்ந்து போகிறதே நல்லதென்று சொல்ல, இருவரும் அதி வேகமாய் சுழற்காற்று போலவும், காற்றடி போலவும் போகிறவர்கள் ஆகாயத்திலே பிரகாசிக்கிற பச்சைவில் முறிந்து கிடக்கிறதுபோலவும், சமுத்திரத்தின் கரைபோலவும், ஒரு பெரிய வில் முறிந்து கிடந்தது கண்டார்கள், சுவாமியானவர், லட்சுமண! இதோ வில் கிடக்கிறது. இது பூர்வத்திலே சமுத்திரங் கடைந்த மந்திரகிரிபோல இருக்கின்றது. இந்தவில்லை ஒடித்த மகா புருஷனுடைய பலத்தைப் பாரென்று சொல்ல, இளையபெருமாள் அவ்விடத்தில் நின்று அதைப் பார்த்தார். பின்னும் வெகுதூரம் நடந்து அப்பால் ஒரு பெரிய சூலமும் அம்பறாத்தூணியும் ஆகிய இரண்டும் இரண்டு பர்வதம்போல் கிடக்கிறதைக் கண்டு அதிசயங்கொண்டார்கள். பின்னும் அப்புறம் நடக்கிறபோது, வானத்திலே பிரகாசிக்கின்ற நவக்கிரகங்கள் நட்சத்திரங்கள் முதலாகிய

ஜோதிஸ்வரூபங்களெல்லாம் ஒருமிக்கக் கூடியிருக்கிறதுபோல, அந்த ஆரணிய மெல்லாம் நிறைந்து ஜ்வாலித்துக் கொண்டிருக்கிற கவசத்தைக் கண்டார்கள். அப்பால் வாயுவேகமான குதிரைகளும் சாரதியும் மாண்டு விழுந்துகிடந்த இடம் போய்ச் சேர்ந்தார்கள். அப்பால் ரத்தம் செவ்வானம்போலப் பரவிக் கிடக் கிறதுங் கண்டார்கள். கண்டு ஆச்சரியப்பட்டுத் தகப்பனூர் சாமர்த்தியத்தை என்ன சொல்லலாமென்று கைகளை விதிர்த்து அப்பால் நடக்கிறபோது, "பிர ளய காலத்திலே ஆகாயத்தைவிட்டு அநேக சூரியமண்டலம் பூமியில் விழுந்து கிடக்கிறதுபோலப் பல குண்டலங்களும் ரத்னகசிதமான பலவித ஆபரணங் களும் கிடக்கிறதைக் கண்டு, தம்பி! அநேக வாகு வலயங்களும் அநேக கிரீடங் களும் விழுந்து கிடக்கின்றதுகளாகையால், நம்முடைய தகப்டனுடனே வெகு பேர் ராட்சதர்கள் யுத்தஞ் செய்கிறார்களென்று ஸ்ரீராமர் சொல்ல, சுமித்திரை குமாரரான லட்சுமணர் அப்படியானால் பலதலையும் பல தோளுமுடைய ராவண னொருவனே யுத்தஞ்செய்து நம்முடைய தகப்பனூரை இவ்வளவு தூரங் கொண்டு போனவ னுகவேணுமென்று சொன்னர். அதுகேட்டுக் கண்களிலே நெருப் புப்பொறி பறக்கப் பார்த்து, அப்பால் அதிசீக்கிரமாக நடக்கிறபோது, ரத்த சமுத்திரத்திலே மந்தரகிரிபோல விழுந்து கிடக்கின்ற தகப்பனூரைக் கண்டார் கள். காணவே, செந்தாமரைக் கண்களிலிருந்து துளித்துளியாய் நீர் சொரி யப் பிராணபதமாகிய அன்புண்டான தகப்பனூர் திருமேனியின்மேல் மேகஸ்வ ரூபனை ஸ்ரீராமர் கைலாசகிரியின் மீது நீலகிரி விழுகிறது போல விழுந்து, ஒரு நாழிகை மட்டும் ஸ்வாசமில்லாமல் ஸ்தம்பித்துப் பிரக்ஞை தப்பியிருக்க, லட்சுமணர் பயந்து, கைகளாலெடுத்து, குளிர்ந்த அருவிநீரைத் தெளித்து உப சாரஞ்செய்தார். அப்போது கமலநேத்திரங்களை விழித்துப் பார்த்துத் துக்கிக் கத் தலைப்பட்டார்.

கவி

தந்தா தையரைத் தனையர் கொலைசேர்ந்தார்
முந்தாரே யுள்ளார் முடிந்தான் முனையொருவன்
எந்தாயோ வெற்காக நீயு மிறந்தனையோ
அந்தோ வினையே னருங்கூற்ற மானேனே.,

பின்னுறுவ தோராதே பேதுறுவேன் பெண்பாலாள்
தன்னுருவ நீர்ப்பான் றனியுறுவ தோராதே
உன்னுறவுநீ தீர்த்தா நோயுருவு மில்லாதேன்
என்னுறுவான் வேண்டி யிடருறுவே னென்றுயே.

மாண்டேனே யன்றே மறையோர் குறைமுடிப்பான்
பூண்டேன் வீரத மதனு னுயிர்பொறுப்பேன்
நீண்டேன் மரம்போல நின்றெழிந்த புன்றெழிலேன்
வேண்டே னிம்மாமாயப் புன்பிறவி வேண்டேனே.

என்றரம் பற்றுண்ண வேன்றையைச் சான்றையைக்
கொன்றனு நின்றான் கொலையுண்டு நீகிடந்தாய்
வன்றாட் கிலையேந்தி வாளிக் கடல்சுமந்து
நின்றேனு நின்றே னெடுமரம்போ னின்றேனே.

சொல்லுடையா ரென்போ லினியுளரோ தொல்வினையேன்
இல்லுடையாள் காண விறகுடையா யெண்ணிலாப்
பல்லுடையா யுன்னைப் படையுடையான் கொன்றகல
வில்லுடையே னின்றேன் விறலுடையே னல்லேனே.

ஐயா! தங்கள் பிதாக்களைக் கொன்ற பிள்ளைகள் பூர்வத்தில் யாரிருந்தார்கள்? முன்னொருவர் மடிந்துபோனார். இப்போதெனக்காக நீரும் இறந்து போனீர். ஐயோ? பாபகர்மத்தையுடைய நான் உங்களுக்கு எமனாக வந்து வாய்த்தேனே? பின்வரும் காரியம் அறியாமல் பெண்ஜாதி வார்த்தையைக் கேட்டு இப்படித் துயரத்தை அநுபவிக்கின்ற நான் தனியே யிருப்பதை நினையாமல், நீரும் உம்முடைய உறவுதீர்ந்து போனீரோ? ஒருறவும் இல்லாதவனாகி வேறெயென்ன பயனைப்பெற இச்சித்து இனி கிலேசப்படப்போகிறேன்? ஐயோ! நான் முன்னமே மாண்டுபோவேன். ஏன் அப்படியாகவில்லை யென்றால் ரிஷீஸ்வரர்களுடைய குறைகளைத் தீர்க்கும்படியாக ஒரு விரதம் பூண்டு கொண்டேன். அதனால் உயிரைச் சுமந்துகொண்டு ஒரு மரம்போல நிற்கின்றேன். அற்பமாகிய செய்கையையுடைய நான் இந்த மகா மாயா சம்பந்தமாகிய பிறவியை இனி வேண்டேன். என் மனையாட்டி ஒருவர்கையிலே பிடியுண்ண, அதுநிமித்தம் எதிர்த்து யுத்தஞ்செய்த தர்மஸ்வரூபரான உம்மைக் கொன்றவனும் ஜீவனுடன் இருக்கிறான். அவன் கையினாலே கொல்லப்பட்டு நீரும் விழுந்து கிடக்கிறீர். பெரிய வில்லையும் ஏந்திக்கொண்டு சமுத்திரம்போல அநேகம் பாணங்களையும் சுமந்துகொண்டிருக்கின்ற நானும் ஒரு பெரியமரம் போலிருக்கிறேன். கீர்த்தி சம்பாதித்தவர்களில் என்னைப்போல யாரிருக்கிறார்கள்? ஓ நீண்ட சிறகினையுடைய என் பிதாவே! என்னுடைய பெண்ஜாதி பார்த்துக்கொண்டிருக்க, உம்மை எண்ணத் தொலையாத பற்களையும் ஆயுதங்களையுமுடைய ராட்சதன் சிறகை வெட்டிக் கொன்றுவிட்டுப்போக நானுங் கையிலே வில்லை வைத்துக்கொண்டு ஜீவனுடனேயும் இருக்கிறேன். நான் பலசாலியல்லவோ? வென்று இப்படிப் பலபல விதமாகச் சொல்லி அழுதுமயங்க தம்பியும் அப்படியே பிரலாபித்தார். அந்தச் சமயத்திலே ஜடாயு வானவர் கொஞ்சம் மூர்ச்சை தெளிந்து, கண்ணைவிழித்து இருவரையும் பார்த்தார். நடந்த சமாசாரந் தெரியாமல் உயிர் நடுங்கப் பெருமூச்சுவிட்டு, பிள்ளைகளைக் கண்டதனால் மனது குளிர்ந்து, அற்ற சிறகும் பிராணனும் சப்தலோகாதிபத்தியமும் பெற்றதுபோலச் சந்தோஷித்து, இனி என்பழி தீர்த்துக்கொண்டேன். நான் செய்த பாக்கியத்தினாலே என்னுடைய பயனில்லாத நிந்தையையுடைய சரீரத்தை இன்றையத்தினம் போக்கிவிடுகிறேன். இந்தத் தருணத்தில் எனக்கு உங்கள் தரிசனம் கிடைத்தது. ஓ புண்ணிய புருஷர்களே! வாருங்களென்று இராவணனுடைய மகுடங்களைக் கீழே தள்ளி அவன் தலைகளைக் கொத்திய மூக்கினாலே குமாரர்கள் இருவரையும் உச்சி முகர்ந்து, அப்பா! இந்தக் காரியம் வஞ்சனையினாலே வந்ததென்று முன்னமேதானே என் மனதிலே நினைக்கப்பட்டது. ஆனாலும் அருந்ததிக்கு ஒப்பாகிய சீதாப்பிராட்டியை விட்டு இருவரும் நீங்கிப் போனீர்களோவென்று சொன்னார். சொல்லவே, இராமானுஜரான லட்சுமணர் மாயமான் வந்தது முதலாக நடந்த சமாச்சார

மெல்லாம் ஒன்றுவது விடாமல் சொன்னர். அதுகளையெல்லாங் கேட்டு இவர் களுக்குக் கிலேசம் வராமல் தேறச்சொல்கிறது நல்லதென் றெண்ணி, ஜடாயு வானவர் சொல்லுகிறார்: ஓ என்னுடைய பிராணபத்மான குமாரர்களே! கேளுங்கள். இன்பதுன்பங்கள் விதிப்படிக்கு நடக்குமே யல்லாமல் அதற்கு அதிசயமாக எவ்வளவாகிலும் ஒருவரா லமைக்கக்கூடுமா? ஆகிலும் நாம் மதியின் வலுமையைக்கொண்டு அந்த விதியை வெல்லமாட்டுவோமா? துயரம் வந்து பிரவேசித்த மனதுக்கு மேலும் மேலும் கோபமும் கேடுமுண்டாக்கிக் கொள்ளுகிறது தெரியாமையே. இந்த லோகமெல்லாஞ் சிருஷ்டித்த பிரம னுடைய தலையை அறுப்பித்த விதிக்கும் அருமையானது வேறு ஒன்றிருக் கின்றதா? சுகமும் துக்கமும் வருங்காலத்தில் அதுகளை வராமல் தடுப்போ மென்பது உண்மையாகுமா? முப்புரங்களை யெரித்த சிவன் தன் கையிலே தலை யோட்டை யேந்திக்கொண்டு இரந்தது கேட்டறியீர்களா? சூரியனைச் சர்ப்பம் விழுங்கிவிடுகிறதும், சந்திரன் வளர்ந்து தேய்கிறதும் திருஷ்டாந்தமாக இருக் கின்றதுகளே, தேவேந்திரன் தேவகுருவின் வார்த்தையினாலே பட்டது சொல்லி முடியுமா? அத்தேவேந்திரன் சம்பராசுரனாலேபட்ட பிரயாசமோ மிதமில்லை. அந்த அசுரனை உங்கள் தகப்பனார் கொன்றல்லவோ அந்தப் பிரயாசத்தைத் தீர்த்தார். பஞ்சவர்னக் கிளிபோலப் பாஷிக்கின்ற சீதையை நீங்கள் பிரிந்தது என்னவென்றால், தர்மமும் தேவர்கள் படுகின்ற துயரமும் செய்த செய்கையே. கள்ளர் போர் செய்கின்ற ராட்சதர்க ளென்கிறவர்களைக் களைந்து அநேக காலம் வாழுங்கள். மாவடுவைப்போலக் கண்களையும் நீண்ட கூந்தலையுமுடைய சீதையை இராவணன் தீண்டப் பயப்பட்டுப் பூமியுடனேகூட எடுத்துக்கொண்டு போகிறபோது, நான் கண்டு தடுத்து எதிர்த்து என்னாலே யானமட்டும் போர் செய்தேன். அவன் தவத்தினாலே தனக்குக் கிடைத்த வாள்கொண்டு வெட்டி னான். நான் இங்கே விழுந்தேன். இதுதான் இன்றையத்தினம் நடந்த சமாச் சாரமென்று சொன்னர். அந்த வார்த்தைவந்து காதிலே விழாததற்குமுன்னே ரகுநாதருக்குக் கண்கள் உதிரம்போலச் சிவந்தன. அதிக கோபத்தினாலே பெருமூச்சுவிட்டார். புருவங்கள் நெரிந்து வளைந்ததுகள். அப்போது சூரியன்-சந்திரன் - அக்கினி என்று சொல்லப்பட்ட முச்சுடர்களும் பிரகாசம் இழந் ததுகள். அண்டகோளகை பிளந்தது. அஷ்ட கிரிகளுங் கிழிந்ததுகள். மற் றும் பூமி சுழலவும், மலைகளெல்லாஞ் சுழலவும், சமுத்திரமுஞ் சுழலவும், பிரமா வுஞ் சுழன்றான். அத்தருணத்தில், இந்த ஸ்ரீ ராமரே அளவிடப்படாத எல் லாப் பொருள்களுமா யிருக்கிறரென்கிற பரம ரகசியம் தெரியவந்தது. ஸ்ரீ ராமரிடத்திலே பிறந்த கோபம் யார்மேலே வருமோ வென்று உலகமெல் லாம் பயந்து மயங்கும் சமயத்தில், கோபாக்கினிபுகையும் ஜ்வாலையு முண் டாக நகைத்து ஸ்ரீ ராமர் சொல்லுகிறார்: தனியே யிருந்த சீதையாகிய ஒரு பெண்ணைப் பேதையான ராக்ஷதன் கொண்டு போகவும், நீரிப்படிப்பட்ட உபத்திரவத்தை யடையவும், நான் சும்மா விடுவேனே? எட்டுத் திக்குஞ் சூழ்ந் திருக்கின்ற உலகங்களையும் பிரமா முதலான தேவர்களுடனே கூட அடியோடே இப்பொழுதே பேர்த்து விடுகிறேன். நக்ஷத்திரங்கள் உதிர்க்கிறதும், சந்திர சூரியர்கள் பிதிர்கிறதும், ஆகாயமெல்லாம் அக்கினிஜ்வாலைகள் பிரவேசிக் கிறதும், கடலும் நிலமும் மற்றச் சகல சராசரங்களும் வேரோடே மடிந்து

போகிறதும், தேவர்கள் இறந்து போகிறதும், பதினலு லோகங்களும் இந்த க்ஷணத்திலே மாண்டு போகிறதும், அண்டகோளம் நீர்க்குமிழிபோல உடைந்து போகிறதும், நீரிருந்து பாருமென்று ஸ்ரீ ராமர் கோபித்துக்கொள்ளவே, சூரி யனும் பயந்து திரும்பி மேருபர்வதத்தில் மறைந்தான். அஷ்டகஜங்களும் அஞ்சி ஓடியதுகள். இன்றையதினம் உலகமெல்லாம் அழிந்து போய்விட்ட தென்று எண்ணி இலட்சுமணரும் பயந்தபோது, மற்றவர்கள் பயந்ததைச் சொல்லவேண்டியதென்ன? அதுகண்டு ஜடாயு, அப்பா! கோபித்துக்கொள் ளாதே. தேவர்களும் முனிவர்களும் உன்னலே பிழைக்கலாமென்று பார்த் துக்கொண்டிருக்கின்றார்கள். நீயே இப்படிக் கோபஞ் செய்தால் அவர்கள் எந்தப் பலத்தைக்கொண்டு இராவணனை ஜெயிக்கப்போகிறார்கள்? பிர்மாவே கொடுத்த அதிகபலமுடைய நான் அந்த இராவணன் கையில் பட்டபாடு நீ பார்த் தையே. சதுர்முகப்பிர்மா முதலான சகலரும் தசக்கிரீவனை இராவணனுக்கு அடிமையாயிருந்து ஏவல்செய்கிறாரே யல்லாமல், தர்மபரிபாலனஞ் செய்கிற வர்கள் யாரிருக்கிறார்கள். பூலோகத்திலே சத்துருவினிடத்திலிருந்து ஏவல் செய்து பெண்டுகளும் வாழ்வார்களா? தேவர்களுடைய பிழைப்பு இப்படியு மாயிற்றல்லவா? அவர்கள் பட்டபாடு சொல்லிமுடியாது. பூர்வத்திலே திரிவிக் கிரமஸ்வரூபமாய் உலகத்தை யளந்த பகவான் கொடுத்த அமிர்தத்தை உண் டிருந்தபடியினலே, இறந்துபோகாம லின்னம் உயிருடனே யிருக்கிறார்கள். அதுயிருக்கட்டும். இரத்தினபரணங்களை யணிந்த ஸ்தனபாரத்தையுடைய அதிரூபவதியாகிய சீதை ஆரணியத்திலே தனியாயிருக்க, நீங்கள் மானின் பின்னேபோய் குலப்பழி பூண்டுக்கொண்டீர்கள். ஓ கையிலே வில்லையேந்திக் கொண்டிருக்கிற எங்கள் ஐயனாகிய ஸ்ரீ ராமா! நன்றாக ஆராயும்போது உங்க ளிடத்திலேயே பிழையுள்ளதல்லாமல், உலகத்தார்மேல் பிழையுண்டா? ஆகை யினலே மகனே! நீ கோபஞ்செய்ய வேண்டியதில்லை. கற்புக்கு இருப்பிடமா கிய சீதையினுடைய கிலேசத்தை நீக்கி, தேவர்களுடைய எண்ணத்தையும் நிறைவேற்றி, வேதசாஸ்திரத்தின் கிரமப்படிக்கு நீதிகளை நிலைநிறுத்தி, பொல் லாங்குகளையெல்லாந் தீர்த்துச் சுகமாய் வாழுங்களென்று சொன்னர். அவ் வசனத்தைக் கேட்டு மேகவர்ணனான ஸ்ரீ ராமன் இந்த வார்த்தை தசரத மகாராஜாவினுடைய ஆக்கினையேயென்று சிந்தையிலே தாங்கிக்கொண்டு நின்று, அந்நியரைக் கோபித்து ஆகவேண்டியதென்ன? இனி ராக்ஷதவர்க் கங்களைக் கொல்லுகிற யோசனையே செய்யவேணுமென் றெண்ணி கோபந் தீர்ந்து ஜடாயுவைப் பார்த்து, ஐயா! தேவரீர் அந்தச் சக்கரவர்த்தியே யாகை யால், என்னை கோபிக்க வேண்டாமென்று ஆக்யாபித்தார். அதை மறுத்து வேறொரு காரியஞ் செய்வேனே? செய்யமாட்டேன். அந்த இராட்சதன் சீதையை எங்கே கொண்டுபோனான்? சொல்லுமென்று கேட்டார். அப் போது பட்சிராஜனாகிய ஜடாயுவானவர் அறிவு அடங்கினவராய் உத்தரவு ஒன்றுஞ் சொல்லவில்லை. உயிரும் போய்விட்டது. கமல சம்பவனான பிர்மா வும் தேவர்களும் வேதங்களும் இன்னமும் அறியமாட்டாத அந்தப் பரப்பிர்ம வஸ்துவே சகலரும் காணும்படிப் பகிரங்கமாய் வந்து அவதாரஞ் செய்திருக் கின்ற ஸ்ரீ ராமபத்திரனுடைய திருவடிகளை மரணந்தத்திலே தரிசனஞ் செய்த படியினலே; கழுகுராஜன் பஞ்சபூதங்கள் அழிந்துபோகிற காலங்களிலேயும்

அழியாத ஸ்ரீ விஷ்ணுலோகம்போய்ச் சேர்ந்தார். இவ்விதமாக ஜடாயு மோட்சபதஞ் சேர்கிறபோது, ஸ்ரீ ராம லட்சுமணர் அழுது சோர்ந்ததைக் கண்டு பிர்மா முதலான தேவர்கள் எல்லாரும் பிரலாபித்தார்கள். அந்த ஆரணியத்திலே யிருந்த மரமும் புல்லும் கல்லும் கரைந்து உருகியதுகள். பூலோகத்தார் சகலரும் தலையின்மேற் கையைவைத்துக்கொண்டு துக்கித்து நீராளமாகக் கரைந்தார்கள். ஸ்ரீ ராமர், மகாபாதகனான ராட்சதனால் என் பலன் போயிற்று சகலத்தையுந் துறந்துவந்த நான் இப்போது சீதையையுந் துறந்திருக்கிறேன். ஆதலால் சந்நியாசம் பெற்றுக்கொண்டு தவஞ்செய்வேனே? அல்லவென்று பிராணனை விட்டுவிடுவேனே? பிள்ளையாகப் பிறந்த என் நிமித்தம் தந்தை இறந்துபோனர். என் பிராணனே போகாமலிருக்கின்றது. இதற்கு என்னசெய்வேன்? தம்பி லட்சுமண! சொல்லென்று அதிக துன்பத்துடனே பிரலாபித்தார். அதுகேட்டு இலட்சுமணர் தமையனரை நமஸ்கரித்து, சுவாமி! விதியினாலே நமக்கு வந்து விளைந்த ஆபத்து ஒன்றல்ல; அநேகம். அதைக் குறித்து இனி சும்மா நின்று பலவிதமாக நினைத்துக் காரிய மென்ன? இவரை இவ்வண்ணமாகச் செய்த அந்த ராட்சத வர்க்கத்தைக் கொன்று பின்பல்லவோ துயரப்படவேணும். எளியவர்போல நீர் தேவியைப் பிரிந்த துக்கந்தீர்ந்து பொறுத்திருந்தீரானாலும், உம்முடைய தகப்பனரை இப்படிக் கொன்றுவிட்டுப் போனவனைப் பதிலுக்குப் பிராணனை வாங்காமல் தவத்தைக் குறித்துச் சந்நியாசம் வாங்கிக் கொள்ளுகிறேனென்கிறது அந்த தவத்துக்குத்தான் யோக்கியமா? என்று இவ்விதமாக இளையபெருமாள் சொல்ல, அறிவுக்கு அறிவான ஸ்ரீ ராமர் சோகம் நீங்கி, இப்படி நாம் யோசனை செய்கிறது ஏழமைதானென்று எண்ணிக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, இறந்துபோன தகப்பனருக்கு நான் பிள்ளையாய் உரிமைக்கடன் செய்கிறேனென்று சொன்னர். அப்போது அகிற்கட்டை சந்தனக் கட்டைகளாகிய காஷ்டங்களைக் குவித்து, அதற்கு வேண்டிய தர்ப்பையும் பூவும் தண்ணீரும் சேகரித்துக் கொண்டு, காஷ்டங் கடைந்து நெருப்புண்டாக்கிக்கொண்டு, தகப்பனரை இரண்டு கையினாலும் ஏந்தி யெடுத்து மசானத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து, சந்தனம் புஷ்பம் ஜலம் முதலானதுகளைச் சொரிந்து, தலைமாட்டிலே அக்கினியும் வைத்து மூட்டி பின்னுஞ் செய்யவேண்டிய கடன்களையெல்லாம் சிறிதாகிலும் பிசகாமல் செய்து முடித்தார். தாமரைப் புஷ்பங்கள்போல இருக்கின்ற நேத்திரங்களிலே நீர்த்துளிகள் வெள்ளமாய் வர, நதியிலே ஸ்நானஞ் செய்து, கைகளால் நீரை அள்ளி விடுத்துத் திலதர்ப்பணமுஞ் செய்தார். இப்படி அவர் பட்சிராஜனாகிய ஜடாயுவை நினைத்து உட்கொள்ளுமென்று நம்முடைய திருக்கைகளால் விட்ட வாசோதகம், திரிலோகமாகிய நீரானது அந்தச் சர்வாந்தரியாமியான சாக்ஷாத் பகவான் தானேயுண்ட நீருக்குச் சமானமா யிருந்தது. ஆகையால் முன்பு வருத்த முற்றிருந்த பிர்மா முதலாக மேலும் கீழும் காட்டப்பட்ட சகல ஜீவாத்மாக்களுக்குந் திருப்தியாகி, மகத்தாகிய சந்தோஷத்தை யடைந்ததுகள். அந்த மகத்துவத்தைக் குறித்து இன்னமும் நான் சொல்லவேண்டிய தென்ன இருக்கின்றது? பின்னுஞ் செய்ய வேண்டிய பலிக்கடனுஞ் செய்து முடித்தார். அப்போது தன்னுடைய வமிசத்தில் வந்து அவதாரஞ் செய்தருளிய பகவானாகிய ஸ்ரீ ராமன் துயரப்பட்டுத்

தகப்பனருக்கு ஸ்நானஞ்செய்து கடன் கழித்ததைப் பார்த்துக்கொண்டிருந்த சூரியன், அந்த .வமிசத்தானுனபடியினுலே தானும் அப்படித் துக்கப்பட்டு ஸ்நானஞ்செய்து உரிமைக்கடன் கழிக்கும்படி போனதுபோல மேற்குச் சமுத்திரத்திற்போய் மூழ்கினன்.

ஜடாயு வதைப் படலம் முற்றிற்று.

அயோமுகிப் படலம்

அந்திப்பொழுது வரவே இராமலட்சுமணர்கள் அவ்விடம் விட்டு நீங்கி, அக்கினி மூண்டெரிகின்ற ஆரணியத்திலே ஒரு மலையினிடத்திலே போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது தேவேந்திரனுக்கு அடங்காத ராக்ஷதர்களெல்லாம் ஏகமாய் நெருங்கி வந்ததுபோல, துக்கத்துக்குப் பின்னும் உறுதிவரக் கொடுக்கின்ற இருள்வந்து எங்கும் நிறைந்தது. இந்த இருளிலே ஆரணியத்திலும் மலைகளிலும் இருக்கின்ற பலவித விருட்சங்களின் புஷ்பங்களில் தேன் துளிக்கின்றது எப்படி யிருந்ததென்றுல், ஸ்ரீ ராம லட்சுமணர்களுடைய கிலேசத்தைக் கண்டு கண்ணீர் விடுகிறதுபோல் இருந்தது. சீதையைப் பிரிந்த மானமும், அதுபற்றி வந்த கோபமும், பிதாவின் மரணமும் ஆகிய இதுகளெல்லாம் ஒன்றுகக்கூடி, இவர்களுடைய ஞானசிந்தையை நெருக்கி நலியச் செய்தன. மெய்யறிவு யில்லாதவனுடைய கொடுவினையினுலே மேன்மேலும் அதிகரிக்கின்ற பிறவிபோல, தீராத இருளானது தசரத குமாரர்களுக்கு நெய்யைச் சொரிந்த நெருப்பைப்போல விதனத்தை விர்த்தியாகும்படி செய்யவே அவர்கள் பெருமூச்சுவிட்டு மிகவும் வருத்தப்பட்டார்கள். அன்று இராத்திரி ஜானகியென்ற ஸ்ரீ மகாலட்சுமியை நீங்கினதினுலேயோ? அது நாமொன்றும் அறியோம். ஸ்ரீ ராமருடைய நேத்திரங்களைப்போல மலர்ந்திருக்கின்ற தாமரைப் புஷ்பங்களும் குவியவேயில்லை. சீதை பிரிந்த துக்கத்தினுலே அந்த ரகுகுலோத்தமனுடைய கண்களும், தம்பி கண்போலவே இமையாமல் விழித்தபடியே யிருந்தன. அப்பொழுது தென்றற்காற்று சஞ்சரிக்கின்ற மலைச்சாரலிலே சீதையின் முகத்தைப்போலச் சந்திரன் உதயமாயிற்று. அந்தச் சந்திரனுடைய கிரணம் ஸ்ரீ ராமருக்கு விஷாக்கினிபோல அதிக உஷ்ணத்தைக் கொடுத்தது. மானமும் துன்பமும் மூடிக்கொள்ள, அறிவு மயங்கிச் சீதையை நினைத்துக்கொண்டே மயங்கித் திகைக்கின்ற ராகவன் பின்னும் வெகுவாகக் கிலேசித்தான். வாயைமடித்துப் பெருமூச்செறிந்து, தோள்கள் துடித்து இளைக்க, அழகாகப் புஷ்பித்திருக்கின்ற பூங்கொம்பானது மதயானையால் ஒடிக்கப்பட்டதுபோல் சிறையில் அகப்பட்டுக்கொண்ட சீதையை மறவாமல் பிரலாபிக்கிறார். ஜானகி வில்லவளைத்துக்கொண்டு நம்முடைய நாயகன் வருவான் வருவானென்று, என்னைக் குறித்து வழிபார்த்துக் கொண்டிருந்தாளோ! கோரதந்தத்துடனே அநேகந் தலைகளுண்டாகிய மிருகம்போல அந்த ராட்சதன் நில் நில்லென்று நெருங்கி வந்தபோது என்னை நினைத்தாளோ? இராகுவென்

னும் பாம்பின் வாயில் அகப்பட்ட சந்திரனைப்போல, ராவணன் கையிலே சிக்கிய சீதையானவள் எங்களை இராட்சதருக்குப் பயந்து பின்தொடர்ந்து வராமலிருக்கின்றார்களோ வென்று நினைத்தாளோ? மானமும் ஆசையும் மேன்மேலும் பிராணனைச் சுடுகின்ற எனக்கு இன்னமும் வில்வேணுமோ? என்று சொல்லிக்கொண்டு வில்லைப்பார்த்து நகைத்தும், தோளைப்பார்த்து நகைத்தும், முடிவிலே வருகிற சொல்லைப் பார்த்து மனம் திடுக்கிட்டும், வேதமுடிவை யறிந்தவர்களாலே அறியப்பட்ட ஸ்ரீ ராமன் அப்போது தென்றற் காற்றுக் கூற்று வனைப்போல வருகிறதைப் பார்த்து, சீதை என்னை விட்டுப் பிரிந்தாளோ வென்று மதயானையைப்போலப் பெருமூச்செறிவார். இராச்சியபாரஞ் செய்கிற அநேக ஜீவனை இரட்சிக்கிறதற்குச் சம்மதித்த நான் வீட்டுப் பெண் ஜாதியை ரட்சிக்கிறதற்கு நிர்வாகமில்லாமற் போனேனே! என்பலம் நன்றாயிருந்ததென்றும், இப்படியாகச் சொல்லி நாணிப்புலம்ப, அத்தருணத்திலே லட்சுமணர் மிகுந்த துயரத்துடனே குளிர்ந்த தளிர்களினாலே படுக்கைதிருத்த, அதிலே சயனிப்பார். அது சரீர உஷ்ணத்தினாலே தீய்ந்துபோகவும் பிராணன் புழுங்கவும், வாயும் மனமும் புலரவும் மயக்கமுற்றவராகி, சீதை பிரிந்ததினாலேயோ அபிமானத்தினாலேயோ சிறிது நேரமாகிலும் கண்கள் இமையாமல், ஆயிரங் கற்பகாலத்தைக் கடக்கிறதுபோல அந்த ராத்திரிக்குக் கரைகாணமல் தம்பியைப் பார்த்து, அப்பா! இதுவரைக்கும் ஒரு தன்மையாயிருந்த ராத்திரி இன்றைக்கு மிகவும் நீண்டு தொலையாமலிருக்கிறதற்கு ஏது வென்னவென்று கேட்டார். சந்திரனைப் பார்த்து. நாளுக்குநாள் தேய்ந்து தேய்ந்து வெட்கிக்கிடக்கின்ற நீ சீதையின் முகம் அப்பாலே போய்விட்டபடியினாலே மிகவும் பிரகாசிக்கிறாயென்பார். அந்த இராட்சதன் அருணனுடனே கூடச் சூரியனை அருஞ்சிறையிட்டானே வென்பார். அல்லது தன் குலத்துக்கு இவ்விதமாகிய பழிவந்ததேயென்று நாணி, இந்த உலகத்தைவிட்டுச் சூரியன் ஓடிப்போனானே வென்பார். சீதை வந்தால் தான் இந்த இராத்திரி யென்கிற கற்பகாலம் முடிந்து போய் ராஜ்ஜியஞ் சுகப்படுமோ வென்பார். தர்மந்தப்ப நடந்து ரிஷீஸ்வரர்களை உபத்திரவப்படுத்தி, உலகத்து உயிர்களைக் கொன்று பாவமே செய்கிறவர்கள் இப்படி வாழ்ந்தால், இனி தர்மத்தினால் ஆகவேண்டியது என்னவிருக்கிற தென்பார். இப்படி துயரப்படுகிற சமயத்திலே, மன்மதன் புஷ்ப பாணங்களைப் பிரயோகஞ் செய்ய எத்தனித்து வந்தான். வந்தவன் ஸ்ரீ ராமசந்திரனுடைய தபஸ்வரூபத்தைப் பார்த்து. அறிவுகலங்கித் தடுமாறி, எதிரே நின்று புஷ்பபாணம் விடுகிறதற்குப் பயந்து, முன்னாலிலே யோகத்திலிருந்த திரிமூர்த்திகளில் ஒரு மூர்த்தியாகிய சிவன்மேல் பாணந்தொடுத்துச் சரீரமிழந்து போனேமே இவர்மேல் பாணந்தொடுத்தால் இவரென்ன செய்வாரோ வென்று நடுங்கி, முன்னேபட்ட பழம்புண்ணாளியானபடியினாலே அந்த மன்மதன் மிகவும் வருத்தமுற்றான். அப்போது ஸ்ரீ ராமன் இந்த இரவு எப்படி விடியப் போகிறதென்று தன்மனதிலே நினைத்துக் கொண்டேயிருக்க, அந்நினைவே சூலாயுதமாய்ப் போய்த்தாக்க, அந்த ராத்திரியானது மூலதாமரையில் உற்பவித்த பிர்மாவினுடைய கற்பகாலம் முடிந்துபோனதுபோல நீங்கிப் போய்விட்டது. திருப்பாற்கடலிலே யோக நித்திரை செய்கிறதை விட்டுச் சீதையினுடைய கற்புக்கடலிலே தினைத்தாடுகிறவருக்குத் துயரம் தீரும்படி, பட்சிகளும்

பூஞ்சோலைகளும் தண்ணீரும் சகல ஜீவராசிகளும் சப்தித்ததுகள். அப்படி சப்தியாமற் போனால், அவருடைய பிராணன் நிலைத்திருக்கிறதற்கு வேறே வகையுண்டா? பொழுதுவிடியவே, மயிலும் பேடும் மானும் கலையும் பிடியும் களிறும் சோடு சோடாகப் பிரியாமல் புறப்பட்டுத் திரிகிறதைப் பார்த்தார். குயிலும் கரும்பும் தேனும் வேணுக் குழலும் யாழும் அமுதுமாகிய இதுகளினுடைய ருசியையெல்லாம் கீழ்ப்படுத்தி மிகுந்த மதுரங்கொடுக்கின்ற வார்த்தையை யுடைய சீதையைப் பிரிந்த ஸ்ரீராமர் மகத்தான துயரத்தினாலே மனது அழிந்து மிகவுங் கிலேசித்தார். அத்தருணத்தில் சீதை பூர்வத்திலே தாமரையில் வாசமா யிருந்தவளானபடியினாலே இராத்திரியிலே தன்னாலே குவிந்த மலர்களைத் தன் கிரணமாகிய கையினால் இதழென்கிற கதவைத்திறந்து, அந்தச் சீதை இதிலில்லை பாருமையாவென்று காட்டுகிறதுபோலத் தாமரைகளை மலர்த்திச் சூரியனனவன் உதயமானான். அப்போது ஸ்ரீ ராமர் சோலைகளைப் பார்த்தும், அந்தச் சோலையிலே வாசஞ்செய்கிற குயில்களைப் பார்த்தும், புஷ்பித்திருக்கிற புஷ்பக்கொம்பினுடைய அழகைப் பார்த்தும், இள மயில்களின் சாயலைப் பார்த்தும், சீதையினுடைய அளகபாரத்தை நினைத்தும், ஸ்தனங்களை நினைத்தும், அந்த ஸ்தனத்தில் எழுதிய சித்திரத்தை நினைத்தும், தம்முடைய தோளைப் பார்த்தும், துக்கித்துப் பொழுது போக்கினார். அந்தச்சமயத்தில் இளையபெருமாள் தமையனுரைச் சேவித்து, சுவாமி! ஸ்ரீ மகாலட்சுமியைத் தேடாமல் இவ்விடத்தில் வீணுயிருக்கிறது நன்மையா வென்று சொல்லினர். அந்த இராட்சதன் இருக்கிற யிடத்தைத் தேடியறிந்து போவோ மென்று மலை நெருங்கியிருக்கின்ற ஆரணியத்தில் நடந்தார்கள். திக்கெஜங்களின் நடைக்கு சமானமாகிய நடையுண்டான ராமலட்சுமணர்கள் அநேக பர்வதங்களும் ஆரணியமான நதிகளும் தாண்டிப் பதினெட்டு யோசனை தூரம் கடந்து போனர்கள். அதுவரையிலுஞ் சீதையைக் காணுதபடியினாலே, மனதிலே அதிக கோபமும் துயரமும் சுவாசமும் பொங்கியெழும்பும்படி போய், அவ்விடத்தில் ஒரு குளிர்ந்த பூஞ்சோலையில் சேர்ந்தார்கள். இவர்களுடைய மனக்கிலேசத்தைச் சூரியன் அறிந்து, லோகமாதாவைத் தானுந் தேடித்தேடி உலகமெல்லாம் உழன்று பார்த்துங் காணுதவனுகி, மேருபர்வதத்திலாவது பார்ப்போ மென்று சீக்கிரமாய் ஓடி மறைந்தவன்போல ஓடி மறைந்தான். அப்போது தெளிந்த அறிவில்லாத மூடருடைய சிந்தைபோல இருள்வந்து மூடிக்கொண்டது. வீணையின் இசையைப்போல பாஷிக்கின்ற நாகணவாய்ப் பறவையின் மூக்கைப் போலவும் புஷ்பித்திருக்கிற பலாசமாகிய முருக்கமரங்கள் சூழ, நடுவே களங்கத்துடனே கூடிப் பிரகாசிக்கின்ற சந்திரனைப்போல ஒரு பளிங்குக் கல்பாறையும் அறையுமா யிருக்கக் கண்டு, அதிலே ராத்திரித் தங்கியிருக்கவேண்டுமென்று இருந்தார்கள். அந்த வேளையிலே ஸ்ரீ ராமர் தம்பியை அழைத்து அப்பா! தாகத்துக்குத் தீர்த்தங்கொண்டு வரவேணுமென்று சொல்லினர். அந்தக்ஷணமே ராமானுஜர் கையில்லுடனே தனியே நடந்துபோனர். அவ்விடத்திலே எங்குந் தேடித் தண்ணீர் அகப்படாமல் ஒரு சிங்கம்போல அந்த ராத்திரியிலே திரிந்து தேடிக்கொண்டிருக்கிற லட்சுமணரை அயோமுகி என்கிற இராட்சசி அதிக ஆசையுடனே கண்டாள். மந்திரத்திலே தடைபடாத சர்ப்பம்போல ஓடிவந்து, அவருடைய திருவழகைக் கண்டு, அவளுடைய கடூர

குணங்களெல்லாம் நீங்கிப்போய் இவன் மன்மதன்தானென்று நினைத்து, மனதிலே மிகுந்த ஆசை யெழும்பக் காமவியாதி தலைக்கொண்டு, இவனை என் னுசை தீரும்படி தழுவிய்ணைய வேணுமே யல்லாமல், கொல்லலாகாதென்று யோசனைசெய்து, எல்லாவற்றிற்கும் போய் நல்ல வார்த்தையாகக் கேட்டுப் பார்ப்போம். சம்மதித்தாலாகின்றது இல்லாவிட்டால் பலாத்காரமாய் எடுத்து வந்து மனதின் இஷ்டப்படி இவனைச் சேருவோமென்று துணிந்து, அதிக சீக்கிரத்திலே அவர் சமீபத்தில் வந்தாள். அந்த அயோமுகி நெருப்புப்போலச் சுவாசமும், மலைகள்போலப் பற்களும், மலைப் பாம்பாகிய ஆபரணமும், குழிந்த கண்ணும், சிங்கங்கள் யாளிகளாலே காற்சிலம்பும், பிரளய காலச் சூரியனைப் போலக் கடூரமான முகமும், சமுத்திரம் வறண்டு போகும்படி முகந்துகொள்ளு கின்ற முகவைபோலப் பெரிய வாயும், உகாந்தகாலாக்கினிபோலச் சிவந்த கொண்டையும், இடிகளைப் பிடித்து வாயிலே போட்டுக்கொண்டு கடிக்கின்ற உரமுடைய பல்லும், இரண்டு பிறைபோலக் கோரதந்தங்களும், சமுத்திரத் திலும் அதிக இரைச்சலான சொல்லும், பூமி நடுநடுங்குகின்ற நடையும் உடைய வளாய் சர்ப்பங்களினாலே கைகளுக்கு வளையலும், புலி யாளி முதலானதுகளி னாலே ஸ்தனங்களின்மேல் புரள்கின்ற ஆரமும், குடல்மாலைகளும், ஆண் சிங் கத்தினாலே தாலியும், பெண் சிங்கங்களாலே காதுக்கு ஓலையும், நிணமாம்சாதி சந்தனமும் தரித்துக் கொண்டிருக்கின்ற இராட்சசி எதிரே நின்று, ஆசை யினாலே அக்கினிபோல எரிந்த பெரிய கண்கள் குன்றிமணிப்போலக் குறுக வும் குளிரவும் பார்த்தாள். மின்னலைப்போ லிருக்கின்ற அவளுடைய பல்லின் பிரகாசத்தினாலே, அவளை இலட்சுமணர் கண்டார். முன்பு மூக்கிழந்த சூர்ப்ப னகி தாடகியாகிய அவர்களைப்போல இவளும் ஒரு ராட்சசி யென்று அறிந் தார். இந்தப் பாபிஷ்டைகளாலே வந்த ஆபத்து கொஞ்சமாவென்று நினைத்து அவளைப் பார்த்து, இந்த இருட்டிலே வந்தையே நீ யாரடி? சீக்கிரமாய்ச் சொல் லென்று கேட்டார். இப்படிப் பேசவே வெட்கி அச்சப்பட்டவளாகி, உமக்கு என்னிடத்திலே அன்பில்லாமற் போனாலும், உம்மிடத்தில் வலுவில் ஆசை கூர்ந்து வந்தேன். அயோமுகி நானென்று சொல்லி, பின்னும் ஓ அதிரூப சுந்தரத்தையுடைய வீராதிவீரரே! இதுவரைக்கும் ஒருவரும் தொடாத ஸ்தனத் துடனே உம்முடைய மார்பை இச்சித்து வந்தேன். என்னிடத்திலே தயவு செய்து சேர்ந்து, என்னுடைய பிராணனைக் எனக்குக் கொடுமென்று அடங் கின வார்த்தையாகச் சொன்னாள். அப்படி அவள் சொல்லவே, லட்சுமணர் கோபித்துச் சீறிக் கண்கள் சிவந்து, ஓ அபசரிதையான பாவி! இனி இந்தப் பேச்சுப் பேசினால் உன் சரீரத்தை பாணத்தினாலே பிளந்து போடுவேனென்று சொன்னார். இவ்விதமாக அவர் சொல்லியும் கேளாமல் கோபமில்லாதவளாய் இரண்டு கையும் தலையின்மேல் வைத்துக் கும்பிட்டு, ஓ என்னையகரே! நீர் வந்து என் பிராணனைக் கைக்கொண்டால் அது நான்செய்த புண்ணியமாகும். பின்னும் நீர் தண்ணீர் தேடுகிறீரே? என்னை மாத்திரம் பயப்படாதே என்று அபயஸ்தம் கொடுத்தால், கங்காஜலம் இந்தக்ஷணம் கொண்டுவருகிறே னென் றாள். அப்படிச் சொல்லவே, சுமித்திரை புத்திரரான லட்சுமணர் மனது பொறுமல், உன் காதும் மூக்கும் அற்றுப்போகிறதற்கு முன்னே அப்பாலே ஓடிப்போவென்று கோபத்துடனே சொன்னார். இந்த வார்த்தையைக் கேட்

கவே, மிகவுந் துயரமாகி இவனே எடுத்துக்கொண்டுபோய் நம்முடைய குகையிலே அடைத்து வைத்துக்கொண்டால் இவனுடைய பீஷ்மம் அடங்கி நாம் சொன்னபடி கேட்பான். இப்படிச் செய்கிறதே உத்தமமென்று நினைத்து மறைந்து மேகஸ்வரூபமெடுத்து, லட்சுமணரை வாரிக்கொண்டு ஆகாயமார்க்கத்திலெழும்பி சந்திரனுடனே போகின்ற மேகம்போலே வெகுசீக்கிரமாய்ப் போனாள். போகும்போது அயோமுகி என்கிற ராட்சசி மந்தரகிரியைத் தாங்கின சமுத்திரம்போலவும், இந்திரனே ஏந்திக்கொண்டு போகின்ற மேகம்போலவும், சுப்பிரமணியரைத் தாங்கிக்கொண்டு போகின்ற மயிலைப்போலவும் பிரகாசித்தாள். அந்தக் கறுத்த நிறத்தையுடைய அயோமுகியின் மார்பிலும் கையிலும் அடங்கியிருக்கின்ற லட்சுமணர், யானைத்தோல் போர்த்திருக்கின்ற ருத்திரமூர்த்தியைப் போலப் பிரகாசித்தார். இப்படி இவ்விடத்திலே நடக்கிறபோது தண்ணீர் கொண்டுவரப்போன தம்பி இன்னம் வரவில்லையே யென்று வீராதிவீரரான ஸ்ரீ ராமச்சந்திரன் மிகுந்த கிலேசத்துடனே பிரலாபிக்கத் தொடங்கினர்.

தம்பிக்குக் காட்டிலே இன்னந் தண்ணீர் அகப்படவில்லையா? வேறே ஏதாகிலும் நடந்ததுண்டோ? இங்நேரமட்டும் வராத்தினாலே என்ன இடர் வந்ததோ? ஜலம் சம்பாதித்துக் கொண்டுவந்து எனக்குக் கொடாததினால் அவன் சீதையை எடுத்துப்போனவர்கள் யாராகிலும் அகப்பட்டு அவர்களுடனே போர் செய்கிறானே? அல்லவென்று அந்த ராவணன் வந்து இவனையு மெடுத்துக்கொண்டு போய்விட்டானே? விஷத்தைப்பார்க்கிலும் கொடியவர்களாகிய ராட்சதர்களுடைய மாயையினாலே இறந்துதான் போனானே? என் பிராணபதமாகிய தம்பி இன்னம் வரவில்லையே! நம்முடைய தமையன் நாம் சொன்னபடிக்குக் கேளாமல் மானின்பின்னே போய்ச் சீதையைப் பிரிந்து இத்தனை கிலேசம்வரப் பண்ணினானென்று என்மேல் சலிப்பாய்ப் பிராணத்தியாகம் பண்ணிக்கொண்டானே? இந்த இருட்டிலே நானொருவனுகப்போய் எங்கேயென்று தேடிக் கண்டுபிடிப்பேன்? அப்பா இலட்சுமண! நீயும் ஒளிந்துப் போயினையா? நல்ல விவேகியாயிருந்தையே! நீ பிழை செய்யலாமா? இப்படிச் செய்தால் உலகம் அங்கீகரிக்குமா? மகத்தான கிலேசம் வந்தாலும் தீர்க்கின்ற நீயே தீராத கிலேசத்தைக் கொடுத்து என்னை இவ்விடத்திலே எப்படி வெறுத்துப் போய்விட்டாயோ? என்னருகே வராமல் இத்தனை நாழிகை என்னருகிலும் பிரிந்திருந்ததுண்டோ? என்னைப்பெற்ற தகப்பனை தாய்மாரைப் பெண்ஜாதியைப் பிரிந்தும் உயிர் போகாமல் இருக்கின்றது எதினாலென்றால், உன்னைப் பிரியாமல் இருக்கிற தைரியத்தினாலே யல்லவா? சீதையைப் பிரிந்த நான் அவளைக் காணவிட்டாலும் துறந்து தவஞ்செய்வேன்? நீ பிரிந்தால் நான் என்ன செய்வேன்? இன்றைக்கே இறந்துபோகின்றேன். இதைக் கேட்டால் நம்முடைய சுற்றத்தார்களெல்லாம் சாகாமலிரார்கள். உன் பந்து ஜனத்தை யெல்லாம் ஒருமிக்கக் கொல்ல எத்தனித்தனையே? இதுதானு உன்னுடைய சற்குணம்? மாந்தாதா முதலாகவந்த ராஜரீகத்தின் ஆசை துறந்து என்னுடனேகூட வந்தையே! இப்போது கைவிட்டுப் போயினையா வென்று இப்படியாகச் சொல்லி எழுந்து பூமியிலே விழுந்து, சிறிதுநாழிகை பேசாம

லிருந்து யோசனை செய்து உணர்வழிந்து, இது என்ன வினைவென்று பெரு மூச்சுவிட்டு, பலவிடங்களிலுந் தேடிப் பேர்சொல்லி அழைத்து, மனதுவாடி மயங்கிச் சோர்ந்து சீதையுடனே கூட என்னை ஒரு க்ஷணமாகிலும் பிரியாமல் காத்துக்கொண்டிருந்த தம்பி இத்தனை நாழிகை வராமலிருப்பானு? பூமிக்குச் சுமையா யுழல்கின்ற பழவினையையுடைய எனக்கு இந்த வாழ்வு தகாது. ஏதா வது சிறிது தர்மமுண்டாயிருந்ததே யாமாகில், அவன் எனக்குத் தமையனுய் வந்து பிறந்தாலும் பிறக்கட்டும். நான் வாளினுலே பிராணனை விட்டுக்கொள்ளு கிறேனென்று நினைக்கிற சமயத்தில், அயோமுகி கையில் அகப்பட்டுக்கொண்ட லட்சுமணர் அவள் மாயையை அறிந்து, வாளினுலே அவளுடைய மூக்கை யறுத் தார். அறுக்கவே மூக்கு நொந்ததனுல் அவள் கூச்சலிட்டாள். அந்தக் கூச் சல் காதிலே கேட்டது. இந்த ஆரணியத்திலே ராட்சதர் யுத்தஞ் செய்கிறார் கள். இராட்சதியின் அழுகுரலாய் காண்கின்றதென்று தெரிந்து, அக்கினி யாஸ்திரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அலகின் இருபுறமும் பிரகாசிக்கச் சுழற்றினர். அப்போது இருளெல்லாம் இந்தலோகம்விட்டு அப்பாலேபோக, இராத்திரி காலமானது பகற்காலம்போலப் பிரகாசித்தது. அந்த அக்கினி யாஸ்திரத்தின் வெளிச்சத்திலே ஸ்ரீ ராமர் மலைகள் பொடிபட, மரங்கள் ஒடி பட, பூமி நெளிபட, சடசடவென்று சப்தமுண்டாக, வாயு வேகத்திலும் மூன்று பங்கு அதி வேகமாய் நடந்தார். ஊழிக்காலத்திலே கருங்கடல் பொங்கிப் பூமி யிலே பிரளயமாய் வருகிறதுபோல வருகிற தமயனுரைத் தம்பியானவர் கண்டு, சுவாமி! வருந்தவேண்டாம். அடியேன் வந்தேன்; வந்தேன். திருவுளத் திலே கிலேசிக்க வேண்டாமென்று சொல்லிக்கொண்டே சமீபத்திலே வந்து, சுவாமி திருவடியைச் சேவித்தார். அப்போது ஸ்ரீ ராமச்சந்திரன் கண்களிலே ஊற்றுப்போல ஜலமொழுக நின்று, இளங்கன்றைப் பிரிந்த பசுவானது எங் குந்தேடி மகா பிரயாசத்தினுல் கண்டதுபோலப் பலதரந் தழுவிக்கொண்டு, கண்ணீரினுல் அவருடைய பொன்மேனியைச் சர்வாங்கமுங் கழுவி, அப்பா! நீ தப்பிப்போயினை யென்றிருந்தேனென்று சொல்லி அங்கே நடந்தசெய்தி யென்ன சொல்லென்று கேட்க, லட்சுமணர் நடந்ததையெல்லாம் சொன்னர். அதுகேட்கவே துக்கமும் சந்தோஷமும் அடைந்தார். தனக்குச் சமானம் தாமேயல்லாமல் வேறொருவரில்லாத பகவானுனவர் சமுத்திரத்தில் கப்பலோட் டிக்கொண்டு போகின்றவன் அலை வருகிறபோதெல்லாம் கிலேசிக்கின்றது போல, பிரவிச்சிறையில் அகப்பட்ட நான் அதற்கு ஸ்வபாவமான துயரத் தால் கிலேசிக்கிறேனென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறார்: திரிமூர்த்தி களும் இந்த மூன்று லோகத்திலும் இருக்கின்ற சகலமானவர்களும் எனக்குப் பகையானாலும், நீயொருவன் இருக்கும்போது என்னை ஜெயிக்கிறவர்கள் யாரிருக்கிறார்கள்? பிரிகின்றவர்கள் எல்லாம் பிரியட்டும். வருகின்றது துக்க மெல்லாம் வரட்டும். மேலும் துக்கமென்பது உன்னைப் பிரிந்தால் வருமே யல்லாமல் நீ யிருக்குமளவில் எனக்கு வருமா? தம்பி! அங்கே வந்த இராட்சசியை ஜெயித்தேனென்று சொன்னையே, அவள் கூவின கூச் சலிலே அவளைக் கொல்லவில்லை போலக் காண்கின்றதே, அது என்ன சமாச்சாரம் சொல்லென்று கேட்டார், சுவாமி! அவள் மூக்கையும் காதை யும் அறுத்துவிட்டேன். அவள் கூச்சலிட்டுக்கொண்டு ஓடினுளென்று இளைய

பெருமாள் சொல்லி இரண்டு கையையுங் கூப்பித் தொழுதார். மனு மாந்தாதா முதலான வம்ச சிரோமணியாகிய நம்முடைய தம்பி, காடாந்தகார மான இருளிலே கொல்ல வந்தவளையுங் கொல்லாமல் மூக்கை யறுத்துத் துரத்திவிட்டான். ஆகையால் இவன் நல்ல சமர்த்தனென்று தழுவிக் கொண்டு, அப்பா! முன்னளிலே விஸ்வாமித்திரர் பின்னே போயிருந்த போது தாடகை வந்தாள். அவளைக் கொல்லென்று அவர் சொல்ல, அந்த க்ஷணமே பாணப்பிரயோகஞ்செய்து நான் கொன்றேன். நீ நேற்றுவந்த சூர்ப்பனகையையும் கொல்லாமல் மூக்குங் காதும் அறுத்துத் துரத்திவிட்டாய். பெண்ணைக் கொல்லலாகாதென்ற தர்மம் நான் பாராமற் போனேன். உன்னுடைய விவேகத்துக்கு நானென்ன சொல்லப்போகிறேனென்று சந்தோஷமாய்ச் சொன்னர். பின்பு தீராததுயரம் சிறிது தீர்ந்ததுபோல நினைத்துச் சந்தோஷித்து, ஸ்ரீ ராமனுந் தம்பியும் பொழுது விடிந்தல்லவோ அப்பாலே போகவேணுமென்று கொண்டுவந்த தீர்த்தத்தைச் சாப்பிட்டு அந்த மலையிலே தங்கினர்கள். அவ்விடத்திலே இலட்சுமணர் புஷ்பமுந் தளிருங் கொண்டு வந்து படுக்கைசெய்ய. அதின்மேலே சக்கரவர்த்தித் திருமகன் பள்ளிகொண்டிருந்தார். இலட்சுமணர் திருவடிகளை வருடிக்கொண்டிருந்தார். சீதை பிரிந்த பின்பு அபிமானமாகிய வியாதிகொண்டு, சுவாமியானவர் கந்தமூல பலாதிகளில் ஒன்றும் பட்சியாமல், துக்கமேலிடுதலால் நித்திரையுமில்லாமல், உயிர் ஊசலாடும்படிச் சோர்ந்து சோர்ந்து பெருமூச்செறிந்தார். அவளுடைய ஸ்வரூபத்தை மறவாமல் நினைத்திருக்கிறதினாலேயோ? இராட்சதர்களுடைய மாயையினாலேயோ? அவர் பார்த்திருக்கின்ற வனத்தினிடமெல்லாம் சீதையின் உருவமாகக் காணத் தலைப்பட்டது. அத்தருணத்திலே, ஸ்ரீ ராமர் கற்புடையவர்களுக்குப் பூஷணமாகிய ஜானகியானவள் இதோ என் பக்கத்தில் வந்திருக்கின்றாள். இவளை நான் தழுவிக்கொள்ளுகிறேனென்று எழுந்திருந்து உருவெளியைத் தழுவ, ஸ்பரிசம்படாமையால் என்னண்டையிலிருந்த சீதையைத் தழுவியும் உருவு கையில் அகப்படவில்லையே! அது அவளிடையைப் போலத் தேய்ந்ததோ? மற்றும் அவள் என் பக்கத்தில் வந்திருந்தது மெய்யானால், எனக்கு அவளுடைய அதராமிர்தம் கிடையாமற் போனதென்ன? இது கனவாயிருக்கும் என்று நினைத்தாலும் நித்திரையில்லாமல் கனவுண்டாகுமோ? சீதையினுடைய கண்ணைப் பார்க்கிலும் இந்த இராத்திரி பெரிதோ? இந்தச் சந்திரன் பிரளய காலாக்கினியே யாகவேணும். ஆதலால், இவன் சமுத்திரத்தில் வரவே சமுத்திரங் கொதித்து ஆகாயத்திலே தெறிக்க, அந்தத் துளிகள் பட்டுக் கொப்பளித்ததல்லவா இந்த நட்சத்திரங்களென்று சொல்லி வெகுவாகக் கிலேசித்தார். இப்படித் துயரப்படுகிற சக்கிரவர்த்தித் திருமகனைக் கண்டு பயந்து அதிசீக்கிரமாய் வந்தவன் போலச் சூரியன் உதயமானன்.

அயோழகிப் படலம் முற்றிற்று.

கவந்தன் படலம்

பூமியைப் போலப் பொறுமையும், அனுசூயையைப் போலக் கற்பும் உண்டாயிருக்கிற சீதையைத் தேடிக் காணுமல் அழுவதுபோல, ஆரணியத்தி லிருக்கின்ற பட்சிகள் எல்லாம் புலம்பி இரைய, விடியும் நேரத்திலே ஸ்ரீ ராம லட்சுமணர்கள் புறப்பட்டு நடந்து ஐம்பதுயோசனை தூரம் தேடினர்கள். அப் பொழுது சூரியன் ஆகாயத்தினடுவே வந்து சேர்ந்தான். அந்த மத்தியான வேளையிலே வில்வீரரான இருவரும் அப்படி நடந்து போகையிலே, சகல ஜீவ ராசிகளையும் வாரி வயிற்றில் அடக்கிக்கொள்ளுகிற கவந்தனுடைய வனத்தைக் கண்டார்கள். எறும்பு தடை, யானை முதலான ஜீவகோடிகளெல்லாம் சேர்ந்து வெறிக்கப் பார்த்து நடுநடுங்கி வலையி லகப்பட்டதுபோலவும் பழிக்கு அஞ்சாம லும் இராஜரீகமுஞ் செய்யத்தக்க சாமர்த்தியமும் புஜபலமும் இல்லாமலும் இருக்கின்ற அரசனுடைய நாட்டில் வாழும் உயிர்கள் போலவும், அதிக பயப் பிராந்தியாய் விழுந்தும் - சிதறியும் - விம்மியும் - ஓடியும் - மயங்கியும் வருந்து கின்றதைப் பார்த்தார்கள். பிரளய காலத்தில் பிரசண்டமாருதத்தினால் நான்கு சமுத்திரம் ஒருமிக்கப் பொங்கிச் சராசரங்களை யெல்லாம் வாரிக்கொண்டு வரு வதுபோலே சுற்றிலும் நெருங்கி வளைந்து வாரிக்கொண்டு வருகிற அந்தக் கவந்தன் கைக்குள்ளே மலைகள் உருண்டு வருவதும், பெரிய விருட்சங்களெல் லாம் வேரோடே யறுந்து பெயர்ந்து வருவதும், காளமுகள் ஆகாயபரியந்தம் எழும்பிப் பரவிப்புரளுவதும், சூல்கொண்ட மேகங்கள் சுருண்டு கீழே விழுவது மாக சகல ஜந்துக்களும் நெருங்கிவரக் கண்டு சீதை நிமித்தமாய் அந்த இராட்சதனுடைய சேனைகள் வந்து வளைத்ததென்று இராம லட்சுமணர்கள் சந்தோஷமானார்கள். உடனே சக்கரவாளகிரி நெருங்கிக்கொண்டு வருவது போல வருகிற அவனுடைய கையாகிய மதிலுக்குள்ளே தாங்களும் அகப்பட்டுக் கொண்டார்கள். அப்போது பெரியபெருமாள் இளையபெருமாளைப் பார்த்து, அப்பா லட்சுமண! இராட்சதசேனை வந்து வளைத்ததாய்க் காண்கின்றது. நமக்கு இத்தனை கிலேசம் வரும்படி வஞ்சனைசெய்து ஜானகியையெடுத்துப்போன இரா வணனுடைய பட்டணமும் சமீபத்திலேதானே யிருக்குமாகில், நம்முடைய துயரம் தீருமென்று சொன்னார். அதற்கு இலட்சுமணர் சுவாமி! இராட்ச சேனையாலெ முரசு அரைகின்ற சத்தமும், சங்கநாத முதலானதுகளும் உண்டாயிருக்குமே. அவையில்லையே, ஆகையால், பின்னை ஏதாயினும் ஒன்றுகவேண்டுமென்று சொல்லித் தொழுது பின்னேயிருந்தவர் முன்னேவந்து நின்று பார்த்து, ஐயா! அமிர்தங் கடைந்த வாசுகியோ? அல்லது அதற்குச் சமானமான வேறொரு நாகமோ? தெரியவில்லை. வாலோடும் தலையை வைத்துச் சகல ஜீவராசிகளையும் உள்ளே இழுத்துக்கொள்வதுபோல யிருக்கின்றதென்று சொல்லிக்கொண்டு தம்பியுடனே நடந்து மூன்றுயோசனை தூரம் உள்ளே புகுந்தார். அங்கேயொரு மகாபர்வதத்தில் இரண்டு சூரியர்களைப் பதித்துவைத்தாற்போல எரிந்துபுகைந்து சிவந்து கொதிக்கின்ற கண்களும், பல்லுக்குப்பல் நடுவே இரண்டு யோசனை அகன்ற வெளியும், வயிற்றிலே ஒரு சமுத்திரம் இருப்பதுபோல வாயும், தேவர் களும் அசுரர்களும் கடலைக் கடைகிற நிமித்தமாக மந்திரகிரியிலே சுற்றித்

தொங்கவிட்ட வாசுகியைப்போல இரண்டு பக்கத்திலும் நீண்டிருக்கிற இரண்டு கைகளும், கருமான் உலைக்களத்திலே எழும்பும் புகைபோலப் புகையெழும்புகின்ற மூக்கும், சமுத்திரத்தைச் சுவற இழுத்துக்கொண்டு இருக்கிற வடவாமுகாக்கினிக் கொழுந்துபோல வெளியிலே தெரிகின்ற நாக்கும், இராகுவென்கிற கரும்பாம்பின் எதிரேவரப் பயந்து அரணைத் தேடிக்கொண்டுபோய் ஒரு மலைக்குகையில் நுழைகிற சந்திரனை இரண்டு கூரிய வெட்டினதுபோலப் பிரகாசிக்கின்ற இரண்டு கோரதந்தமும், சூரியசந்திரர்களை விழுங்குகின்ற இராகு கேதுவாகிய சர்ப்பங்களுக்கு வேலையில்லாதபோது உறங்கிக்கிடக்கின்ற செவிகள்போல இரண்டு காதும், பொய் சொல்லியும் பாபங்களைச் செய்தும் பூமியிலே திரிகின்றவர்கள் சேர்கிற நரகத்தைப்போல வயிறும், பஞ்சபூதமும் பஞ்சபாதகமும் திரண்டு ஒரு ரூபமெடுத்ததுபோலச் சரீரமும், சகல பிராணிகளும் பதைபதைத்து நடுக்கத்துடனே நுழைகின்ற எமனுடைய வாசலைப்போல கைகளிலுலே அநேக கோடி வுயிர்களைப் பிடித்து நெருக்கி நுழைத்து ஒருமிக்க விழுங்குகின்ற பெரிய வாயும், சமுத்திரகோஷத்திலும் அதிக சத்தமுண்டான கடும்பேச்சும், ஆலகால விஷம்போல மிகவும் கறுத்திருக்கின்ற முகமும், பூர்வத்திலே ஸ்ரீ மகாவிஷ்ணு சக்கரப்பிரயோகஞ் செய்ய அதனுலே தலையிழந்த காலநேமியைப்போலக் கவந்தரூபமும், ஆதிசேஷனுடனே வாக்குவாதஞ்செய்து வாயு மோதியடிக்கச் சிகரம் ஒடிபட்ட மகம்மேரு பர்வதத்தைப்போல பருமனும் உயர்ச்சியுமாய் அங்கேயிருந்த கவந்தனைக் கண்டார்கள். ஏழு சமுத்திரமும் ஒன்றாய்ப் புகுந்து ஓடுகிறதாகச் சக்ரவாளகிரியிலே ஒரு ஜலதாரை யிருப்பதுபோல இருக்கின்ற அவனுடைய வாயைக்கண்டு, தேவர்களும் போகமாட்டாமல் நடுங்குகின்ற இராட்சதருடைய கோட்டைவாசற்படியே இதுவென்று நினைத்தார்கள். அப்போது இலட்சுமணர் நன்றாய் அமர்ந்து பார்த்து, சுவாமி! ஒரு பெரியபூதம் எல்லாரையும் கையினுலே வளைத்துத் தன் வாயிலிட்டுக் கொள்ளுகின்றது. நாமுமதற்குள்ளேதான் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதற்கு என்னசெய்வோமென்று பின்னுஞ் சொல்லுகின்றார். அதினுடைய சரீரம் உலகமெல்லாம் நிறைந்திருக்கின்றது. இரண்டு கையும் சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகத்தையெல்லாம் பிரதட்சணம் வருகின்றது. அதை பார்க்குமிடத்தில் இப்பூமியையெல்லாம் ஒரு கொம்பினுல் பெயர்த்து எடுத்த ஆதிவராகமான அப்பன்றி யென்றே சொல்லவேண்டுமென்று இலட்சுமணர் சொன்னார். அதுகேட்டு ஸ்ரீ ராமர், தம்பி! அப்படியானுல் நானொரு வார்த்தை சொல்லுகிறேன் கேள். என்னுடைய ஸ்திரீயும் பிரிந்துபோனுள். அவள் நிமித்தம் ஜடாயுவான தந்தையும் இறந்து போனார். மனது வேகப் பழிசுமந்து உழன்று திரிகிறதற்கு எனக்குச் சம்மதமா இருக்கவில்லை. ஆகையால் இப்பூதத்தினுடைய வாயிலே புகுந்து வயிற்றிலே போய்விடுகிறேன். நீ திரும்பி நம்முடைய பட்டணம் போய்ச்சேர். அப்பா! பெற்றவர்கள் துயரப்பட, என்னுடைய தம்பி துக்கப்பட, நல்லவர்களெல்லாம் இடரிலே மூழ்கப் பழியுந் தாங்கிக்கொண்டு பூமியிலே திரிவதைப்பார்க்கிலும் இறந்துபோவதே உத்தமம். அவ்விதம் இறந்தாலல்லாமல் என்னுடைய பழிதீராது. ஜனகராஜனிடத்திலே நான் கையிலே வில்லும் அம்பரூத்தூணியும் தாங்கிக்கொண்டு, எனக்கு நீ கொடுத்த கன்னிகை ராட்சதர் வீட்டிலே போயிருக்கின்றுளென்று சொல்லிக்கொண்டு

எவ்விதம் போவேன்? ஒரு பெண்சாதியை இரட்சித்து வைத்திருக்கமாட்டாமற் பறிகொடுத்துத் தம்பி போஷிக்கச் சாப்பிட்டுத் தன்னுடைய ஜீவனைக் காப்பாற்றிக்கொண் டிருக்கிறானென்று ஒருவன் சொல்லுவதிலேயும், தேவலோகம் போய்ச் சேர்ந்தானென்று சொல்லும்படி மாண்டுபோவதே நன்மையென்று சொல்லினர். அதற்கு அதிகமான துயரத்தோடே தம்பியானவர், சுவாமி! உம்மிடத்தில் அன்புற்றவன்போலக் கூடவந்து ஆபத்துவந்த வேளைகளிலே பிராணனைக் கொடாமல் திரும்பிப் போய்விட்டேனேயானால் என்னுடைய செய்கையும் குணமும் நன்றாயிருக்கும்? இடர்வந்த வேளையில் அதுகளை ஜெயித்துச் சகித்தவனல்லவோ சௌரியவந்தன்? தன் தாய்தகப்பன் தமைய னென்று சொல்லப்பட்டவர்களுக்கு ஆபத்து வந்த காலத்திலே அவர்களுக்கு முன்னே நான் சாகாமலிருந்தால், அக்காலத்திலேயே கீர்த்தி போய்விட்ட தல்லவா? தமையனுரையும் அவருடைய ஸ்திரீயையும் வெகுபுத்தி யுள்ளவன் போல நித்திரையுமில்லாமல் இதுவரையிலும் காத்துக்கொண்டிருந்த தம்பி யானவன் இக்காலத்தில் அவர்களை விட்டுவிட்டுத் தன்னுடைய பிராணனைத் தப்புவித்துக் கொண்டு வந்துவிட்டா னென்று உலகத்தார் சொல்லக் கேட்கிறதைப் பார்க்கிலும் வேறே மரணமான தவறு என்னயிருக்கின்றது? அடியேனுடைய தாய் தேவரீருக்கு முன்னே எனக்கு ஆக்யாபித்த பணி விடை யெல்லாம் வீணுய்ப்போகும்படி இவ்விதமாகத் தாங்கள் ஆக்கியாபித் தால் நான் என்னவென்று சொல்லப்போகிறேன்? மேலும் தமையனுருக்கு ஒரு ஆபத்து வந்தால் நீ முன்னே பிராணனை விட்டுக்கொள் ளென்றும் சொன்னுளே. அந்த வார்த்தையைத் தள்ளி நடந்துகொண்டால் நான் சத்தியசந்த னுவேனே, என்னை யீன்றவளும் நானும் யாதொரு வகையினுலாயி னும் உம்மை ஈன்றவளுக்கும் உமக்கும் பெரியவர்க ளெல்லாம் சந்தோஷிக்க நன்மை செய்துக்கொண்டு வருகிறேமென்கிற நல்ல வார்த்தையை அடைந் தால் அதுவே எங்களுக்கு மிகுந்த தவமாகும். அவ்விதமான தவத்தை உயி ரைப் பெரிதாக விரும்பி இழந்து விடுவோமா? அவைகளெல்லாம் இருக்கட் டும். சராசரங்களெல்லாம் இறந்தும் இறவாம லிருக்கும்படியான தேவர்கள் இறந்தபோதும் இறவாமல் இராநின்ற நீர், யானைகளைத் தின்றுகொண்டு, இந்த ஆரணியத்திலே உழல்கின்ற ஒரு பூதங் கொல்ல, இறந்து போகிறே னென்று சொல்லா நின்ற சொல்லைப்போலப் புகழுடைய சொல் வேறென் றுண்டோ? இதை யாராயினும் கேட்டவர்கள் சம்மதிக்க மாட்டார்கள். பார்த்த வர்களும் அலட்சியமாக நினைப்பார்கள். சிறையில் அகப்பட்ட பெண்சாதியை மீட்டானென்கிற கீர்த்தியைக் கொள்ளாமல், ராட்சதர்களை ஜெயிக்கமாட்டா மல் இறந்துபோன னென்கிறதைக் காட்டிலும் அதிகமான அபகீர்த்தியுண்டா? ஆகையினுலே இந்தப் பூதத்தினுடைய பிலத்துவாரத்திற்கு ஒத்த பெரிய வாயையும் எல்லா உயிரையும் வளைத்துக்கொண்டு வருகிற கைகளையும் அடி யேன் அறுத்துத் துணிக்கிறதைக் கண்டுகொண்டிரும். துயரங் கொள்ள வேண்டா மென்பதாய்ச் சொல்லி இலட்சுமணர் முன்னே நடக்க, அவருக்கு முன்னே போகின்றேனென்று சொல்லிக் கொண்டு வேறொருவரு மில்லாமல் தாங்கள் இருவருமே வருத்தம் அடைவதைக்கண்டு, தேவர்களும் துயரம் அடை ந்து அழுதார்கள். இத்தன்மையை யுடையவர்களான இருவரும் இரண்டு கண்

கள் போலச் சமீபத்தில் வருவதைக் கவந்தன்கண்டு மஹா சௌரியமாய் வருகிற நீங்கள் யார்? என்று அதிக கோபத்தோடே கேட்டான். அதற்குக் கொஞ்சமாயினும் மனதிலே பயமென்பதில்லாமலும், கண்களே இமையாமலும், உடல் பதையாமலும், அதிக ஜாக்கிறதையாய்ப் பார்த்துக்கொண்டு சும்மா நின்றார்கள். அதைக்கண்டு நம்மைத் துர்ப்பல முடையவனாக எண்ணி இகழ்ந்தார்களென்று எண்ணிக் கோபித்து, கோபாக்கினிப் பொறிகள் உரோமத் துவாரங்கள் தோறும் ஜ்வாலிக்க இவர்கள் இருவரையும் விழுங்கிவிடுவோமென்று எழும்பினன். அப்போது இராம லட்சுமணர்கள் இருவரும் வாளே யுருவிக்கொண்டு, அவனைக் காட்டிலும் அதிக வுயரமாக ஆகாயத்திலெழும்பி பர்வதங்கள்போல இருக்கின்ற அவனுடைய இரண்டு தோளையும் வெட்டித் தள்ளினர்கள். அந்தத் தோள்கள் இரண்டிலும் இருந்து இரத்தம் பிரவாகமாய்ப் பெருகி பூமியெல்லாம் நிறைய, அதினடுவே சமுத்திரத்தின் மத்தியில் மந்தரகிரியைப்போல பிரகாசித்தான். அடியேனே ஆட்கொண்ட நாயகனுடைய திருக்கைகளினாலே தீண்டி வெட்டவே, அவனுடைய பூர்வசாபம் தீர்ந்து பாபவிமோசனமாகி, அந்தச் சரீரத்தை விட்டு, மரமானது வெட்டுண்டுபோக அதிலே யிருக்கிற பட்சி ஆகாயத்திலெழும்பிப் பறந்ததுபோல் ஆகாயத்திலே போய் எதாஸ்வரூபத்தோடே விளங்கி நின்று, புண்ணியபலன் கிடைத்தபடியினாலே பிரமா முதலான சகல உயிர்களுக்கும் கண்மணிபோலப் பிரகாசித்துக் கொண்டிரா நின்ற அந்த பரமபுருஷனான ஸ்ரீ மந் நாராயணன்தான் இந்த ஸ்ரீ ராமனென்று அறிந்து, அவனுடைய அனந்த கலியாணகுணங்களே வாயினாலே ஸ்தோத்திரஞ் செய்யத் தொடங்கினன்.

கவி

ஈன்றவனே வெப்பொருளு மெல்லாதீர் கல்லறத்தின்
சான்றவனே தேவர் தவத்தின் றனிப்பயனே
மூன்று கடவாய் முளைத்தெழுந்த மூலமோ
தொன்றி யிருவினையேன் சாபத் திடர்தொடைத்தாய்.

மூலமே யில்லா முதல்வனே நீமுயலும்
கோலமே யார்க்குந் தெரியவரிய கொள்கைத்தால்
ஆலமோ வாலி னடையோ வடைகிடந்த
பாலனே வாதிப் பரனே பகராயே.

காண்பார்க்குங் காணப் படுபொருட்குங் கண்ணுதிப்
பூண்பாய்போ னிற்றியால் யாதொன்றும் பூணுதாய்
மாண்பா லுலகைவயிற் றெளித்து வாங்குதியால்
ஆண்பாலோ பெண்பாலோ வப்பாலோ வெப்பாலோ.

ஆதிப் பிரமனுநீ யாதிப் பரமனுநீ
ஓதி யுறபொருளுக் கப்பாலுண் டாயினுநீ
சோதிச் சுடர்ப்பிழம்ப நீயென்று சொல்லுகின்ற
வேத முறைசெய்தால் வெள்காரோ வேறுள்ளார்.

எண்டிசையுங் திண்சுவரா வேழேழ் நிலைவகுத்த
வண்டப் பெருங்கோயிற் கெல்லா மழகுடைய
மண்டலங்கண் மூன்றின் மேலென்று மலராத
புண்டரிக மொட்டின் பொகுட்டே புரையம்மா.

மண்பா லமரர் வரம்பாருங் காணுத
வெண்பா லுயர்ந்த வெரி யோங்கு நல்வேள்வி
உண்பாய் நீ யூட்டுவாய் நீயிரண்டு மொக்கின்ற
பண்பா ரறிவார் பகராய் பரமேட்டி.

நிற்கு நெடுநீத்த நீரின் மூலத்தெழுந்த
மொக்குளே போல முரணிற்ற வண்டங்கள்
ஒக்க வுயர்ந்துன்னுள்ளே தோன்றி யொளிக்கின்ற
பக்க மறிதற் கெளிதோ பரம்பரனே.

நின்செய்கை கண்டு நினைந்தனவோ நீண்மறைகள்
உன்செய்கை யென்னவைதான் சொன்ன வொழுக்கினவோ
என்செய்தேன் முன்ன மறஞ்செய்கை எய்தினேர்
பின்செல்வ தில்லாப் பெருஞ்செல்வ நீதந்தாய்.

மாயப் பிறவி மயனீக்கி மாசிலாக்
காயத்தை நல்கித் துயரின் கரையேற்றிப்
பேயொத்தேன் பேதைப் பிணக்கறுத்த வெம்பெருமான்
நாயொத்தே னென்ன நலனிழைத்தே னெனென்னுன்.

சுவாமி! நீர் சகல வஸ்துவையும் பெற்றவனே? அளவில்லாத கர்மத்துக்குத் தற்சொரூபமா யிருக்கின்றவனே? தேவர்களுடைய ஒப்பற்றதான தபோபலமோ? மும்மூர்த்திகளென்கின்ற மூன்று கிளையுடனே முளைத்தெழுந்த மூலவஸ்துதானே? ஸ்ரீ ராமனாக அவதாரஞ்செய்து, எவர்களாலும் நீக்குதற்கு அருமையான தீவினையுடைய அடியேனெதிரே வந்து என்னுடைய சாபத்துயரைத் தீர்த்தீரே! ஓ மூலமென்கிற தொன்று இல்லாத முதல்வனுய் இருக்கின்றவனே! நீ செய்கின்ற காரியம் யாராலும் அறியக்கூடாமையால், நீர் ஆலோ? ஆலிலையோ? அதிலே யிருந்த பாலகனே? சமுத்திரமோ? எனக்குச் சொல்லவேண்டுமையா! வேதங்கள் உம்முடைய நடத்தையைக் கண்டு அந்த வொழுக்கத்தையே சொல்லியதுகளோ? அதுகள் சொன்னபடியே நீர் நடந்துக்கொள்கின்றீரோ! நானென்றும் அறியமாட்டேன். பூர்வத்தில் என்ன தான் செய்து இந்தத் தவவடிவு கொண்டிருக்கின்றீர்? ஓ! இன்னமுஞ் செய்ய வேண்டுமென்பதில்லாத பரிபூரணமான செல்வம் பெற்றிருக்கின்ற பகவானே! காண்கின்றவர்களுக்கும், காணப்படுகின்ற பொருள்களும் கண்ணுகி, சகலத்திலேயும் வியாபித்திருக்கிறவனேப்போல நிற்கின்றீர். ஒன்றிலும் வியாபித்திருக்கிறவனேயில்லை. உலகத்தைத் திருவயிற்றி லொளித்துப் பின்பு வெளிப்படுத்துகின்றீர்! நீர் ஆணே? பெண்ணே? அலியோ? எந்த வடிவமோ? தெரியவில்லை. எட்டுத் திக்கும் சுவராகப் பதினலு நிலையுடனே கட்டியிருக்

கின்ற அண்டமென்கிற கோயில்களுக்கெல்லாம் அழகினையுடையதா யிருக் கின்ற மூன்று மண்டலத்தின்மேலும் நின்று ஒருநாளும் மலராத மூலதாமரை மொக்கினுள்ளே யிருக்கின்ற கர்ணிகையோ உம்முடைய இருப்பிடம்? ஆதிப் பிரமாவும் நீர்! ஆதிப்பரமனும் நீர்! ஆதியென்கிற வஸ்துவுக்கு அப்பாலே யொன்று உண்டாயிருந்தாலும் அதுவும் நீரே. சோதிச்சுடரும் நீரேயென்று வேதந்தானே சொன்னால் மற்றவர்களெல்லாம் வெட்கிப் போகார்களா? ஓ பரமேட்டியான அகண்டாகார ஸ்வரூபனே! மகா பிரளயத்திலே உற்பத்தியான நீர்க்குமிழிபோல முகுளித்திருக்கின்ற பல்லாயிரங்கோடி அண்டங்களும் உம் மிடத்திலே தோன்றி யொளிக்கின்றவிதம் ஒருவராலே அறிவதற்கு எளியதா யிருக்கின்றதா? மாயமான பிறவிமயக்கத்தை நீக்கிக் களங்கமில்லாத திவ்விய தேகத்தைக் கொடுத்து, துயரக் கடலின் கரையேற்றிப் பேயையொத்த பேதமையான பிணக்கையை யறுத்து இவ்விதமாகத் துல்லியனுகும்படி செய் வித்த எம்பெருமானே! நாய்க்குச் சமானமான மகாபாவியான நான் உன் விஷயத்தில் என்ன நன்மையைச் செய்தேன்? ஓ பராபரமான ஆதிநாராயணா! வேள்வியும் வேள்வி செய்கின்றவனும், அவிசுகளும், அவிசுகள் உண்கிற வனும், ஊட்டுகிறவனும் நீரே யென்பது யார்தான் அறிவார்கள்? நீர்தான் சாதித்தருள்வீரென்று துதி செய்தான். இவ்வண்ணஞ் சொல்லிப் பின்னும் மனதிலே இப்போது இவருடைய மகிமையை யெல்லாம் வெளியிட்டுச் சொன் னேனேயானால் தேவர்களுடைய எண்ணத்திற்கு மாறுபாடா யிருக்குமென் றெண்ணி தன் தாயைக் கண்ட கன்றைப்போல மகிழ்ந்த சிந்தையை யுடைய வனாய் நின்றான். அவனைப் பிரபத்திசெய்கிற பெரியபெருமாள் கண்டு, இளைய பெருமானைப் பார்த்து, தம்பி! இப்போது தோள்கள் அறுபட்டவனே? அல்லது மற்றியினுமொருவனே? இவன் மிகவும் பிரகாசிக்கின்ற திவ்வியஞான வொளி யுண்டாய் இருக்கின்றான். யாரென்று விசாரிப்பா யென்று சொல்ல, இராமா நுஜர் அவனைப் பார்த்து, நீ யாரென்று கேட்டார். அதற்கு அவன் சுவாமி களே! அடியேன் தனுவென்னும் பெயருண்டானவன். ஒரு கந்தர்வனுடைய சாபத்தாலே இந்த ஈனமான பிறப்பை அடைந்திருந்தேன். தாங்கள் வந்து திருக்கைகளினாலே தீண்டின மகிமையால் அந்தச் சாபம் விமோசனமாகிப் பூர்வ ஸ்வரூபம் பெற்றேன். ஓ என்னை ஆளவந்தவர்களே! அடியேன் ஒரு விண்ணப்பம் பண்ணிக்கொள்ளுகிறேன். அதைக் கேட்டருள வேண்டுமென்று ஒரு வார்த்தை சொல்லுகிறான்: வில்வீரர்களான உங்களைக் காக்கத்தக்க சாமர்த்தியர் ஒருவருமில்லை; காக்க வேண்டியதுமில்லை. ஆனாலும் தனக் கொருவரும் நிகரில்லாத ஸ்ரீ மகாலட்சுமியைத் தேடுவதற்கு வேறே யுங்க ளிடத்தில் மனிதரிருக்க வேண்டும். அதுவல்லாமலும் கடலைக் கடக்கிறதற் காகக் கட்டுமரம் வேண்டி யிருப்பதுபோல, பகைவர்களை வெல்லுதற்குத் துணையிருக்க வேண்டும். உலகத்திலே பிரமாவினாலே சிருஷ்டிக்கப்பட்ட ஜீவ கோடிகளையெல்லாம் அழிக்கின்ற தொழிலையுடைய ஒருவனை அந்த ருத்ர மூர்த்தியும், அநேக பூதகணங்களைச் சேர்த்துக்கொண்டிருக்கின்றது அறிவீர் களே. அந்தப்படித் துணையுடனே கூடியிருந்து செய்வதே தர்மம். பொல்லாத பாவிகளைச் சேர்க்காமல் நன்றாய் அறிந்து பார்த்துச் சகல ஜீவனுக்குந் தாய் போல அன்புண்டான சவரி யென்பவளிருக்கிறாள். அவளிடத்திலே போய்

அவளைக் கண்டு பேசினால், அவள் வழி சொல்லுவாள். அவ்வண்ணமாய் ரிசிய மூக பர்வதத்திற்குப்போய், அதன்மேலேறி, அவ்விடத்தில் இருக்கின்ற சூரிய னுடைய புத்திரனை சுக்ரீவனென்பவனைச் சினேகித்து, அவனைக்கொண்டு அதிசீக்கிரத்தில் ஸ்ரீ மகா லட்சுமியைத் தேடுகின்ற காரியத்தைப் பாருங்க ளென்று சொன்னன். அவ்வார்த்தையைக் கேட்டு அப்படியே செய்வோ மென்று சம்மதித்தார்கள். பின்பு அந்தத் தனுவென்பவன் நமஸ்காரஞ் செய்து வாழ்த்தி ஆகாயமார்க்கமாய்ப் போனன். தசரதமகாராஜாவின் புத்தி ரர்கள் இருவரும் அப்படியே வழிகொண்டு நடந்து ஆரணியமும், மலைகளும் தாண்டிச் சாயங்கால வேளையிலே மதங்காசிரமம் போய்ச் சேர்ந்தார்கள்.

கவந்தன் வதைப் படலம் முற்றிற்று.

சவரிப் படலம்

அவ்விடத்தில் கற்பக விருட்சம்போலச் சோலையில் இருக்கின்ற மரமுத லானதுகள், புட்பங்கள், காய்கள், கிழங்குகள், தேன் முதலானதுகளைக் கொடுக் கிறபடியினாலும், அங்கே வாசமாய் இருப்பவர்க ளின்பமே யல்லது துன்பமென் பதை அறியார்களான படியினாலும், அந்த மதங்காசிரமம் தேவர்கள் வாழ் கின்ற சுவர்க்கலோகத்திற்குச் சமானமாய் இருந்தது. அப்படிப்பட்ட ஸ்தா னத்திலிருந்து ஆதிமத்தியாந்த ரகிதரான ஸ்ரீ ராமசுவாமியானவர் போய், தம் மையே நினைத்து அளவிறந்த காலமாகத் தவஞ்செய்து வழிபார்த்துக் கொண் டிருக்கும் சவரியைக் கண்டு, சுகமாய் இருக்கின்றையாவென்று கேட்டார். அவள் அன்பினால் எதிரேவந்து மனதுருகி அழுது, ஆனந்தபாஷ்பம் கண் களில் நின்றும் பெருகும்படி தோத்திரஞ்செய்து, அனேக காலமாய் நான் செய்த தபோபலத்தினால் நீங்கள் வந்து எனக்குத் தரிசனம் கொடுக்க என் னுடைய மாயாபாசமும், ஜென்மமும் போய்விட்டனவென்று சந்தோஷித்து, தான் இருக்கும் இடத்திற்கு அழைத்துக்கொண்டு போனள். அப்போது சிவ னும், பிர்மாவும், இந்திரனும் மற்றத் தேவர்களும் வந்து களிப்புடனே சவரி யைப் பார்த்து, உன்னுடைய தபசுக்கு இலப்த முண்டாயிற்று. ஸ்ரீ ராமபிரா னுக்கு வேண்டிய பூஜைகளைச்செய்து, நீ இச்சித்திருக்கும் மோட்சபதம் போய்ச் சேரென்று சொன்னார்கள். அத்தருணத்திலே சவரியானவள் சக்கரவர்த்தித் திருமகனைப் பார்த்து, சுவாமி! நீர் வருவீரென்று வழிபார்த்துக் கொண்டிருந் தேன். இப்போதுதான் என்னுடைய புண்ணியம் பலித்ததென்று சொல்லி னள். அந்தத் தவத்தரசான சவரியைப் பார்த்து, அம்மா! உன்னிடத்திலே வந்து எங்களுடைய மனவருத்தம் தீர்ந்ததென்று சொன்னர். அச்சமயத்தில் மாம்பழம் - தேங்காய் - வாழைப்பழம் பின்னுமுள்ள பழவர்க்கங்களில் தேவரீர் உண்ணத்தக்கது எதுவென்று அடியேன் சாப்பிட்டறிந்து, நல்ல மதுரமான கனிகளை உமக்கென்று அன்புடனே வைத்திருக்கின்றேன். அமுது செய். தருளுமென்று சொன்னள். அப்படியே அமுதுசெய்து திருவுள மகிழ்ந்து, சுவாமியும் இளையபெருமாளும் அன்றையதினம் அவ்விடத்திலே யிருந்தார்,

கள். பின்பு அந்த மகா தபசியான சவரி சூரிய புத்திரரான சுக்ரீவனிருக்கும் பர்வதத்திற்கு நடந்துபோகும் வழியெல்லாம் நன்றுயெண்ணிப் பார்த்து, மோட்சத்தை யடையும் மெய்ம்மார்க்கத்தைச் சுலபமாக வெளியிட்டுச் சொல்லும் பரமயோகிகளைப்போல அவர்களுக்குச் சொன்னள். அதுகளையெல்லாம் கேள்விச் செல்வத்தையுடைய ரிஷீஸ்வரர்கள் தங்களுடைய பேரறிவினுலே உண்ணப்படாநின்ற ஞானமிர்தமாய் இராநின்ற ஸ்ரீ ராமர் வேறொரு தியானமில்லாமல் கேட்டருளினர். பின்பு அந்தச் சவரியானவள் நெடுநாளாக அனுசரித்திருந்த யோக முயற்சியின் பலத்தினுலே சரீரத்தை விட்டுப்போய் முத்தி யடைந்தாள். அதுகண்டு மிகுந்த அதிசயமடைந்த இராமலட்சுமணர்கள் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, அவள் சொன்ன வழியின் குறிப்பை பார்த்துக்கொண்டே நடந்து, அனேக கானகமும் மலைகளும் நதிகளும் கடந்து, உலகத்திலே யிருப்பவர்களுடைய பாவங்களை யெல்லாம் விமோசனஞ் செய்கின்ற புண்ணிய சொரூபமான பம்பா நதியின் பக்கத்திற் போய்ச் சேர்ந்தார்கள்.

ஆரணிய காண்டம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத்

கம்ப ராமாயண வசனம்

கிஷ்கிந்தா காண்டம்

விருத்தம்

மூன்றுரு வென குண மும்மை யாமுதற்
றோன்றுரு வெவையுமிம் முதலைச் சொல்லுதற்
கேன்றுரு வமைந்தவு மிடையி னின்றவர்
சான்றுரு வுணர்வினுக் குவந்த தாயினுன்.

பம்பாநதிப் படலம்

இவ்விதமாக மனவூக்கங்கொண்டு நடந்துவரா நின்ற ஸ்ரீ ராம லட்சுமணர்கள் நறை பெருகும் பூக்களைப் பரிமளித்தும், சிங்க முதலிய மிருக ஜீவராசிக ளெங்கணும் வியாபித்தும், தண்ணீர் அதிக தெளிவுற்றதாயும், தாராகணங்களுடன் வானமானது பூமியினிடத்து வந்துற்றதுபோல ஒளியை யடைந்தும், தேவா மிர்தத்தினுஞ் சிறந்த தெளிவை யடைந்திருக்கின்ற ஜலமானது மாணிக்கங் களால் அமைத்திருக்கப்பட்ட நீர்ப்படித் துறைகளைச் சாடிச்சாடி யணுகுந் தோறும் அந்தந்த நவரத்தினங்களி னொளியைத் தருகின்றபடியினால் அது தேர்ந்துணரப் பாமராளராகிய அவிவேகிகளின் செய்கைவாய்ந்த இருதயத் தைப்போலு மிருக்கின்ற மகா வுன்னதமாகிய பம்பாநதியென்னும் ஒரு திவ்ய நதியைக் கண்டார்கள். அந்த நதியானது பாதாளலோகம் வரையில் ஆழ்ந் திருப்பதினால் தண்ணீரின் தெளிவினால் மிக வுள்ளிருக்கின்ற வஸ்துக்களெல் லாம் நோக்குபவர்க்கு விசிதமாகத் தெரிகின்றது எப்படி யிருந்ததென்றால், பஞ்ச தருவினும் மேம்பாட்டினை வகித்த கவீஸ்வரர்களால் பாக்களியற்றப் பட்ட ஆசு - மதுர - சித்ர - விஸ்தார மென்னும் பாக்களில் மிகவும் அபூர்வ மாகிய ஆழ்ந்த பொருள்களை விளக்குவன போலு மிருந்தன. பின்னும் அந்த நதியினுட்பக்கத்தில் பதித்திரா நின்ற ரத்னங்களி னொளியையும் விக்ஷேபமாய்க் காட்டப்பட்டதனாலும், பசுமையான இலைகள் நெருங்கி இடைவிடாது பரவி

யிருப்பது எப்படி யிருந்ததென்றால், ஒருவனது நெஞ்சத்தின் சுபாவம் நிட்களங்கப் பட்டதாயினும் அறிவின்மையானதின் கொள்கை அதன் தலையை மிதித்து நடுவிற்றோன்றும் மயக்கத்தை யடைந்து அதன் சுயநிலைமை தோன்றாதிருக்கச் செய்வதுபோலு மிருந்தது. மணற் குப்பல்களில் நித்திலங்கள் நிறைந்திருப்பதும், அவைகளின் நடுவே அம்சங்களெல்லாம் ஆணும் பெண்ணுமாகக் கூடியிருக்கின்றதும், எண்ணிறந்த தாராகணங்களுடன் சோடச கலைகளையுடைய அநேக பூர்ணச்சந்திர பிம்பங்கள் தோன்றிப் பிரவேசிப்பதுபோலு மிருந்தது. மற்றும் இந்தத் திவ்விய நதியானது, ஆதிகாலத்தில் பூலோகத்தையும் சகல வுயிர்களையும் முனி சிரேஷ்டக் குழுவையும் வேறே நூதனமாக ஏற்படுத்த நினைத்த விஸ்வாமித்திர மகாமுனிவரானவர் சமுத்திரத்திற்குப் பதில் உண்டாக்கிய மகா கடல்போலவும் நீண்டு விளங்கியது. நீர்வாழினங்கள் முதலிய சகலவித ஜீவராசி பட்சியினங்களெல்லாம் வந்திறங்கி ஒன்றோடொன்று மருவுவதும் பேசுவதும் ஒரு மகா திவ்வியாலயங்களின் அடியார்கள் கோஷ்டம் போல இருந்தது.

செந்தாமரைப் புஷ்பத்தின்மேல் அன்னங்கள் தாவி யேறுகிறது, ஸ்ரீ ராமருடைய தேவியார் போயிருக்கின்ற யிடம் நாங்கள் அறிந்து சொல்லுகிறதற்கு இல்லாதபடியினலே இனி அவருடைய திருமுகத்தைப் பார்க்கமாட்டோம்; இறந்து போகின்றோமென்று அக்கினிப் பிரவேசமாகின்றது போலிருந்தது. கிளியைப்போல வசனிக்கின்ற சீதையினுடைய கண்ணுக்குப் பந்து ஜனமாகிய நம்மை ஸ்ரீ ராமர் கண்டால் துக்கத்தினால் கண்களில் ஜலம் துளிக்கச் சோகப்படுவாரென்று நினைத்து, ஒளித்துப் போகிறதுபோலச் சேற்கெண்டைக ளெல்லாம் பதுங்கி யொதுங்கியதுகள். மூங்கிலின் முத்துக்களையும் யானைத் தந்தத்தின் முத்துக்களையும் மாணிக்கங்களையும் வாரிக்கொண்டு அருவிநீர் வந்து சேருகிறபடியினலே பலபல இரத்தினபரணம் பூண்டிருக்கின்ற ஸ்திரீகள்போலவு மிருந்தது. மதயானைகள் வந்து விழுந்து மூழ்ந்தாடுவதினால் அலைந்து ஜலம் கலங்கி யிருக்கிறது, சையோகத்தில் சரீரம் நொந்து அயர்ந்திருக்கின்ற வேசியினுடைய ரூபம்போல யிருந்தது. மலைத்தேனும் யானை மதங்களும் மேன்மேலும் வந்து விழுகிறபடியினலே அந்தத் தண்ணீர் உண்டவர்களுக்கு அதிகமாகிய களிப்புண்டாகும்படி ஸ்திரீகளுடைய அதரம்போல மகிமை பெற்றிருந்தது. சமஸ்கிருத முதலாகிய பதினெட்டுப் பாஷையார்களினுமுள்ள கீழ்மக்களெல்லாம் ஒரு ஸ்தானத்திலே சேர்ந்திருந்து பாஷிக்கிறதுபோல அநேக வகைப்பட்ட பட்சிகளெல்லாம் குரல் வேறுபாடு தெரியாததுகளும், அக் குரலோசை ஒன்றினோடொன்று சம்பந்தப்படாததுகளுமாக ஓய்வில்லாமல் சப்திக்கத் தலைப்பட்டதுகள். உடல் உயிரைப் பிரிந்ததுபோலப் பெட்டை யன்னத்தைப் பிரிந்த ஆணன்னம் ஸ்நானஞ்செய்து போகின்ற தேவகன்னியர்களின் காற்சிலம்பு சப்திக்கிறதை தன் பிராணபதமான பெட்டைக் குரலென்று காதில் கேட்டுக் கொண்டு களிப்புற்றிருந்தது. மலைகளிலிருந்து அகிற்கட்டை சந்தனக்கட்டை முதலானதுகளை வெள்ளமிழுத்து வந்து இடுதலால் அந்த ஜலம் மிகுந்த வாசனையைத் தரும்படி யிருக்கிறது. சந்தனம் வைத்திருக்கிற பாணிபோலும் இருந்தது. ஸ்திரீகளுடைய இதழுக்குச் சமானமான செவ்வல்லிப் புஷ்பத்திலே

யிருக்கிற தேனையுண்டு முதலைகளெல்லாம் மயங்கிக் கிடந்ததுகள். நீர்க்காக்கை கள் வாயிலே மீன்களைக் கவ்விக்கொண்டு, உலகத்தில் உற்பவிக்கின்ற உயிர் களுக்கெல்லாம் பிறப்பும் இறப்பும் இப்படிதானென்று காட்டுகிறதுபோல முழுகி முழுகி எழத் தலைப்பட்டதுகள். ஸ்ரீராமருக்கு அந்த சீதையைக் கொண்டு வந்து கொடுக்கிறதற்கு நம்மாலே யாகாமற்போனதும், ஆனதையாவது செய் வோமென்று அன்னங்கள் அவளுடைய நடையைக் காட்டியதுகள். நீலோற்பல புஷ்பங்கள் கண்களைக் காட்டியதுகள். செவ்வல்லிப் புஷ்பங்கள் வாயைக் காட்டியதுகள். அதிலே வந்து ஸ்நானஞ் செய்கிற தேவரம்பையர்களுக்கு அவர்களுடைய தாதிமார்கள் அன்னங்கள் கொண்டுவந்து வைத்திருக்கின்றது போல, புஷ்பக் கொம்புகளிலெல்லாம் அன்னப்பட்சிகள் ஏறியிருந்ததுகள். கொக்குகள் விருட்சங்களின்மேல் ஏறியிருந்து சிறகை உலர்த்துஞ் சாயை ஸ்படிகம்போ லிருக்கின்ற தண்ணீருக்குள்ளே தோற்றக் கண்டு, அதுகள் உள்ளேவந்து புகுந்ததுகளென்று மீன்களெல்லாம் பயந்து சுழன்று பதுங்கி யதுகள். ஒரு பக்கத்திலே நீலரத்தின சாயையும் ஒருபக்கத்திலே புஷ்பராகத் தின் சாயையும் உண்டாயிருப்பதனால், அந்த நதிக்கரை ராத்திரியும் பகலும் போலப் பிரகாசித்துக்கொண் டிருந்ததுகள். வாளைப்போல வாளைமீன்கள் வாயிலே கடித்துக்கொண்டு அலைகளில் துள்ளுகிற நீர்நாய்கள் திரைக்குள்ளே யிருந்து பிரதிமை யாடுகிறதுபோலப் பிரகாசிக்க, அதுகளைக் கண்டு சந்தோ ஷித்துப் புகழ்கிறதுபோலப் பச்சைத் தேரைகள் சப்திக்கத் தலைப்பட்டதுகள். இப்படி அநேகவித சிங்காரமுடைய சகலமாகிய பொருளும் நிறைந்திருக்கின்ற அந்தப் பம்பையென்கிற நதிக்கரையிலே ஸ்ரீராமர் வந்து அன்னப்பட்சி களையும் தாமரை முதலானதுகளையும் கண்டு, தம்மைப் பிரிந்துபோயிருக்கின்ற சீதையை நினைத்துக்கொண்டு மனதுருகித் தளர்ந்து, நல்லறிவு ஒடுங்கினவர் போல மயங்கிப் புலம்பத் தொடங்கினார். ஓ வரிகளையுடைய வரால்மீன்களே! அன்னப்பட்சிகளே! உங்களைப்போலக் காலும் நடையு முள்ளவளைப் பிரிந்து மனது எரிந்துகொண் டிருக்கின்ற என்னிடத்தில் இரக்கங்கூர்ந்தால், அது உங்களுக்குக் கீர்த்தியல்லவா? இணைபிரியாம லிருக்கின்ற நீங்கள் ஒருவார்த்தை பேசினால் அதனாலே உங்களுக்குச் சேதம் வருமா? தாமரைப் புஷ்பமும் நீலோற்பல புஷ்பமும் மலர்ந்து என் மனதைப் புண்ணாகச் செய்கிற பொய் கையே! அவளுடைய கண்ணையும் முகத்தையும் காட்டுகின்ற நீர் சர்வாங்க மும் ஒருதரங் காட்டலாகாதா? உண்ணுகிறவர்களுக்குக் கொஞ்சம் உணவு கொடுத்துச் சம்பூரணமாகக் கொடாமலிருக்கிற லோபிகள்போலச் செய்கின் றீரே? அப்படிச் செய்வது நல்லதா? ஓ வாவியே! அமிர்தத்துக்குச் சமான மான சீதையினுடைய அவயவங்களாகிய நீலோர்பலம் - செவ்வல்லி - தாமரை - வள்ளைக்கொடி - வரால்மீன் - ஆமை இதுகளையெல்லாம் உன்னிடத்திலே கண் டேன். இதுகள் அந்த ராட்சதன் அவளைத் தின்றுகொண்டு போகும்போது சிந்தினதுகளோ? நீ சொல். ஓ ஓடுகின்ற மயிலே! அவளுடைய சாயலுக்குத் தோற்று மனதழிந்து ஒதுங்கித் திரிந்த நீயும் மனது குளிர்ந்தையா? அவளைத் தேடிக்கொண்டு திரிகின்ற என்னையும் நன்றாகக் கண்டாய். மனமகிழ்ச்சி யுடனே ஆடுகின்றாய். ஆயிரம் கண்ணுண்டானவர்களுக்கு எதுதான் தெரி யாது. எப்படி ஒளிக்கலாம். ஓ அவையத்திலே யிருக்கிற அன்னப்பேடுகளே!

நீங்களாகிலும் ஒரு வார்த்தை அறிந்ததைச் சொல்லுங்கள். நீங்களொன்றும் பேசுகிறதில்லையோ? உங்களிடத்திலே பிழை செய்யாமல் இருக்கின்ற எனக்கும் பிழைசெய்கின்றீர்களோ? அவள்தான் உங்கள் நடையை அழியச்செய்து ஜெயங் கொண்டிருந்தாள். அவளிடத்திலே பகை உங்களுக் கிருக்கின்றது. உங்களைப்பார்த்து நான் சந்தோஷப்படுகின்றேனே. என்னிடத்திலும் கோபம் செய்யலாமா? ஓ பொன்போலும் அவ்விதழ்களைப் பொருந்தி வண்டுகள் தமிழ்ப்பாட்டினை இசையுடனே பாடும்படி மலர்ந்திருக்கின்ற தாமரையே! அந்தப் பெண் என்னிடத்திலுமில்லை. மற்றொரு இடத்திலிருக்கிறவளுமல்லள். உன்னிடத்திலு மில்லையென்றால் நானென்ன சொல்லப்போகிறேன்? இப்படி ஒளிக்கிறவர்களுடனேயும் உறவு செய்யலாமா? ஓ இந்தப் பொய்கைக்குள் ளிருக்கின்ற செங்கழுநீர்ப் புஷ்பமே! ஒரு வார்த்தையாகிலும் வாய்திறந்து சொல்லாயோ? பயப்படாமல் எதிரே நின்று தேனைத் துளித்துக்கொண்டு நான் அவள் வாய்க்குச் சமானமென்று காண்பிக்கின்றையே. அந்த வாயிலுண்டான சிறு நகையையும், குளிர்ந்த மதுரமாயிருக்கிற வார்த்தையையும் நீயேனும் கொடுக்கலாகாதா? ஓ நீலோற்பலமே! அவள் கண்ணைப்போலவே யிருந்து கொண்டு என்னை இகழ்ச்சி செய்து உபத்திரவப்படுத்துகிறையா? ஓ வள்ளைக் கொடியே! நீ சீதையினுடைய காதேயல்லாமல் வேறொன்றல்ல; குண்டலமும் குழையும் தோடும் விலக்கிவிட்டு வந்தாய். அவள் சமாச்சாரத்தை எனக்குச் சொல்லாமல் இன்னமும் என் துயரத்தைப் பார்க்க ஆசைப்படுகிறையா? என்று சொல்லிப் புலம்பினார். பின்னும் நான் இப்படியெல்லாஞ் சொல்லியும் நீ யாதொன்றும் சொல்லாமல் இருக்கின்றையே; ஆகையால் நீ மகா கடினப் பிரகிருதியென்றும், அந்தப் பொய்கையினிடத்திலிருந்து வருந்தினார். அந்தப் பொய்கையிலே மதயானைகள் வந்திறங்கித் தும்பிக்கைகளினாலே தண்ணீரை மொண்டு பெண் யானைகளின் வாயில் ஊட்டுகிறதைப் பார்த்துப் பின்னும் அதிகமாகக் கிலேசித்தார்.

இவ்விதமாகத் துயரப்படுகின்ற ஸ்ரீ ராமரை அன்பையே ஆபரணமாகப் பூண்டிருக்கின்ற தம்பியானவர் பார்த்து, சுவாமி! வெகு நாழிகையாயிற்று. ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனம் முடித்துக்கொள்ளுமென்று சொன்னார். அப்படியே எழுந்திருந்து, அந்தப் பம்பாநதிதீர்த்தம் பூர்வம் புண்யம் செய்திருந்தபடியினாலே மதயானையும் பார்த்து நாணும்படி ஸ்நானஞ் செய்தார். அத்தண்ணீரில் ஸ்ரீ ராமர் ஸ்நானஞ்செய்யவே, அவருடைய திருமேனி கொண்டிருந்த காமாக்கினியினாலே அந்த ஜலம் கருமான் காய்ச்சிய இரும்பைத் தோய்த்த தண்ணீர்போலக் கொதித்தது. பூர்வத்திலே, அன்னமாய் வேதங்களைப் பிர்மாவுக்கு உபதேசஞ்செய்த பரப்பிர்ம வஸ்துவான ராமச்சந்திரன் ஸ்நானஞ்செய் தெழுந்திருந்து, சாஸ்திர முறைப்படி ஸ்ரீ மகா விஷ்ணுவைத் தியானஞ்செய்து, தம்பியுடனே அவ்விடத்தில் முனிவர்கள் வாசஞ்செய்கின்ற ஒரு சோலையிலிருந்தார். அப்போது சூரியன் அஸ்தமித்து அந்திப்பொழுது வந்தது. அத்தருணத்தி லுதயமான சந்திரனும் சூரியனைப்போல அதிக வெப்பத்தைக் கொடுத்தான். புஷ்பங்கள் - வண்டுகள் - பட்சிகள் - மிருகங்கள் - மரத்தினுடைய இலைகள் - இதுகளெல்லாம் ஒடுங்கியதுகள். குயில்கள் கூவாது

ஒடுங்கியதுகள். மதயானைகள் வீரிடாமல் ஒடுங்கியதுகள். கிளிகளும் ஒடுங்கியதுகள். மயில்கள் நடனஞ்செய்யாது ஒடுங்கியதுகள். பூமியும் மலைகளும் சர்ப்பங்களும் ஆகாயமும் பேய்கள் முதலான சகலமும் உறங்கியதுகள். க்ஷீராப்தியில் யோகநித்திரை செய்கின்ற ஸ்ரீ ராமருடைய திருக்கண்களுக்கு நித்திரை வரவில்லை. அப்படி யிருந்து வருந்துகிற சமயத்திலே, ஒருவனுக்கு மெய்யுணர்வு தோன்ற அவனைச் சூழ்ந்த வினைகளெல்லாம் பற்றற்றுவிட்டதுபோல, இராத்திரி கழிந்துபோய்விட்டது. தாமரைகளெல்லாம் முகமெடுத்து மலர்ந்ததுகள். சூரியன் சமுத்திரத்திலிருந்து எழுந்து உதயமானான். ஸ்ரீ ராமர் துக்க சமுத்திரத்திலிருந்து எழுந்து காலையில்தானே தாமும் தம்பியும் புறப்பட்டுச் சீக்கிரமாய் அப்பால் நடந்து, அநேக சோலைகளும் கடந்து போனார்கள்.

பம்பாநதிப் படலம் முற்றிற்று.

அனுமப் படலம்

அவ்வண்ணம் நடந்து சவரிசொன்ன ரிசியமுக பர்வதம் போய்ச் சேர்ந்து அதின்மே லேறினார்கள். அதில் வாசஞ்செய்து கொண்டிருக்கிற வானரங்களுக்கு இராஜாவான சுக்ரீவன் இவர்களைக்கண்டு, இவர்க ளாரோ சத்துருக்களென்று பயந்து ஓடி யொளித்துப் பிழைப்போமென் றெண்ணி, நளன் - நீலன் - அநுமன் முதலான சில வீரர்களுடனேகூடப் பெருமையையுடைய மேருகிரிக்கு ஒப்பாகி உயர்ந்து பருத்திருக்கின்ற அந்தப் பர்வதத்தின் ஒரு பக்கத்திலோடி மறைவா யிருந்துகொண்டு வாயு புத்திரனை அநுமானுக்கு அவர்களைக்காட்டி, ஐயா! இவர்கள் வாலியனுப்ப வந்தவர்களோ என்னமோ தெரியவில்லை. கையிலே வில்லை தரித்திருக்கின்றார்கள். செவ்வையாக யோசனை செய்துபாருமென்று சொல்லி, மூலந்தெரியாதவர்க ளானபடியினாலே அஞ்சிப் போய் மலைக்குகையில் புகுந்துகொண்டார்கள். அவர்கள் அப்படி பயந்து நடுங்குகின்ற சமயத்தில், பூர்வம் ஆலகால விஷத்தைக் கண்டு பயந்த பிர்மா முதலான தேவர்களையும் அசுரர்களையும் பயப்படாம லிருங்களென்று அபயஸ்தங் கொடுத்த சந்திரசேகரனை சிவனைப்போல அஞ்சனாதேவி குமாரனாகிய அனுமானவர் சுக்ரீவன் முதலானவர்களுக்கு அபயஸ்தங் கொடுத்து, இவ்விடத்திலே நீங்களிருங்கள். நான் போய் அறிந்து வருகிறேனென்று ஒரு பிராமணப்பிள்ளையாக உருவமெடுத்துக்கொண்டு ஸ்ரீ ராம லட்சுமணர்க ளிடத்துக்கு வருகிறவராய், தூரத்திலே வரும்போதுதானே அவர்களைப் பார்த்து கையிலேயோ வில் இருக்கின்றது. ஸ்வரூபமோ தவஸ்வரூபமாகக் காண்கின்றது. இவர்களை எப்படி அறிகிறதென்று மறைவாக நின்றுகொண்டு யோசனை செய்கிறார். தேவர்களுக்கெல்லாம் தலைவர்களான அந்த மும்மூர்த்திகளுமே இந்த இரண்டுருவம் எடுத்தவர்க ளாகவேண்டும். இவர்களுக்குச் சமானமானவர்கள் இந்த வுலகத்தில் யார் இருக்கின்றார்கள்? இவர்களுக் கருமையான பொருள் என்ன இருக்கின்றது? இவர்கள் சமாச்சாரத்தைச் சொற்ப

விவேகத்தைக் கொண்டு அறியலாமாவென்று யோசித்து, பின்பு நிச்சயமாக எண்ணினர். இவர்கள் மனதிலே கொஞ்சம் துயரஞ் சேர்ந்திருந்தாலே கிலேசித்து நொந்திருக்கிறார்கள். அப்படி மிகவும் மெலியத்தக்க சாமானியமான வர்களு மல்ல. கேவலம் மானிடர்களுமல்ல. எதார்த்தமாகப் பார்க்குமிடத்தில் தேவர்களே இந்த வடிவங்கொண்டு வந்தவர்கள். தர்மமும் தகுதியுமாகிய இவைகளே நமக்குத் தனமென்று என்னி யிருக்கிறவர்கள். இவர்கள் இங்கு வந்த காரியமும் வேறொரு பொருளைக் குறித்தல்ல. தேவாமிர்தத்துக்குச் சமானமான பொருள் இவர்களிடத்திலிருந்தது. அது இடையிலே கைதப்பிப் போனபடியினாலே, அந்தப் பொருளையே பூமி ஆகாயம் இரண்டு பக்கத்திலும் தேடுகிறார்கள். இவர்களுக்குக் கோபமென்கிறதே யில்லை. கிருபையானது கடல்போல் இருக்கின்றது. சகல ஜீவகோடிகளுக்கும் இதஞ் செய்கிறவர்களேயல்லாமல், பின்னே யொருகாரியமும் அறியார்கள். பாக்கியத்திலே தேவேந்திரனும் பார்த்து அஞ்சத்தக்க பாக்கியவந்தர்கள். நடக்கையிலே தர்மமும் பார்த்து அஞ்சும்படியான ஒழுக்கமுடையவர்கள். ரூபத்திலே மன்மதனும் பார்த்து அஞ்சுகின்ற ரூபமுள்ளவர்கள். சாமர்த்தியத்தில் எமனும் அஞ்சானின்ற சாமர்த்திய முடையவர்கள் இவர்களென்று இப்படிப் பலபல விதமாக நினைத்துத் தமக்குத் தாமே ஒப்பில்லாமல் வேறொருவரும் ஒப்பில்லாத அந்த அநுமானைனவர் முன்பு சிநேகித்திருந்து பிரிந்த இஷ்டர்களைக் கண்டதுபோல அன்புடனே உள்ளமுருகி நின்றார். அப்படி நின்று மற்றும் அவர்கள் ஸ்வரூபத்தை நன்றாகப் பார்த்து, வேங்கைப்புலி முதலான மிருகங்களெல்லாம் தங்களுடைய கன்றைக் கண்டதுபோல ஆசையுடனே இவர்களைப் பின்தொடர்ந்து வந்து வணங்குகின்றதுகள், மயில் முதலாகிய பட்சிகளெல்லாம் இரக்கமுற்று, இவர்கள் திருமேனியில் வெயிலுறையாமல் ஆகாயத்தில் பந்தலிட்டதுபோலச் சிறகை விரித்துக்கொண்டிருக்கின்றதுகள். மேகங்கள் குறுந்துளிகளைச் சிந்திக் கொண்டு இருக்கின்றதுகள். நெருப்புப்போலச் சுடுகின்ற மணியாம்பருக்கைக்கற்கள் முதலானதுகளும் இவர்களுடைய பாதங்களுக்குப் புஷ்பங்கள்போலக் குளிர்ச்சியைக் கொடுக்கின்றது. இவர்கள் நடக்கிற வழிகளிலே மரம் புல் முதலானதுகளெல்லாம் சாய்ந்து இவர்களைத் தொழுகின்றதுபோ லிருக்கின்றதுகள். இவர்கள் தர்மதேவதைகள் தானே? எனக்கு எலும்புகள் உருகுகின்றதுகள். ஆசை அதிகரிக்கின்றது, கரையில்லாத அன்பு உதிக்கின்றது. ஆகையால் பிறவித் துன்பங்களைத் தீர்த்து வினைகளைத் துடைத்து நரகத்துக்குப் போகவிடாமல் மீளாத மோட்சத்தில் சேர்க்கின்ற மேலாகிய தேவர்களே இவர்களென்று எண்ணி நேராக அவர்கள் தன்னைக் காணும்படி சமீபத்தில் வருகிறபோது, அவர்களும் சமீபத்தில் வந்தார்கள்.

அப்படிவந்த ஸ்ரீ ராமலட்சுமணர்களைக் கண்டு, நீங்கள் நினைத்து வந்த காரியம் சித்தியாகக்கடவது. ஆயினும் இவ்விடத்தில் என்ன காரியமாக வந்தீர்களென்று கேட்டார். அதற்குக் கருணைநிதியான ஸ்ரீ ராமர் பார்த்து, நீ நல்லவனாயிருக்கிறாய்! நீ யார்? சொல்லென்று கேட்க, அடியேன் வாயு தேவனுக்கு அஞ்சனாதேவியின் வயிற்றிலே பிறந்த புத்திரன். என் பெயர் அநுமான். இந்த மலையில் வாசஞ்செய்கிற சூரிய புத்திரனை சுக்ரீவனென்


கிற ராஜாவுக்கு ஏவல் செய்துகொண்டிருப்பவன். நீங்கள் வந்ததைக்கண்டு யோசனைசெய்து, அவர்கள் யார்? அறிந்துவாவென்று அவரனுப்ப நான் வந்தேனென்று சொன்னர். அந்த வார்த்தையைச் சக்கிரவர்த்தித்திருமகன் கேட்கவே, அநுமானைப் பார்க்கிலும் மிகவும் நல்லவர்கள் உலகத்தில் வேறேயில்லையென்பது மிகவுந் தெரிந்தவராகி, பராக்கிரமமும் - நிலையும் - கல்வியும் - அறிவும் - இவ்விடத்தில்தானே யிருக்கின்றதுகளென்றும் தேறி, லட்சுமணரைப் பார்த்து, அப்பா தம்பி! இவன் கல்லாத வித்தைகளும், வேதசாஸ்திரங்களும் இனி மற்றொன்றில்லை யென்கிறது இவனுடைய வார்த்தையினாலே தானே தெரிந்தது. இந்த மகாபுருஷன் பிரமதேவனே? ரிஷபவாகனனான சிவனே? இப்பொழுது இவன் கொண்டிருக்கின்ற மனிதரூபம் இவனுடைய ஸ்வரூபமல்ல. இந்த உலகுக்கெல்லாம் ஒரு அச்சாணிபோல மகா பராக்கிரமத்துடனே ஓங்கி யுயர்தலாகிய ஸ்வரூபம் இவனுக்கு வேறேயிருக்கும். அதை நன்றாகத் தெரிந்துகொண்டேன். அதை நீயும் பின்பு பார்க்கப் போகின்றாயென்று சொல்லி, அந்த ராஜாவானவர் எங்கே யிருக்கிறார்? அவரைப் பார்க்க வேணுமென்கிற அபேட்சையினாலேதான் வந்தோம். உம்மைக் கண்ட எங்களுக்கு உம்முடைய வார்த்தையைப்போல நல்ல மனதுண்டான உங்கள் ராஜாவைக் காட்டுமென்று சொன்னர். அப்போது அநுமான் அதிக சந்தோஷமாகி, உலகத்தில் உங்களுக்குச் சமானமான துல்லியர்கள் யாரிருக்கிறார்கள்? மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறவனைக் காணவந்தோமென்று சொல்லுவீர்களாகில் அவன் செய்த பாக்கியமே மேன்மையையுடையதாகும். அந்த சூரிய குமாரனே இந்திரகுமாரனை வாலியென்பவன் கொஞ்சமாவது கிருபையில்லாமல் கோபித்துச் சீற, அதனாலே கிலேசமிகுந்தவனாய் இந்தப் பர்வதத்தில் வந்து என்னுடனேகூட இருக்கிறான். அவனுக்கு மகாபாக்கியம் வந்து சேரிட்டிருக்கிறபடியினாலே தாங்கள் வந்தீர்கள். உலகத்திலே பெரியவர்களுக்கு யாகாதி கிருதுக்கள் செய்கிறதிலும், சோடசதானஞ் செய்கிறதிலும், குலப்பகையாய்க் கொல்லவந்த சத்துருவுக்குப் பயந்து ஒடுங்கினவனுக்கு அபயஸ்தங் கொடுத்து இரட்சிக்கிறது விசேஷமல்லவோ? எங்களைப் பாதுகாக்கிறது உங்களுக்கு எளிதான காரியமே. தாங்கள் தேவர்கள் முதலான சராசரங்கள் நிறைந்திருக்கின்ற இந்த மூன்று லோகத்தையும் இரட்சிக்கத்தக்க மகாத்துமாக்களாயிருக்கின்றவர்களானபடியினால் உங்களிடத்தில் அடைக்கலம் புகுந்த எங்களுக்கு இதைப் பார்க்கிலும் உறுதி வேறுண்டோ? எங்கள் ராஜாவுக்குத் தங்களை யாரென்று நான் சொல்லுகிறது? சொல்லுங்களென்று கேட்க, இளையபெருமாள் சொல்லுகிறார்: சூரியவம்சத்திற் பிறந்து சக்ரவர்த்தியாய்த் தேவர்கள் நிமித்தம் அசுரர்களைச் சங்கரித்த வீராதிவீரன், யாகாதி கிருதுக்களெல்லாஞ் செய்து முடித்தவன். இந்த பூலோகமும் தெய்வலோகமும் அரசாண்ட கருணை நிதியானவன். மதயானையேறி நடத்தி அசுரர்களெல்லாம் மடிந்துப்போம்படி வில் வளைத்து ஜெயித்தவன். மநு மாந்தாதா முதலானவர்களும் தனக்குச் சமான மல்லவென்று சொல்லும்படி கீர்த்திப் பிரதாபம் படைத்தவன். மகாநுபாவராகிய தசரத மகாராஜா வென்கிற அயோத்தியாபுரிக்கு அதிபதியினுடைய திருக்குமாரர் இந்த மகாபுருஷர். இவர் தம்முடைய ராஜ்ஜியத்தைத் தகப்பனார் ஆக்கினை

யின்படித் தம்பிக்குக் கொடுத்து, ஆரணியவாசம் செய்யவந்தார். ஸ்ரீ ராம ரென்கிற நாமமுடையவர். அடியேன் இவருடைய அடிமைத் தொழில் செய் கிறவனென்று ஸ்ரீ ராமர் திருவவதார முதலாக இராவணன் செய்த மாயைத் தொழில் வரைக்கும் நடந்தசெய்திகளெல்லாம் ஒன்றுகிலும் விடாமல் விசித மாகச் சொன்னர். அதுகேட்டு எதிரே நின்ற அநுமானவர் ஓடிவந்து, ஸ்ரீ ராமருடைய பாதாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தார். அப் படிச் சேவிக்கவே, ஏன் தகாதகாரியம் செய்கிறீர்? நீர் பிராமணனுயிருக்கின் றீரே யென்று ஸ்ரீ ராமர் சொல்ல, சுவாமி! அடியேனும் அந்தக் குரங்கின் கூட்டத்தில் ஒருவன்தானென்று மாருதியானவர் சொல்லி, உடனே ராமலட்சு மணர்கள் அதிசயிக்கும்படி, வேத சாஸ்திரங்களாலே சொல்லப்பட்ட மகத்தா கிய ரூப பதார்த்தங்களெல்லாம் தாழும்படி, பொன்மயமான மகம்மேருவும் தோளுக்கே நிகராகா தென்று சொல்லத் தக்க தம்முடைய யதாஸ்வரூபமாகிய ஆகாயமளாவுகின்ற விஸ்வரூபங்கொண்டு நின்றார். பூமி ஆகாயமெல்லாம் திரு வடியினுலே அளந்துகொண்ட கமலநேத்திரராகிய அந்த ஸ்ரீ ராமருக்கு, அநு மானுடைய குண்டலம் பிரகாசிக்கின்ற முகத்தைக் காண்கின்றதே அருமையா யிருந்ததென்றால், சூரியனிடத்திலே சாஸ்திரங் கற்றுணர்ந்த அநுமானுடைய ஸ்வரூபத்தை நானெவ்வளவென்று அறிந்து சொல்லப்போகிறேன்? அந்த ஸ்வரூபத்தை ஸ்ரீ ராமர் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு, இளயபெருமாளைப் பார்த்து, அப்பா! வேதங்களாலும் ஞானத்தினுலும் காணப்படாத அந்தப் பரமபதமே இந்த வானர உருவமெடுத்தது. நல்ல நிமித்தங் கண்டோம். இப் படிப்பட்ட மகா புருஷன் நமக்கு அகப்பட்டதனால், இனித் துன்ப மென்கிறது நமக்கில்லை. இன்பமும் வரும். இந்தச் சாமர்த்திய பரன் அந்தச் சுக்கிரீவ னுக்கு ஏவல் செய்கிறவனுலே, அவனுடைய பலமும் பெருமையும் சொல்ல வேணுமோ வென்று சொல்லி மனமுவந்து முகமலர்ந்திருந்தார். அப்படியிருக்கு மளவில், அநுமானுனவர் விஸ்வரூபத்தை அடக்கிக்கொண்டு, ஸ்ரீ ராமரையும் லட்சுமணரையும் பார்த்து இந்தக்ஷணமே நான்போய் அவனை அழைத்துக் கொண்டு வருகிறேன். இவ்விடத்திலே சிறிதுநேர மிருங்களென்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு அதி சீக்கிரமாகப் போனர்,

அநுமப் படலம் முற்றிற்று.

நட்புக்கோட் படலம்

இவ்விதமாகப் போன அநுமானுனவர் சுக்ரீவனிடத்திற் போய்ச் சேர்ந்து, நானும் என்குலமும் இந்த லோகமும் பிழைத்தோமென்று நினைத்து அவனைப்பார்த்து, வாலியென்கிற மகா பலசாலியினுடைய உயிரை வாங்குகிற தற்குக் காலன் வந்துவிட்டான். நாமும் துயரக்கடலைக் கடந்தோமென்று சொல்லிக்கொண்டு ஆலகால விஷத்தையுண்ட சாம்பவமூர்த்தியைப் போல நடனஞ்செய்தார். இந்தப் பூமி ஆகாயம் மற்றுமுண்டாகிய சகல லோகங்களி லும் இருக்கிறவர்களுடைய நடத்தையிலும் வார்த்தையிலும் கண்ணிலும் இருக்



சுக்கிரீவன் ஸ்ரீராமர் பாணத்தால் வல்லபங்காணுதல்.

படம் நெ. 9.

கின்றவர்கள். கரன் முதலாகிய ரிஷி கண்டகரான இராட்சதரையெல்லாம் சேனசமுத்திரத்துடனே சின்னபின்னமாய்த் தலைகளுருள வில்லினாத்து யுத்தஞ்செய்து நிர்மூலப்படுத்திப் பூலோகத்தில் இருக்கிறவர்களுடைய உபத்திரவங்களைத் தீர்த்தவர்கள். மேலானவர்களாகிய சிவன் முதலான தலைவருக்கும் அதிசயமாகிய பல முண்டானவர்கள். உலகமெல்லாம் ஏகாதிபத்தியமாக ஆக்யாசக்கரம் நடத்தி இராஜ்யபாரஞ் செய்கிற தசரதசக்கரவர்த்தி குமாரரானவர்கள். திவ்ய சுந்தரமுண்டானவர்கள். மநுநீதி யுடையவர்கள். கிருபாமூர்த்திகளா யிருக்கின்றவர்கள். ஒழுக்கந் தவறாதவர்கள். சகலமானவர்களிலும் உயர்ந்தவர்கள். ஒருவராலும் போதிக்கப்படாமல் ஸ்வபாவத்திலேதானே விளங்கிய முடிவில்லாத பேரறிவை யுடையவர்கள். ஓங்கிய கீர்த்தி யுண்டானவர்கள். விஸ்வாமித்திர ரிஷி கொடுத்த திவ்யாஸ்திரங்களை யுடையவர்கள். அந்த ஸ்ரீ ராமலட்சுமணர்கள் இருவரில் ஜ்யேஷ்டராகிய ஸ்ரீ ராமரானவர் காலாக்கினிக்குச் சமானமாகிய தாடகையை விழுந்து உருள வில் வளைத்து அவள் பிள்ளைகளையுங் கொன்று, தம்முடைய பாதரேணுவினாலே அகலிகை சாபமும் தீர்த்தருளினர். பூர்வம் மிதிலைக்குப் போயிருந்தபோது சூரியனுடைய பல்லை உதிர்த்த வீரபத்திரனுகிய சிவனுடைய திரியம்பக மென்கிற வில்லை ஒடித்தார். பெற்ற பிதாவானவர் சொல்லச் சிறியதாயார் ஆக்யாபிக்க, ராஜ்யாதிபத்தியமெல்லாம் தம்பிக்குக் கொடுத்து இவ்விடத்திற்கு எழுந்தருளினர். கையிலே மழுவாயுதம் தரித்திருக்கின்ற பரசுராமரையும் பலவீனப்பட்டுத் தோற்றுப்போகும்படி செய்தார். அதிக கடூரமான விராதனையுங் கொன்று, அவனுடைய சாபத்தையும் விமோசனமாகும்படி செய்தார். இவர் சகல தேவர்களும் தொழுகின்ற திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளும் ஸ்ரீமந் நாராயணனே இப்படி மானிட வடிவங்கொண்டவ ராகவேணும். அல்லது பார்வதி தேவியை வாமபாகத்திலே வைத்த கைலாசபதியாகவேணும். சுக்ரீவ மகாராஜாவே! நீர் அந்த மஹானுபாவரைப் பிரத்தியக்ஷத்தில் போயறிந்தால் தெரியலாம். ராட்சதர்களுக்குள்ளே மாரீசனனவன் மாயமானுய் வந்தான். அவனை ஒரு க்ஷணத்தில் மாய்ந்துபோம்படி செய்தார். திக்குகளையெல்லாம் கைகளாலே துழாவிச் சகல ஜீவராசிகளையும்பற்றி வாயிலிட்டு விழுங்கிக்கொண்டிருந்த கவந்தனையுங் கொன்று, தங்களுக்கு விருந்துசெய்து உபசரித்த சவரியைப்போல அவனுக்கு நல்ல பதவி கிடைக்கும்படி செய்தார். ரிஷீஸ்வரர்கள் முதலாகிய பெரியவர்களெல்லாம் இவர் வருவாரென்றெண்ணி வெகுகாலமாகத் தபசுசெய்து வழி பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். மேலும் இவருடைய தரிசனமாகவே வினையாகிய சிறை நீங்கி, எத்தனை பேர்களோ பரமபதம் சேர்ந்தார்கள். நான் என்னசொல்லுவேன்? புத்தியீனனுன இராவணன் மாயையினாலே அவருடைய ஸ்திரீயை யெடுத்துக்கொண்டு போனன். அவனைத்தேடிக் காண்கிற நிமித்தமாக நீர் மிகுந்த தவஞ் செய்திருந்தவனுனபடியினாலும், நல்ல நினைவுண்டா யிருக்கிறவனுகையாலும், அந்த ராம லட்சுமணர்கள் உன்னுறவு தேடிக்கொண்டு வந்தார்கள். நம்மிடத்தில் பரிபூரணமாகக் கிருபைசெய்திருக்கிறார்கள். வாலிக்கு இன்றைக்கே மரணம் வந்து சம்பவிக்கும். அவர்களைக் காண்கிறதற்கு நீர் எழுந்திருந்து வாருமென்று மந்திரியான அநுமான் சொல்லினர். அந்தச் சமாச்சாரங்களையெல்லாம் சுக்கிரீவன் கேட்டறிந்து அதிக சந்

தோஷமாகி, உம்மைப்போலொத்த மகானுபாவரையுடைய எனக்கு அருமை யானது என்ன இருக்கின்றது? ஓ பிரகஸ்பதிக்குச் சமானமான அநுமானே! வாருமென்று எழுந்திருந்து அதிசீக்கிரமாக நடந்து, தனக்குத்தானே சமான மாகிய ஸ்ரீ ராமச்சந்திரனுடைய திருவடியைச் சுக்ரீவன் வந்தடைந்தான். அந் தச் சூரியபுத்திரனை சுக்ரீவன் சுவாமியினுடைய குண்டலம் துறந்து பிரகாசிக் கின்ற திருமுகமண்டலமும், செந்தாமரைப் புட்பங்கள்போலக் கரசரணங்களும், கிருபையே ஒழுகிக்கொண்டிருக்கின்ற குளிர்ச்சி பொருந்திய நேத்திரங்களும், மேகத்துக்குச் சமானமாகிய சடையும், மரகத மலைபோலுந் திருமேனியின் அழ கும் கண்டான். இளையாழ்வானையும் நோக்கினன். நெடுநேரம் நின்று கண் கள் களித்து பிர்மா சிருஷ்டித்த உலகங்களெல்லாம் அன்றுமுதல் இன்றைய வரைக்கும் செய்த தபோபலங்களெல்லாம் குவிந்து இரண்டு உருவமாகிப் புஜ பல பராக்கிரமத்தையுடைய வீரர்களாய்த் தோன்றியதுகளென்று மனந் தேறி னவனாகி, பின்பு தேவர்களுக்கெல்லாம் தேவர்களாய் விளங்கானின்ற பரம மூர்த்திகளே தங்களுடைய ஸ்வரூபமாறி இந்த மானிட வுருவமெடுத்து வந்தார்க ளாகையால் கங்காதரனாகிய சிவன் பிர்மா முதலான சகல தெய்வப்பிறப்பை யும் இந்த மனுஷப்பிறப்பே வெற்றிகொண்டதென்று நினைத்து, ஆசையா யிருக்கின்ற சமுத்திரத்தின் கரைகாணுதவனுய்ப் பாபரகிதராகிய ஸ்ரீ ராமருக் குச் சமீபத்திலே வந்தான். ஸ்ரீ ராமரும் அன்புடனே திருக்கையை நீட்டி, அப்பா! இப்படி வந்திருவென்று ஆக்கியாபித்தார். அப்படியே சுக்ரீவன் ஸ்ரீ ராமருக்கு அருகிலிருந்தான். இவ்வண்ணமாகச் சுக்ரீவனும் அநுமானும் ஸ்ரீ ராம லட்சுமணரும் கூடியிருந்தது எப்படியிருந்ததென்றால்: ராட்சதர்க ளென்கிற பகையைத் தள்ளித் தர்மத்தை நிலை நிறுத்துகின்ற காலங்கள் ஒன் றாகக் கூடியிருந்ததுபோ லிருந்தது. அந்த நால்வரில் தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளும்படி வந்த சுக்ரீவனும் ஸ்ரீ ராமச்சந்திரனும், அமா வாசையில் தன் குறை நீங்கச் சூரியனிடத்தில் சந்திரன் வந்து சேர்ந்ததுபோல வும், தாங்கள் நினைத்திருக்கிற காரியங்களுக்கு முன்பு செய்த தவமும் பின்னல் செய்யும்படியான முயற்சியும் கூடினதுபோலவும் கூடியிருந்தார்கள். இப்படி யிருக்கின்ற சமயத்திலே சூரியபுத்திரனாகிய சுக்ரீவன் ஸ்ரீ ராமருடைய திருமுக மண்டலத்தைப் பார்த்து, ஐயா! லோக நாயகரான உம்மைச் சேர்கிறதற்கு எனக்குக் கிடைத்தபடியினலே மகத்தான தபசு செய்தவர்கள் என்னைப் பார்க் கிலும் யாரிருக்கிறார்கள்? விதியே கொண்டுவந்து கூட்டுவித்தால் எதுதான் சித்தியாம லிருக்குமென்றுசொன்னன். அந்த வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ ராம ரானவர் மகா தபசியான சவரியென்பவள் இந்த மலையிலே நீ வந்திருக்கிற சமாசாரம் சொன்னள். அதினல், எங்களுக்கு வந்திருக்கிற துயரத்தை உன் னல் தீர்த்துக் கொள்ளுகிறதற்கு எண்ணி வந்தோம். அது உன்னலே தீரும்; சந்தேகமில்லையென்று சொல்ல, அதற்குச் சுக்ரீவனவன் சொல்லுகிறான்: மஹா பலவந்தனான என் தமையன் என்னிடத்தில் அதிக கோபங்கொண்டவ னாகி, நான் அந்தகார பூமிபரியந்தம் ஓடிப்போயும் துரத்திக்கொண்டுவந்து என்னை உபத்திரவப்படுத்தினன். பிராணனைப் போக்கடித்துக்கொள்ளுகிற தற்குப் பயந்து, இந்த மலையில் அவன் வரக்கூடாதாகையினலே இதுவே யொரு அரணாகப் பாவித்துக்கொண்டு, இதிலே பிராணனைக் காப்பாற்

றிக்கொண்டிருந்தேன். இப்போது உம்மிடத்தில் அடைக்கலம் புகுந்தேன். என்னை ரட்சிக்கிறது மகா தர்மமென்று சொன்னன். ஸ்ரீ ராமர் அப்படிச் சொன்ன சுக்கிரீவனைக் கிருபையுடனே பார்த்து, இதுவரையிலும் உனக்குவந்த இன்பதுன்பங்களெல்லாம் போகட்டும். இனிமேல் சொர்க்க மத்திய பாதாளங்களில் உன்னை உபத்திரவப்படுத்தினவர்கள் என்னையும் உபத்திரவப்படுத்தினவர்களே. பொல்லாதவர்களானாலும் நல்லவர்களானாலும் உனக்குச் சினேகிதர்களானால் அவர்கள் எனக்கும் சினேகிதர்களே. உன் பந்துஜனம் என் பந்துஜனமே. நீ என் பிராணபதமான தம்பியே யென்று அன்புடனே சொன்னர். இப்படிச் சுவாமி சொல்லக் கேட்டவுடனே, தேவ வாக்கைப் பார்க்கிலும் விசேஷமாகிய ஸ்ரீ ராமர் வாக்குப் பிறந்தபடியினாலே இனி நமக்கு என்னகுறை விருக்கின்றதென்று நினைத்து அங்கிருந்த குரங்கின் சேனைகள் மிகுந்த சந்தோஷமாய் அட்டகாசஞ் செய்ததுகள். அஞ்சனதேவி புத்திரனை அநுமானுடைய சரீரம் புளகித்தது. தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். மேகம் ஸ்வர்ணவருஷம் வருஷித்தது. அப்போது அநுமான் எழுந்திருந்து ஸ்ரீ ராமரைச் சேவித்துத் தேவரீரும் தேவரீருடைய தோழனும் பல்லூழிகாலம் சுகமாயிருக்கவேண்டும். இனித் தங்களுடைய திருமாளிகைக்கு வந்து தாங்கள் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தை நாங்கள் கண்டு சேவிக்கும்படி அபேட்சித்தோம். ஆகையால் கிருபைசெய்யவேணுமென்று விண்ணப்பஞ் செய்தார். அப்படியே செய்கிறேனென்று தம்பியுடனேகூட எழுந்தருளினர். சுக்கிரீவனும் அநுமான் முதலான சில வானரங்கள் சூழ்ந்துவர, சந்தன விருட்சம் - அகில் விருட்சம் - புன்னை விருட்சம் முதலாகிய அநேக விருட்சங்களும் தாமரைத் தடாகமும் சேர்ந்து போகபூமிக்குச் சமானமாயிருக்கின்ற பூஞ்சோலையிற்போய், பளிங்கறைகளும் நவரத்தினகசிதமான மண்டபங்களும் நிறைந்து அதிக சிங்காரத்துடனிருக்கிற அரண்மனையில் புகுந்து, ஒரு புஷ்ப மெத்தையிலே ஸ்ரீ ராமரும் சுக்ரீவனும் சேர்ந்து ஒருவர்க்கொருவர் யோகக்ஷேமங்களை விசாரித்துச் சந்தோஷமாய் இருந்தார்கள். அத்தருணத்திலே வானரர்கள் போய் நல்ல ருசியான கனிகளும் கந்தமூலங்களும் கொண்டுவந்தார்கள். ஸ்ரீ ராமர் திருமஞ்சனமாடி நியமமுடித்துக் கொண்டு விருந்துண்டார். உண்டபின்பு ஸ்ரீ ராமர் யோசனைசெய்து, சுக்ரீவனைப் பார்த்து, அப்பா! நீயும் ஸ்திரீயைப் பிரிந்திருக்கிறதாகக் காண்கிறது என்று சொன்னர். அப்போது அநுமான் எழுந்திருந்து நமஸ்காரஞ்செய்து, சுவாமி! அடியேன் சொல்லுகிற விண்ணப்பத்தைக் கேட்டருள வேணுமென்று சொல்லுகிறன்: நாலு வேதத்திற்கும் வேலிபோலக் கைலாசபர்வதத்தில் வாசமாய் இருக்கின்ற சிவனுடைய கிருபையைப் பரிபூரணமாகப் பெற்றிருக்கின்ற வாலி என்பவன் ஒருவன் இருக்கிறன். அவனுடைய புஜபலத்துக்குக் கரையில்லை. பூர்வத்தில் தேவர்கள் அசுரர்கள் முதலானவர்களுக்கும் மகாபிரயாசமாய் அசைக்கக்கூடாதிருந்த மந்தரகிரியை அசைத்துப் பாற்சமுத்திரத்தைக் கடைந்தவன். நிலம் - நீர் - நெருப்பு - காற்று என்கிற இந்த நான்கு பூதத்தின் பலத்தையும் தனதாக வுடையவன். சப்தசமுத்திரத்துக்கும் அப்பாலிருக்கின்ற சக்ரவாளகிரியி லிருந்தபடி இந்த மலையினிடத்தில் தாண்டுவான். அவனெதிரே யாராகிலும் யுத்தஞ் செய்கிறதற்குக் கிடைத்தால், அவர்க

ஞடைய பலம் பாதி அவனுக்கு வந்துசேரும். அஷ்டதிக்கிலும் பிரதினமும் போய், அஷ்டமூர்த்திகளையும் சேவித்துவருவான். அவன் வேகத்திற்கு முந்தி வாயுவும் போகமாட்டாது. அவனுடைய மார்பிலே சுப்பிரமணியருடைய வேலும் நுழையமாட்டாது. அவன் வாலினுடைய பலம் அற்றுப்போகாததற்கு முன்னே இராவணனுடைய செங்கோலும் குடையும் செல்லாது. அவன் நடந்தால் மேரு முதலாகிய பர்வதங்களும் வேரோடே பெயர்ந்துபோம். ஆகாயமும், திக்குகளும், மேகங்களும், சந்திர சூரியர்களும், பர்வதங்களும், அவனுடைய தோள்களில் மறைந்துபோம். பூர்வம் பூமியைத் தோண்டிய ஆதிவராகத்திற்கும், மந்தரகிரியை முதுகிலே சுமந்த ஆதிகூர்மத்திற்கும் சமானமானவன். இரணியன் மார்பைப் பிளந்த அந்த உக்கிர நரசிங்கமானலும் இவன் தோளைப் பிளக்கமாட்டாது. ஆயிரம் பணமுடிகளைப் பரப்பிக்கொண்டு இந்தப் பூமியையெல்லாம் ஆதிசேஷன் படிந்துக்கிடந்து தாங்குகிறான். வாலி உலகத்தையெல்லாம் நடந்தபடியே தாங்குவான். கடல் சப்திக்கிறதும், வாயு சஞ்சரிக்கிறதும், சூரியன்தேர் ஆகாயத்தில் நடக்கிறதும், இவன் கோபத்துக்கு பயந்தேயல்லாமல் மற்றொன்றினலல்ல. அப்படியாகின்ற அவனிடத்தில் எழுபது வெள்ளம் வானரசேனையிருக்கின்றது. அந்தச் சேனையில் ஒவ்வொரு வானரமும் மகம்மேருவையும் தோளினலே முட்டித்தள்ளிவிடும். அவனுடைய ஆக்கினைக்கு அஞ்சி மேகங்களும் இடிக்கிறதில்லை. சிங்கங்கள் முழங்குகிறதில்லை. சர்ப்பங்களும் நடக்கிறதில்லை. அவன் இராவணன் வாலினலே கட்டிக்கொண்டு பூலோகமெல்லாம் திரிகிறபோது, அந்தக் கட்டின வாலிலேயிருந்து பொழிந்த இரத்தம் எந்த வுலகத்தில் தோயாமலிருந்தது? மேலும் அவன் தேவேந்திரன் பெற்ற புத்திரன். பூரணச்சந்திரனைப் போலத் தழைத்த வெள்ளைநிற முண்டானவன். எமனும் பயப்படுகின்ற ஆக்கினையையுடையவன். ஒரு தாய் வயிற்றிலிருந்து இந்தச் சுக்கிரீவ மகாராஜாவுக்கு முன்னே பிறந்தவன். இப்படிப்பட்ட வாலி எங்களுக்கு இராஜாவாகியும் இவர் இளவரசராகியு மிருக்கிற காளில், ஒரு அவுணன் வம்ச சத்துருவாய் அவனுடன் யுத்தத்திற்கு வந்தான். வாலி அவனுடன் யுத்தஞ்செய்து அவனையடிக்கிறபோது அவன் நிற்கமாட்டாமல் ஓடினன். அப்படியோடியும் விடாமல் வாலி பின் தொடர்ந்தான். அதுகண்டு அவுணன் பூமியை விட்டுப் பாதாளமாகிய பிலத்துவாரத்தில் புகுந்தான். அப்போது வாலி தம்பியை அழைத்து, நான் அவனைத் தொடர்ந்து போய்க் கொன்றுவிட்டு க்ஷணப் பொழுதில் வருகிறேன். அதுவரையிலும் நீ இந்தப் பிலத்தின்வாயிலைக் காத்துக்கொண்டிருவென்று சொல்லிவிட்டு, அதிக கோபத்துடன் அந்தப் பிலத்துவாரத்தில் நுழைந்து, இருபத்தெட்டு மாதம் வரைக்கும் அவனைத் தேடி யுத்தஞ் செய்துக்கொண்டிருந்தான். அப்போது தம்பியாகிய இவர் மிகவும் கிலேசித்து அழுது துயரப்பட்டார். நாங்கள் எல்லாங்கூடி இவரையிரந்து, உம்முடைய தொழில் இதுவானபடியினலே நீர் இராச்சியபாரஞ் செய்யுமென்று சொன்னோம். அப்படி செய்கிறது பழுதென்று மிகுந்த வருத்தமுற்றவராகி அந்தப் பிலத்துவாரத்திலே நான் போய் என் தமையனுரைத் தேடிப்பார்க்கிறேன். அவர் இறந்துபோயிருந்தால் அவரைக் கொன்றவனைக் கொல்லுகிறேன். கொல்லமாட்டாமற் போனல் சாகிறேனென்று அந்தப் பிலத்தில்

நுழையப்போனர். அத்தருணத்தில் பக்கத்தில் இருந்த பெரியோர்களும் அடியேனும் தடுத்துச் சில நீதிகளைச் சொல்லி மனதைத்தேற்றி, வானரசைனியங்களைச் சம்ரக்ஷணை செய்யும்படி இவருக்கு இராஜரீகங் கொடுத்தது உண்டு. இவர் முழுச்சம்மதமாகப் பெற்றுக்கொண்டதில்லை. அப்படியிருக்கையில், வாலியைக் கொன்ற அந்த மாபாவியாகிய அசுரன் திரும்பி இவ்வழியாய் வருவானென்று பயந்து, 'நாங்களெல்லாம் பர்வதங்களைப் பிடுங்கிப்போட்டு அந்தப் பிலத்துவாரத்தை அடைத்தோம். அப்பால் இவரை அரசராக வைத்துக் கொண்டு கிஷ்கிந்தா பர்வதத்தில் இருந்தோம். அப்போது அந்த அசுரனைத் தொடர்ந்துபோன வாலி அவனைக்கொன்று அவனுடைய உயிரென்கிறகளைக் குடித்து, மதோன்மத்தனுய்த் திரும்பி பிலத்துவாரத்தின் வழியாய் வந்து, அடைத்திருந்ததைப் பார்த்துத் தம்பியைக் கூப்பிட்டான். பிரதியுத்தரஞ் சொல்லாதிருக்கக் கண்டு நம்முடைய தம்பி நல்லவுபகாரஞ் செய்தானென்று சொல்லி, அந்தப் பிலத்துவாரத்தினடைப்பை அதிக ஆக்குரோஷமாயும் வாயுவைப்போல வேகமாயும் காலினுல் உதைத்தான். அப்படி உதைக்கவே, நாங்கள் அடைத்திருந்த பெரிய பர்வதங்களெல்லாம் சிதறி ஆகாயத்தில் எழும்பிச் சமுத்திரத்தில் விழுந்ததுகள். அங்கேயிருந்து சகலரும் பயப்பிராந்திகொள்ள, ஏறிச் சீறிக்கொண்டு வந்து இவ்விடத்திற் சேர்ந்தான். மனதிலே வேற்றுமையில்லாத இவரும் எதிரேபோய் சேவித்துக்கொண்டு, சுவாமி! நீர் நெடுநாளாக வராததினுல் நான் உம்மிடத்தில் வரும்படி புறப்பட்டேன். அதற்கு இங்கிருந்த பெரியவர்களில் ஒருவருஞ் சம்மதிக்கவில்லை. அவர்கள் ஆக்ஞைக்கு அஞ்சி வராமல் அரசு செய்துக்கொண்டிருந்த நாணமில்லாத என்னுடைய குற்றத்தைப் பொருத்தருளி, உம்முடைய இராஜரீகத்தை நீரே கைக்கொள்ளுமென்று சொன்னர். வாலி, என் ஆக்ஞைதப்பி இந்த ராஜரீகத்தின் ஆசையினுலே இப்படிக் கொடுமைகள் செய்தாயென்று சீறி, எங்கள் குலத்தாரெல்லாம் அஞ்சி ஒடுங்கும்படி சமுத்திரங்கடைந்த தன் கையினுலே இவருடைய சரீரத்தைக் குத்திக் குமைத்துவிட்டான். இவர் மிகவும் தளர்ந்து ஓட்டமெடுத்து சப்த சமுத்திரங்களையும் அப்புறத்துள்ள பூமியையும் தாண்டி அண்டசுவர்மட்டும் போனர். அவனும் அதுபரியந்தம் தொடர்ந்து ஓடிப்பிடித்து பழிக்கு அஞ்சாமல் மிகுந்த கோபத்துடனே தரையில் மோதும்படி தூக்கி யெறிந்தான். அப்போது அவன் கையினின்றும் தப்பி ஓடி இந்த மலையில் வந்து சேர்ந்தார். இதிலே அவன் வரப்போகாதென்கிற சாபத்தினுலே இதுவரைக்கும் பிராணனுடன் தப்பி யிருந்தது. இவருடைய பெண்சாதியாகிய உருமையென்கிற பெயரினையுடைய அமிர்தத்திற்குச் சமானமான ஸ்திரீயையும் அவன் விரும்பி யெடுத்துக் கொண்டான். இவர் ஸ்திரீயையும் இழந்து, செல்வத்தையும் கைவிட்டு, இவ்விடத்தில் இவ்வண்ணமாய் இருக்கின்ரூர். இதுதான் நடந்த சமாசாரமென்று சிறிய திருவடியாகிய அனுமான் சொல்லினர். அந்த வார்த்தையை கேட்கவே தேவாதிதேவராகிய ஆயிரந் திருநாமங்களையுடைய ஸ்ரீ ராமருக்கு அண்டகோடிகளை உண்டுமிழ்ந்த அதரந் துடித்தது. கண்கள் சிவந்தன. தம்மிடத்தில் அன்பில்லாத சிறிய தாயானவள் சொன்னளென்று அந்தட் சணம் தம்பியாகிய பரதாழ்வானுக்குச் சகல ராச்சியமுங் கொடுத்தருளின

பகவானுக்கு ஒருவன் தன் தம்பியினுடைய தாரத்தைக் கைக்கொண்டா னென்கிற வார்த்தையை கேட்டால் மனது தரிக்குமா ? தரியாது. ஆகையால் ஸ்ரீ ராமர் சுக்ரீவனைப் பார்த்து, அந்த வாலி நிமித்தம் பதினலு லோகத்தாரும் வந்து எதிர்த்துத் தடுத்தாலும், அஸ்திரத்தினுலே அவனைக் கொன்று அந்த ராஜ்ரீகத்தையும் உன் தாரத்தையும் உனக்குக் கொடுக்கிறேரும். அவ னிருக்கிற இடத்தைக் காட்டென்று திருவாய் மலர்ந்தருளினர். அந்த வார்த்தை கேட்கவே, நெஞ்சிலிருந்து சந்தோஷமாகிய சமுத்திரமானது பொங்கியெழும் படி துக்கக்கரையைக் கடந்து, இனி வாலியின் ஆண்மை அடங்கியதென்று எண்ணிக்கொண்டு பின்பு இப்படிச்சொன்ன ஸ்ரீ ராமரைக்குறித்து நாம் ஆலோ சிக்கவேண்டி யிருக்கின்றதென்று கருதி, யோசனையும் - கல்வியும் - நீதியும் - தந் திரமும் அமைந்திருக்கின்ற அனுமான் முதலான சில மந்திரிகளை அழைத்துக் கொண்டு சுக்ரீவன் ஒருபக்கத்தில் போயிருந்து யோசிக்கத் தலைப்பட்டான். அப்பொழுது அனுமான் சுக்ரீவனைப் பார்த்து, ஒருவார்த்தை சொல்லுகிறார் : ஐயா! உம்முடைய உள்ளக்கருத்து எனக்குத் தெரியவந்தது. வாலியைக்கொல்லு கின்ற பலம் இவரிடத்திலே யுண்டோ? இல்லையோ? என்று சமுசயப்பட்டீர். நான் சொல்லுகிறதைக் கேளும். ஸ்ரீ ராமருடைய திருக்கைகளிலும் திருத்தாள் களிலும் சங்கு சக்கரக்குறிகள் இருக்கின்றதுகள். இப்படிப்பட்ட இலக்ஷணம் எல்லாவுலகங்களிலும் இருக்கின்றவர்களில் எவர்களுக்குமில்லை. ஆகையால் இவர் தர்மத்தை நிலைநிறுத்துகிற நிமித்தம் இவ்வுலகத்தில் அவதாரஞ் செய்த நாராயணன்தான். திரிபுராதிகளைத் தகனஞ்செய்து காலனைக் காலாலுதைத்த சாம்பவமூர்த்தியினுடைய வில்லை, அந்த ஸ்ரீ மகா விஷ்ணுவினு லல்லாமல் மற் ரெருவரால் ஒடிக்கக்கூடுமா ? பூர்வத்தில் என் தந்தையாகிய வாயுபகவானை வர் இந்த லோகங்களை யெல்லாம் சிருஷ்டித்த பிர்மாவினுடைய பிதாவாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கு நீ அடிமையாகி, அவனுடைய கைங்கரியத்தைச் செய். அதுவே உனக்கு தவம். உன்னைப்பெற்ற எனக்கும் மேலான நற்கதி கிடைக்கு மென்று எனக்குச் சொல்லி யிருந்தார். அந்த நாராயணனே இந்த ஸ்ரீ ராமர். இதற்குச் சில ஏதுக்களும் உண்டு. அது என்னவென்ரூல் என் பிதாவை நோக்கி, ஐயா ! நீர்சொன்ன பகவானை அறிகிறதற்கு உபாயம் என்னவென்று கேட்டேன். அவர் அவன் பக்தர்கள் எவர்களுக்காலும் ஆபத்துவந்த காலத் திலே உடனே அதை நிவர்த்தி செய்கிறதற்குப் பிரசன்னமாவான். மேலும், அவனைக் கண்ட மாத்திரத்திலே உனக்குள்ளே அளவிறந்த அன்பு உதிக்கும். அதுவே சாட்சி யென்ரூர். அதற்குச்சரியாக இப்பொழுது எனக்கு எலும்பு களும் கரைந்து நைந்து நீராளமாகின்றதுகள் எனக்குச் சந்தேகம் எம்மாத்திர மும் இல்லை. உம்முடைய மனதுக்குச் சந்தேகமுண்டாய் அந்த ஸ்ரீ ராமருடைய பராக்கிரமத்தை அறியவேண்டுமாலல் அதற்கும் ஒரு உபாயமிருக்கின்றது. அதாவது நாம் சஞ்சரிக்கிறவழியில் ஏழுமராமரங்க ளிருக்கின்றதுகளே, அது களில் ஒரு மரத்தை அம்பினல் எய்யச்சொல்லி, அது உருவிப்போகிறதைப் பாருமென்று சொன்னன். அவ்விதமாக அனுமான் சொல்லக்கேட்டு நல்ல உபாயஞ் சொன்னீரென்று மாருதியைத் தழுவிக்கொண்டு எல்லாரும் ஸ்ரீ ராம ருக்குச் சமீபத்தில் வந்து, சுவாமி ! நாங்கள் ஒரு விண்ணப்பம் பண்ணிக்

கொள்ள வேண்டியிருக்கின்றதென்று சொல்லினன். அதென்ன சொல்லு மென்று ஸ்ரீ ராமச்சந்திர சுவாமியானவர் கேட்டருளினர்.

நட்புக்கோட் படலம் முற்றிற்று.

மராமரப் படலம்

அதற்குச் சுக்ரீவன், சுவாமி! நாம் இவ்விடத்திலிருந்து இந்த வழியாகப் போய்வர வேணுமென்று சொல்லி அழைத்துக் கொண்டுபோய், அதோ ஆகாசமெல்லாம் அளாவும்படி வளர்ந்து நீண்ட ஏழுமரா மரங்கள் இருக்கின் றன. அதுகளில் ஒரு மரம் உருவும்படி தாங்கள் அஸ்திரப் பிரயோகஞ் செய் தால், அடியேன் மனக்கிலேசம் போமென்று சொன்னன். அப்படி சொல் லவே, தேவராஜனுகிய கலியாணகுணபி ராமர் சிறு நகையாக நகைத்து, அவன் எண்ணிச் சொன்ன தாத்பரியத்தை யறிந்து, வில்லிலே நாணேற்றிட்டு அந்த மராமரங்களுக்குச் சமீபத்தில் எழுந்தருளினர். அம்மராமரங்கள் யுகம் பெயருங் காலங்களிலும் பெயர்கிறதில்லை. உலகங்கள் தாழுங் காலங்களிலும் தாழ்கிறதில்லை. பூமியைத் தாங்குகின்ற சப்தகுல பர்வதங்களும் ஓரிடத்தில் வந் திருப்பதுபோல இருக்கின்றதுகள். சூரிய சந்திரர்களாலும் முடிவு காணப் படாத சாயை யுடையதுகள். மலைகளைக் கண்டோமென்று சொல்லலாமே யல் லாமல், பிரமாவினுலும் இலைகளைக் கண்டாலல்லாமல் விருட்சமென்று அறிந்து சொல்லக்கூடாது. சூரியனுடைய தேரிலே கட்டியிருக்கின்ற பச்சைக்குதிரை கள் அந்த மரத்தின் நிழலிலே புகுந்து போவதனல்தான் இளைப்பில்லாமல் உலாவுகின்றது. நட்சத்திரங்களும், நவக்கிரகங்களும், அதுகளினுடைய புஷ் பங்கள் போலப் பிரகாசிக்கும். சந்திரன் அந்த விருட்சத்தினுடைய கிளைச் சந்துகளிலே நாள்தோறும் நுழைந்து போகிறதினலே, அவன் சரீரந்தேய்ந்து காய்ப்பேறி அந்த வடுவே களங்கமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அநேக சாகைகள் தழைத்திருக்கின்றபடியினலே வேதமென்றுஞ் சொல்லப்படும். சத் தியலோகத்தில் பிரம்மாவினுடைய வாகனமாகிய அன்னமானது தன் பெட்டை யன்னத்துடனே கூடிக்கொண்டு, இந்த மரத்தின்மேலேறி வாசஞ்செய்யும். துளிர் - இலை - புஷ்பம் - காய் - பழம் முதலானதுகளில் ஒன்றும் பூமியில் விழா மல், அங்குள்ள ஆகாசகங்கையில் விழுந்து அப்படியே சமுத்திரத்தில் போய்ச் சேரும். அந்த மரங்கள் அண்டகடாகமட்டும் உயர்ந்து, மகமேருவிலும் புரா தனமாய் அனேககாலம் கண்டிருக்கின்றதுகள். வாலிக்கும் சுக்ரீவனுக்கும் மனதில் எவ்வளவு வைரமிருக்கின்றதோ? அவ்வளவு வைரமுண்டானதுகள். இந்தப் பூமியைச் சுமந்துகொண்டிருக்கின்ற ஆதிசேஷனுடைய படங்களையும் கிழித்து உருவியிருக்கின்ற வேர்களை யுடையதுகள். அஷ்டதிசைகளையும் கிளை கள்போல் அளாவுகின்றதனல், சூரியனும் தடைப்பட்டுப் போகாமல் நின்று விடுவானென்று தேவர்கள் சொல்லத் தக்கதுகளா யிருக்கின்றதுகள். உதய கிரி அஸ்தமனகிரிகளைப் பார்க்கிலும் பருமனுண்டா யிருக்கின்றதுகள். ஒன்றுக் கொன்று நடுவே அநேக யோசனைதூரம் வெளியுண்டாயிருக்கின்றது. இப்

படி அதிகமாகிய பெருமைகொண்டிருக்கின்ற மராமரங்களினிடத்திலே வந்து அமல மூர்த்தியான ஸ்ரீ ராமர் அதுகளைச் செவ்வையாகப்பார்த்துப் பாணப்பிர யோகஞ் செய்யும்படி உத்தேசித்து, ஆகாசமும் திக்குகளும் செவிடுபடவும், தேவர் களுக்கு மகத்தாகிய பயம் ஜனிக்கவும், கோதண்டத்தைக் குணத்தொனி எழும்பும்படி செய்தார். அந்தக் குணத்தொனியினுடைய சப்தமானது எல்லா வுலகங்களுக்கும் சமானமாய் அங்கங்கே பிறந்த ஓசைபோ லிருந்ததென்றால், பக்கத்தில் இருந்தவர்களுக்குச் சம்பவித்ததைச் சொல்லுகிறது எப்படி? திக் கெஜங்களும் மயங்கியதுகள். பிர்மலோகமும் சலித்தது. கற்பத்தின் முடிவு பிறந்ததென்று சகல தேவர்களும் நடுங்கினர்கள். தம்பியாகிய லட்சுமணர் ஒருவருமே சமீபத்தில் நின்றார். சுக்ரீவன் முதலாகிய மற்றவர்களுடைய செய் கைகளைச் சொன்னால், அது அவர்களுக்குப் பழியாய் முடியும். நாலுதிக்கிலும் திடுக்கிட்டோடிய அநுமான் முதலானவர்கள் இன்னம் எய்வதையும் பார்ப் போமென்று மகா பிரயாசத்துடனே வந்துசேர்ந்து, சுவாமியினுடைய பிரதா பத்தைக் குறித்துக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ ராமரானவர் வில்லிலே அஸ்திரத்தைத் தொடுத்துத் தீர்க்கமாக வாங்கிவிட் டார். அந்த அஸ்திரமானது ஏழு மராமரத்தையும் உருவி, கீழேழு லோகத் தையும் கடந்து, அப்புறம் ஏழென்கிற தொகைசேர்ந்த பொருளில்லாமையால் அங்கிருந்து திரும்பியது. அது இன்னமும் ஏழாயிருக்கின்ற பொருள்களைக் கண்டால் துளையாமற் போகிறதில்லை. அத்தருணத்திலே ஏழு சமுத்திரமும், மேலேழு லோகமும், ஏழுகுல கிரிகளும், சப்த ரிஷிகளும், சூரியனுடைய சப்த மாதர்களும், இந்தப் பாணம் ஏழென்னுந் தொகை சேர்ந்த பொருள்களையே லட்சியமாக வுடையதோ வென்று எண்ணி நடுங்கினர்கள். அப்படிப்பட்டதா னாலும் அந்த ராமபாணமானது தர்மத்திற்கு உயிர்த் துணையா யிருக்கின்ற தென்பதைச் சகலரும் நினைத்து உடனே பயமொழிந்தார்கள். அச்சமயத்தில் சுக்ரீவன் தேக ஸ்மரணையில்லாமல் அதிக ஆனந்தமாகி, ஸ்ரீ ராமருடைய பாதாரவிந்தத்தைச் சாஷ்டாங்கமாகச் சேவித்து,

கவி

வையநீ வானுநீ மற்றுநீ மலரின்மேல்
அய்யநீ யாழிநீயாழி வாழமலனீ
செய்யநீ வினைதெறுந் தேவுநீ நாயினேன்
உய்யவந் ததவிரு யுலகமுண் டதவிரும்.

பூமியும் நீயே, ஆகாயமும் நீயே, மற்றப் பூதங்களும் நீயே, தாமரைப் பூவின்மேல் எழுந்தருளியிருக்கின்ற பிர்மதேவனும் நீயே, திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருள்கின்ற சக்கரதரனாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவும் நீயே, தீவினையை நாசஞ்செய்கின்ற தர்மதேவதையும் நீயே, லோகங்களையெல்லாம் உற்பத்தி யாகும்படி செய்த லோகாபிராமனே நீ, நாயேன் பிழைக்கின்ற நிமித்தம் வந்து கிருபைசெய்தாய். ஆதலால் இனியெனக்கு அரிதான பொருள் என்ன இருக்கின்றதென்று தெளிந்துக் கொண்டேன். விதிதானே உன்னைக் கொண்டுவந்து என்னிடத்தில் விட்டது. சாட்சாத் தாய்க்குச் சமானமாகிய

உன்னுடைய தாசாநுதாசன் நானென்று சொல்லி ஸ்துதி செய்தான். மற்ற வானரர்களெல்லாம் ஆடியும் பாடியும் அங்குமிங்கும் ஓடியும் சந்தோஷமென் கின்ற மதுவைக் குடித்தவர்களாய் அதிகமாகக் களித்து வாலிக்குக் காலமே வெகுநாளாகத் தேடினேம் இப்போது கிடைத்தானென்று வாடியிருந்த தோள் கள் வளர்ந்து பூரித்திருந்தார்கள். அப்பால் மலையின்மேல் ஒரு மலை கிடக் கிறதுபோல ஆகாயமட்டும் உயர்ந்து கிடக்கின்ற துந்துபியினுடைய சரீரத்தை இரகுநந்தனர் கண்டார். எமனுடைய வாகனமான மகிஷமோ? திக்கெஜந் தான் மடிந்து கிடக்கின்றதோ? அல்லவென்று ஜலம் வற்றிய சமுத்திரமோ? என்று பார்த்து, இது என்ன சொல்லென்று கேட்கச் சுக்ரீவன் சொல்லு கிறான்.

மாமரப் படலம் முற்றிற்று.

துந்துபிப் படலம்

சுவாமி! துந்துபியென்னும் பெயரினையுடைய் ஒரு அசுரன் மகா பலவந் தன். சந்திரமண்டல மட்டும் அளாவிய தலையிலே இரண்டு கொம்புடையவன். மந்தரமலையைப்போலக் காத்திரமான சரீரமுடையவன். அவனுடன் யுத்தஞ் செய்கிறவர்கள் ஒருவருங் கிடையாமல் ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் தேடிக்கொண்டு திருப்பாற்கடலுக்குப் போனன். அந்த மகாவிஷ்ணுவானவர் கண்டு என்ன நிமித்தம் வந்தாயென்று கேட்க, நீரென்னுடன் யுத்தஞ்செய்ய வாருமென் றான். அந்த வார்த்தைகேட்டு உன்னுடனே யுத்தஞ் செய்யத்தக்க சமர்த்தன் கங்காதரனாகிய காளகண்டனே. அவனிடத்திற்குப் போவென்று சொன்னார். அப்படியே திரும்பிக் கைலாசத்துக்கு வந்து தன் கொம்பினாலே அந்தப் பர்வ தத்தை முட்டிப் பேர்த்தான். அப்போது சிவனானவர் கண்டு, உனக்கு என்ன வேணுமென்று கேட்டார். என்னுடனே நீர் யுத்தத்துக்கு வாரும். அதுதான் எனக்கு வேண்டியதென்று சொன்னன். அந்த வார்த்தை கேட்டு நீ மிகுந்த பராக்கிரமமுடையவ னாகையால் உன்னோடு போர்செய்ய எனக்குக் கூடுமா? தேவர்களிடத்தில் போவென்று சொல்லி அனுப்பினார். தேவர்களில் ஒருவனை அழைத்து, நீ நெடுங்காலம் போர்செய்வா யாகையால் பூலோகத்தில் வாலி யென்று ஒருவனிருக்கிறான். அவனிடத்திலே போனால் அவன் அநேக காலம் உன் மனோபீஷ்டப்படி யுத்தஞ் செய்வானென்று சொன்னன். அப்படியே அவன் ஓடிவந்து வாலியிருக்கின்ற பர்வதத்தைத் தன் கொம்பி னாலேகுத்திச் சின்னபின்னம் செய்தான். அப்போது என் தமையனான வாலி அதிக கோபத்துடனேவந்து எதிர்த்தான். இருவரும் கைகலந்து எற்றிப் பற் றித் தத்திக் குத்தி இன்னன் இவனென்று கொஞ்சமாகிலும் ஒருவருக்கும் தெரியாமல், இடசாரி வலசாரியாகச் சுழன்று தெரிந்து, சகல லோகங்களும் நடுங்க, தேவர்கள் அசுரர்கள் முதலானவர்களும் பார்த்துப் பிரமிக்க, ஆகாச மட்டுந் தாவி அக்கினி யெழும்ப அட்டகாசஞ் செய்கிற சப்தங்கள் திக்குகளி லெல்லாம்போய்ப் பிரவேசிக்க, சமுத்திரங்கள் பர்வதங்கள் சகலமும் நிலை

பெயர்ந்து போக காலடிகளைப் பெயர்த்துவைத்து மடங்கி விழுந்து எழுந்து இப்படி அநேகநாள் போர்செய்கிறபோது, வாலி ஒரு விருட்சத்தைப் பிடுங்கி அவன் தலையின்மேல் அடித்தான். அந்த அடிபடவே துந்துபி இடியேறு போலக் கூச்சலிட்டு விழுந்து வாயினல் ரத்தங்கக்கினன். அப்படியான அந்த அசுரனை மறுபடியும் மலையின்மேல் கோடையிடி இடித்து விழுந்தாற்போல வானமும் பூமியும் நிலை குலைய, திசைகள் செவிடுபடக் குத்தினன். பின்னும் இது எருமைக்கடாவென்று தன்கையிற்கொண்டு சுழற்றினன். அப்போது அவனுடைய ரத்தம் திக்குகள் தோறும் நிறைந்து, திக்கெஜங்களினுடைய சரீரங்களுஞ் சிவந்தன. அந்தத் துந்துபியை மற்றும் உயரத்தூக்கி விட்டெறிந்தான். எறியவே, மேகமண்டலந் தாண்டி சூரிய மண்டலங்கடந்து அப்புறத்துள்ள தேவர்களுடைய உலகங்களுந் தாண்டி அண்ட முகட்டிலே முட்டிப் பிராணன் நீங்கிப்போக, உடல்மாத்திரம் திரும்பி விருட்சங்கள் முதலானதுகளும் மூறியும்படி, இந்த மலையின்மேல் வந்து விழுந்தது. அப்படி வந்து விழுந்த போதுதான் வாலிக்கு இவ்விடத்திலே மதங்கரிஷி சாபமுண்டாகி, எனக்கு உதவியாயிற்று. அந்தத் துந்துபியினுடைய சரீரந்தான் இதுவென்று சுக்ரீவன் சொல்ல, அதுகேட்டுப் பெரியபெருமாள் இளைய பெருமாளைப் பார்த்து, இதை நீ அப்பாலே தள்ளென்று சொன்னர். அந்தக்ஷணம் ராமானுஜர் தம் முடைய திருவடியின் பெரு விரலினுலே உந்தித்தள்ளினர். அம்மாத்திரத்தில் அந்த உடலானது எழும்பிப் பிர்மலோகம் போய்த் திரும்பிவந்து விழுந்தது. அது கண்ட லட்சுமணரும் மகா பராக்கிரம முடையவரென்று வானரங்கள் இடியும் பயப்படும்படி வாயைத்திறந்து கொக்கரித்து அட்டகாசஞ்செய்து சந்தோஷப்பட்டதுகள். பின்பு அவ்விடம் விட்டுத் திரும்பி முன்னிருந்த சோலையில் வந்து சேர்ந்தார்கள். சேர்ந்திருக்கும்போது சுக்ரீவனெழுந்திருந்து, சுவாமி! அடியேன் ஒருவார்த்தை சொல்லுகிறேன்; திருச்செவி சாத்தியருள வேணுமென்று பயபக்தியுடனே சொல்லத் தொடங்கினன்.

துந்துபிப் படலம் முற்றிற்று.

கலன்காண் படலம்

சுவாமி! நாங்களிவ்விடத்தில் இருக்கின்றபோது சிலநாளுக்கு முன்னே இராவணன் இந்தவழியாய் ஆகாயமார்க்கத்தில் எடுத்துக்கொண்டு போகின்ற தருணத்தில், தேவரீருடைய திருத்தேவியார்தானே? அல்லது யாரோ? மிகவும் பிரலாபித்துக்கொண்டே போகின்றவர் எங்களைக்கண்டு இவர்களாகிலும் சமாசாரம் சொல்லுவார்களென்றோ? என்னமோ? மனதிலே எண்ணிய எண்ணந் தெரியாது. மிகுந்த துயரத்துடனே ஆபரணங்களைக் கழற்றி வஸ்திரத்திலே முடிந்து, அங்கிருந்தபடியே விட்டுவிட்டார். அதுகண்ட நாங்கள் கீழே விழாதற்கு முன்னே கையிலே ஏற்றுக்கொண்டோம். அதை யந்தப்படி வைத்திருக்கிறோம். இப்பொழுது கொண்டுவருகின்றோம். பார்த்தரியுங்களென்று சொல்லி, எழுந்திருந்து ஓடி எடுத்து, இரண்டு கையினலும் தாங்கிக்கொண்டு

வந்து ஸ்ரீ ராமருடைய சந்நிதியிலே பாலுடனே நெய் கலந்ததற்குச் சமான மான சிநேகிதனுகிய சுக்ரீவன் வைத்தான். அதை ஸ்ரீ ராமர் பார்க்கவே, தம்முடைய தேவியார் திருவாபரணந்தானென்று தெரிந்துகொண்டு, நெருப்பிலேவைத்த மெழுகுபோலத் திருவுளம் கரைந்துருகினர். எப்படி உரு கினரென்றும் சொல்லமாட்டேன். நிலைதளர்ந்து அலைந்து கிடக்கின்ற தம் முடைய உயிருக்கு உறுதியுண்டாகும்படி அதை உட்கொண்டுவிட்டா ரென் றும் சொல்லமாட்டேன். அப்போது, ஸ்ரீ ராகவர் இருந்த இருப்பை யென்ன வென்று சொல்லப்போகின்றேன்? சீதாபிராட்டியின் ஸ்தனங்கள்மேல் தரிக் கப்பட்ட ஆரம் முதலான ஆபரணங்கள் அவளுடைய ஸ்தனம்போலவே தோன்றின. நிதம்பஸ்தானத்திலே அணியப்பட்ட மேகலை முதலானதுகள் அவளுடைய நிதம்பம்போலவே தோன்றின. மற்ற அவயவங்களிலே தரிக்கப் பட்ட ஆபரணங்களும் அப்படியே அந்தந்த அவயவங்களாகவே காணப்பட் டன. ஆகையால், அந்தப் பூஷணங்கள் ஸ்ரீ ராமரை விட்டு நீங்கிய பேரறிவை அழைத்துக் கொடுத்ததுகளென்றுதான் சொல்வேனே? அல்லது அவர் உயிரை இம்சைப்படுத்திய தென்றுதான் சொல்லுவேனே? அல்லது அப்பிய சந்தனம் போலக் குளிர்ந்ததென்று சொல்லுவேனே? அந்தத் திருவாபர ணம் மோந்து கொள்வதற்குப் பரிமள புஷ்பமாகியும், திருத்தோளில் ஏந்துதற்கு உத்தரீயமாயும், பூசுதற்குக் கெந்தமாகியும், இரத்தினப் பிர காசம் அவருடைய சரீரத்தைக் கவிந்து மூடுதலால் உடுப்பதற்கு வஸ்திர மாகியு மிருந்தது. மேலும் சுவாமியினுடைய கமல நேத்திரங்களிலிருந்து ஜலம் தாரை தாரையாய்ப் பெருகியது. சரீரம் மயிர்க்கூச்செறிந்தது. புஜங் கள் வெயர்த்து வெதும்பியதுகள். இப்படியெல்லா மிருந்தபடியினுலே அந்த ஸ்ரீ ராமச்சந்திரனுடைய தன்மையை அடியேன் என்னவென்று அறிந்து சொல்வேன்? விஷமேறினதுபோல வெப்பம் அதிகரிக்க மயங்கி, வெகுநாழிகை மட்டும் சுவாசமும் பிரக்ஞையும் இல்லாமல் சோர்ந்தார். அப்படிச் சோர்ந்த ஸ்ரீ ராமபத்திரனைச் சுக்ரீவன் உரோமங்கள் சுறுக்கிட்டெறியும்படி தன் சரீ ரத்தினுல் தாங்கினன். தாங்கிக்கொண்டு கண்ணிலே ஜலம் பிரவாகமாய் வர, அந்தத் துயரம். சகிக்காமல் ஏக்கமுற்று மனதிரங்கி அழுகின்றவனுகி, சுவாமி! இந்த ஆபரணத்தைக் கொண்டுவந்து காட்டி உமக்கு இத்தனை துக்கத்தைக் கொடுத்தேனென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறன். ஐயனே! பிர மாண்டமும் அதற்கு அப்பாலும் சோர்வில்லாமல் தேடிப்பார்த்து என் பலத் தையுங் காட்டி, உம்முடைய பிராணபதமான திருத்தேவியாரைக் கொண்டு வந்து கொடுக்கத் தக்கவனுய் நானிருக்கத் தாங்கள் இப்படித் துயரப்படலாமா? ஸ்ரீ மகாலட்சுமி யென்கிற தெய்வீகமாகிய கற்பினையுடைய சீதாபிராட்டியைப் பயப்படச்செய்து எடுத்துக்கொண்டு போகிற துஷ்டனுடைய பத்துத்தலையும், இருபதுதோளும், உம்முடைய ஒரு பாணத்துக்கு நிர்வாகஞ் செய்யுமா? அல் லது அதை உலகந்தான் தாங்குமா? சும்மா நீரிங்கே யிருந்தருளும். பதினு லு லோகத்திலும் புகுந்து தேடி அந்த ராட்சதனை ஜெயித்து, லோகமாதாவை மீட் டுக்கொண்டு வருகிறேன். என் சாமர்த்தியத்தைப் பாரும். ஏவல் செய்கிறதற் குத் தோழர்களாகிய நாங்கள்தா னிருக்கிறோம். அதிக பராக்கிரமசாலியாகிய உம்முடைய தம்பியு மிருக்கிறார். உமது வீரமோ ஒருவராலும் சொல்லி முடியா

தது. இப்படியெல்லாம் இருக்கிறபடியினாலே திரிலோகத்தாரும் உம்முடைய சொல்லைக் கடப்பார்களோ? உயர்ந்தவர்களா யிருக்கின்றவர்கள் எப்போதும் உயர்ந்த பொருளைக் குறித்தே பேசுவார்கள். அதற்குச் சாட்சி அவர்கள் பேசியபடியே முடிக்கின்ற காரியமேயல்லாமல் வேறென்ன? தர்மதேவதை யென்பது தேவரீரேயன்றி வேறில்லை. ஆகையால் உமக்கு அருமையானது என்ன யிருக்கின்றது? இதுகளையெல்லாம் யோசியாமல் ஒன்றுமில்லாத எளியவர்போலத் துயரப்படுகிறது நல்லதா? பிர்மா சிவன் விஷ்ணுவென்கிற இந்த மும்மூர்த்திகளும் ஒன்றாகக் கூடினால் உமக்குச் சமானமானவர்களே யல்லாமல் வெவ்வேறு யிருந்தால் ஆவார்களா? என்னுடையது கொஞ்சம் குறை யிருக்கின்றதே அது பின்பாகிலும் ஆகட்டும் லோகமாதாவான ஜானகியை மீட்டுக்கொண்டு வருவோம். எழுந்திருந்து வாருங்களென்று இப்படிச் சுக்கிரீவன் மிகுந்த அன்பும் ஆராமையுமாய்ச் சொல்லினன். அப்போது ஸ்ரீ மகாலட்சுமி வாசஞ்செய்கின்ற மார்பினையுடைய பரந்தாமனாகிய ஸ்ரீ ராமர் அருவி போல் ஜலம் பெருகிக்கொண்டிருக்கின்ற திருக்கண்களைத் திறந்து, சுக்ரீவனை அன்புடனே பார்த்தருளி, ஒருவிதத்தில் உணர்ச்சி பிறந்து தெளிவுண்டாய்ச் சொல்லுகிறார்: தம்பி சுக்ரீவா! நான் பூமியில் பிராணனுடனே யிருக்க, என் கையில் வில்லும் இருக்கும்போதுதானே, அவள் ஆபரணத்தைக் கழற்றி யெறிந்துவிட்டாளே. இதை என்னவென்று சொல்லுகிறது? பதிவிரதைகளா யிருக்கின்ற ஸ்திரீகளிலே யாரிப்படிச் செய்தவர்கள்? அந்த ஜானகி என் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்க. நான் மலைகள் - காடுகள் - மரங்களுடனேயும், அவளுடைய பூஷணத்துடனேயும், புலம்பிப் பொழுது போக்கிக் கொண்டு வெட்கமில்லாமல் வில்லைச் சுமந்து திரிகிறேன். வழி நடக்கின்றவர்கள் யாராகிலும் ஒரு ஸ்திரீயைச் சத்துருக்கள் துன்பப்படுத்தினால், அவர்களுடனே யுத்தஞ்செய்து தங்கள் பிராணனைக் கொடுத்தாகிலும் அந்தத் துயரத்தைத் தீர்ப்பார்கள். நான் என் சொந்த ஸ்திரீயினுடைய துயரத்தையே தீர்க்கமாட்டாமல் இப்படி யிருக்கிறேன். எங்கள் பெரியவர்கள் முன்னாளிலே சமுத்திரத்தைத் தோண்டியும், ஆகாய கங்கையைக் கொண்டு வந்ததும், புலியும் மானும் ஒரு துறையிலே தண்ணீர் குடிக்கும்படி செய்தும், மிகவும் கீர்த்தி சம்பாதித்தார்கள். இப்பொழுது நான் ஒரு ஸ்திரீயினுடைய விசனத்தைத் தீர்க்கத் தவஞ்செய்யவில்லை. எங்கள் தகப்பனார் இந்திரனுடைய துயரத்தைத் தீர்த்து எமனாலும் வெல்லப்படாத சம்பராசுரனைச் சங்கரித்தார். அவருடைய புத்திரனாய்ப் பிறந்த நான் அபகீர்த்தியைச் சம்பாதித்தேன். எங்கள் தகப்பனாருடைய சத்தியம் தப்பிப் போகுமானால் பழி வருமென்று மகுடஞ் சூடாமல் ஆரணியத்துக்கு வந்துவிட்டேன். இப்போது சத்துருவானவன் என் பெண் சாதியைக் கொண்டுபோகப் பெரும்பழியைத் தேடிக்கொண்டேன். நான் செய்த பிழைதான் என்ன? என்று இப்படிப் பலபலவிதமாய்ச் சொல்லி மனமும்நொந்து, கிலேசமென்கிற சமுத்திரத்திலே மூழ்கினவராய்த் துயரப்பட்டார். சுக்ரீவன் அந்த விசனத்தைப் பார்த்து, அநேகவிதமான தைரிய வார்த்தைகளைச்சொல்லித் துயரக்கடலில் நின்றுங் கரையேற்றினன். ஸ்ரீராமர் சுக்ரீவனைப் பார்த்து, ஐயா! நீயாற்றினபடியினாலே துக்கமாறினேன். இல்லாவிட்டால் எனக்குத் துக்கம்நீங்கி சீவனுடன் இருப்பேனே? இதைக்காட்டிலும் நீ வேறுதவி

செய்யவேண்டுமா? இப்படிப் பூமியிலே எனக்கு அதிக விசனமும் அபகீர்த்தியும் உண்டாயிருந்தாலும், உன் குறையை முடித்தபின்பு என் குறையை முடித்துக் கொள்வேனே யல்லாமல் முன்னே என்னுடைய விஷயத்தைக்குறித்து ஒன்றுஞ் செய்வதில்லையென்று சொல்லினர். அத்தருணத்தில் அநுமாரானவர் வணங்கிச் சுவாமியைப் பார்த்து, அடியேன் ஒருவிண்ணப்பம் செய்துக்கொள்ளுகிறேன். அதனைத் தேவரீர் திருவுளமகிழ்ந்து கேட்டருளவேண்டு மென்று சொல்லுகிறார். துஷ்கிர்த்தியத்தைச் செய்யும் வாலியை முன்னே கொன்று, சுக்ரீவ மகாராஜாவுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து, அப்புறம் படைகளைக் கூட்டினலல்லாமல் அந்த இராட்சதன் இருக்கும் இடந் தேடிப் பிடிக்கக்கூடாது. மேலும், நாம் மானிடப் பிறப்பினை யுடையவர்கள். ஆகாசமோ? பூமியோ? பர்வதமோ? பாதாளமோ? அது இன்னவிடமென்று நம்மாலே தெரியப்படுவதல்ல. இராட்சதர்கள் ஒரு இமைப்பொழுதுக்குள்ளே சகல உலகங்களிலும் பிரவேசிப்பார்கள். அந்த அந்த இடங்களில் தாங்கள் இச்சித்த பொருள்களையெல்லாம் கொள்ளை கொள்வார்கள். ஒருவனிடத்தில் தீவினையானது வருவதும் போவதும்போல, மாயையினலே வருவார்கள் போவார்கள். அவர்கள் வாசஞ் செய்யுமிடம் யாராலே அறியத்தக்கது? ஆகையால் ஏக காலத்திலே எல்லோரும் வெவ்வேறாக உலகமுழுமையும் பரவிப் போய்ச் சீதாபிராட்டியார் இருக்குமிடத்தைத் தேடவேண்டும். அப்படியல்லாமல் ஒவ்வொரு திசையாகத் தேடவேண்டுமென்றால் உலகம் விஸ்தாரமானதாகையால் மிகவும் அருமையாகும். மேலும் அநேக வருஷஞ் சென்றுபோம். இப்படி சங்கடமாய் இருக்கிறபடியினலே இதற்கு உபாயம் என்னவென்றால், எழுபது வெள்ளம் வானரசேனையிருக்கின்றது. அது யுகாந்தகாலப் பிரளயம்போல உலகமெல்லாம் மூடிக்கொள்ளும். சமுத்திரத்தைக் குடிக்கவேண்டுமென்றாலும், பிரம்மாண்டத்தையும் மகமேருவையும் பேர்த்தெடுக்க வேண்டுமென்றாலும், அப்படியே செய்யும். ஆதலால் அந்த வானரங்களைக்கொண்டு மேற்சொல்லியபடியே செய்யவேண்டுமென்று அடியேனுக்குத் தோன்றுகின்றதென்று சொல்லினர். அதற்குச் சுவாமியும் மெய்தான்; அவ்வண்ணமே செய்வோம். இப்பொழுது அந்த வாலியினிடத்திற்குப் போவோம் வாருங்களென்று சொல்ல, நல்லதென்று நடந்தார்கள்.

கலன்காண் படலம் முற்றிற்று.

வாலிவதைப் படலம்

அப்படி நடக்கிறவழிகளிலே சிங்காரமான தேவகன்னிகைகளின் ஊஞ்சல்களும், சந்தனச் சாரல்களும், செய்குன்றங்களும், சண்பகச் சோலைகளும், அந்தச் சோலைகளின்மேல் மேகங்கள் வந்து உறங்குகிறதும், மதயானைகளும் மலைப்பாம்புகளும் சஞ்சரிக்கிறதும், புலிகள் முழங்குகிறதும், தேனெழுகியோடுகிறதும், அந்தத் தேன் வழுக்கலிலே ஆகாயத்திலே சஞ்சரிக்கிற நட்சத்திரங்களும் பச்சைவில்லும் சந்திரன் முதலானதுகளும் சறுக்கி நடக்கிறதும்,

பொற்சன்னங்களும் பலவித இரத்தினங்களும் கும்பல் கும்பலாய் இருக்கிறதும் அநேக பட்சிகள் முதலானதும்பரவி அங்கங்கே இரைவதுமான இப்படிப்பட்ட சிங்காரங்களீ யெல்லாம் பார்த்துக்கொண்டு, யாளிகளும் - சிங்கங்களும் - புலிகளும் - மதயானைகளும் ஏறிப்போவதுபோல ஏறி பத்துயோசனைதூரம் உயரப் போய் தெய்வலோகமே இறங்கி வந்திருக்கிறதுபோல அதிக சிறப்புடனே பிரகாசிக்கின்ற வாலியிருக்கும் பர்வதம்போய்ச் சேர்ந்தார்கள். அப்புறம் இனியென்ன செய்யலாமென்று யோசனை செய்து, ஸ்ரீ ராமர் சுக்ரீவனைப் பார்த்து, நீ போய் அந்த வாலியை அழைத்து யுத்தஞ் செய்தால், அப்போது பாணப்பிரயோகஞ் செய்து அவனைச் சங்கரிக்கிறேமென்று சொல்ல, எப்படியும் பகையை நிவாரணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று இருக்கிற சுக்ரீவனும் அப்படியே செய்யலாமென்று சம்மதித்து, சமுத்திரம் அஞ்சவும், கார் மேகங்கள் நாணவும், பூமியிலுள்ளவர்கள் பயந்து உடல் வெயர்த்து ஓடவும், சொர்க்கத்தவர்கள் வருந்தவும், கொக்கரித்துக் கர்ஜ்ஜித்தான். அந்த ஓசையானது சர்வேசுரனை ஸ்ரீ மகாவிஷ்ணு உண்டருளிய அண்டங்களீ யெல்லாம் விழுங்கியது. உட்னே வாலியை அதட்டிக் கூப்பிட்டு என்னுடனே வந்து எதிர்த்தாயானால் உன்னை ஜெயம் செய்கிறேனென்று கையறைந்து வாய்மடித்துத் தோள்தட்டி ஆர்ப்பாட்டஞ் செய்தான். அந்தச் சத்தம் சம்பிரமத்துடனே படுத்துக்கொண்டு இடதுதோள் துடிக்கப் புட்பசயனத்தின்மேல் ஒரு பாற் சமுத்திரம் கிடப்பதுபோல நித்திரை செய்கின்ற வாலியினுடைய காதிலே விழுந்தது. அதைக் கேட்டமாத்திரத்திலே நித்திரை தெளிந்து, யானையினுடைய சத்தத்தைக் காதிலேகேட்ட ஒரு சிங்கம்போலச் சந்தோஷமடைந்து, தம்பியானவன் யுத்தத்திற்கு வந்திருக்கிறானென்பதை அறிந்து கோபத்துடனே நகைத்தான். நகைத்த சத்தமானது பதினலு லோகத்தாரையும் திசைகளுக்கப்புறத்தில் ஓடச்செய்தது. அப்படியாகப் பிரளயகாலத்திலே பொங்கிவருகிற கடல்போலச் சரீரப்பூரிப்போடே அதிசீக்கிரமாக எழுந்திருந்தான். எழுந்திருக்கவே அந்த மலை பாதாளத்திலே அழுந்தியது. புஜங்களைத் திருப்புகிறபோது அந்தப் புஜங்களிலிருந் தெழும்பிய காற்றினலே சமீபத்திலிருந்த மலைகளெல்லாம் பெயர்ந்து விழுந்ததுகள். சரீரத்தில் மயிர்சிலித்துக் கொண்டது. வடவாமுகாக்கினியும் குளிரத்தக்கதாகக் கண்களிலிருந்து கோபாக்கினி சொலித்தது. பெருமூச்சானது அதிகரித்ததால் மூக்கிலும் வாயிலுமிருந்து புகையெழும்பித் தேவலோகத்திற்கு அப்புறத்தே பிரவேசித்தது. கையைக்கொண்டு கையுடனே அறைந்தான். அறைந்த சத்தத்தினலே பூமிக்குக் காவலாயிருக்கின்ற அட்டதிக்கெஜங்களும் நடுநடுங்கி மதச்செருக்கு அடங்கியதுகள். அன்றியும், இடிக்கூட்டங்களும் பொடிப்பொடியா யுதிர்ந்ததுகள். தேவலோகமும் கிழிந்தது. சக்ரவாள பர்வதமும் நெரிந்தது. இதோ வந்தேன் வந்தேனென்று ஒரு வார்த்தையை முழக்கினன். அந்த ஓசையினலே இந்திரதிசை முதலான எட்டுத்திக்குகளும் கடகடாய்த்ததுகள். பர்வதாகாரமான தேகத்தையுடைய வாலியானவன் நவரத்தின மகுடத்தையணிந்த தன்னுடைய சிரசு ஆகாயத்தைத் தீண்டும்படி நின்றான். அப்போது சந்திரனும் நட்சத்திரக் கூட்டங்களும் சிந்தியதுகள். மற்றும் கைகளை வீசினன். கைவீச்சிலே பர்வதங்கள் வேரறுந்து

திகாந்தரங்களிற்போய் விழுந்ததுகள். ரோமத்துவாரங்களிலிருந்து கோபாக்கினிப் பொறிகளெழும்பி அண்டச் சுவரை மறைத்தன. அதைப்பார்த்து எமனும் கண்கூசினன். தேவர்களெல்லாரும் நிலைகுலைந்தார்கள். புற்கலை நெற நெற வென்று கடித்தான். அப்போது அதுகளிலிருந்து பிறந்த நெருப்பு கார்மேகத்திலிருந்து உதிர்ந்து இடிகளைப்போ லிறைந்தது. தோள்களைக் கொட்டினன். அந்தத்தோளிலணிந்த வாகுவலயங்கள் ஒடிந்து, அவைகளில் பதித்த இரத்தினங்கள் சுக்கற் சுக்கலாகி, மின்னல்கள் விழுகிறதுபோலத் தகத்தகாயமாகச் சொலித்துக் கொண்டு சிந்தி விழுந்ததுகள். பின்னும் வாலியானவன் பூமியும் நாலுதிக்கினு முண்டான சமுத்திரமும் தேவர்களும் சகலத்திற்கு மூலமான அண்டமும் முடிந்து போகும்படி, சர்வசங்கார காலத்திலே தகிக்கின்ற யுகாந்த காலாக்கினிபோலவும், தான் கடைந்த கடலிற் பிறந்த ஆலகால விஷம் போலவும், கோபாவேசங்கொண்டு கொதிப்புடனே சகலரும் பயப்பிராந்திகொள்ளும்படி யுத்தத்திற்கு நடந்தான். அப்போது அவனுடைய நாயகியான அமிர்தத்தில் ஜெனித்த தாரை யென்னப்பட்டவள் வெகு துரிதமாய் வந்து. அவன் வாயிலே புகை தோன்றக் கண்களிலுண்டான அக்கினியிலே தன்னுடைய தலைமயிரும் தீயும்படிக் காலைப் பிடித்துக்கொண்டாள். அது கண்டு வாலி, மலைகளில் வாசஞ் செய்யும்படியான மயிலைப்போலுஞ் சாயலையுடைய பெண்ணே! என்னைத் தடுக்காதே. விட்டுவிடு. கடலைக் கடைந்து அமிர்தத்தை யெடுத்து உண்டதுபோல், சண்டைக்கழைத்தவனுடைய மார்பைக் கலக்கி அவனுயிரைக் குடித்துவிட்டு ஒரு கணநேரத்தில் திரும்பி வருகிறேனென்று சொல்லினன். அதற்குத் தாரை சொல்லுகிறாள்: கேளும் ராஜாவே! இதுவரையிலும் பலவீனப்பட்டு உமக்குத் தோற்றுப்பயந்து, ஓடி ஒளித்துக் கொண்டிருந்த உம்முடைய தம்பியாருக்கு, இப்பொழுது புதுமையாய் ஏதோ சிறிது சாமர்த்தியம் உண்டாயிற்றென்று நினைக்கவேண்டாமா. அப்படியிருக்கப் பலாத்காரமாய் வந்து யுத்தத்திற்கு அழைப்பதற்கு ஏது வென்னவென்றால், அவருக்கு நல்ல உபபலம் கிடைத்திருக்கின்றது. அதனாலேதான் இத்தனை ஆர்பாட்டஞ் செய்கின்றார். மேலும் உம்முடைய புஜபலத்திற்குத் தக்க ஜெயத்தைக் கொடா நின்றநாள் இன்றைய நாளல்ல. நீர் இன்றைக்கு யுத்தத்திற்குப் போவது யுக்தமல்லவென்று சொன்னாள். அந்த வார்த்தையைக் கேட்டு வாலி சொல்லுகிறான்: அந்தர சொர்க்க பாதாளமான மூன்று லோகத்திலுண்டானவர்களும் வந்து என்னோடே எதிர்த்தாலும், அவர்களெல்லாம் தோற்றுப் போவார்கள். அதற்குச் சாட்சியுண்டு. அது நீ அறியாயா? மந்தரகிரியே மத்தாகவும், வாசுகியே கயிறாகவும், ஸ்ரீ மகாவிஷ்ணுவே தாங்கு கல்லாகவும், சந்திரனே காம்பாகவும் கொண்டு, இந்திரன் முதலான தேவர்களும், அசுரர்களும் பாற்கடல் கடையத் தலைப்பட்டபோது, அந்த மலையைப் பெயர்த்து இழுக்கச் சக்தியில்லாதவர்களாய்ச் சோர்ந்து வருத்தப்பட்டார்கள். அதுகண்டு நான் கடைந்து அமிர்தமுண்டாக்கிக் கொடுத்தேன். அல்லாமலும் தேவர்தானவர்களே என்னுடன் யுத்தஞ் செய்யத்தக்க பராக்கிரமம் இல்லாதவர்களாய்த் தோற்றுப்போயிருக்க, மற்றவர்களைக் குறித்துச் சொல்லக் கூடுமோ? என்னுடைய பெயரைச் சொல்லும் போதே எமனும் கெர்ப்பம் கலங்குவானென்றால், இனி யார் எனக்குச் சத்துருக்களாய் வந்து என்னுடனே

எதிர்த்து நிற்கும் பலமுள்ளவர்கள்? அல்லவென்று யாராயினும் அறிவில்லாதவர்களாய் வந்து எதிர்த்தாலும் அவர்கள் பெற்ற வரத்திலும் பலத்திலும் பாதி எனக்கு வந்துவிடும். அப்புறம் அவர்கள் எவ்விதமென்னை ஜெயங்கொள்ளுவார்கள்? இப்படியெல்லாம் இருக்கின்றதனால் இப்பொழுது நான் யுத்தத்தில் ஆண்மையை யிழந்து தோற்பது ஏது? நீ கிலேசப் படவேண்டாமென்று சொல்ல, பின்னும் தாரையானவள் கேளும் என் பிராணேசரே! உம்முடைய தம்பிக்கு ஸ்ரீ ராமரென்பவர் பிராணசிநேகிதராய் ஏற்பட்டு உமது உயிரை வாங்குவதற்குக் கூடவே வந்திருக்கிறாரென்று நமக்கு அனுகூலமானவர்கள் வந்து சொல்லக் கேட்டிருக்கிறேன். அதைச் செவ்வையாக விசாரித்துப் பார்த்துக்கொண்டு தான் போக வேண்டுமென்றாள். அவ்விதமாய்ச் சொல்லக் கேட்டபோது, என்னடி பாவி! இருவகை வினைகளையும் கொடுக்கத்தக்க உபாயத்தைக் காணுமல்படிக்குத் துக்கித்துச் சோகப்படும் உலகத்திற்கு தர்மமார்க்கத்தையெல்லால் உண்டாக்கிய ஸ்ரீ ராமரைக் குறித்து சொல்லப்படாத வார்த்தையைச் சொல்லி உன்னுடைய பெண் தன்மையினால் அவர் விஷயத்தில் அபசாரப்பட்டாய். இகபரங்களான இரண்டையும் பார்த்து நடக்கும்படியான அவருக்கு இது பெருமையாகுமோ? இதனால் அவர் பெறும்படியான பிரயோசனமென்ன? ஆத்துமகோடிகளையெல்லாம் இரட்சிக்கிற தர்மந்தானே தன்னைத் தடுமாறிப் போம்படி செய்யுமா? மாற்றாந்தாய் சொல்ல உலகத்தையெல்லாம் அவள் பிள்ளைக்கு மிகவும் சந்தோஷமாய்க் கொடுத்து வந்த மகாணுபாவரை தோத்திரஞ் செய்யாமல், அவர்மே லிவ்வித அபவாதமான வார்த்தையைச் சொல்லலாமா? இம் மூன்று லோகத்தார்களும் வந்து எதிர்த்தாலும் தம்முடைய வில்லே தவிர வேறுதுணை வேண்டாத அந்தப் புருஷோத்தமர், ஒரு அற்பமான செய்கையையுடைய குரங்கைச் சினேகஞ் செய்வாரா? தம்பிமார்களல்லாமல் தமக்கு வேறே உயிரில்லையென்று எண்ணியிருக்கும்படியான கிருபா சமுத்திரமான அந்த ஸ்ரீ ராமர் நானும் என்னுடைய தம்பியும் போர் செய்யும்போது நடுவே வந்து அம்பெய்வாரா? அப்படியெல்லாம் நடவாது. நீ இவ்விடத்தில் இமைப்பொழுது மாத்திரம் சும்மாயிரு. ஆக்ரோஷத்துடனே வந்த சுக்ரீவனையும் அவனுக்குப் பக்கத்துணையாய் வந்தவர்களையும் பிராணனை வாங்கிக்கொண்டு இதோ வருகிறேன். பயப்படாதே யென்று சொல்ல, அந்த வார்த்தையைக் கேட்டு பின்னை யொன்றுஞ் சொல்லாமல் தாரையானவள் அஞ்சியிருந்தாள். பின்பு வாலி போரென்று சொல்லவே தோள்களான இரண்டு மலைகளும் பூரித்து ஓங்கி, ஆகாயத்திற்கு அப்புறத்திலும் உயரும்படி நிமிர்ந்து கீழ்ப்புறத்தில் உதய பர்வதத்தின்மேல் தோன்றிய சூரியனைப்போலவும், சகலரும் பார்த்துப் பயப்பிராந்தி கொள்ளும்படி தூணிலிருந்து வெளிப்பட்ட உக்கிர நரசிங்கமூர்த்தி போலவும் புறப்பட்டு, அந்தக் கிஷ்கிந்தா பர்வதத்தின்மேல் நின்றான். இப்படி யுலகத்தை யளந்த மகாவிஷ்ணுவின் பாதம்போல ஆகாயமட்டும் நிறைந்திருக்கின்ற சொரூபத்துடனே நிற்கிற வாலி, ஆர்ப்பரிக்கின்ற தம்பியைக்கண்டு தானும் ஆர்ப்பரித்தான். அந்தக்காலத்திலே, ஆகாயத்திலிருக்கின்ற இடிகள் வெறித்துப்போய் உதிர்ந்ததுகள். லோகங்களெல்லாம் செவிடுபட்டதுகள். அத்தருணத்திலே ஸ்ரீ ராமர் வாலியைப் பார்த்து பின்பு சமீபத்திலிருக்கிற தம்பியை நோக்கிக் கூறுகிறார்.

அப்பா லட்சுமண! அசுரர்களும் தேவர்களும் இருக்கட்டும். எந்தச் சமுத்திரம்? எந்தமேரு? எந்தச் சண்டமாருதம்? எந்தக் காலாக்கினி இவனுடைய சரீரத்திற்குச் சமானமாகச் சொல்லப்படும்? நன்றாய்ப்பாரென்று சொன்னர். அதற்கு லட்சுமணர் சுவாமி! சுக்ரீவனென்னப்பட்டவன் இப்படிப்பட்ட தமையனைக் கொல்லுவதற்குக் கூற்றுவனைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு, குரங்கின் சண்டை செய்வதற்குத் தத்தாயத்தமா யிருக்கிறான். இன்னம் கொஞ்சமாயினும் மனதிலே வருத்தமுண்டாகவெண்ணிப் பார்க்கவில்லை. தர்மநெறி தவறும்படி தேறாது நடக்கிறவர்களை நாம் நம்பித் தேறுகிறது நன்மையல்ல. சத்துருவைப்போலச் சாட்சாத் தமையனையே கொல்லுகிறதற்கு வந்து நிற்கின்ற இவன், நம்மையொத்த அன்னியருக்குச் சகாயப்படுவது எப்படியாகவேண்டுமென்று சொன்னர். அந்த வார்த்தையைக் கேட்டு, அப்பா! ஒன்று கேளென்று ஸ்ரீ ராமர் சொல்லுகிறார்.

இந்தப் பித்தான குணத்தினையுடைய மிருகத்தின் நடத்தையைச் சொல்லலாமா? எந்தத் தாய்வயிற்றிலும் பின் பிறந்த தம்பிமார்களெல்லாம் முன் பிறந்த தமையன்மார்களுடனே ஒத்திருந்தார்களேயானால், நம்முடைய பரதன் மகா உத்தமனுவதுண்டோ? லோகத்திலே நல்லவர்கள் சிலரும், தீயவர்கள் பலருமாயிருக்கின்றது உண்மையே. காரியம் கொண்டுபோகிறவர்கள் ஒருவரிடத்திலிருக்கப்பட்ட நல்ல குணங்களை மாத்திரம் கிரகித்துக்கொண்டு போகவேண்டுமேயல்லாமல், அவருடைய குற்றங்களையெல்லாம் பார்க்க முடியுமா? அப்படிப் பார்க்கப்போனால் குற்றமில்லாதவர் ஒருவருமில்லையென்றே சொல்லவேண்டுமென்று இரகு நந்தனர் சொன்னர்.

இவ்விதமாக இராம லட்சுமணர்கள் வசனித்துக்கொண்டிருக்கும் போது, வாலியும் சுக்ரீவனும் பூமியிலே சஞ்சரிக்கின்ற இரண்டு பர்வதத்திற்குச் சமானமான இரண்டு திக்கெஜங்கள் ஒன்றோடொன்று முட்டினதுபோல முட்டினர்கள். மலையும் மலையும் எதிர்த்ததுபோலவும், சிங்கத்தோடு சிங்கம் எதிர்த்ததுபோல எதிர்த்து, நின்றும் - திரிந்தும் - அதிக விசையாய் இடசாரி வலசாரியாகவுஞ் சுழன்றார்கள். அப்போது பூமி குலாலனுடைய சக்கரம் போலச் சுழன்றது. தோளோடு தோள்களை ஒற்றியும், காலோடு கால்களை எற்றியும், கோபாக்கினி மண்டியெழக் கொந்தித்தும், சரீரந்தெரியாத மகா வீராவேசத்தோடே யுத்தஞ் செய்தார்கள். ஒரு தாய் வயிற்றில் பிறந்து ஒரு ஸ்திரீ நிமித்தமாய் உயுத்தஞ் செய்யாநின்ற மகா பலவந்தனை வாலி சுக்ரீவரிருவரும், முன்னளிலே திலோர்த்தமை நிமித்தமாய்ப் போர் செய்த சுந்தோப சுந்தர்கள்போலப் பிரகாசித்தார்கள். கடலுங் கடலும்போலவும், மகம்மேருவும் மகம்மேருவும் போலவும், கோபந் தானே இரண்டு ரூபமெடுத்து யுத்தஞ் செய்வதுபோலவும் யுத்தஞ்செய்கிறபோது, வானரங்களுக்கெல்லாம் அதிபதிகளான இருவர் கண்களும் கக்குகின்ற கோபாக்கினிச் சுவாலையினாலே மேகங்கள் கரிந்து, பர்வதங்களெரிந்து திக்கெஜங்கள் நடுங்கி உலகங்களெல்லாம் குலைந்து வேடிக்கை பார்க்கவந்த தேவர்களும் பயந்து மறைந்து போய்விட்டார்கள். இப்படிப் போர் செய்கின்ற வாலியுஞ் சுக்ரீவனும் இருந்தாற்போலிருந்து

ஆகாயத்தில் போவார்கள். பர்வதங்களின் சிகரத்தில் குதிப்பார்கள். பூமியிலே வருவார்கள். திக்குகளிலோடித் தொடர்வார்கள். சகல ஜீவனுடைய கண் களினு மிருக்கின்றவர்கள் போல அங்கங்கே நிற்பார்கள். ஒருவரையொருவர் இரத்தமானது கொப்பளிக்கும்படி கடிப்பார்கள். தசதிசைகளிலும் பொங் கிப்போய் முட்டுகின்ற சப்த சாகரத்தினுடைய வோசையைப் பார்க்கிலும் ஐந்து பங்கு அதிகவோசை யுண்டாகும்படி கெர்ஜ்ஜிப்பார்கள். யுகாந்தகால மேகம் இடிப்பதுபோலத் தோளிலும் மார்பிலும் கைகளைக்கொண்டு குத்துவார்கள். வாயிலிருக்கின்ற பற்களினுல் கடிக்க அக் கடித்த வாயிலிருந்து பீரிட்டொழுகு கின்ற இரத்தமானது திக்குகள்தோறும் பாய, வானத்தி லுதயமான நட்சத் திரங்களெல்லாம் செவ்வாய் போலவும், மேகங்களெல்லாம் செவ்வானம்போல வும் பிரகாசித்தன. ஒருவரையொருவர் அறையும்போது கருமான் உலைக் களத்தில் வெந்த இரும்பைப் பணியின்மேல் வைத்துச் சம்மட்டியினுலே யடிக்க அந்த இரும்பானது சிதறுவதுபோல அக்கினிப் பொறியானது சிதற இந்திர குமாரனுகிய வாலியினுடைய தோளும் சூரியகுமாரனுன சுக்ரீவனுடைய மார்பும் சக்கை சக்கையாய்ப் பெயர்ந்தன. பின்னும் ஒருவரையொருவர் மார்பினுல் உந்தியும், பாதத்தினுல் உதைத்தும், கையினுல் எடுத்தெறிந்தும், கடித்தும், இடித்தும், விருட்சங்களை வேரோடே பிடுங்கி யடித்தும், அதட்டியும், மலைகளைப் பேர்த்துத் தலைகள் மேலே வீசியெறிந்தும், அதட்டியுங் கனைத்தும், கண்களில் நெருப்பு சொலிக்கப் பார்த்தும், மற்றுமொருவரை யொருவர் நெருங்கிப் பிடித்துத் தூக்கியும், விட்டெரிந்தும், மார்பு கொடுத்தும், குத்தியும், காற்றடி போலச் சுழன்று தடுத்தும், கால்களோடே கால்களைப் பின்னியும், தழுவியும், விழுந்தும், மார்பெலும்புகளெல்லாம் நெரிந்து உதிரும்படியாய் வாலினுலே கட்டியிழுத்தும், வேலைக்கொண்டு துளைத்தாற்போல நகங்களினுலே கிள்ளி மலைக்குகைகள்போலச் சரீரங்கள் திறக்கத் துளைத்தும் போர் செய்தார்கள். பூமியிலிருக்கப்பட்ட மரங்களையும் மற்றும் கண்ணிலே யகப்பட்டவை யெல்லா வற்றையு மெடுத்தெடுத்து எறிவதினுலேயும், மோதுவதினுலேயும், அவையெல்லா மிற்றுப் பொடிப்பொடியாய் ஆகாயமெல்லாம் நிறைந்து, சமுத்திரத்தில் மென் மேலும் போய் விழுந்தன. தேவர்களெல்லாரும் பயந்து அப்பால் போய்விட் டனரென்றல், அவர்களுடைய யுத்தத்தை நான் வேறென்ன சொல்லப் போகின்றேன், இந்தப்படி இருவரும் தோற்காமல் நெடுநேரமாய் சண்டை செய்யுமளவில் வாலி அதிக கோபங்கொண்டவனுய், மதயானையைச் சிங்கம் பாய்ந்ததுபோலப் பாய்ந்து நகங்களினுலேயும் கைகளினுலேயும் சுக்ரீவனை மிகுதியும் மெலிந்து குறைந்து நோவச்செய்தான்.

அத்தருணத்தில் சுக்ரீவனனவன் மனது தளர்ந்து இளைத்தவனுகி, ஸ்ரீ ராமரிடத்திற்கு வந்து வணங்கிச் சொல்லிக்கொள்ளவே, சுவாமியானவர் பயப்படாதே உங்களிருவரிலே இன்னரின்னரென்று வேற்றுமை தெரியாததி னுலே இதுவரையிலும் அம்பெய்யாம லிருந்தேன். அடையாளந் தெரியும்படி இப்பொழுது இதை நீ தரித்துக்கொண்டு போவென்று அவனுக்குக் கொடிப் பூமாலையைத் தரித்து அனுப்பினர். அவனும் அந்த மாலையானது நட்சத் திரங்களை வரிசையாகக் கோத்தணிந்தாற்போலச் சிரசிலே பிரகாசிக்க புலி

போலக் கெர்ஜ்ஜித்து இடியைப்போல ஆர்ப்பரித்துக்கொண்டு துரிதமாய்ப் போய், வாலியை அவன் பயப்பிராந்தி கொள்ளும்படியாய் அனேக ஆவர்த்தியடித்து மோதிக் கபீர் கபீர் என்னும்படியாய்க் குத்தினன். அத்தனலே இப்பொழுது தோற்று ஓடிப்போனவன் மறுபடியும் வந்த காரணமென்னவென்று மனதிலே சந்தேகத்தை யுடையவனுகி, எமனுங் கர்ப்பங் கலங்கிப் பீதியடையும்படியாய்க் கண்களை யுருட்டி விழித்துக் குறுநகைசெய்து, சுக்ரீவன் சோகப்பட அவனுடைய உயிர்நிலேதோறும் தன்னுடைய வயிரமான கையினலே யறைந்து காலினலே யுதைத்தான். அம்மாத்திரத்திலே அவன் பெருமூச்சுவிட்டு அந்தப் பெருமூச்சுடனே உயிர் நீங்கினவனேப்போல மூர்ச்சை யடைந்திருந்தான். அவனுடைய செவியின் வழியாயும் கண்ணின் வழியாயும் அனற் பொறி பறக்க உதிரவெள்ளம் பெருகி வழிந்தது. பின்பு சூரியகுமாரனுனவன் வருத்தம் சகிக்கமாட்டாமல் எழுந்து ஸ்ரீ ராமரிருக்கின்ற திக்கை நோக்கி ஓடினன். அவன்மேல் இந்திரகுமாரன் செருக்குற்று ஓடிவந்து விழுந்து, தோள் மடல் நெரியும்படி நெருங்கி, அரையில் ஒரு கையும் கழுத்தில் ஒரு கையுங் கொடுத்துத் தூக்கி மேலே யெடுத்துப் பூமியிலே மோதும்படி எத்தனித்தான். அதுகண்டு சுவாமியானவர் இனி நாம் சும்மாயிருந்தால் இவனைத் தப்பாமல் தரையுடனே மோதிக் கொல்லுவானென்று நினைத்து, ஒரு பாணத்தை எடுத்துக் கோதண்டத்திலே பூட்டித் தோள்மட்டும் வாங்கி, வாலியினுடைய மார்புக்கு நேராக லக்குபார்த்துப் பிரயோகஞ் செய்தார். அந்த ராமபாணமானது பஞ்சபூதங்களின் பலம் முழுமையும் நிறைந்த திடகாத்திரத்தையுடைய வாலியினுடைய மார்பிலே, வாழைப்பழத்தில் ஊசி நுழைந்ததுபோலத் தடைபடாமல் நுழைந்தது. அப்போது தனக்குத் தோற்று ஓடிய தம்பியைத் தயையில்லாமற்படிக்கு எடுத்து நிலத்திலே யெற்றும்படி பிரயத்தனப்பட்ட வாலியானவன் சித்தங்கலங்கி, பிரளயகால சண்டமாருதம் அடிக்க வேரறுந்துவிழுந்த மகமேருவைப்போலப் பூமியிலே விழுந்தான். இவ்விதமாக யிடிவிழுந்த மலையைப்போல விழுந்த வாலியானவன் சுக்ரீவனைப் பிடித்த கையை நழுவவிட்டு, மார்பிலே பட்டுருவிப் போகாகின்ற பாணத்தை போகவொட்டாமல் உறுதியாகப்பிடித்துக் கொண்டு ஆகாயமட்டும் எழும்பி, அண்டகடாகத்தை யுடைக்கின்றேனென்று எழுந்திருப்பான். ஒரு உளுந்து உருள்கின்ற பொழுதுக்குள்ளே திக்குகளையெல்லாம் நிர்த்தூளியாகச் செய்கிறேனென்று குதிப்பான். மறுபடி விழுந்து பூமியை வேருடனே பறிக்கிறேனென்று உறுக்குவான். இந்தப் பாணத்தை யெய்தவன் யாரென்று சந்தேகித்து ஆச்சரியமாய் பூமியைக் கையினலே அறைவான். கண்களில் நெருப்புப்பொறி பறக்க நான்குதிக்கையுஞ் சுற்றிப் பார்ப்பான். அந்தப் பாணத்தைக் கையினலும் காலினலும் வாலினலும் பற்றிப் பறிப்பான். பறிக்கக் கூடாததினலே நிலத்திலே ஒரு பர்வதம் உருள்கின்றதுபோல உருள்வான். இது செய்தவர்கள் தேவர்கள் தானேவென்றும் ஐயப்படுவான். மற்றும் அந்தத் தேவர்கள் இந்தச் செய்கைக்குத் தக்கவர்களோ வென்றும், அவர்களுக்கு இவ்வளவு மிடுக்குண்டோவென்றும், அல்லது பிறர் யார்தான் செய்தார்களோ வென்றும் நினைப்பான். உடனே நகைப்பான். பின்னும் திரிமூர்த்திகளுக்கும் சமானமானவனல்லவோ இப்படிச்செய்ய வல்லவனென்றும் சொல்லுவான். என் மார்பிலே பட்ட ஆயுதம் விஷ்ணுசக்கரமோ? சிவசூலமோ? குமாரனுடைய

வேலோ? இந்திரனுடைய வச்சிரமோ? எப்படிப்பட்டதுகளானாலும் என் மார்பில் நுழைந்து செல்லுமோ? ஆகிலும் இது எதுவோவென்று திகைப்பான். இது வில்லிலே பூட்டி செய்யப்படுவது அல்லவென்று அதிசயிப்பான். இதை முனீஸ்வரர்கள் தங்கள் வாக்கின் மகிமையால் பிரயோகித்தார்களோவென்றும் எண்ணுவான். பல்லினுற் பலதரம் கடித்தும், இழுத்தும், தன்மார்பைக் கல்லியும் பறிக்கப்படாமல் இருக்கிறது அம்பேயென்று அறிந்தான். அப்படி ஸ்திரமாக அஸ்திரமென்று அறிந்து பலவிதத்திலும் சலிப்புற்றான். என் மார்பை உயிருடனே உருவிய இப்படிப்பட்ட பாணத்தை எய்தவன் இன்னனென்று அவன் பெயரை அறிகிறேனென்று, அதை மறுபடியும் இரண்டு கையையும் காலையும் வாலையுங்கொண்டு மகா வுக்கிரமாக இழுத்துப் பறித்தான். அது கண்டு தேவர்கள் அசுரர்கள் முதலானவர்களும் வாலியைக் கொண்டாடிச் சந்தோஷப்பட்டார்கள். உலகத்திலே சுத்த வீரர்களைக் குறித்து யார்தான் அதிசயிக்க மாட்டார்கள்? அவன் மார்பாகிய மலையிலிருந்து அருவி ஒழுகுகிறதுபோல இரத்த ஜலம் பெருகி, மலைகள் காடுகளெல்லாம் நிறைந்தது. சுக்ரீவனும் அந்த ரத்தப் பிரவாகத்தைப் பார்த்துத் திகைத்து, உடன்பிறப்பென்கின்ற ஆசாபாசத்தினாலே கண்களினின்று நீர்தாரை தாரையாய் ஒழுகப் பூமியிலே விழுந்தான்.

வாலியானவன் மார்பிலிருந்து பறித்த பாணத்தை முறித்தெறிகிறேனென்று எத்தனித்துங் கூடாமையால் நான் மேருவையும் முறிக்கத்தக்க பராக்கிரமசாலியாயிருந்தும் இந்த அம்பை முறிக்கின்றதற்கு என்னாலே ஆகவில்லையே யென்று நினைத்து, இதில் யார் பெயரெழுதியிருக்கின்றதென்று பார்த்தான். அப்போது அதில் சொர்க்க மத்திய பாதாளமாகிய திரிலோகங்களுக்கும் மூலமந்திரமாகியும், தியானஞ் செய்கின்றவர்களுக்குத் தற்சொரூபத்தைக் கொடுக்கின்ற தாரகப் பிரமமாகியும், இம்மை மறுமை யென்கிற வியாதியை நிவர்த்திசெய்கின்ற பரம ஔஷதமாகியும் விளங்குகின்ற ஸ்ரீ ராமனென்று எழுதியிருந்த திருநாமத்தை நன்றாகத் தெரியக்கண்டான். இப்படிக் காணவே, ஓ! ஓ! ஒருநாளும் வேதசாஸ்திரங்களாற் சொல்லப்பட்ட தர்மந் தவறாத சூரியகுலமானது, நிரகதர்மத்தைக் கைவிட்டு வானப்பிரஸ்தனுடைய விஷயத்தில் வில்லின் தர்மத்தை மறந்த இந்த ராமன் உற்பவித்த பின்பு, தர்மந் தவறியதென்று வெட்கப்படுவான். கிரீடந்தரித்த தன் தலையை அசைப்பான். அதிக ஆர்பாட்டமாகக் கலகலவென்னும்படி சிரிப்பான். மறுபடியும் சிறிதுநேரம் ஆலோசிப்பான். இதுவும் ஒரு தர்மமோ வென்று நினைப்பான். காலிலே பூட்டிய தளையுடனே குழியில் விழுந்த மதயானையைப்போல உதைத்துக்கொள்ளுவான். பின்னும் சரீர ஸ்மரணையில்லாதவனுய்ச் சோர்ந்து கிடப்பான். லோகத்துக்கெல்லாம் இறைவனுகிய இந்த ராமன், தானே தர்மத்துக்கு விரோதமாகிய காரியம் செய்வானுகில் மற்றவர்கள் எப்படியாகவேணுமென்று சொல்லுவான். இவ்விதமாக மனதழிந்து துயரப்படுகின்ற வாலிக்கு முன்னே மநுவிக்கியானத்திற் சொல்லப்பட்ட இராசதர்மத்தைத் தவறுமல் காக்கின்ற நிமித்தம் வேதமார்க்கந் தப்பாமல் இராஜ்யபாரஞ் செய்த தசரத மகாராசாவுக்குப் புத்திரனுகத் திருவவதாரம் செய்தருளிய புருஷோத்தம

ராகிய ஸ்ரீ ராமர் பிரசன்னமானர். வாலியானவன் நீலமேகமானது தாமரை கள் புஷ்பிக்கும்படி ஒரு பர்வதாகாரமாகிய வில்லைத் தாங்கிக்கொண்டு பூமி யிலே வந்து நிற்பதுபோல எதிரே நின்ற ஸ்ரீமந் நாராயணஞகிய இராமமூர்த் தியைக் கண்டான். கண்கள் புண்போல ரத்தமும் நெருப்பும் பொழியப் பார்த்து, அப்பா! நீ என்ன நினைத்து என்ன காரியத்தைச் செய்தாய்? சத் தியமும் மரபும் தவறுமல் காத்து, அதனிமித்தமாகப் பிராணனை விட்டுவிட்ட புனிதனுகிய தசரதச் சக்கிரவர்த்திக்குச் குமாரனுயல். பரதனுக்கு முன்னே பிறந்தாய். அயலாரைத் தீமைசெய்ய வேண்டாமென்று ஆக்கியாபித்து, அந்த ஆக்கினை தப்பி நடந்தவர்களைத் தண்டித்து நீ தானே இப்பொழுது தீமை களைச் செய்தால் நன்மையாமா? பெற்ற தாயைப்போல அன்பையும் தயை யும் சினேகத்தையும் தர்மத்தையும் கைவிடாமல் தழுவிக்கொண்டிருக்கின்ற, நீ, குலதர்மம் இப்படிப்பட்டது. கல்வி இப்படிப்பட்டது. நன்மை இப்படிப்பட் டது. திரிலோகாதி பத்தியம் இப்படிப்பட்டது. புஜபலம் இப்படிப்பட்டது. உல கத்தை இரட்சிக்குந் தன்மை இப்படிப்பட்டதென்று தர்மசாஸ்திரம் சொல்ல அறிந்திருந்தும், மறந்தவர்களைப்போல அந்தச் சாஸ்திர நிச்சயத்தை அழிக்க லாமா? இராஜ தர்மமென்பது உங்கள் வம்சத்திலே பிறந்தவர்களுக்கெல்லாம் இயற்கையா யிருக்கின்றதல்லவோ? அப்படியிருக்க, உனக்கு ஆவியும், ஜனக புத்திரியும், கிடைப்பதற்கு அருமையான அமிர்தத்தையொத்த உன் தேவியாகிய சீதையைப் பிரிந்த பிறகு நீ மனந் திகைத்தாயோ? சித்திரத்திலும் எழுதப் படாத திவ்விய சுந்தரத்தையுடைய ஸ்ரீ ராமா! இராட்சதர்கள் ஒருபிழை செய்துபோனல் அதற்கீடாகக் காட்டிலிருக்கின்ற ஒரு குரங்கு இராஜனைக் கொல்லும்படி உங்கள் மநுநீதியிற் சொல்லியிருக்கின்றதோ? உனக்குரிய பச்சாதாபத்தை எங்கேதான் கொட்டிவிட்டாய்? என்னிடத்தில் என்ன குற் றத்தைக் கண்டாய்? ஐயா! இந்த அபகீர்த்தியை நீ பூண்டுகொண்டால் இனி கீர்த்தியைத்தாங்கத் தக்கவர்கள் யார்? உலகத்திலே சஞ்சரிக்கிற குரங்கின் கூட்டத்திற்கு மாத்திரம் கலிகாலம் வந்து நேரிட்டதோ? ஒழுக்கமும் நன்மை யும் வேண்டியது எளியவர்களுக்கு மாத்திரமோ? பலவந்தர்களுக்கு வேண்டிய தில்லையோ? அவர்கள் பழியே செய்தாலும் புகழாய் முடியுமோ? ஓ ஒருவரும் துணைவேண்டாத விஜயப்பிரதாபனே! பெற்ற பிதாவானவர் உனக்குக் கொடுத்த இராஜ்ஜிய சாம்ராஜ்யத்தை உன் தம்பிக்குக் கொடுத்து, நாட்டில் அவரைக் கொன்றாய். இப்போது இந்த இராஜரீகத்தை என் தம்பிக்குக் கொடுத்து காட்டில் என்னைக் கொன்றாய். இதைப் பார்க்கிலும் வேறென்ன காரியம் செய்யவேணும்? ஓ ஒருநாளும் கோபமில்லாதவனே! ஆண்மை செலுத்துகிறது சுத்த வீரர்களுக்குரிய ஒழுக்கமே ஆயினும், என்னை யிப்படி அநியாயமாகக் கொன்ற நீ நாளை அந்த ராவணனை முறைதவறிய காரியஞ் செய்தானென்று கோபிப்பையோ? இருவர் எதிர்த்து யுத்தஞ் செய்துகொண் டிருக்குபோது அவ்விருவரையும் சுற்றத்தாராகப் பாவிக்கவேண்டியதை விட்டு, ஒருவர்மேல் கிருபையைச் செலுத்தி ஒருவர்மேல் கோபங்கொண்டு ஒளித்திருந்து வில்லை வளைத்துப் பாணப்பிரயோகஞ் செய்வது தர்மமோ? அல்லது அதர் மமோ? இது பக்ஷபாதமே; மேலும் வீரமு மல்ல; விதியுமல்ல; சத்தியமுமல்ல; உன்னுடைய பூமிக்கு என் சரீரம் பாரமுமல்ல; நான் உனக்குப் பகையாளியு

மல்ல ; கொஞ்சமாகிலும் அன்பும் அருளுமில்லாமல் நீ இவ்விதமாகச் செய்தது என்ன நியாயம் ? இகபரங்களில் வரும் நன்மை தீமைகளைக் குறித்துப்பார்த்து, சத்துருக்கள், மித்திரர் அந்நியர்களாகிய சகலரும் ஒப்பச்செய்கிற தல்லவோ தர்மத்தை ரட்சிக்கிறதென்பது. குற்றம்வந்து சம்பவிக்குமென்று பாராமல் ஒரு பட்சத்திற் சார்ந்து உதவி செய்யலாமா ? சிங்கத்தை கைவிட்டுச் சிறுமுய லைத் துணையாகச் சேர்த்துக்கொள்வதுபோல, பகையாளியைச் சாதிக்கவேணு மென்று ஆலோசித்த நீ மொடிப்பொழுதிலே ஜெயிக்கத் தக்க சாமர்த்தனுகிய என்னை ஒழித்து, பல வீனனுகிய சுக்ரீவனைக் கைப்பற்றிக் கொண்டாயே இது என்ன முயற்சி ? சந்திரனுக்குக் களங்கமுண்டானதுபோலக் களங்கமில்லாத சூரியகுலத்துக்கு நீ பிறந்து களங்கமுண்டாகும்படி செய்தாய். ஒருவன் வந்து என்னைப் போருக்கு அழைக்க நான் அவனுடனே எதிர்த்துச் சண்டைசெய்கிற சமயத்திலே, ஒளித்திருந்து அம்பெய்து என் பிராணனை வதைத்துப் பின்னும் வெட்கமில்லாமல் நான் விழுந்துகிடக்கின்ற இடத்தில் எனக்கு முன்பாக வந்து நிற்கின்றாய். சாஸ்திர தர்மத்தையும் உங்கள் பிதுராசாரத்தையும் கைப்பற்ரு மல், வாலியென்கின்ற என்னைக் கொன்று இராஜதர்மத்தின் வேலியை முறித் தெறிந்தாய். உன் தாரத்தை ஒருவனெடுத்துக்கொண்டுபோக, அபவாதமாய் எப்படி கையிலே வில்லைவைத்துக்கொண்டு சும்மாவிருக்கிறதென்று நிராயுதன் மேல் மறைந்து அஸ்திரம் பிரயோகித்த தல்லவோ வில் வீரம் ? என்று வாலி யானவன் பொறிபறக்கப் பல்லைக்கடித்து, மனங்கொதித்து, அதிக கோபமாய்க் கண்ணின்வழியே நெருப்புச் சிந்தும்படி பேசினன். அதற்கு ஸ்ரீ ராமர் உத் தரவு சொல்லுகின்றார். நீ முன்னளிலே பிலத்துவாரத்தில் புகுந்துபோய் வெகு நாள் வராமலிருந்தாய். அப்போதுன் தம்பி மிகவும் துயரப்பட்டுத் தானும் அந்தப் பிலத்துவாரத்திற்குள் உன்னிடத்தில் வரும்படி புறப்பட்டான். இவனை உங்கள் குலத்திலுள்ள பெரியவர்களும் படைத்தலைவர்களும் பிடித்துக்கொண்டு நீயும் போய்விட்டால் எங்களுக்குக்கதி யார் ? இனி நீயாவது இருந்து அரசாட்சி செய்யென்று வெகுவாய்ச் சொல்லி நிறுத்தினர்கள். அவர்கள் இப்படிச் சொல்லியும் இவன் என் தமயன் இறந்துபோய் நான்மாத்திரம் உயிருடனே யிருக்கிறதோ ? இப்பொழுதே இறந்துபோகிறேன் ; இராஜரீகமுஞ் செய்கிற தில்லை. நீங்கள் என்னசொல் சொன்னீர்களென்று மறுத்துவிட்டான். மறு படியும் அவர்கள் பலவிதத்திலும் இணங்கும்படி சொன்னதைக் கண்டு, அர சாட்சிசெய்யச் சம்மதித்தான். நீ வந்தவுடனே உன்னைவணங்கி, உன் ராஜரீ கத்தை உன் வசஞ்செய்து நடந்த சமாசாரஞ் சொன்னன். அப்போது நீ இவன்மேல் கோபித்துக்கொண்டு, இவனிடத்தில் குற்றமில்லாமலிருந்தும் இவ னைக் கொல்லுகிறதற்கு நினைத்து நீ மிகவும் உபத்திரவஞ் செய்தாய். அத்தரு ணத்திலே இவன் என் பிழையெல்லாம் பொறுத்துக்கொள் ; உனக்கு அபய மென்று சொன்னன். அல்லாமலும் மகா பலவந்தனுகிய இந்தச் சுக்ரீவன் உன க்கு யுத்தத்தில் நான் தோற்றேனென்று கைகளை உயர யெடுத்துக் கும்பிட்டும், இவன் பிராணனை எமனுக்கு உணவாகக் கொடுக்கிறேனென்று சீறினாய். இவன் நடுங்கி நாலுதிக்குக்கும் அப்புறத்தே ஓடினன். அதுவறிந்தும் நீ மனதிரங்காமல் தம்பியென்றும் பாராமல் துரத்தினாய். நீ வந்தால் உன் தலைவெடித்துப் போம் படி ரிஷி சாபம் உண்டாயிருக்கின்ற மலையின்மேல் இவன்போய் ஏறினன். நீ

அவ்விடத்திற் போகவில்லை. அதனால் இவன் உயிர் தப்பிப் பிழைத்தான். எப் போதும் தெளிவினை யுடையவர்களுக்கெல்லாம் பரதாரத்தை இச்சியாம லிருக் கின்றதே அன்பும், நல்ல குடிப்பிறப்பும், வீரமும், வித்தையும், மெய்மையும் நீதியு மாம். மேலும், நாம் பலவந்தரா யிருக்கிறோமென்று எளியவரைத் துன்பப் படுத்துகிறதே வீரங் குன்றுவதும், ஒருவர் விவாகம் செய்துகொண்ட ஸ்திரீ களைக் கற்பழிக்கிறதே தர்மந் தவறுவதுமாம். இப்படியிருக்க நீ தர்மம் இன்ன தென்பதையும் இம்மை மறுமையும் யோசித்துப் பாராமல், உனக்குள்ள பெரு மையையும் விட்டு, உன் அருமைத் தம்பியின் பிராணபதமாகிய பெண்சாதியை யும் பலாத்காரமாய் அபகரித்துக்கொண்டா யாகையினாலும், அவன் எனக்குப் பிராண சிநேகனபடியினாலும், இவனுடைய துயரத்தை நிவர்த்திசெய்கிறது என் கடனாகையினாலும், அந்நியர்களாகிலும் எளியவர்களாய் இருக்கின்றவர் களுக்கு வந்த ஆபத்தைத் தீர்க்கிறதே என்னுடைய மனோபீஷ்ட மாகையினா லும் இப்படிச் செய்தேனென்றும் ஸ்ரீ ராமர் சொல்ல, வாலி சொல்லுகிறான் : ஐயா ! நீ தகாதென்று சொல்லிய இவ்வளவு செய்கையும் எங்களுக்கு இயற் கையா யிருக்கின்றது, கற்புடைய உங்கள் குலத்து ஸ்திரீகளின் புணர்ச்சி போலப் பிரம்மதேவன் எங்களுக்கு உண்டுபண்ணவில்லை. தாயென்றும், தங்கையென்றும், மகளென்றும், மனைவி என்றும், தமையன் பெண்சாதி, தம்பி பெண்சாதி யென்றும் விவரமில்லாமல் நேர்ந்தபடி புணரும்படி செய்தான். மேலும் கல்யாணம் செய்கிறதுமில்லை. எங்கள் மிருகஜாதிக்கு தக்கபடி மனம் போனவாறு நடந்துக்கொள்ளுகிறதே யல்லாமல், வேத மார்க்கத்துக்கு ஒத்த குணமுமில்லை. ஆகையால் சிறிதும் குற்றமேயில்லை. இதை நீ அறியென்று வாலி சொன்ன சொல்லுக்குத் தகுதியாகிய நியாயத்தை ஸ்ரீ ராமர் சொல்லு கிறார் : நீங்கள் சிரேஷ்டர்களாகிய தேவர்களுக்குப் புத்திரர்களாய்ப் பிறந்து தர்ம மார்க்கத்தை அறிகிறபடியால், எங்களுக்கு மிருகதத்துவமே யில்லையென் பது தெரியவந்தது. ஆகையால் அதர்மஞ் செய்வது அடாது தர்மத்துக்கு இருப் பிடமா யிருக்கின்றது பேரறி வுணர்வில்லாத ஜடமாகிய சரீரமாய் ஐம்புலன் களையும் பகுத்தறிகின்ற அறிவல்லவா ? சாஸ்திர தர்மங்களைச் செவ்வையாக அறிந்த நீ பிழைசெய்து பாவத்தை யடையலாமா ? முதலையானது பிடித்திழுக் கச் சங்குசக்கரனையேந்திய ஆதிமூலமாகிய ஸ்ரீமந் நாராயணனைக் கூவியழைத் துப் பேரறிவினாலே மோட்சானந்தத்தைப் பெற்ற அந்தக் கஜேந்திரனும் மிருக ஜாதிதானே ; தர்மசிந்தையினாலே சீதையின் துக்கத்தை ஆற்றும்படி இரா வணனுடனே யுத்தஞ்செய்து மோட்சமடைந்த எங்கள் பிதாவாகிய ஜடாயுவும் கழுகுகளுக்கு ராஜாவாகிய ஒரு பட்சிதானே ; ஆகையால் அறிவே பிரதா னம். நல்லது தீயது அறியுந்தன்மை யில்லாததல்லவோ மிருகம் ? நீதி சாஸ் திரத்தின் கருத்து நீதியறியாதது மற்றொன்று மில்லையென்கிறதை உன் வார்த்தை தானே தெரிவிக்கின்றதே. இன்னது தக்கது ; இன்னது தகா தென்றும் சரியாக அறியாதிருக்கின்றவர்கள் உயர்ந்த மனிதர்களானாலும் மிருகமே. மிருகமானாலும் மநுநீதி தவறாமல் நடக்குமாகில் அது தேவர்களுக் குச் சமானமே. நீ காலனுடைய பராக்கிரமத்தையழித்த சிவனைப் பக்தியுடனே பூசைசெய்து, அந்தப் புஜபலத்தால் ஆகாயமல்ல மற்ற நான்கு பூதத்தின் வலு மையையும் பெற்றிருக்கின்றையே ! அநேகம்பேர் தர்மமார்க்கத்தை யடைந்

திருக்கின்றார்கள். அநேகம்பேர் அதை யிழந்திருக்கிறார்கள். தேவர்களிலும் தீமைசெய்து திருத்தப்பட் டிருக்கிறார்கள். இப்படி யிருக்கிறபடியினாலே எந்தக் குலத்திலும் பிறந்த எப்படிப்பட்டவர்களுக்கும் மேன்மையும் கீழ்மையும் அவரவர் செய்யும் வினையினாலே உண்டாகுகின்றதுகள். அந்தத் தன்மையை அறிந்தும் நீ இல்லறத்தைக் கெடுத்து நடந்தாயென்று ஸ்ரீ ராகவர் சொல்ல, அதுகேட்டு வாலியானவன் நல்லதப்படியானாலும் என்னெதிரே வந்து யுத்தஞ் செய்யாமல், வேடர் மிருகங்களை எய்கிறதுபோல மறைந்திருந்து அம்புவிட்டது என்னவென்று கேட்டான். அதற்கு இலட்சுமணர் பிரதியுத்தரஞ் சொல்லுகிறார். முன்பு உன் தம்பியாகிய இந்தச் சுக்ரீவன் வந்து சரணாகதம் பண்ணினான். அப்போது எங்கள் தமையனார் முறைதவறிய உன்னைக்கொன்று இவனை ரட்சிக்கிறேமென்று அபயஸ்தங் கொடுத்தார். ஆகையால் உன்னெதிரே வந்தால் நீயும் பிராணன்மேல் இச்சையை யுடையவனாய்ச் சரணாகதியடைந்தால், அவனுக்குக் கொடுத்த வாக்குத் தவறிப்போகுமென்று மறைந்திருந்து பாணப் பிரயோகஞ் செய்ததென்று சொல்லினர். அவ்வார்த்தையை வானரகுலத்திற்கு இராஜாவாகிய வாலி கேட்டு மெய்தானென்று எண்ணிக் கோபமடங்கித் தர்ம சொரூபனான ஸ்ரீ ராமன் குற்றஞ் செய்யமாட்டானென்று மனம் சம்மதித்து, கேள்விச் செல்வமுண்டாகிய வாலி மெய்யறிவு பிறந்து நமஸ்காரஞ் செய்து சொல்லுகிறான் :—

கலி

தாயென வுயிர்க்கு நல்கித் தருமமுந் தகவுஞ் சால்பும்
நீயென வென்ற நம்பி நெறியினி னோக்கு நேர்மை
காயென நின்ற வெம்பா னவையற வுணர லாமே
தீயன பொறுத்தி யென்றான் சிறியன சிந்தி யாதான்.

இரந்தனன் பின்னு மெந்தை யாவது மெண்ண றேற்றாக்
குரங்கெனக் கருதி நாயேன் கூறிய மனத்துக் கொள்ளேல்
அரக்கரைவெம் பிறவி யன்னைக்க் கருமருந் தனைய வையா
வரந்தரு வள்ளா லொன்று கேளென மறுத்துஞ் சொல்வான்.

வேறு

ஏவுகூர் வாளியா லெய்துகா யடியனேன்
ஆவிபோம் வேலைவா யறிவுதந் தருளினாய்
மூவர்நீ முதல்வனீ மூற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ.

புரமெலா மெரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலா முருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலா முருவியென் னுயிரெலா னுகருநின்
சரமலர்ப் பிரிதிவே றுளதரோ தருமமே.

யாவரு மெவையுமா யிருதவும் பயனுமாய்ப்
பூவுநல் வெறியுமொத் தொருவரும் பொதுமையாய்
ஆவனீ யாவதென் றறிவிலு ரருளினர்
தாவரும் பதமெனக் கருமையோ தனிமையோ.

உண்டெனுந் தருமமே யுருவமா யுடையரிற்
கண்டுகொண் டேனினிக் காணவென் கடவெலு
பண்டொடின் றளவுமே யென்பெரும் பழவினைத்
தண்டமே யடியனேற் குறுபதந் தருவதே.

ஓ தாய்போலச் சகல ஜீவராசிகளுக்கும் கிருபைசெய்து, தர்மமும் தகுதியும் மேன்மையும் நீயேயென்று சொல்லும்படி நிற்கின்ற பரமாத்துமனே! நீ விசேஷமாகக் குறித்துப் பார்க்கும் தர்மத்தை நாய்க்குச் சமானமாகிய எங்களிடத்திலேயா பார்க்கிறது? நான் செய்த தீமைகளைப் பொறுத்தருளவேணும். யாதொன்றுந் தெரியாத குரங்கென்று நினைத்து நாயேன் சொன்ன சொற்களைப்பற்றி உமது திருவுளத்திலே சீற்றங் கொள்ளாதீர். ஓ மிக்க துக்கத்தைத் தருகின்ற என்னுடைய ஜெனனமரண வியாதிகளுக்கு அருமையாகிய ஒரு சஞ்சீவி மருந்துபோலத் தோன்றிய ஐயனே! கேட்ட வரங்களையெல்லாம் கொடுக்கின்ற வள்ளலே! அடியேன் ஒரு விண்ணப்பம் பண்ணிக்கொள்ளுகிறேன். அதைக் கேட்டருளவேண்டும். கூர்மையாகிய அஸ்திரத்தினால் எய்து நாயடியேனுடைய பிராணன் பிரிந்துபோகிற சமயத்திலே மெய்யறிவைக் கொடுத்து ரட்சித்தீர். பிர்மா விஷ்ணு ருத்திரனென்கிற மும்மூர்த்திகளும் நீரே. அம் மூவர்களுக்குள்ளும் முதல்வனு யிருக்கின்றவனும் நீரே. பகையும் நீரே. உறவும் நீரே. மற்றுஞ் சகலமும் நீரே. முப்புரங்களையும் எரித்த சிவன் முதலானவர்களால் நான் பெற்ற வரங்களையெல்லாம் உருவி, என் வலிமை மிகுந்த மார்பையும் உருவி, வந்து உயிரையும் உண்ட உம்முடைய அஸ்திரமேயல்லாமல் தர்மமென்பது வேறுண்டோ? மனிதர்கள் தேவர்கள் முதலாகியதுகளுமாய், கார்கால முதலாகிய அறுவகைப் பருவங்களும் அந்தந்தப் பருவத்திற்கு உரிய பயனுமாய், பூவும் மணமும்போலச் சர்வ பதார்த்தத்தையும் விட்டு நீங்காமற் கலந்து பொதுமையா யிருக்கின்றவனே! உமது கடாட்சத்தினாலே நீர் இன்னரென்றும் உமது தன்மை இதுவென்றும் அறியும்படி எனக்குத் திவ்விய ஞானம் உதயமானபடியினாலே, இனிப் பரமபதங் கிடைப்பது அருமையோ? தர்மஸ்வரூபனாகிய உம்மைப் பிரத்தியட்சமாகக் கண்ட நான், இன்னம் காணவேண்டியது வேறென்ன இருக்கின்றது? ஜென்ம ஜென்மாந்தரங்கள் தொடங்கிவந்த மகத்தாகிய என் கர்மத்திற்குப் பிராயச்சித்தம் என்னவென்றால், அடியேனுக்கு நீர் முத்தி கொடுத்து ரட்சிக்கிறதுதான் என்று ஸ்தோத்திரஞ் செய்து பின்னும் சொல்லுகிறான். உயர்ந்த பெருமைபொருந்திய ஸ்ரீ ராமா! என்னைக் கொல்லும்படி என் தம்பி உம்மைக் கொண்டுவந்து விடுத்து, சிற்றினமாகிய குரங்குகளுடனே கூடியிருந்து ஆலோசித்தும், சம்பாஷித்தும், அரசாண்டுவந்த இந்த வெறுமையாகிய இராச்சியத்தைத் தான் பெற்றுக்கொண்டு எனக்கு மோட்ச இராச்சியத்தைக் கொடுத்தான். இதைப் பார்க்கிலும் அதிகமாகிய உதவி மற்றொன்றுண்டோ? சுவாமி! உம்மிடத்தில்

நான் ஒரு வரங் கேட்கிறேன். அது என்னவென்றால், என் தம்பி குரங்கின் சேஷ்டையாய்க் கள்ளைக் குடித்த மயக்கத்தினால், அறிவு தடுமாறி உமது விஷயத்தில் ஏதாகிலும் அபசாரப்பட்டால், என்மேல் ஏவிய அம்பென்கிற கூற்றுவனை அவன்மேல் ஏவவேண்டாம். இதுவுமல்லாமல் இன்னமொன்று நான் சொல்வதுண்டு; உம்முடைய தம்பிமார்கள் என் தம்பியைப் பார்த்து, தமையனைக் கொல்லுவித்தானென்று இகழ்ச்சி செய்யாமல் காத்துக்கொள்ள வேண்டும். நீர்தானே முன்னமே உன் குறையை முடிக்கிறேனென்று அவனுக்கு அபயஸ்தம் கொடுத்திருந்தீர். மேலும், இது கர்மானுசாரமாகையால் அதைக் கடக்கக்கூடுமா? மாயையையுடைய அந்த ராட்சதனைப் பிடித்துவந்து தேவரீர் முன்னேவிட்டு, என் குரங்கின் தொழிலைக் காண்பிக்கிறதற்குப் பாக்கியஞ் செய்யாமற் போனேன். இனியதை சொல்வதனாற் பிரயோஜனமில்லை ஆயினும் இப்பொழுது நீர் நினைத்ததைச் செய்யவேண்டுமென்றாலும் இந்த அனுமானே செய்கிறதற்கு உரியவன். இவனை தம்முடைய கையிலிருக்கிற வில்லைப்போலவே திருவுள்ளத்திலே வைத்தெண்ணும். என் தம்பியை உம்முடைய தம்பியாகவே நினையும். இவர்களுக்குச் சமானமாகிய துணைவர்கள் உமக்கு வேறில்லை. இவர்களைக்கொண்டு லோகமாதாவாகிய பிரட்டியாரைத் தேடிக்கொள்ளுமென்று ஸ்ரீ ராமருடனே சொல்லிச் சமீபத்தில் பிரலாபித்துக் கொண்டு நிற்கின்ற தன் தம்பியைப் பார்த்து, அப்பா! அங்கலாய்க்காதே வா வென்று கையை நீட்டிச் சேர்த்துத் தழுவிக்கொண்டு, வேதமும் ரிஷியீஸ்வரர்களும் பிர்மாவும் மற்ற ஆகம சாஸ்திரத் துறைகளின் முடிவும் சொல்லுகின்ற அநாதியாகிய வஸ்துவே வில்லை ஏந்திக்கொண்டு ஸ்ரீ ராமனென்கிற நாமந் தரித்துத் தர்மத்தை நிலை நிறுத்துகிறதற்கு வந்து அவதரித்திருக்கின்றது. இதை எவ்வளவாகிலும் சந்தேகமாக நினைக்கப்போகிறாய். நிலைபெற்றிருக்கின்ற மோட்ச ஐசுவரியத்தை விரும்பி அதற்குத் தகுதியாகிய மார்க்கத்தில் நிற்கின்ற ஜீவாத்துமாக்களெல்லாம் இவருடைய நாமத்தை யோசிக்கின்றது. இவரையே தியானிக்கின்றது. இதற்குச் சாட்சி வேண்டுமானால் என்னைக் கொன்ற மகத்துவமே போதும். வேறொரு ஏதுவும் வேண்டுவதில்லை. நாள் தோறும் இவருக்கு அளவில்லாத பொல்லாங்குகளைச் செய்தவர்களும் நற்கதியடைவார்களானால், இவருடைய பாதாம்புயத்தைச் சார்ந்திருந்து ஏவல் செய்கிறவர்கள் பெறும் பதவியானது சொல்லும் தரமாமோ? உனக்கு விதியே உதவி செய்ததினால் அருமை யென்ன? இகபரமிரண்டும் கொண்டாய். இனிச் செய்யத்தக்கது என்னவென்றால், ஸ்ரீ மகா லட்சுமியையும் மறுவையும் மார்பிலுடைய ஸ்ரீ மகாவிஷ்ணுவாகிய இந்த இராமச்சந்திரனது ஏவலைச் சிரசாகவகித்துக்கொண்டு, மனதை ஒருவழியிலே நிறுத்தி, மூன்று லோகத்தாரிலும் மிகவும் உயர்ந்திருக்கக் கடவாய். மதத்த குரங்கின் புத்தியைக் காட்டாமல் அதை நிவர்த்திசெய்து, செய்த நன்றியை நினைத்து இவருக்கு ஆபத்து வந்தபோது உன்னுயிரையாவது கொடுத்து சகலருக்கும் மோட்சபதத்தைத் தருகின்ற இந்த ராகவர் சொன்னதுகளையெல்லாம் தடுக்காமற் செய்து, நெடுங்காலமளவும் ஒழியாத ஜெனனத்தை ஒழித்துவிடு. இராஜரீகத்தின் பெருக்கத்தினால் களிப்படைந்து மறந்து இகழ்ச்சி செய்யாமல் இவருடைய திருவடித் தாமரையை நீங்காது வாழக்கடவாய். ராஜாக்களும் எரிகின்ற நெருப்பும் சரி

யென்று நினை. அடிமைகள் செய்த குற்றம் அற்பமானலும் பொறுப்பார்க ளென்று நினைக்கவேண்டாம். அகலாமலும் அணுகாமலுமிருந்து தீக் காய் கின்றவர்களை போலப் பக்குவமாக நடந்துகொள்ளென்று இவ்விதமாகிய உறுதிகளை யெல்லாங்கொண்டு தம்பிக்குப் புத்தி சொல்லினன். பிறகு ஸ்ரீ ராமரைப் பார்த்து, ஐயா தாசரதீ! இந்தச் சுக்ரீவனும், இவன் சுற்றத் தாரும் இன்றுமுதல் உம்முடைய அடைக்கலமென்று இவனைச் சுவாமிகையில் ஒப்புவித்துத் தன் கையைச் சிரசின்மேற்கூப்பி அஞ்சலிசெய்து, உடனே தன் தம்பி முகத்தைப் பார்த்து, என் புத்திரனுகிய அங்கதனைச் சீக்கிரத்தில் அழைப்பியென்று சொல்ல, அவனிருக்குமிடத்தில் சுக்ரீவன் ஒருவானரப் படைத்தலைவனை அனுப்பினன். அந்தக்ஷணமே வாலி குமாரனனவன் பால சந்திரனைப்போல வந்தான். துக்கப்படுகிறவர்களைக் கருத்திலும் நினைத்தறி யாத அந்த அங்கதன் வந்து பர்வதத்தின்மேல் புஷ்ப சயனத்தில் சயனிக்கா மல் ரத்த சமுத்திரத்திலே ஆபத்துடனே சாய்ந்து கிடக்கின்ற தகப்பனைக் கண் டான். காணவே, கண்கள் கானுறுபோல உதிரத்தையும் ஜலத்தையும் கக்க, தன் மண்டலத்துடனே பூமியில் விழுந்து கிடக்கின்ற சந்திரன்மேல் ஆகாசத்தி லிருந்து ஒரு நட்சத்திரம் விழுந்ததுபோல மண்ணின்மேற் புரள்கின்ற தந் தையின்மேல் விழுந்து பிரலாபிக்கத் தொடங்கினன்.

கவி

எந்தையே யெந்தை யேயிவ் வெழுதிரை வளாகத் தியார்க்கும்
சிந்தையாற் செய்கை யாலோர் தீவினை செய்திலா தாய்
நொந்தனை யதுதானிற்க நின்முக நோக்கிக் கூற்றம்
வந்ததே யன்றே வஞ்சா தாரதன் வலியைத் தீர்ப்பார்.

தறையடித் ததுபோற் றீராத் தசையவித் திசைக டாங்கும்
கறையடிக் கழிவு செய்த கண்டக னெஞ்ச முன்றன்
நிறையடிக் கோல வாலி னிலைமையை யுன்னுந் தோறும்
பறையடிக் கின்ற வந்தப் பயமறப் பறந்த வன்றே.

குலவரை நேமிக் குன்ற மென்றுவா னுயர்ந்த கோட்டின்
தலைகளு நின்பொற் றூளிற் றழும்பினிற் றவிர்ந்த வன்றே
மலைகொளு மரவு மற்று மதியமும் பலவுந் தாங்கி
அலைகடல் கடைய வேண்டி னரினிக் கடைவ தையா.

பஞ்சின்மெல் லடியாள் பாகன் பாதக மல்ல யாவும்
அஞ்சலித் தறியாச் செங்கை யாணையா யமரர் யாரும்
எஞ்சல ரிருந்தா ருன்னு லின்னமு தீந்த நீயோ
தஞ்சினை வள்ளி யோர்க ணின்னின்யார் சொல்லற் பாலார்.

ஐயனே! என்னையனே! நீர் இந்த எழுகடல் சூழ்ந்த உலகத்தில் ஒருவருக்கும் ஒரு தீங்காகிலும் செய்ததுமில்லை. அதை மனதில் நினைத்தது மில்லை. அப்படியிருக்க என்ன காரணத்தினால் இந்த ஆபத்தை அடைந்தீர். அதிருக்கட்டும், கூற்றுவன் உம்முடைய முகத்தைப் பார்த்துப் பயப்படாமல்

வந்தானல்லவா? அவனுடைய ஆண்மையை இனி யார்தான் அடக்குவார்கள்? திக்குகளைத் தாங்குகின்ற அஷ்டகஜங்களை ஜெயித்து அதுகளின் தந்தங்களை முறித்த ராவணனுடைய மனமானது உம்முடைய வாலை நினைக்கும்போதெல்லாம் திடுக்கிடச் செய்து கொண்டிருந்த அந்தப் பயமும் பறந்ததே! தேவர்கள் மந்தரகிரியையும், வாசுகியென்னும் பாம்பையும், சந்திரனையும், மற்றதுகளையும் தாங்கி, இன்னம் ஒருதரம் சமுத்திரத்தைக் கடைந்து அமிர்தம் கொடுக்க வேண்டுமென்று கேட்டால் யார் கடைந்து கொடுப்பார்கள்? பார்வதி சமேதனுகிய சிவனுடைய உபயபாதத்தை யல்லாமல், மற்றொன்றையும் அஞ்சலி செய்தறியாத கையில் ஆக்யா சக்கரத்தையுடைய உம்மால் தேவர்களெல்லாம் இறவாமலிருக்க, அவர்களுக்கு அமிர்தம் கடைந்துகொடுத்த நீரோ இறந்துபோனீர்? உமக்குச் சமானமாகச் சொல்லத்தக்கவர்கள் யாரிருக்கிறார்களென்று பலபல விதமாகச் சொல்லித் துக்கப்பட்டான். இப்படி துக்கப்படுகின்ற புத்திரனைப் பார்த்து, வாலி சரீரம் வெதும்பி, அக்கினியைச் சேர்ந்த மெழுகுபோல மனமுருகி, அடா அப்பனே! என் கண்மணியாகிய அங்கதா! இனி நீ துயரப்படாதே என்று சொல்லி அவனைத் தன் மார்பு இறுகத் தழுவிக்கொண்டு, லோகநாயகராகிய ஸ்ரீ ராமர் செய்த நல்வினைப் பயன் இது. பிறப்பும் இறப்பும் நன்றாக நிச்சயித்துப் பார்த்தால், திரிலோகத்திலு மிருக்கின்ற சகல ஜீவகோடிகளுக்கும் ஆதியிலேதானே ஏற்பாடாயிருக்கின்றதுகள். பூர்வம் நான் செய்த தபோபலத்தினால் எனக்கு இப்படிப்பட்ட நன்மரணம் கிடைத்தது. சர்வசாட்சியான இந்த ஸ்ரீ ராகவர் எதிரே வந்து எனக்கு மோட்சம் கொடுத்தார். நீ பால்ய குணத்தைவிட்டுப் பாரமார்த்திகத்தை வகித்து, என் வார்த்தையை உறுதியாகப் பற்றுக. தனக்கு மேலாகிய வஸ்து வேறொன்றுமில்லாத உண்மைப் பொருளா யிருக்கின்ற ஒருவரே வில்லைக் கையிலே தாங்கிக்கொண்டு திருவடி நிலத்திலே தோயும்படி மானிட வடிவங் கொண்டு வந்து, அனைவர் கண்ணுக்கும் எளிதாகப் பிரசன்னமானர். மயக்கத்தைத் தருகின்ற பிறவிப்பிணிக்கு மருந்தும் இவரே. ஆகையால் என் புத்திரசிகாமணியான அங்கதா! நீ இவரையே சேவிக்கக் கடவாய். என் பிராணனை வதை செய்தாரென்று கொஞ்சமாகிலும் மனதிலெண்ணுமல், உன்னுயிருக்கு உறுதியாகிய தர்மநெறியிலே நடந்துகொள். இவருக்கு யுத்தம் நேரிட்டதே யாமாகில் நீயும் உபபலமாகப் போ. இவர் பெரும்பாலும் தர்மாத்துமாக்களுக்கே யுதவி செய்வார். இவருடைய பாதாரவிந்தத்தைச் சிரசிலே தாங்கிக்கொண்டு வாழ்ந்திருவென்று இவ்விதமாகிய உறுதிகளெல்லாம் சொல்லி, தன்னுடைய இரண்டு கைகளாலும் குமாரனை அணைத்துக்கொண்டு, பர்வதத்தைப் பார்க்கிலும் மிகவும் உயர்ந்த பராக்கிரம முண்டாகிய தோள்களையுடைய வானராதிபதியான வாலி ஜெகத்ரட்சகராகிய ஸ்ரீ ராமரைப் பார்த்துச் சொல்லுகிறான். ஓ பொய்மையானது குடிகொண்டிருக்கின்ற மனமுடையவர்களால் அறியப்படாத பரிசுத்தனே! இந்த அங்கத குமாரன் கறுத்த நிறத்தையுடைய இராட்சதர்களென்னும் பஞ்சைத் தகிக்கின்ற தீக்குச் சமானமாகிய புஜபலத்தை யுடையவன். குற்றமற்ற நல்ல செய்கையு முள்ளவன். இவன் உம்முடைய அடைக்கலமென்று காட்டிக் கொடுத்தான். அப்போது அங்கதன் சுவாமி திருவடியைச் சேவித்துக்கொண்டான். உடனே

புண்டரீகாக்ஷனாகிய ஸ்ரீ ராகவர், அவனைச் சமீபத்தில் வாவென்று அழைத்துத் தம்முடைய உடைவாளை அவன் கையிலே கொடுத்து, நீ இதைத் தாங்கிக் கொண்டிருவென்று மிகுந்த அன்புடனே அருளிச்செய்தார். அப்படி யவர் சொல்லவே, சப்த லோகத்தாரும் இந்த அங்கதகுமாரன் லோகபிராட்டியி னுடைய கிருபைக்குப் பாத்திரமானது என்ன ஆச்சரியமென்று ஸ்துதி செய் தார்கள். பின்பு வாலி வலித்துப் பிடித்திருந்த ராமபாணத்தைக் கைநெகிழ விட அந்தப் பாணமானது அவனுடைய மார்பைத் துளைத்துக்கொண்டு உயர எழுந்துபோய் சுத்தோதக சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்து தேவர்கள் புஷ்ப மாரி பொழிய ஸ்ரீ ராமருடைய பின்பக்கத்தில் நீங்காதிருக்கின்ற அம்பறாத் தூணியில் வந்து சேர்ந்தது. இந்திர குமாரனாகிய வாலி இறந்து தேவர்க ளுடைய லோகங்களை யெல்லாந் தாண்டி அப்புறத்துள்ள பரமபதம் போய்ச் சேர்ந்தான். அந்த வாலிக்கு எவர்களுக்குங் கிடையாத பரமபதங் கொடுத் தருளின ஸ்ரீ ராமச்சந்திரன் சுக்ரீவன் கையைப் பிடித்துக்கொண்டு அங்கத னும் சமீபத்திலிருக்க அவ்விடத்தில் ஒரு பக்கத்தி லிருந்தார். அப்போது, தாரை இச்செய்தி கேட்டுப் பிரலாபித்துக்கொண்டு வந்து வாலியின்மேல் விழுந்து, அவனுடைய ரத்தமானது ஸ்தனங்களின்மேல் குங்குமம் பூசினது போலப்படிய, தலைமயிருஞ் சிவக்கக் கணவன் மார்பிலே புரண்டாள். அது எப்படி யிருந்ததென்றால், செவ்வானத்திலே மின்னற்கொடி பிரகாசிக்கிறது போலிருந்தது. பின்னும் வேணுக் குழலும் யாழும் வீணையுமென்கின்ற இதுக ளெல்லாம் நாணிப்போக ஏங்கி இரங்கி விம்மி, இரண்டு கைகளையுங் கூப்பித் தலைமயிர் அவிழ்ந்து விழுந்து சோர்ந்து சரியத் துக்கிக்கின்றாள்.

கவி

வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்
கரைசே ராவிடர் வேலை காண்கலேன்
உரைசே ராருயி ரேயென் னுள்ளமே
அரைசே யானிது காண வஞ்சினேன்.

துயரா லேதொலை யாத வென்னையும்
பயிரா யோபகை யாத பண்பிலேய்
செயர்தீ ராய்வினி யான தெய்வமே
உயிர்போ னலுட லாரு மூய்வரோ.

நறிதா நல்லமிர் தண்ண நல்கலின்
பிறியா வின்னுயிர் பெற்ற பெற்றிதாம்
அறியா ரோநம ஞரதன் றெனின்
சிறியா ரோவுப காரஞ் சிந்தியார்.

அணங்காற் பாகனை யாசை தோறுமுற்
றணங்கா வொண்மலர் கொண்டு னன்பொடும்
இணங்காக் காலமி ரண்டொடொன் றினும்
வணங்கா தித்தலை வைக வல்லையோ.

வரையார் தோள்பொடி யாட வைகுவாய்
தரைமே லாயுரு தன்மை யீதெனக்
கரையா தேனிடு பூசல் கண்டுமொன்
றுரையா யென்வயி னூணம் யாவதோ.

நய்யா நின்றனெ னுனிருந் திங்ஙண்
மெய்வா னோர்திரு நாடு மேவினுய்
அய்யர் நீயென தாவி யென்பது
பொய்யோ பொய்யுரை யாத புண்ணியா.

செருவார் தோளநின் சிந்தை யுளனெனின்
மருவார் வெஞ்சர மெனையும் வௌவுமால்
ஒருவே னுள்ளுளே யாகி னுய்தியால்
இருவே முள்ளிரு வேமி ருந்திலேம்.

எந்தாய்நீ யமிழ் தீய யாமெலாம்
உய்ந்தே மென்றுப காரம் முன்னுவார்
நந்தா காண்மலர் சிந்தி நண்பொடு
வந்தா ரோவெதிர் வானு னோரெலாம்.

ஓயா வாளி யொளித்து நின்றெய்வான்
வையா வந்தவி ராம னென்றுளான்
வாயா லேயின னென்னின் வாழ்வெலாம்
ஈயாயோ வமிழ் தேயு மீகுவாய்.

சொற்றேன் முந்துற வன்ன சொற்கொளாய்
அற்ரு னன்னது செய்க லானெனை
உற்ரு யும்பியை யூழி காணுநீ
இற்ரு யானுனை யென்று காண்கெனே.

நீரு மேருவு நீசெ ருக்கினுல்
மாரூர் வாளியுன் மார்பை யீர்வதோ
தேறேன் யானிது தேவர் மாயமோ
வேரூர் வாலிகொ லாம்வி ளித்துளான்.

தகைநேர் வண்புகழ் நின்று தம்பியார்
பகைநேர் வாருள ரான பண்பினுல்
உகநேர் சிந்தியு லர்ந்தழிந்ததால்
மகனே கண்டிலே யோரும் வாழ்வெலாம்.

அருமைத் தற்றம கற்றும் வில்லியார்
ஒருமைத் தற்று மடாத தன்னினுர்
தருமம் பற்றிய தக்க வர்க்கெலாம்
கருமங் கட்டுளே யென்றல் கட்டதோ.

ஓ என்னுயிரே! என்னுள்ளமே! என்னரசே! மலைக்குச் சமானமாகிய உம்முடைய தோளினிடத்தில் எந்நாளும் வாழ்ந்திருந்த நான், இப்பொழுது துயரக்கடலில் விழுந்து கரைகாணுமலிருக்கிறதுமல்லாமல் உனக்குச் சம்பவித்த அபாயத்தைப் பார்க்கவும் பயப்படுகிறேன். ஓ பகையில்லாத அன்பாளரே! துக்கத்தினுலே இற்வாமலிருக்கின்ற என்னையும் மறக்கமாட்டீரே. ஆ விதியே! உயிர்போனுல் உடல் மாத்திரம் பிழைத்திருக்குமா? என்னையுங் கொன்று இந்தக் குற்றத்தையும் தீர்த்துவிடு, என் நாயகரானவர் திவ்விய பரிமளத்தை யுடைத்தாகிய நல்ல அமிர்தத்தைத் தேவர்களுண்ணும்படி கொடுத்த படியினுலே, அவர்கள் இறவாமல் சாசுவதமாயிருக்கின்ற உயிரை அடைந்த தன்மையை அந்தத் தேவர்களில் ஒருவராகிய நமனுர் அறியாரோ? அறிந்தாராகில் உபகாரத்தை நினையாமல் இருப்பாரோ? அல்லது அவரென்ன சிறியவரோ? ராஜாவே? பார்வதி பாகனைத் திக்குகள்தோறும் போய்ப் புதிதாகிய மலரைக்கொண்டு உள்ளன்புடனே திரிகாலமும் பூஜித்து வணங்குகின்ற நீர், இந்நேரவரையில் சும்மா விருப்பீரோ? புஷ்பசயனத்தில் சயனிக்கின்ற நீர் மண்ணின்மேற் கிடக்கின்றதைக் கண்டு மனங் கரையாத நான் அழுகுரலைக் கேட்டும் வாய் திறந்து ஒரு உத்தரமும் சொல்லாமலிருக்கின்றீரே? என்னிடத்தில் என்ன குற்றந்தான் நேரிட்டதோ? நான் இப்படியிருந்து வருத்தப்பட நீர் சொர்க்கத்திற்போய் ரம்பா ஸ்திரீகளுடைய ஸ்தனத்தைத் தழுவுகின்றீரே? தேவரீர் என் பிராணனென்பதும் பொய்யோ? ஓ பொய் பேசாத புண்ணிய புருஷரே! மற்போர் செய்கின்ற புஜபல பராக்கிரமத்தை யுடையவரே! உம்முடைய மனதில் அடியேனிருந்தாலும் சத்துருவிட்ட பாணமானது உம்மைக் கொன்றதுபோல என்னையும் கொல்லுமே. அல்லது என் மனதில் நீரிருந்தாலும் அந்தப் பாணத்திற்குத் தப்பி என்னைப்போலப் பிழைத்திருப்பீரே. நாம் இருவரும் ஒருவர் மனதிலொருவராய் இராமற் போனுமே. சொர்க்கத்தில் தேவர்கள் எல்லாம் உம்மைக்கண்டு, எங்களையனே! நீர் அமிர்தங்கடைந்து கொடுக்க அதையுண்டு நாங்களெல்லாம் பிழைத்திருக்கின்றுமென்று சொல்லி, நன்றி மறவாதவர்களாகி, புஷ்பம் சந்தனம் முதலானதுகளை ஏந்திவந்து இஷ்டத்துடனே உம்மை எதிர்கொண்டு அழைத்துப் போனர்களோ? வேகமுண்டாகிய பாணத்தை ஒளித்திருந்து எய்யும்படி உடன்பட்டுவந்த ஸ்ரீ ராமரென்பவர், வாயினுல் ஒருசொல் சொல்வாராகில் தம்பியாருக்கு உம்முடைய வாழ்வெல்லாம் கொடுக்கமாட்டீரோ? அந்நியர்களாகிய தேவர்களுக்கும் அமிர்தத்தைக் கொடுத்தீரே! நீர் புறப்படும்பொழுதே அப்படியும் நான் சொன்னேனே அந்தச் சொல்லைக் கேளாமல், ஸ்ரீ ராமர் நல்லவராகையால் அதர்மஞ் செய்ய மாட்டாரென்று சொல்லி, ஊழிகால பரியந்தம் இறவாதிருக்கத்தக்க நீர் தம்பியைக் கொல்லவந்து இறந்து போனீரே? இனி உம்முடைய திருமுகத்தை நான் என்றைக்குக் காண்பேன்? நீர் நெருக்கினுல் மகமேருவும் நீறாய்ப்போமே. அப்படிப்பட்ட உம்முடைய மார்பைச் சத்துருவின் பாணம் துளைக்குமா? நானிதை அறியமாட்டேன். தேவர்கள் செய்த மாயந்தானே? இப்பொழுது இறந்த நீர் வேறொரு வாலிதானே? அப்பா மகனே! அங்கதா! நாள் தோறும் உங்கள் பிதாவின் தம்பியார் பெருமைபொருந்திய கீர்த்தியை வகித்திருந்து இன்று பகையாயெதிர்த்ததனுல் உங்கள் பிதா

மாண்டுபோக நம்முடைய வாழ்வெல்லாம் சிந்தி உலர்ந்து அழிந்துபோய் விட்டது பார்த்தையா? அருமருந்துபோல அனைவருடைய ஆபத்தையும் நீக்குகின்ற ஸ்ரீராமர் என்னுடைய ஒரு புத்திரனுக்கு மாத்திரம் தகாத நினைவு நினைத்தார் போலும். தர்மத்தைக் கைப்பற்றிய பெரியோர்களுக்கெல்லாம் நல்லொழுக்கம் பிரமாண மென்பதும் போய்விட்டதோவென்று இதுகளைச் சொல்லி அழுது, துன்பம் அதிகரிக்கப்பட்டவளாகி, ஸ்மரணை யில்லாமல் மூர்ச்சித்து விழுந்தாள். இவ்வண்ணம் இருந்ததை அநுமான் பார்த்துச் சுக்ரீவனுடைய ஆக்ஞையினாலே அங்கு வந்திருந்த தாரைக்குத் தேறுதலைச் சொல்லித் தேற்றி, வானர ஸ்திரீகளுடனே கூட்டி அவள் முன்பு வாழ்ந்திருந்த மாளிகையிற் போய்ச் சேரும்படி அனுப்பிவிட்டு, வாலிக்கு நடக்கவேண்டிய கர்மாதிகளை யெல்லாம் அங்கத குமாரனைக்கொண்டு நடப்பித்து, ஸ்ரீ ராமருடனே வந்து சொன்னார். அத் தருணத்தில், இருளானது வேரற்றுப்போம்படி கிரணங்களை வீசுகின்ற சூரியன் மேற்குத் திசையிலுள்ள அஸ்தமனகிரிக்குப்போய்ச் சேர்ந்தான். அந்தச் சூரிய பிம்பமானது வாலி முகத்தைப்போலச் சிவந்தது. அப்படி சூரியன் மறைந்து ராத்திரி காலமாகவே ரகுநந்தனர் சீதையை நினைத்து, மனது இளைத்துத் துயரப்பட்டு, அந்த ராத்திரியென்கிற சமுத்திரத்தைக் கடந்தார். சூரியன் தன்னுடைய குமாரனாகிய சுக்ரீவன் மகுடந் தாங்கும்படி யிருப்பதனால் சந்தோஷத்துடனே அதிசீக்கிரமாய் வந்து, லட்சுமி வாசஞ்செய்கின்ற தாமரையென்னும் வீடுகளின் இதழ்களென்னும் கதவுகளைத் தன் கிரணமென்னும் கைகளால் திறந்துவிட்டான்.

வாலி வதைப் படலம் - முற்றிற்று.

அரசியற் படலம்

அந்தச் சமயத்திலே ஸ்ரீ ராமர் நல்ல விவேகத்தையுடைய தம்பியை நோக்கி, அப்பா! நீ போய்ச் சுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகத்துக்கேற்ற பிரயத்தினங்களைச் செய்து, உன் கையினாலே மகுடஞ் சூட்டிவாவென்று ஆக்கியாபித்தார். அப்படியே செய்கிறேனென்று லட்சுமணர் அநுமானை யழைத்துப் பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளை யெல்லாம் சேகரிக்கச் சொல்லிக் கட்டளையிட்டார். அந்த அநுமானவர் தீர்த்த முதலானதுகளும், கிரீடம் - குண்டலம் - புஜகிருதி - வாகுவலயம் - மதாணி முதலான ஆபரணாதிகளும், மற்றும், வேண்டிய சகல பதார்த்தங்களும் கொண்டுவந்தார். லட்சுமணர் போயிருந்து, சாஸ்திரவிதிப்படி முன்பு நடக்கவேண்டியதுகள் எல்லாம் நடப்பித்து, பின்பு பிராமணர்களெல்லாம் ஆசீர்வாதஞ் செய்யத் தேவர்கள் புஷ்பமாரி பொழியப் பெரியோர்களெல்லாம் கண்களிக்கச் சுக்ரீவனுக்குத் திருமுடி சூட்டினார். அந்தப்படி மகா சம்பிரமத்துடனே பட்டாபிஷேகபரனாய்ச் சுக்ரீவன் வந்து ஸ்ரீ ராமரைச் சேவித்துக்கொண்டான். அவர் அன்புடனே மார்பில் தழுவிக்கொண்டு இருக்கும்படி ஆக்யாபித்து ஒரு வார்த்தை சொல்லுகிறார். அப்பா சுக்ரீவா! நீ இவ்விடத்திலிருந்து உன் பட்டணத்துக்குப்போய்

படம் நெ. 10.



சுக்கிரீவன் பட்டாபிஷேகம்.

ராஜரீகத்தைக் குறித்த காரியங்கள் ஏதேது விசாரிக்க வேணுமோ அதுகளெ யெல்லாம் பரிஷ்காரமாக ஆலோசித்து விசாரித்து, விதிப்படி செய்து, இறந்து போன உன் தமையன் குமாரனுடனேகூடச் சுகமாய் வாழ்ந்திரு, அப்படி வாழுமிடத்தில் சத்தியசந்தரும், விவேகிகளுமாகிய மந்திரிமார்களுடனும், சேனு பதிகளுடனும் சேர்ந்து மனங்கலந்து பேசி, குற்றமற்ற செய்கையுடையவனாகி, சகலரையும் நீங்காமலும் நெருங்காமலும் இருந்து தேவர்களைப் போலத் துல் லியமாக நடந்துகொள். உலகமானது புகையுள்ள இடத்தில் நெருப்புண் டென்று நினைக்கத் தக்கதாகையால், இந்த அனுமானப் பிரமாணத்திற்கு ஒத்தபடி உன்னிடத்தில் கிருபை யுண்டென்பது தெரிய, பகையாளிகளுடனும் கடூரமானவார்த்தை சொல்லாமல் நகை முகத்துடனே இனிய வசனங்களைச் சொல்லும். பெரியோர்கள் அனுசரிக்கின்ற நற்செய்கைகளையுந் தழுவிக்கொள். தேவர்களும் மதிமயக்கங் கொள்ளத்தக்க அரசாட்சியாகிய சம்பத்தை நீ பெற் றிருக்கின்றாய். அது மகா பிரயாசமானது, எளிதாக நினைக்கக்கூடாது. செவ் வையாய் ஆலோசித்துப்பார். முனீஸ்வரர்களும், திரிலோகத்திலுமுள்ளவர் களும், சினேகிதர் பகையாளர் அந்நிய ரென்னும் மூன்றுவகைப்பட் டிருப்பார் கள். அவர்களில் ஒருவரிடத்திலும் தீங்கு நினையாமல், செய்யவேண்டியதுகளைச் செய்வதையும் நிந்திக்கும்படி அடாத காரணங்கள் வந்தபோது நல்ல வசனங் களையே சொல்வதையும், உண்மை பேசுதலையும் தவறாமல் பாதுகாக்கவேண்டும். உருவத்தாற் சிறியவர்களென்று எண்ணி எவர்களுக்கும் துன்பத்தைச் செய் யாதே. நான் பால்யத்திலே ஒரு துஷ்கிர்த்தியத்தைச் செய்து, அறிவு மிகுந்து வடிவு சிறுத்த கூனியினாலே அதிசீக்கிரத்தில் சகல சாம்பிராஜ்யத்தையும் இழ ந்து துக்கத்துக்காளானேன். ஸ்திரீகளாலே புருஷர்களுக்கு மரணமுண்டாம் என்பதை உனது தமையனாகிய வாலியினிடத்திற் பார்த்துக்கொள். அல்லாமலும் நாங்களும் ஸ்திரீகளாலேதானே இத்தனை அல்லல் அனுபவிக்கின்றோம் இதைப் பார்க்கிலும் சாட்சி வேறென்ன வேண்டியது? நம்முடைய ராஜா பெற்றதா யினும் அதிக அன்புள்ளவனென்று பிரஜைகளெல்லாம் சொல்லும்படி காருண்யத்துடனே சம்ரக்ஷணை செய். குற்றஞ் செய்தவர்களைத் தர்மந் தவறா மல் தண்டனைசெய். இறக்கிறதும் பிறக்கிறதும் ஆலோசிக்குமிடத்தில், சகல பிராணிகளுக்கும் செய்த வினையினாலே வருகின்றதுகள் அல்லவோ? பிர்மா வுக்கும் அவன் செய்த நல்வினையின் முடிவே அவனுடைய ஆயுசின் முடிவா கும். சாஸ்திராதியர்கள் செல்வமும் கேடும் அவரவர் செய்த புண்ணிய பாவங் களினாலேயே உண்டாகின்றதுகளென்று சொல்வார்கள். ஆகையால், பாக்கி யத்தைக் கொடுக்கின்ற புண்ணியத்தை யல்லாமல் நிர்ப்பாக்கியத்தைத் தரு கின்ற பாவத்தைக் கைப்பற்றலாமா? இப்படியிருப்பதனால் இதுகளையெல்லாம் கிரமமாகத் தேர்ந்து, யுக்தா யுக்தம் பார்த்து ராஜரீகம் செய்துகொண்டிருந்து, வருகின்ற மழைக்காலம் கழிந்தவுடன் உன் சேனாசமுத்திரத்தைக் கூட்டிக் கொண்டு நம்மிடத்தில் வந்துசேரென்று மனுகுலத்தில் அவதரித்த ஸ்ரீ ராமர் சொன்னார். அந்த நீதி வார்த்தைகளையெல்லாம் கேட்டு மிகுந்த அன்புடனே சுக்ரீவன் சொல்லுகிறான். சுவாமி! நாங்களிருக்கின்ற இடம் குரங்குகளிருக் கின்ற இடமென்கிற சொற்குற்றம் ஒன்றே யல்லாமல், அது சுவர்க்க லோகத் திற்கும் ராஜதானியைப்போல அதிக சிறப்பும் மனோகரமும் உண்டாகத்தக்

கது. அதிலே தாங்கள் சிலநாள் யெழுந்தருளி யிருக்கவும் நாங்கள் தங்கள் கைங்கரியத்தைச் செய்யவும் வேணும். தங்களைப் பிரிந்திருந்து என்ன பாக்கியம் அனுபவித்தாலும், அது வறுமையை அனுபவிக்கிறதற்குச் சமானமேயல்லாமல் வேறொன்றல்ல. தங்கள் திருத்தேவியாராகிய சீதாபிராட்டியைத் தேடுகிறதற்குச் சவுக்யமான காலபரியந்தம் தேவரீர் இவ்விடத்தில்தானே எழுந்தருளி யிருக்கவேணுமையா வென்று சாஷ்டாங்கமாகச் சேவித்தான். அந்த வசனத்தைக் கேட்டு ஸ்ரீ ராமர் புன்சிரிப்பாக நகைத்து, தம்பி! ராஜாக்களிருக்கின்ற அரண்மனையில் என்னைப்போலொத்த விரதிகளிருக்கக் கூடாது. அப்படி யல்லவென்று வந்திருந்தாலும், உனக்கு எங்களை உபசரிக்கிறதற்கே பொழுது சரியாய்ப்போம். அப்புறம் ராஜரீகம் செய்கிறதற்குச் சாவகாசப்படாது, அதுவுமல்லாமல் பதினாலு வருஷம் ஆரணியவாசம் செய்ய வந்த நான் வனத்திலிருக்கலாமே யல்லாமல் ராஜாக்களிருக்கின்ற நகரத்திலிருக்கக்கூடாது. ஆகிலும் சீதையைப் பிரிந்தும், நான் வாசயோக்கியமும் சௌக்கியமும் தேடவேணுமா? அது நீ அறியாயோ? தேவியை ராட்சதன் சிறையிலே கொண்டுபோய் வைத்திருக்க, சிநேகிதர்களிடத்திலிருந்து இராமன் சௌக்கியம் அனுபவித்தானென்கிற வார்த்தை யுண்டானால் அந்த அபவாதம் மூன்றுலோகமும் அழிகின்ற ஊழிகாலத்திலும் தீருமா? நானிப்போது இல்லறச் செய்கைக்கு அபாத்திரனானாலும், வில்லைக்கொண்டு யுத்தஞ் செய்கின்ற வீர தர்மத்தைக் கைவிட்டிருப்பதற்கு வெட்கப்படுகிறேன். சத்தியத்தைப் பாதுகாக்கிறதுமல்லாமல் அதற்கு ஒப்பாகிய சில தர்மத்தையுஞ் செய்து, என்னைச் சூழ்ந்த தீமைகளெல்லாம் நிவாரணமாகும்படி துறவறத்திற்குப் பழுதுவராமல் தவஞ் செய்துகொண்டிருக்கிறேன். நீ ராஜரீகத்திற்குத் தகுதியானதுகளையெல்லாஞ்செய்து நடப்பித்திருந்து, உன்னுடைய வானர சைனியத்தை யெல்லாம் சேர்த்துக்கொண்டு இந்த மாரிக்காலம் நாலுமாதமும் போனவுடனே வந்துசேர். இதைக் குறித்து உன்னை வேண்டிக் கொள்ளுகிறேனென்று சொன்னார். சொல்லுதற்கு எளிமையாயும் அருமையாயுமிருக்கின்ற ஸ்ரீ ராமர் சொல்லவே மறுத்து ஒன்றும் பேசாமல் குறிப்பறிந்து கொண்டவனாகி, கண்களில் கலகலவென்று நீர்பெருகச் சகிக்கமாட்டாத துயரத்துடனே வானராதிபதியான சுக்ரீவன் சுவாமியைச் சேவித்துக்கொண்டு போனான். பின்பு தம்மைச் சேவித்துக்கொண்ட அங்கதனை ஸ்ரீ ராமர் கிருபையுடனே பார்த்து, ஐயா அங்கதா! நீ புத்திசாலி. உனக்குச் சொல்லவேண்டியதில்லை. சுக்ரீவனைச் சிறிய தகப்பனென்று எண்ணாமல் உன்னுடைய சாட்சாத் பிதாவாகிய வாலியாகவே எண்ணி அன்புடனே அவனிடத்தில் அநுகூலமாகவேயிரு. போய்வாவென் றருளிச்செய்தார். அந்த வார்த்தையைச் சிரசாக வகித்துக்கொண்டு அவனும் போனான். அப்பால் அஞ்சலியஸ்தராய் நிற்கின்ற அநுமானைப் பார்த்து, ஓ அநுமானே! நீயுங் கூடப்போய்ச் சுக்ரீவ மகாராஜன் செய்யும் அரசாட்சிக்கு ஏற்ற காரியங்க ளென்னென்ன உண்டோ அதுகளையெல்லாம் ஜாக்கிரதையாகப் பாரென்று ஆக்ஞாபித்தார். அந்த வார்த்தையைக் கேட்டு அநுமானவர் கண்களில் ஜலந் ததும்பச் சொல்லுகிறார்: சுவாமி! நாயேன் இவ்விடத்திலிருந்து தேவரீர் ஆக்ஞாபித்த அடிமைத்தொழில்களை அடியேனால் இயன்றமாத்திரம் செய்துகொண் டிருக்கிறேனென்று

சொல்லி மகத்தாகிய பக்தியுடனே சாஷ்டாங்கமாகச் சேவித்தார். அப்போது, ஸ்ரீ ராமர் ஒரு வார்த்தை சொல்லுகிறார்: கேளாய் அநுமானே! ஒருவன் அரசாண்டுக்கொண்டிருந்த ராஜ்ஜியத்தை அபேட்சித்து அவனை ஜெயித்து மற்றொருவன் அதற்கு அதிபதியானன். ஆகையால், எத்தனையோ பேர் நல்லவரு மிருப்பார்கள். எத்தனையோ பேர் கெட்டவரு மிருப்பார்கள். அது காரியங்களெல்லாம் உன்னைப்போல் சாந்தமும் தத்துவக்கியான முடையவர்கள் இருந்து செம்மைப்படுத்தினு லல்லவோ செம்மைப்படும். மந்திரிகளில்லாத ராஜரீகம் நிலைநிற்குமா? அந்தக் காரியத்தை நிர்வகிக்கிறதற்கும், அப்பால் மாரிக்காலம் போனவுடனே நம்முடைய காரியத்தை அனுகூலம் செய்விக்கிறதற்கும் உன்னையொத்த பேரறிவாளர் வேறொருவருமில்லை. ஆகையால் நீ அவ்விடத்திலே போயிருந்து காரியம் பாரென்று உன்னை நானே ஆக்கியாபிக்கிறேனென்று ஸ்ரீ ராமர் சொல்ல, தேவரீர் ஆக்கியாபித்தபடி நடந்துகொள்ளுகிறேனென்று சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டு அனுமானென்பவரும் போனார். பின்பு, பரப்பிர்ம வஸ்துவான ஸ்ரீ ராமரும் தம்பியும் கிஷ்கிந்தா பர்வதத்தை நாடிப்போனார்கள். ஸ்ரீ ராமர் நியமித்தபடி போன சுக்ரீவன் கிஷ்கிந்தா பட்டணம் போய்த் தமையன் பெண்சாதியாகிய தாரையைச் சேவித்துக்கொண்டு, அவளைத் தாயாராகப் பாவித்து, அவள் வார்த்தையைக் கைக்கொண்டு. மந்திரிகள் சூழ அங்கதன் இளவரசாயிருந்து சகல காரியமும் பார்த்து வர இராஜரீகமாகிய சாம்பிராஜ்யசுக மனுபவித்துக்கொண் டிருந்தான். ஸ்ரீ ராமரும் மதங்காசீர்மமாகிய மேற்சொன்ன பர்வதத்தில் ஒரு பக்கத்தில் வாசயோக்கியமான இடம்பார்த்து, இலட்சுமணர் கட்டின பர்ணசாலையிலே தேவர்கள் ஸ்துதிக்க எழுந்தருளி யிருந்தார்.

அரசியற் படலம் முற்றிற்று.

கார்காலப் படலம்

மாரிக்காலத்திலே, சூரியன் உத்தராயணத்திலிருந்து தெட்சணையனமாகத் தென்திசையில் பிரவேசித்தான். அது எப்படி யிருந்ததென்றால் பிராட்டியாரைத் தேடுகிறதற்கு ஸ்ரீ ராமர் வடதிசையிலிருந்து பூமியே அகண்டமாகவும், சமுத்திர ஜலமே நெய்யாகவும். மகமேருவே திரியாகவும், சூரியனே விளக்காகவும், அந்த விளக்கிலிருந்து மையேறினதுபோல ஆகாயத்திலே மேகம் பரவியது. அப்படிப் பரவிய மேகத்தினால் கடலிற் பிறந்த விஷத்தையுண்டு கறுத்த சிவனுடைய கண்டத்தைப்போல ஆகாயங் கறுத்தது. அம்மேகத்தின் குளிர்ச்சியினால் சூரியகிரணமும் உஷ்ணமடங்கிக் குளிர்ந்தது. அல்லாமலும் ஆலகால விஷத்தைப்போலவும், கருங்கடலைப்போலவும், ஸ்திரீகளுடைய மையணிந்த கண்ணைப்போலவும், அவர்கள் கூந்தலைப்போலவும், இராக்ஷதர்களுடைய உருவத்தைப்போலவும், அவர்கள் செய்யும் பாவத்தைப் போலவும், நன்மை தீமையை பகுத்தறியாதவர்களுடைய நெஞ்சைப்போலவும்,

அம்மேகமானது கறுத்தது. அந்தக் கறுத்த மேகத்தின் மத்தியில் மின்னல் கள் அதிக பளபளப்பாய் தோன்றுகின்றது. யுத்தத்திலே வாள் முதலாகிய ஆயுதங்களினாலே யானைகளின் சரீரங் கிழிந்து புண்பட்டதுபோலிருந்தது. நீல மலைகளை நிறைத்ததுபோலச் சூல்கொண்ட மேகங்கள் நெருங்கிக் குமுறுகின் றன. சமுத்திரம் ஆகாயத்தில் ஏறி முழங்குகின்றதுபோலிருந்தது. கொடிமின் னல்கள் தோன்றுவது இந்திரன் முதலான தேவர்கள் தங்களுடைய ரத்தினபர ணங்களை விரித்து உதறுகிறதுபோலவும், மலையின்மேல் உலைக்களம் வைத்து எரிக்கிறதுபோலவும், திக்குகள் சிரிக்கிறது போலவு மிருந்தது. மற்றும் அம் மின்னல்கள் திசையாகிய கருமான் மேகமாகிய கரிகளையிட்டு, ஊதிர்காற்றாகிய துருத்தியைக்கொண்டு ஊதுகின்ற உலைக்களத்தினது அக்கினி ஜொலிக்கி றதை ஒத்திருந்தது. புருஷர்களைப் பிரிந்திருக்கின்ற ஸ்திரீகளும், புற்றுக்கு ளிருக்கின்ற பாம்புகளும், உடலெரிந்து உயிர் நடுங்கும்படி அஷ்டதிக்குகளிலும் மின்னல்கள் பிரகாசிக்கின்றது. சூரியகிரணங்கள் துண்டித்து விழுகிறது போலவும், இடிகளின் நாவைப்போலவு மிருந்தது. மேலும் விஞ்சையர்கள் உறையிலிருந்து கழற்றிய உதிரந் தோய்ந்த வாள்கள் ஜொலிக்கிறது போல வும், திக்குப்பாலர்கள் ஏறி நடத்தும் தோறும் திக்கஜங்களின் நெற்றியி லணிந்த வீரபட்டங்கள் விளங்குகிறதுபோலவு மிருந்தன. அஷ்டமாநாகங்கள் நாவை வளைக்கிறதுபோல எங்கெங்கும் மின்னல்கள் பிரகாசிக்க, மேகம் சுவா சம் விடுகிறதுபோல ஊதைக் காற்றானது வீசத்தலைப்பட்டது. ஓர் இடத்தில் நிலைபெற்றிராமல் பொருளுள்ள பல இடங்களிலும் நாடிப்போகின்ற வேசிக ளுடைய மனதுபோல், ஆகாயமுதல் பூமிவரையிலும் நீங்காமல் மலைகளிலும் மரங்களிலும் மற்றுமுண்டாகிய சகல சராசரங்களிலும், மேற்சொல்லிய காற் றானது உலாவியது. நாயகர்களை நீங்கி வருந்துகின்ற நாயகிமார்களுடைய ஸ்தனங்கள் கொதிக்கும்படி அதுகளினிடத்திலிருந்து உலாவி, அந்த ஸ்தனங் களை மாம்சத் துண்டமென்று அறிந்து விழுங்கவந்த பேய்கள்போல வாடைக் காற்று அதிகரித்தது. அவ்வாடைக் காற்றினால் தூசுகள் எழும்புகிறதினாலும், மின்னல்கள் வாள்போலப் பிரகாசிக்கிறதினாலும், மேகங்கள் பேரிகைபோல முழங்குகிறதினாலும், ஆகாய இரணக்களம்போல விளங்கி யிருந்தது. ஜானகி யைப் பிரிந்திருக்கின்ற ஸ்ரீ ராமர்மேல் மன்மதன் புஷ்ப பாணங்களைப் பிர யோகித்ததுபோல, இமய பர்வதத்தின்மேல் மேகங்கள் தாரை தாரையாக மழையைப் பொழிந்ததுகள். மேகத்தில் காண்கிற பச்சைவில்லிலே பூட்டி எய்த அஸ்திரங்கள் போல மழைத்துளிகள் விழுந்ததுகள். மற்றும் யானை களின் மேல் வெள்ளிவேலை எறிகிறதுபோல மலைகளின்மேல் அம்மழைத் துளிகள் விழுந்ததுகள். அந்த வேல் பட்டு மதயானைகள் புரள்கிறதுபோல, அபரிமிதமாகிய மழையினால் மலைகளும் பிளந்து சரிந்ததுகள். இனி ஸ்ரீ ராமரும் வானரங்களும் கூடிவந்து இராட்சதர்களைச் சங்காரஞ்செய்து நம்முடைய துயரத்தைத் தீர்ப்பார்க ளென்று தேவர்கள் பேசிக்கொண்டு ஆர்ப்பரித்தது போல, மேகங்கள் மேன்மேலும் முழங்கியதுகள். அந்தத் தேவர்கள் புஷ்பமாரி பொழிந்ததுபோலவும் மழைபொழிந்தது. பின்னும் சீதையை இராவணன் பூமியுடனே பேர்த்துக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ப் போகிறபோது, அவளுடைய கண்கள் நீரைப் பொழிந்ததுபோலவும் மழை

பொழிந்தது. பொழிந்த மேகங்கள் திரும்பிப்போகிறதும், பொழியும் மேகங்கள் எதிரே வருகிறதும், வெள்ளை யானையும் கறுத்த யானையும் எதிர்த்துப் போர் செய்கிறதுபோ லிருந்தது. காற்றினலே மழைத்துளிகள் பலதிசையி லுஞ் சிதறுகிறது திசையோடு திசை போர் செய்கிற்துபோலிருந்தது. மேலும், பூமியாகிய தாயினது மலையாகிய ஸ்தனத்திற் பால் சுரந்து ஒழுகுவதுபோல வான மெல்லாம் காணுறுகள் பெருகிப் பாய்ந்ததுகள்.

பொருள் தேடப்போன புருஷன் வந்து கூடிய ஸ்திரீகள்போல உலர்ந்து போன விருட்சங்களெல்லாம் தளிர்த்ததுகள். அப்போது பாதிரிமரங்களுக் குத் தரித்திரமும், சூரியனுக்குக் குளிர்ச்சியும், வெண் காந்தளுக்குப் பெருமை யும், பூமிக்குச் சிறுமையும், மயில்களுக்குச் சந்தோஷமும், குயில்களுக்குத் துய ரமு முண்டாயின. ஸ்திரீகளின் இடையைப்போலப் புஷ்பக்கொடிகள் துவண் டதுகள். அவர்கள் கையைப்போலக் காந்தள்களெங்கும் மலர்ந்ததுகள். அவர் களுடைய செம்பஞ்சூட்டிய பாதம்போலத் தாமரைகள் பிரகாசித்ததுகள். கணவர்களைப் பிரிந்து புணர்ந்த ஸ்திரீகள் புணர்ச்சிக்காலத்தில் பலதரந் தின்று உமிழ்ந்த தம்பலம்போல, சிவந்த இந்திரகோபப் பூச்சிகள் எள்ளிடுதற்கு இட மில்லாமல் பூமியில் பரவியதுகள். நித்திரை செய்கின்ற ஸ்திரீகளுடைய கண் களைப்போலக் குவளைகள் குவிந்ததுகள். நாயகன் வரக்கண்டு சந்தோஷிக் கின்ற நாயகியின் பற்களைப்போல முல்லைகள் அரும்புவிட்டதுகள். கூத்தாடி கள்போல மயில்கள் நடனஞ்செய்ய, பரிசுகொடுக்கின்ற வள்ளல்களைப்போல மலையருவிகள் ஸ்வர்னங்களைக் கொழித்ததுகள். விருந்தாளிகள் வரக்கண்டு மனங்குளிர்கின்ற உத்தம ஸ்திரீகளின் முகம்போல விருட்சக்கிளைகள் தழைத் ததுகள். இப்படி அனேக அதிசயமுண்டாகிய சரற் காலத்திலே சீதையின் திருமுகத்தைக் காணுத ஸ்ரீ ராமர் யார் முகத்தைக்கண்டு உயிர் தரித்திருப் பார்? மன்மதனுலே அறிவழிந்து, அவன் பிரயோகிக்கின்ற புஷ்ப பாணமா கிய மழையைக் கண்டு, அதிக வருத்தமடைந்தார். கார்காலம் வந்தகாலத்தில் தபசிகளும் வருத்தப்படுவார்களென்றால், தேனைப்பார்க்கிலும் மிகவும் மதுர மாகிய வசனத்தையுடைய சீதையின் தோளைத்தழுவி இன்பம் அனுபவித்த ஸ்ரீ ராமர் வருந்துகின்றது சொல்லவேணுமோ? பின்னும் சுவாமியானவர் புலம்பித் தளர்ந்து, பிராணனுஞ் சிறிது உண்டென்று சொல்லும்படி சோர் ந்து பிரலாபிக்கத் தலைப்பட்டார். ஓ மேகமே! சீதையை ஒளித்து வைத்தி ருக்கின்ற ராட்சதர்கள் வாழும் ஊரை நானறியாமல் உயிருடன் உழல்கின் றேன்: நீ உலகத்தை ரட்சிக்குந் தன்மையைக் கொண்டிருந்தும் என் ஆவி யைக் கலக்குகின்றையே! இது உன் தயாளகுண மாகுமா? மின்னலாகிய கோரப்பல்லைக் காட்டிக் கோபித்து ஆகாய முழுமையும் கறுத்துத் தோன் றிப் பாதகர்களாகிய இராட்சதர்களை ஒத்திருக்கின்ற மேகமே! நீ என்னுயிரை வாங்காமற் போகமாட்டாயோ? ஓ கொடுமையுடைய மயிலே! நீ சீதையைக் கொண்டுவர மாட்டாய்? நித்திரையில்லாத என்னுடைய பிராண சோகத்தை அறியாய்? வீணுக என்னுடனே ஏன் போராடுகின்றாய் ஓ மான்களே! நான் ஆசையினலே அறிவில்லாமையாய்க் குற்றத்தைச் செய்யாதவளையிருக்க, ஜான கியானவள் என்னுயிருடனே பிரிந்து போனதனல் இனிப் பிழைக்கமாட்

டேன். அவள் போனவுடனே மறவாமல் நீ போகவுமில்லையே! ஐயோ! கெடுவாய்; நெடுநாள் பழகிய நட்பையாவது நினையாயோ? என் பிராணநாயகி என்னை விட்டு நீங்கத்தக்க உபாயத்தை நினைத்து முன்பு மாரீசனனவன் ஒரு பொன் மானனன். இப்பொழுது என்னுயிரைக் கிரகிக்கும் உபாயத்தை நினைத்து எமனும் வாடைக் காற்றாக உருக்கொண்டு வந்தான். ஒருவருக்குக் கேடு நினைக்கின்ற வஞ்சகர்களுக்குத் தாங்கள் வேண்டிய வடிவத்தைக் கொள்ளக் கிடைத்திருக்கின்றதல்லவா? ஒ மன்மதா! என்னுயிர் எரியவும், நெஞ்சு புண்ணாகவும், பாணப்பிரயோகஞ் செய்வதனால், உனக்கு மகத்தாகிய கேடு வரும். என் தம்பியானவன் உன்னைக் கண்டானனால் அவனுக்கு உண்டாகும் கோபத்தை யார் தணிக்கத் தக்கவர்களென்று இவ்விதமாகச் சொல்லி இரக்கப்படுகின்ற இராகுபதியைப் பார்த்து இளையபெருமா ளானவர் கிலேசப்பட்டு, சுவர்மீ! நீர் உம்மை எத்தன்மையாக மதித்தீரென்று இரண்டு கைகளையும் சிரசின்மேல் கூப்பிக்கொண்டு சேவித்து, அவருடைய சிந்தை தேறும்படி சொல்லுகின்றார்: ஐயா? காலதாமசப்படும்படி மாரிக்காலம் வந்ததென்கிற கிலேசமோ? இராட்சதர்களுடைய சௌரியத்தை நினைத்து, இளைத்த தன்மையோ? பிராட்டியாரைத் தேடுகிறதற்கு வானரசேனை இன்னம் வந்து சேரவில்லை யென்கின்ற கவலையோ? சர்வக்கியரான தேவரீர் இப்படித் தளரவேண்டிய நிமித்தமென்ன? வேதஞ் சலித்தாலும், சூரிய சந்திரர் சலித்தாலும், கடல் சலித்தாலும், ஆகாயம் பூமி முதலானதுகள் சலித்தாலும், தங்கள் திருவுளம் சலிக்கின்றதல்லவே. அறிவில்லாத இராட்சதர்களுடைய பெருமை யெல்லாம் உமக்குக் கோபமுண்டாகி, உம்முடைய புருவமாகிய வில் வளைத்தால் அதோகதியாய்ப் போமே. அனுமானென்பவனுடைய அறிவும் பலமும் அவர்களுடைய புஜபலம் எவ்வளவோ நாமறியவில்லை. எழுபதுவெள்ளம் வானரசேனைகளும் சாமானியமானதுகளா யிருக்குமா? மழைக்காலமும் கழிந்துபோயிற்று. இனி என்ன தடையிருக்கின்றது? உம்முடைய தேவியார் இதோ வந்தார் வந்தாரென்றே உமது திருவுள்ளத்தில் எண்ணித் துயரத்தை விட்டுவிடும். ரிஷீஸ்வரர்களுக்கு இராட்சதர்களைச் சங்கரித்து உங்களுடைய குறையைத் தீர்க்கிறேமென்று அபயஸ்தங் கொடுத்திருந்தீரே! அதுவும் விதியின் உபேட்சையினாலே முடிந்தது. இனி நீர் அந்த இராட்சத வம்சத்தை இம்சித்துக் கீர்த்தி வகித்துத் தேவர்களுக்கு உரிய பதவிகளை அவர்களுக்குக் கொடுத்தருளும். இதைவிட்டுத் தேவரீர் இவ்வண்ணமாகக் கிலேசிக்கிறது தர்மமோ? ஜெயமானது உமக்கே உண்டாகுமல்லாமல் அந்த இராட்சதர்களுக்கு ஒருபோதுங் கிடைக்கமாட்டாது. சும்மா வேதனைக்கு இடங்கொடுக்கிறது வீரமல்ல., வருத்தப்பட்டுக்கொண் டிருக்கிறதினால் நாள் கழிந்துபோகிறதே யல்லாமல் ஒரு பிரயோஜனமுமில்லை. இப்பொழுது நீர் பிரயத்தனம் செய்வீரேயாகில் எது உமக்குக் கிட்டாது? ஆகையால் வருத்தப்பட வேண்டாமென்று சொன்னர். அந்த வார்த்தையைக் கேட்டுச் சிறிது சோகந்தீர்ந்து ஸ்ரீ ராமரிருக்க, மேன்மேலும் பிணிகள் வருகிறதுபோல மறுபடியும் மழைபெய்யத் தலைப்பட்டது. குளங்களெல்லாம் நிறைந்ததுகள். சமுத்திரங் குறைந்தது. குயில்கள் ஒடுங்கியதுகள். மலைகள் குளிர்ந்ததுகள். வழிகளுந் திசைகளும் மறைந்ததுகள் பிரிந்த ஸ்திரீ புருஷர்கள் வருந்தினர்கள். அன்றில் பேடும் சேவலும் பிரியா

மற் சேர்ந்திருந்தகள். ஆண் குரங்குகள் பஞ்சேந்திரியங்களை அடக்கிய யோகிகள் போலக் குளிரினால் ஒடுங்கி யிருந்தகள். யானைகளெல்லாம் ரிஷிகள்போல நித்திரை நீங்கி இருந்தகள். அன்னங்கள். தாமரைப் புஷ்பங்களாகிய அசனங்களைவிட்டு மரப்பொந்துகளிற் போய் பதுங்கியிருந்தகள். குறத்திகளும் குறவர்களும் சந்தன் மரங்களால் கட்டப்பட்ட பரண்மேலிருக்கும் குடிசைகளில் நித்திரை செய்துகொண் டிருந்தார்கள். வள்ளிக்கொடிகள் சுற்றிக்கொண்டிருக்கிற சிறிய இலைகளையுடைய மரத்தின்கீழே கோபாலர்கள் ஆட்டுக்குட்டிகளை யணைத்து வைத்துக்கொண் டிருந்தார்கள். பேய்கள் திருடர்களைப்போல ஒளித்துக்கொண்டு பல்லைக் கடித்துப் பசியினால் வருந்தியிருந்தகள். சூரிய உதயமானது தெரியவேயில்லை. இப்படிப்பட்ட தன்மையையுடைய மழைநாளில் இருள் வந்தது. ஸ்ரீ ராமர் ஜானகியை நினைத்துக் கொண்டு லட்சுமணரைப் பார்த்துச் சொல்லுகிறார்: அப்பா! இராட்சதர்கள் எடுத்துப்போன ஜானகியும் இந்தச் சரற்காலத்தைப் பார்த்துப் பயத்துடனே வருந்துவாளே. நான் ஒன்றிலும் பிழைக்கிறதாகக் காணவில்லையே. அம்பரூத்தூணியில் அஸ்திரங்கள் நிறைந்திருக்க, நான் வச்சிர. ஸ்தம்பத்துக்குச் சமானமாகிய தோளுடனே நாணமில்லாமல் உயிரை வைத்துக்கொண்டிருக்கத் தகுமோ? தூக்கணங்குருவியும் தன் கூட்டுக்குள்ளே மின்மினிப்பூச்சியை விளக்காக வைத்துக்கொண்டு பெண்சாதியைப் பிரியாமலிருக்கின்றது. நான் அவ்வளவுமில்லாமல் பெண்சாதியைப் பிரிந்து மன்மத பாணத்தினால் உபத்திரவப்பட்டுக் கொண்டிருக்கிறேன். மேகம் மின்னினாலும் குமுறினாலும் பாம்பைப் போல மனது வருந்துகின்றேன். ஆரணியத்திலே வந்து நான் முடித்த காரியத்தைப் பார்த்தால் தேவர்களும் மனிதர்களும் சிரிப்பார்கள். இனி இதைப் பார்க்கிலும் வேறே அவமானம் வேணுமா? இப்படி மழைவிடாமல் பெய்து கொண்டிருக்கிறதினால் இறந்து போகிறதே யுக்தமாகக் காண்கின்றது. இன்னமொரு ஜென்மத்திலாவது இந்தப் பழியைத் தீர்த்துக்கொள்வேனே? அல்லது சந்நியாசம் வாங்கிக்கொண்டாவது கிலேசமொழிவேனே? இங்கிருந்து அந்த ராட்சதர்களிருக்குமிடம் அறிகிறதற்கு இன்னம் எத்தனைகாலம் செல்லுமோ? அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறதிலும் மாண்டுபோவதே நல்லது. அந்தச் சீதையின் அதராமிர்த்தத்தைப் பானஞ் செய்து இஷ்டமாயிருந்த நான், செம்பையுருக்கி வீசுகிறதுபோல இந்த மழைத்துளிகள் என் சரீரத்தை வெதுப்பும்படி வேகிறதா? ஜனகராஜன் அக்கினி சாட்சியாக இவள் உன்னடக்கல மென்று சொல்லிக் கொடுத்திருக்க, அந்த வார்த்தையை நிர்வாகஞ் செய்யமாட்டாத நான் இனிப் பூமியிலிருந்துதான் என்ன செய்கிறது? நீ யொருவன் பக்கத்தில் வந்து தேற்றிக்கொண்டிருக்க, அந்த வார்த்தையைக் கேட்டு நான் தேறியிருந்ததனாலே சீதை வருவாளா? இந்தத் துன்பத்தை இனி வேறே யார் தான் தீர்க்கத் தக்கவர்கள்? ஒரு பாணத்தை விட்டுத் தேவலோகத்தையும் சகல ஆத்துமாக்களையும் அதம்பண்ணினால் லல்லாமல் சீதையைக் காணக் கூடாது. தாமஸமென்கிற ஒரு பொருளுக்கல்லவோ பயந்து அப்படிச் செய்யாமல் இத்தனைத் துயரத்துக்கும் ஆளாயிருக்கிறேன். சத்துருக்களும் தேவர்களும் ஒன்றாகக்கூடி எதிர்த்து வந்தாலும் பிழைத்துப் போவார்களாவென்று,

இவ்விதமாக ஸ்ரீ ராமர் சொன்னதுகளை யெல்லாம் கேட்டு லட்சுமணர் சொல்லுகிறார் :

சுவாமீ! மாரிக்காலமும் முடிந்துபோயிற்று. அந்தத் திருடர்களான ராட்சதாளைக் காண்கின்ற காலமுஞ் சமீபித்திருக்கின்றது. நீர் ஏன் கிலேசிக்கிறீர்? எந்தக் காரியத்தையும் தகுந்த பிரயத்தனஞ் செய்தே முடிக்கவேண்டும். ஸ்ரீ மகா விஷ்ணுவும் தேவர்கள் அமிர்தந் தரவேண்டுமென்று கேட்ட மாத்திரத்தில் தாம் கொடுக்கிறதாயிருந்தாலும், மத்தும் - கயிறும் - தூண் முதலானதுகளும் தேடிவைத்துக்கொண் டல்லவோ கடலைக் கடைந்தார். பின்னும், அவர் உலகங்களை யெல்லாம் நினைத்த மாத்திரத்தில் உண்டாக்கி உட்கொண்டாலும் சக்ர முதலான ஆயுதங்களைக் கொண்டு உபாயத்துடனே போர் செய்தல்லவோ பகையாளிகளை யெல்லாம் ஜெயஞ்செய்கிறார். சிவனனவர் திரிபுரதகனஞ் செய்யும்போது, எண்ணிய தந்திரமும், ஏறியதேரும், எடுத்த வில்லும், தொடுத்த அம்பும் ஒருவரால் சொல்லத்தக்கதுகளோ? நமக்குத் துணையாய்ச் சேரத்தக்கவர்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு, யுத்தத்திற்குப் போகத்தக்க காலத்திலே போய், யோசிக்கவேண்டு வனவற்றைப் பலமுறை செவ்வையாய் யோசித்துச் செய்தால் ஜெயமானது கிடைக்காமற் போகுமா? பாப கர்மிகளான ராட்சதர்கள் எப்போதும் தங்களுக்கே வெற்றியுண்டாகுமென்று நிச்சயிக்கிறவர்கள். நீதி தவறுமாயின் அந்தவெற்றியும் கீர்த்தியும் யார் பட்சத்திலுண்டாகும்? அது தேவரீரே சாதித்தருள வேண்டுமென்று தம்பி சொல்லவும், மெய்தானென்று ஸ்ரீ ராமர் நினைத்து இந்த மழைக்காலமும் போமா வென்று கிலேசப்படும்போது, அந்த மாரிக்காலமானதுப் போய்விட்டது. இல்லையென்று சொல்லாத தாது ருத்துவத்தைப் பெற்றுக் கேட்ட பொருள்கள் எல்லாவற்றையுங் கொடுத்து வறுமையை யடைந்தபோது, யாசகர்களுக்குக் கொடுக்கிறதற்கு இல்லாமையால் லச்சை யடையும்படியான வள்ளல்களைப்போல மேகங்கள் வெளுத்ததுகள். நல்வினை இதுவென்றும் தீவினை யிதுவென்றும் ஒருவன் அறிந்து பரமாத்மாவைக் காணப்பெற்ற தத்துவஞானம் வர, அவனை விட்டுப் பிரபஞ்சமாயை நீக்குவது போல, மாரிக்காலத்திலுண்டான இருளானது நீங்கியது. யுத்த முடிந்தவுடனே பேரிகை யோசை அடங்கியதுபோல மேககர்ச்சனையும் அடங்கியது. அப்பொழுது அஸ்திரங்கள் பிரயோகிக்கப் படாததுபோலே மழைத்துளிகள் சிந்தப்படவில்லை. வாள்கள் உறையிற் சொருவப்பட்டு மறைந்ததுபோல மின்னல்களும் மறைந்ததுகள். சக்கரவர்த்தித் திருமகன் வருத்தந் தீரும்படி நல்லகாலமும் பிறந்தது. மருத நிலத்தில் தாமரை இலையினுடைய மறைவிலே யிருந்த நண்டுகள் லோபிகள்போலே உள்ளே புகுந்து வளையை யடைத்துக்கொண்டு பதுங்கினதுகள். சங்குகளெல்லாம் தாம்பெற்ற முத்துக்களைத் தோற்கும்படிச் செய்யா நின்ற தந்தங்களையுடைய ஸ்திரீகள் முகத்தைப் பார்க்க வெட்கப்பட்டதுகள் போலத் தண்ணீரில் மூழ்கி ஒளித்துக்கொண்டதுகள்.

கார்காலப் படலம் முற்றிற்று.

கிஷ்கிந்தைப் படலம்

இப்படி மழைக்காலம் போகவே, ஸ்ரீ ராமரானவர் தம்பியைப் பார்த்து, அப்பா லட்சுமண! அந்தச் சுக்ரீவன் இன்னம் வரவில்லையே; என்ன நினைத் திருக்கின்றானே தெரியவில்லையே; தனக்குப் பாக்கியமானது வரவே நன்றி நினையாமல், ஒழுக்கமும் நீங்கித் தர்மத்தையுந் தவறி அன்பையுங் கைவிட்டா லும் விடட்டும். நம்முடைய சாமர்த்தியமும் அறியாதவனுய் இந்தச் சொற்ப வாழ்வினிடத்திலே மயங்கி யிருக்கின்றன். இப்படிச் செய்த உதவியை மறந்து அருமையான சிநேகத்தை வேரறும்படி களைந்து, சத்தியத்தை யழித்து சொன்னசொல் தவறினவனைக் கொன்றலுங் குற்றமில்லை. நீ போய் அவனு டைய அபிப்பிராயத்தை அறி. அவனுடனே நீ சொல்லத்தகுந்த வார்த்தை களை நான் சொல்லுகிறேன் கேள். கண்டகர்களைச் சங்கரித்துத் தர்மத்தை ஸ்தாபிப்பதற்காகவே கையிலெடுத்த வில்லுமுண்டு; உங்களுடைய உயிரை வாங்குகின்ற அம்புமுண்டு. அவ்வுயிரை யபகரித்துக்கொண்டு போகிற எமனு முண்டென்று என்னுடைய ஆக்கினையின்படிச் சொல். நஞ்சுக்குச் சமான மானவர்களைத் தும்பம் அடையச் செய்வது பாவமல்ல மனுநீதி யாகையால் அது அவர்களுடைய நெஞ்சினில் நன்று யுறுத்தும்படிச் செய். மேலும் நீங் கள் சொல்லிவந்த நாளும் கழிந்துபோய்விட்டது. இப்போதாவது வாருங்கள். வராதிருந்தால் உங்களுடைய நகரமும், நீங்கள் ஆளும் அரசும், உங்களுடைய சுற் றத்தாரும் அழிய, நீங்களும் இறந்து போவீர்கள். அல்லாமலும் குரங்குகளென் னும்படியான பெயரும் இன்றையத்தினத்தோடே ஒழிந்துபோ மென்றும் சொல். அவர்கள் இந்த இராமலட்சுமணர்களைவிட அதிக பலமுடையவர்களை நாம் தேடிக்கொள்வோமென்று நினைத்து வராமற்போய் விடுவாரானுல், உன்னை ஜெயிப்பதற்குத் திரிலோகத்திலும் வேறொருவரில்லை யென்பதாக உன்னுடைய சாமர்த்தியத்தை அவர்கட்கு நன்றுய்த் தெரியும்படி காட்டு. நீதி முதலானவைகளையும் சொல். அதற்கும் அவர்கள் பேதியாதிருந்த காலத்தில், நீ கோபித்து யுத்தஞ் செய்து. அவர்களை இம்சிக்காமல் அவர்கள் சொன்ன சொற்களை என்னிடத்திலே கொண்டுவந்து சொல். துரிதமாய்ச் சென்றுவரக் கடவாயென்று புகழைப் பூஷணமாய்ப் பூண்ட ஸ்ரீ ராமரானவர் கட்டளையிட்டார். அந்த ஏவலைச் சிரசாக வகித்துக்கொண்டு சாஷ்டாங்கமாகச் சேவித்து, அவ்விடத்தில் சிறிது நேரமாயினும் தாமிசமாய் இரர்மல், முதுகிலே அட்சய தூணியைக்கட்டி வில்லைக் கையிலே தாங்கிக் கொண்டு இராகவருடைய இருதயத்தைச் சர்வகாலமும் நீங்காதிருக்கும்படியான இளைய பெருமாளானவர் புறப்பட்டு, வழியில் இரானின்ற மரங்களும் மலைகளும் பொடிகளாய்ப் போகும்படி சாதாரணமான வழியைவிட்டுக் குறுக்குவழியை மிதித்துப்போனர். அப்படி ஆரணியத்திலே போகானின்ற இலட்சுமணர் மரா மரங்களைத் துளைத்துக் கொண்டுபோன ஸ்ரீ ராமபாணம் போலவும், ஒரு திக் கெஜமானது மற்றொரு திக்கெஜத்தை அதனுடனே காலின் அடியை நாடித் தேடி யோடுவது போலவும், அதிவேகமாய் நடந்து, சூரியன் உதயகிரியிலே யிருந்து அஸ்தமனகிரியில் தாவிப் போவதுபோல ஒரு பர்வதத்திலிருந்து மற்

ரொரு பர்வதத்தைத் தாண்டி, ஒரு மலையிலேயிருந்து மற்ரொரு மலையில் குதிக்கின்ற சிங்கம்போல அதிகமான கோபத்தோடே கிஷ்கிந்தா பர்வதத்திலே போய்ச் சேர்ந்தார். அங்கே யிருக்கின்ற வானரவீரர்கள் இவர் வருகிற வேகத்தையும் கோபாவேசத்தையும் கண்டு பயந்து ஓடி, அங்கத குமாரனிடத்திலே போய், சுவாமி! இளைய பெருமாளானவர் அதிக் கோபமாய் வருகிரூர். ஏதாய் முடியுமோவென்று சொன்னர்கள். அந்த வார்த்தையை வாலி புத்திரனவன் கேட்டு, அவர் வந்த சமாசாரத்தை இன்னதென்று அறியும்படி இலட்சுமணரிடத்திலே போய் அவரைக் கண்டுகொள்ளாமல் தூரத்திலே யிருந்து, அவருடைய திருவுள்ளக்கருத்தைக் குறிப்பினால் அறிந்துகொண்டு, தன்னுடைய பிதாவான சுக்ரீவ மகாராஜனுடைய அரண்மனைக்குப் போனன். அப்போது சுக்ரீவமகாராஜன் எப்படி யிருந்தானென்ரால், நளனாலே செய்யப்பட்ட இரத்தினகசிதமான மாளிகையில் பஞ்சணை மெத்தையின்மேலே அநேக ஸ்திரீகளுடைய கூட்டங்கள் கால்களை வருட, இராம லட்சுமணர்கள் உதவிய செல்வமானது மதுவினாலே மிகவுஞ் செறுக்குற்றவனாய், ஒரு பொன்மலையின்மேலே ஒரு வெள்ளிமலை படுப்பதுபோல் சயனித்துக் கொண்டிருந்தான். அகிற்காட்டிலும் சந்தனக்காட்டிலும் ஸ்திரீகளுடைய கூந்தற்காட்டிலும் தாவித் தவழாநின்ற தென்றற் காற்ரானது வந்து முகத்தில் வீச, ஸ்திரீகளின் முத்துப்போன்ற முல்லை யரும்புபோலவும் பிரகாசியாநின்ற தந்தங்களினிடத்திலே ஊறுகின்ற தேனையுண்டு அந்தத் தேனனது தனக்குப் பயித்தியத்தையும் மயக்கத்தையும் அதிகரிக்கச்செய்ய மதம்பிடித்த யானையைப்போல மயக்கத்தையடைந்து, சிரசிலே மகுடமும் காதிலே மகரகுண்டலமும் பிரகாசிக்கத் தன்னுடைய முகம் சூரியமண்டலம்போல் ஜொலிக்கச் சயனித்துக் கொண்டிருந்தான். அந்தச் சிறிய தகப்பனை அங்கதன் கண்டு வந்தனஞ்செய்து, நித்திரையினின்று மெழுப்பி, ஐயா! ஸ்ரீ ராமருக்கு இளையவர் மனதுக்குள்ளிருக்கின்ற கோபத்தை அவர் திருமுகமானது வெளிப்படுத்தும்படி அதிவேகமாய் வருகிரூர். உம்முடைய மனக்கருத்து என்னவென்று கேட்கவே, இன்ன சொல்லை சொன்னனென்றுந் தெரியாமல், பாக்கியத்தின் மயக்கமும், கள்ளின் மயக்கமும் நிறைந்த சுக்ரீவன் தன்னையுமறியாமல், அங்கதனுடைய முகத்தைப் பார்த்தும் பிரதியுத்தரமொன்றும் சொல்லாமல், மறுபடியும் அந்தப் புட்பமெத்தையிலே தானே படுத்துக்கொண்டான். அதுகண்டு அங்கதன் இனியென்ன செய்வோமென்று யோசனைசெய்து வெளியிலே வந்து, மந்திரியான அனுமானை அழைத்துக்கொண்டு, சில வானரப்படை வீரர்களுடனேயும் இந்திரனுக்குப் பேரனை அங்கதனனவன், தாயாரான தாரையினிடத்திலே வந்து, அவளைச் சேவித்துக்கொண்டு, இலட்சுமணரானவர் அதிக கோபத்தோடே வரும்படியான செய்தியையும், சிறிய தகப்பனர் மயக்கத்தோடே நித்திரையாயிருப்பதையுஞ் சொல்லி, மேலென்ன செய்யலாமென்று கேட்டான். அதற்கு அந்தத் தாரையானவள் அனுமானையும் தன்னுடைய குமாரனை அங்கதனையும் பார்த்துச் செய்யப்படாத பொல்லாங்குகளைச் செய்தீர்கள். அதுகளை எளிதிலே நீங்கும்படியாகவும் பார்க்கிறீர்கள். நன்றி மறந்த நீங்கள் சுகப்படுவீர்களா? படையைக் கூட்டிக்கொண்டு வரச்சொன்ன காளிதை; அந்த வார்த்தை தவறுமற்போய்ச் சேர்ந்தாலல்லவோ உங்களுக்கு க்ஷேமமுண்டாகும். வாலி

யென்பவரைப்போலொத்த வீரருடைய பிராணனை எமனும் கொள்ளை கொள்ளும்படி பாணப் பிரயோகஞ்செய்து சகல பாக்கியத்தையும் கொடுத்தவரை எவ்வளவு சிரேஷ்டமாக எண்ணவேண்டும். அவரிடத்திலேயும் அபசாரப்படலாமா? தேவர்களைப் பார்க்கிலும் சிறந்த அந்த மகா புருஷனைவர் தேவியைப் பிரிந்து, உயிர் நீங்கினவரைப்போலத் துயரப்பட்டுக்கொண்டிருக்கின்றார். அதை நினையாமற்படிக்கு நீங்கள் ஸ்திரீகளுடனே கூடிக்கொண்டு மதோன்மத்தமாய்ச் சத்தியம் தவறிப்போனீர்கள். அவர் செய்த நன்றியையும் மறந்துபோனீர்கள். ஓ கேடுகெட்ட குரங்கின் குலத்தாரே! உங்களுடைய தீவினை வந்து உங்களுக்கு நேர்ந்தது. ஆகையால் சண்டை செய்தீர்களானால் மாண்டுபோவீர்கள். வேறே யினி பிரயத்தனம் செய்துதான் ஆகத்தக்கதென்ன? உங்களை ஒரு பொருளாய் எண்ணி அவர்கள் சினேகித்த விஷயத்திற்காக நல்ல உபகாரம் செய்தீர்களென்று இவ்விதமாய்ச் சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்திலே, இலட்சுமணரானவர் வருவதைக்கண்ட குரங்குகள் கோட்டை வாயிலைச் சாத்தித் தாள்பூட்டிப் பின்னும் மலைகளையும் கற்களையும் கொண்டு வந்தடுக்கியதுகள். அதைக்கண்டு நம்மை வராமற் காக்கிறதற்காகவா இந்த யோசனை செய்தது என்று நினைத்துக்கொண்டு, இளைய பெருமாளானவர் நகைதுத் தாமரைப் புட்பத்திற்குச் சமானமான தம்முடைய பாதத்தினாலே அந்தக் கிஷ்கிந்தா பட்டணத்தின் கோட்டைவாயிற் கதவை எட்டியுதைத்தார். பகவானுடைய திருவடி ஸ்பரிசமான மாத்திரத்தில், பக்தர்களுடைய பாபங்களெல்லாம் பற்றற்றுப் போனதுபோல ஸ்ரீ ராமானுஜருடைய பாதம் தாக்கவே, கோட்டை மதிலும் கதவும் வானரங்களானவை அடுக்கிய மலைகளும், இடிந்து, உடைந்து, நகர்ந்து, தூள்தூளாய்ப் பத்துயோசனை தூரம் வெட்டவெளியாய்ப் போய்விட்டது. அப்படி அந்த மதிலும் மலைகளும் நகர்ந்து சரிந்து விழுந்ததனால் வானரக் கூட்டங்களெல்லாம் பயப்பிராந்திகொண்டு தலையுடைந்து மார்பு கிழிந்து உடலானது நெரிந்து திசைகள் தோறும் ஓடத்தலைப்பட்டதுகள். அநேகம் உயிர்கள் மாண்டதுகள். அந்தக் குரங்குகள் பயந்து கூச்சல்போட்டுக்கொண்டு பல திசைகளிலும் ஓடிப்போனது சொல்லுவதற்கே அருமையாயிருந்தது. மந்தரகிரியை நாட்டிக் கடைந்த காலத்தில் பாற்சமுத்திரமானது பட்டபாடு அந்தக் கிஷ்கிந்தையானது அன்றையத்தினம் பட்டது. இவ்விதம் வானரங்களானவை கிஷ்கிந்தா பர்வதத்தை விட்டுக் காடுகளிலே ஓடிப்போய் விடவே, அந்தப் பட்டணம் நட்சத்திரங்களில்லாத ஆகாயம்போலிருந்தது. அத்தருணத்தில் அந்நகரத்திற்குள்ளே இலட்சுமணர் பிரவேசித்து வீதியில் வருகிறபோது, தாரையுடனே பேசிக்கொண்டிருந்த அநுமானும் அங்கதனும் பார்த்து அதிக பயம் செனித்தவர்களாகி, அம்மா! இதோ இளையபெருமாளானவர் வந்துவிட்டாரே, என்ன செய்யலாமென்று தாரையைக் கேட்டார். அந்தச் சமயத்தில் தாரை அவர்களைப் பார்த்து, நீங்களெல்லாரும் அப்பாலே விலகிப்போங்கள். நான் போய்க் கண்டு அவருடைய மனோபாவத்தை அறிகிறேனென்று அனேக ஸ்திரீகளுடனே புறப்பட்டாள். அப்படித்தான் செய்ய வேண்டும் அம்மாவென்று சொல்லினர். அவ்வண்ணமே தாரை நடந்து, வானரவீரர்கள் வாசஞ்செய்கின்ற ராஜவீதிகள் எல்லாவற்றையுந் தாண்டி, சுக்ரீவ மகாராஜனுடைய அரண்மனைக்கு நேராய் நடக்கின்ற இலட்சுமணப்

பெருமாளுக்கு எதிரேவந்து நின்றாள். இப்படி சிலம்புகளே பேரிகையாக முழங்கவும், நிதம்பமான தேர்கள் சூழவும், கண்ணான வேல்களும் புருவமான விற்களும் நெருங்கவும், ஸ்திரீஜனங்கள் அநேகமாய் அடர்ந்துவந்த பொழுது, இலட்சுமணப் பெருமாளுக்கு மாறுத கோபமுகம் மாறிப்போய்விட்டது. இலட்சுமணர் செவ்வையாய் அவர்களைப் பார்க்கவும் அஞ்சினவராகி. அலர்ந்த செந்தாமரைப் புட்பத்தைப்போலிருக்கும்படியான முகத்தைச் சாய்த்துக்கொண்டு, மாமியார் கூட்டத்தின் நடுவே வந்த புது மருமகனைப்போலச் சங்கோசமாய் நின்றனர். அவ்வண்ணம் நின்ற வீராதிவீரரான இலட்சுமணப் பெருமாளைக் கண்டு மாதர்கள் கூட்டத்தின் நடுவே வந்த தாரையானவள் அஞ்சி நடுக்கமுற்று ஒரு வார்த்தை சொல்லுகிறாள்: சுவாமீ தேவேந்திரன் முதலான தேவர்களும் அநேககாலந் தவம் செய்தாலும் அவர்களுக்கு முன்பு தாங்கள் வரக்கிடைக்கின்றவர்களா? அப்படியிருக்க, தங்களுடைய பாதாம்புயம் வருந்த எங்களுடைய மனைக்கு வரக்கிடைத்தது நாங்கள் பூர்வம் செய்த தபோபலமேயன்றி வேறில்லை. நாங்கள் கிருதார்த்தர்களானோம்; வாழ்ந்தோம். இருவினைகளுந் தீர்ந்தோம்: இதைப் பார்க்கிலும் எங்களுக்கு வேறென்ன உறுதியிருக்கின்றது? தாங்கள் அதிவேகமாய் வந்ததைப் பார்த்துத் தங்களுடைய திருவுளக் கருத்துத் தெரியாததினாலே தங்கள் சேனைகள் பயப்படுகின்றன. பெரிய பெருமாளுடைய பாதாரவிந்தத்தை விட்டுப் பிரியாமலிருக்கும்படியான தேவரீர், இப்பொழுது வந்த சமாச்சாரம் அருளிச்செய்ய வேண்டுமென்று வீணையின் இசையைப் பார்க்கிலும் இனிமையான வார்த்தையையுடைய தாரையானவள் சொல்ல, அந்த வசனத்தை இலட்சுமணரானவர் கேட்டருளி, யாரிப்படி சொன்னவர்களென்று கோபம் நீக்கிக் கிருபைபெருகத் திருமுகத்தை ஏறெடுத்துப் பார்த்தவராகி, பகற்காலத்திலே உதயமான பூரணச்சந்திரனைப்போல அழகு ஒழுகுகின்ற வாலி பெண்சாதியினுடைய முகத்தை நோக்கித் தம்முடைய தாய்மாரை நினைத்து மிகவும் மனது நைந்து, கழுத்திலே மாங்கல்யமில்லாமல் பலவித இரத்தினபரணங்களையும் துறந்து, ஸ்தனங்களில் குங்குமம் மஞ்சள் முதலானவைகளும் அணியாமல், வஸ்திரத்தினால் கழுத்தையும் மறைத்துப் போர்த்துக்கொண்டிராநின்ற கோலத்தையும் கண்டு கண்களிலே நீர்ததும்பக் கிலேசித்தார். பின்பு இப்படிதானே என்னைப்பெற்ற தாய்மார்களிருவரும் இருப்பார்களென்று துயரத்தோடே நெஞ்சு தளர்ச்சியடைந்து, நெடுநேரம் சும்மாயிருந்து, பின்பு கேட்ட வார்த்தைக்கு உத்தரம் சொல்லவேண்டுமென்று திருவுளத்திலே யெண்ணித் தாம் வந்த காரியத்தைத் தாரைக்குச் சொல்லத் தொடங்கினர்.

கேளும் அம்மா! சூரியபுத்திரனை சுக்ரீவன் சுவாமியினிடத்திலே இந்த மழைக்காலம் போனவுடன் சேனையைக் கூட்டிக்கொண்டு நானும் வந்து, தேவியாரைத் தேடிப் பார்த்துக் கொண்டுவந்து கொடுக்கிறேனென்று சொல்லியிருந்த சொல் மறந்துபோனான். ஆகையால் ஸ்ரீ ராகவர் அந்தச் செய்தியை நீ போய்ச் சீக்கிரத்தில் அறிந்துவாவென்று ஆக்கியாபிக்க, அது நிமித்தமாக நான் வந்தேன். அப்பால் அவருடைய திருவுள்ளம் நினைத்தபடியெல்லாம் முடிந்துவிடுமென்று இளையபெருமாள் சொன்னர். அவ்விதமான

வார்த்தையைத் தாரைகேட்டு, சுவாமி! கோபஞ் செய்யவேண்டாம். சிறிய வர்கள் தீமைகளைச் செய்தாலும் பொறுத்துக் கொள்வதற்குத் தாங்களேயல் லாமல் வேறே யாரிருக்கின்றார்கள்? தங்களுடைய காரியத்தை மறந்து போக வில்லை. தாங்கள் செய்த உபகாரத்திற்குப் பிரதியுபகாரமும் உண்டோ? வானரசேனைகளை அழைத்துவரும்படி உலகமெல்லாம் வெவ்வேறுக ஆயிரங் கோடி தூதர்களை அனுப்புவிக்கத் தங்களுடைய ஆக்ஞையினாலே அவர்கள் போயிருக்கிறார்கள். அந்தச் சேனைகள் வந்து சேரத்தக்க காலமானது சமீ பித்தது. அதை குறித்துத் தான் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். சரண மடைந்தவர்களுக்கு சாட்சாத் தாயைப்பார்க்கிலும் விசேஷ அன்புடை யவர்களா யிருக்கின்ற தாங்கள் கோபத்தைத் தணித்துக்கொள்ள வேண்டும். தர்மமென்பது அதுதான். பொல்லாங்கு செய்யாமலிருந்தால் யார்தான் கெட் டவர்களாவார்கள்? அடைக்கலமென்று வந்தவர்களுக்கு நீங்கள் அபயஸ்தங் கொடுத்த மாத்திரத்திலே சம்பத்துண்டாயிற்றே யென்று அந்த நன்றியை நினையாமல் உங்களுடைய காரியத்தை மறந்தால், அதுவும் உங்களால் உண் டானதல்லவா? பிராட்டியாருடைய நிமித்தம் இரணக்களத்திலே மாண்டு கிடந்த தல்லவோ உங்களைச் சிநேகித்த சிநேகத்திற்கு லப்தமாகும். நன்மையே குடி கொண்டிருக்கிற நெஞ்சையுடைய தாங்கள் ஒழியாத கொடிய பகைவனையும் ஒழித்து, அரசாண்டுக்கொண் டிருக்கும்படிக்குக் கடாட்சித்துப் பேருதவி செய்தீர்கள். அப்படிப்பட்ட தங்களையே இகழ்வதாயிருந்தால் அது எளிதாய்ப் போகிறதல்ல. மறுபிறப்பிலே யடையத்தக்க நரகவாதனையை இப்பிறப்பிலே தானே யடைந்து, எழு பிறப்பினுடைய பயனையும் இழந்து போவார்கள். வாலியினுடைய ஆயுளையும் ஆண்மையையும் அழித்த பாணம் உங்களிடத்திலே யிருக்கும்போது உங்களுக்குப் படைத்துணையும் வேறே வேண்டுமா? உங்க ளுடைய கையிலேந்திய வில்லைப்பார்க்கிலும் மேலான துணையுமுண்டோ? தேவி யாரைத் தேடுவதற்கு இவர்களைத் தேடுகிறீர்களே யல்லாமல் வேறென்ன விருக்கின்றது? அவ்வளவு ஏவல் இவர்களுக்குக் கிடைத்தது இவர்கள் செய்த தவமென்று எண்ணவேண்டுமே. இப்போதும் அந்தக் காரியத்தைச் செவ்வை யாகச் செய்து உஜ்ஜீவிக்கத் தக்கவர்கள் தங்களைச் சரணுகதியடைந்த சுக்ரீவ ராஜா முதலானவர்களே யென்று தாரையானவள் சொன்ன சொற்களை யெல்லாம், இளயபெருமாள் சந்தோஷமாகக் கேட்டுத் தயையுண்டாகி, இந்தப் புண்ணியவதி பலவிதமான தர்மங்களையும் கேட்டறிந்திருக்கின்ற நல்ல விவேகி யென்று நினைத்துக்கொண்டு மனதிலே நாணங்கொண்டு நின்றார். இது கண்டு அனுமானவர் இவருக்குக் கோபம் தணிந்தது இதுதான் நல்ல சமயமென்று இலட்சுமணருக்குச் சமீபத்திலே வந்து, அவருடைய திருவடியை வணங்கி நின் றார். அந்த மாருதியினுடைய முகத்தைப் பார்த்து அநுமானே! நீர் சகல சாஸ்திரங்களையும் அறிந்தவரா யிருந்தும் சுவாமியினுடைய ஆக்ஞையை மறந்து விட்டீரோவென்று கோபத்தினும் அன்பு விளைகின்ற இராமாநுஜர் கேட்க, சுவாமி! கேட்டருளுமென்று நவவியாகரண பண்டிதரான அநுமா னென்பவர் சொல்லுகின்றார்: பெற்ற தாயையும், தந்தையையும், குருவையும், தெய்வத் தன்மையையுடைய பிராமணர்களையும், பசுக்களையும், சிசுக்களையும், ஸ்திரீகளையும் வதை செய்தவர்களுக்கு அந்தந்தப் பாவத்தைப் பரிகரிக்கத்

தக்க உபாயம் உண்டு. அழியாத உதவியை அழித்தவர்களுக்கு மாத்திரம் எந்தக் காலத்திலானலும் அந்தக் குற்றத்தை ஒழிக்கத்தகுந்த உபாயமு முண்டோ? ஐயனே! உங்களுக்கும் எங்களுடைய வானராதிபதியான சுக்கி ரீவ மகா இராஜாவுக்கும் சிநேக முண்டானபோது பேசின வார்த்தைகளெல் லாம் அடியேன் முகாந்தரமாக வல்லவோ? அதற்குப் பழுது வருமானல் அப் பால் பிழைக்கத் தகுந்த மார்க்கம் எவர்களுக்காவதுண்டோ? பின்னும் அறிவு கெட்டுப் போய்விட்டதாகு மல்லவா? தங்களுடைய கிருபைக்குப் பாத்திரமான அடியேன் ஈனனுவேனே? தேவரும் - தவமும் - தர்மமும் சகலமும் தாங்களே என்கிறது சத்தியமாய் என்னுடைய மனதில் இருக்கின்றது. அதிருக்கட்டும். மூன்று வகைப்பட்ட உலகங்களையும் இரட்சிக்கின்ற உங்களுக்குக் கோபம் ஜனித்தால், நாங்களோடி யொளிக்கத்தகுந்த அரணுமுண்டோ? பிராண னுடனேயு மிருப்போமா? சுக்கிரீவ மகாராஜாவும் மறந்துபோகவில்லை. சேனை களை யழைத்து வரும்படியான தூதர்களை வகைவகையாக எங்கும் அனுப்பி, அவர்கள் வந்து சேர்வதையே எதிர் பார்த்துக்கொண்டு இருக்கிறார். தர் மத்தை துணையாகக் கொண்டிராநின்ற உங்களிடத்தில் தாம் சொன்ன சொல்லை அழித்து நடந்தால், அவர் உலகத்திலே பிறந்தவரே அல்ல. அது ஒன்று மாத்திரமா? நரகப் பிராப்தியாவதுந்தான் தப்பிப்போமா? ஒருவன் செய்யாமற் செய்த உதவிக்குப் பதில் உதவி ஒன்றுமில்லையாயினும், அவ னுக்கு முன்னே இரணக்களத்திலே போய்ச் சத்துருவை மார்பிலே யுதைத் துக் கொல்லவேண்டும். அது முடியாவிட்டால் சத்துருவினுலாவது தான் உதையுண்டு உயிர் மாயவேண்டும். அப்படியு மில்லாவிட்டால் வேறென்ன இருக்கின்றது? இனித் தேவரீர் இவ்விடத்தில் நிற்கின்றது காரியமல்ல; சத்துருக்கள் அறிந்தாலும் இது சிநேகமற்ற செய்கையாகக் காணும். ஆண் சிங்கத்திற்குச் சமானமான பராக்கிரமத்தையுடைய தாங்கள் கொடுத்த பாக்கியத்தையும், அதை அனுபவிக்கின்ற எங்கள் தமையனுரான சுக் கிரீவ மகாராஜாவையும் வந்து பார்க்கலாமென்று அநுமானென்பவர் சொல்ல, அந்தச் சொல்லைக் கேட்டு இராமானுஜர் கோபமாறித் திருவுள மகிழ்ந்து, இவர்கள் சுவாமியின் கட்டளையை அகங்காரத்தாலே கடக்க வேண்டுமென்று கடந்தவர்களல்ல. தாங்களடைந்த போக பாக்கியத்தில் தோய்ந்தும் தோயாதவர்களா யிராமல் கேவலம் மூழ்கிவிட்டவர்களா யிருந்தது னுலேயே கடந்தார்களென்று சிந்தித்தவராய், அனுமானைப் பார்த்துச் சொல்லுகின்றார்: ஓ அனுமானே! என்னுடைய நெஞ்சிலிருப்பவைகளை அவசி யம் உம்மிடத்திலே சொல்லவேண்டும். ஆகையால் சொல்லுகிறேன்; அவற் றைச் செவ்வையாய் ஆலோசித்துப்பாருமென்று சொல்லத் தொடங்கினர். சுவாமியானவர் பிராட்டியாரைக் குறித்துக்கொண்ட கோபமும், அபிமான மாகிய நெருப்பும், அவருடைய பிராணனை வாட்ட, அதைக் கண்ட நான் சகித் திராமல் இராஜதர்மம் அழியக் கொடுமையுடனே சம்பந்தப்பட்டு, பாவிகள் செய்கிற துஷ்கிர்த்தியங்களைச் செய்வதற்கு மனஞ் சம்மதித்தேன். பழிக்கும் அஞ்சமாட்டேன். ஆயினும் என்னுடைய கோபத்தை நானே தணித்துக் கொண்டு உயிர் தரித்திருந்து சுவாமியினுடைய கோபத்தையும் தணித்து, அவ ருடைய துக்கத்தையும் ஆற்றித் தேற்றுவதிலே பலநாள் கழிந்து போய்விட்

டன. அல்லவென்று எத்தனித்தால் மூன்றுலோகமும் எரிந்து தீய்ந்துபோம். தேவர்களும் மாண்டுபோவார்கள். தர்மமும் இறந்துபோம். விதிக்கும் விதியாய் ஒருவராலும் விலக்கக்கூடாததாய் முடியும். என் தமையனுர் உம்மைக்கண்டு, உம்முடைய இராஜாவைச் சிநேகித்து, ஆபத்து வந்தபோது உதவிசெய்வா னென்று அவனே என்னேப்போல எண்ணி, வழியாய் வரட்டுமென்று பொறுத் துக்கொண் டிருந்கார். இல்லாவிட்டால் தம்முடைய கையிலிருக்கின்ற வில் லிலே ஒரு அஸ்திரத்தை அனுசந்தானஞ்செய்து பிராட்டியாரிருக்கு மிடத்தை அறிந்து வாவென்று அபிமந்திரித்து விட்டால், அந்தக்ஷணம் இந்த அண்டமெல் லாம் தேடித்தெரிந்துவரும். அதை ஒருவராலே தடுக்கக்கூடுமா? அன்று நீங்கள் சொன்ன வார்த்தையின்படி செய்யாமல் காலதாமசப் படுத்திவிட்டது உங்களுக் குத் தர்மமல்ல. ஆயினும் நீங்கள் காலதாமசப் படுத்தினவர்களுமல்ல. அநேக காலமாய் மதத்து அகங்கரித்திருந்த ராட்சதர்களேப் பின்னும் வாழச்செய்தீர் கள். தேவர்களுக்கும், ரிஷீஸ்வரர்களுக்கும், மகத்தாகிய பிரயாசத்தைக்கொடுத் துப்பாவத்தை மேன்மேலும் வளரச்செய்தீர்கள். அல்லாமலும் கோபம் வராத சாந்தமூர்த்திக்குக் கோபம் வரும்படிச் செய்தீர்களென்று இவ்விதமாக லட்சு மணப்பெருமாள் சொல்ல, அனுமானுனவர் நமஸ்காரஞ்செய்து சொல்லுகிறார் : ஓ வேத சாத்திரங்களில் பூரண பாண்டித்தியமுள்ள சாதுரியரே! கேளும். நடந்துபோன காரியங்களேக்குறித்து இனித் திருவுளத்தில் எண்ணவேண்டாம். இந்தக் காரியத்தை நாங்கள் ஏந்திக்கொண்டு அவசியம் முடிக்கிறோம். முடியா விட்டால் இது நிமித்தம் இறந்தாகிலும் தீர்வோம். இதுகளுக்கெல்லாம் அடி யேனே சாட்சியாயிருக்கின்றேன். தங்கள் தமையனுராகிய சுக்கிரீவ மகாராஜா விடத்திற்கு எழுந்தருளுங்கள் என்று அனுமானுனவர் சொல்ல, அதற்கு இலட்சுமணப் பெருமாளானவர், ஐயா! முன்னம் நீர் சொன்னபடி தானே நடந்துவந்தது. இன்னமும் நீர் எப்படிச் சொல்லுகிறீரோ அப்படியே செய் யச் சம்மதித்திருக்கிறேமென்று சொல்லி அனுமானுடனேகூட அச் சுக்ரீவ னுடைய மனதையும் அறிவோமென்று அப்பால் நடந்தார். அதுகண்டு தாரை யானவள் வேலேயொத்த கண்களேயும், அல்லிமலரையொத்த சிவந்த வாயை யும், வில்லேயொத்த புருவத்தையும், அன்னத்தையொத்த நடையையும், மயிலேயொத்த சாயலேயும் தேர்த்தட்டை யொத்த நிதம்பத்தையும், முத்தை யொத்த தந்தங்களேயும், பச்சை மூங்கிலேயொத்த தோள்களேயும், குயிலேயொத்த சொல்லேயும், சுவர்ன கலசத்தையொத்த ஸ்தனங்களேயும், மின்னலே யொத்த இடையையும் குமிழம் பூவையொத்த மூக்கையும், மேகத்தையொத்த அளகத் தையுமுடைய பெண்கள் கூட்டத்துடனே தன் மாளிகையிற் போய்ச் சேர்ந் தாள். அப்போது நீதிசாஸ்திரத்திலே வல்லவர்களா யிருக்கின்ற சில மந்திரி மார்களுடனே வாலி புத்திரனுகிய அங்கதன் வந்து, ராமானுஜருடைய பாத கமலங்களேச் சேவித்துக்கொண்டு பயந்தீர்ந்தான். அத்தருணத்தில் லட்சுமணர் அவனேப்பார்த்து, அங்கதா! சீக்கிரத்தில் உன் பிதாவினிடத்திற் போய் நாம் வந்த செய்தி சொல்லென்று சொல்லினர். அவனும் நல்லது அப்படியே செய் கிறேனென்று பின்னும் அவரைத் தொழுதுகொண்டு சுக்ரீவமகாராஜனுடைய கிரகத்திற்குப்போய், அவனுடைய பாதத்தைத் தடவிப் பிடித்து, அவனே நித் திரையினின்றும் எழுப்பி, ஐயா! இளேயபெருமாள் வந்து இதோ நம்முடையு

வாசலிலே நிற்கிறார். அவருக்குக் கோபம் சமுத்திரத்தைப் பார்க்கிலும் அதிக மாய் மூண்டிருக்கிறது. அது சொல்லிமுடியாது. இவ்விதமாக வந்து விளைந்த தென்று சொன்னன். அந்த வார்த்தைகேட்டுச் சுக்ரீவன் நித்திரை நீங்கி, அங்கே யிருக்கின்ற ஸ்திரீகூட்டங்களை யெல்லாம் அப்புறம் போகச் சொல்லித் தான் எழுந்திருந்து. தன்னிடத்தில் முன்பு அந்த அங்கதன் வந்து சொன்ன சமாசாரம் மதுமயக்கத்தினாலே தெரியாதிருந்தவனுகையால், நாம் செய்த குற் றம் ஒன்றுங் காணுமே. அப்படியிருக்க, இளையபெருமாள் கோபஞ்செய்ய வேண்டிய காரணம் என்ன? அப்பா அங்கதா! என்று சுக்ரீவமகாராஜன் கேட்க, அங்கதகுமாரன் சொல்லுகிறான்: இன்னதினத்தில் வருகிறேமென்று உடன்பட்டுச் சொல்லிவந்து அந்த நாளில் நீர் போய்ச்சேரவில்லை. போகபாக்கி யத்தை அடைந்து அதையே ஒரு ஆச்சரியமாக நினைத்துச் செய்தநன்றி மறந்த தாகவும், அபத்தம் சொன்னதாகவும் எண்ணி அவருக்குக் கோபம் உண்டா யிற்று. அத் தருணத்திலே அந்தச் செய்கையின் நயத்தையறிந்த அநுமான் போய் வேண்டிக்கொண்டபடியால் இன்னம் நம்முடைய பிராணன் நிலைத்திருக் கின்றது. அவர் வந்த வேகத்தைக் கண்டு வானரவீரர்கள் கோட்டை வாயிற் கதவைச் சாத்தி, மலைகளை மேன்மேலும் கொண்டுவந்து அடுக்கி, கோபாக் கினியானது பொங்கி எழ, அவருடனே யுத்தஞ் செய்யும்படி எத்தனித்திருந் தார்கள். அதை ராமானுஜர்கண்டு, தம்முடைய திருவடியினால் அக்கோட்டை வாயிற் கதவை யுதைத்தார். உதையாததற்கு முன்னமே அந்த வாயிலும் கத வும் தெற்கு வடக்காகிய இருபுறத்து மதிலும் இடிந்து சிதைந்து தூள்தூளாய்ப் போயின. அதைக் கண்ட வானர சேனைகள் எத்தன்மையானதுக ளென்று நான் சொல்லுவேன்? பயந்து பறந்து ஓடியதுகளோ? எந்த மலைகளிலேதான் ஒளிந்ததுகளோ? இன்னம் தெரியவில்லை. இதைக்கண்டு எங்கள் தாயார் ஸ்திரீ கூட்டத்துடன் லட்சுமணப் பெருமாளுக்கு எதிரேபோய் நிற்க, அவர் ஸ்திரீகளின் வடிவத்தைப் பாராதவரானபடியினாலே மனதினிடமாகப் பொங்கி எழுந்த கோபத்துடனே அப்புறம் அடிபெயர்த்து வையாமல் வருத்தமுற்று அந்த இடத்தில்தானே நின்றார். அந்தச் சமயத்தில் எங்கள் தாயானவள் அவருக்கு இனிய வார்த்தைகளைச் சொல்லி, சுவாமி! எங்களிடத்திற்குத் தாங் கள் இப்பொழுது தயவுசெய்து வந்த காரியமென்ன? அருளிச் செய்யவேண்டு மென்றாள். அவர் வந்த காரியத்தைச் சொன்னர். அந்த வார்த்தைக்கேட்டு எங்கள் தாயானவள் அவருடைய கோபத்தையாற்றி, சுவாமி! இவர்கள் தங் கள் ஆக்கினையை மறந்து சும்மா இருக்கவில்லை. வானர சேனைகளைச் சீக்கி ரத்தில் கொண்டு வரும்படி தூதர்களைப் போகவிடுத்து, அதுகள் வந்து சேரு கிறதைக் குறித்துத்தான் வழிபார்த்துக்கொண் டிருக்கிறார்களென்று சொன் னாள். இதுகள் இவ்விடத்தில் நடந்த செய்தி யென்று அங்கதகுமாரன் சொன் னான். இப்படியவன் சொல்லக்கேட்ட சூரிய குமாரனுகிய சுக்ரீவன் சொல்லு கிறான்: அப்பா! அந்த மகானுபாவர்கள் கோபித்து எதிர்த்தால் அவர் களுக்கு எதிரே நிற்கத் தக்கவர்கள் யார்? அப்படிப்பட்ட வில் வீரர்கள் உக் கிரங்கொண்டு வந்தால் எனக்கு வந்து சொல்லாமல், நீங்கள் தானே இப்படி யெல்லாம் ஏன் செய்தீர்கள். நீ தெரிந்தவனு யிருக்கின்றையே யென்று சுக்ரீவ மகாராஜன் சொல்ல, அங்கதகுமாரன் பின்னும் சொல்லுகிறான்: ஐயா!

முன்னே ஒருதரம் வந்து எழுப்பிச் சொன்னேன். உமக்கு மயக்கந் தெளியாமையால் நீர் அதை அறியவில்லை. அப்பால் வேறொரு உபாயமில்லாதது கண்டு அநுமானுடன் சொல்லுகிற நிமித்தமாய்ப் போனேன். இனி நீர் க்ஷணப் பொழுதுக்குள்ளே சீக்கிரமாய்ப் போய்க் காண்கிறதே உத்தமமென்று சொன்னேன். அந்த வார்த்தையைக் கேட்டுச் சுக்ரீவன் மனது மிகவுந் தெளிந்து சொல்லுகிறான் : அப்பா! அவர்களால் நான் பெற்ற சாம்பிராஜ்ஜியத்தைப் போல மற்றொருவர் பெற்றிருப்பார்களா? அப்படிப்பட்ட அபரிமிதமாகிய சம்பத்தை எனக்குக்கொடுத்து ரட்சித்த மகானுபாவர் படுகின்ற வருத்தத்தையெல்லாம் கள்ளுண்ட மயக்கத்திலேலே மறந்துபோனேன். ஆகையால் நான் அவர்களுக்காண வெட்கப்படுகிறேன். இப்பொழுது எனக்குச் சம்பவித்த இதைவிடப் பேதமையான காரியம் வேறென்ன இருக்கிறது? இவள் தாயென்றும், இவள் பெண்சாதியென்றும் தெரியாமலிருக்குமாலை, மதுவுண்பது எப்படி தர்மமாகும்? கொலைசெய்தல், களவு செய்தல், பொய் பேசுதல், கள்ளுண்டல், குருவை நிந்தித்தல் ஆகிய இந்தப் பஞ்சபாதகத்தில் ஒரு பாதகமாமல்லவா? அல்லாமலும் ஜெனித்தது முதலாய் நாம் பிரபஞ்சமாயைக்கு உட்பட்டு மயங்குகின்றோம். அந்த மயக்கத்தையே ஒழிக்க நமக்குத் திராணியில்லாம லிருக்க. அதற்குமேல் இந்த மயக்கத்தையும் அடைந்தோம். விவேகத்தைப் பெற்றுத் தீவினையை யொழித்தவர்கள் ஜனன மரணத்தை நீக்கி முக்தி யடைவார்களென்று சாபல்யமில்லாத பரம ஞானிகளும் வேதமும் சொல்லவும், அதை யோசியாமல், மதுவை அதிலே நெளிகின்ற புழுவையெடுத்து எறிந்துவிட்டு மனங்கூசாமல் குடித்து உழல்கின்றது எப்படியிருக்கின்றதென்றால், வீடுபற்றிக்கொண்டு எரியும்போது அந்த நெருப்பை நெய்யினலவிக்கின்றதுபோல் இருக்கின்றது. ஜீவாத்மநிலே இப்படிப்பட்ட தென்றும், பரமாத்மநிலே இப்படிப்பட்ட தென்றும் ஒருவன் அறிந்தால்தான் அவனுடைய பிறவித் தடுமாற்றம் போமென்று வேதங்களும் மற்ற சாஸ்திரங்களும் சொல்லுகின்றதுகள். அப்படியிருக்க முதல் தன்னிலேயே அறியாதவனுய் ஜனன வியாதியால் அழுந்தியிருக்கிறவன், அதன்மேலும் கள்ளுண்டு மயங்குகின்ற மயக்கத்தையா பெறுகின்றது? அஞ்சி அபயமென்றடைந்தவர்களே ரட்சித்தவர்களும், பிர்மக்கியானிகளும், சுகதுக்கங்களே ஒளித்த எதீஸ்வரர்களும் மோட்சமடைந்தார்களல்லாமல்; ஒளிந்திருந்து மதுவையுண்டு உலகத்தாரெல்லாம் அறிந்து நகைக்க அங்கும் இங்கும்ஓடிக்களித்தவர்களில் ஒருவராவது மோட்சமடைந்ததைக் கண்டதுண்டா? சத்துருக்களே ஜெயித்ததையும், சிநேகிதர்கள் செய்த உதவியையும், தாங்கள் கற்ற கல்வியையும், பிரத்தியட்சமாகக் கண்ட அனுபவங்களையும், சாஸ்திரக்கியங்கள் சொல்லியிருக்கின்றதையும், தங்களுக்கு செல்வம் வந்து சம்பவித்ததையும், தரித்திரத்திலுல் துன்பம் வந்ததையும், தெளிவாக அறிவார்களாகில் அதைவிட உறுதி வேறொன்றுண்டோ? வஞ்சனையும் - களவும் - பொய்யும் - தெரியாமையும் - துராசாரமும் தஞ்சமென்றவர்களே ரட்சியாமல் நீக்கி விடுகின்றதும் இறுமாப்பும் கள்ளுண்டு மயங்குகின்றவர்களுக்கு உண்டாகும். லட்சுமீகடாட்சமும் மாறிப்போம். விஷமானது கொல்லுமே யல்லாமல் மதுவைப் போல நரகத்தைத் தரமாட்டாது. மதுவினலே கேடுவருமென்று நான் கேள்விப்பட்டேன். குடித்தபின்பு அந்தச் சொல்லின் பிரயோஜனத்தை அனுபவ

மாகக் கண்டேன். அந்தமட்டில் அநுமானுனவன் நீதியையுடைய கல்வியினு லல்லவா மதுவைக் குடியாமல் விலக்கியது. இனிச் சொல்லுகின்றதில் என்ன பயன்? அதிசீக்கிரமாய் வந்த வீராதிவீரராகிய இலட்சுமணர் மிகவும் கோபிப் பாராகில், நானும் என் படைத்தலைவர்களும் மற்றும் என் குலத்தாரெல்லாரும் இன்றே இறப்பதற்குச் சந்தேகம் எவ்வளவுமில்லை. அப்பா அங்கதா! நான் இந்தக் கள்ளினுலாகிய பெருங்கேட்டைக் குறித்து நெஞ்சம் திடுக்குற்றுப் பயப் படுகிறேன். ஆகையால் அதைக் கையினுலே தொடவுங்கூடாது. மனதில் நினைக்கிறதும் யுக்தமல்லவென்று பலவாறுக எடுத்துச்சொல்லி, மற்றும் இனி அந்தக் கொடிதாகிய மதுவை யிச்சித்தேனுகில் லோகபிராட்டியனுகிய ஸ்ரீராமச் சந்திரனுடைய திருவடிக்கு அபசாரப்பட்டவ னுவேனென்று பிரதிக்கினை செய்து, இளையபெருமாளை எதிர்கொண்டுபோய்க் காண்பதற்கு உரிய சத்திர சாமர முதலாகிய பரிவட்ட முதலியதுங்கொண்டு இன்னமும் நீயே போய்க் காணென்று அங்கதனை அனுப்பிவிட்டு, தன்னுடைய பட்டமகிஷிகளும் மற்றப் பரிஜனங்களும் தன்னைச் சூழும்படி தான் வந்து ராஜவரண்மனையின் தலை வாயிலில் வந்து நின்றுகொண்டு, லட்சுமணர் வரவை எதிர்பார்த்திருந்தான்.

இவனிப்படியிருக்க, இளையபெருமாள் வருவதைக் குறித்து முன்னதாக வீதியினிடமெல்லாம் சந்தனமும், வாசனைப் பொடிகளும், அகிற்புகையும், பூரண கலசங்களும், முத்துவிதானங்களும், மகரதோரணங்களும், துவஜங்களும், சங்கு முதலாகிய பல வாத்தியங்களும், மங்கலபேரியும் நிறைந்ததுகள். அப்போது துல்யமாகிய பளிங்குக்கற்களால் செய்யப்பட்ட சுவர்த்தலங்களிலும் சிரேஷ்ட மாகிய வச்சிரத் தூண்களிலும் இளையபெருமாளுடைய திருமேனியின் சாயைப் போல பிரதிபலித்தலால், பார்த்தவர்களெல்லாம் சந்தேகிக்கும்படி கையில் தாங்கிய வில்லுடனே அவரைப்போல ஆயிரம் புருஷ சிரேஷ்டர்கள் அந்த நகரத்தில் வந்ததுபோல அவர் வருகின்ற சமயத்தில், அங்கதகுமாரன் வந்து, இலட்சுமணருடைய உபயசரணங்களையும் வணங்கிக் கைகூப்பிக் கொண்டிருந் தான். அவனைப் பார்த்து, உங்கள் இராஜாவாகிய சுக்ரீவன் எங்கிருக்கிறு னென்று கேட்டார். அதற்கவன் அவர் தேவரீரை எதிர்கொள்ளும்படி அரண் மனை யாசாரவாயிலில் இருக்கிறுரென்று சொல்லினன். இப்படி சொல்லிக் கொண்டிருக்குமளவில் ஸ்திரீஜனங்கள் கதம்பப்பொடிகளை இறைத்து வஸ்தி ரங்களை வீசிச் சாமரைகள்போட, பூரணச் சந்திரனைப்போல முத்துக்குடைகள் பிரகாசிக்க, ஸ்ரீ ராமானுஜருக்கு முன்பாக வானர குலாதிபதியாகிய சுக்ரீவ மகாராஜன் வந்தான். இளைபெருமாளுடைய திருவடியை அர்ச்சித்துப் பூஜிப் பதற்கு ஏற்ற அர்க்கிய முதலாகிய பூஜாதிரவியங்களெல்லாம் ஸ்திரீகள் ஏந்தி வர, மங்கலமுரசுகள் மேகம்போல முழங்க, முனீஸ்வரர்கள் வேதங்களோத, சங்கீத ஓசை அஷ்டதிக்குகளையும் அளாவ, இந்தச் சிறப்பை தேவர்களுங்கண்டு மகிழ்ச்சியடைய, ஸ்திரீ கூட்டங்கள் நட்சத்திரங்களைப்போலப் பிரகாசிக்க, ஆகாயத்தில் உலாவுகின்ற சோடசகலைகளையுடைய சந்திரன் ஒரு மலையின் மேல் உதயமானதுபோலவும், அந்தக் கிஷ்கிந்தா பர்வதத்தில் உதித்த தன் பிதாவாகிய சூரியனைப்போலவும், பல சின்னங்களுடனே இளையாழ்வானை எதிர் கொண்டு அழைக்கும்படி வந்த அந்தச் சுக்ரீவமகாராஜனை இலட்சுமணரானவர்

நேரிலே கண்டார். கண்டமாத்திரத்தில், அவருக்கு அதிக கோபம் ஜனித்தது. அப்படி எழுந்த கோபத்தைத் தமது தர்ம நினைவினுலே தாமே தணித்துக்கொண்டார். பின்பு இருவரும் ஒருவரை யொருவர் மலையப்.பார்க்கிலும் மிகவும் உயர்ந்த தோள்களால் தழுவிக்கொண்டு, பெண்கள் கூட்டத்துடனேயும், வானர வீரர்களுடனேயும், மகா சம்பிரமமாய்ப் போய் சுவர்ணமயமாகிய மாளிகையில் சேர்ந்தார்கள். இப்படிச் சேர்ந்தவுடனே, சுக்ரீவன் அவ்விடத்தில் அதிக கிங்காரமாக ஜோடித்திருக்கின்ற சிங்காசனத்தை அன்புடனே காட்டி, இதிலெழுந் தருளுங்களென்று சொல்லினன். இராமாநுஜரானவர் ஸ்ரீ மகாலட்சுமி நாயகராகிய நம்முடைய சுவாமியானவ ரங்கே புல்லின்மேல் எழுந்தருளியிருக்க, எனக்கு இந்த இரத்ன சிங்காசனந் தகுமாவென்று நினைத்தவராய்ச் சொல்லுகின்றார்: கல்லைப்போலும் கடினமாகிய நெஞ்சினையுடைய கைகேசி செய்த வஞ்சனையினுலே மணிமுடி துரந்து வந்து ஆரணியத்திலே எங்கள் தமையனுர் புல்லின்மேல் தங்கியிருக்க, நான் பொன்னினுற் செய்து புஷ்பத்தால் அலங்கரித்திருக்கின்ற மிருதுவாகிய அணையின்மேல் இருக்கவும் வேண்டுமா? என்று சொன்ன சொல்லைக் கேட்கவே, சூரியகுமாரனுகிய சுக்ரீவன் நின்றபடியே விம்மிக் கண்களிலே ஜலம் பெருகும்படியிருக்க, மநுவம்ச சிரோமணியாகிய இலட்சுமணரும் நின்றபடியே யிருந்தார். அவ்விடத்தில் இருக்கின்ற பால்யர்களும், பெரியோர்களும், ஸ்திரீ கூட்டங்களும், மனதுநொந்து உருகிக் கண்ணீரைச் சிந்தி அழுது, ஐம்பொறிகளையும் அடக்கினவர் போல ஸ்தம்பித்து ஒரு உத்தரமுஞ் சொல்லத் தெரியாதவர்களாய் இருந்தார்கள். அப்போது சுக்ரீவன் சுவாமி! திருமஞ்சனமாடித் தாங்கள் போசனஞ் செய்தால் நாங்கள் கிருதார்த்தர்களாய் உஜ்ஜிவிப்போமென்று சொல்லினன். அதற்கு இராமாநுஜர் சொல்லுகிறார்: நாங்கள் வருத்தமும் நிந்தையுமாகிய இரண்டும் வயிறு நிரம்பும்படி யிருக்கின்றோமென்றால் எங்களுக்கு இன்பப்படத்தக்கது எது? அல்லவென்று ஒரு அபேட்சை யுண்டாயிருந்தாலும் மனது வேறுபட்டதனால் அமிர்தமும் கசக்கும். அபகரித்தியாகிய அக்கினியை யவித்து எங்கள் ராமபிரானுடைய தேவியாரைத் தேடி இன்ன விடத்தி லிருக்கிறரென்று மாத்திரம் காட்டுவையேயானால், அதுவே கங்கா ஜலத்தைக் கொண்டு ஸ்நானஞ் செய்வித்துத் திருப்பாற்கடலிற் பிறந்த தேவாமிர்தத்தைப் புசிக்கச் செய்ததற்குச் சமானம். பின்னும் பிராணனைக் கொடுத்ததுமாம். மேலும், காய் - கனி - கிழங்கு - இலை முதலானதுகளில் எங்கள் சுவாமி அமுதுசெய்து சேஷமாகிய பிரசாதமே உண்கின்ற தல்லாமல், நான் வேறொன்றும் இச்சிக்கிறதே இல்லை. அல்லவென்று இச்சித்தால் அது நாயுண்ட எச்சிலை உண்டதற்குச் சமானமாம். இதற்கு ஐயமேயில்லை. அல்லாமலும் இன்னம் ஒன்று இருக்கிறது. நான் இனி அவ்விடத்திற்குப் போய்க் கந்தமூல பலாதிகள் ஏதாகிலும் கொண்டுவந்து திருத்திக் கொடுத்தால் தான் நம்முடைய தமையனுர் பட்சிக்கவேண்டியது. ஆகையால், இவ்விடத்தில் இப்பொழுது ஒரு க்ஷணமாகிலும் காலதாமதமா யிருக்கின்றது நன்மையல்ல வென்று சொன்னர். அது கேட்கவே சுக்கிரீவன் மனது உருகி, சுவாமி! துன்பம் அனுபவிக்கிறது புத்தியில்லாத குரங்குகளாகிய எங்களுக்குச் செல்லுமேயல்லாமல், உங்களைப் போன்ற மகாபுருஷர்களுக்குக் கூடுமா? என்று

சொல்லி உயிர் நிலையழிந்து விம்மி, அந்தக்ஷணமே எழுந்திருந்து, கண்களில் நின்று நீர் துளித்துளியாய் விழப் போகபாக்கியங்களை யெல்லாம் வெறுத்து அநுமானைப் பார்த்து, ஒரு வசனஞ் சொல்லுகின்றான் : அநுமானே! இவ்விடத்திலிருந்து போயிருக்கின்ற தூதர்கள் இன்னம் வராமையால், நீரும் போய் அதிசீக்கிரமாக வானர சேனைகள் உள்ளதுகளை யெல்லாம் கூட்டிக் கொண்டு வந்துவிடும். நீரிங்கேதானே நில்லுமென்று சொல்லி ஸ்ரீ ராமபிரானுடைய சேவைக்கு இளையபெருமாளுடனே கூடச் சுக்ரீவ மகாராஜன் புறப்பட்டான். அங்கதன் தன்னுடனே வரவும், வானரப் படைத்தலைவர்கள் முன்னே போகவும், ஸ்திரீகளுடைய மனது தொடர்ந்து வரவும், வழிகள் பின்னிட்டுப் போகவும், ஒன்பதினாயிரங் கோடி வானரசேனைகள் முன்னும் பின்னும் இருபக்கஞ் சூழ்ந்துவரவும், பந்துஜனங்கள் இடதுபுறத்திலும், வலது புறத்திலும் வரவும், கொடிகள் அநேகமாய்ப் பறக்கவும், பேரிகை இடிபோல் முழங்கவும், சங்கவாத்தியங்கள் ஒலிக்கவும், காற்பொடிகள் எழும்பிப் பூமியையும் ஆகாயத்தையும் மறைக்கவும், சுவர்ணத்தினாலும், வெள்ளியினாலும், முத்தினாலும், இரத்தினங்களாலும், பளிங்கினாலும் விலையுயர்ந்த முகவல் முதலாகிய பட்டுகளினாலும் விசித்திரமாகச் செய்யப்பட்ட அநேகமாயிரம் தண்டிகைகள் நெருங்கவும், வெள்ளைக் குடைகள் சூழவும், இளையபெருமாள் பாதம் வருந்த பூமியில் நடந்துவருகிறபடியினாலே சூரியகுமாரனாகிய தானும் தன் காலிற் கட்டிய வீரகண்டைகளானது சப்திக்கச் சிவிகைமீது யேறாமல், தரையிலே கால்நடையாக நடந்தான். இப்படி நடந்த அந்தச் சுக்ரீவன் ஸ்ரீ ராமச்சந்திரனிருக்கின்ற ரிஷியமுக பர்வதத்தினிடத்தில் வந்து, வானர சேனைகளெல்லாம் பின்னிட்டு நிற்க, அங்கதன் பக்கத்தில்வர, சீக்கிரத்தில் லட்சுமணருடனே தானும் தன் ஆசையும் முன்னேயோடி, கணிக்கப்படாத ராஜசம்பத்தின் அபேட்சை நீங்கி, சுவாமி திருவடியைச் சேவிக்கும்படி முன்னாளிலே ராஜ்ஜியாபேக்ஷையைத் துறந்து சித்திரகூடபர்வதத்தை நாடிவந்த புண்ணியாத்துமாக்கள் சேவிக்கின்ற பரதாழ்வானைப்போலப் போய், கொடிப்பொழுதாவது பிரியாத தம்பியும் பிரியும்படி உலகமுடிவிலே தான்மாத்திரம் சேஷமாயிருக்கின்ற தன்னைப்போலவே தனியே எழுந்தருளியிருந்த ஸ்ரீ ராமபிரானை மார்பிலணிந்த ஹாரங்கள் பதக்கங்கள் பூமாலை முதலாகிய சகலமும் பூமியிற்படியவும், சுவாமியினுடைய திருவடிகள் தன் சிரசிலே பொருந்தவும், சாஷ்டாங்கமாக சேவித்தான். அப்படிச் சேவித்த அன்பனாகிய சுக்ரீவனைப் பெரியபெருமாளானவர் தம்முடைய மார்பிலிருக்கின்ற மகாலட்சுமியும் திருமேனி வருந்தக் கைகளினாலே தழுவிக்கொண்டு, மூண்டெழுந்த கோபமானது ஓடியொளித்து முன்புபோலக் கிருபைதோன்ற அவனைச் சமீபத்தில் ஆசனங் கொடுப்பித்து இருக்கச்சொல்லிச் சில வினவுகின்றார். அப்பா சுக்ரீவா! உன்னுடைய ராஜரீகமும் உன்னுக்கினையும் செவ்வையாய் நடக்கின்றதுகளா? உன்னாலே சம்ரக்ஷணை செய்யப்படுகின்றதுகளா? உன் குடையானது தன் குடையாயிருக்கின்றதா? என்று வினவினார். இந்த உறுதிப் பொருளையுடைய வார்த்தைகளை ஸ்ரீ ராமர் கேட்டபொழுது சுக்ரீவன், சுவாமி! உலகத்தைச் சூழ்கின்ற இருளையெல்லாம் தகிக்கின்ற சூரியபகவானைப்போலத் தாங்கள் இங்கு எழுந்தருளியிருக்க, தங்களுடைய கிருபைக்குப் பாத்திரமாகிய எனக்கு என்ன குறையிருக்

கின்றது? மற்றும் எதுதான் அருமையானதென்று சொல்லிப் பின்னும் சொல்லுகிறான்: தேவரீர் கடாக்ஷித்தருளிய பாக்கியத்தை யடைந்து மதிமயங்கி, தாங்கள் ஆக்கியாபித்த ஊழியத்தையு மறந்திருந்து, அற்பமாகிய என் குரங்கின் புத்தியை நன்றாகத் துலக்கிக் காட்டினேன். நான் திக்குகளெல்லாம் ஆராய்ந்து தேடித் தேவியாரைக் கொண்டுவந்து கொடுக்கிறேனென்று சம்மதித்துச் சொல்லியிருந்தும், அந்தப்படி செய்யாமல் பிராட்டியாரைக் குறித்துத் தாங்கள் திருவுளம் வருந்தியிருக்க நான் போக பாக்கியங்களை அனுபவித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய செய்கையும் நிலைமையும் இப்படிப்பட்டவைகளா யிருக்குமானால், இனி நான்செய்யுங் காரியமும் ஆண்மையும் சொல்ல வேண்டுமா? என்று சுக்ரீவன் சொல்ல, ஸ்ரீ ராமர் கிருபைகூர்ந்து, சுக்ரீவா? என்னிடத்திலே பரதன் எப்படியோ அப்படி அன்புள்ள நீ இப்படிச் சொல்லலாமா? சகல விஷயங்களையும் நன்றாக யோசித்து அறிகின்ற விவேகியாகிய அநுமான் எங்கே யிருக்கிறான்? ஏன் வரவில்லையென்று கேட்க, சுக்ரீவன் சொல்லுகிறான். சுவாமி! வானரசேனையை அழைத்து வருகிறதற்கு ஆயிரங் கோடி தூதர்கள் போயிருக்கிறார்கள். அவர்கள் சீக்கிரமாக வராததினால் அவரும் போயிருக்கிறார். சேனைகளுடனே இன்றையத் தினத்திலாவது அல்லது நாளையத் தினத்திலாவது வந்துசேர்வார். இப்பொழுது இங்கே வந்து தங்கள் ஏவலைச் செய்யக் காத்துக்கொண்டிருக்கின்ற சேனைகள் ஒன்பதினாயிரங்கோடி. மற்றச் சேனைகள் வந்து சேரத்தக்க தவணைநாள் நாளையத்தினமாகையால், அதுகள் வந்த பின்பு செய்யவேண்டியதைக் குறித்துப் பேசிக் கொள்ளலாமென்று சொல்ல, அந்த வசனத்தைக் கேட்டு ஸ்ரீ ராமர் சந்தோஷமாகி, அப்பா சுக்ரீவா! அது உனக்கொரு அருமையாகுமா? நல்லது பகற்பொழுது போய் விட்டது. இப்பொழுது நீயும் பட்டணத்திலே போயிருந்து சேனைகள் வந்தவுடனே அதுகளோடு வாவென்று விடை கொடுத்தார். அப்படியே சுக்ரீவன் சுவாமியைத் தொழுதுகொண்டு தன் பட்டணத்திற்குப் போனான். பின்பு சுவாமி அங்கதனைப் பார்த்து இனிய வார்த்தைகள் சொல்லி, நீ போய் உன் பிதாவுடனே கூடவிருந்து அவன் வரும்பொழுது வாவென்று அனுப்பி விட்டு, கமலநேத்திரங்களையுடைய தாம் தம்பியுடனே இதயகமலத்திலே சீதாபிராட்டியார் எழுந்தருளி யிருக்க அவ்விடத்தி லிருந்தார். இவ்விதமாக யிருக்கும் பொழுது சுவாமியானவர் திரிலோகத்திலும் ஒங்கிய கீர்த்தியையுடைய இளைய பெருமாளை அவர் சுக்ரீவனிடத்திற் போனதும் அங்கு நடந்ததுகளுமாகிய சமாசாரங்களை யெல்லாம் ஒன்றுவது ஒளியாமல் சொல்லென்று கேட்க, அவர் அந்தயிடத்தில் நடந்த செய்திகளை யெல்லாம் சவிஸ்தாரமாகச் சொன்னார்.

கிஷ்கிந்தைப் படலம் முற்றிற்று.

வானரத்தானைகாண் படலம்

இப்படி லட்சுமணர் சொன்னதுகளை யெல்லாம் கேட்டு சுவாமியானவர் அன்று ராத்திரி அந்த ரிஷியமுக பர்வதத்திலிருக்கச் சூரியனனவன் மறுநாள் உதயமானன். உதயமாகவே முன்பு வானரச் சேனைகளை அழைக்கும்படி போயிருந்த தூதர்கள் அழைக்க, பத்துநூராயிரம் மதயானைகளின் பலமுடைய வானரப் படைத்தலைவர்கள் ஆயிரம்பேர் சூழப் பதினாயிரங்கோடி வானர சேனைகளுடனே சதவலி யென்பவன் வந்தான். ஒவ்வொன்று மகமேருவை யும் பெயர்த்தெடுக்கத்தக்க பலமுடையதுகளாகிய பத்துலட்சங்கோடி வானர சேனைகளுடனே சுசேணன் என்னும் பெயரினையுடைய படைத்தலைவன் வந் தான். முடிவுகாணப்படாத சமுத்திரத்தையும் ஒரு இமைப்பொழுதில் கலக்கிச் சேறுசெய்யத்தக்க பலமுண்டாகிய நாற்பத்தெண்ணாயிரங்கோடி வானர சேனைகளுடனே சுக்ரீவ மகாராஜன் பெண்சாதியாகிய உருமையின் தகப்பன் வந்தான். பெரிய பர்வதத்திற்குச் சமானமாகிய ஸ்தூல தேகத்தையுடைய ஐம்பதுலட்சங்கோடி வானரசேனைகளுடனே தேவலோகத்திலும் பூலோகத்தி லும் பிரசித்தமாகிய கீர்த்தியையுடைய ஆஞ்சனேயரைப் பெற்ற கேசரி என்ப வன் வந்தான். ஒவ்வொன்றே சூரியனுக்கும் முடிவுண்டாகும்படி கோபிக்கத் தக்கதுகளாயும் அகங்காரம் பிறந்தால் உலகங்களையும் குத்திக் குமைக்கத்தக்க துகளாயு மிருக்கின்ற நாலாயிரங்கோடி வானரசேனைகளுடனே கவாட்ச னென்பவன் வந்தான். பூமியைக் கொம்பிலெடுத்த ஆதிவராகத்தின் பலமும் எவ்வளவென்று சொல்லும்படி வச்சிரமலைகளை மயிர்முனையில் ஒட்டிக்கொண் டிருக்கின்ற தூசுகளாகவுடைய மகா பலமுண்டாகிய ஆயிரங்கோடி கரடி சேனைகளுடனே இடும்பனென்பவன் வந்தான். கொடிதாகிய ரௌத்திரத்தை யுடைய பன்னீராயிரங்கோடி வானர சேனைகளுடனே மலைபோலப் பருத்த காத்திரத்தை யுடையவனும், கோபத்தால் ஆலகால விஷம்போலவும், பிரளய கால இடிபோலவும், யாவரும் நடுங்கத்தக்கவனுமாகிய பனச னென்பவன் வந் தான். இடியோசையும் கடலோசையும் அஞ்சும்படி கெர்ஜ்ஜிக்கின்றதுகளும், அதிவேகத்தை யுடையதுகளும் பொல்லாத எமனுக்கு ஒப்பானதுகளுமாகிய பதினேந்துகோடி வானரசேனைகளுடனே நீலனென்பவன் வந்தான். முப்பது கோடி வானரசேனைகளுடனே கவையனென்பவன் வந்தான். ஆயிரத்தறு நூறுகோடி வானரசேனைகளுடனே சாம்பனென்பவன் வந்தான். இருநூறு லட்சங்கோடி வானர சேனைகளுடனே துன்முகனென்பவன் வந்தான். கோடா கோடி நூறாயிர வானர சேனைகளுடனே துமிந்த னென்பவன் வந்தான்.

நூறு லட்சங்கோடி வானரசேனைகளுடனே மயிந்தனும் கெஜகோமுக னும் வந்தார்கள். ஒன்பதுகோடி வானரசேனைகளுடனே ரிஷபனென்பவன் வந்தான். எண்ணிறந்தகோடி கருமுக வானரசேனைகளுடனே தீர்க்கபாதக னும் வினதனும் இரம்பனும் வந்தார்கள். பஞ்சாயுதங்களைக் கையிலேந்திய மகா விஷ்ணுவாகிய ஸ்ரீ ராமரைத் தரிசிப்பதற்கு பூமிதாழவும் திக்கிடம் சிறிதென்று சொல்லவும் சஞ்சரிக்கின்ற இருபத்தையாயிரங்கோடி வானரசேனைகளுடனே

அனுமாரானவர் வந்தார். தேவர்களும் எப்படி முடியுமோவென்று பிர்மிக்க வும். காலனும் மனமயக்கங்கொள்ளவும், நூறுயிரங்கோடி வானர சேனைக ளுடனே தெய்வதச்சனென்கிற மயனுடைய குமாரனுகிய நளனென்பவன் வந் தான். ஸ்ரீ ராமருடைய அம்புக்கூட்டிலிருக்கின்ற பாணங்கள்போல அநேகர் அநேகமாகிய சங்கைகளையுடைய வானரக்கூட்டங்களுடனே கும்பனும் சங்க னும் வன்னியும் ஆகிய படைத்தலைவர்கள் வந்து சேர்ந்தார்கள். இப்படி பர்வ தத்துக்கு ஒப்பாகிய ஸ்வரூபத்தையும், இடிமுழக்கமும் கடல் முழக்கமும் அஞ்சு கின்ற குரலோசையும், கண்களில் நெருப்பு ஜொலிக்கின்ற கோபக்குறியை யும், தேவர்களும் நடுங்குகின்ற சௌரியத்தையும், சக்கரம் போலவும் காற் றைப்போலவும், திரிகின்ற அதிவேகத்தையும், கூற்றுவனிலும் அதிகமான கொடுமையையும், மிதமற்ற பராக்கிரமத்தையு முடையதுகளா யிருக்கின்ற வெண்முக வானரங்களுங் கருமுக வானரங்களும் செம்முக வானரங்களும் கரடிகளும் வந்து ஏக கூட்டமாய் கூடியதுகள். இந்தச் சேனைகள் விழுந்து குளித்தால் ஏழு சமுத்திரமும் குழம்பிச் சுவறி உலர்ந்து தூளாய்ப் பறந்து போம். இதுகள் ஒருபக்கத்தில் சாய்ந்தால் அண்டகடாகமும் மேருவும் ஒரு மிக்கச் சாய்ந்துபோம். சஞ்சரித்தால் பூமியில் ஒரு எள்ளிடுதற்கும் இடமில்லா மற்போம். ஒவ்வொரு குரங்கு கோபித்ததாகில் சூரியனும் அக்கினியும் எரிந்து கரிந்துபோம். உண்ண ஏற்பட்டால் அநேக அண்டங்களும் ஒவ்வொரு வான ரம் ஒவ்வொருபிடி அள்ளிக்கொள்ளுகிறதற்கே போதாது. கண்ணினுலே பார்த்தால் அந்தத் திரிநேத்திரனுகிய ருத்திரமூர்த்தியையும் ஜெயிக்கும். ஒடிக்க வேணுமென்றுல் மகமேரு பர்வதத்தையும் வேரோடே ஒடித்துவிடும். இடிக்க வேணுமென்றுல் அண்டத்தின் முகட்டையும் எட்டியிடிக்கும். பிடிக்கவேணு மென்றுல் காற்றினையும் கூற்றினையும் ஒடிப்பிடிக்கும். குடிக்கவேணுமென்றுல் சப்த சமுத்திர ஜலத்தையும் வரளும்படி குடிக்கும். இவ்விதமாகிய சேனைகளுக் குச் சேனைநாயகர்கள் இந்தத் திசைகளைத்தாண்டி அப்பாலுங் குதிக்கத்தக்க வர்களும், தங்கள் இராஜா எதைச்சொன்னுலும் அதை அந்த க்ஷணம் முடிக் கத் தக்கவர்களுமாகிய அறுபத்தேழுகோடி வானரர்கள். அவர்கள் இந்தச் சேனைகளைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அப்படி வந்த படைத்தலைவர்கள் சப்த சமுத்திரத்திலும் அதிகமென்று சொல்லப்பட்ட வானரசேனைகளை வெளி யிலே நிறுத்திவிட்டு, அழைக்கவந்த தூதர்களுடனே கூடச் சுக்கிரீவ மகா ராஜாவினுடைய சமுகத்துக்குப்போய், சுவாமீ பராக்! என்று சொல்லி வணங்கினர்கள். இப்படி அந்தச் சேனைகள் வந்து சேர்ந்ததுகளென்று மிகுந்த அன்புடனே விண்ணப்பம் செய்தான். அதுகண்டு ஸ்ரீ ராமர் ஜானகி வந்து சேர்ந்ததுபோல முகமலர்ந்து திருவுளமகிழ்ந்து, அச்சேனையைப் பார்க் கிற நிமித்தம் அங்கே வேறொரு உயர்ந்த மலையின்மேலேறி அவ்விடத்தில் எழுந்தருளியிருந்தார். சூரியபுத்திரனுகிய சுக்ரீவன் திரும்பி அந்தச் சேனை சமுத்திரத்தினிடத்தில் வந்து சேனையை பதினைந்து யோசனை அகலமுடைய தாய் அடக்கி வடக்கே யிருந்து தெற்கே நடக்கும்படி திட்டஞ்செய்து, படைத் தலைவர் மாத்திரம் அழைத்துக்கொண்டு மறுபடியும் ஸ்ரீ ராமரிடத்திற்குவந்து, சுவாமி! சேனையைப் பார்த்தருளுமென்று சொல்லி வானரங்களைக் கிரமமாகத் தெரியக் காட்டிக்கொண்டிருந்தான். ஸ்ரீ ராமரானவர் சுக்ரீவன் சொற்படி,

தம்முடைய திருக்கண்களால் நோக்கிப்பார்க்க, அந்தச் சேனை பாற்சமுத்திர மானது வழிகொண்டு நடக்கிறதுபோல நடந்தது. அப்போது எட்டுத்திக்கு களையும், பூமிமுழுவதையும், தேவலோகத்தையும், சப்தசமுத்திரத்தையும் மறைத்து மேலெழுந்து பறந்த தூசுகளினுலே இந்த அண்டமானது புழுதியை யிட்டு நிறைத்துவைத்த குடத்தை ஒத்திருந்தது. சமுத்திரத்தை ஒப்பிட்டுச் சொன்னல் அதன் அளவைக் கண்டவர்களுண்டு இந்தச் சேனையினுடைய கணக்கை யாரும் அறியமாட்டார்கள். ஆகையால் இனி அறிவுடையவர்களால் சொல்லத்தக்க உபமானம் வேறெதுதானிருக்கின்றது? இருபது பகலும் இர வும் ஒழிவில்லாமல் பார்த்தும் ஒருவிதத்தினலும் அதன் நடுவையே காண வில்லை. ஆகையால் முடிவு என்னவாகும்? சுவர்க்கம் மத்தியம் பாதாளம் என் கின்ற மூன்றுலோகத்தினும் தமக்குத்தாமே ஒப்பல்லது வேறொருவரும் ஒப் பில்லாத ஸ்ரீ ராமர் அந்தச் சேனசமுத்திரத்தைக் கண்ணினலும் மனதினலும் தமது கல்வியினலும் ஞானத்தினலும் பார்த்துத் தம்பியை நோக்கி ஒரு வார்த்தை சொல்லுகிறார். அப்பா லட்சுமண இந்தச்சேனையை நாமும் நம் முடைய அறிவைக்கொண்டு பார்த்தும், நடுவே சிறிதுமட்டும் கண்டோமே யல்லாமல், முடிவைக் காணுகிறதற்கு நம்மாலேயாகுமா? பூமியிலிருக்கின்ற மனிதர்கள் கடலைக் கண்டோமென்று சொல்லுகிறார்களேயல்லாமல், அந்தக் கடலை முழுதும் கண்டவர்கள் யார்தானிருக்கிறார்கள்? அதுபோல ஜகதீஸ் வரனை சர்வசாக்ஷியினுடைய ஸ்வரூபத்தையும், பத்துத்திசைகளையும், இந்த வானர சேனையையும், பஞ்சபூதங்களையும், அறிவையும், பேசுகின்ற வார்த்தை யையும், சமயவாதிகளுடைய வழக்கையும், யார்தான் முற்றும் எண்ணி யறி கின்றவர்க ளிருக்கின்றார்கள். இந்தச் சேனையை முழுதும் பார்த்துப் பின்பு நினைத்தகாரியத்தைச் செய்வோமென்றல் அனேகநாள் கழிந்து போய்விடும். ஆகையால் அக்காரியத்தின்மேல் பிரவேசிக்கின்றதே உறுதியென்று ஸ்ரீ ராமர் சொல்லினர். இப்படி இளையபெருமாள் ஒருவார்த்தை சொல்லுகிறார்: சுவாமீ! இந்தச் சேனவீரர்கள் எந்தலோகத்துக்குப் போகவேணுமென்றலும் போவார் கள். எந்தக் காரியத்தைக் குறித்துச் சொன்னலும் அதுகளில் இவர்களுக்கு அருமையான காரியம் ஒன்றுண்டென்று சொல்லலாமோ? தேவரீருடைய தேவி யாரைத் தேடுகிறது இவர்களுக்கு மிகவும் எளிதாயிருக்கும். இந்தச் சேனையி னலே பாவமே தோற்கும். தர்மமே ஜெயிக்கும். இந்த வானர சேனையை எண்ணிப் பார்க்கிறதற்கு அடிக்கடி உறையிட்டு எண்ணவேணுமே, அது நிமித்தந்தான் பிர்மதேவன் மற்ற ஜீவராசிகளைப் படைத்தானே? எட்டுத் திக்குகளிலும் பிராட்டியாரைச் சீக்கிரமாய்த் தேடுகிறவர்களை விடாமல், இவ் விடத்தில் சும்மாயிருந்து காலதாமதம் செய்யவேண்டியது என்னவென்று இலட்சுமணர் சொல்லினர். அந்த வார்த்தை கேட்டு, ஸ்ரீ ராமர் சுக்ரீவனுடன் ஒரு வார்த்தை சொல்லுகிறார்.

வானரத்தானைகாண் படலம் முற்றிற்று.

நாடவிட்ட படலம்

அப்பா சூரியகுமாரனே! ஒன்றுக்கொன்று பேதமும் தேகாபிமானமும் தமக்குள் மாறுபட்டு, எதிர்த்துச் சண்டை செய்கின்ற சத்துருத்துவமு மில்லாமல், கிரமமாய் பரவியெழுந்த இந்தச் சேனைக்கு இவ்வளவென்கிற ஒரு தொகையும் உண்டாயிருக்குமோ வென்று ஸ்ரீ ராமர் கேட்க, சுக்கிரீவன் சொல்லுகிறான்: சுவாமி! ஆதிகாலத்திலே பிர்மதேவன் எழுபது வெள்ள மென்று ஒரு தொகை சொல்லியிருந்ததுண்டு. அதன்பின்பு அநேகம் வான ரங்கள் உற்பத்தியா யிருக்கின்றதுகள். அதுகளுக்கும் முன்னளிலே தொகை யேற்பட மாட்டாதே. இந்த வானரசேனைக்கு அறுபத்தேழுகோடி படைத் தலைவர்களுண்டு. அவர்களுக்கெல்லாம் நீலனென்பவன் அதிபதியாய் இருக் கிறானென்று சொன்னன். அந்த வார்த்தையை ஸ்ரீ ராமர் கேட்டு, சுக்கிரீவ மகாராஜனை அதிக சந்தோஷத்துடனே பார்த்தருளி, அப்பா சும்மாயிருந்து பல பேச்சுகளைப் பேசுகிறதினால் ஆகவேண்டியதென்ன? இனிக் காரியத்தைப் பாரென்று ஆக்கியாபித்தார். அவனும் அநுமானைப் பார்த்து, அநுமானே! உம்முடைய பிதாவைப்போல திரிலோகத்திலும் புகுந்து சஞ்சரிக்கின்ற உம் முடைய அதிவேகத்தை யோசியாமலும் பிராட்டியாரைத் தேடவேண்டுமென் கின்ற நினைவில்லாமலும், நீரும் இப்படிக் காலதாமசமா யிருக்கலாமா? உம் முடைய செய்கையைக் குரங்கின் செய்கையாகவா எண்ணிக்கொண்டிருக்கிறீர்? அதிசீக்கிரத்தில் புறப்பட்டு வாயுவேக மனோவேகமாய் லோகமாதா யிருக்கு மிடத்தைப் பாதாளத்திலானலும் பூலோகத்திலானலும் தேடி ஆராய்ந்து பார்த்து, போகபூமியாகிய ஸ்வர்க்கத்திலும் பிரவேசிக்கத்தக்க உம்முடைய மகாவேகத்தை இந்தச் சமயத்தில் பிரத்தியக்ஷமாகக் காண்பிக்க வேண்டும். இராவணனென்பவன் ஸ்ரீ ராமருடைய தேவியாரை எடுத்துக்கொண்டு போகும் போது தென்திசையை நோக்கிப் போனபடியினாலே, அந்தத் திசையிலே தான் அவனுடைய நகர மிருக்கலாமென்று என் புத்திக்குள் தோன்றுகின் றது. அதுபற்றி அவ்விடத்திற்குப்போய் வரத்தக்கவர்கள் உம்மையல்லாமல் வேறே யாரிருக்கிறார்கள்? ஆகையால் அங்கதகுமாரனும், சாம்பன் முதலாகிய சில படைத் தலைவர்களும், இரண்டு வெள்ளம் வானர சேனைகளும், உம்முடனே கூட வரும்படி நீரந்தத் தென் திசைக்கு நடந்துபோம், மேற்குத் திசைக்கு விருஷபனும், வடக்குத் திசைக்குச் சதவலியும், கிழக்குத் திசைக்கு வினதனும், தங்களுக்கு வேண்டிய வானரசேனைகளைக் கூட்டிக்கொண்டு நடக்கக்கடவீர்கள். நீர் நான் சொன்னபடி இரண்டு வெள்ளம் வானர சேனைகளுடனே பிரயா ணப்பட்டுப் போய் சுற்றித்தேடி, ஒரு மாதத்திற்குள்ளே வந்துசேரும். இங்கே யிருந்து புறப்பட்டால் ஆயிரம் யோசனை தூரத்திலே விந்தியகிரி யிருக்கின்றது. அங்கே போய்ச்சேர்ந்து அந்த மலையினிடத்தில் தேடிப்பார்த்து, அதைவிட்டுத் தேவர்களும் வந்து ஸ்நானஞ் செய்யத்தக்க மகத்துவத்தையுடைய நருமதை நதியினிடத்தில் போய்ச்சேர்ந்து, அங்கே தேடிப்பார்த்து அவ்விடம் விட்டுப் புறப்பட்டு அப்பால் தேவரம்பைகள் ஊசலாடும்பொழுது பாடுகின்ற இசை யாகிய மதுவைச் செவியாகிய வாயினாலுண்டு, அசுணப்பட்சிகள் நித்திரை

செய்கின்ற ஏமகூடபர்வதம் போய்ச்சேரும்; அங்குந் தேடிப் பார்த்து, அவ் விடத்தில் அங்கெங்கரா வென்கின்ற பொய்கை யிருக்கின்றது. அந்தப் பொய் கையையுந் தாண்டி, அப்பால் பெண்ணைப் பொய்கையிலும், அங்குள்ள பனந் தோப்பிலும், சிலநாள் தேடி அப்புறம் சீக்கிரமாய் நடந்து விதற்பதேசம் போய்ச் சேர்ந்து, அங்கிருந்து புறப்பட்டு மத்தியிலுள்ள நாடுகளை யெல்லாம் கடந்து அதிக மகிமையான தமிழை யுண்டாக்கிய அகஸ்தியர் பூர்வம் வாசமா யிருந்த தண்டகாரணியம் போய்ச் சேர்ந்து, அங்கே முண்டகத் துறையென்று ஒரு சோலையிருக்கின்றது. அது உலகத்தாரெல்லாம் உண்டு சுகிக்கும்படி பிரயோசனப்படுகின்ற தர்மாத்துமாக்களுடைய பொருளைப்போல அதிக மனோகரமாகிய சகல வஸ்துக்களையும் கொடுக்கத்தக்கது. அந்தச் சோலை யிலே சுந்தரமான ஸ்திரீகளுடைய மதுரமாகிய அதரம்போல இனிமையாகிய கனிகள் எக்காலத்திலும் உண்டாயிருக்கும். அவ்வனத்தி லிருக்கிறவர்கள் கண்ணை யிமைக்கிறதுமில்லை. நித்திரை செய்கிறதுமில்லை. அந்தப் பூமி யிலே சூரியனுக்கு உத்தராயணமும் தக்ஷிணாயனமு மில்லை. அவ்விடத்தில் ஸ்திரீ போகமே முக்கியமாயிருக்கும். அங்கேயெல்லாம் தேடிப் பார்த்து, அவ்விடம்விட்டு அப்பால் மகா உயரமாயிருக்கின்ற பாண்டுவென்னும் பர்வதம் போய்ச் சேர்ந்து, அதன் சமீபத்திலே முத்துக்களையும் - ஸ்வர்ணங்களையும் - ரத்தினங்களையும் - ஆயர்கள் தயிர் கடைகின்ற மத்துக்களையும் - மரங்களையும் - மலைகளையும் - மிருகங்களையும் - புஷ்பங்களையும் - இழுத்துக்கொண்டு தேனுடனே கூடப் பெருகி வருகின்றதும், சகலமானவர்களுக்கும் ஸ்வர்க்கபதவியைக் கொடுக்கின்றதுமாகிய கோதாவிரி நதியிருக்கின்றது. அங்கே போய்ச் சேர்ந்து பார்த்து அதைக்கடந்து தர்மமும் தயையும்போலக் குளிர்ந்து சூரியாஸ்தமி தோன்றாமல் சோலைகள் தழைத்திருக்கின்ற சுவண நதிக்குப்போய் அதை தாண்டி அப்புறம் சூரியகாந்தம் சந்திரகாந்தம் யென்கின்ற மலைகளையுந் தேடிப் பார்த்து, அதுகளைக் கடந்து அப்பால் அநேக நாடுகளையும் தாண்டிப்போனால் அனந்தனுகிய நாகராஜன் கருடனுக்குப் பயந்து ஒளிந்துக்கொண்டிருக்கின்ற கொங்கணம் குலிந்தமென்கின்ற ஸ்தானங்க ளிருக்கின்றதுகள். அவ்விடங் களில் போய்ச் சேர்ந்து அங்கே தேடிப்பார்த்து அப்புறம் நடந்து, அரனதிகம் அரியதிகமென்று சொல்லிக்கொண்டு திரிகின்ற மூடாத்துமாக்கள் பரகதியை அறிகின்றது அருமையா யிருக்கின்றதுபோல யாவராலும் அறிகிறதற்கு அரு மையா யிருக்கின்ற மஹா உன்னதத்தையுடைய அருந்ததியென்னும் பர்வதத் தைக் கண்டு வணங்கி, அப்பால் நடந்து, அஞ்சத்தக்க வெப்பத்தையுடைய பாலை நிலங்களையும் - அநேக நதிகளையும் - சுனைகளையும் - மலைகளையும் - நாடுகளை யும் கடந்துபோனால் வாசுகி முதலாகிய சர்ப்பங்களுக்குக் கருடன் அமிர்தங் கொடுத்த மரகத பர்வதமிருக்கின்றது. அதைக் கண்டு வணங்கி அப்புறம் போனால் சமஸ்கிருத பாஷைக்கும் தமிழாகிய திராவிட பாஷைக்கும் எல்லை யாகியும், சதுர்வேதங்களும் மற்ற சாஸ்திரங்களும் சொல்லப்பட்ட பொருள் களுக்கெல்லாம் முடிவாகியும், நல்ல தர்மத்திற்கு வரம்பாகியும், வேறொன்றும் தனக்கு ஒப்பில்லாமல் பெருமை பொருந்திய மெய்போலப் பிரகாசிக்கின்ற நெடிய சாரலை யுடையதாகியும், ஸ்வர்ணமயமாகியும் ஓங்கிய திருவேங்கடமலை யிருக்கின்றது. அதிலே நல்வினை தீவினைகளாகிய இருவகை வினைகளுடனே

சம்பந்தப்பட்டிருக்கின்ற ஆகாமிய கர்மங்களைச் செய்யாமல் தேவர்களனுபவிக் கின்ற ஸ்வர்க்காதி போக பாக்கியங்களையும், ஒருவரிடுகின்ற பிச்சைச்சோற்றை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி செய்யும் தரித்திரத்தையும், சமத்துவ மாகப் பார்த்து, இந்தப் பிறப்பு இறப்புகளுக்கு மூலமாவது சஞ்சிதவினையே யென்று தெளிந்து, அதை வேறரக் களைகின்ற முடிவில்லாத மெய்ஞ்ஞானத் தையுடைய மகாத்துமாக்கள் அங்கே யிருக்கின்றார்கள். அவர்கள் நாம் இவ் விடத்திலிருந்தும் சேவிக்கத்தக்க மேன்மையுடையவர்கள். மற்றும் அவ்விடத் தில் ஆசூசங்களெல்லாம் நீங்கும்படி பிராமணர்கள் வந்து ஸ்நானஞ் செய்கின்ற பொன்முகலி யென்னும் நதியிருக்கின்றது. ரிஷியாசிரமங்களும் அநேகமா யிருக்கின்றதுகள். மேலும் தேவகன்னியர்கள் கின்னரங்களையும் வீணைகளையும் வாசிக்குந்தோறும் அதுகளிற் பிறக்கின்ற நாதத்தைக் கேட்டு, யானைக்கன்று களும் புலிக்குட்டிகளும் நித்திரை செய்யும். அந்தத் திருமலைக்கு அஞ்சனத் திரி - தர்மாத்திரி - சேஷாத்திரி - சிங்காத்திரி - நாராயணாத்திரி - தீர்த்தாத்திரி - வராகாத்திரி - ஸ்ரீ நிவாசாத்திரி - புஷ்கலாத்திரி - ரிஷபாத்திரி - ஸ்ரீ சைலம் - சிந்தாமணிகிரி - மேருசிகரம் - கனகாசலம் - கருடாசலம் - வேங்கடாசலம் இவை முதலாகிய இருபது நாமங்களுண்டு. அப்படிப்பட்ட பர்வதத்திற்குப் போனீர் களேயாகில், நீங்கள் யாவரும் பாபவிமோசனமாய் அந்தக்ஷணமே பரமபத மடைவீர்கள். அப்பால் சுவாமி காரியம் விக்கினப்பட்டுப்போம். ஆகையால் அதன் பக்கங்களில் தேடிப்பாருங்கள். பின்பு, அதைக்கடந்து அந்தச் சேஷா சலத்திற்கு அப்புறமா யிருக்கின்ற தொண்டைநாடு சேர்ந்து, அங்கே தேடிப் பார்த்துக்கொண்டுபோய்த் திவ்வியமாகிய காவேரிநதி இருகரையிலும் தேடிப் பாருங்கள். மோக்ஷாத்மாக்களுடைய மனம்போல மகா துல்யமாகிய அந்தச் சோழநாட்டைக் கடந்து மலைநாட்டிற் போய்த் தேடி, அப்பால் தமிழ்நாட்டிற் குப் போங்கள். அங்கே அகஸ்தியருடைய பொதியமலையும் தமிழ்ச்சங்கமும் இருக்கின்றன, அவ்விடத்திற்கும் போவீர்களேயாகில் எப்போதும் அதை விட்டு வருகிறதற்கு மனம் வராது. ஆகையால் அந்தப் பர்வதம் வலத்திலிருக் கும்படி நடந்து ஸ்வர்ணங்களைக் கொழிக்கின்ற பொருனை நதியையும் திருச்சங் கணித் துறையையும் கண்டு தரிசித்துக்கொண்டு போனால், அப்பால் மகேந்திர பர்வதத்தையும் சமுத்திரத்தையும் காண்பீர்கள். அவ்விடத்தைக் கடந்து போகிறதும், அதன்பின் இப்பால் நடந்து வருகிறதும், ஒரு மாதத் தவணையாக அதற்குள்ளே இவ்விடத்தில் வந்து சேருங்கள். இதுவே உங்களுக்கு உத்தரவா கப் பெற்றுக்கொண்டு சீக்கிரத்தில் நடவுங்களென்று சுக்ரீவன் சொல்லினன்.

அப்போது ஸ்ரீ ராமர் அநுமானென்பவரைச் சமீபத்திலே வரச்சொல் லிக் கடாட்சித்து, சில அடையாளம் சொல்லுகிறேன் கேளுமென்று அவரைத் தனியே அழைத்துப்போய் வைத்துக்கொண்டு சொல்லுகின்றார்: அந்த ஜானகியினுடைய ஸ்வரூபம் எப்படியிருக்கு மென்றால், பாற்சமுத்திரத் திலே பிறந்த செம்பவளத்திற்குச் செம்பஞ்சூட்டி அதன்மேல் சந்திரனைச் சேர்த்து வைத்ததுபோல விரல்களும் நகங்களும் பிரகாசிக்கின்ற அவ ளுடைய பாதத்திற்கு, தாமரைப் புஷ்ப முதலானதுகளும் உபமானமாகாது என்றால் வேறென்ன இருக்கின்றது? அநுமானே! நன்றாய்க் கேளும்.

உலகத்திலிருக்கின்ற உத்தம ஸ்திரீகளின் புறவடிவுக்கு மகாகவிகளாகிய வித்துவஜனர்கள் உவமையாக லட்சண சாஸ்திரங்களிலே சொல்லி வைத்திருக்கின்ற ஆமையையும் மற்றதுகளையும் சமானமாகுமென்று சொன்னலும், அதுகள் அந்தச் சீதையினுடைய புறவடிக்குத் தோற்றுப்போகும். கணைக்காலின் அழகுக்கு உபமானம் வித்துவாமிசர்கள் சூல்கொண்ட வராலென்றும், அம்புத்தூணியென்றும், சிணையாயிருக்கின்ற நெற்கதிரென்றும் சொல்லுவார்கள். அதுகளையே நானுஞ் சொன்னதினால் இன்பமென்ன இருக்கின்றது? தொடைகளுக்கு உபமானம் வாழையைச் சொல்லியிருக்கின்றது. அதினுடைய பெருமையைச் சிறுமையாக்கி அதிலும் அதிக அழகாயிருக்கின்ற அவளுடைய தொடையழகை வேறென்ன சொல்லலாம்? பூச்சக்கரத்தை யெல்லாம் பிடரியிலே தாங்குகின்ற ஆதிசேஷனையும், ஒரு சக்கரத்தினால் நடக்கின்ற சூரியனுடைய இரதத்தையும் கண்டிருக்கின்ற உமக்கு, சீதையின் மேகலாபரணத்தை அணிகின்ற சமுத்திரத்தைப் போலும் விசாலமாகிய நிதம்பத்திற்கு உபமானம் நான் சொல்வதென்ன? பிரமதேவன் இனியொரு ஸ்திரீயைச் சிருஷ்டிக்க வேண்டுமென்றால் அடையாளமாகப் பார்த்துக்கொண்டு செய்யத்தக்க சுந்தரமுண்டாகிய ஜானகியினுடைய இடை எப்படி யிருக்கின்றதென்று அறியவேண்டிக் கேட்பீராகில், அது கண்ணுக்குத் தெரியும்படி யிருந்தாலல்லவோ உவமை சொல்லலாம்? கையிலே தொட்ட எனக்கே அறியக்கூடாதது. மேலும் அவளுக்கு இடையுண்டென்று யாராயினும் சொல்லுவார்களோ வென்றால்? அந்த வார்த்தையுமில்லை. ஆகையால் நானென்ன சொல்லப்போகிறேன்? அவள் வயிற்றழகுக்கு ஆலிலையும், உருவெழுதுகின்ற பலகையும், வெள்ளித்தகட்டும், கண்ணாடியும், உபமானமாகுமென்று சொன்னலும், ஸ்துதி செய்வதாகக் காணுமேயல்லாமல் எதார்த்தமாக மாட்டாது. அவர்களுடைய உந்திச்சுழிக்கு நந்தியாவர்த்தமென்னும் புஷ்பத்தின் புரையை உவமையாகச் சொன்னல் அற்பமாகக் காணும். நான் கங்கையின் நீர்ச்சுழியைக் கண்டபோது அதுதான் சமாதான மாகுமென்று நினைத்துச் சந்தோஷப்பட்டதுண்டு. நீரும் வழியிலே அதைப் பார்த்துக்கொண்டு போகலாம்; அவள் வயிற்றினிடத்தில் மயிரொழுக்கென்று ஒன்றுண்டு. அதற்கு ஒப்புச்சொல்ல வேண்டுமானல் என்னுயிரொழுக்கென்றே சொல்லவேண்டும். அல்லவென்றால் அவளுடைய சிற்றிடை யென்னும் வல்லிசாதக்கொடிக்கு அது துவண்டு சாயாமலிருக்கும்படி பொருத்தி வைத்த கொழுக்கொம்பாகுமென்று அறிந்துகொள்ளும். தாமரைப் புஷ்பத்திலிருந்தால் அதன் அகவிதழ்க ளூறுத்துமென்று அஞ்சி அதைத் துறந்துவந்த மகாலட்சுமியாகிய அந்த ஜானகியின் வயிற்றிலே கொடிபோல மூன்றுவரை யிருக்கின்றன. அதுகள் என்னவென்றால், மன்மதனுனவன் மூன்று லோகத்திலுமிருக்கின்ற பத்மினி ஸ்திரீகளையெல்லாம் இவள் அழகிலே தோற்கச்செய்த ஜெயத்தை மூன்று ரேகையாகப் பதித்து வைத்திருக்கின்றதென்றறியும். அவளுடைய ஸ்தனங்களை இரத்தினச் செப்பென்பேன்; ஸ்வர்ன கலசமென்பேன்; செவ்விளநீர் என்பேன்; பவளத்தாற் கடைந்த சொக்கட்டா னென்பேன்; யானைத்தந்த மென்பேன்; சக்கரவாக மென்பேன்; சும்மா யிப்படிச் சொல்லிக்கொண் டிருக்கிறதே யல்லாமல் உலகத்தில் அதுகளுக்கு உள்ளபடி சரியான உபமானம் ஒன்றும் காணவேயில்லை. இன்

னமும் பலவிதமாக நினைத்து வருத்தப்படுகிறேன். நானெங்கேயாகிலும் கரும்பைக் கண்டாலும் பச்சை மூங்கிலைக் கண்டாலும் எனக்குக் கண்களில் நீர் தாரைதாரையாய்ப் பெருகுகிறதே யல்லாமல் அவளுடைய மிருதுவாகிய தோள்களுக்கு அந்தக் கடினமாகிய கரும்பையும் மூங்கிலையும் ஒப்புச் சொல்லுகிறதற்கு என்னெஞ்சு இரும்பல்லவே ஆதலால் என்ன சொல்லுகிறது? அவளுடைய முன் கைகளுக்கு உவமை ஒன்றுண்டென்பதற்கு மூன்று லோகத்திலுமில்லை. ஆயினும் சொல்லவேண்டுமென்று வேறொன்றை உபமானமாகச் சொல்லாமல் காந்தளாகுமென்றும் மகரயாழாகு மென்றும் சொன்னாலும், அதுகள்தான் அந்தக் கைகளுக்கு ஒப்பாகுமா? அல்லாமலும் அழகின்மேல் அழகுமுண்டோ? மேலும் அசோகத்தளிரைச் சொல்வதென்ன? அதிருக்கட்டும். கற்பகத்தளிரும் தாமரைப் புஷ்பமும் சீதையினுடைய காலுக்கே ஒப்பாகாமல் தோற்குமானால், கைக்கு ஒப்பாக வைத்துச் சொல்லலாமா? அவளுடைய கூர்மையாகிய கை நகத்திற்கு நம்மாலே தெளிவா யுவமை சொல்லக்கூடுமா? அதற்குத் தோற்ற மூக்கினையுடைய கிளிப்பிள்ளைகள் எங்கள் மூக்கைப் பழிக்கின்றவர்கள் நீங்களாவென்று முருக்கம்பூவை அந்த மூக்கினால் மாச்சரியத்துடனே கொத்திக் கிழிக்கின்றதுகளே. அதை யெப்படிச் சொல்லுகிறது? நீர் போய்ச் சீதையின் உள்ளங்கையையும் உள்ளங்காலையும் கண்டீரேயாமாகில், செந்தாமரைப் புஷ்பத்தை நினைத்துக்கொள்ளும். கழுத்தைக் கண்டு இளங்கமுகும் சங்கமும் நினைவிலே வந்தால், அதுகள்தான் என்று நிதானித்துக்கொள்ளும். ஓ அநுமானே! அவளுடைய சிவந்தவாயைக் குறித்து என்னதான் சொல்லுவேன்? பவளமும், செங்கிடையும், கோவைப்பழமும், செவ்வல்லிப் புஷ்பமும், இலவம்பூவும், இந்திரகோபமும், முருக்கமலருமாகிய இதுகளெல்லாம் அதற்கு முன்னே வெள்ளை நிறமுடையதுகளென்றே சொல்லவேண்டும். அதுகளிலும் அதிக சிவப்பாய்த் தேனூறிக்கொண்டிருக்கும். அதுவே அதற்கு அடையாளம். அதுதவிர உபமானம் ஒன்று சொல்லவேண்டுமென்றால், சிவந்த அமிர்தமுமில்லை; சிவந்த தேனுமில்லை; அல்லது இருக்கின்றதுகளென்றாலும், அதுகள் உண்டபோது தித்திக்குமேயல்லாமல் மனதிலே நினைத்தபோது தித்தித்துக் களிப்பைக் கொடுக்கமாட்டா, ஆகையால் அவளுடைய செவ்வாய்க்கு எப்போது எப்போது எப்படி எப்படி மனோகரப்பட்டு, எந்த எந்த விதமாகப்பாவனை செய்து சொல்லுகின்றோமோ அந்த அந்தவித மெல்லாம் ஒத்திருக்கும். அவளுடைய தந்தபந்திக்கு உபமானமாகாத முல்லையரும்பும், மயிலின் அடியிறகும், முத்துக்களும் ஆகுமென்று சொன்னால் அவ்வார்த்தைக்கு அமிர்தமும் பாலும் தேனும் உபமானமாகுமென்று சொல்லப்படும். ஆகையால் அதுகளைச் சொல்லக்கூடாது. எப்படியென்றால் தேவாமிர்தத்திற்கு உபமானம் சொல்லச் சொன்னால் எதைச் சொல்லலாம்? நீர் நல்ல அறிவையுள்ளவர். ஆனபடியினாலே அந்தத் தாரதம்மியத்தைக் கொண்டு அடையாளம் பார்த்துக்கொள்ளும். மூக்கினுடைய அழகுக்குப் பச்சோந்தியும், எள்ளும்பூவும், குமிழமலருமாகிற இதுகளை உபமானமாகச் சொல்லுவோமென்றால் அந்த மூக்குக்கு உண்டாகிய பொன்னிறமும், ரத்னப்பிரகாசமும் இதுகளுக்கில்லை. மேலும் அவள் மூக்கு ஒருவராலும் எழுதப்படுவதல்ல. ஆகையால் அந்த நியாயத்தைப் பார்த்து நீரே அறிந்துக்கொள்ளும். அவளுடைய காதுகளுக்கு உபமானமாக அறியாதவர்

கள் சொல்லுகின்ற வள்ளைக்கொடியையும், கத்திரிகையையும், மயிர் விளைக் கவியையும், பெரியவர்கள் சொன்னால் அவர்களைப் பைத்தியக்காரர்க ளென் றல்லவோ சொல்லுவார்கள்? ஆகையால் அதுகளிலே வாசமாயிருக்கின்ற குழைகள் செய்த தவமே காதாய் வந்திருக்கின்றதென்று நினைக்கவேணுமே யல்லாமல், உலகத்திற்கெல்லாம் உபமானமாயிருக்கின்ற அதுகளுக்கும் உப மான முண்டாயிருக்குமா? அவளுடைய கண்களின் விசாலத்திற்குச் சமுத்திர மும் சமானமாகமாட்டாது. வேறொன்றைச் சொல்லுதற்குத்தான் ஒருவர் மன துக்குள் அடங்குகின்றதுகளல்ல. ஆயிரந்தரம் பார்த்தாலும் பாற்கடலில் பள் ளிக்கொண்டிருக்கின்ற தேவதேவனுகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் போலவே கறுத்த நிறமும் வெளுத்த நிறமுமாய் அகன்றிருக்கும் அது பார்த்துக்கொள் ளும்; அவளுடைய புருவம் தமக்குள்ளே ஒன்றுக்கொன்று உபமானமாகுமே யல்லாது வேறொன்றை உவமையாகச் சொன்னால் இழிவாகும். அல்லவென்று மன்மதன் கையிலிருக்கின்ற கருப்புவில்லைச் சொல்லலாமென்றால், அதுவும் இரண்டில்லை. சந்திரன் அந்தச் சீதையின் நெற்றியழகைக் கண்டு பலநாளும் அதையே நினைத்து நினைத்து மதியென்னும் பெயரை யுடையவனுகி நாளுக்கு நாள் முறைமுறையாகக் குறைந்து வளர்ந்து கொண்டிருப்பானுனால் அவன் அந்த நெற்றிக்குச் சமானமானவன். அவளுடைய கூந்தலை ஆரணியத்திற்கு வந்ததுமுதல் வாரிச் சீவுகிறவர்களில்லை. அப்படியானாலும் அதனழகுக்கு ஓரழிவில்லை. ஒருவரால் கோதிக்கை செய்யப்படுவதனால் மிருதுவும் வாசனையு முண்டாயிருக்கின்றது மல்ல. மேலும் அந்தக் கூந்தலின் கறுத்த நிறமானது பிர்ம சிருஷ்டியிலே ஸ்வபாவமாய்த் தோன்றிய தாகையால், உபமானம் சொல் லப்படுவதல்ல; கரிய நிறத்தையுடைய மேகக் கொழுந்தும், செவ்வல்லிப் புஷ்ப மும், வளைவாகிய வில்லும், வள்ளையும், சேற்கெண்டையும், முத்துக்களும் சேர்ந் திருக்கின்ற ஒரு பூரணச் சந்திரனையே பிர்மதேவன் முகமாகக் குறித்து வைத் திருக்கிறனென்று அவளுடைய திருமுக மண்டலத்தை அறிந்துகொள்ளும். அவளது பின்னிய ஜடையி னழகைச் சொல்லுகிறேன் கேளும்: நெருக்குற்று மெல்லியதாகிய மயிரைப் பருமனுக்க வேணுமென நினைத்து மேகத்தைக் கிழித் துக்கட்டி, அதற்குத் தேனைத்தடவி, அகிற்புகையூட்டி, இருட்குழம்பிலே தோய்த்து, அதனுடனே ஒன்றுகச் சேர்த்து வைத்திருக்கின்றதென்றே சொல்லவேண்டும். பலபல வார்த்தை ஏன் சொல்லவேணும்? தெய்வத்தன் மையையுடைய காமரைப் புஷ்பத்திற்கும் அற்பமாகிய புல்லிதழுண்டு. பிரகாச மாகிய சந்திரனுக்கும் களங்கமுண்டு. மற்றும் உலகத்திலுள்ள நல்ல வஸ்துக் களுக்கெல்லாம் ஒவ்வொரு குற்றம் சிறிது சிறிதுண்டு. சீதைக்கு மெய் முழுமை யும் நன்மையே உற்பத்தியா யிருக்கின்றதல்லாமல் குற்றமென்பது எவ்வளவு மில்லை. ஸ்திரீகளுக்குச் சொல்லியிருக்கின்ற லட்சணங்களில் ஒன்றுவது அந்த ஸ்ரீ மகா லட்சுமிக்கும் பூரணமாயிராது. என் பிராண நாயகியாகிய ஜான கிக்கு அதுகளில் ஒன்றுகிலும் குறைவில்லாது பரிபூரணமா யிருக்கின்றது. அதுவே உமக்குக் குறியாகப் பார்த்துக்கொள்ளும். வேணுகானத்தையும், யாழோசையும், குயிலின் குரலையும், கிளியின் வார்த்தையையும், நாகண வாய்ப் பறவை முதலானவைகளின் மதுரமாகிய மழலைச்சொற்களையும் பிர்மதேவன் தேடிப்பொறுக்கி அதுகளையெல்லால் ஒன்றுகக்கூட்டி வடித்தெடுத்து அந்தச்

சீதைக்கு வார்த்தையாகப் படைத்திருக்கிறான். அவன்மேல் பிழையில்லை. ஆயினும் அந்த வார்த்தைக்கு உபமான மாத்திரம் காண்பிப்பதற்கு அவனுக்கு ஒரு பொருளுங் கிடைக்கவில்லை. இனிமேல் கிடைக்குமோ என்னமோ தெரியாது. நாமாவது அதற்கு உவமை சொல்லுவோமென்றால், அமிர்தம் ஒன்றிருக்கின்றது, தேன் ஒன்றிருக்கின்றது. அந்த இரண்டையும் சொல்லலாம் : சொல்லுகிறதற்கும் அதுகள் நாவிற்கு இன்பங் கொடுக்குமே யல்லாமல், காதுக்கு இன்பங் கொடுக்கமாட்டா. நடையில் அன்னத்தையும் பெண்யானையையும் அதிசயமானதுகளென்றல்லவோ சொல்லுகிறது. அதுகளைச் சொல்லவும் எனக்குச் சம்மதிப்படவில்லை. பின்னை எதைத்தான் சொல்லலாமென்றால், மகாபுருஷர்களாகிய வித்வஜன சிரேஷ்டர்கள் தங்கள் நாவினாலே எழுத்து - சொல் - பொருள் - யாப்பு - அலங்காரம் என்னும் பஞ்சலட்சணக் கிரமத்துடனே பாடுகின்ற பாடலின் நடையையே அந்தச் சீதையின் நடையென்று சொல்லலாம். அவளுடைய திருமேனி நிறத்தைக் குறித்து இளமையாகிய மாந்தளிரினிறமென்றால், அது முதிர்ந்த நிறமாயிருக்கும். பொன்னிறமென்றால், அந்தக் காந்தி இதற்கிருக்க மாட்டாது. அவள் நிறத்திற்கு முன்னே இதைக் கறுப்பென்றே சொல்லவேண்டும். இரத்தின நிறமும் ஒளிபோதாது. மின்னலின் நிறமோ அவள் நிறத்தைக் கண்டு வெட்கி ஒளித்துக்கொள்கின்றது. புஷ்பத்தின் நிறமும் மழுங்கி வெளுத்துக் காண்கின்றது. ஆகையால் எந்த நிறத்தைச் சொல்லுவேன் ? அது தனக்குத்தானே சமானமல்லாமல் அதற்கு வேறென்ன யிருக்கின்றது. ஸ்திரீகளில் அவளுக்கு நேரானவர் மற்றொருவரில்லை. அதுவே சாட்சியாகப் பார்த்துச் சமீபத்திலே போய், அவளுக்கு உம்மிடத்திலே நம்பிக்கையுண்டாக்கத்தக்க சில அடையாள வார்த்தைகளையும் சொல்லும். அவைகள் என்னவென்று கேட்பீரானால், முன்னாளில் நான் மிதிலைக்கு விஸ்வாமித்திரர் பின்னே போனபோது, அன்னங்கள் விளையாடுகின்ற அகழ் சூழ்ந்த கன்னிகாமாடத்தி னருகில் சிங்காரத் தோட்டத்தில் சீதையானவள் நின்றுகொண்டு இருந்தாள். அவளை நானுங் கண்டேன். அவளும் என்னைக் கண்டாள். இந்த அடையாளத்தைச் சொல்லும். பின்பு ஜனகமகாராஜன் இராஜசபைக்கு அழைப்பிக்க, மின்னற்கொடிபோல அங்கு வந்தபோது நான் பார்த்தேன். அவளும் தன் கைவளையைத் திருத்துகின்றதுபோலக் கடைக்கண்ணினால் என்னைப் பார்த்திருந்தாள்; அதையும் சொல்லும். அல்லாமலும் பர்வதத்தைபோல அபாரமாகிய வில்லை நான் ஒடித்த சமாச்சாரத்தை அவள் கேள்விப்பட்டவுடனே இந்த வில்லை யொடித்தவன் நான் கன்னிகாமாடத்தில் இருந்து கண்டு மோகிக்கும்படி அந்த விஸ்வாமித்திர மகாரிஷியுடனேகூட வந்த மகா புருஷனே யாகவேணும். அவனல்லாவிட்டால் என் கற்புக்குப் பின்னம் வரும். ஆகையால் என்னுயிரை விட்டுவிடுவேனென்று கடலினும் பெரிய கற்பினையுடைய சீதையானவள் தெரிந்து சொல்லியிருந்தாள். இதையும் சொல்லும். நான் வனத்திற்குவர எத்தனித்தபோது அவளும் என்னுடனேகூட வருகிறேனென்றாள். அதுகேட்டு பெண்ணே! முன்பு நான் போயறியாத காட்டில் என்பின்னே வரும்படி நினைத்தையே! எனக்கு இன்பமாகியும் பிராணனுக்கு இனிமையாகியும் இருக்கின்ற நீ, காட்டில் இனித் துன்பப்படுவையோ வென்று நான் சொன்னேன். அதையும் சொல்லும். மற்றும்

அரசாளுதலைவிட்டு ஆரணியவாசம் செய்யப்போகின்ற உனக்கு நான்மாத்திரந் தானு துன்பமாய் இருக்கின்றது? என்னை யல்லாததுகளெல்லாம் இன்பமாய் இருக்குமா? என்று கண்களினின்றும் நீரைச் சொரிந்து துயரப்பட்டாள். அதையும் சொல்லும், நகரத்தைவிட்டு வனவாசத்துக்குப் புறப்பட்டபோது அரண்மனை ஆசாரவாசலைக் கடந்தமாத்திரத்தில், ஆரணியம் எங்கேயென்று அவள் என்னைக் கேட்டாள். அதையும் சொல்லும் என்று இவ்விதமாகச் சொல்லி நவரத்தினகசிதமாய்க் கோடி சூரியர்களைப்போலத் தகத்தகாயமான திருவாழியைக் கொடுத்து, உம்முடைய காரியமெல்லாம் ஜெயமாகக் கடவது போய்வாருமென்று விடைகொடுத்தருளினர். அப்போது அநுமார் ஸ்ரீராமரை நமஸ்காரஞ்செய்து, அவருடைய கடாக்ஷத்தைப் பெற்றுக்கொண்டு நடந்தார், அங்கதகுமாரனும், மற்றப் படைத்தலைவரும், இரண்டு வெள்ளம் வானரசேனையும் ஸ்ரீ ராமலட்சுமணர்களைச் சேவித்துக்கொண்டு, தங்கள் ராஜாவான அந்த சுக்ரீவனையும் வணங்கி, அந்த அநுமானுடங்கூட நடந்தார்கள்.

நாடவிட்ட படலம் முற்றிற்று.

பிலநீங்கு படலம்

அப்பால் சுக்ரீவன் மற்ற மூன்று திசைகளுக்கும் முன்பு திட்டஞ் செய்திருந்த படைத்தலைவர்களையும் வானர சேனைகளையுங் கூட்டி யனுப்பினன். அவர்களும் அதிவேகமாகிய தங்கள் தங்களுக்கு குறித்திருந்த திசைகளுக்குப் போய் அதிக அன்புடனே பிராட்டியாரைத் தேடினர்கள். தெற்குத் திசையில் தேடிப்போன அநுமான் அங்கதன் சாம்பன் முதலானவர்களுடைய செய்தி விஸ்தாரமாகச் சொல்லுகிறேன். அப்படி அநுமான் அங்கதன் முதலானவர்கள் அந்தக் கிஷ்கிந்தா பர்வதம் விட்டுப் பிரயாணப்பட்டு அதிவேகமாய் நடந்து, பத்மராகம் முதலாகிய பலவகை இரத்தின காந்திகள் அந்திப் பொழுதுபோலச் சிவந்து பிரகாசிக்கின்றதினாலும், சர்ப்பங்களும் சந்திரனும் அருவியாறும் ஒடிக்கொண் டிருக்கின்றதினாலும், சிவனுடைய சடாமகுடம் போலப் பிரகாசிக்கின்ற விந்தியகிரியினிடத்திற் போய்ச் சேர்ந்தார்கள். அந்த மலையையும் மலைச்சிகரங்களையும், கொடுமுடிகளையும், குகைகளையும், பக்கங்களையும், அடிவாரங்களையும், ஒரு பகலிலே அநேகநாள் தேடிப் பார்க்கிறதுபோலத் தேடிப்பார்த்து, மற்றும் அவ்விடத்தில் இருக்கின்ற தேவர் - மானிடர் - மிருகம் - பறவை - நீர்வாழ்வன - ஊர்வன - ஸ்தாவரமாகிய எழுவகைத் தோற்றங்களாகப் பிரம்மாவினாலே சிருஷ்டிக்கப்பட்டதுகளையெல்லாம் ஒன்றுவிடாமல் ஆராய்ந்து பார்த்துவிட்டார்கள். இப்படி ஜானகியைத் தேடிக்கொண்டு போகின்ற வானர சேனைவீரர்கள் சமுத்திரம் பரவிப்போகின்றதுபோலப் பரவி; சிறிதிடமாகிலும் விடாமல் அதிசீக்கிரமாய்ப் பார்த்துக்கொண்டு அங்கிருந்து பதினாலு யோசனை தூரத்துக்கு அப்பால் போய் நருமதையாற்றினிடத்தில் சேர்ந்தார்கள். அங்கே அன்னங்கள் விளையாடுகின்ற இடங்

களையும், தேவரம்பைகள் வந்து ஸ்நானஞ் செய்கின்ற இடங்களையும், சுவர்க்கலோகத்தார் வந்து வாசஞ்செய்கின்ற இடங்களையும், வண்டுகள் கீதம் பாடப் புஷ்பங்கள் நிறைந்திருக்கின்ற சோலையின் இடங்களையும் சுற்றிப் பார்த்தார்கள். அந்த அதிக சிங்காரமாகிய நதியைவிட்டு அப்பால் நடந்து ஏம கூடபர்வதம் போய்ச் சேர்ந்து, அதன் பக்கத்திலிருக்கின்ற பர்வதங்கள் முதலாகிய இடங்களிலும் தேடி, மகமேருவோவென்று சொல்லத்தக்க உயரமாய் இருக்கின்ற அந்த ஏமகூடத்தைக் கண்டு, இதுதான் இராவணன் இருக்கின்ற மலையென்று ஏறிப்பார்த்து, இவ்விடத்திலே சீதையைக் காணலாமென்று அதிலிருக்கின்ற யானை - யாளி - சிங்கம் - புலி - கரடி - மான் - மரை முதலானதுகள் பயப்பிராந்திகொண்டு ஓட நூறுயோசனைதூரம் அகன்று ஆகாயத்தைத் தொடும்படி உயர்ந்த அந்தப் பர்வதமெல்லாம் ஒரு பகற்பொழுதிலே தேடிப் பார்த்து, சீதையைக் காணுததினாலே அங்கிருந்து குதித்து அப்பால் நடந்தார்கள். அவ்விடத்தில் அங்கதன் முதலான வீரர்கள் தங்களோடுவந்த இரண்டு வெள்ளம் சேனையைநோக்கி, நீங்கள் எல்லாம் ஒருபுறமாய்த் திரிந்து உலகமெல்லாம் தேடிக்கொண்டு சமுத்திரத்தின் ஓரத்திலிருக்கின்ற மகேந்திரகிரியினிடத்தில்வந்து எங்களுடனே கூடுங்களென்று திட்டம்செய்து பிரித்து அனுப்பிவிட்டு, அனுமான் அங்கதன் சாம்பன் முதலாகிய வீரர்கள் ஒரு கூட்டமாய்க்கூடி, அதிவேகமாய் நடந்தார்கள். அப்படி நடந்த வீரர்கள் ஒரு பாலைநிலம் மகா கடூரமாய்க் காலாக்கினிபோல எரிந்துகொண்டு ஜலமென்னும் பெயரே அங்கு வழங்காமையால் சூரியனும் பயப்படத்தக்கதா யிருந்தது. அந்த சுரத்திலே போய்விட்டார்கள். அதிலே பட்சிகளும் மிருகங்களும் சேரமாட்டா. மரங்கள் செடிகளுமில்லை. கற்களுந் தீய்ந்து எங்கும் வெளியாயிருக்கின்றதே யல்லாமல் வேறொன்றுமில்லை. அந்தப் பூமியிலே இவர்கள் அகப்பட்டுக் கொண்டவர்களாய், ஐம்புலன்களும் நடுங்க அறிவு பெயரற்றுப்போக மனதுகலங்கி, தங்கள் சரீரம் புழுங்கி, நரகத்திலே பதைக்கின்ற எலும்பில்லாத புழுமுதலாகிய ஜீவஜெந்துக்களைப்போல, அதியுஷ்ணத்தை யடைந்து, நாவை நீட்டிக்கொண்டு பூமியிலே அடியெடுத்து வைக்குந்தோறும் பாதங்கள் கொப்பளித்து, காய்ந்த சட்டியிலிருந்து மேலெழுந்து சிதறுகின்ற பொரிகள் போலத் துள்ளித் துள்ளிப் பதைபதைத்து, கொஞ்சமாவது ஒதுங்க நிழல் கிடையாமல் பிராணன் பிரிந்து போகத்தக்க அளவில்லாத அவஸ்தையுடன் ஓடுகிறார்கள். இப்படி ஓடுகிறபோது, அந்நிலத்தின் மத்தியில் ஒருபில மிருந்தது. அதிலே குதித்து, அங்கிருந்து இனி யிந்தப் பாலை நிலத்தின் வழியாய் நடந்துபோகிறது மிகவும் அருமையாகும். அல்லவென்று நடந்தால் நாமெல்லோரும் இறந்துபோவோமாகையால் இந்தப் பிலத்தின் வழியாய்ப் போகிறதே மகா உத்தமமென்று நிச்சயித்துக்கொண்டு, இந்தப் பிலத்துவாரம் எந்தமட்டும் போகின்றதோ அதையும் அறிவோமென்று அதற்குள்ளே புகுந்து, ஒரு க்ஷணப் பொழுதுக்குள்ளே அந்தப் பிலத்தின் வழி முழுதும் போனார்கள். அங்கே உலகத்தில் நிறைந்திருக்கின்ற இருளெல்லாம் சூரியனுக்கு பயந்து வந்து புகுந்துக் கொண்டிருக்கிறதுபோல இருண்டிருக்கின்ற ஓரிடத்திலேபோய் அகப்பட்டுக்கொண்டார்கள். அப்போது அனுமானல்லாத மற்ற யாவரும் அசைவற்றவர்களாகி அடியெடுத்துவைத்து அதைவிட்டு அப்பால் நடக்க வேண்டுமென்னும் எண்ண

மும் இல்லாமல், அதற்கு அப்புறம் ஏதாவது வழி யிருக்கின்றதாவென்று அறி யத்தக்க அறிவு மில்லாதவர்களானார்கள். அன்றியும், மிகுந்த இருளாகிய வெள்ளத்தில் மூழ்கிக் கண்கள் பார்ச்சிதம் தெரியாமல் பெருமூச்செறிந்து கொண்டு நின்று, செய்யத்தக்க காரியத்தையும் ஆலோசியாமல் திகைப்புற்று இனி நாம் பிழைக்கிறதேயில்லை. இது என்ன அவஸ்தை? என்று மனங் கலங்கினவர்களாய் ஆஞ்சநேயரே இந்தச் சமயத்தில் நீரெங்களை இரட்சிக்க மாட்டுவீரா வென்று அவரை கூப்பிட்டுக் கையெடுத்து இரந்து ஸ்துதி செய்தார் கள். அந்த வசனத்தைக்கேட்ட அனுமானவர் அவர்களைப் பார்த்து பயப் படவேண்டாம். ஸ்ரீ ராமருடைய கிருபையினாலே நமக்கு பிராணபயம் வராது. நீங்களெல்லாரும் என்வாலை விடாமல் பிடித்துக் கொள்ளுங்களென்று சொல்லி தம்முடைய சரீரத்தை வளர்த்தி வாலை நீளும்படி செய்தார். அப்படியே அனை வரும் அவருடைய வாலைப் பிடித்துக் கொண்டார்கள். பின்பு அனுமானவர் கையை நீட்டித் தடவிப் பார்த்துக்கொண்டு காலினாலே மெள்ள மெள்ள நடந்து பன்னிரண்டு யோசனைதூரம் பரந்திருக்கின்ற ஸ்தூல காத்திரத்தை யுடையவ ராகித் தம்முடைய காதி லிருக்கின்ற குண்டலங்களின் பிரகாசத்தினாலே இருள் நீங்க நடந்துப் போகிறபோது, ஒரு பட்டணத்தைக் கண்டார்கள். சூரிய மண்டலமானது, வந்து ஒளித்துக் கொண்டிருக்கிறது போலவும், ஸ்ரீ மகாலட்சு மியின் திருமுகம் போலவும். தேவலோகமும் நாணும்படியான அதிக சிங்கார முடையதாய் கற்பகச்சோலைகளும் - தாரைத்தடாகங்களும் - கோபுரங்களும் - மதில்களுமுடையதாய் தேவர்களும் வந்து கண்டு அதிசயிக்கத் தக்கதாயிருந் தது. தெய்வத்தச்சனாகிய மயனென்பவன் மனம் வருந்திச் செய்ததாய், இந்திர நகரத்தைப் பார்க்கிலும் அதிக சிலாக்கியமாய், ஒப்பற்றதாய், ரத்ன கசிதமாய், ஸ்வர்ணமயமாய், பூமியில் தீப முதலானதுகளின் பிரகாசமும், ஆகா யத்தில் சூரியன் சந்திரன் முதலானதுகளின் பிரகாசமும் இல்லாவிட்டாலும் இருளையெல்லாம் நீக்கிப் பிரகாசிக்கின்றதாய், சோழராஜாவினுடைய கீர்த்தி யைப் பாடிப் புகழ்கின்ற வித்துவாமிசர்களுடைய வீடுகளைப்போல ஸ்வர்ணக் குப்பல்களும், ரத்தின குப்பல்களும், நல்ல வஸ்திரங்களும், சீதளச் சந்தனமும், கதம்பப் பொடிகளும், அளவில்லாமல் நிறைந்திருக்கின்றதாய், ஸ்திரீகளும் புரு ஷர்களும் இல்லாமையால் நிர்மானுஷியமாய், உயிரில்லாத சித்திரம்போல் இருந் தது. இப்படி யிருக்கின்ற அந்த நகரத்தை எதிரே கண்டு இந்தப்பட்டணம் இராவணனுடைய பட்டணமாவென்று நினைத்து, ஒருவரோடொருவர் சொல் லிச் சந்தோஷித்து அதிசயித்து, ஸ்வர்ணசாயையாகிய அதன் வாசலுக்குள்ளே புகுந்துபோய் அதைப் பார்த்தார்கள். அதற்குள்ளே வானத்திலும் பூமியிலும் வாழ்கின்ற தேவர்கள் முதல் மனிதர்கள் வரையிலுள்ள சகலாத்மாக்களின் உரு வங்களும் சித்திரரூபமாக எழுதி யிருக்கின்றதுகளே யல்லாமல் நிஜ ஸ்வரூபமாய் ஒன்றுமில்லை. வாவிகளுண்டு; பொய்கைகளுண்டு; திவ்யமாகிய பரிமளம் வீசு கின்ற மனோகரமான நானவித புஷ்பச்சோலைகளுமுண்டு. அதுகளில் - மயில் கள் - குயில்கள் - கிளிகள் - பூவைகள் - அம்சங்கள் சகலமுமுண்டு. இதுகளுக் கெல்லாம் உயிர்மாத்திரமில்லை. இப்படிப்பட்ட நகரத்தினுடைய சிங்காரத்தை எல்லாம் பார்த்து இதுவென்ன மாயைதானோ வென்று எண்ணி, முன்பு அந்தப் பிலத்துவாரத்தில் நாம் விழுந்தபோது அப்பிறப்பு நீங்கிப்போய் சுவர்க்கத்தில்

வந்திருக்கிறோமென்று மனதிலே நிச்சயித்துக் கொண்டவர்களாகி மற்றும் யோசிக்கிறார்கள். என்ன நாம் இறக்கவுமில்லையே ; நமக்கு முன்னிருந்த சரீரந்தானே யிருக்கின்றது. அல்லாமலும் இப்படியாக வேணுமென்று ஏதாயினும் நினைத்திருந்தோமா ? முன்னிருந்த நினைவு எவ்வளவு மறக்கவுமில்லையே ? கிலேசமுமுண்டாய் இருக்கின்றதே ; கண்களையும் இமைக்கின்றோமே ; இதுகளெல்லாம் சுவர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இருக்கமாட்டாதுகளே ; மயக்கமென்று நினைத்தால் மயக்கங்கொண்டவர்கள் செய்தற்குரிய பிழையும் நம்மிடத்திலே யில்லையே ; இதை யென்னவென் றறியலாமென்று சொல்லித் திகைத்தார்கள். அந்தச் சமயத்தில் சாம்புவந்தர் பயமடைந்து கைகால் நடுங்கி, ஓ ஐயன்மீர் ! கேளுங்கள் : இது என்னவென்றால் பிராட்டியாரைத் திருடிக் கொண்டுபோன கள்ளனை இராவணன் நாமெல்லாம் விழும்படி ஒரு படுகுழி செய்துவைத்தது போலவே யிருக்கின்றது. இதற்கு ஒரு முடிவோ இல்லை. இதிலே நாம் அகப்பட்டுக்கொண்டோம். இனி நம்முடைய விதிப்படிதான் முடியுமென்று சொன்னார். இப்படிச்சொன்ன சாம்புவந்தரைப் பார்த்து அநுமானவர் ஒரு வார்த்தை சொல்லுகிறார் : இப்பொழுது இந்தப் பிலத்துவாரத்திலேயிருந்து மேலே ஏறுவதற்கு வழி கிடையாமல் போகுமானால், பூர்வகாலத்திலே சகரர்கள் செய்தபடியே இந்தப் பூமியைப் பேர்த்துத் தின்றுகொண்டே வெளியே போவோம் அப்படியல்லவென்று, அந்த வஞ்சனையையுடைய இராட்சதர்களையெல்லாம் கொன்று தீர்த்துவிட்டுப் போவோம். பயப்படவேண்டாம் என்று கோபாவேசத்துடனே சொன்னார். அங்கதன் முதலான மற்ற வீரர்களும் அவ்வாறே செய்வோமென்று தங்கள் மனதில் நிச்சயம் பண்ணிக்கொண்டு, அந்தப் பட்டணத்தைச் சுற்றிப் பார்க்கும்பொழுது அதனடுவே நல்ல தவங்களெல்லாம் திரண்டு ஓர் உருவமானதுபோலப் பிரகாசிக்கும்படியான ஒரு பெண்ணைக் கண்டார்கள். அவள் தங்கக் கம்பிகள்போல விளங்கும்படியான சடையும், இடையில் மரவுரி தரித்தவளாயும் சக்ரவாகப் பட்சிக்குச் சமானமான ஸ்தனமும், மாசடைந்த சரீரமும், பூரணச் சந்திரன்போல முகமுமுடையவளாயும், மூக்கு நுனியில் பார்வையை வைத்துப் பார்த்தவண்ணமாய் சுவாசபந்தனம் செய்திருக்கிறபடியினாலே இளைத்த இடையானது பருத்த ஸ்தனத்தைச் சுமந்தும் வளையாமல் நிற்க, இரண்டு கைகளையும் தொடையினிடத்திலே பொருந்த வைத்துக்கொண்டு, காமாதிகளாகிய உட்பகையெல்லாம் கால் தளர்ந்துபோக, ஆசையானது நாமமற்றோட, நல்லறிவானது உதயமாக, இரு வினைகளும் பற்றற, சங்கற்ப விகற்பங்கள் இல்லாமல், கண்களின் வழியே கிருபை ஜொலிக்கும்படி வீற்றிருந்தாள். அப்படியிருந்த சுவயம்பிரபை யென்னும் நாமத்தையுடைய தெய்வப்பெண்ணை வானரவீரர்கள் கண்டு நமஸ்காரஞ்செய்து, அவளை அருந்ததிக்குச் சமானமான ஜானகிதானேவென்று நினைத்துச் சந்தோஷமடைந்து, மனம் பதைத்து, அனுமானை நோக்கி, ஐயா ! அந்த ஜானகியாகிய லோகமாதா இவள்தானே பாருமென்று சொன்னார்கள். அதற்கு அனுமானவர் நன்றாயிருந்தது. பிராட்டியாருக்கு உரிய குறி குணங்களில் எந்தக் குறிதான் எந்தக் குணந்தான் இவளிடத்தி லிருக்கின்ற தென்பதாய்ச் சொல்லுவேன் ? புருஷோத்தமரான ஸ்ரீ ராமருக்கு இப்படிப்பட்ட குறி குணங்களை யுடையவளா தேவியாயிருப்பாள். முத்துமணிக்கு அக்குமணி

யொப்பாஞல் அந்த ஜானகியம்மனுக்கு இவள் ஒப்பாவாளென்று சொன்னர். அத்தருணத்திலே மகா தபோநிஷ்டாபதையா யிருந்த சுவயம்பிரபை அந்தத் தபோகூத்தியானம் நீங்கிச் சித்தவிர்த்தியை யுடையவளாய் அவர்களைப் பார்த்து, இவர்கள் முன்னேயவர்களல்ல. ஆரோ பாட்டைசாரிகளா யிருக்கின்ரூர்களென்று எண்ணி, நீங்கள் ஆரப்பா? இந்த நகரத்தினிடத்தில் முன்பு ஒரு நாளும் வந்தவர்களாய்க் காணப்படவில்லையே; வந்த காரணமென்ன சொல்லென்று கேட்டாள். அதற்கு அவர்கள் அவளை நோக்கி, ஓ பெண்ணே! பாதர்களான இராட்சதர்கள் ஏதோ வொரு மாயை செய்து சீதாபிராட்டியை அபகரித்துக் கொண்டுபோய் ஒளித்து வைத்தார்கள். அவர்கள் ஒளித்து வைத்த இடத்தைத் தேடிக்கொண்டு திரிகின்ரோம்; நாங்கள் இராம தூதர்களென்று சொன்னர்கள். அந்த வார்த்தையைக் கேட்கவே உட்கார்ந்திருந்தவள் எழுந்திருந்து, கண்களானது ஆனந்தபாஷ்பம் பொழிய மகா ஆனந்தபரவசையாகி, உங்களுடைய வரவு நல்ல வரவாகுக வென்று சொல்லிக் கொண்டாடி, ஸ்ரீ ராமரானவர் எங்கே எழுந்தருளியிருக்கிரூரென்று கேட்டாள். அதற்கு ஆதியந்தமாக நடந்த செய்திகளையெல்லாம் அநுமானவர் அவளுக்குத் தெரியும்படி சொன்னர். அதுகேட்டு சுவயம்பிரபை என்னுடைய தவம் இன்றைக்கு முடிந்தது. நான் மோட்சமடைந்தேனென்று அனைவரையும் காளற்றிலே ஸ்நானஞ்செய்து வரும்படி சொல்லி, இஷ்டான்னம் பரிமாறிப் போஜனஞ் செய்யுங்களென்று மிகவுமுபசாரஞ் செய்தாள். அப்படியே எல்லாரும் போஜனஞ்செய்து எழுந்த பின்பு, அநுமானவர் அந்த சுவயம்பிரபை யென்பவளுக்கு நமஸ்காரஞ் செய்து, அம்மா நீரார்? உம்முடைய பெயரென்ன? இந்த நகரத்தின் வரலாரென்ன? இதற்குத் தலைவரார்? நீரிவ்விடம் வாசஞ் செய்யும்படியான விதம் என்ன? தெரியச் சொல்லவேண்டுமென்று கேட்க, அந்தத் தவசொரூபியானவள் சொல்லுகின்ரூள்: இந்நகரமானது மயனுடைய தபோபலத்தினலே பிர்மா சிருஷ்டித்தது. நான் தெய்வலோகத்திலிருப்பவள். என்னுடைய பெயர் சுவயம்பிரபை; தெய்வலோகத்திலுள்ள ரம்பைகளில் ஒருத்தி எனக்கு மிகவும் பிரியமான உயிர்த்தோழியா யிருக்கிரூள். அவளையொரு அசுரன் சேர்ந்து சுகமனுபவிக்க வேண்டுமென்றிச்சித்தான். அவளுமவனிடத்திலே இஷ்டமானபடியினலே அவர்களுக்கு நானிந்த நகரத்தைத் தெரியப்படுத்தி, அதிலேபோய் உங்களுடைய மனோபீஷ்டப்படி யிருங்களெனச் சொன்னேன். அப்படியே இதனிடத்தில் வந்து அநேககாலம்கூடி போகித்துக்கொண்டு இருந்தார்கள். அந்த ரம்பையினிடத்தில் இஷ்டமுடையவளாகையால் அவளை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாமல் நானும் இவ்விடத்திலே வந்திருந்தேன். அப்படியிருக்கும்படியான காலத்திலே தேவேந்திரனானவன் அவளைத் தேடிக்கொண்டு இவ்விடத்திற்கு வந்து, அவ்வசுரனைக் கொன்றுவிட்டு அவளைக் கண்டு அவள்மேல் மிகவும் கோபித்துக்கொண்டு, நடந்த செய்தியை உள்ளபடி சொல்லென்று கேட்டான். அந்த ரம்பை பயமடைந்து நடுங்கி, என்னைக் கடைக்கண்ணினுற் காட்டி, சகலமும் இவளாலே வந்ததென்று சொன்னள். அப்போது சகஸ்திர நேத்திரனுகிய தேவேந்திரனானவன் என்னைப் பார்த்து நீ தெய்வலோகத்திற்கு வராமல் இந்த நகரத்திற்குக் காவலாய் இவ்விடத்திலே தானே யிருக்கக்கடவாய் என்

றும், இந்தப் பிலத்தின் வழி இருள்சூழ்ந்திருக்கக் கடவதென்றும் ஆக்கியாபித்துச் சபித்துப்போட்டான். அப்பொழுது நான் அவனை வணங்கி, இதற்கு என்றைக்கு முடிவென்று கேட்பதற்கு முன்னே அவன், ஸ்ரீ ராமதூதரான அனுமானனவர் வானர வீரருடனே உன்னிடத்திற்கு வருவார். அப்பொழுது உனக்கு இது விமோசனமாகி நீ தெய்வலோகத்திற்கு வரக்கடவாயென்று சொல்லிப்போனன். எனக்கு உண்ணுகிறதற்குப் பரமான்னமும், உடுப்பதற்குப் பீதாம்பரமும், பூசுவதற்குப் பரிமளகந்தமும், சூடுகிறதற்குப் புட்பமாலைகளும், அணிகிறதற்கு இரத்தினபரணங்களும், மற்றும் வேண்டிய சகல வஸ்துக்களும் இவ்விடத்தில் உண்டாயிருக்கின்றதுகள். அதுகளிலெல்லாம் நான் இச்சைவையாமல் தேவேந்திரன் கொடுத்த சாபத்தை வெல்லுவதற்காக உங்களைக் காணவேண்டி, எண்ணுவதற் கருமையான இத்தனைநாள் தவஞ் செய்துகொண்டிருந்தேன். இந்தப் பிலமோ நூறு யோசனை விஸ்தீரண முள்ளது. இங்கிருந்து தெய்வலோகத்திற்குப் போகவேண்டுமென்றால் இருள் சூழப்பட்டிருப்பதனல் வழி அகப்படவில்லை. என்னை எவ்விதத்திலாவது சுவர்க்கம்போய்ச் சேரும்படி உபாயஞ் செய்யும்படியான வகையுண்டானல், நீங்கள் திருவுளம் பற்றுங்களென்று சொன்னள். அதைக்கேட்ட வானர வீரர்கள் அநுமாரை நோக்கி, பிலத்துவாரத்தில் இருளிலே மூழ்கிக் கண் தெரியாமல் வருத்தப்பட்டு இறந்துபோகத் தக்கவர்களாயிருந்த எங்களை அதிலிருந்து நீக்கிக் காப்பாற்றிய மகானுபாவராகிய ஆஞ்சநேயரே! இவளையும் உம்முடைய செய்கையினலே இரட்சியுமென்று சொன்னர்கள். அத்தருணத்திலே அநுமானனவர் நீங்கள் நடுங்கவேண்டாமென்று சொல்லிக் குறுநகை செய்து, சிங்கத்தைப்போல வீராவேசத்துடனே எழுந்திருந்து, வேதங்களும் காணுத பரமபதத்திற்கும். அந்தப் பிலத்திற்கும், ஏக வழியாய்விடுமென்று சொல்லும்படி பிலமும் பூமியும் ஒன்றுகுமாறு அதனைப் பீறிக்கொண்டு முன்னுளிலே இரணியாட்சதனைச் சங்கரித்துவிட்டுப் பூமியைக் கொம்பினலெடுத்துக் கொண்டு பாதாளத்திலிருந்து மேலெழுந்த ஆதிவராகத்தைப்போலச் சிரசானது ஆகாயத்தை அளாவும்படி இரண்டு தோள்களும் இரண்டு தந்தம்போல் விளங்கப் பூமியைப் பிளந்துகொண்டு வந்தார். மகாபலிச் சக்கிரவர்த்தியினிடத்தில் மூன்றடிமண் தானம்வாங்கி இரண்டடியினல் அளந்தபோது பிரமாண்டத்தைத் துளைத்துக்கொண்டு ஓங்கிய ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய திருவடியைப்போல அந்த அநுமானனவர் நூற்றுநாற்பது யோசனைதூரம் பிலத்தை யிடித்துப்பேர்த்துத் தூக்கிக்கொண்டு நிமிர்ந்து அதை மேற்சமுத்திரத்தில் விட்டெறிந்து கொக்கரித்தார். அது இன்றைக்கும் அந்த மேற்சமுத்திரத்திலே பிலத்தீபமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்போது பூமிக்கும் அவ்விடத்திற்கும் வெளிச்சமாய் வழியுண்டாயிற்று. அவ்வழியால் எல்லாரும் சுவயம்பிரபையை அழைத்துக்கொண்டு பூமியில் வந்து சேர்ந்தார்கள். இப்படி வந்தவுடனே, அந்த சுவயம்பிரபை அனுமான் செய்த உதவியைக் குறித்து பலவிதத்திலும் சந்தோஷப்பட்டு, கற்பகச்சோலை சூழ்ந்த சுவர்ணமயமாகிய தேவலோகத்திற்குப்போனள். வானர வீரர்களும் அநுமாருடைய புஜபலத்தைக் கொண்டாடிப் பேசிக்கொண்டு வழி நடந்து போனர்கள். அங்கே ஒரு பொய்

கையைக் கண்டு அவ்விடத்திற்போய்ச் சேர்ந்தார்கள். அத் தருணத்தில் சூரியனும் மேற்சமுத்திரம் போய்ச் சேர்ந்தான்.

பிலநீங்கு படலம் முற்றிற்று.

ஆறுசெல் படலம்

அந்தப் பொய்கையிலே மதுரமான ஜலத்தை எல்லாருங் குடித்துத் தாகம் தணிந்து திருப்தியாகி அங்குள்ள காய்கனிகளையும் தேனையும் புசித்து அந்தப் பொய்கைக்கரையில் ஓரிடத்தில் படுத்துக்கொண்டு நித்திரை செய்தார்கள். அப்பொழுது ஒரு அசுரனவன் வந்தான். அவன் மலைபோல உயரமும், கடல்போலச் சரீர விரிவும், கூற்றுவனைப்போலக் கொலை கொடுமையும், அக்கினி ஜ்வாலிக்கும்படியான கண்களும், பாலசந்திரனைப்போல இரண்டு கோரதந்தமும் உடையவன். மேகங்கள் உன்னதமாகிய அவனுடைய தோளின் மேல் தவழ்ந்து மழை பொழிகின்றபடியினாலே, அருவியோடுகிற மலைக்குச் சமானமானவன். தேவர்கள் அசுரர்கள் முதலிய எவர்களுக்கும் அடங்காத பலவந்தன். எப்படிப்பட்டவர்களுக்கும் அவனுடனே யுத்தம் செய்யலாமென்று ஒருவிதத்தினாலாயினும் எண்ணக்கூடுமா? அப்படிப்பட்ட அசுரனவன் செம்பட்டமயிர்கள் பிரகாசிக்கக் கைகளைப் பிசைந்துகொண்டு, காற்றடிபோல் வேகமாய் வந்து பார்த்து, இது நம்முடைய பொய்கையென்றறிந்தும் பயமென்பதில்லாமல் இவர்கள் வந்திறங்கி உறங்குவது நன்றாய் இருக்கின்றதென்று அதிக கோபமடைந்தவனாகி வழி நடந்த வருத்தத்தினால் அயர்ந்து நித்திரைசெய்யாநின்ற வானர வீரர்கள் இருக்குமிடத்தில் வந்து, அங்கதகுமாரனுடைய மார்பில் ஒரு அறை யறைந்தான். அறையவே, அதிசீக்கிரமாய் அங்கதன் நித்திரை தெளிந்து எழுந்திருந்து, இவன்தான் இராவணன் என்று நினைத்து அவன் மார்பில் தானும் ஒரு அறை கொடுத்தான். அந்த அறை படவே அவ்வளவு பலசாலியான அவ்வசுரனவன் இடிவிழுந்து ஒரு பர்வதம் ஒடிந்து விழுந்ததுபோல அலறிக்கொண்டு பூமியிலே விழுந்தான். அப்பொழுது வானர வீரர்கள் எல்லோரும் விழித்துக்கொண்டு எழுந்துவந்து சுற்றிக்கொண்டார்கள். மாண்டு விழுந்துகிடக்கும்படியான அவ்வசுரனைக் கண்டு அநுமானவர் இவனர்? என்னசெய்தான்? என்று கேட்க, நான் ஒன்றுமறியேனென்று அங்கதகுமாரனவன் சொல்லினான். அப்போது, சாம்பவந்தர் சொல்லுகிறார்: ஐயா! இவனை நானறிவேன் இந்தப் பொய்கைக்கு நாயகனவன்; மகா பலவானனை துமிரனெனவும் புட்கலனெனவுஞ் சொல்லானின்ற பெயரினையுடைய அசுரன் இவன்தானென்று சொல்லினர். அதுகேட்டு வானரவீரர்களெல்லாரும் அவ்விதமாய்த்தான் இருக்கலாம். அல்லவென்றால் மற்றொருவர் இங்கே வருவாராவெனச் சொல்லிக் கொண்டார்கள். பின்பு, யாவரும் உறக்கம் தெளிந்தபடியினாலே அங்கிருந்து புறப்பட்டு அப்போதே நடந்து, சூரியனவன் உதயமாகிற வேளைக்குப் பெண்ணைநதியினிடத்தில் வந்து சேர்ந்தார்கள். மணற்குன்றான ஸ்தனபாரங்களையும் ஆம்பற் புட்பமான வெண்பற்களையும்,

தாமரைப் புட்பமான முகத்தையு முடையதாய் ஒரு பெண்ணுக்கும் ஒப்பான அந்தப் பெண்ணை நதியினிடத்தில் சீதையென்கிற பெண்ணைத் தேட வந்தவர் கள் அந்நதித் துறைகளையும், மயில்கள் கூத்தாடும்படியான இட்ங்களையும் நதியி னுடைய மத்தியிலுள்ள திட்டுகளையும், பூஞ்சோலைகளையும், குளிர்ந்த சாரலை யும், கயங்களையும், தடாகங்களையும், பளிக்கறைகளையும் தேடி ஆராய்ந்து, மூழ் கினவர்களுடைய பிறவிப் பிணியின் வேரையறுத்துத் துணிக்கிறதும், நீர்ச்சுழி கள்தோறும் இரத்தினங்கள் கொழிக்கின்றதுமான அந்தப் பெண்ணை நதியின் கரையிலேதானே அன்றையத்தினம் தங்கியிருந்தார்கள். மற்றநாள் ஆற்றைத் தாண்டி காடுகள் மலைகளெல்லாவற்றையும் கடந்து ஓர் நாடுவந்து சேர்ந்தார் கள். அங்கே யிருக்கிற சிங்காரங்களெல்லாம் பார்த்து அந்த நாடு கடந்து, உசனவனமெனச் சொல்லும் பெயரினையுடைய சுக்கிரன் பிறந்த விதர்ப்ப தேசம் போய்ச் சேர்ந்து, மார்பிலே பூணூலானது பிரகாசிக்கும்படி கையிலே தர்ப்பை தாங்கி இருடிகள்போல வேடம் தரித்துக்கொண்டு சீதையை எங்கும் தேடிப்பார்த்து, அங்கிருந்து சிந்துதேசம் வந்து, அதை விட்டுப் புறப்பட்டுத் தத்துவங்களை யறிந்த மகா இருடிகள் வாசஞ் செய்யும்படியான தண்டகாரணி யம் வந்தார்கள். அந்தத் தண்டகாரணியமெல்லாம் தேடி ஆராய்ச்சி செய்து முண்டகத்துறைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்குண்டான தடாகங்களிலே சார் வதா தேவரம்பைகள் வந்து ஸ்நானஞ்செய்கிறபடியினால், அத்தடாக ஜலமெல் லாம் அவர்களுடைய ஸ்தனங்களில் தரித்திருக்கிற சந்தன கதம்பங்களும், கூந் தலில் தடவிய மயிர்ச் சாந்தும் கலந்து பரிமளிக்கிறதினால் அவற்றினிடத்தி லுள்ள மீன்களினுடைய புலால் நாற்றம் மாறிப்போய் விடுகிறது. அதனா லங்கே வாசமாயிருக்கும்படியான பட்சிகளெல்லாம் அம்மச்சங்களைப் பட்சிக்கிற தில்லை. மதயானைகள் அனேகமாய் வந்து அதுகளில் மூழ்கி விளையாடுகிறதும், விஞ்சைய ஸ்திரீகளும் புருஷர்களும் கோலாகலமாய் ஆடுவதும். கமுகமரத் தில் ஊஞ்சல் போட்டு ஸ்திரீகளே ஆடுவதும், இவ்விதமான பலபலவாகிய சிங்காரங்கள் உண்டாயின. அம்முண்டகத் துறையெல்லாம் தேடி பிராட்டி யாரைக் காணுமல் மனது நோகும்படி அதை விட்டுப் புறப்பட்டுத் திரிவிக்கிரம சொரூபமாய் உலகத்தை யளந்த நாராயணனுடைய திருவடியினின்றும் கங்கை யிழிவதுபோல் தாவள்யமாய்க் காணப்படுகின்ற பாண்டு பர்வதத்தைக் கண்டு, ஆகாயத்தை யளாவிய அதன் சிகரத்திற்போ யேறினர்கள். இருளை நீக்கி வானத்திலெழுந்த சந்திரனுக்கு மருட்சியை யுண்டாகும்படி தவளநிறமாய்ப் பிரகாசித்தலால் கிருபையில்லாத இராவணனை முன்னளில் அழுத்திக்கொண் டிருந்த கைலாச பர்வதம்போல் இருக்கிற அம்மலையினிடத்திலும் தேடிப் பார்த்து ஜானகியைக் காணுதவர்களானார்கள். அப்போது வானரர்கள் கிலே சப்பட்டு அதைவிட்டு நீங்கி, இராட்சதனால் வஞ்சிக்கப்பட்டுப் போகும்பொழுது பிராட்டியாருடைய கூந்தலினின்றும் சோர்ந்து பூமியிற் சேர்ந்த மலர்மாலை போல யிருக்கும்படியான கோதாவிரி நதியினிடத்தில் வந்து சேர்ந்தார்கள். அலையெழுந்து இரைந்து விழுந்து முத்துக்களை ஒத்த நீர்த்துளிகளைச் சிந்தும்படி யோடுகிற அம்மகா நதியானது, பூமியான தாயானவள் தன்னுடைய மகளான சீதையினுடைய துயரத்தை நினைத்துக்கொண்டு அழுகிறதுபோல இருந்தது. பின்னும் அனேகமான இரத்தினங்களையும் சொர்ணங்களையும் வீசி பிரகாசியா

நின்ற அந்நதியானது, ஜடாயு இராவணன்மேல் போய் விழுந்து அவனுடைய மார்பிலிருந்து பறித்தெறிந்த இரத்தின ஆரங் கிடக்கிறது போலவுமிருந்தது. அவ்விதமான. கோதாவிரிநதித் துறைகளிலெல்லாம் தேடிப்பார்த்து லோக மாதாவைக் காணுதவர்களாய், அதைவிட்டுத் தீவினைகளை நிவர்த்தி செய்கின்ற சுவணத்துறை வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில் எங்கும் தேடிப் பார்த்துக் குலிந்த தேசத்திற்கு வந்து அவ்விடத்திலும் தேடிப் பார்த்து அதை விட்டு, எழுவகைப்பட்ட கொங்கணங்களிலும் தேடிப் பார்த்து, அவற்றைக் கடந்து நெய்தனிலங்க ளெல்லாவற்றையும் தாண்டி, சந்திரமண்டல மட்டும் உயர்ந்து தேவர்களும் நமஸ்காரஞ் செய்யும்படியாய்ப் பிரகாசித்துக்கொண் டிராநின்ற அருந்ததி பர்வதத்தின் சமீபத்தில் வந்தார்கள். அவ்விடத்திலும் சீதையைத் தேடிப் பார்த்துங் காணுமல், அப்பால் போய், இடைப்பெண்கள் மலைமேலிராநின்ற வேடப்பெண்களிடத்தில் தயிரைக்கொடுத்து, மலைத்தேனை வாங்கிக்கொள்கின்ற சிறப்பினையுடைய மரகத பர்வதமெல்லாம் தேடிப்பார்த்து அவ்விடத்திலும் ஜானகியைக் காணுமல் அப்பால் நடந்து பூமிக்குத் திலதமான திருவேங்கட பர்வதம் வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்திலுள்ள கோனேரி தீர்த்தத்தில் முநீஸ்வரர்களும், வைதீகர்களும், வினைகளெல்லாவற்றையும் ஒழித்த மெய்ஞ்ஞானிகளும், சகலமான தேவர்களும், அவர்களுடைய நாயகி மார்களும், சித்தர்களனைவரும், அனவரதமும் வந்து ஸ்நானஞ் செய்வதும் ஐவகைப்பட்ட இந்திரிய சேஷ்டைகளும், காமமும், மன்மதனுடைய பாணமும் ஒழியும்படி அநேகமான தேவர்கள் தபசு செய்கின்றதும் சக்ராயுதத்தை வலது கரத்திலேந்திய கார்மேகத்தைப்போலும் கரிய திருமேனியையுடைய பரந்தா மன் திருவடியைத் தாங்கியதுமாகியது. அத் திருவேங்கட பர்வதத்திலிரா னின்ற மிருகங்களும் பரமபத மடையுமாயின், திருவேங்கடத்தானை மனத்தினுல் தியானித்து வாக்கினுல் தோத்திரஞ்செய்து, தலையினுல் வணங்கானின்ற நன் னெறியினையுடைய பெரியோர்களுக்கு அம் மோக்ஷம் சித்திக்காமற் போகுமா? அப்படிப்பட்ட திருமலையினிடத்தில் போய் அவ்விடத்திலிருந்து அருமையான தபசு செய்யானின்றவர்களைத் தரிசித்து, திருவேங்கடநாதனைச் சதாகாலமுஞ் சேவித்துக்கொண் டிருக்கும்படியான பாகவதர்களுடைய திருவடிகளுக்குத் தாளும் தடக்கையும் கூப்பித் தெண்டம் சமர்ப்பித்து, அநுமான் அங்கதன் சாம்புவந்தர் முதலானவர்கள் எல்லாரும் அங்கே பிராட்டியாரைத் தேடிப் பார்த்து அதைக் கடந்து, வேதப் பிராமணர்களைப்போல எக்யோபவீதம் - தர்ப்பை - மௌஞ்சி - மான்தோல் - துளபமாலை முதலானவைகளும் தரித்து, துவாதச ஊர்த்துவ புண்டரமிட்டுக்கொண்டு தண்டக நாட்டிற்கு வந்தார்கள். அந்த நாட்டிலிரானின்ற தென்னமரத்தினுடைய இளம்பாளையைப் பார்த்து நாரையென்று நினைத்துச் சேற்கண்டைகள் நடுங்கியோடுவதும், செவ்வல்லி யரும்பினைச் சாரைப் பாம்பென்று நினைத்துத் தேரைகளானவை வாய்விட்டுக் கதறுவதும், பள்ள ஸ்திரீகளானவர் சங்குகளானவையென்ற முத்துக்களை யெடுத்துப் பார்த்து நாரையின் பொரியாத முட்டையென்று நினைத்து ஆமை முதுகின்மேல் உடைக்கிறதும், கடுவன் குரங்குகள் பூமியைத் தோண்டி வேர்ப் பலாச்சுளைகளைப் பீறி எடுத்து அங்குள்ள தேனில் தோய்த்து விழுங்குகிறதும், அநேக மலைகளும் காடுகளும் கிராமங்களும் பலவகை விருட்சங்களும் நெருங்கி

யிரானின்ற சோலைகளும், செந்நெல் - கழுகு - வாழை - கரும்பு முதலானதுகளும் நிறைந்திருக்கிறதும், அன்னங்கள் - மயில்கள் - கொக்குக ளிருக்கிறதும், அவ்விடத்திலுள்ளவர்கள் வடகலை தென்கலைகளுக்கு உரியவர்களாய்த் தர்மம் - தானம் - தியாகம் முதலானதுகளையும் மறவாமல் துஷ்டநிக்கிரகஞ் செய்து இல் வாழ்க்கை தவறாமல் இருக்கிறதுமான பலவகை வளப்பங்களையும் பார்த்து, அத் தண்டகநாட்டை தாண்டிக் காவேரி சூழ்ந்த சோழநாட்டிற்கு வந்தார்கள். அந்நாட்டில் செந்நெற்பயிரும் - கரும்புகளும் - கழுக மரங்களும் எங்கும் நெருங் கிப்போகிறதற்குத் தடையா யிருக்கும்படியான மார்க்கத்தை அருமையாய்க் கடந்து, சோலைகளிலிராநின்ற புட்பங்கள் தேனை மிகுதியுஞ் சொரிகிறபடி யினாலே அதனையறியாமல் ஜலப்பிரவாகமானது வந்ததென்று பயந்து குரங்குகளெல்லாம் மரங்களின் மேலேறிப் பூமியில் இறங்காதிருக்கின்றதும், ஆலையாடின கருப்பஞ்சாறு நிறைந்த கூபங்களை மச்சமிருக்கும்படியான குட் டைகளென்று எண்ணி நீர்க்காக்கைகளானவை அதுகளிலே மூழ்கி மூழ்கி எழு கின்றதும், தாழம்பூவின் வாசனை மாங்கனிக்கு உண்டாயிருக்கின்றதும், செங் கழுநீரினுடைய வாசனை சேற்றுக்கு உண்டாயிருக்கின்றதும், மற்றும் இவ்வித மான அனேக சிங்காரங்களையும் பார்த்து, அதிசயித்துத் தேங்காய்களிடற வும், தேன்களில் கால் வழுக்கவும் நடந்து. அச்சோழ தேசத்தைத் தாண்டி அப்பால் சேர நாட்டிற்குப்போய் அவ்விடத்திலும் தேடிப்பார்த்துச் சீதை யைக் காணமல், அதைக்கடந்து தமிழ் நாடான பாண்டி நாட்டில் வந்து சேர்ந் தார்கள். அப்பாண்டி நாடானது முத்தையும், இயல் - இசை - நாடகமென்னும் முத்தமிழான மூவகை அமிர்தங்களையும் கொடுக்கிறபடியினாலே, ஒருவகை அமிர்தத்தை மாத்திரம் கொடுக்கும்படியான தேவலோகத்தை அதற்குச் சமானமாகுமென்று சொல்லலாமா? அப்படிப்பட்ட நாட்டு வளப்பங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டு, அந்த நாடெங்கும் பிராட்டியாரைத் தேடிக் காணமல் சோர்ந்து, நிர்ஜ்ஜீவர்களாய் நடந்து, திக்கெஜம்போல் இருக்கும்படி யான மகேந்திர பர்வதத்தினிடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

ஆறுசெல் படலம் முற்றிற்று.

சம்பாதிப் படலம்

அங்கே நீருண்ட மேகத்தைப்போல முழங்கி, அலையான கையை மேலே தூக்கி, ஜானகியானவள் இலங்கையி லிருக்கின்றாளென்று சொல்லி எதிரே வந்து வாருங்களென்று அழைக்கிறதற்கு ஒப்பாயிருக்கின்ற தென்சமுத்திரத் தைக் கண்டார்கள். அப்போது முன்பு நீங்கள் பிரிந்து எட்டுத்திக்கிலும் பர விப் பார்த்துக்கொண்டுபோய் மஹேந்திரபர்வதத்தில் வந்து எங்களுடனே கூடுங்களென்று அங்கதன் முதலானவர்களால் அனுப்புவிக்கப்பட்ட வானர சேனையும், ஒருபெரிய சமுத்திரம் வந்ததுபோல அங்கே வந்து கூடியது. எல் லாரும் அவ்விடத்தில் வருத்தமில்லாமல் வந்தும் பிராட்டியாரைக் காணாதபடியி னாலே அப்பால் செய்யத்தக்கது ஒன்றும் அறியாதவர்களாய்க் கிலேசித்து

நாக்குழறப் பேசுகின்றீர்கள். நம்முடைய ராஜா நமக்குச் சொன்ன நாளும் கழிந்து போய்விட்டது. நாம் நாடிவந்த காரியத்தை இன்னம் முடிக்கவில்லை. பிராட்டியாரைக் காணுமற்போனால் ஸ்ரீ ராமருக்குப் பிராணனிராது. நம் முடைய ராஜாவின் ஆக்ஞையினாலே அவர் சொன்ன இடமெல்லாம் தேடி னோம். இனி நம்மால் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. ஆதலால் அருமை யாகிய தபசு செய்வோமா? விஷமாகிலுந் தின்று இறந்து போவோமா? எப்படியாவதிந்த இரண்டுவிதத்தில் ஒருவிதம் அவசியஞ் செய்துதீர்வோம். அல்லவென்று இருந்தும் ஸ்வாசத்தைக் காணோம். ஆகையால் பிராணத் தியாகம் பண்ணிக்கொள்ளுகிறதே நன்மையென்று இவ்வண்ணமாகச் சொல் லிக்கொண்டு, கடலின் பக்கத்திலே அநேக மகம்மேருகிரி கூடி யிருக்கிறது போலக் கூடியிருந்து விசாரப்படுகின்ற வானரவீரர்களுக்கு இளவரசாகிய அங்கதகுமாரன் துயரத்துடனே ஒரு வார்த்தை சொல்லுகிறான்: ஓ வீரர் களே! நாம் அந்தப் புருஷோத்தமனுடனே உலகமெல்லாம் தேடிப்பார்த்து உம்முடைய தேவியாரை கொண்டுவந்து விடுகிறோமென்று வாய்ப்பெருமை யாகச் சொன்னோம். சொன்னதை அந்தப்படி செய்யாமற்போனோம். சீக்கிர மாய்ப்போய் நடந்த சமாச்சாரத்தையுஞ் சொல்லவில்லை. இனிமேலாகிலும் நாம் எண்ணிவந்த காரியம் கைகூடிவருமென்று எண்ணுகிறதற்குத் தைரியமு மில்லை. இப்படியெல்லாம் வந்து சேர்ந்தபடியினாலே, இனி ஜீவனை விட்டுக் கொள்ளாமலிருந்தால் சுவாமிக்கு நாம் அடிமை என்பது என்ன இருக்கின் றது? எங்கள் பிதாவானவரும் கோபித்துக்கொள்ளுவார். ஸ்ரீ ராமரும் திரு வுளம் வருந்துவார். அதை என் கண்ணினாலே பார்க்கமாட்டேன். நான் பிராணனை விட்டுக்கொள்கிறேன். நீங்கள் போய் இந்தச் செய்தியைச் சொல் லுங்களென்று சொன்னான். இவ்விதமாக அங்கதகுமாரன் சொல்லவே ஜாம்பு வந்தரானவர் அவனை நோக்கி, ஓ விஜயலட்சுமி வாசஞ்செய்கின்ற தோளினை யுடைய அங்கதகுமாரனே! நன்றாகச் சொன்னீர். நீரிறந்துபோனால் நாங்க ளெல்லாம் இவ்விடத்திலிருந்து அழுவோமா? எங்களுடைய அன்பெல்லாம் பாழாய்ப்போக சுவாமியினிடத்திலும் உங்கள் பிதாவினிடத்திலும் போய்த் தொழுவோமா? மீண்டுபோய்ச் சொல்லுகிறதற்குத்தான் விசேஷமான சமாச் சாரம் என்ன யிருக்கின்றது? ஆகையால் நாங்கள் மாண்டுபோகிறதே யுக்த மென்று உறுதிப்படுத்திக் கொண்டோம். நீரோ எங்கள் ராஜாவின் புத்திர சிகாமணியாயும் எங்களுக்கெல்லாம் இளவரசராயு மிருக்கிறவராகையால், நீரப்படி செய்கிறது தர்மமல்ல, நீர் உயிருடனே சுகமாய்ப் போய்ச் செய்தி சொல்லலாமென்று சொல்லினார். ஐயா! நீங்களெல்லாம் இறந்துபோக நான் மாத்திரம் உயிருடனே போய்ச் சேர்வேனேயாகில், அது எனக்குத் தான் நன்மையா யிருக்குமா? இதற்கு நான் சம்மதித்தாலும் உலகம் சம்மதிக்குமா? பெரியவர்கள் சொல்லும் பழிச்சொல்லுக்கு அஞ்சிக் கூடப் போன தன்னுயிருக்கு ஒப்பானவர்க ளெல்லாம் பிராணனை மாய்த்துக் கொள்ளத் தான் மாத்திரம் பிராணனுடனே வந்து சேர்ந்தானென்று உலகத்திலுள்ளவர்கள் சொல்லிக் கொள்ளுகிற வசைமொழிக்கு முன்னே, நான் பிராணத்தியாகம் பண்ணிக்கொண்டு ஸ்வர்க்கலோகம் போய்ச் சேர்வே னென்று சொல்லிப் பின்னும் அந்த அங்கதன் சொல்லுகிறான்: நானிவ்

விடத்திலே மாண்டுபோன செய்தி என் தாய்க்கும் தந்தைக்கும் எப்படியும் தெரியப்படும்படி யாராவது சொல்லவுங்கூடும். இதைக் கேட்டால் அவர்கள் உடனே மாண்டுபோகவுங்கூடும். அதைக் கண்டு ஸ்ரீ ராம லட்சுமணர்களாகிய இருவரும் இறந்து போவதும் சித்தம். இந்தச்செய்தி அயோத்திக்குப் போனால் பரதாழ்வானும், சத்துருக்காழ்வானும், பெற்ற தாய்மார்களும், அந்தகரத்தார் சகலரும் பிராணனுடனு மிருப்பார்களா? சத்தியமாக ஒருமிக்க மாண்டு போவார்கள். ஜானகியென்று உலகத்தாராலே சொல்லப்பட்ட மகத்தாகிய தவத்தினையுடைய இரத்தின தீபத்தையொத்த ஒரு பாக்கியவதியினாலே, உலகத்திலுள்ள எல்லாருக்கும் கரைதெரியாத துயரம் வந்து விளைந்ததேயென்று சொல்லி அங்கதன் கோகோவென்று அழுதான். இப்படி அதைரியத்துடனே துக்கித்துத் தைரிய புருஷனாகிய இளஞ்சிங்கத்தை யொத்த புஜபலத்தையுடைய அங்கதன் சகிக்காமல் சொன்ன சொல்லானது தடுக்கப்படாத பெருநெருப்பை மூட்டினதுபோல மனமுறுகக்கேட்டு அவன் முகத்தைப் பார்த்து ஜாம்புவந்தர் சொல்லுகிறார்: ஐயா! நீரும் உம்முடைய பிதாவுமாகிய இருவர் தவிர, உங்கள் வம்சத்திற்கு வேறே புத்திரன் இல்லை. அதை யோசித்து நான் சொன்னேன். அல்லவென்று உங்களுக்கு அபாயமானால், அப்பால் என்ன காரியங் கைகூடிவரப் போகின்றது? ஆதலால் நீர் துயரத்தைவிட்டு, அவ்விடத்திற்குப் போய் பிராட்டியாரைக் காணுததையுஞ் சொல்லி, எங்கள் மரணத்தையும் தெரியப்படுத்தும். இனிச் சோகத்தை அடைய வேண்டாமென்று சொல்லினர். இவ் வார்த்தை கேட்டு, அநுமானவர் அவர்களைப் பார்த்து, இத்தனை அதைரியப்படுகிறீர்கள்? இந்தத் திரிபுவனங்களிலும் நாம் ஒருபக்கத்திலாவது செவ்வையாகத் தேடிப் பார்க்கவில்லை. மிகுந்த வேகத்தையுடைய நீங்கள் வஞ்சகர்களைப் போலவும், வீரமில்லாதவர்களைப் போலவும் இப்படிப் பேசுவதென்ன? பாதாளத்திலும், தேவலோகத்திலும், மகமேரு பர்வதத்திலும், மற்று முண்டாகிய அண்டங்களிலும் தேடிப்பார்த்து அந்த மகாலட்சுமியைக் கண்டோமேயானால் நம்முடைய ராஜாவானவர் சொன்ன தவணையில் ஏன் வரவில்லையென்று கேட்பாரா? அவருக்குக் காரியானுகூல மாகிறதொன்றே பிரதானமாகையால், நாம் இன்னமும் தேடத்தக்க இடமெல்லாம் தேடிப்பார்க்கிறதே நல்லது. அப்படித் தேடியும் அகப்படாவிட்டால் முடிவிலே அந்தச் சீதாபிராட்டியின் நிமித்தமாய்ப்போய் யுத்தத்தில் பிராணனைவிட்ட ஜடாயுவைப்போல நாமும் இறந்துபோவதே பெருமை. அப்படிச் செய்யாமல் முந்தியுயிர் விடுவது பழியாகுமென்று சொன்னர். இந்தப்பிரகாரம் அநுமானவர் சொன்ன சொல்லை அங்கே உயர்ந்த மலையின்மேலிருந்த அந்த ஜடாயுவின் தமையனாகிய சம்பாதி யென்னும் பெயரினையுடைய கழுகின் கூட்டத்திற்கு இராஜாவானவன் சத்தியசந்தனாகிய தன் தம்பி ஜடாயு மாண்டுபோன செய்தியைக் காதில் விழக்கேட்டு, முறைதவறாத என் தம்பி இறந்துபோனானென்று தன் நெஞ்சம் பறையடிக்க, சரீரம் பதைக்கத் தேவேந்திரனானவன் வஜ்ராயுதத்தைக் கொண்டு சேதிக்காததற்கு முன்னே சிறகு அறுபடாதிருந்த ஓர்மலை வருகிறதுபோல இவர்களுக்குச் சமீபத்தில் வரத்தொடங்கினன். பராக்கிரமசாலியாகிய என் தம்பியைச் சத்துருக்கள் அஸ்திரத்தால் கொன்றதைக் குறித்து உலகத்தார் துக்கப்படுகிறதுபோலக் காண்கின்றதென்று நினைத்து கண்ணீரா

னது மலையருவிபோலப் பெருகி வழிந்துபோய்ச் சமுத்திரத்திலே விழும்படி அழுகின்ற கண்ணீயுடையவனுகியும், மரங்கள் மலைகளெல்லாம் பொடியாகப் பிரசண்டமாருதமானது போலப் பூமியினின்றும் பெயர்ந்தெழுந்த வெள்ளி மலைக்குச் சமானமாகிய மேனியை யுடையவனுகியும் வந்தார். அப்படி வந்த சம்பாதியைக்கண்டு அங்கிருந்த வானரவீரர்களெல்லாம் பயந்து ஓடினர்கள். அத்தருணத்தில் எங்களையனுகிய அநுமானனவர் அவ்விடத்தில்தானே நின்று கொண்டு, அடா வஞ்சகனே! நீ யிந்தக் கள்ளமாகிய இராக்ஷத ரூபத்தை யெடுத்துக்கொண்டு வந்தையே; பிழைப்பாயா வென்று சொல்லிக் கண்கள் நெருப்பைச் சொரிய உற்றுப் பார்க்கும்போது, மனதிலே கோபமில்லாமல் அதிக துக்கத்தையும், சோகத்தையு முடையவனுகியும், விழிகளிலிருந்து நீர் பெருகும்படி, சங்கை படுதற்குரிய குற்றமாகிய குறியொன்று மில்லாதவனுகியு மிருக்கின்ற அந்தச் சம்பாதியின் தன்மையானது சமீபத்தில் அவன் வந்த விடத்தில் செம்மையாய் விளங்கியது. அதைக் கண்டுகொண்டு அதி நுட்ப மாகிய சாஸ்திரக் கேள்வியையுடைய அநுமானனவர் தம்முடைய வாயைத் திறந்து யாதொரு சொல்லுஞ் சொல்லாததற்கு முன்னே, கொல்லப்படாத ஜடாயுவைக் கொன்றவர்கள் யாரையா சொல்லுங்களென்று சம்பாதி கேட் டான். அப்போது அநுமார் பார்த்து, நீ யார்? உண்மையாக உன்னைத் தெரி யும்படி எனக்கு முன்னே சொன்னல் பின்பு நீ கேட்டதைக் குறித்து நான் சொல்லுகிறேனென்று சொன்னர். அதுகேட்டு சம்பாதியானவன் அவரைப் பார்த்து, ஐயா ஜடாயுவென்பவன் எனக்குத் தம்பி; அந்தத் துணைவனையிழந்த பேதையாகிய நான் அவனுக்குத் தமையன். என் பெயர் சம்பாதியென்று சொன்னன். அவன் சொன்ன சொல்லைக்கேட்ட அநுமானனவர் துக்க சமுத் திரத்திலே மூழ்கி, அதன் கரையேறினவராகி உம்முடைய தம்பியாகிய ஜடா யுவை இராவணன் வாளினற் கொன்றனென்று சொன்னர். அந்த வார்த் தையைக் கேட்டமாத்திரத்தில் சம்பாதி இடிவிழுந்து முறிந்த பர்வதம்போலப் பூமியிலே விழுந்து மூர்ச்சித்து பெருமூச்செறிந்து விம்மி, உயிர்ப்பதைக்க அழத் தொடங்கினன்.

கவி

இலையா நின்கிற வின்றி வெந்துகத்
தலையா னேனுயிர் போதறக் கதோ
வலையா நேமியன் வன்மை சால்வலிக்
கிலையா னேயிது வென்ன மாயமோ.

மலரோ னின்றுளன் மண்ணும் விண்ணுமுண்
டுலையா நீடற மின்னு முண்டரோ
நிலையார் கற்பமு நின்ற தின்றுநீ
இலையா னுயிது வென்ன தன்மையோ.

உடனே யண்ட மிரண்டு முந்துயிர்த்
திடனுள் வந்திரு வோரு மெய்திலேம்
விடநீ யேதனிச் சென்ற வீரமும்
கடனே வெங்கலு ழற்கு மேன்மையோய்.

ஒன்ரு மூன்றல கத்து லோரையும்
வென்ரு னென்னினும் வீர நிற்குகோ
நின்ரு னேயவ் வரக்க நின்னையும்
கொன்ரு னேயிது வென்ன கொள்கையோ..

ஓ என் தம்பி? நீயும் நானும் பால்யத்திலே வேகத்துடனே வானத்தில் உயர்வாய்ப் பறந்தபோது, சூரியனுடைய கிரணத்தின் உஷ்ணத்தினல் சிறகு வெந்து உதிர்ந்துபோகப் பூமியில் விழுந்து எழுந்திருக்க மாட்டாமல் ஒளித்துக் கொண்டு கிடக்கின்ற நானல்லவோ இறக்கவேணும். அந்தச் சூரியனுடைய வெப்பத்திற்கு இளையாமல் சகித்திருந்த நீ முன்னே இறந்துபோனது என்ன மாயமோ? பிரம்மதேவ னிருக்கிரூன். பூமியும் ஆகாயமு மிருக்கின்றதுகள். தர்மமும் இருக்கின்றது. கற்பமு மிருக்கின்றதே. நீ மாத்திரம் இராமற் போனுய். இது எத்தன்மையோ? பூர்வம் நீயும் நானும் உடனுக இரண்டு முட்டையினின்று, உதிக்கின்ற பருவம் வந்து பிறந்து ஒன்ரூய் வளர்ந்திருந் தோம். இப்போது நான் பிரிந்து நிற்க நீ யொருவனும் தனியே போனது சகோதர உரிமையாகுமா? ஓ! கருடனுக்கும் மேன்மையாகிய பராக்கிரம முடையவனே! அந்த இராட்சதனுகிய இராவணன் மூன்று லோகங்களையும் ஜெயித்தவனுனலும் உன் முன்னும் எதிர்த்து நின்ரூனு? உன்னையுங் கொன் ரூனு? இது என்ன ஆச்சரியமடா? என்று இந்தப்பிரகாரம் சொல்லிச்சொல்லி ஏங்கி இரங்கி, அதிக துக்காக்கிராந்தனுய்த் தானும் இறந்து போகும்படி எத்த னித்தார். அப்போது அந்தச் சம்பாதியைப் பார்த்து அநுமானுனவர் ஸ்ரீராம ருடைய காரியநிமித்தமாய் இறந்த அந்த மகானுபாவனுடைய பாக்கியமே பாக்கியமென்று சொல்லித் தேற்றத் தேறி, அநுமானை நோக்கி, எமனுக்குச் சமானமாய்க் கொலை செய்கின்ற வாலியுடைய அரக்கனுடனே யெதிர்த்து, என் தம்பி சண்டை செய்ததற்கு ஏதுவென்ன சொல்லுமையாவென்று கேட்க, வாயுகுமாரனுகிய அநுமானுனவர் சொல்லுகின்ரூர்: எங்கள் நாயகராகிய ஸ்ரீ ராகவருடைய தேவியும் செங்கோலைச் செலுத்துகின்ற ஜனகமகாராஜ னுடைய குமாரியுமாகிய சீதாபிராட்டி தன் பிராணநாயகரை விட்டுப் பிரியும்படி கொடுங்கோலையுடைய வஞ்சகனுகிய இராவணன் மாயை விளைத்து எடுத்துக் கொண்டு போகும்போது, உம்முடைய தம்பியானவர் கண்டு தர்மந் தவரு தவ ராகி அதிக கோபத்துடன் எதிரே ஓடிவந்து நின்று, அடா பாவி! லோக மாதாவை வைத்துவிட்டு அப்பாலே போவென்று தகைந்து, அவன் ஏறிய தேரைச் சிதைத்து, அவனுடைய தோள்களையும் சின்னபின்னமாகக் கீறி, அழித்து, மூர்ச்சிக்கும்படி அவனை அபஜெயப்படுத்தினர். அவன் பயந்து பின்பு திடசித்தனுகி, மகாதேவருடைய வாளினல் வெட்டினன். அதனல் சத்தியசந்தராகிய உம்முடைய தம்பியானவர் விழுந்தாரென்று சொல்லினர். இதைக் கேட்டுச் சம்பாதியானவன் தெளிந்து, என் தம்பி ஸ்ரீராமபிரானுடைய விஷயத்தில் உயிரைக் கொடுத்தானே; அது நல்ல காரியம், நல்ல காரியமென்று கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகும்படி சந்தோஷப்பட்டவனுகி, என் தம்பி அந்தப் பகவானுடைய தேவியார் நிமித்தம் இறந்து பூமியில் எந்நாளும் புகழுடம் புடனேகூடி உஜ்ஜீவித்திருக்கிரூனே யல்லாமல், அவனை மெய்யா யிறந்தவ

னென்று சொல்லக்கூடாது. தர்மஸ்வரூபனுகிய தாசரதியுடனே என் தம்பி அன்பாய் உறவுகொண்டாடிப் பிராணனே யிழந்து, ஒருவருக்கும் பெறக்கூடாத பேறுபெற்றானே இதைப் பார்க்கிலும் இன்பம் என்ன இருக்கின்றது? என்று சொல்லி, மனமுருகித் தம்பியைக் குறித்து ஸ்நான முதலானதுகளுஞ் செய்து தீர்ந்தபின்பு புஜபல பராக்கிரமமுடைய சம்பாதி ஒரு வார்த்தை சொல்லுகிறான்: ஓ ஐயன்மீர்! கேளுங்கள்: நீங்கள் வந்து என்னே ரட்சித்தீர்களேயல்லாமல் எனக்குத் துன்பத்தைக் கொடுக்கவில்லை. மேலும் என்னுடைய பாபகர்மத்தைக் கெடுத்து அஜ்ஞானமாகிய இருளைப்போக்கிக் கிருதார்த்தனுகச் செய்தீர்கள். ஆனபடியால் நீங்கள் எல்லாரும் ஸ்ரீ ராமநாம சங்கீர்த்தனம் செய்யுங்கள். அதனுல் எனக்குக் குறைந்து கூழையாயிருக்கிற சிறகு வளரும். இவ்வளவு என்னிடத்தில் தயை கூறுங்களென்று சம்பாதி சொல்ல அந்த அதிசயமும் பார்ப்போமென்று அநுமான் அங்கதன் ஜாம்புவந்தர் முதலானவர்களும், இரண்டு வெள்ளம் வானரவீரர்களும் அதிக அன்புடனே ஸ்ரீ ராமா! என்று அந்த நீலமேகசாமள ஸ்வரூபியின் திருநாமத்தைச் சொன்னர்கள். அப்படிச் சொல்லும்போது தானே முன்னளிலே தீய்ந்து அநேகநாளாய்க் கட்டையாயிருந்த சம்பாதியின் சிறகு தளிர்த்து வளர்ந்து ஓங்கி, ஆகாயமட்டும் அளாவச் சரீரமுங் குளிர்ந்து, மகா பராக்கிரம சௌரியவந்தவனுய் வாளுக்கு உறையுண்டானதுபோலக் குறைவற்ற உறுப்புண்டாய்ப் பிரகாசித்தான், அப்போது வானரர்களெல்லாம் அந்தச் சம்பாதி வந்ததும், சிறகில்லாமல் உருண்டதும், பார்த்திருந்தவர்களாகையால் உண்மைப்பொருளாகிய ரகுநாயகருடைய திருநாமத்தை உச்சரித்த மாத்திரத்தில் அவனுக்குச் சிறகுண்டாய் விளங்கிய மகிமையைக் கண்டு, ஆச்சரியமடைந்து பயந்து தேவாதி தேவனுகிய ஸ்ரீ ராமனே வாழ்த்திக் கொண்டாடி அந்தச்சம்பாதியை நமஸ்கரித்து, ஐயா! பூர்வத்திலே நடந்த உம்முடைய விர்த்தாந்தம் சொல்லுமென்று கேட்க, அவன் சொல்லுகிறான்: சம்பாதி ஜடாயுவென்கிற நாங்களிருவரும் ஆதிகாலத்திலே உலகத்தைச் சூழ்ந்த இருளை நீக்குகின்ற சூரியனுடைய இரதத்தை நடத்துகின்ற சாரதியாகிய அருணனுக்குப் பிள்ளைகளாய்ப் பிறந்தவர்கள். கழுகின் கூட்டங்களுக்கெல்லாம் இராஜாவாகிய ராஜரீகஞ் செய்துக்கொண்டிருக்கையில், ஒருநாள் தெய்வலோகத்தைப் பார்க்கவேண்டுமென்று எங்களுக்கு நினைவு பிறந்து, இருவரும் வானத்திலே உயரப் பறந்தோம். அவ்வண்ணமாகப் பறக்கிறபோது சூரிய மண்டலத்திற்குப்போய், அவனுடைய தேரைக் கண்டுங் காணுததற்குமுன்னமே அக்கினியையுந் தக்கின்ற கிரணங்களையுடைய அந்தச் சூரியன் சீறுதலால் முன்னே பறந்துபோன என் தம்பியின் மேனியைச் சூரியனுடைய கிரணக்கினியானது வெதுப்ப, அவன் என்னைப் பார்த்து, அண்ணு! அண்ணு!! என்னை ரட்சி! ரட்சி!! என்று சொன்னன். அப்படிச் சொல்லவே நான் முன்னே பறந்து, என்னுடைய இரண்டு சிறகையும் விரித்து ஏந்தி, அவனுக்கு அந்த உஷ்ணந்தாக்காமல் மூடிக்கொண்டு வந்தேன். அதனுல் அவன் தன் இறகுவேகாமல் என் சிறகின் மறைவிலே தானே வந்துவிட்டான். என்னுடைய சிறகும் சரீரமும் வெந்து தீய்ந்து நான் இறவாமல் பூமியில் விழுந்தேன். இவ்விதம் விழுந்த என்னை ஆகாயத்தில் பிரகாசிக்கின்ற சூரியபகவான் கண்டு கிருபையுடையவனுய், இனிமேல் ஒருகாலத்திலே

ஜனகபுத்திரியாகிய சீதாபிராட்டியாரைக் காணுமல் தேடிக்கொண்டு வானர வீரர்கள் வருவார்கள். அவர்கள் உன்னைக்கண்டு இராமஸ்மரணை செய்தால் அப்போது உனக்கு இறகு வளர்ந்து சுகமாய் எழுந்திருப்பாயென்று அநுக்கிரகஞ் செய்தான். நான் சிறகு தீயும்படி விழுந்தபோது லோகசாரங்கனென்னும் ரிஷியானவர் வாசஞ்செய்கின்ற மலைச்சாரலில் வந்து விழுந்து பெருமூச்சு விட்டு, மனம் பேதித்துச் சரீரமுஞ் சிதைந்து அதிக வருத்தமுண்டானதால், உயிரோடு கூடியிருப்பதற்குச் சம்மதியில்லாமல் பிராணத்தியாகம் பண்ணிக் கொள்ள எத்தனித்த என்னை அந்த ரிஷியானவர் கண்டு, அப்பா மகாராஜனே! கல்லாதவர்களைப்போல மனக்களிப்பினுல் நீ தெய்வலோகத்திற்குப் போக நினைத்து வானத்தில் பறந்துபோய்ச் சூரியனுடைய கிரண உஷ்ணத்தினுல் உன் சரீரம் வெந்து பூமியில் வந்து விழுந்தாய். இனிச் சிலகாலம் மாத்திரம் இந்த வருத்தத்துடனே உயிரைக் காப்பாற்ற மாட்டாமல் விட்டுவிடத் துணிந்ததென்ன? இதுவு மொரு ஒழுக்கமா? எப்பொழுதும் செருக்குற்றவர் அழிவது நிச்சயம். ஆனதால் இனிக் கபடனுகிய ராவணன் ஜானகியை எடுத்துப்போய் ஒளித்துவைத்த இடத்தைத்தேடி வருகிற வானரர்கள் ராமஸ்மரணை செய்ய, உனது சிறகு வளர்ந்தோங்கும். இப்படி வீணுகச் சோகப்படாதிருவென்று சொன்னர். அதனுல் பிராணனை வைத்துக்கொண்டிருந்தேன். என்னுடைய துயரத்தைப் பார்த்து என் தம்பியும் துக்கப்பட்டு இறக்கத் துணிந்தான். அப்போது நான் நீயும் இறந்தால் கழுகுகள் இராஜாவில்லாமல் அலைந்துபோமென்று சொல்ல, என் ஆக்கினையை மறுக்கப் பயந்து. அப்படியே அவன் கழுகுகளுக்கு அரசனுனன். ஓ தேவர்களும் சந்தோஷிக்கத்தக்க உத்தமர்களே! என் பூர்வோத்திர மிதுவாகும். நீங்கள் வந்த வரலாறென்ன? அது எனக்குத் தெரியச் சொல்லுங்களென்று சம்பாதி கேட்க, அனுமான் முதலானவர்கள் ஓ இராமபத்திரா! இராமச்சந்திரா! இரகுநந்தனு! தாசரதி! சீதாபதி! கருணுநிதி! ஹரசாபகண்டனு! கோதண்டதீட்சா! குருதீனரட்சகா! மநுகுலோத்தமா? சாமளஸ்வரூபி! சத்தியசந்தனு! தைத்தியகுலாந்தகா! குகபாந்தவா; சுக்கிரீவமித்திரா! என்று ஸ்ரீ ராகவனை ஸ்தோத்திரஞ் செய்து அவரெழுந்தருளி யிருக்கின்ற திக்கு நோக்கித் தெண்டன் சமர்ப்பித்து சம்பாதியைப் பார்த்து சொல்லுகின்றர்கள். கேளுமையா! அற்பச் செய்கையினையுடைய பாவியாகிய அந்த இராவணன் சீதாலட்சுமியை எடுத்துக்கொண்டு, தெற்குத்திசையில் வந்தானென்று எண்ணித் தேடி வந்தோமென்று சொன்னர்கள். அதுகேட்டு சம்பாதி அவர்களைப் பார்த்து ஓ அன்பர்களே! நல்ல காரியம்? நீங்கள் பயப்படாதிருங்கள் நானிதைத் குறித்துச் சொல்லுகிறேன் கேளுங்கள். அந்த லோகமாதாவை இராவணன் பூமியுடனே எடுத்துக்கொண்டு போகின்றபோது நான் கண்டேன். இலங்கையிலே தான் கொண்டுபோய்ச் சிறை வைத்திருக்கிறன். அவ்விடத்திற்குப் போனுல் ஜானகியைக் காண்பீர்கள். இன்னமும் இருக்கின்றுள். இலங்கையோ எழுநூறு யோசனை விஸ்தீரணமுள்ளது. அந்த பட்டணத்தை ஏமன்கூடக் கண்ணை விழித்துப் பார்க்கப் பயப்படுவான். அந்த நீசனுகிய இராட்சதனுடைய கோபாக்கினியானது வடவாமுகாக்கினியையும் தகித்துவிடும். ஆதலால் ஓ குற்றமற்ற குணத்தை யுடையவர்களே! நீங்கள்

எவ்விதத்தில் அந்த இலங்கைக்குப் போவீர்கள். சதுர்முகப் பிர்மாவினாலும் பார்வதி சமேதனாகிய சிவனாலும், திருப்பாற்கடலிலே சேஷசயனத்தில் யோக நித்திரை செய்கின்ற ஸ்ரீ மகாவிஷ்ணுவினாலும், இந்தக் கடலைக் கடக்கின் றதோ அருமை அதனாலுங்களுக்கு இனி வருவதைக் குறித்துத் தீர்க்காலோ சனை செய்து பார்த்துக்கொண்டு போங்கள் ஓ சிரஞ்சீவியாகிய அநுமான் முதலான வானரவீரர்களே! எல்லாரும் போவோமென்ற யோசனையை விட்டு விடுங்கள். அந்த லங்கை அப்படிக்கு எளிதானதல்ல. சமர்த்துண்டானால் ஒருவர் மாத்திரம் மறைந்துபோய், அவ்விடத்திலே சேர்ந்து, பிராட்டியாரைக் கண்டு சுவாமி சொன்ன செய்தியைச் சொல்லித் தைரியப்படுத்தித் துன்பத்தை நீக்கித் திரும்புங்கள். அல்லவென்றால் என் சொல்லை நீங்கள் உண்மையாகத் தெளிந்து இங்கிருந்து மீண்டும் சுவாமியினிடத்திற் போய் சொல்லுங்கள். என் னுடைய தம்பி இறந்து போனதினாலும், இனி யந்தக் கழுகின் கூட்டங்களுக் கெல்லாம் தலைவராயிருந்து காக்கின்றவர்கள் இல்லாததினாலும், அதுகளிருப் பிடத்தை விட்டு அலைந்துபோய்விடும். ஆதலால் அதுகளை பாதுகாப்பதற்குத் துரிதமாய்ப் போகவேண்டி யிருக்கின்றது. நீங்கள் மிகவும் தெரிந்தவர்களான படியினாலேதான் சொல்லிய இரண்டு காரியத்தையும் செவ்வையாக எண்ணிப் பார்த்து யுக்தமானதைச் செய்யுங்களென்று சொல்லி மேலே யெழும்பி, ஆகா யத்தை யெல்லாம் தன் சிறகு மறைக்கும்படி சம்பாதி பறந்துபோனன்.

சம்பாதிப் படலம் முற்றிற்று.

மகேந்திரப் படலம்

அப்போது அநுமான் முதலானவர்கள் ஒருவரை யொருவர் பார்த்து யோசிக்கத் தலைப்பட்டார்கள். ஓ யாவராலும் செய்க்கூடாத காரியங்களை யெல்லாம் எளிமையாகச் செய்துமுடிக்கின்ற வல்லமை யுடையவர்களே! சம் பாதியானவர் பொய் சொல்லுகிறவரல்ல. அவர் சொன்ன சொல்லால் சகல சமாசாரத்தையும் கரதலாகமலம் போலக் கண்டோம். நாம் பிழைக்கத்தக்க மார்க்கத்தையும் பெற்றுக்கொண்டோம். ஆகையால் செய்யத்தக்க காரியங் களையெல்லாம் பரிஷ்காரமாக யோசித்துச் செய்யுங்கள். சூரியகுமாரனாகிய சுக்ரீவமகா ராஜாவையும், கோதண்டபாணியாகிய ஸ்ரீ ராமரையும் போய் வணங்கி நடந்த சமாச்சாரத்தைச் சொல்லலாம். மேலும் முழுதும் தேடிப் பார்க்கிறதே எந்தவிதத்திலும் சிறந்ததாகும். ஆகையால் இந்தச் சமுத்திரத் தைத் தாண்டுகின்றவர்கள் ஆரென்று தங்களுக்குள்ளே தாங்கள் உசாவினர் கள். அப்போது அவரவர்கள் தங்கள் தங்கள் பராக்கிரமத்தைச் சொல்லு கின்றார்கள். அது எவ்வாறெனில், நீலன் முதலாகிய படைத் தலைவர்களெல் லாம் சமுத்திரத்தைக் கடக்கிறதற்கு எங்களால் ஆகாது; ஆகாது என்று உள்ளபடி சொல்லிவிட்டார்கள். அத்தருணத்தில் வாலிபுத்திரனாகிய அங்கதன் நானிந்தக் கடலைத் தாண்டி அக்கரைக்குப் போவேன். அங்கிருந்து திரும்பி

வர எனக்கு நிர்வாகமிராதென்று சொன்னன். ஜாம்புவந்தர் யோசித்து நான் முன்னே இதுகளையெல்லாம் அலட்சியமாகத் தாண்டிக்கொண்டிருந்தேன். தேவநாயகனுகிய ஸ்ரீமந் நாராயணன் திரிவிக்ரம ஸ்வரூபங்கொண்டு பூமியை அளந்தபோது, இந்தப் பூமியின் எட்டுத் திக்கிலும் பிரதக்ஷணமாக ஓடி ஓடிப் பறையறைந்து வந்தேன். அவ்விதமாக வருகிறபோது மகாமேரு வானது என் கால்களில் மோத, அதனல் காயனமாய் நொந்திருக்கிறேன். ஆகையால் நான் இப்போது கடலைக் கடந்து இலங்கைக் கோட்டை மதிலைத் தாண்டி அந்நகரத்திற்குள் பிரவேசித்து கொடியவர்களாகிய இராட்சதர்கள் அஞ்சத்தக்க சௌரியத்துடனே சீதாபிராட்டியாருடைய சமாச்சாரத்தை யறிந்துவரத்தக்க சக்தி எனக்கில்லையென்று சொன்னர். அப்படிச் சொன்ன ஜாம்புவந்தர் மறுபடியும் அங்கதகுமாரனைப் பார்த்துச் சொல்லுகின்றர். அப்பா அங்கதா! நாம் இப்படி மகத்தாகிய வருத்தத்தை அனுபவித்துக் கொண்டு இனி யாரைத்தான் போங்கள் என்று சொல்லுவோம்? இனி அப்படி நினைப்பது அறிவில்லாமையாகும். அது கீர்த்தியுமல்ல. நம்முடைய பெயரை நிலைநிறுத்திப் புகழடையத்தக்க யோக்கியர் யார் என்றல் இவ்வளவுக்கு நம்மை கிருதார்த்தர்களாக்கின படியினலும், எந்தக் காரியங்களையும் நிச்சயித்து அறிந்து சோர்வில்லாமல் முடிக்கத்தக்க சாமர்த்திய முண்டாயிருக்கிறபடியினலும், இந்த அனுமானைத் தவிர வேறொருவரும் இல்லையென்று சொல்லிப் பின்பு அநுமானைப் பார்த்துப் பிர்மபுத்திரராகிய ஜாம்புவந்தர் தோத்திரஞ் செய்கின்றர்.

கவி

மேலை வீரிஞ்சன் வீயினும் வீயா மிகைகா ளீர்
நூலை நயந்து நுண்ணி துணர்ந்தீர் துவமக் கீர்
காலனு மஞ்சுங் காய்சின மொய்ம்பூர் கடனின் றீர்
ஆல நகர்ந்தா னன்ன வயப்போ ரடற்கிற் பீர்.

வெப்புறு செந்தீ நீர்வளி யாலும் விளியா தீர்
செப்புறு தெய்வப் பல்படை யாலுஞ் சிதையா தீர்
ஒப்புறி னெப்பார் நும்மல தில்லீ ரொருகா லே
குப்புறி னண்டத் தப்புற மேயுங் குதிகொள் வீர்.

நல்லவு மொன்றே தீயவு நாடி நவைதீ ரச்
சொல்லவும் வல்லீர் காரிய நீரே துணிவுற் றீர்
வெல்லவும் வல்லீர் மீளவும் வல்லீர் மிடலுண் டேல்
கொல்லவும் வல்லீர் தோள்வலி யென்றுங் குறையா தீர்.

மேரு கிரிக்கு மீதுற நிற்கும் பெருமெய் யீர்
மாரி துளிர்க்குந் தாரை யிடுக்கும் வரவல்லீர்
பாரை யெடுக்கு நோன்மை வலத்தீற் பழியற் றீர்
ஞாயி னைச்சென் றெண்ணை யகத்துந் தொடுவல் லீர்.

அறிந்து திறகதா றெண்ணிய றத்தா ராழியா மை
மறிந்து ருளப்போர் வாலியை வெல்லு மதிவல் லீர்
பொறிந்திமை யாக்கோன் வச்சிர பாணம் புகமூழ்க
எறிந்துழி மற்றோர் புன்மயி ரேனு மிழவா தீர்.

போர்மு னெதிர்ந்தான் மூவுல கேனும் பொருளா கா
ஓர்வில் வலங்கொண் டொல்கலில் வீரத் துயர்தோ ளீர்
பாருல கெங்கும் பேரிருள் சீக்கும் பகலோன் முன்
தோர்மு னடந்தே யாரிய நூலுந் தெரிவுற் றீர்.

நீதியி னின்றீர் வாய்மை யமைந்தீர் நினைவா னும்
மாதர் நலம்பே ணுதுவ ளர்ந்தீர் மறையெல் லாம்
ஓதி யுணர்ந்தீ ரூழிக டந்தீ ருலகீ னும்
ஆதியயன்ரு னேயென யாது மறைகின் றீர்.

அண்ண லமைந்தற் கன்பு சிறந்தீ ரதனு னே
கண்ணி யுணர்ந்தீர் கருமமுமக் கே கட னென் னத்
திண்ணி தமைந்தீர் செய்து முடிப்பீர் சிதைவின் ரூல்
புண்ணிய மொன்றே யென்று நிலைக்கும் பொருள்கொண் டீர்.

அடங்கவும் வல்லீர் கால மதன்றே லமர்வந் தால்
மடங்கன் மூனிந்தா லன்ன வலத்தீர் மதிகா டித்
தொடங்கிய தொன்ரே முற்று முடிக்குந் தொழிலல் லால்
இடங்கெட வெவ்வா யூறு கிடைத்தா லிடையா தீர்.

ஈண்டிய கொற்றத் திந்திர னென்பான் முதல்யா ரும்
பூண்டு நடக்கு நன்னெறி சாபப் பொறையா னும்
பாண்டிதர் நீரே யஃதி னியுய்க்கும் படிவல் லீர்
வேண்டிய போதே வேண்டிய துய்க்கும் வினைவல் லீர்.

ஏகுமி னேகி யெம்முயிர் நல்கி யிசைகொள் ளீர்
ஓகை கொணர்ந்தும் மன்னையு மின்னற் குறையில் லாச்
சாகர முற்றுந் தரவீடு நீரிக் கட ரு வும்
வேக மமைந்தீ ரென்று விரிஞ்சன் மகன்விட்டான்.

ஐயா ஆஞ்சநேயரே! பிர்மா இறந்து போனாலும் மாளாத ஆயுவுடைய மூள்ளவரும், சாஸ்திரங்களை யெல்லாம் விசிதமாயறிந்த வரும், ஒருவருக்குச் சொல்ல வல்லவரும், காலனும் அஞ்சத்தக்க பலமுள்ளவரும், கடல்போல அளவிடப்படாத பராக்கிரம முடையவரும், பிரளயகால ருத்திரனைப்போல யுத்தம் செய்கின்ற வரும், நீராலும் நெருப்பாலும் காற்றினாலும் இறவாதவரும், பல வகைப்பட்ட திவ்வியாஸ்திரங்களாலும் ஊறுபடாதவரும், உமக்குச் சமானமான வர் நீரே யல்லாமல் வேறில்லாதவரும், ஒருதரம் குதிக்கும்போதே இந்த அண்டத்திற்கு அப்புறத்திலும் குதிக்கின்றவரும், நல்லது பொல்லாததுகளை யெல்லாம் நாடிச்சொல்ல வல்லவரும், காரிய பாகங்களெல்லாம் தெரிந்து ஜெயிக்க வல்லவரும், திரும்பிவர வல்லவரும், யாராகிலும் பலவந்தர்களா யெதிர்த்தால்

கொல்லவல்லவரும், புஜபலத்திலே எந்நாளும் கொஞ்சமாகிலும் குறையாதவரும் மகம்மேருவைப்பார்க்கிலும் அதியுன்னதமாகிய ஸ்தூலகாத்திர முள்ளவரும், மேகஞ் சொரிகின்ற மழைத்துளிகளின் சந்திலும் நுழைந்துவ்ரத்தக்க வரும், இந்தப் பூமியையும் எடுக்கத்தக்க ஆண்மையையுடைய வரும், சிறிய குழந்தைப் பருவத்திலே தானே பாய்ந்து சூரியனைத் தொடர்ந்து தொடவல்லவரும் நீரல்லா மல் வேறேயாரிருக்கிறார்கள் ? அன்றியும், தர்மந்தப்பாமல் நியாய பூர்வமாக வாலியை ஜெயித்த விவேகமுள்ளவரும் இந்திரனுடைய வச்சிராயுதம் வந்து தாக்கியும் சரீரத்தில் ஒரு சிறுமயிரும் அறுதிருந்தவரும், ஸப்த லோகத்தாரும் வந்து எதிர்த்தாலும் ஒரு பொருளாக எண்ணுமல் ஜெயிக்கின்ற சௌரியவந்த ரும், சூரியனுடைய இரதத்திற்கு முன்னே நடந்து வியாகரண சாஸ்திரங்கற் றுத் தெளிந்தவரும். நீதியின் வழியிலே நிற்கின்றவரும், பொய்ம்மையும் தீமையு மில்லாத வாய்மை நிறைந்திருக்கின்றவரும், ஸ்திரீ சம்போக மென் பதை மனதிலே நினைத்தறியாதவரும், வேதங்களை யெல்லாம் ஓதி யுணர்ந்த வரும், மரணமில்லாத சிரஞ்சீவிபதம் பெற்றிருக்கின்றவரும், உலகத்தைச் சிருஷ்டித்த அந்தப் பிர்மதேவரே நீர் என்று யாவரும் சொல்லும்படி யிருக் கின்றவரும், சக்கரவர்த்தித் திருமகனிடத்தில் அதிக அன்புடையவரும், அவ ருடனே கூட யோசனைக்கு யோக்கியரா யிருக்கிறவரும், அவர் தமது திருவாயி னல் இந்தக் காரியம் உம்முடையது என்றும் உமக்கே கடனென்றும் சொல் லத்தக்க பெருமை யுண்டானவரும், அவ்வண்ணமே அதைச் சிதையாமற் செய்து முடிக்கத் தக்கவரும், புண்ணிய புருஷர்களாலே இவர் புண்ணிய புருஷ ரென்று நினைக்கும்படி கீர்த்தி பெற்றவரும் நீரே யிருக்கின்றீர் ; மேலும் சமயமில்லாத சமயத்தில் அடங்க வல்லவரும், யுத்தம் வந்து வாய்த்தே யாகில் அந்த நரசிங்க மூர்த்தியைப்போலக் கோபாவேசங் கொள்ளவல்ல வரும், அறிவினில் யோசித்துத் தொடங்கிய காரியமொன்றை மாத்திரமல் லாமல் சகலத்தையு முடிக்கத் தக்க சமர்த்துள்ளவரும், ஒருவேளை ஸ்தா னப்பிரஷ்டம் வந்தாலும் காரியக் கெடுதியானாலும் இடைந்து போய்விடாமல் மூனைந்து சாதிக்க வல்லவரும், இந்திரன் முதலாகிய சகல தேவர்களும் பார்த்து இதுவே சிறந்ததென்று மேற்கொண்டு நடக்கத்தக்க நல்லொழுக்கத்தினாலும் பொறுமையினாலும் பாண்டித்திய முடையவரும், அதைச் செவ்வையாக நடத்த வல்லவரும், வேண்டியபோதே வேண்டியதுகளை யெல்லாம் நிறைவேற்றுகின்ற தபோமகிமை யுண்டாயிருக்கின்றவரும், உம்மையல்லாமல் வேறே யார் உள ரென்று சொல்லுவேன்! ஆகையால் இப்பொழுது நீரே போம். உடனே சந்தோஷ சமாச்சாரம் கொண்டுவந்து எங்கள் பிராணனை எங்களுக்குக் கொடுத்து இரட்சித்துக் கீர்த்தி சம்பாதித்துக் கொள்ளும். ஓ பூரண விவே கத்தையுடைய ஆஞ்சநேயரே! அப்படிச் செய்தால் நம்முடைய தாயாகிய சீதையும் துக்கசமுத்திரத்தைக் கடந்து கரையேறுவாள் என்று ஜாம்புவந்தர் சொல்லினர். அந்த வார்த்தையை அனுமார் கேட்டுச் சரீரம் புளகாங்கிதமான வராகி, முகமாகிய தாமரைப் புஷ்பத்தின் நடுவே செவ்வல்லிப் புட்பம் மலர்ந் ததுபோல மகிழ்ச்சியுடனே நகைத்து, கைகளைக் குவித்துக் கும்பிட்டுக்கொண்டு அந்த வானரவீரர்களுக் கெல்லாம் சந்தோஷம் உண்டாகும்படி தம்முடைய திருவுளத்தின் தாற்பரியத்தைத் தெரிவிக்கும்பொருட்டுச் சொல்லுகின்றார் :

ஓ சிநேகிதர்களே! மஹானுபாவர்களாகிய நீங்கள் நினைக்கிறதற்கு முன்னே ஸப்த சமுத்திரத்தையுந் தாண்டி உலகங்களை யெல்லாம் ஜெயித்து அனுயாச மாய் ஜானகியைக் கொண்டுவந்து கொடுக்கத் தக்கவர்களாய் இருந்தும், அடி யேன்மேல் கிருபைசெய்து பலவீனனுகிய என்னை ஒரு பொருளாக எண்ணி என்னுடைய அறிவில்லாமையை வெளிப்படுத்துதற்கு நீ போய் இதைச் செய் யென்று ஆக்கியாபித்தீர்கள். ஆதலால் நான் பிறந்துசெய்த தவமும்பெற்ற பாக்கியமும்போல யார் செய்தார்கள்! யார் பெற்றார்கள்! உலக முழுமையும் மூழ்கிப் போகும்படி இந்தச் சமுத்திரமும் பொங்கி வந்தாலும், அண்டமுடைந்து அப்புறத்துள்ள பெரும்புறக்கடல் பெருகி வந்தாலும், உங்களுடைய கிருபையை யும் தசரதாத்மஜனுகிய ஸ்ரீ ராமனுடைய ஏவலும், இரண்டு பக்கத்திலு மிருக் கின்ற இரண்டு சிறகுகளாகக்கொண்டு கருடனைப்போலக் கடந்து, அந்த லங்கையை வேருடன் பேர்த்து இவ்விடத்தில் கொண்டுவர வேண்டுமென்றாலும், சத்துருக்களை யெல்லாம் பொடிப்பொடியாக்கிப் பிராட்டியாரைக் கொண்டுவா வென்று சொன்னாலும், நீங்கள் சொன்ன சொற்படியே அதிசீக்கிரத்தில் முடிக்கிறேன் பாருங்கள். ஜகதீஸ்வரனுகிய ஸ்ரீமந் நாராயணன் உலகத்தை யளந்ததுபோல இந்த நூறுயோசனை விஸ்தீரணமான பெரிய கடலை ஒரு தாண்டிலே கடந்து, இந்திராதி தேவர்கள் வந்து எதிர்த்தாலும் அவ்விடத்தி லிருக்கின்ற இராட்சதர்களை யெல்லாம் அதஞ்செய்து, நினைத்த காரியத்தை அவசியம் முடிப்பேன். நான் போய்வருகிற பரியந்தம் நீங்கள் இவ்விடத்தில் தானே யிருங்கள். அடியேனுக்கு விடைகொடுத் தருளுங்களென்று சொல்லி னர். அவர்களும் சந்தோஷித்து வாழ்த்தத் தேவர்கள் புஷ்பமாரிபொழிய, அந்த மஹேந்திர பர்வதத்தின் மேலேறிக் கடலைக் கடக்க வேண்டுமென்கிற எண்ணத்தையுடைய அநுமானனவர் உலகத்தை யளந்த பரந்தாமன் உயர வெடுத்த திருவடிபோல ஆகாயத்தில் ஓங்கிவளர்ந்து, திருவடியென்று சொல்லு கின்ற தமது திருநாமத்தின் காரணமானது சகலமானவர்களுக்கும் இப்படிப் பட்டதென்று விளங்க வாசுகி யென்கின்ற சர்ப்பத்தால் கட்டப்பட்டு ஆமை முதுகின்மேலிருந்த மந்தரகிரியைப்போல அந்த மகேந்திர பர்வதம் முழுமையும் கடலிலே முழுங்கும்படி தமது வாலை வளைத்துச் சுற்றிக்கொண்டு அதன் சிகரத் திலேகின்றார். இப்படி தம்முடைய திருமேனியானது அண்டகடாகத்தை முட் டும்படிவளர்ந்த அநுமானனவர் பின்னும் மேகங்கள் தமது காலில்கட்டிய வீர கண்டைகளைப்போல முழங்க, மகேந்திரகிரியானது தமது பாதத்தைத் தாங்கு கின்ற கீழ்க்குறட்டுக் கல்லைப்போலத் தோன்ற, அதின்மேலிருந்து அண்டத் தைச் சுமந்து நிற்கின்ற ஒரு பொற்றூண்போலவும் பிரகாசித்தார்.

கிஷ்கிந்தா காண்டம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத்

கம்ப ராமாயண வசனம்

சுந்தர காண்டம்

காப்பு விருத்தம்

அலங்கலிற் ரோன்றும் பொய்ம்மை யரவெனப் பூத மைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டா லவரென்பர் கைவி லேந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவார்.

ஆண்டகை யாண்டவ் வாஞர் தூரக்கரா டருகர் கண்டான்
ஈண்டிது தான்கொல் வேலை யிலங்கையென் றைய மெய்தா
வேண்டரு வீண்ஞ டென்னு மெய்ம்மைகண் டுள்ள மீட்டான்
காண்டகு தோகை யும்ப ரில்லெனக் கருத்துட் கொண்டான்.

கடல்தாவு படலம்

அழிவில்லாப் பரமபத நாதனுகிய ஸ்ரீ ராமச்சந்திரப் பிரபுவை அன்புடன் பஜித்துவரும் அநுமானுனவர், மஹேந்திர பர்வ தத்தின்மேல் நின்றவுடன் தம்முடைய திருஷ்டிக்கெதிரே அருகில்தானே தெய்வலோகம் தோற்றுவதைப் பார்த்து இது தானே இலங்காபுரியெனத் தன்னுள் நினைந்தவராய் அச்சப் பட்டு, உடனே தெளிவுற்று இது மகா வுயரமாக இருப்பதி னல் இலங்கையல்ல ; வானுலகமென்றும், இதில் ஜானகியம்மா ளில்லையென் றும் அறிந்துகொண்டு தனது நோக்கத்தைக் கிஞ்சிற்று தாழ்த்திப் பார்க்குங் கால் அந்த அமரர் லோகத்திலும் மகா வுன்னதமாகியும், கந்த கதம்பவாடை வீசாநின்ற இந்தச் சோலைகளும், சவுக்கந்தீர்ந்த தங்கமயமான மதில்களும், ஜெயத்தைப்பெறும் துவஜம் நாட்டிய சிகரங்களும், மாணிக்கமயமாயும், சுவர்ன மயமாகியும் பிரகாசியாநின்ற விநோதமான மாடமாளிகை கூடகோபுரங் களும், அழகான வீதிகளுமாய், பார்ப்பவர்கள் ஆனந்தங் கொள்ளும்படியான தாயும் விளங்கிய இலங்கைப்பட்டணத்தைக் கண்டு மகா சந்தோஷமாகி

அண்டகடாகங்களும் எட்டுத் திக்குகளும் அஷ்ட குலாசலங்களும் கிடுகிடாய்க் கும்படி தனது புயாசலங்களைத் தட்டிக் கொக்கரித்து ஆர்ப்பாட்டத்துடன் யாவராலுங் கண்டு தரிசிக்கக்கூடாமையாயும் மகா ஸ்வரூபத்தைப் பெற்ற அனுமானவர் அந்தப் பர்வதத்தின்பேரி லிருந்தபடி நின்று தன்னுடைய பாதங்களையும் ஊன்றி அதிவீர சௌரியத்துடன் அப்பால் பாய்ந்து போவதற் குப் பிரயத்தனப்பட்டார். அப்போது அந்தக் கிரியானது பொடிப் பொடி யாகக் குமுங்கி பூமிமட்டத்தழுந்தி அதன் உறுப்புகளும் வயிறு முதலாகிய குடல்களும் வெளிகண்டதுபோல, அதனில் நெடுநாளாகக் குடிகொண்டிருந்த மலைப்பாம்புகளெல்லாம் தங்க ளினத்துடன் நசுங்கி நெளிந்து வெளியிற்றலைப் பட்டு நகர்ந்ததுகள். குகைகளுலும் சுனையிலும் துயின்றுகொண் டிருந்த மிருக ராஜாக்களெல்லாம் குமுங்கிச் சரிந்து குருதியானது வாயினிடத்தில் வீறிட் டோடிவர மரணமானதுகள், பறப்பன முதலிய பட்சிகளின் குழுவெல்லாம் தங்காமல் ஆகாயத்தெழும்யி கடலிரைச்சலிலும் வெகு கோஷ்டமாய்ப் பறந்து இரவு பகல் தெரியாமல் வானத்தை மூடிக்கொண்டதுகள். மேலும் யானைக ளானது இரண்டு காதுகளாற்றூவி தன் தேகத்தில் புடைத்துக்கொண்டு சண்டமாருதம் வீச, சூரிய சந்திராதிகளுங் கதிமாற, பிடியானைகளும் நடுங்கி வந்து தங்களுடலைக்கட்டிப் பிணைத்துக்கொள்ள, தங்களது நீண்ட துதிக்கை களால் மரங்களை எல்லாம் வேருடன் பிடுங்கி எறிந்துக்கொண்டு கதறி யோடி யதுகள். பொன் மயமாகிய சிகரங்கள் பொடியாக. அனற்பொறிகள் சிதற, அந்த மலையின் முதுகு விரிந்தபோது, அங்கே மயிர் முளையாமலும் கண் திறவா மலு மிருக்கின்ற இளங்குட்டிகளை வாயிலே கௌவிக்கொண்டு புலிகளெல்லாம் பயந்தோடியதுகள். இருந்தாற்போல் இருந்து அந்தப்பர்வதம் நெரிகின்ற முழக் கங் காணவே, அதில் வாசமாயிருந்த விஞ்சைய குமாரர்கள் எல்லாம் பயந்து கையிலே வாளுங் கேடயமும் பிடித்துக்கொண்டு அந்தர மார்க்கத்தில் எழும்பி யுத்தகளத்திலே சத்துருக்கள் காலைத் துணிக்கும்படி கத்தியைக்கொண்டு ஓங் கியபோது அதை தப்பித்துக்கொண்டு அதிக விசையாய் மேலெழும்பிய வீரர் களைப்போலப் போனர்கள். நட்சத்திரங்களும் சந்திரசூரியர்களும் மேகங்களும் மேலே தவழ்ந்துக்கொண்டிருந்த அந்தப் பர்வதமானது அதுகளெல்லாம் ஆகாயத்தில் நிற்க அநுமானுடைய சரீர பாரத்தினால் பூமியி லழுந்துகிறது எப்படி யிருந்ததென்றால், கொடிமரமானது மேலேகாணக் குமிழிகளுண்டாய்ச் சமுத்திரத்தில் பெரிய கப்பல் அமிழ்கின்றதுபோ லிருந்தது. சந்தன விருக்ஷம் குங்கும விருக்ஷம் முதலானதுகள் கற்கள் நெரிகின்ற சந்துகளிலே அறை பட்டுச் சுனைநீரிலே கரைபட்டு, இங்குலிகப் பொடிகளுடன் புட்பத்தின் மகரந்தப் பொடிகளுடனும் கலந்து சிவந்த வெளியிலே அருவியாயோடி வரு கிறது எதுபோலிருந்த தென்றால், அந்தப் பர்வதம் கிழிந்து அதனுடைய ரத்தம் வெளியில் புறப்படுகிறது போலிருந்தது. அதில் வாசம் பண்ணிக் கொண்டிருந்த தபசிகளெல்லாம் அந்தப் பர்வதமானது பூர்வத்தில் திருப்பாற் கடலில் நட்டுக் கடைந்த மத்தாகிய மந்தரகிரியைப் போலச் சுழலவே, தாங்கள் செய்கின்ற தபசு முடிந்து முடியாமலும் தேகபாசத்தை ஒழியாமலும் மோட்சப் பிரதேசத்திற்குப் போகின்றவர்களைப் போல ஆகாயமார்க்கத்தி லெழும்பிப் போனர்கள். அந்தப் பர்வதமானது நெக்குவிட்டுப் பிளந்தபோது உண்டாகிய

ஓசையைக் கேட்டு தேவஸ்திரீகள் பயந்து நடுங்கி, தங்கள் தங்கள் நாயகன்மார்களைக் கட்டிக்கொண்டார்கள். அப்படி அவர்களால் தழுவப்பட்ட அந்தத் தேவர்கள் பூர்வம் கைலாசபர்வதத்தை இராவண னெடுத்த மாத்திரத்தில் பார்வதி பயந்து கட்டிக்கொள்ளும்படி அதிலிருந்த சிவப்பிரபுவை ஒத்திருந்தார்கள். பின்னும் அந்த மலையில் பிணங்கி அதிக கோபமாயிருந்த அநேகம் தெய்வப் பெண்கள் இந்தப் பயத்தினாலே மனந் திடுக்கிட்டு அந்தக் கோபம் நீங்கிப் புருஷர்களைத் தழுவிக்கொண்டவர்களாய் அந்தரமார்க்கத்திலெழும்பிப் பயந்தீர்ந்து, தாங்கள் விட்டுவந்த கிளைகளைக் குறித்து இரங்கிக் கிலேசித்தார்கள். இப்படிப்பட்ட சமயத்திலே தேவர்களும் ரிஷீஸ்வரர்களும் மற்றும் மூன்றுலோகத்திலும் இருக்கின்ற உத்தம புருஷர்களும், வரிசை வரிசையாய் அந்தரத்தில் வந்துநின்று, புஷ்பங்களும் சந்தனமும் வாசனைப் பொடிகளும் இரத்தினங்களுமாகிய இதுகளையெல்லாம் சொரிந்து, ஓ மஹாநுபாவராகிய ஆஞ்சநேயரே! நடவுமையாவென்று சொல்லி வாழ்த்தினார்கள். வீராதி வீரரான ஆஞ்சநேயரும் அதிசீக்கிரமாகத் தாவிப்போகத் தலைப்பட்டார். அப்போது கூடவந்திருக்கின்ற ஜாம்புவந்தர் அங்கதன் முதலானவர்களெல்லாம் பார்த்து, ஐயா அநுமானே! இந்தக் கடல் குறுமுனியாகிய அகஸ்தியராலே உண்ணும்படி அடங்கியதாகையால், இந்த அற்பமான சமுத்திரத்தையா நாம் தாண்டுகிறதென்று இகழ்ச்சியாய் மனதில் எண்ணுமல், போகின்ற காரியம் பெரிதானபடியினாலே அதைப் பிரதானமாக நினைத்துக்கொண்டு போய்வாருமென்று சொன்னார்கள். அப்போது தேவர்களெல்லாம் அநுமானவர் இப்பொழுது இந்த ஸ்வரூபமெடுத்தது அந்த லங்கைமட்டுமே போகிறதற்கல்ல. அதற்கப்புறம் போகிறதற்காகவும் காண்கின்றதென்று அதிசயித்துப் பார்க்க, அந்த ஆஞ்சநேயர் முன்னே தாழ்ந்து தம்முடைய காலினாலழுந்தவே, அப் பர்வதத்தின் சிகரமும் அதன்மேலிருந்த அவருடைய பாதமும் பூமிமட்டும் அழுந்தியதுகள். வாலைவீசி நீட்டிக்கொண்டு, கால்களை மடக்கி, மார்பை ஒடுக்கி, தோள்கள் பூரித்துவளரக் கழுத்தைச் சுருக்கி, கைகளை நீட்டி, தலையை உயர எடுத்து, வாயினால் ராமஸ்மரணை செய்துகொண்டு பார்க்கிறவர்களுடைய பார்வைக் கெட்டாமல் அதிக விசையாக மேலெழும்பினர். உச்சியானது பிர்மலோகத்தை அளாவும்படி அவரெழும்பினவுடனே அந்த விசையிலே அநேக மரங்களும், குன்றுகளும், யானை முதலாகிய பலவகை மிருகங்களும் இது ஸ்ரீ ராமகாரியமென்று அறிந்து தாங்களும் கூடப்போக எழும்பினதுபோல எழும்பியதுகள். இவ்விதமாக எழும்பிய குன்றுகள் - கற்கள் - விருட்சங்கள் - மிருகங்கள் மற்றுமுள்ள சகல ஜீவராசிகளும், தென்திசையிற் போய் அநுமானுடனே கூட லங்கைக்குப் போகிறதற்கு விசைபோதாமல் நின்றுபோனதுபோல அங்கங்கே விழுந்துவிட்டதுகள். அப்படி அந்தச் சமுத்திரத்திலே மேலுங் கீழுமாக விழுந்த மிருகங்கள் - மரங்கள் - கொடிகள் - செடிகள் - குன்றுகள் முதலானதுகளும், அவ்விடத்தில் ஸ்ரீ ராமபிரான் வந்து கோபஞ் செய்வாரென்று முன்னமே அணைகட்டினது போலப் பிரகாசித்ததுகள். அநுமான் பாய்கிற விசையினால் அந்தக் கடலானது கிழிபட்டுப் பாதாளமட்டும் வெளியாக, நாகலோகத்தின் மாணிக்கப் பிரகாச முதலானதுகளையும் கண்டு ஆஞ்சநேயர் நமக்கு நாகலோகமும் காணக் கிடைத்தது என்ன பாக்கியமென்று சந்தோஷித்தார்.

அப்போது அந்த நாகலோகத்தார் பூர்வத்திலே கருடனனவன் சமுத்திர நீர்க் கிழியச் சிறகை வீசிக்கொண்டு வந்து அமிர்தத்தை எடுத்துப்போனனே அவன் இப்போதும் வருகிறதுபோலக் காண்கின்றதே இனி எப்படி நாம் பிழைக்கப் போகிறோமென்று பயந்து நடுங்கி அப்பால் ஓடிப்போனார்கள். மேலும் சமுத்திரங் கிழிந்து மகரமீன்கள் துடிக்க, சுறாமீன்கள் மிதக்க, பனிமீன்கள் இறக்க, யுகாந்தகால மாருதத்தைப்போல அநுமான் போகின்ற வேகத்தைச் சகிக்கா மல் அலைகளெழும்பி இரைந்துகொண்டு அநுமானுக்கு முன்னே லங்கையின் மேல் போய் வீசியதுகள். திக்கஜங்கள் நடுநடுங்க வடக்கேயிருந்து தெற்கே போகின்ற அநுமானனவர் எப்படி யிருந்தாரென்றால், பூர்வத்தில் சர்ப்பராச னுடன் பிரதிக்ஞை செய்து வாயுவானவன் பிரபலமாக மோதியடித்து ஒடித் துக்கொண்டுபோன திரிகூட பர்வதத்திற்குச் சமானமா யிருந்தார். பின் னும் அந்த அநுமானனவர் உச்சைச் சிரவமென்னும் வெள்ளைப் புரவியும் தெய்வசம்பத்தின் ஆதியந்தமும் உண்டான இந்திரனுடைய ஆயிரங் கண்க ளுக்கும் எட்டக்கூடாத விசையுடனே போகின்றது எப்படி யிருந்ததென் றால், இந்த அண்டங்களை யெல்லாம் கொல்கின்ற ஒரு புஷ்ப விமானம் லங்கைக்குப் போகிறது போலவுமிருந்தது. தேவர்கள் ஸ்துதி செய்யவும், முனீஸ்வரர்கள் வேத வாக்கியங்களைச் சொல்லி ஆசீர்வதிக்கவும், பூலோ கத்தார் வணங்கவும் போகின்ற ஆஞ்சநேயரானவர். இராவணனை முன்பு அழுக்கியதுபோல இன்னமும் அழுக்குவோ மென்று நினைத்து நெற்றிக் கண்ணையுடைய சிவனை நீங்கிப்போகின்ற கைலாசபர்வதம் போலவும் விளங் கினார். பிரமசாரி வேடந்தாங்கி, விவேகத்தில் பிரமாவைப் பார்க்கிலும் விசே ஷப்பட்டு உலகத்திற்கெல்லாம் ஓர் அச்சாணிபோல நிலைபெற்றிருந்து தர் மார்த்தங்களைப் பூர்த்தி செய்கின்ற அநுமானனவர், பொன்மயமாகிய மகம் மேருவானது தன்னை நீங்கித் தென்திசையிற் போயிருக்கின்ற திரிகூடமாகிய பிள்ளையைக்கண்டு வெகு நாளாயிற்றென்று பார்க்கப் புறப்பட்டு வருகிறது போலவும் தோன்றினார்.

மற்றும் யுகாந்தகாலத்திலே மேகபடலங்களைக் கிழித்து, நட்சத்திரங்க ளுதிர, சமுத்திரம் பொங்கிப்பாய, திக்குகளெல்லாம் குழைய, மேருகிரியும் குலுங்க, மற்ற மலைகளெல்லாம் வேரறுந்து விழுந்து அழிய, பிரசண்டவேக மாய் வரும்படியான தம்முடைய பிதாவான வாயுபகவானைப் போலவும் காணப் பட்டார். பத்துத்தலைகளும் இருபது கைகளும் உண்டான இராவணன் பஞ் சேந்திரியங்களையும் ஜெயித்துச் செய்த தபோபலங்களெல்லாம் மாண்டுபோய் விட்டதுகளென்று அறிந்து, கிழக்கிலிருந்து உதயமாகின்ற வழக்கம் தவிர்ந்து விபரீதமாய் வடக்கே யெழுந்து இலங்கையின்மேல் போகின்ற சூரியன் போல வும் பிரகாசித்தார். மனுகுலத்திலே அவதரித்த ஸ்ரீ ராமரென்கிற வீராதிவீர ரைத் துணை பற்றிக்கொண்டு பாபகிர்த்தியத்தையுடைய இராட்சதர்கள் வாசஞ் செய்யும் இலங்கையின்மேல் போகின்ற இராஜாவின் ஆக்ஞாசக்கரம் போல வும் விளங்கினார். தம்முடைய தாவல்யமான தேக காந்தியானது இருளை நீக்கவும், மகமேருகிரி நாணவும், கேசரிமார்க்கத்தில் எழும்பிப்போன ஆஞ்சநேயரான வர் உலகங்களையெல்லாம் வடவாமுகாக்கினியானது தகிக்கின்ற ஊழிகாலத்

படம் நெ. 11.

சுக்ரீவன் வாலியை வதைத்தல்.

திலே வடதிசையில் உதயமாகிற பூரணச் சந்திரனைப் போலவும் மேலும் சக்கர தரனை ஸ்ரீமந் நாராயணனுக்குத்தான் வாகனமாயிருக்கின்ற தன்னுடைய பராக்கிரமத்தைக் காட்ட இராட்சதர்களுடைய குடல்களெல்லாம் சிந்தவும், பர்வதங்களெல்லாம் பின் தொடர்ந்து வரவும், மேகங்கள் ஆகாயத்தில் ஒதுங் கவும், கடல்களெல்லாம் கலங்கவும், தாவிப்பறக்கின்ற கருடனைப்போலவும் காணப்பட்டார். பூர்வத்தில் அண்டகடாகத்தையெல்லாம் ஸ்ரீ மகா விஷ்ணு வானவர் காலினுல் அளந்தார். இவர் வாலினுல் அளக்கின்றரென்று சொல் லித் தேவர்களெல்லாம் பிரமிக்கும்படி பாய்ந்து போகானின்ற வாயுபுத்திர ருடைய வாலானது, கிருபையையுடைய வேகத்தையொத்த அந்த ஆஞ்சநேய ரான தர்ம தேவதையைத் துணைபெற்றுக்கொண்டு அற்பச்செய்கையையுடைய இராட்சதர்கள் பார்ப்பார்களென்று அவருக்குப் பின்புறத்திலே ஒளித்துப் போகும்படியான எமபாசத்தைப்போலிருந்தது. பின்னும் அந்தவால் மகமேரு பர்வதத்தை முழுவதும் சுற்றிக்கொண்டிருந்த ஆதிசேஷன் ஸ்ரீ மகா விஷ்ணு அனுப்பவந்த கருடனைக்கண்டு மனஞ்சோர்ந்து சுற்றியிருந்த சுற்றுக்களை விட்டுப் பெயர்கிறதுபோலவும் பிரகாசித்தது, அப்படி அநுமானுனவர் போகிற வேகத்தில் பிறந்த காற்றுனதுமோத, தேவர்களேறுகின்ற விமானங் கள் ஒன்றோடொன்று அடிபட்டு உடைந்து சமுத்திரத்திலே விழுந்ததுகள். வச்சிரபாணியாகிய இந்திரனுடைய லோகமும் நடுங்குகின்றது, இப்பொழுது ஆஞ்சநேயருடைய கருத்துத்தா னென்னமோ ? இவருடைய வேகம் இலங்கை மட்டுக்கும் போகிறதற்காக வல்லவென்று பூலோகமெல்லாம் அஞ்சியது. அள விறந்த யோசனைப் பிரமாணமாகிய ஸ்தூல சரீரத்தை யுடையதுகளென்று சாத்திரங்களும் பெரியோர்களும் சொல்லா நின்ற திமிங்கிலம் திமிங்கிலமென்று சொல்லப்பட்ட மீன்களுடனே சமுத்திரமானது கலங்க, அநுமானுடைய கரசர ணாதி அவயங்களிலே யிருந்து தோன்றிய காற்றினுலே மற்றுள்ள மச்சங்களெல் லாம் இறந்து மிதந்ததுகள். அநுமானுடைய இரண்டு கைகளும் நீண்டு வேகத் துடனே முன்னே போய் பிரகாசிப்பது எப்படி யிருந்ததென்றால், ஸ்ரீ ராம லட்சுமணர்கள் இருவரும் அந்த ஆஞ்சநேயருக்கு முன்னே இலங்கைக்குப் போவது போலவு மிருந்தது. இப்படியவர் வாயுவைப்போல விசையாய் ஆகா யத்தில் தாவிப்போகும்பொழுது, கீழ்த்திசைக்குக் காவலான ஐராவதமென் னும் யானையானது சமுத்திரத்தில் வந்து நின்றதுபோல அந்தக் கடலினிடத் தில் அநேக காலமாய் ஒளித்திருந்த மைநாகபர்வதம் மேலெழுந்து வந்தது. அவ் விதமாய் எழுந்த அம்மலையானது தன்னுடைய ஆயிரம் சிகரங்களும் பொன் முடிகளைப்போலவும், ஓயாமல் ஓடுகின்ற அருவிக் கூட்டங்கள் தோளிலே யணிந்த உத்தரீயத்தைப் போலவும் பிரகாசிக்க வெழுந்தது எப்படி யிருந்த தென்றால், ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் துர்ச்சனர்களால் வந்த உபத்திரவத்தை நீக்கும்படிக்குச் சமுத்திரத்திலிருந்து எழுந்ததுபோலவும் இருந்தது. மேலும் அந்தப் பர்வதம் பூர்வத்தில் அமிர்தங்கடைந்த மத்தாகிய மந்தரகிரி பூமியிலே யழுந்தியதுகண்டு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆமையுருவமெடுத்துத் தாங்கினதினுல் அது உயரவெழும்பியதுபோலவும் எழும்பியது. பின்னும் இரண்டு பக்கத்திலும் அத னுடைய சிறகுகள் தழைத்தோங்கி வெண்ணிறமானது பிரகாசிக்க மேலெழும் பியது எவ்விதமா யிருந்ததென்றால், பாதாள லோகத்திலேபோய் அமிர்தி

மெடுத்துக்கொண்டு கடலைக்கிழித்துப் புறப்பட்ட பட்சிராஜனை கருடனுக்குச் சமானமாய் இருந்தது. அன்றியும், உலகங்களை யெல்லாம் சிருஷ்டிக்கும் பொருட்டுப் பிரம்மாவை யுண்டாக்குகிற நிமித்தம் மகா பிரளயத்தில் உற்பத்தியான சுவர்ணச்சாயையுடைய அண்டம் போலவும் இருந்தது. மற்றும் அந்த மகாப் பிரளயத்தில் உற்பத்தியான பிரம்மதேவன் இந்தப் பிரளயத்திலே யிருந்து என்னையுண்டாக்கின என்னுடைய பிதாவான அந்த நாராயணனைக் கண்டா லல்லாமல் நான் செய்யுங் காரியமொன்றுஞ் செய்கிறதில்லையென்று அவரைத் தியானம் செய்துகொண்டு ஆதிகாலத்திலே சமுத்திரஜலத்திலே மூழ்கி யிருந்து தபசுசெய்து அந்தத் தவமுடிந்து அவன் அதிலிருந்து எழுந்ததுபோலவும் இருந்தது. அல்லாமலும் முற்காலத்தில் புஷ்பமாலையை வெள்ளையானை தன்னுடைய காலின்கீழிட்டு மிதித்ததைக் குறித்துத் துருவாசரிஷி கோபித்துச் சபித்ததினாலே கடலிற்போய் ஒளித்த இந்திரனுடைய சம்பத்துகள் எல்லாம் மீண்டுவரும்படி, அழிவில்லாத ஆதிநாயகனை ஸ்ரீமந் நாராயணன் தேவதானவர்களுடனே அந்தச் சமுத்திரத்தை மத்தித்தபொழுது அதிலிருந்து தோன்றிய சந்திரனைப்போலவும் இருந்தது. அந்தப் பர்வதத்தினுடைய சிகரத்தில் பிணைமீனுடனே உறங்கியிருந்த மகரமீன்கள், அந்த மலைமே லெழும்பிய பொழுது சுவாசம் விட்டு ஓடி யுலாவியதுகள். முத்துக்களை ஈன்ற சிப்பிகள் நட்சத்திரங்கள்சூழச் சந்திரோதய மானதுபோலப் பிரகாசிக்கவும், உப்பரிகையின்மேல் கொடிகளானவை யாடுவதுபோல் அருவிகளானவை யொழுகவும், சுனைகளிலே யிருந்த பனைமீன்கள் திமில மீன்களுடனே தொடர்ந்து துள்ளியதுகள். ஆறுபகையும் மூன்று குற்றமும் வெந்துபோகும்படி ஞானே தயத்தை நிஷ்டை நீங்கின பெரியவர்களைப்போல அனேககாலம் ஜலத்திற் குள்ளே கிடந்து வருந்தின நாகங்கள். அந்தப்பர்வதம் ஜலத்தைவிட்டு வெளியிலே வந்தபடியினாலே வெகுகாலமாக அடக்கிக்கொண்டு இருந்த சுவாசம் விட்டுச் சந்தோஷமடைந்ததுகள். இப்படி மிதமற்ற சிங்காரங்களுடனே அந்த மைநாக பர்வதமானது ஆகாயமட்டும் வளர்ந்து எதிரே நிற்பதை அனுமானவர் பார்த்து ஆச்சரியப்பட்டு, கொஞ்சமாயினும் அஞ்சாமல் இது என்னவென்று சந்தேகித்து, பின்பு பர்வதம் என்று அறிந்து, அந்தப் பர்வதத்தை அதி சீக்கிரத்தில் அலட்சியமாய்த் தலைகீழாகத் தள்ளிவிட்டு ஆகாய மார்க்கத்திலே பாய்ந்தார். அந்தச் சமயத்தில் அந்த மைநாகபர்வதம் நடுநடுங்கிப் பயந்து உடனே அதிக அன்புண்டாய் ஒரு மனுஷனைப்போல உருவமெடுத்துக்கொண்டு அனுமானை நோக்கி, ஐயா! யான் சொல்வதைக் கேளுமென்று சொல்லத் தலைப்பட்டது. நீர் என்னைப் பகையாளியென்று நினைக்கவேண்டாம். பூர்வகாலத்தில் தேவேந்திரன் வஜ்ராயுதத்தினாலே உலகத்திலுள்ள மலைகளின் சிறகை யறுத்தான். அப்போது என்னை வாயுபகவானவர் இவ்விடத்தில் கொண்டுவந்து சேர்த்து இரட்சித்தார். நீர் அவருடைய குமாரனுடையினாலே, உமக்கு ஏதாயினும் உபகாரம் செய்யவேண்டுமென்று மிகவும் ஆசையுண்டாய் இருக்கின்றது ஆகையால் என்னுடைய சிகரத்தின்மேலாவது சிறிதுநேரம் நின்று விருந்துண்டு இளைப்பாற்றிக்கொண்டு போம். சமுத்திர இராஜனவன் என்னைக் கண்டு, ஸ்ரீ ராமருடைய ஏவலை மேற்கொண்டு வாயுபுத்திரரான ஆஞ்சநேயர் தேவர்கள் உஜ்ஜீவிக்கும்படி சீதாபிராட்டியைத்

தேடிக்கொண்டு வருகின்றார். நீ போய் அவரைக் காண். இதைப் பார்க்கிலும் பெறத்தக்கபேறு வேறென்றும் இல்லையென்று சொன்னர். அதைக்கேட்டு எனக்கு இவன் பெற்றதாயினும் மிகவும் கல்லவனென்றெண்ணி வந்தேன். என்னால் இயன்றதை நீர் பெற்றுக்கொள்ளுமென்று சொல்ல, அந்தச் சொல்லை அனுமானவர் கேட்டு இவன் குற்ற மில்லாதவனென்று நினைத்து, தாமரைப் புட்பத்திற்குச் சமானமான முகம் பிரகாசிக்கும்படியாகச் சிரித்தார். சிரித்து உடனே தாம் போகும்படியான திசையை நோக்கி அந்தப் பர்வதத்தின் சிகரத்தைக் கண்டு, ஓ மைநாகமே. சர்வலோக சரண்யனான ஸ்ரீ ராமச் சந்திரனிடத்திலே கொண்டிரானின்ற பக்தியினாலே நான் எவ்வளவும் வருத்தப் படமாட்டேன். என்னுடைய இஷ்டத்தை நிறைவேற்றாமல் யாதொன்றும் பட்சிக்கவு மாட்டேன். ஓ மிகுந்த தேனைப் பொழியும்படியான சாரலையுடைய மைநாகபர்வதமே! நீ இவ்வளவு அன்பைச் செலுத்தியபொழுதே நான் இருந்தேன். விருந்துண்டேன். இதற்குமேலும் நீ எனக்குச் செய்யத்தகுந்த உபசாரம் வேறென்று உண்டோ? அன்பைப் பார்க்கிலும் விசேஷமான பூசை யாரிடத்திலே யிருக்கின்றது? இப்பொழுது நான் சீக்கிரமாய்ப்போய் இலங்காபுரியைச் சேர்ந்து, எங்களுடைய ஆண்டவரான ஸ்ரீ ராமருடைய அடிமைத்தொழிலைச் செய்வதைப் பார்க்கிலும் சிறந்தகாரியம் என்ன இருக்கின்றது? அங்கிருந்து திரும்பிவரும்பொழுது விருந்துண்டு போகிறேனென்று உபசாரமாய்ச் சொல்லிவிட்டு அனுமானவர் அதிசீக்கிரமாய் அப்புறம் போனர். இவ்வண்ணமாய் அவர் சமுத்திரத்தின்மேல் உயர்ந்து போவதைச் சூரியபகவான் பார்த்து, பூமியின் பாதத்தை ஊன்றி நடவாத இளமைப் பருவத்திலே தானே என்னுடைய தேரின்மேல் பாய்ந்த இந்த மகானுபாவன் இவ்வளவு வேகமாய்க் கடலைத் தாண்ட நினைத்த யாரிடத்திலே போக வேண்டியதோவென்று சந்தேகப்பட்டான். அப்படி அதிவிசையாய்ப் போகும்படியான ஆஞ்சநேயரை தேவர்கள் பார்த்ததிசயித்து, களங்கமற்ற மனதினையுடைய சுரசை என்பவளை அழைத்து, திரிலோகத்தாருக்கும் வந்த துன்பத்தை நீக்கும்படியாக வாயுபுத்திரரானவர் வருகின்றார். நீ போய் அவருடைய பராக்ரமத்தைப் பரிசோதித்து எங்களுக்கு தெரிவிக்க வேண்டுமெனச் சொல்லி அனுப்புவிக்க, அவள் அவ்வண்ணமே செய்கிறேன் என்று சம்மதித்தவளாய், பெரிய வாயினையுடைய ஒரு இராட்சத ஸ்திரீ வடிவம் கொண்டுவந்து, அவர் போகும்படியான மார்க்கத்தில் தன்னுடைய சிரசு அண்டத்தை முட்டும்படி நின்று சொல்லுகிறாள். ஓ வானரமே! நான் யிருக்குமிடத்தில் ஒரு அற்பக் குரங்கான நீ எப்படி வருவாய்? இப்பொழுது பிரளய காலாக்கினிபோ லெரிகின்ற என்னுடைய பசிப்பிணியைத் தீர்க்கும் பொருட்டாகவே நீ வந்ததுபோலக் காண்கின்றது. இந்த ஆகாசத்தில் உனக்குப் போவதற்கு வேறே வழியில்லை. ஆதலால் என் வாய்க்குள்ளே புகுந்துபோவென்று சொன்னாள். அதை அநுமானவர் கேட்டு, ஓ இராக்ஷசி! பெண் பிள்ளையான நீ பசியானது வருந்தும்படி நொந்தாயாதலால், உன்னுடைய இஷ்டப்படியே பக்ஷிக்கக்கடவாய். என்னுடைய சரீரத்தை உனக்கு உணவாக நான் கொடுக்கிறேன். இத்தருணத்தில் தெய்வ நாயகனான ஸ்ரீ ராமச்சந்திரனுடைய காரியநிமித்தமாய்ப் போகின்றேன். அதைச் செய்து நான் திரும்பி

வரும்பொழுது, அப்படியே யுண்ணென்று சொல்லி நகைத்தார். அதற்கு அந்த இராட்சதி யுருவங்கொண்ட சுரசை கோபித்து, சப்தலோகத்தாரும் காணும்படி நான் உன்னுடைய சரீரத்தைத் தின்று பசி தணிக்கின்றேன் பாரென்று சொன்னாள். அந்த வார்த்தையைக் கேட்டு நல்லது; அப்படியே உன் வாய்க்குள்ளேதானே புகுந்து போகிறேன் உன்னிடத்திலே வல்லமை யுண்டானால் தின்றுவிடென்று சொன்னார். அப்பொழுது அந்த இராட்சதி யானவள் அநேக அண்டங்கள் ஒருமிக்கப் புகுந்தாலும் நிறையாமலிருக்கும்படி யான தன்னுடைய பெருவாயைத் திறந்து ஆஞ்சநேயரைத் தட்டாமல் விழுங்கு கின்றவளாய் இருந்தாள். அதுகண்டு அவளுடைய வாய் சிறியதும் தமது சரீரம் பெரியதுமாய் வளர்ந்தார். அவ்விதமாய் வளர்ந்தவர் சுருங்கி, ஒருதரம் சுவாசம் விடுவதற்குள்ளே அவள் வாயிலே புகுந்து வெளிப்பட்டார். அதைக் கண்டு தேவர்கள் எங்களை யாண்டுக்கொண்டவரான இந்த ஆஞ்சநேயர் மகா சமர்த்த ரென்று சந்தோஷமடைந்து புட்பமாரி பொழிந்து வாழ்த்தினார்கள். இப்படி தோன்றி மறைகின்ற மின்னலைப்போல அதிசீக்கிரத்தில் சரீரமானது பருத்துச் சுருங்கும்படி அநுமானவர் வாய்க்குள்ளே புகுந்து வெளிப்பட்டதைக் கண்டு அந்தச் சுரசை யதாசொரூபமாய் நின்று, இவரால் எந்தக் காரியந்தான் ஆகாதென்று சந்தோஷமடைந்து தோத்திரஞ் செய்தாள். அநுமானவரும் அவளை ஆசீர்வதித்து அப்பால் போயினர். அத்தருணத்திலே கின்னரர்கள் கீதம் பாடினர்கள்; தேவரம்பையர்கள் நடனமாடினர்கள்; இருடிகள் வேத கோஷஞ் செய்தார்கள்; சகலமான ஜீவராசிகளும் தோத்திரஞ் செய்ததுகள்; இலங்கையிலிருந்த மந்தாரபுட்பத்தின் மகரந்தப்பொடிகள் மணக்கும்படியான தென்றற்காற்றானது வந்து அநுமானுடைய செந்தாமரை புட்பத்திற்குச் சமானமான முகத்தில்வீசி வேர்வையை யுலர்த்தி ஆயாசம் தீர்த்தது. விஞ்சை யர்கள் தங்களுடைய கையினால் இசையாகின்ற வீணையோசையானது செவியில் வந்து நுழைய, அதைக்கேட்டு ஆனந்தப்பட்டுக்கொண்டு அவர் போகும்போது போகக்கூடாமல் தடைப்பட்டு, தாம் போகாகின்ற தென்திசையை விட்டு வட திசையில் விலக யெத்தனப்பட்டார். அதுவுங் கூடாமையால் கீழ்த்திசை மேற் றிசையிலாவது ஒதுங்கிப் போகலாமென்று பார்த்தார். அதுவும் முடியாமை யால் ஊர்த்தமுகத்திலாவது எழும்பிச் செல்லலாமென்று நினைத்தார். அதுவும் இசையாமையால் அதோமுகத்தில் வலிப்பது கண்டு, இதென்ன ஆச்சரிய மென்று ஆஞ்சநேயர் பிரமித்தார். அப்பொழுது கடலிலே படுத்துக்கொண் டிருந்து ஆகாயத்தில் எவ்வளவு உயரத்திலானாலும் தனக்கு நேராய்ச் சஞ்சரிக் கும்படியான பல ஜெந்துக்களையும் கண்டால், அவைகளின் சாயையைக் கையி னல்பற்றித் தன் வாய்க்கு நேராய் இழுத்த மாத்திரத்தில் அந்த ஜெந்துக்க ளெல்லாம் வாயில் வந்துவிழ நாள்தோறும் விழுங்குகின்ற அங்காரதாரை யென்னும் இராட்சதியானவள் எழும்பினாள். அதெப்படி யென்றால், அந்தச் சமுத்திரத்தினால் வேறெயொரு சமுத்திரம் உண்டாக்கப்பட்டது போலவும், ஆலகால விஷமெழும்பினது போலவும், இங்கே யாரடா போகிறவனென்று மகாகோர பீகர சொரூபத்தோடே எழும்பினாள். அவ்வண்ணமாக எழும்பின வள் காற்சிலம்புகள் கடலோசைபோலச் சப்திக்க வேதமுடிவிலே நடனஞ் செய்யாகின்ற பரஞ்சுடரான ஸ்ரீ மகாவிஷ்ணுவுக்கு முன்னே, பூர்வகாலத்

திலே சமுத்திரத்திலே யிருந்து யுத்தத்திற்குப் போய் எதிர்த்த மதுகைடவர் களைப்போல அநுமானை எதிர்த்து நின்றாள். இரண்டு பிறைபோலப் பிரகாசிக்கும்படியான வக்கிர தந்தங்களையும் யானைத்தோலான போர்வையை யுடைய வளாய், பிரமாவினால் இந்த அண்டத்திற்கு ஒரு உறைபோலச் சிருஷ்டிக்கப் பட்ட பெரிய வாயைத் திறந்துகொண்டு, தன்னுடைய காலானது சமுத்திரத் தைக் கலக்கவும், தலையானது அண்ட முகட்டை யளாவவும், பூமிக்கும் ஆகாயத் திற்கும் ஏகரூபமாய் நின்றவளை அநுமானவர் கண்டார். இவள் தர்மத்தை யும் கருணையையு மழித்த இராட்சதி யென்றும், இவள்தான் நம்மைத் தடுத்துப் பிரமிக்கச் செய்தவளென்றும் நிச்சயித்தறிந்து, அவளுடைய பெரிய வாய்க் குள்ளே யல்லாமல் ஆகாயத்திலே போவதற்கு வேறே வழி கிடையாமையால் அவளுடைய வாயிலே புகுந்து வயிற்றைக் கிழித்துக்கொண்டு போகும்படி நினைத்துச் சொல்லுகிறார். அடி ராக்ஷசி! நான் வரும்படியான வேகத்தைக் கண்டறியாமல் வாயினாலே ஆகாயமார்க்கத்தை யடைத்துக்கொண்டு இப்படி யிருக்கின்றையே; நீ யாரடி எனக் கேட்டார். அதற்கு அங்காரதாரையானவள் பார்த்து, அடா குரங்கே! என்னைப் பெண்ணென நினையாமலெதிர்த்தால் தேவர்களானாலும் எதார்த்தமாய் மாண்டுபோவார்கள். என்னுடைய கண் முன்னே யமன் வந்தாலும் கொன்று தின்றுவிடுவேனென்று சொல்லிப் பின் னும் பெரிதாகத் தன்னுடைய வாயைத் திறந்தாள். ஆஞ்சநேயரானவர் அந் தக்கணமே அவளுடைய வாயிலே நுழைந்து வயிற்றிலே புகுந்தார். அப்போது தர்மமானது முறையோ முறையோ வென்று அழுது துக்கித்தது. தேவர்களும் கிலேசமடைந்தார்கள். அக்கால் இறந்து போனவர்போல அவளுடைய வயிற் றிற்குள்ளே போன அநுமானவர், ஓரிமைப்பொழுதிலே மறுபடியும் பிறந்தாரெனச் சொல்லும்படி சிங்கம்போல வெளிப்பட்டார். அவ்விராட்சதி யானவள் கோவெனக் கதறும்படி அவளுடைய வயிற்றைப்பீறிக் குடல்களைப் பிடுங்கிக் கொண்டு ஆகாயத்திலெழும்பின அந்த அநுமானவர், மலைக் குகை யிற் புகுந்து அதற்குள்ளே யிராநின்ற சர்ப்பங்களை வாரிக்கொண்டு மேலே எழும்பிய கருடனைப்போலப் பிரகாசித்தார்.

க வி

சாகா வரத்தலைவ ரிற்றிலக மன்னன்
ஏகா வரக்கிருடர் கொண்டுடனெ ழுந்தான்
மாகா லசைப்பவட மண்ணினுற வாலோ
டாகா யமுற்றகத லிக்குவமை யானன்.

அசுவத்தாமர் - மகாபலி - வியாசர் - அநுமான் - விபீஷணர் - கிருபாசாரியர் - பரசுராமரென்று சொல்லப்பட்ட சப்த சிரஞ்சீவிகளுக்குள்ளே சிரேஷ்டரான அநுமானவர், அந்த அங்காரதாரையினுடைய குடலைப் பிடுங் கிக்கொண்டு உயர வெழும்பியது எப்படி யிருந்ததென்றால்: பெருங்காற்று வீச, கயிறு பூமியிலிருக்க, வாலுடனே ஆகாயத்திலெழுந்து பறக்கும்படியான காற்றாடியைப் போலிருந்தது. அசுரர்கள் வருத்தத்தினால் உடல் வெயர்த்தார் கள். பிரமதேவரும் ஆச்சரியமடைந்து பூமழை பெய்தார். கைலாச கிரியிலே

எழுந்தருளிய சாம்பவமூர்த்தியும் பார்த்துக் களிகூர்ந்தார். முனிஸ்ரேஷ்டரா யிருக்கப்பட்டவர் ஆசீர்வாதம் பண்ணினார்கள். அந்த அரக்கி யிறக்கும்படி வாய்முதல் வயிறு வரையிலும் கிழித்த அநுமானைவர் பின்பு மகம்மேருவும் தாழும்படி உயர்ந்து மனே வேகத்திலும் அதிவேகமாய் அப்பால் போகத் தொடங்கி, இந்தக் கடலானது முன்னே சம்பாதி முதலானவர்களுள் நம்முடனே சொன்ன அளவை யுடையதல்ல. அதிலும் அதிகமான விஸ்தீரண முடையது. அல்லாமலும் மத்தியில் பலபல இடையூறுகளும் சம்பவிக்கின்றன. எவ்விதத்தி லாயினும் இலங்கையிலே போய்ச் சேர்ந்தால்தான் இவைகளெல்லாம் நீங்கும். தீமைகளெல்லாவற்றையும் தொடியிற்பொடி செய்வது தர்மமே ; அப்படிப்பட்ட தர்மத்தை நினையாத அரக்கர்கள் செய்யானின்ற துன்பங்களெல்லாம் நிவாரண மாவதற்குத் தக்கதாகிய ஏது இராமஸ்மரணையே இந்த இராமஸ்மரணை செய் தால் எல்லா இடையூறுகளும் நிவர்த்தியாகும். அதற்குச் சமானமானது வேறொன்றில்லை யென்று நினைத்து ஸ்ரீ ராமநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டு புறப்பட்டார். இப்படி புறப்பட்டவர் பூரணகலசங்கள் வைத்திரா னின்ற சொர்னமயமான இலங்கை மதிலின்மேலே போய்த் தங்காமல் சுவர்க் கத்தின் மார்க்கமாய் விலகிச்சென்று, அந்த இலங்காபுரியருகில் பசுமையான சோலை சூழ்ந்திருக்கும்படியான உன்னதமான பவளமலையின்மேல் பாய்ந்தார். அநுமான் பாய்ந்த மாத்திரத்தில், கடல்சூழ்ந்த இலங்காபுரியான பர்வதமானது தன்னுடைய நிலைபெயர்ந்து குலுங்கத் தலைப்பட்டது. அது எப்படி யிருந்த தென்றால் பெருங்காற்றானதுமோதக் கடல் நடுவிலிருக்கின்ற கப்பலானது அலைகின்றதுபோலிருந்தது. பூமியில் வேர் விழுந்து ஆகாயபரியந்த முயர்ந்த அந்தப் பவளமலையின் சிகரத்தில் நின்று நான்கு புறத்திலும் நோக்கி, ஸ்வர்க்க மாகிய ஸ்திரீயானவள் அழகு பார்க்கும்படி நிலைக்கண்ணாடி வைத்ததுபோல் தேஜோமயமாய்ப் பிரகாசியானின்ற இலங்கையைச் செவ்வையாகப் பார்த் தார். இவ்வண்ணமாய்ப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கைகொட்டி, தேவர்களு டைய பொன்னகரமானது இதற்கு ஒப்பாகுமென்று சொல்லுவது புத்தியீன மாம். அந்நகரமென்ன இந்த இலங்கையைப் பார்க்கிலும் சிறந்ததா? சகல லோகங்களையும் ஆள்கின்றவன் எவனே? அவனே இந்த நகரத்திலிருந்து வாழ் கின்றவனாக வேண்டும். ஒருவகை இன்பத்தை மாத்திரமுடையது இந்த நகர மென்று சொல்லக்கூடாது. வேண்டியதுகளை வேண்டியபடியே யடைந்து வெறுப்பில்லாமல் அநுபவிக்கும்படியான போகசுகங்களை முடிவில்லாததுகளா யிருக்கும்படி எவ்விடத்தில் காண்கின்றோமோ அதுவே மோக்ஷமாகும். இந்தப் படியே யிருக்கின்றது வேதத்தினுடைய நிச்சயமும். இதன் உள்ளிடமானது எழுநூறுயோசனை யென்று சொல்லுவார்கள். திரிவிதலோகங்களிலு மிரா நின்ற பதார்த்தங்களெல்லாம் இந்த இலங்கைக்குள்ளே யடங்கி யிருக்கின்றன வென்றால், சாத்திரக் கேள்வியையுடைய பேரறிவாளர்கள் பார்த்தாலும் அவர்களுடைய பார்வைக்குத்தான் அடங்குமா? இதென்ன ஆச்சரியம்! என்று நினைத்து மறுபடியும் உற்றுப் பார்க்கின்றார்.

கடல்தாவு படலம் முற்றிற்று.

ஊர்தேடு படலம்

மேகமண்டலத்தைத் தாண்டிச் சந்திர மண்டலத்தை முட்டுகின்ற உப்பரிகைகளெல்லாம் பொன்னினாற் செய்து இரத்தினங்கள் பதித்திருக்கிறதுகளும், மின்னலைக் கொண்டு சமைத்தவைகளும், வெயிலைக்கொண்டு அமைத்தவைகளும், பின்னும் இவைகள் எதைக்கொண்டு செய்தவைகளென்று அறியப்படாதவைகளும், தேவலோகமும் நாகலோகமும் தமக்குள்ளே அடங்கும்படி மேலுங்கீழும் உயர்ந்தும் தாழ்ந்தும் இளந்தென்றற் காற்று வருகிற சாளரங்களையுடையதுகளுமா யிருக்கின்றன. இவைகளிலுள்ள ஸ்திரீகள் மின்னற் கொடிகளை மடக்கி அடுக்கித் தடைப்பக் கட்டைகளாற் பிடித்துக்கொண்டு மேல் தளங்களில் இருக்கும்படியான புட்பத்தின் மகரந்தப் பொடிகளான குப்பையை விளக்கி, ஆகாய கங்கா ஜலத்தைக் கையினால் அள்ளிச் சாணநீராய்த் தெளிக்கிறார்கள். வேணுக்குழலும் மகரவீணையும் குழையும்படி மிருதுவான தங்களுடைய மழலைச் சொற்களைக் கிளிகளுக்குக் கற்பிக்கின்ற ஸ்திரீஜனங்கள், இந்த உப்பரிகைகளின் பளிங்கினால் கட்டப்பட்ட சுவர்களில் பிரதிபலித்துக் காண்கின்ற சாயையையும் தம்முடைய உருவத்தையும் வேறுபாடறியாமல் மயங்குகின்றார்கள். இப்படிப்பட்ட உப்பரிகைகளைத் தேவேந்திரனுடைய மாளிகைக்குச் சமானமாகச் சொல்வதெப்படி? சொன்னால் அந்தச் சொல்லுக்குங் குற்றமுண்டாம். இவைகள் ஸ்ரீ மகாவிஷ்ணு மார்பிலே தரித்திருக்கின்ற கவுஸ்துவமணியைப் பார்க்கிலும் அதிக காந்தியையுடைய நவரத்தினங்கள் அழுத்தித் தெய்வத் தச்சனாலே செய்யப்பட்டிருக்கின்றதுகள். சகல சீவகோடிகளும் ஒருபக்கத்தில் அடங்கி யிருக்கத்தக்க விசாலமுண்டானதினால் இந்நகரம் ஸ்ரீமந் நாராயணனுடைய திருவயிற்றுக்கே ஒப்பாகும். இதற்குள்ளிருக்கின்ற விருக்ஷங்களெல்லாம் கற்பகங்கள்; வீடுகளெல்லாம் ஸ்வர்ணங்கள்; இராக்ஷத ஸ்திரீகளுக்குத் தாதிமார்களெல்லாம் தேவரம்பைகள்; இராட்சதர்களுக்கு ஏவலாளிகளெல்லாம் தேவர்கள்; சூரியனுடைய சப்த புரவிகள் தவிர மற்றப் பிரபஞ்சத்திலுள்ள புரவிகளெல்லாம் இங்கிருக்கின்றதுகள்; இராவணனுடைய போரிலே தோற்றுப்போன திக்கெஜங்களைக் குறித்துச் சொல்வதென்ன? ஐந்து கைகளையுடைய விக்னேஸ்வரனாகிய யானையும், சூரியனுடைய தேருமே இந்த நகரத்தில் இல்லை. மற்றத் தேவர்களுடைய விமானம் முதலாகிய வாகனங்களெல்லாம் வீதிகளிலே சஞ்சரிக்கின்றதுகள். இந்தப் பட்டணத்தையாள்கின்ற இராஜாவுக்கு ஏவல் செய்யாத தேவர்கள் யாரிருக்கிறார்கள்? ஆஹா! ஆஹா! இவன் திரிமூர்த்திகளிலும் விசேஷப்பட்டவனென்றால் இவன் செய்த தவமல்லாமல் வேறொன்று இவனுக்கு இப்படிப்பட்ட சாம்ராஜ்ஜியத்தைக் கொடுக்குமா? பேரிகையின் சப்தமும், யானைகளின் முழக்கமும், கடலோசையும், ஸ்திரீகளுடைய பாதச் சிலம்பொலியால் மறைந்துபோகின்றதுகள். மரகதத்தினாலும் மற்றுமுள்ள பலவகை இரத்தினங்களாலும் அழகாகச் செய்திருக்கின்ற குதிரைக் கொட்டாரங்களும் இரதசாலைகளும் சூரியனும் வெட்கும்படி பிரகாசிக்குமானால் இந்நகரத்திற்கு முன் சுவர்க்கநகரம் சமானமாகுமென்றல்லவோ சொல்லவேண்டும். அழகு நிலைபெற்றிருக்கின்ற இந்தப் பட்ட

ணத்தின் பிரகாசம் பாய்வதினால் இதிலிருக்கின்ற ராட்சதர்களுடைய நிறம் கறுத்துக் காணவில்லை. உயரப் போகின்ற சந்திரனும் களங்கமற்றுப் பிரகாசிக்கின்றான்..சமுத்திரமும் பொன்னுருகுகின்றதை ஒத்திருக்கின்றது. அண்ட முழுமையும் நிறைந்து இருளை யோட்டுகின்ற சூரியன் இந்நகரத்திலிருக்கின்ற மாளிகையின் காந்திக்குமுன் தன் ஒளிமழுங்கி ஓர் மின்மினி யவ்வளவும் பிரகாசிக்கமாட்டான். தேனும்-சந்தனமும்-கஸ்தூரியும்-கற்பகப்புஷ்பங்களும்-யானை மதங்களும்-இந்தப் பட்டணத்து ஸ்திரீகள் ஸ்நானஞ் செய்கின்ற நீருடனே கலந்து பெருக்கெடுத்தோடிவந்து சமுத்திரத்தில் பாய்கின்றதனால், அதிலிருக்கின்ற மீன்களும் திவ்வியமாய்ப் பரிமளிக்கின்றதுகள்.

க வி

தெய்வ தச்சனைப் புகழ்துமோ செங்கண்வா ளரக்கன்
மொய்யொத் தாற்றிய தவத்தையே வியத்துமோ விரிஞ்சன்
அய்யப் பாடிலா வரத்தையே மதித்துமோ வறியாத்
தொய்யற் சிந்தையாம் யாவரை யாதென்று துதிப்பாம்.

இந்த நகரத்தைச் சிருஷ்டித்த விஸ்வகர்மாவையே புகழ்வோமா? அல்லது இராவணேஸ்வரன் யதார்த்தமாய்ச் செய்த தவத்தையே அதிசயிப்போமா? அல்லது அவனுக்குப் பிர்மதேவன் கொடுத்த சந்தேகமில்லாத வரத்தையே மதிப்போமா? அறியாத சபல சித்தத்தையுடைய நாம் எவ்விதத்தில் யாரைத்தான் ஸ்துதி செய்வோம்? காடுகளும் சோலைகளும் ஸ்வர்னத்தினாலும் ரத்தினங்களினாலும் செய்யப்பட்டதுக ளென்றாலும், தேனையும் புஷ்பங்களையும் கனிகளையும் கொடுக்கின்றதனால் இதைப் பார்க்கிலும் சுவர்க்கத்தாரும் பூலோகத்தாரும் பெறத்தக்க வரம் வேறென்ன யிருக்கின்றது? இந்த நகரத்திலுள்ள கோபுரத்தின் உயரத்தை மகமேருவானது கண்டால் வெட்கிப் போமென்பதற்குச் சந்தேகமில்லை. இராவணனுடைய ஆக்கினைக்கு அஞ்சிச் சூரியன் லங்கையின்மேல் போகிறதில்லை யென்று சொல்லுவார்கள். அது உண்மையல்ல; இந்த மதிலைத் தாண்டி அப்புறம் போகமாட்டாமையா லல்லவோ ஒதுங்கிப்போகின்றான். மற்றும் இராவணன் தேவர்கள் சத்துருக்களாகையால் அவர்கள் வரத்தக்க வழியில்லாமல் ஒரு எல்லையை ஏற்படுத்துவோமென்று கருதி, அண்டமுகட்டையுங் கடந்து செல்லும்படி இந்த மதிலை உண்டாக்கியதுபோ லிருக்கின்றது. இப்படிப்பட்ட மதில் சூழ்ந்திருப்பதனால் இந்தப் பட்டணத்திற்குள்ளே காற்று நுழையமாட்டாது. சூரியரஸ்மியும் பாயாது, யமனுடைய ஆக்கினையும் செல்லாது. சர்வ சங்காரகாலத்திலே சகலமும் அழிந்து போனாலும் அழியாமலிருக்கின்ற தர்மமும் பிரவேசிக்காது. ஆகையால் தேவர்கள் இதற்குள்ளே போகமாட்டார்களென்பது ஒரு புதுமையல்ல. தேவர்களில் அநேகர் பாடுவார்கள்; அநேக ராடுவார்கள்; அநேகர் வாத்திய முழக்குவார்கள்; அதுகளை ராட்சதர்களில் அநேகர் சபைகூடிக் காண்பார்கள்; கேட்பார்கள்; தேவரம்பைக ளாடுகிறதையும் பாடுகிறதையும் பழித்து விஞ்சைய ஸ்திரீகள் ஆடுவார்கள்; அவர்க ளாடல் பாடல்களைப் பழித்து ராட்சதஸ்திரீக ளாடுவார்கள்; அவர்க ளாடவும் பாடவும் தொடங்கும்பொழுது நாககன்னியர்

கள் லயை தாள சுருதி முதலாகிய நடனக் கிரியைகளைச் செய்வார்கள். இராட்சத ஸ்திரீகளுக்குத் தெய்வப் பெண்கள் பணிப்பெண்களாகி, ஆபரணங்களும் - வஸ்திரங்களும் - பூமாலைகளும் - சந்தனமும் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். பிர்மதேவர் சொல்லத் தெய்வத்தச்சனாகிய விஸ்வகர்மா அநேககால மாக வருத்தப்பட்டுக் கைதேர்ந்து பொன்மலையின்மேல் ரத்ன மழை பொழிந்ததுபோல ஸ்வர்னத்தினாற் செய்து ரத்னங்களிழைத்து அருமையாகச் சிருஷ்டித்தான். வீணை யோசையில் வேதகோஷ மறைகின்றது. வேதகோஷத்தில் கடலொலி மறைகின்றது. உப்பரிகையினிடங்கள் தோறும் ஸ்திரீகள் பரிமள மூண்டாகும்படி ஊட்டுகின்ற அகிற்புகையில் மேக மறைகின்றது. பளிங்கினாற் செய்யப்பட்ட மாளிகைகள் தோறும், தேன் துளுக்கின்ற கற்பகச் சோலைகள் தோறும், எல்லாரும் கள்ளுண்டு ஆடுகின்றவர்களும், பாடுகின்றவர்களுமாய்ச் சந்தோஷிக்கின்றார்களே யல்லாமல், துக்கிக்கின்றவர்களைக் காணேம். இராட்சத ஸ்திரீகளுக்குப் பிராணபதமா யிருக்கின்ற இராட்சதர்கள் அந்த ஸ்திரீகளுடைய அதராமிர்தத்தை யுண்டு, அவர்களுடைய இனிமையான வார்த்தைகளைக் கேட்டு, அவர்கள் ஊடலைக்கண்டு அவர்களை வணங்கி ஆவலைத் தீர்ப்பார்கள். இந்த லங்கையானது இதில் வாசஞ் செய்கின்ற ஸ்திரீகளுடைய சிவந்த வாயினால் சமுத்திரத்தில் பவளக்கொடி படர்ந்ததுபோலவும், அவர்களுடைய நேத்திரத்தால் குவளைகள் புஷ்பித்த தடாகம்போலவும், முகங்களினால் தாமரை காடுபோலவும் பிரகாசிக்கின்றது. இராட்சதர்கள் எழுந்து திரிகிறதினாலே இந்நாள்வரையில் அண்டமானது கிழிந்து போகாமலிருக்கிறது அதிசயமென்றே சொல்லவேணும். பிர்மாதி பிபீலிகாந்தமாகிய சீவகோடிகளெல்லாம் இந்த ராட்சத ராசிக்கு நூற்றுக்கு ஒன்றாக உறையிடுகிறதற்கும் போதாது. மற்றும் ஸ்தூலதேகத்தை யுடையவர்களும், அளவில்லாத வரங்களை யுடையவர்களும், எவர்களாலும் அறியப்படாத மாயையுடையவர்களும், உலகத்தையெல்லாம் கொல்லுகின்ற பலமுண்டாகிய ஸ்திரீகூட்டத்தை யுடையவர்களுமா யிருக்கின்றார்கள். இந்த நகரத்தின் தெருக்களில் ஒரு தெருவிலிருந்து மற்றொரு தெருவுக்குப் போகிறது, ஒருதேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்குப் போகின்றதா யிருக்கின்றது. வீரகண்டையில்லாத காலும், ஆயுதமில்லாத கையும், அக்கினிப்பொறி பறவாதகண்ணு முடைய புருஷர்களே இல்லை. அவர்களுடைய உச்சியிலுதைத்துச் செம்பஞ்சழியாத பாதமுடைய ஸ்திரீகளுமில்லை. இந்தப் பட்டணத்தை யழிக்கிறதைக் குறித்துப் பின்பு பார்த்துக்கொள்வோம். முதல் நம்முடைய வானரசேனைகள் இதில் வந்து பிரவேசிக்கிறதோ அருமை; ஆகிலும் அதுவும் பெரிதல்ல, வந்தாலும் ராட்சத ஸ்திரீகளும் புருஷர்களும் பிணக்கினால் வீதியிடமெல்லாம் தூர்ந்துபோகின்றதனால், அந்த வானரங்கள் அடிபெயர்த்துச் சஞ்சரிக்க முடியாது. ஆரங்களும் - பூமாலைகளும் - சந்தனமும் - யானை மதங்களும் - குதிரை நுரையுமாகிய இதுகளெல்லாம் ஆற்றுநீரோடு வந்து விழுந்து தனக்குள்ளே அடங்கும்படி கொள்ளுகின்ற இந்தச் சமுத்திரத்தைப் போல ஆழமுடையது வேறொன்றுண்டோ? இந்த லங்கையைப்பற்றி நான் ஸ்ரீ ராமரிடத்திற்போய்ச் சொல்லுகின்ற காலத்தில், வில்வீரர்கள் தான் மிகுதியா யிருக்கின்றார்க ளென்பேனே? வேல் வீரர்கள்தான் விஸ்தாரமா யிருக்கின்றார்க ளென்பேனே? தண்டு பிண்டி பால முதலாகிய பலவித ஆயு

தங்களைக்கொண்டு போர் செய்கின்றவர்கள் தான் பிரபலமா யிருக்கின்றார்க ளென்பேனே? மற்சண்டை செய்கிறவர்கள்தான் அநேகரா யிருக்கின்றார்க ளென்பேனே? என்று இப்படியாக அனுமானனவர் அந்த லங்கையைப் பார்த்து யோசித்து, இங்கே ராட்சதர்கள் வந்து நம்முடனே யுத்தஞ்செய்தா லும் செய்வார்களென்று குறித்து, தம்முடைய ஸ்தூலரூபத்தைச் சுருக்கிக் கொண்டு சிறிய உருவமாய் அந்த மலையினிடத்திலிருந்தார். அப்பொழுது சூரியன் மேற்குச் சமுத்திரத்திற் போய் மறைந்தான்.

க வி

எய்வினை யிறுதியிற் செல்வ மெய்திலுன்
ஆய்வினை மனத்திலா னறிஞர் சொற்கொளான்
வீவினை நினைக்கிலா னொருவன் மெய்யிலான்
தீவினை யெனவிருள் செறிந்த தெங்குமே.

இப்படிச் சூரியன் மறையவே. இவ்வுலகம் முழுவதும் இருளானது வந்து சூழ்ந்து கொண்டது எப்படியிருந்ததென்றால்: பூர்வஜென்ம புண்ணியத்தி னாலே அந்தியத்திலே பாக்கியத்தைப் பெற்று, ஸ்வய புத்தியுமில்லாமல், தெரிந் தவர்கள் சொல்லும் சொல்லையும் கேளாமல் தனக்கு எப்படியும் மரணம் வரு மென்கிறதை நினையாமல், சத்தியமாகிய நிலையிலும் நில்லாமல் இருக்கின்ற ஒருவனுடைய பாவங்கள் அவனைச் சூழ்ந்துக்கொள்கிறதுபோல இருள் வந்து எங்குஞ் சூழ்ந்துகொண்டது. பின்னும் சிவனுடைய போர்வையாகிய யானைத் தோலை வாங்கிப் பிர்மதேவன் அண்டத்திற்கு ஒரு கௌசனையாகப் போர்த் ததுபோலவும், ஆதிசேஷன் தன்னுடைய ஆயிரம் வாய்ப்பற்களிலும் அநேக காலமாக ஊரிக்கொண்டிருந்த விஷத்தையெல்லாம் கக்க, அது உலகமெல் லாம் நிறைந்ததுபோலவும், மேலாகிய பிர்ம வம்சத்திலே தோன்றிய இராவ ணேஸ்வரன் கற்பினையுடைய பிராட்டியாரை எடுத்துவந்து சிறைவைத்த பின்பு அவனுடைய கீர்த்தியானது துல்லியமாகிய வெள்ளை நிறம்போய்க் கறுத்து அது புவனமுழுவதும் பரவியதுபோலவும், அண்டமுழுவதும் அந்த இருள் பரந்து மூடிக்கொண்டது. அப்படி இருள் பரந்த வேளையில் ராவணேஸ்வர னுடைய ஏவலினாலே அநேக இராட்சதர்கள் அந்த இருளின் மார்க்கமாக இந்திரலோகத்திற்கு ஓடுவார்கள். அநேகர் யமலோகத்திற்குப் போவார்கள். தேவர்கள் முன்னே போய்விட்டார்களே; இந்நேரவரையில் நாம் போகாம லிருந்தோமே; இதைக்குறித்து நீங்கள் தாமிசமாயிருந்த தென்னவென்று நம்முடைய ராஜா கோபஞ்செய்வாரே யென்று நினைத்துச் சித்தர்கள் முத்தா ரங்களும், தலையிற்சூடிய மாலைகளும், உத்தரீயமும் சரிந்து விழும்படி ஓடி வரு வார்கள். தேவ ஸ்திரீகளும் - விஞ்சைய ஸ்திரீகளும் - நாக ஸ்திரீகளும் - யக்ஷ ஸ்திரீகளும் - கிரமங் கிரமமாகப் பணிவிடை செய்யும்படி மின்னற் கூட்டங்கள் நெருங்கி வருவதுபோல ஆகாயத்திலிருந்து வருவார்கள். தேவர்களும் - அசு ரர்களும் - நாகலோகத்தாரும் - யக்ஷர்களும் - வித்தியாதரர்களும் - மற்றுமுள்ள யாவரும் பிரதாப லங்கேஸ்வரனுடைய குற்றேவல்களைச் செய்ய, வானத்தி லிருந்து தங்கள் தேக காந்தியினால் இருள் நீங்கும்படி கூடிவருவார்கள். இது களையெல்லாம் ஆஞ்சநேயர் பார்த்துக்கொண் டிருந்தார்.

க வி

தீண்டரும் தீவினை தீக்கத் தீந்துபோய்
மாண்டற வுலர்ந்தது மாரு திப்பெயர்
ஆண்டகை மாரிவந் தளிக்க வாயிடை
ஈண்டற மூளைத்தென முளைத்த திந்துவே.

அச் சமயத்திலே சந்திரோதயமாயிற்று. அது எப்படியிருந்த தென்றால் : அரிதாகிய தீவினை யென்னுங் கோடையானது தகிக்க உலர்ந்து தீய்ந்து போகிய தர்மமாகிய முளையானது, அநுமானென்கிற மழை வந்து உதவி செய்ய முளைத்தெழுந்ததுபோ லிருந்தது. மற்றும் ராமதூதராகிய ஆஞ்சநேயர் வந்தபடியினலே என் நாயகனுகிய தேவேந்திரன் இனிச் சுகப்படுவானென்று சந்தோஷித்து. எட்டிப்பார்த்த கீழ்த்திசையாகிய பெண்ணின் முகம்போல வும், எங்கள் பகை இன்றையதினத்துடனே தொலைந்ததென்று நினைத்தெ ழுந்த இந்திரனுடைய தவளைக்குடைபோலவு மிருந்தது. உதயமாகிப் பிரகா சிக்கின்ற சந்திரனுகிய வெள்ளிக் குடத்தினுல் பாற்சமுத்திரத்தை மொண்டு வானமானது சொரிந்ததுபோல, நட்சத்திரமாகிய மீன்களுடனே நிலவின் பிரகாசம் பூமியெங்கும் பரந்து நிறைந்தது. வானமே காமதேனுவாகியும், சந் திரோதயமே அதன் மடியாகியும், சந்திரனே முலையாகியும், சந்திரப் பிரகா சமே தாரையாய்ச் சொரிந்த பாலாகியும் பிரகாசித்தன. அந்தத்தருணத்தில் ஆஞ்சநேயர்மேல் தேவர்கள் புஷ்ப வருஷம் வருஷித்தார்கள். அந்தப் புஷ் பங்கள் ராவணனுக்கு பயந்து பூமியில் விழாமலும், அப்புறம் போகாமலும், அந்தரத்திலே தானே தங்கி நிற்கிறதுபோல நட்சத்திரங்கள் பிரகாசித்த கள். நிலவினுல் அழிந்த இருளானது உருவமெடுத்து அந்நிலவின் குஞ்சுகளைக் கடித்து விழுங்குகிறதுபோல, மல்லிகைப் புஷ்பங்கள்தோறும் வண்டுகள் மொய்த்துச் சூழ்ந்ததுகள். சந்திர கிரணத்தின் பிரகாசம் லங்காபட்டணமெங் கும் நிறைந்தது எப்படியிருந்ததென்றால், வெள்ளை வஸ்திரத்தினுலே உறை செய்து அந்தப் பட்டண முழுமையும் மூடினதுபோல் இருந்தது. பின்னும் அந்தச் சந்திரபிரகாசம் ஸ்ரீ ராமபாணத்தின் வேகத்தைப்போல அநுமான் வந்து சேர்ந்ததனுல், அந்த ஸ்ரீ ராகவனுடைய கீர்த்தி இலங்கையின் அகழ் அரண் முதலாகிய எவ்விடங்களிலும் போய் நிறைந்ததுபோலவு மிருந்தது. அப்போது ஆஞ்சநேயர் இலங்கைக்குள்ளே எந்த வழியினுல் போகலாமென்று யோசனைசெய்து பின்பு ஒருவழியால் போகும்படி பவளமலையை விட்டெழுந்து அப்பால் நடந்தார். அதுகண்டு தேவர்கள் வாழ்த்தினுர்கள்.

பின்பு சமுத்திரமே அழகாக மேலேழு லோகத்திற்கு அப்புறத் திலும் உயர்ந்து மகாப்பிரளயம் வருங்காலத்திலும் அழியாதிருக்கின்ற சொர்ன மதிலின் உன்னதத்தைப் பார்த்துச் சந்திர சூரியர்கள் வஞ்சக னுகிய தசக்கிரீவனுடைய ஆக்கினைக்குப் பயந்து இந்த லங்கையின்மேல் வருகிறதில்லையென்று சொல்லுகின்றார்களே ; அதுதானே யல்ல. இந்த மதில் உயர்ந்திருப்பதனுல் ஏறி. அப்பால் போகக் கூடாமையால்தான் விலகிப் போகின்றார்கள். அன்றியும் இந்த இலங்கை மதில் சத்துருக்க

ளுடைய அளவில்லாத சைனியங்க ளெல்லாம் நடுவே பிரகாசிக்கத்தக்க விசாலமுடைய தென்போமாகில், அவ்வளவு மாத்திரமே யல்ல, பிரமாண்டத் தின் மத்தியில் எவ்வளவு விசாலமுண்டோ அவ்வளவு விசாலத்தையும், அதன் உன்னத மெவ்வளவோ அவ்வளவு உன்னதத்தையு முடையதென்று எண்ணி அதற்கு இராஜாவாகிய இராவணனைக் குறித்து மிகவும் அதிசயப்பட்டார். ஆஞ்சநேயர் சிங்கமும் மதயானையும் நாணும்படி நடந்து தனியே அந்தப் பட்ட ணத்திலே புகுந்து, பிராட்டியாரைத் தேடும்படி பிரயத்தனப்பட்டுப் போகிய வர் எமனுடைய வாய்க்குச் சமானமாகிய அந்தக் கோட்டை வாயிலை எதிரே பார்த்து, இந்த வாயில் மஹாமேருவை நிறுத்தி நடுவே வெளிசெய்ததுவோ? தேவலோகத்திற்குப் போகும்படி சமைத்த படிக்கட்டோ? மேலேழு லோகமும் நிலைநிற்கிறதற்கு நடுவே நாட்டிவைத்த தூணோ? கடல் நீரெல்லாம் புகுந்து போகிறதற்கு விட்ட வழிதானோ? சப்த லோகங்களிலும் வாழ்கின்ற சகல உயிர்களும் இராவணனுடனே வந்து எதிர்த்தால் இதற்குள் ஒன்றன்பின்னே யொன்றாய்ப் புகவேணுமென்கிற கிரமம் வேண்டியது இல்லை. ஏககாலத்தி லேயே எல்லாம் ஒருமிக்க நுழைந்து போகத்தக்கதா யிருக்கின்றது. நம்முடைய வானரவீரர்கள் வந்து புகத்தக்க வழி இதுதானென்று நிச்சயிப்போமானால், இங்கே பகைவர்கள் ஏழுசமுத்திரத்திலும் அதிகமா யிருக்கிறார்கள். இதற்கப் புறத்திலும் கள்ள செய்கைகளையும் மிகுந்த பராக்கிரமத்தையுமுடைய இருநூறு வெள்ளம் இராட்சதர்கள் இரண்டு கையிலும் வாளாயுருவிப் பிடித்துக்கொண்டு, அந்த வாள்கள் பளபளவென்றும், முள்ளாப்போலும் கடுமையாகிய கோர தந்தங்கள் தகதகவென்றும் பிரகாசிக்க, ஒவ்வொருவர் ஒவ்வொரு கரிய மலை போல நின்றவண்ணமாய் இருக்கின்றார்கள். பின்னும் அநேகர் சூலம் - மழு - வேல் - தோமரம் - இருப்புலக்கை - வில் - அம்பு - கப்பணம் - முசுண்டி - கணையம் - சக்கிரம் - வச்சிரம் - சரிகை - குந்தம் - பிண்டி - பாலம் - அங்குசம் - கவண் - பாச முதலாகிய பலவகை ஆயுதங்களையும் ஏந்திக்கொண்டு, பங்குனி மாதத்திலே மலர்ந்திருக்கின்ற முருங்கக் காடுபோலச் சிவந்த மயிரும் மிகுந்த கோபமும் உடையவர்களாகவு மிருக்கின்றார்கள். அன்றியும் அநேக ராட்சதர்கள், இவ் வாசலுக் கெதிரே ஆயுதபாணிகளாய் எமனுங் கண்டு நடுங்கும்படி கூட்டமா யிருந்து காவல் காக்கின்றார்கள். ஆகையால் எந்தத் தேவர்கள் எந்த அசுரர் கள் எப்படிப்பட்ட சாமர்த்தியர்களானாலும், இந்தக் கோட்டைவாயிலைக் கடக்க மாட்டுவார்களா? சத்துருக்களாகிய இவர்களுடைய காவல் இப்படிப்பட்டதா னால் இனி ஸ்ரீ ராமரும் நாமும்வந்து யுத்தந் தொடங்கினால் ஏதாய் முடியுமோ? மேலும் அந்தக் கடலைக் கடந்தது பிரயாசமல்ல. இந்த வாயிலைக் கடக்கிறது தான் மிகவும் பிரயாசமா யிருக்கின்றது. மனது சிறிது சலனப்பட்டால் நாம் எண்ணிவந்த காரியத்தை முடிக்க முடியாது. யுத்தஞ்செய்யத் தொடங்குவோ மானால் இந்த ராட்சதர்கள் வெகுநாள் யுத்தஞ் செய்வார்கள். ஆகையால் இந்த வாயிலின் வழியாலே போகின்றது மகா கடினமாகும். நம்மைப்போலும் பராக்கிரமசாலிகளா யிருக்கின்ற பகையாளிகள் உண்டாக்கிய வழியால் போவது அழகல்ல. சூரியசந்திரர்களும் சஞ்சரியாத மதிலைத் தாண்டித்தான் உள்ளே போகவேணுமென்று எண்ணி ஒரு பக்கத்திற் போனார். அப்போது அந்த இலங்காபுரியைத் தன் பிராணனைப்போலக் காத்துக்கொண்டிருக்கின்ற

இலங்காதேவி யென்றும் இலங்கிணி யென்றும் சொல்லப்படும் பெயரினையுடை யவள் இந்த அநுமானைக் கண்டு சர்ப்பம்போலச் சீறி, கண்களில் நெருப்புப் பொரி பறக்க ஓடிவந்தாள். அவள் எப்படிப்பட்டவள் என்றால்; எட்டுத்தோளும், நாலுமுகமும், சப்தலோகத்தையும் சூழ்ந்து கவிக்கின்ற சரீரப் பிரகாசமும், சுழல்கின்ற கண்களும், திரிலோகத்தாரையும் உள்ளே வராமல் தடுத்துக் காக்கின்ற அந்தப் பலமும், பொறுமை யில்லாமையு முண்டானவள். ஆராகி லும் இந்தப் பட்டணத்திற்குள் வருகின்றார்களோ வென்று நான்கு திசைகளை யும் பார்த்து, மேககர்ஜிதம்போலக் கொக்கரித்திருப்பவள். காற்சிலம்புகள் சப்திக்க, மின்னலைப்போல ஆபரணங்கள் ஜொலிக்க, வேலாயுதம்-சூலாயுதம்-பாசம்-சங்கு-அம்பு-வில் முதலானவைகளும் கையிலே தரித்துக்கொண்டு உலாவுகின்றவள். மகம்மேரு பர்வதம்போலப் பருத்து உயர்ந்த சரீரமும், அர்த்த சந்திரனைப்போல வளைந்த பற்களுமுடையவள். வாய்களிலே புகை யெழும்ப எமனுங் கண்டு பயப்படும்படி கோபம் அதிகரிக்கின்றவள். பஞ்ச வர்ணப்பட்டு வஸ்திரமுடுத்தி, ஸ்வர்ண உத்தரீயம் போர்த்து, முத்தாரம் தரித் திருக்கின்றவள். கருடனைப்போல அதிவேக முண்டானவள். மந்தாரமாலை பிரகாசிக்கக் கிரீடங்களணிந்து, இலங்கா பட்டணத்தைத் தன் கண்ணுக் குள்ளே வைத்துக் காத்துக்கொண்டு இருக்கின்றவள். அப்படிப்பட்ட இலங்கா தேவியானவள் அந்த அநுமானைப் பார்த்து, ஆரடா! நில் நில்லென்று அதட்டி னாள். அதுகண்டு அநுமானவர் வாவென்று சொல்லிக்கொண்டு, அவ ளுக்குச் சமீபத்திலே போனார். அப்படி வந்தவரைப் பார்த்து, அடா புத்தி யில்லாதவனே! அச்சமில்லாமல் தகாத காரியம் செய்தாய். நீ இலையும் காயும் கனியும் தின்று திரிகின்ற குரங்கானபடியினாலே உன்னுடன் எனக்கு என்ன பேச்சு? மதிலின்மேலேறி உன்னுடைய பிராணனைப் போக்கடித் துக் கொள்ளாதே. சும்மா ஓடிப் போய்ப் பிழையென்று சொன்னாள். அந்த வார்த்தையைக் கேட்டு ஆஞ்சநேயர் மனதிற்குள்ளே களித்துப் பின்பு அதிக கோபங்கொண்டு தாமும் அவளை அதட்டி அழைத்து, நான் இந்தப் பட்டணத்தைப் பார்க்க வந்தேன். எளியவனாகிய நான் வந்தால் உனக்கென்ன நஷ்டமென்று சொன்னார். அதற்கு இலங்காதேவி கோபித்து அடா குரங்கே! நான் போகச்சொன்னாலும் போகாமல் எதிர் உத்தரம் சொல்லிக்கொண்டு பயப்படாமல் நிற்கிறையே! நீ யார்? திரிபுராந் தகனான சிவன் முதலானவர்களும் இந்த ஊர்க்குள் வரப் பயப்படுவார்கள். அப்படியிருக்க, உன்னாலே பார்க்கின்ற ஊரா இந்த ஊரென்று நகைத்தாள். அவள் நகைத்தது கண்டு அநுமானவரும் மனதுக்குள்ளே நகைத்தார். அது தெரிந்துகொண்டு, அடா குரங்கே! நீ யாரானுப்ப வந்தாய்? உன் பிராணன் போனாலல்லாமல் நீ யோடிப்போகிற தில்லையென்று சொன்னாள். அதற்கு அநுமானவர், நானிந்த ஊருக்குள்ளே போய்ப் பார்த்தாலல்லாமற் போகிற தில்லை யென்று சொன்னார். அவ்வசனத்தைக் கேட்கவே, இவன் வானரனல் லன்; வஞ்சகத்தைக்கொண்டு வந்தவனாகவேண்டும். என்னைக்கண்டால் யம னும் திடுக்கிட்டு மூர்ச்சை போவான். இவனைவென்றால் அதிக தைரியத் துடனே பிரளயகால ருத்திரனைப்போல நகைக்கின்றான். ஆகையால் ஆரோ வென்று மனங்கலங்கிக் கோபம் அதிகரிக்க, இவனை அவசியம் நான்கொல்

வேன் கொல்லாமற்போனு லிவ்வூருக்கே மோசம் வருமென்றெண்ணி, எட்டுக் கண்களிலும் நான்கு வாயிலும் திக்திக்கென்று அக்கினியானது பொங்கி எழும்ப, அடா! நீ மதிலின்மேல் போகாய் போகாயென்று உறுக்கித் தன் கையிலிருந்த சூலாயுதத்தை உக்கிரத்துடன் அநுமான்பேரில் எறிந்தாள். அந்தச் சூலமானது மின்னலைப்போல தகதகாயமாய்ப் பிரகாசித்துக் கொண்டு தமக்கெதிரே வரக்கண்டு, ஆஞ்சநேயரானவர் அதைக் கையினுற் பிடித்து, ஆகாயத்திலே கருடன் சர்ப்பத்தைத் துணிக்கிறதுபோலத் தேவர்கள் சந்தோஷிக்கவும், அவள் நெஞ்சு திடுக்கிடவும், நொடிக்குள்ளே ஒடித்தெறிந் தார்; சூலாயுதம் ஒடிபட்டு நீறுய்ப்போனது கண்டு லங்காதேவி யுகாந்த காலாக்கினிபோல அதிக கோபங்கொண்டு, பின்னும் தெய்வீகமாகிய பலவித ஆயுதங்களையும் பிரயோகம் செய்யும்படி யத்தனப்பட்டாள். அதை யறிந்து அநுமானவர் அவள் கையிலிருந்த ஆயுதங்களையெல்லாம் ஒன்றொழியாமல் சிக்கிரத்தில் பறித்து ஆகாயத்தில் விட்டெறிந்தார். அதுகண்டு அநுமான் மேல் பிரயோகஞ்செய்வதற்கு வேறே ஆயுதம் இல்லாததினாலே இலங்காதேவி யானவள் பிரளயகால மேகம்போலக் கர்ஜ்ஜித்து, பர்வதங்களை எடுத்தெறிந்து, பந்தும் அம்மானையும் ஆடுகின்ற தன் கைகளினாலே நெருப்புப்பொறி சிதறும் படி ஆஞ்சநேயரை ஒங்கி அடித்தாள். அப்படி அடித்தும் அடியாததற்கு முன்னே அவளுடைய கைகளையெல்லாம் ஒருமிக்கத் தாம் ஒரு கையினாலே சேர்த்துப் பிடித்துக்கொண்டு, இவள் பெண்பிறப்பை யுடையவள்; இவளைக் கொன்றால் தோஷம் வந்து லபிக்கும். ஆகையால் கொல்லலாகாதென்று நினைத்து ஒரு கையினால் அவள் மார்பில் ஒரு அறை கொடுத்தார். அந்த அறை படவே, இடிவிழுந்த பர்வதம்போலத் திடீரென்று பூமியில் விழுந்து வாயினால் இரத்தங் கக்கிக்கொண்டு அந்த இரத்த வெள்ளத்தில் அழுந்தி மூர்ச்சித்து மனஞ் சலித்து, பூர்வத்தில் பிர்மதேவர் தனக்குக் கட்டளையிட்டு இருந்ததை நினைத்துக்கொண்டு எழுந்திருந்து சகல லோகங்களினுமுள்ள யாவரும் யாவை யும் சிரத்தாபத்தி விசுவாசத்துடனே நமஸ்காரம் செய்கின்ற திருவடித் தாம ரையையுடைய ஸ்ரீ ராமபிரானுக்கு இணங்கிய தூதராகிய ஆஞ்சநேயருக்கு முன்னே வந்துநின்று, ஐயா மகாநுபாவரே! முற்காலத்திலே பிரபஞ்சத்தை யெல்லாம் சிருஷ்டிசெய்த பிர்மதேவரானவர் என்னை இந்த இலங்கையைக் காத்துக்கொண்டிருக்கச் சொல்லி ஆக்ஞாபித்தார். என் பெயர் இலங்காதேவி. நான் கிர்த்தியந்தப்பி மனம் திகைத்து உம்முடைய விஷயத்தில் இந்த அற்ப காரியத்தைச் செய்தேன். நீர் என்னைக் கொல்லாமல் பிழைத்துப்போம்படி கிருபை செய்வீரேயாகில் உமக்கு உண்மையைக் சொல்லுகிறே னென்று சொல்லத்தலைப்பட்டாள். அந்நாளிலே அந்தப் பிரம்மதேவரை நோக்கி சுவாமி! நான் எத்தனைகாலம் இந்த லங்கையைக் காத்துக்கொண் டிருப்பேனென்று கேட்டேன். அதற்கு அவர் நீ வெகுகாலம் காத்துக்கொண்டிருந்தால் ஒரு குரங்கு வந்து உன்னைக் கையினாலே தீண்டி யடிக்கும். அப்பொழுது லங்கைக் காவலைவிட்டு நம்மிடத்திற்கு வந்து விடுவாய். பின்பு அந்தப் பட்டணம் அழிந்து போம் என்று சொன்னார். அவ்வண்ணமே வந்து முடிந்தது. தர்மம் வெல்லும்; பாபந் தோற்கும் என்பதைக் குறித்துச் சொல்லவேணுமோ? இனிமேல் நீர் நினைத்த காரியமெல்லாம் யாதொரு தடையுமில்லாமல் முடியும். மேலும் உம்

மால் ஆகாத காரியம் ஒன்றுண்டோ? நீர் சுகமாய்ப் பட்டணத்திற்குள்ளே போய் உம்முடைய காரியத்தைப் பார்த்துக்கொள்ளும் என்று சொல்லி ஆஞ்ச நேயருக்குத் தெண்டனிட்டு, அந்த லங்காதேவி பிர்மலோகம் போய்விட்டாள். வீராதி வீரராகிய ஆஞ்சநேயர் சந்தோஷமாகப் பார்த்து, அப்படித்தான் முடியுமென்றெண்ணி, தாரகபிர்ம்ம மந்திரமாகிய ஸ்ரீ ராமருடைய நாமத்தை மனதிலே தியானஞ் செய்து ஸ்துதித்து, அவரை வணங்கி, அந்த ராட்சதர்க ளுடைய லங்கை மதிலைத் தாண்டிப் பட்டணத்திற்குள்ளே போய் பெரிய பாற்கடல் முழுதும் சிறிய மோர்த் துளியாகிய பிரை கலந்ததுபோல எங்கும் வியாபித்தவராகி, ரத்தினங்களினாற் செய்யப்பட்ட உன்னதமா கிய உப்பரிகைக ளெல்லாம் ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசித்துப் பகலே யுண் டாக்குகிறபடியினாலே, அதைக்கண்டு சூரியோதய மாயிற்றே வென்று அச் சங்கொண்டார். உடனே செவ்வையாய்ப் பார்த்துச் சூரியோதயமான தல்ல. இந்த நகரத்திலுள்ள மாடமாளிகைகளின் பிரகாசமென்று தெளி ந்து, ஆஹா! ஆஹா! இந்த ரத்ன காந்திக்கு முன்னே சூரியன் மின் மினிப்போ லல்லவோ தோற்றுவானென்று அதிசயப்பட்டார். பின்னும், மக மேருவுக்கு ஒப்பாகிய சோர்னமதிலின் மத்தியில் தோஷரகிதமாகிய ரத்தினங்க ளழுந்திய உப்பரிகைகளின் பிரகாசத்தினால் இருள் நீங்குதலால், இந்த லங் கையி லிருக்கின்ற ராட்சதர்கள் பகற்காலத்தில் சஞ்சரிக்கிறதுபோல, நிசி யாகிய அர்த்தராத்திரி காலத்திலும் சாதாரணமாய் சஞ்சாரம் செய்கிறபடியி னாலே, இவர்களுக்கு அந்தக் காரணத்தைப்பற்றி நிசிசரரென்று பெயருண் டாயிற்றென்று நினைத்து, இப்படிப்பட்ட பிரகாசத்திலே வீதியெல்லாம் பகி ரங்கமாய் நடக்கிறதினால் குற்றம் வருமென்று தமது சரீரத்தைக் குறுகச் செய்துகொண்டு, மாளிகையின் பக்கத்தில் மந்தரகிரியைப் போலவும், ஸ்ரீ ராம ருடைய கீர்த்தியைப்போலவும், உயர்ந்த தோளினையுடைய ஆஞ்சநேயர் ஒதுங்கி நடக்கத் தொடங்கினார். பசுக்கள் நெருங்கிய தொழுவங்கள் தோறும், யானை கட்டிய கூட்டங்கள் தோறும், பந்தி பந்தியாகிய குதிரைக் கொட்டாரங்கள் தோறும், லட்சுமி வாசஞ்செய்கின்ற வீடுகள்தோறும், பரிமளம் வீசுகின்ற பூஞ்சோலைகள் தோறும், கடலைக்கடந்த தமது பாதத்தினால் தழுவி புஷ்பங்கள் தோறும் தாவிச் செல்கின்ற வண்டுபோலப் போனார். சூரியன் சந்திரன் முத லாகிய நவக்கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் ஒப்பாகிய அநேகவித ரத் னங்களால் பந்தி பந்தியாக உண்டாக்கப்பட்டிருக்கின்ற சுவர்த்தலங்கள் சொரிகின்ற ஜோதிச்சாயைகள் தமது திருமேனியில் பாய்கின்றதினால் வாயு குமாரராகிய ஆஞ்சநேயர் கறுத்த நிறத்தை யுடையவராகியும், வெளுத்த நிறத்தை யுடையவராகியும், சிவப்பு நிறத்தை யுடையவராகியும் காணத்தலைப் பட்டார். அந்தக் காட்சி எப்படி யிருந்ததென்றால், காண்பதற்கு அரியவனாகி யும், எளியவனாகியும், தமது இருதயகமலத்தில் வாசஞ் செய்கின்ற நானாவித ரூபத்தையுடைய அந்தரியாமியாகிய ஸ்ரீ ராமச்சந்திரனைப்போலவே யிருந்தது. எங்கும் தேவகன்னியர்கள் சொர்னக் குடங்களில் ஆகாய கங்கா ஜலத்தைக் கொண்டுவந்து ஸ்நானஞ் செய்விக்க, ராட்சத ஸ்திரீகள் மயில்களும் அன்னங் களும் நீர் விளையாடுகிறதுபோல ஸ்நானஞ் செய்கின்றதையும், இளந் தளிரை யொத்த கைகள் நோவ வீணையை மீட்டி, லயைகான சுருதிகானப் பிரமாணத்

துடனே பாடும் பாடல்கள் மேகம் கர்ஜ்ஜிக்கின்றதனால் அந்தப் பிரமாணம் தப்பிப் போகின்றதென்று விஞ்சைய ஸ்திரீகள் உப்பரிகைகளின்மேல் தவழ் கின்ற மேகத்தின் வாயைத் தங்கள் கைகளினால் மூடுகின்றதையும் கண்டார். பூப்பந்த லிடப்பட்டு ரத்னதீபங்கள் ஜொலிக்கின்ற பொன்மயமாகிய நடன சாலைகளில் புஷ்பசயனத்தில் வந்திருந்து கந்தர்வஸ்திரீகள் ஆடுகின்ற நாட்டி யத்தைப் பார்க்கின்றவர்களையும், பளிங்கினாற் கட்டிய மேடைகளின்மேலிருந்து பயிருக்கு நீர்ப்பாய்ச்சுகிறதுபோலத் தங்களுக்கு நாயகன்மார்களிடத்தில் காமம் அதிகரிக்கும்படி கள்ளுண்கிறவர்களையும், செம்பவளத்திற்குச் சமானமுமாகிய பாதத்தில் செம்பஞ்சின் குழம்பால் சித்திரமெழுதிச் சரீரத்தில் மிகுந்த வாச னையையுடைய கலவைச்சாந்து பூசிக் கண்களில் மையிட்டுப் பலவித ஆபரணங் களும் கற்பக விருக்ஷம் கொடுக்க வாங்கி அணிந்துகொள்கின்றவர்களையும், நாயகன்மார்கள் செய்த குற்றமானது தங்கள் உயிரை வருத்த ஊடிய ஸ்திரீகள் பெருமூச்செறிந்து இடை துவளக் காற்சிலம்பு சப்திக்கும்படி உதைக்கப் சந் தோஷித்து மயிர்க்கூச்செறிகின்றவர்களையும், கள்ளுண்டுகொண்ட மயக்கத்தி னால் கண்சிவந்து. வாயிதழ் வெளுத்துப் புருவம் வளைந்து துடிக்க, வெயர்வுண் டாகி முகமானது வேறுபட்டு அக் கள்ளை நிறம்பி யிருக்குங் குடத்திலே காண அதைக் கண்டமாத்திரத்தில் தங்கள் சங்களத்தியென்று நினைத்துப் புருஷர் களைக் கோபிக்கின்றவர்களையும் கண்டார். நாயகன்மார்களைப் பிரிந்து ஸ்தனத் தின்மேல் அணிந்த சந்தனம் தீயும்படி தாமரை மலரின்மேல் வேரொரு தாமரைமலர் பூத்ததுபோல முகத்தினிடத்தில் கையை வைத்துக்கொண்டு அசைவற்றிருந்து பெருமூச்செறிகின்றவர்களையும், நாயகன்மார்களின்மேல் கோபத்தால் சயனத்தில் பிரக்ஞைதப்பிக் கிடந்து காமம் அதிகரித்ததால் அவர்கள் வரும் வழியைப் பார்த்துத் தாங்கள் அனுப்பின தாதிகள் நகைத்துக் கொண்டு வரக்கண்டு உயிர்வந்து துடித்தெழுகின்றவர்களையும், சகல வாத்திய முழக்கத்துடனே தங்கள் தங்கள் வீட்டுத் தெய்வங்களைக் கொண்டாடிப் புஷ் பத்தால் அர்ச்சித்துப் பூசை செய்கின்றவர்களையும், காமப் பிணக்கினால் புரு ஷர்களின் பக்கத்தில் படுத்துப் பொய்யுறக்கங் கொண்டிருந்து பின்பு அப் பிணக்கு நீங்கிச் சையோகஞ்செய்ய நினைத்துக்கொண்டு மெள்ளக் கண்ணைத் திறந்து பார்க்கின்றவர்களையும், அறிவுடனே அந்தக்கரண முதலானதுகளும் நாயகன்மார்க ளிடத்தில் சேர்ந்திருக்க, அவர்கள்மேல் பிணங்கிப்போய்க் கதவைச் சாற்றுகின்றவர்களையும், மேகத்தைப்போலப் பேரிகை முழங்கத் தேவர்கள் வந்து ஆசீர்வதிக்க முனீஸ்வரர்கள் சோபனங்கள் கூற, அரம்பா ஸ்திரீகள் பல்லாண்டு பாடக் கல்யாணஞ்செய்து மகிழ்கின்றவர்களையும் கண்டார். இப்படி பலவிதச் செய்கைகளைச் செய்துகொண்டிருக்கின்ற யக்ஷ ஸ்திரீகள் கந்தர்வ ஸ்திரீகள் முதலாகிய அனைவரையும், அனுமானவர் தெளிவாகப் பார்த்துக் கொண்டே நடந்து, அப்பால் கும்பகர்ணனுடைய மாளிகைக்குப் போனார். அவ்விடத்தில் ஏழுயோசனை விஸ்தீரணம் அகன்று உயர்ந்து நவரத் தின கசிதமாய்த் தேவேந்திரனுடைய பட்டாபிஷேக மண்டபம்போல அதிக சிங்காரமாகிய ஒருமண்டபம் இருக்கின்றது. அதன் நடுவே ஒரு பஞ்சுமெத்தை யின்மேல் சர்ப்பராஜன் சயனித்துக்கொண்டிருக்கிறது போலவும், சமுத்திரம் கிடக்கிறது போலவும், இருளெல்லாம் ஓரிடத்தில்கூடி யிருக்கிறது போலவும்

பாவங்களெல்லாம் திரண்டு ஒரு உருவமெடுத்ததுபோலவும், கும்பகர்ணன் படுத்துக்கொண்டு சமுத்திரத்திலே மூழ்கியெழுந்து மூவகைப்பட்ட கதிகளுடனே கற்பகக்காட்டிலே சஞ்சரிக்கின்ற இளந் தென்றற் காற்றானது வந்து முகத்திலே மிருதுவாகத் தவழவும், தேவகன்னிகைகள் பாதம் வருடவும், அவர்களுடைய முகமாகிய சந்திரகாந்தம் கக்குகின்ற ஜலமானது மேலே துளிக்கவும் நித்திரைபண்ணிக் கொண்டிருந்தான். அவனுடைய சுவாசமென்கிற வேகத்தையுடைய பெருங் காற்றானது, ஆஞ்சநேயரை வாயிலின் புறத்திலே தள்ளிக்கொண்டு வந்து நிறுத்தி, மறுபடியும் பராக்கிரமதுள்ள அந்தக் கும்பகர்ணனுடைய மூக்குக்குள்ளே யிழுத்துக்கொண்டு போயிற்று. அவர் பயந்து நடுநடுங்கிச் சீக்கிரமாய் அங்கிருந்து வெளியிலே குதித்து ஆச்சரியப்பட்டுக் கைவிரலை நெறித்தார். புழுதிக் கூட்டங்களெழும்பி ஆகாயத்தை அளாவும்படி அத்தன் மூக்கினின்றும் வெளிப்பட்டுப் பின்னும் அதற்குள்ளே போய் நுழைகின்ற அந்த உசுவாச நிசுவாசம் எப்படியிருந்ததென்றால், உலகங்களையெல்லாம் நாசஞ் செய்கின்ற பிரசண்டமாருதமான யுகாந்தகாலத்தின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு சஞ்சரிப்பதை ஒத்திருந்தது. அவன் சந்திரனைத் தன் பகைவர்களில் சேர்ந்தவனென்று பிடித்து இருபிளவாக்கித் தின்னும்படி தனது பெரிய வாயினிடத்தில் வைத்ததுபோல அவனுடைய முகத்தில் கோரதந்தங்கள் பிரகாசிக்க, மந்திரத்தினாலே தடைபட்ட நாகம்போலவும், யுகமுடிவைப் பார்த்துக்கொண்டு பொங்கிவராமல் அடங்கியிருக்கின்ற கடல்போலவும், தன்னை மறந்து உறங்குகின்ற அந்தக் கும்பகர்ணனைப் பார்த்து, இவன் ராவணனை வென்று எண்ணித் திரிமூர்த்தியாகியாகிய அநுமானனவர் அதிக கோபமாய்ச் சமீபத்திலே போய்ப் பார்த்தார். இவனுக்குப் பத்துத்தலையும் இருபதுதோளும் இல்லாததினாலே ராவணன் அல்லவென்று குறித்து, கோபமாகிய வடவாக்கினியை அறிவாகிய கடல்நீரால் தணியச் செய்துக்கொண்டு, பின்பு இவன் ஆரோ தெரியவில்லை. நல்லது; எவனாயிருந்தாலு மிருக்கட்டும். இன்னுஞ் சிலநாள் வரைக்குந்தானே உயிர்கொண்டிருக்கப் போகிறானென்று மனதிலெண்ணி, அந்த மாளிகையைவிட்டு அப்பாலிருக்கின்ற மாடங்கள் - கூடங்கள் - மாளிகைகள் - ஆடரங்குகள் - சபாமண்டபங்கள் - தேவாலயங்கள் - வேதிகைகள் - வித்தியாசாலைகள் முதலாகிய பலவகை யிடங்களையும், ஸ்ரீ ராமருடைய கீர்த்தியே ஒரு வடிவெடுத்ததுபோலிருக்கின்ற அநுமானனவர் தேடிக்கொண்டே போனார். மேருமுதல் அணுவரையிலுள்ள சகல சராசரங்களிலும் நிறைந்திருக்கின்ற ஸ்ரீ மகாவிஷ்ணுவைப்போல மாணிக்கமாகிய வாயில்களுக்குள்ளும், சிறிய சாளரங்களுக்குள்ளும், புஷ்பங்களுக்குள்ளும், காற்றுக்குள்ளும், புகைகளுக்குள்ளும், அதற்குத் தக்கபடி ஸ்தூலமும் சூட்சுமமுமாகிய உருவமெடுத்து நுழைந்து லோகமாதாவைத் தேடிக்கொண்டு போகிற அந்த அநுமானுடைய நிலைமையை யார்தான் தெரிந்து சொல்லக்கூடும்? இந்தப் பிரகாரம் எந்த இடங்களிலும்போய் எவ்வகைப்பட்ட ஸ்திரீகளையும் காணும் பொருட்டு, சொர்க்க மத்திய பாதாளங்களிலுள்ளவர்களெல்லாம் விரும்பும்படி அவதரித்த புண்ணிய சீலனாகிய விபீஷணாழ்வானுடைய திருமாளிகைக்குள்ளே புகுந்தார். பவளத்தினால் அழகாகக் கட்டியிருக்கிற அந்த மாளிகையில் பளிங்கு மேடையின்மேல் தேன்துளிக்கின்ற பாரிஜாத புஷ்பப் பந்தலிலே அந்த

விபீஷணன் படுத்துக்கொண்டிருந்தான். அவன் படுத்திருந்தது எப்படியிருந்த தென்ரூல், தர்மமானது தனக்குரிய வெளுத்த நிறத்துடனே அந்த ஊரிலுள்ள ராக்ஷதர்களுக்கு முன்னே யிருக்கமுடியாதென்று பயந்து, அவர்களைப்போலக் கறுத்த ரூபமெடுத்து ஒளித்துக்கொண் டிருக்கிறதுபோ லிருந்தது. அப்படிப் பட்ட விபீஷணனைக் கண்டு அவ்விடத்தில் நின்று அவனுடைய விவேகத்தைத் தம்முடைய விவேகத்தினால் அளவிட்டு, இவன் குற்றமற்ற சற்குணத்தையுடைய பரமோத்தம னென்று அவனைக் குறித்துச் சந்தோஷப்பட்டு, அப்பால் நடந்து போய் ஸ்வர்னச் சாயையாய்ப் பிரகாசிக்கின்ற, ஒவ்வொரு கோடி மாடங்களை ஒவ்வொரு இமைப்பொழுதிலே தேடினர். அவ்விடங்களில் இந்திரஜித்தென்ப வனால் சிறை வைக்கப்பட்டிருக்கின்ற தேவஸ்திரீகள் - யக்ஷஸ்திரீகள் - கந்தர்வ ஸ்திரீகள் - கின்னரஸ்திரீகள் - வித்தியாதரஸ்திரீகள் முதலாகிய அநேககோடி ஸ்திரீ கூட்டங்களிலும் தேடிக்கொண்டுபோய், அவர்களுடைய பலவிதமாகிய கிரகங்களையும் கடந்து முன்னாளிலே தேவேந்திரன் சிறையிருந்த அந்த இந்திர ஜித்தினுடைய ஆசாரவாசலைக் கண்டார். அவ்விடத்திலே கைகளில் ஆயுதங் கள் பிரகாசிக்க மிதமற்ற ராட்சதர்கள் நின்றபடியே பூர்வகதைகளும் விடு கதைகளும் சொல்லிக்கொண்டு, கண்களை இமையாமல் ஜாக்கிரதையாய்க் காவலிருந்தார்கள். அவர்களுடைய கடினமாகிய காவலைக்கடந்து உள்ளே போய், அநேக ஸ்திரீ கூட்டத்தின் மத்தியில் மஹா உல்லாசமாய்ப் படுத்துக் கொண்டிருக்கின்ற இந்திரஜித்தைக் கண்டு, திரிநேத்திரனாகிய சிவனுடைய புத்திரனென்கின்ற சுப்பிரமணியர் தம்முடைய ஆறுமுகங்களில் ஐந்து முகங் களையும் பன்னிரண்டு கைகளில் பத்துக் கைகளையும் மறைத்து ஒரு முகத் துடனும் இரண்டு கையுடனும் வந்திருக்கிறதுபோ லிருக்கின்ற இவன் ராட்சதனோ? அல்லது அந்தச் சுப்பிரமணியன்தானோ? சிங்கத்திற்குச் சமானமாகிய மஹா பலவந்தனாகவும் காண்கின்றான் ஆகையால் ஆரோ தெரியவில்லை; இளையபெருமாளும் ஸ்ரீ ராமரும் வந்து யுத்தஞ் செய்கின்ற காலத்திலே இவன் அநேகநாள் இளையாமல் யுத்தஞ் செய்வான். இப் படிப்பட்டவனைத் தனக்குத் துணையாகப் பெற்றிருக்கின்ற ராவணன் திரிபுவ னத்தையும் ஜெயித்ததை ஒரு பொருளாகச் சொல்லக்கூடாது. இவனுக்குச் சிவனும் பிர்மாவும் மகாவிஷ்ணுவுமாகிய மும்மூர்த்திகளும் ஒப்பாவார்களென்று சொல்வது விவேகமா என்று தம்முடைய கையை அசைத்து, இவ்விடத்தில் நாம் தாமசமாயிருந்து காலத்தை வீணாகப் போக்குகிறது நன்மையல்லவென்று அவ்விடத்திலுள்ள அநேகமாயிரம் மாளிகைகளையும் அதி சீக்கிரத்தில் தேடி, அந்த இந்திரஜித்தன் அரண்மனையை விட்டு நீங்கி புகை நுழையாத இடத் திலும் காற்று ரூபங் கொண்டு நுழையத்தக்க ஆஞ்சநேயரானவர் அதிகாயன் மாளிகையையும், பின்னும் அவன் தம்பிமார்களின் மாளிகையையும், மற்று முள்ள படைத்தலைவர்கள் அணித்தலைவர்கள் யூகத்தலைவர்களின் மாளிகை யையும் தேடிப்பார்த்து, அப்பால் மந்திரி பிரதானிகளுடைய ஆயிரங்கோடி சொர்ன மாளிகைகளிலும் ஸ்ரீ ராம பாணத்தைப்போல அதி விவேகமாய்த் திரிந்து தேடி பின்பு அந்த மூன்று சுற்றுக்கோட்டைக்கு நடுவேயிருக்கின்ற அகழிக்கு நேராக வந்தார். குழந்தைப் பருவத்தில் சூரியனை மாங்கனியென்று பிடிக்கும்படி தாவிய அநுமானனவர் அந்த அகழியைக் கண்டு, ஏழு சமுத்தி

ரங்களும் ஒன்ருகச் சேர்ந்திருக்கின்றதுபோ லிருக்கின்றதே இந்த அகழி ; இதை கடக்கக்கூடாது. இனி ராமகாரியத்திற்கு விக்கினம் வந்ததென்று கிலேசித்துப் பின்னும் அதைப்பார்த்து, இதை அகழியென்று சொல்வார்களாகில் அநேகர்கள் கூடி ஊழிகால பரியந்தம் தோண்டினலும் தோண்டமுடியாது. ராவணனுக்குப் பயந்து சப்த சமுத்திரங்களும் இந்த நகரத்திற்குள்ளே வந்து இப்படிச் சூழ்ந்திருக்கின்றதென்று நினைத்து, அந்த அகழிக்குச் சமீபமாய்ப்போய், நாம் முன்பு சமுத்திரத்தைக் கடந்துவந்த வேகத்தைப் பார்க்கிலும் இருமடங்கு அதிக விசைகொண்டு தாண்டினபோதும் இதைக் கடக்கக் கூடாதென்றும், மேலிருந்து நால்வகையான மேகங்களும் கீழ்விழுந்து கவியும்படி தூக்கினற்போலப் பொங்கி எழுகின்ற நீர்ப்பெருக்கை யுடையதாய், பிரதாப லங்கேஸ்வரனுடைய சேனசமுத்திரத்தை யொத்திருக்கின்றது. இந்த அகழியின் சிறப்பை வாயினற் சொல்லவுங் கூடுமா ? இதில் யானைகள் பெருகின்ற கன்னமத முதலாகிய மூன்று வகைப்பட்ட மதங்களும், குதிரைகளின் வாயிலிருந்து ஒழுகுகின்ற நுரைகளும், தேவரம்பையர்கள் ஸ்நானஞ் செய்கின்ற குங்குமங்கலந்த ஜலமும், லங்கையிலிருக்கின்ற ஸ்திரீகளுடைய கூந்தலுக்கு ஊட்டிய மயிர்ச்சாந்தும், அகிற்புகையும், தேனும், திவ்வியமாகிய கந்தமும் பரிமளிக்கின்றதுகள். நாரைகள் - கொய்யடி நாரைகள் - அன்றில்கள் - புராக்கள் - உள்ளான் - அன்னம் - நீர்க்கோழி - நீர்க்காக்கை - சக்ரவாகம் - கின்னரம் - கொக்கு - குரு முதலாகிய பட்சிகள் நிறைந்திருக்கின்றதுகள். ஸ்திரீகள் அணிகின்ற அகில் - சந்தனம் - கஸ்தூரி - செம்பஞ்சின் குழம்பு முதலானதுகளும் சேர்ந்திருக்கின்ற இந்த அகழியில் மூழ்கிப்போகின்ற ஆண் யானைகளைப் பெண் யானைகள் கண்டு, நம்முடைய நாயகன் வேருருநாயகியைப் புணர்ந்து வருகின்ருனென்று நினைத்துப் பிணங்குகின்றதுகள். நீர்த்துறைகள்தோறும் குவிந்திருக்கின்ற தாமரைமலர்கள் ஜானகியின் கரசரணாதி அவயவங்களுக்குச் சிநேகமாகையால், அந்தப் பிராட்டியார் சிறையிலிருப்பதைக் குறித்து முகம் வாடியதுபோ லிருக்கின்றதுகள். அன்றியும், நீலமுதலாகிய ரத்னங்களும், முத்துக்களும், கரையின்மேலும், ஜலத்திற்குள்ளும், நானவிதமாகப் பிரகாசிப்பது பாற்சமுத்திர முதலாகிய பல சமுத்திரங்களும் ஒன்ருகக் கலந்திருப்பதுபோ லிருக்கின்றது என்றுங் குறித்து, அப்படிப்பட்ட அகழியைச் சமுத்திரத்தைக் கடக்கிறதுபோலக் கடந்து மதிலையுந்தாண்டி, உட்பிரவேசிக்கக் கூடாத காவலையுடைய அந்த நகரத்திற்குள்ளே போனர். அப்போது அர்த்தராத்திரியாயிற்று. அத்தருணத்தில் யமனும் பயந்து ஓடத்தக்க ராட்சதாளுடைய பட்டணத்தில் அநுமானவர் தாம் ஒருவராய் ஒவ்வொன்று பன்னிரண்டு யோசனைப் பிரமாணமா யிருக்கின்ற மூன்று லட்சம் தெருக்கள் தேடினர். ஆடல் பாடல்கள் அடங்கியதுகள். வீணை மத்தள முதலாகிய சகல வாத்திய முழக்கங்களும் அடங்கியதுகள். காவற்பறை மாத்திரம் முழங்கத் தலைப்பட்டது. கூடின ஸ்திரீ புருஷர்களெல்லாம் உறங்கினர்கள். கதவுகளெல்லாஞ் சாத்தப்பட்டதுகள். பூரண ஞானத்தையுடைய உத்தமர்களெல்லாம் நித்திய நியமாதி கர்மங்களை முடித்துக்கொண்டு நித்திரை செய்தார்கள். யோகீஸ்வரர்களும் உறங்கினர்கள். மதயானைகளும் உறங்கியது. மயங்கித் திரிகின்ற பித்தர்களும் உறங்கினர்க ளென்ருல் மற்றவர்களைக் குறித்து என்ன

சொல்லுகிறது? அந்தச் சமயத்திலே, அந்த மதிலுக்குள் இருக்கிற இரண்டு கோடி ராஜவீதிகள் தேடிப்பார்த்து அப்பால் ஆகாமிய சஞ்சித பிராரத்த கர்மங்களை ஒழித்த ஆஞ்சநேயர் இராவணனுடைய இருப்பிடத்தைச் சுற்றியிருக்கின்ற அழகையும் மதிலையுங் கடந்து உள்ளே பிரவேசித்தார். அங்கே இராவணனே சந்திரனாக, அந்தச் சந்திரனைச் சூழ்ந்திருக்கின்ற நட்சத்திரங்களைப்போல அந்த ராவணனைச் சேர்ந்திருக்கின்ற ஸ்திரீகளுடைய ரத்ன கசிதமாகிய மாளிகைகளி லெல்லாம் புகுந்து தேடத் தலைப்பட்டவராகி, களங்கம் நீங்கிய சந்திரனும் தோற்கும்படி பிரகாசிக்கின்ற முகத்தினையுடைய யக்ஷஸ்திரீகள் வாசஞ் செய்யும் மாளிகைகள் நெருங்கிய வீதிக்குப் போனார். ஸ்ரீ ராம தூதராகிய அநுமானவர், வஜ்ஜிரத்திறவுகோல் நுழைகின்ற துவாரங்கள் தோறும் நூலிழைபோலவும், சிறு தென்றல்போலவும், அதில் நுட்பமாகிய உருவங்கொண்டு நுழைந்து, மனது தெளியும்படி பார்த்தார். அவ்விடத்தில் சில ஸ்திரீகள் தங்கள் நாயகனாகிய இராவணேஸ்வரன்மேல் அதி மோகமாகி, மனது அவனிடத்தில் போயிருக்க கண்ணிமையாமல் சித்திரம் போலிருந்தார்கள். சிலர் மன்மத பாணத்திற்குப் பயந்தோ? கனவிலாகிலும் அந்த ராவணனைச் சேரலாமென்று எண்ணியோ? ஒன்றுந் தெரியவில்லை; அவர்கள் கண்ணைமூடிப் பொய்யுறக்கங் கொண்டிருந்தார்கள். சிலர் கிளிப்பிள்ளையையும், நாகணவாய்ப் பறவைகளையும் கடூரமாய்ப் பார்த்து, நீங்கள் ஆகின்ற காரியம் ஒன்றும் செய்யவில்லை. என் பிராண சிநேகிதனை அழைத்து வரவுமில்லை. என்னுடைய சமாச்சாரத்தையும் அவனிடத்திற்போய்ச் சொல்லவும்மில்லை யென்று கண்ணீர் பெருகத் துக்கிக்கின்றார்கள். சிலர் ஸ்தனங்களில் மன்மதபாணந் தைக்கப் பெருமூச்செறிந்து அழுது இனி செய்வ தென்ன இருக்கின்றது; இராவணனுடைய உருவத்தை சித்திரத்திலாயினும் எழுதலாமாவென்று நினைக்கின்றார்கள். சிலர் மகாமேருவை வில்லாக வளைத்து மகாவிஷ்ணுவை அம்பாகத் தொடுத்து எய்த சிவபிரானுடைய கைலாச பர்வதத்தை யெடுத்த அதிசூரனான இராவணேஸ்வரனுடைய தோள்களிலே அணியப்பெற்ற சந்தனக்குழம்பு தோய்ந்த தங்கள் ஸ்தனத்தைப் பார்த்துச் சந்தோஷிக்கின்றார்கள். சிலர் இலங்கேஸ்வரனுடைய பிரதாபத்தை வீணையிற் பாடுகிறார்கள். இந்தப் பிரகாரம் அந்த யக்ஷ ஸ்திரீகள் இருக்கின்ற ஆயிரமனைகளிலும் போய்த் தேடி அதுகளைத்தாண்டி, இராட்சத ஸ்திரீகள் இருக்கும்படியான ஆயிரங்கோடி மாளிகைகளையும் போய்த்தேடத் தலைப்பட்டார். அநேகர் நெய்விளக்கில்லாமல் இரத்னசோதியே இருளை நீக்கும்படி பிரகாசிக்கின்ற மாட மாளிகைகளிலே தோழிமார் தாதிமார் முதலான பெண்கள் கூட்டமெல்லாம் நீங்கிப்போகத் தாங்கள் கொண்ட ஆசையும் தாமுமாய் ஒருபக்கத்திலே யிருந்து, இராவணனிடத்தில் போயிருக்கின்ற தங்களுடைய மனதுடனே பிணங்குகின்றார்கள், அநேகர் தங்களுடைய மேனியே ஆகாயமாகவும், முத்தாரமே நக்ஷத்திரங்களாகவும், இடையே மின்னலாகவும், சிவந்த கூந்தலே செவ்வானமாகவும், கண்ணே மேகமாகவும், நெற்றியே சந்திரனாகவும் பிரகாசிக்க அந்திவானத்திற்குச் சமானமாயிருக்கின்றார்கள். அநேகர் உயர்வான உப்பரிகைகளின்மேலிருந்து கண்களினுடைய நிறமானது மாறவும், அளகபாரம் சோரவும் வானத்தில் இராகின்ற நட்சத்திரங்களை வாரியெடுத்து, அம்மாலையாகவும்

ஏழாங்காயாகவும் ஆடுகின்றார்கள். தேவஸ்திரீகளுடைய கூட்டங்கள் சத்திய லோகத்திலிருந்து மொண்டு கொண்டுவந்து ஸ்நானஞ் செய்விக்கின்ற ஆகாய கங்காஜலம் குளிர்ச்சியா யிருக்கவில்லையென்று அவர்களின்மேல் கோபித்து, மேல்மாடங்களின்மேல் ஏறிப்போய் மேகத்தினுடைய வயிற்றை துளைத்து அதி லிருந்து ஒழுகாநின்ற ஜலத்தினால் ஸ்நானஞ் செய்கின்றார்கள். அநேகர் நாக ராஜர்களைப் பலாத்காரமாய்ப் பிடித்து, அவர்களுடைய சிரோ ரத்னங்களையும், இரத்தினத் தாழ்வடங்களையும், மற்றுமுள்ள ஆபரணங்களையும் பறித்து, பந்தய மாக வைத்துக்கொண்டு நித்திரையில்லாமல் சூதாடுகின்றார்கள். அநேகர் புதுமையான புட்பமெத்தையில் படுக்கச் சகிக்காமல், அதைவிட்டுக் குளிர்ச்சி யான பளிங்குமேடையிலே போய்ப் படுத்துக்கொண்டு, காமாக்கினியினாலே வெதும்பிப் புழுங்குகின்றார்கள். அநேக சித்த ஸ்திரீகள் வீணைமீட்டிப் பாட, நாககன்னியர்கள் மத்தளந்தட்ட, தேவரம்பையர்கள் ஆட, அந்த நடனம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அனேகர் விரகாக்கினியானது மனதைத் தகிக்கக் கண்ணினின்றும் ஜலமானது பெருக நித்திரையில்லாமலும், மகர வீணையும் வேணுக்குழலும் தங்களுடைய கண்டமும் வேற்றுமை தோன்றாமல் அமிர்த மொழுகும்படி பாடுகின்றார்கள். அநேகர் வஸ்திரமும் மேகலாபரண மும் சோரும்படியாய்க் குரவைக்கூத்தாடுகின்றார்கள். அநேகர் கள்ளும் உதிரமுமுண்டு பித்தேறிக் கொண்டா னடிக்கின்றார்கள். அநேகர் கள்ளுண்ட மயக்கத்தால் அறிவு தடுமாறிக் கண் சுழல, என்மேல் தெய்வம் வந்தது பாருங்க ளென்று பெருமூச்சுவிட்டு, இரண்டு கையையும் உச்சிமேல் கைகூப்பிக் கொண்டு குழறிப் பேசுகின்றார்கள். இப்படி யிருக்கின்ற அந்த இராட்சத ஸ்திரீகளுடைய நாலுகோடி வீதிகளையும் தேடிப் பார்த்துக்கொண்டு, அப்புறம் சித்தமாதர்க ளிரானின்ற வீதிக்குப்போய் அங்கும் தேடிப்பார்த்துக் கொண்டு, பின்பு அநுமானவர் விஞ்சைய மாதர்களுடைய வீதியிலே போயினார். அங்கே இராவணனை வரக்காணுமல் தங்களிடையைப் பார்க்கிலும் மனமானது தளர்ந்து நடுங்க, உயர் நிலை தடுமாற, பாணர்கள் பாடுகிற பாடலானது பாம்புபோல் செவியில் வந்து நுழைய வருத்தப்படா னின்றவர்களும், இவர்கள் இராவண னிடத்திலே பரிவு கூர்ந்திருக்கின்றவர்க ளென்கிற விரோதத்தைக் கொண்டு சந்திரன் பொரிகின்ற கிரணங்களானவை தனங்களை வெதுப்ப நெருப்பினிடத் திலே விழுந்த இளங்கொடிபோலத் துடிக்கின்றவர்களும், ஒரு கணப்பொழுது அநேக ஊழிக்காலங்களாய்த் தோன்ற மனம் வேறுபட்டுக் காமநோயில் வருந்து கின்றவர்களும், தனத்திலேயெழுதிய சந்தனக்குறிகள் உயிரை வருத்தவும், கண் களானவை சிவக்கப் பார்த்துக் கோபித்துப் பெருமூச்சு விடுபவர்களுமாய் அந்த விஞ்சைய மாதர்களிருக்கிற பன்னிரண்டுகோடி மாளிகைகளையும் தேடிப் பார் த்துக்கொண்டு போய் திரிலோகத்திற்கும் நாயகனான பிரதாப லங்கேஸ்வரனு டைய பெரிய அரண்மனையை நாடிப்போகிற அநுமானவர் பூரணச்சந்திரனும் ஒளி மழுங்கும்படி அதிக தேஜசுடனே விளங்குகின்ற முகத்தினையுடைய மயன் மகளான மண்டோதரி வாசஞ்செய்யானின்ற அந்தப்புறத்தை கண்டார். கண்டு தம்முடைய கண்களானவை பிரமிக்கச் சித்தம் திடுக்கிட, எங்களுடைய கர்த்தா வான ஸ்ரீ ராகவருடைய பிராணபதமா யிருக்கும் ஜகதீஸ்வரியான ஜானகியை இராவணன் எடுத்துக்கொண்டு வந்து வைத்திருக்கின்ற இடமிதுதானோ? இங்

குள்ள மாணிக்கமயமான சகல மாளிகைகளிலும், இது ஸ்ரீ மகாவிஷ்ணுவி னுடைய மார்பிலணிந்த கவுஸ்துவ மணிபோலப் பிரகாசிக்கின்றதென்று ஆச்சரியப்பட்டார். அரம்பை - மேனகை - திலோர்த்தமை - ஊர்வசி முதலான தெய்வப் பெண்கள் இளந்தளிர்போன்ற பாதத்தை வருட, வெண்சாமரைவீச, கரும்பைப் பார்க்கிலும் அதிக மதுரமான வசனத்தையுடைய மாதர்கள் யாழ் மீட்டிப் பாடுகின்ற பாடலானது காதுக்குள்ளே வந்து நுழைய மூக்கினிடத்திலே கற்பகப்புட்ப வாடையானது சேர்ந்து மணக்க, இப்படி அநேக சம்பிரமத் துடனே புட்ப மெத்தையில் மாணிக்கதீபப் பிரகாசமும் மழுங்கும்படி ஜொலிக் கிற மேனியையுடைய திரிலோகபயங்கரன் பெண்சாதியான மண்டோதரியான வள் நித்திரைசெய்யக் கண்டார். இவள் அந்த ஜானகிதானென்று நினைத்துச் சந்தேகமடைந்து, மனதிலிருந்தெழுந்த கோபாக்கினியானது தம்முடைய உடலை யும் உயிரையும் சுடும்படி மிகவும் துயரப்பட்டுச் சொல்லுகின்றார். நான் எடுத்த சரீரத்தினால் அடையத்தக்க பிரயோஜனத்தை இழந்துவிட்டேன். அது இருக் கட்டும். இவளுடைய அன்பையும் குடிப்பிறப்பையும், தெய்வீகமான தன் னுடைய கற்பையும் இழந்துவிட்டாளே யாமாயின் ஸ்ரீ ராமருடைய கீர்த்தியும் தேஜசும் நானும் இந்த இலங்கையும் ராட்சதர்களும் இன்றையத்தினமே மாண்டுபோவது நிச்சயமென்றெண்ணி மறுபடியும் செவ்வையாய்ப் பார்த்து, அந்த லோகமாதாவோ மகத்தான சிறந்த உருவத்தை யுடையவள். இவளோ அவளுடைய திருவுருவத்தின் சதாமிசத்தில் ஒரமிசமும் ஒவ்வாததும் விகாரமு மான உருவத்தை யுடையவளா யிருக்கின்றாள். ஆகையால் இவள் யக்ஷ ஸ்திரீயோ? அசுர மாதோ? சந்தேகமாகவே யிராநின்றது. சகலமான ஆத் துமாக்களையும் மோகிப்பிக்கின்ற மன்மதனனவன் ஸ்ரீ ராமச்சந்திரன்மேல் அன்பினையுடைய பிராட்டியாரிடத்தில் அணுகுவானா? நாம் இப்பொழுது இவளை அந்த ஜானகியென்று நினைத்தது மகா பாதகம். உத்தமப் பெண்களுக் குரிய இலட்சணங்களும் இவளுக்குச் சிலவுண்டா யிருக்கிறதுகளானாலும், இவ ளுடைய தேகத்தில் தோற்றும்படியான அவலட்சணங்கள் இவள் சிலநாளைக் குள்ளே மகத்தான துன்பத்தை யடைவாளென்று சொல்லுகிறதுகள். தலை மயிர் அவிழ்ந்து சோர்ந்துவிழ வாய் வெருண்டு ஏதேதோ துர்வசனங்களைப் பிதற்றுவதினால் இவளுடைய நாயகனுக்கும் அவனாள்கின்ற இந்த நகரத்திற் கும் கேடு சமீபித்திருக்கிறதாய்க் காணப்படுகிறதென்று அறிந்துகொண்டு அந்த இடத்தைவிட்டு நீங்கி, மகம்மேரு பர்வதமானது வந்திருப்பதுபோல அதிக வுன்னதமாய் இருக்கிற ஒரு விசித்திரமான கிரகத்தில் இராவணனாலும் எடுக் கப்படாத வெள்ளி மலையையொத்த திரண்ட தோளினையுடைய இராமதூத ரானவர் போய்ப் பிரவேசித்தார். அம்மாத்திரத்தில் பூமியானது அதிர்ந்தது. பர்வதங்கள் அசைந்ததுகள். இராட்சதப் பெண்களுக்கெல்லாம் அவர்களுடைய இடையைப்போலே வலது பாரிசத்துப் புருவமும் கண்ணும் தோளும் துடித் ததுகள். திக்குகள் கம்பிதப்பட்டதுகள். மின்னலும் மேகமுமில்லாமல் ஆகா யத்திலே இடியோசை யுண்டாயிற்று. மங்களகரமாய் வைத்திருக்கிற பூரண கும்பங்களெல்லாம் வெடித்ததுகள். இப்படிப்பட்ட துர்நிமித்தங்களுண்டாகவே, ஆஞ்சநேயர் தம்முடைய அறிவைக்கொண்டு யோசித்துப் பார்த்து சீக்கிரத்தில் இந்த இலங்காபட்டணத்தின் சம்பத்துக்க ளெல்லாம் நாசமாய்ப் போய்விடு

மென்று நினைத்துச் சற்றே மனது கிலேசித்து, உடனே எந்தக் குலத்திலே தோன்றினவர்களாய் இருந்தாலும் எப்படிப்பட்ட தபோநிஷ்டர்களானாலும் சகலமானவர்களுக்கும் நல்வினையும் தீவினையும் சமமாகவே முடித்திருக்கின்றதுகளல்லவா? ஆகையினாலே ஊழ்வினையைப் பார்க்கிலும் வலிமையையுடையது வேறென்ன யிருக்கின்றதென்று தாம் நவவியாகரண பண்டிதராகையால் தமக்குள்ளே நிச்சயித்துக்கொண்டு, சேனசமுத்திரமானது புடைசூழ்ந்திராநின்ற அந்த மாளிகைக்குள்ளே பெரிய பாற்கடலில் அநேக அலைகளை வீசிக்கொண்டு ஒரு கருங் கடலானது கிடக்கிறதுபோலவும், இளஞ் சூரியர்கள் மலையின்மேலே உதயமானதுபோல இரத்தினமிழைத்த கிரீடங்களும் மற்றுமுள்ள பலவித பூஷணங்களும் இருளை நீக்கிப் பிரகாசிக்கும்படிக்கும், இரணியனைச் சங்காரித்த உக்கிர நரசிங்கமூர்த்தியானவர் அநேகமான தலைகளையும் தோள்களையும் பரப்பிக்கொண்டு படுத்திருக்கிறது போலவும் சயனித்துக்கொண்டு இருக்கிறவனும், ஆயிரம் தேவரம்பைகள் வரிசையாய் நின்று சாமரங்கள் போட, அவைகளிலுண்டான காற்றினுடனே கலந்துகொண்டு கற்பகப் புட்பத்தேன் துளிக்குந்தோறும் தன்னுடைய மேனியானது வெதும்ப, சீதாபிராட்டியை அடிக்கடி நினைத்து நினைத்துப் பெருமூச்செறிந்து தேய்கிறவனும் கைலாசத்தைக் குலுங்கச்செய்த தோளினுடைய பராக்கிரமத்திற்கும் அஞ்சாமல் மன்மதபாணங்கள் மார்பிலே உருவிப் பாய்ந்ததினால் உண்டான பச்சைப் புண்கள் அஷ்டதிக்கெஜங்களினுடைய கொம்புகள் தைத்த பழந் தழும்புகளின் மத்தியில் உதிரங் கசிந்துகொண்டிருக்க, காமாக்கினியை மூட்டுகின்ற துருத்தியைப்போல மந்தமாருதமானது தேகத்தில் பூசிய கலவைச் சந்தனத்தின்மேல் தவழ, ஜானகியின்மேல் மனது அந்தக்கரணங்களானவை சொல்ல, பாம்புகள் குடிபோன புற்றுப்போல பாழாயிருக்கிற இருதய ஸ்தானத்தை யுடையவனும், நினைத்தபோ தெல்லாம் திக்குகள் தோறுஞ் சென்று தேவர்களுடனே யுத்தஞ்செய்து அவர்களுடைய புகழாகிய அமிர்தத்தைக் கைகளினாலே வாரி உண்டபோது, அது தனக்குத் தெகிட்டித் தன்னுடைய கடைவாய்களின் வழியே ஒழுகியதுபோலத் தாவள்யமாய்ப் பிரகாசியாநின்ற கோரதந்தங்களை யுடையவனுமாயிருக்கின்றான். வெண்மையான மல்லிகைப் புஷ்பசயனமும் வெந்து பொடியாய்ப் புழுங்குகின்ற தன்னுடைய தேகத்தில் சமுத்திரத்தி லுண்டான நீர்க்குமிழிபோல வெயர்வு தோன்ற, பூமாலைகளில் மொய்த்திருக்கின்ற வண்டுகள் கரிய அந்த மாலைகளும் தீயும்படி பெருமூச்சு விடுகின்றவனும், ஸ்ரீராமருக்குச் சீதையினிடத்தில் எப்படி மனஞ் செல்லுகின்றதோ? அப்படியே அவளிடத்திலே தன்னுடைய நெஞ்சு செல்லும்படி பொய்யுறக்கங்கொண்டிருக்கிறவனும் ஜானகியின் மேலுண்டான ஆசையாகிய நீரைவார்த்து தன்னுடைய உயிரான பதார்த்தத்தைப் பெருமூச்சான அம்மியிலிட்டு அறைக்கிறவனும், இடைவிடாமல் சீதையை நினைத்துக் கொண்டிருப்பதனால் அவள் எதிர்ப்பட்டதுபோல உருக்காணும்போதெல்லாம் கலகலவென்று சிரிக்கிறவனும், விரகத்தினாலே சரீரம் நடுங்குகிறவனும், ஜானகியானவள் பள்ளியறைக்குள்ளே வந்து புகுந்தாளென்று மயிர்க்கூச்செறிகின்றவனும், சூரியனைப்போலே ஜொலிக்கின்ற நவரத்தின ஆரங்களானவை புரளத்தக்கதாய் திரிபுவனத்தையும் சிருஷ்டித்து இரட்சித்துச் சம்

மரிக்கிற பிர்மா விஷ்ணு உருத்திரனை மும்மூர்த்திகளினுடைய ஆயுதமும் இந்திரனுடைய வஜ்ஜிராயுதமும் பட்டு முனைமடிந்துபோம்படி அதிக பராக்கிரமத்தைப் பொருந்திய மார்பினை யுடையவனுமா யிருக்கின்றான். சத்துருக்களாகிய இராஜர்கள் தன்னுடைய கையிலே யேந்திய வீர வேலாயுதத்திற்குப் பயந்து நடுங்கி ஓடிவந்து வணங்கும்பொழுதெல்லாம் அவர்களுடைய கிரீடங்களானவை பட்டுத் தேய்ந்து தழும்பேறிய பாதத்தை யுடையவனுமான பிரதாபலங்கேஸ்வரனை ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் பூர்வம் கொண்ட வாமனரூபத்தைப் பார்க்கிலும் மிகவும் சிறிதான ரூபத்தையுடைய அனுமானவர் அந்த ராவணனுடைய பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் தெரியக்கண்ட மாத்திரத்தில் அவருடைய நெஞ்செரிந்தது. கண்கள் காலாக்கினியைப் போலே கோபாக்கினியைச் சொரிந்தனகள். அண்டமானது மேலுங்கீழும் வெடித்தது. அப்பொழுது அவர் லோகமாதாவை வஞ்சனைசெய்து கொண்டுவந்த இவன் மேல் இந்தக்கணமே எழும்பிக் குதித்து, இவனுடைய மணிமுடிகளைக் காலினல் எற்றி உடைத்தெறிந்து என்னுடைய பராக்கிரமத்தைக் காட்டாமல் போவேனேயாகில், நான் ஸ்ரீ ராமருக் கடிமையாக மாட்டேன். அந்த இராகவருக்கு ஆட்பட்டிருக்கிற தென்ன விளையாட்டுக்கா? என்னுடைய கண்ணினுற் கண்டும் இந்த ராக்ஷதனனவன் உயிரோடிருப்பானு? இவனுடைய இருபது தோள்களையு மடக்கி யடக்கிப் பிடித்து ஒடித்து, பத்துத் தலைகளையு மெட்டியுதைத்து நிலத்தில் உருட்டிக் கொன்று, இந்த இலங்கையும் ஒருமிக்க நிர்மூலமாகச் செய்கிறேன். அப்படிச் செய்தால் அப்பால் ஆவது ஆகட்டுமென்று நினைத்து, பற்களை நெறநெறவென்று கடித்து, இரண்டு கைகளையும் நெருப்புப் பொறி பறக்கப் பிசைந்துகொண்டே அதி யுக்கிரமாய் எழும்பினர். இவ்வித மாய்க் கொல்லும்படி கோபித் தெழும்பிய அனுமானவர் சற்று நின்று யோசித்து, இவ்வண்ணமாய்ச் செய்யும்படி சுவாமியானவர் நமக்கு ஆக்யாபிக்கவில்லையே. ஆகையால் ஒன்றைச்செய்ய எத்தனப்பட்டு வந்து வேறொன்றைச் செய்வ தறிவுடைமைக்கு யுக்தமானதல்ல. ஆலோசிக்குமிடத்தில், இது மிகவும் குற்றமுடையதாகுமென்று கோபம் தணிந்து நின்றார். இராவணனைக் கொல்லத் துணிந்த அனுமானவர் கொல்லாமல் விட்டுவிட்டதற்குக் காரணம் என்னவென்று பார்க்கும்பொழுது, ஆலகால விஷத்தை யுண்ட சிவனுக்கொப்பான மகா பலிஷ்டர்களாலும், உலகத்தையெல்லாம் முடிக்கத்தகுந்த உபாயம் தெரிந்திருந்தாலும், யோக்கியர்கள் இப்படிச் செய்தால் இப்படி முடியுமென்று முன்னே யோசியாமல் யாதொன்றையாவது செய்வார்களா? ஆகையால் காலம்பார்த்துக் கரைகடவாமல் இரானின்ற சமுத்திரத்தைப்போல அந்த ஆஞ்சநேயரும் அதிக்கிரமமிக்காமல் அடங்கியிருந்ததாய்க் காணப்படுகின்றது. பின்னும் அவர்தான் இன்றைய தினத்தில் கொடிய பலிஷ்டனை அரக்கனைப் போர்செய்து கொல்லுவேனேயானால், கோதண்ட தீட்சா குருவான ஸ்ரீ ராமச்சந்திரருடைய தேவியாரைச் சிறையிலே யிருக்கும்படியாய் வைத்த லோகக்கண்டனை இராவணனை ஒரு குரங்குவந்து கொன்றுபோய்விட்டதென்று உலகத்தார் எளிதாய்ச் சொல்லுவார்கள். அதனால் எம்பெருமானுடைய வில்வீரத்திற்கும் இகழ்ச்சியுண்டாகுமென்று எண்ணி உக்ரமானது தணிந்து, என்னுடைய தாயான சீதாபிராட்டியார் இவனுடனேகூடச் சயனிக்கும் மாதர்களைக்

குள்ளே சம்பந்தப்பட்டிருக்கவில்லை. இவனுடைய நிலைமையோ அற்பமான காமத்தினாலே மெலிந்து இருக்கின்றதாகக் காண்கிறது. இதனால் அந்தக் கருணை நிதியான ஜானகியார் கற்பழியாதிருக்கிறாரென்பது எனக்கு நிச்சயமாய்த் தோன்றுகிறதென்று குறித்துக்கொண்டு, இனி இவ்விடத்திலிருந்து சும்மா ஆலோசித்துக் காலதாமசம் செய்வதனால் யாதொரு பிரயோஜனமும் இல்லை யென்றுநினைத்து அந்த ராவணனுடைய அரண்மனையைவிட்டு அப்புறம்போய்த் தேடுவதற்கு வேறிட மில்லாமையால் அங்குநின்று, ஐயோ! இந்த நகரமுழுதும் தேடிப்பார்த்தாலும் சீதையைக் காணவில்லையே என்று மிகுந்த கிலேசத் துடனே பிரலாபிக்கத் தொடங்கினர்.

கவி

கொன்றாளே கற்பழியாக் குலமகளைக் கொடுந்தொழிலால்
தின்றாளே வப்புறத்தே செறித்தாளே சிறையறியேன்
ஒன்றானு முணர்கிலேன் மீண்டினிப்போ யென்னுரைக்கேன்
பொன்றாத பொழுதெனக்குக் கொடுத்தயரம் போகாதால்.

கண்டுவரு மென்றிருக்குங் காகுத்தன் கவிகுலக்கோன்
கொண்டுவரு மென்றிருக்கும் யானிழைத்த கோளிதுவால்
புண்டரிக நயனத்தான் பாலின்னம் போவேனே
விண்டவரோ டுடன்வீயா தியான்வாளா விளிவேனே.

கண்ணியநாள் கழிந்தளவாற் கண்டிலனெற் கனங்குழையை
விண்ணடைது மென்றுரை யாண்டிருத்தி விரைந்தயான்
எண்ணியது முடிக்கிலேன் யான்முடியா திருப்பேனே
புண்ணியமென் றொருபொருளென் னுழைநின்றும் போயதால்.

ஏழுநூ றோசனைசூழ்ந் தெயில்கிடந்த திவ்விலங்கை
வாழுமா மன்னுயிர்யான் காணுத மற்றில்லை
ஊழியான் பெருந்தேவி யொருவரையும் யான்காணேன்
ஆழிதா யிடராழி யிடையேவீழ்ந் தழிவேனே.

வல்லரக்கன் றனைப்பற்றி வாயாறு குருதியுகக்
கல்லரக்குங் காதலத்தாற் காட்டென்று காண்கேனே
எல்லரக்கு மயினுதிவே லிராவணனு மிவ்வூரும்
மெல்லரக்கி னுருக்கியுக வெந்தழலால் வேய்கேனே.

வானவரே முதலோரை வினவுவெனேல் வல்லரக்கன்
தானெருவ னுளனுக வுரைசெய்யுந் தருக்கிலரால்
ஏனையர்க ளெங்குரைப்பா ரெவ்வண்ணந் தெரிகேனே
ஊனழிய நீங்காத வுயிர்சுமந்த வுணர்வில்லேன்.

எருவைக்கு முதலாய சம்பாதி யிலங்கையிலத்
திருவைக்கண் டனனென்ற னவனுரையுஞ் சிதைத்தால்
கருவைக்கு நெடுங்கரைக் கடலிடையே கரையாதென்
உருவைக்கொண் டின்னமுமா னுளனெனி யுழல்கேனே.

வடித்தாய்பூங் குழலாளே வானறிய மண்ணறியப்
பிடித்தானிவ் வடலரக்க னெனுமாற்றம் பிழையாதால்
ஏடுத்தாழி யிலங்கைதனே யிரிங்கடலி னிட்டிவனே
முடித்தாலே யான்முடிதன் முறைமன்ற வென்றுணர்வான்.

கற்பழியாத மகா பதிவிரதையான லோகமாதாவை இந்தப் பாவி கொன்றுவிட்டானே? அல்லது கொடிய செய்கையையுடையவனுகையால் தின்று விட்டானே? மற்றெந்த லோகத்திலாயினும் வைத்திருக்கின்றனே? அவன் சிறைவைத்த இடத்தை நான் ஒரு விதத்திலானலும் அறியேன். இவ்விடத் திலேயிருந்து இனித் திரும்பிப்போய் என்ன சொல்லப்போகிறேன்? இவ் வகைப்பட்ட துயரமானது இறந்தாலல்லாமல் என்னை விட்டு நீங்கமாட்டாது. ஸ்ரீ ராமர் அநுமானனவன் சீதையைக் கண்டு வருவானென்று எண்ணியிருப் பார். சுக்கிரீவ மகாராஜாவானவர் அவசியம் கொண்டுவருவானென்று நினைத் திருப்பார். நான் வந்து சாதித்த காரியம் இதுதான். இவ்வளவு செய்யமாட் டாத நான் வெட்கமில்லாமல் புண்டரீகாட்சனன ஸ்ரீ ராமச்சந்திரனிடத்திற்கு இனிப் பிராணனுடனே போவேனே? இந்தச் சத்துருக்களை யுத்தஞ்செய்து எப்படியும் கொன்று இவர்களுடனே கூட யிறப்பேனேயல்லாமல், நான்மாத் திரம் தனியே யிறப்பேனே? நம்முடைய மகாராஜா குறித்த தவணைநாள் கழிந்து போய்விட்டது. இன்னமும் எம்பெருமாட்டியான சீதையைக் காண வில்லை. ஆகையால் நாமெல்லாம் மாண்டுபோவோமென்று சொல்லித் துக் கித்த அங்கதன் ஜாம்புவந்தர் முதலான வானர வீரர்களுக்குத் தைரியஞ் சொல்லி இறக்கவேண்டியதில்லையென்று மகேந்திரகிரி பர்வதத்திலே நிறுத்தி விட்டு, நான் சம்பாதி சொன்ன பிரகாரம் இலங்கையிற்போய்ச் சீக்கிரத்திலே தேடிப் பார்த்து வருகிறேனென்று வந்தேனே. அப்படிவந்த நான் எண் ணிய காரியத்தை முடிக்கவில்லையே. ஆகையால் இறவாமல் இருப்பேனே? புண்ணியமென்று சொல்லப்பட்ட ஒரு பொருளானது என்னிடத்தை விட்டு நீங்கிப்போனதுபோலே காண்கிறது. எழுநூறு யோசனை விஸ்தீரணமான இந்த இலங்காபுரியிலே யிராணின்ற ஜீவகோடிகளுக்குள்ளே நான் காணுதது வேறொன்றில்லை. சகல புவனகர்த்தாவான ஸ்ரீ ராமபிரானுடைய தேவியார் ஒருவர் மாத்திரமே பார்க்கக் கிடைக்கவில்லை. மகா சமுத்திரத்தைக் கடந்தும் இப்போது துக்க சமுத்திரத்திலே விழுந்தழிவேனே? இந்தத் தோஷியான இராட்சதனைப் பிடித்திழுத்து வாயின் வழியே குபீர் குபீரென்று இரத்தம் கொப்பளிக்க பர்வதத்தை தும்சஞ் செய்யானின்ற என்னுடைய கையினற் சுத்திச் சீதையைக் காட்டடாவென்று சொல்லி அவன் காண்பிக்க நான் கண்டு கொள்வேனே? அல்லது இந்த இராவணனும் இந்த ஊரும் அரக்கைப்போல உருகிக் கருகிப்போம்படி, நெருப்பிட்டுக் கொளுத்துவேனே? அப்படிச் செய் யாமல் தேவர்கள் முதலானவர்களை அவன் ஜானகியை எவ்விடத்தில் சிறை வைத்திருக்கிறனென்று கேட்பேனேயானல் அவர்கள் அவனுக்குப் பயந்து வாய்விட்டுச் சொல்லமாட்டார்கள். அப்படியானல் மற்றவர்களைப்படிச் சொல் லுவார்கள்? நான் எவ்விதத்தில் அறிந்துகொள்ளுவேன்? இன்னமும் பிராண னைவிடத் துணியாமல் பூமிக்குச் சுமையாக இந்தச் சரீரத்தைச் சுமந்துகொண்

டிருக்கிற அறிவில்லாத நான், முன்பு கழுகுகளுக்கு ராஜாவான சம்பாதி யானவர் அந்த இராமபத்தினியை இராவணன் கொண்டுபோய் இலங்கையிலே சிறைவைக்கக் கண்டேனென்று சொன்னாரே! அவருடைய சொல்லும் பொய்த் துப்போய் விட்டதல்லவோ? இந்த இலங்கா தீபத்தை யெடுத்துச் சமுத்திரத்தி லிட்டுக் கரைத்து விடாமல் தேகத்தை வைத்துக்கொண்ட அநுமான் இன்னம் உயிரோடிருக்கிறே னென்று சொல்லும்படி உழல்வேனே! சுவர்க்கத்தாரும் பூலோகத்தாரும் அறியும்படி இராட்சதப் படுபாவியானவன் ஜானகியை எடுத் துக்கொண்டு வந்துவிட்டானென்னும் நிந்தனையானது தப்பாது. ஆகையால் இந்தப் பட்டணத்தை எடுத்துக் கடலிலே விட்டெறிந்து அவனையுங் கொன்று, அதன் பின்பு நானிறக்கிறதே உத்தமமாகுமென்று நினைத்து, மறுபடியும் எள்ளிலும் அதிலும் சிறிதாகிய அணுவிலும் அணுவுக்கணுவிலும் நீங்காமல் எங்கும் வியாபகமாய் இருப்பதுமன்றித் தம்முடைய இருதயத்திலும் இருக்கின்ற பரப்பிரம்மமான ஸ்ரீ ராமனைப்போல எங்கும் போய்ப் பார்த்து, அப்பால் ஒரு பக்கத்திலே இனிப்பாகிய தேனையுண்டு வண்டுகள் ரீங்காரஞ் செய்கின்ற ஒரு திவ்வியமாகிய பூஞ்சோலையைக் கண்டார்.

—ார்தேடு படலம் - முற்றிற்று.

ாட்சிப் படலம்

கண்டு, இந்தச் சோலையிடத்தில் போய்த் தேடி பார்ப்பேனேயாகில் என் னுடைய துக்கம் நிவாரணமாகும். இதற்குள்ளுங் காணுமற் போனால் அப்புறம் நினைக்கவேண்டியது ஒன்றுமில்லை. உடனே இந்த லங்கையையும் நாசமாக்கி நானும் சித்தமாய் மாண்டு போவேனென்று நிச்சயித்துக்கொண்டு இராம தூதரானவர் அந்தச் சோலைக்குள்ளே போனார். அப்பொழுது அவர்மேல் தேவர்கள் கூடிப் புஷ்பவருஷம் வருஷித்தவர்களாய் ஸ்தோத்திரஞ் செய்து ஆனந்தப்பட்டார்கள். அவர் சரித்திரம் அப்படி யிருக்க, முன்பு இராவணன் எடுத்து வந்து அசோக வனத்திலே சிறைவைத்த சீதா பிராட்டியானவர் எப் படி யிருந்தாரென்றால் கடூரமாகிய இராட்சதிகள் அநேகர் தன்னை நெருக்க அந்தச்சோலையில் ஒரு சஞ்சீவி மருந்து மலையினிடத்திலே முளைத்து ஒருநாளும் மழையென்பதைக் காணுமல் உலர்ந்திருக்கிறதுபோலச் சரீர மெலிந்து, நித் திரை வந்ததென்று கண்களை மூடுதலும் இமைத்தலு மில்லாமல் வெளியில் ஏற் றிய விளக்கைப் போலத் தேகத்தின் ஒளி மழுங்கி ஒரு பெண்மான் புலிக் கூட்டத்தின் நடுவில் அகப்பட்டுக் கொண்டதுபோல விம்மி வெதும்பிப் பயந்து ஏங்கி இரங்கி, ஸ்ரீ ராமனை நினைத்துத் தொழுது சோர்ந்து நடுங்கித் துக்கித்துப் பெருமூச்சுவிட்டு அழுது கொண்டிருக்கிறதே யல்லாமல் வேறொன்று மறியாள். தன் கண் மழைக்கண்ணென்கிற காரணத்திற்கு ஒத்தவாறு சதாகாலமும் இரண்டு நேத்திரங்களினு மிருந்து மேகதாரைப்போல ஒழுகாநின்ற ஜல மானது பொன்னிறத்தையுடைய மலைகளில் ஒழுகுகின்ற அருவியைப்போல ஸ்தனபாரத்தின் வழியே ஆரூர்ப்பெருகி ஓடும்படி, நீருண்ட மேகத்தைக் கண்

டாலும் கருமையாகிய வஸ்துக்களில் யாதொன்றைக் கண்டாலும் வேதநாயக னாகிய ஸ்ரீ ராமனுடைய திருவுருவத்தை நினைத்துக்கொண்டு புலம்பி உலகத்தில் அன்பினையுடைய நாயகன் நாயகிமார்களுக்குள் ஒருவரை யொருவர் பிரிவதனு லுண்டாகிய துன்பமே உருவுகொண்டதுபோல மிகுந்த வியாகுலத்தை யடை வாள். செம்பவளத்தைப்போலச் சிவந்த திருக்கரத்தையும் திருவடிகளையும் நீலமேகத்திற்கு ஒப்பாகிய திருமேனியையுமுடைய ஸ்ரீ ராமச்சந்திரனை நினைக் குந்தோறும், கண்கள் பொழிகின்ற நீரினுல் சற்று நனைக்கின்றதும், சரீரத் தின் வெப்பத்தினுல் சற்று உலர்ந்திருக்கின்றதுமாகிய வஸ்திரத்தை யுடையவ ளாய், பிரமதேவன் விதித்த விதியைக் கடந்து போவதோ பிரயாசையென்று நினைப்பாள். சூரிய வமிசத்திற்கு உரிய பெருமையையும் அதற்குத் தன்னுல் சம்பவித்த பழியையும் பகுத்தறிந்து, நம்முடைய நாயகராகிய சுவாமியானவர் வருவார் வருவாரென்கின்ற நிச்சயத்தினுல் திசைகளையெல்லாம் ஊடுருவப் பார்ப்பாள். பூமியினிடத்திலிருக்கின்ற ஒரு பூரணச் சந்திரனை முழுமையும் விழுங்கிக் கக்குகின்ற கரும்பாம்புபோலத் தன் முகத்தின் இருபக்கத்தையும் தழுவி ஒன்றுகத்திரண்டு ஜடைபற்றிய கூந்தலோடிருந்து, தான் முன்பு உடுத்த புகைபோல மெல்லிதாகிய ஒரு வஸ்திரமேயல்லது வேறொரு வஸ்திரத்தைக் கண்ணினாலும் பார்க்கமாட்டாள். திருப்பாற்கடலில் தோன்றிய தேவாமிர்தத் தினுல் மன்மதனனைவன் செய்த சித்திரப்பிரதிமையானது புகை சூழப்பட்டிருப் பதுபோல நீராடாமல் மாசுபடிந்திருக்கின்ற மேனியை யுடையவளாகி, இளைய பெருமாளானவர் மானின் பின்னே போகிற சுவாமியைக் காணப்போனாரே அவர் கண்டாரோ? காணவில்லையோ? கண்டாலும் இந்த லங்கை சமுத்திரத் தின் மத்தியி லிருக்கின்றதையும், ராவணன் என்னை யெடுத்துக்கொண்டு வந்து விட்டதையும், ஸ்ரீ ராம லட்சுமணர்கள் அறியார்களபோ லிருக்கின்றதென்று, மனங்குழைந்து புண்ணுகி, அப்புண்ணி னிடத்தில் அனல் நுழைந்ததுபோலப் புகை யெழும்பும்படி பெருமூச்செறிவாள். என்னை இந்த ராட்சதன் எடுத்து வரும்போது பார்த்த ஜடாயுவும் இறந்துபோனர். மற்றவர்கள் என் பிராண நாயகருகு எப்படி என்னிலைமையை அறியப் படுத்துவார்கள். இந்த ஜென் மத்திலே ஸ்ரீ ரகுநாயகனுடைய திருமுகத்தை நான் காணக்கிடைக்கிறதோ அருமையாயிருக்கின்றதே யென்று எண்ணிப் பிரலாபிப்பாள். உடனே சித்தங் கலங்குவாள். மேன்மேலும் கிலேசிப்பாள். தம்முடைய தம்பியாகிய இளை யாழ்வானை மதியாமல் மகாபாவியாகிய நான் சொன்ன வார்த்தையைக் கேள் விப்பட்டு இவள் சிறிதாவது புத்தியில்லாதவளா யிருக்கின்றுளென்று மனம் வெறுத்து என் நாயகர் என்னை நீக்கிவிட்டாரோ? அல்லது பூர்வஜென்மத்தில் செய்த கர்மத்தினுலேதான் இப்படி வந்து நேர்ந்ததோ? என்று ஓயாமல் அடிக்கடி சொல்வதனுல் வாய் உலர்ந்து, அறிவு சோர்ந்து, உயிர் பதைப்பாள். சுவாமியானவர் ஸ்நானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அமுது செய்யும் போது அவருக்குக் காய் கனி கிழங்கு முதலானதுகளை யார் பரிமாறுவார் களோ வென்றும், அவரிருக்குமிடத்தில் யாராவது விருந்து வந்தபோது, தமது அடியாளாகிய என்னை நினைப்பாரோவென்றும் கூறி அங்ஙனே சோகிப்பாள். தானிருந்த யிடத்தில் தன்னைச் செல்லெரித்தபோதும் அந்த இடத்தைவிட்டு எழுந்திராதவளாகிய நான் அடைந்த மனைவியாதிக்கு ஒரு மருந்தும் வுண்டோ

வென்று சொல்லித் திகைப்பாள். கொடிய வஞ்சனையுடைய இராட்சதர்கள் இத்தனை நாள்வரைக்கும் சீதையை சும்மாவைக்கமாட்டார்கள்; தின்றுவிடுவார்கள். ஆகையால் நாம் செய்யத்தக்கது இனி யொன்றுமில்லை என்று தேடாமல் விட்டுவிட்டாரோ? தம்முடைய வம்சத்தாருக்குச் சுபாவமாயிருக்கின்ற சாதுகுணத்தையெல்லாம் தம்முடையதாக வகித்துக்கொண்டு, இந்த ராவணனுடனே எதிர்த்து யுத்தஞ் செய்கிறதில் என்ன காரியமென்று கோபத்தைத் தணித்துக் கொண்டிருக்கிறாரோ? நான் ஏதென்று நினைப்பேன்? என்று இராத்திரி யென்பதும் பகலென்பது மில்லாமல் நிரந்தரம் இவ்வண்ணமாகக் கவலைப்படுவாள். பெற்ற தாய்மார்களும் தம்பிமார்களும் மறுபடியும் வந்து சுவாமியை அயோத்திக்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டார்களோ? அவர்கள் அழைத்த போதும் சிறிய தாயார் குறித்துச் சொன்ன பதினான்கு வருஷ காலமும் ஆரணியவாசஞ் செய்து போவாரே யல்லாமல், அதற்குமுன் போகமாட்டாரே. பின்னை யென்ன சம்பவித்ததோவென்று ஒருவரும் படாத நோய்படுவாள். பஞ்சவடியில் யுத்தஞ் செய்த கரன் முதலானவர்களைப்போல இப்போதும் ராட்சதர்கள் யுத்தஞ் செய்யும்படி நேர்ந்ததோவென்று வருந்துவாள். பின்னும் தான் லோகமாதாவாகையால் அந்தக் கரன் முதலானவர்கள் சக்கரவர்த்தித் திருமகனுடனே எதிர்த்து இறந்ததைக் குறித்து முன்பு விசனப்பட்டதுபோல, இப்போதும் சுவாமியுடனே எதிர்த்த இராட்சதர்களும் அப்படியே இறப்பார்களே யென்று மிகவும் துயரப்படுவாள். கைகேசியார் இராமபத்திரனை நோக்கி இராஜ்ஜியமோ பரதனுக்கு உரியதாய்விட்டது. இனியுனக்கு யாதொரு சம்பந்தமுமில்லையென்று சொன்னபொழுது எள்ளளவாவது வாடாமல் முன்னிலும் மூன்றுபங்கு விசேஷமாய்ப் பிரகாசித்த முகாரவிந்தத்தையுடைய சுவாமியின் சாந்த குணத்தையே தியானஞ் செய்வாள். இராஜ்ஜிய சாம்பிராச்சியத்தை நீ பெற்றுக்கொள்ளென்று தசரத மகாராஜன் சொன்னபொழுதும், இந்தச் சம்பத்தையெல்லாம் விட்டு நீ வனத்திற்குப் போவென்று சிறியதாயார் சொன்னபொழுதும், சித்திரத்திலெழுதிய மலர்ந்த செந்தாமரைப் புஷ்பத்திற்குச் சமானமாயிருந்த லோகாராட்டியனுடைய திருமுக தேஜசை மனதில் நினைப்பாள். கங்கையை அணிந்த ஜடாமகுடத்தையுடைய சிவனுடைய வில்லை மிதிலையில் க்ஷணமாத்திரத்தில் இரண்டு துண்டாய் இற்று விழும்படி செய்த புஜபலபராக்கிரமத்தை எண்ணி மெலிவாள். கரதூஷணதியர்களுடனே வந்த பதினாலாயிரம் ராக்ஷதப்படையை மூன்று நாழிகைக்குள்ளே இறக்கும்படி செய்த வீரகோதண்டத்தின் பிரதாபத்தைக் குறித்து ஸ்துதிசெய்து சரீரம் வெதும்புவாள். கங்கா நதியிலே ஓடம்விட்ட எளியவனாகிய குகனென்னும் வேடனைப் பார்த்து, என் தம்பி, உன் தம்பி, எனக்கு நீ தோழன்; உனக்கு இந்தச் சீதை மைத்துனி; என்று சுவாமி சொல்லிய அந்நியோன்னியமாகிய சிநேகச் செய்தியை நினைத்து மதிமயங்குவாள். கல்யாணம் நடந்த சமயத்தில் தன் பிதாவாகிய ஜனகமகாராஜா கைகளை நீட்டிப் பாதபூஜைசெய்ய எத்தனப் பட்டபோது, சுவாமியானவர் அதை நீக்கித் தர்ப்பையை மேடைமேல் வைத்துப் பூஜிக்கச்செய்த வைதிக நியமத்தை எண்ணுவாள். பரதனவன் மணிமுடி தரியாமல் ஜடைமுடி தரித்துக்கொண்டு வந்ததைக் குறித்துச் சித்திரகூட பர்வதத்தில் ரகுநாயகர் அங்கலாய்த்ததை நினைத்து இரக்கப்படுவாள். சகல சம்பத்

தையுந் துறந்து வனத்திற்கு வருகிற காலத்தில் ஒரு வைதிக பிராமணன் வந்து கோதானம் கேட்க, அவனுக்கு அநேகம் பசுக்களைத் தானஞ்செய்தும் திருப்தியடையாத அவனுடைய பேராசையைக் கண்டு சுவாமி சிரித்ததை நினைந்தழுவாள். இராஜாக்களை இருபத்தொரு தலைமுறை வரைக்கும் கருவறுத்து அவர்களுடைய ரத்த ஜலத்திலே மூழ்கி ஸ்நானஞ்செய்து அதைக் கையினால் அள்ளிப் பிதுர் தர்ப்பணஞ் செய்த மழுவாயுதத்தையுடைய பரசுராமர் கொடுத்த வில்லை வாங்கி வளைத்து, அதன் வழியாக அவருடைய தவத்தையும் பலத்தையும் கிரகித்துக்கொண்ட அதிவீரத்தை எண்ணி உயிர் வாடுவாள். இந்திரகுமாரனவன் காக்கை வடிவங்கொண்டு வந்து அபசாரப்பட, அந்தக் காகாசுரன்மேல் ஒரே பாணத்தைப் பிரயோகிக்க, அது அவனுடைய ஒரு கண்ணைப் போக்கடித்தகாள் முதல் உலகத்திலுள்ள மற்றக் காக்கைக் கூட்டங்களுக்கெல்லாம் ஒரு கண்ணில்லாமல் போம்படிச் செய்த பிரதாபத்தை விசேஷமாய் நினைப்பாள். விராதனென்னும் ராட்சதன் தன்னை யெடுத்துக்கொண்டு போனபோது அவனைச் சங்கரித்து, அவனுடைய ஒழிக்கப்படாத சாபத்தையும் ஒழித்து ஆட்கொண்டருளிய கிருபையை நினைத்து நினைத்துத் தன்னுயிர் சோர்ந்து அறிவழிந்து சரீரம் நடுங்குவாள். இந்தப் பிரகாரம் துயரப்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்தப் பிராட்டியாருடைய பக்கத்தில் சமீபமாயிருக்கின்ற விபீஷணருடைய குமாரத்தியும், திரிசடை யென்னும் பெயரினை யுடையவரும், பிராட்டியார் விஷயத்தில் மிகுந்த அன்புண்டானவளும், மேலும் திருந்திய இனிய வார்த்தையையுடையவளுமாகிய அவள் அந்நேரம் நித்திரை செய்திருந்தாள். மற்றக் கொடிய செய்கையையுடைய ராட்சசிகளும் கள்ளுண்ட மயக்கத்தினாலே அந்த அர்த்த ராத்திரியில் உறங்கினார்கள். அப்பொழுது ஜானகியானவள் சாட்சாத் தாயைப் பார்க்கிலும் அதிக வாத்சல்யத்தையுடைய அந்தத் திரிசடை யென்பவளை எழுப்பி, ஓ எனக்கு மாசில்லாத குணத்தினையுடைய சகோதரியைப்போலு மிருக்கின்ற திரிசடையே! இன்றையத் தினம் எனக்கு நன்மையே விளையுமோ? அல்லது நான் செய்த பாவத்தினாலே இன்னமுந் தீமையே விளையுமோ? ஒன்றும் தெரியவில்லை. புருவமுங் கண்ணும் வலது பக்கம் துடித்துக்கொண் டிருந்ததுபோய், இப்போது இடதுபக்கம் துடிக்கின்றது, விஸ்வாமித்திரர் பின்னே சுவாமி மிதிலைக்கு வந்தபோது இப்படிதான் இடது கண்ணும் புருவமும் துடித்தது கள். அம்மா! இன்னுமொன்று சொல்ல மறந்தேன். என் பிராண நாயகர் இராஜ்ஜியத்தைத் தம்பிக்குக் கொடுத்துவிட்டு ஆரணியத்திற்குப் புறப்படுகிறபொழுது வலதுபக்கந் துடித்தது. இந்தப்பாவி என்னை எடுக்கவந்த நாளிலும் அப்படியே வலந் துடித்தது. இப்பொழுது உண்டாகிய தைப்பார்த்தால் நன்மை போலவே காண்கின்றது. இதுவரைக்கும் என்னைப் பயப்படாதே யென்று சொல்லிக்கொண்டு வந்தையே; இந்தச் சகுனம் ஏதாய் முடியுமோ? சொல்லென்று சீதாபிராட்டியார் கேட்க, திரிசடையானவள், ஓ அம்மா! இந்த மங்களக்குறி நன்றாயிருக்கின்றது; நன்றாயிருக்கின்றதென்று அன்புடனே சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றாள்: ஓ என் தாயாகிய ஜானகியாரே! நீர் எப்படியும் உம்முடைய நாயகனைச் சேருவீர். இதற்குச் சந்தேகமே யில்லை. அல்லாமலும் உமது திருமேனி பசந்து புளகிக்கவும், திருவுள்ளங் குளிரவும், திருச்செவியில் இப்பொழுது தேனை உண்டு

களித்து ஒரு பொன்வண்டு வந்து மிருதுவாய் ரீங்காரஞ் செய்து போயிற்று. அதை ஆராய்ந்து பார்த்தால், உம்முடைய பிராணபதமா யிருக்கின்ற நாயக ராகிய ஸ்ரீ ராமர் அனுப்புவித்த ஒரு தூதனே உமக்கு எதிரேவரக் காண்பீர். மேலும் பாதகர்களாகிய ராட்சதர்களுக்கு ஆபத்து வருவது சத்தியம். இன்ன மும் என் வாய்மொழியைக் கேளுமென்று திரிசடை சொல்லுகின்றாள். நீர் நித்திரை செய்யாததினால் கனவு காணவில்லை. நான் கண்ட கனவைச் சொல்லு கிறேன் கேளும். என் கனவு அவசியந் தவறாமல் பலிதமாகும். எங்கள் பெரிய தகப்பனாகிய இராவணன் பத்துத் தலைகளிலேயும் எண்ணெயிட்டுக்கொண்டு. கழுதைகளையும் பேய்களையுங் கட்டிய தேரின்மேலேறிச் சிவந்த வஸ்திரம் தரித் துக்கொண்டு தென் முகமாய்ப் போனான். கூட அவன் பிள்ளைகளும், பந்து ஜனங்களும், மற்றும் சகலமானவர்களும், அந்தத் தெற்குத்திசையை நோக் கிப் போனார்கள். அவர்களெல்லாம் திரும்பி வரவில்லை. அதுவுமல்லாமல் ராவணனுடைய ஓமாக்கினியும் அணைந்து போய் விட்டது. வானத்திலிருந்து வெள்ளிடி யிடித்து விழுந்தது. மாளிகைகள் அங்கங்கே வெடித்ததுகள். மத யானைகளுக்கு மதம் வற்றிப்போய் பெண் யானைகளுக்கு மதமுண்டாயிற்று. பேரிகைகளெல்லாம் முழங்குகிறவர்களில்லாமல் இடிபோலத் தாமே முழங்கியது கள். நட்சத்திரங்கள் துதிர்ந்ததுகள். பகலென்பதில்லாமல் ராத்திரியே நிலைபெற் றிருந்தது. இராட்சதர்கள் மார்பில் தரித்திருக்கின்ற கற்பகப் பூமாலைகளெல் லாம் தீய்ந்து புலால் நாற்றம் வீசிக்கொண்டிருந்ததுகள். இந்த லங்கையும் இதைச் சூழ்ந்த மதிலும் சுழன்றதுகள். திக்குகளெல்லாம் நெருப்புப் பற்றிக் கொண் டெரிந்ததுகள். சிங்காரத் தோட்டங்களும் பூஞ்சோலைகளும் கரிந்தது கள். பட்டணமுழுமையும் வெறுவெளியாய் விட்டது. மங்கள கலசங்களெல்லாம் விரிந்து சிதறியதுகள். விளக்குகளை யெல்லாம் இருள் விழுங்கியது. தோரண கம்பங்கள் இரண்டு துண்டாய் முறிந்ததுகள். பட்டத்துயானையின் கொம்பு முறிந் தது. வேதமந்திரங்களைச் சொல்லி ரிஷீஸ்வரர்களால் ஸ்தாபிக்கப்பட்ட பூரண கும்பங்களிலிருக்கின்ற தீர்த்தமானது கள்ளு பொங்குகிறதுபோலப் பொங்கியது. சந்திரனைப் பிளந்துகொண்டு நட்சத்திரம் புறப்பட்டது. தண்டு - சூலம் - வாள் - வில் முதலாகிய ஆயுதங்களெல்லாம் வீரர்கள் கையிலெடுத்து யுத்தஞ் செய்யா மல் தமக்குத் தாமே ஒன்றுக்கொன்று யுத்தஞ் செய்ததுகள். இந்தப் பட்ட ணத்து ஸ்திரீகளுடைய தாலிகள் ஒருவரால் வாங்கப்படாமல் தாமே அற்று, அவரவர்கள் ஸ்தனங்களின்மேல் விழுந்ததுகள். இன்னமொரு அதிசயஞ் சொல்லுகிறேன் கேளும்: இந்தப் பட்டணத்து இராஜாவின் பெண்சாதியும் மயன் மகளுமாகிய மண்டோதரியின் கூந்தல் பின்புறத்தில் அவிழ்ந்து விழுந்தது. அதன்மேல் அக்கினிபட்டு வெந்தது. இது அவளுக்குத் துயரம் வந்து சம்பவிக்கு மென்பதற்கு ஏதுவல்லவா? மற்றும் நான் கண்ட விபரீத மான கனாக்களை என்ன சொல்வேன்? அதிக பலமுள்ள இரண்டு சிங்கம் புலிக்கூட்டங்களைக் கண்டு அதுகளுடனே கூடிக்கொண்டு வந்து, அள விறந்த யானைக ளிருக்கின்ற ஆரணியத்தில் புகுந்து முழுதும் வளைத் துக்கொண்டு நெருங்கிப் போர்செய்து சின்னபின்னங்களாகக் கொன்று, அந்த யானைப் பிணங்களை மலைமலையாகக் குவித்துத் திரும்பிப் போம் பொழுது ஒரு மயிலையுங் கூட்டிக் கொண்டு போனதுகள். உன்னைப்

போலவே ஒரு ஸ்திரீ சொர்னத் தாம்பாளத்திலே ஆயிரம் திருவிளக்கினை யுடைய ஒரு தேர்விளக்கை யேற்றி வைத்து அதை ஏந்திக்கொண்டு, இராவ ணன் வீட்டிலிருந்து புறப்பட்டு என் பிதாவாகிய விபீஷணன் வீட்டிலே வந்து புகுந்தாள். இவ்விதமாக சொற்பனம் கண்டுகொண்டே யிருக்கும்போதுதான் என்னை நீர் எழுப்பினீர். மேலும் என்னென்ன காணுமோ முடியக் காண வில்லையென்று சொன்னாள். அதுகேட்டு அம்மையானவள் திரிசடைக்குக் கைகூப்பி வந்தனஞ் செய்து, அம்மா! அந்தச் சொற்பனத்தின் குறையை இன்னமும் அறியவேணும்; நீ சீக்கிரமாய் நித்திரை செய்யென்று சொன்னாள். அப்படியிருக்கின்ற சமயத்தில், ஸ்ரீராம தூதராகிய அநுமானவர் அந்தச் சோலையில் பிராட்டியார் எழுந்தருளியிருக்கிறதைக் கண்டார். அத்தருணத் தில் முன்பு உறங்கிக்கிடந்த இராட்சதிகளெல்லாம் விழித்துக்கொண்டு, கெட்ட நித்திரை வந்து நம்மைக் கெடுத்ததென்று எவ்விடங்களிலும் இருந்து எழுந்து அதட்டி, வேல் - மழு - எழு - சூலம் முதலாகிய ஆயுதங்களைக் கையிலெடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்களென்றால், வயிற்றிலே வாயிருக்கின்றவர்களும், நெற்றியில் கண்ணிருக்கின்றவர்களும், கடூரதிருஷ்டி யுடையவர்களும், பல்லுக்குப் பல்நடுவே யாளிகள் - யானைகள் - பேய்கள் முத லானதுகளும் உறங்கும்படி மலைக்குகைக்கு ஒப்பாகிய வாயுண்டானவர்களும், பத்துக் கையும் ஒரு தலையு முடையவர்களும், அதிக பயங்கரமாகிய ரூபத்தை யுடையவர்களும், விகடமாகிய வேஷத்தை யுடையவர்களும், உடம்பெல்லாம் பர்வ தங்கள்போலப் பருத்த பலபல ஸ்தனங்கள் தொங்குகின்றவர்களும், ஒற்றை ஸ்தனத்தை யுடையவர்களும், சூலம் - வாள் - சக்கரம் - அங்குசம் - தோமரம் - கப்பணம் - வேல் முதலாகிய ஆயுதங்களைக் கையில் தரித்துக்கொண் டிருக்கின் றவர்களும், காலகூட விஷமே வடிவுகொண்டது போலக் கருத்திருக்கின்றவர் களும், எமனும் பிரமிக்கத்தக்க பராக்கிரமமு முள்ளவர்களும், யானைமுகம் - குதிரைமுகம் - புலிமுகம் - கரடிமுகம் - யாளிமுகம் - பேய்முகம் - சிங்கமுகம் - நரி முகம் - நாய்முகங்க ளுண்டானவர்களும், முதுகிலே முக மிருக்கின்றவர்களும், மூன்று கண்ணுள்ளவர்களும், வாயிலே புகை யெழும்புகின்றவர்களும், எண் ணுக்கடங்காத கூட்டத்தை யுடையவர்களும், கண்ணுக்கடங்காத தோற்றத்தை யுடையவர்களும், காலனானவன் பல உருவங்கொண்டு பெண்ணென்று பெயர் வைத்துக்கொண்டு திரிகிறதுபோ லிருக்கின்றவர்களுமாகிய அந்த ராட்சத ஸ்திரீகளெல்லாம் எழுந்துவந்து ஸ்ரீ ராமருடைய திருத்தேவியாரைச் சுற்றிக் கொண்டார்கள். அப்போது அந்த ஜானகியானவள் ஒன்றும் பேசாமல் அவர்கள் முகத்தைப் பார்த்துப் பயந்தவளாயிருக்க, ஸ்ரீ ராம தூதராகிய ஆஞ்சநேயர் ஒரு விருக்ஷத்தின்மேலேறி அதன் கிளையில் மறைவாயிருந்து பார்க்கத் தலைப்பட்டார். இராக்ஷத ஸ்திரீகள் கையிலே ஆயுதம் பிடித்தவர் களாய் நித்திரை நீங்கிப் பலபேர் கூடியிருக்கின்றார்கள். இவர்களிப்படி கூடி யிருப்பதற்கு ஏதுவென்னவென்று உற்றுப்பார்த்தால், கறுத்த மேகக் கூட்டத் தின் மத்தியில் பிரகாசிக்கின்ற மின்னற்கொடிபோல கரிய நிறத்தையுடைய அந்த ராக்ஷதிகளின் நடுவில் ஊழிமுதல்வனாகிய ரகுநாயகனுடைய தேவியா ரைக் கண்டு அரக்கிமார்கள் சுற்றிலுங் காவலாயிருக்க அவர்களுக்கு மத்தியில் இருக்கின்றவள்தான் சீதாபிராட்டியார்போலக் காண்கிறது. இவளோ தடா

கத்தின் நடுவிலிருக்கின்ற அன்னப்பேடுபோலத் தமது கண்ணினின்றும் ஒழுகுகின்ற ஜலப்பிரவாகத்தின் மத்தியிலிருக்கின்றாள். இந்தத் தேவியாரைத் தேடிவந்த நான் இப்பொழுதுதான் கண்டேன். ஆகையால் மூன்பு தர்மம் பொய்த்துப் போய்விட்டதென்று நினைத்தேனே, அது அப்படியாகவில்லை. நானும் இனி இரக்கமாட்டேனென்று சொல்லி ஆனந்தமாகிய தேனையுண்டு சரீரஸ்மரணை தெரியாமல், ஸ்ரீ ராம நாமசங்கீர்த்தனம் பாடிக்கொண்டு கூத்தாடினர். அங்கும் இங்குமாய் ஓடினர். எங்கும் உலாவினர். இகழப்படாத இவருடைய திவ்வியரூப சவுந்தரிய லட்சணங்கள், எங்கள் ஐயனாகிய ஸ்ரீ ராமச்சந்திரன் சொன்ன அடையாளத்திற்குச் சிறிதாவது வித்தியாசப்பட்டிருக்கவில்லை. கள்ளச் செய்கையையுடைய ராவணனனவன் ஸ்ரீ ராகவனுடைய பிராணநாயகியாகிய இவரை யொளித்து வைத்தது எதற்காகவென்றால் திரிலோகத்தாருக்கும் மகத்தாகிய அக்கிரமத்தைச் செய்கின்ற பாபிஷ்டனனவன் தன்னுயிரை யிழப்பதற்கே இதற்குச் சந்தேகமில்லை. அந்த ஸ்ரீராமர் ஸ்ரீ மகாவிஷ்ணுவே; இந்தச் சீதாபிராட்டியார் தாமரைப் புஷ்பாசனத்தில் எழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீ மகாலட்சுமியே; அழுக்கடைந்திருக்கின்ற இரத்தினத்தைப் போலவும், சூரியனுக்கு எதிரே உதயமாகிய சந்திரனைப்போலவும், தேஜஸ்மாறி யிருக்கின்ற இவருடைய கற்புக்கும் மனவுறுதிக்கும் பின்னமுண்டாகவில்லை. எங்கேயாவது தர்மத்திற்கும் அழிவுண்டா? ஸ்ரீ ராமருடைய திருத்தோள்களைத்தான் சொல்வேனே? பதிவிரதா ஸ்திரீகளுக்கு மூலதிலகமாகிய இந்த உத்தமியினுடைய குணாதிசயத்தைச் சொல்வேனே? அந்த ஜனக மகாராஜாவினுடைய வம்சத்தின் பெருமையைத்தான் சொல்வேனே? நான் எதைத்தான் சொல்வேனென்று மிகவும் புகழ்ந்து சந்தோஷித்துத் தேவர்களும் பிழை செய்யவில்லை; ரிஷீஸ்வரர்களும் பிழை செய்யவில்லை; தர்மத்திற்கும் குறைவில்லை; இனி நான் செய்கிறதற்கு அருமையாகிய காரியம் என்னயிருக்கின்றது? எம்பிரானாகிய ஸ்ரீ ராமருக்குச் செய்யும் என்னடிமைத்தொழிலும் ஒன்றும் பிழைபடவில்லை. இந்த லோகநாயகியின் கற்பமானது கிஞ்சிற்றுச் சிதையுமானால் சுவாமிக்குக் கோபம் ஜனிக்கும்; அதனால் சதுர்த்தச புவனங்களும் நாசமாகுமென்று நினைத்தேன். அப்படிக் கற்புச்சிதையாமல் இனி ஒரு சலனமு மில்லாமல், உலகங்களெல்லாம் பல்லூழிகாலம் வாழ்ந்திருக்கும். நல்ல குடியிற்பிறந்து இல்லறத்திற்குரிய நற்குண நற்செய்கைகளையுடைய பதிவிரதா ஸ்திரீகள் தங்கள் மனதைப் பல விடங்களிலும் செல்லவொட்டாமல் நிறுத்துகின்ற தபோமகிமைக்கு முன், பஞ்சாக்கினி மத்தியிலிருந்து பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்து அன்னபானாதிகளை நீக்கி கோர தபசு செய்பவர்களுடைய தபோமகிமைதான் எவ்வளவு? இந்தப் பாக்கியவதி பூமியில் தோன்றினதால் குடிப்பிறப்பும், அதனையுடைய பெண் பிறப்பும், அதற்குரிய நாணம் முதலானதுகளும், தவஞ்செய்து சிறப்பினையடைந்தன. இவ்விடத்தில் இவள் இப்படிப்பட்ட மகத்தாகிய அருந்தவசு செய்துகொண்டிருக்கின்ற அதிசயங்களையெல்லாம், ஸ்ரீ ராமர் தம்முடைய திருக்கண்களால் காண்கின்றதற்குத் தவஞ்செய்யாமற்போனர். இங்குள்ள ராட்சத ஸ்திரீகளெல்லாம் கிரமந்தப்பிக் கோபிக்கின்றவர்களாயிருக்கிறார்கள். நல்லவர் இந்தப் பிராட்டியாரொருவரேயல்லாமல் வேறொருவரில்லை. லோக காரணியாகிய ஜானகியாரைத் தர்மமே காத்

தேதோ? அல்லது இந்தச் சீதாபிராட்டியாருடைய மேன்மையாகிய கற்பே காத்ததோ? அம்மம்மா! அருமை. எவர்தான் இதைச் சகிப்பார்கள்? ஒரு விதத்திலாவது என்னைப்போலொத்தவர்களால் சொல்லத்தக்கதா! என்று இப்படியெல்லாம் நினைத்து நினைத்து அதிக சந்தோஷ சித்தராகி ஆஞ்சநேயர் அந்த மரக்கிளையிலேதானே தங்கிப் பார்த்துக்கொண்டிருந்தார். அச்சமயத்திலே இராவணேஸ்வரன் அந்தச் சோலைக்கு வரும்படி புறப்பட்டான்.

காட்சிப் படலம் முற்றிற்று.

நிந்தனைப் படலம்

சிகரங்களையுடைய பர்வதங்கள் யாவும் ஒரிடத்தில் சேர்ந்து இருப்பது போல வச்சிரத்தால் செய்யப்பட்ட மகரகுண்டலங்க ளசைந்துகொண் டிருக்கின்ற இருபது தோள்களும் இருபக்கத்திலும் பிரகாசிக்கவும், மாணிக்கமயமாகிய மகுடகாந்தியானது அந்த ராத்திரியைப் பகலாகச் செய்யவும், ஊர்வசியானவள் உடைவாளேந்திக்கொண்டு வரவும், மேனகை தாம்பூலமடித்துக் கொடுத்துக்கொண்டு வரவும், திலோர்த்தமை பாதரட்சை தாங்கிக்கொண்டு வரவும், ரம்பை காளாஞ்சி யேந்திவரவும், மற்றும் எட்டுக்கோடி ஸ்திரீகள் கைகளில் நெய் விளக்கு எடுத்து வரவும், யக்ஷ ஸ்திரீகள் - தேவஸ்திரீகள் - வித்தியாதர ஸ்திரீகள் - பன்னக ஸ்திரீகள் - சித்த ஸ்திரீகள் - ராட்சத ஸ்திரீகள் முதலாகிய பல ஸ்திரீ கூட்டங்கள் பெரியமலையைச் சூழ்ந்து வருகின்ற மயில் கூட்டங்கள் போல் புடைசூழ்ந்து வரவும், பச்சைக் கற்பூரம் கஸ்தூரி முதலாகிய வாசனை திரவியங்கள் சேர்க்கப்பட்ட கலவைச் சந்தனமானது கமகமவென்று பரிமளிக்கவும், தேகத்திலணிந்திருக்கின்ற பலவித இரத்னபரணங்களின் சோதியானது இருளை விழுங்கிப் பிரகாசிக்கவும், கரங்களில் தரித்த சிலம்புகள் முழங்க, கிண்கிணிகள் ஒலிக்க, மேகலாபரணம் சப்திக்க அநேக ஸ்திரீகள் அம்சக் கூட்டங்கள் நடக்கிறதுபோல நடந்து மிருதுவாகிய பலவித வசனங்களை வசனித்துக் கொண்டு வரவும், நீலமலையில் ஒழுகாநின்ற வெண்மையாகிய அருவியாறுபோலத் தனது மார்பின் இருபுறத்திலும் வெள்ளைப்பட்டு உத்தரீயமானது தொங்கவும், சர்வேஸ்வரனாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவின் திருமார்பைப்போல் அம்மார்பினிடத்தில் பொன்னாரம் பிரகாசிக்கவும், மேகத்தின் மத்தியில் தோன்றிய மின்னலைப்போல முப்புரிநூல் விளங்கவும், இருபது புஜங்களிலும் அணிந்த வாகுவலயங்களும் கேயூரங்களும், இராக்காலத்தில் ஆகாயத்தில் உதயமாகிய நட்சத்திரங்கள் நவக்கிரகங்களைப்போல மின்னவும், கால்களில் அணிந்திருக்கின்ற வீரகண்டாமணிகளின் ஓசையானது பூமி முழுதும் பரவவும், வக்கிர தந்தங்கள் அர்த்த சந்திரனைப்போல இளவெயி லெறிக்கின்ற முகங்கள் இருளைப் பரார்க்கிலும் கருமையாய்ப் பிரகாசிக்கவும், ரத்தினகசிதமாகிய வீர சங்கிலியும், முத்தார மும், யுகாந்தகாலத்திலே மகாமேருவில் தொத்திக்கொண் டிருக்கின்ற பல நட்சத்திரங்கள்போல மார்பில் அணிந்த சொர்ன கவசத்தின்மேல் பிரகாசிக்கவும், சிரசில் தாங்கிய பத்துக் கிரீடங்களும் உதயகிரியின் சிகரங்களில் பன்

னிரண்டு சூரியர்களில் இவரை நீக்கிப் பத்துச் சூரியர்கள் உதயமான்துபோல ஜொலிக்கவும், ஸ்திரீகள் பாடுகின்ற பாடலுக்கு ஒத்திருக்க வேணுக்குழல் - சில்லரி - தாளவொத்து - மிருதங்கம் முதலாகிய நானுவித வாத்தியங்கள் விஷத்தைக் கக்குகின்ற நாகங்களும் அமிர்தத்தைக் கக்கும்படி ஆகாயம் பூமியெங்கும் அளாவி முழங்கவும். தேவரம்பைகள் மேகம் வரக்கண்டு நடனஞ் செய்கின்ற மயில்களைப்போல எதிரே நாட்டியஞ் செய்துக்கொண்டு வரவும். புஷ்பத்தால் அலங்கரிக்கப்பட்ட விமானமும், சாமரைகளும், தவளக் குடைகளும், ஆலவட்டங்களும், துவஜங்களும், மகர தோரணங்களும், மயிற் றொம்பைகளும், ஸ்திரீகள் தாங்கிக்கொண்டு கூட நடந்து வரவும், அந்தக் காலத்தில் மன்மதன் பிரயோகித்த அக்கினி ஜொலிக்கின்ற பாணங்களை துளைத்த வெவ்விதாகிய புண்ணில் வேலானது நுழைந்ததுபோலச் சந்திர கிரணங்கள் பாயவும், இளந் தென்றற் காற்றனது புஷ்பங்கள் தோறும் போய் வாரிக்கொண்டு வந்து சிந்துகின்ற தேன் துளிகள் உருக்கிய செம்புபோலத் தெறிக்கவும், ஸ்திரீகளுடைய கடைக்கண் பார்வைகள் மார்பினிடத்திலும் தோளினிடத்திலும் வந்து பதியவும், பூமாலைகளையும் கந்தத்தையும் கூட்டுவர்க்கத்தையும் பூஷணங்களையும் விலையுயர்ந்த மிருதுவாகிய வஸ்திரங்களையும் ரத்னங்களையும் மற்றும் வேண்டிய சகல வஸ்துக்களையும் கற்பக விருட்சமும் சங்கநிதி பதுமநிதிகளும் பின்தொடர்ந்து கொடுத்துக்கொண்டு வரவும், பாற்சமுத்திரத்தின் வெண்மையாகிய அலைகள் கறுத்த பர்வதத்தின் மேல் தாவிப் புரள்வதுபோல் வெண்சாமரம் இரட்டவும், கருங்கடலி லிருந்து உதித்து உயர எழுந்த களங்கமில்லாத பூரணச் சந்திரனைப்போலத் தவளப்பூச் சக்கரக் குடையானது முடியின்மேல் பிரகாசிக்கவும், அடிபெயர்த்து வைக்குந் தோறும் அந்த லங்கையாகிய பர்வதமானது கீழ் அழுந்திச் சமுத்திரத்தின் அலைகள் அதன் மேலாக நான்கு திக்கிலும் எழும்பித் தவழவும், பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனும் தலைமாறித் தாங்கவும், பூமாதேவி முதுகு நெளிக்கவும், கேடகம் - மழு - எழு - சூலம் - அங்குசம் - கப்பணம் - வாள் - வேல் - வில் - வஜ்ர முதலாகிய சகல ஆயுதத்தையும் தாடகையைப் பார்க்கிலும் இரண்டு பங்கு அதிக பலத்தையும் கோரத்தையுமுடைய ராக்ஷத ஸ்திரீகள் தாங்கிக்கொண்டு வரவும், தளிர் - இலை - அரும்பு - மலர் - காய் - பழம் - கிளை - கொம்பு - வேர் முதலானதுகள் ரத்தினங்களினாலும் பொன்னாலும் சமைந்திருக்கின்ற விருக்ஷங்களையுடைய அந்தச் சோலையானது திக்குகள்தோறும் கரிந்து தீயும்படி தன் சுவாசமானது அக்கினியைக் கக்கிக்கொண்டு எழுந்து முன்னே பாயவும், சீதாபிராட்டியார் எழுந்தருளி யிருக்கின்ற திசையைத் தான் அறிந்திருந்தும் மனது திகைத்துத் திசை தெரியாமல் பல தலைகளையுடைய பாம்பைப் போலப் பல விடங்களிலும் உழன்று திரிந்துக்கொண்டு வருகின்றான். இப்படி வருகின்ற இராவணனைச் சிற்றுருவங் கொண்டு அசோக மரத்தின் கிளையில் தொத்திக்கொண்டு இருக்கின்ற அஞ்சனாதேவி குமாரராகிய அநுமானவர் செவ்வையாகப் பார்த்து, குணமும் செயலும் இனிமேல் விளையும் விளைவும், இவ்விடத்தில் தெரிய வருமென்றெண்ணி, ஸ்ரீ ராமச்சந்திரனுடைய திரு நாமத்தை ஸ்மரித்துக்கொண்டு மறைவாய் இருந்தார். முன்பு அவ்வாறாக வந்த ராவணன் அந்தச் சோலையில் வந்து சேர்ந்து, தன்னுடனே கூடவந்த

அரம்பா ஸ்திரீகளையும் மற்றுமுள்ள பலவித ஸ்திரீகளையும் வெளியிலே போயிருக்கச் சொல்லி ஆக்ஞாபித்துத் தானொருவனுமாய் தனியே யிருக்கின்ற பெண்விளக்காகிய அந்த லோகமாதாவின் சமீபத்தில் வந்தான். அப்போது பிரார்ட்டியானவள் அவனைக் கண்டு, உயிர் நீங்கினவள்போல நடு நடுங்கி விழுங்கும்படி வந்த புகைகின்ற கண்களையுடைய பெரும் புலியைக் கண்ட இளமையாகிய பெண்மான்போலப் பயந்து திடுக்கிட்டுக் கரைந்தாள். இவ்வண்ணமாக மனங் கூசி உயிர் நிலை கலங்கிய ஜானகியாரையும் அவர் மேல்கொண்ட ஆசையினல் பிராண சங்கடப்படுகின்ற மகா பாதகனாகிய ராவணனையும், அந்த ஆஞ்சநேயர் தம்முடைய இரண்டு நேத்திரமும் சாக்ஷியாகப் பார்த்து மனது ஊசலாடும்படி அதிக கிலேசத்துடனே மங்களாசாசனம் செய்யத் தொடங்கினர்.

க வி

வாழி சானகி வாழி யிராகவன்
வாழி நான்மறை வாழிய ரந்தணர்
வாழி நல்லற மென்றுற வாழ்த்தினன்
ஊழி தோறும் புதிதுறங் கீர்த்தியான்.

ஜனக மகாராஜாவின் புத்திரியாகிய இந்தச் சீதாபிராட்டியார் வாழக்கடவர். இவருடைய நாயகனாகியும் இரகுகுல திலகனாகியும் விளங்கா நின்ற அந்த இராமச்சந்திரனும் வாழக்கடவன். அவனுடைய நாமரூப குணங்களைச் சொல்லுகின்ற சதுர்வேதமும் வாழக்கடவது. அவ்வேதத்தை அத்தியயனஞ் செய்கின்ற பிராமணோத்தமர்களும் வாழக் கடவார்கள். அவர்களிடத்தில் நிலை பெற்றிருக்கின்ற தர்மமும் வாழக்கடவது என்று சொல்லி, கற்பங்கள்தோறும் அழியாத கீர்த்தியையுடைய அநுமானவர் வாழ்த்தினவராயிருக்க; ராவணன் பிராட்டியாரைப் பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறான்: ஓ குயிலுக்குச் சமானமாகிய இனிய குரலினையுடைய பெண்ணே! பெண்கள் சிகாமணி! பெண்கட்கரசி! பெண்கள் பாக்கியமே! எங்கள் குலதெய்வமே! என் பிராணாதாரமாகிய சீதா! என்று அழைத்துக் கொல்லுகின்ற விஷத்தை அமிர்தமென்று நினைத்து உண்கிறவனைப்போல நீ எப்பொழுது என்னிடத்தில் கிருபை செய்வதென்றான்? சிவன் முதலானவர்களுக்கும் அஞ்சாத திடசித்தத்தையுடைய ராவணனவன் ஆசையும் நாணமும் தன்னைப் பீடிக்கும்படி கூசிக் கொண்டு பின்னும் சொல்லுகின்றான்: இன்றென்றும் நாளையென்றும் வீணாக நாள் கழிந்து விடுகின்றதே; நீ என்னைக் கொன்ற பின்புதான் கூடவிருக்கின்றையோ? ஓ உன்னுடைய அளவில்லாத பாக்கியமாகிய ராஜரீக சாம்பிராஜ்யத்திற்குத் திலகமாயிருக்கின்றவளே! உன்பொருட்டு மன்மதனவன் என்னிடத்தில் செய்கின்ற கலகத்தை நீ பார்ப்பது மல்லாமல், அவனுக்கு நான் தோற்கின்ற என்னுடைய ஏழ்மையையும் பார்க்கின்றையோ? ஓ நீண்ட கூந்தலையுடைய ஆயிரத்தெட்டு மாற்றுத்தங்கமே! கீர்த்தி பொருந்திய என்னுடைய மகதைஸ்வரியத்தை இகழ்ந்து விடுகின்றையே; உன் நாயகனாகிய ராமன் இறந்து போகாமல் பிழைப்பானா? அல்லது இறவாதிருந்தாலும் காட்


டைக்கடந்து அயோத்தியிற் போய்ச் சேர்ந்து வாழ்வதோ பிரயாசம். அப்படி வாழ்ந்தபோதும் அது சொற்பமாகிய மானிட வாழ்வேயல்லாமல் வேறல்லவே, அந்த வாழ்வு தானே நீ வாழ நினைக்கின்றது. தபசு செய்கின்றவர்களும், அதிநுட்பமாகிய சாஸ்திராத்தங்களைத் தெரிந்தவர்களும், பெரும் பிரயோசனம் என்னவென்றால்: என்னுடைய வார்த்தையைச் சிரசாக வகிக்கின்ற பிரமாதி தேவர்களுடனே கூடியிருக்கின்ற இன்பந்தானே உனக்குப் பாதாதி கேச பரியந்தமாகிய அவயவங்க ளெல்லாம் அழகாகத் தெரிந்து படைத்த பிரமாவானவன் இடையும் கிருபையும் இல்லாமல் போம்படி ஏன் செய்துவிட்டான்? இளமைப் பருவமானது நாளுக்குநாள் விர்த்தியாகின்றதா? கொஞ்சம் கொஞ்சமாய் மாண்டுபோய் விடுகின்றதே? அப்படி அருமையாகிய இளமையானது வேண்டிய சுகம் அனுபவிக்கத்தக்க காலத்தில் வீணைப்போமானால், அப்புறம் மனோபீஷ்டத்தை எப்பொழுது முடிக்க விருக்கின்றையோ? ஓ இளங் கிளிக்குச் சமானமாகிய ஜனகராஜ புத்திரியே! சிறந்த பெண்கள் தன்மையும், உயர்ந்தரூப லட்சணமும், மாறுபடாத சித்தமும் உண்டாயிருக்கின்ற உனக்கு தாக்ஷண்யமாத்திரம் இல்லாமல் போனதென்ன? என் பிராணன் போனாலும் போகட்டும். உன் முக மாத்திரம் கோணம விருக்க வேணும். அப்படியல்லாமல் நீ முகங்கோணினால், குணம் - அழகு - காமம் முதலானதுகளுந் தங்கி நிற்பதற்கு இனி யார் இருப்பிடமாவார்கள். உன் கணவனை நான் கொல்லும்பொழுது அவன் அலறிக் கூவும் குரலைக் கேட்கவும், அவன் இறந்து கிடப்பதைப் பார்க்கவும் இருக்கின்றையோ? ஊழ்வினையானது எளிதாக வூட்டுகின்ற தர்மப்பயனுகிய நன்மையை இப்படி இகழ்ந்து தள்ளி விடுகின்றவர்களை நான் எங்கும் பார்க்கவில்லை. நீ ஒருத்தி என்னிடத்தில் வந்ததினால் எனக்கு மகத்தாகிய சாம்ராஜ்ஜியமானது மேன்மேலும் உண்டாயிற்றென்கிற கீர்த்தியைவிட்டு, இன்னவளாலே இன்னான் மாண்டுபோய்ப் பாக்கியமும் இழந்துபோனான் என்கிற அபகீர்த்தியைச் சம்பாதித்துக் கொள்ளுகின்றனையோ? தேவர்களும் அவர்களுடைய தேவிமார்களும் கைகூப்பி அடிவணங்குகின்ற திரிலோகாதி பத்தியமானது உன்னிடத்தில் வலிய வருகின்றது. அதை நீ விலக்கிவிடுகின்ற யாகையால் உன்னைப்போலும் பேதமையான பெண்கள் யாரிருக்கின்றார்கள்? மூன்று லோகத்தாரும் ஏவல் செய்யும்படியிருக்கின்ற திரிலோகாதிபதியான என்னை நீ அடிமை கொண்டருளக் கடவாயென்று இராவணேஸ்வரனானவன் கைகளைக் கூப்பித் தலைமேல் வைத்துக் கொண்டு, சாஷ்டாங்கமாகப் பூமியில் விழுந்து தெண்டன் சமர்ப்பித்தான். இவ் வார்த்தைகள் வந்து நுழையாததற்கு முன்னே சிவக்கக் காய்ச்சிய இருப்புச் சலாகைகளைக் காதில் ஏற்றியதுபோல ஜானகியின் செவிகள் தீய்ந்ததுகள்; மனது சுழன்றது; கோபமூண்டது; கண் சிவந்தது; அதுகளில் உதிரம் பாயத் தலைப்பட்டது. அப்போது பிராணன் போனாலும் போகின்றதென்று கொஞ்சமாவது அஞ்சாமலும், பெண் தன்மைக்கு ஒவ்வாத சொற்களானாலும் இந்த வேளையில் சொல்லுகிறதே சரியென்று துணிந்தும், வஞ்சகனுகிய இராவணனுடைய மனது வேறுபடும்படி கற்பினால் தன் மனதைக் கல்லைப் பார்க்கிலும் மிகவும் உறுதிப்படுத்திக்கொண்டு, அவன் முகத்தைப் பாராமல் கீழே கிடக்கின்ற ஒரு துரும்பைப் பார்த்து, அவனை அந்தத் துரும்பாக மதித்து, அடா

அற்பமாகிய திரணமே! இப்பொழுது நான் சொல்லுகின்ற சொல்லானது என்னைப்போலும் நல்ல குடிப்பிறப்பினையுடைய பெண்கள் சொல்லத்தக்க தல்ல. ஆகிலும் உன்னைக் குறித்துச் சொல்லுகிறேன் கேட்கக் கடவாயென்று கொடுமையாகிய பல சொற்களைச் சீதாபிராட்டியார் சொல்லுகின்றாள்: மஹா மேருவை உருளவேண்டுமென்றாலும், ஆகாயத்தைப் பிளந்துகொண்டு அதற் கப்புறம் போகவேண்டுமென்றாலும், பதினொரு லோகத்தையும் முடிக்கவேண்டு மென்றாலும், ஸ்ரீ ராமபாணம் அப்படியே செய்யத்தக்க பலமுடைத்தா யிருக் கின்றது. அதை யறிந்திருந்தும் புத்தியில்லாமல் அநுசிதமாகிய வார்த்தைகளை உனக்குச் சரியானபடியெல்லாம் பிதற்றி, உன் பத்துத்தலைகளும் அற்று விழுவாயாக! என் நாயகருக்கு நீ பயந்துதானே சமயம் பார்த்து, ஒரு வஞ்சனை யான மானேயேவி, அவரை என்னைவிட்டு நீங்கும்படிசெய்து, உன்னுருவத்தை மறைத்து மாயாசன்னியாசி வடிவங்கொண்டு வந்தாய்? பிழைக்கிறவனைல் விட்டுவிடுவாய்; உன்குலத்துக்கெல்லாம் விஷமாகிய என்னை உன் கண்களும் பார்க்கக்கூடுமோ? இந்தப் பத்துத்தலைகளும் இருபது தோள்களும் கோதண்ட தீட்சாகுருவாகிய என் நாயகரானவர் பலபல பாணங்களைப் பிரயோகித்து விளை யாடத் தகுந்த விசித்திரமாகிய லட்சியமாயிருக்கு மல்லாமல் வேறென்ன செய்யும்? யுத்தத்தில் எதிர்க்கத்தக்க சக்தியை யுடையவனைப்போலப் போய் அன்றையதினம் ஜடாயுபலத்துக்கு நிற்கமாட்டாமல் தரையிலே விழுந்தையே அந்த ஒரு பட்சிக்கு நீ தோற்றும் சிவனுடைய கைவாளினாலே யல்லவோவென் றாய். அல்லவென்றால் அந்நாளே இறந்துபோய் நீ செய்த தவமும் அதனாற்பெற்ற வரமும் தீர்க்காயுளும் இதுகளெல்லாம் உனக்குக் கூற்றுவனாலே அபாயம்வந்து சம்பவிக்காமலிருப்பதைக் குறித்தே யல்லாமல் என் நாயகருடைய பாணத்தி னாலே இறவாம லிருப்பதைக் குறித்தல்ல; இதற்காக நீ ஏதாவது தவஞ்செய்து வரம் பெற்றதுண்டா? நீ பெற்றிருக்கின்ற அந்த வாளையும், நாளையும், பராக்கிர மத்தையும், மற்றுமுள்ள சகலத்தையும், உனக்குக் கொடுத்த பிரமாதிதேவர்க ளுடைய வரங்களெல்லாம் இரகுநாயகரானவர் தமது கோதண்டத்தை வளைத்து நாணேற்றிட்டு ஒரு அஸ்திரத்தை மாத்திரம் அனுசந்தானஞ் செய்து பிரயோ கித்தவுடனே; உன்னைவிட்டு விலகி எதார்த்தமாக அழிந்துபோகும். நன்றாய்ப் பிரகாசிக்கின்ற தீபச்சுடருக்கு முன் இருள் விலகிப்போகாமல் நிற்பதுண்டா? நீ கைலாசகிரியை எடுத்தநாளில் தமது காற்பெருவிரல் நுனியால் உன்னை அழுத்தி ஜெயித்த திரிபுராந்தகனை சிவனுடைய கைவில்லை என் பிராண நாயகராகிய இராகவர் வளைத்தபோது, அது அவர் பலத்திற்குச் சகிக்காமல் ஒடிந்து விழுந்த சப்தம் கேட்கவில்லையா? மலையை எடுத்தேன்; அஷ்டதிக் கஜங்களை ஜெயித்தேனென்று சொல்லுகின்ற நீ எங்கள் இளைய பெருமா ளானவர் கையிலே வில்லெடுத்துக்கொண்டு நிற்க அங்கேபோய் அவரை ஜெயிக்கத்தக்க நிர்வாகமில்லாமல், நானுமொரு வீரனென்று இன்னமும் தலை யெடுத்துக்கொண்டு பெண்கள் காலில் விழுந்து கெஞ்சிக்கொண்டு திரிகின் றையோ? அறிவில்லாதவனே! நீ ஒளித்துக்கொண்டிருக்கின்ற இடம் மாத்தி ரம் இன்னதென்று எங்கள் ஸ்ரீ ராமபிரானுக்குத் தெரிந்தால், அப்போதே இந்தச் சமுத்திரமும் இலங்கையும் அழியும், உன் பிராணனும் நாசமாகும். அந்த மட்டிலேதானே போகுமா? ஊழியும் தீய்ந்துபோகும். நீ யொருவன்

இப்படிப்பட்ட வஞ்சனை செய்ததனால் ஸ்ரீ ராமச்சந்திரருடைய கோபத்தால் இராட்சதருடனே மாத்திரம் முடிந்து போகாமல், இந்த லோகா லோகங்களுக் கெல்லாம் என்ன அழிவு வருகின்றதோவென்று தர்மதேவதை சாட்சியாக நான் அஞ்சிப் பார்க்கிறேன். இந்த ராம லட்சுமணர்கள் மனிதர்தானே யென்று உன் மனதிலே நினைத்தையேயானால், முன்னளிலே உன்னைச் சிறை வைத்த கார்த்தவீரியனும் மனிதன்தானே ; இவர்கள் இருவர்தானே ; இவர் களுக்கு வேறொரு உபபலமு மில்லையென்று அலட்சியஞ் செய்வாயானால், சகல புவனங்களையும் சகலாத்துமாக்களையும் சங்கரிக்கின்ற ஈழிநாதன் ஒருவனல் லவோ ? ஆதலால் அவர்களுக்கும் உனக்கும் யுத்தம் நடக்கும்போது, என் சொல் மெய்யோ ? பொய்யோ ? நீ பார்த்துக்கொள். இரணியன் இரணி யாட்சனென்னும் அசுரர்கள் அதிபராக்கிரமசாலிகளாய், உன்னிலும் மேலா கிய சம்பத்தை யுடையவர்களாய், வெகுகாலம் வாழ்ந்திருந்தார்கள். அவர்க ளும் தர்மம் தப்பி நடந்தார்கள். ஆகிலும் இப்படிப் பரதாரத்தை இச்சிக்க வில்லை. அகங்காரத்தினலே மாண்டுபோனார்கள். அடா பூலோகத்தாரும் சுவர்க்கலோகத்தாரும் நடுங்கும்படி வாழ்கின்ற கொடும்பாவி ! உன்னுடைய அற்பமாகிய துஷ்கிர்த்தியத்தை விலக்காமல் உனக்குப் பயந்திருக்கின்ற பிரமா விஷ்ணு ருத்திரர்களைப்போல் எங்கள் ரகுநாயகரையும் நீ நினைத்தையோ ? ஐம் புலன்களும் செல்கின்ற வழியில் செல்லாமல் தர்மத்தின் நிலையிலே நின்று வினையைக் கடந்தவர்கள் பிரமா முதலாகிய தேவர்களா ? அசுரர்களா ? சகல லோகத்தாரும் ஏவல் செய்யும்படி மகா சம்பத்து உனக்குக் கிடைத்திருக்கின் றது புண்ணியத்தினலேயா ? அல்லது பாவத்தினலேயா ? அறிந்து பார். இப் படிப்பட்ட பெரிதாகிய செல்வத்தை உனக்குக் கொடுத்த அந்த மகேஸ்வர னும் தர்ம மார்க்கத்தில் நின்றல்லவோ அப்படிப்பட்ட இஷ்ட காமியத்தை அனுபவிக்கிறான். நீ மாத்திரம் தர்மந்தப்ப நடந்து ஒப்பற்ற செல்வத்தையும் இழந்து, பந்து ஜனங்களுடனே நிர்மூலமா யழிந்துபோகும்படி ஏன் எத்தனப் படுகிறாய் ? அடா அறிவில்லாதவனே ! போர்க்களத்தில் புறங் கொடுத்தோடாத மகா பலிஷ்டர்களானலும் தர்மந் தவறினவர்களும், ஜீவகாருண்ணியமில்லா தவர்களு மல்லவோ பிறந்து இறந்து உழல்கின்றவர்கள். அவ்வாறுகிய ஜனன மரணத்தை நீங்கினவர்கள், அகங்கார மமகாரத்தைக் கெடுத்து காமவெகுளி மயக்கத்தைக் கடந்தவர்களே யல்லாமல் வேறே யார் ? அகஸ்தியர் முதலாகிய மகா ரிஷிகளெல்லாங் கூடிப் புருஷோத்தமராகிய ஸ்ரீ ராமரிடத்தில் வந்து, ஐயா தசரதகுமாரரே ! இராக்ஷதர்கள் செய்யும் உபத்திரவத்தைச் சகிக்கா மல் தவ முதலாகிய வைதிக கர்மங்களையெல்லா மிழந்தோம் ; தேவரீர் அவர் களைச் சங்காரஞ் செய்தருளும் ; உம்முடைய பாணத்தினல் அவர்கள் சத்திய மாய் மாண்டுபோவார்கள். எங்களை ரட்சியுமென்று முறையிட்டுக் கொண்டார் கள். அந்தச் சமயத்தில், நான் அவர் பக்கத்திலிருந்து கேட்டேன். நீயோ அதற்கேற்றபடி நடந்து வருகிறாய். உன்னையும், உன்னுடைய பராக்கிரமத் தையும், நீ பெற்றிருக்கின்ற தீர்க்காயுளையும், சேனு பலத்தையும், முநீஸ்வரர் சொல்லக் கேட்டும் எங்கள் ராமபத்திரர் எவ்வளவும் லட்சியம் செய்யாமல் உன் தங்கையின் மூக்கையும், உன் தம்பிமார்களாகிய கரன் முதலானவர்களுடைய கரசரணாதி அவயவங்களையும், சின்னபின்னப்படுத்திய சமாசாரத்தை நீ கேள்

விப்படவில்லையோ? உன்னுடைய இருபது கைகளையும் சேர்த்துப் பிடித்து, உன் பத்து வாயின் வழியாகக் குபீர் குபீரென்று உதிரங் கக்கும்படிக் குத்தி, உன்னை அருஞ்சிறையில் வைத்த ஆயிரங் கைகளையுடைய கார்த்த வீரியார்ச் சுனனுடைய வைரமாகிய தோள்களையும் மழுவாயுதத்தால் தறித்தெறிந்த பரசு ராமரானவர் என் நாயகருக்குத் தோற்றுப்போன சமாச்சாரம் நீ யறியாயோ? மேல்வருங் கதியை யறியாத நீசனே! கடிக்கின்ற விஷசர்ப்பமும் மந்திர உச் சாடனம் பண்ணக் கேட்டுத் தடைபடுகின்றது. யுக்தா யுக்தந் தெரியாமல் தனித்துத் துள்ளுகிற உன்னை, இது தகும் இது தகாதென்று அதற்கேற்ற ஏதுக்களுடனும் திருஷ்டாந்திரங்களுடனும் புத்திசொல்லி இடிக்கின்றவர்க ளில்லை. நீ நினைத்ததே சரி சரியென்று சொல்லி உன்னை முடித்துவிடத்தக்க வர்கள் மாத்திர மிருக்கின்றார்கள். இப்படியானால் இனி உனக்கு நாசம் வருமே யல்லது வேறென்று சம்பவிக்குமாவென்று இவ்வகைப்பட்ட தர்ம மார்க்கமா யிருக்கின்ற பலபல வார்த்தைகளையும் கர்னகடூரமாக அத்துரும்பைப் பார்த்த வண்ணமாயிப் பிராட்டியார் சொல்லினள். இப்படி சொல்லவே, இராவண னனவன் மேகத்தின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு எழுந்த மின்னலைப் போல இருபது கண்களிலும் நெருப்புப் பொறிகள் எழும்ப, வாய்களெல்லாம் புகைய அதட்டி ஆர்ப்பரித்து, காமத்திலும் கோபமிகுந்தவனாய் அதிக நாணத் தைக் கொண்டு, இவளைப் பிளந்து தின்றுவிடுகிறேனென்று எழுந்து வந்தான். இப்படி ஆசையுங் கோபமும் முன்னும் பின்னுந் தள்ள ஜானகிக்குச் சமீபத் தில் வந்தவனை அநுமானனவர் பார்த்து, என்னை அடிமைகொண்ட நாயக ருடைய தேவியாரை என்னெதிரே இப்படியெல்லாம் பேசிய நீசனுகிய இரா வணன் தீண்டுகிறதற்கு முன்னே, இவனுடைய பத்துத் தலைகளையும் ஒட்டைத்து உருட்டிவிட்டுப் பின்பு எந்தக் காரியமும் பார்த்துக்கொள்ளலா மென்று நினைத்து, பின்னும் இந்த இராவணனை தனியே யிருக்கின்ற லகையால் எளிதாக இவன் தலைகளையுடைத்துத் தள்ளி இலங்கையுமெடுத்துக் கடலிலே தலைகீழாக எறிந்துவிட்டுப் பிராட்டியாரை எடுத்துக்கொண்டு ஸ்ரீ ராமபிரா னிடத்திற்குப் போகிறதே காரியம் என்று துணிந்து, அதிக கோபாவேசத் துடனே கையைப் பிசைந்துகொண்டு இருந்தார். அப்பொழுது, அண்டங்களை யெல்லாம் அழிக்கும்படி மூண்டெழுந்த யுகாந்த காலாக்கினியைப்போல முதிர்ந்த கோபத்துடனே கிட்டிவந்த இராவணனனவன், அந்தக் கோபாக் கினியைக் காமம் என்கிற வெள்ளமான்று அவிக்க, லோகமாதாவான சீதைக்கு எதிரே சும்மா நின்று சில வார்த்தை சொல்லுகிறான். நான் உன்னைக் கொல்லுகிறேனென்று சொன்னேனே; அதிருக்கவே யிருக்கிறது. உலகில் எனக்கு ஒரு விஷயம் சாத்தியப்படுவதென்றும் சாத்தியப்படாதென்றும் உண்டா? தோற்பதும் ஜெயிப்பதும் எனக்கு விளையாட்டுச் செய்கையாய் இருக் கின்றது. உன்னுடைய உயிருக்கு ஒப்பான நாயகனை நான் கொன்றால் நீ இறந்துபோவாய். அது கண்டால் நானும் இறந்து போவேன். அந்தச் சங்க டத்தை எண்ணித்தான் அன்று நான் உன்னை வஞ்சனைசெய்து எடுத்துவந்தது. அல்லவென்று யுத்தஞ் செய்யத் தலைப்பட்டால் யார்தான் எனக்கு எதிர் நிற்ப வர்களாவார்கள்? மானுஷனது வந்ததென்று அறிந்து அதைப் பிடிக்கத் தொடர்ந்த மானிடரானவர்கள், என்னுக்யாதிகாரத்தை அறிந்தால் இந்த

படம் நெ. 12.



சிறியதிருவடி பிராட்டியாரிடம் கணையாழியைக் கொடுத்தது.

வழி வருவார்களா? முன்னளிலே ஆரோவென்னை ஜெயித்தார்களென்ப தாய்ச் சொன்னையே, அவர்களும் இருக்கட்டும்; சகலமானவர்களுக்கும் மேலா னவர்களும், யாவராலும் இறவாதவர்களுமாய் இருக்கின்றவர்களும் இருக் கட்டும். அந்நாள் முதற்கொண்டு தேவேந்திரனைவன் பணிவிடைசெய்ய மூன் றுலகத்தையும் நான் ஒருவன் ஆள்கின்றேன். இதைக்காட்டிலும் வேறொரு கார ணம் சொல்லவேண்டுமா? எல்லாரையும் நான் வெல்லுவதும் பிடித்துவந்து ஏவல் கொள்ளுவதுமேயல்லாமல், என்னை ஏவல்கொள்பவர்களும் இருக்கின்றார்களா? மும்மூர்த்திகளையும் மற்றத் தேவர்களையும் பராக்ரமம் அழியச்செய்த என்னு டைய பிரதாபத்திற்கு உன்னுலே பழிவரும்படி பிரயோஜனம் இல்லாத தவத் தைச் செய்துகொண்டு இருக்கின்ற சொற்ப மனிதர்களை நானொரு பிரயோ ஜனமாக எண்ணிக் கொல்லப்போகின்றேனை? இதோ அழைத்து ஏவல் கொள்ளுகிறேன். அந்தச் சாமர்த்தியத்தையும் பார். அற்ப பலத்தையும் அற்பச் செய்கையையுமுடைய அற்ப வீரர்கள்மேல் எனக்குக் கோபம் உதிப் பதேயில்லை, ஆயினும் இன்றையத்தினமே போய் அந்த இராமலட்சுமணர்கள் இருவரையும் ஒரு கையினுல் பிடித்துக் கொண்டுவந்து உன் முன்னே விடுகி றேன் பார். அவர்கள் மனிதர்களானாலும் ஸ்திரீ ரத்னமான உன்னை எனக் குக் கொடுத்த உபகாரத்தை ஆலோசித்துப் பார்த்தால், அவர்களைப் பிராண இம்சை செய்யக்கூடாது. அப்படியல்ல அவசியம் கொல்லவேணும் என்று உனக்கு இஷ்டமிருந்தால் இப்பொழுதே கொல்லுகிறேன். மேலும் அயோத் திக்குப் போய் அங்கிருக்கின்ற பரதன் முதலான சகலரையும் கொன்று, மிதிலைக்குப் போய் அவ்விடத்திலுள்ள ஜனகன் முதலானவர்களையும் சங்கு வறுத்துவிட்டு, சீக்கிரத்திலே வந்து உன்னுடைய உயிரையும் மாய்க்கிறேன். என்னுடைய பிரதாபத்தை நீ என்ன அறிவாய்! நீ கொஞ்ச வயதுண்டானவ ளாகையால் அறியாமற் சொன்னையென்று காலாக்கினி சொரூபமாய்க் கோபித்து, எரியும்படியான தன்னுடைய கைகளைப் பார்த்து உன்னுடைய பிராணனைப் போக்கடிக்கிறதற்கு வெகுநாள் செல்லாது. இன்னும் இரண்டு மாதம் போனல் அப்புறம் உனக்கே தெரியவருகிறதென்று அதட்டிப் பேசி, அந்தச் சீதாபிராட்டியாருடைய திவ்விய சுந்தரமான திருவுருவத்தைக் கண் ணிலே கண்டபடி மனதிலே பதித்து வைத்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நீங்கினன். இப்படி நீங்கிய இராவணன் அச்சீதைக்கு அருகே காவலாயிருக் கின்ற இராட்சசிகளை இரகசியமாக அழைத்து, பூங்கொடிபோலும் இளமை யுண்டான ஜானகியை ஒருவிதத்தினுல் பயப்படும்படி செய்தாவது அல்லது அவளுக்குப் புத்தி வரும்படி தெரியப்படுத்தியாவது வசியஞ்செய்து என்னிடத் திலே மனமானது இரமிக்கும்படி செய்தீர்களானுல்தான் பிழைத்தீர்கள். இல்லா விட்டால் கொன்று விடுவேனென்று சொல்லிவிட்டு தன்னுடைய மாளிகை யில் போய்ச் சேர்ந்தான். பின்பு, கேதுவென்னும் பாம்பு விழுங்கிக் கக்கிய சந்திரனைப்போலே யிருந்த சீதாபிராட்டியைப் பொல்லாத இராவணனு வன் எடுத்துக் கொண்டுவந்து வைத்தநாள் முதற்கொண்டு பொல்லாத இராட் சசிகள் அநேகம்பேர் சுற்றிக்கொண்டு, ஆர்ப்பரித்து அதட்டிக் கோபித்து, தங்களுடைய மனதிலே தோன்றியபடிக் கெல்லாம் பேசத் தலைப்பட் டார்கள். சிலபேர் சூலம் வேல்முதலான ஆயுதங்களை மேலேயெறிந்து கொல்

லுங்கள் கொல்லுங்களென்றும், இவளுடைய சரீரத்தை கண்டதுண்டமாக்கி வயிறார தின்னுங்களென்று முடுக்கினர்கள். சிலர் இந்தப் பிரதாப லங்கேஸ்வரன் சதுர்முகப் பிரமாவுக்குக் கொள்பேரன்; புலஸ்தியப் பிரமாவுக்குப் பேரன்; விஸ்ரவ பிரமாவுக்குப் புத்திரன். மேலும் சகஸ்திர வேதங்களும் அறிந்தவன்; ஞானதிக்கன்; சத்தியசந்தனன்; வினையைக் கடந்தவன்; இவன் என்ன சாமானியனு? இப்படிப்பட்டவன் உன்னிடத்திலே ஆசை வைப்பானேயானு லிந்த ஈனத்தை என்ன சொல்லலாம்? இது ஒன்றேயல்லாமல் மற்றப்படி இவனிடத்தில் என்ன குற்றம் இருக்கிறதென்றார்கள். சிலர் அடி பெண்களுக்குள்ளே கொடியவளாய் இருக்கின்றவளே! பொறுமையாய் ஆலோசித்துப் பாராமல் புண்ணிலே கோலிட்டாற்போலக் கன்ன கடூரமான வசனத்தைச் சொல்லி நீ முதலற்றுப் போவதுமல்லாமல், உலகத்திலே யுண்டாயிருக்கப்பட்ட மானிடகுல முழுமையும் மாய்ந்து போகத்தக்க மனவருத்தத்தையும் உண்டாக்கினை. நாங்கள் சொல்லும்படியான உண்மை வார்த்தையைத் தீர்க்கமாக எண்ணிப்பாரென்று சொன்னார்கள். சிலர் அடி கல்போன்ற நெஞ்சையுடைத்தாயிருக்கப்பட்ட அறிவில்லாதவளே! நீ பிறந்த குலத்திற்கும், புகுந்த குலத்திற்கும் கடுநெருப்பை வாரியிறைக்க ஏற்பட்டாயல்லவா? நீயும் இந்த க்ஷணமே மாண்டாய். இனி ஒருபொழுதும் வாழமாட்டாய். நாங்கள் உனக்கு உறுதிப்படச் சொன்னோமென்று கூச்சலிட்டார்கள். இந்தப் பிரகாரம் சொல்லத் துணிந்தவர்களுடைய செய்கையில் யாதொன்றுங் குறைவில்லாத கொடுமையை யுடையவராய், அந்த இராட்சசிகளெல்லாம் மிரட்டுவதையும், இராவணன் அவர்களை இவ்வண்ணஞ் செய்யும்படி ஏவினதையும் அறிந்து, பிராட்டியார் கண்களிலே ஜலம் பெருகும்படி கிலேசமடைந்து துக்கத்தினாலே திகைத்து மனங் கலங்கினர். அத் தருணத்திலே, திரிசடை என்பவள் பிராட்டியாரைப் பார்த்து, அம்மா! ஏன் அங்கலாய்க்கிறீர்? முன்னேதானே கனாக் கண்டு சொன்னேனே, நீர் தைரியமாய் இருமென்று சொல்லிப் பின்பு இராட்சசிகளை நோக்கி, உத்தமியை அறியாமல் வீணாக அபசாரப்பட்டால் மகத்தான தோஷம் வருமென்று சொன்னள். அதுகேட்டு தாயே! நல்லதென்று அவர்களெல்லாரும் அடங்கினர்கள். சீதையும் பிராணன் நிலைதிருந்தாள்.

நித்தனைப் படலம் முற்றிற்று.

உருக்காட்டுப் படலம்

அப்போது, மரத்தின்மேலே நின்று பார்த்துக்கொண்டிருந்த அநுமானென்பவர் இதுதான் காண்பதற்குத் தகுந்த சமயமென்று அறிந்து, அந்த இராட்சசிகளுக் கெல்லாம் உறக்கம் வரும்படியாய் ஒரு மந்திரத்தை உச்சரித்தார். அதனால் அவர்கள் எல்லோரும் பிரேதம்போல உறங்கிவிட்டார்கள். எப்பொழுதும் நித்திரை செய்யாத இராட்சசிகளும் நித்திரை செய்வது கண்டு, துக்கத்தைச் சகிக்காமல் உஜ்ஜீவிக்கின்ற மார்க்கத்தையும் காணுமல் மன

மானது தளர்ந்து அஞ்சி நெடுநாளாய் வருந்துகிற பிராட்டியார் சுவாமியினிடத் திலே தமக்குண்டான அன்பினுல் பிரலாபிக்கத் தொடங்கினுள்.

கவி

கருமேக நெடுங்கடல் காரணை யான்
தருமே தனியேனென தாருயிர் தான்
உருமே முறழ் வெஞ்சிலை நாணுவிதான்
வருமே யுரையாய் வலியார் வலியே.

கல்லா மதியே கதிர்வா ணிலவே
செல்லா வீறவே சிறுகா வீருளே
எல்லா மெனையே முனிவீர் நினையா
வில்லா ளனையா தும்விளித் திலிரோ.

தழல்வீ சவுலாய் வருவா டைதழீஇ
அழல்வீ ரெனதா வியறிந் திலிரோ
நிழல்வீ ரையஞ ருடனீர் நெடுநாள்
உழல்வீர் கொடியீ ருரையா டிலிரோ.

வாரா தொழியா னெனும்வண் மையினுல்
ஓரா யிரகோ டியிடர்க் குடையேன்
தீரா வொருநாள் வவிசே வகனே
நாரா யணனே தனிநா யகனே.

தருவொன் றியகா னடைவாய் தவிர்நீ
வருவெண் சிலநா ளினின்மா நகர்வாய்
இருவெண் றுணையின் னருடா னீதுவேல்
ஒருவென் றனியா வியையுண் ணுதியோ.

பேணும் முணர்வே யுயிரே பெருநாள்
நாணின் றுழல்வீர் தனிநா யகனைக்
காணுந் துணையுங் கழிவீர லிர்நான்
பூணும் பழியோ டுபொருந் துவதோ.

முடியா முடிமன் னன்முடிந் திடவும்
படியே முதெடுத் துயர்பா விடவும்
மடியா தெரிவந் துவனம் புகுதும்
கொடியார் வருமென் றுகுலா வுவதோ.

ஆ! ஆ!! தடுக்கப்படாத வலிமையுண்டான என் விதியே! கார்மேகத் திற்கும் கருங்கடலுக்கும் ஒப்பான கறுத்தமேனியை யுடைய என்னுடைய நாயகரானவர் தம்மைப் பிரிந்து தனியே யிருக்கும்படியான என்னுடைய பிரா ணனைத் தருவாரா? பிரளயகால இடியோசைக்குச் சமானமான அவருடைய உக்ர கோதண்டத்தின் குணத்தொனியும் இந்த இலங்கையிலுள்ளவர்கள் கேட்க வருமா? நீ சொல்லென்றும் விவேகமில்லாத சந்திரனே! பிரகாச

மான சந்திரிகையே! தொலையாத இரவே! குறையாத இருளே! நீங்களெல்லாம் ஒருமிக்கக் கூடிக்கொண்டு என்னைமாத்திர முபத்திரவப் படுத்துகிறீர்களே! இதைச் சிறிதாவது நினையாத அந்தக் கோதண்டராமரை இப்படிச் செய்யமாட்டீர்களா வென்றும், ஒ பூங்கொடிகளே! நெருப்பைவாரி இறைக்கும்படி எவ்விடத்திலுஞ் சஞ்சரித்து வருகின்ற வாடைக் காற்றுடனே சேர்ந்துக்கொண்டு என்னைச் சீறுகின்றீர்களே! என்னுடைய உயிர் நிலையை நீங்கள் அறியமாட்டீர்களா? ஸ்ரீ ராமச்சந்திரனுடனே ஆரணியத்தில் நெடுங்காலமாய் உழலுகின்றீர்களே! அவருக்கு நீங்களாவது சொல்லமாட்டீர்களா? நம்முடைய பிராணபதமாய் இருக்கின்றவர் வராமற்போகமாட்டா ரென்கிற நிச்சயத்தினலே யல்லவோ அநேககோடி துன்பத்திற்கும் சலியாமலிருக்கிறேன். ஒ அழிவில்லாத மகா பராக்ரமத்தையுடைய வீரசிகாமணியே! ஸ்ரீமந் நாராயணரே! சமானதிக மில்லாதவரா யிராநின்ற பரமபுருஷரே! விருட்சங்கள் நெருங்கிய காட்டினிடத்தில் உம்முடனே வரும்படி நான் எத்தனப்பட்டபோது, நீ வந்தால் வருத்தப்படுவீர்; வரவேண்டாம்; நான் போய்ச் சிலநாளில் வருகிறேன்; நகரத்தினிடத்திலேதானே யிருக்கக் கடவாயென்று நியமித்தீரே; உம்முடைய கிருபை இப்படி இருக்குமானல், இப்போது நீர் தனித்திருந்து தமியளான என்னுடைய உயிரை வருத்தலாமா? ஒ நான் கைவிடாமற்படிக்கு இருக்கும்படியான என்னுடைய அறியே! என்னுயிரே! வெகுநாளாக நீங்களுமஞ்சி யுழல்கின்றீர். ஆகையால் என் நாயகரைக் காணும்பரியந்தம் என்னைவிட்டு நீங்க மாட்டீர்கள் போலக் காண்கிறதே. நானடையானின்ற பழியை நீங்களும் அடையவேண்டுமா? இறவாத தம்முடைய பிதாவான சக்ரவர்த்தியானவர் இறக்கவும், தாய்மார் தம்பி முதலானவர் இருக்கவும், தாய்மார் முதலானவர்களும் சப்தலோகத்தாரும் துக்கப்பட, இவைகளைக் குறித்து எவ்வளவேனும் இரக்கப்படாமல் என்னை அழைத்துக்கொண்டு வனத்தில் வந்து பிரவேசித்த பாதகர் இன்னமும் வருவார் வருவாரென்று நினைத்து நினைத்து நான் குலாவிக் கொண்டிருப்பதா? என்றிப்படியாய்ப் பலபல விதமாக எண்ணி யெண்ணி உயிர் நடுங்கிப் பிரலாபித்த ஜானகியார் பின்பு சிறிது நேரம் சும்மாயிருந்து ஐயோ! நான் செய்த பாவம் என்னுடைய உயிர் இருக்கிறவரைக்கும் துன்பம் இடைவிடாமல் சம்பவித்துக்கொண்டிருக்கும். இந்தமட்டிலே நான் இறந்து விடுவேனேயானல் சிரமம் நீங்கிக் கீர்த்தி கிடைக்குமென்று அதற்குத் தகுதியான ஆலோசனை செய்கின்றாள்.

கவி

பொறையிருந் தாற்றியென் னுயிரும் போற்றினே
அறையிருங் கழலவற் காணு மாசையால்
நிறையிரும் பல்பக னிருதர் நீணகர்
சிறையிருந் தேனையப் புனிதன் மீண்டுமோ.

உன்னினர் பிறரென வுணர்ந்து முய்ந்தவர்
சொன்னன சொன்னன செவியிற் றாங்கவும்
மன்னுயிர் காத்திருங் காலம் வைகினேன்
என்னின்வே றரக்கியர் யாண்டை யார்கொலோ.

சொற்பிரியாப்பழி சுமந்து தாங்குவேன்
நற்பிறப் புடைமையு நாணு நன்றரோ
கற்புடை மடந்தையர் கதையு ளோர்கடாம்
இற்பிரிந் துய்ந்தவர் யாவர்யா னலால்.

பிறர்மனை யெய்திய பெண்ணைப் பேணுதல்
திறனல தென்றுயிர்க் கிறைவன் தீர்ந்தனன்
புறனல ரவனுறப் போது போக்கியான்
அறனல தியற்றிவே றென்கொண் டாற்றுகேன்.

எப்பொழு திப்பெரும் பழியி னெய்தினேன்
அப்பொழு தேயுயிர் துறக்கு மாணையேன்
ஒப்பரும் பெருமறு வுலக மோதயான்
துப்பழிந் துய்வது துறக்கந் துன்னவோ.

அன்பழி சிந்தைய ராய வாடவர்
வன்பழி சுமக்கினுஞ் சுமக்க வாணுயர்
தன்பழி பெரும்புகழ்க் குலத்துட் டோன்றினேன்
என்பழி துடைப்பவ ரென்னின் யாவரே.

வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கியென்
மஞ்சனை வைதபின் வழிக்கொள் வாயென
நஞ்சனை யானகரும் புகுந்த நங்கையான்
உய்ஞ்சனெ னிருத்தலு முலகங் கொள்ளுமோ.

வல்லியன் மறவர்தம் வடிவிற் றீர்பவர்
வெல்லினும் வெல்கபோர் விளிந்து வீடுக
இல்லிய லறத்தையா னிறந்து வாழ்ந்தபின்
சொல்லிய வென்பழி யவரைச் சுற்றுமோ.

வருந்தலின் மானமா வனைய மாட்சியர்
பெருந்தவ மடந்தையர் முன்பு பேதையேன்
கருந்தனி முகிலினைப் பிரிந்து கன்வரூர்
இருந்தவ ளிவளென வேச நிற்பெனே.

அற்புத னரக்கர்தம் வருக்க மாசற
விற்பணி கொண்டருஞ் சிறையின் மீட்டனாள்
இற்புகத் தக்கலே யென்னின் யானுடைக்
கற்பினை யெப்பரி சிழைத்து காட்டுகேன்.

ஆ! வீரகண்டை அணிந்த ரகுநாயகரைக் காண்வேண்டுமென்கிற ஆசையினால் பலவித வருத்தத்தையும் சகித்துக்கொண்டு, என்னுடைய உயிரையும் விட்டுவிடா திருந்தேன். இப்படி நெடுநாளாக இந்த இராட்சதருடைய நகரத்திலே சிறை யிருந்த என்னை, அந்த மனுகுலோத்தமரான துல்லியரானவர் தொடுவாரா? என்னைப் பரபுருஷர் இச்சித்தா ரென்றறிந்தும், பலபேருஞ்

சொன்ன பழிச்சொற்களெல்லாம் காதிலேவிழக் கேட்டும், இந்த உயிரை வைத்துக்கொண்டு எத்தனைகாலமாய் இருக்கிறேன்? என்னைப் பார்க்கிலும் கடின சித்தத்தையுடைய இராட்சசிகள் வேறே யார்! நீங்காத பழியைச் சுமந்து கொண்டிருக்கின்ற என்னுடைய குடிப்பிறப்பும் நாணமும் நன்றாய் இருக்கிறது. கதைகளிலே சொல்லப்பட்டிருக்கின்ற கற்புடைய ஸ்திரீகளுக்குள் மனைவாழ்க்கையை நீங்கிப் பிராணனோடிருக்கின்றவள் நானல்லாமல் யார் இருக்கின்றார்கள்? அந்நியருடைய கிருஹத்தை யடைந்த பெண்ணை விரும்புகிறது யோக்கிய மல்லவென்று என்னுடைய பிராண நாயகர் என்னைக் கைவிட்டவராகி, வேறொரு ஸ்திரீயைச் சேர்ந்து சுகித்திருக்க, நான் வீண்பொழுது போக்கி அதர்மத்தைச் செய்து வேறெந்த உபாயத்தைக்கொண்டு அதைச் சகிப்பேன்? எப்பொழுது நான் இந்தப் பெரும்பழிக்கு ஆளானேனோ, அப்பொழுதே பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளவேணும். அப்படிச் செய்யாமல் உலகத்தார் அளவிடப்படாத நிந்தைகூற, நான் துப்பழிந்து உயிர்கொண்டிருப்பது மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தை அடைகிறதற்கா? என்னுடைய நாயகரும் என்னுடைய கொழுந்தனும் மனதிலே அன்பில்லாதவர்களாய்ப் பொல்லாத பழியைச் சுமந்தாலும் சுமக்கட்டும். நான் கீர்த்திபெற்ற நல்ல குடியிலே பிறந்தேனே; எனது பழியைத் துடைப்பவர்கள் என்னைப் பார்க்கிலும் வேறே யார் இருக்கிறார்கள்? வஞ்சனையாய் வந்த மானின் பின்னே பர்த்தாவைப் போக்கிப் பின்பு எனக்குக் காவலா யிருந்த எனது மைத்துனப்பிள்ளையையும் அவர் பிறகே போவென்று அனுப்பிவிட்டு, காளகூட விஷத்திற்கு ஒப்பான இராட்சதனுடைய வீட்டில் வந்திருக்கிற நான் பிராணனோடே யிருந்தாலும் உலகம் அங்கீகரிக்குமா? சுத்த வீரர்களான ரகுநாயகரும் இளையபெருமாளும் தங்களுக்கு வந்த குற்றத்தை நீக்கிக்கொள்ளும் பொருட்டு யுத்தஞ் செய்து சத்துருக்களை ஜெயித்தாலும் ஜெயிக்கட்டும்; அல்லவென்று இறந்துபோனாலும் போகட்டும். நான் கிரகதர்மம் தப்பி நடந்தபிறகு சொல்லுகிற என்பழி அவர்களைச் சுற்றுமோ? கவரிமானுக்குச் சமானமாகிய மானமுடைய பதிவிரதைகளுக்கு எதிரே பேதமையையுடைய நான் புருஷோத்தமனை தன் நாயகனைப் பிரிந்து, கள்ளருடைய நகரத்திலே வாசமாயிருந்தவள் இவளென அவர்கள் ஏசும்படியாய்க் கேட்டுக்கொண்டிருப்பேனே? என் பிராண நாயகரானவர் வந்து இராட்சத வர்க்கத்தையெல்லாம் பற்றறக் கொன்று என் சிறை மீட்ட காலத்திலேயும், நீ வீட்டிற்குள்ளே நுழைவதற்கு யோக்கியமானவ ளல்லவென்று சொன்னால் அப்பொழுது எனது கற்பை எவ்விதத்தில் பரீட்சை கொடுத்து நிலை நிறுத்துவேன்? ஆகையால் இறந்துபோவதே தர்மநெறியென நினைத்துப் பிறரும் என்னைச் சாகாமல் காத்துக்கொண்டிருக்கும் இராட்சசிகளும் எனது அதிர்ஷ்டத்தினால் உறங்கிவிட்டார்கள். இதுதான் நல்லசமயம்; இதைவிட வேறு தக்க சமயம் கிடைக்கமாட்டாது என்று ஜானகியானவள் எழுந்து ஒரு குறுக்கத்திப் புதரினிடத்திலே போய்ச் சேர்ந்தாள். அது கண்டு அனுமானவர் பிராட்டியினுடைய கறுத்தை யறிந்துகொண்டு நடுநடுங்கி, இப்படிச் செய்யவேண்டாமென்று இந்தக் கணம் போய்க் கையைப் பிடித்துக் கொண்டு தடை செய்யலாமெனப் பார்த்தால் பதிவிரதா சிரோமணியா யிருக்கிறவர்களைத் தீண்டக்கூடாதேயென மனங் கூசினவராகி, ஸ்ரீ ராம ராமா

வென எதிரே ஓடிவந்து, அம்மா லோககாரணி! லோகபரிபூரணி! லோக நாயகி! லோகமாதா! லோகோத்தமி! அடியேன் தேவர் தேவனுன உம் முடைய பிராண நாயகருடைய தூதனெனத் திருவடியிலே விழுந்து சேவித் துச் சொல்லுகிறார்: தாயே! ஸ்ரீ ராமருடைய ஆக்ஞையைச் சிரசின் மேற் கொண்டு வந்தவன் நான். என்னைப்போல அநேக வானரவீரர்கள் தேவ ரீரைக் குறித்து உலகமெல்லாம் போய்த் தேடுகிறார்கள். அடியேன் செய்த தபோபலத்தினாலே உம்முடைய பாதாரவிந்தத்தை வந்து தரிசித்தேன். தேவரீர் இவ்விடத்தில் யிருப்பதைச் சர்வ லோகநாயகனுன ஸ்ரீ ராமர் அறி யார். இதற்குச் சாக்ஷி என்னவெனில்: இன்னும் இராட்சதக் கூட்டங்கள் மாளாமல் ஜீவனோடே இருக்கிறதுகளே இதுதான். இதைப் பார்க்கிலும் வேறு சாக்ஷியும் வேண்டுமா? திருவுளத்திலே ஐயப்படவேண்டாம். அடை யாளம் கொண்டு வந்து இருக்கிறேன். அதுவும் பார்த்துக்கொள்ளும். இது தவிரச் சுவாமியானவர் திருப்பவள வாய் திறந்து சாதித்தருளிய திருமொழி யும் இருக்கிறது. அதைக் கரதலாமலகமாகச் சொல்லுகிறேன்.. அதையும் கேட்டறிந்து கொள்ளும். மனதில் வேறே யோசனை செய்ய வேண்டா மென்று இந்தப் பிரகாரமாய்ச் சொல்லித் தாழ்ந்து வணங்கி மெலிந்து குடைந்து நிற்கும்படியான அனுமானைப் பார்த்தருளி, முன்பு இராட்ச தனுமெனக் கோபங்கொண்டு பிறகு இரக்கமுற்று இனி ராட்சதனல்ல, நல்லொழுக்கத்திலே நின்றும் ஐம்பொறிகளையும் வென்ற சர்வோத்தமனுக வேண்டும். அல்லவெனில் தேவனுக வேண்டும். மேலும், அறிவிலும் வார்த் தையிலும் பார்த்தால், பரிசுத்தனுகவும் குற்றமற்றவனுகவும் காண்கிறான். ஆகிலும் ராட்சதன்தானுகட்டும்; தேவன்றானுகட்டும்; அல்லவென்று இப் பொழுது கொண்டிருக்கும்படியான உருவத்தின்படி வானர சிரேஷ்டன் தானுகட்டும், இத்தருணத்தில் சொல்லிக்கொண்டு வந்த வார்த்தையானது கொடுமையாய்ச் சொன்னதாய் இருந்தாலும் இருக்கட்டும். எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லி என் மனதை யுருக்கி இந்தச் சமயத்திலே நல்ல தெளிவைக் கொடுத்தானே இதைப் பார்க்கிலும் உயிருக்கு வேறுதவி என்ன செய்யவேண்டும்? அல்லவெனில் மற்று யாதுதானிருக்கின்றதென நினைத்துப் பிராட்டியாரானவர் கிருபையுடனே பார்த்து, எனது உள்ளம் இரங்குகிறது. இவனுடைய மனதிலே கள்ளமில்லை; வஞ்சக மார்க்கத்தை யுடையவனல்லன்; அந்தரங்கமான வார்த்தையுடனே கண்களிலே நீர் பெருகும்படி புலம்புகின் றான். ஆகையால் இவனைக் கேட்கலாமென்று எண்ணி நீ ஆரப்பாவென்று கிருபையுடனே திருவாய்மலர்ந்தருளினாள்.

அத் திருமொழியைச் சிரசிலே தாங்கிக்கொண்டு கைகூப்பித் தெண்டஞ் சமர்ப்பித்து, தாயே! தேவரீரை ஸ்ரீ ராமரானவர் பிரிந்த பிறகு சம்பாதித்த சிநேகனும், சூரியனுடைய குமாரனும், வானர குலத்திற் கெல்லாம் தலைவனும், மிகவும் நல்லவனுமான சுக்ரீவனென்று சொல்லப்பட்ட நாமத்தை யுடையவ னிருக்கிறான். அவனுக்குத் தமையன் வாலியெனச் சொல்லப்பட்டவன்: அவன் முற்காலத்திலே இந்த ராவணனைத் தன் வால் முனையிலே கட்டிக் கொண்டு, எட்டுத் திக்குகளிலும் எழும்பிப் பாய்ந்து ஜெயங் கொண்டவன்;

தேவர்கள் வேண்டிக்கொள்ள மந்தர பர்வதமான மத்தில் வாசுகியைக் கயிறாகச் சுற்றி, அமிர்தம் உண்டாகும்படிக் கடலைக் கடைந்த புஜபல பராக்கிரம முடைய வன். அப்படிப்பட்ட வாலியை உம்முடைய நாயகர் ஒரு அம்பினாலே பிராணனை வாங்கி, அவனுடைய ராஜ்ஜியத்தை அவன் தம்பியாகிய சுக்ரீவனுக்குக் கொடுத்து அவனைத் தோழனாக்கிக் கொண்டார். அந்தச் சுக்ரீவன் எங்க ளுக்கு இராஜாவா யிருக்கின்றவன். அவனிடத்தில் இருக்கின்ற மந்திரிமார் களில் நானேன் ஒரு மந்திரி. நான் வாயுகுமாரன். என் பேர் அநுமானென் பது. எங்கள் இராஜாவினிடத்தில் எழுபது வெள்ளம் சேனைவீரர்கள் இருக் கின்றார்கள். அவர்களில் ஒவ்வொருத்தரே இந்த லோகத்தையெல்லாம் பேர்த் தெடுக்க வேண்டுமென்றாலும் எடுப்பார்கள். சமுத்திரத்தையும் தாண்டுவார்கள். அப்படிப்பட்டவர்க ளெல்லாம் கூட்டமாகக் கூடியிருக்கின்றார்கள். உம்முடைய பிராணநாயகர் எதைக் குறித்து ஆக்யாபித்தாலும் அதைக் குறிப்பினால் தெரிந்துகொண்டு, அந்தக்ஷணமே தவறாமல் செய்வார்கள். அநேக வானரர் கள் ஏழு சமுத்திரமும், அந்தச் சமுத்திரஞ் சூழ்ந்த எழுவகைப்பட்ட தீவா யிருக்கின்ற பூமியும், நாகலோகமும், தெய்வலோகமுமாகிய இந்த அண்டமெல் லாந் தேடி உம்மைக் காணவிட்டால் இந்த அண்டத்துக்கு அப்பாலும் போய்த் தேடும்படி புறப்பட்டுப் போயிருக்கின்றார்கள். இராவணன் உம்மை யெடுத்துக் கொண்டு வருகிறபோது நீர் வஸ்திரத்தில் கட்டிப் பூமியில் எறிந்த ஆபரணக் குறிப்பினால் ஸ்ரீராமர் என்னை யழைத்துத் தனியே வைத்துக்கொண்டு, சொல்ல வேண்டியதாக ளெல்லாஞ் சொல்லித் தென்திசைக்குப் போய்வாவென்று ஆக்ஞாபித்தார். அம்மா! அவருடைய கிருபைக்கு விக்னமும் வருமா? அன்று நீர் கழற்றி எறிந்த ஆபரணங்களை எங்கள் இராஜாவானவர் சுவாமி சந்நிதியில் கொண்டுவந்து வைத்தபோது, அவருக்கு உண்டாகிய துக்கம் என் னால் அறிந்து சொல்லக்கூடுமா? தேவரீரேயல்லாமல் ஸ்ரீ ராமச்சந்திரருக்கு உயிர்நிலை வேறுண்டோ? அந்தத் திருவாபரணந்தான் இந்நாள்வரைக்கும் உம்முடைய மாங்கல்ய சூத்திரத்தைக் காத்தது. அது அப்படி யிருக்கட்டும். வாலியினுடைய குமாரரும் எங்களுக்கெல்லாம் இளவரசுமாகிய அங்கதனென் பவர் இரண்டுவெள்ளஞ் சேனையுடனே தெற்குத் திசையில் தேடுகிறதற்குப் புறப்பட்டு வந்திருக்கிறார். அவர் லங்கைக்குப் போய்வாவென்று சொல்லி என்னை அனுப்பினாரென்று நிந்தனையை நீங்கிய அநுமானவர் விண்ணப்பஞ் செய்து அன்புடனே மனமுருகி நின்றார். இப்படி அவர் சொன்ன வார்த்தை களைக் கேட்டமாத்திரத்தில், மகத்தாகிய பிரமானந்தமானது பொங்கி எழும்பப் பிராட்டியார் பெருமூச்செறிகிறது தவிர்ந்து, இளைத்திருந்த சரீரம் மிகவும் பூரித்து, நான் உஜ்ஜீவிக்கிறதற்குக் காலம் வந்ததோவென்று கண்களில் அருவிபோல ஆனந்தபாஷ்பம் ஒழுக, அப்பா! அந்த இரகு குலோத்தம ருடைய திருமேனி எந்தப்படி இருக்கும் சொல்லென்று அருளிச் செய்தார். அந்த வார்த்தை கேட்டு அநுமானவர் அதிக மகிழ்ச்சியுடனே, அம்மா! ஸ்ரீ ராமருடைய திவ்விய சுந்தரம் இப்படி யிருக்குமென்று உபமான மெடுத்துக் காட்ட ஒருவராலு மாகாது. ஆகிலும் நானேன் அறிந்த மாத்திரம் சொல்லிக் கொண்டு வருகிறேன். அதுகளில் ஏதாவது தவறுவந்தாலும் உமது திருவுளத் தில் ஆயாசப்படாமல், அவருடைய திருமேனியை தேவரீர் அறிந்திருக்கிறவரான

படியினுலே மனதில் சரியாகப் பாவனைசெய்து அங்கீகரித்துக் கொள்ளுமென்று சுவாமியினுடைய திருவழகைப் பாதாதிகேசபரியந்தம் சொல்லத் தொடங்கினர். ஸ்ரீராமருடைய திருவடிகளிரண்டும் செந்தாமரை புஷ்பங்களென்று தேவர்கள் ஸ்துதிசெய்கிறபடியினுலே, அந்தக் கமலத்தைவிடத் தான் வேறே உபமானம் சொல்லுகிறதற்கு என்ன வஸ்து விருக்கின்றது? அப்படிப்பட்ட திருவடியின் காந்திக்குமுன் பவளநிறத்தைக் கருங்குவளையைப்போலக் கறுப்பென்றே சொல்லவேண்டும். அந்தத் திருவடிகளின் விரலழகுக்கு உபமானம் சொல்லுகிறதற்குக் கற்பகத்தின் அரும்பும் செம்பவளமும் எவ்வளவு? அதுகளிருக்கட்டும். இளஞ்சூரிய கிரணங்களை ஒருவேளை ஒக்குமென்று சொன்னலும் சொல்லலாம். அவ்விரல் நகங்களுக்குச் சிறியதுகளும் பெரியதுகளுமாய்க் களங்கமில்லாமல் பத்துச் சந்திரன் உண்டாயிருக்குமானல், அதுகளை ஒப்பிடலாம். அப்படித்தானில்லையே. இனிப் பிரகாசமுண்டாகிய வஜ்ஜிரத்தைச் சொல்லுவோமென்றல் அதில் திரட்சியுண்டாயிருக்கவில்லை. ஆகையால் நகத்தின் திருவழகுக்கு உபமானமறிந்து சொல்லமாட்டேன். அந்தத் திருவடி பூமியிலே பொருந்தாமல் ஆரணியத்தில் நடந்து வருந்தியதானலும், சாமுத்திரிகா சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட லக்ஷணத்திற்குள் அடங்காமல் அதிலும் அதிக லக்ஷணத்துடனே பிரகாசித்தும் புவனமெல்லாம் கவிந்துக்கொண்டிருக்கின்றது. ஆகையினல் அதினுடைய மகிமை ஒருவராலுஞ் சொல்லி முடியாது. கணைக்காலுக்கு உபமானம் அம்பறாத்தூணியென்று சொல்லலாம். சொன்னல் அதுதான் சரியாமா? திருத்தொடைகளுக்கு மதயானையின் தும்பிக்கையை ஒப்பாகச் சொல்வோமென்றல்; அதை அதுகள் வெட்கிப்போம்படி செய்து அதிலும் அதிக அழகாய்ப் பக்ஷிராஜனுடைய கழுத்தைப்போல ஜொலித்துக்கொண்டு, இந்த உலகத்தில் வேறே உபமானமில்லையென்று சொல்லும்படி யிருக்கின்றதுகள். அவருடைய திருவந்திக்கமலத்திற்கு வலமாகக் கழித்தோடுகின்ற கங்காநதியின் நீர்ச்சுழியை உபமானமாகச் சொன்னலும் சரியாகமாட்டாது. ஆகையால் மகிழமலர்போல் விளங்குகின்றதென்று சொன்னல் சொல்லலாம். அதைவிட வேறென்ன உவமைதானிருக்கின்றது? மரகத பர்வதமானது அஞ்சும்படி விசாலித்து உயர்ந்து பிரகாசிக்கின்ற திருமார்பை ஸ்ரீ மகாலட்சுமி விட்டுப் பிரியாதிருக்கும்படித் தவஞ் செய்யாளாகில், அவளைவிடத் தரித்திரமுடையவர்கள் யாரிருக்கிறார்கள்? கமலமென்று வண்டுகள் சுற்றும்படி முழங்கால் பரியந்தம் நீண்ட திருக்கைகளுக்கு ஐராவதத்தினுடைய தும்பிக்கையானது சிறிது உவமையாகுமென்று சொல்லலாம். அது தவிர வேறென்று உவமையாகுமா? பகற்காலத்திலே தாமரைமலர்களைக் கண்டதுபோலத் தோற்றுகின்ற அந்தக் கைகளின் நகங்கள், முற்காலத்திலே இரணியனுடைய வஜ்ஜிர சரீரத்தைப் பிளந்தபடியினுலே இப்பொழுது அதுகள் கூர்மழுங்கியிருக்கின்றதுகள். அந்த அழகிய மணவாளருடைய திருத்தோள்களுக்கு உபமானமாகப் பர்வதத்தைச் சொல்லுவோமென்றல், அது திரண்டிருக்கவேண்டும். பிரகாசமுண்டாயிருக்கவேண்டும். விஜயலட்சுமி வாசமாயிருக்கவேண்டும். வில்நாரி புரண்டுகொண்டிருக்கவேண்டும். கீர்த்தி பொருந்தியிருக்கவேண்டும். ஒன்றைப்போல இரண்டும் சேர்ந்திருக்க வேண்டும். இப்படியெல்லாமில்லாததினுலே அப்புஜங்களுக்குப் பர்வதம் உபமானமாகமாட்டாது. திருக்கழுத்திற்குச் சமுத்திரத்திலுண்

டாகிய சங்கத்தையும், கன்னிக் கழுகையும், தெரியாதவர்கள் உபமானமாகச் சொல்லுவார்கள். சேஷசாயியாகிய ஸ்ரீ மகாவிஷ்ணு இடது கரத்தில் ஏந்து கின்ற பாஞ்சசன்யமிருக்க, அதுகளையெல்லாம் உபமானிக்க எனக்குச் சம்ம தமா யிருக்கவில்லை. எம்பெருமானுடைய திருமுகத்திற்குச் செங்கமலத்தை உபமானம் சொல்லலாமென்றால், திருக்கண்களுக்கு உபமானவஸ்து வேறென்ன சொல்லுவேன்? பூரணச்சந்திரனைச் சொல்லலாகாதாவென்று தேவரீர் அரு ளிச் செய்வீராகில், அந்தச் சந்திரன் தன் பிரகாசத்துடனே உருவம் நாளுக்கு நாள் மெலிந்து தேய்ந்து போகின்றதனால் திவ்வியமாகிய தேஜசுடனே கூடிய அந்தத் திருமுக மண்டலத்திற்குச் சமானமாகத் தக்கதன்று. திருவாயின் அழகுக்குட் சிவந்த நிறத்தையுடைய தாமரை ஒப்பாகுமென்றால் அது லஜ் ஜைப்படும். அப்படியிருக்கக் குளிர்ச்சி பொருந்திய அமிர்த மூறுகின்ற மிருது வாகிய இன்சொல்லும் குறுநகையு மில்லாமலிருக்கின்ற பவளமா அதற்கு உவமை சொல்லத்தக்கது? தகாததாயினும் பெரியோர்களாலே அந்தச் செவ் வாய் திருப்பவளமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. கேளுமம்மா ஜானகி யாரே! சுவாமியின் வரிசையாகிய தந்தங்கள் முத்துக்களோ? நிலவின் துளிர் களோ? அமிர்தத்தின் துளிர்களோ? தர்மத்தின் முளைகளோ? மெய்மையின் அரும்புகளோ? அல்லது மற்றெதுகளோ? அதுகளின் திருவழகுக்கு உப மானம் என்னவென்று சொல்லுவேன்? கிருபாநிதியாகிய ஸ்ரீ ராமபிரா னுடைய மேல்வாய் அதரத்தைச் சேர்ந்திருக்கின்ற திருமூக்கு இந்திர நீலக் கொழுந்தும் மரகத ரத்தின காந்தியும்போல பசந்த மேனியையுடையதாய் இந் திரகோபத்தைக் கவ்விய பச்சோந்தியைப்போலப் பிரகாசிக்கின்றதென்று சொல்லுவோமென்றால், அதுவும் உவமையாக மாட்டாது; அந்தக் கரதூஷண திரிசிரர்களுடைய யுத்தத்திலே அனேக இராக்ஷத கவந்தங்களும், பலவகைப் பட்ட பேய்களும், தேவர்களும், ரிஷிகளும், தர்மமும், வேதமும், இனி ராக்ஷத குலம் கட்டழிந்து போமென்று சந்தோஷித்துக் குதித்து கூத்தாடவும், சுவா மியினுடைய பிரசண்ட உத்தண்ட கோதண்டமானது வளையவும், அன்று வளைந்த அவருடைய திருப்புருவத்திற்கு உபமானம் நீரே பார்த்துக்கொள் ளும். நெற்றியின் திருவழகுக்கு உபமானம் சொல்ல வேண்டுமானால் பிறையைத்தான் சொல்லவேண்டும். அதுவும் நடுவே மறுபடியும் வளர்வதும் தேய்வதும் பாம்பின்வாயில் அகப்படுவதும் உதயமாவதும் அஸ்தமிப்பதும் இல்லாமல், பகற்காலத்திலும் பிரகாசிக்கின்றதாய் இருளின்கீழ் எந்நாளும் சேர்ந்திருக்குமானால் அவருடைய திருநெற்றிக்கு உவமையாகும். கேசமானது நீண்டு சுழன்று நெய் தோய்ந்து இரண்டு நெறித்து நெருங்கி, நீலவர்ணமாய் மூறுக்குற்றுச் சரிந்து, சடைசுருண்டு, அகிற் புகையுடனே மற்றுமுள்ள வாசனை களை யூட்டவும், புஷ்ப மாலைகளைச் சூட்டவும், வேண்டுவதில்லை யென்னும்படி இயற்கையாய்த் தெய்வமணம் வீசிக்கொண்டு இப்போது ஜடையாயு மிருக் கின்ற தென்றால் அதை மேகத்திற்குச் சமானமாகுமென்று சொல்வது இழி வல்லவோ? பிதாவானவர் பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு பாக்கியத்தை யும் ராஜ்ஜியத்தையும் பெற்றிருந்து ராஜரீகஞ் செய்யென்று சொன்னபோ தும், சிறியதாயார் ராஜ்ஜியத்தை விட்டு ஆரணியத்திற்குப் போவென்று சொல்லப் புறப்பட்டு வந்தபோதும், ஒரு தன்மையாய் நடந்த அந்த ஸ்ரீ ராம

ருடைய நடையை இழிவாகிய ரிஷபத்தின் நடைக்குச் சமானமாயிருக்கின்ற தென்று சொன்னல், அப்படி எந்நாளும் ஒரு தன்மையாகிய நடையில்லாத ரிஷபத்தை உபமானமாகச் சொல்லுகிறவர்கள் என்னுடைய நடையைத்தானே சொல்லலாகாதாவென்று மதயானை மனம் வருந்துமே. ஆகையால் இரண்டையும் சொல்லக்கூடாதம்மா வென்று இவ்வண்ணமாக அநுமானவர் சொல்ல, அதுகளையெல்லாம் கர்ணமிர்தமாகக் கேட்டுக்கொண்டு வந்த பிராட்டியார் அக்கினியிலிட்ட மெழுகுபோல உருகி, தம்மை அறியாமல் பரவசப்பட்டு மனங் கரைந்தார். அப்படி உருகி நின்ற சீதாலட்சுமியை மாருதியானவர் பூமியில் விழுந்து சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டு, என்தாயே! சர்வலோக சரணியனுகிய உம்முடைய பிராணநாயகர் சொல்லிய சில குறிகளும், அடையாளச் சொற்களு மிருக்கின்றதுகள். அதுகளையும் சொல்லுகிறேன் கேளு மம்மாவென்று சொல்லுகின்ருர்.

கவி

நடத்தலரி தாகுகெறி நாள்கள்சில தாயர்க்
கடுத்தபணி செய்திவ ணிருத்தியென வச்சொற்
குடுத்த துகி லோடுமுயி ருக்கவுட லோடும்
எடுத்தமுனி வோடுமய னின்றதுமி சைப்பால்.

நீண்டமுடி வேந்தனரு ளேந்திநிறை செல்வம்
பூண்டதனை நீங்கிகெறி போதலுறு நாளின்
ஆண்டகை ராமையொடு வாயிலக லாமுன்
யாண்டையது காணெனவி சைத்தது மிசைப்பாய்.

வள்ளரிய தேர்தருசு மந்திரனி சைப்பாய்
வள்ளன்மொழி வாசகம னத்துயர்ம றந்தாள்
கிள்ளையொடு பூவைகள்கி னத்தல்கிள வென்னும்
பிள்ளையொடு தன்றிறமு ணர்த்துதி பெயர்த்தும்.

மீட்டுமுறை வேண்டுவன வில்லையென மெய்ப்பேர்
தீட்டியது தீட்டரிய செய்கையது செவ்வே
நீட்டிதென நேர்ந்தனெ ஞெடிய கையாய்
காட்டினெ ராழியது வாணுதலி கண்டாள்.

இறந்தனர் பிறந்தபய னெய்தினர்கொ லென்கோ
மறந்தன ரறிந்துணர்வு வந்தனர்கோ லென்கோ
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்ததுகொ லென்கோ
திறந்தெரிவ தென்னைகொலி னன்னுதலி செய்கை.

இழந்தமணி புற்றரவெ திர்ந்ததென லாளுள்
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள்
குழந்தையையு யிர்த்தலமல டிக்குவமை கொண்டாள்
உழந்தவிழி பெற்றதொரு யிர்ப்பொறையு மொத்தாள்.

வாங்கினண்மு லேக்குவையில் வைத்தனள்சி ரத்தால்
தாங்கினண்ம லர்க்கண்மிசை யொத்தின டடந்தோள்
வீங்கினண் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதுப்போ
டேங்கின ளுயிர்த்தன ளிதின்னதென லாமே.

மோக்குமுலை வைத்துறமு யங்குமொளிர் நன்னீர்
நீக்கிநிறை கண்ணினைத்த தும்பெடு நீள
நோக்குநுவ லக்கருது மொன்று நுவல் கில்லாள்
மேக்குயிமிர் வீம்மலள்வி முங்கலுறு கின்ருள்.

நீண்டவிழி நேரிழைதன் மின்னினிற மெல்லாம்
பூண்டதொளிர் பொன்னினைய பொம்மனிற மெய்யே
ஆண்டகைதன் மோதிரமு டுத்தபொரு ளெல்லாம்
தீண்டளவில் வேதிகைசெய் தெய்வமணி கொல்லோ.

இருந்துபசி யாலிடரு முந்தவர்க ளெய்தும்
அருந்துமமு தாகியத றத்தவரை யண்மும்
விருந்துமென வாகியது வீயுமுயிர் மீளும்
மருந்துமென வாகியது வாழிமணி யாழி.

முன்னம் சுவாமியானவர் தேவரீரை நோக்கி, வழி நடக்கிறதேர் உனக்குப் பிரயாசம், சிலநாள் மாத்திரம் எனக்குத் தாய்மார்களாகிய உங்கள் மாமிமார்களுக்கு உரிய பணிவிடைகளைச் செய்துகொண்டு நீ இவ்விடத்தில் தானேயிருவென்று சொன்னவுடனே, நீர் உடுத்த வஸ்திரத்தோடும், உயிர் பதைக்கின்ற தேகத்தோடும், மிகுந்த கோபத்தோடும், திருமாளிகையை விட்டுப் பிரயாண சன்னகமாய் அப்பால் வந்து நின்றீராம். அதையும் சொல்லென்றும், அதுவுமல்லாமல் மகுடாதிபதியாகிய தசரதச் சக்ரவர்த்தியினுடைய ஆக்ஞையைச் சிரசாகவகித்துத் தாம்பெற்ற பரிபூரணமாகிய சம்பத்துக்களை யெல்லாம் விட்டு நீங்கி வனத்திற்கு வரும்போது, பட்டணத்து மதிலையும் கோட்டை வாயிலையும் தாண்டி வெளிப்படாததற்கு முன்னே தானே காடு எங்கேயென்று கேட்டீராம். உங்களைத் தேரின்மேல் ஏற்றிக் கொண்டுவந்து வழிவிட்ட சுமித்திரருடனே என் தங்கைகளுடனே உங்கள் தமக்கையாகிய சீதையானவள் ஸ்ரீ ரகுநாயகர் திருவாய் மலர்ந்தருள்கின்ற வசன சாதுர்யத்தால் மனை துக்கமெல்லாம் தணியப்பட்டாளென்று கூறும். நான் வளர்த்த கிளிப்பிள்ளைக்கும், நாகணவாய்ப் பறவைக்கும், சொற்கள் கற்பித்து, அதுகள் இளைத்துப் போகாமல் ஜாக்கிரதையாகக் காப்பாற்றச் சொன்னளென்றும் மற்றுஞ் சொல்லவேண்டியது என்ன இருக்கின்றதென்றுஞ் சொல்லித் தமது திருநாமத்தைப் பதித்திருக்கின்றதும் எழுதப்படாத சித்திரவேலை யுடையதும் அழகும் பிரகாசமும் உள்ளதுமாகிய ஒரு திருவாழியை எடுத்து, இதை ஜானகி கையிற் கொடுவென்று கொடுத்தாரென்று இரண்டு கைகளாலும் ஏந்திக் கொண்டு காண்பித்தார். அந்தக் கணையாழியைப் பிராட்டியார் கண்டார். கண்டபொழுது ஸ்ரீ ரத்தினமாயிருக்கின்ற ஜானகியாருக்கு உண்டாகிய சந்தோஷத்தை என்ன சொல்லுவேன்? மானிடராய்ப் பிறந்தும் மோட்சம்பெற

வேண்டிய முயற்சியில்லாமல் இறந்தவர்கள், அதைத் தற்செயலாய் அடைந் தார்களென்பதாகச் சொல்லுவேனே? ஒரு பொருளை வைத்து மறந்துபோய்க் காணுமல் தேடித்தவர்கள், மறுபடி அந்தப் பொருளை நினைத்தெடுத்தார்க ளென்பதாகச் சொல்லுவேனே? தேகத்தைவிட்டு நீங்கிப்போன உயிரானது, மீளவும் அந்தத் தேகத்தில்தானே வந்து பிரவேசித்த தென்பதாகச் சொல்லு வேனே? இந்தப் பிராட்டியாருடைய செய்கையை அறிவதெப்படி? நாகமானது தானிழந்த தனது மாணிக்கத்தைத் தன் கண்ணுக்கு எதிரே யிருக்கக்கண்டது போலவும், தம்முடைய கையைவிட்டு நீங்கிய பிதுராஜ்ஜிதமான திரவியம் கிடைக்கப்பெற்றவர்கள் போலவும், பிள்ளைக்கு ஏக்குற்றிருந்த மலடியானவள் பிள்ளையைப் பெற்றதுபோலவும், கண்ணில்லாமலிருந்த ஆத்மா கண்பெற்றது போலவும், அபரிமித ஆனந்தத்துடனே அதை வாங்கி ஸ்தனங்களினிடத்தில் வைத்து, சிரசின்மேல் தாங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டு, தோள்கள் பூரித்து, மெலிந்து குளிர்ந்து வெதும்பி ஏங்கிப் பெருமூச்செறிந்தார். அதை இன்னதென்று ஒருவரால் தெரிந்து சொல்லக்கூடுமோ? அந்தத் திருவாழியை மூக்கினிடத்தில் வைத்து ஆக்ராணிப்பார். ஸ்தனங்களின்மேல் சேர்த்து முயங் குவார். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் கண்களில் நீர் ததும்ப நெடுநேரம் உற்றுப் பார்ப்பார். அதனுடனே பேசலாமென்றும் நினைப்பார்; ஒன்றுஞ் சொல்லாதிருப்பார். மகிழ்ச்சியினுல் சரீரம் புளகித்து மயிர்க்குச் செறியப்படுவார். அதை விழுங்குவோமென்றும் இச்சிப்பார். அந்த மோதிரத் தின் பிரகாசத்தினுல் மின்னலுக்கு ஒப்பாகிய பிராட்டியாருடைய திருமேனி முழுதும் மாற்றுயர்ந்த பொன்னிறமாய் ஜொலிக்கத் தலைப்பட்டது. அதனுல் அந்தக் கணையாழியானது தீண்டின மாத்திரத்தில் சகல வஸ்துக்களையும் பொன்னுகச் செய்யும் ஸ்பரிசவேதியென்கிற தெய்வீகமாகிய இரத்தினந்தானு? மற்றும் ஜானகியாருக்கு அநேக நாள் பசியாயிருந்தவர்களுக்குத் தேவாமிர்தம் கிடைத்தது போலவும், தர்மசிந்தை யுள்ளவர்கள் இடத்தில் வந்த விருந்தினர் போலவும், பிராணன் போகின்ற சமயத்திலே கிடைத்த சஞ்சீவிமருந்துபோலவு மிருந்தது. மாணிக்கமயமாகிய அத்திருவாழியானது, இவ்வாறுக உயிரை உருக்குதலால், அந்த ஜகத்மாதாவானவள் கண்ணீர் முத்துப்போல ஸ்தனங் களின்மேல் துளிக்க, பவளம்போலப் பிரகாசிக்கின்ற திருவாயிலிருந்து உற் பத்தியாகிய சொற்கள் குழற, அநுமானே! என் பிராணனைக் கொடுத்தாய். ஆதலால் நீ பரமோத்தமனென்று சொல்லிப் பின்னுஞ் சில வார்த்தை சொல்லுகின்றுள்:

கவி

மும்மையா முலகந் தந்த முதல்வற்கு முதல்வன் றூதாய்ச்
செம்மையா லுயிர்தந் தாய்க்குச் செயலென்னு லெளிய தண்டே
அம்மையா யத்தனுய வப்பனே யருளின் வாழ்வே
இம்மையே மறுமை தானு நல்கினை யிசையோ டென்றுள்.

பாழிய பணைத்தோள் வீர துணையிலே னபரிவு தீர்த்த
வாழியர் வள்ளலே யான் மறுவிலா மனத்தே னென்னின்
ஊழியோர் பகலாயோதும் யாண்டெலா முலக மேழும்
எழும்வீ வுற்ற ஞான்று மின்றென விருத்தி யென்றாள்.

ஓ சொர்க்கமத்திய பாதாளமாகிய மூன்று லோகத்திலுமுள்ள சகல உயிர்களையும் சிருஷ்டித்த முதல்வனுக்கும் முதல்வனானவனே! என் சரீரத்தை விட்டு நீங்கிப்போய் விடுகின்ற உயிரைக் கொடுத்த உனக்குப் பிரதியுபகாரம் நானென்ன செய்யப்போகின்றேன்? என்னால் செய்கிறதற்கு எளிதாயிருக்கின்றதா? ஓ எனக்குத் தாயும் தந்தையுமாகிய அப்பனே! ஓ கிருபைக்கு வாழுமிடமா யிருக்கின்றவனே! இம்மைப்பயனும் மறுமைப் பயனுமாகிய இரண்டையும் கீர்த்தியுடனே எனக்குக் கொடுத்தாய். ஓ பராக்கிரமமுண்டாகிய பருத்த தோள்களையுடைய வீரசிகாமணியாகிய ஆஞ்சநேயனே! ஓ இந்த லங்கையில் ஒரு துணையுமில்லாமல் பரிதாபப் பட்டுக்கொண்டிருந்த என்னுடைய துயரத்தைத் தவிர்த்து ரக்ஷித்த வாழ்வினை யுடையவனே! ஓ உதாரத்துவமுள்ளவனே! நான் மனதில் எவ்விதமான ஒரு களங்கமுமில்லாத பதிவிரதையானால் ஊழி காலங்களை ஒவ்வொரு நாளாகச் சொல்லப்பட்ட கற்பகால மெல்லாம் இந்த ஈரேழு லோகங்களும் அழிந்தாலும், இன்று நீ எப்படி அழிவில்லாம லிருக்கிறையோ இப்படியே சுகமா யிருக்கக்கடவாயென்று அநுக்கிரகம் செய்தாள். அப்படி அதிக சந்தோஷத்துடனே அநுக்கிரகஞ் செய்து வாழ்த்தி, ஓ குணநிதியாகிய அனுமானே! என் பிராணநாயகராகிய அந்த வீரராகவ சுவாமியார் எங்கே எழுந்தருளி யிருக்கின்றார்? தம்பியும் அவரும் உன்னை எவ்விடத்தில் கண்டார்கள்? என்னுடைய சமாச்சாரம் அவர் எப்படி யறிந்தார்? யார் அவருக்குச் சொன்னார்கள்? என்று பிராட்டியார் கேட்க, வஜ்ரதம்ஷ்ட்ரம் பத்தை ஒத்த தோளினையுடைய மாருதியானவர் மிகவும் சந்தோஷமாய் நடந்ததைச் சொல்லுகின்றார். கேளுமம்மா கிருபாநிதியே! இராவணன் சொல்ல மாரீசனானவன் மாயையால் சொர்ணமயமாகிய மாருக வடிவுகொண்டு வந்தான். அவனைத் தொடர்ந்துபோய் இது மாயமானென்று அறிந்து ஸ்ரீ ராமர் பாணப் பிரயோகஞ்செய்ய, அந்தப் பாவி பூமியில் விழுந்து மாண்டுபோகின்ற சமயத்தில், உம்முடைய மனதைக் கலக்க வேண்டுமென்று ஸ்ரீ ரகுநாயகருடைய குரல் போலவே அழைத்தான். அந்தக் குரல் கேட்டு இலட்சுமணர் சந்தேகிக்காமலிருக்கும்படி சுவாமியானவர் கோதண்டத்தின் குணத்தொனி எழுப்பினர். அப்படி குணத்தொனி எழுப்பியும் விதிப்படியே நடந்தது. பின்பு ஸ்ரீ ராகவர் இந்த அரக்கனுடைய வஞ்சகமாகிய குரலோசையானது வீணாய்ப் போகாது, சிறிது நேரத்திற்குள்ளே ஏதோ பிரமாதமாய் விளையுமென்று எண்ணி அங்கு நின்றும் அதிசீக்கிரமாக வரும்போது. உம்மைத் தனியேவிட்டு இளையபெருமாள் எதிரே வரக் கண்டார். கண்ட மாத்திரத்தில் தம்பியின் முகக்குறியினால் அவருடைய உட்கருத்தை அறிந்துகொண்டு நடந்த செய்தியை அவர் வாய்விட்டுச் சொல்லவுங் கேட்டு, அந்த க்ஷணம் பஞ்சவடி காட்டிற்கு வந்து பர்ணகசாலையிற் பார்க்க உமது திருவுருவத்தைக் காணுமல் உயிர் சோர்ந்திருந்தார். அன்றுமுதல் அவருக்கு உண்டாகிய வியாகூலம் சொல்ல முடியாது. இப்

பொழுது அடியேன் தேடிக்கொண்டு வந்து தேவரீரை நேராகக் கண்டேன். நீர் க்ஷேமமாய் இருக்கிறபடியினாலே இனி ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு யாதொரு அபாயமுமில்லை. முன்பு உண்மையாகிய உயிர்நீங்கிப் பொய்மையாகிய உயிரைத் தாங்கிக்கொண் டிருப்பதுபோலிருந்த அந்தப் பரம புருஷனுடைய இருதயத்தில் நீர் பிரியாமலிருக்கிறபடியினாலே, அவருக்கு நாசம் வருமா? அவருடைய சாட்சாத் உயிராகிய நீர் இவ்விடத்திலிருக்கின்றீரே. ஆகையால் அவ்விடத்திலே அவர் எந்த உயிரை விடுவார்? கேளுமம்மா புவனகாரணி! அப்படியிருந்து சுவாமியானவர் அந்தப் பஞ்சவடியை விட்டு நீங்கி, காடுகள் மலைகள் காணுறுகளெல்லாம் போய்த் தேடி, அப்பால் பிராணனில்லாமல் நடக்கின்ற சூத்திரப் பிரதிமையைப்போல நடந்து, தன் பிராணனைக் கீர்த்தியாகிய பொருளுக்காக விற்ற பக்ஷிராஜனாகிய ஜடாயு இருக்குமிடத்தில் வந்து சேர்ந்தார். சேர்ந்து அவருடைய சரீரம் பின்னப்பட் டிருக்கின்றதைப் பார்த்து மிகுந்த துக்கத்தை அடைந்து, ஐயா! உமக்கு இப்படிப்பட்ட ஆபத்துவந்து சம்பவித்ததற்கு காரணமென்ன சொல்லவேண்டும் என்று கேட்க, ஜடாயுவானவர் இந்த லங்காதிபதியாகிய பாவியானவன் தேவரீரை வஞ்சித்து எடுத்துவந்த சமாச்சாரத்தைச் சொல்ல, உலகங்களெல்லாம் எரிந்து நீறாய் விடுமென்று சொல்லும்படி ஸ்ரீ ராமருக்கு உக்கிரமாகிய கோபாக்கினி ஜொலித்து எழும்பியது. அப்படிக் கோபித்துத் தமது கையிலிருக்கின்ற வில்லைப் பார்த்து இந்தத் திரிலோகங்களும் வெந்து உதிர்ந்து போகும்படி உஷ்ணிக்கின்ற ஒரு பாணத்தினாலே பொடிப்படுத்துகிறேனென்று ஆர்ப்பரித்தபோது அவருக்குச் சமீபத்தில் இருந்த பிதாவாகிய ஜடாயுவானவர் அது கண்டு, என்ன அப்பா! ஒரு அற்பனனவன் அபசாரஞ்செய்ய அதைக் குறித்து உலகத்திலுள்ள ஆத்ம கோடிகளுக்கெல்லாம் துன்பம் ஜனிக்கும்படி நீ கோபிக்கலாமா? மனம் பொறுக்கவேண்டு மென்று சொல்லி ஆற்றினர். அதனால் கோப மாறி, ஐயா! அந்த ராட்சதன் எந்தவழியே போனான்? எந்த லோகத்திலுள்ளவன்? அவனுடைய இருப்பிடம் எது? சொல்லவேண்டு மென்று கேட்க. அது சொல்ல வாயைத் திறந்த ஜடாயுவானவர் பொல்லாத விதிவசத்தினாலே இறந்துபோனர். அவர் இறந்ததைப் பார்த்து, தம்பியும் தமயனுமாகிய இருவரும் துக்கசாகரத்தில் விழுந்து மூழ்கி, சகலமுந் தெரிந்தவர்களானபடியினாலே உடனே தேறி, ஆண்மையையுடைய அந்தத் தந்தைக்குச் செய்யவேண்டிய உரிமைக்கடன்களெல்லாம் தேவர்களும் பிரமிக்கும்படிச் செய்து அனுசிதமாகிய செய்கையையுடைய அந்த இராக்ஷதனை நாம் தேடிப் பார்ப்போமென்று அவ்விடம் விட்டு மேக மண்டலத்தை அளாவிய கொடிமுடிகளையுடைய அநேக மலைகளையும் அநேக வனங்களையும் கடந்துபோய்த் தேடியும் உம்மைக் காணுதலினாலே சோர்ந்து, அருமையாக அச்சோர்வு நீங்கி, நேத்திரங்களிலிருந்து பிரவாகமாய் ஒழுகுகின்ற ஜலமானது பூமியைச் சேறாக்க அக்கினியிலிட்ட மெழுகு போல உருகி உடல் கரைந்து கிலேசித்து அறிவு தடுமாறிப் பிரலாபித்த விதத்தை நான் என்னவென்று சொல்லப் போகின்றேன். அம்மம்மா! பிரபஞ்சத்தாருக்குள்ளே கர்மத்தைக் கடந்தவர்கள் யாரிருக்கின்றார்கள். புஜபல பராக்கிரமத்தையுடைய வீரசிரோமணியாகிய சுவாமியானவர் மதிமயக்கங்கொண்டு ஐம்புலன்களும் வேறுபட்டு, ஊமத்தம் பூவையும் பாம்பையும் சிரசிலே

சூடிய பித்தனுகிய சிவனைப்போல உன்மத்த குணத்தையுடையவராய்க் கோதாவரி நதியைப் பார்த்து, ஓ கோதாவரியே! உன்னிடத்தில் பவளக்கொடிக்குச் சமானமாகிய சீதையானவள் ஸ்நானஞ்செய்கிறவள் ஆனபடியினல் அவளை நீ தேடிக்கொண்டு வந்து என்னிடத்தில் கொடுக்கவேண்டும். கொடாமற்போனல் நெருப்பாய் எரிந்துபோவாய் என்று கோபிப்பார். பர்வதங்களை நோக்கி, ஆ பர்வதங்களே! சீக்கிரமாக நீங்கள் போய்க் கோமள ரத்தினக் கொம்புக்கு ஒப்பாகிய என் நாயகியைக் காட்டுங்கள்; காட்டாவிட்டால் உங்களுடைய குலங்களையெல்லாம் இப்பொழுதே பிளந்து எரிந்து கரிந்து போகும்படி செய்கின்றதற்கு இந்த அம்பு ஒன்றுமே போதுமென்று கோபிப்பார். மான் கூட்டங்களைக் கண்டு மான்களே! ராட்சதர் பொன்மானுருவத்தைக்கொண்டு மாயைச் செய்ததினுலல்லவா என் பிராணபதமாய் இருந்தவள் என்னைவிட்டுப் பிரிந்துபோனுள்; அதுபற்றி என்னுடைய வில்லிலே தொடுக்கப்பட்ட அஸ்திரத்தினுலே உங்களுடைய நாமமற்றுப் போகும்படி செய்கிறேனென்றும் மகத்தாகிய கோபங்கொண்டார். இவ்வண்ணமாக மனங்கலங்கி ஸ்ரீ ராமர் துயரப்பட, அதுகண்டு அவருடைய உயிருக்கு ஒப்பாயிருக்கின்ற தம்பியானவர் அப்பொழுது இதமாகச் சொன்ன சொல்லாகிய மருந்தினல் தேறி உயிர்பெற்று, அந்த இளையபெருமானுடனே கூடிக்கொண்டு புறப்பட்டுச் சூரியனல் உற்பத்தியாகிய எங்கள் சுக்கிரீவ மகாராஜனிருந்த ரிசியமூக பர்வதத்திற்கு வந்தார். வந்த விடத்தில் தேவர்கள் உஜ்ஜீவிக்கும்படி ஸ்ரீ ராம லட்சுமணர்களுக்கும் சுக்கிரீவ மகாராஜனுக்கும் சிநேகமுண்டாயிற்று. அத்தருணத்தில் தங்களுக்குச் சம்பவித்த ஆபத்தையும், அது காரணமாகத் தாங்கள் அவனைத்தேடி வந்ததையும், ஒன்றெழியாமற் சொல்லி மனது புண்ணுக நோகும்படி வருத்தப்படுமளவில், உம்முடைய திருவாபரணங்களை நாங்கள் காட்டினேம். வேதத்தினலும் ஞானத்தினலுங் காணப்படாத பரப்பிரம்மமாகிய இராகவர் அதுகளைக் கண்டு, சரீர ஸ்மரணையில்லாமல் மூர்ச்சித்திருந்தார். அவ்வாறு மூர்ச்சித்திருந்து பின்பு தெளிந்து, அந்த ரிசியமூக பர்வதத்திற்கு அப்புறத்திலுள்ள கிஷ்கிந்தா பர்வதத்தில் இருக்கின்றவனும், இந்த ராவணனை முன்னளில் தன் வாலிலே கட்டிக்கொண்டு மலைகளையும் கடல்களையும் தாவினவனும், சுக்கிரீவனுக்குத் தமையனும் பகைவனுமாகிய வாலியென்பவனை ஒரு பாணத்தினலே பிராணனை வாங்கி, தம்மிடத்தில் அதிக இஷ்டத்தையுடையவனுகிய அவன் தம்பியினது துயரத்தை யாற்றி அவனுக்கு ராஜ்ஜிய பட்டாபிஷேகமும் செய்வித்தார். பின்பு அவனை ஸ்ரீ ராமர் சேனைகளைச் சேகரஞ் செய்து கொண்டு வரும்படி ஆக்கியாபித்து அனுப்பிவிட்டு, அவன் அந்தச் சேனைகளைக் கூட்டிக்கொண்டு வருகின்றதை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது மாரிக்கால மானபடியினலே ஆறுமாத பரியந்தம் மதங்க பர்வதத்திலிருந்தார். பின்பு வந்து சேர்ந்த வானரசேனைகளைச் சுக்ரீவனுடைய ஆக்கினையினலே எட்டுத் திக்குகளிலும் அதுகளுக்கு அப்புறத்திலும்போய் உம்மைத் தேடும்படி அனுப்ப, அடியேனைத் தென்திசைக்குப் போய் வாவென்று அனுப்புவிக்க வந்தேனென்று பூதபௌஷ்ய வர்த்தமானமாகிய திரிகால அதிசயங்களையும் அறியத்தக்க திவ்விய ஞானியாகிய ஆஞ்சநேயர் மகத்தாகிய அன்புடனே இரண்டு கால்களையும் சேரவைத்துக் கைகட்டி வாய் புதைத்துக்கொண்டு நின்று

நைச்சியமாக விண்ணப்பஞ் செய்தார். அதுகளைக் கேட்டுச் சீதாபிராட்டியார் சாத்வீக பிர்மமாகிய ஸ்ரீ ராமர் படும் உபத்திரவங்களையெல்லாம் நினைத்து நினைத்து, எலும்பும் உருகிக் கரைய இரங்கி ஏங்கி, துக்கமும் சந்தோஷமும் மாறிமாறித் தோன்றுகின்ற உள்ளத்தை யுடையவராய்க் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகப் பூரணகிருபையுடனே பார்த்து, அப்பா குழந்தாய்! அநுமானே! நீ வந்த மார்க்கத்தின் மத்தியிலே சமுத்திர மிருக்கின்றதே; அதை எப்படி கடந்துவந்தாய் சொல்லென்று கேட்டருள, தாயே! தேவரீருக்கு நாயகராகிய ஸ்ரீ ராமச்சந்திரருடைய பொன்னடியைத் தியானிக்கின்றவர்கள் ஒழியாத மூலப் பிரகிருதியாகிய பெரிய மகா சமுத்திரத்தைக் கடந்து பரமபத க்ஷேத்திரத்தைச் சேர்கின்றதுபோல, தாசனுகிய நானும் அவர் திருவடியை ஸ்மரணை செய்துக்கொண்டு என் காலினாலேதான் இந்தக் கடலைக் கடந்து வந்து உம்முடைய சரணரவிந்தத்தை அடைந்தேனென்று சொன்னார். அது கேட்டுச் சீதாபிராட்டியார் ஆச்சரியப்பட்டு, கேளப்பா! இவ்வளவு சொற்பமாகிய சரீரத்தையுடைய நீ அவ்வளவு பெரிதாகிய சாகரத்தைக் கடந்துவந்தது தபோபலத்தினாலேயோ? அல்லது அணிமா - மகிமா - கரிமா - லகிமா - பிராப்தி பிரகாமியம் - ஈசத்துவம் - வசித்துவ மென்கின்ற அஷ்டமா சித்திகளாலேயோ? சொல்லக் கடவாயென்று புன்சிரிப்புடனே கேட்க, அதற்கவர் ஓ ஜகதீஸ்வரியே! என்னுடைய சொற்பமாகிய உருவத்தைப் பார்த்தருளுமென்று இரண்டு கைகளையும் குவித்து அஞ்சலிபண்ணி, நின்றபடியே அண்டமுகட்டை முட்டுகின்ற சிரசும், திசைகளெல்லாம் நிறைந்த தோள்களும், பஞ்சமகா பூதங்களும் சேர்ந்து ஒரு வடிவெடுத்ததுபோலச் சரீர காத்திரமுமாய், மகாமேருவில் வளர்ந்தோங்கிய விருக்ஷ காலங்கள் தோறும் மொய்த்துக் கொண்டிருக்கின்ற மின்மினிக் கூட்டங்கள்போலத் தமது திருமேனியின் ரோமங்கள் தோறும் நக்ஷத்திரங்கள் தொத்திக்கொண்டிருக்கவும், கண்ணுக்கும் அறிவுக்கும் எட்டப்படாத காக்ஷியுடனே சந்திர மண்டலம் சூரிய மண்டலங்களுக்குப் பிரதியாய் இரண்டு காதிலும் மகர குண்டலங்கள் பிரகாசிக்கவும், அதியுன்னதமாக வளர்ந்தார். அதற்கு முன் இது மிகவும் அற்பமாகிய ஒரு குரங்கென்று அலட்சியமாக நினைத்த பிராட்டியாரும் அப்படி விஸ்வரூபங்கொண்ட அந்த ஆஞ்சநேயரை உற்றுப்பார்த்து, இந்த அநுமானுடைய உயர்வுக்குத் தனது திரிவிக்கிரம சொரூபத்தின் உயர்வும் ஒரு லட்சியமாகத் தக்கதல்லவென்று உலகங்களையெல்லாம் அளந்த மகாவிஷ்ணுவும் வெட்கப்படுவாரென்று எண்ணினார். அப்பொழுது அஷ்டதிக்குகளிலும் எல்லா உலகங்களிலும் உள்ள சகல ஆத்துமாக்களும் ஆஞ்சநேயரது திருமேனியைப் பார்த்ததுகள். அவரும் தம்முடைய நேத்திரத்தினால் சொர்க்காதி லோகங்களிலுண்டாகிய சகல தேவர்களையும் பார்த்தார். இவ்வண்ணமாக எழுந்துயர்ந்த பரமோத்தமனுகிய அநுமானுடைய இரண்டு பாதங்களும் அழுந்துவதால் நிலம் புதைந்து, இலங்கைக்குள்ளே சமுத்திர ஜலமெல்லாம் வந்து விழுந்து, அலைப்பட்டதனால் கடலில் இருந்த மீன்களெல்லாம் அந்த இலங்கா பட்டணத்திலே நெளிந்து புரண்டதுகள். மறுவில்லாத கற்புடைய ஸ்திரீரத்னமாகிய ஜானகியார் அந்த மாருதியினுடைய காமரைப் புஷ்பத்திற்கு ஒப்பாகிய பாதத்தின் உயரத்தையுங் காணுதவராய் அதிசயித்து இனி ராட்சதவர்க்கம் நிர்மூலமாய்ப் போய்விடுமென்று திருவுள்ளத்தில்

குறித்துக்கொண்டு அநுமானை நோக்கி, அப்பா! என் கண்மணியாகிய ஆஞ்சநேயனே! எனக்குப் பார்க்கப் பயமாய் இருக்கிறது. உலகத்திலும் உன்னுடைய விஸ்வரூபத்தை முழுதும் பார்க்கத்தக்கவர்கள் யாருமில்லை. ஆகையாலிதைச் சுருக்கிக்கொண்டு, முன்பு உனக்குள்ள வடிவமே கொண்டிரு வென்று சொல்லி, இரகுநாயகருடைய திருத்தோள்களைத் தழுவியதுபோல ஆனந்த பரவசப்பட்டார். அப்படிப் பிராட்டியார் நேமித்த மாத்திரத்தில் அநுமார் புத்தி புத்தியென்று சொல்லி, அண்டத்திற்கு மேலும் உயர்ந்த அநுமானைவர் அந்த விஸ்வரூபத்தை யடக்கிக் கண்ணுக்கு அடங்கத்தக்க முன்னைய உருவத்துடனே எதிரே நின்று நமஸ்காரம் செய்தார். அவரைப் பார்த்தருளிப் பின்னும் பிராட்டியார் சொல்லுகிறார்.

கவி

இடந்தா யுலகமிலையோடு மெடுத்தாய் விசும்பை யிவைசுமக் கும்
படந்தா ழரவை யொருகரத்தாற் பறித்தாயெனினும் பயனின் றுல்
நடந்தா யிடையே யென்றுலு நாணு நினக்கு களிர்கட லுக்
கடந்தா யென்று லென்னுகுங் காற்றுமன்ன கடுமை யாய்.

ஆழி நெடுங்கை யாண்டகைதன் னருளும் புகழு மழிவின்றி
ஊழி பலவு நிலை நிறுத்தற் கொவருனியே யுளையா னுய்
பாழி நெடுந்தோள் வீரரின் பெருமைக் கேற்பப் பகையிலங் கை
ஏழு கடற்கு மப்புறத்தா காதிருந்த திழிபன் றே.

அறிவு மீதே யுருவீதே யாற்ற லீதே யரும்புலத் தின்
செறிவு மீதே செயலீதே தேற்ற மீதே தேற்றத் தின்
நெறியு மீதே நினைவீதே நீதியிதே நினக் கென் றுல்
வெறிய ரன்றே குணங்க ளான் விரிஞ்சன்முதலா மேலா னோர்.

பின்னே ரெயிற்று வல்லரக்கர் வீக்கநோக்கி வீரற்குப்
பின்னே பிறந்தா னல்லதோர் துணையிலாத பிழைநோக்கி
உன்னு நின்றே யுடைகின்றே னெழிற்றே னைய முயிருயிர்த் தேன்
என்னே நிருத னென்னுவரி வனேயெங்கோன் றுணையென் றுல்.

மாண்டே னெனினும் பழுதன்றே யின்றே மாய்ச் சிறைகின் றும்
மீண்டே னென்னை யொருத்தா ரைக்குலங்க ளோடும் வேரறுத் தேன்
பூண்டே னெங்கோன் பொலன்கழலும் புகழே யன்றிப் புன்பழியும்
தீண்டே னென்று மனமகிழ்ந்தா டிருவின் முகத்துத் திருவன் னுள்.

ஓ பிரசண்ட மாருதத்திற்கு ஒப்பான வேகத்தையுடைய அதிவீரனாகிய அநுமானே! உன் சாமர்த்தியத்தைப் பார்த்தால் நீ இந்தப் பூமியைப் பேர்த்தாலும், சப்தகுல பர்வதங்களுடனே ஆகாயத்தை எடுத்தாலும், இதுகளைச் சுமந்துகொண் டிருக்கின்ற ஆதிசேடனை ஒரு கையினுற் பறித்தாலும், ஒரு பிரயோஜனமுமில்லை. அல்லாமலும் கடலின் மத்தியிலே நடந்தாயானாலும் அது வுனக்கு நாணுதலாகவே யிருக்கும். அப்படியிருக்க; நீ இந்தக் கடலைக்

கடந்தாயென்று சொல்லுகின்றது சிறுமையே யல்லாமல் எவ்வளவு பெருமை யாகும். சக்கரத்தைக் கையிலே தாங்கிய அந்தப் பரம புருஷருடைய கிருபை யையும் கீர்த்தியையும் அழிவில்லாமல் பல்லூழிகாலம் நிலைநிற்கும்படிச் செய் கிறதற்கு நீ ஒருவனே வுண்டாயிருக்கின்ற யாகையால் உன் பெருமைக்குத் தக்கபடி இந்தப் பகையாளியினுடைய இலங்கையானது ஏழு சமுத்திரத்திற் கும் அப்புறத்திலிராமல் இவ்வளவு சமீபத்திலிருக்கின்றது இழிவல்லவோ? உனக்கு - அறிவும் - சொரூபமும் - பராக்கிரமமும் - ஐம்புலன்களை அடக்கும் தன்மையும் - செய்யுங் காரியமும் - தெளிவும் - தெளிந்த ஒழுக்கமும் - நினைவும் - நீதியுமாகிய இதுகளெல்லாம் ஒன்றுக்கொன்று குறைவில்லாம லிருக்கின்றது கள் ஆதலால் இனி பிர்மா முதலாகிய மேலானவர்களெல்லாம் இப்படிப்பட்ட குணங்களில் ஒன்றுமில்லாதவர்க ளென்றல்லவோ சொல்லப்படுவார்கள். மின்னலுக்கு ஒப்பாகிய கோரப் பற்களையும் பலத்தையுமுடைய இராக்ஷதக் கூட்டம் மிகுதியா யிருக்கின்றதைப் பார்த்தும், என் பிராண நாயகருக்குத் தம்பியாகிய இலட்சுமணர் ஒருவரே யல்லாமல் வேறு துணையில்லாத பிழையைப் பார்த்தும், ஏதேதோ எண்ணி யெண்ணி மனம் தளர்ந்த நான்; இந்த மகா புருஷன் என் நாயகருக்கு உபபலமா யிருக்கிறதனால் பயமென்ன? ராக்ஷதர்கள் என்னத்திற்கு ஆவார்கள்? என்று தைரியங்கொண்டு இப்பொழுது தான் அந்தச் சந்தேகம் ஒழிந்து உயிர்பெற்றேன். இனி நான் மாண்டாலும் பழுதில்லை. இன்றே இந்த மாயச்சிறையினின்றும் நீங்கினேன். எனக்கு இப் படிப்பட்ட துக்கத்தைக் கொடுத்த சத்துருக்களுடைய குலத்தையும் வேரறுத் தேன். என்பிராணநாதருடைய திருவடியையுஞ் சேவித்தேன். இனி எனக் குக் கீர்த்தியேயல்லாமல் பழியுண்டாகாதென்றுஞ் சொல்லி ஸ்ரீ மகா லட்சுமி யின் திருக்கழுத்திலே தரித்திருக்கின்ற மாங்கல்யத்திற்குச் சமானமாகிய சீதா பிராட்டியார் சந்தோஷித்தார். அத்தருணத்திலே பிராட்டி திருவடியை வணங்கி கேளுமம்மா அருந்ததிக்கு ஒப்பாகிய கற்புக்கரசியே! அடியேன் ஒரு அதிசயமானவனு? நான் எவ்வளவு ஸ்ரீ ராமருக்கு இந்தக் கடலிலே கிடக் கின்ற மணலைப்போல அநேக வானர சேனைவீரர்களிருக்கிறார்கள். சுவாமி யின் திருவடித்தொண்டு செய்கிற படைத்தலைவர்கள் எண்ணிறந்தவர்களிருக் கின்றார்கள். அப்படைத் தலைவருக்குள்ளே நான் ஒரு படைத்தலைவனுய் வந் தேன். அழைத்த குரலுக்கு எனென்பேன். ஏவிய பணிவிடைகளைச் செய் வேன். முன் சொன்ன வானர சைனியமோ ஒரு விதத்தில் எழுபது வெள்ளம் வானரமாகும். அதுகளுக்குள்ளே ஒவ்வொரு குரங்கு ஒவ்வொரு கை அள்ளிக் குடிக்கிறதற்குத் தான் இந்தச் சமுத்திர ஜலம் போதுமா? கள்ளச் செய் கையையுடைய ராக்ஷதர்கள் வாழும் லங்கையை அவர்கள் காணுதபடியினாலே, இதுவரைக்கும் அழியாம லிருக்கின்றது. இப்பொழுது அறிந்தபடியால் இனி நிற்குமா? நிற்கமாட்டாது. வாலியினுடைய தம்பி சுக்ரீவ மகாராஜனும், அவன் புத்திரனுகிய அங்கதகுமாரனும், மயிந்தன் - துமிந்தன் - குமுதன் - நீலன் - ரிஷபன் - குமுதாட்சன் - பனசன் - சரபன் - ஜாம்பன் - தூர்மருஷ ணன் - காம்பன் - கவையன் - கவையாட்சன் - சங்கன் - வினதன் - துயிந்தன் - நளன் - ஸ்தம்பன் - தூமன் - ததிமுகன் - சதவலி என்று சொல்லப்பட்ட வான ரப் படைத் தலைவர்களும், இந்த உலகத்துடனே எவ்வகைப்பட்ட உலகங்களை

யும் எடுக்கத்தக்க மகா பலவந்தர்களா யிருக்கின்றவர்கள். மேலும் ஸ்ரீ ராம பாணத்தைப்போல உதவி செய்கின்றவர்கள் அந்த வானர வீரர்களையெல்லாம் பார்த்தால் இந்த இராட்சதக் கூட்டம் அவர்கள் தொகைக்கு உறையிடுகிறதற்கும் போதாது. அப்படி எண்ணத் தொலையாத வானர சேனையிருக்கின்ற தம்மாவென்று இப்படி விசிதமாக ஆஞ்சநேயர் சொன்னர்.

உருக்காட்டுப் படலம் முற்றிற்று.

சூடாமணிப் படலம்

மறுபடியும் அந்த அனுமானவர் ஸ்ரீ மகாலட்சுமிக்குச் சமானமாகிய இந்தப் பிராட்டியார் வெகுவாகத் துன்பப்படுகின்றார். இவருக்குத் துணையுமில்லை. சகலாண்டங்களுக்கும் தனிநாயகமாகிய எங்கள் ராமபிரானுடைய உயிருக்கு ஒப்பாயிருக்கின்ற இவரை நான் பார்த்தும் இங்கே தனியே விட்டுப் போகிறது நன்மையல்ல. சுவாமியினிடத்திற்குக் கொண்டுபோகிறதே யுக்தமென்று தனக்குள்ளே யோசித்து லோகோத்தமியாகிய ஜானகியாரை நோக்கி, அம்மா! நாயேன் ஒரு விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிறேன். அதைத் தேவரீர் கோபமில்லாமல் கேட்டருளவேண்டும். இந்த இராக்ஷதன் உம்மைக் கொன்றுவிடுவானேயாகில் அப்புறம் இவனைக் கொல்லுகிறது காரியமல்ல. இவ்வளவு பிராணனுடனே வைத்திருக்கின்ற இந்தச் சமயத்தில் தானே உம்மைக் கொண்டுபோய்ச் சுவாமிசந்நிதியில் காட்டி, அவர் திருவடிக்கு தண்டஞ் சமர்ப்பிக்கலாமென்று என் மனதிலே தோன்றுகிறது. ஆகையால் அதிக மிருதுவாகிய ரோமங்கள் நெருங்கி அம்சதூளிகா மஞ்சம்போலிருக்கின்ற அடியேனுடைய தோளின்மேல் எழுந்தருள்வீராகில், தேவரீரை ஏந்திக்கொண்டு மத்தியில் எங்கும் தங்காமல் ஓரிமைப் பொழுதுக்குள்ளே ஸ்ரீ ராகவர் எழுந்தருளியிருக்கின்ற மலையின்மேல் தாவிக் குதிக்கின்றேன். அதை யறிந்து ராட்சதர்கள் இடையிலே வந்து தடுத்தாலும், அவர்களெல்லாம் முறிந்து அதமாய்ப் போகும்படி எதிர்த்து யுத்தஞ்செய்து சங்கரித்து என் கோபத்தை முடித்துக் கொள்ளுகிறேன். நான் ஒருநாளும் ஒருவர் கையிலும் சாகாதவன். கேளுமம்மா தாயே! நாயேன் இவ்விடத்திற்கு வந்து நீரிருக்கின்ற இருப்பைக் கண்டும், சுவாமியினிடத்தில் வெறுங்கையுடனே போகமாட்டேன். இலங்கையுடனே உம்மைக் கொண்டுபொகவேண்டும் என்று நீர் சொன்னாலும் அப்படியே அடியோடே பறித்தெடுத்து என்னுடைய உள்ளங்கையில் வைத்துக் கொண்டு எதிரே வந்துத் தடுத்தவர்களைக் கொன்று குவித்துவிட்டுப் போய் ஸ்ரீ ராமச்சந்திரனுக்குப் பாத காணிக்கையாக வைக்கிறேன். இது எனக்கு ஒருபொருளல்ல; நீரே சொல்லும். சுந்தரத் தோளனாகிய எம்பெருமான் பக்கலிற் போய் என் தாயும் உம்முடைய தேவியுமாகிய தேவாமிர்தத்தை யொத்த சீதையானவள் சதிகாரர்களாகிய ராக்ஷதர்களுடைய பட்டணத்தில் சிறை வைக்கப்பட்டு மிகுந்த துயரத்துடனே அந்த அருஞ்சிறை

நீங்கா திருக்கின்றாளென்று சொல்வேனேயாகில், அப்பால் என்னடிமைத் திறம் என்னாகும்? பிரபலமாகிய யுத்தஞ்செய்து என்தோளிலே புண்படா மற்போய் சுவாமி சந்நிதியில் சத்துருக்களுடைய பராக்கிரமத்தையே விஸ் தரித்து எடுத்துச் சொல்வேனே? அல்லது பிராட்டியைக் கொண்டு வர வில்லை; என் பிராணனுக்கு மாத்திரம் அபாயமில்லாமல் வந்தேனென் பேனே? அந்த ஜானகியை நான் காணவேயில்லை யென்பேனே? அப்படி வேண்டியதில்லை. ஒரு க்ஷணப்பொழுதில் ராக்ஷதக் காவலையுடைய இந்த இலங்கை முழுமையும் எரித்து நீறாக்கி, ராக்ஷத குலத்தை யெல்லாம் கொன்று குவறுத்து ஜயம்பெற்றுக் கொண்டு சீக்கிரத்தில் போவென்று நீர் ஆக்யா பித்தாலும் அந்தப்படிச் செய்கின்றேன். அல்லவென்று உம்மை நான் கொண்டுபோய் ரகுநாயகரிடத்தில் சேர்த்தேனேயாகில் அவருடைய சித்தசாஞ் சல்யம் நீங்கித் தெளிவுண்டாய் தேவரீருடனே அவர் இவ்விடத்திற்கு வந்து, அளவற்ற ராக்ஷத வம்சங்களை நாசமாகச் சங்காரஞ்செய்து பின்பு உலகத்திற் குச் சம்பவித்திருக்கின்ற துன்பத்தை நிவாரணம் செய்கிறது நன்மையாகக் காண்கின்றது. ஆகையால் இனி வேறே சொல்லத்தக்கதில்லை. நான் இந்தப் பேறு பெறும்படி கிருபைசெய்து கிலேசப்படாமல் அடியேனுடைய தோளின் மேல் ஆரோகணித் தருளுமென்று சொல்லித் திருவடியில் சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தார். இவ்வாறுகத் தகுதியான நல்ல வசனங்களை அன் புடனே வசனித்துத் தாய்ப் பசுவைக்கண்ட இளங்கன்றைப்போலக் களிக் கின்ற அநுமானைப் பார்த்து, இவனுலே ஆகாத காரியம் ஒன்றுமில்லை. தான் சொன்னபடியே செய்யத்தக்கவன் என்று திருவுள்ளத்தி லெண்ணிப் பிராட் டியார் சொல்லுகின்றார். கேளப்பா ஆஞ்சநேயனே! நீ உன்னுடைய சாமர்த் தியத்திற்குத் தக்க யோசனையே செய்தாய். அது உனக்கு அரியதல்ல. அப் படிச் செய்யவே செய்வாய். அதற்குச் சந்தேகமே யில்லை. ஆயினும் இது உரிய செய்கையல்ல வென்று மிகுந்த பேதமையான என் பெண் புத்திக்குத் தக்கதாக ஒரு யோசனை எனக்குத் தோன்றுகின்றது. அது என்னவென் றால் நீ என்னை எடுத்துக்கொண்டு போகிறபோது சமுத்திரத்தின் நடுவிலே இந்தக் கொடிய ராக்ஷதர்கள் வந்து சுற்றிக்கொண்டு வில்வலாத்துப் பாணப் பிரயோகஞ் செய்து போராடினால் அத்தருணத்தில் என்னையே பாதுகாப் பையா? அவர்களுடனே யுத்தமே செய்வையா? ஒருவரும் துணையில்லாமல் தனிமையாயிருக்கின்ற நீ மிகவும் பிரமிக்கும்படி வருமே. அதுவுமல்லாமல் வேறொன்றிருக்கின்றது. அதென்ன வென்றால், ஸ்ரீ ராகவருடைய விஜய கோதண்டத்தின் பிரதாபத்திற்கு மாசுண்டாகும். ஆதலால் அதனால் வரு கின்ற நன்மையென்ன? அவர்கள்தான் தாய்போல் வஞ்சித்து ஒருவருமறியா மல் என்னைக் கொண்டுவந்து விட்டார்கள். நீங்களும் அப்படி நினைக்கலாமா? யுத்தத்திலே சுவாமியின் வில் வீரத்தைத் தேவர்களெல்லாம் காண என் வடி வத்தைக் கண்ட பாவியாகிய இராவணனுடைய கண்களைக் காகங்கள் கொத் திக் கொத்தித் தின்னும்படி என் கண்ணாலே கண்டபோதல்லாமல் நானுயி ருள்ளவளாவேனே? நாணமில்லாத ராக்ஷசிகளுடைய தாலிகளெல்லாம் சூர்ப்ப னகியின் மூக்கறுபட்டதுபோல அறுபட்டபோதல்லது, எனக்குரிய நாணமும் பெருமையை யுடையதாகுமா? லங்கையென்கிற பொன்மலையானது பகைவர்க

ளுடைய அஸ்திமலையாகாமல் போனால், என்னுடைய குடி பிறப்பையும், ஒழுக் கத்தையும், கற்பையும் நான் பிறருக்கு எப்படி நிலைநாட்டுவேன்? அல்லாம லும் இந்த ஒரு லங்கையை மாத்திரமல்ல அளவிறந்த அண்டங்களை யெல்லாம் என்னுடைய வாய்ச்சொல் ஒன்றினாலேயே பஸ்பமாய்ப் போகும்படி எரிப் பேன். அவ்வண்ணமாகச் செய்வது ரகுநாயகருடைய வில்லாண்மைக்குப் பழு தென்று பொறுத்துக் கொண்டிருக்கின்றேன். அப்பா என் புத்திரனாகிய ஆஞ்சநேயனே! இன்னமொரு வார்த்தையுண்டு அதுவும் கேள். வீர சிகாமணி யாகிய ஸ்ரீ ராமபத்திரர் ஒருவர்மாத்திரம் தமது திருக்கரத்தால் தீண்டலாமே யல்லாமல், நீ பஞ்சேந்திரிய நிக்கிரகஞ் செய்திருந்தாலும் ஆண் வடிவங் கொண் டிருக்கின்றதனால் என்னைத் தொடக்கூடுமா? புத்தியீனனாகிய இராவணன் என்னைத் தீண்டுவானேயாகில் இத்தனை நாள் உயிரோடுங் கூடி வாழ்வானா? அவன் இவளைத் தீண்டினால் ஒரு நொடிப் பொழுதிற்குள் தாம் மாண்டுபோய் விடுவோமென்றல்லவோ பூமியோடும் பேர்த்து எடுத்துக்கொண்டு வந்தான். இதுவும்மல்லாமல் ஜெகத்ரக்ஷகனுடைய திருவுந்திக் கமலத்தில் உற்பவித்த பிர்ம தேவன் பூர்வகாலத்தில் இந்த மகா பாதகனைக் குறித்து, நீ உன்னிடத்தில் மனோரம்மியப்படாத ஸ்திரீகளைத் தொட்டால் உன் சிரசு சகஸ்ரபத்தலாக வெடிக்கக் கடவதென்று சாப மிட்டிருக்கின்றான். அதுவல்லவா நானிறந்து போகாம லிருக்கும்படி என் பிராணனைக் காத்து, நான் துக்கப்படுகிற சமயத் தில் அவ்விதமாகிய பிரம சாபம் அவனுக்கு உண்டென்று, சத்திய சந்தன னாகிய விபீஷணாழ்வான் புத்திரி திரிசடை யென்பவள் என்னிடத்தில் அன்பி னால் எனக்கு இரகசியமாகச் சொல்லி, அம்மா! நீ யாதொன்றுக்கும் அஞ் சாதே யென்று எனக்குத் தைரியத்தை யுண்டாக்கி விசனத்தை நீக்கினாள். இராவணன் அப்படிச் சாப சம்பந்தனா யிருக்கின்றவனாகையால் அதிக்கிரமிப் பானே யானால் மரண மடைவானென்றும், தர்மந் தவறமாட்டாதென்றும், என் நாயகருடைய புஜபலபராக்கிரம சக்தியைத் திடமாக எண்ணியும், இதுக ளெல்லாமலும் என் கற்பின் பரிசுத்தத்தைக் காட்டவுமே இவ்வளவு காலம் வரைக்கும் இரகுகுலோத்தமரைப் பிரிந்து தனியேயிருந்தும் இந்தச் சரீரத்தை வைத்துக்கொண்டிருக்கிறேன். மேலும் இருந்த இடத்தைவிட்டு நான் அப்புறம் பெயரவேயில்லை.

அதற்குத் திருஷ்டாந்தம் என்னவென்றால், முன்னாளில் இருப்பிடமாக இளையபெருமாளால் அமைக்கப்பட்ட பர்ணகசாலை, வஞ்சகனாகிய ராவணனால் தண்டகாரணியத்திலிருந்து நிலத்துடனே பேர்த்தெடுத்துக்கொண்டு வந்து இவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. இதை உன்னுடைய கருணைசுரந்த கண்களினால் செவ்வையாகப் பார். இந்த ஜலம் நிறைந்த தாமரைப் பொய்கை யானது கோதண்ட தீட்சாகுருவாய் விளங்காநின்ற சுவாமியினுடைய மரகதத் திருமேனியைப்போல் இருக்கின்றதாகையால், இவ்விடத்திற்குச் சோர்ந்து போகின்ற என் பிராணனை இரட்சித்துக் கொள்கின்ற நிமித்தமாக வருவேன். இது தவிர இருப்பிடத்தை விட்டு ஒருபொழுதும் நீங்குகிறதேயில்லை. ஆகை யினாலே நீ என்னைக் கொண்டுபோகிறது காரியமல்ல. ஐயா! வேதநாயகனாகிய ஸ்ரீ ராமச்சந்திரனிடத்திற்கு நீ திரும்பிப்போய்ச் சேர்வதே காரியமென்று

லோகமாதாவான பிராட்டியார் சொல்லினர். அதுகேட்ட மகாதுல்லியராகிய ஆஞ்சநேயர் இந்த ஜகத்காரணனாகிய ஸ்ரீ ராகவனுடைய தேவியார் கொண்ட விரதம் நன்றாயிருக்கின்றதென்று நினைத்து, சந்தேகமும் வருத்தமும் நீங்கின வராய் மனமகிழ்ச்சி கூர்ந்து, ஆனந்தபரவசராய் ஸ்துதிசெய்து, என் தாயே! தேவரீர் திருவுள்ளம் அப்படியானால் ராவணனால் இந்த உலகம் அந்தகாரப் பட்டிருக்கின்றதே அது நிவாரணமாகும். இனிச் சிலநாள் மாத்திரம் நீர் வியாகூலப்படாமல் இவ்விடத்தில்தானே எழுந்தருளியிரும், அவ்விடத்தில் பிரமை கொண்டிருக்கின்ற சுவாமிக்கு அடியேன் போய்ச் சொல்லத்தக்க வார்த்தைகளென்ன? அதையும் அருளிச்செய்யுமென்று சாஷ்டாங்கமாகச் சேவித்தார். அத்தருணத்தில் பிராட்டியார் சொல்லுகின்றார்: ஓ நீதிமானாகிய அநுமானே! தமியேனாகிய நான் உன்னைப் பார்த்ததினால் இன்னும் ஒரு மாத பரியந்தம் உயிரோடிருப்பேன். அதற்குமேல் அந்த ராமச்சந்திரருடைய திருவடி சாக்ஷியாகப் பிராணனை வைத்துக்கொண்டிருக்கிறதில்லை. இதை நீ உறுதியாக மனதிலேகொள். ஆரங்கள் பிரகாசிக்கின்ற திருமார்பையுடைய ரகுகுலோத்தமருக்கு நான் பத்தினியல்லவென் றிருந்தாலு மிருக்கட்டும். அவருடைய இருதயத்தில் இரக்கமும் அன்பு மில்லாமற் போனாலும் போகட்டும். தமது வீரத்திற்கு மாத்திரம் பின்னமில்லாமலிருக்கும்படி காத்துக்கொள்ள நீ அவரை வேண்டிக்கொள். யாவரும் ஸ்துதி செய்யத்தக்க பராக்கிரமசாலியாகிய இளைய பெருமாளுக்கு, உம்முடைய தமையனார் ஆக்கினைப்படி என்னை நீர் காத்திருந்தவராகையால் மத்தியிலே எனக்குச் சம்பவித்த இந்தக் கொடிய சிறையை மீட்கின்ற கடன் உம்முடையதுதானென்று நான் சொன்னதாக ஒரு வார்த்தை சொல்லும். மேலும் நான் கொண்ட விரதம் ஒரு மாதத்தில் முடிந்துபோகும். அதற்குள்ளே சுவாமியானவர் இங்கே எழுந்தருளாவிட்டால், அவர் கையினாலே கங்கையில் எனக்குச் செய்யவேண்டிய கடனைச் செய்துவிடச் சொல்லும். சிரேஷ்டமாகிய எங்கள் மாமியார் மூவருக்கும் உங்கள் மருமகளாகிய சீதையானவள் அவ்விடத்தில்தானே இறந்து போகின்றாள். உங்களுக்கு நமஸ்காரம் செய்தாளென்று சுவாமியைச் சொல்லச் சொல்லும். இந்தச் சொல்லை ஒரு வேளை தர்மஸ்வரூபியாகிய என் நாயகரானவர் என்னிடத்தில் கிருபையில்லாமல் சொல்லுகிறதற்கு மறந்துபோனாலும், நீ மறவாமல் சொல்லும். கல்யாண குணபூர்ணரானவர் என்னை வந்து பாணிக்கிரகணஞ் செய்த அன்றையத்தினம் இந்த ஜென்மத்தில் நான் உன்னைவிட்டு மற்றொரு ஸ்திரீயைத் தொடும்படி மனதினாலும் நினைக்கிறதேயில்லையென்று எனக்கு வரம் கொடுத்திருந்தார். அதையும் அவர் திருச்செவியிற் கேட்கும்படிச் சொல்லும். நான் இவ்விடத்திலிருந்து இந்தத் துயரத்தினால் மாண்டுபோனாலும், புனர்ஜென்ம மெடுத்து வந்தாவது உம்முடைய திருமேனியைத் தழுவத்தக்க மகத்தாகிய ஒரு வரம் வேண்டித் தொழுது நிற்கின்றாளென்று சொல்லும். அவர் பட்டாபிஷேகம் செய்துக்கொண்டு நவரத்தின சிங்காதனத்தில் எழுந்தருளியிருந்து இராஜரீகம் செய்கின்ற திருவழகையும், சத்திர சாமரங்களுடனே பட்டத்து யானையின் மேலாக வீதியில் பவனிவருகின்ற திருக்கோலத்தையும் கண்களிக்கும்படி தரிசிக்கப் பிராப்தியில்லாத நான், பலபல வார்த்தைகளைச் சொல்லியும் என்ன பயன்? என் விதிச்செயல் இப்படியும் இருந்ததல்லவாவென்று நினைக்கிறேன்,

அப்பா ஆஞ்சநேயா! இன்னமொன்று சொல்லுகின்றேன். தம்மைப் பிரிந்ததைக் குறித்து உலகத்தார் பிரலாபிப்பதற்காகவும், தாய்மார்கள் படுகின்ற துக்கத்திற்காகவும், பரதாழ்வான் முதலாகிய தம்பிமார்கள் அடைந்த வருத்தத்திற்காகவும், அவ்விடத்திற்குப் போவாரே யல்லாமல் என்னைக்குறித்து இவ்விடத்திற்கு எப்படி வரப்போகிறார்? மிதிலையில் இருக்கின்ற எங்கள் மாதா பிதா முதலாகிய பந்து ஜனங்களுக்கெல்லாம் என் வந்தனை சொல்லும். வானர சேனாபதியாகிய சுக்கிரீவனை உன்னுடைய தோழராகிய இரகுநாயகரைக் கைவிடாமல் பாதுகாத்து அயோத்திக்கு அழைத்துக்கொண்டுபோய்ப் பட்டாபிஷேகம் செய்விக்கச் சொல்லென்று இவ்வண்ணமாகக் கண்களிலே நீர் பெருகிப் பாயும்படி துக்கத்துடனே சொல்லிக்கொண்டுவந்த பிராட்டியாரை ஆஞ்சநேயர் பார்த்து, அம்மா! இன்னமும் தேவரீருடைய விசனம் நீங்கவில்லையே யென்று பின்னும் பலபல ஏதுக்களையுடைய இனிமையுண்டாகிய நல்ல வசனங்களைத் தெளியும்படிச் சொல்லுகின்றார்: என் தாயே! தேவரீரும் இவ்விடத்தில் இறந்துபோவீர். அப்பால் மெய்தளர்ந்திருக்கின்ற ஸ்ரீராமச்சந்திரரும் இறவாமல் பிராணனுடன் அயோத்திக்குப் போய் மகுடாபிஷேகம் பண்ணிக்கொள்வார். கற்புக்கு உற்பத்தி ஸ்தானமாகிய உம்மைச் சிறைவைத்த பாவியும் ஜீவனுடன் இருப்பான். வில் வீரர்களாகிய ஸ்ரீ ராம லட்சுமணர்களுடைய புஜபல பராக்கிரமமும் பொய்த்துப் போகும். இது மிகவும் ஆச்சரியமாய் இருக்கின்றது. இதற்குச் சமானமாவதேது? உம்முடைய விஷயத்தில் அபசாரப்பட்ட பாபாத்துமாக்களைக் கொல்லாமல் நானும் என்னுடனே கூடவந்த எல்லா வானர வீரர்களும் பிராணனுடனே தங்கள் ஆசிரமத்திற்குப் போகவும், அப்பால் அங்கெழுந்தருளியிருக்கின்ற சுவாமியும் நமக்கு உயிர்த்துணையாகிய உம்மை விட்டு அவ்விடத்தை நீங்கிக் கையிலே பிடித்த வில்லுடனே நகரத்தை நாடிப்போகவும் வேண்டாமா? அதிருக்கட்டும். துக்க சாகரத்தில் மூழ்கி அவதிப்பட்டுக் கொண்டிருந்த எங்களுக்குப் பரிபூரணமாகிய சம்பத்தைக்கொடுத்த அந்த ஸ்ரீ ராகவருக்குத் தேவரீரை மீட்டுக் கொண்டுபோய்க் கொடாமற் போனால், எங்களைப் பார்க்கிலும் யோக்கியராவார் யாரிருக்கின்றார்கள்? இவ்வுலகத்தில் சன்மார்க்கத்தையுடைய ரிஷீஸ்வரர்களையெல்லாம் கொல்லுகின்ற மகா பாதகர்களாகிய ராட்சதர்களுடைய குடல்களை ரணக்களத்தில் பேய்கள் தின்னும்படிச் சங்கரித்தாலல்லாமல், இராஜ்ஜியத்திற்குப் போகிறதில்லையென்று வாக்குப் பிரதானம்பண்ணியிருக்கின்ற மகாநுபாவருக்கு இந்த வார்த்தையென்ன ஒவ்வாதா? பலவீனர்களாகிய சத்துருக்களால் சிறை வைக்கப்பட்ட தேவரீரை நாங்கள் மீட்டுக்கொள்ளாமற் போவோமேயானால், உலகத்தில் சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்த பண்டிதர்களே யல்லாமல் பாமரர்கள் தானுவது இந்த வார்த்தையைச் செவிகொடுத்துக் கேட்பார்களா? கற்புடையவளும் சத்தியந் தவறாதவளுமாகிய மனையாளானவள் வஞ்சகர்களாகிய இராக்ஷதர்களால் தீண்டப்படாததற்கு முன்னே மாண்டுபோய்விட்டாளென்று கொண்ட புருஷன் தனக்குத் தானே மனதிலே சித்தப்படுத்திக் கொண்டு அவளை வந்து பாராமல் திரும்பிப் போய்விடுவானானால், அப்புறம் அவனுடைய வீரம் நன்றாய்ப் பிரசித்தப் படமாட்டாதா? லோகோத்தமியாகிய நீர் துக்கத்தினால் உம்முடைய பிராணனை மாய்த்துக் கொள்வீரேயாகில், அதற்காக

எங்கள் ஐயனுகிய ரகுநாயகர் ராக்ஷத வமிசத்துடனே சகல அண்ட சராசரங் களையும் சுட்டு நீறுக்கினலும், அந்த அபவாதம் தீராதல்லவா? நம்முடைய கோதண்ட ராமரை எதீஸ்வரர் முதலானவர்களும் லோக கர்த்தாவாகிய நீரே இப்படிச் செய்வது சற்காரிய மல்லவென்று சொன்னலும், தேவரீர் பிராணனை விட்டபின் அவர் சத்தியத்தைப் பார்ப்பாரா? திரிலோகங்களையும் முன்னே மாய்ந்து போம்படி செய்யாரா? சுவாமிக்குப் பிறக்கும் உக்கிர கோபமானது கொடியவனுகிய இராவணனுடைய உயிரை மாத்திரம் நாசஞ் செய்வதினுலேயா தணியும்? பூலோகத்தையும் சுவர்க்க லோகத்தையும் நாசஞ் செய்யாமல் விடுமா? கேளுமம்மா லோக பரமேஸ்வரி! இராமபத்திரருடைய அஸ்திரமானது சப்த சமுத்திரங்களையும், பதினலு லோகங்களையும், யுகாந்த காலாக்கினியைப்போல கொடிப்பொழுதிலே கவளீகரிக்க மாட்டாதா? இரகுபதியானவர் இப்பொழுது தேவர்களுடைய சத்துருக்களை நிர்மூலஞ் செய்தார். பெரியோர்களுடைய ஆபத்துகளை நீக்கினர். எப்போதும் தர்மத்தைத் தலையெடுக்கும்படி செய்தார். பிரபலமாகிய கீர்த்தியையும் சம்பாதித்தாரென்று நினைத்துக்கொள்ளும். யாவரும் வெறுக்கத்தக்க இந்தக் கண்டகர்களுடைய ரத்தப் பிரவாகத்தில் பேய்க்குலங்கள் மூழ்கிக் குளிக்குந்தோறும், ராக்ஷதர்களுக்குப் பயந்து ஒளிக்கின்ற தேவர்கள் கண்டு மனங் களிக்கின்றதை நீர் பார்க்கப்போகின்றீர்.

பிரளயகால இடியைப்போலச் சக்கிரவர்த்தித் திருமகனுடைய பாணமானது புறப்பட்டு இராக்ஷதர்களுடைய சரீரத்தைப் பிளக்க, அந்தப் புண்ணிலிருந்து ஒழுகாகின்ற உதிர சமுத்திரமானது பெருகிவந்து விழுவதினுல் ஏழு சமுத்திரங்களும் ஒன்றுய்த் திரண்டு இரைகின்றதையும் பார்க்கப்போகின்றீர். இராக்ஷத ஸ்திரீகள் கர்ப்பம் நிறைந்த வயிற்றைப் பிசைந்துகொண்டு அழுது துக்கித்து கண்களிலிருந்து தாரை தாரையாக நீரொழுகும்படி வாயினலும் தாண்டப்படாத மலைபோல அறுத்தெரிகின்ற தாலிக்குப்பைகளையும் பார்க்கப் போகின்றீர். ஆகாயத்தைத் தீண்டுகின்ற ஸ்தூலதேகத்தையுடைய பேய்க் கூட்டங்களும் நீண்ட சிறகுகளையுடைய பறவை ஜாதிகளும் இராக்ஷதர்களுடைய உதிரக்கடலில் மூழ்கி, அவர்கள் பெண்ஜாதிமார்களுடைய கண்ணீராகிய ஆற்றில் குளிப்பதையும் பார்க்கப்போகின்றீர். மிருதங்கம் வீணை முதலாகிய வாத்தியங்கள் முழங்க, அரம்பாஸ்திரீகள் நாட்டியஞ் செய்கின்ற இந்த நாடக சாலைகளில் ஸ்ரீ ராகவனுடைய பிரதாபத்தைப் பாடிக்கொண்டு வானரங்கள் வரிசை வரிசையாக ஆடுகின்றதைப் பார்க்கப்போகின்றீர். இராவணன் முதலானவர்களுடைய சரீரத்தில் இருந்து ஒழுகுகின்ற ரத்த ஆறுனது, பிணமலைகளைப் புரட்டி யிழுத்துக் கொண்டுபோய்ச் சமுத்திரத்தைத் தூர்ப்பதைப் பார்க்கப் போகின்றீர். தேவரீருடைய மாசற்ற திருமேனியைப் பார்த்த தசக்கிரீவனுடைய கண்களை அவன் தலைகளின்மேல் தாவுங் காக்கைகள் கூரிய மூக்கினல் கொத்திக் கொத்தித் தின்பதையும் நீரே பார்க்கப் போகிறீர். ஆகையால் இன்னமும் பல பல வார்த்தைகள் சொல்ல வேண்டியதென்ன? ஒரு மாதவரைக்குங்கூட நீர் துயரப்பட்டுக் கொண்டு இவ்விடத்திலிருக்க வேண்டுவதில்லை. அடியேன் போய்ச் சுவாமி திருவடியைத் தெரிசிக்கிறதுதான் தாமதம். அப்பால் அவர் ஒருபொழுதாவது பொறுத்திருப்பாரா? அவருக்கு

உயிருண்டென்கிற சொல்மாத்திரந்தான் உண்டு. ஆரணியத்திலே அவருடைய திருமேனி தீண்டித் தீயாத புஷ்பங்களும் தளிர்களும் இல்லை. அவர் சரீர உஷ்ணத்தினாலே பொறியெழுந்து வேகாத சோலைகளுமில்லை. மேகம் கர்ஜித்தாலும் இடியிடித்து விழுந்தாலும், பாம்பு கடித்தாலும், அவருக்குத் தெரியாது. நீர் பிரிந்ததனால் மத்துகொண்டு கடையப்பட்ட தயிர்போல உயிர் தளர்ந்து கரைந்து ஐம்புலன்களும் வேறுபட்டு பித்துப்பிடித்து மயங்கி, நாள்தோறும் அடிக்கடி எவ்வளவோ வேதனைப்படுகின்றார். இப்படிப்பட்ட நிலைமையுடைய அந்தப் புருஷோத்தமன் வராமலும் இருப்பாரென்று நினைப்பீராகில், நான் சொன்னதுகளை யெல்லாம் இப்போது தானே உம்முடைய உள்ளங்கை நெல்லித் கனியைப்போலக் காண்பிக்கிறேன் பாரும். அதற்கு மாறுபட்டிருந்தால் அப்பொழுது பொய்யென்று நினைத்துக்கொள்ளும். ஸ்ரீ ராமரும் வானராதிபதியாகிய சுக்ரீவனும் உம்முடைய செய்தியைக் கேட்டுச் சந்தோஷிப்பதற்கு முன்னமே. வானரங்கள் வந்து, சமுத்திரத்தைத் தூர்த்து லங்கையைச் சுற்றிக் கொண்டு. ஆர்ப்பரிக்கின்றதைத் தேவரீர் கேட்டுச் சந்தோஷிக்கப்போகிறீர். எண்ணப்படாத வானர சேனைகள் நாளையதினம் இந்த நகரத்திற்கு வந்த போது, அதற்கு நடுவே கருடன்மேல் ஆரோகணித்து வருகின்ற ஸ்ரீமந் நாராயணனைப்போல அடியேனுடைய தோள்களின்மேல் ரகுநாயகர் எழுந்தருளி வரும்படி காண்பீர். உதயகிரியிலே தோன்றுகின்ற இளஞ் சூரியனைப்போல அங்கத குமாரனுடைய தோளின்மேல் இளைய பெருமாளும் எழுந்தருளிவரக் காண்பீர். இனிமேல் துயரத்தையும், சங்கையையும் விட்டுவிடும். இப்போது குறித்துச் சொல்லிய சில தினத்திற்குள்ளே வந்து உம்முடைய சிறையை மீட்காவிட்டால், பழியும் பாவமும் சம்பாதித்துக் கொள்கிறதற்கு அந்த ஸ்ரீ ராமரே இராவணனும், ராவணனே ஸ்ரீ ராமருமென்று உமது திருவுள்ளத்தில் எண்ணிக்கொள்ளுமென்று இவ்வண்ணம் சாங்கோபசாங்கமாக ஆஞ்சநேயர் எடுத்துச் சொல்லினர். அந்த வார்த்தைகளெல்லாம் குற்றமற்றதுகளாயிருக்கக் கேட்டு பிராட்டியார் மனதிலே அபரிமிதமாகிய மகிழ்ச்சி கூர்ந்து உஜ்ஜீவித்தவராகி, மெய்தான் ; இவன் சீக்கிரத்திற் போய்ச் சேர்கிறதே உத்தமமென்று அனுமானைப் பார்த்துச் சில வார்த்தை சொல்லுகின்றார் : ஐயா மாருதியே! நீ துரிதமாய்ப் போய்வா! யாதொரு தீங்கும் உன்னை யணுகமாட்டாது. இனி நான் வேறொன்றும் சொல்லுகிறதே யில்லை. உனக்கு தெரியாததைக் குறித்து நானே சிறிது சொல்லப் போகிறேன் ? என் பிராணநாயகருக்கு முன்பு நடந்ததுகளாகிய சில அடையாளங்களைச் சொல்லுகிறேன். பூர்வத்தில் ஒரு மாயமாகிய காகம் வந்து என் சரீரத்தைத் தனது கூர்மையாகிய நகத்தினாலே கிழித்ததுகண்டு சுவாமியானவர் ஒரு சொற்பமாகிய புல்லைப் பிரயோகிக்க, அதுவே அஸ்திரமாகித் துரத்த, அதற்கு அஞ்சி அந்தக் காக்கை வடிவாய் வந்த இந்திரகுமாரனை சயந்தனனவன் பிர்மாவினிடத்திலும் சிவனிடத்திலும் மற்றத் திக்கு பாலகர்களிடத்திலும் போய்ச் சரணமடைந்தான். அவர்களெல்லாம் ராமபாணத்திற்குப் பயந்து, அபயஸ்தங் கொடாமல் அவனைப் பார்த்து, ஐயையோ! இனி உனக்கு எங்கள் ஆண்டவனாகிய ஸ்ரீ ராமபிரானுடைய திருவடியல்லது வேறு கதியில்லை. மேலும் அவரே சரணாகத வாத்சல்யர். ஆகையால் நீ போய் அவரிடத்தில்தானே சரணாகதம் செய்யென்று சொல்லினர்.

அவன் அங்கிருந்து நடு நடுங்கி, இராகவா ! அபயம் ; ஸ்ரீ ராமச்சந்திரா ! அபயம் ; தாசரதி ; அபயம் ; சீதாசமேத ! அபயம் ; கோதண்டபாணி ! அபயம் ; அபயமென்று பூமியில் விழுந்து தெண்டன் சமர்ப்பித்தான். உடனே சுவாமி திருவுளமகிழ்ந்து, அவன் பிராணனை வாங்கும்படி விட்டபாணம் அவனுடைய இரண்டு கண்களில் ஒரு கண்ணைக் கிரகித்துக்கொண்டு போகும்படி கிருபை செய்ய, அது அப்படியே கிரகித்துக்கொண்டு தம்முடைய அம்புப் புட்டிலில் வந்து சேர்ந்தது. அப்பொழுது ராமபத்திரர் நீ சரணுகதம் செய்ததனால் உன் குற்றத்தைப் பொறுத்தருளினேம், இன்றுமுதல் உன்னைப்போலிருக்கின்ற காக்கைக்கூட்டங்களின் இருகண்ணுக்கு ஒரு மணி யுலாவக் கடவதென்று சொன்னர். பின்பு காகாசுரன் வருத்தம் நீங்கி ரகுநாயகரை வணங்கி விடை பெற்றுக்கொண்டு சொர்க்கலோகத்திற்குப் போனன். தேவர்கள் சுவாமியின் காருண்யத்தைக் குறித்துப் புஷ்ப வருஷம் வருஷித்தார்கள். இந்த செய்தியைச் சொல்லும். அயோத்தியி லிருந்தபொழுது சுவாமியை நோக்கி, நான் வளர்த்த என்னுயிர்க் கொப்பாகிய இளங்கிளிக்கு என்ன பெரியரிடுகின்றதென்று கேட்டேன். அவர் ஆசையாகிய என் தாய் பெயரை வைத்திடென்று சொன்னர். இதையும் அவரிடத்தில் சொல்லென்று சொல்லினர். அப்பா ஆஞ்சநேயனே ! நான் அவருக்குச் சொல்லி யனுப்பவேண்டிய அடையாளங்களுள் இதிலும் விசேஷமாகிய அடையாளம் வேறொன்று மில்லையென்று யோசித்து நிச்சயம் பண்ணிக் கொண்டு காந்தியினல் மேலேழுலோகங்களையும் கீழேழு லோகங் களையும் ஜெயித்த சூடாமணியென்னும் ரத்தினத்தைத் தமது திருவாடையில் வைத்திருந்து, தாமரைப் புஷ்பத்திற்குச் சமானமாகிய திருக்கரங்களா லெடுத் தார். எடுத்த மாத்திரத்தில் நவ வியாகரண பண்டிதராகிய ஆஞ்சநேயர் இது என்னவென்று பிரமித்துத் தேகம் பூரித்து அதிசயித்தார். அப்பொழுது சப்த தீவிலும் நிறைந்த இருளெல்லாம் சிதைந்து ஓடியது. இராக்ஷதர்கள் இப்பொழுது சூரியனுனவன் கொஞ்சமாவது மனம் கூசாமல் லங்கைக்கு வந்தது ஏதென்று சந்தேகித்தார்கள். அந் நகரத்தில் சூரியன் வருகிற தில்லாமையால் எப்பொழுது சூரியனை வரக்காண்போ மென்று துக்கமுற் றிருந்த சக்கரவாகப் பக்ஷிகளெல்லாங் களிகூர்ந்ததுகள். தாமரை மலர்கள் மலர்ந்ததுகள். சூரிய காந்தகற்கள் தீயைச் சொறிந்ததுகள். அந்த ரத்தினக் கிரணம் பிராட்டியாருடைய திருமேனி முழுதும் சிவக்கும்படி செய்து ஸ்ரீ ராமச் சந்திரனுடைய திருவடிகளைப்போலும் ஜொலிக்கத் தலைப்பட்டது. அப்படிப் பட்ட திவ்வியமாகிய சூடாமணியைக் கண்ட ஆஞ்சநேயரைச் சீதாபிராட்டி நோக்கி, அப்பா அநுமானே ! என் கண்ணுக்கு ஒப்பாகிய இந்தச் சூடா மணியை இதுவரையில் என் வஸ்திரத்தில் வைத்துக் கொண்டிருந்தேன். இதுவே தசரதாத்மனுக்குப் பெரிய அடையாளம். நீ இதை வாங்கிக்கொள் ளென்று கொடுக்க, வாயுகுமாரர் தொழுது அதை இரண்டு கையினலும் வாங்கி, அந்த க்ஷணமே வஸ்திரத்தில் சுற்றிப் பதனம்பண்ணி வைத்துக்கொண்டு கண் களில் நீர் பாயும்படி ஜானகியாரை மூன்றுதரம் பிரதக்ஷணம் வந்து சாஷ் டாங்கமாகச் சேவித்து, அடியேன் போய் வருகிறேனென்று சொல்லி அந்தப் பிராட்டியாரும் தம்மைப் புகழ்ந்து வாழ்த்த அப்பால் நடந்தார்.

சூடாமணிப் படலம் - முற்றிற்று.

பொழிலிறுத்தப் படலம்

இப்படி ஜானகியாரிடத்தில் நியமனம் பெற்றுக்கொண்டு வடதிசையை நோக்கிச் செல்லும்படி உத்தேசித்து அதிசீக்கிரமாக நடந்து எதிரே தோன்றிய அசோகவனத்தில் பாய்ந்து போகின்ற அநுமானுனவர் சற்று நின்று, நான் லங்கைக்கு வந்து பிராட்டியாரைக் கண்டு அவரிடத்தில் மாத்திரம் சில சமாச்சாரங்களைக் குறித்துப் பேசிவிட்டுப் போகிறது பிரதாபமல்ல. மிகவும் சொற்பமாகும். என்னுடைய வீரத்திற்குத்தக்க ஒரு பிரபலமான காரியத்தைச் செய்து போகவேண்டும். அதெப்படி யென்றால், கொடிய பாபிஷ்டர்களாகிய ராக்ஷதர்களையெல்லாம் கொலைசெய்து, இந்த லங்காபட்டணத்தையும், வேருடனே களைந்தெடுத்துச் சமுத்திரத்தில் அழுந்தும்படி எறிந்து விட்டு, லோகநாயகியாகிய வைதேகியை என்னையனுகிய சக்கரவர்த்தித் திருமகன் திருவடியில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். அப்படிச் சேர்க்காவிட்டால், நான் எவ்விதத்தில் அந்த விஜயராகவருக்கு அடிமையாவேன்? சுவாமித் துரோகியாகிய இராவணனை இறுக்கிப்பிடித்து, என்னுடைய நீண்டவாலினல் அவன் பத்துத்தலைகளையும் இருபது தோள்களையுஞ் சேர்த்துக் கட்டி இம்சித்துச் சிறை வைக்கவுமில்லை. அப்படியல்லவென்றாலும் அவனை நேரேயாவது ஜெயித்தேனு? அதுவும் செய்யவில்லை. இப்படியானல் ஒருவர் மற்றொருவருக்கு அடிமை யென்பது தகுமா? என்னுடைய கண்ணிற் கண்ட இராட்சதக் கூட்டங்களைச் சின்னபின்னப்பட அடித்து இலங்காதிபதியினுடைய கண்களுக்கு முன்னே அவன் பெண்சாதியான மண்டோதரியைத் தலைமயிரைப் பிடித்து இழுத்துவந்து சிறை வைத்தாலுந்தான் என் புஜபலத்திற்கு பழுதுண்டாகுமா? கிராதகர்களான அரக்கர்களுக்கு என்னண்மை யெல்லாங் காட்டி, அவர்களைத் திசைகள்தோறு மோட்டித் துரத்தித் தும்சஞ் செய்வதே பிரதானகாரியம். இனி எண்ணத்தக்கது மற்றொன்று மில்லை. ஆதலால், அவர்களைச் சண்டைக்கு இழுக்க வேண்டுமே அதற்குத் தக்க உபாயம் என்ன வென்றும் நினைக்கிறார். நான் இந்தச் சோலையை ஒரு கொடிப்பொழுதிலே அதஞ் செய்கிறேன். அப்படிச் செய்தால் அந்த ஆர்ப்பாட்டத்தைக் கேட்ட மாத்திரத்தில் மிகுந்த கோபத்தோடும் இராட்சதர்கள் என்னுடனே வந்து எதிர்ப்பார்கள். எதிர்த்த பொழுது அவர்களைச் சந்ததியறக் கொன்று உயிர் குடிப்பேன். என்னோடு போர் செய்ய வருகின்றவர்களை யெல்லாம் மறுபடியும் உயிரோடே போக வொட்டாமல் கொன்றால், அந்த இராவணனும் எனக்கு முன்னே வந்து எதிர்ப்பான். எதிர்ப்பானேயானல் அவனுடைய பத்துத்தலைகளையும் குழிந்துபோகும்படி குட்டி உதைத்து என் மனதிலே பொங்குகின்ற கோபமும் சிறிதாறிச் சந்தோஷமாய்ப் போவேன். ஆகையால், இவ்விதமாகச் செய்வதே நல்ல தந்திரமென்று தீர்க்காலோசனை செய்து, சூரிய சந்திரர் உதயமாகின்ற உதயகிரிக்கும் அஸ்தகிரிக்கும் சமானமாக நீண்ட தோள்களை யுடையவராய்த் தம்முடைய விசுவரூபத்தைக் கொண்டு, உலக முழுமையும் ஒரு கொம்பிலே தாங்கிய ஆதி வராகத்தைப்போல ஓங்கி யுயர்ந்து, அந்த வனத்தையெல்லாம் தம்முடைய பாதத்தைக்கொண்டு துவைத்தார். துவைத்தபொழுது அதிலிருந்த விருட்சங்க

ளானவை பிளந்தும், முறிந்தும், நெறிந்தும், பொடிந்தும், பொலிந்தும், இடிந்தும், சிதைந்தும், எரிந்தும், கரிந்தும், ஒடிந்தும், ஒசிந்தும், உதிர்ந்தும், பிரிந்தும் போயின. சில விருட்சங்கள் வேரோடே சாய்த்தன. சில விருட்சங்கள் சமூலம் வெந்து விழுந்தன. சில விருட்சங்கள் மேகமண்டலத்தை மோதி விழுந்தன. சில விருட்சங்களானவை காற்றிலே யடிபட்டுக் கடலிலே போய் விழுந்தன. சில விருட்சங்களானவை அஷ்ட கெஜங்களுக்கெதிரே அவைகள் உண்ணும்படியான உணவாய்ப் போய் விழுந்ததுகள். சில விருட்சங்கள் கேசரி மார்க்கம்போய்த் தேவர்களுடைய கற்பகச் சோலையை மடித்ததுகள். அநேக மரங்கள் போய் விழுகின்றதினால், சமுத்திரத்தில் அலைகள் மிகவும் பொங்கிப் புரண்டதுகள். அனேக மரங்களானவை இலங்கையில் விழுகிறதினாலே, அங்குள்ள உப்பரிகைகள் இடிந்து உதிர்ந்தன. அநேக மரங்கள் தங்களுக்குச் சமீபத்திலே வந்து விழுவதினால், விஞ்சய லோகத்திலும் யக்ஷ லோகத்திலுமுள்ள ஸ்திரீகள் அவைகளில் பூப்பறிக்கத் தலைப்பட்டார்கள். அநேகம் சொர்ன விருட்சங்களும் நவரத்ன விருக்ஷங்களும் மின்னல்கள் சஞ்சரிப்பதுபோலேயும், சூரியகிரணம் பாய்வது போலேயும், நாலு திக்சகளிலும் விசையா யெழும்பின. அநேக விருக்ஷமானவை ஊழிக்காலத்திலே நக்ஷத்திரமானவை உதிர்வதுபோலே ஒன்றோடொன்று மோதி யுதிர்ந்தன. ஆஞ்சநேயர் மரக்கிளைகளை முறித்துச் சமுத்திரத்திலே எறிய, அக் கிளைகளிலேயிருந்த பட்சிகளையும், வண்டுகளையும், மலர்களையும், அரும்புகளையும், தேனையும், தளிர்களையும், காய்களையும் மீன்களானவை விழுங்கிக் களித்துத் துள்ளிக் கொண்டிரானின்ற தருணத்திலே பல மரங்கள் வந்து மேலே விழ, அவை நெரிந்து துடித்தன. நானவித புட்பங்களாலும் நிறையப்பட்டுப் புலால் நாற்றமில்லாமல் எட்டுத் திக்கிலும் நல்ல வாசனையை வீசுதலால், கடலானது தேவர்கள் தங்களுடைய தேவிமார்களுடனே ஸ்நானஞ் செய்யும்படியான திவ்விய தடாகத்தைப்போல விளங்கியது. அவ்வனத்திலிருக்கும்படியான இரத்தின மேடைகளை இடித்தும், மரங்களை ஒடித்தும், ஒன்றின்பின்னே ஒன்றாக எறிவதனால் முழுதும் தூர்ந்து, முன்பு உள்ளே யிறங்கக்கூடாத ஆழத்தையுடையதாக அவரால் அருமையாகத் தாண்டிப்போகும்படி யிருந்தது. அந்தச் சமுத்திரம் இரண்டு காலினாலும் எளிதாக நடந்துபோகலாமென்று சொல்லத்தக்கதாகியது. ஆகாயத்திலே எறிந்த மரமானவை வந்து மேலே விழுந்து, இராட்சதர்கள் வாசஞ்செய்கிற இரத்தின கசிதமான மாடமாளிகை கூடகோபுரமெல்லாம் இடியினாலே சின்னபின்னமான பர்வதம்போலச் சிதைந்து பொடிப்பொடியாயின. நீருண்ட மேகமானவை நெருங்கியிருப்பதுபோல இராவணனெனச் சொல்லப்பட்டவனுக்கு ஆகாயத்திலும் ஒரு சோலையுண்டென சொல்லும்படி, அநுமானவர் அளவிறந்த மரத்தைப் பிடுங்கி மேலே யெறிந்தார். தேனினது துளிக்கப் பலவிதப் பறவைகளும் மணிகள்போல ஒலிக்க, புட்பங்கள் நிறையப் பூத்த விருட்சமானவை ஆகாயமார்க்கமா யெழும்பிப்போய் அவ்விடத்தில் சஞ்சரிக்கிற புட்பவிமானம்போலப் பிரகாசித்தன. பல கிளைகளை தழைத்திருக்கிற மரங்கள் அந்தரத்திலே யிருந்து சமுத்திரத்திலே விழுகிறது எப்படியிருந்ததென்றால், நீருண்ண இரங்கும்படியான மேகத்தைப்போல் இருந்தது. மத்தியில் புண்ணிய வர்ஜ்ஜிதமாய் பூமியில் வந்து பிறந்த தேவர்கள் ஞானத்தை

யடைந்து தங்கள் சுதேசமான சொர்க்கத்தைச் சேர்ந்ததுபோல, பூர்வத்தில் இராவணனால் கொண்டுவந்து இலங்கையில் நாட்டப்பட்ட பஞ்சதருக்கள் அநுமான் பிடுங்கி யெறிதலால் முன்னிருந்த தேவலோகத்திலே தானே போய்ச் சேர்ந்தன. மற்றும் வாயுகுமாரரானவர் மாணிக்கத்திற் பதித்த இடங்களைக் குழிசெய்து, மண்டபங்களை யிடித்தெறிந்து, வாவியானவற்றைத் தூர்த்து, சுவர்த்தலத்தை அழித்து, காட்டுமலையைப் பேர்த்து, வேங்கைமரத்தைச் சிதைத்து, மராமரத்தை வேறுடனே பறித்து, கற்பகமரங்களைப் பூவுடனே ஒடித்து, நிலத்திலே தேய்த்து, சண்பக மரச்சோலையை அதஞ்செய்து, பழுத்த மராமரங்களை முறித்துத் தள்ளினர். ஆஞ்சநேயருடைய பாதமானது படுதலாலே சந்தனமரங்களும் பூமரங்களும் பிளந்து துணிந்து எரிந்து கரிந்தனகள். மல்லிகை முல்லை முதலான கொடிவகையும், செடிவகையுமான சகலமும் தூள் தூளாயின. மயிலும் குயிலும் கிளியும் வண்டுமான இவையெல்லாம் நெருங்கி நசுங்கி மடிந்தன. பக்ஷியானவை இரையும்படியான ஓசையும், மரமானவை ஒடியும் ஓசையும், அநுமான் அடிக்கடி கொர்ஜ்ஜிக்கின்ற ஓசையும் கூடி, ஏக கோஷ்டமாய் இந்த அண்டகடாகத்தைத் தாண்டி அப்பாலும் வியாபித்தது. காடுபோல அடர்ந்து நெருங்கிய மரங்களை அசைத்தெடுத்து அநுமானவர் வீசுதலால் யானைச்சாலை புரவிச்சாலை இரதசாலையாகிய இவையும், அவற்றிலுள்ள யானை புரவி தேர்களும், ஆடரங்குகளும், அன்னசத்திரமும், தண்ணீர்ப் பந்தலும், சிதைந்து நொருங்கின. வலது கையினிடத்திலே சிலசில பெரிய மரத்தையும், இடது கையினிடத்திலே சில சில கட்டு மலையையும் பேர்த்தெடுத்து எறிந்தார். மரம்போய் விழுந்ததனால் இலங்கையைச் சூழ்ந்த பொன்மதிலும் இடிந்து நெருப்பெழுந்தது. மலைபோல் விழுந்ததனாலே மேல் மாடமானவை நெரிந்து நிறைமுழுந்தன. அதனாலே, இலங்கையிலிருந்தவர் யாவரும் பயந்தோடினர். இந்தப்படி வாயுகுமாரரானவர் சின்னபின்னம் செய்யும்பொழுது இலங்கேஸ்வரனானவன் – நான் சீதையினாலே விரகதாபப்பட்ட தருணத்திலே நீயேன் சரீரத்தைத் தகித்தாய்? இப்பொழுது தேவர்களுக்கு முன்னே ஒரு குரங்குவந்து சோலையை அழிக்கும்படி பார்த்துக் கொண்டிருந்தா யென்று கோபிப்பானே; இதற்கென்ன செய்வதென்று பயந்து ஒளித்ததுபோல சந்திரன் அஸ்தமித்தான். அந்த வனத்திலே குற்ற மற்ற நவரத்தினங்களாலும், அபரஞ்சியினாலும், சூரியகாந்தம் சந்திரகாந்தத்தினாலும் நிர்மிக்கப்பட்டிருக்கும்படியான பற்பல மரங்களையும் என்னையனை அநுமான் தனது கையினாலே அள்ளி அள்ளி திக்குகள்தோறும் வீச, அவை ஜாஜ்வல்யமான சுடரெறிப்பதினாலே உலக முழுதும் இருள் நீங்கிப் பிரகாசித்தது. நானாவிதமான மிருகமும் கதறி மனமானது நடுங்கக் கண் கலக்கங் கொண்டன. பற்பல பேதமான பறவையில் சிற்சில கதறிக் கொண்டு போய்க் கடலிலே விழுந்தன. சில பதறிப் பதைத்தன. சில பறவையானவை மேலே பறந்தன. சில கீழேவிழுந்து சிறகுகளை உதறியன. சில சிறகுகளை ஒடுங்கிக்கொண்டிறந்தன. காக்கையானவை தெய்வீகமான மரந்தோறும் கட்டியிருக்கும்படியான கூண்டுடனே ஆஞ்சநேயருடைய கிருபையினாலே சொர்க்கம்போய் சேர்ந்தன. இராக்ஷதர்களாலே காவல் செய்யப்பட்ட சோலையிலே யிருந்த சகல விருக்ஷமும் அழிந்துபோயும் சீதாபிராட்டி

யார் எழுந்தருளி யிருக்கும்படியான ஒரு விருக்ஷம் மாத்திரம் அழியாமல் பர லோக பூலோக பாதாள லோகமெல்லாம் நாசமாய்ப் போகும்படியான மகாப் பிரளய காலத்திலே ஸ்ரீமந் நாராயணன் திருக்கண் வளர்ந்தருளாநின்ற ஆல் போல விளங்கியிருந்தது. மிகுந்த பிரகாசத்தையுடைய சூடாமணியான ஜீவ ரத்தினத்தைத் தன்னுடைய பிராணனுக்குச் சமானமான சக்ரவர்த்தித் திரு மகனுக்கு அடையாளமாய்க் கொடுக்கச்சொல்லி அநுமான் கையில் கொடுத்து விட்டதனால் ஐயோ! சீதையானவள் வறுமையை அடைந்தாளென்று அவளுக் குத் தாய் வீடான சமுத்திரமானது ஒரு சிகாமணியை அனுப்புவித்ததுபோல்ச் சூரியன் உதயமானான்.

அந்தச் சோலையை முழுமையும் பற்றத் தொலைத்துவிட்டுத் தனியே நிற்கும்படியான ஆஞ்சநேயர் சதுர்த்தச புவனத்தையும் அளந்த திரிவிக்கிர மனைப்போலப் பிரகாசித்தார். இவ்விதமா யிருக்கும்படியான சமயத்திலே அநுமான் முன்புசெய்த மந்திரோச்சாடனத்தால் பிரக்ஞை யில்லாமற் சவம் போலே உறங்கிக்கிடந்த இராட்சசிகள் எல்லாம் நித்திரையினின்றும் மாறி விழித்தெழுந்து, வடமேரு பர்வதம்போல விசுவரூபத்துடனே நிற்கும்படியான சுத்தாத்மாவான வாயுகுமாரனைப் பார்த்து, அம்மம்மா! இது எப்படிப்பட்ட சொரூபமென்றும், இந்த மகா புருஷ னுரென்வும், மகத்தான பீதியடைந்து, ஜானகியாரை நோக்கி, நீ இவனுடைய பூர்வோத்தரம் அறிவையாயின் சொல் லென்றார்கள். அது கேட்டுப் பிராட்டியார் துர்ச்சனர் செய்த துஷ்கிர்த்தியங் களையெல்லாம் அப்படிப்பட்ட துர்ச்சனர்கள் அறிவார்களே யல்லாமற்படிக்கு சற்சனர் அறிவார்களா? தண்டகாரணியத்திலே யிருக்கும்பொழுது மாய மானது வர, அந்த மானைப் பார்த்து எங்களுடைய இளைய பெருமாளானவர் இது இராக்ஷதாள் செய்த மாயமாகும். உள்ளபடி மானல்ல வென்றதாய்ச் சொல் லியும் கேளாமல் மெய்யென்று மயங்கின நான் இதை எப்படியறிவேன் என்று சொல்லினர், அதைக் கேட்கவும் அந்த இராட்சத ஸ்திரீகளானவர் வயிற்றி லடித்துக்கொண்டு மிகவும் அச்சமடைந்தவர்களாய்ப் பூமியும் - வானமும் - மலை யும் - கடலும் நிலை குலையும்படியாய் ஓடத் தலைப்பட்டார்கள். அவ்விடத்திலே இராவணனுடைய ஆக்ஞையைக் கொண்டு பிரமதேவரானவர் சொர்னத்தி னாலே சிருஷ்டி செய்ததும், கண்ணுக்கடங்காததும், காற்று மோதப்படாததும், ஆகாயபரியந்தம் நீண்ட அனேகமான தூணையுடையதும் நவரத்தினம் பதிக்கப் பட்டதும், இராக்காலத்திலேயும் இருளானது விலகும்படி ஜொலிக்கத் தக்கதும், மகம்மேரு பர்வதமும் வெட்கி வெதும்பி மனமானது புண்படும்படி உயர்ந்ததும், இந்தப் பூமியானதும் தாங்கக் கூடாத பாரத்தை யுடையதும், விதவனராலும் புகழ்தற்கு அருமையாய் இருக்கிறதுமான ஒரு ஓம மண்டபம் இருந்தது. அதைத் தம்முடைய தந்தையான வாயுவையொத்த பராக்ரம மிகுந்த ஆஞ்ச நேயரானவர் கண்டு, அவர் பூர்வத்திலே தசக்ரீவனனவன் வெள்ளிமலையாகிய கைலாயகிரியைப் பேர்த்தெடுத்த சமாச்சாரம் கேள்விப்பட்டவ ராகையால் அவ னுடைய புஜபலத்திற்குப் பின்ன முண்டாகும்படியாய் அதற்குப் பிரதியாகத் தாம் பொன்மயமான மேருகிரியை எடுத்ததுபோலே இந்த யாக மண்டபத்தை அடியோடே பறித்தெடுத்து இலங்கையின் மேலே விட்டெறிந்தார். அதுபோழ்

விழுந்து அநேக மாட கூடங்கள் பொடியாகி அவற்றினிடத்திலே யிருந்து அனற்பொறி எழுந்து பக்கத்திலே யிருக்கப்பட்ட சகலமான வஸ்துக்களையுஞ் சுட்டெரித்தன. அதனாலே எத்தனையோ இராக்ஷதர் இறந்துபோனர். வெகு பேர் வீரமழிந்தனர். யார்தானுனலும் பிறருக்குக் கேடு நினைத்தால் பிழைப் பாரா? அச்சமயத்திலே அந்தப் பூங்காவனத்தைக் காக்கும்படியான காவலாள ரான தேவர்கள் பிரமித்து, திடுக்குற்றெழுந்து பார்த்து பதறி, உடுத்த வஸ் திரத்துடனே சிறுநீர் விட்டுக்கொண்டு, நெஞ்சிலே பயமாகிய நெருப்பிடப் பட்டவராகி, நிறம் வேறுபட்டு நடுநடுங்கிக் காலிடறும்படி ஓடி, உக்கிர நரசிங் கத்திற்குச் சமானமான இராவணனுடைய சமீபத்திலே போய் அவனுடைய பாதத்திலே சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கி, கேளுமையா! எம்முடைய ஆண்டவனை பிரதாப லங்கேஸ்வரா! இனிமேல் நாங்கள் காவல் செய்வதற்கு முடியாது. ஏனென்றால் பருவதத்திற்கு ஒப்பான தோளையுடைய ஒரு குரங் கானது வந்து உம்முடைய சிங்காரச் சோலையை அழித்தது. அது சொல்லுவ தற்கு எளிதாயிருக்கப்பட்டதல்ல, காலினாலும் - கையினாலும் - வாலினாலும் - தோளினாலும் உதைத்தும், பறித்தும், சுற்றியும், முற்றியும் ஒரு புல் புதர் தூசு முதலானவையு மில்லாமல் போகும்படி பொடிப் பொடியாக்கி, அந் தச் சோலையிலேயிருந்த யாக மண்டபத்தையும் பேர்த்தெரிந்து, சிறிதிட மாத்திரம் தவிர இலங்காபட்டண முழுமையும் நாசமாக்கி விட்டதென்று சொன்னார்கள். அது கேட்ட மாத்திரத்தில் இராவணனவன் அற்ப ஜந்துவான ஒரு குரங்கானது நம்முடைய சொன்ன கசிதமாகிய கற்பக விரு க்ஷம் முதலிய பலஜாதி விருக்ஷங்கள் நெருங்கின பூங்காவனத்தைப் பொடிபடும் படி நிர்மூலமாக்கி, இராக்ஷதரால் காவல் செய்யப்பட்ட கல்யாண உப்பரிகை யென்று சொல்லும்படியான யாகமண்டபத்தையும் பேர்த்தெறிந்து அதனாலே இலங்காபுரியையும் அழித்ததாம். ஆஹா! ஆஹா! இராக்ஷதருடைய வீரப் பிரதாபம் நன்றாயிருக்கின்றது. இந்தச் சொல் மூடர்களும் சொல்லமாட்டார் களேயென்று குலுங்கக் குலுங்க நகைத்தான். மறுபடியும் அந்தச் சோலை யைக் காக்கும்படியான தேவர்கள் இராவணேஸ்வரனை பார்த்து, சுவாமி! ஆகாயம் பூமியெங்கும் நிறைந்த அதனுடைய ஸ்தூல வடிவத்தைச் சுமக்கும் படியான சக்தியையுடைய இந்தப் பூமியை யல்லவோ புலவரெல்லாம் துதிசெய்ய வேண்டியது. அந்தக் குரங்கைப் பிரமா விஷ்ணு உருத்திரனென்று சொல் லப்பட்ட மும்மூர்த்திகளிலே ஒருவனென்று சொன்னாலும் நிகராகமாட்டாது. அதைப் பின்பு தேவரீரே பார்க்கப்போகிறீரென்றார்கள். அத்தருணத்தில் பூமண்டலமானது கிழியவும், கடல் பல திசைகளிலு மோழைபோகவும், அஷ்ட கஜங்களும் திக்குப்பாலகரும் பயந்து ஓட்டம் எடுக்கவும், இராக்ஷதர்களுடைய கர்ப்பமானது கலங்கி விழவும், அண்டகடாகமும் வெடிபட்டதென்று சொல் லும்படி அநுமானவர் அட்டகாசஞ் செய்து ஆர்ப்பரித்தார்.

பொழிலிறுத்தப் படலம் முற்றிற்று.

கிங்கரர் வதைப் படலம்

இவ்விதமாக ஆஞ்சநேயர் கெர்ஜ்ஜித்த முழக்கமானது எழுந்து, மலைக் குகையிலே விழுந்த இடிபோலவும், முன்னாளிலே மிதிலையிலே சிவனுடைய வில்லொடிந்து பிறந்த சப்தம்போலவும், தசக்கிரீவனுடைய மாணிக்கக் கிரீடத்தை யணிந்த பத்துத் தலையும் குலுங்கும்படியாய் இருபது காதிலும் வந்து நுழைந்தது. அப்பொழுது ராவணனுக்குக் கொஞ்சம் நகைப்புத் தோன்றச் சகிக்கக்கூடாமல் மகா பராக்கிரமசாலிகளான அநேக இராக்ஷத கிங்கரரைக் கூவி, அந்தக் குரங்கானது ஓடிப்போகாததற்கு முன்னமே சீக்கிரத்திலே ஆகாய மார்க்கத்தையும் போய் கட்டி வளைத்து, அதைக் கொல்லாமல் இலகு வாய்ப் பிடித்துக்கொண்டு வாருங்களடாவென்று ஆக்கியாபித்தான். அக் கணமே சூலாயுதம் - வாளாயுதம் - வேலாயுதம் - தண்டாயுதம் - தோமராயுதம் - முசலம் - பிண்டி - பாலம் - சக்கரம் - முசுண்டி - குலிசம் - பாசம் - மழு - குந்தம் - வில் - அம்பு இவைகள் முதலான ஆயுத வர்க்கத்தைக் கையிலே தாங்கிக் கொண்டு, காளகூட விஷத்தைப்போலச் சரீரமானது கறுத்துத்தோன்ற உலகத்தை அழிக்கும்படி ஊழிகாலத்து விசைபோல பொங்கி யெழுந்து வருகின்ற சமுத்திரத்தைப்போல் அதிவேகமாய் நடக்கின்றவர்களும், யுத்தமானது கிடைத்ததென்று சொல்லக்கேட்ட மாத்திரத்திலே, அந்தச் சொல்லானது கள்ளுண்டதைப் பார்க்கிலும் அதிகமான களிப்பை யுண்டாக்கச் சந்தோஷிக்கும்படியான சிந்தையை யுடையவர்களும், காடுபோலே நெருங்கிச் சூழ்ந்து சமுத்திரத்தைப்போலே கோஷிக்கிறவர்களும், ஆகாசத்தைப் பார்க்கிலும் பரந்த கீர்த்தியையும், மலைபோலே பருத்து உயர்ந்த தோள்களையுமுடையவர்களும்; தேவ தானவரான இருவகைப்பட்ட பகைவரையும் அநாயாசமாய் ஜெயித்த வீர விக்கிரமத்தையுடைய நாம், இப்பொழுது ஒரு சிறிய குரங்கினுடனேயா போர் செய்து ஜயம் பெறுவதென்று நினைத்து; அந்த நிந்தைக்காக மிகுந்த நாணங்கொண்டு அது தங்களை யுபாதிக்கப்படுகின்றவர்களும், அரையிலே உடைவாளும் மார்பினிடத்திலே வஜ்ஜிரகவசமும், காலினிடத்திலே வீரகண்டாமணியும் தரித்திருக்கப்பட்டவர்களும், எட்டுத் திக்கினிடத்திலும் போய் முட்டும்படியான தோள்களை யுடையவர்களும், மேகமென்று சொல்லப் பட்டதை தாவிப் பிடிக்கிற கையை யுடையவரும், அண்டத்தை யளாவும் தலையை யுடையவரும், காலடிகளால் மலைகளை யிடறுகிறவரும், மேகம் குமுறுவதுபோலவும், பேரிகை முழங்குவதுபோலவும் வசனிக்கிறவர்களும், தேவர்கள் பிரயோகித்த தெய்வீகமான ஆயுதம்பட்ட புண்ணும், அசுரரானவர் பிரயோகித்த ஆயுதம்பட்ட வடுவும், புஜத்திலே பிரகாசிக்கும்படியாய் வருபவரும், ஆண் யானையையும் பெண் யானையையும் வாரித் தின்னும்படியான பலத்தையொத்த வாயிலே பிறைபோல விளங்கும்படியான வக்ரதந்தங்களும், கொதிக்கிற கண்ணுடையவரும், ஒருவரையொருவர் இப்பொழுது படையெடுத்துப் போவதென்ன வென்று கேட்க அவர் சொன்ன சொல் இன்னதென்று தங்களுக்குத் தெரியாமல் கேட்டவர்களுக்கு எதிருத்தரமாக என்னவென்றே சொல்கிறவரும், தமக்கு முன்னே போகிறவர்களுடைய முதுகை தம்முடைய கோபாக்கினியா

னது தீய்க்கும்படியாய் முனைகிறவரும், ஒரு குரங்கல்லவர் அசோக வனத்தை யும் யாக மண்டபத்தையும் அழித்தது; நம்முடைய பராக்கிரமமானது நன்றாய் இருக்கின்றது; இனிமேல் இதைப் பார்க்கிலும் வேறு பழியுமுண்டோ வென்று சொல்லிக்கொண்டு கோபாவேசத்துடனே மனோவேகத்தைப் பார்க் கிலும் முடுகிவருபவரும்; இரணபேரிகையின் ஓசையும், வில் நாரியினுடைய ஓசையும், வீரகண்டையின் ஓசையும், சங்கோசையும், அதட்டிக் கனைக்கின்ற ஓசையும், ஒன்றாய்ச் சேர்ந்து ஊழிகாலத்துக் கடலோசையும், சப்த மேகங்களி னுடைய ஓசையும், அடங்கும்படி தாங்கள் போவதற்குத் தெருவில் இடம்போதா தென்று ஆகாயமார்க்கமா யெழும்பிப் போகிறவரும், புருவமும் கைவில்லும் வளையும்படிப் புகையெழத் தக்கதாய்ப் பெருமூச்சு விடுபவரும், ஒருவருக் கொருவர் முந்திக் கிரமமில்லாமல் கோபிக்கிறவரும், நடக்க வழிகிடையாமல் இந்த லங்கை விசாலமாய் இருக்கவில்லையென்று முற்பட்டுப் போகின்றவர் களை இதோ நாங்களும் வருகிறோம் நில்லுங்களென்று அழைப்பவர்களும், உறையி லிருக்கப்பட்ட வாளை யுருவிக் கையிலே பிடித்து அது பளபளவென்று பிரகாசிக்கும்படியாய் அசைக்கின்றவர்களும், வாயினுடைய உதட்டை மடித்து மீசை முறுக்கித் தோள்கொட்டித் தொடை தட்டிக் கற்கள் நொறுங்கும்படி துகைத்து வாயிலுள்ள பற்களை நெறநெறவென்னும்படி கடிக்கிறவர்களும், மலை நிற்பதுபோல நிற்பவர்களும், அநேகவிதமான ஆயுத பரீக்ஷை பண்ணி யிருக்கப்பட்டவரும், யுத்தத்திலே சிறப்படைந்த பெயரைப் பெற்றிருக்கிறவரும், பூமி நெளியும்படியாய்ச் சஞ்சரிக்கிறவரும், வரத்திலே மிகுந்தவரும், இவற்றை ஆபரணமாய் அணிந்திருக்கப்பட்டவரும், தேவர்களைத் தோற்கும்படியாய் வென்றவரும், அசுரரானவரைக் கொன்று தின்னுனின்றவரும், பன்னகர்கள் யுத்தத்திலே முதுகு காட்டிப் போகும்படியாய்ப் பார்த்துச் சிரித்துப் பரிகாசஞ் செய்தவரும், அளகாபுரியைக் கொள்ளையிட்டுக் குபேரனுடைய கீர்த்தியை அழித்தவரும், தோள்கள் தினவெடுத்தால் போர்செய்து அதைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று நாள்தோறும் தேவலோக முதலான சகல லோகத் திலும் போய்த் திரிந்தவரும், அஷ்டகிரியைக் காலினாலே இடறுமென்று சொன் னாலும் கடல் நீரைக் குடியுமென்று சொன்னாலும் சூரியனைக் கீழே தள்ளு மென்று சொன்னாலும் மேகத்தைப் பிழியுமென்று சொன்னாலும், ஆதி சேஷனை யிழுத்து நிலத்திலே மோதுமென்று சொன்னாலும் பூமியை யெடு மென்று சொன்னாலும், அந்த வார்த்தை வாயில் இருக்கும்பொழுது தானே முடிக்கத் தக்கவருமான அந்தக் கிங்கரர் காலினிடத்திலே யிருந்து எழும்படி யான தூளிகள் போய்த் தேவர்களுடைய கண்ணை மறைக்கப் புலிக்கூட்டம் போலவும், சிங்கக்குழாம் போலவும், ஆலகால விஷம் போலவும், அதிக வுக்ர மாய்ச் சரவேகத்தைக்கொண்டு கரியமலைகள் உருவப்பெற்று வருவதுபோல வந்தார்கள். கண்களானவை அக்கினிப்பொறியைக் கக்க, சுவாசம் புகைய, வேலானவை மின்ன, இடிபோல கர்ஜித்து நாலு திக்கிலும் ஓடி, பிரசண்ட மாருதமானது மோதுதலால் நட்சத்திரம் உதிர்வதுபோலச் செடி - கொடி - மரங்களெல்லாம் சிறுதுகளா யுதிர்ந்தன, மேக சஞ்சாரமில்லாத ஆகாயம் போல உருவழிந்திருக்கும்படியான அந்தச் சோலையை சுற்றி வளைத்தார். இவ் விதமாக வந்து வளைந்தவர்களுடைய ஊதுகொம்பினுடைய சப்தத்தையும், தவ

ளச் சங்கினுடைய ஓசையையும், பேரிகை முழக்கத்தையும், வீரகெர்ஜ்ஜனையையும் கேட்டு, சூரியனும் பயந்து போம்படி அண்டமுகடு பரியந்தம் வளர்ந்து கைலாய பர்வதம்போல நிற்கும்படியான அனுமானைவர் அவர்கள் வருவது கண்டு, போர் செய்யும்படியாய் வருகின்றார்க் ளென்பதைக் குறித்துத் தம்முடைய மனோபீஷ்டம் சித்தித்ததென்று மிகவும் சந்தோஷப்பட்டார். அந்த ராக்ஷதர்கள் அனுமானைப் பார்த்து இவன்தான் இவன்தானென்றும், இது தான் இதுதானென்றும் சொல்லிக்கொண்டே வாயுவைப் பார்க்கிலும் விசையாக எதிரே நடந்து, பகலாவது இரண்டு இரவாக மாறும்படி அனைவரும் நெருங்கி, சொர்க்க மத்திய பாதாளமென்று சொல்லப்பட்ட திரிலோகமும் கிடுகிடாய்க்க ஆயுதவர்க்கமெல்லாம் பிரயோகித்தார்கள். சம்வர்த்தம் - ஆவர்த்தம் - புஷ்கலாவர்த்தம் - சங்காரிதம் - துரோணம் - காளமுகி - நீலவருணம் என்கின்ற எழுவகைப்பட்ட மேகங்களும், லவணம் - இட்சு - சுரா - சர்ப்பி - ததி - க்ஷீரம் - சுத்தோதகம் என்னும் பேரிகையை முழக்கினார்கள். மலை முழையைப் போலத் தங்கள் வாயைத்திறந்து அதிலிருந்து புகை தழுவும்படி கோபித்தார்கள். ஆதிசேஷனுடைய பிடரொழியும்படி அடிபெயர்த்து வைத்து, மூங்கிற் காட்டில் அக்கினி கலந்ததுபோல ஒன்றாகக் கலந்தார்கள்.

தர்ம மூர்த்தியாகிய மாருதியானவர் யுத்தசன்னத்தராய் வந்த இராக்ஷதர்களை அறிந்து, தமக்கு அருகில் முறிந்து கிடக்கின்ற ஒரு பெரிய மரத்தையெடுத்து இது இந்தச் சமயத்தில் நமக்குக் கிடைக்கப்படாத துணையாகக் கிடைத்தது என்று அதிக மனக்களிப்போடும் கையில் தாங்கிக்கொண்டு, முற்காலத்தில் பாற் சமுத்திரத்தைக் கடைந்த மந்தரகிரியைப்போல அந்த இராக்ஷத சேனை சமுத்திரத்தின் மத்தியில் குபீரென்று எழும்பிக் குதித்து, கையிற் கொண்ட மரத்தால் மலைகள் பிளக்கும்படி இடி இடிந்து விழுகிறதுபோல மோதி மோதி யடித்தார். அத்தருணத்தில் எதிர்த்த இராக்ஷதக் கூட்டங்களில் அநேகர் பருத்த பர்வதத்திலிருந்து அருவியாறுகள் ஒழுகுகிறது போலத் தோள்களினின்று உதிரவெள்ளம் ஒழுக, ஒருவரையொருவர் சேர்த்துக் கட்டிக்கொண்டவர்களும், தலைகள் பிளந்து உருள்கின்றவர்களும், பாறைக்குச் சமானமாகிய கண்கள் பறி யுண்டவர்களும், விழுந்து தரையுடனே தரையாய்ப் படிந்தவர்களும், கோர தந்தங்க ளிழந்தவர்களும், பிடரியுந் தலையும் பிளந்தவர்களும், உயிர் நீங்க உடல் சிதைந்தவர்களும், குடல் சரிந்தவர்களும், ஆயுதங்களை யெறிந்து சரீர முறிந்து மறித்தவர்களும், ஆயுதத்துடனே ஆயுதந் தாக்குதலால் அக்கினிப்பொறியெழுந்து மயிர்கள் தீய்ந்தவர்களும், தொடைகளும் முதுகும் துணிந்தவர்களும், அஸ்திர சஸ்திரங்கள் ஒடிந்து தோள்களறுந்து விழுந்தவர்களும், வயிறு பீறுண்டவர்களும், மலைகள் சாய்கிறதுபோலக் கால் சாய்ந்தவர்களு மானார்கள். பின்னும் போர்செய்ய இருட் கூட்டத்தைப்போல நெருங்கி வந்தவர்கள். உடனே புழுதியில் விழுந்து புரண்டு பிராணனை யிழந்தார்கள்.

வில்லையும் அம்பையும் தெண்டாயுதத்தையும் ஏந்தி வந்தவர்கள், அநுமான் உதைத்த உதையினால் மார்பு நெறிந்து ரத்தங்கக்கினார்கள். பக்கங்கள்

தோறும் இருக்கிற மலைகளே வேரோடே பரித்து மோதுதலால், அநேகர் குபேரனுடைய அளகாபுரியில் போய் விழுந்தார்கள். அநுமான் வாரியிறைக்க அநேகர் உலகமுழுது மறையும்படி இறை பட்டார்கள். கரகரவென்று சுழற்றி யெறிய, அநேகர் சுழன்றுகொண்டே ஆகாயத்தில் போய் அங்கிருந்து சமுத்திரத்தில் விழுந்தார்கள். சரீரம் சின்னபின்னப்பட்டு அநேகர் மூலைக்கு மூலை ஓடினார்கள். அநுமான் கைகளால் அள்ளியள்ளி எட்டுத் திக்கிலும் எறியப்பட்டு, அநேகர் தேகத்துடனே இந்த உலகத்தைத் துறந்தார்கள். சில பேரைப் பிடித்துக் கைகளையும் கால்களையும் பிட்டு எறிந்ததனால் அவர்கள் சிறகறுபட்டுக் கிடக்கின்ற பர்வதங்களைப் போல் நிலத்தில் கிடந்தார்கள். சில பேரை வாலினால் சுற்றி யெடுத்து வீசுதலால், அவர்கள் பம்பரத்தைப்போல அந்தரத்தில் சுழன்றார்கள். பல இராக்ஷதர்களுக்கு வாள்களும் மழுக்களும் சூலங்களும் இற்று, அதுகளைப் பிடித்த கைகளும் தோள்களும் அற்றதுகள். பல இராக்ஷதர்களுக்கு நக்ஷத்திரங்கள் உதிர்வதுபோலப் பற்கள் பலபல வென்று நெறித்ததுகள். பல இராக்ஷதர்களுக்குத் தலைகள் உடைந்து மூளைகள் தெறித்ததுகள். பல இராக்ஷதர்களுக்குக் கவசங்களும் வீர கண்டாமணிகளும் சிலம்புகளும் பொன்னரி மாலைகளும், அநேக விதமாகிய ரத்ன ஆரங்களும் குண்டலங்களும் நெறிந்ததுகள். பல ராக்ஷதர்களுடைய ஐம்பொறிகளும் கலங்கும்படி தோள்களும் எலும்புகளும் உதிர்ந்ததுகள். பல இராக்ஷதர்களுடைய முஷ்கரம் - முசுண்டி - சக்கரம் - கப்பணமென்னும் ஆயுதவர்க்கங்கள் உதிர்ந்ததுகள். இராக்ஷதர்களுடைய உயிர் பிரிந்து போகும்படி உடல் பிளந்து உதிர்ந்ததுகள். அவர்கள் தலையிலணிந்த இரத்தின மகுடங்களு முடைந்து உதிர்ந்ததுகள். ஆஞ்சநேயருடைய கால்களினாலும் தோள்களினாலும் சிலர் மடிந்தார்கள். கண்களின் கோபாக்கினியால் சிலர் மடிந்தார்கள். கைக் குத்துகளால் பலபேர் மடிந்தார்கள். தங்கள் தங்கள் வாள்களினாலேயே பலபேர் மடிந்தார்கள். மரங்களினாலே பல பேர் மடிந்தார்கள். சிலபேரை ஓடி மேல் விழுந்து அழுத்திக்கொன்றார். சிலபேரை அவர்கள் தேகத்தில் சூட்சும ரூபங் கொண்டு நுழைந்து பருத்துக் கொன்றார். சிலபேரை அவர்கள் தேர்க்கொடிக் கம்பத்தினால் ஓடிக் கொன்றார். சிலபேரைப் பிணமலைகள் தோறும் போய்த் தேடிக் கொன்றார். மற்றும் அந்த இராட்சத சைனியத்தின் நடுவே புகுந்து காற்றடியைப்போல நான்கு மூலைகளிலுஞ் சுழன்று திரிந்தார். சிலர் அந்த ஆஞ்சநேயரால் இழுக்கப்பட்டிறந்தார்கள். சிலர் இடிக்கப்பட்டிறந்தார்கள். சிலர் பிடித்தெறியப்பட்டிறந்தார்கள். சிலர் எடுத்தெறியப்பட்டிறந்தார்கள். சிலர் கைகளால் இறுக்கிப் பிடிக்கப்பட்டிறந்தார்கள். சிலர் அவர் கொக்கரித்ததினாலிறந்தார்கள். சிலர் அவர் அடித்ததினால் மாண்டார்கள். சிலர் அவர் உக்கிர திருஷ்டியாகக் கண்ணை விழித்ததினால் மாண்டார்கள். சிலர் அவர் கொல்வாரென்கிற பயத்தினால் மாண்டார்கள். பின்னும் மாருதியானவர் தம்மை முட்டினவர்கள் முட்டியும், கிட்டினவர்களைக் கிட்டியும், கட்டினவர்களை கட்டியும், தட்டினவர்களைத் தட்டியும் சமயுத்தஞ்செய்து கொன்றார். அவர் ராட்சதர்கள் தம்மை நினையாமல் மறந்தாலும் கொல்லுவார், மறவாமல் நினைத்தாலுங் கொல்லுவார். பூமியிலிராமல் ஆகாயத்தில் பறந்துபோனாலும் கொல்லுவார், எதிரே நில்லாமல் அப்புறத்தில் ஓடினாலுங் கொல்லுவார். இராக்ஷதர்க

ளுண்டய ஆயுதங்களை அதுகள் வருகின்ற வழிகள் தோறும் கையினல் பிடித்துப் பிசைந்து பிசைந்தெறிவார். நிணமும் மூளையுஞ் சேறும் வண்டலும் போல ரத்தத்துடனே கலந்து இலங்கைத் தெருவெல்லாம் நிறைந்து பிரவாகமாகிக் கோட்டை வாயில்களினுலே ஓடத் தலைப்பட்டது எப்படி யிருந்தென்றல் :

அந்த இலங்கையானது, அநுமானது புஜபல பராக்கிரமத்தால் அலைச் சற்பட்டுத் தன் வாய்களால் இரத்தங் கக்குகிறதுபோல் இருந்தது. வேகத்தை யொத்த அநுமானுனவர் காலைக்கொண்டும் கையைக்கொண்டும் வாலைக்கொண் டும் அநேக இராக்ஷதர்களைச் சேர்த்துக்கட்டி மரத்துடனே மோதுதலால், அவர்கள் ஆலையிலிட்ட கரும்புபோல நசுங்குவார்கள். அவர்களுடைய இரத் தம் அந்தக் கருப்பஞ்சாறுபோல வழிந்து சமுத்திர மென்கிற கூனிலே போய்ப் பாயும். இராக்ஷதர்களை எடுத்தெறிவதனல், அநேக மாளிகைகளும் மண்டபங் களும் கோபுரங்களும் இடிந்து தகர்ந்ததுகள். மதயானைகளும், பிடியானைகளும், குதிரைகளும், அங்கங்கே தானே உதைத்துக்கொண்டு இறந்ததுகள். ஆஞ்ச நேயர் தூக்கியெறிந்த விசையில் அநேகர் தங்கள் வீட்டிலேதானே போய் விழு ந்து, தங்கள் வீடுகளைத்தாங்களே இடித்து நகர்த்தினுர்கள்; அநேகர் தங்கள் கால் களால் தங்கள் மனையாட்டிமார்களைத் தாங்களே கொன்ருர்கள். அநேகர் தங்க ளாயுதங்களால் தங்கள் மக்களைத் தாங்களே மடித்தார்கள். அஞ்சனுதேவி புத்ர ரானவர் இராக்ஷத ஸ்திரீகள் படுந்துயரத்திற்காக இரக்கப்பட்டு, உங்கள் வீட் டை நோக்கிப் போங்களென்று சில ராக்ஷதரை அனுப்பிவிட்டார். நவநவ மாகக் கூடிய நாயகிமார்கள் கையில் அவர்களுயிரைக் கொடுத்ததுபோலச் சில ராக்ஷதரைக் கொல்லாமல் பிடித்துக்கொடுத்தார். தங்களைப் பிரிந்து யுத்தத் திற்கு வந்ததைக் குறித்து ஊடின ஸ்திரீகளுக்காக அவர்கள் மாளிகையிற் போய்ச் சேரும்படி சில இராக்ஷதரைப் போக்கினுர். விருக்ஷங்கள் தோறும், தெற்றுகள் தோறும், நாச்சந்திகள் தோறும், கடைகள் தோறும், கோட்டை யிடங்கள் தோறும், தோப்புகள் தோறும், தெருக்கள் தோறும், மடுக்கள் வாவிகள் தோறும், ஏரிகள் ஓடைகள் தோறும், அந்தத்தேச முழுமையும் ராக்ஷதப் பிணமாகும்படி செய்தார். அவர்களுடைய உயிர்களையெல்லாம் பிடித்துப்பிடித்து நமனுனவன் கையும் சலித்துக் காலு மோய்ந்தான். மாரு தியும் ஓடுகிறதோ தவிர்கிறதில்லை. நக்ஷத்திர மண்டலத்திலும், மேக மண் டலத்திலும், சொர்க்கத்திலும், மற்றுமுள்ள பலவிதமாகிய பதவிகளிலும், இராக்ஷதர்களுடைய உயிர் போய் நிறைந்ததுகள்.

இவ்விதமாகிய யுத்தம் நடக்கிற சமயத்தில் மறுபடியும் இராக்ஷதர்கள் மேகங் கொண்டவர்களைப்போலக் கோபாவேசமாக வந்து, ஆகாய முழுமை யும் எட்டுத்திக்குகளும் மேகங்கள் கவிந்துகொண்டது போலக் கவிந்து கொண் டார்கள். அவர்களுக்கு மத்தியில் வாயுகுமாரர் மேகத்தின் நடுவிலிருக்கிற சூரியனைப்போலப் பிரகாசித்தார். இறைகின்றதனலும் அலைகின்றதனலும் பெருத்திருப்பதினலும் கறுத்துக் காண்பதனலும், வேல் - வாள் முதலாகிய ஆயுதங்கள் மகர மச்சங்கள் போல விளங்குதலாலும் ராக்ஷதர்கள் கலங்கிய கடல்போ லிருந்தார்கள். அநுமானுனவர் அந்தக் கடலைக்கடைந்த மந்தர

கிரிபோ லிருந்தார். ஆஞ்சநேயருடைய கையினலும் மெய்யினலும் காலினலும் வாலினலும் மணிமுடிகள் நெரிந்து சிதைந்து மடிந்த இராக்ஷதர்களோ, தேவர்கள் நடுங்கும்படி கருடன் அமிர்தகலசத்தைக் கிரகித்துக் கொண்டு போனகாலத்தில், அவனல் சின்னபின்னப்பட்ட சர்ப்பராஜர்களைப்போலானர்கள். ஆஞ்சநேயரோ, அந்தக் கருடராஜனைப்போலானர். தசை முதலானதுகளும் மற்றும் சிதறும்படி துகைத்துக் கொன்றும் குறைவுபடாமலிருக்கின்ற அரக்கர்கள், யானைக்கூட்டத்தை யொத்தார்கள். அநுமானனவர், அந்த யானைகளுக்குச் சத்துருவாகிய சிங்கத்தை யொத்தார். அம்பு கொண்டு எய்ததும் கதைகொண்டடித்ததும் சூலங்கொண்டு எறிந்ததும் வாள் கொண்டு அறுத்ததும் கோல்கொண்டு குத்தியதும் சுரிகைகொண்டு தோண்டியதும் வேல்கொண்டு துளைத்ததும் கோடாரிகொண்டு பிளந்ததும் சக்கரங் கொண்டு கொய்ததும், பாசங்கொண்டு சுற்றியதும் குறடுகொண்டு பற்றியதும் சலாகைகொண்டு குடைந்ததுமாகிய பலவித காரியங்களும் அநுமானுடைய புஜத்திலுண்டாயின. விசாலமாகிய சமுத்திரங்களும் மழைபெய்யும் பருவத்தையுடைய மேகக் கூட்டங்களும் அஞ்சும்படி பிரபலமான யுத்தஞ்செய்கின்ற ராக்ஷதர்களுடைய சண்டையின் ஆரவாரத்தைப் பார்க்கிலும், ஐயனகிய அநுமானைப் புகழ்கின்ற தேவர்களுடைய ஸ்துதி முழக்கமே அன்றையப் போரில் அதிகரித்தது. கொடிய கோபத்தையுடைய ராக்ஷதர்கள் முறைமுறையாக விசையுடனே பிரயோகித்த எத்தனையோ கோடி ஆயுதங்கள் பட்ட புண்களும், தேவர்களும் அவர்கள் பத்தினிமார்களும், முனீஸ்வரர்களும், மழைபோலச் சொரிந்த புஷ்பங்களும், வாயுபுத்திரருடைய தோளில் வேற்றுமை தெரியாமல் விளங்கியிருந்ததுகள். கிழக்கு - தென் கிழக்கு - தெற்கு - தென் மேற்கு - மேற்கு - வட மேற்கு - வடக்கு - வட கிழக்காகிய அஷ்ட திக்குகளிலும் சக்கரம் போலச் சுழல்வதினலும், ஆகாயத்தில் உயர்ந் தெழும்புவதினலும், அங்கிருந்து மலை வருவதுபோலப் பூமியிற் பாய்வதினலும், காலொடிந்து - கையறுந்து - தோள் முறிந்து - தொடை நெரிந்து - வயிறு கிழிந்து - குடல்கள் சரிந்து - தலை பிளந்து - உடல் நசுங்கி - இராக்ஷதர்களெல்லாம் இறந்தார்களே யல்லாமல், அநுமானுடைய சரீரம் சிறிதாவது வெயர்க்கவுமில்லை. அவர் பெருமூச்செறியவுமில்லை. மனஞ் சலிக்கவுமில்லை. இராவணன் அனுபவிக்கும்படி விஷமுண்டவர்களைப்போல மயங்கி அநுமான்மேல் யுத்தஞ் செய்யவந்த ராக்ஷதர்களெல்லாம் இவ்வாறு போராடி மடிந்தார்களே யல்லாது, அவர்களிலொருவராகிலும் பயந்து ஓடவேயில்லை. ஆகையால், அரக்கரைப் பார்க்கிலும் சுத்த வீரர்கள் யார் இருக்கிறார்கள்? அந்தக் கிங்கரர்களெல்லாம் ஒரு க்ஷணப் பொழுதில் மடிந்துபோகவே, அதுகண்டு சிங்காரவனத்தின் காவலாளர்கள் நடுக்கத்துடனே புறப்பட்டுக் கைகளெழாமல் பயமானது கழுத்தை பிடித்துத் தள்ள, பிணமலைமீது விழுந்து தடுமாறி எழுந்து சீக்கிரமாக வோடி ராவணனிடத்திலே போய் பயத்தினலே சொல்லுகிறதற்கு நாவெழாமல் விம்மி விம்மி, அநுமானலே ராக்ஷதர்கள் மடிந்ததைக் கையினலே காட்டிக் காட்டித் திக்குகளை வெறிக்கப்பார்த்துச் சஞ்சலப்பட்டார்கள். அவர்கள் படுகின்ற வருத்தமே தனக்குச் சொல்லும்படி ராவண னறிந்துகொண்டு, என்னடா பேய் பயல்களே! நான் அனுப்பின இராக்ஷதர்களெல்லாம் இறந்து போனர்களா?

அல்லவென்று என்னுடைய ஆக்கினையை கடந்து துறந்துபோனர்களா? அல்ல வென்று யுத்தஞ்செய்து வெகுநாளான படியினலே அதனை மறந்துபோய்த் திரும்பி வந்துவிட்டார்களா? நீங்களேன் ஓடிவந்தீர்கள்? என்று தன் பத்து வாய்களும் நெருப்பைக் கக்கும்படி கேட்டான். அதற்கு அவர்கள் சுவாமி! அப்படிக்கெல்லாம் வந்தது ஒன்றுமில்லை. தாங்க ளனுப்பிய கிங்கரர்க ளெல்லாம் அந்தக் குரங்கினலே யுத்தகளத்தில் பராக்கிரமமழிந்து அஞ்சா மல் பொய் சாக்ஷி சொன்னவர்களுடைய குலம்போல நிர்மூலமாக மடிந்து போனர்களென்று சொன்னர்கள். அதுகேட்டுத் தன் பக்கத்திலிருந்து ஏவல் செய்கிற அஷ்டதிக்குப் பாலகர்களாகிய தேவர்களைப் பார்த்து, மனதிலே ரணங்கொண்டு, இதுவென்ன நீங்கள் அறியவில்லையா வென்று மூன்று லோகங்களையும் விழுங்கத்தக்கதாகக் கோபாக்கினியானது மூண்டெழச் சொன் னன். அதற்கு அவர்களொன்றும் பேசாமல் பயந்திருந்தார்கள். மறுபடியும் சிலர் வந்து சொன்னவர்களைப் பார்த்து, அந்தக் குரங்கு நம்முடைய இராட்சதர் களைக் கொன்றதென்கின்ற வார்த்தை நீங்கள் காதினலே கேட்டதா? அல்லது கண்ணினலே கண்டதா? சொல்லுங்களென்று கேட்டான். அத்ற்கவர்கள் ஐயா! நாங்கள் ஒருபக்கத்திலிருந்து பார்த்தோம். சமுத்திரம்போலச் சுற்றி வளைந்துகொண்ட நம்முடைய சேனைகளை யெல்லாம் அந்த வானரம் மண்டலா காரமாகச் சுழன்று சுழன்று ஒரு மரத்தாலே அடித்து மடித்தது. இன்னமும் அது ஒழிந்ததல்லவென்று சொன்னர்கள்.

கிங்கரர் வதைப் படலம் முற்றிற்று.

ஜம்புமாலி வதைப் படலம்

அப்போது கைகூப்பிக்கொண்டு எதிரே நிற்கின்ற மலைக்கொப்பாகிய தோள்களையுடைய அதிவீரனகிய ஜம்புமாலி யென்பவனை இராவணன் பார்த்து, நீ இந்தக்ஷணமே யானை குதிரை முதலாகிய சேனைகளுடனே போய் வளைத்து அந்தக் குரங்கின் மதத்தை யடக்கி அதைப் பிடித்துக் கயிற்றினலே கட்டிக் கொண்டு வந்து என் முன்பாகவிட்டு என்னுடைய கோபத்தை ஆற்றென்று சொன்னன். அந்த வார்த்தையைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியாய்ச் சேவித் துக்கொண்டு, கணக்கிடப்படாமல் திரண்ட இவ்வளவு ராக்ஷத வீரர்களுக்கு முன் என்னை ஒருபொருளாக மதித்து நீ இந்தக் காரியத்தை முடிக்கவேண்டு மென்று ஏவத்தக்க பாக்கியம் நான் பெற்றேனே; இனி என்னைப் பார்க்கி லும் உயர்ந்தவர்கள் யாரிருக்கின்றர்கள்? என்று சொல்லி, அந்த இலங்காதி பதியாகிய ராவணனுடைய கோபந்தானே நடந்துபோகிறதுபோல நடந்தான். இப்படி நடந்த ஜம்புமாலியானவன் தன்னுடைய சேனைகளுடனேயும், தனக்கு இராஜாவாகிய இராவணன் கூட்டிய சேனைகளுடனேயும், தன் பிதாவும் இரா வணனுடைய முதல் மந்திரியுமாகிய பிரகஸ்தனென்பவன் அனுப்பிய சேனை களுடனேயும், மற்ற இராக்ஷத சிரேஷ்டர்கள் விட்ட சேனைகளுடனேயும், நமக்கு யுத்தம் வாய்த்ததென்கிற சந்தோஷத்தைக்கொண்டு ஆஞ்சநேய நிருந்

கும் சோலையை நோக்கிப் புறப்பட்டான். அப்போது இடிபோலும் குரலினையும், சிவந்த கண்களையும் தாவள்யமாகிய தந்தங்களையும் வீரபட்டங் கட்டிய நெற்றியையுமுடைய மலைபோல் பருத்த யானைக்கூட்டங்களும், மேகமண்டல மட்டும் உயர்ந்த் சக்கரங்களையும் தட்டுமொட்டுகளையும் முத்துச்சரங்கள் தூக்கிய கொடிச் சீலைகளுமுடைய் இரதக் கூட்டங்களும், காற்றைப் பிடித்துக் கட்டி கால்கள் முதலாகிய பல உறுப்புகளும் ஏற்படுத்தி உயிருங்கொடுத்து எமனை மேலே யேற்றியதற்கு ஒப்பாயிருக்கின்ற புரவிக் கூட்டங்களும், சுழல்கின்ற விழிகளையுடைய புலிகளுக்குச் சமானமாகிய பதாதிக்கூட்டங்களும் நெருங்கவும், தோமரம் - உலக்கை - கடகம் - கோடாரி - வஜ்ஜிரம் - அங்குசம் - சத்தி - சக்கரம் - வில் - அஸ்திரம் - கெதை - எறியீட்டி - காலபாசம் - வளைதடி - கவண்கள் - வேல் - பெருஞ்சவளம் - எழு - மழு முதலாகிய அநேகவித ஆயுதங்கள் பிரகாசிக்கவும், பலபேதமாகிய சித்திரக் கொடிகள் ஆகாயத்தை யளாவிக் காடு போல அடர்ந்து வரவும் முரசங்கள் - சங்கங்கள் - எக்காளங்கள் முதலாகிய வாத்தியங்கள் சப்திக்கின்ற சப்தமும், தேர்வண்டில்கள் கடகடவென்று ஒலிக்கின்ற ஒலியும், குதிரைகள் கனைக்கின்ற ஓசையும், யானைகள் முழங்குகின்ற முழக்கமும், வில்லின் குணத்தொனியும், சகல ஜீவராசிகளின் செவிகளும் செவிடுபடும்படி அண்டமுகடுமட்டும் போய்த் தேவர்கள் ஒருவர்க்கொருவர் பேசுகின்ற வார்த்தையை விபரந் தெரியாமல் மயக்கின. அந்தச் சேனை நடக்கும் பொழுது, சொர்ன்மயமாகிய லங்கையிலிருந்து தூசுகளெழுந்து போய்ப் படிகிற படியினுலே மலைகளெல்லாம் மகமேருபோலவும், நகரங்களெல்லாம் சொர்க்க லோகம் போலவும் ஜொலிக்கவுந் தலைப்பட்டதுகள். பாபியாகிய ஜம்புமாலியினுடைய ரதத்தின் புறத்தில் வந்த தேர்கள் பதினுயிரம்; யானைகள் இருபதினுயிரம்; குதிரைகள் நாற்பதினுயிரம்; பதாதிகள் எண்பதினுயிரம்; அந்தத் தேர்களில் வருகின்ற வீரர்கள் பிரமவம்சத்தில் பிறந்தவர்கள்' தனுர்வேதத்தைக் கரைகண்டவர்கள்; சமஸ்த மந்திர தந்திரங்களு மறிந்தவர்கள்; அபரிமிதமாகிய வரம் பெற்றவர்கள்; மிகவும் கடூரமானவர்கள்; மகா பராக்கிரமசாலிகள்; வஜ்ஜிரஸ்தம்பத்திற்கு ஒப்பாகிய தோளினிடத்தில் வில்லைத் தாங்கினவர்கள்; முதுகின்புறத்தில் அம்பரூத்தூணி தூக்கினவர்கள்; மார்பில் வெற்றிமாலையுங் கவசமுந் தரித்தவர்கள்; யானைமேல் வருகின்ற வீரர்கள் நிருதியின் வம்சத்திற் பிறந்தவர்கள்; ஐராவதமென்னும் வெள்ளானையை ஏறி நடத்துகின்ற தேவேந்திரனுக்குச் சமானமாகிய அழகினையுடையவர்கள்; பலவகை ஆயுத பரீக்ஷையும் அங்குச பரீக்ஷையும் தேர்ந்திருக்கின்றவர்கள்; நெருப்பு ஜொலிக்கின்ற கண்களும் சூரியனைப்போல பிரகாசிக்கின்ற சரீரமுடையவர்கள்; அஸ்வத்தின்மேல் வருகின்ற வீரர்கள் பதினெண் வகைப்பட்ட சாரியையும் தெரிந்தவர்கள்; ஆயுத பரீக்ஷைகளெல்லாம் அறிந்தவர்கள்; யுத்தத்தில் மூனேந்து ரதவீரர்கள் கஜவீரர்களுடைய சிரசின்மேலும் தாவிச் செல்லும்படி புரவியை நடக்கத்தக்கவர்கள். இப்படிப்பட்ட சேனைகளெல்லாம் சூழும்படி அந்த ஜம்புமாலி என்பவன் தேவர்களும் பயந்து நடுங்க அளவில்லாத ஆயுதங்களை யேந்திக்கொண்டு, கண்களில் நெருப்புப்பொறி பறக்க மார்பிலணிந்த கவசமும் கோர தந்தங்களும் பிரகாசிக்க வந்தான்.

அப்போது நந்தவனத்திலிருந்த அனுமானுனவர், ஏனை இன்னும் இராக்ஷதர்கள் வரவில்லையென்று அவர்கள் வரும் வழியைப் பார்த்து, சோலையின் வாசலில் சந்திரன் முதலாகிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் மேலே தழுவும்படி இந்திர தனுசுபோலத் தோன்றுகின்ற தோரண கம்பத்தின் மேலேறி, அந்தக் கம்பத்தில் பதித்திருக்கின்ற நவரத்னங்களும் பொன்னும் ஆகாயத்தில் நிறைந்த இருளை நீக்கிப் பிரகாசிக்கச் சமுத்திரத்தின் நடுவிலே உதயமாகிய சூரியனுக்குச் சமானமாய் விளங்கியிருந்தார். அப்படி யிருந்தவர் இடியுடனே மேகங்கள் சிந்தவும், கடலோசை யடங்கவும், அஷ்டமாநாகங்கள் உயிரையும் விஷத்தையும் கக்கவும், ராக்ஷதர்களுடைய நெஞ்சில் பயம் ஜனிக்கவும், தேவர்கள் நடுங்கவும், அஷ்ட திக்கிலுமுள்ள ஐராவதம் - புண்டரீகம் - வாமனம் - குமுதம் - அஞ்சனம் - புஷ்பதந்தம் - சார்வபௌமம் - சுப்ரதீபம் என்கின்ற யானைகள் மதமடங்கி அசைவற்றிருக்கவும், தென்திசையி லிருக்கிற யமனும் மனந் திடுக்கிடவும், ஆகாயத்தி னின்றும் நட்சத்திரங்கள் புஷ்பங்கள் வதிர்வதுபோல உதிரவும், சமுத்திரங் கலங்கவும், தோள்களைக் கொட்டினார். அத்தருணத்தில், ராக்ஷதர்களெல்லாம் சமுத்திரத்தைப்போல ஆர்ப்பரித்து நான்குதிசையிலும் ரத்தப்பிரவாகம் ஓட மத்தியில் பிணமலைகள் தங்களைத் தடுப்பதனால் வருவதற்குச் செவ்வையாகிய வழியைக் காணுமல் எந்த வழியால் போவோமென்று சொல்லிக்கொண்டு தங்கள் தங்கள் இனத்தாருடைய சரீரத்தின்மேல் காலிடறி விழுத்தலைப்பட்டார்கள். ஐம்புமாலியானவன் அவ்விடத்தில் அந்தச் சேனையை வெவ்வேறுக அணிவகுத்து இருபக்கங்களிலும் முன்னும் பின்னும் கிரமம் கிரமமாக முடுகிப் போகும்படி ஏவித் தானும் தன் தேரை நடத்தினான். அதுகண்டு தோரண கம்பத்தின் மேலிருந்த ஆஞ்சநேயர் தம்முடைய அபீஷ்டம் சித்தித்ததென்றறிந்து தோள்கள் பூரித்து, திருவாழி திருச்சங்கத்தை ஏந்திய ஸ்ரீமந் நாராயணனுடைய திருமண் குறியானது தீபச்சுடர் போலப் பிரகாசிக்கின்ற தமது நெற்றியே முன்னணியாகவும், தேகத்தில் மொய்த்திருக்கின்ற ரோமங்களே நடுவணியாகவும், வாலே பின்னணியாகவும், கைகளிலும் கால்களிலுமுள்ள நகங்களே வேல்கள் வாள்களாகவும், தாமும் அவர்களுக்கெதிரே யுத்தசன்னத்தராய் நின்றார். அதுகண்டு ராக்ஷதர்கள் கோபச் செருக்குற்றவர்களாகி, அவர்மேல் சூரியனைப்போல ஒளி வீசுகின்ற அநேகவித ஆயுதங்களை மழை பொழிவதுபோலப் பிரயோகஞ் செய்தார்கள். கருத்த சமுத்திரத்திற்குச் சமானமாகிய அந்த ராக்ஷத வீரர்கள் பிரயோகித்த ஆயுதங்களையெல்லாம் ஆஞ்சநேயர் தமது சரீரத்தில் ஒன்றுவது படவொட்டாமல் கைகளால் பிடித்து ஒடித்து, தூள் தூளாகும்படி பிசைந்து கடலி லெறிந்து விட்டு, ரோமத் துவாரங்கள்தோறும் அனற்பொறி சிதறும்படி வடவாமுகாக்கினியைப் போலக் கோபித்து, தோரணக்கம்பத்தை விட்டுப் பூமியில் குதித்துப் பார்க்கும்பொழுது ஒரு எழுவாயுதம் கிடந்தது. அதை எடுத்துக்கொண்டு ராக்ஷதக்கூட்டத்தில் பிரவேசித்து, அவர் தோரண கம்பத்தின்மேல் இருக்கின்றாரென்றும், அதிலிருந்து எழுந்தாரென்றும், நிலத்தி லிரங்கினாரென்றும், மறுபடி ஏறினாரென்றும், நான்கு பக்கங்களிலும் திரிகின்றாரென்றும், சண்டை செய்கின்றாரென்றும் அறியாதவர்களாய், எங்கும் விரிந்து குவிந்து விலங்கிக் கலந்து பொருந்தி நெருங்கிய அரக்கர்களெல்லாம் யுத்தகளத்தில் சின்னபின்

னப்படும்படி ஜாடினர். அவர்கள் எறிகின்ற சக்கரம் முதலானதுகளையும், எய்கின்ற அஸ்திர முதலானதுகளையும், வில்லிடியைப்போல் மேலே வருகின்ற தண்ட முதலானதுகளையும், இடது கையினாலே பற்றிச் சிதைத்தார், யானைகள் மாளவும், தேர்களழியவும் குதிரைகள் நெரியவும், வலது கையினாலே குத்திக் குமைத்தார். மற்றும் வாயுபுத்திரன் அந்த எழுவகையுதத்தைக் கொண்டு மோதுதலாலே அநேகம் யானைகள் கொம்புகள் நெரிந்து, தும்பிக்கையானது துணிந்து, கால் முறிந்து, வால் சிதைந்து, செவி யறுந்து, தொனியு மடங்கி, மதமும் வறண்டு, மஸ்தகம் பிளந்து, கோபந்தணிந்து மடிந்தன. அநேகமான இரதங்கள் அச்சொடிந்து, மச்சழிந்து, சகடு பிளந்து முகடு குலைந்து, மேற்பார் தகர்ந்து, கீழ்ப்பார் நெறிந்து, ஏர்க்கால் முறிந்து, குத்துக்கால் துணிந்து, தட்டு சிதைந்து, சுற்றுப்பெயர்ந்து, குடைசாய்ந்து, கொடி வீழ்ந்து, புரவிகள் மடிந்து, சாரதிகளிறந்து சின்னபின்னமாயின. அநேகம் குதிரை இடுப்பொடிந்தும், மண்மேலே யுருண்டும், நெஞ்சுலர்ந்தும், வாய் புலர்ந்தும், வாலெரிந்தும், கண் குழியவும், அஸ்தியானவை நெறியவும், கால் மடங்கவும், கழுத்துத் துவண்டும், வயிறு பீறுண்டும் மாண்டன. அநேகம் காலாள்கள் பயப்பட்டுப் பிரமித்து திட்டென்று விழுந்து பொட்டென்றெழுந்து, அடியுண்டு பிடியுண்டு ஐம்பொறி கலங்கி, அறிவு தடுமாறி உருண்டு சுருண்டு பிராணனோடு தரையிலே தானே உதைத்துக்கொண்டு புழுதியிலே புரண்டார்கள். மற்றும் யானைகளை வாரி யானைகளின்மேலே மோதினர். தேரைத் தூக்கித் தேரின்மேலே யுடைத்தார். குதிரையை யெடுத்துக் குதிரையின்மேல் எறிந்தார். பதாதியை யள்ளிப் பதாதியின்மேலே இறைத்தார். மூளையும் உதிரமும் ஒன்றாகக் கலந்து குழம்பிச் சேறாக, அந்தச்சேற்றிலே யானையானவை விழுந்தழுந்தவும், இராக்ஷத வீரருடைய தலையும் தோளும் அறுபட்டு விழவும் மிதித்தார். மல் வீரரையும் மற்ற வீரரையும் பிடித்து, அவர்களுடைய கோர தந்தமும் - கையும் - வில்லும் - வேலும் - போர் செய்வதற்கு அழைக்கும்படியான சொல்லும் - உயிரும் - நிர்த்தூளியாய்ப் போகும்படி நிலத்திலே யிட்டுத் துகைத்தார். நான்கு திக்கிலேயும் நெருங்கியிருக்கும்படியான தேர் தொறும், யானைதொறும், புரவிதொறும், பதாதி தொறும், நடந்து நடந்து அநேக சைனியத்தை மடித்தார். யுகாந்தகால இடியிடிந்து விழுந்தாற்போலே அநுமானனவர் உயர வெழும்பிக் குதிரையினுடைய முதுகிலே குதிப்பார். குதிரையினுடைய முதுகிலே யிருந்து இராக்ஷதருடைய மார்பிலே குதிப்பார். இராக்ஷதருடைய மார்பிலே யிருந்து இரதத்தின்மேலே குதிப்பார். இரதத்தின்மேலே யிருந்து மதயானையின்மேல் குதிப்பார். இருவினையையும் கடந்த முக்தாத்மாவுடைய அறிவைப்போல ஒரு தன்மைப்பட்டிருப்பார். ஸ்தன முதலான அவயவங்களைச் சகலருக்கும் பொருளுக்கு விலை கூறுகிற வேசியருடைய மனதைப்போலப் பல தன்மையாகக் காணப்படுவார். காற்றடியைப்போலச் சுழன்று சுழன்று திரிவார். ஸ்ரீமந் நாராயணனுடைய தாச பூதர்கள் அவனுடைய குணதிசயத்தைப் பெறுவாரென்று சொல்லும் வேதப் பிரமாணத்தைப் பிரத்தியக்ஷப் படுத்துகின்றவரைப்போல, ஸ்ரீ ரகுநாதருக்கு அடிமையான ஆஞ்சநேயர் பூமியிலும் - ஆகாயத்திலும் - எட்டுத் திக்கிலும் - பார்த்தபேருடைய கண்ணிலும் - நினைத்தபேருடைய மனதிலும் - எங்

கெவ்கும் தாமாய்க் கலந்திருந்தார். தேர்களை அவற்றினிடத்திலே கட்டிய கொடி குடை முதலான பலவித உறுப்புகளுடனும், பூட்டிய புரவிகளுடனும், மேலே யிருக்கும்படியான ரதி கருடனும், நடத்துகின்ற சாரதியுடனும் ஒரு கையினல் எடுத்து அடித்து நிலத்திலே யிட்டு அறைந்தார். மதயானைகளை அவற்றின்மேல் வைத்த அம்பாரியுடனும், அவற்றில் வீற்றிருக்கும்படியான வீரருடனும், அவற் றைச் செலுத்தா நின்ற பாகருடனும், ஒரு கையிலே பிடித்துப் பிசைந்து உயிர் போகும்படியாய்ப் பிழிந்தார். கறுத்த நிறத்தையும் வக்கிர தந்தத்தையும் ஏரி யெழும்பும்படி விழிக்கின்ற கண்ணையும் கையிலே சூலத்தையும் பாசத்தையும் உடையவராய்க் கோர பீகரத்தோடே எமதரும ராஜனைப்போல வந்த இராக்ஷ தரை யெல்லாம், உருத்திர மூர்த்தியைப்போல தனித்தனி உதைத்து உதைத் துக் கொன்றார். சக்கரம் - தோமரம் - உலக்கை - தண்டு - வேல் - வாள் இவை முதலாய்ச் சொல்லப்பட்ட யாவையும், குடை - கொடி - ஆலவட்டம் - சாமரம் - தேர் - யானை - குதிரை - பதாதி - இவை முதலாய்ச் சொல்லப்பட்டவையும் சின்னபின்னப்பட்டு, இரத்த ஆற்றிலே அலைபுரட்டி யுருட்டும்படி போய்ச் சமுத்திரத்திலே விழுந்தன. அநுமாருடைய கையிலே யிருக்கின்ற இருப்புலக் கையினுடைய அடிபட்டு இராக்ஷதருடைய தலை யெழும்பி, அண்ட முகட்டை யெட்டி மலையை முட்டித் திசைகளைக் கிட்டி ஒன்றோடொன்று ஒட்டித் தட்டு முட்டாடின. இப்படியாகக் கூடவந்த யானைக்கூட்ட மெல்லாம் ஒரு உக்கிர சிங்கத்தினுலே கொல்லப்பட்டு இறக்கும்படி தனித்து நிற்கிற மதயானையைப் போலே ஜம்புமாலியானவன் தன்னைச் சூழவந்த சேனையெல்லாம் அநுமா னுலே இம்சிக்கப்பட்டு மாண்டுபோகத் தான் மாத்திரம் தனியே நின்று, எம தரும ராஜனைப்போலே கண் சிவந்து அக்கினியைச் சொரியும்படியாய் அதிக கோபாவேசங் கொண்டு அந்த ரணக்களத்திலே மடிந்த யானை குதிரை முத லானவை இராக்ஷதருடைய இரத்த நதியிலே மூழ்கி நிணச்சேற்றிலே தன் தேர்வண்டி யழுந்தி அப்புறம் பேராமல் நின்ற நிலையை அறிந்து, அதைவிட்டு விலகிப்போவதற்கு வேறொரு வெளியிடங் கிடையாமையால் எவ்விடத்திலும் அலைந்து, தடுமாறி மகா பிரயாசத்தோடே இரதத்தை நடத்திக்கொண்டு வந் தான். அப்படி வந்த ஜம்புமாலியைப் பார்த்து ராமதூதரானவர் ஒரு வார்த் தைச் சொல்லுகிறார். அடா ராக்ஷதா! உன்னுடைய கையிலேந்திய ஆயுதமு மொன்றே. நீ ஏறியதேரு மொன்றே. ஆகையால் நீ மிகவும் இளைத்தவனாய் இருக்கின்றாய். இவ்விதமாக இளைத்த எளியவருடன் சண்டைசெய்து பிரா ணனை வாங்குகிறது நீதியல்ல; கூடவந்தவர்களை ரக்ஷிக்கத்தக்க சக்தி யுனக் கில்லாமல் பின்னிட்டு நின்றாய். எதிர்த்தால் எப்படியும் இந்தக்கணமே இறந்து போவையே யல்லாமல் வேறென்ன செய்வாய்? ஆதலாலே வேண்டாம். சும் மாய்த் தப்பிப் போய்விடென்று சொன்னர். அதுகேட்ட ஜம்புமாலியானவன் அப்படியா? என்னுடைய வீரம் நல்லதுதான் நல்லதுதானென்று நெருப் பெழும்படி நகைத்து, இப்பொழுது உன்னை ஜெயிக்க மாட்டாமல் உன்னலே தோற்கடிக்கப்பட்டு மாண்டுபோன இந்தச் சோம்பேறிகளைப் போலவா என் னையும் நினைத்துக் கொண்டா யென்று சொல்லி, தன்னுடைய பலம் பொருந் திய வில்லினிடத்திலே சாணைபற்றி ஒளி வீசுகிற பாணங்களை ஒன்று - பத்து - நூறு - ஆயிரம் - பதினாயிரம் - இலக்ஷம் - கோடி கோடியாய்ப் பூட்டிப் பிர

யோகஞ் செய்தான். அப்படிப் பிரயோகித்த ஐம்புமாலியை ஆஞ்சநேயர் பார்த்து, அடா துஷ்டா! நீ சும்மா விராதே. இன்னமும் பாணங்களைப் பிரயோகஞ் செய். கையிலே வில் - அம்பு முதலான ஆயுதத்தை யுடைய வனு யிருக்கிறவன் நிராயுதனை ஜெயிப்பது அருமையா? அருமையல்ல வென்று சொல்லி நகைத்துக் காற்றினுலே பல திசையினிடத்திலும் சிதறிப் போகாநின்ற மேகத்தைப்போலச் சிதறிப் போகும்படி அவனுலே எய்யப்பட்ட பாணத்தை யெல்லாம் தம்முடைய கையிற் கொண்ட இருப்புலக்கையினுல் சின்னபின்னப் படுத்தினர். ஐம்புமாலி தன்னுலே பிரயோகிக்கப்பட்டு முன்னும் பின்னுமாய்ப் போன அஸ்திரங்கள் அநுமானுடைய தேகத்திலே படாமல் முறிந்து விழுந்ததுகண்டு அதிக கோபதாபம் கொண்டு, தன்னுடைய ரதத்தை அநுமான் மேலே செலுத்தும்படி யத்தனப்பட்டு, போகிறதற்கு வழிதுறை காணுதவனுய்த் திகைத்து முன்னிருந்த இடத்திலேதானே யிருந்து, அக்கினி யைக் கக்குகின்ற ஒரு அர்த்தசந்திர பாணத்தைவிட்டு ஸ்ரீ ராம தூதருடைய கையிலே யிருந்த இருப்புலக்கையைக் கண்டதுண்ட மாக்கினன். இருப்புலக் கையானது பொடிபட்டது கண்டு எங்களாண்டவனுன ஆஞ்சநேயர் சற்றே மனஞ் சலித்து, மற்றும் அவ்விராட்சதன் எய்யும்படியான பாணத்தையெல் லாம் ஒருமிக்கக் கையினுலே பிடித்து மடக்கி ஒடித்து நொறுக்கி எறிந்துவிட்டுத் தேவர்கள் பார்த்துச் சந்தோஷித்து ஆர்ப்பரிக்கும்படி அவ்விராக்ஷதனுடைய தேரின்மேல் பாய்ந்து, கரவடத்தை யுடைய அந்த ஐம்புமாலியினுடைய கை வில்லை எட்டிப் பறித்து அவனுடைய கழுத்திலே மாட்டி விசையாகத் திருப்பி முறுக்கி இழுத்தார். இழுத்தமாத்திரத்தில் பெரிய மலையற்று முறிந்து விழுவது போலவே அவனுடைய தலையற்று மண்மேலே விழுந்தது. உடனே அவ னுடைய தேரும் சாரதியும் புரவியும் முறிந்து நெறிந்து சிதைந்து குழம்பாகும்படி சரேலென் றெழும்பிக் குதித்து மிதித்துத் துகைத்துவிட்டு, மறுபடியும் அந்த உன்னதமான தோரண ஸ்தம்பத்தின் மேலேவந்து ஏறிக்கொண்டார். அவ ரைப் பழித்துக்கொண்டு வந்து போர்செய்து மாய்ந்த இராக்ஷதரைக் கண்டு தேவர்களெல்லாம் பயந்து ஓடிப்போனர்கள். தங்களைப் பிரிந்ததினுலே துக்கப் பட்டுக்கொண்டு இருக்கின்ற மனையாட்டிமாராகிய இராட்சத மாதரானவர் காணும்படி அவர்கள் நாயகன்மாருடைய பிணமான உடல்களை உதிர ஆறுனது இழுத்துக்கொண்டுபோய் வீடுதோறும் எறிந்தபடியினுலே, லங்கா பட்டணத் திலே யுள்ளவரெல்லாம் அஞ்சி யோட்டமெடுத்தார்கள். இறந்துபோன இராக்ஷ தருக்காக இராட்க்ஷத மாதர் அங்கங்கே அழத்தொடங்கினர்கள். இப்போது இந்த அநுமானுலே இராக்ஷதருடைய பலமழிந்ததென்று தர்மதேவதை சந் தோஷித்தது. அச்சமயத்திலே அந்தப் பூங்காவனத்தைக் காக்கின்ற இராக்ஷ தர்கள், இராவணனுடைய சமூகத்திற்குச் சீக்கிரமாய்ப்போய் பயத்தினுல் வாய் விட்டு ஒன்றுஞ் சொல்லமாட்டாமல் விக்கி விக்கித் தேம்பி அழுதுகொண்டு நின்றார்கள். அதுகண்டு லங்கேஸ்வரன் நகைத்து, பயமடையாமல் சொல்லுங்க ளென்று சொல்ல, சுவாமி! நம்முடைய குலத்தாரெல்லாம் மாண்டுபோனர்கள். அவர்களுடனேகூட ஐம்புமாலியும் இறந்து போனன். அவ்வொரு குரங்கு தானே அத்தனை பெயர்களையும் மாய்த்துவிட்டது என்பதாய்ச் சொன்னர்கள். இச்சொல்லைச் சொல்லும்பொழுதே கோபாக்கினியானது திக்கு திக்கென்

றெரிந்து ஒங்கி, இச்செய்தியை நினைக்க நினைக்கக் கண்களிலே யிருந்து இரத்த மானது குமிழியிட்டுப் பாய, அவ்விதமான குரங்கைச் சீக்கிரத்திலேதானே நானே போய்ப் பிடித்து வருகின்றேனென்று சொன்னன். அதுகேட்டு விருபாட்சன் - விபூபாட்சன் - துர்த்தரஷன் - பிரதத்தன் - பாசகர்ணன் என்கிற பஞ்ச சேனபதிகள் திடுக்கென்றெழுந்து கைகட்டி வாய் புதைத்துக் கொண்டு சொல்லுகிறார்கள்.

ஜம்புமாலி வதைப் படலம் முற்றிற்று.

பஞ்ச சேனபதிகள் வதைப் படலம்

கேளுமையா திரிலோகப் பயங்கரனுய் இருக்கின்ற பிரதாப லங்கேஸ்வரா! சிலந்திப் பூச்சியைப் பிடித்துத் தின்கிற சொற்பமான ஒரு குரங்கின் மேல் தேவரீர் படையெடுத்துப் போவீரே யாமாகில், பூர்வத்திலே நீர் செய்த யுத்தத்தில் உம்முடைய நேத்திரத்திலே யிருந்து மூண்டெழுந்த கோபாக்கினியி னலே மதம் வற்றிக் கிடக்கின்ற திக்கஜங்களுக்கு மதமுண்டாகும். மேலும், மகத்தான பராக்கிரமத்தையுடைய கருடனைவன் ஒரு சிறிய மத்தகத்தை லட்சியம் பண்ணிக்கொண்டு அதன்மேலே யுத்தத்திற்குப் போவதுபோல நீர் இந்தக் குரங்கை ஒரு பொருளாய் மதித்துக்கொண்டு யுத்தத்திற்குப் போனல் இரவும் பகலும் உம்முடைய புஜபலத்தை நினைத்துத் துக்கப்பட்டுக்கொண் டிருக்கின்ற கைலாய பர்வதத்திற்கும் துக்க நிவாரணமாகும். அதனல் உமக்கு மோக்ஷ சாம்பிராஜ்ஜியம் வருமென்பதென்ன? ஒன்றுவது இழிவான செய் கையை யுடையவர்களா யிருந்தவர்களெல்லாம் பெறுகின்ற பேறு யாதொன் றையும் கண்ணலேயும் காணுமல் காதினலும் கேளாமலே போய்விட்டார்கள். மேலும் இதற்குச் சமானமான இழிவு வேறென்ன இருக்கின்றது? ஆகை யாலே நீர் அவ்வகைப்பட்ட குரங்கின்மேலே போர்செய்யப் போவதினலே உம் முடைய பெருமை யிவ்வளவென்று தெரியாமல் நடுங்குகின்ற திரிமூர்த்திக ளுடைய முகங்களில் சிரிப்புண்டாகும். அதுவுமல்லாமல், பார்க்கின்றவர்கள் கேட்கின்றவர்களுக்கு வேறே யும்மிடத்தில் பலசாலிகள் இல்லை யென்பதாகவும் தோன்றும். முன்பு வீரமில்லாத பலவீனர்களை யனுப்பினீர். போனதுபோகட் டும். இனியாவது நன்மையைப் பெறவேண்டுமென்று குறித்தீரேயாமாயின் எங்களுக்குச் செலவு கொடுத்தனுப்பும்; அப்பொழுது எங்களுடைய சாமர்த் தியம் தெரியவருமென்று சொல்லிக் கைகளையெடுத்து அஞ்சலி செய்தார்கள். அதற்கு இராவணனைவன் சம்மதித்தான். அத்தருணத்தில் திரிலோகாதி பத்தியமும் தங்கள் வசமாகப் பெற்றவர்கள்போலப் பஞ்ச சேனபதிகள் சந் தோஷ சித்தர்களாகி, நெற்றியில் அணிந்த திலதமானது நிலத்திற் பொருந் தும்படித் தாழக்குனிந்து பின்னும் பின்னும் பலதரஞ் சேவித்துக்கொண்டு ராவணனுடைய சபா மண்டபத்தைவிட்டு வெளியிலே வந்து, எண்ணிக்கையில் லாத இரதகஜ துரகபதாதிகள் சீக்கிரத்தில் வந்து சேரவேண்டுமென்று சொல்லி யானையின்மேல் பேரிகை யறைவித்தார்கள்.

அந்தக்கணமே, நால்வகைச் சேனைகளும் சமுத்திரம்போல வந்து எங்கும் பரந்து நிறைந்ததுகள். மேக கர்ஜிதம்போல இரணமுரசு முதலாகிய சகலவித வாத்தியங்களும் முழங்கின. நானாவிதமான ஆயுதங்களும் மின்னல் போல நெருங்கி வந்தன. வெள்ளைக் கொடிகள் மேகத்தினுடைய வயிற்றைத் துளைத்துக்கொண்டுபோய் அநுமானலே கோபிக்கப்பட்டு இறந்துபோன சத்துருக்களுடைய கீர்த்தியானது பரந்ததுபோலவும், சண்டமாருதமென்கிற காற்றானது மோதும்படி ஆகாய கங்கையின் அலைகளெழுந்து புரண்டது போலவும், வானமுழுதும் பரந்து அசைந்தன. இராக்ஷதர்களெல்லாம் வீரகண்டாமணி கட்டி மார்பிலே கவசம்பூண்டு அரைக்கச்சை யிறுக்கிக்கட்டி பலவிதமான அஸ்திரங்களை நிறைத்த அம்புப்புட்டிலை முதுகினுடைய புறத்திலே சாத்தி வில்லேந்திப் போர்க்கோலங்கொண்டு, தேர்கள் யானைகள் புரவிகள் முதலான வாகனங்களை அலங்காரஞ் செய்து அவற்றின்மேலேறிப் பிரயாணப்பட்டார்கள். அந்தச் சேனையிலிருக்கின்ற யானைகளின் மதங்கள் பெருகிப் பூமியில் பாய்தலால், அநேக ஆறுகளுண்டாகியதுகள். அவற்றிலே சக்கரங்கள் அமிழ்த் தேர்களோடுதலால், அந்த ஆறுகள் வற்றிச் சேருகியதுகள். அதில் குளம்புகள் பதியக் குதிரைகளோடுதலால், அந்தச்சேறு புலர்ந்து நீராகியது. அதில் குதிரைகளினுடைய வாய்நுரை வழிந்து விழுதலால் அந்த நீறு நனைந்து வேருகியது. தேர்களினுடைய முழக்கமும், குதிரைகளின் முழக்கமும், வீரகண்டாமணியின் முழக்கமும், புரவிகளுடைய கிண்கிணி மாலைகளின் முழக்கமும், பிரளயகால சமுத்திர முழக்கத்திலும் மூன்று மடங்கு அதிகமாய் முழங்கியதுகள். தேர்கள் ஐம்பதினாயிரமும், யானைகள் ஐம்பதினாயிரமும், குதிரைகள் நூருயிரமும், பதாதிகள் இருநூருயிரமும் சூழத்தலைப்பட்டதுகள். ராவணனவன் மேன்மேலும் அழைத்தனுப்புந்தோறும் திரண்ட சேனைப் பிரவாகம் வந்து சஞ்சரிப்பதற்கு இடமில்லாமல் நெருங்குதலால், அந்தச்சேனை வீரர்களுடைய ஆயுதங்களோடே ஆயுதங்கள்பட் டிழைந்து மேகக் கூட்டங்களும் தீய்ந்துபோகும்படி நெருப்புப் பொறிகள் எழுந்ததுகள். யானைகளினுடைய பக்கங்களில் தொங்கவிட்டிருக்கின்ற மணிகள் மேகக் கூட்டத்திலிருந்து இடியிடிக்கிறதுபோல மிகவும் ஒலிக்கத் தலைப்பட்டதுகள். இவ்விதமாய்ப் பிரயாணப்பட்ட சேனைகளிலுள்ள இராக்ஷதர்களை அவர்கள் கொண்ட பெண்ஜாதிமார்களும், அவர்களுடைய வயிற்றிற் பிறந்த புத்திரிமார்களும், அவர்களைப் பெற்றெடுத்த தாய்மார்களும், அவர்களுக்கும் மற்றுமுண்டான உறவின் முறையார் சகலமானவர்களும் ஓடிவந்து தடுத்து, முன்பு அக்குரங்கின் முன்னே போனவர்களில் ஒருவராயினும் உயிர்தப்பி மீண்டு வரவேயில்லை. அப்படியிருக்க, இப்பொழுது நீங்களும் போகின்றபடியினாலே நாங்களும் உங்களுடனே கூடவருகின்றோமென்று இரங்கிப் புலம்பி யழுதார்கள். அந்தச் சேனை சமுத்திரத்தினடுவே பஞ்சமா பூதங்களைப்போலவும், ஐந்து தேரின்மேலே ஐந்து சூரியர்களானவர் வருகிறதுபோல்வும், பஞ்சசேனைபதிகள் பேரிகை - பூரிகை - எக்காளம் - சல்லரி - மல்லரி - தடாரி - தம்பட்டம் - தாளம் - மத்தளம் முதலான பலவித வாத்தியங்களும் முழங்கும்படியாகக் கோபாக்கினிப் பொறி சிந்த, இடிமுழக்கம்போல வில்லைக் குணத்தொனி யெழுப்பிக்கொண்டு வந்தார்கள். அவர்கள் எவ்விதப்பட்டவர்களென்றால், முனிவர்களுக்கும் தேவர்களுக்கும்

சர்வகாலமும் பஞ்சேந்திரியங்களைப்போலச் சத்துருத்வத்தைக்கொண்டு உபத்திரவஞ் செய்கின்றவர்கள். யுத்தஞ் செய்கின்ற சமயத்தில் இந்திரனுடைய வஜ்ஜிராயுதமும், வருணனுடைய பாசமும், எமதர்ம ராஜனுடைய தண்டமும், சிவனுடைய சூலமென்னப்பட்ட தெய்வீகமான ஆயுதங்களெல்லாம், ஒரு ஊசி நுழையத்தக்க சொற்பமான வடுவும் செய்யமாட்டாத புஜபலத்தை யுடையவர்கள், சூரபத்மனைச் சங்கரித்த சுப்பிரமணியரானவர் ஏறுகின்ற வாகனமாகிய மயிலின் கலாபத்திலுள்ள இறகையும், சகலமான லோகங்களையும் சிருஷ்டித்த பிர்மதேவர் ஏறுகின்ற வாகனமாகிய அன்னத்தினுடைய சிறகிலுள்ள இறகையும் பறித்து மத்தியில் மத்தியில் வைத்து முறுக்கித் தொடுத்துத் தலையிலும் நெற்றியிலும் விருதுகளாகக் கட்டிக்கொண் டிருக்கின்றவர்கள். பூர்வத்திலே குபேரனுடனே சண்டை செய்து அவன் புறங்கொடுத்துப் போக, அவனுடைய பட்டணத்திலிருந்து கொள்ளையிட்டுக் கொண்டுவந்த நானவிதமான பூஷணங்களையும் பூண்டிருக்கின்றவர்கள். போரிலே தோற்ற இந்திரனைவன் பயத்தினல் ஐராவதத்தை விசையாய் நடத்திக்கொண்டு போனது கண்டு அதன் வால்மூனையைப் பின்புறத்திலிருந்து பிடித்துக் கொண்டு, அடா இந்திரா! நீ நடத்தத்தக்க சாமர்த்திய முடையவனைனல் எதோ நடத்தடா பார்ப்போமென்று சொல்லி இழுத்துவந்த பராக்கிரமம் உடையவர்கள். பிர்மாவினுடைய சொல்லினல் எமனைனவன் உம்முடைய ஆக்கினையைக் கடந்து நடக்கின்றனென்று சொல்லக்கேட்டுஇராவணனுக்குக் கோபமூண்டெழுந்தது கண்டு அந்த யமனை அதிவேகமாய்ப் போய் இறுகக் கட்டிக்கொண்டு வந்து இராவணன் முன்னே விட்டு அவனுடைய கோபத்தைத் தணித்தவர்கள். கயிலை - இமயம் - மந்தரம் - விந்தியம் - நிஷதம் - ஏமகூடம் - நீலகிரி - கந்தமாதனமான அஷ்டகிரிகளையும் நகைக்கின்ற விசாலமான மார்பினையும், உயர்ந்தெழுகின்ற கடல் அலைகளை நகைக்கின்ற பெரிய தோள்களையும், காலபாசத்தை யுடைத்தாயிரானின்ற எமனுடைய கொலைத்தொழிலை நகைக்கின்ற கொடூரமான கொலைத் தொழிலையும், கொல்லனைவன் துருத்திகொண்டு ஊதுகின்ற உலைக்களத்தை நகைக்கின்ற அக்கினியைக் கக்கும் கண்களையு முடையவர்கள். யுகாந்த காலாக்கினியானது சுவாலாமாலையா யெறிந்துகொண்டு வந்தாலும் யுகாந்த காலத்திலே யுண்டான மாருதமானது மோதியடித்தாலும், யுகாந்தகால சமுத்திரம் பொங்கிப் புரண்டெழுந்தாலும் எவ்வளவும் உபத்திரவமென்பதே யில்லாமல் நிர்ப்பயமாய் திக்குகள் தோறும் சஞ்சரிக்கின்றவர்கள். இப்படிப்பட்ட தன்மையையுடைய அந்தப் பஞ்ச சேனைபதிகள் தங்களைச் சூழ்ந்துவந்த சேனைகளுடனே அனுமானைவர் ஏறியிருக்கும்படியான தோரணஸ்தம்பத்தினுடைய சமீபத்திலே போய்ச் சுற்றி மொய்த்துக்கொண்டு சேனைகளை அணிவகுத்து யூகங்கட்டினர்கள். ஸ்ரீ ராம தூதரான ஆஞ்சநேயரும் அவர்களுடைய நிலைமையைத் தமது கண்ணினல் கண்டார். அப்படிப்பார்த்த சிறிய திருவடிகளான அனுமான் அந்த இராக்ஷதர்கள் தலையை ஏறெடுத்துப்பார்த்து, ஆ! ஆ! இதைப் பார்த்தால் மிகவும் அற்பமான குரங்காகக் காண்கிறது. இது தேவர்களுடைய கீர்த்தியை வேருடனே நாசமாகும்படி செய்த மகா பலிஷ்டர்களாகிய இராக்ஷதேந்திரர்களை யுத்தத்திலே வென்று, நிர்மூலமாகக் கொன்று அவர்களுடைய கீர்த்தியை

யும் கெடுத்ததேயென்று சொல்ல அதிசயமுற்றுச் சந்தேகித்தார்கள். அந்தச் சமயத்திலே அஞ்சனாதேவி புத்திரரானவர், தேவேந்திரனுடைய பட்டண மாகிய அமராவதியின் வாசலிலே யிருந்து கொண்டுவந்து இராவணனுடைய சிங்காரத் தோட்டத்தினிடத்தில் நாட்டியிருக்கின்ற தோரண ஸ்தம்பத்தி லிருந்தபடியேயிருந்து, அண்டமுகட்டையுந் தாண்டி அப்புறத்திலும் ஊடுருவும் படிப் பெருத்து உயர்ந்த விசுவரூபங் கொண்டார். அவ்வண்ணமாக விசுவ ரூபங் கொண்ட ஆஞ்சநேயரைக் கண்டு ராக்ஷதர்கள் ஆச்சரியப்பட்டு. மகத் தான உக்கிரகோபங்கொண்டு, விற்களை வளைத்து அபரிமிதமான அஸ்திர சஸ்திரங்களைப் பிரயோகம் செய்தார்கள். இடம்புரிச்சங்கம் - வலம்புரிச்சங்கம் - தவளச்சங்கம் - இரட்டைச்சங்கம் - வெற்றிச்சங்கங்கள் ஒலித்ததுகள். இரண பேரிகை - ஜெயபேரிகை - மங்களபேரிகை - வெண்கலபேரிகை முழங்கின. மற் றும் அந்த இராக்ஷதவீரர்கள் அனற்பொறிகளைச் சிதறிப் புகைந்தெழுகின்ற எண்ணிறந்த ஆயுதங்களைக்கொண்டு எய்தார்கள்; எறிந்தார்கள்; கொய் தார்கள்; குத்தினர்கள்; வெட்டினர்கள்; கட்டினர்கள்; எற்றினர்கள்; சுற்றினர்கள். அவைகளெல்லாம் என்னையனை அனுமாருடைய ரோமங்கள் நெருங்கிய சரீரத்திலுண்டாகிய தினவு தீரும்படி சொரிந்ததுபோல இதவா யிருந்ததனால் அவருக்கு நித்திரை வந்தது. அதுகண்டு இராக்ஷதர்கள் அம் மம்மா! இந்தக்குரங்கு நம்முடைய ஆயுதங்களையெல்லாம் கொஞ்சமாகிலும் லட் சியஞ் செய்யவில்லையேயென்று மனஞ்சொருக்கி, பின்னும் தோமரம் - எறி - சக் கரம் - பிண்டி - பாலம் - மழு - எழு முதலான கோடாகோடி ஆயுதங்களையெல் லாம் ஓயாமல் மழைபோலப் பொழிந்தார்கள். அதுகண்டு அனுமானவர் மற்றுமுள்ள இராக்ஷதர்களெல்லாம் வந்து மாயும்படி இவர்களை எல்லாம் அதி சீக்கிரத்தில் எற்றிக் கொல்லுவோமென்று சித்தப்படுத்திக்கொண்டு, ஒரு ஆயு தமும் இந்தச் சமயத்தில் கிடைக்கவில்லையேயென்று நினைக்கும்பொழுது இரா க்ஷத வீரனொருவன் தம்மை லெறிந்த எழுத்தடியை எழும்பிப் பிடித்துக் கொண்டு, அதனால் அநேக யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும், இரா க்ஷத வீரர்களையும், அடித்துத் தும்சஞ் செய்து கொன்றார். அப்பால் மத யானையினுடைய கொம்புகளை முறித்து அவைகளையே கையில் ஆயுதமாக ஏந் திக்கொண்டு, மோதி மோதிப் பலபல விதமான தேர்களை உடைத்தெறிந்தார். அந்தத் தேர் வண்டிகளைக் கழற்றி யெடுத்து உருட்டி யுருட்டி வெகு வீரர்களைக் கொன்றார். அந்த வீரருடைய கைவாளை எட்டிப் பறித்து வோங்கி வெட்டி. வெட்டி மிதமற்ற குதிரைகளைக் கொன்றார். இரண்டு கையிலும் இரண்டு ரதங் களை வாரி யெடுத்து எதிரே வருகின்ற இரண்டு மதயானையை மோதிக் கொன் றார். இரண்டு யானைகளைத் தூக்கியெடுத்து இரண்டு பக்கத்திலும் வருகின்ற குதிரைகளை எற்றிக் கொன்றார். ஒரு மலையைப் பிடுங்கி யெறிந்து ஆயிரம் தேர்களை மைபோல அரைத்துவிட்டார். ஒரு மரத்தினால் ஆயிரம் யானைகளை ஒரு க்ஷணப்பொழுதிலே மடித்துவிட்டார். பின்னும் யானைப்படைகளை விசையா யோடி உதைப்பார். தேர்ப்படைகளை உருவழியும்படி கலக்குவார். புரவிப்படை களை இடுப்பொடியும்படி மிதிப்பார். பதாதிப்படைகளைப் பூமியிலிட்டுத் தேய்ப் பார். அநேக ராட்சதர்களை இருப்புலக்கையால் அடித்து மண்ணிலே உருட் டித் தள்ளுவார். அநேகருடைய தலைகளின் மேற்போய்க் குதித்துப் பல்லி

ஞற் கடித்துக் கையினல் குத்துவார். தேர்களையும் யானைகளையும் எடுத்துப் பந்துபோல அஷ்டதிக்குகளிலும். ஆகாயத்திலும் விட்டெறிவார். குதிரை களையும் இராக்ஷதர்களையும் அவர்களுடைய ஆயுதங்களுடனே கையினற் பிடித்து மாப் பிசைகிறதுபோலப் பிசைந்தெறிவார். நீண்ட தும்பிக்கையை யுடைய மதயானைகளைக் கையிலெடுத்து எறிய, அதுகள் கடலிலே அமிழ்கின்ற கப்பலைப்போல ரத்தப் பிரவாகத்தில் விழுந்து அழுந்தியதுகள். அநுமான் தேர்களை வாரிச் சமுத்திரத்தி லெறிய, அதுகள் அக் கடலிலிருந்து உதயமா கின்ற சூரியனுடைய ரதம்போல விழுந்து அழுந்தி மேலே கிளம்பியதுகள். அளவிறந்த குதிரைகளை எடுத்தெறிய, அதுகள் ஆகாயத்தில் போய் முட்டி வாயினல் ரத்தங் கக்கிக்கொண்டு சமுத்திரத்தில் வந்து விழுந்து, அங்குள்ள வடவாமுகாக்கினியைப்போல மேலே மிதக்கத் தலைப்பட்டதுகள். இராட்சதர் களை வாலினலே சுற்றி வரிந்து கட்டி வீசுதலால், அவர்கள் வந்து சமுத்திரத் திலே விழுந்து, மந்தரகிரியை வாசுகி யென்னும் பாம்பினற் கட்டி அதிலிட்டுக் கடையும்போது அது சுழன்றதுபோலச் சுழன்றார்கள். சுத்த வீரராகிய ஆஞ்ச நேயர் எடுத்து வீசும்படிச் சமுத்திரத்தில்போய் விழுந்த யானைகள் தேர்கள் குதிரைகளை ரத்த நதியானது இழுத்துக்கொண்டோட, அதுகள் லங்கையிலே போய்ப் புகுந்ததுகள். அர்த்த சந்திரனுக்குச் சமானமாகிய வஜ்ரதந்தங் களையும், பிலத்துவாரத்திற்கு ஒப்பாகிய ஆழ்ந்த வாயினையும், அக்கினிப் பொறியையும் உதிரத்தையும் கக்குகின்ற நேத்திரங்களையும், கைகளில் ஆயுதங் களையுமுடைய ராட்சதப்பிணங்கள்; அநுமானேறி யிருக்கின்ற மகரதோரண ஸ்தம்பத்தையும் மறைக்கும்படி ஆகாயபரியந்தம் மலைபோலக் குவிந்ததுகள். ஆஞ்சநேயருக்கு மலைகளும், மரங்களும், இருப்புலக்கையுமே ஆயுதங்களாயிருக் கின்றதுகள். மேலும் அவருடைய கைகளும் கால்களும் வாலு மிருக்கின்றது கள். அவர் கொல்லுகிறதற்குப் பலவகை ஏதுக்களு மிருக்கின்றதுகள். அவ ராலே கொல்லப்படுகிறதற்கு அநேகர் சத்துருக்களாயு மிருக்கிறார்கள். ஆகை யால் இப்போது யுத்தத்திற்கு வந்த ராக்ஷதர்களெல்லாம் இறந்துபோவார்களே யல்லாமல், ஒருவராவது தப்பி உயிரோடு போவார்களா? சிவன் கையிலே தாங்குகின்ற மழுவாயுதத்தைப்போல உதிரந் தோய்ந்து விளங்காநின்ற எழு ஸ்தம்பத்தால், அங்கு வந்த ராட்சதக்கூட்டம் சகலமும் ரணக்களத்தில் அதமா கும்படி ஆஞ்சநேயர் கொன்று தொலைத்தார். அப்படியந்த ராட்சத வர்க்கங் கள் நாசமானதைக் கண்டு தேவர்கள் சந்தோஷித்தார்கள். லங்காபட்டண மானது அல்லோல கல்லோலப்பட்டது. இறந்தவர்களைக் குறித்து அழுகின்ற குரலோசையானது சமுத்திரகோஷமும் தாழும்படியாக அதிகரித் தெழுந்தது. அந்தச் சமயத்தில் பஞ்சசேனுபதிகள் ரத்த நதியானது இழுக்குதலால் கால் வழுக்கி, தேர்ச்சக்கரங்கள் அதில் அழுந்த மிகவும் வருத்தத்துடனே தேரை விட்டுக்கொண்டு வந்து ஏக ஆர்ப்பாட்டமாகக் கொக்கரித்து, ஒவ்வொருத்தர் ஆயிரமாயிரம் பாணங்களைப் பிரயோகித்து அஞ்சனுதேவியின் புத்திரசிகா மணியாகிய அநுமானுடைய சரீரத்தை மறைத்தார்கள். அவர்கள் பிரயோ கித்த பாணங்களெல்லாம் தமது திருமேனியில் வந்து தாக்காமல் சீக்கிரத்தில் தாக்கப்பட்டுப்போகும்படி கையினல் பிடித்து ஒடித்துப் பொடியாக்கிவிட்டு, உடனே அப் பஞ்சசேனுபதிகளில் ஒருவனுடைய தேரைப் போய் உதைத்து

அழித்துச் சின்னபின்னப் படுத்தினர். தானேறிய தேரழிகிறதற்கு முன்னமே அதிலிருந்த வீரனனவன் ஆகாயத்தில் எழும்பிப்போய், அங்கிருந்தபடி பாணங்களைப் பொழிந்து போர் செய்தான். அதுகண்ட அநுமானனவர் எழுவாயுதத்தை யெடுத்து அவன்மேல் மோதினர். அந்த அடியை அவன் வில்லிலே தாங்கினன். அதுபொறுமல் வில்முறிந்தது. ராக்ஷதன் ஒடித்தவில்லை அநுமான்மேல் விட்டெறிந்துபோய் ஒரு மலையைப் பேர்த்தெடுத்து வீசினன். அதுகண்டு ஆஞ்சநேயர் அந்த எழுவாயுதத்தினலே தானே யடித்து மலையையும் தூளாக்கி அவனையும் கொன்றார். அவன் மாளவே, மற்ற நான்கு பேரும் பிரளய காலாக்கினிபோலக் கோபங்கொண்டு, விற்களை நெறநெறவென்று ஒலிக்கும்படி வளைத்துப் பாணங்களை அபரிமிதமாகப் பொழிந்தார்கள். அவர்களுடைய கண்கள் புகைந்ததுகள். அநுமானுடைய தோள்களில் உதிரம் பெருகிப் பாய்ந்தது. அப்போது அவர் மனங் கொதித்து, அந்த ராட்சதருடைய வல்லமையை அறிந்து, ஒரு மலையைப் பிடுங்கியெடுத்து அவர்கள்மேல் எறிந்தார். அவர்கள் அம்புகளினல் அந்த மலையையும் பொடிப்பொடியாகச் செய்துவிட்டு, மறுபடியும் அவர்மேல் அநேக பாணங்களை மலைபோல் ஒன்றின் பின்னே யொன்றுகத் தொடுத்து எய்தார்கள். அதுகள் வந்து மார்பிலேதைத்து உருவ அதிசீக்கிரமாகச் சமீபத்திலோடி, அந்நால்வரிலொருவனை அவனுடைய தேரோடெடுத்து ஆகாயத்தில் சுழற்றி எறிந்தார். அந்த ரதமானது எழும்பி வாயுமண்டலம் - வருணமண்டலம் - சூரியமண்டலம் - சந்திரமண்டலம் - நக்ஷத்திரமண்டலங்களெல்லாந் தாண்டி ஆகாயமுழுமையும் போய் அங்கிருந்து வேகமோய்ந்து விழுகிறதற்கு முன் அதிலிருந்த வீரன் பூமியிற் பாய்ந்தான். அவன் பாய்ந்தது கண்டு வீரர்களுக்கெல்லாம் அதிவீரராகிய அநுமானனவர் மதயானையின்மேல் ஆண் சிங்கமானது பாய்கிறதுபோல விசைகொண்டு பாய்ந்து குதித்து, அவனுடைய பர்வதத்திற்குச் சமானமாகிய சரீரத்தின் அஸ்திமாம்ச முதலானதுகளும் குழம்பிப்போகும்படி மிதித்துத் துவைத்துவிட்டார். அதுகண்டு மற்ற மூவரும் கோபமூண்டெரியும்படி தேர்களை மனோவேகமாக நடத்திக்கொண்டு வந்து, அடா! இனி நீ எங்கே போவாய் என்று எதிர்த்து நின்று அஸ்திரங்களைப் புங்காநுபுங்கமாகப் பிரயோகம் பண்ணி, திரிமூர்த்திகள் போர் செய்வதுபோல வேண்டியபடிக் கெல்லாம் யுத்தஞ் செய்யத் தலைப்பட்டார்கள். அப்படி யுத்தம்பண்ணத் தொடங்கிய மூவரில் இருவருடைய தேர்களை திரண்டுயர்ந்த தோள்களையுடைய அஞ்சனதேவி குமாரரானவர், தேவர்களும் பார்த்துப் பயப்படும்படி இரண்டு கைகளினலும் கழங்கு போலே அலக்ஷியமாக எடுத்துக்கொண்டு மேலெழும்பினர். எழும்பிய வேகத்தில் அந்தத் தேர்களில் கட்டியிருந்த புரவிகள் மடிந்ததுகள். சாரதிகளும் விழுந்து இறந்தார்கள். அதுகண்டு அந்த இரதிகர்க ளிருவரும் தேரைவிட்டுக் கிளம்பி ஆகாயமார்க்கத்திற் போனர்கள். போகிறதற்கு முன் அவர்களை அப்புறம் போகவொட்டாமல் அநுமானனவர் வெகு சீக்கிரமாக ஓடித் தொடர்ந்து எதிர்த்தார். அந்தச் சமயத்தில் அவர்கள் அஸ்திரங்களைப் பிரயோகிக்க எத்தனப்பட்டார்கள். அதற்குள்ளே அவர்களுடைய கை வில்லைப் பிடித்து மளுக்கென்று முறியச் செய்தார். பின்பு அவர்கள் பாணங்களைப்பூட்டி எய்கிறதற்கு வில்லில்லாமையால், அந்தரத்தில் நின்றபடி அநுமானுடனே மல்யுத்தஞ் செய்யத் தலைப்பட்டார்

கள். வெண்மையாகிய கோரப்பற்களையும் கறுத்து நீண்ட சரீரத்தையும் ஆ வென்று திறக்கின்ற பிளவாகிய பெருவாயையுமுடைய தன்மையால், அந்த அரக்கர்க ளிருவரும் ராகு கேதுக்களால் மறைக்கப்பட்ட சூரியனுக்கு ஒப்பாயு மிருந்து போர் செய்யும்போது வாலைக்கொண்டு அவர்க ளிருவரையும் வரிந்து கட்டி இறுகக், அவர்களுடைய கால்களையும் தோள்களையும் மளமள வென் றொடியும்படி ஒடித்தார். உடனே சூரியனை நீங்கிய அந்த ராகுவும் கேதுவும் போல இருவரும் மாண்டு விழுந்தார்கள். ஆஞ்சநேயர் நிரகணம் விட்ட சூரி யனைப்போலப் பிரகாசித்தார். இவ்விதமாக வீளங்கியிருந்த வாயுகுமாரர் மற் றொரு சேனாபதி மாத்திரம் தனித்து நின்றதுகண்டு, மலையின்மேல் தாவிக் குதிக் கின்ற சிங்கத்தைப்போல அவன் தலையின்மேல் தாவிக் குதித்தார். அந்த க்ஷணமே அவன் தன் தேருடனே பூமியில் ஆழ்ந்து புதைந்து உருத் தெரியா மல் மடிந்து போனான்.

கவி

வஞ்சமுங் களவும் வெஃகி வழியலா வழிமே லோடி
நஞ்சினுங் கொடிய ராகி நவைசெயற் குரிய நீரார்
வெஞ்சின வரக்க ரைவ ரொருவனே வெல்லப் பட்ட
அஞ்செனும் புலன்க ளொத்தா ரவனுநல் லறிவை யொத்தான்.

வஞ்சனையையும் கனவையும் விரும்பித் துன்மார்க்கத்தில் பிரவேசித் துக் காளகூட விஷத்தைப்பார்க்கிலும் மிகவுங் கொடியவர்களும், குற்றத்தைச் செய்கிறதற்கு மனங் கூசாதவர்களுமாகிய அந்த ராக்ஷதர்களைந்துபேர்களும் அநுமா னொருவராலே கொல்லப்பட்டு, ஒரு அறிவினாலே வெல்லப்பட்ட ஐம்பு லன்களைப்போல் ஆனர்கள். அநுமானவரோ வென்றால், பஞ்சசேனபதி களையும் கொன்றதனால் ஐம்புலன்களையும் வென்று அறிவை யொத்திருந்தார். அந்தப் போரில் எதிர்த்த இராக்ஷதர்களில் உயிர்கொண்டு மீண்டவர் ஒருவரு மில்லை யென்பதையும், எமனும் நடுங்கத்தக்க பஞ்ச சேனபதிகளும் கைகொட் டிக் கொக்கரித்துக்கொண்டு முழுகிப்போ யிறந்ததையும், இலங்கையில் உள்ள வர்கள் எல்லோருங் கண்டார்கள். அத்தருணத்திலே நம்மை எப்போதும் குரங் கானது கொல்லுமென்று மனமுறுகி ஏங்கித் துக்கிக்கும் ராக்ஷத ஸ்திரீகளைப் பார்த்துக் கோபித்துக் கடுஞ்சொற் சொல்லி வைத்துவிட்டுச் சில இராக்ஷதர் கள் ஓடி வந்து ஊழித்தீயைப்போல எழுவகைப்பட்ட உலகங்களும் எரியும்படி உக்கிர திருஷ்டியாகப் பார்த்துக்கொண்டு கோபமே ஒரு வடிவெடுத்ததுபோல் இருந்த இராவணேஸ்வரனுடைய செவித்துளைகள் வெந்துத் தீயும்படி சொல்லத் தலைப்பட்டார்கள். கேளுமையா வச்சிரவப் பிரம புத்திரனாகிய இராவணேஸ் வரா! இங்கிருந்து சென்ற சேனா சமுத்திர மடங்கலும் மடிந்துபோய் விட்டது. அது கண்டு சண்டை செய்யப் போய்ப் பஞ்ச சேனாபதிகளும் மாண்டு போனர் கள். நாங்கள் மாத்திரம் யுத்தஞ் செய்யாம லிருந்ததனால் இறவாமல் மீண்டு வந்தோம். அந்தக் குரங்கானது தேவர்கள் முதலானவர்களையும் ஜெயித்த

வீராதி வீரர்களையும் அதிசீக்கிரத்தில் மாயும்படிப் பொடி செய்துவிட்டு, மற்றுஞ் சண்டை செய்கிறவர்கள் இல்லாமையால் சோம்பி யிருக்கின்றதென்று சொன்னார்கள்.

பஞ்சசேனாதிபதிகள் வதைப் படலம் முற்றிற்று.

அக்ஷயகுமாரன் வதைப் படலம்

அவ்வார்த்தை கேட்கவே, ராவணனவன் கோபமாகிய கடு நெருப்பானது மூண்டெழும்படிப் பெருமூச்சுவிட்டு, மார்பிலணிந்த புஷ்பமாலைகளும் அதுகளில் பரிமளிக்கின்ற தேனை யுண்ணும்படி வந்து மொய்க்கின்ற வண்டுகளும், தீய்ந்து கருகும்படிச் செவ்வரக்கு ஊட்டியதுபோலக் கண்கள் சிவக்க, தானே பிரயாணப்பட்டுப் போய் பிடித்து வரும்படிக்கு ஆயத்தமானான். அப்படி எத்தனப்பட்ட பிதாவைப் பார்த்து கனிஷ்ட புத்திரனுகிய அக்ஷயனென்பவன் பார்த்து எழுந்து, அவனுடைய உபய பாதங்களையும் வணங்கி, அப்பா! இந்தப் பணி விடையை அடியேனுக்குக் கடாக்ஷித்தருள லாகாதா? சோம சூரியாக்கினியாகிய முக்சுடர்களையும் மூன்று நேத்திரமாகவுடைய கைலாயபதி ஏறுகின்ற வாகனமாகிய ரிஷபமுமல்ல பரலோக பூலோக பாதாளலோகமாகிய திரிலோகங்களையும் திருவடியினுலளவிட்ட திரிவிக்கிரமசொரூபனான ஸ்ரீமந்நாராயணனுடையவாகனமாகிய கருடனுமல்ல. அந்தப் பரமபுருஷன் திருக்கண் வளர்ந்தருளா நின்ற சயன்மாகிய ஆதிசேஷனுமல்ல. அஷ்ட திக்கஜங்களுமல்ல. ஒரு சிறிய குரங்கின் மேலேயா மகா பிரதாபசாலியாகிய தேவரீர் படையெடுத்துப் போகிறது? இந்த ஊழியத்தை அடியேனுக்கு ஆக்யாபித்து நீர் இவ்விடத்தில் தானே சுகமாயிருந்தருளும். முன்னளில் அமரர் - சித்தர் - அசுரர் - தைத்தியர் - கருடர் - கின்னரர் - நிருதர் - கிம்புருஷர் - கந்தர்வர் - யக்ஷர் - விஞ்சையர் - பூதர் - பைசாசர் - முனிவர் - உரகர் - ஆகாயவாசிகள் - போக பூமியர்களாகிய பதினெண் தேவகணங்களும் அதிபதியாகிய இந்திரன்மேல் தேவரீர் கோபங் கொண்டு, அவனைப் பிடித்துக் கொண்டு வந்து கொடுவென்று சொல்லி அடியேன் பக்கத்தில் இருக்கும்போதுதானே என்னை யனுப்பாமல் எங்கள் தமயனை யனுப்புவித்தீர். அது மனதிலே குறையா யிருக்கின்றது. அந்தக் குறை தீரும்படி ஒரு குரங்கையாவது பிடித்துவர உத்தரவு கொடுத்தருளும். திரிநேத்திரதாரியாகிய சிவனே வஜ்சனையை மனதிலெண்ணி இவ்விடத்தில் ஒரு சொற்பமாகிய பழியை விலக்கும்படி கற்பிதம் பண்ணிக்கொண்டு குரங்கு உருவமெடுத்து வந்தானலும் கொடிப்பொழுதுக்குள்ளே ஜெயித்து எளிதிலே பிடித்துக் கொண்டுவந்து உம்மிடத்தில் கொடுக்கிறேன். பூர்வகாலத்தில் வஜ்ஜிரஸ்தம்பத்தி லுற்பத்தியாகிய இரணியேஸ்வரனைச் சங்காரித்த உக்கிர நரசிங்கமானலும், ஒரு கொம்பினலே பூமியைப் பேர்த்தெடுத்த ஆதிவராகமானலும், நான் போய் யுத்தஞ் செய்யுங்கால் இந்த அண்டத்தைக்கடந்து அப்பால் போனபோதுந் தொடர்ந்துபோய்ப் பிடித்துவந்து உமக்கு யெதிரே விடுகிறேன். அப்படி செய்யாமற் போனேனுகில் அப்பொழுது என்னைச் சிரசாக்கினை

செய்யுமையாவென்று இவ்வாறு சொல்லிக் கிருபைசெய்து உத்தரவு கொடுத்தருளுமென்று நிற்கின்ற இளைய குமாரனுகிய அக்ஷயனை இராவணன் பார்த்து மகிழ்ச்சிகூர்ந்து, அப்பா! அப்படியே தேரேறிச் சேனைகளையும் கூட்டிக்கொண்டு போவென்று சொன்னன். அவன் சொற்படியே யுத்தத்திற்கேற்ற அலங்காரம் செய்துக்கொண்டு புறப்பட்டு, முற்காலத்தில் யுத்தத்திலே தேவேந்திரனவன் பயந்து விட்டுவிட்டோடிய இரதமொன்று இருநூறு புரவி கட்டப்பட்டது. அதை யலங்கரித்து அதன்மேல் ஏறினன். அப்போது இராட்சதர்கள் ஆசீர்வாதம் செய்தார்கள். பேரிகை முழங்கியது. பிரளயகால சமுத்திரம் போலச் சேனைகள் வந்து கூடியதுகள். சமுத்திரத்திலுள்ள மரங்களை எண்ணக்கூடுமாகில், அங்குவந்துகூடிய யானைகளை எண்ணலாம். அந்தச் சமுத்திரத்தில் சஞ்சரிக்கின்ற பல மச்சங்களையும் எண்ணக்கூடுமாகில் தேர்களை எண்ணலாம். கடற்கரை மணல்களை எண்ணக்கூடுமாகில் காலாள்களை எண்ணலாம். கடலினலைகளை எண்ணக்கூடுமாகில் குதிரைகளை எண்ணலாம். அப்படி எண்ணி முடியாத சதுரங்கசேனைகளும் நெருங்க இராட்சதேந்திரர்களுடைய குமாரர்களும், அட்சய குமாரனுடைய உயிர் வேறும். அவர்கள் வேறுமாகாமல் அதிக அந்நியோன்யமா யிருக்கின்ற தோழன்மார்களுமாகிய பன்னீராயிரம்பேர்கள் இரதாரூடர்களாகி, யுகமுடிவுகாலத்தில் ஜலத்தையும் தகிக்கின்ற காலாக்கினியின் சிகைகளைப்போல வந்து அவனைப் புடைசூழ்ந்தார்கள். மந்திரிகளுடைய குமாரர்கள் லட்சம்பேர்கள், படைத்தலைவர்களின் குமாரர்கள் லட்சம்பேர்கள். தன் பிதாவாகிய ராவணனுக்குத் தேவ ரம்பைகள் வயிற்றிற் பிறந்த குமாரர்கள் இலட்சம்பேர்கள், ஆகிய இந்த நாலு லட்சம் பேர்களும் தேரேறிக்கொண்டு, பெருஞ்சவளம் - வல்லுலக்கை - திரிசூலம் - எரி - மழு - வஜ்ஜிரவாள் - வஜ்ஜிரதண்டம் - வெற்றிவில் - உக்கிரவேல் - அங்குசம் - எறிபாசம் - ஈட்டி - கட்கம் - எழுத்தடி - எழுமுளை - வளைதடி - குந்தம் - கப்பணம் - காலசக்கரம் முதலாகிய அநேகவித ஆயுதங்களும் ஜோதி மின்னல்களெல்லாம் ஓரிடத்திற் கூடியதுபோலத் தகதகவென்று ஒளி வீசவும், புழுதிகளெழும்பி எங்கும் பரவுதலால் பொன்மயமாகிய சுவர்க்க முதலான சகல லோகங்களும் மண்மயமாகிய பூலோகம்போலாகவும், காகங்களும் - கழுகுகளும் - பேய்களும் - எமனும் நெடுங்காலஞ் செய்த பாவமெல்லாம் தொடர்ந்து வருவது போல வரவுமாயின. பார்க்கின்ற ஸ்திரீகளுடைய பார்வையும் மனதையும் வண்டு மொய்த்துச் சுற்றவும், மாண்டுபோன ராட்சதர்களை நினைத்துக்கொண்டு அவர்களுக்குரிய நாயகிமார்கள் அழுகின்ற குரலோசையும், கடலோசையும் நால்வகைச் சேனைகளி னோசையும், இடக்கை - உடுக்கை - உறுமி - தம்பட்டம் - பம்பை - பேரிகை - மத்தளம் - முரசு - முருடு - முழவு முதலாகிய பலவித வாத்தியங்களின் ஓசையும், இடியோசையைப்போ லெழுந்து ஒருவரோடொருவர் வசனிக்கின்ற வசனத்தை அவர்களுக்குக் கேட்க வொட்டாமல் அடக்கவும் இராட்சதர்கள் கையில் பிடிக்கின்ற ஆயுதங்களின் பிரகாசத்தை அவர்களுடைய கறுத்ததேகத்தி னொளியானது விழுங்குதலாலும், அவர்கள் கைகளில் தரித்திருக்கின்ற நீலமணிக் கட்கத்தின் ஒளியை அவர்களுடைய கோர தந்தத்தின் வெண்மையாகிய ஒளியானது அடக்குதலாலும், அங்குள்ள சகல உயிர்களுக்கும் இரவென்றும் பகலென்றுந் தோன்றுமல் அறிவு தடுமாறவும் ஆயின. இரதங்

களிற் கட்டிய குதிரைகள் உறங்குகின்றதும், அந்த ராக்ஷதர்களுடைய இடது தோளும், இடது கண்ணும் துடிக்கின்றதும்; மேகங்கள் எவ்விடத்திலும் ரத்த மழையைப் பொழிகின்றதும், வெள்ளமேகத்திலிருந்து இடியிடிக்கின்றதும், காக்கைக்கூட்டங்கள் சப்திக்கின்றதுமாகிய துர்ச்சகுனங்கள் காணவும், தனக்குச் சொந்தமாகிய ஒரு வெள்ளம் சேனைகள் சூழவும், அது கண்டு சப்தமருத்துகள் அஷ்டதிக்குப் பாலகர்கள் அஷ்ட வசுக்கள் முதலாகிய தேவர்களெல்லாம் பயமடையவும், காலனும் இனி யென்ன அனர்த்தம் விளையுமோ வென்று எண்ணி மனம் மெலியவும்; பேய்கள் - பூதங்கள் - டாகினி - மோகினிகளெல்லாம் கண்களை உருட்டி விழித்துக் கொக்கரித்துப் புஜங்கொட்டவும், அதிக உக்கிரகாரணியமாக வருகின்றான் அந்த அக்ஷய குமாரன். இப்படி வருகின்ற அக்ஷய குமாரனை வாயு புத்திரராகிய அநுமானவர் கண்டு, இதோ மகா பிரபல பிரதாப சம்பிரமத்துடனே நமக்கெதிரே வருகின்ற ராக்ஷதவீரன் இராவணனுடைய புதல்வனாகிய இந்திரஜித்தென்பவன்தானே? அல்லது அந்த இராவணனே? என்று மனதிலே மிகுந்த சந்தோஷங்கொண்டு வானர சிங்கமாகிய ஆஞ்சநேயர் தமது தோளைப்பார்த்து, ஓ பரம புருஷா! பக்தவத்ஸலா! ஜகத்ரக்ஷகா! சர்வந்தரியாமி! ஜானகி மனோகரா! தாரகப் பிரமமே! என்று ஸ்ரீ ரகுநாயகரை ஸ்துதி செய்து, அவரெழுந்தருளி யிருக்கின்ற திக்குநோக்கித் தெண்டன் சமர்ப்பித்து யோசிக்கின்றார். இவன் இப்பொழுது நான் நினைத்த ராவணன் இந்திரஜித்து வென்கின்ற அந்த இருவரில் ஒருவனு யிருந்தால், பூர்வம் நான் செய்த புண்ணியபலன் எப்படியும் லப்தமாகும். எங்கள் சுவாமியாகிய ஸ்ரீ ராமபத்திரரும் தபோபலத்தை யுடையவராவார். அவரிடத்திலிருந்துவந்த நானுமிருக்கிறேன். எமனும் தத்தாயத்தமாகக் காத்துக்கொண்டிருக்கின்றான். எண்ணிய காரியத்தையும் சீக்கிரத்தில் தடையில்லாமல் இனி முடிப்பேனென்று இவ்விதமாக யோசித்து, பின்னும் அவன் சமீபத்தில் வர வரச் செவ்வையாகப் பார்த்து, மீளவும் ஆலோசிக்கின்றார். இந்தச் சேனையில் வருகின்ற நாயகனுடைய வடிவத்தைப் பார்த்தால் தோஷமற்றதாகக் காண்கிறது. ஆகிலும் இவனுக்குப் பத்துத் தலைகளில்லாமையால் ராவணனுமல்ல. நீலபர்வதம்போ லிருக்கின்றமையால் இந்திரஜித்துவுமல்ல என்று நினைத்துக் கொண்டே இந்திரதனுசுபோ லிருக்கின்ற தோரண கம்பத்தின்மேல் நின்றார். அப்படி யிராநின்ற அநுமானை அந்த அக்ஷயகுமாரன் பார்த்து, இந்தக் குரங்கு தானு இத்தனை இராக்ஷதக் கூட்டங்களையும் கொன்றதென்று சொல்லிக் குலுக்கென்று நகைத்தான். அதைக்கண்டு அவனுடைய ரதசாரதி சொல்லுகின்றான். கேளுமையா பிரதாப சூரனாகிய அக்ஷய குமாரனே! இதுதானு வென்று நீர் அலக்ஷியமாக இகழ்ந்து சொல்லலாமா? உலகத்தில் எத்தனையோ விசித்திரமுண்டா யிருக்கின்றதுகள். முன்னளிலே நம்முடைய ராஜாவுடனே எதிர்த்த வாலியும் ஒரு குரங்குதானல்லவோ? அவனைப் பார்க்கிலும் சாக்ஷி வேறே வேண்டுமோ? ஆகையால் எச்சரிக்கையாகவே பார்த்து நடக்கவேண்டுமென்று சொன்னான். அந்த வார்த்தை கேட்டுச் சாரதியை நோக்கி, இப்போது இவ்விடத்திற் புகுந்து இப்படிப்பட்ட துஷ்கிர்த்தியஞ் செய்த இந்தத் துஷ்டக் குரங்கு திரிவித லோகங்களில் எங்கே போனாலும் இதன் பின்னே விடாது தொடர்ந்து தேடிக்கொண்டு போய் ஜெயித்து, இனிக் குரங்கென்பதே

உலகத்தி லில்லாமல் போகும்படிக் கறுவறுத்துவிடுகிறேன் பாரென்று அக்ஷய குமாரன் சொன்னன். அப்பொழுது இராட்சத சேனையானது பொங்கியெழுந்து ஆர்ப்பரித்து அட்டகாசஞ் செய்து, அஞ்சனதேவி புத்திரனுகிய அநுமானை நெருங்கிச் சுற்றி மறைத்து, சோனை மேகமானது இடைவிடாமல் அமோகமாக மழையைச் சொரிந்தாற்போலப் பலவித ஆயுதங்களையும் பிரயோகித்தது. அதனல் விண்ணுஞ் சலித்து மண்ணுஞ் சலித்து வீராதிவீரராகிய ஆஞ்சநேயர் தனியே அந்தச் சேனைக்கு நடுவே பிரவேசித்தார். இராட்சதர்கள் எய்கின்றதுகளும் எறிகின்றதுகளுமாகிய அஸ்திர சஸ்திரங்களெல்லாம் அவர் திருமேனியின்மேற்பட்டு முறிந்ததுகள். யானைகள் வந்து அநுமானை முட்டி விழுந்திறந்ததுகள். தேர்கள் தலைகீழாக முறிந்து விழுந்து சிதைந்ததுகள். குதிரைகள் எலும்புகள் நெறிந்து மடிந்ததுகள். அவரெடுத் தெறிதலால் இராட்சதர்களுடைய சரீரங்கள் லங்கையின் மார்க்கமாகப்போய் விழுந்ததுகள். உலர்ந்த வைக்கோற் போரில் நெருப்புக் கலந்ததுபோல வாயுகுமாரரானவர் புகுந்து கொல்லுகின்ற இராட்சதர்களுக்கோ முடிவில்லை. அவர்களுயிரும் எமபுரம் போய்ச் சேர்வதோ ஒழியவில்லை. ஆகையால் அந்த யமனுக்கு ஆயிரம் கோடி தூதர்கள்தா னிருக்கின்றார்களோ தெரியவில்லை. போர்க்களத்தில் வந்தவர்களையும், வருகின்றவர்களையும், வருபவர்களையும், அநுமானனவர் ஓடியோடி வளைத்து தமக்கு முன்னுண்டா யிருக்கின்ற பராக்கிரமத்திலும் மூன்று பங்கு அதிக பராக்கிரம முடையவராகி, ஊழிகாலத்தில் அதி தீட்சணியமாக உதயமாகின்ற சூரியனைப்போல உக்கிரமாய் ஜாடத் தலைப்பட்டார். அந்த ராட்சதர்கள் சூரிய கிரணஜ்ஜாலத்தில் சுருண்டு கருகி மடிகின்ற கிருமிகளைப் போல மடிந்தார்கள். யானைகள் பிளவுண்டு, தேர்கள் நெறியுண்டு, குதிரைகள் சிதையுண்டு, பதாதிகள் உதையுண்டு, உதிரம் ஆறாய்ப் பெருகவும், நிணம் சேறாய்க் குழையவும் ; கடல் சூழ்ந்த இலங்கையானது காலனுற் கொள்ளையிடப் பட்ட தென்னும்படி ஐம்புலன்களையும் வென்ற ஆஞ்சநேயர் கொன்று குவித்தார். தங்களுடைய கண்ணுக்கெதிரே இறக்கின்றவர்களிறக்க அதைப் பார்த்தபடியே அவர்களுடைய பக்கத்தில் உபபலமில்லாமல் உயிர் நடுங்கி நிற்கின்றவர்களில் சிற்சிலர், தேர்களும் - தேர்ப்புரவிகளும் - தேர்ச்சாரதிகளும் - தேர் வீரர்களுமே மிகுதியும் அழிந்ததென்றார்கள். சிலர் யானைகளும், யானைப் பாகர்களும், யானை வீரர்களுமே மிகுதியும் மாண்டதென்றார்கள். சிற்சிலர் புரவிகளும், புரவி ரௌத்தர்களும், புரவி வீரர்களுமே மிகுதியும் இறந்ததென்றார்கள். சிற்சிலர் பதாதிகளே மிகுதியும் மாய்ந்ததென்று சொன்னர்கள். சமுத்திரத்திற் கொப்பான சேனைகளையுடைத்தா யிருக்கப்பட்ட மகா பலிஷ்டரான இராட்சதரோ ஆய்ச்சியர் கடைகின்ற தயிரைப் போலானர்கள். அவர்களைத் தும்சஞ் செய்யும்படியான ஆஞ்சநேயரோ அந்த தயிரைக்கலக்குகின்ற மத்தைப்போலானர். அந்தப்போர்க்களமோ சப்தலோகத்திற்கு மொப்பா யிருந்தது. அதிலே பிரவேசித்த சேனவீரர்களோ யுகாந்தகால வெள்ளத்தை யொத்திருந்தார்கள். அவர்கள் மத்தியிலேயிருந்து யுத்தஞ் செய்கின்ற இந்த வாயுகுமாரரான ஆஞ்சநேயரோ யுகாந்த காலாக்கினியை ஒத்திருந்தார். மற்றும் அக்ஷயகுமாரனுடனே கூடவந்த இரதகஜ துரகபதாதிகளான கூட்டங்களெல்லாம் படுசூரணமாகும்படி அநுமானனவர் சங்கரித்ததால், அவர்களிலே அநேகர் - கால்

வேறு - க்கவேறு - தோள்வேறு - தொடைவேறு - உடல் வேறானர்கள். இறவாமல் தப்பிப் பிழைத்த சிலபேர் மாத்திரம் உதிரமானது ஆறுபோலப் பெருகி வழியும்படி காயப்பட்டுப் பயந்து நடுங்கிப் பின்னிட்டார்கள். பல திசைகளிலும் பிணமலைகள் குவிந்தன. அத்தருணத்திலே, தனியே நின்ற இந்திரஜித்தனுடைய தம்பியான அக்ஷயகுமாரனனவன் கண்களெரியும்படி பார்த்து, ஒரே தேரோடே மலையைப்போல அபாரமான தன்னுடைய வில்லைச் சக்கிராகாரமாக வளைத்து நாணேற்றி, கூர்மையான அம்புகளைத் தொடுத்துப் பிரயோகஞ் செய்துகொண்டே அவருக்கு நேரே போனன். அவன் அப்படி வரவே, ஆஞ்சநேயரும் அவ்வக்ஷயகுமாரனைச் சந்தித்தார். இருவரும் ஒருவரை யொருவர் சந்தித்தபோது தேவர்கள் கண்டு, இனி அனுமானுடைய ஸ்திதி யாதாகுமோ வென்று கலஞ்சலப்பட்டு, இவர்கள் இருவருடைய சாகசத்தையும் பார்ப்பதற்கு நாம் இமையாத கண்களைப் பெற்றிருப்பதும் அதிர்ஷ்டந்தான் என்று நினைத்து விலகாமற்படிக்கு யாவரும் எதிரெதிராக நெருங்கிக் காணத் தலைப்பட்டார்கள். அந்தச் சமயத்திலே அக்ஷயகுமாரனனவன் வாயினல் நெருப்பைக் கக்கும்படியான பதினன்கு பாணத்தை ஆய்ந்தெடுத்து அநுமான்மேல் எய்தான். அவைகள் வந்து தன்மேற் படவொட்டாமல் அவருடைய கையிலே யிருந்த எழுவாயுதத்தினலே அடித்துப் பொடிப்பொடியாய் உதிரும்படி செய்தார். அதுகண்டு பின்னும் உக்கிரமான பலவித அஸ்திரங்களைப் பிரயோகஞ் செய்து அந்த எழுவாயுதத்தை யறுத்துப் பூமியிலே விழத்தள்ளி, மறுபடியும் அநேக பாணங்களை வில்லிலே தொடுத்து நெறநெற வென்னும்படி சப்தத்தாரையாய்ப் பொழிந்தான். ஆஞ்சநேயர் அவற்றையெல்லாம் வேறொரு ஆயுதமும் இல்லாமற்போன படியினலே தம்முடைய கையையே ஆயுதமாக நீட்டி விலக்கிக் கொண்டு, சரேலென்று போய் அக்ஷயகுமாரனுடைய தேரின்மேலே குபீரென்றெழும்பிக் குதித்தார். குதித்த மாத்திரத்தில் அந்தத் தேரானது பூமியிலமுந்தியது. அதை நடத்துகின்ற சாரதியைக் கொன்றார். அதில் கட்டியிருந்த இருநூறு புரவிகளும் மடிந்ததுகள். அக்ஷயகுமாரன் விற்குவைகளில் நிமிராதிருக்கும்படி எய்கின்ற பாணங்களில் சில பாணங்கள் அநுமாருடைய மார்பிலே தைத்து உருவின. சில பாணங்கள் தோளிலே புதைந்து மறைந்தன. சில பாணங்கள் முகத்தை மறைத்தன. அதனல் கொஞ்சமாயினுஞ் சலியாமல் மெலியாமல் அவன் கையிலே தாங்கியிருக்கப்பட்ட வில்லை ஒரு கையினல் தாவிப் பறித்துக்கொண்டு அவனுக்கு எதிரே நின்றார். அவனந்த வில்லைத் தன்னுடைய இரண்டு கையினலும் விடாமற் பற்றியிழுத்தான். இருவரும் பிடித்தபிடி விடாமல் உறுதியாக வலித்தார்கள். இந்தப் போராட்டத்தில் அது மளுக்கென்று முறிந்தது. அதைக் கண்டு அக்ஷயகுமாரன் உறையிலிருந்த உடைவாளை யுருவிக் குத்தினன். ஸ்ரீ ராம தூதரானவர் கண்ணினின்று கோபாக்கினிப் பொறிபறக்க, அந்த உடைவாளை ஒரு கையினலே தட்டிப் பறித்து ஒடித்துத் தூளாக்கிவிட்டார். அது ஒடிந்து கீழே விழுதற்கு முன்னமே அவனுடைய வலிமையான தோள்களொன்றோடொன்று தாக்கும்படி மல்யுத்தம் செய்ய யத்தனப்பட்டு, விசையாயெழும்பி அநுமானைக் கையினலே இறுகக் கட்டிப் பிடித்தான். பிடித்தவுடனே அவனுடைய கையிலிருந்து நழுவி தம்முடைய சரீரத்திலிருக்கும்படியான ரோமங்கள் வேல்களைப்போலே அவனு

டைய சரீரத்திலே தைக்கவும், தம்முடைய வாலானது நீண்டு அவனுடைய உடலை யசைக்கவும் திருப்பவு மொட்டாமல் சுற்றி யிறுக்கிக்கொள்ளவும், தாமும் அவனை நெருக்கிப் பிடித்தார். அப்படிப் பிடித்துக்கொண்டு வாள்போலக் கூர்மையாயிருக்கின்ற அவனுடைய பற்களுதிரும்படி கன்னத்திலே அறைந்து மேகத்தினிடத்திலிருந்து மின்னல்கள் வழுவி விழுவதுபோலக் குண்டல முத்தலான ஆபரணங்கள் தெறித்து விழவும், குடல்சரிந்து தொங்கவும், அவனுடைய பிடரியில் தமது கையைக்கொண்டு கபீர் கபீரென்னும்படிக் குத்தினர். அப்படிக் குத்தியும் அவனுடைய உயிர் போகாதது கண்டு அவனைக் கீழே தள்ளி மேலே குதித்தேறி, ஏழுலகங்களும் அழிகின்ற ஊழிகாலத்திலும் அழியாத கீர்த்தியையுடைய மாருதியானவர் பிரவாகமாய்ப் பெருகி யோடும்படியான அவன் உதிரமே நீராகவும், பூமியே அம்மிக்கல்லாகவும், அவனுடைய மாம்சாதிகளே அரிசியாகவும் கொண்டு, தம்முடைய வயிரமான கையினாலே சொர்க்க லோகத்தாரும் பூலோகத்தாரும் காணத்தக்கதாக அவனை மாவாய்ப் போகும்படி அரைத்துத் தேய்த்துவிட்டார். அதுகண்டு சில ராட்சதர் நடுங்கிக் கிலி பிடித்து இரத்த வெள்ளத்திலேபோய் முழுகிக் கிடந்தார்கள். சில ராட்சதர் பேய்கள் தின்னும்படியான பழைய பிணக் குப்பல்களினிடத்திற்போய் ஒளித்துக்கொண்டிருந்தார்கள். சில ராக்ஷதரானவர் பயப்பிராந்திகொண்டு திசை தெரியாமல் மறுகினர். சில இராட்சதர் ஓடமாட்டாமல் நின்றுவிட்டார்கள். சில இராட்சதர் கையில் ஏந்திய ஆயுதங்களை எறிந்துவிட்டுக் கண்ட திசைகளில் விசையாய்க் கால்சாய்ந்து போனார்கள். சிலர் மீனுருவங்கொண்டு சமுத்திரத்திலே ஓடிப்போய் விழுந்தார்கள். சிலர் பசுவாகத் தம்முடைய உருவமாறி வழி தோறும் புல் மேய்ந்துக் கொண்டிருந்தார்கள். சிலர் மாம்சத்தைப் பக்ஷிக்கின்ற பருந்து கழுகுகளினுடைய வடிவம்கொண்டு ஆகாயத்திலே பறந்து போனார்கள். சிலர் வைதிகப் பிராமணர்போல உருவெடுத்து நின்றார்கள். சிலர் பெண்ணுருவம் கொண்டு தலைமயிரை வகிர்ந்துக்கொண்டு இருந்தார்கள். சிலர் அநுமானை நோக்கி, ஓ எம்முடைய ஐயனே! நாங்கள் உம்முடைய அடைக்கலமென்று சொன்னார்கள். சிலர் நாங்கள் உமக்குப் பகையாளிகளல்ல; இதோ நிற்கிறாரே இவர்தானென்று எதிரே யிருக்கின்றவரைக் காட்டினார்கள். சிலர் தங்களுடைய மனையாட்டிமாரென்று சொல்லப்பட்டவரும் பிள்ளைகளும் மற்று முண்டான சுற்றத்தாரும் யுத்தக் களத்தில் வந்து பந்துத்வம் பாராட்டித் தம்மைத் தழுவிக்கொள்ள நாங்கள் உம்முடைய உறவின் முறையாரல்ல, பூர்வம் தேவர்களாய் இருந்து உம்முடைய வீட்டிலே வந்து பிறந்தோம் என்று சொல்லிவிட்டு உடனே இராமதூதராற் கொல்லப்பட்டு வீர சொர்க்கத்திற்குப் போனார்கள். சிலர் ஆஞ்சநேயரானவர் தம்மைக் கொல்ல வரும்போது, ஐயா! நாங்கள் இராக்ஷதரல்ல; மானிடரென்று சொன்னார்கள். சிலர் வண்டுகளாகிச் சோலையினிடத்திலே பறந்து போனார்கள். சிலர் இன்னது செய்யலாம் செய்யக்கூடாதென்று ஒன்றும் தோன்றாமல் திக்பிரமைக் கொண்டு நின்றவிடத்திலேதானே நின்றுவிட்டார்கள். சிலர் அநுமானுக்குத் தாம் இராட்சதரென்று தெரியாமலிருக்கும்படி மூன்றாம் பிறையை யொத்த வக்கிரதந்தத்தை ஒடித்தெறிந்துவிட்டும், அக்கினிக் கொழுந்தைப்போல் சிவந்த செம்பட்டமயிரை அரிந்து வீசிவிட்டும், ஜாடையாய் நழுவிப்போனார்கள். இலங்கா பட்டணத்தி

லுள்ள ராட்சத மாதரெல்லாம் தங்கள் காதிலே யிருக்கும் குண்டலம் கழலவும், ஸ்தனங்களிலே பூசிய சந்தன குங்குமங்கள் கண்ணீராற் கரைந்து ஒழுகவும், கூந்தலானது அவற்றிலே மொய்த்திருக்கின்ற வண்டுகள் எழுந்து அலையும்படி அவிழ்ந்து விழுந்து குதிகாலை வருடவும், மேலுதடு ஆகாயத்தைப் பொருந்தும் படி வாயைத் திறந்து துக்கித்தலால் அவர்கள் அழுத வோசையானது அண்டத்தை அளாவியது. நாயகன்மாருடைய கால்மாட்டிலே விழுந்து அழுது சோர்ந்து கிடக்கின்ற இராட்சசிகளுடைய சிவந்த கூந்தலுடனே, அந்த இராட்சதருடைய சரீரத்தினின்றும் பெருகி யொழுகும்படியான உதிரமானது இடந்தோறும் வேற்றுமை தெரியாமற் பரவி யிருந்தது. போர்க்களத்திலே இறந்த இராட்சதர்மேல் அவருடைய பெண்ஜாதிமார் விழுந்து உயிரொன்றும் உடலிரண்டுமாய் இருக்கின்றதனாலே உசுவாச நிசுவாசமில்லாமலும் கண்களை யிமையாமலும் அசைவற்றுக் கிடந்தார்கள். சில இராட்சத மாதர் உயிரைத் தேடிக் கொண்டு போகின்ற உடலைப்போல எங்கும் ஓடித்தேடி, இறந்தவருடைய சரீரக் குப்பையின் நடுவே குற்றுயிரோடு கிடக்கும்படியான தம்முடைய நாயகன்மாரைக் கண்டு, சொர்க்கத்திலிருக்கிற ரம்பாஸ்திரீகள் பிணங்கும்படித் தழுவிக் கொண்டார்கள். வாளுக்கொப்பான கண்ணினையுடைய ஒரு இராட்சத மாதானவள் இரணக்களத்தில் எழுந்து நின்று ஆடுகின்ற கபந்தத்தைக்கண்டு என்னுடைய பிராண நாயகனே நீ காட்டவேண்டுமென்று கைகூப்பிக்கொண்டு பிரலாபித்தாள். பூங்கொம்புக்குச் சமானமான சரீரத்தையுடைய ஒரு பெண்ணானவள் யுத்தக்களத்திலே கூத்தாடுகின்ற தன்னுடைய புருஷனுடைய உடற் குறையுடனே அவனுடைய தலையை யெடுத்துச் சேர்த்துப்பார்த்து, ஓ எம்முடைய கோமானே! நீ நடனஞ்செய்து மிகவும் இளைப்படைந்தாய். ஆகையாலே இனியாவது சும்மாயிருவென்று கையாலே உடலிருகும்படி அணைத்துக் கொண்டாள். அப்படிப்பட்ட தருணத்தில், அவ்விடத்திலே யிருந்த காவலாளரான தேவர்கள் பயந்து ஓடி இராவணனுடனே நடந்த சமாச்சாரத்தை யெல்லாஞ் சொன்னார்கள். அந்தச் சமயத்திலே மயன் குமாரத்தியான மண்டோதரி யென்பவள் தன்னுடைய பிள்ளை யிறந்துபோன சேதியைக்கேட்டு, சேற்கெண்டைகள் விரும்புகின்ற கண்கள் இரண்டும் மலையருவிபோல ஜலத்தைக் கக்கவும், கார்மேகமானது விரும்புகின்ற அளகபாரமானது அவிழ்ந்து விழுந்து புழுதியிலே புரளவும், வயிற்றிலே அறைந்துக்கொண்டு, அதிக வருத்தத்துடனே தன்னுடைய நாயகனை இராவணனுடைய பாதத்திலே விழுந்து கோவென்று கதறி அழுதாள். அந்தப் பட்டணத்திலே யிருக்கப்பட்ட ஸ்திரீகள் முதலாகச் சொல்லப்பட்ட சகல ஜனங்களும் தம்முடைய இராஜாவான இராவணனுடைய பாதத்திலே விழுந்து அழுதார்கள். அவ் வனத்தைக் காக்கின்ற தேவர்கட்கு இவையெல்லாம் தங்களுக்குள்ளே சந்தோஷமாய் இருந்த போதிலும், இலங்காதிபதிக்குப் பயந்தவரானபடியாலே தாங்களும் ஒப்புக்கு விழுந்து அழுதார்கள்.

அக்ஷயகுமாரன் வதைப் படலம் முற்றிற்று.

பாசப் படலம்

அவ்விடத்தில் அந்த வார்த்தையைக் கேட்ட பிரதாப லங்கேஸ்வரன் தன்னுடைய கண்களிலெல்லாம் நெருப்புப் பொறி சிதற, எவ்வகைப்பட்ட உலகங்களும் நிலை குலையும்படி அதிக கோபங்கொண்டான். அப்பொழுது தன்னுடைய தம்பி மாண்டானென்கிற சொல் வந்து நெஞ்சைச் சுடும்படிக் கேட்டு இந்திரனை ஜெயித்துக் கீர்த்திபெற்றதனால் இந்திரசித்தென்று பேர் படைத்த மேகநாதனனவன் அதிக வெப்ப முண்டாகப் பெருமூச் செறிந்து, திரிபுர தகனம் செய்யும்படி மகமேருவை வில்லாக வளைத்த ருத்திரமூர்த்தியைப் போலே மகத்தான உக்கிரங் கொண்டு, அந்தக் கணமே அண்ட கடாகத்தின் முடிவைக் காட்டுகின்ற அதியுன்னதமான ஆயிரத்திருநூறு பேய்கள் பூண்ட தேரின் மேலே ஏறினன். எட்டுத்திக்குகளும் கிழிய அண்டமும் பிளக்க விருதுகூறி, வீராவேசத்துடனே தும்பை மாலையும் அணிந்தான். வீரகண்டைகளொலிக்கத் தலைப்பட்டன. இடியும் பயந்தோடும்படி இரணபேரிகை முழங்கியது. தேவேந்திரனனவன் உயிர் நடுங்கி உடல் புழுங்கி வெயர்க்கும்படி இந்திரசித்து வருகின்றதனாற் யுத்தம் பிரபலப்பட்டது. இனி மோசம் வந்து விட்டது என்று பிரமருத்திரர்களான திரிமூர்த்திகளும் ஊக்கமழிந்தனர். தம்பியை நினைக்கும் போதெல்லாம் அவனுக்குக் கண்களில் ஜலமானது தாரை தாரையாய்த் ததும்பத் தலைப்பட்டது. அவன் தன்னுடைய வில்லைப் பார்த்து வாயை மடித்து க்ஷாத்திர மிகுந்து கலகலவென்று நகைத்து, ஆ! ஆ!! மரக்கிளைகளிலே சஞ்சரிக்கின்ற எளிதான குரங்கினாலே தேய்ந்து போனது என்னுடைய தம்பியா? என்னுடைய தந்தையான பிரதாப லங்கேஸ்வரனுடைய கீர்த்தியல்லவா? என்று சொன்னன். அந்தச் சொல் சொல்லும்பொழுதே நெடிய வேற் படைகளும் கொடிய விற்படைகளும் மலையையும் இருகூறாகச் செய்கின்ற வாட் படைகளும் வந்து நெருங்கின. அவற்றின் தொகை எவ்வளவென்றும் என்னாலே சொல்லக் கூடாது. இரண்டு பக்கத்திலும் மதத்தைப் பொழிந்து நிலத்தைச் சேறு செய்யும்படியான யானைப்படைகள் பன்னீராயிரமும், மிதமில்லாத புரவிப்படைகளும் சேர்ந்தன. மற்றும் பலவகை ஆயுதங்களையுடைய இராக்ஷதேந்திரங்கள் எத்தனைபேர்கள் கூடவரத் தன்னுடைய பிதாவிருக்கின்ற ஆஸ்தானமண்டபத்திற்கு வந்து, இராவணனுடைய இரண்டு பாதத்திலும் விழுந்து சேவித்து, மாண்டுபோன தம்பியைக் குறித்து அலறி அழுதான். அப்படி அழுகின்ற ஜ்ஞேஷ்ட புத்திரனைத் தசக்ரீவனனவன் அவனுடைய இரண்டு கையையும் பற்றி எடுத்துத் தன் மார்புடனே தழுவிக்கொண்டு, தானும் ஸ்திரீகளெல்லாம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு வந்து கோவென்று கூச்சலிட்டழுதார்கள். அதுகண்டு இந்திரஜித்து அவரையெல்லாம் அதட்டி விலக்கிவிட்டு, தன்னுடைய பிதாவின் முகத்தைப் பார்த்துச் சொல்லுகிறான்: கேளுமையா! நீர் உறுதியொன்றும் பாராமல் சும்மா விருந்து துயரப்படுகின்றீர். குரங்கினுடைய பலத்தைச் செவ்வையாய் போதித்திருந்தும், நீங்கள்போய் அதனுடனே யுத்தஞ் செய்யுங்களென்று சொல்லி அணியணியாகச் சேனைகளை அதன்மேல் ஏவி, நீரே இராட்சதக் கூட்டத்தையெல்லாம் அனியாயமாய்க்

கொன்றீர். கிங்கரர்களும் ஜம்புமாலியும் பஞ்ச சேனபதிகளுமென்கிற இந்த இராட்சத வீரர்களையும், இவர்களுடனே கூடப்போன சேனையையும், ஒருவராயினும் மீண்டு வரவொட்டாமல் கொன்றதினாலே அந்தக் குரங்கை யென்ன வென்று நினைக்கவேண்டியது? சிவன் - பிரமா - விஷ்ணு வென்றுதான் சொன்னாலுஞ் சரியாகுமா! அஷ்ட திக்குகளையும் வென்றீர், திரிபுராந்தகனுகிய திரியம்பகனுடைய கைலாயத்தையும் திரிலோகங்களையும் ஜெயித்தீர். இப்படிப்பட்ட மகா பிரதாபசாலியான நீர் அட்சய குமாரனையும் கொல்லும்படி ஒரு குரங்கை லட்சியம் பண்ணிக்கொண்டு, ஆடவிட்டு நாடகம் பார்ப்பதுபோலே அதற்கு இவ்வளவுதூரம் இடங் கொடுத்துவிட்டீர். அது இருக்கட்டும்; அட்சய குமாரனைக் கொன்றதென்று சொல்லும்படியான அபகீர்த்தியானது இனி அந்தக் குரங்கைக் கொன்றாலுந்தான் நீங்குமா? ஆயினும் சீக்கிரத்திலே நானேபோய் அந்தக் குரங்கைப் பிடித்துக் கொண்டுவந்து கொடுக்கிறேன். நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். துக்கப்படாமலிருமென்று சொல்லிவிட்டு மேகநாதனவன் யுத்தத்திற்குப் பிரயாணப்பட்டான். அதெப்படி யென்றால்: அதிரதம் - மகார்தம் - சமரதம் - அர்த்தரதமாகிய நால்வகை ரதங்களும், ராசமதங்கம் - பத்திரமதங்கம் - மிருகமதங்கமாகிய மூவகை யானைகளும், மல்லகதி - மயூரகதி - வியாக்கிரகதி - விருஷபகதி - வானரகதியாகிய - பஞ்சகதிகளையுடைய புரவிகளும், வாள்வீரர் - வேல்வீரர் - வில்வீரர் முதலான பதாதிகளுமான சதுரங்க பலமுடனே கூடிய இராட்சச சேனைகள் யுகாந்தகால சமுத்திரம் போலே சூழும்படி அவற்றினடுவே நின்ற மகா மேருவுக்குச் சமானமான தேரின் மேலாக வீராதிவீரனென்று சொல்லப்பட்ட இந்திரஜித்துப் போனான். அப்படிபோய், அநுமாரானவர் போர்செய்த போர்க்களத்தைப் பார்த்து, தான் திக்குகளையும் வென்றவனுயிருந்தும் அநுமாருடைய போர்ப் பிரதாபத்தைக் குறித்து நன்றாயிருக்கின்றதென்று சந்தோஷப்பட்டான். அப்படி அவன் சந்தோஷப்படுகிறதைச் சகலரும் கண்டு, இப்படி யிவன் சந்தோஷப்படுகிறது என்ன பிரமாதத்தை விளைக்குமோவென்று நடுங்கினர்கள். இந்திரஜித்தோ அம்மம்மா! எங்கே பார்த்தாலும் பிணங்களே அநேக மலைகளும், ரத்தமே கடல்களும், நிணமே நதிகளும், ஆயுதங்களே காடுகளும்போலச் சூழும்படி இந்த இரணக்களமானது வேறொரு உலகம்போலத் தோன்றுகின்றதே யென்று நினைத்து ஆச்சரியப்பட்டான். அவன் எக்காலத்திலும் துக்கமென்பது அணுகாதிருக்கின்ற தன்னுடைய மனதிலே கொஞ்சம் விசனமடைந்து, சமுத்திரத்தைப்போல அளவிடப்படாதவர்களும், மகா பராக்கிரமத்தையுடையவர்களும், சமானதிக மில்லாதவருமான ராட்சதர்களெல்லாம் இறந்தாரே. இவ்வொரு குரங்குதானே இத்தனை பேரையும் கொன்றதென்றால் இனி அந்தச் சீதைக்கு நாயகனை ராமன் வந்து எதிர்த்து யுத்தஞ்செய்தால், நாம் எந்தச் சேனையைக் கொண்டுவந்து வெல்லுகிறதென்றும் சொன்னான். அப்படி சொல்லிக்கொண்டே அவன் போகும்படியான வழி முழுவதும் கண்ணுக்குச் சமானமானவரும், பிராணனுக் கொப்பானவரும், யுத்தகளத்திலே உள்ளங்கைப் பொருளைப்போல காக்கின்றவருமான எண்ணிறந்த இராட்சதரானவர் இறந்து கிடப்பதைக்கண்டு, அங்கங்கே நின்று வாயுதட்டை மடித்து ரௌத்திராகாரமாய் ஆராத புண்ணினிடத்திலே கோலிட்டாற்போல அவமானத்தி

ஞலே மனம் நொந்து புழுங்கி, ஆரண்யத்திலே எங்க ளத்தைக்கு வந்த அவ மானமும், கரன் முதலானவர்கள் பட்டபாடும், என்னைத் தமையனுகப் படைத்த என்னுடைய தம்பி அக்ஷயன் இற்ந்துபோனதும், இரண்டு மனிதரர்லும் ஒரு குரங்கினலு மல்லவா? ஆ! ஆ! என்னுடைய வீரப்பிரதாபம் அழகாயிருக் கின்றதென்று நினைத்து அநேகம் பிணக்குன்றுகளை யிடறி, இரத்த நதியை நீந்தி நிணச் சேற்றைக் கடந்து, அதிக பிரயாசமாக ரதத்தை நடத்திக் கொண்டு போகிறவன் நிலத்திலே தேய்ப்புண்டு அரைபட்டுக் கிடக்கின்ற தன் னுடைய தம்பியின் சரீரத்தைப் பார்த்தான். உடனே நெருப்பிலே காய்ச்சப் பட்ட செம்பைப்போலே தன்னுடைய கண் சிவந்து, சுப்பிரமணியராலே கொல்லப்பட்ட தாருகாசுரனுடைய சரீரத்திலே யிருந்து பெருகின உதிரத் தைப்போல எங்கும் தோய்ந்திருக்கும்படியான உதிரப்பிரவாகத்திலே நரசிங்க மூர்த்தியினுடைய கை நகங்களினல் அணையப்பட்ட இரணியாசுரனுடைய உடற் குழம்பைப்போல அவருடலானது கோரமாய்க் கிடக்கக்கண்டு, ஏறிய தேரி னின்றும் மெய்சோர்ந்து, கையிலே தாங்கிய வில்லையும் நழுவவிட்டு, விழிகளி லிருந்து உதிரமும் நீரும் நெருப்பும் குபீர் குபீரென்று சிதறப் பெருமூச் செறிந்து, அடா தம்பி! உன்னுடைய பிதாவினுடைய உக்கிரமான ஆக்கி னையைக் குறித்துப் பார்த்தேனேயானல் உன்னை எமனும் கொண்டுபோக மாட்டானே. மற்ற லோகத்தாரும் உன்னை யொளித்து வைப்பதற்குப் பயப் படுவாரே. ஐயோ! எங்களை நீக்கி நீ எந்த லோகத்திலேபோய்ச் சேர்ந்தாயோ? என்று சொல்லிச் சொல்லி மனமானது சகிக்காமல் அறிவழிந்து பிரலாபித் தான். அப்பொழுது கோபமானது ஜ்வலித்து மேலிட்டு, ஆணிக்கு எதிராணி கடாவினதுபோல அத் துக்கத்தை வெளிப்பட வொட்டாமல் அடக்கியது. இந்தப்பிரகாரமாய் நிகழும்படியான சமயத்திலே, சூரியனுடைய ரதத்திற்கு ஒப்பான ரதத்தின்மேலே இருக்கின்ற இந்திரஜித்தை முப்புரங்களை எரிக்கும் படி முடுகிச் சென்ற கைலாசநாதனைக் கண்டதுபோல அனுமாரானவர் கண் டார். கண்டு இவன்தான் இந்திரஜித்தென்பவன் முன்பு சில வீரரை நாம் ஜெயித்தோமே அது ஒரு அதிசயமல்ல. இவனை இவன் செய்த தீவினையே நமக்கு எதிரே வரும்படி அதிசீக்கிரத்திலே அழைத்துக் கொண்டுவந்து விட் டது. இனி வெல்வது தோற்பதாகிய இந்த இரண்டிலே ஏதாவதொன்று உண்டாகுமானலுங் கீர்த்தியே. துள்ளுகாளையான இவன் மாத்திரம் நம் முடைய கையிற் பட்டானலல், அது அந்த இராவணன் மாண்டதற்குச் சமான மாகும். பின்பாவது நாமறியாமல் கெட்டோம் என்று அழியாத கற்பினை யுடைய லோகமாதாவான சீதாபிராட்டியாரை விட்டு விடுவான். இராட்சத ருடைய மதமும் அடங்கும். இதனல் வரும் பிரயோஜனம் ஒன்றுதானு? இந் திரனும் தன்னுடைய வருத்தம் நீங்கிச் சுகப்படுவான். இப்பொழுதே இலங்கா பட்டணமும் கட்டுக்காவல் அழிந்துபோம். நானே இராவணனை வேரோடே வென்றவனுவேனென்று இவ்விதமாக எண்ணுகின்ற தருணத்தில், இராக்ஷ தரும் - யானைகளும் - தேர்களும் - குதிரைகளும் - மூன்றுதரம் மூன்று லோகத் தையும் ஜெயித்துவந்த மேகநாதனுக்கு முன்னே வந்து, கற்கண்டை எறும்பு மொய்த்தது போலே தோரண கம்பத்தின்மேலே யிருந்த ஆஞ்சநேயரை நாற் புறத்திலும் சுற்றி வளைத்துக்கொண்டு, உடைவாள் போலவும் - எறிவேல்

போலவும் - சக்கரம் போலவும் - தோமரம் போலவும் - மழுப்போலவும்-கொழுப் போலவுங் - கத்திபோலவும் - கட்டாரிபோலவும் - ஈட்டிபோலவும் - எழுத்தாணி போலவும் - ஊசிப்போலவும் - உலக்கைப்போலவும் - கட்டப்பாரைபோலவும் - தூர்க்கம்பிபோலவும் - சலாகைபோலவும் - சங்கிலிபோலவும் - நானவித ரூபத் தையுடைய பாணங்களை பிரயோகித்தான். வாளாயுதம் - வேலாயுதம் - சூலா யுதம் - காலாயுதம் - சக்கராயுதம் - வஜ்ராயுதம் - தெண்டாயுதம் - தோமராயுதம் என்று சொல்லப்பட்டவற்றையும், எறிதடி - வளைதடி - குறுந்தடி - பருந்தடி - இருப்புலக்கை - வல்லுலக்கை - குந்தம் - கோடாரி - பாசம் - அங்குசம் - கவண் - கப்பண முதலிய அநேக ஆயுதங்களைக் கொண்டு பிரளயகால மேகங்கள் சப்த சமுத்திர ஜலத்தையு முண்டு சூல்கொண்டு கறுத்து மின்னிக் குமுறி இடித்து யானைத் துதிக்கைப்போலப் பருத்த தாரைக ளாக மழை பொழிவதுபோல அமோகமாகப் பிரயோகஞ் செய்தார்கள். அது கண்டு ஆஞ்சநேயரும் வந்தீர்களா! வாருங்கள்! என்று அழைத்து, தோரண ஸ்தம்பத்தைவிட்டுக் கீழே குதித்து, பிரமாண்ட பரியந்தம் வளர்ந்து உயர்ந்து கிளைத்துத் தழைத்திருக்கின்ற ஒரு மராமரத்தை வேருடனே பிடுங்கி எடுத்து, கரகரவென்று சுழற்றிக்கொண்டு உக்கிரமாகிய கோபத்தோடே அந்த சேனைக் குள் பிரவேசித்தார். அவருடைய காலினால், சில யானைகள் உதையுண்டதுகள். சில யானைகள் உருண்டதுகள். சில யானைகள் மிதியுண்டதுகள். சில யானை கள் விழுந்ததுகள். சில யானைகள் மண்ணிற் புதையுண்டதுகள். சில யானை கள் புரண்டதுகள். சில யானைகள் மறித்ததுகள். பல தேர்கள் முடிந்ததுகள். பல தேர்கள் முறிந்ததுகள். பல தேர்கள் இடிந்ததுகள். பல தேர்களிற்றது கள். பல தேர்கள் அச்சொடிந்ததுகள். பல தேர்கள் மச்சழிந்ததுகள். பல தேர்கள் பொடிப் பொடியாயுதிர்ந்ததுகள். பல தேர்கள் பூமியிற்படிந்ததுகள். பல தேர்கள் கொடி குடை முதலானதுகளும் பறந்ததுகள். அநேகங் குதிரை கள் கண்மணி சிதைந்ததுகள். அநேகங் குதிரைகள் கால் முறிந்ததுகள். அநேகங் குதிரைகள் முதுகு கோணியதுகள். அநேகங் குதிரைகள் மார்பொடிந் ததுகள். அநேகங் குதிரைகள் உதிரங் கக்கியதுகள். அநேகங் குதிரைகள் குளம்புகள் பிளந்ததுகள். அநேகங் குதிரைகள் கழுத்தற்றதுகள். எத்தனையோ இராட்சதர்கள் அநுமான் கையிற் பிடியுண்டார்கள். எத்தனையோ இராட்ச தர்கள் சரீரம் பிளப்புண்டார்கள். எத்தனையோ இராட்சதர்கள் தோளொடி யுண்டார்கள். எத்தனையோ இராட்சதர்கள் தலையுடையப்பட்டார்கள். எத் தனையோ இராட்சதர்கள் தேகமுழுதுங் கடியுண்டார்கள். எத்தனையோ இராட் சதர்கள் கழுத்தறுப்பட்டார்கள். எத்தனையோ இராட்சதர்கள் அடியுண்டார் கள். பயப்பிராந்தி கொண்டார்கள். ராட்சத வீரர்கள் விற்களை வட்டமாக வளைத்துத் தூணியிலிருந்து ஆராய்ந்தெடுத்து அனுசந்தானம் பண்ணித் தொட தாராவிச் சின்னமாகப் பிரயோகஞ் செய்த அஸ்திரங்களும், மற்றும் பலவித மாகிய ஆயுதங்களும் வாயுகுமாரர்மேல் வந்து பட்டும் அவருக்கு ஒரு உபத்திரவ முஞ் செய்யாமல் பொடிப் பொடியாய்ப் பொறியெழுந்து திக்குகள்தோறும் தெறித்துச் சிதறியதுகள். அது எப்படியிருந்ததென்றால், கொல்லனவன் காய்ந்த இரும்பைப் பணியின்மேல வைத்துச் சம்மட்டிகொண்டு அடிக்க, அது அந்தப் பணியைச் சுடாமல் சிதைவுபட்டு அதன் தூரும்பு எங்கும் தெரித்துப்

பறக்கிறதுபோ லிருந்தது. அதுகண்டு இந்திரஜித்தானவன் நெருப்பைக் கக்குகின்ற அநேக பாணங்களை அவர்மேல் சந்தத் தாரையாகப் பிரயோகஞ் செய்தான். அதுகள் வந்து ஆஞ்சநேயர் திருமேனியிற் பட்டமாத்திரத்தில் அவருடைய கோபாக்கினியினாலே சில வெந்தும், சில புகைந்தும், சில எரிந்தும், சில கரிந்தும், சில நீறுகியும் போனதுகள். அதைப் பார்த்துத் தேவர்களுடைய முகதேஜசு அழிந்து கண்ணெளி மழுங்கியது. அநுமானாலே தன்னுடனே கூட வந்த தேர்களும், யானைகளும், புரவிகளும், காலாள்களுமாகிய சகல சேனைகளு மிறந்துபோகவே; வேறு துணையில்லாமல் தனித்து நின்ற பருத்த தோள்களை யுடைய வீராதி வீரனுகிய இந்திரஜித்து நகைப்பும் கோபமும் அதிகரிக்கும்படி வாயுவேக மனோவேகமாகத் தேரைச் செலுத்திக்கொண்டு, அடா! எந்நேரமாக உன்னைக் குறித்து நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது? இவர்களை எல் லாம் கொன்றும் என் தோளின் தினவு தீரவில்லையே. ஆகையால் மகாராஜன் ஏதோ எனது நற்காலம் வந்துவிட்டாய். வந்த நீ சீக்கிரமாய் வரப்போகாதா? இனியாவது வா என்று தன்னை யழைக்கின்ற அநுமாருக்குச் சமீபத்தில் வந்தான்.

கலி

புரந்த ரன்றலை பொதி மெறிக் திடப்புயல் வானில்
பரந்த பல்லுரு மேற்றினம் வெறித்துயிர் பதைப்ப
நிரந்த ரக் தலை நெடுநிலஞ் சுமந்தபே ருரகன்
சிரந்து ளங்கிட வரக்கன்வெஞ் சிலையைநாண் டெறித்தான்.

ஆண்ட நாயகன் றூதனு மயனுடை யண்டம்
கீண்ட தாமெனக் கிரியுக நெடுநிலங் கிழிய
நீண்ட மாத்திரம் வெடிபட வவனெடுஞ் சிலையில்
பூண்ட நானிலத் தன்னெழிற் றேள்களைப் புடைத்தான்.

நல்ல நல்லையிஞ் ஞாலத்து ணின்னெக்க ணல்லார்
இல்லை யில்லையா லெறுழ்வலிக் கியாரொடு மிகல
வல்லை வல்லையின் றுகூ படைத்துள வாழ்நாட்
கெல்லை யெல்லையென் றிந்திரசித்துவு மிசைத்தான்.

நாளுக் கெல்லையு நிருதரா யுலகத்தை நலியும்
கோளுக் கெல்லையுங் கொடுந்தொழிற் கெல்லையுங் கொடியீர்
வாளுக் கெல்லையும் வந்தன வகைகொண்டு வந்தேன்
தோளுக் கெல்லையொன் றில்லையென் றநுமனுஞ் சொன்னான்.

அப்படி வந்து சேர்ந்த சொர்க்காதிபதியாகிய தேவேந்திரனுடைய சிரசு அதிர்ந்து நடுங்கவும், மேகத்தினிடத்தி லுண்டாகிய இடிகளும் திகைத்து உயிர் பதைக்கவும், சர்வகாலமும் பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனுடைய சகஸ்திர பணமுடிகளும் அசையவும், அந்த இந்திரஜித்தானவன் தன்னுடைய வில்லைக் குணத்தொனி செய்தான். அதுகண்டு என்னைத் தன் தாசானுதாசனாக ஆண்டு கொண்டு ஸ்ரீ ராமபிரானுடைய தூதராகிய ஆஞ்சநேயரும் பிரமாண்டம்

பிளக்கவும், அதுபோல அஷ்டகுலகிரிகளும் பொடிப்பொடியா யுதிரவும், பூமி கிழியவும், திக்குகள் வெடிக்கவும், இந்திரஜித்துவின் வில்லிலே பூட்டிய நாணி யற்றுபடவும், தம்முடைய தோள்களைக் கொட்டி அட்டகாசஞ் செய்தார். அது கண்டு சித்தம் பிரமித்து, நீயே நல்லவன்; நல்லவன்; இந்த உலகத்திலே உனக்குச் சமானமாகச் சொல்லுகிறதற்கு நல்லவர்கள் யாவருமில்லை. பராக் கிரமத்தைக்கொண்டு சகலமானவர்களுடனேயும் யுத்தஞ் செய்கிறதற்கு நீயே சமர்த்தன். நீ பெற்றிருக்கின்ற பூரணயுஷியத்திற்கு இப்பொழுதே முடிவு வந்தது வந்ததென்று இந்திரஜித்து சொன்னன். அப்படி அவன் சொன்ன உல்லங்கனமாகிய வார்த்தையைக் கேட்டு அடா! நான் உங்களுடைய முடிவில் லாத ஆயுஷியத்திற்கு முடிவும்; மகாபாவிகளாகிய ராக்ஷதர்களாய் ஜனித்துப் பெரியோர்களை எல்லாம் உபத்திரவப்படுத்துகின்ற உங்களுடைய அடங்காத ஆண்மைக்கு முடிவும், உங்களுடைய கொடுமையாகிய துஷ்கிர்த்தியத்திற்கு முடிவும், பொல்லாதவர்களாகிய நீங்கள் பிரமாதி தேவர்களை நோக்கித் தவஞ் செய்து பெற்ற வாள் முதலாகிய ஆயுதங்களுக்கு முடிவும், இப்போதே வந்து சம்பவிக்கத்தக்க உபாயத்தைத் தேடி வந்திருக்கின்றேன். என்னுடைய பூரணயுஷியத்திற்கு யாராலும் ஒருபோதும் முடிவேயில்லையென்று சொன்னர். அப்போது மேகநாதன் இந்த எண்ணத்தைக் கெடுக்கிறேனென்று சொல்லி, அநுமானுடைய திருமேனியில் உதிரமொழுகவும், அதைப் பார்த்துத் தேவர்கள் உடல் பதைக்கவும், வஜ்ஜிராயுதத்திலும் அதிக வலிமையுடைய பாணங்களை வில்லிலே பூட்டிப் பிரயோகித்து அவர் சிரசிலும் மார்பிலும் அழுத்தினன். அழுத்தவே ஆஞ்சநேயர் கோபமூண்டு ஆகாயம் குறுகியிருக்கின்றதே என்று நினைத்துத் தாமும் குறுகிய உருவத்துடனிராமல் அதிலும் பெரிய வுருவமெடுக்க வேணுமென்று கருதி, சிறிய தாயினுடைய வாய்மொழியைச் சிரசின்மேற் கொண்டு ராஜ்யத்தைத் தம்பிக்குக் கொடுத்துத் தபோமார்க்கத்தில் நிற்கின்ற தம்முடைய நாயகனாகிய இராமச்சந்திரனுடைய கீர்த்தியைப்போல நீண்டு உயர்ந்த விசுவரூபங் கொண்டார். அப்படி விஸ்வரூபங்கொண்டு நின்ற அநு மானை இந்திரஜித்து பார்த்து, அவருடைய பாதிச் சரீரமாத்திரம் தெரியக் கண்டானே யல்லாமல் முழுதும் தன் கண்ணுக்குத் தெரியும்படி காணுமையால் மனந் திகைத்தவன் போல ஆச்சரியப்பட்டான். சுத்த வீரராகிய ஆஞ்சநேயர் தம்முடைய நீண்ட கைகளை எதிரே நீட்டி அவனெய்த அஸ்திரங்களெல்லாம் தம்மேல் வந்து படாமல் திரும்பிப்போய் விழும்படி தட்டி வீசிவிட்டு, அவனுடைய இரதத்தில் கட்டியிருந்த பேய்களாகிய புரவிகளும் சாரதிகளும் மண்ணிலே விழுந்துமாயும்படி அறைந்தார். அறைந்த அறையினாலே தேரழிந்தது. உடனே யுகாந்தகால மாருதத்திற்குச் சமானமாகிய வேகத்தையுடைய குதிரைகள் கட்டிய மற்றொரு தேர் வந்து உதவியது. இந்திரஜித்து அதன்மேற் பாய்ந்தேறி மேன்மேலும் பாணங்களைப் பிரயோகஞ்செய்து, அந்தப் பாணங்களினாலேயே ஆஞ்சநேயருடைய திருமேனியை மறைத்தான், அவனெய்த பாணங்களெல் லாம் அவர் மார்பில் வந்து புதைந்ததுகள். புதைந்த மாத்திரத்திலே ரோமங் கள் உதிர்வதுபோல அந்தப் பாணங்கள் அத்தனையும் பலபலவென்று உதிரும் படி உதறிவிட்டு, அவன் தேரின்மே லெழும்பிக் குதித்து, உலக முழுமையும் ஜெயங்கொண்ட அவனுடைய அபாரமாகிய வில்லைத் தமது கையாலெட்டிப்

பறித்து மடமடவென்று முறியும்படி ஒடித்தெறிந்தார். அந்த வில் முறிந்த ஓசை அடங்குகிறதற்குமுன் அந்த இந்திரஜித்தானவன் பூர்வகாலத்தில் வஜ்ஜிராயுதத்தினால் மலைகளின் சிறகுகளைக் கண்டித்த இந்திரனவன் போரிலே தனக்குப் பயந்து எறிந்துவிட்டுப்போன பிரசண்ட தநுசு ஒன்றிருந்தது. அதை மகா உக்கிரத்துடனே எடுத்து நிறுத்தி, இழுத்து வளைத்து நாரிபூட்டி, விரலால் முறுக்கித் தெறித்து, வடித்துக் கூரிட்டுக் கடைந்து தைலதூபம் பண்ணி விஷம் பூசியிருக்கின்றதுகளாகிய நூறுநூறு பாணங்களை ஒவ்வொரு கோர்வையாகக் கோர்த்து, சரசரவென்று மழை பொழிகிறதுபோலப் பொழிந்தான். அதுகள் வந்து சுறீல் சுறீலென்று அநுமானுடைய சரீரத்தில் தைத்துப் பலவித காயங்களைச் செய்ய, ஸ்ரீ ராமதூதரானவர் சற்றுநேரம் ஆயாசங் கொண்டிருந்தார். அதுகண்டு தேவர்கள் அறிவழிந்து துக்கப்பட்டார்கள். பின்பு மாருதியானவர் சோகம் நீங்கி ஒரு பெரிய மராமரத்தை யெடுத்துச் சுழற்றிக்கொண்டே அவனுக்கெதிரே நடந்து, அவன் விடுகிற பாணங்களை யெல்லாம் வீசியடித்துத் தூள்தூளாக்கித் தள்ளிவிட்டு, அந்த மரத்தினாலேயே, அவனுடைய தலையின்மேல் ஓங்கி அடித்தார். அந்த அடிபடவே தேவர்களை யெல்லாம் துரத்தியடித்த இந்திரஜித்து தன் கிரீடம் உடைந்து விழும்படித் தலை பிளந்து, மலையருவிபோல ரத்தம் பெருகிப் பாய மெய்தளர்ந்து மனங் கலங்கிப் பிரமைகொண்டிருந்தான். அவ்வண்ணமாயிருந்த இந்திரசித்தானவன் மீட்டும் தெளிவுவந்த மாத்திரத்தில் பற்களைக் கடித்து மீசை படபடவென்று துடிக்க அதிக கோபாவேசங் கொண்டு, தேவர்களும் - அசுரர்களும் - முனிவர்களும் திகைக்க, பர்வதம்போல எதிரே நிற்கின்ற அநுமானுடைய மார்பு கலங்க, தோளுங் குலுங்க, ஒன்றைப்போல மகா கடூரமாகிய ஆயிரம் பாணங்களை ஏககாலத்திலே வில்லிலே பூட்டி றிவ் றிவ்வென்று போய்த் தைக்கும்படி செய்தான். அவனெய்த பாணங்கள் வந்து மார்பிலும் தோளிலும் பதியவே மாருதியானவர் மனங்கசிந்து மிகவும் கொதித்து, சரவேகத்தைப் பார்க்கிலும் அதிவேகத்தைக்கொண்டு பாய்ந்து, அவனைத் தேருடனே யொரு சுண்டக் காயைப்போல எளிதாக எடுத்து ஆகாயத்திற் போகும்படி எறிந்து கொர்ஜ்ஜித்துக்கொக்கரித்தார். அப்படி அநுமானெறிந்த விசையினால் அளவிறந்த புஜபலத்தையு முடைய சத்துருவாகிய இந்திரஜித்துவானவன் கண்ணின் மேலிமையானது கீழிமையுடனே வந்து தட்டுதற்கு முன்பாக தேருடனே ஆகாயம் எவ்வளவு உயரமோ அவ்வளவும் அதற்கு மேலும்போய் அங்கிருந்து பூமியில் வந்துவிழுந்தான். அவன் விழுந்து விழாததற்கு முன்னே தேரை விட்டு ஆகாயத்தி லெழும்பினான். அப்போது அவனுடைய சேனையிலிருந்த நவரத்னமயமாகிய சேமத்தேர்களை யெல்லாம் ஒரு உழுந்து உருள்கின்ற பொழுதிற்குள்ளே ஆஞ்சநேயர் உதைத்து அச்சுவேறு ஆணி வேறாகும்படிச் சிதைத்துவிட்டார்.

பின்பு ஏறுகிறதற்குத் தேரில்லாமலும், எதிரே நின்று போராடுகிறதற்குப் பலமில்லாமலுஞ் சங்கடப்பட்டு, அவன் வேறொன்றுஞ் செய்யக் கூடாமையினாலே தனக்கு அவமானம் வந்து சம்பவித்ததே யென்று நினைத்து, விஷ சர்ப்பம்போலச் சீறி அதிக கோபங்கொண்டு, அங்குமிங்கும் உழன்று, இனி

யேது செய்கிறது? நம்மிடத்தில் பிரமபாசமொன்றுதானே யிருக்கின்றது. அதுவு மிப்படிப்பட்ட ஆபத்துக் காலத்தில் உதவாமல் மற்றென்னதான் செய்ய விருக்கின்றது? அதையாவது பிரயோகம் செய்வோமென்று உத்தேசித்து, அதற்குப் புஷ்பம் - சந்தனம் - தீபம் - தூபம் - முதலானதுகளுங் கொடுத்து, சோடச வுபசாரத்துடனே மானஸீகமாகப் பூஜித்து, தேவர் - மானிடர் - நரகர் - மிருகம் - பறவை - ஊர்வன - நீர்வாழ்வன - ஸ்தாவர மென்கின்ற எழுவகைத் தோற்றங்களையும் உண்டாக்கிய சதுர்முகப் பிரமாவினுடைய வரப்பிரசாதத்தி னுற் பெற்ற அந்தப் பிரம்மபாசத்தைக் கையிலெடுத்து வெற்றி வில்லிலே தொடுத்து, அநுமானுடைய தோளுக்குச் சரியாக லக்குப் பார்த்து, மண்ணும் நடுங்க விண்ணும் நடுங்க திக்குகளும் நடுங்க மேருவும் நடுங்க அதைக் கர்னபரி யந்தம் இழுத்து அபிமந்திரித்து விட்டுவிட்டான். விட்டவுடனே தடுக்கப்படாத அந்தப் பிரமபாசமானது அக்கினியைக் கக்குகின்ற கோபக்கண்களையுடைய நாகக்கூட்டங்களுக்கு ராஜாவாகிய ஆதிசேஷனுடைய உருவத்தைக்கொண்டு பன்னக் வைரியாகிய கருடனும் திடுக்கிட்டு நடுங்கும்படி விஷஜ்வாலையுடனே பிரசண்ட வேகமாய் வந்து, ஆஞ்சநேயருடைய தோள்களை யிருக்கி நெருக்கி ஒடுக்கி வளைத்துச் சுற்றிக்கட்டியது. இப்படி அந்தப் பாசமானது மகா திடம் பொருந்திய தமது சரீரத்தைக்கட்டி உபத்திரவப்படுத்தவே வாயுகுமாரர் தம் பின்னே தொடர்ந்து வந்த தர்மதேவதை கண்ணீர்விடும்படி தேகஸ்மரணை யில்லாமல், சொர்ன மயமாகிய தோரண ஸ்தம்பத்துடனே கற்பாந்த காலத்தில் ஆதித்தியாதி கிரகங்களுடனே சந்திரன் சாய்ந்ததுபோலச் சாய்ந்தார். இவ்வித மாகச் சோர்வுற்றுச் சாய்ந்தவர் கொஞ்சம் பிரக்ஞையுண்டாகி, இது நம்மை வருத்தவேண்டிய காரணமென்ன வென்று யோசித்துப் பிரமாவினுடைய வரப் பிரசாதமாய் இவனுக்கு வந்த பிரமபாசமாக வேண்டுமென்று நிச்சயித்தறிந்து, மற்ற அஸ்திர சஸ்திரங்களைப்போல இதை அவமதித்து நடக்கிறது நமக்கு யுக்த மல்ல வென்று நினைத்து, ஸ்ரீ ராமபத்திரனை மனதிலே தியானித்துக் கொண்டு கண்களை மூடினபடியே அசைவற்றிருந்தார். அப்போது மேக நாதனுனவன் இந்த மட்டிலே குரங்கினுடைய வலிகுன்றி, ஓட்டம் ஆட்டமெல்லாம் அடங்கி விட்டதென்று சமீபத்தில் வந்தான். அப்படி வந்தபோது அதற்கு முன் பயந் தோடிப்போய் அங்கங்கே பதுங்கிச் சமயம் பார்த்திருந்த இராட்சதர்களெல் லாம் கொக்கரித்து ஓடி வந்து சுற்றிக்கொண்டு, அநுமானுடைய சரீரத்தைச் சுற்றியிறுக்கிக் கொண்டிருக்கின்ற சர்ப்பரூபமாகிய பிரமபாசத்தின் வாலையும் தலையையும் பிடித்திழுத்தார்கள். அந்தச் செய்தி கேட்டுக் குரங்கினுடைய பல மழிந்ததென்று இலங்காபட்டணத்தி லுள்ளவர்களெல்லாம் ஒரு கூட்டமாகக் கூடிவந்து, கைகொட்டிக் கூத்தாடி இரைச்ச லிட்டார்கள். அதனால் அந்த லங்கையானது சமுத்திரத்தை யொத்திருந்தது. அநுமானைக்கட்டிய பாசமே மந்திரகிரியிற் சுற்றிய வாசுகியென்னும் பாம்பை யொத்திருந்தது. ராட்சதர் களே அமிர்தங் கடைந்த தேவர்களை யொத்திருந்தார்கள். ஆஞ்சநேயரோ மகத்தாகிய மந்தர பர்வதத்தை யொத்திருந்தார். கறுத்த பாம்பு உருவமாகிய பாசமானது தமது பொன்னெத்த மேனியைக்கட்ட, தர்ம தேவதைக்கொரு துணையா யிருக்கின்ற அநுமானுனவர் பூர்வத்தில் வாயு மோதி அடித்தது கண்டு வாசுகி தன்னுடலைக்கொண்டு சுற்றும்படிச் சலனமில்லாம லிருந்த மகா மேரு

வைப்போலவு மிருந்தார். அந்தரத்திலும் மேக மண்டலத்திலும், அஷ்ட திக்கு களிலும், ராட்சதர்களும் ராட்சதிகளும் பின்னும் வந்து மொய்த்துக் கொண்டு மழைபோல ஆரவாரித்தார்கள். அவர்களுக் கப்பொழுதுண்டாகிய சந்தோ ஷத்திற்கு ஒரு முடிவேயில்லை. அதைக் குறித்துச் சொல்லுமிடத்தில் இந்த மேக நாதனனவன் தேவேந்திரனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்தபோது இலங்காபுரியானது எப்படிச் சந்தோஷித்ததோ அப்படியே அன்று சந்தோ ஷித்த தென்று சொல்லலாம்.

பாசப் படலம் முற்றிற்று.

பிணிவீட்டுப் படலம்

சகலமானவர்களும் இந்தக் குரங்கு கெட்டது ; இதை எய்யுங்கள் ; பிள வுங்கள் ; வெட்டுங்கள் ; பீறுங்கள் ; அரியுங்கள் ; குடலைக் கூறு கூறுக்குங்கள் ; மண்ணிலிட்டுத் தேயுங்கள் ; தின்னுங்கள் ; இது பிழைத்ததே யாமாகில் நம் முடைய பிராணனை மாய்த்துவிடுமென்று சொல்லிக்கொண்டு ஓடி வருகின் றார்கள். சிலபேர்கள் இது இந்த ஆயுதங்களினாலெல்லாம் சாகத்தக்கதா ? இதைக் கடலிலே கொண்டுபோய் அமிழ்த்தி வஜ்ராயுதத்தை யெடுத்து உச் சியில் வைத்து அழுத்துங்கள். அப்படியல்லவென்றால் நெருப்பை மூட்டி அதிலே தள்ளிவிடுங்களென்று கோபிக்கின்றார்கள். அநேகம் இராட்சத ஸ்திரீகளும் புருஷர்களும் ஓடிவந்து பார்த்து, பாம்பைப்போல மனங்கொதித்து, இந்தத் துஷ்டப்பயலை இவ்வளவு கால தாமதமாக உயிருடனே வைத்துக் கொண்டிருக்கிறதாவென்று சொல்லிக் கொலை செய்யப் பிரயத்தனப் படுகின் றார்கள். அநேகம்பேர்கள் ஓ பாவிக்குரங்கே ! நீ எங்கள் தகப்பனையும், எங்கள் தம்பியையும், எங்கள் தமையனையும், எங்கள் பிள்ளைகளையுங் கொன்று, உன் வாயிலே போட்டுத் தண்ணீர் வார்த்துக்கொண்டையே ; அவர்களை எங்களுக் குக் கொடுத்துவிட்டு அப்புறம்போ ; அதற்குமுன் உங்கள் அப்பனுடை போகக் கூடாதென்று குறுக்கே நின்று தடை செய்கின்றார்கள். அநேகம் பேர்கள், இவன் சொர்க்கத்திலிருக்கின்ற இந்திராதி தேவர்கள் ஆக்கியாபிக்க வந்தவ னாக வேண்டுமென்று சொல்லுகிறதற்கு அஞ்சுகின்றார்கள். அநேக இராட்சத ஸ்திரீகள் வயிற்றில் அறைந்துகொண்டு வந்து, மலைபோலச் சலியாத பலத்தினை யுடைய எங்கள் பிராண நாயகர்களை இதுவரையில் நாங்கள் பிரியாமல் இருந் தோம். இந்தக் கொலைபாதகனால் இன்றுடனே பிரிந்தோம். ஆகையால் அதைக் குறித்து இனி துக்கிக்கிறதேயில்லை. இவன் சிரசற்றுப் பூமியில் விழ அதன்மேல் நாங்களேறியிருந்து அதை எங்கள் காலினால் மிதித்தாலல்லது தாலி வாங்குகிறதே யில்லையென்று சொல்லுகின்றார்கள். அநுமானை இழுத் துக்கொண்டு எதிரே வரும்போது இலங்கையிலுள்ளவர்கள் கண்டு சந்தோ ஷத்தினால் அண்ட கடாகமட்டும் அளாவும்படி ஆர்ப்பரிக்கின்ற சப்தத்தைக் கேட்டு, கண்டதுண்டமாகி மாண்டுபோன தங்கள் நாயகன்மார்களுக்காக அழுதுகொண்டிருந்த ஸ்திரீகளும் துக்கம் நீங்கிச் சந்தோஷித்தார்கள். அது

மானுனவர் ராக்ஷத வீரர்களையும், யானைகளையும், தேர்களையும், குதிரைகளை யும், தாமெடுத் தெறிந்ததனல் இடிவிழுந்து சிதைந்து கிடக்கிற மலைகளைப் போல உப்பரிகைகளெல்லாம் இடிந்து பொடி பொடியாய்க் கிடக்கின்றதை இலங்கையின் வீதியிலே கண்டுகொண்டே போனர். இராக்ஷத ஸ்திரீகள் அநு மானுடைய தோளிற்கட்டிய கயிற்றை காணுமல், ஐயோ அந்தக் குரங்கு இங் கும் வந்துவிட்டதே ; என்னசெய்வோமென்று வயிற்றிலடித்துக் கொண்டு, ஓடுகிறதைக் கண்டு அநேகர் மயங்கினர்கள். அநுமான் கோஷிப்பதனல் அநேகர் பேசப் பயந்து வாயைத் திறவாமல் அடங்கி யிருந்தார்கள். சிலர் ஆஞ்சநேயர் செய்த யுத்த சமாச்சாரத்தைக் குறித்துப் பேசத் தலைப்பட்டார் கள். சிலர் அவருடைய ஸ்தூல காத்திரத்தைப் பார்க்கப் பார்க்கப் பயப்பி ராந்தி அதிகரித்தலால் பதைபதைத்து, ஊரின் புறத்தில் வலசை வாங்கிப் போனர்கள், சிலர் அக்கினிச் சுவாலை வீசுகின்ற விஷப்பல்லையுடைய நாக பாசங் கட்டிய கட்டை இக்குரங்கு ஒரு புஷ்பமாலையைக்கொண்டு கட்டியது போல இலேசாக எண்ணி, இந்தக் குரங்கினுடைய முகமானது வாடாமல் அதிக தேஜசுடனே யிருக்கின்றது. ஆகையால் நீங்கள் செய்வதைப் பயன் படும்படிச் செவ்வையா யாலோசித்துச் செய்யுங்கள். திடிரென்று தம்முடைய ராஜாவினிடத்திலே கொண்டுபோய் விடுவது நன்மையல்லவென்றார்கள். சிலர் இது இத்தனை யெளிதாய் வருகிறது ; இந்தப் பிரம பாசத்திற்குப் பயந்தல்ல ; என்ன நிமித்தமோ வேணுமென்றே அகப்பட்டுக்கொண்டது. ஆயினும் இதன் எண்ணம் வேறு யிருக்கலாமென்று நினைத்து, அநுமானைப்பார்த்து, ஓய் மகா புருஷனே ! எங்களைச் சந்தோஷ சித்தராய்ப் பாரும் ; கோபிக்கவேண்டா மென்று தெண்டனிட்டார்கள். பலர் மகா பலிஷ்டர்களாகிய அரக்கர்க ளுடைய செருக்கை யழிக்கும்படி எமனனவன் தன்னுடைய உருவத்தை மறைத்து வானரத்தின் உருவத்தைக் கொண்டு போர்செய்ய வந்தானென்வென் றார்கள். பலர் கைலாயமலையி லெழுந்தருளி யிராணின்ற மழுவாளியானவர் சீதாபிராட்டியினுடைய கற்பின் மகிமையால் ஒரு குரங்கு வடிவெடுத்து இந்த இலங்கையை அழிக்க வந்தாரே யல்லாமல் இது ஸ்வபாவமாகிய குரங்கல்ல வென்றார்கள். பலர் க்ஷீரசாகரத்தில் திருக்கண் வளர்ந்தருளானின்ற ஸ்ரீமகா விஷ்ணுவும், மூல தாமரையில் உற்பத்தியாகி உலகங்களைச் சிருஷ்டித்த பிரமா வும், நம்மைப் பகைத்து, தங்களுக்குரிய சுயரூபத்தை மாற்றி இந்த ஒரு குரங் கின் வடிவத்தைக்கொண்டு பூமியில் வந்தார்க ளென்றார்கள். கும்பு கும்பாய் ஸ்திரீகளும் புருஷர்களும் நிலா முற்றந்தோறும் சுவர்னமயமாகிய மாளி கைகள் தோறும், சாளரங்கள் தோறும், வாசல்கள் தோறும் கூடிநின்று பார்க்கத் தலைப்பட்டார்கள். ரம்பாஸ்திரீகளும், விஞ்சயஸ்திரீகளும், நாக ஸ்திரீகளும், சித்த ஸ்திரீகளும், யக்ஷ ஸ்திரீகளுமாகிய அளவிறந்தபேர்கள் அணியணியாக எங்கும் நெருங்கிச் சூழ்ந்தார்கள். இராக்ஷதர்களும் இரா க்ஷதிகளும் தவிர மற்றவர்களெல்லாம் சீதாபிராட்டியாருடைய துக்கத்தைப் பார்த்தோ ? அல்லது இரக்கத்தினலேயோ ? அல்லது தர்மம் இனத்துப் போய் விட்டதென்றோ ? பகிரங்கமாகக் கண்ணீர்விட் டழுதார்கள். கருட னைப் பார்க்கிலும் மூன்றுபங்கு விசேஷமாகிய பலத்தினையுடைய கிங் கரர்கள் ஐம்பதினாயிரம் பேர்கள், அநுமானைக் கட்டிய பாசத்தை இறுகப்

பிடித்து இழுத்துக்கொண்டு போனார்கள். அவர்கள் இழுத்துக்கொண்டு போகும்பொழுது பராக்கிரமச் செய்கையையுடைய ஆஞ்சநேயர் அவர்களைப் பேதித்துக்கொண்டு அப்புறம் மீண்டு போகாமலும், இது செய்யவேண்டுமென்னும் விருப்பு வெறுப்பில்லாமலும், இதுவே முகாந்தரமாகப் போய் லங்காதிபதியாகிய ராவணனை காண்கிறதே யுக்தமென்று மனதிலே நினைத்து, அவர்களுடனேகூடப் போயினர். என் பிதாவாகிய வாயுபகவானுடைய கிருபையினாலும் ஸ்ரீ ராமபிரானுடைய திருவடித்தியான பலத்தினாலும், தேவர்கள் பூர்வம் எனக்குக் கொடுத்திருக்கின்ற வரத்தினாலும், இந்தப் பிரமபாசத்தைக் கண்டதுண்டமாகச் செய்வேன், ஆயினும், அப்படிச் செய்யாமலிருக்கிறதே சர்வோத்தமம். வக்கிர தந்தங்களையுடைய ராக்ஷதாதிபதியினிடத்திற் போய் அவனும், அவன் சமுகத்திருக்கின்ற மந்திரிமார் பிரதானிமார்களும், மற்றுமுள்ள பெரியோர்களும் அறியும்படி எதார்த்தமாக இனி விளையும் விளைவைச் சொன்னால் ஒருவேளை மனந்தளர்ந்து பிராட்டியாரை என் வசமாகக் கொடுத்துவிடவும் கூடும்; அல்லாமலும் அவனுக்கு உபபலமாயிருக்கின்றவர்களின்னரென்பதும் இத்தனை பேரென்பதும் தெரியலாம். அவர்களுடைய அபிப்பிராயத்தையு மறியலாம். இராவணனுடைய ஸ்திதியையும் மனக்கருத்தையும், அவன் முகக்குறிப்பே தூதாகச் சொல்லவும் தெளியலாம். மேலும் வாலி மாண்டதும், மராமரம் பட்டபாடும், சுவாமிக்கு அநுகூலமாயிருக்கின்ற வானர சைனியத்தின் பலமும், மிகுதியும் சுக்கிரீவனுடைய ஆண்மையின் பெருமையும், அவன் புத்திரனாகிய அங்கதனுடைய பராக்கிரமமும், நம்மாலே சொல்லக் கேள்விப்பட்டால் ராவணனுடைய மனதில் உறுத்தும். ஆகையால், அந்த ராக்ஷதேந்திரனுக்குச் சமீபத்திற் போய் ஆண்மையையும் நீதியையும் அவன் மனதிலே கொள்ளும்படி நிறுத்தி, அதற்குச் சம்மதியாமற் போனால் அப்புறம் அவனிடத்தில் இன்னும் இறவாமலிருக்கின்ற சேனைகளில் பாதிக்கு மேற்படக் கொன்று குவித்துவிட்டு மெதுவாய்ப் போய்விடுகிறதே காரியமென்று தீர்க்கமாயாலோசித்துச் சித்தப்படுத்திக்கொண்டார். அல்லாமல், தம்முடைய புஜபலத்தின் சத்துவமொன்றையும் காட்டாமலடக்கிக்கொண்டு போனர். இந்திரஜித்துவோ சேனை சமுத்திரமானது நாற்புறத்திலும் மொய்த்துச் சுற்றிக்கொண்டுவர், ஒரு ரிஷபமானது கட்டுப்பட்டு வருகிறதுபோலக் கட்டப்பட்டு வருகின்ற அதிவீரனாகிய அநுமானை ஏகச்சக்கிரத்தையுடைய இராவணேஸ்வரன் இருக்கின்ற அரண்மனைக்குக் கொண்டுபோனன். அப்போது தூதர்களோடி இராவணனைச் சேவித்து, சுவாமி! தேவரீருடைய ஜ்யேஷ்டபுத்திரர் யுத்தம்செய்து பிரமபாசத்தைவிட, அதில் அந்தக் குரங்கு அகப்பட்டுக் கட்டுப்பட்டதென்று சொன்னர்கள். அந்த வார்த்தை கேட்கவே இராவணன் மனதிலதிக சந்தோஷமாகி, சூரியன் நீங்கிய ஆகாயம்போலத் தன் மார்பின் பிரகாசமாறி இருள் சூழும்படி அதிலணிந்திருந்த கோடிசூரியப் பிரகாசமாகிய ரத்னாரத்தைக் கழற்றி அந்தச் செய்தி சொன்னவர்களுக்குக் கொடுத்தான். பின்னும் அளவில்லாத மகிழ்ச்சியினால் தன் தோள்கள் பூரித்தன. அவர்களைத் தன் கண்கள் மலரப் பார்த்து, சீக்கிரத்தில் நீங்கள்போய் அந்தக் குரங்கைக் கொல்லாமற் கொண்டுவர நான் சொன்னதாகச் சொல்லுங்களென்று, சொல்லியனுப்பினன். அந்தச் சொல்லைத் தூதர்கள் ஓடிவந்து இந்திரஜித்து அறியும்படி

சொன்னார்கள். இச்செய்தி இப்படி நடந்துகொண் டிருக்கும்பொழுது, ஆஞ்ச நேயர் அசோகவனத்தை யழித்தாரென்றும், மிதமற்ற இராட்சதர்களை மாயும் படி கொன்றாரென்றும் அப்போதைக் கப்போது கேள்விப்பட்டுச் சந்தோ ஷித்துக்கொண்டிருந்த சீதாபிராட்டியார், அநுமான் இந்திரஜித்தன் கையிற் சிக்கிப் பாசத்தாற் கட்டுண்டு இழுத்துக்கொண்டு போகப்பட்ட சமாச்சாரங் கேட்டு உயிர் சோரும்படி நிலத்தில் விழுந்து, மாணிக்கப் பிரதிமையானது புகை சூழப்பட்டதுபோல மிருதுவாகி விளங்குகின்ற திருமேனியிற் புழுதிபடி யப் புரண்டு, பாபாத்துமனுகிய வேடன் கையில் தன் குஞ்சு பிடிபட்டுப் போகக் கண்டு தாயாகிய அன்னப்பேடு துக்கிப்பதுபோல, மகத்தாகிய வருத்தத்துடனே பிரலாபிக்கத் தொடங்கினள். அப்பனே! என் கண்மணியாகிய ஆஞ்சநேயா! அநுமானே! அடுக்கடுக்கா யிராநின்ற அண்டங்களை யெல்லாம் ஊடுருவ வளர்ந்து, அவ்வண்டங்கள் முழுமையும் உன்னுடைய உருவத்தில் மறையும்படி ஒங்கி நின்றாய்; வேதம் - வேதாங்கம் - சாஸ்திரம் - புராணம் - ஆகமம் முதலான துகளையும் சாங்கோபாங்கமாகக் கற்றுணர்ந்தாய். இப்படிப்பட்ட மகிமையை யுடைய நீ ஒரு கள்ளனுகிய ராட்சதனாற் பிடியுண்டு பாசத்தாற் கட்டுண்டையே இதுதானே தர்மநீதி யென்பது? புஜபல பராக்கிரமத்தையுடைய நீ என்னைத் துக்கத்தினின்றும் ஈடேற்றும்படி சமுத்திரத்தைக் கடந்து இந்த லங்கைக்கு வந்து, இங்குள்ள ராக்ஷதர்களுடைய சரீரங்களைச் சின்னபின்னப்படுத்தியும் உனக்கு ஒரு துன்பமு மில்லாமல் உஜ்ஜீவித்திருந்தாய். இப்போது முன் னிருந்த வருத்தத்தினும் அதிக வருத்தத்தை எனக்கு உண்டாக்கினாய். ஸ்ரீ ரகு நாயகருடைய திருவாழியைக் கொண்டுவந்து காட்டி நீ என் பிராணனை ரக்ஷித்த படியினாலே, கற்பாந்தகால பரியந்தம் இறவாமல் சிரஞ்சீவியா யிருக்கும்படி உனக்கு நான் வரங்கொடுத்தேன். அதுவோ என்றைக்கு மழியாது. அதுயிருக் கட்டும். இன்னுமொன்றுண்டு. என்னவென்றால்: பர்வதத்திற்கு ஒப்பாகிய உன் புஜபலத்தைக் காட்டப்போய் உடனே பெரிதாகிய அபகீர்த்தியை விளைத் தாய். மேலும் நீ என்னைக் கண்டுகொண்டு போய் என் பிராணநாயகராகிய அந்த புருஷோத்தமரிடத்திற் சொல்லி, நானிருக்குமிடத்தை அவருக்குக் காட்டி அவரை யழைத்துவர அவர் வந்து, இந்தக் கொடிய பாபிஷ்டர்களாகிய ராவ ணாதி ராக்ஷதர்களை யுத்தத்தில்சங்காரஞ்செய்து என்னைச் சிறைமீட்டுக்கொண்டு போவாரென்று நினைத்திருந்தேன். அக் காரியத்திற்கும் தடைசெய்தாயென்று இவ்விதமாகச் சொல்லிச் சொல்லித் தன்னுயிர் தேயும்படி துக்கித்து இளங் கன்றைப் பறி கொடுத்த தாய்ப்பசுவைப்போல் தீயையுஞ் சுடுகின்ற கற்பினை யுடைய ஜானகியார் உடல் தளர்ந்து மதிமயங்கினர்.

அந்தச்சமயத்திலே மகாத்மாவாகிய அனுமானைக் கட்டிக்கொண்டுபோன இந்திரஜித்து, அருமையாகிய தபோபலத்தினால் திரிலோகங்களையும் தன் வச மாக்கிக்கொண்டு தானே ஏகசக்கரமாக அரசாக்ஷி செய்கின்ற பிரதாப லங் கேஸ்வரன் வீற்றிருக்கின்ற சபாமண்டபம் போய்ச் சேர்ந்தான். அத்தருணத் தில் அந்த ராவணேஸ்வரன் எப்படி யிருக்கின்றானென்றால், பரலோகம் பூலோகம் பாதாளலோகமாகிய மூன்று லோகத்திற்கும் வேறொரு பூரணச்சந் திரன் குறைவில்லாமல் தழைத்து உதயமாகியதுபோலவும், முன்னாளில் தான்

பூமியில் நின்றும் ஆகாயத்தில் உயரத் தூக்கிய வெள்ளிமலையைப் போலவும், முத்துச்சரங்கள் தொங்கவிட்டிருக்கின்ற வெற்றிக் குடையானது சிரசின்மேல் குளிர்ந்த நிழலைப் பரப்பித் தாவள்யமாய்ப் பிரகாசிக்கவும், கருடத்துஜத்தை யுடைய ஸ்ரீ மகா விஷ்ணுவின் சக்கரமும் சிவனுடைய மழுவும் இந்திரனுடைய வச்சிராயுதமும் வந்து தாக்கிய வடுக்களும், மதனலீலா சம்பிரமத்தில் ஸ்திரீகள் தங்களுடைய வாள்போலும் கூர்மையாகிய விரல் நகங்களினுற் செய்யும் வடுக்களும் தோள்களிற் பிரகாசிக்கவும் இருந்தான். தலைகளிலுள்ள சிவந்த மயிர்க் கற்றைகளே அக்கினிக் கொழுந்தாகி, கோபத்தினுல் பெருமூச்சு விடுந்தோறும் வாய்களிலும் மூக்குகளிலும் இருந்து கொண்டல் கொண்டலாய்ப் புகை யெழும் பத் தென்திசையிலும் ஒரு வடவாமுகாக்கினியை வைத்ததுபோலவும், பத்துக் கிரீடங்களிலும் பதித்திருக்கின்ற மரகதரத்ன கிரணகாந்தியும், மாணிக்கத்தின் ஜோதியும், நகரங்களிலுள்ள இருளை ஓட்டும்படி பிரகாசித்தலால் ஆதிசேஷ னைவன் தன் பணமுடிகளைத் திசைகள்தோறும் பரப்பிக்கொண்டு அரசிருக் கிறதுபோலவும்; பலவித இரத்தினபரணங்களும், பீதாம்பரமும் இருபது தோள்களிலும் அணிந்த புஜகிருதிகளும் பிரகாசிக்க, மகாமேருவையே சொர்ணமகுடமாக தரித்துக்கொண்டு கருங்கடலானது திரண்டு எழுந்து உட் கார்ந்திருப்பது போலவும், இருளானது கரசரணாதி அவயவங்களோடு உரு பட்டு, சந்திரனுகிய வெண்பட்டுக் குடை நிழலில் நட்சத்திரங்களாகிய முத்தாரத் தைப் பூண்டு அந்திவானமாகிய செம்பட்டாடை உடுத்தி வீற்றிருப்பது போல வும் இருந்தான். ஒளதாரியத்திற்கும் வேத முதலாகிய சகல கலைகளுக்கும் சௌகரியத்திற்கும் வாசஸ்தானமாகிய முகங்களில் விளங்குகின்ற கண்களால் பத்துத் திசைகளையும் பார்க்குந்தோறும் அந்தத் திசைகளி லிருக்கின்ற திக் கஜங்களுக்கும் இந்திரன் முதல் ஈசானன் வரையிலுள்ள திக்குப்பாலர்களுக் கும் பிரம விஷ்ணுகளுக்கும் மகத்தாகிய பயம் செனிக்கவும், சர்வேஸ்வரனுகிய ஸ்ரீ ராமச்சந்திரனுடைய தேவியாரைத் தான் கண்ட பின்பு நாகலோகமுதல் சத்தியலோக பரியந்தமாகிய சகல விடங்களிலுமுள்ள ஸ்திரீகளின்மேல் இச்சை யில்லா திருக்கிறபடியினுலே, அவர்களெல்லாம் புருஷாபாவகமாய்த் தன்னை நீங்காமற் சூழ்ந்திருக்கவும், வானரங்களும் ஸ்ரீ ராகவனும் இளையபெருமாளும் தன்னுல் மிகவும் அற்பமாக எண்ணப்பட்ட மனிதர்களும் முனிவர்களுமாகிய சிலர் தவிர, மற்ற தேவர்கள் முதலாகிய யாவரும் ராக்ஷதக் கூட்டங்களோடும் தன்னை மொய்த்துச் சுற்றிப் பயபக்தியுடனே பணிவிடை செய்யவு மிருந்தான். ஒருபக்கத்தில் யாழும், கைத்தாளமும், சில்லரி யென்னும் வாத்தியமும், குற டென்னும் வாத்தியமும் முழங்க, தேவ ரம்பையர்கள் தன்னுடைய செவிகள் தோறும் கேட்கும்படி அமிர்தஞ் சொரிவது போலப் பாடல்களைப் பாடவும், மற்றொருபக்கத்தில் தாளவோசை மிருதங்க வோசையுடனே தொந்தப்படும் படி காலடிகளை மெல்ல மெல்ல வைத்து மிதித்து அபிநயம் காட்டுகின்ற கையுடனே பார்வையும் மனதும் தொடர்ந்து செல்ல அருமையாகிய தவத்தை யுடைய முனிவர்களுக்கும் பார்த்தால் பூர்ணமாகிய மோக்ஷானந்தத்திலும் விரக்தி தோன்றும்படி நடனஞ்செய்கின்ற மேனகை யென்கின்ற தேவதாசி யின்மேல் தனக்குக் குறுநகை யுண்டாகவு மிருந்தான். தன்னிடத்தில் பிணங்கி யிருக்கின்ற ஸ்திரீகளின் முகத்தழகாகிய தேனைத் தன் பத்து முகத்தில் ஒரு

முகமானது உண்ணவும் தன்னைப் புணர்ந்த பெண்களின் முகத்தி லுண்டாகிய சந்தோஷமென்னும் மதுவை ஒரு முகமானது பானம் பண்ணவும், பாடுகின்ற மதங்கியர்கள் முகத்தில் தோன்றிய பலவித ராகமாகிய அமிர்தத்தை ஒரு முக மானது குடிக்கவும், பரதநாட்டியஞ் செய்கின்ற கூத்தியர்களுடைய முகத்தில் காணுகின்ற அபிநயமாகிய சர்க்கரைப்பாகை ஒருமுகமானது பருகவும், தேவர் களுடனே கூடியிருந்து ஒரு முகமானது அரசில் செலுத்தவும், மந்திரிமார் பந் துக்கள் சிநேகிதர்களாகிய முத்திறத்தார்களுடன் ஒரு முகமானது ஆலோசனை செய்யவும், பாபகிர்த்தியத்தையுடைய தனது ஜாதிக்குரிய குணத்தை ஒரு முகமானது விடாது அனுசரிக்கவும், ஜானகியாருடைய உருவெளியை ஒரு முகமானது கண்டுகொண்டிருக்கவும், சீதையினுடைய கற்பாகிய கடலை என் றையதினத்தில் கடைதேறலாமென்று ஒரு முகமானது நினைக்கவும், கள்ள கஸ்தூரிகளை அணிந்த ஸ்தனங்களையுடைய மங்கையர்கள் தனக்கெதிரே யேந்துகின்ற கண்ணாடியில் ஒரு முகமானது அழகு பார்க்கவு மிருந்தான். தன்னால் அணுகப்படாத புதருக்குள்ளிருக்கின்ற தேனைப்போ யுண்ணுகிற தற்குப் பசி கொண்டலைகின்ற வண்டைப்போல ஜனகராஜ புத்திரியின்மேல் தன் மனமானது சுழன்று செல்லுதலால், தங்களிடத்தில் சரச விளையாட்டு களைச் செய்ய வில்லையென்று சகிக்காமல் மனம் வெதும்பி உடல் புழுங்கிக் கண் களில் ஜலம் பெருகத் துதிக்கின்ற ஸ்திரீகளுடைய கண்ணீராகிய கூறிய வேல் கள் வந்து தோள்கள்தோறும் தைத்துருவவும் பரிமள புஷ்பத்தின் மகரந்தப் பொடிகளைத் திமிர்ந்துக்கொண்டு தேனையுண்டு ஸ்திரீகளுடைய ஸ்தனங்களில் அப்பிய சீதள சந்தனக் குழம்பிலே மூழ்கித் தோய்ந்த இளந்தென்றலானது, விஷத்தைப் போல அடிக்கடி வந்து தன் சரீரத்தில் மன்மத பாணம்பட்ட புண்ணில் நுழையவும் ஸ்திரீகளுடைய செவ்வரி பரந்த கண்கள், சூரியனைக் கண்ட தாமரையைப் போலத் தன்னைக் கண்டு மலர்ந்தபடி யிருக்கவும் தேவ தானவர்களுடைய கைகள், சந்திரனைக் கண்ட தாமரையைப் போலத் தன் முன் குவிந்தபடி யிருக்கவு மிருந்தான்.

இப்படிப்பட்ட அநேக விநோத சம்ப்ரமத்துடனே யிருந்த பிரதாப லங்கேஸ்வரனை ஆஞ்சநேயர் கண்டார். காணவே, பத்துத் தலை நாகத்தைக் கண்ட கருடனைப் போல மனங்கொதித்து, தமது தோளினிடத்தில் இறுக்கிக் கட்டிய பாசத்தை அறுத்துவிட்டு ஆலகால விஷத்தைப்போல இவன்மேற் பாய்ந்து கொல்லுவேனென்று ஆக்குரோஷமாய்ப் பெருமூச் செறிந்து, இராத் திரி இவன் நித்திரை செய்துகொண்டிருக்கக் கண்டபோது கொல்லுகிறது தர்மமல்லவென்று விட்டுவிட்டேன். இப்போது சபையிலே இரத்தின சிங்கா தனத்தி லிருக்கக் கண்டேன். ஆகையால் இனிப் பலவித யோசனை செய்ய வேண்டியதென்ன? இவன்மேல் சீக்கிரத்தி லெழும்பிப் பாய்ந்து, இவனுடைய பத்துத் தலைகளையும் உதைத்துச் சிதைத்துத் தள்ளிவிட்டு ஜெகன்மாதாவாகிய பிராட்டியாரை மீட்டுக்கொண்டு போகிறதே காரியமென்று தத்தாயத்தமானார். அதிவீர சூர பிரதாபசாலியாகிய இரகுநாயகனுடைய பிராணபதமா யிருக் கின்ற தேவியாரை யெடுத்துவந்து சிறை வைக்கும்படிப் பார்த்துக்கொண்டி ருந்த தேவர்கள் அசுரர்கள் முதலாகிய சகலருடைய கண்களுக்கு முன்பாக

இந்தப் பாபகாரியமாகிய இராவணனுடைய மாணிக்கக் கிரீடத்தை யணிந்த தலைகளைச் சின்னபின்னமாகும்படி பறித்தெரியாமற் போவேனேயானால், இனி மேல் நான் செய்யத்தக்க சேவகந்தான் என்ன விருக்கின்றது? இந்தப்படி முடித்தால் உலகத்தார் என்ன சொல்வார்களென்றால், சீதையைத் தேடிக் காணவந்த ஒரு குரங்கானது இராவணேஸ்வரனுடைய பக்கத்திலிருந்து போகிப்பதற்குரிய நாயகிமார்களெல்லாம் பிரமித்து உள்ளே ஓடி யொளிக்க, அவன் சிரசுகளைத் திருகித் திக்குகள் தோறும் உருட்டி ஜெயம் பெற்று ஆர்ப் பரிக்கின்றது. அம்மம்மா! இது கொடிது கொடி தென்று சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுஞ் சொல்லென்ன எளிதாகக் கிடைக்கின்றதா இந்த ராக்ஷ தேந்திரனைப் பிரத்தியக்ஷமாகக் கண்டு சில சொற்களைச் சொல்லிவிட்டு இந்த உயிரைச் சுமந்துகொண்டு திரும்பிப்போனால் அவசியம் கீர்த்தி கிடைக்கும். அப்படிச் செய்யாமல் மேல் நினைத்தபடி செய்தால் நான் ஜெயிக்காமற் போனா லும் இறந்தாலுங் கீர்த்தி யுண்டாகுமென்று நிச்சயப்படுத்திக்கொண்டு, தோளி னிடத்திற் கட்டிய பிரமபாசமானதிற்றுப் பொடிப் பொடியாய் போகப் பர்வதத் தின்மேல் தாவிப் பாய்கின்ற ஆண் சிங்கத்தைப்போல இவன்மே லெழும்பிக் குதிக்கலாமென்று யோசித்தார். அப்படி யோசித்த ஆஞ்சநேயர் பொறுத்து நின்று உடனே வேறொரு யோசனை செய்தார். எப்படி யென்றால்: சர்வசங் கார காலத்தினிருளெல்லாந் திரண்டதற்கொப்பாய் இருக்கின்ற கறுத்த நிறத் தையுடைய இந்த ராவணனே மகா பலவான் ஒருவராலே கொல்லுந்தர முடைய வனுமல்ல வெல்லுந்தர முடையவனுமல்ல; இவனுடைய புஜபலமோ ராமச்சந் திரனால் வெல்லப்படுமே யல்லாமற் பிறரால் வெல்லத்தக்கதா? இவனுக்கு என்னை ஜெயிக்கிற தருமை; எனக்கும் இவனை ஜெயிக்கிற தருமையாகும். அல்லவென்று யுத்தஞ்செய்ய ஏற்பட்டால் தோற்புக் கெலிப்பில்லாமலே வெகு காலம் வீணாகக் கழிந்துபோம். அதனால் போர்செய்யத் தொடங்குவது யுக்த மல்ல. அல்லாமலும் ஊழி முதல்வனாகிய ஸ்ரீ ராமச்சந்திரன் சப்த லோகத் தாருந் துன்பம் நீங்கி இன்பத்தையுடைய அந்தத் திரிலோக பயங்கரனாகிய ராவணனுடைய இருபது தோள்களையும் பத்துத் தலைகளையும் அஸ்திரத்தினா லறுத்துத் தள்ளிப் புழுதியிற் புரளும்படி செய்கின்றது என்னுடைய கட மென்று முன்பு குறித்துச்சொல்லிய ஒரு வார்த்தையு மிருக்கின்றது. மேலும் நாம் சண்டைக்கு ஆரம்பித்துக் கொண்டதிலே வீண்பொழுது போக்கினால் பிராட்டியார் நம்மூடனே இவ்விடத்தி லின்னம் ஒரு மாத பரியந்தம்தான் நான் பிராணனுட னிருப்பேனென்று ஸ்ரீ ராமபத்திரருடைய திருவடி சாட்சியாகச் சொல்லி யிருக்கின்றதனால், அவரெதார்த்தமாக இறந்துபோவா ராகையால் யுத்தஞ் செய்கிறது நன்மையே யல்ல; நாம் தூதனாகவே பேசுகிறது யோக்கிய மென்று நினைத்து வேத நாயகனாகிய சக்கரவர்த்தித் திருமகனுக்குத் துணைவ ராகிய ஆஞ்சநேயர் அந்த இராவணனுக்குச் சமீபத்திற்போனார். ஸ்திரீகள் கூட் டத்தின் நடுவிலிருந்த தன் பிதாவாகிய தசக்கிரீவனுக்கு அநுமானைக்காட்டி இந் திரஜித்துச்சொல்லுகின்றான்: ஐயா! உலகங்களெத்தனை யுண்டோ அத்தனையும் ஜெயித்த இரணியேஸ்வரனைச் சங்கரித்த நரசிங்கமூர்த்தியைப் போலவும், சங்கார கர்த்தாவாகிய சிவனைப்போலவும், மகா சேவகனாயிருக்கிறவன், இந்தக் குரங்குருவத்தை யுடையவனென்று சொல்லி இரண்டு கைகளையும் கூப்பி நமஸ்

காரஞ் செய்தான். அப்பொழுது கண்களிலும் வாய்களிலும் நெருப்புப் பொறி கள் குப்குப் பக்பக் திக்திக்கென் றெழுந்து பறந்து பக்கத்தில் இருக்கின்ற வர்கள் மேலே விழுந்து அவர்கள் சரீரத்தில் இருக்கின்ற மயிர்கள் சுறுசுறு வென்று தீயும்படிப் பார்த்து, புகை யெழும்பும்படிப் பெருமூச்செறிந்து மகத் தாகிய கோபத்துடனே தேவர்கள் அசுரர்கள் முதலாகிய சத்துருக்களெல் லாம் பயப்பிராந்தி கொண்டு மனந் திடுக்கிடும்படி அதட்டி எமனைப்போலே உக்கிரமாக உறுக்கி, நீ என்ன நிமித்தமாக இங்கே வந்தாய்? அந்த மகா விஷ்ணுவோ? தேவேந்திரனே? கைலாசநாதனே? பிரமதேவனே? பூமியை தாங்குகின்ற சகஸ்திரபண மகுடங்களையுடைய ஆதிசேஷனே? காலனே? வேலனே? யமனே? திக்குப்பாலகர்களி லொருவனே? அல்லது ரிஷீஸ்வரர் களை யாகத்தில் உற்பத்தியாகும்படி செய்து தங்கள் ஆக்ஞையின்படி முடித்து வர அனுப்புவித்த பெரும்பூதமோ? பிரம்மாவானவன் லங்காபட்டண முழுமை யும் அழித்துவிடென்று புதிதாகச் சிருஷ்டித்து விடுத்த யந்திர தேவதையோ? நாமரூபங்களை மறைத்துக்கொண்டு வந்தையே நீ யார்? இவ்விடத்திற்கு வந்த காரணமென்ன? யாருன்னை அனுப்பினவர்கள்? எங்களுக்குத் தெரியத்தக்க தாக உள்ளதைச் சொல்லென்று தேவர்களுடைய கீர்த்தியை வேரோடு விழுங் கிய ராவணன் கேட்டான். அதற்கு ஆஞ்சநேயர் பிரதி யுத்தரஞ் சொல்லு கின்றார்: இப்போது நீ குறித்துச் சொன்னவர்க ளெல்லாம் அல்லன், அந்தச் சொற்ப பலமுள்ளவர்கள் ஏவும்படி வந்தவனு மல்லன். புண்டரீகாக்ஷனுகிய ஒரு கோதண்ட தீக்ஷா குருவினுடைய தூதன் நான்; அவராரென்று அறியக் கேட்பையே யாமாகில், முனிவர்களும் தேவர்களும் மும்மூர்த்திகளும் மற்று முண்டாகிய யாவரும் எவைகளும் நினைப்பதற்கு அருமையாகிய பெரிய காரியங் களை முடிக்கின்ற நிமித்தம் வந்திருக்கின்றவர். உங்களுடைய பலத்தையும் பூர்வத்தில் நீங்கள்செய்த தவத்தையும் சேனைகளையும் ஆயுதங்களையும் தேவர்கள் கொடுத்த வரங்களையும் எண்ணத்தையும் வாழ்வையும் பின்னும் உங்களுக்குரிய துர்க்குணம் துர்நடத்தை முதலாகிய சகலத்தையும் ஒரே பாணத்தினலே வேருடனே களையும்படி உத்தேசித்திருக்கின்றவர். தேவர்களுமல்ல, மற்றவர் களுமல்ல, திக்கஜங்களுமல்ல, திக்குப்பாலகர்களுமல்ல, கைலாச பர்வதமுமல்ல, திரிமூர்த்திகளுமல்ல, முனிவர்களுமல்ல, பூலோக புரந்தரனுகிய தசரதச் சக்கர வர்த்தி குமாரர். ஞானமும் சாஸ்திரக் கேள்வியும் உண்மையாகிய மகா தவமும் அழியாத வரங்களும் மற்றுமுண்டாகிய சகலமும் அவரெப்படி நினைக்கின்றாரோ அப்படியெல்லாஞ் சித்திக்கும். இதற்குச் சாக்ஷி யென்னவென்றால் வேதங் களும் தர்ம தேவதையுமே சொல்லும். அவரது காரணத்தை கேட்பையாகில், முடிவில்லாத வேத சாகைகளும் நிச்சயித்துச் சொல்லக்கூடாத அறிவுக்கறி வாயு மிருக்கின்றவர். பூர்வத்தில் முதலிவாயில் அகப்பட்டுச் சகலாத்துமாக் களும் அடைக்கல ஸ்தானமாகிய ஆதிமூலமே யென்றழைத்த கஜேந்திராழ் வானை இரட்சிக்கும்படி வந்தவரே இப்பொழுது தேவர்களை ரட்சிக்கின்ற நிமித் தமாய் வந்திருக்கின்றார். ஆதிமத்தியாந்தரகிதமாய்ப் பூதபௌஷ்ய வர்த்த மானமாகிய திரிவித காலங்களையும் கணிதங்களையும் கடந்து நிற்கின்ற அந்தச் சர்வகாரணரானவர் கையிலே வில்லையேந்திக்கொண்டு சூலமும் சங்கு சக்கர மும் கமண்டலமும் கைவிட்டு வடபத்திரத்தையும் மூலதாமரையையும் வெள்ளி

மலையையும் துறந்து அயோத்தியாபுரியில் வந்து அவதரித்தார். மேலும், தர்மத்தை நிலைநிறுத்தி வேதஞ் சொல்லுகின்ற நீதிகளையெல்லா மறிந்து உலகத்தார் நடக்கும்படி சன்மார்க்கத்திலே அவர்களைச் செலுத்தி துர்ச்சனர்களைச் சங்கரித்து சற்சனர்களுடைய பிறவிப் பிணியை நீக்குகின்ற பரமௌஷதமாயிருக்கின்றவரும் அவரேயன்றி வேறில்லை. யான் அப்படிப்பட்டவருக்குத் தொண்டு செய்வோன். என் பெயர் அநுமானென்பது. நான் சீதாபிராட்டியாரைத் தேடிக்கொண்டு நான்கு திக்கிலும் போயிருக்கின்ற வானராதிபதிகளில் தென்திசைக்கு வந்த வானரசேனைகளுக்கு இராஜாவாகிய வாலிகுமார னென்கிற அங்கதனுடைய தூதனுய்த் தனியே இந்த லங்கைக்கு வந்தேனென்று சொன்னர்.

இவ்வண்ணமாக அநுமான் சொன்ன சொல்லை லங்காதிபதியாகிய ராவணன் கேட்டு, மேகத்தின் மத்தியில் மின்னல் பிரகாசிக்கிறதுபோல நகைத்து, ஓ வாலிபுத்திரன் அனுப்பும்படி வந்த தூதனே! அந்த வாலி சுகமாயிருக்கிறனு? அவனுடைய ராஜரீகஞ் செவ்வையாக நடந்து வருகின்றதா? என்று கேட்டான். அதைக் குறித்து ஸ்ரீ ராமதூதராகிய ஆஞ்சநேயர் சிரித்து, ஓ ராட்சதா! நீ பயப்படாதே; அந்த வாலியானவன் பூமியிலில்லை. அன்றே சுவர்க்கம் போனன். அவன் திரும்பி வரமாட்டான். அவனுடைய வாலும் போய்விட்டது. என் நாயகனுகிய ஸ்ரீ ராமருடைய ஒரு பாணத்திலேதான் அவனிறந்தது. இப்போது எங்களுக்குச் சூரியகுமாரனுகிய சுக்ரீவன் ராஜாவாயிருக்கின்றனென்று சொன்னர். அதுகேட்டு என்ன நிமித்தமாக வாலியை ராமனென்பவன் கொன்றன்? அந்த ராமன் எங்கே யிருக்கின்றன்? அவன் பெண்ஜாதியை அங்கத னனவன் தேடவேண்டிய காரணமென்ன சொல்லென்று ராவணன் கேட்டான். அதற்கு வாயுகுமாரர் சொல்லுகின்றர்; ரகுநாயகர் தம்முடைய திருத் தேவியாரைத் தேடிக்கொண்டு வந்தார். அந்தப் புருஷோத்தமரை எங்கள் சுக்ரீவமகாராஜன் பிராணபதமாகச் சிநேகித்து எனக்குச் சம்பவித்திருக்கின்ற துக்கத்தை நிவர்த்தி செய்யவேண்டுமென்று முறையிட்டுக் கொண்டான். அப்பொழுது சித்திரக்காரரால் எழுதப்படாத திவ்யமாகிய ரூபசௌந்தரியத்தையுடைய ஸ்ரீ ராமச்சந்திரர் வாலியைக் கொன்று, அவனல் அபகரிக்கப்பட்டிருந்த சுக்ரீவனுடைய பெண்ஜாதியாகிய உருமை யென்பவளையும், ராஜரீகமாகிய மகா சம்பத்தையும், அவனுக்கு மீட்டுக் கொடுத்து அவனுடனே அவ்விடத்தில் ஆறுமாத மிருந்து வானர சைனியங்களை வரவழைத்து, பின்பு அவர் ஜானகியை போய் தேடவேண்டுமென்று ஆக்கியாபித்து, சுக்ரீவ மகாராஜன் எங்களுக்கு உத்தரவுசெய்ய, நாங்கள் அந்த லோகமாதாவைத் தேடிக்கொண்டு புறப்பட்டோம். இதுதான் நடந்த சமாச்சாரமென்று மாருதியானவர் சொல்ல, ராவணன் சொல்லுகின்றன்: உங்கள் குலத்திற்கு அதிபதியும் தனக்கு ஒரு வரும் சமான மில்லாதவனுமாய் சிலாக்கியனுயிருந்த வாலியை ஒரு பாணத்தினலே கொன்ற மனிதனுக்கு அடிமைப்பட்டு, அவர்க ளேவிய பணிவிடையைச் செய்துக்கொண் டிருக்கின்றீர்களே? இப்படி யிருப்பீர்களாகில் உங்களுடைய கீர்த்தி அழிந்துபோம். உலகமும் நாசமடையும் தன் தமையனைக் கொல்லும் படிசெய்து அவனைக் கொன்ற ராமன் விஷயத்தில் அதிக அன்புகொண்டிருக்

கின்ற உங்கள் ராஜனுகிய சுக்கிரீவ னனுப்பும்படி எனக்கு என்ன சமாச்சாரம் நீ தெரிவிக்க வந்தது? தூதுவந்த நீ யுத்தம் செய்யவேண்டிய தென்ன? ஒரு வேளை உன்னை நாங்கள் கொல்லுவோ மென்று பயப்படுவாய். கொல்லவில்லை. மனதிலே அச்சமில்லாமற் சொல்லென்று கேட்டான். இவ்விதமாக ராவணன் சொன்ன சொற்களை ஆஞ்சநேயர் ஆலோசித்துப் பார்த்து, பொறுமையா யிருக்கின்ற சில நீதிகளை இவனுக்கு நாம் போதித்தால் ஏற்றிருக்குமென்று சற்குணத்தையுடைய ஆஞ்சநேயர் சொல்லுகின்றார்: உன் வாழ்வை வீணுகக் கெடுத்துவிட்டாய். சிறிதாவது ராஜதர்மமும் பார்க்கவில்லை. பாவத்தையே செய்ய ஏற்பட்டாய். ஆகையால் உனக்கு முடிவு வந்துவிட்டது. ஆகிலும் இன்னமொரு உறுதி சொல்லுகிறேன் கேள். அதனல் நெடுங்காலம் உயிர் நிலைபெற்று வாழ்வாய். அழியாத மகத்தாகிய கற்பினல் அக்கினியைப்போலும் பரிசுத்தத்தையுடைய ஜானகியைத் துன்பப்படுத்தியதால், நீங்கள் ஐம்பொறி களையும் அடக்கிச்செய்த உங்களுடைய முடிவில்லாத மகா தபங்களெல்லாம் மாண்டு போகும்படி நேர்ந்தது. தீமையானது நன்மையை யழிக்க மாட்டாதென் கிற உண்மையைக் கைவிட்டாய். லோகநாயகியாகிய வைதேகியின் திருவழகி னிமித்தம் உனக்குண்டாகிய காம வியாதியினல், நீ அகோர தபசு செய்து பெற்ற அகண்டைஸ்வரியத்தையும் முன்பின் பாராமல் இழந்து விடுகின்றாய். வகைகெட்ட காமச்செருக்கினல் தம்மைத் தாம் மறந்து மதிமயக்கங் கொண்டு தர்மந் தவறினவர்கள், இம்மையில் தங்கள் செல்வத்தை யிழந்து துர்மரணத் தையுற்று மறுமையில் ரௌரவாதி நரகத்தையடைந்து பின்னும் பிறந்து உழல்கின்றதே யல்லாமல் அவர்களில் யார்தான் நிலைபெற்று வாழ்ந்தார்கள்? ஸ்திரீகள்மேல் காமங்கொண்டு இறந்தவர்கள் மிதமில்லாதவர்கள். சன்மார்க் கத்தையுடைய பெரியோர்கள் பொருளும் ஸ்திரீ யின்பமுமாகிய இந்த இரண் டையும் அபேக்ஷிக்கிறதைப் பார்க்கிலும் வேறே நரகவேதனை யுண்டென்றும், தானமும் ஜீவகாருண்யமும் காமமில்லாமையுமாகிய இதுகளைப் பார்க்கிலும் வேறே மோக்ஷசுகம் உண்டென்று நினையார்கள். துர் யிச்சையினல் பரதாரத் தைவிரும்பி எக்காலமும் யாவரும் நகைக்கக்கண்டு நாணமில்லாமல் உழல்கின் றவன் தன்னுடல் பசையற்றுப் பழிக்கு உடன்படுவான். அப்படிப் பட்டவ னுடைய ஆண்மையும் நசித்துப் போமேயல்லாமல் விருத்தியாக மாட்டாது. சமுத்திரஞ் சூழ்ந்த உலகத்தை யாண்டு அரசு செய்தவர்களுக்குள், உன்னை விட நீதியுடையவர்களும் சதுர்வேத பண்டிதர்களும் யாரிருக்கின்றார்கள்? ஆ! ஆ! அப்படிப்பட்ட நீ இப்பொழுது தர்மப் பிரமாணத்தைக் கடக்கின் றையே; ஒருவன் தன்னிடத்தில் விருப்பமில்லாத ஒருத்தியை அபேக்ஷித்து வேண்டி, பின்பு கூடாதென்று அவளால் தடுக்கப்பட்டால் உடனே பிராணத் தியாகம் பண்ணிக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாமல் வாழ்கின்ற வாழ் வைப் பார்க்கிலும் சிறந்த முகத்தின் நடுவே அழகாக நீண்டுயர்ந்த மூக்கறுப் புண்டதுவே அழகென்று சொல்லப்படும் உலகத்தைப் பொடி செய்கின்ற வலிமை பெற்றதுகளாய் இப்பொழுதிருக்கின்ற இந்த இருபது புஜங்களும் பத்துத் தலைகளுமே யல்லாமல், இன்னமும் அநேக புஜங்களும் அநேக சிரசு களும் உனக்கு உண்டாயிருந்தாலும் அதுகளெல்லாம் ஊரைப்பற்றி யெரி கின்ற கடுநெருப்பின் மேலிட்ட பலபல வஸ்திரங்களும் அந்த நெருப்பை மீர

வெர்ட்டாமல் அடக்கி ஊரை ரக்ஷிக்க மாட்டாததுபோலவே உனக்கு வருங் கேட்டை நீக்கிப் பிரயோசனப் படமாட்டா. மேலும், முப்புரங்களும் அக் கினி தத்தமாகும்படி கோபித்த உமாபதியானவர் கொடுத்த வர முதலா னதுகளும் பயன்படாமல் அழிந்து போவோமென்று எண்ணவேண்டுமே. யல்லாமல், வேதநெறி தவறுத ராமச்சந்திரனுடைய பாணங்கள் உன் னைக் கொல்லாமல் விடுமென்று நினைக்கக் கூடுமா? கூடாது. ஆகை யால் நீ அழிவில்லாத மானமழியக் குறைவில்லாத நல்ல சம்பத்தையும் எளி திலே கெடுத்துக்கொண்டு ராமபாணத்தினுல் வருந்துவது தருமமல்ல. உலகத் திலே பிறந்தவர்களும், இனிப் பிறவாத மோட்ச சாம்பிராஜ்ஜியத்தை யடைந் தவர்களும், தேவர்களும், அந்தத் தேவர்களுக்கும், தேவர்களாகிய பிரம ருத் திராதியர்களும், மற்றுமுள்ள யாவரும், சத்தியமாக ராமபிரானைத் தியானஞ் செய்யாமல் மறந்திருக்கிறதேயில்லை. ஆகையால் நீ வருந்தித் தவஞ்செய்து அருமையாகப் பெற்ற செல்வம் நிலைபெறவும், அபரிமிதமாகிய சுற்றத்தார் சுகப் படவும், நீயுமந்தக் கோதண்டபாணியின் அம்புக்கு இலக்காகாமல் உயிரோடு வாழ்ந்திருக்கவும் நினைத்தால், அந்த ஜெகந் மாதாவாகிய ஸ்ரீ ராம பத்தினியை விட்டுவிடும்படி எங்கள் சூரிய குமாரனுகிய சுக்ரீவ மகாராஜன் உனக்குச் சொல்லச் சொன்னரென்று ஆஞ்சநேயர் சொன்னர். இப்படி சொன்ன வுடனே ஜெயமென்ப தொன்றையே யல்லாமல் வேரொன்றையும் நினையாத ராவணேஸ்வரனவன் கோபித்து, குன்றுகளில் சஞ்சரிக்கின்ற ஒரு குரங் கல்லவா இந்த நீதிகளை எனக்குச் சொல்லியது. நல்லது இனி குரங்கின் புத் தியைக் கேட்டுத்தான் நான் பிழைக்கவேணுமென்று சொல்லிக் கனக்க நகைத்து, அடா! அந்தச் சுக்ரீவனுகிய குரங்கு சொன்ன மனுநீதிக் கிரம மும், ராம லட்சுமணர்களாகிய சொற்ப மனுஷருடைய வீரப்பிரதாபமும் அப் படியிருக்கட்டும். எப்படிப்பட்டவர்களாலும் கடக்கக்கூடாத காவலையுடைய இந்த லங்காபுரத்தில் தூதாக வந்த நீ ராட்சதர்களைக் கொன்றையே! அதெ ன்ன சொல்லடாவென்று அதிக கோபத்துடனே கேட்டான். அதற்கு அநு மானனவர் இவன் மரியாதை தவறிப் பேசுகின்றதினுல் நாம் மாத்திரம் மரி யாதையுடனே பேசவேண்டுவ தென்னவென்று, தசக்ரீவனைப் பார்த்துச் சொல்லுகின்றர்: அடா கேளடா! உன்னை எனக்கு நேரே காட்டுகின்றவர் ஒருவரு மில்லாமையால் பூங்காவை அழித்தேன். அப்படி அழிக்கின்ற என் கருத்தை அறியாதவர்களாய் மூர்க்கர்களாகிய ராட்சதர்கள் என்னைக் கொல்ல வந்தார்கள். அதுகண்டு என்னைக் கொல்ல வந்தவர்களை நான் கொன்றேன். பின்பு வேணுமென்றே இந்திரஜித்தனுடைய பிர்மபாசத்திற் கட்டுண்டவனுய் அடங்கி, உன்னைக் கண்டு பேச வந்தேனடாவென்று சொன்னவுடனே, இரு பது கண்களிலுமிருந்து அனற்பொறி பறக்கப் பத்துவாய்களிலுமுள்ள பற்க ளைக் கடித்து, அகோரமாகிய கோபத்தையுடையவனுய்க் கொலை செய்வோரைப் பார்த்து, இந்த துஷ்டக் குரங்கைச் சின்னபின்ன மாகும்படிக் கொல்லுங்க ளென்று சொன்னன். தட்சணமே அவர்கள் கூட்டமாகத் திரண்டு வந்தார் கள். அப்போது நீதிபரராகிய விபீஷணழ்வானவர் அக்கொலையாளரைப் பார்த்து, நில்லுங்கள்; நில்லுங்களென்று மறுத்தவராய்ச் சீக்கிரத்தில் எழுந்து நின்று, இரண்டு கைகளையும் குவித்து, தனக்குத் தமையனுகிய இராவணேஸ்

வரனுக்குத் தெண்டனிட்டு அவனைப் பிரார்த்தித்து, நீர் கோபிப்பது முறைமை யல்லவென்று அநேகமாகிய சத்திய வசனங்களைச் சொல்லத் தொடங்கினர். ஓ திரிலோகங்களையும் சிருஷ்டித்த பிரமதேவனிடத்திலும் சிவனிடத்திலும் மிகுந்த பக்திசெய்கின்ற தபோமார்க்கத்தை யறிந்து தேவேந்திரனே ஏவல் செய்யும்படி இராஜரீகஞ் செய்கின்ற பிரதாப லங்கேஸ்வரனே! ஒருவன் தூதாக வந்தேனென்று சொல்லக்கேட்டும், அவனைக் கொல்லுகிறதா? ஓ வேதங்களில் பூரண பாண்டித்திய முடையவனே! பூலோகத்திலும் தேவலோகத்திலும் சத்திய லோகத்திலும் பாதாள லோகத்திலும் இருக்கின்ற அரசர்களுக்கும், ஸ்திரீகளைக் கொலைசெய்தவர்க ளிருந்தாலு மிருக்கலாம். தூதர்களைக் கொன்றவர்கள் ஆராகிலும் உண்டா? உண்மையாக உலகங்களைச் சம்ரக்ஷணை செய்கின்ற அரசனுகிய நீ, நம்முடைய சத்துருக்களால் அனுப்பப்பட்ட தூதனைக் கொல்லுதல் மகத்தாகிய குற்றமாகும். மேலும் பிர்மா - விஷ்ணு - ருத்திரன் முதலாக நம்மூடனே எதிர்த்துச் சண்டை செய்யச் சக்தியில்லாமல் பயந்து இருக்கின்ற தேவர்களுக்கெல்லாம் சிரிப்புக்கு இடமாகும். நம்முடைய தங்கையாகிய சூர்ப்பனகி மூக்கையும் காதையும் அறுத்துக் கொல்லாமல், இவ்விடத்தில் நடந்த சங்கதிகளையெல்லாம் போய்ச் சொல்லென்று உண்மையை அறியத்தக்க வீரர்களாகிய ராமலட்சுமணர்கள் அனுப்பினர்களே அது ஏதுக்கு? தங்கள் புஜபல பராக்ரமத்தை நமக்கு அறிவிக்கும் பொருட்டல்லவோ? இவனை உயிருடனே விடாமல் கொல்லுவையேயானால், இவன் வந்து நம்மிடத்திற்கண்ட நமது பிரதாபத்தை நீ அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறதற்குப் பயந்தவனாய் விடுகின்றாய். இதற்குச் சந்தேகமில்லை. இப்படி இணக்கமாகவும் நயமாகவுஞ் சொல்லக்கேட்டு, இராவணேஸ்வரன் இது மெய்தான். தம்பி! நீ நல்ல சொல் சொன்னாய். நமக்குத் துஷ்கிர்த்தியத்தைச் செய்தாலும் அவனைக் கொல்லுகிறது குற்றந்தான். இருக்கட்டும் சீக்கிரமாகப்போய் இந்தச் செய்தியைச்சொல்லி அந்த மனிதர்களை அழைத்துக்கொண்டுவா வென்று இந்தக் குரங்கினுடைய வாலானது முதலற்றுப் போகும்படி முழுதும் சீலைகளைச் சுற்றி, நெய்யிலே தோய்த்து நெருப்பிலே கொளுத்திப் பட்டணத்தைச்சுற்றி இழுத்துக்கொண்டுபோய் இந்த எல்லையிலிருக்க வொட்டாமல் அப்பாலே தூரத்திலே துரத்தி விடுங்களென்று சொன்னன். அந்த வார்த்தையை சொல்லக் கேட்ட மாத்திரத்திலே, ராக்ஷதர்கள் அநேகர் அப்படியே செய்கிறேமென் றிரைந்துகொண்டு புறப்பட்டார்கள். அத்தருணத்தில், இந்திரஜித்தானவன் நாம் கட்டிய பிரமபாசத்துடனே இந்தக் குரங்கைக் கொளுத்துகிறது தோஷம். யுக்தமல்ல; இனிக் கயிறுகளைக் கொண்டு வந்து கட்டுங்களென்று ராக்ஷதர்களுக்குச் சொல்லி அநுமானுடைய தோள்களைச் சுற்றி இறுக்கிக் கொண்டிருந்த பிர்மாவின் வரப்பிரசாதத்தால் பெற்ற பாசத்தின் கட்டவிழ்த்து விட்டான். உடனே இராக்ஷதவீரர்கள் நாலுதிக்கிலும் ஓடி நாட்டிலுள்ள கயிறுகள், தேர்வடக் கயிறுகள், வீட்டிலுள்ள ஊஞ்சற் கயிறுகள், குதிரைகட்டுங் கயிறுகள், யானைக் கழுத்திலிறுக்கிய கயிறுகள், கப்பற் கயிறுகள், மேகநாதன் முதலானவர்கள் எமன் முதலாகிய பல தேவர்களையும் ஜெயித்து அவர்களிடத்திலிருந்து பறித்துவந்த யமபாச முதலாகிய கயிறுகள், அசுரர்களுடனே யுத்தஞ்செய்து அவர்களிடத்திற் பறித்த கயிறு

கண், தங்கள் தங்கள் பெண்ஜாதிமார்களுடைய கழுத்திற் கட்டிய தாலிக்கயிறு கள் மாத்திரந்தவிர மற்றக் கயிறுகள் ஏதேதுண்டோ அதுகளையெல்லாம் தேடிக்கொண்டு வந்து மலைபோலக் குவித்து, ஆஞ்சநேயரை இறுக்கிக் கட்டி னர்கள். அதுகண்டு நாம் தெய்வீகமாகிய பாசத்தை அலக்ஷியம்பண்ணி அதை அறுத்துச் சிதைத்துத் தர்மம் தப்பலாகாதென்னும் ஆக்கினைக்கல்லவோ அஞ்சியிருந்தோம். அவ்வண்ணமே நெறி தவறுதிருக்கவும் சத்துருக்களே அதை விடுவித்து நம்முடைய பக்ஷத்தில் மிகவும் உதவி செய்தார்கள். இனி நாம் ஜெயித்தோம். இவர்கள் நம்முடைய வாலைச் சுடும்படி நினைத்த நினைவு ஏதாயிற்றென்றால், நம்மை நோக்கி இந்த லங்கையை நீ சுட்டெரித்துவிடென்று துணிவுகொண்டு ஏவினதே யாகுமென்று பொதுவாக நிச்சயம் பண்ணிக் கொண்டு பல திசையையும் பார்த்து, தோஷரகிதராகிய ஆஞ்சநேயர் வெகு வாய்ச் சந்தோஷித்து, சொற்பமாகிய கயிறுகளைக்கொண்டு கட்டி இழுப்பதைச் சிக்கத்தக்க சக்தியில்லாதவரைப் போலச் சரீரம் நடுங்கியும், கொடியவர்க ளாகிய ராக்ஷதர்கள் பக்கத்திலிருந்து உபத்திரவஞ்செய்ய அதை நீக்கிக்கொள் ளத்தக்க உபாய தந்திரத்தை யறிந்திருந்தும் அப்படிச் செய்யவேண்டுமென் னும் நினைவில்லாமலு மிருந்தார். இப்படி என்னையனுகிய ஆஞ்சநேயர், மெய்ஞ் ஞானத்தை யறிந்தும் அறியாதவன்போ லிருந்து பிரபஞ்ச மாயையாகிய பொய்யை மெய்போலக்கொண்டு நடிக்கின்ற யோகிபோல அவர்கள் செய்யும் மாயைகளை யெல்லாம் வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டு அவர்களுடனே கூடப் போகின்றார். இராஜாவின் அரண்மனை ஆசாரவாசலைக் கடந்து சிக் கிரத்தில் வெளியே கொண்டுவந்து ஒருபுறத்தில் நிறுத்திச் சாந்தமில்லாத மூர்க்கர்களாகிய அந்த ராக்ஷத வீரர்கள் நாற்புறமும் நெருங்கி நின்று நீண்டு உயர்ந்த அவருடைய வாசலில் ராஜராஜாக்களுடைய கிரீடத்தின்மேல் கட்டு கின்ற பரிவட்டச் சீலைகளையும், அவர்கள் ஏறுகின்ற இரதங்களின்மேலும் மாடமாளிகை கூடகோபுரங்களின் மேலும் பறக்கின்ற கொடிச்சீலைகளையும், சபாமண்டபம் முதலானதுகளின் முகப்புகளில் தொங்கவிட்டிருக்கின்ற திரைச் சீலைகளையும், தேர்ச் சீலைகளையும், மற்றும் பலவகைப்பட்ட பட்டுச்சீலைகளையும் நெருங்கச் சுற்றி, நெய்யும் எண்ணெயும் ஜாடி ஜாடியாகக் கொண்டுவந்து கொப்பறைகளில் நிறைய வார்த்து, முழுதுந் தோய்த்து, நுனியில் நெருப்பிட்டுக் கொளுத்தி, அண்டகடாகமும் கலங்கும்படிக்குக் கைகொட்டி நகைத்தார்கள். பின்பு தோள்களிலும் தொடைகளிலும் கால்களிலும் கைகளிலும் கழுத்து களிலும் இடுப்பிலுங் கட்டிய மிதமில்லாத உரம்பெற்ற கயிறுகளை பக்கந் தோறும் பக்கந்தோறும் இறுகூறாய் நூறாயிரம் பேர்கள் இறுக்கிப் பிடித்துக் கொண்டு போகத் தொடங்கினார்கள். ஆயுதபாணிகளாய் இரண்டு பக்கத்தி லும் காவல் வீரர்கள் கணக்கற்ற பேர்கள் சமுத்திரம் புரண்டு வருவதுபோலத் திரண்டுவரத் தலைப்பட்டார்கள், மேலும் அநுமானைச் சூழ்ந்து போகின்றவர் கள் நான்கு திக்கிலும் இடமில்லாதபடிக்கு நெருங்கி நிறைந்திருப்பதினால், புறத் திலிருந்து பார்க்கின்றவர்களுக்கு என்ன தெரியவரும்? மகா சிங்காரமாகிய நகரத்தையும் பரிமளிக்கின்ற சோலையையும் அழித்து எதிர்த்த அக்ஷயகுமாரன் முதலாகிய இராக்ஷத வீரர்களையும் கின்னபின்னப்பட்டக் கொன்று சீதையுட னும் கண்டு பேசி ஸ்ரீ ராமலட்சுமணர்களாகிய அந்த மனிதர்களுடைய வில்

லாண்மையை நம்முடைய இராஜாவாகிய இராவணனிடத்தில் சொல்லும்படி வந்த குரங்குக்குச் சம்பவித்ததைப் பார்க்க வாருங்கள் வாருங்களென்று, தெருக்கள்தோறும் வாசல்கள்தோறும் சகலமானவர்களும் அறியக் கூவி யழைத்தார்கள்.

பின்னும் இந்தச் செய்தியை அண்டத்திற்கு அப்புறத்திலுள்ளவர்களுக் கும் அறிவிக்கின்றவர்களைப் போலக் கோவென்று இரைந்து, அநுமானை முன் னும் பின்னுமாக இழுத்து, வீதிகளிலே பேரிகைகளை வரிசையாக வைத்து அடித்து, இடி இடித்தாற்போலப் பெருங்கூச்சலிட்டு எத்தப் பக்கத்திலும் ஓடி யோடி ஜானகியாரிடத்திலும் போய்ச் சமாசாரஞ் சொன்னார்கள். அதுகேட்ட பிராட்டியாரும் உயிர் பதைத்து, உடல் வெயர்த்து, வா உலர்ந்து, விம்மி விம்மி, மண்மேல் விழுந்து அழுது பெருமூச்செறிந்து சொல்லுகின்றாள்: ஐயா அக் கினிதேவனே! தாய்க்குச் சமானமாகிய காருணியத்தையுடைய ஆஞ்சநேயன் உனக்குச் சிநேகனுகவேணுமே. அப்படிப்பட்டவனை பெருமையில்லாத நாய்க் குச் சமானமாகிய இராட்சதர்கள் இம்சிக்கும்படி கண்டால் உதவி செய்யாமல் இருக்கலாமோ? நான் கற்பிலே பரிசுத்தையானுல், நீ உலகத்திற்கெல்லாம் உண்மையாகிய சாக்ஷியாய் இருக்கின்றவனுகையால் உனக்கே தெரியவரும். உன்னைக் குறித்து மிக வந்தனம் செய்கின்றேன். அவனைச் சுடவேண்டாம் சுடவேண்டாமென்று இவ்விதமாக அருளிச்செய்த மாத்திரத்திலே, அக்கினி தேவன் திடுக்கிட்டு மனங்கூசி பிராட்டியார் திருவுள்ளக் கருத்தின்படி அநுமா னுக்குக் கொஞ்சமாகிலும் சுடுகையென்ப தில்லாமல் குளிர்ச்சியா யிருக்கும் படிக்குத் தன் கடுரத்தை அடக்கிக்கொண்டான். அப்பொழுது புறத்திலுள்ள மயிர்கள் சிலிர்க்கும்படிக்கு வாயு குமாரனுடைய வால் அஸ்தி வரையிலும் குளிர்ந்தது. ஜானகியாருடைய நேமனத்தால் அக்கினி உஷ்ணிக்காமல் குளிர்ந்த அதிசயத்தைக் குறித்து மற்று நாம் விஸ்தரித்துச் சொல்வதென்ன? சமுத்திரத்திலுள்ள வடவா முகாக்கினியும் குளிர்ந்தது. பூமியில் கல் மர முத லானதுகளிலுள்ள நெருப்பும் குளிர்ந்தது. ரிஷிகளால் பாதுகாக்கப்பட்ட காருக பத்தியம் - ஆகவனீயம் - தக்ஷிணுக்கினி என்கிற மூன்று வகையாகிய வேதாக்கினியும் குளிர்ந்தது. முப்புரத்தை யெரித்த பார்வதி பாகனுடைய நெற்றிக்கண்ணின் அக்கினியும் குளிர்ந்தது. உலகத்தை யளந்த வாமனுடைய வலது கையிலுள்ள அக்கினியும் குளிர்ந்தது. எக்கிய குண்டலங்களெல்லாம் குளிர்ந்ததுகள். மேகத்திலுண்டாகின்ற இடிகளும் குளிர்ந்ததுகள். இருளை யோட்டுகின்ற பிரகாசத்தையுடைய சூரியமண்டலமும் குளிர்ந்தது. பாதாளத்தி னுள் அக்கினிப் பிரபையாகிய நரகவட்டமும் குளிர்ந்தது. அத்தருணத்தில் அன்பு நீங்காத சிந்தையையுடைய ஆஞ்சநேயர் பவளமலைபோலப் பிரகாசிக் கின்ற அதி உன்னதமாகிய தமது திருமேனியின் நாற்புறத்திலும் இடைவிடா மல் சூழ்ந்து அக்கினியானது சுவாலாமாலையாய் கொழுந்துவிட் டெறிந்தாலும், தம்மைச் சுடாமலும் தமக்கொன்றும் உபத்திரவம் செய்யாமலு மிருந்த ஆச்சரி யத்தை நினைத்து பார்த்து, இது கிருபா நிதியாகிய பிராட்டியாருடைய கற்பின் மகிமையாலும், அவர் திருவருளாலும், அவர் செய்த மங்களாசாசனத்தினுலுமே நம்மை வருத்தாம லிருக்கிறதென்று தமது புத்திகோசரத்தால் தெளிந்து பர

மானந்த சாகரத்தில் மூழ்கினர். அன்றைய ராத்திரி மைதிலியாகிய சீதை யைத் தேடித் திரிந்தபொழுது அந்தப் பட்டண முழுதையும் தமது அறிவினல் குறித்தறியா விட்டாலும் ஐம்பொறிகளும் முன்பு செல்ல அதுகளைத் தொடர்ந்து மறைந்து சென்று விஷயத்தை அறிகின்ற அறிவைப்போல அநுமானுனவர் கல்விப்பயிற்சி யில்லாத இராக்ஷதர்கள் தமக்கு முன்னே நடந்து காட்டும்படி, இந்தக் குரங்கு நாற்புறத்திலும் ஜூட்டாகப் பார்த்துக்கொண்டு போகின்ற தென்று தம்முடைய அபிப்பிராயம் அவர்களுக்குத் தோன்ருமலிருக்க உபாய மாக ஒன்ருவது தவருமல் அவ்விடத்திலுள்ள சகல விசித்திரமும் தெரியும்படிப் பார்த்துக்கொண்டு போனர். இவ்வண்ணமாக இலங்கையின் ஆபால கோபால மும் கண்டு கொண்டே போய் முடிவிலே இவர்களை விட்டு நழுவுதற்குச் சமயம் இதுவேயென்று நிச்சயித்து, தம்மை யிரண்டு பக்கத்திலும் இரண்டு லட்சங் கைகளால் உறுதியாகப் பிடித்துக்கொண்டிருந்த நூருயிரம் பேர்களும் கயிறுக ளோடுங்கூட எழும்ப மாருதியானவர் ஆகாயமார்க்கத்தில் எழும்பினர். அந்தக் கயிறுகளும் அதுகளைப் பிடித்துக்கொண்டு இருந்தவர்களுடைய கைகளும் எழுத் தடிகளைப்போலத் தொங்கும்படி அவரெழும்பியபோது, இராக்ஷதர்கள் தோள்கள் பிளந்து கீழேவிழுந்து உயிர் மாய்ந்தார்கள். தமது திருமேனியில் சுற்றிய கயிறுகளுடனே பூமியிலிருந்து மேலே கிளம்பிய வாயுகுமாரரானவர், சர்ப்பக் கூட்டங்களை வாரிக்கொண்டு வானத்தில் எழும்பிய கருடனைப்போல அந்தரத்தில் பிரகாசித்தார். கமலன் முதலாகிய சத்துருக்கள் மூவரும் அர சாண்டுக்கொண்டிருந்த மூன்று புரங்களையும் தகித்த காரணத்தால் திரிபுராந் தகனென்று பெயர் பெற்ற சங்கரனே பிரமிக்கும்படிக்கும், இராவணனுக்கு உபபலமாயிருந்த பல பொருள்களும் நாணிப்போக பாதகர்களாகிய இராவ ணுதி இராக்ஷதர்களுக்கு வாசஸ்தானமாய் இருக்கின்ற அந்த இலங்கையானது பற்றி யெரியும்படியாக ஸ்ரீராமபிரானை தௌத்தியஞ்செய்து இதைக் கொளுத்தி விடுவோமென்று நினைத்து அந்தச் சொர்ணமயமான நகரத்தின்மேல் தமது வாலை வீட்டினர். அப்போதந்த வாலானது எப்படி விளங்கியதென்றல், சுற்றி லும் சமுத்திர பரியந்தம் இலங்காபுரியை எந்தப் புறங்களிலும் ஒரு க்ஷணப் பொழுதில் பற்றி எரிக்கத்தலைப்பட்டதனல், பவளமாலையைப் போலச் சிவந்த மேனியையுடைய கைலாசபதியானவர் மகமேருவை வில்லாக வளைத்துத் திரிபுர தகனம் செய்யும்படிப் பிரயோகித்த பாணத்தைப்போல விளங்கியது. தாவள்ய மாகிய வெள்ளியைக் கொண்டும், பசுமையாகிய பொன்னைக்கொண்டும், பிரகாச மாகிய பலவித இரத்தினங்களைக் கொண்டும், தெய்வத் தச்சனுகிய விசுவகர்மா அநேக நாள் கைபழகி அருமையாகச் செய்த உன்னதமாகிய வீடுகள் தோறும், மலைகளின்மேல் ஊழிக்காலத்து இடியானது அக்கினிமயமா யிடித்து விழுவதைப் போலக் கிரமங் கிரமமாகத் திடீர் திடீரென்று தாவித் தாவிக் குதித்துத் தகித் தார். நீல நிறத்தையுடைய ராக்ஷதர்கள் உலகத்தில் பிராமணர் - க்ஷத்திரியர் - வைசியர் முதலிய சகலமானவர்களும், அக்கினிஷ்டோமம் - உக்தியம் - சோட சீயம் - வாசபேயம் - அதிராத்திரம் - அப்தோர்யாமம் - அக்கினியாதேயம் - அக் கினி கோத்திரம் - தரிசபூரணமாசம் - சாதுர்மாசியம் - நிரூடபசுபந்தம் - ஆக் கிரயணம் - சௌத்திராமணி - அஷ்டகை - பார்வணம் - சிரார்த்தம் - சிராவணி - ஆக்கிரசாயணி - சைத்திரீ - ஆசுவயுசு - என்கிற யாகங்கள் எக்கியங்கள் கிரு

துக்கள். ஓமங்கள் முதலியவைகளைச் செய்ய வொட்டாமல் தடுத்தபடியினாலே, எங்கும் ஆகுதி கிடையாமல் நெடுங்காலமாய்ப் பசியுடனேயிருந்த அக்கினி தேவனானவன் அநுமானுடைய வாலை ஆதரவாகப் பற்றிக்கொண்டு, விஷத்தையுண்ட பிரளயகாலருத்திரன் தாம் உகாந்தகாலத்திலே ஊட்டத் தான் சகல புவனங்களையும் அழியும்படி உண்டதுபோல இலங்கையைச் சீக்கிரத்தில் தகித்து உண்டது.

பிணிவீட்டுப் படலம் முற்றிற்று.

ஊர்சூடு படலம்

இப்படி இலங்கையை எரித்துண்ணத் தலைப்பட்ட கடுமையாகிய அக்கினியானது, காவலையுடைய மாளிகைகள் தோறும் கட்டிய கொடிகளைப் பற்றிப்போய் மேற் கட்டிகளைக் கொளுத்தி, நீண்ட தூண்களைத் தாவி யெரித்து, உயர்ந்த சுவர்களைச் சுற்று முற்றுஞ் சுட்டு நீரூராக்கியது. அநுமான் அந்தக் கோட்டை வாசலிலிட்ட தீயானது அதற்குள்ளிருந்த வீடுகளெல்லாம் நாசமாகும்படி பற்றியெரிக்க எங்கே பார்த்தாலும் எரிகிறபடியினாலே, அப் பட்டணத்திலுள்ளவர்கள் சகலரும் பயப்பிராந்தி கொண்டு ஊசலாடுகிறவர்கள்போல அங்கு மிங்கும் ஓடியோடி அலைந்து, அழுகுரலுடனே ஒருவரையொருவர் கூப்பிடத் தலைப்பட்டார்கள். ரத்தினத்தாற் கட்டிய கிருகங்களெல்லாம் நெருப்பைப்போல ஜோதிமயமாகிய கிரணங்களை வீசுதலால், அதுகள் தீப்பட்டு எரிகிறதுகளென்றும் இல்லை என்றும் அறியாமல் வளைபலைக் கையிலணிந்த ஸ்திரீகள் அறிவு தடுமாறித் திரிந்தார்கள். ஆகாயவெளி முழுதும் மறையும்படிப் புகை யெழும்பி எங்கும் பரவிச் சூழ்ந்துகொண்டதனால், காட்டில் சஞ்சரிக்கின்ற மயில்போலும் சாயலையுடைய ஸ்திரீகள் தாங்கள் போன திசை தெரியாமலும், தங்கள் நாயகன்மார்களைக் காணுமலும், திகைத்துப் புலம்பினார்கள். இராட்சத வீரருடைய சிகையின்மேலும், அவர்கள் ஸ்திரீகளுடைய கூந்தலின்மேலும், கொழுமையாகிய நெருப்பு விழுந்து பற்றி எரிகின்றதை ஒருவர்க்கொருவர் காட்டக் கண்ணினாற் கண்டும், செம்பட்டை மயிராகையால் தீப்பட்டதும் படாததும் தெரியாமல் மயங்கினார்கள். வாமனரூபமாய்ப் போய்ப் பலிச்சக்ரவர்த்தியானவர் உலகங்களைத் தானமாகக் கொடுக்க ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் தமது திருவடியினால் அளந்து கொள்ளும்படி அண்ட முகடுவரைக்கும் வளர்ந்தெழுந்து உயர்ந்த திரிவிக்கிரம சொரூபம்போல, புகையானது எழுந்து மேலே போய் எங்குங் கவிந்து நெருப்பானது மேல் விழுந்து சரீர முழுமையும் தகித்தலினால் வெந்து கறுத்த தோலுரிந்த யானைகளெல்லாம், கீழ்த்திசையில் இருக்கின்ற இந்திரனுடைய ஐராவதமென்னும் வெள்ளை யானைக்கு ஒப்பாயிருந்ததுகள். பனி சூழ்ந்ததுபோலப் புகையும் தீயும் வீடுகள் எங்கும் சுற்றிக்கொண்டதினால் எருமைகள் மேகங்களைப்போலப் போய்த் தடாகங்களில் விழ, அதுகளில் இருக்கின்ற அன்னங்கள் விலகிப்போவதுபோல ஸ்திரீகள் ஒதுங்கிச் சென்றார்கள். பெரிய பெரிய அக்கினிப்பொறிகள் எழும்பிப் போய் இடிக் கூட்டங்களைப்போல விழு

கிறதினுல் சமுத்திரம் வெதும்பி, அதிலுள்ள திமிங்கல முதலாகிய மீன் கூட்டங்கள் வெந்து புலர்ந்து துடித்து உயிர் சோர்ந்ததுகள். தணலானது உள்ளே புகுந்து பற்றி எரிப்பதினுல் சொர்ன மதில்கள் உருகியோடி கடலுக்குள்ளே பாய்ந்து இறுகித் தண்டு தண்டாய்த் திரண்டதுகள். பர்வதங்களைப்போல வரிசையாய் உயர்ந்திருக்கின்ற உப்பரிகைகளும், பூஞ்சோலைகளும் எவ்விதத்தில் வேகாமல் இருக்கும்? அந்த லங்கை ஆதியந்தமும் பொன்னுய் இருப்பதனுல் தரையும் வெந்து உருகியது. கல்லைப்பார்க்கிலும் மிகவும் கடினமாய்த் தடித்த புகையானது போய்த் தேவலோகத்தைச் சுற்றிக்கொள்ளுதலால், அந்தலோகமும் இருள் சூழப்பட்டது. இரதங்களெல்லாம் சக்கர முதலாகிய பலபல உறுப்புகளுடனே உருகிக் குழைந்து ஏகவுருவாகியதுகள். நல்லவர்களாய் இருக்கின்றவர்கள் பொல்லாதவர்கள் இருக்குமிடத்திற்குப் போனுல் அந்தப் பொல்லாதவர்கள் சுபாவமாய்ச் செய்யும் பொல்லாங்கையும் சகவாச தோஷத்தினுல் இந்த நல்லவர்களும் செய்வார்களல்லவா? அதுபோலப் புனிதமாகிய அக்கினியையும் மாயையையுடைய இராட்சதர்கள் உண்ணும்படி ஜாடிகள் நிறைந்திருக்கின்ற கள்ளை யுண்ணத் தலைப்பட்டது. இலங்கையில் பற்றி யெரிகின்ற நெருப்பானது தாவிப்பாயச் சமுத்திரமும் வெந்து கொல்லன் உலைக்களத்திலிருந்து புகை எழும்புவதுபோல அதிலிருந்து அனற்கொழுந்து குபீர் குபீரென்று எழும்புதலால், கடல் நீரை உண்கின்ற மேகங்களும் கொதித்ததுகள். சில இராக்ஷதர்களுடைய சரீரத்தை நெருப்புச் சுடுதலினுல் வருத்தமுற்று அந்த உஷ்ணம் சகிக்கமாட்டாமல் தண்ணீரைத் தேடிக்கொண்டு ஓடியோடி, காட்டிலே யோடுகின்ற ஆற்றுநீரென்று நினைத்துக் கானல் ஜலத்திலே போய் விழுந்தார்கள். தேனைச் சொரிகின்ற சோலைகளெல்லாம் தீப்பட்டெரிய அங்குள்ள புஷ்பங்களில் மொய்த்துக்கொண்டிருந்த வண்டுகள் எழும்பிப் பறந்து, நாலுபக்கங்களிலும் தாவிப் படர்கின்ற அந்த அக்கினி ஜ்வாலையைக் கண்டு சிவந்த தாமரைப் புஷ்பக்காடென் றெண்ணி, அதிலே போய் விழுந்து கரிந்து மடிந்ததுகள். வில்லைவென்ற புருவத்தையுடைய கற்புள்ள சில ஸ்திரீகள் குரங்கு கொல்லும்படி நம்முடைய நாயகன்மார்கள் இறந்து போனுர்கள். நாம் வாசஞ் செய்கின்ற வீட்டுக்குள்ளும் அக்கினி பிரவேசித்தது ஆதலால் நமக்கு என்ன வாழ்விருக்கின்றது? இனி வீட்டு வாசற்படி கடந்து அப்புறம் போவதும் தர்மமல்லவென்று தாம் தாமிருந்த விடங்களிலே தானேயிருந்து வெந்து தீய்ந்து மாய்ந்து போனுர்கள். புஷ்பங்கள் பொரிந்து இலைகள் தீய்ந்து, கிளைகள் சுருண்டு, வேர்கள் கரிந்து, மரங்கள் செடிகள் கொடிகளெல்லாம் சாம்பலாகச் சோலைக ளெரிந்ததுகள். மேகங்கள் முழுகும்படி ஓங்கியெழுந்த அக்கினிக் கொழுந்து போய்ப் பொன்னுலக முழுவதும் சுட்டெரிக்க, அது வெந்துருகி அங்கிருந்து ஆகாயமெல்லாம் பொன்வேர் வீழ்ந்ததுபோலச் சொர்ன தாரைகள் மாருமல் ஒழுகத் தலைப்பட்டதுகள். இலங்கையிலிருந்து நெருப்புப் பொங்கி மேலே எழுந்துபோய் அதின் ஜ்வாலையானது சந்திரனுடைய சரீரத்தில் தாக்க, அது உருகிச் சிதறிய அமிர்த பிந்துக்கள் மேலே துளித்ததால் மாண்டுகிடந்த இராக்ஷதர்களிலும் சிலர் உயிர்பெற்றெழுந்தார்கள். சூரியனுக்கு நேரா யெழுந்து பாய்ந்த அக்கினிச் சுவாலையினுலே அதன் பக்கத்தில் சுற்றி யிருந்த மேகங்கள் முழுமையும் எரிந்து கரிந்துபோக, நடுவி-

லிருந்த அந்தச் சூரியன் அந்நெருப்பில் உருகித் திரண்ட பொன்னுருண்டை போல் இருந்தது. கால்களிற் பூட்டிய தளைக் கயிறுகளைக் கொளுத்தி முகத்தினிடத்தில் மொய்த்துக்கொண் டிருக்கின்ற பிடரிமயிர்களையும் கொளுத்துதலால், வளைந்த குளம்பினையுடைய குதிரைகள் பதைத்து விழுந்ததுகள். எமனையும் யெடுத்து விழுங்குகின்ற கொடிய ராக்ஷதர்களில் அநேகர் அக்கினி முழுதும் பற்றிக்கொண்டு வருவது கண்டு அதற்குத் தப்பிப் போகும்படி ஆகாயமார்க்கத்தில் எழும்ப, அவ்விடத்திலும் புகை வந்து சுற்றிக்கொள்ளுதலால் ஆழமாகிய தடாக ஜலத்தில் விழுந்து அமிழ்ந்தவர்களைப்போலக் கண்களை மூடிக்கொண்டு சுவாசம் விடக்கூடாமல் மறுபடியும் அந்த நெருப்பிலே தானே விழுந்து முடிந்துபோனர்கள். அநேக ஸ்திரீகள் அரையிலுடுத்திய பட்டாடையிலே பற்றிய நெருப்பு மார்பிலே தரித்த உத்தரீயத்தில் பற்றித் தலை மயிரிலும் பற்றிக்கொள்ள மயங்கித் தியங்கி மடிந்து போனர்கள். இலவ மலருக்குள்ளும் சில முத்துக ளுண்டென்று சொல்லும்படி பிரகாசிக்கின்ற சிவந்த வாயினையும் அதற்குள்ளிருக்கின்ற வெண்மையாகிய பற்களையுமுடைய ராக்ஷத ஸ்திரீகள், தங்கள் நாயகன்மார்களிடத்தில் பிணங்கிய பிணக்குத் தீர்ந்து கூடுகிறதற்கு முன்னே வஸ்திரம் வெந்து கடலிலே போய் விழும்படி ஓடினர்கள். அநேகம் பெண்கள் கூடுகளுடனே பசுங்கிளிகள் வெந்து துடிக்க, அதைக் கண்டு கண்களிலிருந்து அருவிபோல ஜலம் பெருகி ஸ்தனத்தினிடத்தில் வழிய, மதயானைக் கிணையாகிய புருஷர்களைப் போய்க் கட்டிக்கொள்ள வேணுமென்று வருகின்ற அவசரத்தால், மேகத்தில் மறைகின்ற மின்னலைப்போலப் புகையிலே மறைந்துபோனர்கள். பர்வதங்களைப்போல உன்னதமாகிய உப்பரிகைகள் அக்கினியில் வெந்துபோக, அதுகளிலிருந்த ஸ்திரீகள் தாங்க ளணிந்த சொர்ணபரணங்களும் ரத்னபரணங்களும் பிரகாசிக்கும்படி ஆகாயத்தில் எழும்பிப் போம்பொழுது புகைகள் வந்து சூழ்ந்துகொள்ள, மேனி கறுத்துக் கலங்கித் திரைக்குள்ளே காண்கின்ற சித்திரப் பிரதிமைகளைப்போலத் தோன்றத் தலைப்பட்டார்கள். யுக முடிவிலே கடூரமாகிய காலாக்கினியினுல் சமுத்திரம் வேகிறதுபோல நந்தவனங்கள் தீப்பட்டு, அதுகளிலுள்ள அகில் - விருக்ஷங்கள் - சந்தன - விருக்ஷங்கள் - முதலாகிய அநேக வாசனை மரங்கள் உலகமெல்லாம் பரிமளிக்கும்படி வெந்ததுகள். அக்கினியானது உலகமுழுதும் விளங்கும்படி எட்டுத் திக்குகளிலும் தாவிப் படர்கின்றதனுல், அந்த சுவாலையில் கற்பகக் காட்டில் வெந்ததுகளும் வேகாததுமாகிய தளிர்கள் - இலைகள் - மலர்கள் - முதலானதுகளும் வேற்றுமை தெரியாம லிருந்ததுகள். எங்கும் புகை மூடிக்கொள்ளுதலால் மேகங்கள் சமுத்திர ஜலத்தைப் பானம் பண்ணப் போகிறதற்கும், பானம் பண்ணி வருகிறதற்கும், வழி கிடையாமல் தடுமாறியதுகள். அஷ்டதிசைகளிலும் வெண்மையாகிய புகை மூடிக் கவிகின்றதனுல் சிவனுடைய வாசஸ்தலமாகிய வெள்ளிமலையும் மற்றமலைகளும், பிரம்மாவினுடைய வாகனமாகிய அன்னப் பறவையும் மற்றப் பறவைகளும், நாராயணனுடைய சயனஸ்தானமாகிய திருப்பாற்கடலும் மற்ற கடல்களும், திக்கஜங்களாகிய யானைகளும் மற்ற யானைகளும், ஒத்து வேறுபாடு தெரியவில்லை. சரீரங்கள் வெந்து கரிந்து சிந்தும்படி அக்கினி சுவாலையானது மேலேதாவத் தோலுரிந்தவர்களாய் ராக்ஷத ஸ்திரீகளும் புருஷர்களும் ஓடிப்போய்க் கடலிலே விழுந்தபோது, அவர்களுடைய

செம்பட்ட மயிராகிய கூந்தலும் சிகையும் அக்கினிக் கொழுந்துபோல எங்கும் நெருங்குதலால் அந்தச் சமுத்திரமும் பற்றி யெறிகிறது போலிருந்தது. ஒரு பிள்ளையை இடுப்பின்மேல் வைத்துக்கொண்டு, ஒரு பிள்ளையைக் கையிலே பிடித்துக்கொண்டு, மற்றொரு பிள்ளை பின்னே அழுதுகொண்டுவர; தலைமயிர் பற்றியெரிய, ராக்ஷத ஸ்திரீகள் கதறிக்கொண்டே யோடி சமுத்திரத்தில் விழுந்தார்கள். ஆயுதசாலைகள் வெந்து, அதுகளிலுள்ள விற்களும் வேல்களும் - குந்தங்களும் - முதலான ஆயுதங்களெல்லாம் உருகிப் பலபல சிற்றுண்டைகளாய் விட்டதுகள், யானைகள் உடல்வேக காலிற் பூட்டிய சங்கிலியையும் கழுத்திலிறுக்கிய கயிற்றையும் அறுத்துச் சிதறிவிட்டு, கட்டுத்தறியைப் பெயர்த்துக்கொண்டு, செவிகளை அசையவொட்டாமல் நிறுத்தி, வாலை முதுகின்மேல் வளைத்து முறுக்கி, தும்பிக்கையைத் தலையின்மேல் உயரவெடுத்து வீறிட்டுக்கொண் டோடியதுகள். ஆகாயத்தில் கொண்டல் கொண்டலா யெழும்பிப் பாய்கின்ற புகைக்கூட்டத்தினுல் பலஜாதி பக்ஷிகளும் மேலே எழுந்து பறக்கப் பயந்து சமுத்திரத்திலே விழுந்து அமிழ்ந்து, மனதில் சிறிதும் தயையில்லாத வஞ்சகரிடத்தில் அடைக்கலம் புகுந்தவர்களைப்போல அந்தக் கடலிலுள்ள மீன் கூட்டங்கள் விழுங்கும்படி இறந்ததுகள். யுகாந்தகாலத்திலே பிரளயாக்கினியானது தோன்றி சப்தசமுத்திரஜலத்தை வற்றும்படி யுண்டு, புவன மாதியந்தமும் சஞ்சரித்துத் தடவிக் கொண்டு விருக்ஷ சாலங்களையெல்லாம் தகிர்த்து, பர்வதங்களையெல்லாம் சுட்டுப், பின்பு மகாமேருவைப்போய்ப் பற்றி எரிக்கிறதுபோல லங்கையாகிய ஊரையெல்லாம் சுட்டு நீறுக்கிய தீயானது, ராவணேஸ்வரனுடைய அரண்மனையிலும் போய்ப்பற்றியது. அதிற் பற்றியது கண்டு அவ்விடத்திலிருந்த தேவஸ்திரீகளும், நாகஸ்திரீகளும், விஞ்சைய ஸ்திரீகளும், மற்றும் பலபல ஸ்திரீகளும், பூர்வத்தில் இந்த இராவணன் போய்த் தேவலோகத்தைக் கொள்ளையடிக்குமளவில், அந்தத் தேவர்கள் எப்படி அலைந்து தடுமாறினார்களோ அப்படியே மனமுருகிக் கதறி எழுந்து ஓடி ஒருவர்போன திசையை ஒருவரறியாமல் அங்கங்கே திகைத்து நின்று தடுமாறினர்கள். கஸ்தூரி - கதம்பம் - சந்தனம் - அகில் முதலான வாசனை திரவியங்களில் கற்பக புஷ்பங்களும் வெந்து புகைந்து அந்தப் புகை திக்குகள்தோறும் பரவ அங்கேயுள்ள ஸ்திரீகளுடைய தலைமயிரெல்லாம் பரிமளம் வீசத் தொடங்கியதுகள். அதியுஷ்ணத்தை யுடைய அக்கினிபோய்ப் பற்றுதலால் யாவரும் நெருக்கப்படாத உக்கிர கோபத்தையும் ஆண்மையையு முடைய ராவணன் வாசஞ் செய்கின்ற ஏழுநிலை உப்பரியும் ஊழித்தீயானது தகிக்கும்படி ஏழு உலகங்களும் வேகிறதுபோல வெந்ததுகள். லங்காபதியினுடைய நெடிய மலைபோல ஓங்கி உயர்ந்த பெரிய நிலைகளையுடைய அரண்மனையானது குற்றமற்ற ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்தால் கட்டப்பட்டதாகையால், அது முழுதும் அக்கினி தத்தமா யுருகிக் குழைந்து ஒரு பிண்டமாய்த் தெற்குத் திசைக்கும் ஒரு மகமேருவுண்டா யிருக்கின்றதென்று சொல்லும்படி நின்றது. அந்தத் தருணத்தில் தசக்கிரீவன் அவனுடைய ஸ்திரீகளும் மக்களும் ஒக்கலும் மற்றுமுள்ள பந்து வர்க்கங்களுமாகிய சகலருடனேயும் நவரத்தினமாய்ப் பிரகாசிக்கின்ற புஷ்பக விமானத்தின் மேலேறி, ஆகாயமார்க்கத்தில் தப்பிப் போகவிட்டான். பின்னும் நினைத்தமாத்திரத்தில் ராட்சதர்களும் அவர்களுடைய பிள்ளைகள் பெண்ஜாதிக ளனைவரும் எதேச்சையாய் ஓடிப்

போனர்கள். ஆகையால் அந்த நெருப்பை அவிக்கத்தக்க பிரயத்தினஞ் செய்பவர் ஒருவரும் இல்லாமல் லங்கா பட்டணமானது சமூலம் வெந்துபோய்விட்டது. அப்பொழுது ராவணனவன் ராக்ஷதர்களைக் கோபாக்கினி ஜ்வாலிக்கப் பார்த்து, அடடா! பதினாறு லோகங்களும் பற்றி யெரியத்தக்க ஊழிக்காலந்தான் வந்ததோ? வேறு காரணம் ஏதாவதுண்டோ? நம்முடைய லங்கையை நெருப்பு தகிக்கவேண்டிய நிமித்தமென்ன? என்று அதட்டிக் கேட்டான். அந்தச் சமயத்தில் தங்கள் புத்ர மித்ர களத்ராதி பந்து ஜனங்களையும், வஸ்த்ர ஆபரணவாகன தனதானியாதி பாக்கியங்களையும், அக்கினிக்கு இரையாகக் கொடுத்துவிட்டு, இனி எப்படி ஜீவிப்போமென்று அழுதுகொண்டு வந்து எதிரே நிற்கின்ற ராக்ஷதர்கள் கைகளைக் கூப்பித் தெண்டனிட்டு, ஐயா! கடலைத் தாண்டி இவ்விடத்திற்கு வந்த குரங்கு சமுத்திரத்தின் நீளத்திலும் அதிக நீளமாகிய அதன் வாலிலே, நாம் கொளுத்திவிட்ட நெருப்பைக்கொண்டு சுட்டது என்று சொன்னர்கள். அதுகேட்டு தசக்ரீவன் மிகுந்த கோபத்துடனே கொதித்துச் சொல்லுகிறான். ஆ! ஆ! ஒரு குரங்கு தன் சாமர்த்தியத்தினால் இந்த நகரத்தைக் கொளுத்துவதும், அதன் வாலிலிருந்து அக்கினியானது கொழுந்துபோல் எரிப்பதும், அதனாலே லங்கா தீபமானது முழுதும் வெந்து பொடியாவதும், இதைக் கண்டு தேவர்கள் கைகொட்டி சிரிப்பதுமாய் முடிந்ததல்லவா? இப்படியாகுமானால் இரணசூரனும் பிரதாப லங்கேஸ்வரனுமாய் இருக்கின்ற என்னுடைய பராக்கிரமம் நன்றாகும்; நன்றாகுமென்று கலகலவென்று நகைத்து, குரங்குதான் தெரியாமற் கொளுத்தினாலும் அக்கினி யெப்படி யெரிக்கலாம்? அவனுக்கென்ன தெரியாதா? இந்த லங்கையைக் கொஞ்சமாவது பயமில்லாமல் எரித்த அந்தத் துஷ்டனாகிய அக்கினியைக் கண்டவர்கள் முன்னே கைப்பிடியாகப் பிடித்து இழுத்துவாருங்கள்; கலகஞ் செய்யக் கற்றுக்கொண்ட குரங்கையும் பிடித்த பிடியோடே கொண்டுவாருங்களென்று தேவரைவென்ற இராவணன் மிதமற்ற கோபத்துடனே பற்களைக் கடித்துச் சொன்னன். இப்படிச் சொன்ன மாத்திரத்தில் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ராக்ஷத வீரர்கள் அவனை வணங்கி, அப்படியே செய்கிறோமென்று ஆஞ்சநேயரைத் தேடிக்கொண்டு அதிவேகமாகப் போனர்கள். அவர்களுக்குப் பின்னே அதிகமாகிய வில்லையும் - வாளையும் - வேலையும் - ஈட்டியையும் முடைய சேனைகள் சூழப் போர்க்கோலங்கொண்டு, தும்பைமாலை சூடிய ஸப்த வீரர்கள் ரதாரூடர்களாய்ப் புறப்பட்டார்கள். அவர்களனைவரும் ஆகாயம் பூமியாதியந்தமும் ஓடி வளைத்து மொய்த்துச் சுற்றி இரைச்ச லிட்டுக்கொண்டு போகிறபொழுது, அநுமான் ஒரு பக்கத்தில் இருக்கிறதைக் கண்ணினாற் கண்டார்கள். கண்டவுடனே, பிடியுங்கள் பிடியுங்கள்; அடியுங்கள் அடியுங்கள்; கட்டுங்கள் கட்டுங்கள்; வெட்டுங்கள் வெட்டுங்கள்; வளையுங்கள் வளையுங்களென்று கோபத்தோடு நானவிதமான ஆயுதவர்க்கங்களைப் பிரயோகஞ் செய்து எதிர்த்தார்கள். அதைச் சகல வேதசாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த பண்டித சிரேஷ்டராகிய மாருதியானவர் கண்டு, ஒருவரும் ஓடிப்போக வொட்டாமல் பல திசையிலும் வாலைநீட்டி ஒருமிக்க வளைத்து இழுத்து, அநேகரை வலதுகாலைக்கொண்டு உதைத்து, இடது காலைக் கொண்டு எற்றி, வலது கையைக் கொண்டு குத்தி, இடது கையைக்கொண்டு மோதி, இரண்டு தோளினாலும் இறுக்கி, இரண்டு

தோடையினலும் நெருக்கி, முழங்காலினல் முட்டி, முழங்கையினல் இடித்து, அக்குளிலிட்டு அரக்கினர். பின்னும், பிர்மாண்ட பரியந்தம் உயர்ந்த ஒரு மராமரத்தை வாலினல் வளைத்துப் பற்றிப் பறித்து எடுத்து மோதியடித்தார். இப்போது அடிக்கவே, ஆயுதங்களெல்லாம் பொடிப்பொடியாகித் தேர்கள் துணிந்து, தாள் தறிந்து, தொண்டை கிழிந்து, மண்டை பிளந்து, மெய் சிதைந்து, கையொடிந்து, விழி பிதுங்கி, செவி யறுந்து, ஆவியும் ஆயுளும் முடிந்து பாவிகள் பரதவித்தார்கள். இவ்விதமாக ஆஞ்சநேயர் கொல்லும்படி இறந்தவர்களுடைய சரீரத்திலிருந்து பெருகிய ரத்தஜலமானது சேரூகி, இலங்கையைச் சுட்ட நெருப்பும் ஆறும்படிப் பெரிய ஆரூய் ஓடியது. முன்னின்று போராடினவர் இறந்துபோனதுகண்டு பின்னின்ற வீராதி வீரர்களெல்லாம் எதிரேறிச் சண்டை செய்தார்கள். அப்பொழுது அதிசீக்கிரத்தில் வாயுகுமாரர் எமனைப் பார்க்கிலும் மூன்று பங்கு அதிகமாகக் கொன்ரூர். அதனல் கருமேகத்துக்கு ஒப்பாகிய நிறத்தையும் புஜபலத்தையுமுடைய ஐம்பதினுயிரம் ராக்ஷதவீரர்களும் மடிந்தார்கள். மற்றவர்களெல்லாம் அவருக்குமுன் நிற்க மாட்டாமல் சமுத்திரத்தில் ஓடி விழுந்தார்கள். அத்தருணத்தில் சப்தவீரர்கள் இந்தக் குரங்கு எத்தனையோ இராக்ஷதர்களைத் தன் வாலை நீட்டி வளைத்தது. அந்த வாலினல் அகப்பட்டு அநேகர் மாண்டார்கள். சிலபேர் கடலுக்குள் ஓடிவிழுந்து முடிந்தார்கள். அம்மம்மா! இதுவென்ன ஆச்சரியம்? இப்படியானல் கண்டவர்கள் கேட்டவர்களுக்கு எல்லாம் ஏச்சல்லவோ? பேச்சல்லவோ? என்றெண்ணிக் கோபக் குரோதர்களாய்த் தேர்களை வேகமாய் நடத்திப் போய்ச் சுற்றிக்கொண்டு விற்களை வளைத்து, வாசாமகோசரமாகப் பாணங்களைப் பிரயோகித்துத் தங்கள் வீரதீரத்தைக் காட்டிப் பிரபலமாகிய யுத்தஞ் செய்தார்கள். மாருதியானவர், அவர்கள் விட்ட பாணங்களை எல்லாம் லக்ஷியம் பண்ணுமல் ஏழுபேர்களையும் ஏககாலத்தில் கொல்லவேணுமென்று உத்தேசித்துத் தமது கையைக்கொண்டு ஒரே அறை கொடுத்தார். அந்த அறையுடனே தேர்கள் குதிரைகள் சாரதிகளும் சிதைந்து, வில்லும் முறிந்து ஏழு வீரர்களும் ஒருமிக்க மாய்ந்துபோனர்கள். பின்பு ஊர்முழுதும் அழிந்துபோய் விட்டதோ வென்று பார்த்து வந்த விஞ்சையர்கள் சகலத்தையும் சுட்டெரித்த அக்கினியானது சீதாபிராட்டியாரிருக்கின்ற சோலையைமாத்திரம் தகிக்கவில்லை. அது அந்தக் குணநிதியாகிய ஜானகியாருடைய கற்பின் மகிமையினலல்லவா வேகாதிருந்ததென்று சொன்னர்கள். அவர்கள் சொன்ன சொல்லைக் கேட்டு ஆஞ்சநேயர் அதிசயித்துச் சந்தோஷித்து, நான் பிழைத்தேன் நான் பிழைத்தேனென்று ஆனந்தமாய் அவ்விடத்திற்குப் போய் லோகமாதாவின் திருவடிகளைச் சேவித்து நின்ரூர். பிராட்டியானவள் சிசுவைக் கண்ட தாயைப்போல் அனுமானைப் பார்த்து, அதற்குமுன்னே நம்முடைய புத்திரனை அக்கினி தகித்து விடுமே என்ன செய்வதென்று மனந்தளர்ந்து துக்கத்தினல் முகம் வெயர்த்து நெருப்பிலே விழுந்த புழுப்போலப் பதைத்துப் பற்றியெரிந்த திருமேனி குளிர்ந்து அதிக மகிழ்ச்சியானுள். அந்தச் சமயத்தில், அஞ்சனைகுமாரர் முன்னமேதானே சகலமும் பேசி முடிந்தபடியால் இனியென்ன வார்த்தை யிருக்கின்றதென்று நினைத்து, தாயே! நாயேன் போய்வருகிறேனென்று தெண்டஞ் சமர்ப்பித்துத் திரும்பினர். அவர் அப்புறம் போனவுடனே ஸ்ரீ ராமதூதர்


போய்விட்டபடியினல் கள்ளர்களாகிய ராக்ஷதர்கள் கண்டால் நம்முடைய நக ரத்தைச் சுட்டெரித்தது இந்த அக்கினிதானே யென்று நம்மைப் பிடித்துப் போய்த் தெண்டிப்பார்களென்று அக்கினிதேவன் அவர்கள் கண்ணுக்குத் தோன்றாமல் ஒளித்துப் போனன்.

ஊர்சூடு படலம் முற்றிற்று.

திருவடிதொழுத படலம்

இப்பால் அதிசீக்கிரமாகப் போய்ச் சேரவேண்டுமென்கிற நினைவைக் கொண்டு எங்களையனுகிய ஆஞ்சநேயர் அங்கே ஒருபக்கத்திலிருந்த பர்வதத்தின் சிகரத்திலே அஸ்தமன பர்வதத்தை யடைந்த சூரியனைப்போலப் போயேறி, அந்த இடத்திலிருந்து உலகங்களை எல்லாம் விழுங்குவதுபோல நீண்டு வளர்ந்த ஸ்ரீ ராமனுடைய திருவடித் தாமரையை மனதிலே தியானித்து, திக்கு நோக்கித் தெண்டஞ் சமர்ப்பித்து ஆகாயமார்க்கத்தில் எழும்பிப் பாய்ந்து போனர். போய்த் தம்முடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மேனதேவியின் பிள்ளையாகிய மைநாகப் பர்வதத்தின்மேல் குதித்தார். அந்த மைநாக பர்வதம் அவருக்கு உபசாரஞ் செய்து என்ன சமாச்சாரமென்று விசாரிக்க, அதனு டனே நடந்த காரியத்தைச் சொல்லிவிட்டு, அங்கிருந்து எழும்பித் திக்கஜத் துக்குச் சமானமாகிய ஆஞ்சநேயர் அங்கதன் சாம்புவந்தர் முதலாகிய வானர வீரர்களிருந்த மகேந்திர பர்வதத்தின்மேல் ஒரு கணப்பொழுதிலே வந்து குதித் தார். தூரத்திலே போயிருந்த தாய்ப் பறவையானது வருகிற வழியைப் பார்த் துக்கொண்டிருந்த அப் பறவைக்குஞ்சுகள் அது வரக்கண்டதுபோல, இலங் கைக்குப்போன அனுமானனவர் எப்பொழுது வருவார் வருவாரென்று வழி பார்த்துக்கொண்டிருந்த அந்த வானரவீரர்கள் இவரை நேரிலே கண்டவுடனே போனகாரியம் முடிந்ததென்று சரீரம் புளகிக்க மயிர்க்குச்சிறிய அதிக மகிழ்ச்சியை யடைந்து அவர்களில் சிலபேர் அழுதார்கள். சிலபேர் எதிரே நின்று ஆர்ப்பாட்டஞ் செய்தார்கள். சிலபேர் சமீபத்திற்போய் அன்புடனே தொழுதுகொண்டார்கள். சிலபேர் துள்ளிக் கூத்தாடினர்கள். சிலபேர் அவரை யெடுத்து விழுங்குகிறவர்களைப் போல ஆசையினல் மொய்த்துக்கொண்டார் கள் சில பேர் தழுவி அணைத்துக் கொண்டார்கள். சிலபேர் தூக்கி யெடுத் துக்கொண்டு எங்கும் திரிந்தார்கள். சிலபேர் ஐயா வாயுகுமாரரே! நீர் போய் வந்த செய்தியை உமது வாயைத் திறந்து சொல்லாமலே உம்முடைய முகாரவிந் தம் எங்களுக்குத் தெரியச் சொல்லியது. ஆகையால் மகத்தாகிய சந்தோஷ முண்டாகியது. நீர் வெகுதூரம் போய் இளைப்புடனே வந்தீர். உமக்கந்த இளைப் புத் தீரும்படித் தேனும் - கிழங்குகளும் - கனிகளும் - காய்களும் - துளிர்களும் நாங்கள் நல்ல ருசியுடையதுகளாக அருமையாய்த் தேடிக்கொண்டு வந்து வைத் திருக்கிறோம். அதுகளைச் சாப்பிடுமென்று அவருக்கு முன்பாக வரிசையாய்க் கொண்டுவந்து வைத்து உபசரித்தார்கள். பின்பு அனுமானுடைய கால்களி லும் - கைகளிலும் - மார்பிலும் - தோளிலும் - தலையிலும் - வால்களும் - வேல்

டம் நெ. 13.



சிறியதிருவடி ஸ்ரீராமரிடம் சூடாமணியைத் தந்தது.

களும் - அம்புகளும்பட்ட புண்கள் சிருஷ்டி காலந்தொடங்கி உலகத்தில் இது வரையிலும் கழிந்துப்போன நாள்களைப்போல அளவிறந்ததுகளாக நிறைந் திருக்கக் கண்ணினாற் பார்த்துப் பார்த்து, தங்கள் பிராணன் சிந்திப்போகும் படி மனது குழைந்து பெருமூச்சு விட்டார்கள். அப்பொழுது மாருதியானவர் தங்கள் இளவரசாகிய அங்கதனை முன்பு வணங்கி, பின்பு கரடிகளுக்கு ராஜா வாகிய ஜாம்புவந்தரைச் சேவித்துக்கொண்டு, மற்றுமுள்ளவர்களுக் கெல்லாம் அவரவர்களுக் கேற்றபடி செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்து அவ்விடத் தில் உட்கார்ந்து, லோகநாயகராகிய ஸ்ரீ ராமச்சந்திரருடைய திருத்தேவியா கிய ஜானகி உங்களுக்கெல்லாம் ஆசீர்வாதம் சொன்னாளென்று சொன்னார். இப்படிச் சொன்ன மாத்திரத்தில் அனைவரு மெழுந்திருந்து சிரசின்மேல் கை களை அஞ்சலி பண்ணிக்கொண்டு தரைமட்டுந் தாழ்ந்து, திக்கு நோக்கி வணங்கி நின்று, கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருக மனதிலே மகா சந்தோஷத்தை யுடையவர்களாய் அனுமானை நோக்கி, இங்கிருந்து நீர் புறப்பட்டு லங்கையை நாடிப்போனதுமுதல் அங்கிருந்து வந்து சேர்ந்தது வரைக்கும் என்ன என்ன அதிசயம் நடந்ததுகளோ, அதுகளை யெல்லாம் ஒன்றுவது விடாமல் நாங்கள் கேட்கும்படிச் சொல்லவேண்டு மென்றார்கள். அப்பொழுது அவர் சீதாபிராட் டியாருடைய திருவடிகளை நெஞ்சிலே ஸ்மரித்துத் தொழுது, அந்த ஸ்ரீராம பத் தினியினுடைய மகிமை பொருந்திய திருவுளக் கருத்தை நன்றாய்த் தெரியச் சொல்லி, பின்பு தாம் அங்கிருந்து சுவாமிக்கு அடையாளமாக சூடாமணியை அவள் கொடுக்கும்படி வாங்கிவந்ததையும் சொன்னதே யல்லாமல், மகா பலிஷ் டர்களான பஞ்ச சேனபதிகளுடனேயும், அக்ஷயகுமாரன் முதலாகிய வெகு ராக்ஷதர்களுடனேயும் போர் செய்து அவர்களை யெல்லாம் கொன்று வென்ற சமாச்சாரத்தையும், லங்கா பட்டணத்தை எரித்து நீறாக்கிய சமாச்சாரத்தை யும் சொல்லவில்லை. ஏன் சொல்லவில்லை யென்றால், இந்த இரண்டு காரிய மும் தம்முடைய ஜெயப்பிரதாபத்தைக் குறிப்பதுபற்றி அதைச் சொன்னால் தற்புகழ்ச்சியாய் முடியுமென்று நினைத்துச் சொல்ல அச்சப்பட்டுக்கொண்டு, அது நீங்கலாக மற்றதுகளை யெல்லாம் ஒன்றுவது ஒளியாமல் சொன்னார். அந் தச் செய்தியைக்கேட்டு அதிக சந்தோஷமுற்று அங்கதன் ஜாம்புவந்தன் முத லானவர்கள் வாயு புத்திரரை ஊடுருவப் பார்த்து, இவர் லங்கையிலுள்ள ராக்ஷ தர்களுடனே எதிர்த்துப் பின்னிடாமல் உக்கிரமாய்ப் போர்செய்ததை இவரு டைய தேகமாதியந்தமு மிருக்கின்ற காயங்களே சொல்லவும், அவர்களை ஜெயித்த சமாச்சாரத்தை இவர் அவர்களால் இறந்து போகாமல் திரும்பிவந் ததை சொல்லவும், இவர் அந்த லங்கையைக் கொளுத்திய செய்தியை அந்தத் திசையில் ஓங்கிக் கறுத்தெழுகின்ற புகையே சொல்லவும், ஜானகியானவள் இறக்கவுமில்லை. மற்ற எந்த இடத்திலும் போகவுமில்லை. இராவணனுடைய நகரத்தில்தானே இருக்கிறாள் என்பதை இவர் தென்திசையை நோக்கித் தெண்டம் சமர்ப்பித்துக்கொண்டு வருவதே சொல்லவும், சத்துருக்கள் சாமானி யர்கள் அல்ல ; அவர்கள் எல்லாம் அதிவீர பராக்கிரமர்கள் என்பதை ஜெகன் மாதாவானவள் இன்னும் சிறை மீளாதிருப்பதைச் சொல்லவும், பிரகடமாக அறிந்துகொண்டு, இனிச்செய்ய வேண்டுவதென்ன சொல்லுமையா அனுமானே யென்று கேட்டார்கள். அதற்கு ஆஞ்சநேயர் மகிழ்ந்து, ஓ நண்பர்களே!

இனி எதுகளையும் சிறிதும் எண்ண வேண்டுவதேயில்லை. சீக்கிரமாய் ஸ்ரீ ராம பத்திரருடைய சந்நிதானத்திற்குப் போய் அவருடைய திருத்தேவியாரைக் கண்ட சுபச் செய்தியைக் சொல்லி, அவர் மனக்கிலேசத்தை ஆற்றுவதே உத்தமமென்று ஆஞ்சநேயர் சொல்லவும், அப்படியே செய்வோ மென்று சகலரும் சம்மதித்து, அந்த க்ஷணமே பிரயாணப்பட்டு நடந்தார்கள். இவ்வாறு மகிழ்ச்சியுடனே ரகுநாயகன் தனது கோதண்டத்திற் பூட்டி யெய்த பாணத்தைப்போல் யாவரும் அதிவேகமாய் ஆகாயத்திலே தாவிப் பாய்ந்துபோய் சூரியன் உச்சியில் வருகின்ற சமயத்தில் மதுவனத்தில் வந்து சேர்ந்து அதிலே தங்கினர்கள். அந்த வனத்தில் நெருங்கிய மரக்கொம்புகளி லெல்லாம் அபரிமிதமாகத் தேன் கூடு கட்டியிருக்கக்கண்டு, அந்தத் தேனை உண்ணவேணுமென்று ஆசைகொண்டு வானர வீரர்களெல்லாம் ஒன்று சேர்ந்து இப்படியாலோசிக்கத் தலைப்பட்டார்கள்: அதெப்படியென்றால், நாம் எல்லோரும் அங்கத ராஜனைக் கண்டு வைதேகியைத் தேடிவந்து வெகுநாள்கள் ஆய்விட்டது என்று எங்கள் மனதுக்குச் சஞ்சலம் உண்டானபடியினாலே நாங்களெல்லாம் உணவில்லாமல் இதுவரையிலும் வெகுவாய் வருத்தப்பட்டோம். இப்பொழுது எங்களுக்கு உணவைக் கொடுத்தருளுமென்று சொல்லிக் கொள்ளுவோம் வாருங்களென்று உடனே எழுந்து போனார்கள். அவர்களில் அனுமானவர் பலசாலியான அங்கதனுக்குச் சமீபத்திற் போய் அவனைக் கைகூப்பிப் பணிந்து, தேன் பொருந்திய பூமாலையை யணிந்த எங்கள் ராஜசேகரனே கேளும்! உம்முடைய வானரசேனை உணவில்லாமல் மிகவும் பசியும் இளைப்புக்கொண்டு வேஷ்டையாய் வருத்தப்படுகின்றது. ஆதலால், அதற்கு இப்பொழுது இந்தச் சோலையிற் கட்டிய கூடுகளிலிருந்து ஒழுகுகின்ற தேனை உண்ணும்படி உத்தரவு கொடுக்க வேணும் என்றார். அவனப்படியே செய்யலாமென்று சொல்ல, அதுகேட்டு ஆஞ்சநேயர் வானரங்களைக் கண்காட்ட, சமுத்திரம் நடுங்கும்படி மிகவும் இரைச்சலிட்டுக்கொண்டு போய், தேன் கூடுகள் தொங்குகின்ற அந்தச் செழுமையான வனத்திற்குள்ளே இந்தக் குரங்குகளெல்லாம் பிரவேசித்து, தேனை யுண்ணும்படி வண்டுகள் வந்து மொய்ப்பதுபோல, எங்கும் மொய்த்துச் சுற்றித் தொடர்ந்து, ஒன்றுக்கு முன்னே யொன்று பாய்ந்து மரக்கிளைகளை ஒடித்துத் தேன் கூடுகளை அழித்து அதுகளிலுள்ள தேனைக் குடித்துக் களிகூரத் தலைப்பட்டதுகள். வானரவீரர்களில் ஒருவர் வாயைத் திறந்து உண்ணப் போகின்ற தேனை அந்தச்சமயத்தில் மற்றொருவர்வந்து எளிதாக உண்டு விட்டுப் போவார். ஒருவர் பிரயாசைப்பட்டுக் கையினால் அழித்தெடுத்த தேனை ஒருவர் பிரயாசமில்லாமல் வந்து அபகரித்துக்கொண்டு ஓடிப்போவார். ஒருவருடனே யொருவர் உடலும் உடலும் நெருங்கும்படிக் கட்டித்தழுவித் தேனுண்ட மயக்கத்தால் தரையில் விழுவார். ஒருவர்மே லொருவர் ஓடிப்போ யேறிக்கொண்டு அதிக சந்தோஷத்தை யடைவார். இந்தப்பிரகாரம் மட்டில்லாத மதுவைக் கொள்ளையிட்டுக் குடித்துக் களித்துச் சம்பிரமமாய்க் கூத்தாடும்போது, அந்த வனத்திற்குக் காவலாயிருந்த வானரர்கள் கண்களைத் தீப்பறக்க விழித்துச் சீறி எழுந்து அவர்களை எதிரிட்டு சூரிய குமாரனுகிய சுக்கிரீவமகாராஜாவினுடைய ஆக்கினையைத் தடுத்து நீங்களெல்லாம் என்ன நினைந்து என்ன செய்தீர்கள்? உங்களுயிருக்கு முடிவு வந்துவிட்டது. இந்தச் சமாச்சாரத்தை எங்கள் எஜமான

னறிந்தால் எங்கள்மேல் கோபஞ் செய்வானே நாங்கள் என்ன செய்வோம் என்று சொல்லிவிட்டு இதோ போய் அழைத்து வருகிறோமென்று போனார் கள். இப்படி போன வானரர்கள் தங்களுக்கு அதிபதியாகிய திதிமுகனென்கிற வானர வீரனைக் கண்டு, ஓ எங்களிறையே! தம்முடைய வனத்தைக் குரங்கின் சேனைகள் வந்து இப்பொழுது அழித்துவிட்டதுகள். அந்தச் சத்துருக்களுடைய செய்கைக்குப் பிரதியாகச் செய்யத்தக்கது இனி எங்களா லில்லையென்று முறை யிட்டுக் கொண்டார்கள். அது கேட்டு அந்தத் திதிமுகன் மதுவனத்தை அழித் தவர்கள் யார்? அவர்களைக் காட்டுங்கள் பார்ப்போமென்று புறப்பட்டான். அவர்கள் ஐயா! வாலிகுமாரன் முதலான வானரக்கூட்டம் வந்து நிழலுக்குத் தங்கியது. பின்பு அங்கதனுடைய ஏவலினாலே அந்தக் குரங்கின் சேனை மரக் கிளைகளிற் பாய்ந்து, தேன் கூடுகளையெல்லாம் நிர்மூலமாக்கியது. அதுகண்டு நாங்கள் போய் அதுகளைத் தடுத்தோம். எங்களைப் பேசப்படாத வம்புவார்த்தை பேசி இடக்குப் பண்ணி, கைகளைக் கொண்டு ஓங்கி யடித்ததினால் மிகவும் எங்க ளுடம்பு நொந்தோம். ஓ ஆண்டவனே என்று சொல்லவே, அடடா! தன் தந்தையாகிய வாலி நாசமாய்ப் போனதை அவன் பிள்ளையாகிய இந்த அங் கதனென்ன அறியாதவன்போ லிருக்கிறானென்று சொல்லி நெருப்பைப் போலப் பொங்கி அவ்விடம் விட்டு எழுந்து, இரண்டுகோடி வானரங்கள் கல் லென்று ஆர்ப்பரித்து நெருங்கிச் சூழ்ந்து வரும்படி மதுவனத்திற்குள்ளே வந்து நுழைந்தான். அங்கே மதுவை யுண்டுகொண்டிருந்த வானரசேனை யானது பயந்து எழுந்து கோதண்ட தீட்சாகுருவை வாழ்த்திக்கொண்டே ஓடிப் போய் வாலி புத்திரனுடைய பாதத்தில் வீழ்ந்தது. அப்பொழுது திதிமுகன் அங்கதனைப் பார்த்துச் சொல்லுகிறான்: கேளாய் அங்கதனே! தேவேந்திர னனவன் வாலிக்குக் கொடுத்த உசிதமாகிய இந்த மதுவனமானது, தேவர் களும் கண்களை விழித்துப் பார்ப்பதற்கு அரிதாக என்னாலே காவல் செய்யப்பட் டிருக்கின்றது. இப்படிப்பட்ட என்னுடைய ஆக்கினையை நீ அசட்டைப் பண்ணி னாய். இதற்கு உடையவனாகிய சுக்கிரீவமகாராஜனே லேசானவனல்ல. அவ னுடைய பராக்கிரமத்தை செவ்வையாய் ஆலோசித்துப் பார். ஓகோ உன்னு டைய வாழ்வு இன்றையத் தினத்துடனே முதலற்றுப் போய்விட்டது. இப்படிப் பட்ட திவ்வியமான வனத்தை நீ வானரங்களை ஏவி அழித்துவிட்டா யல்லவா என்று கொதித்துக் கொக்கரித்து, அந்தக்ஷணமே ஒரு பெரிய கருங்கற் பாறையை அடியோடே பேர்த்தெடுத்து அங்கதன்மேல் விசையாக விட்டெறிந் தான். அதைப் புறங்கையிலே தட்டிவிட்டு வாலிகுமாரன் கோபித்தெழுந்து திதிமுகனைக் கெட்டியாய்ப் பிடித்து, தன் கைவிரலை முடக்கிக்கொண்டு கொம் கொம்பென்பதாகக் குத்தி, வாயின் வழியே ரத்தஞ் சோர்ந்து பிர்மிக்கப் பின்னும் அடித்து, இந்தச் செய்தியைப் போய்ச் சுக்கிரீவனுக்குச் சொல் லென்று அவனைத் துரத்திவிட்டு, கோபாக்கினி ஜொலிக்கும்படி அவனுடைய சேனைகளைப் பற்றிக் கட்டி அனற்பொறி பறக்க நன்றாய்க் குத்திக் குமையுங்க ளென்று தன் சேனைவீரர்களுக்கு உத்தரவு செய்தான். அந்த உத்தரவு வாயிலிருந்து வெளிப்படுகிறதற்குள்ளே வானரவீரர்கள் அவர்களை ஓடிப் போய்ப் பிடித்துவந்து, காட்டிலே படர்ந்திருக்கின்ற கொடிகளை அறுத் தந்தத் தோளழுந்தக் கட்டி, முன் பக்கத்திலும் பின்பக்கத்திலும் இருப்

புலக்கையினால் இடிப்பதுபோல இடியும் அஞ்சியோடும்படிப் பலம் பொருந்திய கைகளால் இடித்தார்கள். அது பொறுக்கமாட்டாமல் சோலைக் காவலாளர்கள் முதலாகிய வானரர்கள் சரீரம் துடித்துக் கீளத்து விழுந்தனர். அது கண்டு நீங்களும்போய்ச் சொல்லுங்களென்று அங்கதன் சொல்ல, அதிக பயத்துடனே அவர்களும் எழுந்து அலறிக்கொண்டே ஓடினார்கள். பின்னும் ஜலத்திலே மூழ்கி விளையாடுகிறவர்களைப் போலக் கூடுகளிலுள்ள தேனையும் நிறையக் குடித்து அதிலேதானே மூழ்கி விளையாடி, தங்கள் தங்கள் தலைவர்களுக்கும் அந்தத் தேனையும் கனிகளையும் கிழங்குகளையும் சாகங்களையும் கொண்டுபோய்க் கொடுத்து அவர்களையும் உண்ணும்படி செய்து, யாவரும் உண்டு தேக்கி வருத்தமாறி, சூரியனுடைய வெயிலின் உஷ்ணந் தணிந்தவுடனே போகலாமென்று பொழுதைப் பார்த்துக்கொண்டு மதுவனத்திற்கு அடுத்த உபவனத்தில் இருந்தார்கள். அவர்கள் அப்படியிருக்க சூலாயுதத்தை ஏந்திய சங்கரனாலும் முடிப்பதற்கு அரிதாகிய பெருங் காரியத்தை முடித்து ஸ்ரீ ராம தூதனாகிய சாதுரியத்தையுடைய ஆஞ்சநேயன் மீண்டு வந்ததுவரையில் அந்தத் தென் திசையில் நடந்த சரித்திரங்களையெல்லாம் நாம் அறிந்தமாத்திரம் சொன்னோம். சுவாமி விஷயமாய் இவ்விடத்தில் நடந்ததுகளையெல்லாம் இனிச் சொல்லத் தொடங்குவோம். சுக்ரீவனானவன் அனுமான் முதலாகிய வானர சைனியங்களைச் சீதாபிராட்டியாரைத் தேடி வாருங்கள் என்று நான்கு திக்கினிடங்களிலும் அனுப்புவித்து ரிசியமுக பர்வதத்திலிருந்தனனன்றே ? அப்படியிருந்த சுக்கிரீவனானவன் ஸ்ரீ ராமபிரானை இனிமையாகிய நல்ல சொற்களினாலே தேற்ற, அந்தக் கோதண்டபாணியானவர் அடிக்கடிச் சோர்ந்து சோர்ந்து மூர்ச்சிப்பார். அப்படி மூர்ச்சிக்குந்தோறும் மூர்ச்சிக்குந்தோறும் அனேகமாயிரம் உயிருடையவர்போலத் தெளிவு வந்து மீட்டும் உயிர்த்தெழுந்திருப்பார். மறுபடியும் சீதாபிராட்டியாரை நான்கு திக்கிலும் தேடப்போன வானர வீரர்களில் வடக்கு கிழக்கு மேற்காகிய மூன்று திக்கிலும் போனவர்கள் நாங்கள் காணவில்லையென்று வந்து சொன்ன சொல்லால், உடலுக்குள்ளே உயிருண்டு இல்லையென்னும்படி சோதிப்பார். பின்னும் தெற்குத் திசைக்குப் போயிருக்கின்றவர் ஆஞ்சநேயரல்லவாவென்று அவரைத் தமது திருவுள்ளத்திலே நினைத்துக்கொண்டு சூரிய குமாரனாகிய சுக்கிரீவனைப் பார்த்து, அப்பா சுக்கிரீவா ! நாம் செய்த எத்தனங்களெல்லாம் அனுகூலமாகவில்லை ; அபகீர்த்திக் கிடமாயிற்று. நாம் குறித்துச் சொல்லிய நாள்களெல்லாம் கழிந்துபோய்விட்டன. மூன்று திக்கிலும் தேடப்போனவர்களோ வந்து சேர்ந்தார்கள். தென் திசையை நோக்கித் தேடப்போனவர்கள் மாத்திரம் இதுவரையிலும் மீண்டும் இவ்விடத்திற்கு வரவேயில்லை. ஆகையால், அவர்கள் இறந்துதான் போனார்களோ ? அல்லது அவர்களுக்கு மற்றென்ன ஆபத்துத்தான் சம்பவித்ததோ ? ஒன்றுமறிகிலேம். ஒருவேளை சீதை மாண்டுபோய் இவள் மாண்டுபோன சமாச்சாரத்தை மீண்டுபோய் அவர்களுக்கு எப்படிச் சொல்லுகிறது ? இதைவிட நாமும் மடிந்துபோகிறதே நல்லதென்று துக்கத்தினாலே தாங்களும் பிராணத்தியாகம் பண்ணிக்கொண்டார்களோ ? இன்னமும் தேடிக்கொண்டே திரிகின்றார்களோ ? அல்லது ராட்சதரைக் கண்டு கோபமதிகரிக்கச் சண்டை செய்து அவர்கள் செய்த வஞ்சனையாகிய மாயையினால் மாய்ந்து வீரசுவர்க்கம்

அடைந்தார்களோ? அல்லது எக்காலமும் மீளாத அருஞ்சிறையில் அகப்பட்டுக் கொண்டார்களோ? நமக்கு நியமித்துச் சொன்ன தவணை நாளுக்குள்ளே சுக்ரீவன் முதலானவர்கள் இருக்குமிட்த்தில் நாம் போய்ச் செய்தி சொல்லுகிறதற்கில்லை. ஆதலால், இனி அங்கே லஜ்ஜையில்லாமல் எப்படிப்போகிறதென்று நினைத்து, இன்ப துன்பங்களைத் துறந்து தபசுதான் செய்கிறார்களோ? இதுகளெல்லா மல்லாமல் அந்த அநுமான் முதலானவர்களுக்கு வேறே என்ன சம்பவித்ததோ? நீ சொல்லென்று இப்படி அநேக விதத்திற் சொல்லிச் சுவாமியானவர் விசனப்பட்டார். இப்படியிருக்கிற தருணத்தில், சதிமுகனென்பவன் தன் பின்னே அடித்துத் துரத்தப்பட்ட இரண்டு கோடி வானரர்களும் அழுது கூச்சலிட்டுக்கொண்டு வரச் சுக்கிரீவ மகாராஜனுக்கு முன்பாகத் தலையிலிருந்து ஒழுகிப் பாய்கின்ற உதிரத்துடனேவந்து, இரண்டு கைகளையும் கூப்பி வணங்கி எழுந்து நின்று, ஐயா! இன்றையத் தினத்துடனே நம்முடைய மதுவனம் அழிந்ததென்று சொன்னன். அம்மாத்திரத்தில், ரத்தம் ஒழுகுகின்ற அவன் முகத்தைப் பார்த்து. ஓ சதிமுகனே! அப்படிச் செய்தவர்கள் யார் சொல்லென்று கேட்டனன். அதற்கவன் ஐயா! அங்கதன் ஏவலால் நீலனென்பவனும் குமுதனென்பவனும் மலைபோலுயர்ந்த தேகத்தையுடைய ஜாம்பவனென்பவனும் சமுத்திரமானது புரண்டு வந்து மூடிக்கொண்டதுபோல வெகு வானரசேனைகளும் மேலிட்டுவந்து நமது மதுவனத்தை அழித்தார்கள். இப்படிச் செய்யவேண்டாமென்று நான் சேனைகளோடும் போய்த் தடுக்க அச் சேனைகளை அடித்துத்துரத்தி என்னையும் துன்பப்படுத்தி உம்மையும் இகழ்ந்து பேசினன். அவனுக்கு இஷ்டமானபடிக்கெல்லாம் சொன்னசொல் எங்களுக்குச் சகிக்காமல் செவிதீய்ந்து முகம்புதைந்து மனம் வெதும்பி இமைப்பொழுதுக்குள்ளே ஒரு கருங்கற்பாறையைப் பேர்த்தெடுத்து, வாலி புத்திரனுடைய சரீரம் சிதையும்படி எறிந்தேன். அதைப் புறங்கையால் தடுத்து விட்டு, மூங்கிற்காடு பற்றியெரிந்தாற்போலக் கோபத்தாலெரிந்து என்னைப் பிடித்து உயிர் பதைக்கும்படிக் குத்திக் குமைத்து நீ எவ்விடத்திற்போய்ச் சொல்லிக் கொள்ளவேணுமோ அவ்விடத்திற் சொல்லிக்கொள்ளென்று அனுப்பிவிட்டானென்று சதிமுகன் சொல்லக் கேட்டவுடனே சுக்ரீவ மகாராஜன் அதிக ஆனந்தத்தோடு எழுந்துநின்று, சேஷசாயியாகிய சாட்சாத் ஸ்ரீ ராமரைச் சேவித்துச் சொல்லுகிறான். சுவாமி! அங்கதன் முதலானவர்களுக்கு இப்பொழுது உண்டாகிய கோபமானது, என் தாயாகிய ஜானகி மகிமை பொருந்திய கற்பழியாது இருக்கின்றாளென்று நமக்குத் தெரியச் சொல்லியது. க்ஷேமமாயிருக்கும்படிப் பிராட்டியாரை அவர்கள் பிரத்தியக்ஷமாகக் கண்டார்கள். அந்தச் சந்தோஷத்தினால்தான் மதுவனத்தை யழித்து அதிலுள்ள தேனைக் குடித்து விளையாடினர்கள். ஆகையால், தேவர்பெருமானாகிய இரகுநாயகரே! இனித் தேவரீர் சந்தேகித்துத் துக்கப்பட வேண்டியதில்லையென்று விண்ணப்பஞ் செய்ய, அதைத் திருச்செவி சாத்தியருளிய எங்கள் தந்தையாகிய ஸ்ரீ ராமபத்திரர் தெற்குத் திசைக்குப் போனவர்கள் வந்தார்கள். இனி அவர்களென்ன செய்தி சொல்லுவார்களோ? எல்லாம் அறியலாமென்று தமது திருவுள்ளத்தில் குறித்துக்கொண்டு இருந்தார். சுக்ரீவன் அடிபட்டுச் சரீரம் நொந்து வந்த சதிமுகனுடைய முகத்தைப் பார்த்து, ஓ வீரனே!

அவ்விடத்தில் வந்திருக்கின்றவர்கள் யாரார் சொல்லென்று கேட்டான். அதற்கு அவன் அநுமான் - அங்கதன் - மயிந்தன் - ஜாம்பவந்தர் முதலாகப் பதினேழு வானர வீரசிரேஷ்டர்கள் கடலும் நாணும்படி அதிலும் அதிகமாக ஒலிக்கின்ற சேனைகளையுடையவர்களாய் வந்திருக்கின்றார்களென்று சொன்னன். அச்சமயத்தில் வானராதிபதி ஒருபோதும் ஆக்ஞை தவறாதவனாயிருந்தும் அவனுக்குச் சுவாமி காரியம் அனுகூலப்பட்டதுவே விசேஷமாகையால், அவர்கள் தன் பிராணனுக்கு ஒப்பாகிய மதுவனத்தை அழித்தார்களென்று கேள்விப்பட்டும் அதைக் குறித்து எள்ளளவும் க்ஷோத்திரமில்லாமல் மறுபடியும் அவனை நோக்கிச் சொல்லுகிறான்: ஓ புஜபலத்தினையுயர்ந்த கதிமுகனே! உனக்கு நான் சொல்லத் தக்கது ஒன்றிருக்கின்றது. என்னவென்றால், அங்கதனவன் அயோக்கியர்களுக்குரிய அற்பமாகிய செய்கையையுடையவனல்ல. சக்கரவர்த்தித் திருமகனுடைய ஆக்ஞையைச் சிரசின்மேற்கொண்டு அவனும் மற்ற வானரர்களும் சமுத்திரஞ் சூழ்ந்த பூமி ஆதியந்தமும் போய்த் தேடி, சீதாபிராட்டியாரைக் கொண்டுபோன சத்துருக்களுடனே சண்டை செய்து ஜெயித்து, வீரர்வேசத்தோடே வந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களைக் குறித்து நாம் இப்பொழுது என்ன சொல்லுகிறது? இது சமயமுமல்ல. அல்லாமலும் உனக்கென்ன தெரியவில்லையா? வாலிகுமாரன் சாமானியனா? இளவரசாயிருக்கிறவனுகையால் அவன் கேட்ட கேள்விக்குத் தாழ்ந்து உத்தரவு சொல்லுகிறது அருமை. இப்படிக்கெல்லாம் தர்மசங்கடமாயிருக்கிறபடியால் நீ யொன்றும் யோசிக்கவேண்டாம். உனக்கு உறுதியைச் சம்பாதித்துக்கொள்ளவேணுமென்று மனமிருந்தால் அவனிடத்திற்போய் இப்பொழுதே சரணமடையென்று சுக்ரீவன் சொல்லவே, அதற்குத் கதிமுகன் ஒன்றுஞ் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டு, அவனுக்குத் தலைவணங்கித் தெண்டனிட்டு, மனமெலிந்து சரீரமொடுங்கி அங்கிருந்து புறப்பட்டுத் தன் சேனைகளுடனே திரும்பி அந்த உபவனத்திற்கு வந்தான். அவனை வாலிகுமாரன் கண்டு அதிக கோபம் உதிக்கும்படி ஓடிப்போய் விட்டவன் மறுபடியும் வந்தபடியினாலே இவனைச் சித்தமாய்க் கொன்று விடுவோமென்று நினைத்தான். அச்சமயத்தில் கதிமுகனவன் ஐயா! நான் உம்முடைய அடிமையாகையால் என்னை ரக்ஷிப்பது உமது கடனேயாகுமென்று கைகுவித்துப் பணிந்து எதிரே நின்று, வாலைக்கொண்டு உமது மார்பைப் பிளந்ததுபோல மஹாவாக்குக் காயங்களிலே நான் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேணுமென்று சொல்லி அங்கதனுடைய காலில் விழுந்தான். அப்படி விழுந்தபோது கோபந்தணிந்து, அவன் தாழ்ந்து கதிமுகன் கையைப் பிடித்துத் தூக்கி மார்பிறுகத் தழுவிக்கொண்டு, நான் உம்முடைய விஷயத்தில் செய்த குற்றங்களை நீரும் பொறுத்திக்கொள்ள வேணுமென்று விசேஷமாகச் சொன்னன். பின்பு அநுமானை நோக்கி, ஐயா ஆஞ்சநேயரே! அன்று எங்களுக்கு சுக்ரீவமகாராஜா சொன்ன நாள் கழிந்துபோனதைக் குறித்து நாங்களிறந்து போகும்படி எத்தனப்பட்டதை யறிந்து எங்களை இவ்விடத்திலே யிருக்கச் செய்து லங்கைக்குப்போய் வந்து எங்களுடைய கலக்கத்தை நீக்கி ரட்சித்ததுபோல, இப்பொழுது புண்டரீகாக்ஷனுகிய ஸ்ரீ ராமச்சந்திரனுடைய துக்கத்தையும் ஆற்றும்படி நீர் முன்னுகப் போமையா ஆஞ்சநேயரே யென்று அங்கத மகாராஜன்

செல்ல, அவனை வணங்கி இதுவே என் பாக்கியமென்று போனார். அவர் போனபின்பு சூரியனுடைய கிரணேஷ்ணம் தணிந்தவுடனே அங்கதன் முதலானவர்கள் மகா பராக்கிரமத்தையுடைய ஆக்கினைசக்கரத்தைச் செலுத்துகின்ற நம்முடைய சுக்ரீவ மகாராஜாவும் நாம் அவர் விஷயத்திற் செய்த அபசாரத்தைக் குறித்து நம்மேல் அவருக்குண்டாகிய கோபமாறினார். சூரியனும் தனது வெப்பமாறினன். ஆகையால் யாவரும் இனி யவரிடத்துப் போவதே நலமென்று நினைத்து, முன்பு தாங்கள் அந்த வானராதிபதியின் சேர்லையை அழித்து அதற்குக் காவலா யிருந்தவர்களையும் அடித்துத் துரத்தினதைப்பற்றி அவரென்ன ஆக்கினை செய்வாரோவென்று நடுநடுங்கி பயப்பட்டிருந்த வருத்தம் நீங்கினவர்களா யெழுந்து நடக்கத் தலைப்பட்டார்கள். இப்பால் ஸ்ரீ ராமபத்திரர் சூரியபுத்திரனைப் பார்த்து, அப்பா சுக்ரீவா இப்பொழுது தென்திசையிலிருந்து வருகின்ற வானரவீரர்கள் ஜானகியை மெய்யாகக் கண்டோமென்று சொல்லுவார்களோ? அவ்விடத்தில் இல்லையென்றே சொல்லுவார்களோ? எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நீ சொல்லென்று கேட்டார். இப்படி சொல்லிக்கொண்டிருக்கும்போதே ஸ்ரீ ராமதூதராகிய ஆஞ்சநேயர் சூரியனைவன் தெற்குத்திக்கில் உதயமானதுபோலத் தமது திவ்விய சொரூபமான்து பிரகாசிக்கும்படி காணப்பட்டார். அவரைக் கண்டு சுக்ரீவன் இதோ அனுமான் வந்தானென்று சொல்ல, சுவாமியானவர் அவரை இருதயத்தில் அதிகமாகிய அன்பு உதிக்கும்படிப் பார்த்தருளினர். இப்படி வந்த ஆஞ்சநேயர் சுவாமியினுடைய பொன்னடியைத் தொழாமல், தாமரையாசனத்தை விட்டு நீங்கி, லங்காதீபத்தில் எழுந்தருளி யிருக்கின்ற பிராட்டியாரைச் சிரசின்மேல் கைகளைக் கூப்பித் தென்திசையை நோக்கிச் சேவித்துக்கொண்டே சமீபத்தில் வந்து, பூமியில் கரசரணாதி அவயவங்கள் தேயும்படி தாழ்ந்து, மகத்தாகிய பயபக்தியுடனே சாஷ்டாங்கமாகத் தெண்டஞ் சமர்ப்பித்தார். அவருடைய செய்கைகளையும் முகக்குறி முதலானதுகளையும் நன்றாய்க் கண்டு, வைதேகி க்ஷேமமா யிருக்கின்றாள். இவ் வனுமான் அவளைக் கண்டதுமுண்டு. அவளது பதிவிரதாதர்மமும் சிதையவில்லையென்று ஸ்ரீ ராமபிரான் தெரிந்துகொண்டார். இவ்வனுமானது குறிகுணங்களே பிரமாணமாகுமென்று நடந்த காரியங்களையெல்லாம் அறிந்துகொண்டதும் தோள்கள் பூரித்ததுகள்; கண்களில் நின்றும் ஜலம் பெருகியது; நீங்குதற்கு அருமையாகிய துக்கமும் நீங்கியது. கொடியளவில் ஆசையானது அதிகரித்தது. அப்பொழுது மாருதியானவர் ஓ சுவாமி! கண்டேன் கண்டேன்; கற்பின் பூஷணத்தைக் கண்டேன்; கருணாநிதியைக் கண்டேன்; குணரத்தினத்தைக் கண்டேன்; ஜெகன்மாதாவைக் கண்டேன்; ஜானகி யமிர்தத்தை லங்காபுரியில் இருக்க அடியேன் கண்ணாரக் கண்டேன். இனி தேவரீருடைய திருவுளத்தில் சந்தேகம் கொள்ளவேண்டுவதில்லை. நெடுநாளாய்க் கொண்டிருந்த துயரத்தையும் கையற விட்டுவிடுமென்று சொல்லி, மறுபடியும் பிராட்டியார் உம்முடைய மகிமையைத் திருத்தேவியென்கிற உரிமைக்கும், உம்மைப் பெற்ற பிதாவான தசரதச் சக்கரவர்த்தியினுடைய முதன்மை செல்வ மருமகளென்கிற பெருமைக்கும், ஜனகமகாராஜாவினுடைய அருமைத் திருமகளென்கிற ஒருமைக்கும் தக்கவள். எனக்குச் சாட்சாத் தெய்வமாய் விளங்கியிருக்கின்றவள். இன்னமும் அந்த மிர்து

பாஷினியான மாதா களங்கமற்ற பொன்னுக்குச் சமானம் அப்பொன்னே யல்லாமல் வேறில்லை. அதுபோல மிகவும் பொறுமையையுடைய எம்பிராட்டிக்குச் சமானம் அவளேயல்லாமல் வேறில்லை யென்கிற நன்மையைத்தான் கைக்கொண்டாள். அவளுக்குப் பிராணநாயகர்காக வாய்த்த உமக்குச் சமானம் உம்மை யல்லாமல் வேறில்லை யென்கிற மேன்மையை உமக்குக் கொடுத்தாள். எனக்குச் சமானம் என்னை யல்லாமல் வேறில்லை யென்கிற கீர்த்தியை எனக்குத் தந்தாள். மேலும் கீர்த்திக்குத்தா னொருத்தியே உரியவளா யிருக்கின்ற என் அன்னையானவள் தேவரீருடைய குலத்தைத் தேவரீருக்கு உரித்தாக்கி, தன்னை இப்படி பிரித்தெடுத்துக் கொண்டுபோய்த் தனக்குக் கிலேசத்தைக் கொடுத்த இராவணுதி ராட்சதர் குலத்தை எமக்கு உரித்தாக்கிக் கொடுத்து, தேவர்கள் குலத்தை அவர்களுக்கு உரித்தாக வாழ்வித்து, என் குலத்தை எனக்குக் கடாக்ஷித்தருளினாள். அதைப் பார்க்கிலும் அவள் வேறென்ன உதவி செய்ய வேண்டும். ஓ இரகுநாயகரே! லங்காதீபத்திலே தபசு செய்துக் கொண்டிருக்கின்ற ஜானகியை நான் காணவேயில்லை. பின்னை யென்னதான் நீ கண்டாயென்று கேட்பீரானால் குடிப்பிறப்பென்ப தொன்றும், பொறுமை யென்பதொன்றும், கற்பென்பதொன்றும் ஆகிய இம்மூன்றும் சந்தோஷித்து நடனஞ் செய்துகொண்டிருக்கக் கண்டேன். அந்த அகில நாயகியினுடைய கண்ணினிடத்திலும் நீரிருக்கின்றீர்; கருத்தினிடத்திலும் நீரிருக்கின்றீர்; வாக்கினிடத்திலும் நீரிருக்கின்றீர்; ஸ்தனத்தினிடத்திலும் நீரிருக்கின்றீர்; மன்மதனெய்த் புட்பபாணம் தைத்த ஆறுத புண்ணினிடத்திலும் நீரிருக்கின்றீர். இப்படியெல்லாம் விளங்கும்பொழுதே உம்மைவிட்டு அந்த கற்பரசி பிரிந்தாளென்று நீர் சொல்லுகிறதும், அந்தப் பாக்கியசாலியை விட்டு நீர் பிரிந்தீரென்றும் அவள் சொல்லுகிறதும் என்ன காரணமையா? இது வ்வாது; இது ஒவ்வாது. தவம் செய்த தவமாய் விளங்குகின்ற வைதேகி யென்கிற சீதையானவள் இலங்கை யென்னும் நகரத்தில் ஒரு பக்கத்தில் சூரியன் உதயமாகின்ற காலமும் அஸ்தமிக்கின்ற காலமும் தெரியாமல் இருக்கும்படிப் பூமிதொட்டு ஆகாயபரியந்தம் செழுமையாய் வளர்ந்து உயர்ந்து நெருங்கி நிறைந்து சூழ்ந்து சொர்னமயமாயும் நவரத்தினகசிதமாயும் பிரகாசியானின்ற அழகாகிய ஒரு சோலையினுள் தேவரீருடைய திருத்தம்பியாகிய இளையபெருமாளானவர் சிரமப்பட்டுத் தெர்ப்பைப்புல் முதலானவற்றால் விந்தைமாய்ச் செய்த பர்னசாலையினடுவில் எழுந்தருளி யிருக்கின்றாள். பிரபஞ்ச மெல்லாவற்றையும் சிருஷ்டித்த பிரமதேவன் பூர்வகாலத்தில், இராவணனைப் பார்த்து, உன்னிடத்தில் இஷ்டமில்லாதவள் எவளையாவது நீ பலாத்காரமாய்த் தொடுவையே யானால் உன் சிரசு சகஸ்திர பத்தலாக வெடிக்கப்பட்டு நீ உயிர் மாய்ந்து போவாயென்று கொடுத்த சாபத்தை நினைத்து அந்த இராவணனவன் விசேஷமாகிய மகிமை பெற்று கற்புக்கரசி யென்னும் பிராட்டியாருடைய புண்ணியமே ஒரு வடிவுகொண்டதுபோல விளங்குகின்ற அருமைத் திருமேனியைக் கொடுமையைச் செய்கின்ற தன் மூடரான கையினாலே தீண்டுவதற்கு அஞ்சினவனாய், மண்ணினுடனே பெயர்த்தெடுத்துக் கொண்டு போயினான். அவன் யதார்த்தமாய்த் தீண்டவேயில்லை யென்பதற்கு அண்ட கடாகம் பிளந்துபோகாமல் இருப்பதும், ஆதிசேஷனுடைய தலை கிழிந்துபோகா

மல் இருப்பதும், சமுத்திரம் பொங்கிவராமல் இருப்பதும், வேதம் இறந்து போகாமல் இருப்பதுமே சாக்ஷியாகப் பார்த்துக்கொள்ளும். அவன் தொட்டிருந்தால் இவையெல்லாம் இன்னும் நிலைகுலையாமல் இருப்பனவோ? அப்பொழுதே நாசமாய்ப் போய்விடார்தா? பெண்ணுகப் பிறந்தவர்களுக்குள்ளே உம்மைக் காணுமையால் சோபமடைந்திருக்கின்ற அந்தப் பிராட்டியா ரொருவர் கற்பழியாதிருப்பதினல், இந்திராணி சரஸ்வதி முதலான தேவமாதரும் முன்னிலும் இப்பொழுது அதிக சிறப்பினை யுடையவர்களானர்கள். சிவனுடைய வாமபாகத்தி லிருக்கின்ற பார்வதியும், இனி அவரது சிரசிலிருக்கத் தக்க ஆதிக்கத்தையு முடையவளானுள். ஸ்ரீ மகாவிஷ்ணுவுடைய திருமார்பிலே எழுந்தருளி யிராநின்ற மகா லட்சுமியும், இனி அந்தப் பகவானுடைய சகஸ்திர சிரசுகளிலும் இருக்கும்படியான சுவாதீன முடையவளானுள். இலங்கை முழுமையும் தேடித் தசக்கிரீவனுடைய அரண்மனையினுள்ளே போய் அங்கிராணின்ற மாதரையெல்லாம் ஆராய்ச்சி செய்துகொண்டு, அப்புறம்போய் இளந்தென்றல் உலாவும்படி அசைவுற்றுத் தெய்வீகமாகிய பரிமளம் வீசுகின்ற புட்பச்சோலையினுள்ளே புகுந்து பார்க்குமளவில், அங்கே தெய்வப்பெண்போல் எழுந்தருளி யிராணின்ற ஜானகியாரை அவர் உம்மைவிட்டுப் பிரிந்ததைப்பற்றித் திருவுள மெலியும்படி அழுது புலம்புதலால் பெருகிப் பாய்கின்ற கண்ணீராகிய கடல் நடுவே கண்டேன். அங்கே எண்ணுதலில்லாத கோரரூபம் பொருந்திய இராக்ஷத மாதர்களும், விகாரமான பேய்க்கூட்டமும் சுற்றிலும் காவலாயிருந்து, யாவரும் பயப்பிராந்தி கொள்ளும்படியாய்ச் செருக்கோடு செய்யும் படியான உபத்திரவத்தைக் கண்டு திருமேனி நடுங்கிப் பதைக்கத் துக்கமென் பதனே ஒரு பெண் வடிவுகொண்டு சிறையிருப்பதுபோல் இருக்கின்றர். மேன்மையான கற்புடைய பெண்ணரசியாகிய அந்தப் பிராட்டியார் உம்மிடம் மாறாது வைத்திராணின்ற ஆசையைப்பற்றி யோசிக்கும்பொழுது, பார்ப்பவருடைய கண்ணிற்கும் வெறுப்பில்லாமல் இன்னமும் பார்க்கவேண்டுமென்று விருப்பங் கொள்ளும்படியான கட்டழகு உடையவரான நீ ரொருவர் மாத்திரமே உலகத்தில் புருஷராய்ப் பிறந்தவர்களுக்குள்ளே மகா பாக்யம் பெற்றவராய் இருக்கின்றீர். முன்பு தங்கள் நேத்திரங்களால் தரிசியாதவராய் இருந்தாலும் அந்த இலங்கைக்குத் தலைவனுன இராவணனுக்குரிய இராக்ஷதமாதரும், அங்குள்ள பலவித தேவமாதரும், சீதாபிராட்டியாருடைய திவ்விய திருமேனியையும் கற்பையும் கண்டவுடனே, அவரை லோகநாயகியென்று நிச்சயம் செய்துகொண்டு அவருடைய சுவாசமும் பிராணனும் க்ஷணந்தோறும் அக்மும் புறமும் போகின்றதும் மீள்கின்றதுமாய் இருப்பதைக் கண்டு சகியாமல், ஐயோ! இந்த ஜைகதீஸ்வரிக்கு இவ்விதமான விபத்து சம்பவித்ததே யென்று தம்முடைய பிராணன் போவதும் வருவதுமாய் ஊசலாடும்படிக்குத் துக்கிக்கின்றர்கள். அடியேன் சீதாதேவியைக்கண்டு சேவித்துக்கொள்ளும்படியான சமயம் பார்த்துக் கொண்டிராணின்ற வேளையில், வெற்றிமாலையை யணிந்த வேலாயுதத்தைக் கையிலேந்திய பாதகனுன ராவணனுனவன் அவ்விடம் வந்து, என் தாயினுடைய திருவடிக் கமலத்தில் தண்டாகாரமாய் விழுந்து சேவித்து நேரிலே நின்று, இருபது கையையும் விரித்துக்கொண்டு தன் குறையைச் சொல்லி இரங்கியிருந்தான். அதற்குப் பிராட்டியார் கடூரமான சொற்களால் அவனை நிந்

திக்க, அந்தத் துராத்மா கோபஞ் செய்துக்கொண்டு கொலைசெய்ய எத்தன்ப் பட்டான். அவ்வேளையில் ஜானகியினுடைய கற்பும் தேவரீருடைய கடாக்ஷமும், தர்மமென்று சொல்லப்பட்ட இவைகள் மூன்றும் தொடர்ந்துநின்று காக்க, அவன் இராக்ஷதிகளைப் பார்த்து நீங்கள் சொல்லிச் சம்மதம் செய்வியுங்களென்று அவர்களைக் கண்காட்டி ஏவிவிட்டுப் போனான். அவர்கள் அனைவரும் என்னாலே ஜெபிக்கப்பட்ட மந்திரத்தினால் உறங்கிவிட்டார்கள். அவ்வேளையில் என்னுடைய மாதாவானவள் தன் பிராணனைப் போக்கடித்துக்கொள்ள நிச்சயித்துக்கொண்டு, ஒரு கொடியைக்கொய்து எடுத்து மரக்கிளையிலே சற்று மூடிந்து, அதைக் கழுத்திலே மாட்டிக்கொள்ளப் போயினள். அச் சமயத்தில் இதேது பழிவருகிறதென்று நாயேன் பயந்து, சீக்கிரமாய்ப்போய் தடுத்துத் திருவடியிலே சாஷ்டாங்கமாக வணங்கி, ராமா! ராமா! என்று தேவரீர் திருநாமத்தை ஸ்மரித்தேன்.

அப்பொழுது வஞ்சனைக்குத் தாயகமான இராக்ஷதருடைய மாயச் செய்கை இதுவென்று மனதிலே குறித்துக்கொண்டு அடியேனை நோக்கி, எளியவளான நான் இறந்துபோகிற வேளையில் தாரகப்பிரம மந்திரமாகிய ஸ்ரீராமா மிர்தஞ் சொல்லி எனக்கு மோக்ஷத்தைக் கொடுத்தாயே என்று கண்ணீர் பெருகித் திருமூலைகளிடம் விழும்படி ஆனந்தித்துச் சொன்னள். அப்பொழுது தேவரீர் தெளிவாக என்னுடன் சொல்லியிருந்த அடையாளமெல்லாம் நான் சொல்லி பின்னும் உம்முடைய தேவியின் மனதில் மாறுபாடில்லாதிருக்கச் செய்ய வேண்டுமென்று நினைத்து, உம்முடைய திருவாழியையும் எடுத்துக் காட்டத் தன் திருக்கண்களால் கண்டாள். அவ்வேளையில் அந்த மோதிரமானது சீதாபிராட்டியாருக்கு நிரியாண வேளையிலே பிழைக்கின்ற சஞ்சீவி மருந்தைப்போல விருந்தது. கேளுமையா மகதைஸ்வர்முடைய ஸ்ரீ ராமச்சந்திரரே! ஜானகியாரிடம் ஒரு க்ஷணப்பொழுதிற்குள்ளே இரண்டு அதிசயம் கண்டேன். என்னவென்றால், தேவரீருடைய பிரகாசம் பொருந்திய இரத்தினமழுத்திய திருவாழியைத் தம்முடைய திருமூலையினிடம் ஊன்றும்படி வைத்தணைத்துக் கொண்டார். உடனே அவர் உம்மிடம் வைத்த அவாவினாலுண்டான காமாக்கினியால் அது வெந்து நீராயுருகியது. மற்றும் அவருக்குத் தேவரீருடைய அடையாளங் காணப்பெற்றோ மென்பதாய் சந்தோஷம் உள்ளத்திலுதிக்க, அந்தக் குளிர்ச்சியினால் அப்பொழுதே ஆறி இறுகி முன்னிருந்தபடியே ஆய்விட்டது. அடியேன் தரும்படி அவருடைய திவ்விய கரமேந்தி அன்புடனே வாங்கிய திருவாழியைக் கண்டமாத்திரத்தில் இது பாபிஷ்டர்களாகிய இராக்ஷதருடைய அசுசமான பட்டணத்தில் கொண்டுவரப்பட்டதேயென்று கருதி, ஆயிரங் கலசம் நிறையத் தெய்வீகமாகிய கங்காதீர்த்தம் கொண்டுவந்து திருமஞ்சனம் செய்ததுபோலத் தம்முடைய கண்களினுடைய நீரினால் கழுவி ஏக்கற்றவரா யிருந்ததே யல்லாமல், திருவாய் திறந்து அவர் ஒரு சொல்லையுஞ் சொல்லவில்லை. இளைத்திருந்த திருமேனி பூரித்ததேயல்லாமல் கண்களானவை இமைக்கவே யில்லை. அன்றியும், இடைவிடாமல் பெருமூச் செறிந்துகொண் டிருந்தார். அதுகண்டு பிராட்டிக்கு உம்மைவிட்டு அவர் பிரிந்தபின்பு நடந்த செய்திகளையெல்லாம் சொல்லும் கிரமப்படியே தெரியச்

சொல்லி, தாயே! நீர் எழுந்தருளி யிராணின்ற இடம் இன்னதென்று தெரியா மையால் இதுவரையிலும் தாமசப்பட்டதென்றுஞ் சொல்லி, தேவரீர் படுகின்ற வருத்தமுந் தெரியும்படி விண்ணப்பஞ் செய்தேன். அந்த விண்ணப்பத்தைக் கேட்டுச் சோகமாறித் தம்முடைய பிராணன் நிலைக்கப்பெற்றார். அப்பால் இவ்விடமுள்ள சமாச்சாரங்களை யெல்லாஞ் சம்மதமாய்க் கேட்டருளினர். அவ் விடம் நடந்த சமாச்சாரங்களை தம் அடிமைக்குத் தெளியும்படி திருவாய்மலர்ந் தருளினர். அல்லாமலும் நான் இன்னம் ஒரு மாதமட்டுந்தான் உயிரோடிருப் பேன். இதற்குள்ளே சுவாமிக்கு விஜயம்பண்ணுகிறதற்குத் திருவுளம் இல்லா விட்டால் அவசியம் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளுவேனென்று தேவ ரீர் எழுந்தருளி யிராணின்ற திசையை நோக்கித் தெண்டஞ் சமர்ப்பித்தார். பின்பு தனது பொன்னுடையில் தைத்திருந்த மணிராஜமான விலையில்லாத சூடாமணியை யெடுத்துச் சந்தோஷமாக என் கையில் கொடுத்தார். இதோ உம்முடைய தாமரைக்கொப்பான கண்களாரக் கண்டருளுமென்று வேதசாஸ் திரமெல்லாம் எந்தமட்டும் அழியாமல் இருக்குமோ அந்தமட்டும் அழியாமலிரா னின்ற புகழ்ச்சியுடனே நித்தியத்துவம் பெற்றிரானின்ற அநுமானவர் சுவாமி கையில் கொடுத்தார். அச்சூடாமணியை அந்த ரகுநாயகர் தம்முடைய திருக்கையினால் வாங்கினமாத்திரத்தில் நாள்தோறும் அவர் திருமேனி வேறு பட, காமமானது பொங்கி எழுந்தோங்க, சரீரம் வெதும்பித் திருவுள மெலியும் படிக்கும் சம்பவித்திருந்த துக்கத்தை விட்டுவிட்டார். அம்மை கொடுத்தனுப் பிய சூடாமணியானது கையில் வரப்பெற்றபொழுது சுவாமிக்கு அப்படியிருந்த தென்றால், பூர்வம் மிதிலாபுரியில் ஒமாக்கினிக்கு முன்பாகத் தம்முடைய கையி னால் அந்த ஜானகியாருடைய திருக்கரத்தைப் பிடித்தபொழுது எவ்வளவு சந்தோஷமா யிருந்ததோ அவ்வளவு சந்தோஷமா யிருந்தது. அன்றியும் உரோமங்கள் சிலிர்த்தன. ஆனந்தபாஷ்பம் பெருகியது. மார்பும் தோளும் துடித்தன. வெயர்வு துளி துளியாகத் தோன்றியது. அழகு பொருந்திய வாயிதழ் பதைத்தது. ஆவியானது வருவதும் போவதுமாய்த் திருமேனி புள கித்தது. அந்தக் குணங்களை அறியும்படியானவர்கள் யாரிருக்கின்றார்கள்? அவ்வேளையில் இரண்டு வெள்ளம் வானரசேனையுடனே அங்கதன் முதலான வர்கள் வந்து, ஸ்ரீ ராமபத்திரனையும் சுக்கிரீவமகாராஜனையும் வணங்கி, போன காரியம் முடிவானதைப்பற்றி உண்டாகிய மகிழ்ச்சியினாலே பூரணச்சந்திரனைப் போலப் பிரகாசியானின்ற முகதேஜசை யுடையவர்களா யிருந்தார்கள். அப் பொழுது சுக்ரீவன் எழுந்திருந்து சுவாமியை வணங்கி, கேளுமையா இரகு நாயகரே! பிராட்டியாரானவர் முன்போல எவ்விடம் இருக்கின்றாரோவென்று நினைக்கும்படி அருமையா யிருக்கவில்லை. இப்பொழுது நாம் காணுகிறதற்கு மிகவும் சுலபமாயிருக்கிறாளென்று அநுமான் வந்து சொல்லியும், காலதாமத மாக இனி இவ்விடமிருக்க வேண்டிய காரணமென்ன வென்று சொன்னன். அப்படி சொன்ன மாத்திரத்தில் சுவாமியானவர் அதிசீக்கிரமாக எழுந்து பிரயத்தனப்பட்டு நம்முடைய சைனியங்களை இலங்கையை நோக்கிப் பிரயா ணப்படும்படி உத்தரவு செய்யென்றார். அவன் அப்படியே உத்தரவு செய் தான். வானர சைனியமெல்லாம் இந்த க்ஷணமே புறப்படவேண்டியதென்று யாவருமறியும்படி பிரயாணபேரிகை யடித்தார்கள். அடித்தவுடனே சமுத்திர

மானது பொங்கியெழுந்து பூமியிலே வந்ததுபோல குரங்கின் சேனை ஆர்ப்பரித்துக்கொண்டு, ரிசியமூகப் பர்வதத்தை விட்டெழுந்து தென்திசையை நோக்கி நடந்தது. அப்போது ஸ்ரீ ராகவர் இந்தச் சேனையானது காட்டை விட்டு நாட்டின்வழியே நடந்தால் உலகத்தார் பயந்து பிரமிப்பார்கள். மேலும் இவைகட்கெல்லாம் உணவு கிடைக்கிறதோ பிரயாசமா யிருக்குமென்று நினைத்து, இலைகள் - துளிர்கள் - காய்கள் - கனிகள் - கிழங்குகளும், தேன் முதலானவைகளும் விசேஷமாய்க் கிடைக்கத் தகுதியான வனங்கள் மலைகள் இவைகளின் வழியாய்ப் போகவேண்டுமென்று ஆக்ஞாபித்தார். சைனியமானது நாடு நகரங்களினுடைய மார்க்கமாய்ப் போகாமல் சுவாமி சொன்ன வழியே போயிற்று. அதன் பின்னே வீர தீரத்தையுடைய ஸ்ரீ ராமரும் லட்சுமணப்பெருமாளும் சுக்ரீவ மகாராஜன் முதலானவர்கள் சூழ்ந்துவர, அநுமானானவர் தென் சமுத்திரத்தின் மத்தியில் மகாமேருவின் சிகரமாகிய இலங்காபட்டண மிருக்கின்ற சிங்காரத்தையும், அங்கே பொல்லாத இராக்ஷதர்கள் வெகு ஜாக்கிரதையுடனே காவலாயிருப்பதையும், கோட்டை கொத்தளங்களினுடைய பலத்தையும், தலைவனாகிய இராவணனுடைய பராக்கிரமத்தையும், உக்கிரமான சேனைகளின் அளவில்லாமையும் சொல்லிக்கொண்டு தொடர, அவற்றைக் கேட்டுக்கொண்டே பிரயாசமில்லாமல் வேடிக்கையாக வழி நடந்தார்கள். அப்படியே வெகுதூரம் வானர சேனாதிபதியாகிய சுக்ரீவனுடனே ஸ்ரீ ராம லட்சுமணர்கள் போக, அவர்களுடனே கூடிக்கொண்டு போகின்ற வானர சேனா வீரர்கள் பவளமலையினிடத்தில் போய் ஒருபகல் முழுதும் தங்கியிருந்து, பின்பு புறப்பட்டுப் பன்னிரண்டு நாளிற்போய்த் தென் சமுத்திரத்தைக் கண்டார்கள்.

ஸ்ரீ ராம லட்சுமணர்கள் வானர சைனியங்களோடு தென்சமுத்திரங் காணுதல்.

கவி

அங்கெறி நெடிது செல்ல வரிச்குலத் தரச னோடு
நன்னெறிக் குமரர் போக நயந்துடன் புணர்ந்த சேனை
இன்னெடும் பவழக் குன்றிற் பகலெலா மிறுத்த பின்னர்ப்
பன்னிரு பகலிற் சென்று தென்றிசைப் பரவை கண்டார்.

திருவடிதொழுத படலம் முற்றிற்று.

சுந்தர காண்டம் சம்பூர்ணம்